D
Y211,31 N82
N83:35;1
2224.3

1982]

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை, மார்ச் 20, 1982—தொகுதி XXXV எண் 1

Saturday, 20th March 1982—Volume XXXV No. 1–5

22 to 25 March 1982


சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009

**Legislative Assembly Department, Fort St. George**

**Madras-600009**


விலை ரூ. 3–50 காசுகள்] [Price Rs. 3.50 Paise

D 1
V211.31 N82
N83 · 35;1)
122243

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் ஏழாவது சட்ட மன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

உள்ளடக்கம்.

20—3—1982

பக்கங்கள்


(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் i—iii

(ii) Personnel of the Government of Tamil Nadu v—vi

(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. vii

(iv) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் (தொகுதிகள் உட்பட அகரவரிசையில்) .. .. .. ix—xvi

1. இரங்கல் குறிப்பு—

ஆசார்ய கிருபளானி அவர்களின் மறைவு .. 1..2

2. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 2..38

3. தகவல் கோரல்—

(அ) சென்னை நகரில் சாலை விபத்துக்கள் .. 39

(ஆ) வடபழனி கோவில் நிலம் விற்பனை .. 30

(இ) பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷமிட்டவருக்குத் தண்டனை .. .. 30..40

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—

சென்னை மத்திய சிறையில் சந்தேகப்படக்கூடிய முறையில் ஒருவர் இறந்துள்ளது .. .. 49..48

5. கவன ஈர்ப்பு—

கன்னியாகுமரி மாவட்டம், ஆற்றில் தொழிற்சாலை கழிவுநீர் கலப்பது .. .. .. 46..53

பக்கங்கள்.

6. அறிக்கை அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு .. .. .. 53

7. வரவு-செலவுத் திட்டம், 1982–83—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம். .. 53—133
(ஆ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் .. 54—134
(இ) கோரிக்கை எண். 23—கூட்டுறவு .. .. 55—134

திரு. இரெ. இராசமாணிக்கம். .. 57—61
திரு. ஆர். ரங்கசாமி. 61—63
திரு. ப. தீர்த்தராமன். .. 63—65
திரு. ரா. கிருஷ்ணன். .. 66—69
திரு. ஏ. எம். சேதுராமன். .. 69—72
திரு. செ. செம்மலை. .. 72—75
திரு. இரா. கருப்பையா. .. 75—83
திரு. கே. குப்புசாமி. .. 83—88
திரு. எஸ். என். இராமசாமி. .. 88—89
திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன். .. 89—95
திரு. மே. அ. இராசகுமார். .. 95—96
திரு. எஸ். ஆண்டிததேவர். .. 96—102
திரு. ஆர். தியாகராஜன். .. 102—104
திரு. கு. பா. பழனியப்பன். .. 104—110
மாண்புமிகு திரு. சி. பொன்னையன். .. 110—132

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 135—136

## உள்ளடக்கம்.

22—3—1982.

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 241—270

2. ஒத்திவைப்புத் தீர்மானம்—

பாளையங்கோட்டை அருகில் ஓர் அரிசன கிறிஸ்தவர் கொலை செய்யப்பெற்றுள்ளது .. .. .. 270—276

3. கவன ஈர்ப்பு—

மதுரை மாவட்டம், குண்டாற்றின் குறுக்கே அணை கட்டுதல் .. .. .. 276—278

4. இறுதித் துணை நிதி அறிக்கை, 1981–82 .. 278—280

5. அறிவிப்பு—

இறுதித் துணை நிதி அறிக்கை, 1981–82—வெட்டுத் தீர்மானங்கள் .. .. 280

6. வரவு-செலவுத் திட்டம், 1982–83—வாக்கெடுப்பு— 281

(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை..

(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—

திரு. அ. ரகுமான்கான் .. .. 282—295
மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. 295—296
திரு. பி. ஜி. நாராயணன் .. .. 296—300
திரு. என். எஸ். வி. சித்தன் .. .. 301—312
திரு. சி. கோபால் .. .. .. 312—315
திரு. ரா. உமாநாத் .. .. .. 315—333
டாக்டர் கே. சமரசம் .. .. .. 334—338
திரு. பொ. உத்திராபதி .. .. 338—343
திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன் .. 343—346
திரு. ப. நெடுமாறன் .. .. 347—354
டாக்டர் கே. சௌரிராஜன் .. .. 354—357

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. 357—358

## உள்ளடக்கம்.

23-3-1982.


பக்கங்கள்.

தகவல் கோரல்—

வினாத்தாள் மாறிவிட்டதன் காரணமாக மாணவர்களை பள்ளி விடுதியிலேயே வைத்திருப்பது. .. .. .. 439—445

வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 446—490

ஒத்திவைப்புத் தீர்மானம்—

வினாத்தாள் மாறிவிட்டதன் காரணமாக மாணவர்களை பள்ளியில் வைத்திருப்பது. 491—502

வரவு—செலவுத் திட்டம், 1982–83—
வாக்கெடுப்பு—

(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை ..

(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

திரு. துரைமுருகன். .. .. 502—511
திரு. இரா. முத்தையா. .. .. 511—519
திரு. மு. அம்பிகாபதி. .. .. 519—526
திரு. எல். இளையபெருமாள். .. .. 528—534
திரு. தி. அன்பழகன். .. .. 534—540
திரு. ஜி. மூர்த்தி. .. .. 540—544
திரு. கே. தனுக்கோடித்தேவர். .. .. 544—546
திரு. வேட்சந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் 547—555
திரு. ஆ. வெள்ளைச்சாமி. .. .. 556—558
திரு. த. இராமசாமி. .. .. 558—564

5. அறிவிப்பு—

பேரவை அலுவல் .. .. .. .. 526—528

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 564

## உள்ளடக்கம்.

**24—3—1982**


| | பக்கங்கள். |
|---|---|
| வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 569—605 |
| கவனம் கோரல்— | |
| (அ) சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒளி பரப்புதல் .. .. .. | 605 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் .. .. .. | 606 |
| ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| பி. டி. சி. பேருந்துகளுக்கு வேலூரில் சேதம் விளைவித்திருப்பது .. .. | 606—613 |
| கவன ஈர்ப்புகள்— | |
| (அ) அம்பாசமுத்திரம் வட்டம், கோடா ரங்குள விவசாயிகளுக்கு வழங் கப்பெற்ற நிலப்பட்டா .. | 613—618 |
| (ஆ) வடாற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு கரும் புக்குப் பணம் கொடுக்காதது .. | 619—621 |
| அறிக்கை அளித்தல்— | 622 |
| மதிப்பீட்டுக் குழு .. .. .. | |
| அரசினர் சட்ட முன்வடிவுகள்— | 622 |
| (அ) பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு, 1982 .. | |


128-53—1

(ஆ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1982 .. 722

(இ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1982 722—769

(ஈ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1982 .. 770

7. வரவு-செலவுத் திட்டம், 1982–83—வாக்கெடுப்பு—

(அ) கோரிக்கை எண். 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள் நிர்வாகம் .. .. .. 623—624

(ஆ) கோரிக்கை எண். 40— சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். .. .. 624—625

(இ) கோரிக்கை எண். 53—சாலைப் போக்குவரத்துப்பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு .. .. .. 625—720

திரு. ப. சுந்தரம் 626—630
திரு. த. வீராசாமி 631—633
திரு. சி. பழனிமுத்து 633—637
திரு. ஏ. சி. சண்முகம் 638—642
திரு. ஜே. ஹேமச்சந்திரன் 643—647
திரு. சி. கேசவ ஆதித்தன் 648—649
திரு. ஜி. கே. சுப்பிரமணியன் 650—655
திரு. மு. அம்பிகாபதி 656—659
திரு. எம். கே. ராஜமாணிக்கம் 660—662
திரு. இ. முத்துராமலிங்கம் 663—664
திரு. இரா. சண்முகம் 664—665
திரு. க. பாரமலை 666—667
திரு. ச. பாலகிருஷ்ணன் 668—670
திரு. கே. தனுக்கோடித்தேவர் 671
திரு. கோ. விஸ்வநாதன் 672—674
திரு. அ. ரகுமான்கான் 675—682
மாண்புமிகு திரு. சு. முத்துசாமி. 683—719

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 770—771

# உள்ளடக்கம்

25—3—1982

பக்கங்கள்

வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 821—859

தகவல் கோரல்—

அரசு நிகழ்ச்சிகளுக்கு அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களும் அழைக்கப் பெறுதல் .. .. .. .. 860—868

ஒத்திவைப்புத் தீர்மானம்—

சென்னை பட்டாபிராம் தண்டரைப் பகுதியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் 868—877

4. அறிவிப்புகள்—

(அ) அமைச்சர்கள் உட்பட உறுப்பினர்கள் தங்களது சொத்துக்கள் பற்றி அறிவிப்பது 877

(ஆ) ஆளுநரிடமிருந்து வரப்பெற்ற செய்தி 881

(இ) ஒலி பெருக்கிகளை பாதுகாப்பது .. 925

5. கவன ஈர்ப்புகள்—

(அ) உதகமண்டலம் "இன்ட்கோ கேரேஜ்" நிறுவனம் மூடப்பெற்றுள்ளது .. 877—880

(ஆ) புதுக்கோட்டை அரசு மருத்துவ மனையில் மின் உற்பத்தி இயந்திரம் இயங்காதது .. .. .. .. 880—881

6. அறிக்கை அளித்தல்—

சட்டவிதிகள் ஆய்வுக்குழு .. .. 881

| | பக்கங்கள். |
|---|---|
| 7. இறுதித் துணை நிதி அறிக்கை, 1981–82— பொது விவாதமும், வாக்கெடுப்பும்— | 882—925 |
| திரு. வி. கிருஷ்ணமூர்த்தி .. .. | 882—888 |
| திரு. ஏ. தங்கராசு .. .. .. | 888—891 |
| திரு. இல. பலராமன் .. .. | 891—898 |
| திரு. ப. குருசாமி .. .. .. | 898—900 |
| திரு. என். பழனிவேல் .. .. .. | 900—903 |
| திரு. ஏ. எம். சேதுராமன் .. .. | 904—906 |
| திரு. செ. சிவசாமி .. .. .. | 906—909 |
| திரு. ப. நெடுமாறன் .. .. .. | 909—911 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 911—920 |
| 8. அரசினர் சட்ட முன்வடிவு— | |
| நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1982 .. | 924 |
| 9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 925—926 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சாதிக் அலி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்புத் திட்டம், சர்க்கரை பாகு கழிவு, தொல்பொருள் இயல்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், தேர்தல்கள், உணவு, மீன் வளம், பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் அணி, விலைவாசிக் கட்டுப்பாடு, முன்னாள் ராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்; பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிப்புத்துறை, முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், வணிக வரிகள், ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், இந்து அறநிலையத்துறை, காடுகள், சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சிமொழி, கைத்தறி

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு மற்றும் அக்ரோ பொறியியல்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு—சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள் மற்றும் அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு, கடன் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம், கிராமதானம், நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—தொழிலாளர் வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இடவசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத்துறை.

13. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்)—வேளாண்மைப் பணி, கூட்டுறவுச் சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வக்ப்.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில்துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (கதர் மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர்)—கதர், மது மனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை அலுவல்கள் சம்பந்தமாக.



17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால்நடைப் பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru S. SADIQ ALI.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (Chief Minister) Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Deputy Collector, Police, Prevention of Corruption, Planning, Molasses and Archaeology.

2. Hon. Dr. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backword Classes, Youth Service Corps, Price Control and Ex—Servicemen.

3. Hon. Thiru. S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Rural Industries)—Rural Industries including Village, Cottage and Smal Industries, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments)—Information and Publicity, Film Tecnology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAKAM (Minister for Education)—Education including Technical Education, Official Language and Handlooms.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. Thiru C. PONNAIAN (Minister for Co-operation and Law)—Law, Courts' Prisons, Legislations on Weigths and Measurest) Regisration of Companies, Debt. Relief including Legislation on Money Lending and Lgislation on Chits and Co-Operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Loca Administration)—Municipal Administration, Panc.ayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedness, Bhoodan and Gramdhan and Hihgways.

11. Hon. Thiru S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing Slum Clearance Board, S a is ics, Tamil Nadu Water Supply and Drairage Board, Town Planning and Acc. mmcdation Control.

12. Hon. Dr. H. V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irriga-ion)—Agro Service Co-operative Societies, Irrigation irclduing Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru. S. MUTHUSAMY (Minister for Transpor — Transpor. , Naionalised Transpor , Mo or Vehicles Act and Pots.

15. Hon. Thiru. S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Indus.ries, Mines and Minerals and Tex iles.

16. Hon. Thiru S. N. RAJENDRAN (Minis.er for Public Works and Knadi)—Handlooms, Khadi, Prohibition excluding gran cf Liquor permi.s, Passpor s, Public Works Deparimen and Es abltsnment ma er rela ing to Public Works Depar men .

17. Hon. Tairu M. M. VIJAYASARATHI (Minis er for Adi Dravidar Welfare)—Adi Dravidar Welfare, Stationery, And Prin ing Governmeni Press, News Prin Control, Hill Tribes and Bonded Labour anq Employmeni and Training

18. Hon. Tnirumatni GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare)—Social Welfare ircluding Women and Cnildren Welfare, Animal Husbardry, Beggars Home, Orchanages, Indians Overseas, Refugees and Evacuees and correctional Adminis-iration.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. க. இராசாராம்.

பேரவைத் துணைத் தலைவர் :

* மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ப. வேங்கடசுப்பிரமணியம்.
3. திரு. துரைமுருகன்.
4. திரு. இல. பலராமன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

துணைச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ.,பி.ஜி.எல்.
திரு. கா. சீனிவாசன், பி.எஸ்-சி. (குழு அலுவலர்).
திரு. வி. சீதாராமன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல். (சார்புச் செயலாளர்).
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ பி.எல். (சார்புச் செயலாளர்.)
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம். (சார்புச் செயலாளர்).
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ. (சார்புச் செயலாளர்).
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அலுவலர்)
திரு. பி. கோதண்டராமன் (பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்).
திரு. மா. சந்திரசேகரன் (தலைமை நிருபர்).

விவாதப் பதிப்பாளர்.

திரு. ஜி. எஸ் அனந்தநாராயணன், பி.லிட்.

---

* 21—6—1980 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
** 2—?—1982 அன்று நியமனம் செய்யப் பெற்றார்கள்

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை. உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. அங்குசாமி திரு. ச. | திருவாடானை |
| 2. அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர் |
| 3. அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர் |
| 4. அப்பாதுரை, திரு. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ) |
| 5. அம்பிகாபதி, திரு. மு. | மன்னார்குடி |
| 6. அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி |
| 7. அரங்கநாதன், திரு. மு. | கூனூர் (செ.வ) |
| 8. அரங்கநாயகம், திரு. செ. | கோவை (மேற்கு) |
| 9. அரங்கராசன், திரு. வெ. | உப்பிலியாபுரம் |
| 10. அருணகிரி, திரு. இரா. | திருப்பத்தூர் |
| 11. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 12. அமகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி |
| 13. அன்பழகன், திரு க. | புரசைவாக்கம் |
| 14. அன்பழகன், திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 15. அன்பில் தர்மலிங்கம், திரு. | லால்குடி |
| 16. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 17. ஆண்டித் தேவர், திரு. எஸ். | உசிலம்பட்டி |
| 18. ஆறுமுகம், திரு. எம். | அவினாசி (செ.வ.) |
| 19. சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2 |
| 20. ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர் |
| 21. ஆனூர் ஜெகதீசன், திரு.பு. கோ. | செங்கல்பட்டு |
| 22. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 23. இராசகுமார், திரு. மெ. அ... | மருங்காபுரி |
| 24. இராசமாணிக்கம், திரு. இ. ரெ. | குத்தாலம் |
| 25. இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி |
| 26. இராசாம்பாள், திருமதி தா... | தலைவாசல் (செ.வ.) |
| 27. இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி |
| 28. இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம் |
| 20. இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 39. இராசேந்திரன். திரு.எஸ்.என். | தூத்துக்குடி |
| 31. இராமச்சந்திரன், எம். ஜி. ருதி. | மதுரை (மேற்கு) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 32. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 33. இராமச்சந்திரன், திரு. ச. .. | பன்ருட்டி |
| 34. இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந. | செஞ்சி |
| 35. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான் குளம் |
| 36. இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம் |
| 37. இராமசுப்பிரமணியன், திரு. இ. | ஸ்ரீவைகுண்டம் |
| 38. இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் (செ.வ) |
| 39. இராமலிங்கம் டாக்டர். கே. பி. .. | இராசிபுரம் |
| 40. இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர் |
| 41. இராஜசேகரன், திரு. வே. .. | இராதாகிருஷ்ண நகர் |
| 42. இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி |
| 43. இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி |
| 44. இளையபெருமாள், திரு. எஸ். | எழும்பூர் (செ.வ.) |
| 45. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் திரு. | அம்பாசமுத்திரம் |
| 46. உகம்சந்த், திரு. எஸ். டி. ... | மதுராந்தகம் |
| 47. உச்சி, திரு. கே. .. | கூடலூர் |
| 48. உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 49. உமாநாத், திரு. ரா. .. | நாகை |
| 50. கண்ணன், திரு. ம. ... | கண்டமங்கலம் (செ.வ.) |
| 51. கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம் |
| 52. கணேசன், திரு. இ. .. | இடப்பாடி |
| 53. கணேசன், திரு. சி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 54. கந்தசாமி, திரு. கா. வே .. | கிணத்துக்கடவு |
| 55. கந்தசாமி, திரு. பி. .. | பொங்கலூர் |
| 56. கபாலி, திரு. டி. கே. .. | மைலாப்பூர் |
| 57. கருணாநிதி, டாக்டர் மு. .. | அண்ணாநகர் |
| 58. கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. .. | பாளையங்கோட்டை |
| 59. கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை |
| 60. கருப்பையா, திரு. ஏ. டி. .. | வால்பாரை |
| 61. கல்லன், திரு. கே. .. | உதகமண்டலம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 62. கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 63. கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.) |
| 64. கலையரசன், திரு. நன்னிலம் அ. .. | நன்னிலம் (செ.வ.) |
| 65. காளிமுத்து, திரு. கா. .. | திருப்பரங்குன்றம் |
| 66. கிட்டப்பா, திரு. என். .. | மாயவரம் |
| 67. கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம் |
| 68. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. .. | ஆயிரம்விளக்கு |
| 69. கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. .. | ஆண்டிமடம் |
| 70. கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. | நெல்லிக்குப்பம் |
| 71. கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1 |
| 72. கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர் |
| 73. குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர் |
| 74. குப்புசாமி, திரு. கே. .. | ஒட்டன்சத்திரம் |
| 75. குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.) |
| 76. குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர் |
| 66. குருசாமி, திரு. ப. .. | அந்தியூர் (செ.வ.) |
| 78. குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர் |
| 79. குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி |
| 80. குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை |
| 81. கேசவ ஆதித்தன், திரு. சி. .. | திருச்செந்தூர் |
| 82. கோபால், திரு. சி. .. | சோளிங்கர் |
| 83. கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம் |
| 84. கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம் |
| 85. கோமதி சீனிவாசன், திருமதி. . | வலங்கை (செ.வ.) |
| 86. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 87. கோவைத் தம்பி, திரு. .. | பேரூர் |
| 88. சக்கரபாணி திரு. ஆர். .. | பொன்னேரி |
| 89. சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு) |
| 90. சட்டநாத கரையாளர், திரு. கி. .. | தென்காசி |
| 91. சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி |
| 92. சண்முகம், திரு. ஏ. சி. .. | ஆரணி |
| 93. சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி |
| 94. சந்திரசேகரன், திரு. ஏ. .. | சோழவந்தான் |

| | | |
|---|---|---|
| 95. | சபாபதி, திரு. சி. .. | அரூர் (செ.வ.) |
| 96. | சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டணம் |
| 97. | சாகுல் ஹமீது, திரு. ஏ. .. | கடையநல்லூர் |
| 98. | சாமிக்கண்ணு, திரு. தா. ... | செங்கம் |
| 99. | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 100. | சிதம்பரம், திரு. சி. த. ... | காரைக்குடி |
| 101. | சிவசாமி, திரு. செ. .. | இளையான்குடி |
| 102. | சிவஞானம், திரு. ந. .. | திருவோணம் |
| 103. | சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 104. | சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர் |
| 105. | சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம் |
| 106. | சின்னசாமி, திரு. எம். .. | கரூர் |
| 107. | சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர் |
| 108. | சின்னராசு, திரு. சு. இரா... | கிருஷ்ணகிரி |
| 109. | சின்னராசு, திரு. மா. .. | தொண்டாமுத்தூர் |
| 110. | சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம் |
| 111. | சுந்தரம், திரு. ப. .. | திருப்பத்தூர் |
| 112. | சுந்தரம், திரு. மு. .. | ரிஷிவந்தியம் |
| 113. | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். .. | முகையூர் |
| 114. | சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம் |
| 115. | சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர் |
| 116. | சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |
| 117. | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். .. | போடிநாயக்கனூர் |
| 118. | சுப்பிரமணியன், திரு. மா. .. | திருவையாறு |
| 119. | சுப்பிரமணியன், திரு. வி. .. | திருநாவலூர் |
| 120. | சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர் |
| 121. | சுவாமிநாதன், திரு. வி. வி... | புவனகிரி |
| 122. | செங்கோட்டையன், திரு. கு. அ. .. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 123. | செம்மலை, திரு, செ. .. | தாரமங்கலம் |
| 124. | செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 125. | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம் |
| 126. | சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. ப. செ. .. | அரவக்குறிச்சி |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 127. | சேதுராமன், திரு. ஏ. எம்... | ஆற்காடு |
| 128. | சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் |
| 129. | சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை |
| 130. | சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர் |
| 131. | சௌந்திரராசன், திரு. கே... | திருச்சி–2 |
| 132. | டாக்டர் சௌரிராஜன், திரு. கே. .. | தி. நகர் |
| 133. | தங்கமணி கவுண்டர், திரு. | திண்டிவனம் |
| 134. | தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி |
| 135. | தங்கவேல்ராஜ், திரு. பி. எம் | கிருஷ்ணராயபுரம்(செ.வ.) |
| 136. | தங்கவேலு, திரு. பி. .. | செயங்கொண்டான் |
| 137. | தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ.வ.) |
| 138. | தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 139. | தனுக்கோடித் தேவர், திரு. | முதுகளத்தூர் |
| 140. | தாமரைக்கனி, திரு. இரா... | ஸ்ரீ வில்லிப்புத்தூர் |
| 141. | தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாச்சலம் |
| 142. | திருச்சி ஆர் சௌந்திரராஜன், திரு. | ஸ்ரீரங்கம் |
| 143. | திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 144. | திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி |
| 145. | திருமான், திரு. இரா. .. | ஏற்காடு (செ.வ.) |
| 146 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 147 | தீர்த்தராமன், திரு. ப. .. | பென்னகரம். |
| 148 | துரைசாமி, திரு. பி. எஸ்... | பர்கூர். |
| 149 | துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 | துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில். |
| 151 | துரைராஜ், திரு. பி, .. | சங்கரநயினார் கோவில் (செ.வ.). |
| 152 | தேவராஜ், திரு. வி. எம். | வேலூர். |
| 153 | நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 154 | நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு. |
| 155 | நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை. |
| 156 | நவநீதகிருஷ்ணன்பாண்டியன் திரு. | ஆலங்குளம். |
| 157 | நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| | (1) | (2) |
| 158 | நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை. |
| 159 | நாராயணன், திரு. பி. ஜி. | பவானி. |
| 160 | நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | திருநெல்வேலி. |
| 161 | நெடுமாறன், திரு. ப. | மதுரை (மத்திய). |
| 162 | பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம். |
| 163 | பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 164 | பம்மல் நல்லதம்பி, திரு. | தாம்பரம். |
| 165 | பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லாடம். |
| 166 | பலராமன், திரு. இல. .. | போளூர். |
| 167 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 168 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 169 | பழனியப்பன், திரு. கு. ப. | விழுப்புரம். |
| 170 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 171 | பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி. |
| 172 | பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர். |
| 173 | பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு. |
| 174 | பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செ.வ.). |
| 175 | பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி. |
| 176 | பாலகிருஷ்ணன், திரு. வி... | சிவகாசி. |
| 177 | பாலசுப்பிரமணியன், திரு. க. .. | சீர்காழி (செ.வ.). |
| 178 | பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர். |
| 179 | பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 180 | பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ. வ). |
| 181 | பிச்சை, திரு. எம். .. | அருப்புக்கோட்டை. |
| 182 | பிரபாகரன், திரு. ஜே. சி. டி. .. | வில்லிவாக்கம். |
| 183 | புருஷோத்தமன், திரு. தூ. | சைதாப்பேட்டை, சென்னை |
| 184 | பூங்காவனம், திரு. என். ஏ. | காட்பாடி. |
| 185 | பெரியசாமி, திரு. ஏ. .. | தர்ராபுரம் (செ. வ.). |
| 186 | பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் (செ. வ.). |
| 187 | பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.). |
| 188 | பெருமாள், திரு. ரா. கு... | விளாத்திகுளம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 189 | பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 190 | பொன்னுரங்கம், திரு. ப. | இராயபுரம், சென்னை. |
| 191 | பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு. |
| 192 | மணி, திரு. டி. .. | விளவங்கோடு, |
| 193 | மணிமாறன், திரு. ஆர்... | திருப்பூர். |
| 194 | மாணிக்கம், திரு .எம்.எஸ். | வேதாரண்யம் |
| 195 | மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.). |
| 196 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 197 | முசிறிப்புத்தன், திரு. பி. | திருச்சி-1. |
| 198 | முத்துகிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி. |
| 199 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 200 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம். |
| 201 | முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ. வ.). |
| 202 | முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 203 | முனிரத்தினம், திரு. இரா. சா. .. | கும்மிடிபூண்டி. |
| 204 | முனுசாமி, திரு. மு. ப... | பாலக்கோடு. |
| 205 | மூர்த்தி, திரு. ஜி. .. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 206 | மொக்கையன், திரு. பி. | ராஜபாளையம் (செ. வ.). |
| 207 | யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 208 | ரகுமான்கான், திரு. அ... | சேப்பாக்கம். |
| 209 | ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம். |
| 210 | ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.). |
| 211 | ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 212 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 213 | ராஜமாணிக்கம், திரு. .. எஸ். கே. | முசிறி. |
| 214 | ரெத்தினராஜ், திரு. எஸ். | குளச்சல். |
| 215 | வரதராஜன், திரு. என்... | திண்டுக்கல். |
| 216 | விஜயலட்சுமி, செல்வி வி. | வீரபாண்டி. |
| 217 | வின்சென்ட், திரு. மி. | நாகர்கோவில். |
| 218 | விஜயசாரதி, திரு. எம். | அரக்கோணம் (செ.வ.). |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 219 விஜயபாலன், திரு. என். | பூம்புகார். |
| 220 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |
| 221 விஸ்வநாதன், திரு. கோ. | அணைக்கட்டு. |
| 222 வீராசாமி, திரு. த. | ஒரத்தநாடு. |
| 223 வீரானம்பலம், திரு. க. வெ. | மேலூர். |
| 224 வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி. |
| 225 வெங்கட ரெட்டி, திரு. டி. | ஒசூர். |
| 226 வெங்கடேசன், திரு. பி. எம். | பெரணமல்லூர். |
| 227 வெள்ளைச்சாமி, திரு. அ. | ஆத்தூர். |
| 228 வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு. |
| 229 வேலப்பன், திரு. சி. வி. | கபிலர்மலை. |
| 230 ஜகத்ரட்சகன், திரு. எஸ். | உத்திரமேரூர். |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. பு. கோ. | நாங்குனேரி. |
| 232 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 233 ஹாஜாசெரீப், திரு. கே. எஸ். ஜி. | திருவல்லிக்கேணி. |
| 234 ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு. |
| 235 மார்க்ரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | (நியமன உறுப்பினர்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்
மாண்புமிகு அமைச்சர்கள்—

1. மாண்புமிகு திரு. இராம வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்.
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராசா முகமது—அமைச்சர்
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1982 மார்ச் 20.

பங்குனி 7, துன்மதி—திருவள்ளுவர் ஆண்டு 2013

சென்னை, செயின்ட்ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவு நிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிடவேண்டும்.

## 1. இரங்கல் குறிப்பு.

### ஆச்சார்ய கிருபாளனி அவர்களின் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்திய நாட்டின் விடுதலைப் போரின் முன்னணி வீரர்களில்-ஒருவராக விளங்கிய ஆச்சார்ய கிருபளானி அவர்கள் தமது 94ஆவது வயதில் நேற்று பிற்பகல் 2 மணி அளவில் காலமான செய்தியை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1888 ஆம் ஆண்டு பிறந்த இவர் மகாத்மா காந்தியடிகளைப் பின்பற்றி, லக்னௌவில் காந்தி ஆசிரமும் காதி இயக்கமும் துவக்கினார். இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் பொதுச் செயலாளராகவும், பின்னர் அதன் தலைவராகவும் விளங்கினார். ஆரம்ப முதலே தனக்குச் சரியென்று தோன்றியதைத் தயங்காமல் எடுத்துரைத்து, தலைவர்களுடன் கருத்து மாறுபாடு கொண்டாலும், மக்களின் நலனையே கருதித் தம் வாழ்நாள் பூராவும் தொண்டாற்றியவர் திரு. கிருபளானி, நாடாளுமன்றத்தில் 1971 ஆம் ஆண்டு வரையில் அவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். அவர் நாட்டு மக்களுக்குக் கூறிய அறிவுரை நாம் இன்று நினைவு கூறத்தக்க ஒன்றாகும். "எப்போதும் விழிப்புணர்ச்சியோடு இருப்பதுதான் சுதந்திரத்திற்கு நீங்கள் அளிக்கக்கூடிய விலையாகும். விழிப்புணர்ச்சியைக் கைவிட்டீர்களானால் நீங்கள் அடிமைகளாகிவிடுவீர்கள். அரசியல்வாதிகளைப் பீடத்தில் ஏற்றி தெய்வமாக்கி விடாதீர்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அன்னாரின் மறைவுக்கு நமது இரங்களையும் ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடம் எழுந்து மவுனமாக நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 583, 584 ஆகியவை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க முதலில் எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.

### செம்மறி ஆடுகளை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

*வினா எண். 583—திரு. து. புருஷோத்தமன், திரு. இ. கணேசன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்மறி ஆடுகளை அபிவிருத்தி செய்ய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) உலக வங்கியின் உதவியுடன் 47.50 கோடி ரூபாய் மதிப்புடன் செம்மறி ஆடு அபிவிருத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேய்ச்சேறி செம்மறி ஆடு மாண்புமிகு மைசூர் மாண்டியா ஆட்டைவிட இறைச்சியிலும், தோலினுடைய தரத்திலும் உயர்ந்தது என்று சொல்கிறார்கள். எனவே, அப்படி செம்மறி ஆடுகளை அபிவிருத்தி செய்ய அரசு திட்டம் இடும்போது மேய்ச்சேரி செம்மறி ஆடுகள் தீவிரமாக வளர்ப்பதற்கும் அல்லது அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.



திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உலக வங்கி என்பது டிரான்ஸ்போர்ட் நிறுவனத்திலும் இப்பொழுது செம்மறி ஆடு வளர்ப்பதிலும் வந்திருக்கிறதே அது எதுவரையில் போய் நிற்கும்? உலக வங்கியிடம் நிதி உதவி வாங்காமல் செம்மறி ஆடு வாங்க முடியாதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செம்மறி ஆடு வாங்குவதைப் பற்றிய கேள்வி. வாங்க வேண்டாமென்றால், உங்கள் தொகுதிக்கு வேண்டாமென்று சொல்லிவிடுங்கள். உலக வங்கி எதுவரையில் போய் நிற்கும் என்றால் உலகம் பூராவும் போய் தான் நிற்கும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது செம்மறி ஆடு அபிவிருத்திக்காக, விவசாயிகளுக்குக் கொடுக்கிறபொழுது, எத்தனை ஏக்கர் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது? அதற்கு மானியம் ஏதாவது கொடுக்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே எத்தனை ஏக்கர்கள் உள்ளவர்களுக்கு என்ற விவரமும் மானியம் பற்றிய விவரமும் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் கொடுக்கப்படும்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவரவர்களே, செம்மறி ஆடுகளை வளர்க்கும் இந்தத் திட்டத்தில் மலைப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, எங்கெங்கு மேய்ச்சல் நிலம் இருக்கிறதோ அங்கெல்லாம் செம்மறி ஆடுகளை வளர்ப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் அதிகமான செம்மறி ஆடுகளை வளர்ப்பதற்கான சீதோஷ்ண நிலையைக் கொண்ட புறம்போக்கு நிலம் இருக்கிறது. ஆகவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆடு வளர்க்கும் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் மேய்ச்சல் நிலம் அதிகம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்தார்கள். மேய்ச்சல் நிலம் அதிகமாக இருந்தால் கண்டிப்பாக ஆடு வளர்ச்சிக் கூட்டுறவுச் சங்கம் அங்கு கொடுக்கப்படும்.

திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செம்மறி ஆடுகளை வளர்ப்பதற்குப் பஞ்சாயத்து யூனியன் அனுமதி வழங்கினாலும் வங்கிகள் சரியாகக் கடன் கொடுப்பதற்கு இயலாத நிலைமை இருக்கிறது. வங்கிகள் உடனடியாகக் கடன் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாங்கள் வங்கியை அணுகி அவர்களுக்குக் கடன் கொடுக்குமாறுதான் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் வங்கிகள் கொடுக்க மறுக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கிறார்கள். நாங்கள் எப்படி அணுகி அவர்களுக்குக் கடன் வாங்கிக் கொடுத்து அதன் மூலம் அவர்கள் ஆடுகளை வளர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்க முடியுமோ அதையெல்லாம் செய்து வருகிறோம். எங்கெங்கு வங்கிகள் கொடுக்க மறுக்கிறார்களோ, அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்தார்களானால் அதைப்பற்றி அந்த வங்கியரை அணுகி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை நகரில் கோவைக்குச் செல்லும் குடிசைவாசிகளின் குழந்தைகளை விட்டுச் செல்வதற்கான பாதுகாப்பு இல்லங்கள்.

*வினா எண் 584—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலைக்குச் செல்லும் குடிசைவாசிகளின் குழந்தைகளை விட்டுச் செல்வதற்கான பாதுகாப்பு இல்லங்கள் சென்னை நகரில் எத்தனை இடங்களில் உள்ளன ?

(ஆ) அவைகளில் என்னென்ன வசதிகள் செய்யப்பட்டுள்ளன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) வேலைக்குச் செல்லும் குடிசைவாசிகளின் குழந்தைகளை விட்டுச் செல்வதற்கான பாதுகாப்பு இல்லங்கள் சென்னை நகரில் சமுகநலத் துறையின் கீழ் 239 இடங்களில் உள்ளன.

(ஆ) அவைகளில் மதிய உணவு, விளையாட்டுச் சாமான்கள் வழங்கப்பட்டு மற்றும் நோய்த் தடுப்பு ஊசி போடுதல் உள்ளிட்ட மருத்துவ பரிசோதனைகளும் செய்யப்படுகின்றன.





திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே, சென்னை நகரைத் தவிர வேறு எந்தெந்த நகரங்களில் இதுபோன்ற பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன ? கிராமப் புறங்களில் இதுபோன்ற பாதுகாப்பு இல்லங்களை அமைப்பதற்கான எண்ணமும் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை நகரம் தவிர எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி வருகிறோம். நகரங்களிலும் கிராமங்களிலும் இப்பொழுது செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழந்தைகள் பாதுகாப்பு இல்லங்கள் சென்னையைச் சுற்றியுள்ள ஸ்லம் ஏரியாக்களிலே அமைக்கப்பட்டுள்ளதா? காரணம், அங்கேயுள்ள தாய்மார்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் இந்த ஸ்லம் ஏரியாக்களில் இல்லை என்றால் இனியாவது அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்லம் பகுதிகளிலும் குழந்தைகள் காப்பகத்தை நடத்தி வருகின்றோம்.

''மெரினா'' கடற்கரையை அழகு படுத்தும் திட்டம்.

*வினா எண் 582.—திரு. இரா. தாமரைக்கனி, திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. இல. பலராமன், திரு. சு. முத்துகிருஷ்ணன் மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : ஒரு விவர அறிக்கை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் பற்றிய விவர அறிக்கையில் எவ்வளவு மதிப்பீட்டில் இந்தத் திட்டம் வருகிறது என்ற குறிப்பு இல்லை. ஆதலால் எவ்வளவு தொகையில் அந்த மெரினா கடற்கரை அழகுபடுத்தப்

---

@ 136-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

படும் என்பதை அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் அங்கே திறந்த வெளி கலையரங்கமும் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் 25,86,200 ரூபாய்க்கு இப்பொழுதுள்ள மதிப்பீட்டில் அழகு படுத்துவதாக இருக்கிறது. அதில் ஓபன் ஏர் தியேட்டர்— திறந்த வெளி திரை அரங்கத்திற்கு 3,15,000 ரூபாய் மதிப் பீட்டிலே செலவிடுவதாக இருக்கிறது.

(முற்பகல் 9.10)

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் இந்த நேரத்தில், அண்ணா சமாதிக்கு எதிர்ப்புறம் சில தனிப்பட்டவர்கள் கடைகளை வைத்து ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை அப் புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ? அதே நேரத்தில் மெரினா கடலில் உல்லாசப் பூங்கா உணவு விடுதி ஒன்றைக் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகான அண்ணா சமாதியின் தென்புறத்தில் சிலர் கடைகளை வைத்து தவறான வழிகளில் பயன்படுத்துவதாக தகவல் வந்திருக்கின்றது. அதை நீக்கு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும், இப் போதைக்குக் கடற்கரைப் பகுதியை மட்டும்தான் அலங்காரப் படுத்துவதாகக் குறிப்பு இருக்கின்றது. கடலிலே அலங்காரம் செய்யும் குறிப்பு இல்லை.

திரு. பெ. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரை உலகத்திலேயே இரண்டாவது அழகான கடற்கரையாகும். அதை அழகுபடுத்துவதற்கு 11 வகையான குறிப்புகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவை கள் அனைத்தையும் செய்தால் அந்தக் கடற்கரையின் இயற்கைத் தன்மையே மாறிவிடும் போல் தோன்றுகிறது. அந்த இயற்கைத் தோற்றம் மாறாத வண்ணம் இந்தப் புதுப்பிக்கின்ற பணியைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : தலைவர் அவர் களே, இயற்கையோடு இணைந்த அழகைக் கொண்டிருக்கின்ற மெரினா கடற்கரையை மேலும் மெருகூட்டுவதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இயற்கையை சேதப்படுத்தும் நடவடிக்கை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, சமீபத்திலே கடற்கரைக்கு சென்ற ஒரு குடும்பத்திலே இருந்து ஒரு சிறுவன் அங்கே இருந்த கிணற்றிலே விழுந்து இறந்துவிட்டான் என்று பத்திரிகைச் செய்திகள் வந்தன. அப்படிப்பட்ட கிணறுகளைத் தோண்டி அதைப் பாதுகாப்பாக வைப்பதற்கு இந்தத் திட்டத்திலே நடவடிக்கை எடுக்கப்படுமா ? அப்படிப்பட்ட சூழ்நிலையை எப்படி இந்தத் துறை கவனிக்காமல் இருந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கிற பூங்காவிற்கு தண்ணீர் இறைப்பதற்காக கிணறுகளைத் தோண்டி, அந்தக் கிணற்றில் இறங்கி சுத்தப்படுத்துவதற்காக ஒரு மேன்ஹோல் ஒரு மனிதன் மட்டுமே இறங்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. ஆகவே, ஓடி ஒளிந்து விளையாடுவதற்குச் சென்ற சிறுவன் விழுந்து இறந்ததாக தகவல் வந்தது. அந்த மேன்ஹோல் இப்போ மூடப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்த மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தை பொதுப் பணித் துறையே நேரடியாக செய்கிறதா? அல்லது மாநகராட்சியும் செய்கின்றதா? அப்படியானால் மாநகராட்சிக்கு எவ்வளவு நிதி உதவி செய்யப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையை அழகு படுத்தும் பணியைப் பொதுப்பணித் துறைதான் செய்கின்றது. ரோடுகளில் விளக்குகள் சோடியம் வேப்பர் போடும் பணியை கார்ப்பரேஷன் செய்கின்றது.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மெரினா கடற்கரையில் அண்ணா சதுக்கத்திலே இருந்து, அடையாறுவரையில் சிறுவர் ரயில் விட அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் இல்லை,

திரு. கோவைத்தம்பி : மாண்பமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையில் நடமாடும் கடைகளினால் மிகவும் அசுத்தம் அடைந்து இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா ? அதை மாற்றி முறையாக ஒழுங்குபடுத்துகின்ற ஒரு நிலையை உருவாக்க அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நிலையை மாற்றுவதற்காகத்தான் அங்கே ஓட்டல்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள இருப்பதாக குறிப்பிலே இருக்கின்றது.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே மெரினா கடற்கரை 20 ஆண்டுகளுக்கு முன்பு அமைதியாக திகழ்ந்து கொண்டிருந்தது. அதிலே சீரணி அரங்கு கட்டியதே சரியல்ல. அதிலே திறந்த வெளி திரை அரங்கம் கட்டப்போவதாகவும், உணவு விடுதிகள் கட்டப்போவதாகவும் சொல்லுகிறார்கள். அப்படி என்றால் அந்த அமைதியான இடம வீணாகிப்போகும். எனவே, அண்ணா சமாதியில் இருந்து லைட்ஹவுஸ் வரையில் இனிமேல் எந்தவிதமான கட்டடமும் கட்டக்கூடாது என்று அரசு ஆணையிடுமா? சீரணி அரங்கத்தில் பொதுக்கூட்டம் நடைபெறுகிறபோது அங்கே அதிகமான மக்கள் வருகிற காரணத்தால் அமைதி கெடுகிறது, அதனால் அந்தச் சீரணி அரங்கம் இடிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலே பல இலட்சக்கணக்கான குடும்பங்கள் வாழ்கின்ற மாநகரம் சென்னை. அதிலே வாரத்திற்கு ஒரு முறை அல்லது 2 நாட்களுக்கு ஒரு முறை, ஓய்வுக்காக, காற்றுவாங்குவதற்காக, பொழுது போக்குவதற்காக, அதிகபட்ச மக்கள் மெரினா கடற்கரைக்கு வருகிறார்கள். அப்படி அவர்கள் பொழுதுபோக்கிற்காகவும் நேரத்தைக் கடத்துவதற்காகவும் வருகின்ற இடத்திலே பல்வேறு என்டர் டயின்மென்ட்ஸ் செய்வதற்காகவும், அவர்களுடைய பொழுதுபோக்கு நல்லமுறையில் அமைய வேண்டும் என்பதற்காகவும், கலை அரங்கத்திற்குத் தனியாக ஒரு கட்டிடம் இல்லாமல், இப்போது இருக்கிற சீரணி அரங்கத்திலேயே அப்படிப்பட்ட கலை அரங்கம் அமைப்பதற்கான ஏற்பாடுகளைத்தான் செய்கின்றோமேயொழிய புதிதாக கட்டிடம் கட்டுவதற்கான குறிப்புகள் இல்லை. ஆகவே, பொழுது போக்குக்கு வருகின்றவர்களை வரவேண்டாம் என்று சொல்வதற்குரிய ஒரு நிலையில் மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். பல இலட்சக்கணக்கான குடும்பங்கள் நல்லமுறையில் பொழுது போக்கிற்கு வருகின்ற இடத்தை கவர்ச்சிகரமான முறையிலே மெரினா கடற்கரையை அழகுபடுத்த வேண்டும் என்றுதான் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையில் உள்ள அந்த மணற்பாங்கு பல ஆண்டுகளாக மக்கள் அங்கு நடமாடுவதன் காரணமாக அந்த மணற்பாங்குமேலே உள்ள மணற்பாங்கு மிகவும் அழுக்காக இருக்கிறது





ஆகவே, அந்த மணலையெல்லாம் உள்ளே போட்டு; புதிய மணலையெல்லாம் மேலே வருவதற்கான ஒரு நிலைமையை இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்த மெரினா கடற்கரைக்குச் சென்றாரா என்று தெரியவில்லை. அங்கே அதிக பட்ச ஜனங்கள் நடமாடுகின்ற நேரத்திலே, மேலே இருக்கின்ற மணல் அடியிலும், அடியில் உள்ள மணல் மேலேயும் தானாகவே மாறிக் கொண்டுவருகிற நிலைமை இருக்கிறது. எனவே, தனியாக புதியதாக அதைப் புதுப்பிக்க வேண்டிய சூழ்நிலை இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : மான்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, மெரினா கடற்கரையிலே உள்ள கிணற்றிலே ஒரு சிறுவன் இறந்துவிட்டதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அந்தச் சிறுவன் இறந்த உடனே, அதற்குள் இறங்கி அவனைப் பாதுகாப்பதற்கு போதிய படிகள் இல்லாத காரணத்தால் பக்கத்திலே உள்ள தீ அணைப்பு படையினர்தான் வந்து காப்பாற்றினார்கள் என்று சொல்லப்படுகிறது. எனவே, அப்படிப்பட்ட கிணறுகளில் ஏறி இறங்குவதற்கான படிகள் அமைக்கின்ற திட்டம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கிணறுகளில் எல்லாம் படிகள் அமைக்கின்ற அளவிற்கு அது ஒன்றும் பெரிய கிணறு அல்ல.

## தருமபுரியில் இயங்கும் தீப்பெட்டித் தொழிற்சாலைகள்.

*வினா எண் 565—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியில் இயங்கும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்காமல் பட்டதாரி வாலிபர்கள் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இதுவரை அவைகளின் உற்பத்தி அளவு என்ன?

(இ) அவர்களுக்கு மாதம் எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

[1982 மார்ச் 20

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தருமபுரி மாவட்டத்தில் பட்டதாரி வாலிபர்களுக்காக சிறிய தீப்பெட்டி உற்பத்தி யாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மற்றும் (இ) : வினாக்களுக்கு இடமில்லை.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்காத காரணத்தால் பட்டதாரி வாலிபர்கள் கஷ்டப்படுகிறார்கள். இன்றைக்கு, தர்மபுரி, நெல்லை, முகவை, கோவை மாவட்டங்களில் ஏராளமான தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான குச்சி, அட்டை, இதர மூலப்பொருட்கள் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அந்தக் கஷ்டத்தைப் போக்க எந்த எந்த இடத்தில் என்னென்ன புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, தருமபுரி மாவட்டத்தில் இதுவரையில் பட்டதாரி தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவைச் சங்கம் அமைக்கப்படவில்லை. இனிதான் தொடங்கவேண்டியிருப்பதால் இந்தப் பிரச்சனை எழ வாய்ப்பில்லை.

திரு. ப. தீர்த்தராமன்: தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் தீப்பெட்டித் தொழில் இலாபகரமாக இயங்கவில்லை என்பதால் வேலையில்லாத பட்டதாரிகள் இந்தத் தொழிலைத் தொடங்க முன்வரவில்லை. ஆகவே, இதற்கு மாற்றுத் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே எடுத்துச் சொன்னதைப்போல அங்கு விரைவில் பட்டதாரிகளுக்காக தீப்பெட்டி உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்க இருக்கிறோம். அதன் மூலமாக அவர்களுக்கு நிச்சயமாக வேலைவாய்ப்பு உருவாகும்.

(முற்பகல் 9-20)

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நேற்று சொல்லும்போது இந்தத் தீப்பெட்டி செய்யும் தொழில் அதிக அளவில் நல்லமுறையில் செயல்பட்டு



1982 மார்ச் 20]

வருகின்றது என்று சொன்னார்கள். அப்படி இருந்தும் படித்து பட்டம் பெற்றவர்கள் மட்டுமல்லாமல் படிக்காதவர்கள் கூட கூட்டுறவு அமைப்பின்கீழ் வந்தால் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும் சொன்னார்கள். அந்த ரீதியிலே ஏற்படுத்தி இப்போது இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வேலைவாய்ப்பற்ற மக்களுக்கு முதலில் உதவி செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அரசு செய்யும்.

கூடலூர் தாலுகாவில் அரசுத் துறையில் தேயிலையை அடைக்கும் பெட்டிகள் செய்யும் தொழிற்சாலையை நிறுவும் திட்டம்.

வினா எண். 566—திரு. கு. ரமணி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம்—கூடலூர் தாலுகா அரசுத் துறையில் தேயிலையை அடைக்கும் பெட்டிகளைச் செய்யும் (Plywood) தொழிற்சாலையை நிறுவ போடப்பட்டுள்ள திட்டம் செயல்பட ஆரம்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுதிலிருந்து தொழிற்சாலை உற்பத்தி ஆரம்பிக்கும் ?

(இ) எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தமிழ்நாடு ஓட்டுப்பலகை மற்றும் வினியர்ஸ் தொழிற் கூட்டுறவு தொழிற்சாலை லிமிடெட் பந்தலூரில் 31-3-80-ல் பதிவு செய்யப்பட்டு அதற்குத் தேவையான 10 ஏக்கரா நிலம் நீலகிரி மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

(ஆ) ஒரு ஆண்டிற்குள் இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான கட்டிடம் கட்டி இயந்திரங்கள் நிறுவப்பட்டு உற்பத்தி துவங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இத் திட்டம் 53 பேர்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்பு அளிக்கும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையினுடைய திட்டத்திற்கு நீண்ட நாட்களாக ஆலோசனை செய்து, திட்டம் ஒத்துக் கொள்ளப்பட்டு பின் நடைமுறைக்கு வராமல் தாமதப்படுகிறது. அதைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு இந்த ப்ளைவுட் கொண்டு தேயிலை அடைக்கும் பெட்டிகளைத் தயார் செய்வது மட்டுமல்லாமல் வேறு ஏதாவது வேலைகளுக்கும் அந்தத் தொழிற்சாலையில் நடைபெறுவதற்கு திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல அந்த பந்தலூர் கிராமத்தில் இந்தத் தொழிலை நிறுவதற்கு திட்டமிட்டபோது அந்தப் பகுதி சதுப்பு நிலமாகவும் சாக்கடை ஓடுகின்ற இடமாகவும் இருந்ததால் அங்கிருந்து 7 கிலோ மீட்டருக்கு அப்பால் தோவாலா கிராமத்தில் நிறுவ முடிவு செய்து, ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் அல்லது முன்றாவது வாரத்தில் தொடக்க விழா நடக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் குறிப்பிட்ட தொழிற்சாலையில் இன்றைய தினம் 3 இலட்சம் ஒட்டுப்பலகை "ப்ளைவுட்" பெட்டிகள் செய்யவும் அதோடு தீப்பெட்டி குச்சிகள், அட்டைகள், 5 இலட்சம் ரூபாய் அளவுக்கு உற்பத்தி செய்கிற இணைத் தொழில் முயற்சியும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்திருக்கக் கூடிய பதிலிலிருந்து ப்ளைவுட் பெட்டிகள் ஏராளமான அளவுக்கு உற்பத்திச் செய்யப்படும் என்று தெரிகிறது. ஆனால் வேலை வாய்ப்பு மட்டும் இவ்வளவு குறைந்த அளவுக்கு, 50 பேர்கள் என்ற அளவுக்கு மட்டும் இருப்பதற்கு என்ன காரணம்? அதிகப்படியான பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற குறிப்பில் இந்த விவரம் இருக்கிறது மேலும் விவரங்கள் வேண்டுமானால் தனியாக உறுப்பினர் அவர்களுக்கு அறிவிக்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, கடந்த ஜூன் மாதத்திலே அந்த பந்தலூரில் ப்ளைவுட் பெட்டிகள் செய்யும் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுகிற விழாவுக்கு அமைச்சர் வருகிறார் என்று பல பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் எல்லோருக்கும் தெரியும் அப்படி இருந்தும் ஜூன் மாதம் ஏன் அடிக்கல் நாட்டவில்லை என்ற காரணத்தை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல அந்த இடத்தில் தொடங்குவதாக இருந்தது. ஆனால் அந்த இடம் எந்த இலாகாவுக்குச் சொந்தம் என்பதிலே பிரச்சனை எழுந்து, குறிப்பாக அந்த இடம் வன இலாகாவுக்குச் சொந்தமானதா அல்லது வருவாய்த் துறைக்குச் சொந்தமானதா என்ற பிரச்சனை ஏற்பட்டு, வன இலாகா என்று கருதி அதற்கு மத்திய சர்க்காரிடம் ஒப்புதல் பெறுவதற்கு சிக்கல் இருந்த காரணத்தால் சிக்கலை வைத்துக்கொண்டு தொழிற்சாலையைக் தொடங்கக்கூடாது, சந்தேகத்தோடு தொடங்கக் கூடாது என்று கருதி எச்சரிக்கையாக இருக்கக் கருதி, அந்த இடத்திற்கு நானே சென்ற பிறகு, சந்தேகம் என்ற பிறகு, நடத்தக் கூடாது என்று கருதி, பிறகு அரசு சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்து, வருகின்ற ஏப்ரல் மாதம் அந்தத் தொழிற்சாலை முழுமையாகத் தொடங்கப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதில் சலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் பகுதியில் ஒட்டுப்பலகை தொழிற்சாலை ஆரம்பிப்பதற்காக நன்றி கூறிக்கொள்கிறேன். அந்த தொழிற்சாலையை குறுகிய காலத்தில் கட்டிமுடிக்க அங்கே 'கன்ஸ்ட்ரக்ஷன்' பிரிவு இல்லை என்ற காரணத்தால், அங்கே ஒரு 'சப்-டிவிஷன்' ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு த்லைவர் அவர்களே, எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு, அந்தத் தொழிற்சாலையை விரைவாகத் தொடங்க அரசு ஆவன செய்யும்.

### *Tirunelveli–Tuticorin Road as a National Highway.*

* Q. No. 567—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether the Tirunelveli–Tuticorin Road is to be made a National Highways;

(b) whether the Central Government are to widen the road; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. பா. குழந்தைவேலு : (அ), (ஆ) மற்றும் (இ) திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு பாளையங்கோட்டை வழியாகச் செல்லும் சாலை தற்போதுள்ள தேசிய நெடுஞ் சாலையாகும். திருநெல்வேலியிலிருந்து பாளையங்கோட்டை

முடிய தேசிய நெடுஞ்சாலை 7, பாளையங்கோட்டையிலிருந்து தூத்துக்குடி முடிய தேசிய நெடுஞ்சாலை 7-ஏ ஆகும். தேசிய நெடுஞ்சாலை 7ஏ-இல் சாலை வளைவுகளை நோக்கி மேம்பாடு செய்தல், சாலையின் போக்கை திருத்தி அமைத்தல் ஒருவழிப் பாதையை இரு வழிப்பாதையாக அகலப்படுத்துதல், மேம்பாடு திட்டங்கள் இந்திய அரசுக்கு ஆறாவது திட்டத்தின் கீழ் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. மத்திய அரசு சில பணிகளுக்கு ஒப்புதலளித்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி துறைமுகம் விரிவுபடுத்துவதன் காரணமாகவும், தூத்துக்குடியில் அண்மைக்காலத்தில் பல முக்கியத் தொழில்கள் தொடங்கப்பட்டு இருப்பதன் காரணமாகவும், திருநெல்வேலி மாவட்டத்தின் தலைநகரத்தில் இருந்து அந்த தேசிய நெடுஞ்சாலை செல்வதாலும் அந்த தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வளைவுகளை நேராகவும், அந்தச் சாலையை விரிவுபடுத்தவும், மைய அரசோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு, நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, விரிவுபடுத்துவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாகத்தான் பல்வேறு வேலைகள் அந்த 7-ஏ என்ற தேசிய நெடுஞ்சாலையில் எடுக்கப்பட்டு இருக்கின்றன. ஏறக்குறைய 1 கோடியே 60 லட்சம் ரூபாய் 6-வது ஐந்தாண்டு திட்டத்தில் இதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

தருமபுரி நகராட்சியால் வாங்கப்பெற்ற இரும்புத் தொட்டிகள்.

*வினா எண். 568—திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தருமபுரி நகராட்சியில் 1970-ம் ஆண்டு வாங்கப்பட்ட சுமார் 5 லட்சம் ரூபாய் பெருமானமுள்ள இரும்பால் செய்யப்பட்ட டேங்குகள் பயன்படுத்தப்படாமல் அழிந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அது பற்றி தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) 1969-ம் ஆண்டு தர்மபுரி நகராட்சியில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ. 95,770 செலவில் இரண்டு இரும்பு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் வாங்கப்பட்டு, நகரில் பாதுகாக்கப்பட்ட



குடிநீர் திட்டம் செயல்படும்வரை பயன்படுத்தப்பட்டது. 1978-ம் ஆண்டு முதல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் மூலம் மக்களுக்கு குடிநீர் தேவையான அளவு விநியோகிக்கப்பட்டு வருவதால், இந்நகராட்சிக்கு தற்போது இந்த நீர்த் தொட்டிகளைப் பயன்படுத்தும் அவசியம் இல்லை. இத் தொட்டிகளை தேவைப்படும் வேறு நகராட்சிகள், அல்லது ஊராட்சி ஒன்றியங்களுக்கு விற்றுவிடுவது பற்றி நகராட்சி ஆணையர் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் மேம்பாலம் கட்டும் திட்டம்:

வினா எண். 569—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம் ஜோலார்பேட்டை ரயில்வே (ஜங்ஷன்) ஸ்டேஷன் மேலே மத்திய அரசு உதவியுடன் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடமுள்ளதா?

(ஆ) ஆமெனில் விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. ப. சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஜோலார்பேட்டை ஒரு பெரிய ஜங்ஷன். அது ஜோலார்பேட்டையின் மத்தியில் இருக்கிறது. ஆகவே, ஒரு பக்கத்தில் இருக்கும் மக்கள் மறு பக்கம் போகவேண்டும் என்றால் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்த இடத்தில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசிடம் அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அது பற்றிய திட்டம் இப்போது இல்லை என்பதைத்தான் முதலிலேயே தெரிவித்தேன்.

திரு. ப. சுந்தரம்: தலைவர் அவர்களே, அங்கே ஒரு மேம்பாலம் இல்லாத காரணத்தால் ஒரு பக்கத்தில் இருந்து மறு பக்கத்திற்கு போக்குவரத்து செல்வதில்பல் வேறு இடையூறுகள் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற கேட் அடிக்கடி மூடப்படுவதால், ஏறக்குறைய 6 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வரவேண்டியிருக்கிறது. அதோடு மருத்துவ மனைக்கு வருகின்ற நோயாளி

கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். கர்ப்பிணிகள் கூட, அந்த கேட் மூடியிருக்கின்ற நேரத்தில், உடனடியாக மருத்துவ மனைக்கு வரமுடியாத காரணத்தால், இறந்துபோகும் நிலைமைகள் கூட இருந்து இருக்கின்றன. ஆகவே, அரசு இதையெல்லாம் மனதில் கொண்டு உடனடியாக மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அங்கே மேம்பாலம் கட்டித் தர நடவடிக்கை எடுக்குமா?

மரண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம் கட்டவேண்டும் என்று சொன்னால் மத்திய அரசின் ஒப்புதல் தேவை. அது கிடைத்தால் தான் செய்ய முடியும். இப்படிப்பட்ட ரயில்பாதைகள் மீது மேம்பாலம் கட்டுகிற நேரத்தில் 50 சதவீதம் செலவை ரயில்வே துறையும், 50 சதவீதம் செலவை அங்கேயிருக்கிற நகராட்சியோ அல்லது ஒன்றியமோ ஏற்றுக்கொள்ள வேண்டும். மத்திய அரசைப் பொறுத்தவரையில் இதுபோன்று ரயில் பாதை குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கு அதிக அளவில் நிதி ஒதுக்குவது இல்லை. இந்த அரசைப் பொறுத்தவரையில் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

நகரரட்சிகளில் பன்றிகள் வளர்க்கத் தடை.

*வினா எண். 570—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) நகராட்சிகளில் பன்றி வளர்க்க தடை செய்யப்பட் டுள்ளதா ?

(ஆ) பன்றிகளால் மூளைக்காய்ச்சல் ஏற்படுவதாக அரசுக்கு புகார் ஏதும் வந்துள்ளதா ?

மரண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நகராட்சிகளில் பன்றிகள் வளர்க்க தடை செய்யப்படவில்லை. ஆனால் 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் பன்றிகள் உள்பட எல்லா பிராணிகளுக்கும் வரிவிதிக்கவும், உரிமம் பெறாமல் வைத்திருக்கும் பன்றிகளை அழிப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இல்லை.

(முற்பகல் 9-30).

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரிலுள்ள தாய்மார்கள் காலை தலே வீட்டிற்கு முன்னால் சாணம் தெளித்து அழகாகக் கோலம்



போட்டு, அழகு பார்த்து விட்டு, வீட்டு வேலைகளை முடித்து அவர்கள் கணவன் மார்களை வேலைக்குச் செல்ல வெளியே அனுப்பும்போது, வாசலில் வந்து பார்க்கிற நேரத்தில், அங்கே அந்தப் பன்றிகள் செய்துவைக்கிற ஆபாசத்தைக் கண்டு குமுறிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே வெளியே செல்லக் கூடிய கணவன் மார்களும் வெளியில் வரும்போது, வீட்டுக்கு வெளிப்புறத்தில் உள்ள சாக்கடைகளில் அந்தப் பன்றிகள் செய்து வைக்கும் மோசமான நிலைகளைக் கண்டு அருவறுப்பு அடை கிறார்கள். ஆகவே அரசு இந்தச் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, சாயாரண மக்களுடைய எந்த சாதாரண வேண்டு கோளையும் இந்த அரசு நிறைவேற்றி வைக்கும் என்பதற்கு இணங்க, அந்தப் பன்றிகளை அறவே ஒழிக்க அரசு முன் வந்து ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தாய்மார்கள் காலையிலே போடும் அழகான கோலங்களை யெல்லாம் பன்றிகள் அலங்கோலமாக மாற்றுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலைகளை யெல்லாம் அறிந்துதான், வளர்க்கிற பிராணிகள் எந்தப் பிராணிகளாக இருந்தாலும் உரிமம் பெறவேண்டும் உரிமம் பெறாமல் வளர்க்கக்கூடாது என்று விதியிடப்பட்டிருக் கிறது. ஆகவே, அப்படி உரிமம் பெறாமல் யார் யார் பன்றிகளை வளர்த்துக் கொண்டிருந்தாலும், அந்தப் பன்றிகளை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஊக்க போனஸ் என்று சொல்கிற வகையில் ஒரு பன்றிக்கு 5 ரூபாய் வீதம் பணம் கொடுத்து வாங்கி, அந்தப் பன்றிகளை நகராட்சிகளின் ஓரத்திலே கொண்டு போய் வளர்ப்பதற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த நடவடிக்கைகளை அமுல் படுத்தும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நிலைமைகளை சரி செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எம். எ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்றிகளை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஊக்க போனஸ் அளிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள் பொதுமக்கள் அந்தப் பன்றிகளை பிடிக்கச் சென்றால், சில ஊர்களிலே குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த வர்கள்தான் இந்தப் பன்றிகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார் கள். அவர்கள் வந்து ஏன் என்னுடைய பன்றிகளை பிடித்துக் கொடுத்தீர்கள் என்று ரோட்டிலேயே தகராறு செய்து அடிதடி கலாட்டா வரக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, எப்படி நாய்களுக்கு லைசன்ஸ் இல்லையென்றால் நகராட்சி ஊழியர் களைக் கொண்டு பிடிக்கிறீர்களோ அப்படியே இந்தப் பன்றி களையும் பிடித்து சுடுவதற்கு அரசே ஒரு ஏற்பாட்டை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மரண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, காக்காய் வேண்டுமானாலும் பிடித்து விடலாம். ஆனால் பன்றிகளை பிடிப்பது என்பது மிகப்மிகப் பெரிய கஷ்டம். அது மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுக்குத் தெரியும். ஆகவே அது எவ்வளவு கடினமான காரியம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகையினால்தான் பன்றிகளை பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 5 ரூபாய் என்று கொடுத்தால், பன்றிகளை பிடித்துக் கொடுக்க யாராவது முன் வருவார்கள் என்று கருதித்தான் இந்த ஊக்கபோனஸ் முறையை வைத்திருக்கிறோம். பன்றிகளை பிடித்து சுடுவது என்பது முடியாது. ஏனெனில் நகராட்சி அலுவலகங்களிலும், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களிலும் இருக்கும் கடைநிலை ஊழியர்கள்தான் இந்தப் பன்றிகளை வளர்க்கின்றனர். ஆகவே அதன்மூலம் அவர்களுக்கு வரும் வருமான;த்தை அரசு தடைசெய்ய விரும்பவில்லை. ஆகவே நான் இந்த மன்றத்தின் வாயிலாக அந்தத் தொழிலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். அந்தப் பன்றிகளை தயவுசெய்து நகரரட்சிகளின் ஓரங்களில், ஊரரட்சிகளின் ஓரங்களில் வைத்து வளர்க்க வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்ளே பன்றிகளினால் மூளைக் காய்ச்சல் நோய் வருவதாகச் சொல்கிறார்கள். ஆகவே அந்த பன்றிகளை அறவே ஒழிப்பதற்கு தக்க நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மரண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மூளைக் காய்ச்சல் போன்ற நோய்கள் வருவதற்கு பன்றிகள் காரணமாக இருக்கின்றன என்பதை விஞ்ஞான நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஜப்பானிய வைரஸ் என்ற கிருமி உற்பத்தியாவதற்கும் இது போன்ற பன்றிகள்தான் காரணமாக இருக்கின்றன. என்று சொல்லப்படுகிறது. அது மட்டும் அல்ல கொசுக்கள் அந்தப் பன்றிகளை கடிப்பதன் மூலமாக கியூலாஸ் என்கிற கிருமிகளை பெற்று, இங்கே வந்து மனிதனைக் கடிப்பதன் மூலமாக அதை பரப்புகிறது என்றெல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதன் விளைவாகத்தான் மூளைக் காய்ச்சல் மற்றும் சில நோய்கள் ஏற்படுகின்றன. ஆகவேதான் இப்படிப்பட்ட தன்றிகளை உடனடியாக அகற்றும் வேலையில் அரசு நடவடிக்கை படுத்து வருகிறது.



## சென்னை நகரில் தெருக்களின் பெயர்களிலுள்ள சாதிப் பெயரைநீக்க மேற்கண்ட நடவடிக்கைகள்.

*வினா எண். 571—திரு. து. புருஷோத்துமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை நகரில் தெருக்களின் பெயர்களில் உள்ள சாதிப்பெயரை நீக்கியதால் ஏற்பட்டுள்ள குழப்பநிலை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மரண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) : இப்பொருள் பற்றி வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி சாதிப் பெயரை நீக்குவதில சிக்கல்கள் ஏற்பட்டால் உள்ளாட்சிகள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவரை கலந்து புதுப்பெயர் சூட்டவேண்டும். சென்னையை பொறுத்தவரை மாநகராட்சியில் 150 கோட்டங்கள் இருப்பதாலும் மாநகர அதிகாரிகள் அதிக மக்கள் தொடர்பு கொண்டுள்ளதாலும் மாநகராட்சியே இதுபற்றி முடிவெடுக்கலாம் என்ற கருத்தை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். சென்னை மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 228-ன் கீழ் தெருக்களின் பெயரை மாற்றி அமைக்கும் பொறுப்பு மாமன்றத்துக்குத் தான் உண்டு. அவ்வாறு செய்வதற்கு முன் அரசின் அனுமதி பெறவேண்டும். எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றம் பதவி ஏற்றதும் மாநகராட்சியால் இச் சிக்கல்கள் தீர்க்கப்ப்டும்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, சென்னைத் தெருக்களைப் பொறுத்தவரையிலே ஜாதிப் பெயர்களை நீக்குவதைப் பொறுத்தவரையிலே பல்வேறு குழப்பங்கள் இருப்பதாக நாங்கள் கேள்விப்படுகிறோம். இன்னும் பல்வேறு இடங்களில் ஜாதிப் பெயர்களோடு தெருக்கள் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவாரா ? தற்போதும் நாயுடு தெரு என்றும், வன்னியர் தெரு என்றும், செம்படவர் தெரு என்றும், பிராமணர் தெரு என்றும் இருக்கின்றன. இப்படி இன்னும் பல தெருக்கள் ஜாதிப் பெயர்களைத் தாங்கி இருக்கின்றன. அவற்றையும் நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்த ஜாதிப் பெயர்களை நீக்குவது என்பது பெரிய சிக்கலான காரியம். இன்று சென்னை மாநகரிலே பல்வேறு பகுதிகளிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் வன்னியர்

1982 மார்ச் 20

தெரு என்றும் வேளாளர் தெரு என்றும், பிராமணர் தெரு என்றும், செட்டித் தெரு என்றும், யாதவர் தெரு என்றும் நாயுடு தெரு என்றும் இருக்கின்றன. இந்தத் தெருக்களைப் பொறுத்த வரையிலே ஜாதியினுடைய பெயரை நீக்கிவிட்டால் வெறும் தெரு என்று மட்டுமே ஆகிவிடும் உதாரணமாக நாயுடு தெரு என்பதிலுள்ள நாயுடு என்பதை நீக்கிவிட்டால் வெறும் தெரு என்பது மட்டுமே நிற்கும். ஆகவே இதிலே இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. அதுமட்டுமல்ல ஒரே மாதிரியான பெயர்கள் பல்வேறு ஜாதிகளின் பெயர்களோடு சேர்ந்து அப்படிப்பட்ட தெருக்களும் இருக்கின்றன. உதாரணமாக சீனிவாச ஐயர் தெரு என்று இருக்கின்றது, சீனிவாச நாயுடு தெரு என்று இருக்கின்றது. இவற்றிலே உள்ள ஜாதிப் பெயர்களை நீக்கிவிட்டால் வெறும் சீனிவாச தெரு என்பது மட்டுமே இருக்கும். ஆகவே இதனாலும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்த சிக்கல்களை ஆடிப்படையாக வைத்துத்தான் ஒரே பெயரிலே பல்வேறு ஜாதிப் பெயர்கள் சேர்ந்து அப்படி பல்வேறு தெருக்கள் இருந்தால் அவற்றின் பெயர்களை எல்லாம் மாற்றி தலைவர்களுடைய பெயர்களை அந்தப் பகுதிக்கு வைக்கலாம் என்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்துமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவரர்கள் சொன்ன மாதிரி என்னுடைய பகுதியிலேயும் பல தெருக்கள் இருக்கின்றன. இப்படி பல்வேறு இடங்களில் இருக்கின்ற தெருக்களின் பெயர்களைப் பொறுத்தவரையிலே மாநகராட்சி அதிகாரிகளுக்கே குழப்பங்கள் வந்துவிடுகின்றன. மேலும் கிருஷ்ணமூர்த்தி ஐயர் சாலை என்று இருக்கின்றது. இப்போது ஜாதிப் பெயர் நீக்கப்பட்டு விட்டதால் கிருஷ்ணமூர்த்தி சாலை என்று இருக்கின்றது. அடுத்து பாவாடை நாயக்கன் தெரு என்று இருந்தது. அதிலே உள்ள ஜாதிப் பெயரை நீக்கி விட்ட காரணத்தால் தற்போது பாவாடைத் தெரு என்று இருக்கின்றது. இந்தத் தெருவின் பெயரைச் சொல்வதற்கே கூச்சப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே இது பற்றி எல்லாம் தெளிவு படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆலோசனை சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பாவாடைக்கு மாற்றுப் பெயர்கள் கூறுவது என்பது என்னால் முடியாத காரியம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் கூட தெரிந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன், பெரியார் மாவட்டத்திலே ஈரோட்டிலே இப்படி ஒரு தெருவின் பெயர் பாவாடை நாயக்கன் தெரு என்பது. அந்தப் பெயரிலே உள்ள ஜாதிப் பெயர் போய்விட்ட காரணத்தால் அந்தத் தெருவின் பெயர் தற்போது பாவாடைத் தெரு என்று மாறிவிட்டது. ஆகவே இப்படிப்பட்ட பெயர்களைத் தெருக்களுக்கு வைப்பது



1982 மார்ச் 20]

என்பது சரியாக இருக்காது. ஆகவேதான் இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து தலைவர்களின் பெயர்களை வைத்துவிட்டால் சிரமங்கள் குறையும் என்று அரசு கருதுகிறது.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : தலைவரவர்களே, பாரி முனையிலே இருந்து செல்கின்ற தெருவின் பெயர் நேதாஜி சுபாஷ் சந்திர போஷ் தெரு என்பது. ஆனால் போஷ் என்பதைக் கூட ஜாதிப் பெயர் என்று நினைத்து அதனை நீக்கிவிட்டு தற்போது என். எஸ். சந்திரன் சாலை என்று போடப்பட்டிருக்கின்றது. இப்படி பெரிய தலைவர்களின் பெயருக்கே களங்கம் அளிக்கின்ற அளவுக்கு மாற்ற வேண்டாம் என்று வேண்டுகோள் விட்டதற்குப் பிறகும் கூட அப்படியே வைத்திருப்பது சரிதானா ? ஆகவே அவருடைய முழுப் பெயரையும் அதாவது நேதாஜி சுபாஷ் சந்திரபோஷ் சாலை என்று வைப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, என். எஸ். சி. என்று சொல்கிறபோது ' சி ' யிலே சந்திரபோஷ் என்பது வந்துவிடுகின்றது. இருந்தாலும் ஒருவேளை அது சேர்ந்து இல்லை என்று கருதப்படுமேயானால் அதைச் சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—40)

திரு. ஜி. மூர்த்தி : தெருக்களில் மாத்திரம் ஜாதிப் பெயர்கள் இருப்பதாகஅமைச்சர் அவர்கள் தயவு செய்து கருதிவிடக்கூடாது** என்று கிராமங்கள் கூட ஜாதிப் பெயர்களில் இருக்கின்றன அதை மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

* * *

திரு. எஸ். ஆண்டித் தேவர் : இது ஒரு உறுப்பினரை அவமானப்படுத்துகிற அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இதை தலைவர் அவர்களே , நீங்கள் அனுமதிக்கிறீர்களா ? அப்படியென்றால் இந்த நாட்டில் இனி மேல் ஜாதிப் பெயர்களே இருக்கக் கூடாது என்று அரசு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நட்புரிமை காரணமாகக் கேட்டார்கள் என நினைக்கிறேன். அந்தப் பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1982 மார்ச் 20

திரு. ஆ. வெள்ளைச்சாமி : இப்படி பல ஜாதிப் பெயர்களால் உள்ள தெருக்களால் ஏற்படுகிற குழப்பத்தை நீக்குவதற்காக தற்போது தபால் அலுவலகத்தில் பின்கோட் கொடுத்திருப்பதைப் போன்று தெருக்களுக்கும் எண்ணிக்கை கொடுக்கும் ஒரு புதிய முறையை புகுத்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படி எண்ணிக்கை கொடுத்தாலும் கூட சிரமம் இருக்கிறது. மாநகராட்சியில் பல்லாயிரக் கணக்கான தெருக்கள் இருக்கின்றன. ஆகவே எண் கொடுத்தாலும் கூட சிரமம் ஏற்படும்.

உணவு கலப்படத் தடை சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டோர் எண்ணிக்கை.

*வினா எண். 572—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1—1—1980 முதல் 1—1—1981 வரை கலப்படத் தடை சட்டத்தின் கீழ் எத்தனை பேர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) அவர்களுள் எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தமிழகத்தில் 1—1—1980 முதல் 1—1—1981 வரை உணவு கலப்படத் தடை சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை—1,858.

(ஆ) அவர்களுள் தண்டிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை—728.

பனைமரத்துப்பட்டியில் அரசு மருத்துவமனை கட்டும் திட்டம்.

*வினா எண். 573—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் பனைமரத்துப்பட்டியில் அரசு மருத்துவமனை கட்டுவதற்கு பொது மக்களால் ரூ. 10,000 (பத்தாயிரம்) செலுத்தப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?



1982 மார்ச் 20]

(ஆ) ஆம் எனில், மருத்துவமனை கட்டும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இங்கு மருத்துவமனை கட்டுவதற்கு ஆன நிலத்தை மருத்துவத் துறைக்கு மாற்றம் செய்யும் பணிகள் வருவாய் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலம் மருத்துவத் துறைக்கு மாற்றம் செய்தவுடன் மருத்துவமனை கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மருத்துவமனை கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பனைமரத்துப்பட்டியில் ஒரு அரசு மருத்துவமனை வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கை இருந்து வருகிறது. எனவே விரைவில் அத்திட்டத்தைச் செயல்படுத்தி அங்கே ஒரு மருத்துவமனை கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பனைமரத்துப்பட்டியில் இப்போது ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அது பாமிலி ப்ளானிங் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பொது மக்கள் ரூ. 10,000 கொடுத்திருக்கிறார்கள். 3·32 ஏக்கர் நிலமும் 18—6—1970-ல் ரெவன்யூ டிவிஷன் ஆபீஸரால் நம் இலாகாவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐந்து ஏக்கர் தேவை, மிச்ச நிலம் இ. இ. (பி. டப்ளியூ. டி.) ஆல் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஐந்து ஏக்கர் கிடைத்திருக்கிறது, ரூ.10,000-ம் கிடைத்திருக்கிறது. ஆகவே விரைவில் அதைப் பூர்த்தி செய்து செயல்படுத்த இருக்கிறோம்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : அரசு மருத்துவமனை கட்டுவதற்கு காலதாமதமானாலும் கூட அங்குள்ள அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை அப் கிரேட் செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இப்போது அந்த ஆரம்ப சுகாதார நிலையம் பாமிலிப்ளானிங் பில்டிங்கில் இருக்கிறது. அதற்கு ஒரு நல்ல கட்டடம் கட்டிமுடித்தபிறகு அதை விரிவுபடுத்தும் பிரச்சினை பற்றி சிந்திக்கலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அமைச்சர் அவர்கள் ரூ. 10,000-ம் கட்டி மூன்று ஏக்கர்நிலமும் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். ஐந்து ஏக்கர்கள் வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி ரூ. 10,000-ம் ஐந்து ஏக்கரும் கொடுத்தும் மருத்துவமனை கட்டப்படாத இடங்கள் இருக்கிறதா? அப்படி கொடுத்தால் அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து மருத்துவமனைகள் நிறுவ வழிவகை செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச. வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அப்படிப்பட்ட வாய்ப்புகள் அரசாங்கத்திற்குத் தரப்படுமானால் முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத தெரிவிததுக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ரூ. 10,000 கொடுததார்கள் ; 3 ஏக்கர் நிலம் கொடுததார்கள் என்று சொல்லுகிறார்கள். சேலம் மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம் ; மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி. அவர்களால் அந்த அளவுக்கு கொடுத்த பிறகு, 2 ஏக்கர் நிலத்தை மக்களின் நல்வாழ்வைக் கருதி அரசாங்கததாலே விலை கொடுத்து இதைச் செய்யக் கூடாதா ? பின்தங்கிய பகுதியாக இருப்பதால், இவ்வளவுதான் அவர்களால் கொடுக்க முடியும் என்ற ஒரு நிலைமை வந்த பிறகு, 1970ஆம் ஆண்டு முதல் இன்றைக்கு 1982வரை அதாவது 12 ஆண்டுகள் காலம் தாழ்ததிக் கொண்டிருப்பதா ? அரசாங்கத்தின் சார்பிலே அங்கே மருத்துவமனை கட்டப்படுமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரத்துப்பட்டி தொகுதியைப் பொறுத்தவரையில் நல்ல முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் ஆனால், இதிலே எவ்வித பாரபட்சமும் இல்லை. அங்கே இருக்கக் கூடிய பிரச்னையெல்லாம், நில ஆர்ஜிதம் செய்வதைப் பற்றி நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் கவனிக்கவில்லை என்று எண்ணுகிறேன். 18—6—1970 அன்று ஆர். டி. ஓ. ஆர்ஜிதம் செய்ய வந்தபோது, அதிலே சில சிக்கல்கள் ஏற்பட்டது, நில ஆர்ஜிதம் என்றவுடன், அது அவ்வளவு இலேசான காரியமல்ல ; உடனே கோர்ட்டுக்குப் போய் விடுவார்கள். அதைத் தவிர்க்க வேண்டும். 5 ஏக்கர் நிலம் இருந்தால்தான் அங்கே மருத்துவமனை கட்ட முடியும். ஆனால், இப்போது அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிக் கொண்டு வருகிறது. குடும்பக் கட்டுப்பாடு கட்டிடத்தில் தற்போது இயங்கிக்கொண்டு வருகிறது. அதற்கென்று ஒரு மருததுவமனை இருக்க வேண்டுமென்பதற்காக 5 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, விரைவில் கட்டி முடிக்கப்படும்.

### குழந்தைகளை தாக்கும் போலி நோய் :

* வினா எண்—574 திரு. பம்பல் நல்லதம்பி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுததுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குழந்தைகளை தாக்கும் போலியோ எனப்படும் நோய் சென்னை நகரிலிருந்து, கிராமப் பகுதிகளுக்கும் பரவி வருவதை அரசு அறியுமா ?



(ஆ) கிராமப் பகுதிகளில் பரவாமல் தடுக்க தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மாவட்ட சுகாதார அதிகாரிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி சென்னையிலிருந்து கிராமப்பகுதிகளில் இந்நோய் பரவுவதாக எந்தவித ஆதாரமும் இல்லை.

(ஆ) இந்நோய் கிராமப் பகுதிகளுக்கு பரவாமல் தடுக்க ஏற்கனவே தேவையான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 0—2 வயது குழந்தைகளுக்கு போலியோ வராமல் தடுக்கும் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மற்றும் நகராட்சி அலுவலகங்களிலும் உள்ள சுகாதார அலுவலர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் இந்த போலியோ தடுப்பு மருந்து தனிப்பட்ட சிலரால் செய்தாலும், அரசு மருத்துவமனைகளிலே அதை எல்லாக் குழந்தைகளுக்கும் செய்வதில்லை. தவிர, இப்படிப்பட்ட போலியோ காய்ச்சல் வந்தால், அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்ச்சல் வந்தால் உடனடியாக அந்த வாக்சின் கொடுத்தால் பயனில்லை. அது மட்டுமல்ல. காய்ச்சல் வந்தால் வேறு வைத்தியம் செய்யவேண்டும். போலியோ ஓரல் வாக்சின் கொடுத்தால், அந்தக் குழந்தைக்கு சில குறிப்பிட்ட தினங்களுக்குப் பிறகுதான் இம்மியூனிசேஷன் வரும். போலியோ ஊசி போட்டால் 6 வாரங்கள் ஆகும். அதேபோல் டைபாய்டு ஊசி போட்டால் 15 நாட்களுக்குப் பிறகு இம்யூனிசேஷன் வரும். ஆகவே, உடனடியாக அதை செய்யக் கூடாது. காய்ச்சல் வந்தவுடன், அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்து, சிகிச்சை செய்ய வேண்டும் என்று எல்லா இடங்களிலும் இருக்கக் கூடிய டாக்டர்களுக்கு சொல்லியிருப்பதோடு மட்டுமல்லாமல், எப்படி உடனடியாக கவனிக்க வேண்டும் என்பதற்கு பீடியாட்ரிக் துறை மூலம் அதற்கான இன்ஸ்ட்ரக்ஷனையும் அறிவித்திருக்கிறோம். அடுத்து, முன்பெல்லாம் இருந்ததை விட இப்போது பல மடங்கு தீவிரப்படுததி, நிறைய வாக்சின்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான புள்ளி விவரங்களையெல்லாம் மானிய கோரிக்கையிலேகூட எடுததுச் சொன்னேன்.

[1982 மார்ச் 20

(முற்பகல் 9·50)

திரு. இ. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, குழந்தைபிறந்த இவ்வளவு நாட்களில் கட்டாயமாக அம்மை குதத வேண்டுமென்று தண்டோரா போடுவதுபோன்று சிறு குழந்தைகளுக்கு போலியோ நோய் ஆரம்பத்திலேயே தடுக்கப்படுவதற்கு ஏற்ற முறையிலே தண்டோரா போட்டு தடுப்பு ஊசி போடச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் திரு. எச். வி. ஹண்டே : நம் முன்னாலே உள்ள பிரச்சினையெல்லாம் போலியோ வேக்சின் அத்தனையும் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய தேவையிலே 30 சதவீதம், 25 சதவீதம் தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது, அரசாங்கத்திற்கு 25 சதவீதமும் தனியார்கள் கொஞ்சம் வரவழைக்கக் கூடிய நிலைமையும் இருக்கிறது. ஆகவே தண்டோரா போட்டு செய்ய வேண்டியதில்லை. இருக்கக்கூடிய குழந்தைகளை ஐடன்டிபை பண்ணி ஆங்காங்கே ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக செய்யப்பட்டு வருகிறது. சில மாவட்டங்களிலே நாம் இந்தப் பணியை எடுத்துக் கொண்டிருக்கிறோம். திருச்சி மாவட்டத்திலே எல்லா குழந்தைகளுக்கும் கிராஷ் புரோகிராமாக போட்டு முடிக்கப்பட்டு வருகிறது. உடனடியாக எல்லா மாவட்டங்களிலும் கிடைக்கக்கூடிய வேக்சின் அததனையும்பயன்படுத்தப் பட்டு வருகிறது. இன்னும் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கததிற்கு எழுதிக் கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். டி. உகும்சந்த் : தனியார்கள் போலியோ தடுப்பு ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்த விரும்பினால் அரசு அதற்கு அனுமதிக்குமா ? அதற்கு உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச. வி. ஹண்டே : போலியோ தடுப்பு மருந்து கொடுப்பதற்கு பெரிய அமைப்புத் தேவையில்லை. தனியார் மருததுவ மனைகளிலே, டிஸ்பன்சரியிலே கூட கொடுக்க முடியும். தனியாக வரவழைத்துக் கொடுததுக் கொண்டிருக்கிறார்கள். சென்னையிலே ஜெயின் அசோசியேஷன் போன்ற அசோசியேஷன்கள் போலியோ வேக்சின் கொடுக்கிற நிலை இருக்கிறது. தனியார்கள் இலவசமாக கொடுக்க முன்வந்தால் வாங்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1982 மார்ச் 20]

**கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு கட்டும் திட்டம் :**

* வினா எண் 575—திரு. எ. டி. குலசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய நோய் சிகிச்சைக்கு போதியக் கருவிகளுடன் விரிவான துறை கட்டப்படுமா ?

(ஆ) போதிய ஈ.சி.ஜி. கருவிகள் சரிவர இல்லாதிருப்பது உண்மையா ?

(இ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்போது இல்லை.

(ஆ) ஆம்.

(இ) கூடுதல் ஐந்து ஈ.சி.ஜி. கருவிகள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலே கார்டியாகிராம் செக்ஷனில் போதிய அளவுக்கு மெஷின்கள் இல்லாத குறை இருக்கிறது. அது அமைச்சருக்கும் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். ஒரு எக்கோ கார்டியாகிராம் மெஷின் தேவை என்று 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதி அரசுத் துறைக்கு கடிதம் சாங்க்ஷன் பண்ணச்சொல்லி எழுதியும்கூட நான் விசாரித்த வரையில் இது வரையில் அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. 1981—82 ஆம் ஆண்டுக்கு இந்த ஆஸ்பத்திரிக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மிச்சம் இருக்கின்ற நிதியை சரண்டர் பண்ணப்போவதாக நான் கேள்விப்படுகிறேன். அதற்கு சாங்ஷன் கிடைக்காததால் அந்த மெஷினை வாங்கமுடியவில்லை. ஆகவே எக்கோ கார்டியாகிராம் மெஷினை உடனடியாக வாங்குவதற்கும் சரண்டர் பண்ணுவதற்கு முன்னால் அமைச்சர் அவர்கள் தலையிட்டு நிறைவேற்றித் தருவதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கொஞ்சம் விஷயம் தெரிந்து கொண்டு கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஆனால் முழு விவரமும் தரப்பட வில்லை என்று நினைக்கிறேன். அங்கே

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1982 மார்ச் 20

எக்கோ கார்டியாகிராம் வேண்டுமென்று இலாகாவுக்கு எழுதினார்கள். 8 லட்சத்து 42 ஆயிரத்து 37 ரூபாய் பார்ட் 2 ஸ்கீமில் சேர்க்கப்பட்டது உண்மை. ஒரே நேரத்திலே பல விஷயங்கள் வேண்டும் என்று சொல்லப்படுகிறபோது அத்தனையையும் கொடுப்பதற்கு நிதிநிலைமை இடம் கொடுக்காது. மாண்புமிகு உறுப்பினர் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே இருந்து பணியாற்றி இருகிறார்கள். அவர்களுக்குத் தெரியும். அது அல்ல பிரச்சினை. பணம் இல்லாத காரணத்தினாலே கொஞ்சம் டெபர் பண்ணப்பட்டது. We are again pressing that and it is likely it may be granted ஆனால் ஏதோ ஒதுக்கப்பட்டபணம் நம்முடையதிறமையின்மை காரணமாக சரண்டர் செய்யப்பட்டது என்ற பிரச்சினை இல்லை. நம் இலாகாவைப் பொறுத்தவரையில் சுறுசுறுப்பாக செயல்பட்டு வருகிறோம். சரண்டர் ஆகிற பிரச்சினையே இல்லை தவறான எண்ணம் வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

There is no question of surrendering any amount.
The question is about pressing this and getting it.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுரை மாவட்டத்தில் எப்படி இராமநாதபுரம் மாவட்டமும், தென் மாவட்டங்களும் இணைக்கப்படுகிறதோ, அதேமாதிரி நீலகிரி மாவட்டம், பெரியார் மாவட்டம், மதுரை மாவட்டத்தில் ஒரு பகுதி இந்த கோவை மருத்துவமனையை நம்பியிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்த அடிப்படையிலே போதிய ஈ.சி.ஜி. வசதி இல்லாததோடு மருத்துவமனைக்கு தேவையான நவீன கருவிகளும், அவசர பிரிவிற்கு தேவையான அவசர கருவிகளும் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? எந்த கண்ணோட்டத்தோடு பார்த்தாலும், பார்க்காவிட்டாலும் தான் பிறந்த மருத்துவமனை என்ற அடிப்படையிலே அமைச்சர் அவர்கள் கொஞ்சம் தயவுசெய்து கருணைகாட்டி எல்லா பிரிவுகளையும் வாங்கித் தருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு, தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவைத் தம்பி அவர்கள் கேட்பது ஈ.சி.ஜி., மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் கேட்டது ''ஈக்கோ கார்டியாகிராம்'' அதற்கு தான் நெகட்டிவ் ஆன்சர் என்று சொன்னேன். ஈ.சி.ஜி. பொறுத்த வரையில் அது போதாது என்ற அடிப்படையிலே ஈ.சி.ஜி. மானிட்டரின் என்று இருக்கிறதே, அது கான்ஸ்ட்டன்டாக துடிதுடிப்பை கொடுத்துக் கொண்டிருக்கும். உடனடியாக தவறு ஏதும் ஏற்படுமானால் அதை கண்டுபிடிப்பதற்கு சௌகர்யமாக இருக்கும். கோவைத் தம்பி அவர்களுக்கு நிச்சயமாக மனநிறைவைத் தரும் என்று நினைக்கிறேன். இந்த கருவிகள் 5 கருவிகள் வாங்கி அந்த இடத்திலே மானிட்டரின் ஆரம்பிக்க விரும்புகிறோம்.



1982 மார்ச் 20]

1978 ஆம் ஆண்டு முதல் முதலாக மானிட்டரிங் வாங்கினோம். இப்போது ஐந்து கருவிகள் வாங்கி ஒரு நல்லவகையிலே அது பயன்படுகிற அளவிற்கு நிச்சயமாக பொறுத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை பொது மருத்துவமனையிலுள்ள குடல் மற்றும்
கல்லீரல் நோய் சிறப்பு மருத்துவப்பிரிவு.

* வினா எண். 576 **திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடல் மற்றும் கல்லீரல் நோய் சிறப்பு மருத்துவப் பிரிவு (Medical Gastro Entrology) சென்னை பொது மருத்துவமனையில் மட்டும்தான் தமிழகத்தில் இருக்கிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் மதுரை மருத்துவமனையில் இப்பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) இதற்கான செயற்குறிப்பொன்று மருத்துவக் கல்வி இயக்குநரிடமிருந்து வரப்பெற்று அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை இராஜாஜி மருத்துவமனையிலே அனுமதிக்கப்படுகிற உள்நோயாளிகளிலே ஏறத்தாழ 30 சதவீதத்தினர் இந்த குடல் நோயாலும், கல்லீரல் நோயாலும் அவதிபடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு வைத்தியம் பார்க்கவேண்டுமென்றால் தனிப்பட்டவர்களிடம் செல்லும்போது 1,000 ரூபாய், 1,500 ரூபாய் என்று கேட்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு ஒருமுறை சொல்கிறபோது தேவை ஏற்படுகிற போது அது செய்யப்படும் என்று சொன்னார்கள். இங்கே சென்னையிலே இருக்கிற அந்த பிரிவைச் சேர்ந்த இயக்குநரும் மதுரையிலே அந்த பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மதுரையிலே இருக்கிற டீன் அவர்களும் அது ஏற்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையை கருதி தென் மாவட்டங்கள் அனைத்தும் பயன்பெறுகிற அளவிற்கு அந்த பிரிவை விரைவாக ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1982 மார்ச் 20

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டைரக்டர் ஆப் மெடிக்கல் எஜுகேஷன் 30 படுக்கைகள் கொண்ட கேஸ்ட்ரோ என்ட்ராலஜி டிபார்ட்மென்ட் இராஜாஜி மருத்துவ மனையிலே துவங்கவேண்டுமென்பதற்காக ஒரு புரோபசல் அனுப்பியிருக்கிறார்கள். அந்த புரோபசலில்—

Reader 1; Tutors 2; Nurses 4; Laboratory Technician Grade I—1; Nursing Assistants—4; Total expenditure on staff Rs. 1.79 lakhs; Non-recurring expenditure; Buildings—Rs. 8 lakhs; Equipment Rs. 2.54 lakhs;

இந்தத் தொகை ஏறத்தாழ 10, 11 லட்சம் மதிப்புள்ள நான் ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சர்; அதற்காக ஒரு குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தினுடைய தீவிர பரிசீலனையில் இருக்கிறது; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து அந்த பரிசீலனைக்கு உகந்ததாக இருக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த பிரிவினை நிறுவுவதற்கான தேவை செலவினைப் பற்றி சொன்னார்கள். சென்னை மருத்துவக் கல்லூரியில் 200 மாணவர்கள் படிக்கிறார்கள். அதே போன்று மதுரை கல்லூரியிலும் டாக்டர்பட்டத்திற்காக 200பேர்கள் படிக்கிறார்கள். இங்கே படிக்கிற அந்த 200 மாணவர்கள் குடல், கல்லீரல் நோய் பற்றி, இந்த பிரிவு இருக்கிறதால் அறிந்து தெரிந்து கொள்கிற வாய்ப்பு இருக்கிறது. அதே சமயத்தில் மதுரையிலே இருக்கிற மாணவர்கள் அந்த வாய்ப்பை இழக்கிறார்கள் என்ற அந்த கருத்தைவைத்து எவ்வளவு பணக் கஷ்டம் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக தென் மாவட்டங்களில் இருக்கிற மக்களின் நன்மையைக் கருதி மிக விரைவிலே அந்த பிரிவை ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்கிறேன்.

(முற்பகல் 10–00).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய கருத்து, ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாக, சரியாக இல்லை. ஏனென்றால், ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் ஒவ்வொரு காஸ்டிரோ என்ட்ராலஜி டிபார்ட்மென்ட் வைக்க வேண்டுமென்றால், அது முடியாத காரியம். மருத்துவக் கல்லூரிகளிலே காஸ்டிரோ என்ட்ராலஜி டிபார்ட்மென்ட் எதற்காக



1982 மார்ச் 20]

துவக்கியிருக்கிறார்கள் என்றால், நோயாளிகளுக்குப் பயன்பட வேண்டுமென்பது ஒன்று. இரண்டாவதாக, போஸ்ட் கிராஜுவேட்ஸ், இதில் மேற்பட்டப் படிப்பு படிப்பதற்காக, மற்றும் டி.எம்., அதாவது, அப்பர் கிராஜுவேட்ஸ் மாணவர்கள் படிப்பதற்காகப் பயன்படுகிறது. ஆகவே, எம்.பி.பி.எஸ்., மாணவர்களுக்கு காஸ்டிரோ என்ட்ராலஜி டிபார்ட்மென்ட் தேவையில்லை. அவர்களுக்கு என்ன தேவை என்றால், அந்த வியாதி வரக்கூடிய நேரத்தில், அதற்கு, என்ன, என்ன சிகிச்சை செய்வது, என்பது தான். சாதாரண அன்டர்கிராஜுவேட் படிப்புக்கு அது போதும். அது இப்பொழுது மதுரை மெடிகல் காலேஜிலே நல்லவகையிலே கிடைக்கிறது. 75 சத விகிதம், காஸ்டிரோ என்ட்ராலஜி டிபார்ட்மென்ட் இல்லாமல், சாதாரண மருத்துவ மனைப் படுக்கைகளிலே மெடிக்கல் வார்டுகளிலே கவனிக்கக் கூடியதாக இருக்கிறது. அதைக் கவனிக்கக்கூடிய தகுதி பெற்ற டாக்டர்களும் இருக்கிறார்கள். ஆகவே, இதிலே எம்.பி.பி.எஸ். மாணவர்களைப் பொறுத்தவரையில், எந்தப் பிரச்னையும் எழவில்லை. இங்கே, மெட்ராஸ் மெடிக்கல் காலேஜிலே என்ன படிப்பு சொல்லப்படுகிறதோ, அதே அளவு கல்வி, அதே தரமான படிப்பு அங்கேயும் சொல்லித் தரப்படுகிறது.

காஞ்சிபுரத்தில் தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளில் வேலை செய்து வந்தவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம்:

* வினா எண்.—577 திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

காஞ்சிபுரத்தில் S.L.N.S. சர்வீஸ், சஞ்சீவி பஸ் சர்வீஸ் போன்ற தேசிய மயமாக்கப்பட்ட பேருந்துகளில் வேலை செய்து வந்த தொழிலாளர்களுக்கு அரசு பேருந்துகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: வேண்டிய நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே எடுத்துள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கும்போது தனியார் பேருந்துகளில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் இன்றுவரை மாற்று வேலை பெறமுடியாமல் இருப்பதாக அறிகிறேன். அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அரசு முனையுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளிலே யார், யார் வேலை செய்தார்கள் என்பதை அந்தந்த மாவட்டப் போக்குவரத்து அதிகாரிகள் பரிந்துரை செய்ததன் பேரில் இங்கே நாம் வேலை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இன்னும் கொடுக்கப்படவில்லையென்று யாராவது சொல்வார்களே யானால் அந்த தகுதியை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகளின் முதலாளிகள் பல தொழிலாளர்களைச் சட்டத்திற்குட்பட்ட முறையில் பதிவு செய்யாமல் தற்காலிகமாக, 10, 15 ஆண்டுகள் வேலை வாங்கியிருக்கிறார்கள். அது போன்ற தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்புத் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படி தனியார் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கும் போது அவர்கள் சரியான முறையிலே பதிவு செய்யாமல் இருந்திருப்பார்களேயானால் இப்பொழுது நாம் அவர்களை எடுத்துக் கொள்வது என்பது கொஞ்சம் சிரமமான காரியம். அப்பொழுதே அவர்கள் அரசாங்கத்திற்குத் தெரிவித்து அந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்க வேண்டும். இப்பொழுது இளைஞர்கள் நிறைய பேர் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிற நேரத்தில், இவர்களை எடுத்துக் கொள்வது என்பது கொஞ்சம் யோசனைக் குரியதாகத் தானிருக்கிறது. இருந்தாலும் மனிதாபிமான அடிப்படையிலே அரசாங்கம் சிந்திக்கும்.

**கிராமப்புற வழித்தடங்களில் மினி பஸ்களை விடும் திட்டம் :**

வினா எண். 578—திரு. செ. செம்மலை : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற வழித்தடங்களில் 'மினி பஸ்கள்' விடும் திட்டம் எப்போது துவக்கப்படும்?

(ஆ) முதன் முறையாக எத்தனை மினி பஸ்கள் விட திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 1978-ஆம் ஆண்டிலிருந்தே கிராமப்புற வழித்தடங்களில் மினி பஸ்கள் விடும் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இது வரையில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 66 வழித்தடங்களில் 70 மினி பஸ்கள் விடப்பட்டுள்ளன.



திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற மினி பஸ்களுக்கு அரசு ஏதேனும் வரிச் சலுகை அளித்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. நகரப் பேருந்துகளுக்கு ரூ. 115 நாம் ஒரு இருக்கைக்கு வாங்குகிறோம். மினி பஸ்ஸைப் பொறுத்த மட்டிலும் ரூ. 50 தான் ஒரு இருக்கைக்கு வாங்குகிறோம்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மினி பஸ்களுக்கு அரசு வரிச் சலுகை அளித்துள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும், மினி பஸ்களில் மற்ற பேருந்துகளைப் போன்ற ஒரே கட்டணம்தான் வசூலிக்கப்பட்டு வருகிறது. எனவே, வரிச் சலுகை அளித்துள்ள இந்த நிலையில் மினி பஸ்கள்—கிராமப் புறங்களை இணைக்கின்ற அளவிலே, இந்த மினி பஸ்கள் விடப்பட்டுள்ளதால்—பயணக் கட்டணத்தைக் குறைக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த மினி பஸ் போகக்கூடிய இடத்தில் சரியான வசூல் இருக்காது. அதை ஓட்டுகின்ற அளவிற்கு அதிலே இலாபம் வராது என்ற காரணத்தால்தான் அந்த வரிச் சலுகை கொடுத்திருக்கிறோம். அதைக் கொடுத்துவிட்டு மீண்டும் நாம் கட்டணச் சலுகையைக் கொடுப்போமானால்—இதற்கு முன்பே கட்டணச் சலுகையும் வரிச் சலுகையும் கொடுக்காமல் அப்படியே வைத்திருக்க முடியும். எனவே, வரிச் சலுகை கொடுத்தது அதைக் கொஞ்சம் இலாபகரமாக ஓட்ட வேண்டுமென்பதற்காகத்தான்.

திரு. சி. பழனிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மினி பஸ் ஓடுகின்ற வழித் தடங்களில் ஓட்டுகின்ற டிரைவர்களுக்கும், கண்டக்டர்களுக்கும் குறைவாக தினப்படி கொடுப்பதால் அவர்கள் சரியான முறையில் மினி பஸ்களை ஓட்டவில்லையென்று அரசுக்குப் புகார் வந்துள்ளதா? அப்படி அவர்களுக்கு அதிகப்படியான தினப் படியைக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் இதுவரையில் வரவில்லை. இனிமேல் வருமேயானால் அதைப் பார்த்து அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

[1982 மார்ச் 20

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைப் பகுதிகளிலே ஓடும் சேரன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம் ஆகிய நிறுவனங்கள் தவிர மற்றப் போக்குவரத்து நிறுவனங்களில் மினி பஸ்கள் சரியாக விடப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் நஷ்டம் அடையும் வழித் தடங்களில் அந்த இழப்பை ஓரளவிற்கு குறைக்கும் வகையிலும், கிராமப் பகுதி மக்கள் பயனடையும் வகையிலும் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் மினி பஸ்கள் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அரசினுடைய சட்டப்படி இப்படிப்பட்ட வழித்தடங்களில்தான் மினி பஸ்கள் விடப்பட வேண்டுமென்ற வரைமுறையை விதித்திருக்கிறோம்; அந்த வரைமுறைக்கு உட்பட்டு எந்தெந்த வழித் தடங்கள் வருகின்றனவோ அங்கு விட்டுக் கொண்டிருக்கிறோம். அதை வேகப்படுத்தும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் இந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மோட்டார் வாகன விபத்துக்களில் இறந்தவர்கள் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் வழங்கப்படும் நிதி உதவி :

*வினா எண். 579—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மோட்டார் வாகன விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும், விபத்து நடந்த உடனேயே Ex-Gratia Payment வழங்க வகை செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

(இ) அந்த தொகை உயர்த்தப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) (ஆ) மற்றும் (இ) : விவர அறிக்கை *ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

---

*........137ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1982 மார்ச் 20]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிச் சாலை விபத்துக்களில் மாண்டவர்களின் குடும்பங்களுக்கு உதவித் தொகை அளிக்கின்ற இந்தச் சிறப்பு மிகுத் திட்டம் எப்பொழுதிலிருந்து செயல்பட்டு வருகிறது? இந்தத் தொகையை இறந்தவர்களின் குடும்பங்களுக்குக் கொடுக்கும்பொழுது, நீதிமன்றங்களில் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையில் அந்தப் பணம் கழித்துக் கொள்ளப்படுகிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, இது 20—2—1978-லிருந்து முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியில் இருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டு உள்ளது. இதிலே அவர்களுக்குக் கிடைக்கின்ற அந்த இழப்பீட்டுத் தொகையிலிருந்து கழிக்கப்படுவதாக சூழ்நிலை இல்லை, கழிக்காமல் இதைத் தனியாகக் கொடுக்கிறோம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிக் கொடுக்கப்படும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை காவல் துறையினருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எழுதி அதற்குப் பிறகு கிடைப்பதாலே கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, விபத்தில் மாண்ட உடனேயே இந்தத் தொகையைக் கொடுக்கின்ற அளவிற்கு வழி வகை செய்ய பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, அரசினுடைய சட்டப்படி இறந்தவர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இறந்திருக்கிறார்கள், தகுதி என்ன, அந்தப் பணத்தை யாரிடத்தில் கொடுப்பது, அந்தப் பணத்தைப் பெறக் கூடிய தகுதி படைத்தவர்கள் யார் என்ற இவைகளை எல்லாம் பார்த்து தான் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இறந்த உடனேயே கொடுக்க வேண்டுமென்றால் யார் யாரோ வாங்கிக் கொண்டு போவார்கள். ஆகவே தான் பார்த்துக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால்தான் கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது.

மாணவர்களுக்கு வழங்கப்படும் பஸ் கட்டணச் சலுகை :

* வினா எண். 580 :—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா :

போக்குவரத்துக் கழகங்களில் மாணவர்களுக்கு வழங்கப்படும் பஸ் கட்டணச் சலுகையால் ஏற்படும் இழப்புத் தொகைப் அரசிடமிருந்து பெறப்படுகிறதா ?

[1982 மார்ச் 20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாணவர்களுக்கு வழங்கப்படும் பேருந்துக் கட்டணச் சலுகையால் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்படும் இழப்புத் தொகையில் ஒரு பகுதியை அக்கழகத்திற்கு அரசு ஈடு செய்து கொடுக்கிறது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிக் கட்டணச் சலுகை கொடுப்பதால் 1981–82 ஆம் ஆண்டில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்பட்ட இழப்புத் தொகை எவ்வளவு என்று அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, நாம் இப்பொழுது கொடுத்திருக்கின்ற அந்தக் கட்டண முழுத் தொகை 5 கோடியே 40 இலட்சம் ரூபாய். அதிலே அந்த மாணவர்களிடத்தில் வசூலிக்கும் தொகை 1 கோடியே 35 இலட்சம் ரூபாய். எனவே, நமக்கு ஏற்படும் நஷ்டம் 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டுக்கு மட்டும் நஷ்டம் ஏற்படும் என்று கணக்குப் போட்டிருக்கிறோம். இது வரைக்கும் அரசாங்கத்திலிருந்து போக்குவரத்துக் கழகத்திற்கு ஈட்டுத் தொகையை, ஒரு பகுதி தொகையைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிச் சென்னை நகரத்திற்கு மட்டும் இது போன்ற கட்டணச் சலுகை இருப்பதாக அறிகிறேன். இந்தச் சலுகையை சென்னைக்கு அப்பாலுள்ள மாவட்டங்களில் உள்ள நகரங்களுக்கும் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற்கனவே எல்லா இடங்களிலும் இருக்கிறது. சென்னை மாநகரத்தில் கொஞ்சம் அதிகமாகச் சலுகை இருக்கிறது ; மற்ற இடங்களில் கொஞ்சம் குறைவாக இருக்கிறது. சலுகை இல்லாத இடம் என்று சொல்ல முடியாது. இங்கே 66 சதவீதம் என்றால் அங்கே 33.33 சதவீதம் அவர்களுக்குச் சலுகை தரப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே 50 சதவீதம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு பஸ் கட்டணத்தில் சலுகை அளிக்கப்படுகிறது. ஆனால் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் காட்பாடியிலிருந்து வேலூருக்கும், காட்பாடியில் இருந்து குடியாத்தத்திற்கும் இந்தச் சலுகை இல்லையே. ஆகவே, அந்தப் போக்குவரத்துக் கழகமும் இந்தச் சலுகையை அளிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1982 மார்ச் 20]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலேயும் நாம் அந்த சலுகையைக் கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அது சம்பந்தமான குறிப்பு இங்கே இருக்கிறது. கொடுத்திருக்கிறோம்.

**1972 ஆம் ஆண்டுக்கு முன்பு கண்டக்டர் லைசன்ஸ் பெற்றவைகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.**

*வினா எண் 581—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1972 ஆம் ஆண்டுக்கு முன்பு கண்டக்டர் லைசன்ஸ் பெற்ற கண்டக்டர்களுக்கு அரசு போக்குவரத்துக் கழகங்களில் கல்வித் தகுதி, வயது வரம்பு பாராமலும் வேலை கொடுக்க அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமுலாகும் ?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972-க்கு முன்னால் அரசால் வழங்கப்பட்ட கண்டக்டர் லைசன்ஸ் வைத்திருப்பவர்கள், அரசு போட்டிருக்கும் உத்தரவின் காரணமாக கல்வித் தகுதியின் அடிப்படையில் லைசன்சு வழங்கப்படும் என்று வழங்கியதற்குப்பின்னால் 10 ஆண்டுகள், 5 ஆண்டுகள் தனியார் நிறுவனங்களிலே வேலை பார்த்து கண்டக்டர்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு அந்தத் தகுதியைக் கொடுத்து, அது நாம் கொடுத்தலைசன்சு என்ற காரணத்தினால் அதை மறுபரிசீலனை செய்து நமது போக்குவரத்துக் கழகங்களில் எடுத்துக் கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, நாம் இப்போது போட்டிருக்கின்ற உத்தரவின்படி எஸ்.எஸ். எல். சி. தகுதியைப் பெற்றவர்கள் மட்டும்தான் அந்த நடத்துனர் உரிமத்தைப் பெற முடியும். அதைத் தொடர்ந்து அந்தத் தகுதியை உடைய நடத்துனர்கள் மட்டும்தான் போக்குவரத்துக் கழகங்களிலே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற உத்தரவை நாம் போட்டிருக்கிறோம். அதற்கு முன்னால் வரை நாம் அந்தத் தகுதியைப் பார்க்கவில்லை. எஸ்.எஸ்.எல்.சி.க்கு குறைந்தவர்களை நாம் எடுத்துக் கொண்டிருந்தோம். அப்போதே அவர்கள் சேர்ந்து இருக்க முடியும். இப்போதுதான் அதற்கு வருகிறார்கள் என்று சொன்னால், இல்லை என்ற பின்னால் தான் ஞாபகம் வருகிறதா என்ற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. இருந்தாலும் அது நல்ல உணர்வோடு பரிசீலிக்கப்படும்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம் மாதிரி கண்டக்டர்களாக லைசன்சு பெற்று இருப்பவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் தங்களுடைய பெயரைப் பதிவு செய்து இருக்கிறார்கள். அந்த வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்து இருக்கின்ற முன்னுரிமை அடிப்படையிலே கண்டக்டர்களை நம்முடைய போக்குவரத்துக் கழகங்களிலே எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, எல்லோரும் தான் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்கிறார்கள். குறிப்பாக இப்போது பி.காம். படித்தவர்கள் பதிவு செய்கிறார்கள். இதிலே நாம் கேட்கிற போது பி.காம். (பர்ஸ்ட் கிளாஸ்) வேண்டும் என்று கேட்கிறோம். அது அந்தத் தகுதி. எனவே பதிவு செய்யப்பட்டதற்காக நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது. போக்குவரத்துக் கழகம் சில தகுதிகளை, அதனுடைய தன்மைகளுக்கு ஏற்ப அதை நல்ல முறையிலே கொண்டு வரவேண்டும் என்பதற்காக அதைக் குறித்து வைத்து இருக்கிறோம். அந்த வகையிலே நாம் எடுத்துக் கொண்டு வருகிறோம். நான் ஏற்கனவே சொன்னதைப் போல மனிதாபிமான அடிப்படையில் இது பார்க்க வேண்டிய விஷயம். அதைப் பார்ப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*





## (3) தகவல் கோரல்:

### (அ) சென்னை நகரில் சாலை விபத்துக்கள்.

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் சுந்தரமூர்த்தி அவர்கள் மிகப்பெரிய விபத்தில் இருந்து தப்பி இருக்கிறார். அவர் சென்ற ஆட்டோவை பின்னாலே இருந்து வந்த ஒரு லாரி இடித்து அந்த ஆட்டோ முன்னாலே போன டாங்கரில் மோதி இருக்கின்றது. அவர் தப்பி இருக்கிறார். சென்னை நகரில் இப்படி விரிவான விபத்துக்கள் நடப்பது வாடிக்கை ஆகிவிட்டது. அதைப்பற்றி விவாதிக்க ஒரு மணி நேரம் ஒதுக்கித் தர இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் ஒதுக்கித் தரலாம், ஆனால் இப்போது அதற்கு நேரம் இல்லை.

### (ஆ) வடபழனி கோயில் நிலம் விற்பனை.

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபழனி கோயிலுக்குச் சொந்தமான 216 கிரவுண்டு நிலத்தை அநியாயமாக விற்பனை செய்து கோடிக்கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுகின்றது.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சர்க்காருக்கு நஷ்டம் என்றால் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வாருங்கள். (குறுக்கீடு) கொடுத்திருந்தால் பார்க்கலாம். (குறுக்கீடு) இப்போது நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு என். வி. என். சோமு அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக இருக்கிறேன். உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும். (குறுக்கீடு) என்னுடைய அலுவலகம் அனைத்தையும் கவனிக்கும். அந்த அலுவலகத்தை வேலை செய்வதற்கு நீங்கள் விடவேண்டும். அமைதியாக இருந்தால் ஒவ்வொருநாளும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும்.

### (இ) பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷமிட்டவருக்குத் தண்டனை.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நேற்று மாலையிலே பால் வழங்கும் மாவியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான்

அவர்கள் பேசுகிறபோது, பார்வையாளர் மாடத்தில் இருந்து யாரோ ஒருவர் ஒழிக, வாழ்க எனக் கோஷமிட்டது கேட்டது. தங்கள் மூலம் அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபை முடியும் வரை அவரைக் காவலில் வைத்திருந்து பின்னர் விட்டுவிட்டோம்.

திரு. ப. பொன்னுரங்கம் : அந்த முடிவினை பேரவை தான் எடுத்திருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் எடுக்கலாம். எனக்கு இருக்கின்ற உரிமையை விட்டுக் கொடுக்க நான் தயாராக இல்லை. ஒவ்வொருவரும் அவரவர்களுடைய கட்சிக்காரர்கள் என்கிறபோது சமாதானத்திற்கு வருகிறார்கள். வெளியார் என்கிறபோது வேறுவிதமாகப் பேசுகிறார்கள். பொதுவான நீதி எல்லோருக்கும் வழங்கப்படும். அது வழங்கப்பட்டாகிவிட்டது.

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சென்னை மத்திய சிறையில் சந்தேகப்படக்கூடிய முறையில் ஒருவர் இறந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். வி. என். சோமு, ரா. கிருஷ்ணன், என். வரதராஜன், எம். செல்லமுத்து, மு. அம்பிகாபதி, செ. சிவசாமி, செ. இராமலிங்கம், ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன். என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி, என் பழனிவேல், சி. பழனிமுத்து, ஆகியோர் 'சென்னை மத்திய சிறையில்-17—3—1982 அன்று மணி என்ற ஜிஞ்ஜர் மணி என்பவர் சந்தேகப்படக்கூடிய முறையில் இறந்தது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. என். வி. என். சோமு.

திரு. என். வி. என். சோமு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணி என்கிற ஜிஞ்ஜர் மணி 17—3—1982 அன்று சென்னை மத்திய சிறையில் மரணம் அடைந்து விட்டார். புரசைவாக்கம் தாணா தெருவில் பழ வியாபாரம் செய்து கொண்டிருந்த அவர், 13—3—1982 சனிக்கிழமை காலை 11-45 மணிக்கு கைது செய்யப்பட்டு, 2 நாள் வேப்பேரி காவல் நிலையத்தில் வைத்திருந்ததாகவும், பிறகு திங்கட்கிழமை



நீதிமன்றத்திற்கு முன்னால் நிறுத்தப்பட்டு அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டு அதை அவர் கட்ட இயலாத காரணத்தால், பிறகு மத்திய சிறையிக்கு கொண்டு செல்லப்பட்டார். திங்கட்கிழமை சிறைகுள் அடைக்கப்பட்ட அவர் புதன்கிழமை இறந்துவிட்டார். சிறை அதிகாரிகள் அவருடைய பெற்றோர்களுக்கு தமிழில் ஒரு கடிதம் எழுதுகிறார்கள். ''உங்களது மகன், தண்டனைவாசி எண். 25179 மணி என்ற ஜிஞ்ஜர் மணி இன்று 13-20 மணி அளவில் இச்சிறையில் இறந்துவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். மேற்படியாரின் பூத உடலை உமது செலவில் சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் உள்ள சவக்கிடங்கில் மருத்துவமனை விதிகளின்படி பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று தமிழிலே சிறை அதிகாரிகள் எழுதிய கடிதம் வருகிறது. இதைத் தொடர்ந்து ஆங்கிலத்திலே ஒரு கடிதம் எழுதுகிறார்கள்.

"Your son by name Mani alias Ginger Mani has committed suicide at 13.20 hours on 17th March 1982 at Central Prison, Madras, by hanging with his own dhoti at lavatory of the block. You may claim the dead body at your own cost at the mortuary of Government General Hospital, Madras, as per hospital rules soon after post mortem.

இரண்டையும் பார்க்கும்போது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. தமிழிலே வந்த கடிதத்தில் உங்கள் மகன் இறந்துவிட்டான் என்று எழுதுகிறார்கள் சிறை அதிகாரிகள். அதற்குப்பிறகு ஆங்கிலத்திலே வந்த கடிதத்தில் உங்கள் மகன் வேட்டியாலே தூக்கிட்டுக்கொண்டு இறந்தான் என்று ஆங்கிலத்திலே எழுதுகிறார்கள். தண்டிக்கப்பட்ட ஒரு கன்விக்ட் பிரிஸனர்க்கு எப்படி அவருக்கு அங்கே வேட்டி கொடுக்கப்பட்டு இருக்கும். சிறை விதிகளின்படி அவருக்கு அங்கே சிறைச் சீருடைதான் வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆகவே வேட்டியிலே அவர் தூக்கிட்டுக் கொண்டார் என்று சொல்வது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. சந்தேகத்தை அளிக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய உடலைப் பார்த்த உறவினர் ஒருவர் வலது காலுக்குக் கீழ் அடித்ததற்கான காயங்கள் இருந்ததாகவும் ரத்தம் கசிந்துகொண்டிருந்ததாகவும், கூறுகிறார்கள். கழுத்தில் தூக்கிட்டுக்கொண்ட அடையாளமே இல்லையென்று கூறுகிறார்கள்.

அதுமட்டுமல்ல, சென்னை பொது மருத்துவமனையில், ஆர்.எம்.ஓ. அவர்கள் இடத்தில் மணி தூக்கிட்டுத்தான் இறந்தார் என்று அவர்களுடைய உறவினர்களிடத்தில் போலீசார் வற்புறுத்தியதாகவும், மறுத்ததற்கு அவருடைய உறவினர் ஒருவரை போலீசார் அங்கே தாக்கியதாகவும், என்னிடத்

திலே புகார் கூறப்பட்டுள்ளது. இவைகளையெல்லாம் வைத்து நோக்குகின்ற நேரத்தில் மணி இறந்திருப்பது நிச்சயமாக அவர் தூக்கிட்டுக்கொண்டு இறந்திருக்க முடியாது. வேறு சந்தேகப்படும்படியான முறையிலேதான் அவர் இறந்திருக்க முடியும் என்று நம்புவதற்கு இடம் இருக்கிறது.

(முற்பகல் 10-20).

இப்போது கூட பி.ஏ. டு கலெக்டர் அவர்களை வைத்து விசாரணை நடத்துவதாகச் சொல்லுகிறார்கள். அது வெறும் அட்மினிஸ்டிரேடிவ என்குயரிதான். குறைந்த பட்சம் மாவட்ட நீதிபதி அளவில் உள்ள ஒரு நீதிபதியை வைத்து என்குயரி நடத்த வேண்டும்; நீதி விசாரணை நடத்த வேண்டும்.

அதைப்போல சிறைச்சாலைகளில் கைதிகள் மரணம் அடைவதும் நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வருவதும் சகஜமாகிவிட்டது. இப்படிப்பட்ட பிரச்சினைகள் தொடர்ந்து நடைபெறுவதால், இந்தப் பிரச்சினையிலே மேலும் பல விவரங்களைப்பற்றி விவாதிக்க வேண்டியிருப்பதால், இறந்துபோன இந்த கைதியின் மரணம் பற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொளகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, மணி என்கிற ஜிஞ்சர் மணி என்பவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார். சிறைச்சாலையில் அடிக்கப்பட்டு, புதன்கிழமை அவர் இறந்துவிட்டார். ஆனால் சிறைச்சாலை அதிகாரிகள் சொல்லக் கூடிய காரணம் அவர் கட்டியிருந்த வேட்டியைக் கொண்டு தற்கொலை செய்துகொண்டார் என்பது. பொதுவாக சிறைச்சாலையிலும் சரி, போலீஸ் லாக்கப்பிலும் சரி, அங்கே இருக்கிற அதிகாரிகள் கைதிகளை கடுமையாக தாக்கி சாகடிக்கக்கூடிய நேரத்தில் சொல்லக்கூடிய காரணம் இப்படித்தான் இருக்கிறது. இது வழக்கமாகிவிட்டது. இன்றைக்கு பல இடங்களில் தொடர்ச்சியாக இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. இதைத் தடுப்பது அரசின் கடமை.

பொதுவாக இப்படிப்பட்ட சம்பவங்கள் பற்றி ஏற்கனவே நீதிவிசாரணைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அந்த விசாரணைக் கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில் அப்படி பரிந்துரை செய்யும் போது அந்த பரிந்துரையை முழுமையாக ஏற்றும் கொண்டு. தக்க நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்கின்றது என்ற குற்றச்சாட்டை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் நீதிபதி இஸ்மாயில் கமிஷன் தன்னுடைய ஃபைன்டிங்கில் குற்றவாளிகள் என்று சொல்லப்பட்டவர்களுக்கு ப்ரமோஷன் கொடுப்பது, மிகப்பெரிய சிறப்பு பரிசுகள் வழங்குவது என்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போல திருச்சிச் சிறையில் நடந்த சம்பவத்தை ஒட்டி அமைக்கப்பட்ட அந்த கமிஷன் ரிப்போர்ட்டில் சொல்லப்பட்ட குற்றவாளிகளுக்கு ப்ரமோஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, குற்றம் செய்கிறவர்களுக்கு ப்ரமோஷன் கொடுப்பதும், அவர்களுக்கு சிறப்புப் பரிசுகள் கொடுப்பதும் போன்ற முறைகள் இருப்பதால்தான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்கின்றன.

இன்னும் குறிப்பாக சிறைச்சாலையில் பல்வேறு ஊழல், லஞ்சம் போன்ற இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடக்கக்கூடிய அவல நிலையை அந்த சிறையில் இருக்கிற கைதிகள் தாங்கிக் கொள்ளாமல் ஏதாவது பிரச்சினைகள் வரும்போது அவர்கள் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்களில் பலர் இறக்க நேரிடுகிறது. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டுமென்றால் பிரச்சினைகளை மனிதாபிமானத்தோடு பார்க்க வேண்டியது மிக மிக அவசியம். தவறுக்கு காரணமானவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியது மிக மிக அவசியம். விலை மதிப்பற்ற உயிர், போன உயிர் திரும்பாது. இன்றைக்கு ஜிஞ்சர் மணியின் உயிரும் ஒன்றுதான், பெரிய அதிகாரியின் உயிரும் ஒன்றுதான்; உயிர்களிலே வித்தியாசம் கிடையாது. இப்படி கைதிகள் இறந்தால் விபத்து அல்லது தற்கொலை என்று ஏதாவது காரணத்தைச் சொல்வதும் இன்னொரு உயிர் போய்விட்டால் கொலை என்று சொல்வதும் சரியல்ல. எப்படி இறந்தார் என்று தீர்க்கமாக விசாரிக்க வேண்டும். சிறையில் இருக்கக் கூடியவர்கள் இறந்ததற்கான காரணத்தை அறிந்துகொள்ள எந்தவிதமான வாய்ப்பும் இல்லை. ஆகையால் தீவிரமாக விசாரிக்க, நீதி விசாரணை அவசியம், நீதி விசாரணையில் கொடுக்கப்படும் ஃபைன்டிங்ஸ் அடிப்படையில் கடுமையான தண்டனை கொடுக்கப்படுவது மிக மிக அவசியம். ஆகையால் இதைப்பற்றி தீர விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவரவர்களே, சென்னை மத்திய சிறையில் மணி என்ற கைதி அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். அவர் தனக்கு விதித்த அபராதத்தைக் கட்ட முடியாத காரணத்தால் சென்னை மத்திய சிறைக்கு ரிமாண்ட் செய்யப்பட்டார். அந்தச் சிறைச்சாலையைச் சேர்ந்த அதிகாரிகள் அவரை அடித்துக் கொன்றிருக்கிறார்கள்.

பிறகு அவர் தானே தூக்கிட்டுக் கொண்டார்என்று சொல்லி, அவருடைய வீட்டுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்தச் சிறைச்சாலைகளில் இப்படிப்பட்ட அநியாயங்கள், அக்கிரமங்கள் சுதந்திரம் பெற்று 34 ஆண்டுகள் போன பின்னாலும் இந்தக் கொடுமைகள் தொடருகிறது என்றால் அதற்கு என்ன காரணம்? சாதாரண ஏழை எளிய மக்கள், வாழ வழிதெரியாத மக்கள். ஏதாவது சிறிய தவறு செய்துவிட்டு சிறைக்குச் சென்றால் அங்கே அவர்களை சாணி அள்ளச் சொல்வது, அங்கு இருக்கிற தடியால் அடித்து ரிமான்ட் கைதிகளை கொடுமைப்படுத்துவது என்பதெல்லாம் இன்றைக்கு சிறையில் சர்வசாதாரணமாகிவிட்டது. இந்தத் தகாத சம்பவங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

திருச்சி சிறையிலே அடிக்கப்பட்டு இறந்துவிட்ட மாயவரத்தைச்சேர்ந்த சனகம்பாடி விவசாயத் தொழிலாளர்—அவரை சாணி அள்ளச் சொல்லி அடித்திருக்கிறார்கள் 15 நாட்களுக்கு முன்னால். ரிமான்ட் கைதிகள் என்றால் அவர்கள் கடும் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்களை வேலை வாங்குவதற்கான அதிகாரம் அந்தச் சிறையில் இருக்கும் அதிகாரிகளுக்கு யார் கொடுத்தது. இப்படிப்பட்ட நிலைமைகளில் தான் அங்கே சிக்கல் ஏற்படுகிறது. அப்படி ஏற்படுகிறபோது அங்கே தாக்குதல் நடத்துகிறார்கள். 1948 ஆம் ஆண்டிலே சேலம் சிறைச்சாலையில் கம்யூனிஸ்ட்டுகள் இருந்தநேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, பறவையைச் சுடுவதுபோல் 28 பேர்களைச் சுட்டுக்கொன்றது** அந்த நிலை இன்னும் தொடர்கிறது (குறுக்கீடு) மறுப்பதற்கு தைரியம் இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது அவைமுன் இருக்கிற பிரச்சினை ஜிஞ்சர் மணி இறந்தது குறித்ததாகும்; ஆகவே, அதைப் பற்றி மட்டும் பேச வேண்டும். * * * என்று குறிப்பிட்டது. அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது.

திரு. மு. அம்பிகாபதி : 1948-ல் நடந்தது இன்னும் தொடர்கிறது என்பதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை குறித்து மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது பேச வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி : சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு. இப்படி பலர் சிறையில் மரணம் அடைந்து இருக்கிறார்கள் இந்த ஜிஞ்சர் மணி என்பவர் அடித்துக்கொல்லப்பட்டார் என்று சொல்லப்படுவதால், இதிலே ஜுடீசியல் என் காயரி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே

**மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





இப்பொருள் குறித்து விதாதிக்க இப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 17—3—1982 அன்று சென்னை மத்திய சிறைச்சாலையில் மணி என்கிற ஜிஞ்சர் மணி தற் காலை செய்து கொண்டார் என்று பத்திரிகையில் செய்தி வந்து இருக்கிறது. அந்த மணி என்பவருக்கு கோர்ட் விதித்த 100 ரூபாய் அபராதம் கட்ட வசதி இல்லாததால், சிறைச்சாலையில் கைதியாக வைக்கப்பட்டார் என்று தெரிகிறது. அப்படிப்பட்டவருக்கு தற்கொலை செய்து கொள்ளக்கூடிய அளவிற்கு என்ன அவமானம் வந்து விட்டது என்று என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. இதுபேன்ற பல கைதிகள் சிறைச்சாலையில் மரணம் அடைந்துள்ளது குறித்து நாம் இந்த மன்றத்திலேயே பல முறை ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டு வந்து விவாதித்து இருக்கிறோம். தவறு செய்தவர்கள் சிறைக்குள்ளே சென்றால், அவர்களைத் திருத்தி வெளியே அனுப்ப வேண்டும். ஆனால் சிறையிலே இருக்கின்ற காவலர்கள் தாய்மை உணர்வு அற்று, காட்டுமிராண்டித் தனமாக கைதிகளை அடிப்பதும், துன்புறுத்துவதும், அவர்களைக் கொலை செய்வதும், அதன்பிறகு அதைத் தற்கொலை என்று சொல்வதும் ஒரு வழக்கமாகப் போய்விட்டது. இன்றைக்கு ஜிஞ்சர் மணி என்பவர் தூக்கில் தொங்கினார் என்று சொல்லி இதைச்சொல்லிவிடலாம். நாளைக்கு ஒரு பெரியமனிதருக்குக் கூட இந்த நிலைமை ஏற்படலாம். ஒரு ஜனநாயக நாட்டில் ஜனாதிபதி உயிருக்கு எவ்வளவு மரியாதை இருக்கிறதோ அவ்வளவு மரியாதை ஒரு சாதாரண குடிமகனுக்கும் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட முறையில் சிறையில் நடக்கும் நிகழ்ச்சிகளைக் குறித்து விசாரணை செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மட்டும் விசாரணை நடத்தினால் போதாது, மாவட்ட அளவிலே உள்ள ஒரு நீதிபதி இந்த விசாரணையை மேற்கொள்ளவேண்டும், இது போன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் சிறையில் நடக்காமல் இருப்பதற்கான வழிமுறைகள் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைச் சிறைச்சாலையிலே சந்தேகத்திற்கிடமான நிலையிலே ஒருவர் உயிர் துறந்தார் என்பதைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது ஏதோ ஒரு தனிப்பட்ட மனிதனின் பிரச்சினையாகக் கருதாமல், நம்முடைய மன்றத்திலே பல்வேறு கால கட்டங்களிலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் தொடர்ந்து விவாதிக்கப்பட்டு இருப்பதால், நம்முடைய

கவலை இதிலே அதிக அளவிற்கு அதிகரித்து இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இப்படி சிறைச்சாலையில் மரணம் அடைவது என்கிற பிரச்சினை வெள்ளைக்காரர்கள் ஆட்சி காலத்தில் இருந்து தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்த அளவிற்கு சிறை நிர்வாகத்தில் எந்தவிதமான மாற்றமும் இல்லாத நிலையில் நிலைமைகள் இருந்து கொண்டு வருகின்றன என்பதை இது காட்டுகிறது. நான் அறிந்த வரையில், அந்த மணி என்பவர் கொலை செய்து விட்டோ, அல்லது, கொள்ளை அடித்து விட்டோ, அல்லது வேறு பெரிய குற்றத்தைச் செய்து விட்டோ சிறைக்குப் போகவில்லை. குடித்து விட்டு கலாட்டா செய்தார் என்ற காரணத்திற்காக 6 வாரம் சிறையில் கைதியாக அடைக்கப்பட்டார். ஆகவே, தற்கொலை செய்து கொள்ளக்கூடிய அளவிற்கு அவர் ஏன் வந்தார் என்று எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் கேட்டனர். தூக்குப் போட்டுக்கொள்ளக் கூடிய அளவிற்கு வசதி அவருக்கு எப்படி ஏற்பட்டது ?

லுங்கியாலே கழிவு அறையிலே தூக்குப் போட்டுக் கொண்டார் என்ற செய்தி வெளியாகியிருக்கிறது. அது அவருக்கு எங்கேயிருந்து வந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் இந்த மாதிரி காவல் நிலையங்களிலோ அல்லது சிறைகளிலோ இருக்கிற கைதிகள் அல்லது விசாரணைக்காக காத்திருக்கிற கைதிகள், தூக்குப் போட்டுக் கொண்டார் என்று சொன்னால், அடித்துக் கொல்லப்பட்டார் என்றுதான் எண்ணப்பட வேண்டுமே தவிர, அவர் தூக்குப் போட்டுக் கொள்வதற்கான வசதி வாய்ப்புகள், அங்கேயில்லை என்பதைத் தெரிவித்துக் .கொள்கிறேன். அல்லது அவர் உடல் நோயின் காரணமாக, உபாதையின் காரணமாக தூக்குப் போட்டுக் கொண்டார் என்றால், அவருக்கு என்ன வியாதி இருந்தது ? அவரை சிறை மருத்துவர் வந்து பார்த்தாரா அவருக்கு வைத்திய வசதி அளிக்கப்பட்டதா என்பதை யெல்லாம் பார்க்கவேண்டும்.

(முற்பகல் 10–30)

சிறைச்சாலைகளுக்கென்று தனியாக விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிகளை அதிகாரிகள் முறையாக நடைமுறைப் படுத்தி கண்காணிக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். அந்த அதிகாரிகளின் பணிகளைப் பற்றி அடிக்கடி கண்காணிப்புச் செய்தால்தான், இதுபோன்ற நிகழ்ச்சிகள் வருங்காலத்திலேயாவது தொடராமல் இருக்க நாம் நடவடிக்கை எடுத்ததாக அது அமையும். அதே நேரத்தில் இந்த நிகழ்ச்சியின் தொடர்பாக ஒரு நீதி விசாரணை நடத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, இதுபோன்ற பிரச்சினைகள் வருங்காலத்தில் தொடராமல் இருக்கவும், இந்த நிகழ்ச்சியில் நியாயம் கிடைக்கவும், இன்னும் இதுபோன்ற பல்வேறு விஷயங்களை குறித்து விவாதிக்க வேண்டும் என்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டு, இது





குறித்து ஒரு நீதி விசாரணை அமைக்கப்பட வேண்டும் என்பதை இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பில் வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மணி என்கிற ஜிஞ்சர் மணி என்ற கைதி 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாளன்று மதியம் 1–30 மணிக்கு சென்னை மத்திய சிறையிலுள்ள 7 ஆவது கொட்டடியிலுள்ள கழிப்பறையில் தற்கொலை செய்து கொண்டார். இக்கைதி XIX மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்டிரேட்டால் சென்னை நகர காவல் சட்டப் பிரிவு 75 இன் கீழ் ரூ. 80 அபராதம் கட்ட தவறியதால் நான்கு வாரங்கள் வெறுங்காவல் தண்டனை பெற்று 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாள் முதல் மேற்படி சிறையில் தண்டனை அனுபவித்து வந்தார்.

மேற்படி கைதியின் தற்கொலை விவரம் தெரிந்தவுடன் சிறை கண்காணிப்பாளர், ஸ்தலத்துக்கு விரைந்தார். இதற்கிடையில் துணை ஜெயிலர் ஆகிய அதிகாரிகள் அக்கைதியை சிறை மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள். சிறை மருத்துவமனையின் மருத்துவர் அக்கைதியின் உடல் கொண்டு வரப்பட்ட போது சூடாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. அந்த மருத்துவமனையின் ஆண் செவிலியர் அக்கைதிக்கு முதலுதவி சிகிச்சை அளித்து பிராண வாயுவும் செலுத்தினார். இதற்கிடையில் மருத்துவரும் வந்தார். ஆனால் எல்லாவித முயற்சிகளும் மேற்கொண்டும் அக்கைதி இறந்து போனார். சிறை கண்காணிப்பாளர் விசாரித்ததில் இக்கைதி சாராயக் குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர் என்றும் சாராயம் இல்லாமல் இவரால் காலம் தள்ள முடியாது என்றும் ஆகையால் இவர் சாராயம் கிடைக்காததால் மனநிலை பாதிக்கப்பட்டு தன்னிலை இழந்து, மற்ற எல்லா கைதிகளும் மதிய உணவு சாப்பிடும் போது இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தன் வேட்டியை கழிப்பறையில் உள்ள உத்திரத்தில் கட்டி தூக்குப் போட்டு தற்கொலை செய்துக் கொண்டார் என்றும் தெரிய வந்தது. பிறகு மற்ற கைதிகள் இக்கைதி உத்தரத்திலிருந்து தொங்குவதைப் பார்த்தனர். உடனே அபாய அறிவிப்பு எழுப்பப்பட்டு அக்கைதி கீழே இறக்கப்பட்டு உடனே மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். இக்கைதி தூக்குப் போட்டுக் கொண்டதால் இறந்தார். தண்டனை சிம்பிள் இம்பிரசின்மென்ட் என்ற வகையில் இருப்பதால் கைதி தன் லுங்கியையோ, வேட்டியையோ வைத்துக் கொள்ளலாம் என்பதற்கு விதியிருக்கிறது. இம்மாதிரி கைதிகள் சிறைச்சாலையில் வேலை செய்ய வேண்டும் என்ற கட்டாயமில்லை. அவர்களாகவே வந்து வேலை பார்க்க வேண்டும் என்று கேட்டால் ஒழிய வேலைகள் கொடுக்கப்படுவதில்லை. இக்கைதியின் உடல் மீது சென்னை மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர் சவ விசாரணை நடத்தி அரசு பொது மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பினார்.

வருவாய்த்துறை அதிகாரியின் சென்னை மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர்) விசாரணை அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல சிறைக் குழுவினுடைய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று சொல்வது தவறு. மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் சிறை மேம்பாட்டுக் குழுவின் பரிந்துரைகளை எவ்வளவோ எடுத்திருக்கிறோம். அது குறித்து நான் மானியத்திலே விளக்க இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் சொன்னது போல குற்றம் செய்தவர்களுக்கு பிரமோஷன் கொடுக்கிற காரணத்தால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன என்று சொல்வதும் தவறு. கைதி வந்து ஒரு நாள்தான் ஆகிறது. அதற்குள் குற்றம் செய்த அதிகாரி பிரமோஷனில் வந்திருப்பார். அதனால்தான் என்றெல்லாம் கற்பனை செய்து பேசக் கூடாது. சிறை விதிகளை அதிகாரிகள் பின்பற்றித்தான் வருகிறார்கள். விசாரணை நடந்துக் கொண்டிருக்கிறது. அந்த விசாரணையின் முடிவுகளின் அடிப்படையில் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். தற்கொலை அல்ல கொலைதான் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு துளி ஆதாரம் கூட இல்லாமல் இருக்கும்போது, அதற்கான விசாரணையும் நடந்துக் கொண்டிருக்கும்போது, தற்கொலை அல்ல என்ற முடிவுக்கு வருவது நியாயமாகாது என்பதற்காகத்தான் சுட்டிக் காட்டினேன். எனவே சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய தேவையில்லை என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுச் சட்ட அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 5. கவன ஈர்ப்பு.

### கன்னியாகுமரி மாவட்டம் ஆற்றில் தொழிற்சாலை கழிவு நீர் கலப்பது

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருவாளர்கள் டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன், கே. ஆர். சுந்தரம், என். பழனிவேல், ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.





திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, " கன்னியாகுமரி மாவட்டம் சக்கரபாணி கிராமத்தில் அருகில் ஓடும் ஆற்று நீரில் நியூ. ஆம்பாடி ரப்பர் தொழிற்சாலையின் கழிவு நீர் கலப்பது குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

நியூ ஆம்பாடி ரப்பர் தொழிற்சாலையின் கழிவு நீர் குமரி மாவட்டம் சக்கரபாணி கிராமத்தின் அருகே ஓடுகின்ற கோடை ஆற்றில் கலந்து, சுகாதார கேடுகள் ஏற்படுத்துவதாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 1980 ஆம் ஆண்டு ஒரு புகார் மனு வந்தது. அதன்பேரில் பொது சுகாதார அதிகாரிகளில் ஒருவர், அந்தத் தொழிற்சாலையை 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 21 ஆம் நாளன்று பார்வையிட்டு அத் தொழிற்சாலையின் கழிவு நீரினால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளை தடுப்பதற்காக 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டம் 41, 44 மற்றும் 134 ஆம் பிரிவுகளின்படி அத் தொழிற்சாலைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும் அத் தொழிற்சாலையின் நிர்வாகிகளிடம் தேவையான விவரங்களை அதற்கான படிவங்களில் அனுப்புமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாலையின் கழிவு நீரை பரிசோதிப்பதற்காக மாதிரிகள் எடுத்து சென்னை கிண்டியில் உள்ள தலைமை நீர்ப் பகுப்பாய்வாளரிடம் அனுப்புவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இதற்கிடையில் இத்தொழிற்சாலை தானாகவே தற்காலிகமாக மூடப்பட்டு விட்டது. எனவே இப்பிரச்சினையை மேற்கொண்டு அப்பொழுது பரிசீலிக்க முடியவில்லை. தற்போது இத் தொழிற்சாலை மறுபடியும் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. இவ்வாலையின் கழிவு நீர், முதலில் மூன்று தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு தெளிய விடப்படுகிறது. பின்னர், அத்துடன் சுண்ணாம்பு சேர்க்கப்பட்டு, அக்கழிவு நீர் தீமையற்றதாக மாற்றப்படுகிறது. இம்முறைகளைப் பின்பற்றிய பின்னரே கழிவு நீர் வெளியேற்றப்படுகிறது.

2. இத்தொழிற்சாலையின் நிர்வாகியை, மாவட்ட சுகாதார அதிகாரி அவர்கள், கழிவு நீரின் மாதிரிகளை சேகரித்து சென்னை கிண்டியில் உள்ள, தலைமை நீர்ப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பும்படியும், ஆலையின் கழிவு நீரை ஆற்றில் கலக்க விடாமல் மாற்று வழியில் அப்புறப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை பரிசீலிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். 1974 ஆம் வருடத்திய மைய அரசின் " நீர்த் தூய்மை கெடுதலைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் சட்டத்தை " நமது அரசு பின்பற்றி, அதன்படி, " தமிழ்நாடு நீர்த்தூய்மை கெடுதலைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் வாரியம் " 1982 ஆம் ஆண்டு

பிப்ரவரித் திங்கள் 27 ஆம் நாள் முதல் இயங்கி வருகிறது இவ்வாரியம் மேற்கண்ட சட்டத்தின் உதவி கொண்டு தமிழ் நாட்டில் தொழிற்சாலைகளால் ஏற்படும் நீர்த் தூய்மை கெடுதலை தடுக்க ஆவன செய்யும். மேலும் இச்சட்டத்தின் விதிகளை மீறுவோருக்கு கடுந் தண்டனையை விதிப்பதற்காக விதிகள் உள்ளதால் இதன் உதவி கொண்டு தொழிற்சாலைகளின் கழிவு நீரால் பொது மக்களுக்கு எந்தவித இடையூறும் இல்லாதவாறு இவ்வாரியம் பார்த்துக் கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை :

திரு. டி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட விவர அறிக்கையின்படி 1980-ஆம் ஆண்டு இதுகுறித்து அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டும் இன்னும் அந்தக் கழிவுநீரினை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

மேலும் இப்போது கோடைக்காலம், அந்த ஆற்றிலே வருகின்ற தண்ணீர் அளவு மிகவும் குறைவு. ஆயிரக்கணக்கான மக்கள் இந்தத் தண்ணீரைத்தான் குளிப்பதற்கும், குடிப்பதற்கும் பயன்படுத்துகிறார்கள். இதுபற்றி அங்கேயுள்ள பஞ்சாயத்து முன்னாள் தலைவர், திருவேட்டாறு சட்டமன்ற உறுப்பினரும் அங்குள்ள நிர்வாகிகளைப் பார்த்துப் பேசியதற்குப் பிறகும் அந்த நிர்வாகம் பிடிவாதமாகவே இருந்துவருகிறன்து. மேலும் அந்த கழிவு நீரினை ஆற்றிலே கலக்காமல் இருக்க வைப்பதற்குரிய வசதி வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே குறைந்தபட்சம் அந்த ஃபேக்டரிக்கு, அருகாமையிலே ஆழமான கிணறுகள் தோண்டி அதிலே அந்தத் தண்ணீர் அப்சார்ப் பண்ணக்கூடிய அளவுக்கு நிலைமையை ஏற்படுத்தலாம். அல்லது டேங்க் கட்டி அதிலே அந்த நீரைச் சேகரித்து எங்கேயாவது கொண்டு கொட்டிவிடலாம். ஆகவே அவ்வாறு ஏதாவது ஏற்பாடுகளைச் செய்வதற்குரிய வாய்ப்புகளும் வசதிகளும் இருந்தும் அந்த ஃபேக்டரி நிர்வாகத்தினர் அதைச் செய்வதற்கு பிடிவாதமாக மறுக்கிறார்கள். எனவே அரசு அந்த நீர் ஆற்றோடு கலப்பதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுத்து உத்தரவுகள் பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவரவர்களே, இந்த தொழிற்சாலை கொஞ்சநாட்கள் மூடப்பட்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரிந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். மேலும் இந்த கழிவுநீரினைப் பொறுத்தவரையிலே கடைப்பிடிக்க வேண்டிய





முறைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்றால், அதனை நடைமுறைப்படுத்தவில்லை என்றால் உடனடியாக இந்தத் தொழிற்சாலைகளை மூடவேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். அந்தத் தொழிற்சாலையினைத் தொடர்ந்து நடத்துவதற்குக் கூட அனுமதி மறுக்கப்படும் என்றும் கூட தொழிற்சாலைகளுக்குத் தெரிவித்து இருக்கிறோம்.

அந்த அடிப்படையிலே இந்தத் தொழிற்சாலையிலே மூன்று டேங்குகளுக்கு உள்ளே அந்தக் கழிவு நீரைவிட்டு அதற்குப் பிறகு அதனுடன் லைம் போட்டுக் கலந்து நியுட்ரலைஸ் செய்துவிட்டதற்கு பிறகு அந்தத் தண்ணீரை வெளியேற்ற வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். இதை அவர்கள் மீறினால் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிற அதே எண்ணம்தான் அரசாங்கத்திற்கும் இருக்கின்றது. ஆகவே இதனை மீறினால் திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருப்பது போன்று அங்குள்ள ஹெல்த் ஆஃபீஸர் நடந்துகொண்டாரா என்பதிலே சந்தேகம் ஏற்படுகின்றது. இந்த விவர அறிக்கையிலே அந்தத் தொழிற்சாலையிலே ஏற்பட்ட பிரச்சினை காரணமாக மாவட்ட டிஸ்ரிக்ட் ஹெல்த் ஆஃபீஸர் அந்தத் தொழிற்சாலையில் நிர்வாக அதிகாரியைச் சந்தித்துப் பேசியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் அந்தத் கழிவுநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே அந்த நீர் ஆற்றிலே கலக்காமல் இருப்பதற்கு என்ன ஆலோசனையை அவர் அங்கே சொல்லி இருக்கிறார்?

மேலும் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆலை மூடப்பட்டிருந்தது என்று சொன்னார்கள். அது முழுவதும் சரியில்லை. 1980-ஆம் ஆண்டுக்குப் பிறகு அந்த தொழிற்சாலை 10 நாட்கள்தான். வேலை செய்யாமல் இருந்தது. பாக்கி நாட்களிலே எல்லாம் வேலை நடந்துகொண்டுதான் இருக்கின்றது. ஆகவே இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை என்பதால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஏதேனும் ஆலோசனையை டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸர் அந்த தொழிற்சாலையின் நிர்வாகிகளிடம் சொல்லி இருக்கிறார்களா ? இதுபற்றி கடைபிடிக்க வேண்டிய முறைகளை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்களா? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இப்படிக் கழிவு நீர் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறுவதைப் பொறுத்தவரையிலே மாநிலத்தின் பல்வேறு

பகுதிகளிலே இந்தப் பிரச்சினை இருக்கின்றது. ஆகவே இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படுத்தக்கூடிய முறையிலே ஒருவழிவகையினை வகுத்து அதனை அமல்படுத்த அரசு முன்வருமா?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஜி. ஓ. எம். எஸ். 340 ஹெல்த் டேட்டட் 19–2–1982 இல் நாம் உத்தரவு போட்டிருக்கிறோம். ஸ்டாச்சுட்டரி போர்ட் ஒன்று ஏற்படுத்தி Tamil Nadu Prevention and Control of Water Pollution Board அந்த போர்ட் 27–2–1982 அன்று செயல்பட துவங்கியிருக்கிறது. இந்த போர்டின்கீழ் ( Water Prevention and Control of Pollution Act) நடைமுறைப்படுத்தப்படும். அதில் செக்ஷன்ஸ் 26,27-ல்

Restrictions on the discharge of sewage water or trade effluence and getting consent from the State Board.

என்று தெளிவாக உத்தரவு போட்டு எந்தவிதமான தயவு தாட்சண்யமும் இல்லாமல் முன்பிருந்த சட்டம் அவ்வளவு கடுமையாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள சௌகரியம் இல்லாத சட்டமாகயிருந்தது. இப்போது மத்திய அரசு சட்டம் அமல் படுத்திய பிறகு, இந்த வாட்டர் பொல்யூஷன் போர்ட் ஏற்படுத்தியபிறகு அதற்கு ஸ்டாச்சுட்டரி பவர்ஸ் கொடுத்ததற்குப். பிறகு எந்தவிதமான தாட்சண்யமும் இல்லாமல் துரித நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை இந்த மன்றத்தின் மூலமாக அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம் : இந்தக் கழிவுநீரைச் சுத்தப் படுத்துகிற முறையில் சுண்ணாம்பு கலந்த தீமையற்றதாக மாற்றப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதன் மூலமாக மட்டும் குடிநீரை பாதுகாக்க இயலாது என்ற நிலையில் கழிவுநீரை ஆற்றில் கலக்காமல் பெரிய கிணறுகள் வெட்டி நீர் ஊற்று வெளியே வராமல் தடுக்கும் முறையில் பாதுகாக்க அரசு முன்வருமா? இது கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்ல. வட ஆற்காடு மாவட்டத்தில் வாணியம்பாடி, இராணிப்பேட்டை, வேலூர் போன்ற இடங்களிலும் குடிதண்ணீரைப் பாதுகாக்க நல்ல குடிதண்ணீர் கிடைக்கும் முறையில் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : எல்லாப் பகுதிகளிலும் அப்படிச் செய்து கொண்டு வருகிறோம். நேரம் இல்லை என்பதால் முழுவதையும் படிக்கவில்லை.





As per Sub-sections 1 and 2 of Section 25 of the Act, " no person shall, without the previous consent of the State Board, bring into use any new or altered let out for the discharge of sewage or trade effluence into a stream or well or begin to make any new discharge of sewage or trade effluence into a stream or well ".

என்று இப்போது இருக்கக்கூடிய சட்டத்தின்கீழ் எந்தப் பகுதியிலும் இப்படி நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள இது சௌகரியமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 6. அறிக்கை அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, இந்திய தணிக்கைத்துறைத் தலைவரின் 1976–77, 1977–78 ஆம் ஆண்டுக்கான (சிவில்) அறிக்கைகளில் சில துறைகளுடன் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினாறாவது (ஏழாவது) சட்டமன்றப் பேரவை அறிக்கையை அளிக்கிறேன்.

## 7. வரவு செலவுத் திட்டம், 1982–83 வாக்கெடுப்பு

### (அ) கோரிக்கை எண். 13. நீதி நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண். 13-நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 9.20,58,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

திரு. சு. பாலன் : துணைத் தலைவரவர்களே, சென்னையில் நீதி நிர்வாகக் கட்டிடங்கள் பழமையாக இருப்பதை மாற்றி நீதிபதிகளுக்கும், அலுவலர்களுக்கும் பொது மக்களுக்கும் முறையான வசதி ஏற்படுத்தாதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண். 13-நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,20,58,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

[1982 மார்ச் 20

திரு. கே. கல்லன் : துணைத் தலைவரவர்களே, கோத்தகிரியில் நீதிமன்றம் அமைக்க வேண்டி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 13 நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,20,58,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. ஆர். சுந்தரம் : துணைத் தலைவரவர்களே, குடியாத்தம் நகரில் சிவில் வழக்கு மன்றம் ஏற்படுத்தக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண் 13 நீதி-நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,20,58,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. ஏ. டி. கருப்பையா : தலைவரவர்களே : வால்பாறை வட்டம் வால்பாறையில் ' சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் ஏற்படுத்த வேண்டியது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 13 நீதி-நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,20,58,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண். 14. சிறைச் சாலைகள்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,47,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

திரு. சு. பாலன் : துணைத் தலைவரவர்களே, '' சென்னை சிறைச்சாலையில் கைதிகள் குளிப்பதற்கும், குடிப்பதற்கும் நல்ல தண்ணீர் போதுமான அளவு கிடைக்க வழி செய்ய நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க '' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,47,66,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.



1982 மார்ச் 20]

திரு. ந. சிவஞானம் : துணைத் தலைவரவர்களே, '' தமிழகத்திலுள்ள சிறைகளில் நவீன வசதியுடன் உள்ள கழிவு இடங்களை கட்டுவது பற்றி விவாதிக்க ''. நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,47,66,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவரவர்களே, '' சிறைகளில் உள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள் பத்தாண்டுகள் தண்டனை அனுபவித்தவர்களை பரிசீலனை செய்து விடுதலை செய்ய தமிழக அரசு ஒரு திட்டம் வரையறுத்து வைக்கமாலிருப்பது பற்றியும், நீதிபதி இஸ்மாயில் கமிஷன் செய்துள்ள சிபார்சுகளை அமுல் நடத்தாமலிருப்பது பற்றியும் விவாதிக்க '' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :

'' மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,47,66,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, '' பெரியார் மாவட்டத்தில் புதிதாக விரிவுபடுத்தும் கிளை சிறைச்சாலைகளில் காற்றோட்ட வசதிக்காக ஜன்னல் வைக்கக் கோரி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 6,47,66,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

(இ) கோரிக்கை எண். 23— கூட்டுறவு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,72,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் ''.

[1982 மார்ச் 20

திரு. பெ. க. திருவேங்கடம் : தலைவரவர்களே, " தமிழ் நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை உடனே நடத்தக்கோரி விவாதிக்க " நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,72,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. கே. எம். தங்கமணி : தலைவரவர்களே, " கூட்டுறவுப் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் (பணிக்காலத்தில் இறந்தால் ரூ. 10,000 கிடைக்க வகை செய்வது பற்றி விவாதிக்க) " நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 9,72,16,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. கு. ரமணி : துணைத் தலைவரவர்களே, " கூட்டுறவு அமைப்புகளில் பணி புரியும் ஊழியர்களுக்கு, தற்போதுள்ள விலைவாசி நிலவரத்தை கணக்கில் கொண்டு குறைந்தபட்சத் தேவையை பூர்த்தி செய்யுமளவுக்குக்கூட ஊதியம் கொடுக்கப்படாமலும், தொழில் தகராறுகள் ஏற்பட்டால் அதிகாரிகள் அலட்சியம் காட்டி தகராறு தீர்க்க நடவடிக்கை எடுக்காமலும் உள்ள நிலை பற்றி விவாதிக்க " நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 9,72,16,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. எம். ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, " விவசாயிகள் வாங்கியுள்ள (5 ஸ்டாண்டர்டு ஏக்கர் குறைவாக) அனைத்துக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டும் என்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 9,72,16,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.



1982 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்மொழிந்த 3 கோரிக்கைகளின் பேரில், அரசினுடைய கொள்கை புத்தகங்கள் * அச்சடிக்கப்பட்டு அவைக்குத் தரப்பட்டிருக்கிறது. அவற்றை நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பிலே ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டி, மாண்புமிகு உறுப்பினர்களுடைய அரிய ஆலோசனையும், கருத்துக்களையும் அறிந்தவுடன், நான் என்னுடைய பதிலைக் கூறுகிறேன்.

* திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இந்த அவையிலே விவாதத்திற்கு வைத்திருக்கும் நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள், கூட்டுறவு ஆகிய மானியங்களின் மீது நான் சார்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். எனக்குப் பின்னால் எங்கள் இயக்கத்தைச் சார்ந்த சட்டப்பேரவை உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் நீதி நிர்வாகம் பற்றிப் பேசுவார்கள். நான் சிறைச்சாலையிலே மிசா கைதியாக ஓராண்டு காலத்திற்கு இருந்தவன் என்ற முறையிலே சிறைச்சாலையைப் பற்றி சில கருத்துக்களைக் கூறுகிறேன்.

சிறைச்சாலைகளில் கழிப்பிடம் போதுமானதாக இல்லை ; எனவே போதிய நவீன கழிப்பிடங்கள் கட்டித் தரவேண்டும். அங்கே கைதிகளை எடுக்கச் சொல்லுகிறார்கள் ; அதைக் கண்டிப்பாக தடுத்த நிறுத்த வேண்டும். சிறைச்சாலைகளில் குடிநீர் போதுமானதாக இல்லை ; எல்லாச் சிறைச்சாலைகளிலும் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும். சிறைச்சாலைகளில் வழங்கும் உணவு தரம் உள்ளதாக இல்லை. அங்கே தரமான உணவு வழங்கப்பட வேண்டும். சிறைச் சாலைகளில் கைதிகளுக்காக செலவு செய்து கொண்டிருக்கிற அந்த உணவுக் கட்டணத்தை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாச் சிறைச்சாலைகளிலும் மூட்டைப்பூச்சிகளை அறவே ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபடவேண்டும். அதே

---

* 138 ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளன.

போல், மருத்துவ வசதி போதுமானதாக இல்லை: எனவே, மருத்துவ வசதிகளை நல்ல முறையிலே செய்து கொடுக்க வேண்டுமென்று எனது கோரிக்கை வைக்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10.50)

கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்மீது நான் பேசுகின்ற இந்த நேரத்தில் எல்லா இடங்களிலும் காவல்துறை துணையோடு கடுமையான முறைகளிலே ஜப்தி செய்து கொண்டிருக்கிறார்கள். ஏழை விவசாயிகள் கொடுக்க வேண்டிய கடன்களுக்காக வீடுகளிலே உள்ள கதவுகள் கழற்றப்படுகின்றன, வீடுகளிலே உள்ள பண்ட பாத்திரங்கள் எல்லாம் ஜப்தி செய்யப்பட்டு வருகின்றன. அவை அத்தனையும் தடுத்து நிறுத்தப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1974 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இயற்கையால் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகள் கடன் தொகைகளைக் கொடுக்க முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டு தாளடி இரண்டாவது போகம் என்னுடைய பகுதியிலே பாதிக்கப்பட்டிருக்கிறது. கண்டுமுதல் சரியாக இல்லை, பதராக இருக்கிறது. மாயூரம், நன்னிலம் குடவாசல் போன்ற பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி நட்டமடைந்திருக்கின்ற விவசாயிகள் கூட்டுறவுக் கடன்களைக் கண்டிப்பாகக் கட்ட முடியாது. நான் அமைச்சர் அவர்களிடத்திலே அவர்கள் சார்பாகக் கேட்டுக் கொள்வது, அவர்களுடைய கடன்களைத் தயவுசெய்து தள்ளுபடி செய்யுங்கள் என்பது தான். விவசாயிகள் இன்றைய தினம் கட்ட மாட்டோம் என்று சொல்லவில்லை, எங்களால் கட்ட முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே தயவு செய்து தள்ளுபடி செய்து கொடுங்கள், நியாயத்தின் அடிப்படையிலே அவர்கள் கேட்கிறார்கள், நீங்களும் தேர்தல் காலத்திலே சொல்லியிருக்கிறீர்கள், 5 ஏக்கருக்கு உட்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் கடன்களை ரத்து செய்வோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் அதைத் தவறு என்று சொல்லவில்லை. சொன்னதைச் செய்யுங்கள் என்று கேட்கிறேன்.





விவசாயிகள் இன்றைக்கு அவமானப்படுத்தப் படுவதாகக் கவலைப்படுகிறார்கள். விவசாயிகள் எல்லாம் 'உயிர்நீப்பின் வாழா கவரிமான்' என்ற முறையிலே வாழ்வை நடத்தக்கூடியவர்கள். அவர்களை அவமானப்படுத்துகிற நேரத்திலே இதையெல்லாம் தாங்கிக்கொண்டு வாழ்வதைவிட சாவதே மேல் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைத் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும், 5 ஏக்கருக்கு உட்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் கடன்களை ரத்துசெய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கிகளிலே நகைக்கடன்கள் இப்போது வழங்கப் படவில்லை. நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு நகைக் கடன்களை நம்பித் தான் ஏழைகள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். வட்டிக் கடைகள் இல்லாத நேரத்திலே கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நகைக்கடன்கள் வழங்கப்பட்டன. எல்லா கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் உடன் நகைக்கடன் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே எல்லா கூட்டுறவு கிராமச் சங்கங்களிலும் நகைக் கடன்கள் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு சங்கங்களிலே எதற்காக நிர்வாகக் குழுக்கள் கலைக்கப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. தலைவர்கள் அதிகமாகக் காரைப் பயன்படுத்தினார்கள் என்றும், தொலைபேசிகளில் அதிகமாகப் பேசினார்கள் என்றும், அதிகமாக விளம்பரங்களைக் கொடுத்தார்கள் என்றும் சொல்லித்தான் அந்த நிர்வாகக் குழுக்கள் எல்லாம் கலைக்கப்பட்டன. இன்றைய தினம் தனியதிகாரிகள் இருக்கிறார்கள் நிர்வாகப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு ஏராளமான தவறுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதனால் கூட்டுறவு நிர்வாகம் இன்றைய தினம் சீரழிந்து கொண்டிருக்கிறது என்பதை நான் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எந்தத் தவறைச் சொல்லி நிர்வாக குழுக்களைக் கலைத்தோமோ அதை விட அதிகமான தவறுகள்தான் மீண்டும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தனியதிகாரிகள் தான் தலைவர்களை விட அதிகமாக காரைப் பயன்படுத்துகிறார்கள், தனியதிகாரிகள் தான் தலைவர்களை விட அதிகமாக தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கிறார்கள், தலைவர்களை விட தனி அதிகாரிகள்தான் அதிகமான விளம்பரங்களைக் கொடுத்துட கொண்டிருக்கிறார்கள். அதனால் கூட்டுறவு நிர்வாகமே இக்றைய தினம் சீராக இயங்கவில்லை சீரழிந்து போய் விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. இரெ. இராசமாணிக்கம்] [1982 மார்ச் 20

அதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். கூட்டுறவுக்கடன் விநியோகம் செய்வதில் 1975–76 ஆம் ஆண்டில் 100.20 கோடி குறுகியகாலக் கடனும், 2.65 கோடி நடுத்தரக் காலக் கடனும் வழங்கப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டில் 21.52 கோடி குறுகிய காலக் கடனும் 4.25 கோடி நடுத்தர காலக் கடனும் வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி கடன் வழங்குவதிலேகூட அவர்களால் நல்லமுறையிலே செயல்பட முடியவில்லை. கடன் வசூல் செய்வதிலேகூட அவர்கள் சரியாகச் செயல்படபடவில்லை. 1973–74 இல் 16.40 கோடி மட்டும் கடன் தவணையாக இருந்தது, அதனுடைய சதவீதம் 17.4 1979–80 இல் 165.07 கோடி கடன் தவணை அதனுடைய சதவீதம் 73.4 ஆகும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்குச் வழங்கக்கூடிய உரத்தைப் பொறுத்தவரையில் தேவைக்கேற்ப கொடுக்கப்படுகிறதா என்றால் அதுவும் கொடுக்கப்படவில்லை. மொத்தத் தேவை 1974–75இல் 4.88 லட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். வழங்கியது 2.83 லட்சம் மெட்ரிக் டன்; அதேநேரத்தில் 1980–81 தேவை 9.59 லட்சம் மெட்ரிக் டன்; வழங்கியது 1:44 லட்சம் மெட்ரிக் டன். இப்படி தேவையான உரத்தை கூட வழங்க முடியவில்லை. 1980-81 நிதிநிலை அறிக்கையிலே விவசாயிகளிடத்திலேயிருந்து வர வேண்டிய குறுகிய காலக் கடன் என்று குறிப்பிட்டிருப்பது அசல் 80 கோடி; வட்டி 15 கோடி ஆக 95 கோடி விவசாயிகளிடமிருந்து வரவேண்டுமென்று கணக்கிட்டிருக்கிறோம். அதிலே 5 ஏக்கருக்கு குறைவாக இருக்கிற சிறு விவசாயிகளிடமிருந்து வரவேண்டிய அசல் 35 கோடி, வட்டி 7 கோடி என்றும் 42 கோடி வரவேண்டுமென்று கணக்கிட்டு, 5 ஏக்கருக்கு குறைவாக இருக்கிற விவசாயிகள் வாங்கிய கடன் அத்தனையும் தள்ளுபடி செய்யப்படுமென்று அறிவித்து அதற்கு 42 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறோம். ஆனால் அரசு இன்று தள்ளுபடி செய்திருப்பதாக அறிவித்து இருக்கிற தொகை, ஒரு வாரத்திற்கு முன்னால் சட்டப்பேரவையில் எழுத்து மூலமாக அளித்திருக்கிற பதிலில் 92 கோடியே 67 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் தள்ளுபடி செய்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்கு பிறகு இன்றையதினம் ஏழை விவசாயிகள் வாங்கிய கடன் அப்படியே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறோம். 31—12—1981ல் விவசாயிகள் சங்கங்களுக்கு செலுத்தவேண்டிய தவணை தவறிய கடன் பாக்கி 118.17 கோடி உள்ளதென்று தெரிவித்திருக்கிறார்கள். அரசு மத்திய வங்கிகளுக்கு கொடுக்கப்பட்ட பணம் 80-ஆம் ஆண்டில் வழி வகை முன் பணமாக 50.13 கோடி ரூபாய் வழங்கியிருப்பதாக இந்த கொள்கை குறிப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி அரசு வழங்கியிருக்கிற சலுகைகள் அதிகமாக தெரிவிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் 5 ஏக்கருக்கு உள்பட



1982 மார்ச் 20] [திரு. இரெ. இராசமாக்கம்]

பாதிக்கப்பட்ட விவசாயிகள் வாங்கியிருக்கிற கடன் ஏன் அப்படியே நிற்கிறது என்பதைஅமைச்சர் அவர்கள் தயவு செய்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வழிவகை முன் பணம் மத்திய வங்கிகளோடு நிற்கிறது. விவசாயிகளுக்கு போய் சேருவதில்லை. விவசாயிகளுடைய கடன் பாக்கிக்காக அது வரவு வைக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைசசர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தனி வியாபாரிகளிடமிருந்து விவசாயிகளை மீட்க, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு சரியான விலை கிடைக்கச்செய்ய இடைதரகர்களால் விலைவாசி ஏற்றி நுகர்வோருக்கு அதிக விலையிலே வாங்குகிற சூழ்நிலையை மாற்றி, பொதுமக்கள் பாதிக்கப்படுவதை தடுத்து இந்த நாட்டிலே கூட்டுறவுச் துறையிலே ஒன்றால் தான் அதை செய்து முடிக்க முடியும் என்ற கொள்கையோடு இந்த அரசு பணியாற்றி வருகிறது. தமிழகத்தில் மொத்த விவசாயிகள் குடும்பங்கள் 53.14 லட்சம் ஆகும். இதிலே சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுடைய குடும்பங்கள் 42.05 லட்சமாகும். கூட்டுறவுத் துறையிலே சேர்க்கப்பட குடும்பங்கள் 42.04 லட்சமாகும். இதிலே சிறு விவசாயிகளுடைய குடும்பங்கள் மிகச் சிறு விவசாயிகளுடைய குடுப்பங்கள் 32.03 லட்சமாகும். கூட்டுறவுத் துறையிலே சேர்க்கப்பட்டவர்களுடைய சதவீதத்தை எடுத்துக்கொண்டால் 99 சதவீதத்தினர் கூட்டுறவுத் துறையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே 96 சதவீதத்தினர் சிறு மிகச் சிறு விவசாயிகள் என்று இங்கே கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆறாம் 5 ஆண்டு திட்டத்திலே மொத்த விவசாய குடும்பங்கள் அனைத்தும் கூட்டுறவுத் துறையிலே கீழ் கொண்டு வரவேண்டும் என்று இந்த அரசின் திட்டத்தை நான் பாரா்ட்டுகிறேன். நாட்டு மக்களும் பாராட்டுகிறார்கள். இந்த 99 சதவீதத்திலே 96 சதவீதத்தினர் சிறு விவசாயிகள் மிகச் சிறு விவசாயிகள் என்றால் 3 சதவிதத்னர் பெரிய விவசாயிகள், கூட்டுறவுத் துறையிலே சேர்ந்திருக்கிறார்கள் என்று பொருள். மூன்று சதவீதமே இருக்கிற அந்த பெரிய விவசாயிகள் ஏறத்தாழ 80 சதவீத கூட்டுறவு கடனை அவர்களே விழுங்கிக்கொண்டு நாட்டிலே கூட்டுறவுத் துறையை அழிப்பதற்கு திட்டத்தை செயல்படுத்தியிருக்கிறார்கள் என்பதை தெரிவித்து, 96 சதவீதம் இருக்கிற சிறு விவசாயிகள், மிகச்சிறு விவசாயிகள் 20 சத வீதம் கடன் மட்டுமே பெற்றிருக்கிறார்கள். ஆனால் 3 சதவீத பெரிய விவசாயிகள் நிலச்சொந்தக்காரர்கள் 30 சதவீத கடனை பெற்று இந்த அரசுக்கு கடன் பாக்கிகளை கட்டாமல் இந்த அரசினுடைய நடவடிக்கை குன்றுகிற வகையிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-00]

இந்த அரசு வந்ததற்குப் பின்னால்தான் ஏழை, எளிய, சிறு, குறு விவசாயிகளுக்குக் கடன் தருகின்ற வாய்ப்பு ஏற்பட்டது. அதைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நாராயணசாமி நாயுடு தலைமையிலே விவசாய சங்கம் ஆரம்பிக்கப்பட்டு இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே, கூட்டுறவுக் கடனைத் திருப்பிக் கட்டாமல், அதையெல்லாம் முடக்குகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள். அப்படி ஏற்படுத்திக் கொண்டிருக்கிற அவர்கள் சுயநல இலாபத்திற்கு சில அரசியல் கட்சிகள்கூட துணைபோகியிருக்கின்றன—தூண்டிவிட்டன. அவர்களோடு உடனிருந்து இந்த அரசுக்கு எதிராக இருந்து பல போராட்டங்களை நடத்தினார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதன் காரணமாக, ஏழை, எளிய விவசாயிகளுக்கு ரூ. 136 கோடி அளவுக்குக் கடன் வழங்கி வந்த சூழ்நிலை மாறி, சாதாரணமாக, ரூ. 50 கோடி, ரூ. 18 கோடி என்று கடன் வழங்குகின்ற நிலைமை வந்துள்ளது. அதிக நிலுவை இருப்பதன் காரணமாக, மத்திய வங்கிகளிலே இருந்தும். கூட்டுறவு நிலவள வங்கிகளிலிருந்தும் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதோடு, கூட்டுறவுத் துறையைச் சபிக்கின்ற நிலையையும் இந்த நாட்டிலே ஏற்படுத்தியுள்ளார்கள் இருந்தாலும், இந்த அரசு பொறுமையாக, பொறுப்புணர்ச்சியுடன் இதையெல்லாம் சந்திக்க வேண்டுமென்ற நோக்கத்தில், விவசாயிகளுக்கு ரூ. 96 கோடியை அளவுக்குக் கடன் நிவாரணம் அளித்து, விவசாயிகளுடைய நிலையைப் பாதுகாத்தது.

அதோடு மட்டுமல்லாமல், குறுகிய காலக் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டன. மத்திய கால கடன்கள் நீண்ட காலக் கடன்களாக மாறப்பட்டன. அதிக நிலுவை உள்ள ஆரம்ப நிலவள வங்கிகளுக்கு அரசு உதவித் தொகை வழங்கி , அந்த வங்கிகளும் கடன் கொடுக்கின்ற தன்மையை ஏற்படுத்தியது. அதே போல், மாநில வங்கிக்கு அரசு உதவி அளித்துக் கடன் கொடுக்கின்ற தகுதியை ஏற்படுத்தி உள்ளது அதன் காரணமாக, இந்த ஆண்டு விவசாயிகள் கடன் பெறுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இந்த அரசு அதை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்பதை நான் உளமாறப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும் இந்தக் கூட்டுறவுத் துறை ஆரம்ப இயக்கமாக அடிப்படை அமைப்பாக சுமார் 4,700 கிராம விவசாய சேவா கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் கூட்டுறவுத் துறையிலே இருக்கிற நிர்வாகத்தைக் கலைத்ததன் காரணமாக கூட்டுறவுத் துறை





செயலிழந்து விட்டது என்று குறிப்பிட்டார்கள். நான் குறிப்பிடுகின்ற 4,700 கிராம விவசாயக் கூட்டுறவுச் சேவா சங்ககளிலே தேர்ந் தடுக்கப்பட்ட தலைவர்கள் இருக்கிறார்கள், அதிலே இயக்குநர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் அந்தப் பொறுப்பை நடத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி இருக்கிற அந்தக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்தவர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் அந்தச் சங்கங்களை நடத்தி வருகிறார்கள். இந்த அரசு போடுகின்ற திட்டங்கள், சரிவர, ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேராதவாறு அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கிற தலைவர்கள்தான் தடுத்து வருகிறார்கள் என்பதை நான் ஆதாரத்தோடு குற்றம் சாட்டத் தயராக இருக்கிறேன் காரணம், இந்த அரசு 40,000 ஆதி திராவிடர்களைக் கூட்டுறவுத் துறையிலே சேர்த்து, அவர்களுக்கு ரூ. 40 இலட்சத்தை மானியமாக வழங்கி அவர்களுக்குக் கடன் தருகின்ற வசதியை ஏற்படுத்துகின்ற திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்தது. ஆனால் கிராமப்புறத்திலே இருக்கிற ஆரம்ப விவசாய சேவா கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் அவர்களுக்குக் கடன் கொடுக்க மறுகிறார்கள். அவர்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ள மறுக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல் கடன் வழங்குவதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன. (மணி அடிக்கப்பெற்றது).

**திரு. ப. தீர்த்தராமன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள், கூட்டுறவு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவு என்பது காந்திமகான் கண்ட கனவை நினைவாக்குகின்ற வகையிலே, கிராம இராஜ்யத்தை, இராம இராஜ்யமாக்க வேண்டுமென்ற நோக்கோடு, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்ட ஒரு இயக்கம். அந்த இயக்கம் 1967 வரை சீரோடும் சிறப்போடும் செம்மையாக இந்திய துணைக் கண்டத்திலேயே முதன்மை இடத்தைப் பெறும் வகையிலே தமிழகத்திலே நடைபெற்று வந்தது. 1967-க்குப் பின்னாலே, நடைபெற்ற கோளாறின் காரணத்தினாலே, இன்று கூட்டுறவு இயக்கம் சிதைந்து, சீர் குலைந்து மூதறிஞர் இராஜாஜி சொன்னதைப்போல் கூட்டுறவு இயக்கம் நாட்டைக் கெடுக்கும் என்ற தத்துவத்தின் அடிப்படையிலே, இயங்கிக் கொண்டிருக்கிறது. கூட்டுறவு இயக்கத்தில் தேர்தல்களை நடத்தாமல் தனி அதிகாரிகளை நியமித்திருப்பதால் தற்பொழுது கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை இலட்சியத்திற்கே மாறுபட்டதாக அது அமைந்திருக்கிறது.

[திரு. ப. தீர்த்தராமன்] [1982 மார்ச் 20

அரசியல் இலாப நோக்கத்தோடு கடன் வசூலைத் தள்ளி வைப்பதன் காரணமாகவும், பினாமி லோன் காரணமாகவும் விவசாயிகள் மீது கடன் சுமையை அதிகமாகச் சுமத்தி அவர்களுக்கு அளவுக்கு மீறிய கடன் ஏற்பட்டிருப்பதால் அந்த விவசாயிகள் இன்றையதினம் தள்ளாடிக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையிலே ஜப்தி செய்வது தேவையானதுதானா என்பதைச் சிந்தித்து பார்க்க வேண்டும். வறட்சி தலைவிரித்தாடி இரண்டாண்டுகளுக்குப் பின்னால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் கடன் வசூலும் மிகவும் தீவிரமாகவும் இருக்கிறது. இதை அரசு கவனித்து அவர்களுக்குச் சலுகை வழங்குவது சற்று நியாயமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு 6 சதவீதம், 7 சதவீதம் என்று கடன் வாங்கியிருந்தார்கள். அந்தக் கடன்களை அவர்கள் திருப்பிக் கட்டாத காரணத்தால் வட்டியையும் சேர்த்து அதைப் புதிய கடனாக அறிவித்து இப்பொழுது இருக்கின்ற நிலைமைகளுக்கேற்ப 13 சதவீத வட்டி என்று ஆக்கியிருப்பதால் அவர்கள்மீது பெரும் கடன் சுமை சுமத்தப்பட்டிருக்கிறது. இது அரசு செய்த தவறான செயல் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பலயிடங்களில் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் இல்லாமல் இருக்கின்றன. வாடகைக்கு எடுத்து நடத்தப்படுகின்றன. அது அரசின் இயக்கமாகையால் அரசின் பணத்திலிருந்தே கட்டிடம் கட்டிக் கொடுப்பதில் தவறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைநகரமாகிய சென்னையில் இருக்கின்ற காமதேனு கூட்டுறவு அங்காடிக்குக்கூட சொந்தமாக கட்டிடம் இல்லாமல் அளவுக்கு மீறிய வாடகை கட்டப்படுகிறது. இதையெல்லாம் மாற்றும் வகையில் கூட்டுறவு இயக்கங்களுக்குச் சொந்தக் கட்டிடங்களை கட்டி வாடகை கொடுக்கின்ற அந்தச் செலவினங்களைக் குறைப்பது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதித்துறையைப் பொறுத்தவரையில் ரிட் மனுவிற்குக் கட்டணம் நூறு ரூபாய் என்று இருந்ததை தற்பொழுது அரசு 200 ரூபாய் என்று உயர்த்தி உள்ளது. ரிட் என்பது ஒவ்வொரு குடிமகனும் தன்னுடைய உரிமையைப் பாதுகாத்து கொள்ளுகின்ற சாதனமாகும். இதற்கு இந்த அளவிற்குத் தொகையை உயர்த்தியிருப்பதால் சாதாரண மக்கள் நீதி பெறமுடியாமல் போகின்ற நிலைமையை ஏற்படுத்தும். நீதி என்பது சுலபமாக சாதாரண மக்களுக்குக் கிடைக்க வேண்டும். ஆனால் இன்றைய தினம் இருக்கின்ற நிலையில் பண வசதி படைத்தவர்கள்தான் நீதிபெற முடியும் என்ற சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. மருத்துவத் துறையில் இருப்பதைப் போல மருத்துவ நிபுணர்களின்



1982 மார்ச் 20] [திரு. ப. தீர்த்தராமன்]

ஆலோசனைகளும் உதவியும் சாதாரண மக்களுக்குக் கிடைக்கின்ற அளவிற்கு அரசு இன்றையதினம் நிலைமைகளை ஏற்படுத்தியிருப்பதைப் போல, சட்டத்துறையிலேயும் சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளும், உதவியும் சாதாரண மக்களுக்கும் கிடைக்கும் அளவிற்கு அரசு செய்ய வேண்டுமென்பதை என்னுடைய ஆலோசனையாக இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். சட்ட உதவி இருக்கிறது, ஆனால் சட்ட நிபுணர்களின் உதவி இல்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நீதிபதி என்றால் அவர் கடவுளுக்குச் சமமாக மதிக்கப்படுபவராக நமது அமைப்பை ஏற்படுத்திக் கருதுகிறோம். ஆனால் சமீபத்தில் சில நீதிபதிகளைப் பற்றி வரும் செய்திகளைப் பார்த்தால் அந்தப் பதவியின் மீது உள்ள நம்பிக்கையை இழக்கின்ற நிலைமை ஏற்படுகிறது. நான் அனைவரையும் பற்றிச் சொல்லவில்லை. ஒருவர் தவறு செய்தாலும் நீதித் துறையைப் பற்றியே அவ்வாறு நினைக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது.

* * * *

சென்னை உயர்நீதிமன்றத்திலே இதுவரையில் அரிசன சமூகத்தைச் சேர்ந்த நீதிபதி இல்லை என்று நண்பர்கள் சொன்னார்கள். அதைக் கணக்கிலே கொண்டு அந்த நீதிமன்றத்திற்கு அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களை நீதிபதிகளாகப் போட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஒரு மொபைல் கோர்ட் ஏற்படுத்த வேண்டுமென்று நீண்ட நாட்களாக மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் கேட்டுக் கொண்டுவந்தேன். அந்தத் தொகுதியிலே சரியான பஸ் போக்குவரத்து இல்லாததால் 50, 60 மைல் தூரம் சென்று கோர்ட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

(முற்பகல் 11-10)

ஒரு நாளைக்கு முன்னதாக சென்றால்தான் அவர்கள் நீதிமன்றத்திற்கு செல்ல முடிகிறது. அந்த நிலையில் இருக்கிறார்கள். ஆகவே பொன்னகரத்தில் ஒரு மொபைல் கோர்ட்டு அமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சிறைச்சாலை துறையை அரசு கார்ப்பரேஷனாக ஆக்கினால் நல்லது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். காவல்துறை அதிகாரிகளை சிறைத் துறை அதிகாரிகளாக நியமிப்பதால் பல சங்கடங்கள் அங்கே உருவாகிறது. ஆகவே கார்ப்பரேஷனாக இருந்தால் ஒரு குழு அமைத்து சிறந்த ஆலோசகர்களை அமைத்து அந்த துறை சிறப்பாக செயல்படலாம் என்பதை கூறிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1982 மார்ச் 20

*திரு ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, சிறைத் துறையைப் பொறுத்த வரையில் இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ''சமூகத்துடன் இணைந்து நன்றாக செயல்பட உரிய பயிற்சிகளை நல்கி சீர்திருத்துவதே இத்துறையின் நோக்கம்'' என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் அதே நேரத்தில் சிறைக் கைதிகளுக்கு கிடைக்கும் அனுபவம் வேறுவிதமாக உள்ளது. நீதிபதி இஸ்மாயில் அவர்கள் கூறும்போது, ''சிறையில் லஞ்சத்தின் வளத்திற்கு அளவேயில்லை, இதனால் கீழிருந்து மேல் உள்ள சிறை நிர்வாகம் ஊழலாக உள்ளது''

Potential for corruption is unlimited and that is the reason why the entire jail administration from the top to bottom is corrupt. என்று சொல்லி இருக்கிறார்.

இங்கே நான் ஒரு நிகழ்ச்சியை குறிப்பிட விரும்புகிறேன். திருச்சி சிறைச்சாலையில் 1979-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ஆம் நாள் அன்று ஐ. ஜி. ஆப் பிரிசன்ஸ் ஆபீசில் இருந்து ஆடிட் பார்ட்டி வந்தது. அவர்கள் வந்த உடனே அங்கே உள்ள ஸ்டாக்குக்கு சீல் வைத்திருக்கவேண்டும். ஆனால் அதைச் சீல் செய்யவில்லை. 11 மணிக்கு வந்தார்கள். உடனே வெளியே போய்விட்டார்கள். அப்போதும் சீல் செய்யவில்லை. அதற்குப் பிறகு மாலை 4—00 மணிக்கு வருகிறார்கள். இதற்கிடையிலே அந்த ஜெயில் நிர்வாகிகள் அங்கே இருந்த உபரி, அரிசி, பருப்பு போன்ற பொருள்களை ஒளித்து வைத்துவிட்டார்கள். அப்படி ஒளித்து வைக்கப்பட்ட மூட்டைகளின் எண்ணிக்கை 19. மீண்டும் அந்த ஆடிட் பார்ட்டி மாலை வந்தபோது, அதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறைக் கைதிகள் இது குறித்து அவர்களிடம் சொல்லுகிறார்கள். அவை அத்தனையும் எடுக்கப்படுகிறது. 1900 கிலோ இருக்கின்றது. அதைப் பார்த்துவிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நிர்வாகம் மாலை 6—00 மணி ஆகிவிட்டது. நீங்கள் எல்லாம் 'செல்'லுக்குப் போங்கள் என்று அவர்களை விரட்டி அனுப்பி விடுகிறார்கள். அப்படிப்பட்ட குறிப்பிருக்கின்றது. நான் நினைக்கிறேன் சிறையைத் திருத்துவது இந்தத் துறையின் நோக்கம் என்று சொல்லுகிறோம். ஆனால் சிறையை அதிகாரிகள் இப்படித்தான் திருத்துகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே கொடுக்கக்கூடிய உணவைத் திருடுவதுதான் சிறையை சீர்திருத்தும் முறைகளா என்பது என்னுடைய கேள்வி.

அதேபோல பாளையங்கோட்டைச் சிறைச்சாலையில் சாம்பார் மிக நன்றாக இருக்கும். அந்த சாம்பாரில் டால்டா மிதக்கும். அப்படி மிதக்கின்ற டால்டாவை அப்படியே எடுத்து வீட்டுக்குக் கொண்டு போகிறார்கள். நானே என் கண்ணாலே பார்த்தேன். அதை யார் செய்தார்கள் என்று சொன்னால்,



1982 மார்ச் 20] [திரு. ரா. கிருஷ்ணன்]

அவர்களுக்குப் புரமோஷன் கிடைத்துவிடும் நிலை உள்ளது. ஏனென்றால் இப்போது முருகேசன் கமிஷன் சுட்டிக்காட்டிய அதிகாரிகளுக்குப் புரமோஷன் கொடுத்து இருக்கிறார்கள். திருச்சி ஜெயிலிலே இருந்தவருக்குப் புரமோஷன் கொடுத்திருக்கிறார்கள். இஸ்மாயில் கமிஷனில் சம்பந்தப்பட்டவர்கள் புரமோஷனிலே போயிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, எந்தத் தவறை யார் செய்தார்கள் என்ற ஆதாரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டாமல் தவறைச் சுட்டிக் காட்டினால் அவர்களுக்குப் புரமோஷன் கொடுத்துவிட்டோம் என்று கூறுவது, வழக்கறிஞரான மாண்புமிகு உறுப்பினருக்கு அது சரியல்ல. நீங்கள் ஆதாரத்தைக் கொடுங்கள். கண்டிப்பாக நடவடிக்கை எடுப்போம். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டுகளைக் கொடுத்தபிறகு, நானும் சென்று நடவடிக்கை எடுத்து, இந்த அவையிலேயே பதில் சொல்லி இருக்கிறேன். நடவடிக்கையையும் எடுத்திருக்கிறேன்.

திரு ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, இவைகளெல்லாம் நடைபெறுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். நீதிபதி இஸ்மாயில் அவர்கள் கூறியிருப்பது, '' சிறை அறைகள் படுமோசமாக உள்ளது. இதனால் கைதிகள் எவ்வளவு பணம் செலவு செய்தும், மருத்துவமனை படுக்கைக்கு போய்விட ஏற்பாடு செய்வதால் மருத்துவர்களும் லஞ்சம் பெறுகின்றனர். சிறைச்சாலையில் பணியாற்றும் சில மருத்துவர்கள் வேறு இடம் போக விரும்புவதில்லை.'' என்று எந்த அளவுக்கு லஞ்சம் அதிகமாக இருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டி இருக்கிறார். இதைத் திருத்தவேண்டும் என்பதே என்னுடைய கோரிக்கை.

இந்தப் பரோலை 5 நாட்கள் வீதம் 3 தவணைகளில் கொடுக்கலாம் என்பதுதான் நியாயமாக இருக்க முடியும். காரணம் என்னவென்றால் 3 நாட்கள் என்றால், போக வரவே அது சரியாகிவிடும். ஆகவே, இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று, இப்போது புதியதாக இருக்கக் கூடிய சுப்ரிம் கோர்ட்டின் தீர்ப்பின் அடிப்படையில் 78-க்கு முன் தமிழகத்திலே இருக்கக்கூடிய ஆயுள் கைதிகள், அவர்கள் 10 ஆண்டுகள் முடிந்த உடனே அவர்களை அட்வைசரி போர்ட்டுக்கு வைக்கலாம் என்பது பரிந்துரை. ஆனால் 78-க்குப் பிறகு செக்ஷன் 433-ஏ சி. ஆர். பி. சி.-படி தண்டனை பெற்றவர்கள், 14 ஆண்டுகள் நிரம்பி இருக்கவேண்டுமென்பது சுப்ரிம் கோர்ட்டின் தீர்ப்பு. அந்த அடிப்படையிலே மதுரைச் சிறையிலே

[திரு. ரா. கிருஷ்ணன்] [1982 மார்ச் 20

மட்டும் இன்றைக்கு 8 ஆண்டுகள் முதல் 17 ஆண்டுகள் வரையில் இருக்கக் கூடிய கைதிகள் 128. அதில் 17 ஆண்டுகளாக இருக்கக் கூடியவர் விளங்காத்தூர் கேடங்கிராமன் என்பவர். 17 ஆண்டு கள் மதுரை சிறையிலே இருக்கிறார், அதேபோல் வேட்டைக் காரன்பட்டி, வெங்கரச்சி, முத்தையா, கருப்பையா போன்ற வர்கள் 14 ஆண்டுகளாக இருக்கிறார்கள், இப்படி 12 ஆண்டுகள் முதல் 17 ஆண்டுகள் வரையில் இருப்பவர்கள் 60 பேர். 10 ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரை இருப்பவர்கள் 33 பேர். 8 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையில் இருக்கக்கூடியவர்கள் 34 பேர்.

ஆகவே, கேரளாவிலே கூட ஈ. கே. நாயனார் தலைமையில் ஆட்சி உருவான உடனே, 8 ஆண்டுகள் தண்டனை முடிந்தவர் கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்ட நிலைமையை நாம் அறிவோம். ஆகவே, இன்றைக்கு பாரதியார் நூற்றாண்டு விழா நடக்கிறது. இதை காரணம் காட்டி, இந்த 8 ஆண்டுகள் தண்டனை முடிந்தவர்கள் அத்தனை பேரையும் விடுதலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நரசிம்மன் கமிட்டியினுடைய ரிப்போர்ட்டின் அடிப் படையில் செக்ஷன், 433-ஏ ஆப் சி. ஆர்.பி.சி. என்பதை மறு பரிசீலனை செய்வதற்கு மத்திய அரசாங்கத்திற்கும் பரிந்துரை செய்யவேண்டுமென்பது இந்தப் பரிந்துரை. அதையும் இந்த அரசு என்ன செய்தது என்பது இங்கே குறிப்பிடவில்லை. அதே மாதிரி ரிமாண்ட் செய்து கோர்ட்டுக்கு போகக்கூடிய நேரத்தில் கொடுக்கக் கூடிய மதிய சாப்பாடு 75 காசு. அது மிகமிக கேவலம். அதைப் போல் மாலையில் போய்ச் சேருகிறோம். 6 மணி ஆனவுடனே சிறைச்சாலையில் சாப்பாடு கொடுப்ப தில்லை. ஆகவே, இரவு நேரங்களில் பட்டினியாக இருக்க நேரிடுகின்றது. அதைப் போன்று புத்தகங்கள், குறிப்பாக, ஏங்கல்ஸ் எழுதிய குடும்பம், தனிச் சொத்து, அரசு போன்ற புத்தகங்களை கொடுப்பதற்கு வழியில்லை. கோயில் கட்டுகிறார்கள். கட்டட்டும். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. பிள்ளையார் கோயில், ஐயப்பன் கோயில் எல்லாம் இருக்கட்டும். ஆனால் இப்படிப்பட்ட புத்தகங்களைப் படிப்பதற்குக் கூட அனுமதி கொடுக்கக்கூடாதா? இதுதான் என் கோரிக்கை. இப்படிப்பட்ட புத்தகங்களை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும், மாலை 6 மணி ஆன உடனே செல்லில் அடைப்பதை 9 மணியாக ஆக்கவேண்டுமென்று பரிந்துரை. அதையும் பரிசீலிக்கவேண்டும். உரிமைகள், கடமைகள் ஆகியவற்றை தமிழில் எழுதி எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும் அளவில் வைக்க வேண்டும். கேன்டீனைப் பொறுத்தவரையிலும், இன்றைக்கு



1982 மார்ச் 20] [திரு. ரா. கிருஷ்ணன்]

பாளையங்கோட்டை சிறையிலே இருக்கக்கூடிய கேன்டீன் அது ஊழியர்களின் கேன்டீன். நாம் கேட்கக்கூடியது அந்த கைதி களுக்கு. ஆனால் அங்கு வைத்திருப்பது ஊழியர்களுக்காக வைக்கப்பட்ட கேன்டீன். ஆகவே கேன்டீனை தாராளமாக வைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அதே போல், நீதித்துறையைப் பொறுத்தவரையில், கோவை யில் ராதாகிருஷ்ணா மில்ஸ் ஓனர்ஸ், — ஜெய லக்ஷ்மி, ஜோதி மில்ஸ், என்று இருக்கின்றது. இந்த மில்லைப் பொறுத்த வரையில் குடும்பத் தகராறு இருந்து வருகிறது. ஒருவர் கோர்ட்டுக்கு சென்று மில்லை மூடவேண்டுமென்று ஸ்டே ஆர்டர் வாங்குகிறார். அதில் ஆயிரக்கணக்கான தொழிலா ளர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை, கோர்ட்டி லேயிருந்து செய்யக்கூடிய இந்த காரியத்தைப் போக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு வழக்குகள் எல்லாம் ஏராளமாக தேங்கி இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டத் தைப் பொறுத்த வரையில் 6 சப்-கோர்ட்டிலே அடிஷனல் பப்ளிக் பிராஸிகுயிட்டர்கள் கிடையாது என்று எனக்கு சொல்லப்பட்டது. 5 சப்-மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்டிலே மேஜிஸ்ட்ரேட்டே இல்லை.

நீதிபதிகள் சம்பளம் போதாது என்பது நீண்ட நாள் கோரிக்கை. மாடவட்டத்தில் இருக்கக் கூடிய நீதி மன்றம் ஒரு இடத்தில் இருக்கிறது. அவர்களுடைய குவார்ட்டர்ஸ் ஒரு இடத்தில் இருக்கிறது. எனவே அவர்கள் டவுன் பஸ்ஸிலேதான் போக வேண்டும். அதாவது குற்றவாளி காரிலே போகிறார். ஆனால் நீதிபதியோ. டவுன் பஸ்ஸிலே தொங்கிக் கொண்டு போகிறார். இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் மாற்ற வேண்டுமென்றால், எல்லோரும் ஒரே இடத்திலே இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு வேன் கொடுக்கலாம் என்பது என்னுடைய கோரிக்கை. (மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப் பினர் அழைக்கப்பட்டார்).

[முற்பகல் 11—20]

*திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் அவை முன் வைக்கப்பட்டிருக்கிற கூட்டுறவு மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஏ. எம். சேதுராமன்] [1982 மார்ச் 20

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு வலுவான மண்டல விநியோக மையம் அமைப்பதை நான் பாராட்டுகிறேன். அது சென்னை, ஆற்காடு சாலையில் கோடம்பாக்கத்தில் 101,41 இலட்சம் ரூபாய் முதலீடு நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்படுவதில் மிகவும் மகிழ் கிறேன். இரண்டாம் கட்டமாக எங்கள் வடாற்காடு மாவட்டத்தில் செயல்படுத்த உத்தேசித்துள்ளதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அங்கே 20 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் கொண்டு வரப்பட்டு, விற்பனை செய்வது என்பது தமிழக மக்களுக்கு நல்ல முறையில் பயனளிக்கும் ஒரு நல்ல திட்டமாகும். இதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

தற்போது கிராமப்புறங்களிலே 11,101 கூட்டுறவுக் கடைகள் இருக்கின்றன என்பதும், ஒரு கடைக்கு வருட விற்பனை 9,000 ரூபாய்க்கு நடைபெறுகிறது என்பதும் 1982–83-ஆம் ஆண்டில் 100 கோடி ரூபாயைத் தாண்டிவிடும் என்பதும் வரவேற்கத்தக்கதாக இருக்கிறது ; பராட்டுகிறேன். மேலும், இந்த கடைகளின் விற்பனையை பெருக்குவதற்கும் அதிகமான கடைகளைத் திறப்பதற்கும் நம்முடைய அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டம் 100 கோடி ரூபாயைத் தாண்டி, அதற்கு மேலும் செல்வதற்கு வெகுவாக ஒரு விரைவானத் திட்டத்தையும் சட்டத்தையும் கொண்டுவந்தால், அங்கே இருக்கிற கிராமக் கூட்டுறவுக் கடைகள் மூலம் கிராம மக்களுக்கு நன்மை செய்ய முடியும். கிராம மக்களுக்கு நன்மை பயக்கும் முறையில் அந்தக் கடைகள் பணியாற்ற வேண்டும் அல்லது அந்தக் கடைகளை முழுநேரக் கடைகளாகச் செயல்படச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில், கிராமங்களானாலும் சரி, மற்ற இடங்களானாலும் சரி, அங்கே இருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட அந்தச் சங்கங்களின் நிர்வாகப் பொறுப்புகளில் பெண்களுக்கும் இடமளிக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஆலோசனைக் குழுக்களை அமைப்பதாக இந்தத் திட்டத்திலே கொள்கை அளவில் கொண்டுவந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அங்கே பெண்களை போடும்போது நிச்சயமாக மக்களுக்கு இந்த கூட்டுறவுச் சங்கங்களில் பற்று அதிகமாக ஏற்படும். ஆகவே, இந்தத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஏப்ரல் மாதம் முதல் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் கூட அந்தச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்க உதவியாக ருக்கும்.



1982 மார்ச் 20] [திரு. ஏ. எம். சேதுராமன்]

மாவட்டந்தோறும் சர்க்கரை ஆலைகளிலும் மற்ற மத்திய மாநில மாவட்டக் கூட்டுறவு வங்கிகளிலும் நிர்வாகஸ்தர்கள் இல்லாத குறை இருக்கிறது. அங்கே ஆலோசனைக் குழுக்களும் இல்லை. அதனால், கூட்டுறவு நிறுவனங்கள் நல்ல முறையில் சரியாக நடைபெறவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு பொது மக்களிடையே அதிகமாகப் பேசப்படுகிறது. அதை நிவர்த்தி செய்ய வேண்டும். மக்களுக்கு நன்மை பயக்குகின்ற வகையிலே எல்லா நிறுவனங்களிலும் ஆலோசனைக் குழுக்களையும், நிர்வாகஸ்தர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதிமன்றங்களைப் பொறுத்த வரையில், 1982–83-ஆம் ஆண்டில் 24 உரிமை இயல் நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதற்கு அனுமதி அளித்துள்ளதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். நம்முடைய அரசு 1977-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பின்னால் அதிகமான நீதிமன்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் பொதுமக்கள் நன்றாக அறிந்து கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபட விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த 24 உரிமை இயல் நீதிமன்றங்களில் ஆற்காடு நகரில் பொதுமக்கள் வேண்டுகோளுக்கு இணங்கவும், என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கவும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இரண்டாம் வகுப்பு துணை குற்றவியல் நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்த அனுமதித்துள்ளமைக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலும் என் சார்பிலும் உளம் கனிந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளில் இருக்கிற கைதிகளுக்கு படிப்பதற்காக, பத்திரிகைகள் வழங்கப்படுகின்றன. இன்றைய தினம் 7 பத்திரிகைகள் சிறைச்சாலைகளுக்கு போடப்படுவதாகத் தெரிகிறது. ஆங்கிலப் பத்திரிகைகளையும் கைதிகள் படித்து, வெளி உலகத்தில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கூடுதல் நீதிமன்றங்கள் எத்தனை ? எத்தனை நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டு இந்த தமிழக மக்கள் அதனால் பயனடைகிறார்கள் என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். அதைப்போல பொதுமக்களும் அறியும்படி செய்ய வேண்டும். அதற்கு தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு ஏ. எம். சேதுராமன்] [1992 மார்ச் 20

கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளிய மக்கள், கோர்ட்டுக்குப் போக முடியாத மக்கள், வசதியற்ற மக்கள், சிறையில் இருக்கிற கைதிகள் இலவசமாக சட்ட ஆலோசனைப் பெறுவதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. அந்த நல்ல திட்டத்தை இன்றைக்கு தமிழக அரசு ஏற்படுத்தி இருக்கிறது. அதை நான் மனதார பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த தலைமை செயலகத்திலேயே ஒரு துறையை ஏற்படுத்த வேண்டும். அப்படியானால்தான் நல்ல முறையில் இது செயல்பட முடியும் ; அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். (மணியடிக்கப் பெற்றது). இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிற மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, பேசுவதற்கு வாய்ப்பு இல்லாததால் இத்துடன் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. நேரவைத்தம்பி : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதித்துறை, கூட்டுறவுத் துறை, ஜெயில் துறை ஆகிய மூன்று துறைகள் மீதான மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெறுகிறது. ஆனால், ஒவ்வொரு உறுப்பினருக்கும் $2\frac{1}{2}$ நிமிடம், 3 நிமிடம் என்கிற வகையில் தான் நேரம் ஒதுக்கப்பட்டு, பின்னர் மணியடிக்கப்பட்டு விடுகிறது. ஆகவே, எந்த வகையில் இந்த நீதி வழங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தந்தக் கட்சியில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நீதி வழங்கப்படுகிறது.

திரு செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கிற மானியக் கோரிக்கைகளை வரவேற்று, என்னுடைய கருத்துக்கள் ஒரு சிலவற்றை கூட்டுறவுத் துறை மானியத்தின் மீது எடுத்துச் சொலல நான் விரும்புகிறேன்.

இன்றைய சமுதாய அமைப்பில் எந்தத் துறையாக இருந்தாலும், கூட்டுறவு அமைப்பின் அடிப்படையில்தான் இயங்க முடியும் என்ற அளவிற்கு கூட்டுறவு இயக்கம் வலுப்பெற்று இருக்கிறது என்பதை நம்மாலே உணர முடிகிறது. கூட்டுறவு இயக்கம் நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இயக்கமாக இருப்பதால், அதனுடைய வெற்றி தோல்விகள் அதனைக் கையாளுகின்ற முறையில் இருக்கிறது என்பதை நம்மாலே உணர முடியும். ஆனால், கடந்த காலங்களில் அந்தக் கூட்டுறவு இயக்கத்தை இயக்கியவர்களால் ஏற்பட்ட தவறால் அந்த கூட்டுறவுத் துறை எங்கே நசிந்து விடுமோ என்கிற ஒரு நிலையில் இருந்தது. ஆனால்



1982 மார்ச் 20] [திரு. செ. செம்மலை]

இன்றைக்குப் புரட்சித் தலைவர் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் சீரிய நடவடிக்கைகளாலே, வாடிய பயிர் மழை நீரைக் கண்டது போல், அந்தக் கூட்டுறவுத் துறையிலே இன்றைக்கு ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறையிலே நல்ல பல சீர்திருத்தங்களைச் செய்து வருகிறார்கள். இருப்பினும், கூட்டுறவுத் துறையில் என்னதான் சீர்திருத்தம் செய்தாலும், ஓட்டைப் பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றினால் ஒழுகிக்கொண்டே இருப்பதைப்போல், கூட்டுறவு சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளால் அது முழுமையான பலனை எய்த முடியவில்லை. அதன் காரணமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறையிலே நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக அந்த ஓட்டைகளை அடைத்து சட்டம் திருத்தம் கொண்டு வர இருக்கிறார்கள். அந்தத் திருத்தச் சட்டத்தை இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தி, அந்தக் கூட்டுறவுத் துறையில் இருக்கும் குறைபாடுகளை நீக்க வேண்டும். அந்த அடிப்படையில் அந்தச் சட்டத்திருத்தத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவர வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில், கூட்டுறவே நாட்டுயர்வு என்ற தத்துவத்தை மாற்றி, கூட்டுறவே தன்னுயர்வு என்கிற வகையில் அதைப் பரம்பரைச் சொத்தாக, வாரிசாக நினைத்து, வேண்டியவர்களுக்கு எல்லாம் லோன் கொடுத்து, அதை பினாமியாக எடுத்துக் கொள்ளும் நிலைமைகள் இருந்தன. அந்த நிலைமைகளை மாற்ற வேண்டும் என்கிற அடிப்படையில் 2 முறைக்கு மேல் எவரும் தலைவராகவோ, இயக்குநராகவோ இருக்கக் கூடாது என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். அந்த அடிப்படையில் சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இயங்கி வருகின்ற விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏதோ '' லோன் சொசைடிகளாக ''—கடன் வழங்குவதற்கு மட்டுமே உள்ள சொசைடிகளாக இருக்கின்ற நிலைமை இருக்கிறது. அந்தச் சங்கத்தில் பல்வேறு விதமான பணிகள் நடந்து வந்தாலும் இது போன்ற தவறான கருத்து இருந்து வருகிறது. எனவே, அந்த சொசைடிகளை நல்ல முறையில் இயங்கச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கூட்டுறவு விவசாய சேவைச் சங்கங்களைப் பொறுத்த வரையில் அதனுடைய அமைப்பு முறைகளையும் மாற்றியமைக்க வேண்டும். பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம். கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் என்பவைகள் எத்தகைய

[திரு. செ. செம்மலை] [1932 மார்ச் 20

அமைப்பு முறைகளை கூட்டுறவுத்துறையில் வைத்துள்ளனவோ அந்த முறையில் இதையும் செய்யவேண்டும். குறிப்பாக விவசாய சேவை சங்கங்களை கிராம அளவில் விவசாய உற்பத்தியாளர் சங்கம் என்றும், மாவட்ட அளவில் விவசாய உற்பத்தியாளர் ஒன்றியம் என்றும், மாநில அளவில் விவசாய உற்பத்தியாளர் இணையம் என்றும் 3 டயர் சிஸ்டத்தைக் (3 அடுக்குமுறை) காண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் அந்த விவசாயிகள் உற்பத்தி செய்யவும், இடுபொருள்களை வாங்கவும் கடன்களை பெறமுடியும். உற்பத்தி செய்த பொருள்களை நியாயமான முறையில் அந்தச் சங்கங்கள் கொள்முதல் செய்யவும் முடியும். கொள்முதல் செய்த பொருள்களை விற்பனை அல்லது வினியோகம் செய்யவும் முடியும். இதன் காரணமாக இடைத்தரகர்கள், தனி வியாபாரிகள் தலையீடு தவிர்க்கப்படுவதுடன், விலைவாசி ஏற்றத்தையும் ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடியும். உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும் வழி ஏற்படும். ஆகவே, இந்த வகையில் விதிமுறைகள் மாற்றப் படுவதற்கான வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, கூட்டுறவுத் துறை ஒவ்வொன்றுக்கும் அரசை எதிர்பார்க்கும் நிலைமை மாற்றப்பட்டாகவேண்டும். நலிந்த கூட்டுறவு சங்கங்களுக்கும், அமைப்புகளுக்கும் உதவுவது அரசின் கடமையாக இருந்தாலும் ஒவ்வொரு கூட்டுறவு அமைப்புகளுக்கும் உதவவேண்டும் என்பதற்காகவே அவற்றை நலிவு அடையச்செய்வது நல்லதல்ல. எனவே அதுபோன்ற அமைப்புகளை சீர்திருத்திக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் எந்த நோக்கத்திற்காக கூட்டுறவு சங்கங்களிலே கடன் வாங்குகிறார்களோ அந்த நோக்கத்திற்காக அந்தப் பணத்தை அவர்கள் பயன்படுத்தாத சூழ்நிலை இருந்து வருகிறது.

[முற்பகல் 11-30]

இன்றைக்கு விவசாயிகளைப் பொருத்தவரையில் அவர்களுக்குத் தேவையான அளவுக்கு, அவர்கள் கேட்கிற அளவுக்கு கடன்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் வழங்கப்படுவதில்லை, எனவே மாநிலம் முழுவதற்கும் ஒரே அடிப்படை அல்லது ஒரே அளவு கோல் என்ற முறையில் வைத்து இந்தக் கூட்டுறவு கடன்களே வழங்கப்படக் கூடாது. ஏனெனில் மாவட்டத்திற்கு மாவட்டம், நிலத்தின் தன்மையும், கூலி வித்தியாசமும், உரம்போன்றவைகளின் தேவையும், தண்ணீர் தேவையும் வித்தியாசப்படும். இடு பொருள்களும் தற்போது விலையேறிவிட்டன. ஆகவே இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் கடன்கள் வழங்கப்பட வேண்டும். அதுவும் நம்முடைய கூட்டுறவுத் சங்கங்களில் கடந்த 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பெற்ற அளவுகோலை



1982 மார்ச் 20] [திரு. செ. செம்மலை]

வைத்துக் கொண்டு கடன் வழங்கி வருகிறார்கள். உதாரணமாக சொல்லவேண்டுமானால், தற்போது நெல் பயிரிடுவதற்கென்று 1,500 ரூ. செலவாகிறது என்றால், கூட்டுறவுச் சங்கங்களில் 600 அல்லது 750 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இதை வைத்துக் கொண்டு பயிர் செய்ய முடியாத நிலையில் உள்ள அந்த விவசாயி வாங்கிய கடனை வாங்கிய நோக்கத்திற்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிற காரணத்தால், கடனை திருப்பிக் கொடுப்பதிலும் சிரமம் அடைகிறான். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கு கடனை வழங்குகிறபோது, அவர்களுக்கு தேவைப்படுகிற தொகையை, அல்லது அவர்கள் கேட்கிற தொகையை வழங்குவதற்கு ஏற்பாடு செய்து, அவர்கள் எந்த நோக்கத்திற்காக அந்தக் கடனை பெறுகிறார்களோ, அந்த நோக்கம் நிறைவேற்றச் செய்வதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவுச் சங்க அமைப்பின் மூலம், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அதன் மூலம் கிராமப் புறங்களிலும் உணவுப் பொருள்களை நியாயவிலையில் கிடைக்கச் செய்வதன் மூலம், கிராமப்புறங்கள் பெரிதும் பயன் அடைந்துள்ளன. அதிலேயே மொத்தமாக பொருள்கள் சேகரிக்கப்படுவதால் விலைவாசி கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன்மூலம் அனைத்து உணவுப் பொருள்களின் விலையேற்றம் ஓரளவு கட்டுப் படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அதேபோல உணவு விடுதிகளில் உணவுப் பண்டங்களில் விலை ஏற்றத்தை தடுப்பதற்கு இந்தக் கூட்டுறவுத் துறை மூலம் சென்னையிலும் மாவட்ட தலைநகர்களிலும் அல்லது அங்கே முக்கியமான இடங்களிலும், பரிட்ச்சார்த்தமான கூட்டுறவு உணவு விடுதிகளை ஏற்படுத்தி நடத்திப் பார்க்க வேண்டும். அப்படி ஏற்பாடு செய்வதன் மூலம் இன்றைக்கு உணவு விடுதிகளில் உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தை ஓரளவிற்கு நேரடியாக கட்டுப் படுத்த முடியும் என்பதை எடுத்துச் சொல்லி கூட்டுறவுத் துறையின் மூலம் இருக்கும் பல சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்கள், சுமார் 51 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள், பணி பாதுகாப்பின்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு இருப்பது போன்று, குடும்பநலத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதோடு, மற்ற வசதிகளையும் செய்துகொடுத்து, அவர்களுடைய பணிக்கு பாதுகாப்பு அளித்து, அவர்கள் வாழ்வில் நம்பிக்கை ஊட்ட வேண்டும் என்று கேட்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் சிறைகள் மற்றும் கூட்டுறவு சம்பந்தமான 3 மானியக் கோரிக்கைளின் மீது, மிகக் குறுகிய

[திரு. இரா. கருப்பையா] [1982 மார்ச் 20

காலத்தில் கருத்து தெரிவிக்க வேண்டிய நிலையில் நின்றிருக்கிறேன். இருந்தாலும் பார்க்க வேண்டிய பல்வேறு பிரச்னைகளைப் பற்றியும் கூறித்தான் ஆகவேண்டியிருக்கிறது. ஆகவே மேற்கொண்டு சிறிது காலத்தை நீட்டித்துக் கொடுக்கும் அனுமதியை, முன் கூட்டியே உங்களிடம் எதிர்பார்த்து, நான் என்னுடைய பேச்சை துவக்குகிறேன்.

நீதி நிர்வாகம் சம்பந்தமாக எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே கொண்டு வரப்படவேண்டும் என்று இதிலே கூறப்பட்டிருக்கிறது. ஆனால் சமீபத்திலே நம்முடைய உயர்நீதிமன்றத்திற்கு, தமிழ் மொழி பரிச்சயம் இல்லாத ஒருவரை, கேபி.எம்.சிங் என்பவரை, உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக மத்திய அரசு நியமித்திருக்கிறது. ஆகவே, நம்முடைய கொள்கைக்கும் கோட்பாட்டிற்கும் விரோதமான வகையில் அதை நிறைவேற்ற முடியாத வகையில் மத்திய அரசின் கொள்கைகளும் கோட்பாடுகளும் இருக்கின்றன என்றஅந்த அடிப்படையில் மத்திய அரசை நம்முடைய அரசு, திட்டவட்டமாக இது குறித்து வலியுறுத்தவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக தமிழிலேயே அனைத்துச் சட்டங்களும் கொண்டு வரப்பட்டால்தான், அரசு அறிவித்திருக்கக்கூடிய கொள்கையை முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும். என்று அமுல்படுத்துவதற்கு உதவியாக இருக்கும். அடுத்ததாக, நீதிமன்றங்களில் இன்றையதினம் இருக்கக்கூடிய வழக்குகள், அதிலும் குறிப்பாக சிவில் வழக்குகள், பல ஆண்டுகளாக நடந்துக் கொண்டேயிருக்கின்றன. முடிவடையாத நிலைமையிலேயே இருந்துக் கொண்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். 'கோர்ட்டுக்குப் போனாயோ, செத்தாயோ'' என்று கூட ஒரு பழமொழி நம் கிராமப்புறங்களிலே நிலவி வரக்கூடிய அளவுக்கு இருக்கிறது. இந்த நீதிமன்றங்களில், ஒரு வழக்குப்போட்டால், அது முடிவடைய 6, 7 ஆண்டுகள் கூட ஆகின்றன. சாதாரணமான வழக்குகள் கூட இன்றையதினம் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. இது குறித்து என்ன நடவடிக்கையை நாம் எடுத்திருக்கிறோம். எல்லாச் சூழ்நிலைகளிலும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இதுபற்றி நாம் பேசி வந்திருக்கிறோம். ஆனாலும் இது குறித்து எந்தவித முடிவும் இதுவரையில் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு கோர்ட்டுகளில் சிவில் நீதிமன்றங்களில் இப்போது ஒரு பழக்கம் இருக்கிறது. வழக்கிற்கான அனுமதி கிடைத்தவுடன் இன்ஜெங்ஷன் ஆர்டர்கள்-தடை உத்தரவு ஆர்டர்களை கொடுத்துவிடுகிறார்கள். அது தவறு. வழக்கிற்கான மனு கொடுத்தவுடன், அதை விசாரித்து, சம்பந்தப்பட்ட எதிர் ஆட்களையும் விசாரித்து அதற்குப் பிறகுதான் தடை உத்தரவு வழங்கப்படவேண்டும். அதுதான் சட்ட பூர்வமான நிலையாக இருக்க



1982 மார்ச் 20] [திரு இரா. கருப்பையா]

முடியும். ஆனால் தற்போது எல்லாக் கோர்ட்டுகளிலும், மனுக்களைக் கொடுத்தால் உடனடியாக தடை உத்தரவை கொடுத்துவிடுகிறார்கள். இதனால் சாதாரண ஏழை விவசாயிகள் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. எப்படி என்று சொன்னால், இப்படி உடனடியாக தடை கொடுத்தவுடன் அவர்களிடமிருந்து நிலங்கள் பறிக்கப்படுகின்றன. அதற்குப் பிறகு அந்த வழக்கே என்ன ஆயிற்று என்று தெரியாத நிலை இருக்கிறது. 7, 8 ஆண்டுகளுக்குப் பிறகுதான் வழக்குகளையே எடுக்கிறார்கள். இதனால் விவசாயம் கூட செய்யமுடியாத நிலையில் அந்த ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்து, இதற்கு ஒரு சரியான நடவடிக்கை எடுத்து அதை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மனுக்களை கொடுத்தவுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து, அவர்களுடைய தரப்பையும் விசாரித்து, அதற்குப் பிறகு தடை உத்தரவு வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எல்லா வட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்படவேண்டும் என்பதைப் பொறுத்த வரையிலே அரசே அறிவித்திருக்கக்கூடிய கொள்கை. 1982–83லே அமைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதன்படி மணப்பாறையிலே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் அமைக்கவில்லை. எனவே அது அமைக்கப்படவேண்டும். அது போல் எல்லா வட்டத் தலைநகரங்களிலும் அமைக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குளித்தலையிலே சப் கோர்ட் வேண்டும். பல்வேறு பகுதிகளின் மையமாக இருக்கக்கூடிய குளித்தலையிலே சப்-கோர்ட் அமைக்கவேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. அதையும் அமைக்கவேண்டும். அடுத்து தொழிலாளர் நீதிமன்றத்தினை மையமாக. இருக்கின்ற திருச்சியிலே அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இருக்கின்றது.. அதையும் அமைக்க வேண்டும்.

அடுத்து கம்யூனல் ஜி. ஓ. வைப் பொறுத்தவரையிலே அதனை அமல் செய்யக்கூடிய நிலைமை ரெக்ரூட்மென்டிலே எல்லாம் இருக்கின்றது. அதேமாதிரி ப்ரமோஷன் பாலிசி சம்பந்தமாகவும் இன்றையதினம் உயர்நீதிமன்றங்களிலும், மற்ற நீதிமன்றங்களிலும் அந்த அடிப்படையிலே அமல் செய்வதற்கான நடைமுறைகள் இருந்தால் பல்வேறு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பு கிடைப்பதற்கான நிலைமைஇருக்கும், ஆகவே அதைப் பரிசீலனை செய்து அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. கருப்பையா] [1982 மார்ச் 20

அடுத்து கடன் நிவாரணச் சட்டம் இன்றைய தினம் நடைமுறையில் எப்படி அமல்செய்யப்படுகின்றது என்பதை உதாரணம் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன். பழனியப்பன், சன் ஆப் பள்ளிகொண்டான் வடக்கு வருத்திப்பட்டி என்பவர் 1980 ஆம் ஆண்டு மனுச் செய்திருக்கிறார். 4—9—1980 அன்று கரூரிலே உள்ள ஸ்பெஷல் டட் ரிலீஃப் தாசில்தார் அவருடைய நகைகளைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார். ஆனால் அந்த நகைத் கடைக்காரர் கடையை மூடிவிட்டு இப்போது இருக்கக்கூடிய இடம் கூட தெரியாத அளவுக்கு எங்கோபோய்விட்டார். ஆனால் மனுக்கொடுத்தவர் போலீசுக்குச் சென்று அதுபற்றிச் சொல்கின்றபோது வழக்கு பதிய மறுக்கிறார்கள். நான் சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையிலே மாவட்டப் காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடத்திலே சொன்னதற்கு பிறகு நடவடிக்கை எடுத்து போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்த உடனே அங்கே இருக்கக்கூடிய சப் இன்ஸ்பெக்டர் எப்படி நோட்டீஸ் கொடுக்கிறார் தெரியுமா? என்னிடம் கொடுக்கப்பட்ட புகாரின்படி மணப்பாறை காவல் நிலையம் 101/82 பிரிவில் 422 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்குத் தேவையான அசல் அடகு ரசீது மற்றும் அதற்கான விவரங்களுடன் 12—3—1982 மாலை 5 மணிக்குள் ஆஜர் ஆகவேண்டும், என்று எழுதுகிறார். காலை 12 மணிக்கு இந்த கடிதத்தை கொடுத்துவிட்டு மாலை 3 மணிக்குள் ஆஜர் செய்யவேண்டுமென்று எழுதுகின்றார் என்றால் எப்படியாவது இதைத் தவிர்க்கவேண்டும் என்ற வகையில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு ஆண்டுகள் ஆகியும் போலீசிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதற்காகக் காவல்துறை கண்காணிப்பாளரிடத்திலே சென்ற பிறகு கடைசியாக வந்திருக்கக்கூடிய நேரத்திலே இந்த மாதிரி இருக்கின்றது. அந்த டீ. ஆர். நம்பர் 308/80. இது டெட் ரிலிஃப் தாசில்தார் கொடுத்து இருக்கக்கூடிய உத்தரவு.

இதே மாதிரி கரூரிலே இன்னொரு பிரச்சனை. ஜானகியம்மாள் வொய்ஃப் ஆஃப் திருமலைச்சாமி அவர்களுடைய கடன் நிவாரண மனு 148/80, 3—1—1981 அன்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். நகை திரும்பக்கிடைக்கவில்லை. அவர்கள் இதுகுறித்து முதல்வரிடத்திலே சொன்னால் ஏதாவது வழி கிடைக்கும் என்பதால் அவர்களுக்கும் மனு கொடுத்திருக்கிறார்கள். இந்தமாதிரி நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பேர்களுக்கு நிவாரணம் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே இது சம்பந்தமாக கறாராகத் தெளிவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே ஆங்காங்கே எந்த போலீஸ் ஸ்டேஷன் இருக்கின்றதோ அங்கே புகார் செய்யப்பட்ட உடனே அவர்களைக் கொண்டுவருதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். மோசடி சம்பந்தமான வழக்குகளைப் பதிவு செய்யவேண்டும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.



1982 மார்ச் 20] [திரு. இரா. கருப்பையா]

அடுத்து சிறைகள் சம்பந்தமாக நான் குறிப்பிட விரும்புகிறேன். இது சம்பந்தமாக தொடர்ச்சியாக பல்வேறு சந்தர்ப்பங்களிலே இந்த மன்றத்திலே நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இன்றைக்குக் காலையிலே கூட ஜிஞ்சர் மண் என்பவர் சென்னை சிறையிலே சந்தேகத்திற்கிடமான முறையிலே இருந்திருக்கிறார் என்ற அடிப்படையிலேதீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஆகவே அதிகாரிகள் கைதிகளை நடத்தக் கூடிய முறையினைப் பொறுத்தவரையிலே எந்தவிதமான அடிப்படை மாற்றமும் ஏற்படவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். சிறை அதிகாரிகளின் கண்காணிப்பிலே கைதிகள் இருக்கின்ற நேரங்களில் இம்மாதிரியான நிலைமைகள் ஏற்படுவது என்பது ஒரு தொடர் நிகழ்ச்சியாக இருக்கின்றது. ஆகவே எதிர்காலத்திலே இப்படி ஏற்படாமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது.

அடுத்து சிறை சீர்திருத்தம் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட குழு பரிந்துரை கொடுத்திருக்கின்றது. நன்னடத்தைப் பிரிவினைத் தனியாகப் பிரிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் அதற்கான நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை. இன்னும் ஆலோசனையில இருக்கின்றது என்றுதான் கூறப்பட்டு வருகின்றது. ஆகவே உடனடியாக அதனைப் பிரிக்கவேண்டும்.

அடுத்து கைதிகளின் பரோல் விடுப்பு சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே 5 ஆண்டுகள் சிறையிலே இருந்தவர் ஒருமாத காலம் பரோல் விடுப்புபெறலாம் என்று பரோல் விடுப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அவர்களுக்கு அதிலே அதிகப்படியான கஷ்டங்கள் இருக்கின்றன. இது சம்பந்தமாக தொடர்ச்சியாக பல்வேறு முறையீடுகள் வந்துகொண்டிருக்கின்றது. ஆகவே பரோல் விடுப்பினைப் பொறுத்தவரையிலே அதனை இலகுவான முறையிலே பெறக்கூடிய வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்து, அவசரக்கால விடுப்பு சம்பந்தமாக இந்த மன்றத்தில் பேசியிருக்கிறோம். சமீபத்தில் அரசாங்கம் ஒரு புதிய உத்தரவைப் போட்டு அதை மாற்றியிருக்கிறது. அவசர காலத்தில் அவர்கள் குடும்பத்தில் உற்றார் உறவினர்கள், மனைவி அல்லது குழந்தைகள் இவர்களுக்கு திடீரென்று ஏதாவது ஏற்பட்டுவிட்டால் அதைக் கவனிக்க அவசரக் கால விடுப்பு என்று 15 நாட்கள் கொடுக்கலாம் என்றிருக்கிறது. அதை மாற்றியிருக்கிறார்கள். இது குறித்து திருச்சி ஜெயில் போன்ற இடங்களில் ஏற்பட்ட உண்ணாவிரதம் போன்ற நிலைமைகள்

[திரு இரா. கருப்பையா] (1982 மார்ச் 20

பற்றி, இந்த உத்தரவை மாற்றியதற்காக ஏற்பட்டது பற்றி, அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஜெயில் சூப்பரின்டென்டென்ட் அனுமதி பேரில் அவசரக் கால விடுப்பு கொடுக்க நடைமுறைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். 15 நாட்களில் ஐந்து தடவை போக வேண்டும் என்பதில் போய் வரக்கூடியவர்களுக்கு சிரமங்கள் இருந்தாலும் அதிகாரிகள் ஐந்து தடவை எழுதி வாரன்ட் கொடுத்து செய்வதில் அவர்களுக்கும் சிரமம் இருக்கிறது. எனவே மூன்று தடவை ஐந்து ஐந்து தினங்கள் என்ற முறையில் செல்கிற வாய்ப்புகளை எற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

கான்டீன்ஸ் அமைப்பு, பஞ்சாயத்து முறை ஏற்படுத்துவது சம்பந்தமாக ஜெயில் சீர்திருத்தக் குழு சிபார்சுகளை உடனடியாக அமல் படுத்தவேண்டும். கான்டீன்களைக் கண்காணிக்க கண்காணிப்புக் குழுவில் அதிகாரிகள் மட்டுமல்லாது கைதிகள், தேவையானால் வெளியே இருக்கிற பிரமுகர்களையும் இந்த கண்காணிப்புக் குழுக்களில் போடவேண்டும்.

சிறைப் பார்வையாளர்கள் சம்பந்தமாக குழு நியமிக்க வேண்டும். சட்டசபை உறுப்பினர்கள் சிறைக்குள்ளே இருக்கக் கூடிய நிலைமைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் சென்று பார்க்க, அதிகாரிகளுக்கு முன் அறிவிப்பு கொடுத்துவிட்டு சென்று பார்க்க உரிமை கொடுப்பதில் உங்களுக்கு என்ன தயக்கம் என்பது எனக்குப் புரியவில்லை. அப்படி உறுப்பினர்கள் சென்று பார்ப்பதனால் சிறையில் உள்ள நிலைமைகளை கைதிகளின் குறைகளை தெரிந்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க அது வாய்ப்பளிக்கும் என்ற முறையில் சட்டமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைகளுக்குச் சென்று பார்வையிட வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

ரிமாண்டு செய்யும்போது, கைதிகளுக்கு பாட்டா கொடுக்கிறார்கள். ஒருவேளைச் சாப்பாடுக்கு 75 பைசா என்று கொடுக்கிறார்கள். அதை வாங்க கோர்ட்டில் படாதபாடு படவேண்டியிருக்கிறது. இந்த 75 காசு என்பது என்றோ ஏற்படுத்தப்பட்டது. இன்றைக்கும் அப்படியே இருக்கிறது.

ரிலீஸ் ஆகிப் போகும்போது எந்தக் கோர்ட்டில் ரிமாண்ட் செய்தார்களோ அந்த இடத்திற்குத்தான், அந்த ஊருக்குத்தான் வாரன்ட் கொடுக்கிறார்கள். ஒரு இடத்தில் கைது செய்து சேலத்தில் ரிமாண்ட் கொடுத்தால் சேலத்திற்குத்தான் வாரன்ட் கொடுக்கப்படுகிறது. ஆகவே நான் சொல்லவிரும்புவது, எந்த ஊரில் கைது செய்தார்களோ அந்த ஊருக்கு வாரன்ட் கொடுக்கப் பட வேண்டும்.



982 மார்ச் 20] [திரு இரா. கருப்பையா]

அடுத்து கூட்டுறவு சோஷலிஸப் பாதைக்கு அடித்தளம் போடுவதே கூட்டுறவுதான். கூட்டுறவே நாட்டுயர்வு என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். எந்தளவிற்கு அது நம் நாட்டில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்றால் எந்தளவிற்கு முன்னேற வேண்டுமோ அந்த அளவிற்கு முன்னேறவில்லை முன்னேற்றம் காணவில்லை என்பதை வருத்தத்தோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன். பல்வேறு விவரங்கள் உள்ளன ஆனால் அவகாசம் இல்லை என்பதால் சுருக்கமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கூட்டுறவு அமைப்புகளுக்கு தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டும். இன்றைக்கு பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் தனி அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள், அதற்கு தனி அதிகாரிகள். தாலுகா மட்டத்திலுள்ள அமைப்புகளுக்கு தனி அதிகாரிகள். லான்ட் டெவலப்மென்ட் பாங்க்குகளுக்கு தனி அதிகாரிகள். இப்படி பைனான்ஷியல் கண்ட்ரோல், கொள்கையை உருவாக்கக் கூடிய இடங்களில் தனி அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். கிராம சொஸைட்டிகளில் தான் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இது என்ன முறை? ஆகவே எல்லா கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சர்க்கரை ஆலைகள் உள்ளன. நூற்பாலைகள் உள்ளன. இவை அமைக்கப்பட்ட காலத்திலிருந்து இதற்கான தேர்தல்கள் நடக்கவில்லை. இந்த ஆட்சியைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. இதற்கு முன் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் காலத்திலும் தொடர்ந்து இம்மாதிரி நடைமுறை இருந்து வருகிறது. கூட்டுறவுக் கடன்கள் வசூல் சம்பந்தமாக நெருக்கடி, ஜப்தி, கெடுபிடி வசூல் துவக்கப்பட்டுள்ளன.

அடுத்து கடன்கள். அதில் மைய அரசு ஒரு பக்கம் நம்மை மிரட்டுகிறது, ப்ளாக் லிஸ்டில் வைப்போம் என்று மிரட்டுகிறார்கள். எதற்காக மிரட்டுகிறார்கள்? அரசியல் அடிப்படையில் மிரட்டுகிறார்களா என்று கருதவேண்டி இருக்கிறது. மாநில அரசு ஓரளவு நிவாரணம் கொடுத்திருக்கிறது, சென்ற ஆண்டு அது வரவேற்கத்தக்கது. ஆனால் அந்தப் பிரச்னை முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. சமீபத்தில் விவசாய சங்க கூட்டமைப்பு உச்ச மட்டக்குழு ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள்.

மின்சாரத்திற்கு அவர்கள் கொடுக்க வேண்டியது சம்பந்தமாக, பல ஆண்டுகளாக 1973-லே இருந்து இருந்துவந்த பிரச்னை பேசி தீர்க்கப்பட்டது; அதைப்பற்றி இப்பொழுது யாரும் பேசுவதில்லை. அதேமாதிரிதான் கடன் சம்பந்தமான பிரச்னை முழுமையாகப் பேசித்தீர்ப்பதற்கு அனுசரணையான நிலைமையை ஏற்படுத்த வேண்டும். ஆகவே, விவசாயிகள் உயர்மட்ட குழு கூறியுள்ளபடி 97.14 கோடியை இந்த அரசாங்கம் ஏதாவது

[திரு. இரா. கருப்பையா] [1982 மார்ச் 20

ஒரு முறையில் ஈடுசெய்ய முன்வந்தால் தான் இந்தப் பிரச்னை தீரும். இன்றையதினம் ஜப்தி செய்யப்படும் கெடுபிடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 3 மாத காலத்திற்கு கடன் வசூலைத் தள்ளி வைக்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால், பல்வேறு அமைப்புகளிலிருந்து தகவல்கள், தந்திகள் எங்களுக்கும் வந்து கொண்டிருக்கிறது; உங்களுக்கும் வந்து கொண்டிருக்கிறது. இன்றைய தினம் விவசாயிகளிடம் பொருள்கள் இல்லை; அவர்கள் அறுவடையை எதிர்நோக்கியிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஜப்தி கெடுபிடியை, அதற்கான நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் மத்திய வங்கிக்கு விதிக்கப்படும் வட்டி, சமீபத்தில் ரிசர்வ் வங்கி திடீரென்று ஒரு நாள் 1 சதவீதம் வட்டியை உயர்த்தி உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதனால், அதன் கீழே இருக்கின்ற நலிந்த சொசைட்டியாக இருந்தாலும், எந்த சொசைட்டியாக இருந்தாலும் அவர்கள் தலையிலே விழுகிறது. நாம் எவ்வளவுதான் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று எண்ணினாலும், இன்றையதினம் இந்த வட்டி கடைசியிலே விவசாயிகள் தலையில் விழுந்து அவர்கள் 10½ சதவீதம், 12 சதவீதம், 13 சத வீதம் வட்டி கொடுக்க வேண்டிய நிலை வருகிறது. ரிசர்வ் வங்கியிலே இருந்து மாநில வங்கி வாங்கி, மாநில வங்கியிலே இருந்து மத்திய மாநில வங்கி வாங்கி, அதற்குப் பிறகு மத்திய வங்கி, அதற்குப் பிறகு சொசைட்டிகள் என்ற இந்த மாதிரி 4 அமைப்புகள் மூலமாக வருவதால் வட்டி விகிதம் உயருகிறது. மத்திய வங்கியில் 2 சத வீதம், ஸ்டேட் பாங்கு வங்கியில் 1½ சத வீதம், அதற்குக் கீழே உள்ளவைகள் 2 சத வீதம் என்று வருவதைப் பார்த்தால், கடைசியிலே இவைகள் எல்லாம் இந்த விவசாயிகள் தலையிலே தான் விழுகிறது. ஆகவே, நேரடியாக ரிசர்வ் வங்கியிடமிருந்து மாநில வங்கி மூலம் வாங்கி, அதன் மூலம் கிராம விவசாய சங்கங்கள், மற்ற சொசைட்டிகளுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால், அதன் மூலம் ஓரளவுக்கு நிவாரணம் கொடுக்க முடியும்.

அடுத்து, நகைக் கடன்கள் எல்லாம் நிறுத்தப்பட்டது. நுகர் பொருளில் ஏற்பட்டிருக்கின்ற அச்சீவ்மெண்டைப் பார்த்தால், இன்னும் அதிகமான அச்சீவ்மெண்ட் ஏற்பட வேண்டியிருக்கிறது. இதிலே கொள்முதல் செய்யப்படுகிறது. அப்படி கொள்முதல் செய்யும்போது, என்.சி.டி.எஸ். 1 சத வீதம், சொசைட்டி நிர்வாக இணையம் 1 சத வீதம், மாநில நுகர்வோர் சங்கம் 1 சத வீதம், மார்கெட்டிங் சொசைட்டி 1 சத வீதம் என்ற ஒரு கொள்கையை வைத்துக் கொண்டிருப்பதால், பொருள்களின் விலை உயர்ந்துக்கொண்டு வருகிறது. இதைப் போக்கவேண்டும் இல்லாவிட்டால், இதனால் சொசைட்டிகள் பாதிக்கக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



1982 மார்ச் 20] [திரு இரா. கருப்பையா]

அடுத்து, தொழிலாளர்கள் சம்பந்தமாக இந்த அறிக்கையிலே, ஒன்றும் குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்கதாகும். அவர்கள் தான் அஸ்திவாரமாக, தூணாக இருக்கிறார்கள். ஏற்கெனவே, குறைந்த பட்ச சம்பளம் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்கள் குடும்பங்களைப் பாதுகாக்கும் திட்டம் பற்றி அண்மையில் பேசப்பட்டும், இன்னும் அது அமுல்படுத்தப்படவில்லை. ஆகவே, அந்த குறைபாட்டால் 19ஆம் தேதி ஸ்டிரைக் செய்தபோது, ஒல்சேலாக அவர்கள் சஸ்பென்ஷன் செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களை ரிலீஸ் பண்ணியும் கூட, பல இடங்களில் பென்டிங் என்கொயரி என்று சொல்லப்பட்டு வருகிறது. திருச்சி நகர கூட்டுறவு வங்கியில் அதேபோல் பென்டிங் என்கொயரி என்ற நிலைமை இருக்கிறது. கூட்டுறவுத் துறை நிர்வகிக்கும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களே சொல்லக்கூடிய வார்த்தை 'யு கோ ஆன் ஸ்டிரைக்' என்று வேலைநிறுத்தத்தை தூண்டிவிடும்போக்கில் செங்கல்பட்டு மாவட்டகூட்டுறவு ஊழியர்களிடம் (I don't mind if you go on strike) என்று கூறுகிறார். தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்ய ஊக்குவிக்கின்ற முறையில் பேசியிருக்கிறார். இந்த அதிகாரிகள் போக்கு கூட்டுறவுத்துறையிலே பணியாற்றும் தொழிலாளர்களை பாதுகாக்கும் கொள்கையாக இல்லை.

பிடிலிடி கேரண்டி எடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. கையாடல் செய்தால், அவர்களைக் கண்டுபிடித்து, ஜெயிலிலே போடவேண்டியதுதான். ஆனால், எல்லோருக்கும் தண்டத் தீர்வை போடுவதுபோல பிடிலிடி கேரண்டி பாலிசிக்கு ரூ. 7¼ கொடுக்க வேண்டுமென்று சொல்வது சரியாக இல்லை என்பதைக் கூறி, தொழிலாளர்கள் சம்பந்தமாக தொழிலாளர்கள் நலன்களைப் பாதுகாக்கும் கொள்கைகளை அமுல் செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொள்வதோடு, அனைத்து கூட்டுறவு ஊழியர்களுக்கும் ரூ. 400 குறைந்தபட்ச சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

திரு. கே. குப்புசாமி: துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க முன்வருகிறேன்.

Mr. Deputy Speaker, Sir, the Hon. Law Minister being an eminent lawyer with the bacnground of profound professional experience has brought forward special welfare Schemes and Measures to tone up the administration of justice in Tamil Nadu.

[கே. குப்புசாமி] [1982 மார்ச் 20

நீதித்துறை என்றுமே பசுமையாக விளங்குகிற முறையிலே தமிழை நீதிமன்ற ஆட்சி மொழியாக கொண்டு வந்திருக்கிறார்கள். இதுவரை கிரிமினல் நீதிமன்றங்களிலே மட்டும் ஆட்சி மொழியாக இருந்த தமிழை உயர் நீதிமன்றத்திற்கு கீழே உள்ள எல்லா நீதிமன்றங்களிலும் அது சிவில் நீதிமன்றமாக இருந்தாலும் சரி, கிரிமினல் நீதிமன்றமாக இருந்தாலும் சரி அங்கே தமிழ் நீதிமன்ற ஆட்சிமொழியாக ஆக்கப்பட்டிருக்கிறது. தாய்மொழி நீதிமன்ற மொழியாக இங்கே மட்டுமல்லாமல் மேலை நாடுகளிலே குறிப்பாக ஜப்பான் நாட்டிலேயும், பிரான்ஸ் நாட்டிலேயும், ஜெர்மனி நாட்டிலேயும் அது சிறப்பாக வெற்றிகரமாக இயங்கி வருகிறது என்பதை நாம் எல்லாம் அறிவோம். அந்த வகையில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த தாய் மொழியை நீதிமன்ற மொழியாக ஆக்கிய புரட்சித் தலைவர் அவர்களையும் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களையும் மனமாரப் பாராட்டுவதற்குப் பெருமைப் படுகிறேன்.

இதற்கு முன்னாலே எல்லாம் அரசு வழக்குரைஞர்கள் பப்ளிக் பிராசிகியூட்டர்களாக அடிஷனல் பப்ளிக் பிராசிகியூட்டர்களாக நியமனம் செய்ய வேண்டுமென்றால் அஸிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிகியூட்டர்களிலிருந்து நியமனம் செய்யப்பட்டு வந்த நிலை மாறி வழக்குரைஞர்களுக்குரிய வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்ற இலட்சியத்தோடு வழக்குரைஞர்களை பப்ளிக் பிராசிகியூட்டர்களாகவும், அஸிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிகியூட்டர்களாகவும் அரசு நியமனம் செய்ய முன்வந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதற்காக கிரிமினல் புரசிஸர் கோடில் 24 பி யைத் திருத்தியதையும் 6 ஏ யை அமெண்ட் செய்திருப்பதையும் நான் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1965 ஆம் ஆண்டிலிருந்து உயர் நீதி மன்றத்தால் புறக்கணிக்கப்பட்ட வழக்குரைஞர் சமுதாயத்திற்கு புனர்வாழ்வு கொடுக்கக் கூடிய முறையிலே 108 அசிஸ்செண்ட் பப்ளிக் பிராசிகியூட்டர்கள் பதவிகள் உருவாக்கப்பட்டு அதிலே வழக்குரைஞர்கள் நியமனம் செய்வதற்காக கால்ஃபார் செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். இதைப்போலவே குற்றவியல் இரண்டாம் நிலை நடுவர்கள் 80 பேர்கள் வழக்குரைஞர்களிலிருந்து நியமனம் செய்வதற்காக அரசு ஆணை பிறப்பித்து உயர்நீதி மன்றம் கால்பார் செய்திருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்; 1965 ஆம் ஆண்டிலிருந்து வழக்குரைஞர்களுக்கு நீதித்துறையில் எந்த இடமும் கிடைக்கவில்லை. சாதாரணமாக டெம்பரரி அப்பாய்ன்ட்மென்ட் என்ற முறையிலே அனிமல் ஹஸ்பண்டரி டிபார்ட்மெண்டிலிருந்து வந்தவர், ஸ்டேட்டிஸ்டிக்ஸ் டிப்பார்ட்மெண்டிலிருந்து வந்தவர், பிஷரிஸ் டிபார்ட்மெண்டிலிருந்து வந்தவர், அனுபவம் பெறாதவர், கோர்ட்டிற்கு செல்லாதவர் டெம்பரரி மாஜிஸ்டிரேட்



1982 மார்ச் 20]

உயர்நீதிமன்றம் கடந்த 15 ஆண்டுகளாக நியமித்து வழக்குரைஞர் சமுதாயத்தைப் புறக்கணித்து வந்த நிலைமை மாறி வழக்குரைஞர்கள் அஸிஸ்டெண்ட் பிராசிகியூட்டர்களாகவும் மாஜிஸ்டிரேட்களாகவும் நியமிக்கப்பட்ட தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டதற்காக வழக்குரைஞர் சமுதாயத்தின் சார்பாக நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஐயாயிரம் ரூபாய் வழக்கு மதிப்பு அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களின் இன்றைக்கு 5000 ரூபாய் வழக்கு மதிப்புள்ள வழக்கை கிராமப்புறங்களிலே உள்ளவர்கள் 50 மைல் 75 மைல் தூரம் சென்று அங்கே உள்ள சப்கோர்ட்டிற்கு செல்ல வேண்டிய சிரமமான நிலை மாற்றப்பட்டு அதிகார வரம்பு கிராமப்புற மக்கள் எளிதாக நீதி பெறுகின்ற வகையிலே 15 ஆயிரமாக உயர்த்தப்பட்டிருப்தற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே சுமால் காஸ் நீதிமன்றங்களின் ஜூரிஸ்டிக்ஷனையும் 500 ரூபாயிலிருந்து 1000 ரூபாய் அளவிற்கு உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். நீதிமன்றங்களிலே உள்ள நீதிபதிகளுக்கு வழக்குரைஞர்களுக்கு உதவுகிற முறையிலே தீர்ப்புத் திரட்டு, குற்ற வழக்குத் தீர்ப்புத் திரட்டு என்ற இரண்டு பத்திரிகைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அந்தப் பத்திரிகைகளுக்கு வேண்டிய நிதியுதவி ஸ்டாஃப் எல்லாம் செய்திருப்பதற்காக நான் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய திரு கிருஷ்ணன் அவர்கள் நீதிபதிகளுக்கு அதிகமான வசதிகள் கொடுக்க வேண்டும் என்றும் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்றும் நீதிமன்றங்களைப் பரவலாக்க வேண்டுமென்றும் டீசென்ட்ரலைஸ் பண்ண வேண்டுமென்றும் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இன்று புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதமிழ்நாட்டிலே புதியபோஸ்ட்அதாவது'கிரியேஷன் ஆப் நியூ போஸ்ட்' கிரியேஷன் ஆப் கோர்ட்ஸ்' கன்ஸ்ட்ரக்ஷன் ஆப் நியூ பில்டிங்ஸ் இவைகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. இன்று 28சிவில்கோர்ட்டுகள் தமிழகம்முழுவதும்கட்டப்பட்டிருக்கின்றன. அதேபோல மதுரையிலே ஒரு அடிஷனல் டிஸ்ட்ரிக் கோர்ட். மதுவிலக்கு குற்றங்களை விசாரிப்பதற்கு தமிழ்நாடு முழுவதும் 21 ஸ்பெஷல் கோர்ட்டுகள். அதேபோல் 'பிரொட்டக்ஷன் ஆப் சிவில் ரைட்ஸ் ஆக்ட்ஸ்' தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அந்த குற்றங்களை விசாரிக்க தமிழ்நாடு முழுவதும் 4 நீதிமன்றங்கள். இப்படி பல்வேறு வழக்குகளை விசாரிக்க பல்வேறு இடங்களில் நீதிமன்றங்கள் தமிழக அரசு ஏற்படுத்தி வருகிறது என்பதை மிகவும் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். அதேபோல பெண்களுக்காக, அடல்டரி, பிகமி, ரேப் போன்ற

வழக்குகளை விசாரிக்க பெண்களுக்காக தனி வழக்கு மன்றங் களை அமைக்கிற யோசனையை அரசு மீண்டும் பரிசீலிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு மட்டுமல்ல. இன்று நீதிபதிகளுக்கு, சப்கோர்ட் ஜட்ஜ்களுக்கு அவர்களுடைய சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. நீதிபதிகளுக்கு கார் வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. டிரைவர் கள் கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். டெலிபோன் டேப் ரெக்கார் டர் போன்ற வசதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. என்னென்ன வசதிகள் நீதிபதிகளுக்கு வேண்டுமோ அவைகளை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. ஆனால் நான் ஒன்றை மனம் வெதும்பி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நான் கேட்ட செய்தி உண்மையா என்பது தெரியாது. கிடைத்த தகவலை வைத்து நான் சொல்லுகிறேன். * * *

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறபோது * * * என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார். அந்த வாசகங்கள் எல்லாம் குறிப்பிலே இருக்கலாமா, அது சரிதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீதிபதிகளைப் பற்றியோ, நீதித்துறை அட்மினிஸ்ட்ரேஷனைப் பற்றியோ விமர்சனம் செய்யக் கூடாது. அந்தப் பகுதிகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

[நண்பகல் 12–00]

திரு. கே. குப்புசாமி : * * * *

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

Mr. SPEAKER: I know Parliamentary procedure fully well than the hon. Member. Please excuse me. I cannot allow discussion on the Chair's Ruling. The hon. Member Thiru Kuppuswamy may please continue his speech.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுடைய, சமுதாயத்தினுடைய நலன் கருதி இயற்றப்பட்டிருக்கின்ற இந்த சட்டங்கள் எல்லாம் முறையாக நீதிமன்றங்களில் அமல் படுத்தப்பட்டு வருகின்றதா

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றன.



என்று பார்க்கின்ற அதிகாரம், இந்த அரசுக்கு, இந்த அவைக்கு இருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வகை யிலே சில பிரச்சினைகள் வரும்போது அரசினுடைய கவனத் திற்கு இவற்றைக் கொண்டு வருவது நிச்சயமாக தவறாகாது என்றுதான் நான் எண்ணுகிறேன். அந்த வகையிலே சமுதாயத் திலே உலவுகின்ற சில பிரச்சினைகளை நாங்கள் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அங்கே நீதித் துறையில் சில குறைபாடுகள் இருப்பதை நான் சுட்டிக்காட்டினேன். மக்கள் தவறு செய்தால் மன்னன் கண்டிப்பான், ஆனால் மன்னனே தவறு செய்தால் யார் அதைக் கேட்பது என்றுதான் நா: கேட்க விரும்புகிறேன். அந்த அதிகாரம் இந்த அவைக்கு இல்லை என்றால் நாம் நீதித் துறை என்று ஒன்றை வைத்து கோடிக் கணக்கான ரூபாய்களை செலவழிப்பதிலே என்ன நியாயம் இருக்கின்றது என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் மாண்பு மிகு உறுப்பினர்களின் சிந்தனைக்கு இந்த கருத்தை வைக்கிறேன்.

(பிற்பகல் 12–10)

அதோடு இந்த ஜுடிஷீயல் இன்டக்கிரேஷனைப்பற்றி சில வார்த்தைகள் நான் சொல்லியாக வேண்டும். இங்கே நீதித்துறையிலே இருக்கின்ற செகன்ட் கிளாஸ் கோர்ட்டை முதல் வகுப்பாக உயர்த்தி

It has been upgraded to First Class and then it has been brought in cadre with the Munsiff.

அந்த அளவுக்குக் கொண்டுவந்த பிறகு அது இன்னும் நடை முறைக்கு வரவில்லை. இதிலே உயர்நீதி மன்றம் தாமதம் செய்யவேண்டிய காரணம் என்ன என்று புரியவில்லை. சாதாரண கிராமத்திலே இருக்கிற மக்கள் பயன் பெறவேண்டு மென்ற காரணத்தினாலேதான் இரண்டாவது நிலை நடுவர் களுக்கெல்லாம் இங்கே முதல் நிலை அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த முதல் நிலை அதிகாரத்தில் இங்கே இருப்பவர்களுக்கு பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் என்ற பதவியை மட்டும் கொடுத்துவிட்டு அதற்குண்டான பவரை அவர்களுக்கு கொடுக் காமல் இருப்பது உண்மையிலே வருந்தத்தக்கது. உயர்நீதி மன்றம் இதிலே ஏன் காலதாமதம் செய்கின்றது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. சாதாரணமாக இங்கே இருக்கிற செகன்ட் கிளாஸ், பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் ஆன பிறகு இங்கே இருக்கிற வழக்குகளை முதல் நிலை நடுவர்கள் விசாரிக் கின்ற அதிகாரம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டாக வேண்டும். பதவியை மட்டும் உயர்நீதி மன்றம் கொடுத்ததே தவிர அவர் களுக்கு விசாரிக்கின்ற அதிகாரத்தை கொடுக்கவில்லை. எனவே தாலுகா மட்டத்திலே நகர மட்டத்திலே கிராம மட்டத் திலே முதலிலே இந்த இரண்டாம் நிலை நடுவர்களுக்கு பதவி கொடுக்கின்ற இடத்தில் எல்லாம் அந்த முதல் நிலை அதிகாரத் தையும் கொடுக்கவேண்டும்.

[திரு. கே. குப்புசாமி] [1982 மார்ச் 20

Power to dispose off the first class offences
இப்படி இந்த உயர்நீதி மன்றம் காலதாமதத்தை தவிர்ப்பதற்கு
........(மணி அடிக்கப் பெற்றது.)

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சிறைத்துறையில் பல
சீர்திருத்தங்களை செய்யவேண்டும். நான் கடந்த 81-ம் ஆண்டு
ஜூன் மாதம் எங்களுடைய அமைப்பின் சார்பாக மக்கள் நலன்
போராட்டம் என்ற கொள்கையிலே நாங்கள் சுமார் 50 பேர்கள்
கோயம்புத்தூர் சிறையில் 17 நாட்கள் இருந்தோம். அந்த
வேளையில் அந்தச் சிறையில் உள்ள நடவடிக்கைகள் பற்றி
நாங்கள் நன்கு புரிந்து இருக்கிறோம். அங்கே சந்தேகக்
கைதிகள் என்று சுமார் 500 பேர்களை கொண்டு ஒரு குழுவில்
அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் 15 நாட்கள் காவலில்
வைக்கப்பட வேண்டியவர்கள், சுமார் 6 மாதம், 9 மாதம்
காலம் ஆகியும், அவர்கள் அங்கிருந்து விடுவிக்கப்படவில்லை.
அவர்கள் அங்கே இருப்பதைப்பற்றி அவர்களுடைய குடும்
பத்துக்கு எந்தவித தகவலும் கொடுக்கவில்லை. அதே
போல், சந்தேகக் கைதிகளை அரசாங்கம் 6 மாதம், 8 மாதம்
என்று அடைத்து வைத்திருந்தால் அவர்களால் ஏற்படக்
கூடிய செலவுகள் அதிகமாக அரசாங்கத்திற்கு வருகிறது.
இந்தச் செலவுகளை குறைப்பதற்கு அரசாங்கம் இந்த
சந்தேகக் கைதிகளை உடனடியாக வெளியே அனுப்புவதற்கு
ஏற்பாடு செய்யவேண்டும். சிறைத்துறையிலே வேலை பார்க்
கின்ற, நன்றாக வேலைகளைப் புரிந்தவர்களுக்கு, ஐ.ஜி. போன்ற
பதவிகளை அளிக்கவேண்டும். அப்போதுதான் சிறைகளை சீர
மைக்க வாய்ப்பு கிடைக்கும். சிறைக் குற்றவாளிகள் சிறையில்
தொழில் செய்வதற்கு தொழிற்சாலைகள் அமைத்து அதில்
கைதிகளை பயன்படுத்தவேண்டும். இதனால் உற்பத்திச்
செலவுகளும், குறையும், அவர்களுக்கும், குறைந்தபட்ச
ஊதியம் கிடைக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை,)

அடுத்து ஆயுள் தண்டனைக் கைதிகள் 14 ஆண்டுகள் ஆகியும்
விடுதலை செய்யப்படாமல் இருக்கிறார்கள். சுமார் 10
வருஷத்தில் அவர்களை விடுதலை செய்ய வழி செய்தால் அது
அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற வசதியாக இருக்கும்.
சிறை சூப்பிரண்டுகளின் சிபாரிசு, நல்ல ஒழுக்கம், நன்னடத்தை
உள்ளவர்களை கொஞ்சம் முன்னதாகவே வெளியே அனுப்பு
வோமானால், அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற
வேண்டிய பொறுப்பை அவர்கள் ஏற்று நடத்துவார்கள் என்
பதை அரசின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். அப்படிப்
பட்டவர்களை விடுதலை செய்ய ஆவன செய்யவேண்டும்.



1982 மார்ச் 20] [திரு. எஸ். என். இராமசாமி]

நெல்லை மாவட்டத்தில் ஒரு நிரந்தரமான திறந்தவெளிச்
சிறைச்சாலை அமைக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயம் போன்ற தொழில்களில் கைதிகள் ஈடுபடவும்,
அவர்கள் அதன் மூலம் ஊதியம் பெறவும் வழிவகைச் செய்ய
வேண்டும்.

பாளையங்கோட்டை மத்திய சிறை அதிகாரிகளுடைய
வீடுகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. பழுதடைந்து
மிகவும் மோசமான நிலையில் அந்த வீடுகள் உள்ளன.
உடனடியாக அந்த பழுதுகளை சரிசெய்து கொடுக்க வேண்டும்.

அங்கே பாளையங்கோட்டை மத்திய சிறையில் குடி
தண்ணீர் பற்றாக் குறையாக இருக்கிறது. அங்கே நல்லமுறை
யில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று
கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து
முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : துணைத் தலை
வரவர்களே, கூட்டுறவு மற்றும் சட்ட மானியக் கோரிக்கைகள்
மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்துக்
கொள்ளுகின்ற அதே நேரத்தில் இந்தத் துறையிலே தமிழக
அரசு செய்திருக்கிற சாதனைகளை நினைவுபடுத்துவதற்குக்
கூட கால அவகாசம் இல்லை என்ற காரணத்தால் எனக்கு
கொஞ்சம் காலத்தை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று
கேட்டு, இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்
கைகள்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு
கிறேன்.

இங்கே கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களில் கூட
நண்பர்கள் வழக்குகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அநேகமாக
எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இந்தக் கருத்தைத்
தான் வலியுறுத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த மாநிலத்
தில் எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வதற்கு முன்னாலே கூட
வழக்குகளை பைசல் செய்வதில் காலதாமதத்தை தவிர்த்து,
விரைவாக பைசல் செய்ய நடவடிக்கை எடுக்க இந்த அரசு
அக்கரை கொண்டிருக்கிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதிலே சிலவற்றை
இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு பல்வேறு மாநிலங்களிலே உள்ள நீதிமன்றங்
களில் எல்லாம் வழக்குகள் பைசல் செய்யப்படாமல் காலம்
கடந்த வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்ற செய்தியை
பத்திரிகைகள் வாயிலாகப் பார்க்கிறோம். அதை பத்திரிகை

கள் எடுத்துக்காட்டுகின்றன ; சுட்டிக்காட்டுகின்றன. அதே
நேரத்தில் தமிழ்நாட்டில் பைசல் ஆகாத கேஸ்கள் குறைவாக
இருக்கிறது என்ற சூழ்நிலையில் கூட அதை இன்னும் விரைவு
படுத்த வேண்டும் ; சாதாரண மனிதர் பெறுகின்ற நீதிக்கு
ஆகிற செலவு குறைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில்,
இந்தியத் துணைக்கண்டத்திலே வழக்குகளை விரைவாக
பைசல் செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
எந்த மாநிலமும் சுட்டிக்காட்டாத ஒரு சூழ்நிலையில் இன்
றைக்கு தமிழகத்தில் நம்முடைய சட்டத்துறை அமைச்சரவர்கள்
வழக்குகள் பைசல் ஆவதில் காலதாமதம் ஏற்படுவதற்கு
என்ன காரணம் என்பதைக் கண்டுபிடித்து அதைத் தீர்க்க நட
வடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது உள்ளபடியே நமக்
கெல்லாம் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

ஆரம்ப நீதிமன்றத்தில் வழக்கு முடிந்தாலும், மேல்
நீதிமன்றங்களுக்கு முறையீடு செய்வதில் பெருத்த கால
தாமதம் ஏற்படுகிறது. அதற்கு முக்கியமான காரணம்
நீதிபதி வழங்கிய அச்சடிக்கப்பட்ட தீர்ப்பின் நகல் கிடைப்
பதிலே மிகுந்த காலதாமதம் ஏற்படுவதுதான். அந்த தாம
தத்தைத் தவிர்க்க 1952-லேயிருந்து இன்றுவரையில் எல்லோ
ராலும் பேசப்பட்டு வந்தாலும் அதைத்தவிர்க்க என்ன
செய்ய வேண்டுமென்ற ஒரு தெளிவான சிந்தனை அடிப்பட
யிலே யாரும் சொல்லவில்லை. இன்றைக்கு நம்முடைய
அரசில் அதற்கான காரணத்தைக் கண்டறிந்து, அதைத்
தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். 'சிராக்ஸ்'
மூலம் நீதிபதி எழுதுகின்ற தீர்ப்பை அன்றைக்கே நகல் எடுத்து,
அப்படியே நகல் எடுத்து, வழக்கிலே சம்பந்தப்பட்டவர்களுக்கும்
வழக்கறிஞர்களுக்கும் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை ஏற்
படுத்தியிருக்கிறார்கள். இதனால் தீர்ப்பு அச்சடிக்கப்படுகின்ற
காலதாமதம் தவிர்க்கப்படுகிறது. இதனால் நீண்டகாலமாக
வழக்குகள் பைசல் ஆகாமல் இருக்கின்றது என்ற நிலை மாற்றப்
படுகிறது. இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த மாண்புமிகு
அமைச்சரவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்
துக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு நீதிபதிகளுக்கு இருந்த ஒரு பெரிய குறையையும்
தீர்ப்பதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள். நீதிமன்றத்திற்கு வருகின்ற
குற்றவாளி கூட காரிலே போகிற நிலைமை இருக்கிறது. வழக்கை நடத்து
கின்ற வழக்குரைஞர்கள் காரிலே போகிறார்கள். ஆனால் அந்த நீதிபதி,
வழக்கை நடத்துகின்ற நீதிபதி, வழக்கிலே தீர்ப்பு வழங்குகின்ற நீதிபதி
பஸ்ஸிலே போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய தமிழக அரசு
இந்தக் குறையைப் போக்குவதற்காக நீதிபதிகளுக்கு இந்த ஆண்டில் 30
அம்பாசிடர் கார்களை வழங்கி, அவர்களும் காரிலே செல்ல வழிவகை
செய்திருக்கிறது.





அதைப்போல நீதிபதிகளுக்கு இருக்கின்ற இன்னொரு கஷ்டத்தையும்
போக்க நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. வழக்குகள் சம்பந்த
மாக சாட்சி சொல்கிறார்கள். சாட்சி சொன்ன அன்றைக்கே வழக்கில் தீர்ப்பு
எழுத முடியாது. தீர்ப்பு எழுத 10, 15 நாட்கள் ஆகும். அதுவரையில் அந்த
சாட்சிகள் என்ன சொன்னார்கள், என்ன அடிப்படையில் சொன்னார்கள்,
எந்தக் கோணத்தில் சொன்னார்கள் என்பதை அந்த நீதிபதி கவனத்தில்
வைத்துக்கொள்ள முடியாது. ஆகவே, தீர்ப்பு எழுதும்போது அதை கவனப்
படுத்திக்கொள்ள வேண்டும் ; தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக்
சாட்சியங்களை பதிவு செய்ய 'டேப் ரிக்கார்டர்' வழங்கும் திட்டத்தைக்
கொண்டு வந்திருக்கிறார்கள். இது அந்த நீதிபதிகளுக்கு பேருதவியாக்
இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதிமன்றங்களிலே நீதிபதிகளாக வருகிறவர்கள் இன்றைக்கு
நீதிமன்றங்களிலே தொழில் நடத்தி அனுபவம் பெற்ற வழக்கறி
ஞர்களாக இருக்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித்தலை
வர் அவர்களும், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களும்;
தமிழக அரசும் எடுத்த முடிவை நான் பாராட்டுகிறேன்.
அதைப் போல வழக்குகள் விரைவாக பைசல் ஆக வேண்டுமென்ற
அந்த அடிப்படையில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத
அளவுக்கு கூடுதலாக நீதிமன்றங்களைத் திறந்து, நீதிபதிகளை
நியமித்து, அதிகமான அரசாங்க வழக்கறிஞர்களை நியமித்து
வழக்குகளை ஆரம்ப நிலையிலேயே பைசல் செய்கின்ற ஒரு
சூழ்நிலையை இந்த மாநிலத்தில் உருவாக்கிக் கொடுத்திருக்
கிறார்கள்.

அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு
வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். மாவட்ட முன்சீப்
நீதிமன்றத்தின் பண உச்சவரம்பை இன்றைக்கு 15,000 ரூபாய்
என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். பண உச்சவரம்பைக்
கூட்டியதன் தொடர்பாக சில சட்டப் பிரிவுகளைத் திருத்த
வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதன் மூலம் அரசின்
வருமானத்தையும் பெருக்க முடியும். தமிழ்நாடு கோர்ட்
சூட் வேலுவேஷன் ஆக்ட் செக்ஷன் 37 (சி)-யின் கீழ் டிஸ்டிரிக்ட்
முன்சீப் கோர்ட்டில் 30 ரூபாய் கோர்ட் பீஸ் என்று இருக்கிறது.
5,000 ரூபாய் இருந்த காலத்திலேயே 30 ரூபாய் கட்டி ஒரு
பாக சூட் போட முடியும். இன்றைய நிலையில் 15,000 ரூபாய்
என்று மாற்றியிருக்கும் சூழ்நிலையில், அதே 30 ரூபாய் கட்டி
பாக வியாஜயம் போடுகிற நிலை இருப்பதால், தொடர்புடைய
அந்த கோர்ட் பீஸ் ஆக்டின் 37 (சி) பிரிவையும் திருத்த வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்) [1982 மார்ச் 20

(பிற்பகல் 12.20)

அதே போன்று நீதித் துறையில் பல்வேறு அற்புதங்களை இந்த அரசு செய்து இருக்கிறது என்று சொல்லலாம். வேறு எந்த் மாநிலத்திலும் சிந்திக்கத் தவறிய அல்லது சிந்திக்கத் துவங்கும் முன்பே இங்கே சிலவற்றைச் செய்து இருக்கிறது என்று சொல்லலாம். வழக்குகள் எல்லாம் தேங்கி விடக் கூடாது, அவைகள் விரைவாகப் பைசல் செய்ய வேண்டும் என்று மற்ற, மாநில்ங்களில் நடவடிக்கை எடுக்க ஆரம்பிப்பதற்கு முன்னால் அதைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னால், அதைப் பற்றி எண்ணுவதற்கு முன்னால், இப்படி 'ஜெராக்ஸ்' மூலம் காப்பி எடுத்துக் கொடுப்பதன் மூலம், கால அவகாசம் குறைக்கலாம். விழக்குகளை விரைவுபடுத்தி நிறைவேற்றிவிட முடியும் என்று முடிவு எடுத்து இருக்கிறார்கள்.

இந்த மாநிலத்தில் ஒரு முக்கியமான நிலைமை பிரிட்டிஷ் காலத்தில் இருந்து, கிரிமினல் நீதிமன்றங்களில் இருக்கின்றன. 'பைன்டிங் ஓவர் ஆப் கிரிமினல் அக்ஸ்யூட்', பிணையத்திற்காக வழக்கு மன்றங்களில் விசாரணைக்கு வருகின்ற குற்றவாளிகளை தினம் தினம் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போகச் சொல்லி வரும் நிலைமை இருக்கிறது. அதை மாற்ற வேண்டும். அதற்காக எந்தச் சட்டத்தையும் திருத்த வேண்டிய அவசியம் இல்லை. பிரிட்டிஷ் காலத்தில் இருந்து ஒரு அரசாணை மூலம் குற்றவியல் நீதிமன்றங்களுக்கு வருகின்ற குற்றவாளிகளுக்கு வழக்கு முடிந்தாலும் கூட, அந்தப் பிணையத்திலே கையெழுத்துப் போட வேண்டும் என்ற அடிப்படையிலே, மாலை 5 மணி வரையில் ஒவ்வொரு குற்றவியல் நீதிமன்றங்களிலும் 50 பேர்கள் 100 பேர்கள் காத்துக் கிடக்கும் நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு ஜாமீன் கொடுப்பதற்காக, அவர்களை விடுவிப்பதற்காக பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு, ஆரம்ப காலத்திலேயே பிணையம் கொடுக்கப்படுகிற காரணத்தால், குற்ற வழக்கு விசாரணையின்போது ஒவ்வொரு நாளும் அவர்களிடத்தில் இருந்து கையெழுத்து வாங்கும் நிலைமை நாம் மாற்றினால், தமிழகத்தில் குற்றவியல் நீதிமன்றங்களில் தினம் தினம் நிற்கும் 100 பேர் இந்த அரசைப் பாராட்டுவார்கள், வாழ்த்துவார்கள். பல்வேறு தவறுகள் அதிலே நடைபெறுகிறது என்று சொல்வது நடக்காமல் இருக்கும். இதனால் அந்தக் கோர்ட்டுகளுக்கு வரும் ஏழை எளியவர்கள் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையில் அந்தக் கோர்ட்டுகளின் முன்பு காத்து நிற்கத் தேவையில்லை. அந்த வகையில் அரசு உத்தரவிட வேண்டும் என்று இந்த நேரத்தில் தில் கேட்டுக்கொள்கிறேன்.

குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கிக் கிடக்காமல் விரைவு படுத்த வேண்டும் என்கிற வகையில் சிவில் நீதிமன்றங்களில், உள்ளது போல், குற்றவியல் நீதிமன்றங்களிலும்,



[திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்]
1932 மார்ச் 2 [
'பிராசஸ் பண்ணி டிபார்ட்மென்ட்' உருவாக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். சம்மன் சர்வ் செய்வது காவல்
துறையைச் சேர்ந்தது, காவல் துறை போகாவிட்டால், அரசுத்
தரப்பு சாட்சிகள் மாறிவிடக் கூடும் என்ற எண்ணம் இருக்கு
மானால், காவல் துறையில் வயதானவர்களாக இருக்கும் அல்லது
காவல் துறையைச் சார்ந்த பணிகளைச் செய்வதற்கு
இயலாத நிலையில் இருக்கும் காவலர்களை வைத்து அந்த
'பிராசஸ் சர்விங் டிபார்ட்மென்ட்' ஏற்படுத்த வேண்டும் என்று
சொல்லிக்கொள்கிறேன்.

தமிழில் தீர்ப்பு எழுத வேண்டும் என்ற சிறப்புமிகு முடிவை
மாநில அரசு அமல் படுத்த முன்வந்திருப்பதை நான் வரவேற்
கிறேன். இந்த நேரத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்
களிடத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வது எல்லாம்,
இந்த முடிவை மிக விரைவாக அமல் நடத்த வேண்டும் என்ப
தாகும். முன்பு ஆங்கிலத்தில் தீர்ப்பு எழுத வேண்டும் என்று
விதி இருந்தபோது, பரமக்குடி டிஸ்டிரிக்ட் முன்சீப் அவர்கள்
தமிழில் தீர்ப்பு எழுதி விட்டார் என்ற காரணத்தினால் அந்தத்
தீர்ப்பே செல்லாது என்று சொல்லிய கடுமையான நீதிபதிகள்
கூட இந்த மாநிலத்தில் இருந்து இருக்கிறார்கள். ஆனால்
இப்போது தமிழில் தான் தீர்ப்பு எழுத வேண்டும் என்று விதி
போட்ட பிறகு, எனக்குத் தெரிந்த தகவலின் அடிப்படையில்
சொல்கிறேன், பாதிக்கு மேற்பட்ட நீதிபதிகள் இந்த நடை
முறையில் இருந்து விதிவிலக்கு வேண்டும் என்று கேட்டு இருக்
கிறார்கள் என்பதாகும்.

நான் இந்த நேரத்தில் சட்ட அமைச்சர் அவர்களுக்குஒன்றைச்
சொல்ல விரும்புகிறேன். இந்த மாநிலத்திலே உள்ள கோர்ட்டு
களிலே ஆட்சி மொழி எது என்பதை முடிவு செய்வது இந்த
மன்றம், இந்த அரசு. அதை அமல் படுத்துகிற முழுப் பொறுப்பும்
மாநில அரசுக்குத்தான் இருக்கிறது. ஆகவே, அப்படி விதி
விலக்கு கேட்டுள்ள நீதிபதிகளுக்கு விதிவிலக்குக் கொடுக்கவேண்
டும் என்று சொன்னால், அந்த அதிகாரத்தை ஒரு நீதிபதியின்
கையிலோ அல்லது அந்தக் துறையின் கையிலோ கொடுக்கக்
கூடாது. அந்த அதிகாரத்தை இந்த அரசே தான் வைத்துக்
கொள்ள வேண்டும். அப்படி விதி விலக்குக் கொடுத்தால் கூட,
ஓராண்டு காலத்திற்கு மேல் அந்த விதிவிலக்கை எக்காரணத்தைக்
கொண்டும் நீட்டித்துக் கொடுக்கக் கூடாது என்கிற கண்டிப்பான
ஒரு முடிவை அரசாங்கம் எடுக்க வேண்டும். அப்படி ஓராண்டு
காலத்திற்கு மேல் தமிழில் தீர்ப்பு எழுத எந்த நீதிபதிக்காவது
முடியவில்லை என்று சொன்னால், அந்த நீதிபதியை வேறு
மாநிலத்திற்கு மாற்றிவிடலாம் அல்லது அவரை வேறு துறைக்கு
அனுப்பலாம் என்ற் ஒரு முடிவை அரசு எடுக்க வேண்டும்.

1979 ஆம் ஆண்டில் இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று
பெயர் சூட்டிய நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களை
சொன்னார்கள்—நான் இன்
நிருபர்கள் வந்து சந்திக்கிறபோது

[திரு. வேடசந்தூர் வி.பி. பாலகப்பிமணியன்] [1982 மார்ச் 20

றைக்குத்தான் வாழ்நாளில் பிறந்த பயனை அனுபவித்தேன்என்று.
பேரறிஞர் அண்ணா அவர்களைப் பின்பற்றித்தான் மைசூர்
மாநிலத்திற்கு கருநாடக மாநிலம் என்று 1974 ஆம் ஆண்டிலே
பெயர் மாற்றம் செய்தார்கள்.

ஆனால், நம் மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்
பட்ட பிறகும், சென்னை உயர்நீதி மன்றம் என்று தான் பெயர்
இருக்கிறது. அதை தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்று மாற்ற
வேண்டும் என்ற வேண்டுகோளை இங்கே நான் வைக்க விரும்பு
கிறேன்.

தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என்றுபெயர் மாற்றம்செய்வதற்கு
சில மறுப்பு சொல்லக் கூடும். யூனியன் டெர்ரிடெரி பாண்டிச்
சேரி சேர்க்கப்பட்டு இருப்பதால் அப்படிச் செய்ய முடியாது
என்று சொல்லலாம். லட்சத் தீவு சேர்ந்திருக்கிற கேரள
மாநிலத்தில், கேரள நீதிமன்றம் என்று தான் பெயர்வைக்கப்பட்டு
இருக்கிறது. இது சார்ட்டர்ட் ஹைக்கோர்ட், லெட்டர்
பேடென்ட் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது, ஆகவே அப்படி
திருத்த முடியாது என்று சொன்னால், அரசியல் அமைப்புச்
சட்டம் 275-வதுபிரிவில், லெட்டர் பேடென்ட்ஹைக்கோர்ட்டின்
அதிகார வரம்பைக் குறைக்கக் கூடாது, அதிகாரப் பகுதிகளைக்
குறைக்கக் கூடாது என்று தான் சொல்லியிருக்கிறதே தவிர,
அந்த மாநிலத்தின் பெயரை அந்த நீதிமன்றத்திற்குச் சூட்டக்
கூடாது என்று சொல்லவில்லை. ஆகவே, அந்தப் பெயரை
மாற்றுவதற்கு எந்தவிதமான தடங்கலும் இல்லை. பல்வேறு
யூனியன் டெர்ரிடெரிகள் சேர்ந்து இருக்கின்ற பகுதிகளிலே
அந்தந்த மாநிலங்களின் பெயர்களில் தான் உயர்நீதி மன்றங்கள்
இருக்கின்றன.

ஆகவே நான் மாண்புமிகு சட்ட அமைச்சருடைய கனிவான
பரிசீலனைக்கு வைக்க விரும்புவது, சென்னை உயர்நீதி மன்றத்
தினை தமிழ்நாடு உயர்நீதி மன்றம் என்று பெயர் மாற்ற வேண்
டும் என்ற கருத்தினை கூறி, அதைக் கோரிக்கையாக வைக்கி
றேன்.

அதைப்போலவே பல்வேறு கால கட்டங்களிலே போடப்
பட்டிருக்கின்ற இரண்டு வேறு சட்டங்கள் தற்போது அமுலில்
இருந்துகொண்டிருக்கின்றன.

Presidency Insolvency Act,
Provincial Insolvency Act,
City Civil Courts Act, 1892,
Civil Courts Act, 1873,
Madras City Police Act, 1888;
District Police Act, 1859,



1982 மார்ச் 20] [திரு. வேடசந்தூர் வி.பி. பாலகப்பிரமணியன்]

என்று இருக்கின்றன இவைகளையெல்லாம் முறைப்படுத்துவதற்
கான வகையிலே, மாநில அரசு செயல்படுத்துகின்ற சட்டங்களை
ஒரே யூனிட் ஆக்ட்டாக ஒரே வகையான சட்டம் மட்டும்
இருக்கும்படி வகை செய்ய வேண்டும்.

அதேபோல மாநிலங்களிலே அமுல்படுத்தப்படுகிற மைய
அரசினுடைய சட்டங்களைப்பலப்படுத்துவதற்கும், நீதிபதிகளின்
சார்பாக ஆலோசனைகளைச் சொல்வதற்கும், நீதித்துறையிலே
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரும்புவது போன்ற மறுமலர்ச்
சியைக் கொண்டு வர, நீதித்துறையிலே என்னென்ன காரியங்
களைச் செய்ய வேண்டுமோ, அதை அரசுக்கு ஆலோசனை என்ற
வகையில் நீதிபதிகள் எடுத்துச் சொல்ல வாய்ப்பளிக்கும் வகை
யில் மாநில அளவிலே மாநில சட்டக் கமிஷன் ஒன்றை
ஏற்படுத்த மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும், மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களும் யோசிக்க வேண்டும் என்ற கருத்
தினை முன் வைத்து, கூட்டுறவுத்துறையிலே..............
(மணியடிக்கப் பெற்றது).

திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு சட்டப்பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1982-83 ஆம் ஆண்டிற்கென
மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டி
ருக்கின்ற நீதி நிர்வாகம், சிறைச்சாலைத் துறை, கூட்டுறவுத்
துறை ஆகியவைகளுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது
என்னைப் பேச அனுமதித்தற்காக முதற்கண் துணைத் தலைவர்
அவர்களுக்கு நன்றி கூறி, அந்த மானியங்களை வரவேற்று
ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்
கிறேன்.

முதற்கண் திருச்சி மாவட்டத்திலே மணப்பாறையிலே முதன்
முதலாக ஒரு மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தை ஏற்படுத்தியமைக்
காக, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், சட்டத்
துறை அமைச்சர் அவர்களுக்கும், மணப்பாறை தாலுக்கா
பொது மக்களின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியைத் தெரி
வித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக அவர்களிடத்திலே ஒரு
கோரிக்கையை வைக்க ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக மணப்பாறை பகுதி மக்கள் சப்-கோர்ட்டுக்கு
கரூருக்குப் போக வேண்டுமானால் ஏறத்தாழ 140 கிலோ மீட்டர்
தூரம் வரை செல்ல வேண்டிய தேவை இருக்கிறது. ஆகவே,
அவர்களுடைய கஷ்டத்தை நீக்குகின்ற வகையில் 60 கிலோ
மீட்டர் தொலைவில் உள்ள திருச்சியில் உள்ள சப்-கோர்ட் நீதி
மன்றங்களுடன் மணப்பாறை பகுதியை இணைத்துத் தருமாறு
அல்லது மாற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குறிப்பாக இன்று கோர்ட்டுகளிலே எக்சிகியூட்டிவ் மேஜிஸ்ட்டிரேட் என்ற அளவில் உள்ளவர்கள் சிலர் வழக்குகளை விசாரித்து தீர்ப்பும் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு போதிய அனுபவம் அவகாசம் இல்லாத காரணத்தால், அதிலே பல தவறுகள் கூட ஏற்படுவதற்கு ஏதுவாகின்றது. ஆகவே அந்த முறைகளை மாற்றி அந்த வழக்குகளை நீதி நிர்வாகத்தின் கீழுள்ள மேஜிஸ்ட்டிரேட்டுகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சி. ஆர். பி. சி. 107, 109, 110 போன்ற பிரிவுகளை ரெவின்யூ டிவிஷனல் ஆபிசரே விசாரித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே நிர்வாக சீர்திருத்த மாற்றம் கருதி, நிர்வாகத்தின் திறமை கருதி அவைகளை ஜூடிஷீயல் மேஜஸ்ட்டிரேட்டுகளிடம் ஒப்படைக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருச்சியிலே கோர்ட்டினுடைய காம்பவுண்டிற்குள்ளே கிட்டத்தட்ட 16 ஏக்கர் நிலம் இருக்கிறது. அப்படி நிலம் இருக்கையிலேயே, அந்த ஜூடிஷீயல் நீதிபதிகளுக்கு 4, 5 கிலோ மீட்டர் தூரத்தில் குவார்ட்டர்ஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதனால் நீதிபதிகள் பஸ்களிலே கும்பலிலே இடிபட்டு நெரிசலில் மிதிபட்டு கோர்ட்டுக்கு வரவேண்டிய சூழ்நிலையிருக்கின்றது. இந்த நிலையை மாற்றி அந்தக் கோர்ட் காம்பவுண்டிற்குள்ளேயே அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கோர்ட்டிலே இருக்கக்கூடிய குமாஸ்தாக்கள் விஷயமாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். கோர்ட்டிலே அந்தந்த நீதிபதிகளின் கீழே அந்த குமாஸ்தாக்கள் அமர்ந்து கொள்ள வேண்டும் என்று விதிமுறை இருக்கிறது. அப்படி அவர்கள் அமர்ந்து கொள்ளும்போது கருப்புக் கோட்டு போட்டுக் கொள்ள வேண்டும். ஆனால் அந்தக் கருப்புக் கோட்டு அணியத் தக்க வகையில் அவர்களுக்கு எந்தவிதமான உதவித் தொகையும் வழங்கப்படுவதில்லை. ஆகவே, அந்த ஏழை குமாஸ்தாக்களுக்கு, ஏதாவது ஒரு தொகையை கருப்புக் கோட்டு வழங்குவதற்காக அளிக்க வேண்டும் என்று கேட்டு, கடைசியாக திருச்சியிலே இருக்கின்ற பப்ளிக் பிராசிக்கியூட்டருக்கு போன் வசதிகள் இல்லை. ரூம் வசதிகள் இல்லை. அந்தக் குறைகளை அவர்களுக்கு நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

(பிற்பகல் 12-30)

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கூட்டுறவுச் சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற



நீதி நிர்வாகம், சிறைச்சாலை நிர்வாகம், கூட்டுறவு என்ற தலைப்புக்களின் கீழ் உள்ள மானியக் கோரிக்கையிலே நான் அகில இந்திய பார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பிலே கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

நீதி நிர்வாகம் என்ற தலைப்பில் சொல்லுகின்றபோது தென் மாநிலங்களுக்காக உச்ச நீதிமன்றம் ஒன்று சென்னையிலே அமைப்பதற்காக மத்திய அரசின் ஒப்புதலை கேட்டிருக்கின்றது என்று சொல்லி இருக்கிறார்கள். இதற்கு பாராளுமன்றம் அனுமதி கொடுக்கவேண்டும் என்றாலும் கூட அதைப்பற்றி வலியுறுத்தி பெறுவதற்கு இந்த மாநில அரசு முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீண்ட நெடுங்காலமாக இந்த உயர்நீதி மன்றத்தினுடைய பிரிவு ஒன்றை மதுரையிலே ஏற்படுத்த வேண்டும் என்பதற்கு இந்த அரசு ஒப்புதல் அளித்தும் கூட இன்னும் அதிலே காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே அதுபற்றி இந்த அரசு துரிதப்படுத்தி மக்களுக்கு, சென்னை உயர்நீதி மன்றத்திற்கு வருகின்ற அந்த சிரமங்களைப் போக்குகின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இப்போது எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. குப்புசாமி அவர்களும், திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களும் இங்கே தெளிவாகச் சொன்னார்கள். தமிழை கோர்ட் மொழியாக கொண்டுவருவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டும் அது நிறைவேற்றப்படவில்லை என்றும் அதற்கு இன்னும் சில ஆண்டுக்காலம் வேண்டும் என்றும் கேட்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆகவே, தமிழ் ஆட்சி மொழியாக வரவேண்டும் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. இதற்கு முன்பு கூட ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து நான் பேசியபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள் ? அப்போது நான் கூட கேட்டேன். திரு. கே. பி. சிங் அவர்களை இங்குள்ள உயர்நீதிமன்றத்திற்கு போடுவதன் காரணத்தால் தமிழைக் கோர்ட் மொழியாக ஆக்குவது என்பது எந்த அளவுக்கு சாத்தியம் என்பது குறித்து தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டு இருக்கிறேன்.

கோர்ட்டுகளிலே தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டுவர வேண்டும் என்பதிலே இந்த மன்றம் அக்கறை கொண்டிருந்தாலும் தமிழ் தெரியாத ஒருவரை உயர்நீதி மன்றத்திலே நீதிபதியாகப் போடுவதன் காரணத்தால் கீழ் கோர்ட்டுகளிலே அளிக்கப்பட்ட தீர்ப்புக்கள் அனைத்தையும் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து அனுப்பவேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்படும் அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்லி இந்த அரசு ஏற்றுக்

கொண்டாலும் கூட தமிழிலே எழுதிய தீர்ப்பினை ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கின்றபோது அது எந்த அளவுக்கு இருக்கும்? மேலும் அதை வைத்து உயர்நீதி மன்றத்திலே தீர்ப்பு எழுத வேண்டிய கட்டாயமான சூழ்நிலை ஏற்படுமே. ஆகவே அதற்கு இந்த அரசு என்ன கொள்கையினை வைத்திருக்கின்றது? உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளை மாற்றுவது குறித்து உச்சநீதிமன்றத்திலே தீர்ப்புச் சொல்லுகின்றபோது மூன்று நீதிபதிகள் மாற்றுதல் கூடாது என்றும், நான்கு நீதிபதிகள் மாற்றலாம் என்று எழுதிருந்தாலும் அந்த நான்கு நீதிபதிகளிலே ஒருவர் அந்த மாநில மொழி தெரிந்தவரைத்தான் அந்த மாநிலத்திலே போடவேண்டும் என்று எழுதி இருக்கிறார். ஆகவே, இந்த அரசு தன்னுடைய கொள்கையை எந்த அளவுக்குச் சொல்லவேண்டிய நிலைமை இருக்கின்றது என்பதை நாம் யோசிக்கவேண்டும். ஆகவே தமிழ் ஆட்சிமொழியாக நீதிமன்றங்களிலே வருவதற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

அடுத்து உயர்நீதிமன்றத்திலே வழக்குகள் தேங்கி இருக்கின்றன என்பதை இந்த அரசும் நாட்டு மக்களும் உணருகிறோம். உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளைப் பொறுத்தவரையிலே 25 நீதிபதிகளில் 20 பேர்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மீதி 5 நீதிபதிகளை நியமிப்பதிலே இந்த அரசுக்கு என்ன தயக்கம் என்பது புரியவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றித் தெளிவாக்கவேண்டும். இதற்கு மத்திய அரசின் தலையீடா அல்லது மாநில அரசு தயக்கம் காட்டுகிறதா என்பதை விளக்கவேண்டும். அல்லது தகுதியான வழக்கறிஞர்கள் கிடைக்கவில்லையா? அதுபற்றி அமைச்சரவர்கள் விளக்க வேண்டும்.

அடுத்து உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு 4,000 ரூபாய் சம்பளம் என்பது கான்ஸ்ட்டிட்யூஷன் பேமெண்ட் என்று சொல்லுகிறார்கள். அதே போன்று துணை நீதிபதிகளுக்கு 3,500 ரூபாய் கான்ஸ்ட்டிட்யூஷன் பேமெண்ட் என்று இருந்தாலும் கூட மற்ற வசதிகளைப் பொறுத்தவரையிலே இந்த அரசு எந்த அளவுக்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்டிபென்டன்சி ஆஃப் தி ஜுடிஷியரி காக்கப்பட வேண்டும் என்றால், அவர்கள் நல்ல மனநிறைவோடு நீதிகளை இந்தநாட்டு மக்களுக்கு வழங்க வேண்டும் என்றால் தீர்ப்புக்களை வழங்குகின்ற நேரத்திலே அவர்களுக்கு மனக்குறைவு இருக்கக்கூடாது. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் கீழ்மட்டத்திலே உள்ள நீதிபதிகளின் சம்பளக் குறைவு காரணத்தால் நீதித்துறையிலே சரியான நீதி கிடைக்காமல் போகின்ற நிலைமை ஏற்படுகின்றது என்று சொன்னார்கள். ஆகவே குற்றவாளிகள் எல்லாம் காரிலே வருகின்றபோது கீழே இருக்கின்ற நீதிபதிகள் பஸ்ஸிலேயும்





இன்னும் இது போன்ற நிலைமையிலேயும் வருவது என்பது அவர்களுடைய தரத்திற்கு ஏற்றதாக இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல சலுகைகளை இந்த அரசு அறிவித்திருக்கிறது. துணை நீதிபதிகளுக்கு வேண்டுமானால் ரூ. 1,200 என்று அவர்களுக்கு ஊதியம் நிர்ணயித்தாலும் மற்ற மாவட்டத்தில் உள்ள நீதிபதிகளுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு என்று தனியாக பல வசதிகள் செய்து தரப்படவேண்டும். உயர்நீதிமன்ற நீதிபதிகள் மூன்று நான்கு பேர்கள் சேர்ந்து ஒரே காரில் வருகிறார்கள். என்ற அவல நிலையைப் போக்கி அவர்கள் நல்ல நீதிபதிகளாக இருப்பதற்கு நம் அரசு தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

நீதிமன்றங்கள் பொறுத்து இன்டிபென்டன்ஸ் அப் தி ஜுடிஷியரி என்பது ஒரு புறமிருக்க அவர்கள் செயல்படும் விதத்தில் குறை கூறமுடியுமா, குறை சொல்லமுடியுமா என்பதுபற்றி ஒரு பிரச்னை எழுந்தது. நாம் சட்டங்கள் இயற்றுகிறோம். அப்படி இயற்றப்படுகிற சட்டங்கள் .. .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று காலை திரு. தீர்த்தராமன் அவர்கள் பேசும்போது * சப்-ஜட்ஜ் * ஒருவர் பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்

இதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கிட வேண்டுமென்று ஆணையிடுகிறேன் (குறுக்கீடுகள்).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

(பிற்பகல் 12-40)

* * * * *

* * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இட் ஈஸ் நாட் ஆன் ரெக்கார்ட். இந்த அவையில் இல்லாத ஒருவரைப் பற்றி குற்றச்சாட்டு சொல்வது என்பது அனுமதிக்கப்பெறுவதில்லை. மேலும் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களை இங்கே சொல்வதாக இருந்தால், முதலில் என்னிடம் காட்டி, அனுமதி பெறவேண்டும். திடீரென்று குற்றச்சாட்டு சொல்லக்கூடாது.

எனவே இதுபற்றி நடைபெற்ற விவாதங்கள் அனைத்தையும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**திரு. எஸ். ஆண்டித் தேவர்** : மன்றத் தலைவர் அவர்களே, ஒரு குற்றவாளி 90 நாட்கள் இருந்து, போலீசாரால் சார்ஜ் ட் அதற்குள் போடப்படவில்லை என்று சொன்னால், அது பிணையில் விடக்கூடாத குற்றமாக இருந்தாலும், விட வேண்டு மென்ற முறையைக்கூட நடைமுறைப்படுத்தவில்லை. சிவில் புரசீஜர் கோடுகள் சரியாக நடைமுறைப்படுத்தவில்லை யென்பது தான் பொதுவான விவாதம். ஏன் இதைச் சொல் கிறேன் என்றால், ஸ்டே கொடுப்பது என்பது ஸ்டிரிக்ட்லி டிஸ்கிரிஷனரி பவர். அவருக்கு இருக்கின்ற அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தியதைக்கூட, இப்போது ரூல் ஆக்கி விட்டார்கள். அந்த ரூல் என்ன சொல்கிறது என்றால், நீதிமன்றத்திலே ஸ்டே நோட்டீஸ் கொடுத்து, அடுத்த தரப்பினருக்கு ஒரு ஆப்பர்சூனிடி கொடுத்து, அதற்கடுத்து அந்த தீர்ப்பிலே அந்த ஸ்டேவுக்கான காரணம் கொடுக்கவேண்டும். எக்ஸ்டிராஆர்டினரி சர்கம்ஸ்டான் சசில், டிஸ்கிரிஷனரி பவரைப் பயன்படுத்த வேண்டும். ஆனால், இப்போது நீதிமன்றங்களிலே அதிகமாக, எதற்கெடுத்தாலும் ஸ்டே கொடுப்பதன் மூலம், பிரைமா பேசி இருக்கிறதா, இல்லையா என்பதைக்கூட பார்க்காமல் ஸ்டே கொடுக்கப்படு கிறது. ஏழை எளிய மக்கள் நீண்ட நாட்களாக அவதிப்படுகிறார் கள். நீதிமன்றத்தை அரசும் கேட்கமுடியாது. இந்த மன்றமும் கேட்கமுடியாது. என்ற காரணத்தினால் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் ஸ்டே கொடுத்துவிட்டுப் போட்டு விடுகிறார் கள். அதற்கு குறிப்பிட்ட கால வரையறை இல்லை, அதைப் பார்ப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இல்லையென்று சொன்னாலும் உயர்நீதி மன்றத்திலே கேஸ்கள் தேங்கி இருக்கின்ற புள்ளி விவரங்கள் பற்றி இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ரிட் பெட்டிஷன் 1980 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டவை 7,125 என்றும், நிலுவையில் உள்ளவை 8,897 என்றும் இவ்வாண்டில் தொடரப் பட்ட வழக்குகள் 11,782 என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஆண்டுதோறும் 3 ஆயிரம் 4 ஆயிரம் வழக்குகள் தேங்கியே நிற்கிறது. இன்டிபென்டன்ஸ் ஆப் ஜூடிஷியரியைக் காப்பாற்ற வேண்டியதுதான். ஆனால். ஆயிரக்கணக்கான வழக்குகள் 5ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று தேங்குவதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய ஒரு குழு அமைக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்நீதி மன்றத்திலே உள்ளவர்களுக்கும் கீழ்க்கோர்ட்டிலே வழக்குகள் ஏன் தேங்கிக் கிடக்கின்றன என்று பார்ப்பதற்கு அதிகாரம் இருந்தாலும் அவர்கள் போய் பார்ப்பது இல்லை, ஏன் என்று புரியவில்லை. அதனால் நாட்டு மக்கள் படுகிற அவதிகளை இந்த மன்றத்திலே நான் சொல்லாமல் இருக்க முடியாது.

நீதிபதிகள் அறையிலே உட்கார்ந்து ஸ்டே கொடுத்துவிடு கிறார்கள். சிலர் பாதி நேரத்திலே நீதிமன்றத்திலே இருந்து இறங்கி அமர்ந்துகொண்டு வழக்குகளை எடுப்பது இல்லை.





நியாயமான குறைகளை மேலே இருக்கின்ற நீதிபதிகள் கீழே
இருப்பவர்களைக் கேட்பதில்லை. அதனால் நாட்டு மக்களுக்கு
நீதிமன்றத்திற்கு அலைந்துகொண்டிருக்கின்ற சாதாரண மக்க
ளுக்கு நியாயம் கிடைக்கவில்லை, ஆகவே அதைக் கவனித்து
ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டிஸ்ட்ரிக்ட் முன்சீப் அப்பாய்ன்ட்மெண்ட் 1965 ஆம் ஆண்டி
லிருந்து அரசால் நியமிக்கப்படவில்லை, குற்றவியல் பிரிவு நீதி
பதிகளும் அரசால் நியமிக்கப்படவில்லை, தேர்ந்தெடுக்கப்பட
வில்லை. பலமுறை அமைச்சர் அவர்களே அதைப்பற்றி இந்த
அவையிலே சொல்லிருக்கிறார்கள். 1969 ஆம் ஆண்டிலிருந்து
அவர்களை உயர்நீதிமன்றமே எடுத்திருக்கிறது. வனத் துறை
யிலே பணியாற்றியவர்களையும் தபால் மூலம் படித்தவர்களை
யும் பாம்பே போன்ற மற்ற பகுதிகளில் உள்ள கல்லூரிகளின்
பட்டத்தைப் பெற்றவர்களையும் கிளார்க்குகளாக இருந்தவர்
களையும் நீதிபதிகளாகப் போடப்பட்ட நிலைமை இருந்தது.
வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து அனுபவம் பெற்றவர்கள் தேர்ந்
தெடுக்கப்பட்டு முன்சீப் ஆகவும் மாஜிஸ்டிரேட் ஆகவும் மாவட்ட
நீதிபதியாகவும் நியமிக்கவேண்டும். சர்வீஸில் உள்ளவர்களுக்கு
இத்தனை சதவீதம் என்று கொடுத்துவிட்டு நேரடியாக இத்தனை
சதவீதம் என்று இருக்கின்ற அந்த அளவுக்கு அனுபவம் மிக்க
வழக்கறிஞர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். ஆகவே அந்த முறையிலே இன்டிபென்
டன்ஸ் ஆப் ஜூடிஷியரி என்ற முறையிலே நீதி வழுவாமல்
இருப்பதற்கு சட்டத்துறையிலே நல்லஅனுபவம் உள்ளவர்களைத்
தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட முன்சீப் நீதிமன்றம் துணை நீதிமன்றம் இந்த ஆண்டு 24 அதிகமாக ஆக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக் கிறது. நீதி ஆங்காங்கு பரவலாக்கப் பட்டு நீதி மக்களுக்கு விரைவிலே கிடைக்கவேண்டுமென்பதற்கு ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையை இரண்டாகப் பிரித்து திண்டுக்கல்லிலே ஒரு நீதி மன்றத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற் கிறேன். ஆனால் அந்த மாவட்டத்திற்குரிய எல்லை தவறாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. சோழவந்தான் மதுரையிலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது. அது திண்டுக்கல்லில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதனால் அங்கே இருக்கின்றவர்கள் 60 கிலோமீட்டர் தூரம்போக வேண்டும். ஆண்டிப்பட்டியிலிருந்து மதுரைக்கு வரவேண்டுமென்றால் 35 கிலோ மீட்டர் வரவேண்டும். ஆனால் திண்டுக்கல் போவதற்கு 3 பஸ்கள் மாறி 60 கிலோமீட்டர் போக வேண்டும்.

Y811,31 N82
N83-B351

தேனியிலே இருக்கிறவர்கள் சிரமப்படுகிறார்கள். எல்லை தவறாக
பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த எல்லையை மக்களுடைய நலன்
கருதி மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிஷம் அனுமதி
யளிக்கவேண்டும். சிறைச்சாலை பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.
அங்கே கழிப்பிடம் இல்லை. மூட்டைப்பூச்சி பெருமளவில் இருக்
கிறது. உணவு விநியோகம் மிகவும் மோசமாக இருக்கிறது, திருட்டு
இருக்கிறது, முறையாக கைதிகளுக்கு வழங்கப்படுவதில்லை.
இவற்றையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து கடும் நட
வடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

இன்றைக்கு கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், இந்த
மாமன்றத்தில் ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
குறுகிய கால கடன், நீண்ட கால கடன் என்றெல்லாம் சொல்லப்
பட்டிருக்கிறதே தவிர, கூட்டுறவு ஸ்தாபனங்களில், அங்கேயிரு
கிற வங்கிகளில் பணம் வாங்குவதற்கு மிகவும் அவதிப்படுகிறார்
கள். முறையாக கொடுக்கப்படுவதில்லை, கேட்கப்படுகிற
சான்றிதழ்கள் மிகவும் அதிகமாக இருக்கிறது. பட்டா பாஸ்
புஸ்தகத்தை வைத்து சிறு விவசாயிகளுக்கு உதவி கிடைக்கிற
வழிவகைகளை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
(மணியடிக்கப்பெற்றது).

**திரு. ஆர். தியர்கரர்சன்:** மாண்புமிகு பேரவைத்தலைவர்
அவர்களே, நீதித்துறையின் மானியத்தின் மீது இந்திய தேசிய
காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று உலக நாடுகளிலும் கூட பார்க்கப் போனால் எல்லா
வகைகளிலும் நாடு முன்னேற வேண்டுமென்றால் கூட்டுறவுச்
சங்கங்களின் மூலமாகத்தான் அத்தகைய பொதுப்பணிகளை செய்ய
முடிகிறது. முன்பு கூட்டுறவு நாணயச்சங்கம் என்று இருந்து, அது
காலத்தால் மாற்றப்பட்டு இன்று நாணயம் போய் நாணயம்
குறைந்த சங்கமாக காணப்படுகிறது. இதற்கு காரணம் என்ன
வென்றால், கூட்டுறவு சங்கங்களிலே விவசாயிகளுக்கும் மற்றவர்
களுக்கும் கடன் கொடுக்கும் போது சிக்கல்கள் இருக்கின்றன.
இதன் காரணமாக அதிக வலுவுடையவர்கள், நீங்கள் சொன்னது
மாதிரி வசதி படைத்தவர்கள் முன் நின்று ஏழை விவசாயிகளுக்கு
சேரவேண்டிய பணத்தை அவர்கள் பெயரிலே பெற்றுக்கொள்கிற
நிலைமைகள் இந்த சங்கங்களிலே நடந்து கொண்டிருக்கின்றன.
நாணய சங்கங்களிலே தேர்தல் நடக்கவில்லை. தேர்தலிலே
தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லை. பஞ்சாயத்து





லைவர்கள் இல்லை. அரசுக்கு ஏதாவது தகவல் கொடுக்கவேண்டு
மென்றால் அரசு தொடர்பாக நிர்வாகப் பொறுப்பிலே இருக்கிற
கிராம உத்யோகஸ்தர்கள் இல்லை. கிராம சங்கங்கள் 4,500
சங்கங்கள் இருக்கிறதாக சொல்லப்படுகிறது. ஆனால் எத்தனை
இயங்குகிறது என்ற கணக்கு இல்லை. கிராமப் பகுதிகளில் 4, 5
ஊர்களுக்கு சேர்த்து ஒரு சங்கமாக அமைத்தார்கள். பாதி சங்கங்
களுக்கு மேல் இயங்கவில்லை. கிராமங்களிலே சில இடங்களிலே
நியாய விலை கடைகள் துவங்க இருப்பதாலே, கோவாப்பரேட்டிவ்
சொசைட்டி கடைகள் மூடப்பட்டு இருக்கின்றன. கூட்டுறவுத்
கடைகள் இருக்கின்ற இடத்திலே, நியாய விலைக்
கடைகளைக் கொடுக்க மறுக்கிறார்கள். நியாய விலைக் கடைகள்
இருக்கிற இடத்திலே கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கக்கூடாது
என்று சொல்கிறார்கள். ஒருசில இடங்களிலே இரண்டுமே சரியாக
இயங்கவில்லை. ஒருசில இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள்
நன்றாக இயங்குகின்றன. ஒரு சில இடங்களில் நியாய விலை
கடைகள் நன்றாக இயங்குகின்றன. அது நல்லதா, இது நல்லதா
என்று தேர்ந்தெடுக்கிற சந்தர்ப்பம் கிராம மக்களுக்கு இல்லாத
தற்குக் காரணம், தேர்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் அங்கே
இல்லையென்பதுதான்.

கடன் வசூலைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கடன்
வசூலைப் பற்றி பாரதப் பிரதமர் இந்திரா அம்மையார் அவர்
கள் சில வாரங்களுக்கு முன்னாலே ஒரு அறிக்கையிலே சொல்லும்
போது, ஏழை விவசாயிகளோ, அல்லது விவசாய ஏழைகளோ,
வாங்கிய கடன்களைத் திருப்பிக் கட்டுவதற்கு அவர்களுக்கு வாய்ப்
பில்லாமல் நஷ்டப்பட்டிருந்தால் அவர்களுக்கு மீண்டும் கடன்
கொடுக்கலாம் என்ற ஒரு கருத்தை கூடச் சொல்லியிருக்கிறார்கள்.
அதையும் கருத்திலே கொண்டு, விவசாயிகள் விஷயத்திலே, சிறு
விவசாயிகள், பெரு விவசாயிகள் என்ற தகுதியை அங்கே சரியாகப்
பார்த்து, சிறு விவசாயிகளுக்குச் சேரவேண்டிய அந்தக் கடனைத்
தள்ளுபடி செய்வதற்கு இன்னமும் முயற்சி எடுத்துக்கொள்ள
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாச்சலம் நகரத்திலே நீதி மன்றம் இரண்டுமே வாடகைக்
கட்டிடத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குப்
புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கான திட்டம் இன்றுவரையிலும்
இல்லை.

அது போலவே சிறு தொழிலாக இருந்தாலும், பெரு தொழி
லாக இருந்தாலும், எந்தத் தொழிலாக இருந்தாலும், நில
ஆர்ஜிதம் செய்யும்போது, கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்கப்
பட்ட தொழிலாக இருந்தாலும் சரி, ஆர்ஜிதமான நிலத்தைக்
கொடுத்த அந்த விவசாயக் குடும்பத்தைச சேர்ந்தவர்களுக்கோ,

[திரு. ஆர். தியாகராசன்] [1982 மார்ச் 20

அல்லது நிலம் கொடுத்தவர்களுக்கோ, அந்த நிறுவனத்திலே, வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று ஏற்கனவே, 1975–76 ஆம் ஆண்டுகளிலேகூட பாராளுமன்றத்திலே சட்டம் நிறை வேற்றப்பட்டது. இருந்தாலும், பல தொழிற்சாலைகளுக்கு, நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு அந்தத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு அவை நல்லமுறையிலே நடந்தாலும்கூட, அந்தத் தொழிற் சாலைக்கு நிலம் கொடுத்தவர்களுக்கு அந்தப் பகுதி மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கவில்லை. ஆகவே, ஆரம்பிக்கக்கூடிய சிறு தொழிலாக இருந்தாலும் சரி, சூளை வைப்பது போன்ற தொழிலாக இருந்தாலும் சரி, அந்தத் தொழிலிலே அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று உங்களை வேண்டி, விரும் பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட தொகுதி மங்களூர் என்று அறிவித்திருக்கிறார்களே தவிர, விருத்தாச்சலம் தொகுதி பிற்பட்ட தொகுதி என்று அறிவித் திருக்கிறார்களே தவிர, அங்கு எந்தத் தொழிலும் இல்லை. மிகக் குறைவான கூலிக்கு, ரூ. 1½, ரூ. 2-க்குக் கூட ஆள் கிடைக்கிறார் கள் அங்கே. அந்தப் பகுதியிலே செங்கல் சூளையையும், மர வள்ளிக் கிழங்கு ஆலை போன்ற சிறு ஆலைகளை அமைக்க அரசு முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்..... (மணி அடிக்கப்பெற்றது).

*திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டு வரப்பட் டுள்ள, நீதி நிர்வாகம், சிறைகள், கூட்டுறவுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தை முடித்துவைத்துப் பேசுகின்ற வாய்ப்பை நல்கியதற்காக நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையிலும் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் இன்றைக்கு அந்தச் சொல்லிலே இருக்கிற கூட்டும் இல்லை, உறவும் இல்லை என்கிற நிலை உருவாகிவிட்டது. காரணம் உறுப்பினர்களுக்காக. உறுப்பினர் களே, நடத்தக்கூடிய ஒரு ஜனநாயகத் தொட்டிலாக விளங்க வேண்டியதுதான் கூட்டுறவு இயக்கம். ஆனால், இன்றைக்குக் உறுப்பினர்களுக்காக தனி அதிகாரிகள் நடத்துகிற ஒரு இயக்கமாக கூட்டுறவு இயக்கம் ஆகிவிட்டது என்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன் பேசிய நண்பர்கள் எல்லோரும் சொல்லி வரு கிறார்கள், அமைச்சர் உட்படப் பல நேரங்களில் சொல்லி வரு கிறார்கள். புதிய சட்டம் வருகிறது. எனவே, இதுவரையிலே நடத்தப்பட வேண்டிய தேர்தல்களைப் பிறகு நடத்தலாம் என்று சொல்கிறார்கள். நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்ன வென்றால், ஒருவன் பழைய ஆடையைப் போட்டிருக்கிறான்



1982 மார்ச் 20] [திரு. கு. பா. பழனியப்பன்]

என்றால், அந்த ஆடைக்குப் பதிலாகப் புதிய ஆடையைத் தரு கிறேன் என்று சொல்வது நியாயம். ஆனால் புதிய ஆடையைத் தருகின்ற வரையில் பழைய ஆடையைக் கழற்றி விடு என்று சொன்னால், அப்படிக் கழற்றி விட்டு நிர்வாணமாக இரு என்று சொன்னால் அது எவ்வளவு மோசமாக இருக்குமோ அதைப் போலத்தான் இன்றைய நிலைமை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-00]

முன்புகூட அமைச்சரவர்கள் சொல்கின்ற நேரத்தில். கூட்டு றவுப் பணியாளர்களுக்குக் குடும்ப நலத் திட்டத்தை அறிமுகப் படுத்தப்போகிறேன் என்று தெரிவித்தார்கள். பணியாளர்கள் இறந்து விட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு 5,000 ரூபாயோ 10,000 ரூபாயோ கொடுத்து உதவி செய்வதாகச் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் அதற்கான முழுமையான திட்டம் இது வரையில் வரவில்லை என்று நான் அறிகிறேன். அந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

நிலவள வங்கி ஊழியர்கள் போராட்டம் நடத்தினார்கள், அவர்களுக்குச் சில சலுகைகள் அறிவிக்கப்பட்டன. ஆனால் இன்றுவரையில் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மிக உச்சமான ஒரு பிரச்னை என்னவென்றால், இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு பத்திரிகையிலேகூடப் பார்த்தேன். 15—3—1982 ஆம் தேதிய இன்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே, Jewel Loan Scheme Suspended என்று வந்திருக்கிறது. நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் இன்றைக்கு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட நகைக் கடனை நாங்கள் ஆண்டுதோறும் தருகிறோம், ஏறக்குறைய 130 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறோம், வரும் ஆண்டுகளில் இன்னும் அதிகம் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறோம் என்ற கருத்து சொல்லப்படு கிறது. ஆனால் பத்திரிகைச் செய்திமுற்றிலும் மாறாக இருக் கிறது. முழுமையாக இந்தத் திட்டம் கைவிடப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. முதலமைச்சரவர்கள் பதவிக்கு வருவ தற்கு முன்பே கூட, பல ஆண்டுகளுக்கு முன் சொல்லி யிருக்கிறார்கள், கிராமங்களிலே உள்ள போஸ்டாபீஸ்கள் மூலமாகக் கடன் கொடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள், அது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் கிராமப் புறங்களில் உள்ள கூட்டுறவு வங்கிகளிலேயே நகைக்கடன் நிறுத் தப்பட்டிருப்பதாகவும் 100 கோடி ரூபாய் கொடுத்தவுடன் நிறுத் தப்பட்டு விட்டதாகவும் சொல்கிறார்கள். நகைக் கடனே இல்லை என்றால் அந்த மக்களுக்கு வேறு வகையே கிடையாது. பயிர்

செய்யவே முடியாது; மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்கு வழி கிடையாது. எந்தவகையிலேயும் கிராமங்களிலே வாழ்வதற்கு வழியற்ற நிலைமை உருவாகிவிடும். எனவே, நகைக்கடன் விஷயமாக அரசும் அமைச்சரும் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு திரும்பவும் அதிகமாகக் கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்ற கடன் கொடுக்கப்படாத நிலைமைகள்தான் வீடு கட்டும் சங்கம், இன்னுமுள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலேயும் தொடர்ந்து இருந்து வருகின்றன.

நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். எந்தக் காரணத்திற்காகக் கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள தலைமை, மற்ற அமைப்புகள் கலைக்கப்பட்டனவோ அந்த நோக்கம் இதுவரையில் நிறைவேறாமல் இருக்கிறது. மாற்று வகையில் ஸ்பெஷல் ஆபீசர் என்று போட்டார்கள். இதன் காரணமாக ஏற்கனவே சொல்லப்பட்ட குற்றங்கள் களையப்பட்டிருக்கின்றனவா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். முன்பு தலைவர் என்று நான் அஃபிஸீயல் போடப்பட்டிருந்தார்கள். அப்பொழுது கார் செலவு, டெலிபோன் செலவு, மற்றச் செலவுகளெல்லாம் ஆகிவிட்டன என்று சொன்னார்கள். ஆனால் மத்திய வங்கிகளில் இன்றைக்கு ஸ்பெஷல் ஆபீசர் என்று டி. ஆர். கெடரில் போட்டிருக்கிறார்கள்; எக்சிகியூட்டிவ் ஆபீசர் என்று டி. ஆர். கேடரில் போட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்று கிளார்க்குகள், பியூன்கள், கார் ஆகிய செலவுகள் இருக்கின்றன. ஆகவே கூட்டுறவு அமைப்புகளிலிருந்து இன்றைக்குக் கடனைக் கொடுக்கின்ற அளவிற்கு நிலைமைகள் இல்லை. கடனை வசூல் செய்கின்ற வேலையும் குறைவு. ஆனால் தேவையில்லாத அளவிற்கு சம்பளச் செலவுகள் என்று ஐந்தாறுமடங்கு ஆகிறது. இந்தச் செலவுகளெல்லாம் யார் தலையில் விடியப்போகிறது என்றால் ஏழை விவசாயிகளின் தலையில்தான் விழும். எனவே, இதை அரசு கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலவள வங்கிகளிலேயும் இதுபோலவே சி.எஸ்.ஆர். அளவில் செக்ரட்டரி என்று இருக்கிறார்கள்; ஸ்பெஷல் ஆபீசர் என்று சி. எஸ். ஆர். அளவில் உருவாக்கியிருக்கிறார்கள்; எக்சிகியூட்டிவ் ஆபீசர் என்று போட்டு அவரும் சி.எஸ்.ஆர். அளவில் இருக்கிறார்கள். ஆகவே, மூன்று அதிகாரிகள் இருக்கிறார்கள். இந்த மூன்று அதிகாரிகளுக்கும் மூன்று பியூன்கள் என்றும், இன்னும் பல்வேறு வகையான அதிகச் செலவுகளும் ஏற்பட்டிருக்கின்றன. எனவே அங்கே கூட்டுறவு துறையே அழிக்கப்படக் கூடிய நிலமைகளைத்தான் இந்த அரசாங்கம் உருவாக்கித்தருகிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.





இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், பால் வழங்கும் சங்கத்தின் மூலம் கறவை மாடுகள் வாங்குவதற்கு கடன் தருகிறார்கள். இன்ஷ்யூர் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படியே இன்ஷ்யூர் செய்யப்படுகிறது. ஆனால் மாடு திடீரென்று இறந்து விட்டால் அவ்வாறு இறந்தவுடன் தகவல் கொடுக்கப்படுகிறது இறந்த மாட்டிற்கான தொகையை ஈடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்படுகிறது. ஆனால் அந்தக்கோரிக்கை உடனடியாகக் கவனிக்கப்படாத காரணத்தினால் ஒரு ஆண்டு அல்லது ஆறு மாதங்களுக்குப் பிறகு அந்த மனு பரிசீலிக்கப்பட்டு, அந்த இன்ஷ்யூரன்ஸ் தொகை வருகின்ற நேரத்தில் ஏறக்குறைய 1,000 ரூபாய் கடன் கணக்குப் போட்டுப் பார்த்து, ஏறக்குறைய 1,000 ரூபாய் கடன் என்றால் வட்டியோடு சேர்த்து 3,000 ரூபாய் 2,500 ரூபாய் என்று வருகிறது; ஆனால் இன்ஷ்யூரன்ஸ் தொகை 600 ரூபாய் 700 ரூபாய் என்ற அளவிற்குத்தான் வருகிறது. ஏழை எளிய விவசாயிகளைக் காப்பற்ற வேண்டிய பொறுப்பிலே உள்ள அரசு உடனடியாக இதைக் கவனிக்காத காரணத்தால் 2,000, 3,000 ரூபாய் அளவில் அவர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்திக் கொடுக்கப் படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நான் என்ன வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன் என்றால் மாடு இறந்தது என்று செய்தி வந்தவுடன். அந்தச் செய்தியைத் தந்தியாகக் கருதி, உடனடியாக இன்ஷ்யூரன்ஸ் தொகையை சம்பந்தப்பட்டவர்கள் பெற்று முழுக் கடனையும் அடைக்கக் கூடிய ஏற்பாடுகளை எவ்வளவு துரிதமாகச் செய்ய வேண்டுமோ அவ்வளவு துரிதமாகச் செய்ய வேண்டும். அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறைத் துறை நிர்வாகத்தைப் பற்றி என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். சிறைச்சாலை லட்சியவாதிகளுக்கும், கொள்கை வீரர்களுக்கும் ஒரு ஆலயம். கல்விச்சாலை, பூஞ்சோலை என்றெல்லாம் சொல்லப்படுகின்றது. ஆனால் இன்றைக்கு நீதிபதி இஸ்மாயில் கமீஷன் அறிக்கையை அமைச்சர் அவர்கள் படித்திருப்பார்கள். அரசின் கவனத்திற்கும் வந்திருக்கும் என்று கருதுகிறேன். அதிலே கூட, மக்களுக்கு தெளிவாக ஒன்றைச் சொல்கிறார். நீதிபதியாக இருப்பவர்கள் மாஜிஸ்ட்ரேட்டாகப் பணியாற்றுகிறவர்கள், உள்துறை செயலாளராக இருப்பவர்கள் எல்லாம் குறைந்த பட்சம் ஒரு 6 மாதம் சிறையிலே—அதுவும் காவல் கைதியாக இல்லாமல், தண்டனைக் கைதியாகவும்—இருந்து பார்க்க வேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் கூட சற்று அதிகமாக அவர் சொல்லியிருக்கலாம். ஆனால் நான் தெரிவிக்க விரும்புவது அமைச்சர்கள் எல்லாம் கூட ஒரு ஆறு மாதம் சிறையிலே இருந்தால் நன்றாக இருக்கும் என்று. எதற்காகச் சொல்கிறேன் என்றால் அந்த அனுபவத்தைப் பார்ப்பதற்காக. அங்கே நடக்கின்ற கொடுமைகளைப் புரிந்து கொள்வதற்காக. அந்தப் பிரச்சினைகளை நேரடியாக அறிந்துக் கொள்வதற்காக சொல்கிறேன்.

[1982 மார்ச் 20

திரு. ரா. கிருஷ்ணன் : ஏற்கெனவே, சிட்டிபாபு நாட் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது என்னவென்றால், தி.மு.க. காரர்கள், அமைச்சர்கள் எல்லாம் சிறையிலே இருந்தவர்கள்தான். ஆனால் ஆட்சி நடத்துகிறபோது அதை முறையாக அமல் படுத்த வில்லை. சீர்திருத்தவில்லை என்பது சிட்டிபாபு நாட் குறிப்பு. அதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. கு. பா. பழனியப்பன் : எப்போதோ செய்யவில்லை என்பதற்காக இனி வரப்போகிறவர்களும் செய்யக் கூடாது என்று நண்பர் சொல்வார்களேயானால் நான் ஏற்றுக் கொள்ள வில்லை. இப்போது இருக்கிற ஆட்சியாளர்கள் ஏன் செய்யக் கூடாது ? -என்ற கேள்வியை எழுப்பினால் நியாயமாக இருக்கு மென்று கருதுகிறேன்.

மேலும் நீதிபதி இஸ்மாயில் அவர்கள் சொல்வது அந்த சிறைக்கைதிகளுக்கு இருக்கிற கொடுமைகளை அந்த உணர்வுகளைப் புரிந்துக் கொள்ள வேண்டுமென்ற நோக் கத்திலேதான் அவர்கள் சொல்கிறார்கள். நானே நேரிலே பார்த் திருக்கிறேன். அனுபவித்தும் இருக்கிறேன்.

நாற்றமெடுக்கிற கஞ்சி, அதைக்கூட சூடு போவதற்குள்ளாகவே மேலாக உறிஞ்சிக் குடித்து விடுங்கள். குவளையிலே வாங்காதீர் கள். தட்டிலே வாங்குங்கள். ஏனென்றால், நாற்றமெடுப்பது மட்டுமல்ல, சூடு இருக்கும்போதே குடித்துவிட வேண்டுமென்று சொல்வார்கள். ஏனெனில் கீழே மண்ணிருக்கும். அதனாலே, மேலேயே குடித்து விடுங்கள் என்று சொல்வார்கள். அதைவிட மோசம் அங்கே தருகின்ற களியோ, அல்லது உணவுப் பாருளோ பரிமாறுகின்றபோது துருப்பிடித்த தகரக் குவளையிலே கொடுப் பதைப் பார்த்திருக்கிறேன். குற்றமும் சொல்லியிருக்கிறேன். ஆனால் களையப்படவில்லை. இது கடலூர் மத்திய சிறைச் சாலையிலே நடைபெற்றது.

அறைகளிலே உள்ளே. மூத்திரச்சட்டிகளின் நாற்றம் வேறு, அந்த அறையைச் சுற்றி போடப்பட்டிருக்கிற ப்ளீச்சிங் பவுடர் நாற்றம் வேறு, இந்த மாதிரி சூழ்நிலையிலே மோசமான ஒரு நிலைமையிலே கைதிகள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே காவல் கைதிகள் (மணிஅடிக்கப்பட்டது).

இப்படிப்பட்ட மோசமான சூழ்நிலை இன்றைக்கு இருந்து கொண்டு இருக்கிறது. என்று சொல்லி இஸ்மாயில் கமிஷன் அறிக் கையிலே சொல்லி இருக்கின்ற பரிந்துரைகளை அரசு பரிசீலனை செய்ய வேண்டும். அவைகளை நிச்சயமாக நிறைவேற்ற வேண் டும் என்று சமீபத்தில் கூட திராவிட கழகத்தின் பொதுச் செய லாளர் வீரமணி அவர்கள் போராட்டம் நடத்தி இருக்கிறார்கள். அதையும் கவனத்தில் கொண்டு இஸ்மாயில் கமிஷன் தீர்ப்புகளை அதனுடைய பரிந்துரைகளை செயல்படுத்த வேண்டும்.



1982 மார்ச 20] [திரு. கு. பா.. பழனியப்பன்]

இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். எந்தக் கமிஷனைப் போட்டாலும் அதனுடைய பரிந்துரைகளை அரசு செயல்படுத்துவதில் தயக்கம் காட்டுவது ஏன் என்று கேட் டார்கள். அதிலும் குறிப்பாக இப்படிப்பட்ட சிறைச்சாலைக் கொடுமைகளை எல்லாம் சொல்லுகின்றபோது அவர்களுக்குப் பரிசு கொடுப்பதைப் போல அவர்களை மேலும் ஊக்குவிக்கின்ற போக்கிலே அரசு நடந்து கொண்டு இருக்கின்றது என்று எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் நியாய மான பதிலைத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சிறைச்சாலையிலே இருக்கின்ற மருத்துவ அதிகாரிகள் தனிப் பட்ட முறையிலே சிறை அதிகாரிகளின் கட்டுப்பாட்டுக்குள் இயங்காமல் சுதந்திரமாக இருக்கும்படி, அனுபவம் உள்ள வயது முதிர்ந்த மெடிக்கல் ஆபீசர் இருந்தால் தான் இங்கே நியாயமான முறையிலே கைதிகளை பாதுகாக்க முடியும் என்று சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து நீதி நிர்வாகம் என்ற தலைப்பிலே சில கருத்துக் களை சொல்ல விரும்புகிறேன். நீதி வழங்குவது முறை செய்வது என்பது அரசினுடைய தலையாய கடமை. நீதிமன்றங்கள் கோவில் என்றும், நீதிபதிகள் தெய்வம் என்றும் மக்கள் நம்பு கின்ற நிலைமையிலே இன்றைக்கும் மாறுபாடு இல்லை. ஆனால் நீதிபதியினுடைய வாழ்க்கை நிலை உயர்ந்திருக்கின்றதா என்று சொன்னால் இல்லவே இல்லை. நீதிபதியினுடைய வாழ்க்கைத் தரம் குறைகிறது என்று சொன்னால், நீதியே குறைந்து விட்டது நீதியினுடைய தரம் குறைந்து விடுகிறது என்பதுதான் உண்மை. அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும், வசதிகளையும் அதிகப் படுத்த வேண்டும் என்று பல்வேறு கால கட்டங்களில் கோரிக்கை கள் எல்லாம் வைத்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இராஜாஜி ஹாலில் நடந்த ஒரு விழாவில் கலந்துக் கொண்டு அறிவிப்பை எல்லாம் கொடுத்தார்கள். அதிலே, முக்கிய மான அறிவிப்பு சப் ஜட்ஜ் கேடருக்கு 1,300 ரூபாய் என்று சொன்னார்கள். ஏனென்றால், அவர்கள் டி.ஆர்.ஓ. கேடருக்குச் சமமாக இருக்கச் கூடியவர்கள். அந்த அளவுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்தார்கள். அவர்கள் ஒப்புக் கொண்டார்கள். ஆனால், இன்றைக்கு நட வடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்படவில்லை. நேரி லேயே அறிந்தவன் என்ற காரணத்தால் இதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ரூ. 750 ஒரு டிஸ்டிரிக்ட் முனிசீப்புக்கு. சப் ஜட்ஜுக்கு ரூ. 1,000. ரூ. 250 சம்பளத்தில் வித்தியாசம். ரூ. 1,000-ஐ ரூ. 13,00 ஆக ஆக்கும்போது ரூ. 750-ஐ ரூ. 1,050 ஆக ஆக்க வேண்டாமா ? அல்லது சம்பளக் கமிஷன் திட்டப்படி ரூ. 1,000 ஆவது ஆக்க வேண்டாமா ? அதை அமைச்சர் அவர் கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு தகுதியிலிருந்து அடுத்த தகுதிக்கு போவதற்கு ரூ. 550 சம்பளம்

வித்தியாசம் இருக்கிறது. இந்தக் குறைகளை நீக்கி அவர்களுக்கும் அந்த அதிகச் சம்பளம் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறையைச் சிறைச்சாலையிலே அடைத்து வைத்திருக்கிற உங்களிடம் என்ன நீதி கிடைக்கும் என்று சொல்லி விழுப்புரம் நகரத்தில் சார்நிலை நீதிமன்றம் (Sub-Court) ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்ற எனது கோரிக்கையை வலியுறுத்தி விடைபெறுகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1–10)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற போது 3 துறைகளைப் பற்றிய தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக நீதித் துறை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது நீதித்துறை செம்மையாக விளங்க அரசுத் தரப்பிலே என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது என்பது பற்றியும், பொதுவாக, மக்கள் நீதி பெறுவதில் என்னென்ன இடர்ப்பாடுகளைப் பெறுகின்றார்கள் என்பது பற்றியும் மக்களின் நலன் கருதி மாண்புமிகு உறுப்பினர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். இந்த அரசினுடைய கொள்கையைப் பொறுத்தவரைக்கும் நீதித் துறை தன்னிச்சையாக, தனித் தன்மையோடு, பாரபட்சமின்றி, மக்கள் நலன் பேண அது இயங்கி இந்த அரசு முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் தந்து, உறுதுணையாக இருந்து வருகிறது, தொடர்ந்து வரும் என்பதனை முதற்கண் நான் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்ற போது வழக்குகள் மிகத் தாமதமாக முடிவுறும் நிலையினை அடைகின்ற காரணத்தால் மக்கள் அதிக பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். அதைக் களைய வேண்டும் என்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொன்னார்கள். அது குறித்து அரசும் விவரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது. உயர்நீதி மன்றமும் விவரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அடிக்கடி உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியிடமும், சம்பந்தப்பட்ட ரெஜிஸ்ட்ரார் போன்ற பொறுப்பாளர்களோடும் அரசு கலந்து உயர்நீதி மன்றத்திலே உள்ள வழக்குகளையும், உயர்நீதி மன்றத்தின் கீழ் இயங்கும் சப்-ஆர்டினேட் நீதி மன்றங்களில் உள்ள வழக்குகள் தாமதம் இல்லாமல் முடிவுறுவதற்கும், மக்கள் பாதிப்புக்கு உள்ளாகாமல் இருப்பதற்கும், என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று ஆராய்ந்து அவ்வப்போது நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. உயர்நீதி மன்றமும் எடுத்து வருகிறது. குறிப்பாக வழக்குகள் மிகவும் தேங்கிய நிலையில் இருப்பதை போக்குவதற்கு அதிகப் படியான நீதிமன்றங்களை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கோரிக்கை வைத்தார்கள். இந்த அரசும் அதை ஏற்று நடைமுறைப்படுத்தி வருகிறது. 1976-க்கு





முன் கிட்டத்தட்ட 1974 ஆம் ஆண்டிலே புதியதாக 1 சிவில் நீதிமன்றமும் 3, கிரிமினல் நீதிமன்றமும், துவங்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டிலே 1 சிவில் நீதிமன்றமும், 2 கிரிமினல் நீதிமன்றமும் துவங்கப்பட்டன. 1976 ஆம் ஆண்டிலே 9 சிவில் நீதி மன்றங்களும், 2 கிரிமினல் நீதி மன்றங்களும் துவங்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவருடைய ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு நீதித் துறையில் வழக்குகள் தேங்கிய நிலையில் இருக்கின்ற காரணத்தால் ஏழைகளில் அதிகமாக பாதிப்பையும் கருத்தில் கொண்டு அதிகப்படியான நீதிமன்றங்களை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கையினை ஏற்று அதை நாம் நடைமுறைப்படுத்தி இருக்கிறோம். இந்த அடிப்படையிலே 1977 ஆம் ஆண்டிலே இருந்து தற்போது 1982 ஆம் ஆண்டு வரை, 142 புதிய நீதிமன்றங்களை இந்த அரசு துவங்கி இருக்கிறது.

இதை நான் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் அதிகமான நீதிமன்றங்களை குறிப்பாக மாவட்ட, வட்ட அளவில் நாம் திறக்கும்போது விரைவாக வழக்குகளை முடிக்க முடியும் என்ற அடிப்படையில் அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. புதிதாக இன்னும் 20 நீதிமன்றங்களைத் தற்போது தொடங்க இருக்கிறோம். ஏற்கெனவே, கடந்த மூன்று ஆண்டுகளில் 162 நீதிமன்றங்கள் அதிகமாக அமைக்கப் பட்டிருக்கின்றன. இந்த நீதிமன்றங்கள் மூலம் வழக்குகளை இன்னும் துரிதமாக முடிக்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், 1975 -ஆம் ஆண்டு வரையில் அசிஸ்டன்ட் பப்ளிக் ப்ராசிக்கியூட்டர் என்ற நிலையில் இருக்கிற வழக்கு நடத்துநர்கள் 90 பேர்கள் மட்டுமே இருந்தார்கள். அவர்களுக்கு அடுத்த நிலையில் 16 பேர்கள் மட்டுமே இருந்தார்கள். போதிய அளவுக்கு அரசின் சார்பிலே வழக்குகளை நடத்துகின்றவர்கள் இல்லாத காரணத்தால் நீதிமன்றங்களிலே வழக்குகள் அவ்வப்போது '' அட்ஜார்ன் '' ஆகி, குறிப்பிட்ட காலத்தில் முடியாத நிலைமை இருந்தது. இதை அரசு உணர்ந்து, தற்போது வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு புதிதாக 108 வழக்கறிஞர்களை—ஏற்கெனவே இருந்த 106 வழக்கறிஞர்கள் அல்லாமல்—அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிகியூட்டர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

புதிதாக நியமிக்கப்படுகின்ற இந்த 107 வழக்கறிஞர்கள் மட்டும் அல்லாமல், மதுவிலக்கு சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள் 21 தனியாக அமைத்து, அதற்கு தனியாக 21 அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிகியூட்டர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆக, இந்த 129 அசிஸ்டன்ட் பப்ளிக் பிராசிக்கியூட்டர்களை

கூடுதலாக நியமிப்பதன் மூலம் கடந்த கால தேக்க நிலை இனிமேல் இல்லாத நிலை ஏற்படும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது.

நீதிமன்றங்களில் பல இடங்களில் நீதிபதிகள் இல்லாமல் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் சொன்னார்கள். 'அந்த நிலை தற்போது இல்லை. நான் ஏற்கெனவே, பலமுறை இந்த அவையிலேயும் சொல்லியிருக்கிறேன். சப்மாஜிஸ்ட்ரேட்டுக்களைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித் தேவர் அவர்களும் குப்புசாமி அவர்களும் சொன்னதைப்போல 1965-ஆம் ஆண்டு வரையில் நீதிமன்றங்களுக்குத் தேவையான சப்மாஜிட்டிரேட்டுக்களை தற்காலிக அடிப்படையில் உயர்நீதி மன்றம் தேர்ந்தெடுத்து, அரசின் அனுமதியோடு நியமித்து வந்தது. 1965-லிருந்து அந்தத் தற்காலிக சப்மாஜிஸ்ட்ரேட்டுகள் நியமனத்தில் அரசுக்குச் சம்பந்தம் இல்லை ; உயர்நீதிமன்றமே தேர்வு செய்வு வந்தது. ஆனால், 1965-லிருந்து அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சப்மாஜிஸ்ட்ரேட்டுகளைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆண்டித்தேவர் அவர்கள் சொன்னதைப் போல பல துறைகளிலிருந்து வெட்டரினரி டிபார்ட்மென்ட், மெடிக்கல் டிபார்ட்மென்ட், பி.டபுள்யூ.டி., போன்ற பல துறைகளிலிருந்து பல நேரங்களில் தபாலிலே படித்து பட்டம் பெற்றவர்களைக்கூட, கோர்ட் அனுபவமே இல்லாதவர்களைக்கூட, நியமித்த காரணத்தால் அந்த முறையை மாற்றி வருங்காலத்தில் வழக்கு மன்றங்களில் வழக்கறிஞர்களாகப் பணியாற்றி அனுபவம் பெற்ற வழக்கறிஞர்களை நியமிப்பதில் முன்னுரிமை தரவேண்டுமென்ற முறையில் விதிகளைத் திருத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

இந்த நிலையில்தான் சில நீதிமன்றங்களில் இருக்கிற காலி இடங்களை நிரப்புவதற்கு உயர்நீதிமன்றம் நீதிபதிகளைத் தேர்ந்தெடுத்து தற்காலிகமாக அவர்களை நியமிக்க வேண்டுமென்று சொன்னபோது வழக்கறிஞர்கள் சார்பாக அரசுக்கு கோரிக்கை வந்தது. ஏற்கெனவே, 11 : 9 என்ற விதி இருக்கிறது. அதன்படி, 1965-லிருந்து 11 பேர்களை வழக்கறிஞர்களிலிருந்து தேர்ந்தெடுத்தால் 9 பேர்களை அலுவலகங்களிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால், உயர்நீதிமன்றம் அந்த முறையை விட்டுவிட்டது. ஆகவே, வருங்காலத்தில் வழக்கறிஞர்களிலிருந்தே நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். பார் அசோசியேஷனிலிருந்து மனுக்கள் வந்தன. உயர்நீதிமன்றத்திடம் இதைச் சொன்னோம். அதை நன்றாகப் பரிசீலனை செய்து, அதன் பிறகு உயர்நீதிமன்றம் அரசின் கருத்தை ஏற்று, தற்போது தந்த இடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. இனி, வருங்காலத்தில் 5 : 1 என்ற ரேஷியோ கடைப்பிடிக்கப்படும். 5 பேர்கள் வழக்கறிஞர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒருவர் மட்டும் ஆபீஸ் சர்வீசிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்.





[பிற்பகல் 1·20]

அந்த ஒருவரும் கூட நீதித்துறையில் பணிபுரிந்தவராக

> ' Persons working in the Law Department or in the Judicial Department '

என்ற அளவிலே அவரும் தேர்ந்தெடுக்கப்படுவார் என்கிற முடிவை அரசு எடுத்து இருப்பதால், அந்தப் பிரச்சினை முழுவதும் தீர்ந்த நிலையில் இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

'' இன்டக்கிரேஷன் ஆப் ஜுடிசியரி '' பற்றிச் சொன்னார்கள். இன்டக்கிரேஷன் ஆப் ஜுடிசியரி என்பது ஒரே கூரையின் கீழ் மக்களுக்கு அனைத்துத் தீர்ப்புகளும் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அரசு கொண்டு வர எண்ணுகிறது. ஒரு வட்ட அளவில் இருக்கும் மக்கள் அவர்களுக்கு வேண்டிய கிரிமினல் வழக்குகளாக இருந்தாலும் சரி, பர்ஸ்ட் கிளாஸ் அபன்சுகளுக்காக ஒரு நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும் என்றாலும் சரி, செகன்ட் கிளாஸ் அபன்சுகளுக்காக ஒரு நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டும் என்றாலும் சரி, அல்லது சிவில் வழக்குகளுக்காக நீதிமன்றம் செல்லவேண்டும் என்றாலும் சரி, அதற்காக பல வழக்குமன்றங்களுக்கு மக்கள் செல்ல வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக அவர்களுக்கு பல வகைகளில் சிரமங்கள் ஏற்படுகிறது. வழக்கறிஞர்களுக்கும் சிரமம் ஏற்படுகிறது. நிர்வாகத்திலும் பல இடற்பாடுகள் ஏற்ப்டுகிறது என்ற காரணத்தால் தான்

> " Under one roof a litigant public should be enabled to have remedies for first and second class offences of the criminal side and civil side. "

என்ற முறையிலே இந்தத் திட்டத்தை நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்தோம்.

ஆனால், அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறபோது, உயர்நீதிமன்றம் அந்தத் திட்டத்தை படிப்படியாக நடைமுறைப்படுத்தலாம் என்று கூறியது. படிப்படியாக அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறபோது ஒரு பிரச்சினை எழுகிறது. காரணம்,

> A Sub-Magistrate, if he is promoted and elevated to the cadre of a District Munsif, who would be equivalent to the First Class Magistrate.

அந்த நிலை ஏற்படுகிறபோது பதவி உயர்வு பெற்று, அவர் ஊதிய உயர்வும் பெற்று விடுகிறார். அப்படி ஊதிய உயர்வைப் பெற்றுவிட்டபோதிலும், அந்தப் பணியை அவர் செய்வது இல்லை. ஒருவர் சப்-மாஜிஸ்ட்டிரேட்டாக இருக்கிறவர்—

[திரு. சி. பொன்னையன்] [1982 மார்ச் 20

பர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்ட்டிரேட்டாக ஆகி, டிஸ்டிரிக்ட் முன்சீப்புக்கு ஈக்குவல் ஆகி—டிஸ்டிரிக்ட் முன்சீப்-கம்-பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் என்று பதவி பெற்ற பிறகும், சம்பள உயர்வு பெற்ற பிறகும், உயர்நீதிமன்றம் ஒரு சிலருக்குத்தான் அந்தப் பணியைத் தருவோம் என்று சொல்கிற போது, மற்றவர்கள் அந்தப் பணி செய்யாமலேயே அந்த அதிகபட்சம் சம்பளம் வாங்கும் நிலை ஏற்படுகிறது. இது அரசின் ஏனைய பணியாளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தும். அப்படிச் செய்யவும் முடியாது. காரணம், மறைமுகமாக இத்தகைய நீதிபதிகளுக்கு சம்பள உயர்வு பெறுவதற்காக இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்களே ஒழிய அவர்களை அந்தப் பணியில் அமர்த்துவதற்காக அல்ல என்று சொல்லக்கூடும். மேலும், மற்ற துறைகளில் பே-கமிஷன் அடிப்படையில் சப்-மாஜிஸ்ட்டிரேட்டுகளுக்குச் சமமாக சம்பளம் பெறுபவர்களும் எங்களுக்கும் அத்தகைய ஊதிய உயர்வு, பணி செய்யாமலேயே தரவேண்டும் என்று கோரக் கூடும். பின்னர் அந்தக் கோரிக்கை வலுப்பெற்று, மிகப் பெரிய பிரச்சினையாக அது உருவாகி விடும் என்ற எண்ணத்தால், அரசு அதை நடைமுறைப்படுத்தாமல் இருக்கிறது. உயர்நீதி மன்றத்திற்கும் இந்த நிலையை எடுத்துச்சொல்லியிருக்கிறோம். உயர்நீதி மன்றமும் அதைப் பரிசீலித்து வருகிறது. விரைவில் அதை நடைமுறைப்படுத்த இயலும் என்று கூறிக்கொள்ள விழைகிறேன்.

இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு, குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் சொன்னதைப்போல, சென்ற ஆண்டு மட்டும்,—நீதித்துறையிலே இருக்கின்றவர்களுக்கு, அவர்கள் செம்மையாக பணிபுரிய வேண்டும் என்பதற்காக அவர்களுக்குச் சலுகைகள் அளிக்க வேண்டும் வசதிகள் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில்—மாண்புமிகு உறுப்பினர்கள் வேடச்சந்தூர் பாலசுப்பிரமணியன், குப்புசாமி போன்றவர்கள் எல்லாம் சுட்டிக் காட்டியதைப்போல—பல சலுகைகளை இந்த அரசு வழங்கி இருக்கிறது. சம்பள உயர்வு பற்றி—திரு. பழனியப்பன் சொன்னார்கள். தற்போது இந்த டிமான்ட் முடிந்தவுடன் அதுவும் நடைமுறைப்படுத்தப்படும்.

பாரதத்தின் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு வழக்குகள் தேக்க நிலையில் இருக்கக்கூடாது. நீதிபதிகள் தன்னிச்சையாக, சுயமாக வேலை செய்யவேண்டும் என்ற அடிப்படையில் தான், '' ஜெராக்ஸ் '' காப்பிமெஷீன், டேப் ரிக்கார்ட்டர், 30 வாகனங்கள், டெலிபோன் வசதிகள் போன்ற வசதிகளை நாம் தாராளமாகச் செய்து இருக்கிறோம். நீதிபதிகள் செம்மையான முறையில் பணியாற்றக்கூடிய நிலையை உருவாக்குவது ஒட்டு மொத்தமாக நாட்டிற்கே நல்லது என்ற அடிப்படையில் அவர்கள் குடியிருக்க வீட்டுவசதியை ஒரு தீவிர திட்டத்தின் கீழ் இந்த அரசு தற்போது நடைமுறைப்படுத்த இருக்கிறது. அந்த அடிப்படையில் அவர்கள் மாவட்ட அளவில் இருந்தாலும் சரி, வட்ட



1982 மார்ச் 20] [திரு. சி. பொன்னையன்]

அளவில் இருந்தாலும் சரி, சென்னை போன்ற பெரு நகரங்களில் இருந்தாலும் சரி, அவர்கள் வாங்குகிற சம்பளத்தில் 10 சதவீளில் என்று நியமிக்கப்பட்டு இருக்கிற வீட்டு வாடகைப்படிக்குள் வாடகைக்கு நீதிபதிகளுக்கு வீடுகள் கிட்டுமா என்றால் கண்டிப்பாக கிடைக்காது. ஆகவே தான், அண்மையில் அரசு உத்திரவிட்டு இருக்கிறது. அந்த உத்திரவின்படி, நீதித்துறையில் பணியாற்றுகின்ற அனைவருக்கும் குடியிருப்பு, வீட்டுவசதி செய்து கொடுத்து அவர்களுக்கு இருக்கும் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மட்டும் இங்கே நான் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது, குறிப்பாக பேச நினைத்து பேச முடியாத நிலையிலே மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் அமர்ந்து விட்டார். விருத்தாசலத்திற்கு சப்-கோர்ட் வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை கேட்டிருக்கிறார். (குறுக்கீடு) சாரி, விழுப்புரத்திற்கு. அந்த கோரிக்கையை அரசு ஏற்றிருக்கிறது என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல. நான்-டிரையல் பிரிசினர்ஸ் பற்றி சொன்னார்கள். நான் டிரையல் பிரிசினர்ஸ் ரிமாண்ட் பிரிசினர்ஸ் என்ற வகையில் பல ஆண்டுகளாக சிறைச்சாலைகளிலே இருக்கிற அந்த நிலையை மாற்றி துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டு பார்க்கிறபோது, தமிழகத்தைப் பொருத்தவரைக்கும், அந்தப் பிரச்சனை அவ்வளவாக இல்லை என்ற நிலை இருக்கிறது. இருந்தாலும் இன்னும் சில செம்மையான நடவடிக்கைகளை எடுத்து, நீதி மன்றங்களுக்கு வராமல் இருக்கிற, நான்-டிரையல் பிரிசினர்ஸ், ரிமேண்ட் பிரிசினர்ஸ்-களைப் பொருத்தவரைக்கும், இன்னும் விரைவிலே அவர்களுடைய வழக்குகளை முடிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மற்ற மாநிலங்களை எடுத்துச் சொன்னால், பீகாரிலே 21,536 பேரும், டெல்லியிலே 7,531 பேரும், குஜராத்திலே 1,763 பேரும்; ஹிமாசலப் பிரதேசத்தில் 1,400 பேரும், அதைப்போலவே பஞ்சாபிலே ஒரு ஆயிரம் பேர்களும், உத்திரப் பிரதேசத்தில் 20 ஆயிரம் பேர்களும், வெஸ்ட் பெங்காலில் 7 ஆயிரம் பேர்களும் என்று நான்-டிரையல் அண்டு ரிமேண்ட் பிரிசினர்ஸ் என்ற முறையில் நீதி மன்றங்களுக்கு கொண்டு வரப்படாத நிலையில் இருக்கிறது. ஆனால்; தமிழகத்தில் அந்த நிலை தற்போது பெரிதும் குறைந்து, ஒட்டு மொத்தமாக 4,569 நான்-டிரையல் பிரிசினர்ஸ் தான் இருக்கிறார்கள் என்ற அளவில் அது குறைக்கப்பட்டிருக்கிறது.

* * * *

'Jurisdiction of Small Causes Court should be enhanced.'

என்று சொன்னார்கள். அரசு ஏற்கெனவே, உத்தரவிட்டிருக்கிறது. 500 ரூபாய் என்றிருக்கிற அந்த பெக்கியூனரி ஜூரிஸ்டிக்ஷன்

'would be enhanced to Rs. 2,000'.

என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் சில பிரச்னைகளைச் சொன்னார்கள். சில கருத்துக்களை நீதி மன்றத்தினுடைய கவனத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். கண்டிப்பாக அரசு உயர்நீதிமன்றத்தினுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை எடுத்துச் சொல்லும். உயர்நீதிமன்றமும் அவ்வப்போது மக்களுடைய குறைகளைக் களைய தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதையும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் வேடசந்தூர் பாலு அவர்கள் பேசுகிறபோது தமிழ்நாடு உயர்நீதிமன்றம் என, சென்னை உயர்நீதிமன்றத்திற்கு பெயர் சூட்ட வேண்டும், மாற்றி அமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதில் சில பிரச்னைகள் இருந்த காரணத்தால், மைய அரசும் மறுத்திருக்கிற காரணத்தால் அந்த நிலை இருக்கிறது. மீண்டும் இந்த அரசு அது குறித்து முயற்சிகள் மேற்கொள்ளும் என்று சொல்லி, தமிழில் தீர்ப்புகளைச் செய்தால், மாநில நீதிமன்றங்களில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்த பிறகு, மாண்புமிகு சிங் அவர்களை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக போட்டிருக்கிறார்களே, அது குறித்து வேதனையாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். இது குறித்து இந்த அரசினுடைய எண்ணத்தை மைய அரசுக்கு நாம் தெரிவித்திருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் தெளிவாகவே தெரியும். அரசியல் சட்டப்படி மைய அரசுக்குத்தான் இறுதி அதிகாரம் இருக்கிறது என்று மாநில அரசு தன்னுடைய உணர்வுகளைத்தான் மைய அரசுக்கு எடுத்துச் சொல்ல முடியும். அந்த வகையில் மாநில அரசினுடைய உணர்வுகளை தெள்ளத் தெளிவாக, அழுத்தமாக வெளியிட்டு நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மீண்டும் அந்த உணர்வினை வலியுறுத்துவோம். தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாட்டினுடைய தலைமை நீதிபதியாக மட்டும் அல்ல, தமிழக உயர்நீதிமன்றத்தினுடைய எந்த நீதிபதியாக இருப்பினும் கண்டிப்பாக தமிழ் தெரிந்தவராக நன்கு தெரிந்தவரர்கத்தான் இருக்க வேண்டும் என்பதில் அரசு ஆணித்தரமான கொள்கையோடு இருக்கிறது. அதை நாங்கள் கண்டிப்பாக மைய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்துவோம் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



சிறை நிர்வாகத்தை பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது, குடிநீர் வசதி இல்லை என்றும், உணவின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்றும் கழிப்பறைகள் அதிகமாக்கப்பட வேண்டும் என்றும் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் இராஜமாணிக்கம் அவர்கள் பேசுகிறபோது, சில சிறைகளில் கழிப்பிடமே இல்லை என்று சொன்னார்கள். அது கடந்த காலத்தில் இருந்த நிலைதான். இப்போது நிலைமை மாற்றப்பட்டிருக்கிறது. குறிப்பாக சென்டிரல் பிரிசன்ஸ் எல்லாவற்றிலுமே ஃபிளஷ்-அவுட் சிஸ்டம் கொண்டு வந்திருக்கிறோம்.

இன்னும் அதிகப்படியான வசதிகளைச் செய்து தரவேண்டும் என்பதிலே அரசு அக்கரையோடு இருக்கின்றது. அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு கண்டிப்பாக மேற்கொள்ளும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இட வசதிகளை பொறுத்தவரையிலே சேலம், திருச்சி, மதுரை, வேலூர், பாளையங்கோட்டை ஆகிய 5 மத்திய சிறைச்சாலைகளிலும் 200-க்கும் அதிகமான கூடுதல் இடவசதி கொடுப்பதற்காக 296 இலட்சத்தில் பணிகளை அரசு மேற்கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் 8 மத்திய சிறை, 3 தனி சிறைச்சாலைகள், வேலூர் மாநில மகளிர் சிறை, புதுக்கோட்டை போஸ்ட்டல் பள்ளி, தனிக்கிளைச் சிறைச்சாலைகள், 89 கிளைச் சிறைச்சாலைகள் முதலிய இடங்களில் நீரடிக் கழிப்பிடங்கள், தூய்மையான தண்ணீர் வசதி, சமையல் அறைக் கூடங்கள் ஆகியவற்றை 60,24,000 ரூபாய் செலவில் கட்டி முடிக்க நடவடிக்கையினை அரசு ஏற்கெனவே மேற்கொண்டு இருக்கின்றது.

[பிற்பகல் 1-30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மண்புமிகு திரு. சி. பொன்னையன் :** சென்னை மத்திய சிறையில் நெருக்கடியைப் போக்கி 1,500 சிறைவாசிகளுக்காக மாதிரி சிறைச்சாலை ஒன்று புழல் பகுதியிலே அனைத்து வசதிகளுடன் புதிதர்க அமைக்கப்பட இருக்கின்றது. 4 கூடுதல் திறந்த வெளிச் சிறைச்சாலைகளையும் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அந்த திறந்தவெளி சிறைகளிலே நெல், காய்கறிகள் போன்றவற்றை உற்பத்தி செய்து கைதிகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களை முடிந்த அளவுக்கு அங்கேயே உற்பத்தி செய்யக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறோம்.

அடுத்து சிறைவாசிகளுக்குத் தரமான் உணவு இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சிறை நிர்வாகத்திலே முதல் முறையாக எல்லா சிறை கைதிகளுக்கும் திட்

டப்பட்ட அரிசி உணவு வழங்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கின்றது. மேலும் சத்துணவு மற்றும் வகையான உணவு வசதிகள் போன்றவற்றை வழங்குவதுடன் சிறைவாசிகளுக்கு அதாவது அசைவ சிறைவாசிகளுக்கு மாமிசம் வழங்கவும் அதற்கிணையான உணவினை மற்றவர்களுக்கு வழங்கவும் 7-வது நிதியுதவிக் கழகத்தின் நிதியுதவிலிருந்து ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய் தற்போது ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

சிற்றுண்டிச்சாலை வசதிகளை அனைத்து மத்திய சிறைகளிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் அனைத்து மத்திய சிறைகளிலும் சிற்றுண்டிச்சாலை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமல்ல. விடுதலைப்பெற்ற சிறைவாசிகளைப் பொறுத்தவரையிலே ரிஃபார்மேஷன் என்ற அணுகுமுறையின் அடிப்படையில் வாழ்வில் அவர்கள் நல்ல முறையில் நடக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தரிசு நிலங்களை அவர்கள் சாகுபடி செய்வதற்கு அவர்களுக்கு உதவ வேண்டுமென்று அரசு ஆணையிட்டிருக்கின்றது.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது

Parole condition shouid be fur her retaxed.

என்று சொன்னார்கள். சிறைவாசிகளின் உறவினர் திருமணத்தில் கலந்துகொள்ளவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருக்கக்கூடிய நெருங்கிய உறவினர்களைக் கண்டு வரவும் அல்லது ஈமச் சடங்குகளில் கலந்துகொண்டு வரவும் அவசர விடுப்பு வழங்க சிறை கண்காணிப்பாளருக்கு அதிகார வரையறை செய்யப்பட்டு அரசு தற்போது ஆணையிட்டிருக்கின்றது. சிறைவாசிகள் சிறையில் இருக்கும் போது கல்வி மற்றும் தொழில்களில் அவர்கள் தேர்ச்சி பெறின் அவர்களுக்கு விசேட தண்டனைச் சலுகை வழங்கப்படும் என்று அரசு ஆணைகளைப் பிறப்பித்திருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித் தேவர் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். சிறைச்சாலையிலே உள்ள கைதிகளுக்கு 14 ஆண்டுகள் ஆனபோதிலும் விடுதலை செய்யப்படாமல் இருக்கின்ற நிலைமை மாறவேண்டும் என்ற கருத்துப்பட சொன்னார்கள். 433ஏ என்ற பிரிவினை நாங்கள் மாற்றி இந்த அரசு இந்த மன்றத்திலேயே மாற்றி 433பி என்று கொண்டு வந்து அதனை மைய அரசுக்கு அனுப்பியபோது மைய அரசு மறுத்துவிட்டதை இந்த அவை அறியும். எனவே மீண்டும் ஒரு பில்லை இங்கே இன்ட்ரடியூஸ் செய்து பாஸ் செய்து — 14 ஆண்டுக்காலத்திற்கு முன்னர்லேயே ஒரு கைதி நல்ல நடத்தை உடையவராக மாறுவாரேயானால் அவருடைய நன்னடத்தைக்கு ஊக்கம் தரப்பட வேண்டும் என்ற அடிப்படையில் குற்றம் செய்த ஒருவன் என்றுமே குற்றவாளியாக,





தண்டனையைப் பெற வேண்டும் என்ற நோக்கம் இல்லாமல் குற்றம் செய்யாத ஒருவனைவிட குற்றம் செய்து உணர்ந்து திருந்துகிறவன் மேலானவன் என்ற நோக்கத்தோடு அதை நடைமுறைப்படுத்துவதற்காக அந்த சட்டத்தை மீண்டும் நிறைவேற்றி மைய அரசுக்கு இந்த அரசு அனுப்பும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, மைய அரசு மறுத்துவிட்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த உத்தரவு ஏற்கெனவே சிறைச்சாலையிலே 10 ஆண்டுகளுக்கு மேல் 14 ஆண்டுகளுக்கு மேல் இருப்பவர்களுக்கா அல்லது........

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் . அதில்,

A clarification has been given by the Supreme Court in the Judgement in that regard in 1978.

உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பின் அடிப்படையில் 19—12—1918-க்கு முன்னால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதிகளை நாம் அட்வைஸரி போர்ட் பரிந்துரையின் கீழ் விடுதலை செய்யலாம் என்ற தீர்ப்பைத் தந்திருக்கிற அடிப்படையில் தான் கடந்த சில மாதங்களில் அட்வைஸரி போர்ட் பல கைதிகளை விடுதலை செய்ய தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆனால் நாம் விரும்புவது நிரந்தர பரிகாரம். இந்தச் சட்டத்தைத் திருத்த மைய அரசு 433 (எ)க்கு சட்டத் திருத்தம் கொண்டு வரவில்லையென்றால் மாநில அரசுக்குள்ள அதிகாரத்தை மைய அரசு பறிக்கிறது என்பது மட்டுமல்ல. நன்னடத்தை உள்ள கைதியாக ஒருவர் இருந்து திருந்தவேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு வராமல் போகவும் குற்றவாளி என்றால் திருந்துகிற உள்ளப்பாங்கை நாளடைவில் அவர் பெற வேண்டும் என்ற எண்ணத்தைக் கூட நீ பெறக் கூடாது என்று சொல்வது போல் இருப்பதன் காரணமாக அதைத் திருத்துவதற்கு இந்த அரசு மீண்டும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி மைய அரசுக்கு, அனுப்புவோம் என்றுதான் சொன்னேன்.

அடுத்து, உச்ச நீதிமன்றத்தின் ஒரு பிரிவை, சர்க்யூட் பெஞ்ச் தமிழகத்தில் குறிப்பாக சென்னையில் வரவேண்டும் என்பது குறித்து நாம் மைய அரசையும், உச்ச நீதிமன்றத்தையும் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி மாண்புமிகு சந்திரசூட் அவர்கள் தமிழகத்திற்கு வருகை தந்திருந்தபோது கூட அவர்களிடம் இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத்தினுடைய சர்க்யூட் பெஞ்ச் தமிழகத்தில் அமைக்கப்படுமேயானால் அதற்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் மாநில அரசே செய்து தரும் என்ற உறுதியையும் நாம் சொல்லியிருக்கிறோம். தற்போது சென்னை

யில் இருக்கிற சட்டக் கல்லூரி, லா காலேஜ் ப்ரிமிஸஸ்-யையும் அதோடு அதன் அருகில் உள்ள ஒரு புதிய கட்டிடம் ஆகிய இரண்டு கட்டடங்களையும் முழுமையாக உச்ச நீதிமன்றத்திற்கு ஒதுக்கி விடுவது என்றும் அதோடு உச்ச நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் சென்னையில் தங்குகிறபோது அவர்களுக்கு வசதியான வீட்டு வசதிகள் செய்து தரப்படும் என்றும் உச்ச நீதிமன்றத்தின் Staff of the Regist y ரெஜிஸ்ட்ரார் அலுவலகத்தைச் சேர்ந்த பணியாளர்கள் தங்குவதற்குக்கூட வீட்டு வசதி செய்து தரப் படும் என்றும் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களிடம் விரிவாகச் சொல்லி இருக்கிறோம். அவர்கள்கூட லா காலேஜ் ப்ரிமிஸஸ்-யை நேரடியாகச் சென்று பார்வையிட்டு சென்றிருக் கிறார்கள். மைய அரசு ஒரு நல்ல முடிவை இது குறித்து விரை வில் எடுக்கும் என்று நம்புகிறோம்.

அடுத்து, உயர்நீதிமன்றத்தின் ஒரு பிரிவு மதுரையில் இருக்க வேண்டும் என்ற தார்மீகக் கோரிக்கையை உயர்நீதி மன்றம் சில கட்டங்களில் ஏற்றுக் கொள்ளவில்லை யென்றாலும்கூட அதன் தேவையை, மக்கள் சென்னை நோக்கி இவ்வளவு தூரம் வரு வதற்கு எவ்வளவு பணம் செலவாகிறது என்ற காரணத்தால் மைய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. மத்திய அரசு அந்தக் கோரிக்கையையும் ஏற்கும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்களும், மாண்பு மிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்களும் பேசுகிறபோது சில பிரச்சினைகள் பற்றிச் சொன்னார்கள். இஸ்மாயில் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவில்லை, முருகேசன் கமிஷன் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தவில்லை என்றும் சொன்னார்கள். பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த பணம் ஒரு தடைக்கல்லாக இருப்பதை உறுப்பினர்கள் அறிவர். கடந்த எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு கடந்த இரண்டாண்டுக் காலமாக அதிகப்படியாக, மைய அரசின் ஏழாவது நிதிக் குழுவின் நிதி உதவி அடிப்படையிலும் மாநில அரசின் வருவாயிலிருந்தும் பல நிர்வாகச் சீர்திருத்தங்களை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

சிலருக்கு பரிசாக பதவி உயர்வு தரப்படுகிறது என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சொன்னார்கள். அப்படி பரி சாக யாருக்கும் இந்த அரசால் பதவி உயர்வு தரப்படவில்லை. காரணம் இந்த அரசுக்கு பரிசு தரக்கூடிய அளவிற்கு சாதகமாக யாரும் எதுவும் செய்து விடவில்லை. செய்தாலும் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். இந்த அரசைப் பொறுத்த வரை யில் அதிகாரிகள் பாரபட்சமில்லாமல், ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்ற நோக்கமில்லாமல் மக்கள் நலன் கருதி அவர்கள் நேர்மை யாகச் செயல்பட வேண்டும் என்பதில்தான் இந்த அரசு அக்கறை யாக இருக்கிறது. திரு. பழனியப்பன் அவர்கள் பேசுகிறபோது





இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக பரிசாக பதவி உயர்வு தரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் ஒரு வழக்கறிஞர், அவர்களுக்கு அதைப்பற்றி அதிகமாக நான் சொல்ல வேண்டிய தேவை இல்லையென்று கருதுகிறேன். காரணம், விதியில் கூட

(பிற்பகல் 1.40)

"When there is enquiry pending the pending enquiry, cannot be a bar for promotion."

என்றிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் பதவி உயர்வு தாற்காலிகமாக தரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட பதவி உயர்வு தாற்காலிகமாகத் தரப்பட்டிருக் கின்றது என்று சொன்னார்கள். உயர்நீதி மன்றம் உத்தரவிட் டிருக்கிறது.

'The Government should pass early orders on the request in the light of G.O. 211 P. & AR, dated 27th February 1980.'

என்ற உத்தரவின் அடிப்படையில்தான், அதோடு, விசாரணை அதிகாரி கூட, அவரை தற்காலிக பணி நீக்கத்திலிருந்து நீக்கி, மேற்கொண்டு சொந்த அடிப்படையில் பணியில் சேர்க்கப்பட்டு, அந்த வகையில் பணியாற்றி புரமோஷன் வருகின்றபோது சீனி யாரிடி-கம்-மெரிட் என்று பேசிசிலே பரிசீலிக்கப்பட்டது. அந்த தற்காலிக பதவி உயர்வு கொடுத்ததும், மற்றவர்களைவிட அவருக்கு அன்-பிளமிஷ்ட் என்று இருக்கின்ற காரணத்தினாலே தான். மற்றவர்களுக்கு கிட்டத்தட்ட ஒரு விசாரணை, இரண்டு விசாரணை, மூன்று விசாரணை என்றிருக்கின்ற காரணத்தினால், பியூர்லி சீனியாரிடி-கம்-மெரிட் பேசிசிலே, என்ற அடிப்படையில் பதவி உயர்வு செய்யப்பட்டது. அது மட்டுமல்ல. விசாரணை தற்போது நடந்து வருகிறது. இறுதி முடிவு என்னவோ, அந்த முடிவின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும்.

'When charges are pending against all the persons, a person against whom records are favourably better was being temporarily promoted, taking into account his seniority.

விசாரணை முடிவுகள் அடிப்படையில், அந்த சம்பந்தப்பட்ட அதிகாரி, மற்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

We c nnot have things prejuc ged

உயர்நீதி மன்றத்திலே மனோகரன் வழக்கிலே ஒரு தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. சி. பொன்னையன்] [1982 மார்ச் 20

Government cannot take action against any Officer based on the findings of an Enquiry Commission.

என்று தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். அப்போதும்,

'Based on independent materials other than materials covered by Commission alone, action can be taken by the Government.'

என்ற தீர்ப்பை நீதிபதி மோகன் டிவிஷன் பெஞ்சு தீர்ப்பாகச் சொல்லியிருக்கின்ற காரணத்தால், உயர்நீதி மன்றத்தின் அந்தத் தீர்ப்பிற்கு உட்பட்டுத்தான் செயல்பட வேண்டும் என்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர்கள், பலவிதமான கோரிக்கைகளை விடுத்தார்கள். உணவு நல்லமுறையிலே இல்லை, அதைக் கண்காணிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஒவ்வொரு சிறைச்சாலையிலும் உபயோகிக்கப்படும் உணவு தரமாக, ஒழுங்காக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே, உடனடியாக கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்த, அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும். அதைப் போலவே, சிறை வார்டர்கள், காவலர்கள் பொறுத்தவரையில், தற்போது அவர்களுக்கு அரைக் கால் சட்டைக் கொடுப்பதற்குப் பதிலாக, முழுக்கால் சட்டையும், பிளாக் ஷூவும் வழங்குவதற்கான முடிவு எடுத்திருக்கிறோம்.

அதைப்போலவே, சென்னை மத்திய சிறைச்சாலையில் பணியாற்றக்கூடிய தற்காலிக பெண் காவலர்களுக்கு தற்போது ரூ. 5 தினக் கூலியாக வழங்கப்படுகிறது. அதை ரூ. 7½ யாக தற்போது உயர்த்த அரசு முடிவு செய்திருக்கிறது.

அதைப்போலவே, தமிழ்நாடு வருவாய்த் துறையின் கீழிருந்து 119 கிளைச் சிறைச்சாலைகளில் 26 கிளை சிறைச்சாலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, சிறைச்சாலை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், பலமுறை பேசுகின்றபோது, ரெவின்யூ நிர்வாகத்தின் கீழுள்ள கிளை சிறைச்சாலைகள் மிகமிக வசதி குறைவுள்ளவைகளாக இருக்கின்றன, அவைகளை சிறைச்சாலை நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே 1982–83 ஆம் ஆண்டிலே 55 கிளைச் சிறைச்சாலைகளையும், அடுத்த ஆண்டில் மீதமுள்ள 38 கிளைச் சிறைச்சாலைகளையும் சிறைச்சாலை நிர்வாகத்தின் கீழ் அரசு கொண்டு வரும் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலவேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக ஜப்தி நடவடிக்கையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்



1982 மார்ச் 20] [திரு. சி. பொன்னையன்]

கள் சொன்னார்கள். ஜப்தி நடவடிக்கையைப் பொறுத்தவரைக்கும் தவிர்க்கமுடியாத ஒன்று என்பதை முதற்கண் அவைக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் ஏதோ மாநில அரசு விவசாயிகளுக்குத் தொல்லை தரவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த ஜப்தி நடவடிக்கைகளைச் செய்கிறது என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக இந்த விளக்கத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும்கூட இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் அரசியல் உணர்வுகளுக்கு அப்பால் நின்று தமிழகத்தின் ஒட்டுமொதத கிராமப்புற முன்னேற்றத்தை மனத்திலே கொண்டு இந்தப்பிரச்சினையை அணுக வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளை நான் விடுக்க விரும்புகிறேன். காரணம் இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வர் ஆனதற்குப்பிறகு பாரதத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு விவசாயிகளுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பல கோடி ரூபாய்களை வழங்கியிருக்கிறது என்பதை ஏற்கெனவே நான் இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளின் துயர்துடைக்க வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு சலுகைகள் அளிப்பதற்கு இதுகாறும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அதையும்மீறி விவசாயிகளிடமிருந்து அவர்களது கடன்களை வசூல் செய்ய வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சலுகைகள் செய்வது என்பது வேறு.

ஆனால் விவசாயிகள் வாங்கிய கடனைத் தரமுடியாது என்ற நிலையைத் தொடர்ந்து எடுப்பார்களானால் அதனால் ஏற்படுகின்ற பின்விளைவுகள் என்ன என்பதனை மைய அரசு மாநில அரசுக்கு அடிக்கடி சுட்டிக்காட்டுகிற காரணத்தினால் அந்த அடிப்படையில் நாம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் இதுகாறும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பலவகைக் கடன்களாக 341.48 கோடி ரூபாய் நிலுவையாக இருந்தது. இந்த 122.90 கோடி ரூபாயில் 341.48 கோடி ரூபாய்ஓவர் டியூஸ் ஆகி தவணை கடந்த கடன்களாக மாறி உடனடியாக வசூலிக்க வேண்டுமென்ற நிலையில் அந்தக் கடன் இருக்கிறது. அதை உடனடியாக நாம் வசூலிக்கத் தவறுவோமானால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை மைய அரசு ரிசர்வ் வங்கி, ஏ.ஆர்.டி.சி. உலக வங்கி போன்றவை அவ்வப்போது சுட்டிக் காட்டியிருக்கின்றன. இது குறித்து இந்த அவைக்குநான்பல முறைசுட்டிக்காட்டியிருக்கிறேன். கடனை வசூல் செய்வதிலே அரசு மெத்தனமாக இருக்குமேயானால் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு அடுத்த பயிருக்குக் கடன் தரக்கூடிய நிலை இல்லாமல் தமிழ்நாடு பிளாக் லிஸ்டிலே சேர்க்கப்படும் என்ற

எச்சரிக்கை கூட செய்யப்பட்டிருக்கிறது. ஒரு ஆண்டுக்கு முன்னாலே அந்த எச்சரிக்கையை ரிசர்வ் வங்கியும், ஏ.ஆர்.டி.சி.யும், உலகவங்கி போன்றவைகளும் மைய அரசும் தெரிவித்தும் நாங்கள் வேண்டியதன் அடிப்படையில் கிட்டத்தட்ட பல மாநில அரசுகளுக்கு வாய்ப்பை தந்தார்கள்.

தற்போது இறுதியாகத் தெரிவித்து விட்டார்கள். 30-6-82 க்குள் இந்த கடன் வசூல் செய்வதை முழுமையாக நடைமுறைப் படுத்தவில்லை என்றால் தமிழ்நாடு பிளாக் லிஸ்ட்டிலே சேர்க்கப் படும் என்று பலமுறை எழுதியிருக்கிறார்கள். 26 ஜூன் 1979 ஆம் ஆண்டிலே மாண்புமிகு மத்திய அமைச்சராக இருந்த திரு. பர்னாலா மாநில அரசுக்கு மாண்புமிகு முதல்வர்\ அவர்களுக்கு லெட்டர் எழுதியிருக்கிறார்.

'Please refer to my D. O.letter No. 1048;M, dated the 28th February 1979, regarding the position of overdues of the Tamil Nadu Land Development Bank and its primaries and on the need to evolve a time-bound rehabilatation programme so as to enable these institution to participat in the Third ARDC Credit Project.

என்று குறிப்பிட்டு

'So as to enable these institutions to participate in the third ARDC Credit Project

எனச் சொல்லி அனைத்து முயற்சிகளையும் அரசு கண்டிப்பாக எடுக்க வேண்டும் என்று திரு பர்னாலா அவர்கள் அப்போது குறிப்பிட்டார்கள்.

அதைப்போலவே மைய விவசாய அமைச்சர் திரு ராவ் பிரேந்திரசிங் அவர்கள் மாண்புமிகு மாநில கவர்னர் அவர்களுக்கே ஒரு அஞ்சலை எழுதியிருக்கிறார்கள். அந்த அஞ்சலிலே,

'As you are aware' institutional credit has become significant for agricultural and rural development in the context of our plans and Programmes,

என எழுதி

'The Land Development Bank of your State is one such institution: Unless effective steps are taken for the recovery of loans due, Iam afraid that your State may be faced with a choking of funds through the Land Development Banks which will hamper development programmes.'





என 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி 27 இல் நேரடியாக ஒரு தாக்கீதை அனுப்பியிருக்கிறார்கள்.

அதை அடுத்து, 1980 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் தேதியன்று மைய அரசிடமிருந்து மீண்டும் தாக்கீது திரு ராவ் பிரேந்திர சிங் அவர்களிடமிருந்து வந்தது. அதிலேஅவர்கள் சற்று சீரியஸ்ஸாகவே எழுதியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 1-60]

Despite certain measures taken by the State Government in implementing the rehabilitation programme, I find that the overdues position of the SLDB and its primaries continues to be unsatisfactory......

You will agree with me that against this backgroind it would be difficult for the S. L. D. B. to implement the programmes involving their investments in the Farm sector. As you are awere with great difficulties that we could persuade I.D.A.—I.D.A. means International Development Agency not to insist on the exclusion of certain states including Tamil Nadu from the ARDC III Credit Project, which commenced on 2nd January 1980.

என்று எழுதியிருக்கிறார்கள். அப்போது அவர்கள் சுட்டிக்காட்டியது, இண்டர்நேஷனல் டெவலப்மென்ட் ஏஜென்சி உலக வங்கியினுடைய ஒரு பிரிவு தமிழகத்தை அடுத்த கடனுக்கு தகுதியுடையது இல்லை என்று ஒதுக்கிவிடக்கூடிய அபாயம் இருக்கிறது, எனவே உடனே கடனை வசூல் செய்யுங்கள் என்று மாண்புமிகு ராவ் •பிரேந்தர் சிங் அவர்கள் சொன்னார்கள்.

You will share with me the anxiety that we should not lose I.D.A. assistance due to lack of satisfactory recovery performance in a few States, like Tamil Nadu.

என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் கூட டிசம்பர் 3 ஆம் நாள் 1980-ல் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு அஞ்சல் எழுதியிருக்கிறார்கள்.

I am writing this letter to invite your personal attention to the very serious and critical problem of overdues of the State Land Development Bank and those of the primary Land Development Banks or Tamil Nadu:

என்று எழுதி அதிலே மிக முக்கியமாக அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்—

[திரு. சி. பொன்னையன்] 1982 மார்ச் 20]

In this context, the very sharp deterioration in the overdues position in Tamil Nadu is causing us deep concern. The World Bank have pointed out to us the worsening overdues position of the SEDB and PLDBs and have indicated that Tamil Nadu State may not even be eligible for continued participation in ARDC III when the strict eligibility criteria of reeovery of 50 per cent overdues come into force shortly. The continuance of this sitution will naturally affect adversely the State's inclusion in ARDC IV by the World Bank. It will be most embarrassing if such a situation were to arise as it would detract from the objective of nation-wide coverage of ARDC credit projects. It scome from the position of overdues of SLDBs. and PLDBs that no vigorous follow-up action has been taken for implementing rehabilitation programme and to recover overdues.

என்று சொல்லி கண்டிப்பான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டினார்கள். 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் தேதியன்று மீண்டும் விவசாயத் துறை மத்திய அமைச்சரிடமிருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு தாக்கீது வந்தது. அதிலே அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்

You may kindly recall that, while addressing the National Development Council on the 13th February, 1981, the Prime Minister had referred to the need for caution in taking decisions concerning recovery of loans

என்று சொல்லி

This is despite the fact that the loans advanced by the Co-operative Land Development Banks are essentially given for creation of productive assets. As a result of poor recovery, four or five major States of India, including Tamil Nadu run the risk of being denied their share of credit provided by the World Bank to the Agricultural Refinance and Development Corporation.

என்று சொன்னார்கள். சொல்லி இறுதியாக எச்சரிக்கையாகவே சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய சார்பிலே

If their capacity to meet the increasing needs of the rural sector is impaired in any way, the pace of progress in rural areas will itself be jeopardise. It is, therefore necessary to refrain from taking decisions that have long-term adverse effects on the efficient functioning of the co-operative credit institution like blanket measures for write-off or suspension of recovery or total ban on the use of coercive processes.

என்று சொல்லி ஜப்தி நடவடிக்கை போன்ற கடுமையான நடவடிக்கைகளை எடுத்து கடனை வசூலிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஏ.ஆர்.டி.சி. யிடமிருந்து 1981 ஜனவரி 11 ஆம்



1982 மார்ச் 20]

தேதியன்று நேரடியாக அஞ்சல் அரசுக்கு வந்தது. ஜப்தி போன்ற கடுமையான நடவடிக்கை எடுத்து கடனை வசூலிக்காவிட்டால் தமிழகம் அடுத்த விவசாயத்திற்கு கடன் பெறக்கூடிய தகுதியை இழந்துவிடும் என்ற எச்சரிக்கையை சொல்லியிருக்கிறார்கள். இதை நான் இந்த அளவிற்கு சுட்டிக்காட்டுவதற்கு காரணம், பிரச்னைகள் விவசாயிகள் மத்தியிலே இல்லாமல் இல்லை; இருக்கின்றன என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அந்த காரணத்தாலே தான் எந்த மாநிலமும் தராத அளவிற்கு 200 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு சலுகைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தந்தது. விவசாயிகளுடைய குறைகளை களைவதற்கு மாண்புமிகு முனு ஆதி அவர்கள் தலைமையில் உயர்மட்ட குழு ஒன்று கூட செயலாற்றிவருவதை மாண்புமிகு உறுப்பினர்களும், அவையும் தெளிவாக அறிவார்கள். விவசாயிகளுக்குத் சில சலுகைகளைச செய்யவேண்டுமென்று அரசு முடிவெடுத்து, அத்தகைய சலுகைகளைச் செய்தாலும்கூட அவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். மாநில அரசினுடைய வருவாயிலிருந்துகூட அவர்களுக்கு அந்தத் கடனை ரத்து செய்வது கூடாது என்றும் மாநில அரசு அப்படி கடனை ரத்து செய்வது என்ற ஒரு முடிவுக்கு வருமேயானால் மாநில அரசுக்கு மைய அரசு ஒதுக்கக்கூடிய நிதியிலிருந்து அது குறைக்கப்பட்டு விடும் என்றுகூட மாநில அரசை மைய அரசு அச்சுறுத்துகிற காரணத்தால் தரவேண்டிய கடனை விவசாயிகள் தராமல் இருக்க முடியாத ஒரு சூழ்நிலை தற்போது ஏற்பட்டிருக்கிறது.

தமிழக விவசாயிகளுடைய ஒட்டுமொத்த நலன் கருதி, தமிழகம் பிளாக் லிஸ்ட் ஆகிவிட்டால் அடுத்த பயிருக்குக் கடன் கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டுவிடும் என்ற அச்சுறுத்தல் காரணமாய் எப்படியும் இந்தக் கடனை வசூல் செய்ய வேண்டுமென்ற முறையிலே இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அதே நேரத்தில் சில விவசாயிகள் உடனடியாகப் பணத்தைத் தரமுடியவில்லை. நாங்கள் 15 தினங்கள் அல்லது 20 தினங்கள் அல்லது 25 தினங்களுக்குள் அடுத்த தவணையில் தருவேன் என்று சொல்வார்களானால் அதையும் பரிவோடு கருதி, அவர்கள் இன்னலுக்கு ஆளாக்கப்படக்கூடாது, ஆனாலும் கடன் வசூல் கண்டிப்பாக நடைபெற்றாக வேண்டுமென்ற அடிப்படையில்தான் நடவடிக்கையை அரசு தற்போது மேற்கொண்டிருக்கிறது என்பதனை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஏற்கெனவே " நாசே " என்ற ஒரு அமைப்பின் மூலமாகப் படித்து வேலையில்லாமலிருக்கிற இளைஞர்களுக்கு ஒரு கூட்டுறவுச் சங்கத்தை முதன் முறையாக, தமிழகத்தில் சில மாதங்களுக்கு முன்னால் நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அந்த

அமைப்பினுடைய கிளைகளைத் தமிழகத்தில் ஒவ்வொரு வட்ட அளவிலும் ஏற்படுத்தி, அதன்மூலமாக, கிட்டத்தட்ட 1,75,000 பேர்களுக்கு Self employment Scheme சுய வேலை வாய்ப்பு, குறிப்பாக சைக்கிள்கடை, தையற்கடை, சலூன், சலவைச்சாலை தச்சுப்பட்டறை போன்றவை அமைத்து வேலை வாய்ப்பு தரக் கூடிய ஒரு திட்டத்தை அரசு தற்போது தீட்டி இருக்கிறது. இதை வரும் ஆண்டிலே அரசு நடைமுறைப்படுத்தும் எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாடு மாநில கூட்டுறவுக் வளர்ச்சிக் கழகம் என்ற ஒன்றை எப்படி, தேசிய அளவில் N.C.D.C. இருக்கிறதோ, அதைப்போலவே தமிழகத்திலே இருக்கிற கூட்டுறவு அமைப்புகள் எல்லாம் கடன் பெறுவதற்கும், அவைகளில் வளர்ச்சிக்கு உதவும் வகையிலும் ஏற்பாடு செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அடுத்து, நுகர்வோர் கூட்டுறவு அங்காடிகள் திறம்பட செயல்பட, ஆலோசனை வழங்க, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது.

அதைப்போலவே, கூட்டுறவு கடன்கள் செலுத்தாதவர்கள் நிலங்களை, கடன்களுக்காக ஜப்தி செய்திருந்தால், அக்கடன் தொகைகளைத் திருப்பி செலுத்தியவுடன், ஜப்தி செய்த நிலம் கூட்டுறவு சொஸைட்டிக்கு உரிமம் என்ற முறையிலே வந்துவிட்ட பிறகு, அந்தச் சாதாரண ஏழை விவசாயிகள் அந்தக் கடனைத் தரமுடியும் என்ற நிலைமைக்கு வருவார்களானால், அவர்களுக்கு அந்த நிலத்தைத் திருப்பித் தரலாம் என்று இன்றைய தினம் அரசு முடிவெடுத்திருக்கிறது.

அதைப் போலவே, மினி சூப்பர் மார்க்கெட் பொறுத்த வரைக்கும் பல வட்ட அளவிலே அவை இல்லாமலிருக்கின்றன. வரும் ஆண்டுகளின், தமிழகத்தில் 82 வட்டத் தலைநகரங்களில் கூட்டுறவு மினி சூப்பர் மார்க்கெட்டுகளை, பல்பொருள்களும் கிடைக்கக்கூடிய அளவுக்கு, அவற்றை ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

கடந்த சில மாதங்களாக, டி.யூ.சீ.எஸ். காமதேனு, மற்றும் சிந்தாமணி மூலமாக காய்கறிகளை ஊட்டியிலிருந்து நேரடியாகக் கொண்டுவந்து, அருகாமையிலிருக்கிற கிராமங்களிலிருந்து நேரடியாகப் பெற்று, மக்களுக்கு அதை விநியோகிக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு அது தற்போது வெற்றிகரமாக இயங்கி வருகிறது. மிகத் குறைந்த விலைக்கு அந்த அங்காடிகள் மூலமாகத் தற்போது காய்கறிகள் தரப்படுகின்றன. இந்த முறை



இப்பொழுது வெற்றிகரமாக இருக்கிற காரணத்தால் வரும்ஆண்டிலே இந்தத் திட்டத்தை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய நகரங்களில் செயல்படுத்தவும், சென்னையில் முழுமையாக அதை விரிவுபடுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

[பிற்பகல் 2—00]

மேலும், தமிழ்நாடு பாட நூல் நிறுவன குறிப்பேடுகளை யெல்லாம் தனியாரும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குத் தரலாம் என்ற நிலையை மாற்றி அரசு ஒரு ஆணையின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகத்தான் இந்தத் தமிழ்நாடு பாட நூல் நிறுவன குறிப்பேடுகளை மாணவர்களுக்குத் தர வேண்டுமென்ற உத்தரவை அரசு இட்டிருக்கிறது.

தேங்காய் விலை அதிகாமாக இருந்தாலும் உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவில்லை; வாங்கி உண்ணுகின்ற நுகர்வோருக்கும் அதிக விலை என்ற நிலையைப் போக்குவதற்காக உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாகத் தேங்காயைக் கொள்முதல் செய்து மக்களுக்குக் குறைந்த விலையிலே விநியோகம் செய்வதற்காக உற்பத்தியாளர்களுக்கு ஊக்கமும் தரக்கூடிய அளவிற்கு Coconut Development Corporation of the Govt. of India. இதனுடைய உதவியைப் பெற்றுத் தமிழகத்தில் தற்போது முதன் முறையாகப் பட்டுக்கோட்டையிலே தேங்காய் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுவிற்பனை சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதைப் போன்ற கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் சிலவற்றை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்படுத்த வரும் ஆண்டில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

நகைக் கடனைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்ற பொழுது சொன்னார்கள். நகைக்கடனைப் பொறுத்த வரைக்கும் மாநில அரசு பார்த்து நகைக்கடனைத் தருவதை நிறுத்திவிட வில்லை என்பதனை நான் முதற்கண் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ரிசர்வ் வங்கியினுடைய கைட்லன்ஸ் அப்படியே இருக்கிறது. ரிசர்வ் வங்கியினுடைய கைட்லைன்ஸ் அப்படியிருக்கின்ற காரணத்தால்தான் நகைக்கடனை நாம் எதிர்பார்க்கின்ற அளவிற்கு, வரும் ஆண்டிலே தர முடியாத ஒரு நிலை ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. காரணம், கடந்த காலத்தில் இல்லாத அளவிற்கு 1975—76-ஆம் ஆண்டில் வெறும் 21 கோடியே 83 இலட்சம் மட்டுமே நகைக்கடன் என்று இருந்த நிலை மாறி 1981—82-இல் 154 கோடியே 25 இலட்சம் நகைக்கடன் தரப்பட்டிருக்கின்றது. மார்வாரிகள்—மணிலென்டார்ஸ்னுடைய கொடுமையிலிருந்து சாதாரண மக்கள் விடுதலை பெறவேண்டுமென்ற நோக்கோடுதான் இந்தத் திட்டத்தை நாம்

விரிவுபடுத்தினோம். ஆனாலும், தற்போது ரிசர்வ் வங்கியைப் பொறுத்த வரைக்கும் மத்திய கூட்டுறவு வங்கிகள் தங்களிடம் உள்ள கால மற்றும் கேட்புக் குறிப்புகளில் 5 சதவீதத்திற்கு மேல் நகைக் கடன்களாக வழங்கக் கூடாது என கூறியிருக்கிறார்கள். கூட்டுறவுக் கடன் சங்கங்கள் தங்கள் சொந்த நிதியிலிருந்தே நகைக் கடன்களை வழங்க வேண்டிய நிலை இருக்கின்றன. ஆனால் வாங்கிய கடனை விவசாயிகள் திருப்பித் தராத நிலையில் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்த நிதி வசதி எந்த அளவிற்கு இருக்கும் என்பதும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். இதை 15 சதவீதமாக உயர்த்த வேண்டுமென்ற அரசின் கோரிக்கையை ரிசர்வ் வங்கி மறுத்துவிட்ட காரணத்தால் இந்த நிலையிருக்கிறது. இருந்தாலும் இந்த நிலையிலும் கிட்டத்தட்ட 100, 150 கோடி ரூபாய் அளவிற்கு அடுத்த ஆண்டு நகைக் கடனைச் சொந்த நிதியிலிருந்தும் கொடுப்பதற்கு இந்த 5 சதவீதம் என்ற கட்டுப்பாட்டுக்குள்ளே கொடுக்க அரசு நடவடிக்கையெடுக்கும் என சொல்கிறேன். தற்போது Recovery is expeditiously being taken up. அந்தந்த மைய வங்கிகளுக்கு வருவாய் அதிகமான பிறகு நகை கடன் கொடுப்பது இன்னும் சில வாரங்களிலே தொடர்ந்து மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கட்டுப்பாட்டுத் துணிகளைப் பொறுத்த வரைக்கும் மைய அரசு கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக ஏழைகளுக்குத் தரக் கூடிய அந்தந்தத் துணிகளை—கண்ட்ரோல் க்ளாத்தினுடைய விலையை உயர்த்தி விட்டார்கள். அப்படிக் கட்டுப்பாட்டுத் துணிகளுடைய விலையை மைய அரசு உயர்த்தி விட்ட காரணத்தால் கூட்டுறவு அமைப்புகளின் மூலமாக ஏற்கெனவே வாங்கியிருக்கின்ற துணிகள் போக, புதிதாக எதை வாங்கினாலும் விற்க முடியாது என்ற நிலைதான் இருக்கிறது. காரணம், மைய அரசு உயர்த்தியிருக்கின்ற அந்த விலை ஓப்பன் மார்க்கெட்டிலேயே தனியார் விற்கின்ற விலையைவிட அதிகமாக இருக்கின்ற காரணத்தால், எந்த நலிந்த பிரிவினருக்காகக் கூட்டுறவு அமைப்பு இருக்கிறதோ, கண்ட்ரோல்ட் க்ளாத் விற்கப்பட வேண்டுமோ அந்த நலிந்த பிரிவினர் மைய அரசு விலை உயர்வை ஏற்படுத்தியதால் அந்தப் பலனை நுகர முடியாத ஒரு நிலையில் இருக்கிறார்கள். இது குறித்துக்கூட அரசு மைய அரசுக்குச் சொல்லியிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். ரிசர்வ் வங்கி ஒரு பர்சன்ட் வட்டியை ஏற்றிவிட்டது என. இது குறித்து மாநில அரசும் கவலை கொண்டிருக்கிறது. ஏற்கெனவே விவசாயிகள் தங்களிடமிருந்து





பெறக்கூடிய வட்டியினைக் குறைக்க வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பிக் கொண்டிருக்கும்போது ரிசர்வ் வங்கி ஒரு சதவீதம் வட்டியினைத் தற்போது உயர்த்தி விட்ட காரணத்தால் தவிர்க்க முடியாத நிலையிலே, குறிப்பாக, விவசாயிகள், நெசவாளிகளுக்கெல்லாம் அவர்கள் பெருகின்ற கடனில் 1 சதவீதத்தை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ரிசர்வ் வங்கி மீண்டும் மைய அரசும் இந்த வட்டி உயர்வைக் குறைக்கும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது. இது குறித்து அரசு மைய அரசோடு கண்டிப்பாக பேசும். அதையொட்டி, டிபரன்ஷீயல் ரேட் ஆப் இன்டரஸ்ட் என்று ஒரு திட்டத்தை முதன் முறையாகத் தமிழகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளில் 4 சதவீதம் டிபரன்ஷ்யல் ரேட் ஆப் இன்டரஸ்ட் கடன் வ்ழங்குகின்ற திட்டம் ஏற்கெனவே இருக்கிறது. கூட்டுறவு வங்கிகளின் மூலமாகவும் Not nly for u ban Corpo ation Ba.k but f r all er dit insti u ion 4 சதவீதம் டிபரன்ஷ்யல் ரேட் ஆ ப் இன்டரஸ்ட் என்ற முறையில் நலிந்த பிரிவினருக்கு, ஆடு, மாடுகள், கறவை மாடுகள் ரிசர்வ் வங்கியில் அனுமதிக்கப்பட்ட சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்குகடன் தாராளமாககொடுக்க வேண்டுமென்ற முறையில் அந்தத் திட்டத்தை வரும் ஆண்டில் தீவிரமாக அனைத்துப் பகுதிகளிலும் நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில். பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற அதே நேரத்தில் ஊழியர்களுடைய வருவாயையும் ஊதியமும் ஒரு நல்ல நிலையில் இருக்க வேண்டுமென்பதை அரசு உணருகிறது. அந்த அடிப்படையில் பிரைமரி லான்ட் டெவலப்மென்ட் பாங்க் ஊழியர்களுக்கு ஏற்கெனவே சில சலுகைகள் தந்திருக்கிறோம். இன்னும் சில சலுகைகளையும் தர அரசு எண்ணியிருக்கிறது. அது மட்டுமல்லாமல், மினிமம் வேஜ் ஆக்ட் கண்டிப்பாக ஒவ்வொரு கூட்டுறவு சங்கந்திலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற உத்தரவையும் அரசு இட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் கருப்பையா அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

புதிய கூட்டுறவுச் சட்டம் எப்போது வரும் என்ற அச்சம் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் கூட அச்சப்பட வேண்டாம். பன்னெடுங்காலமாக இந்தச் சட்டம் வராமல் இருந்த போதிலும் தற்போது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைத்துக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுடைய நல்ல ஆலோசனை ஆதரவின் அடிப்படையில் இந்தச் சட்டம்நலிந்த பிரிவினருக்கும் விவசாயிகளுக்கும் நன்மை தரக்கூடிய சட்டமாக அமைய வேண்டுமென்ற அடிப்படையில் குறைபாடுகள் இல்லாத சட்டமாக இருக்க ண்டுமென்ற நோக்கோடு தவறுகள் செய்ய

வாய்ப்பில்லாத அளவுக்கு There shou'd be self checking sys'ems என்ற அடிப்படையில், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வர இருக்கிறது. இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு அரசியல் வாதிகள் கூட அதிகமாக, எந்த ஆட்சி இருந்தாலும், தலையிட முடியாத நிலைமை ஏற்படும். மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டம் அமையும். இந்தச் சட்டம் இந்த அளவு வரக்கூடிய அளவுக்கு, ஒத்துழைத்த அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த பொறுக்குக் குழு உறுப்பினர்களுக்குக் கூட நன்றியைக் கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அனைவருக்கும் நான் பதில் சொல்ல முடியாத நிலையில், நேரம் இல்லாத காரணத்தால், இருக்கிறேன். உங்களுடைய கோரிக்கைகளை, அந்தக் கோரிக்கைகளுடைய தன்மையின் அடிபடையில், அரசு ஆய்ந்து, தக்க நடவடிக்கைகளை அவ்வப் போது எடுக்கும் என்று உறுப்பினர்களுக்குச் சொல்லி அமர்கிறேன்.

**திரு. துரைராமசாமி :** தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் தாராபுரத்தில் ஒரு புதிய சப் கோர்ட் திறக்க அரசு உத்தேசித்துள்ளதா...... (மணி அடிக்கப்பெற்றது)

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது பல விஷயங்களை நலிந்த பிரிவினருக்காகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நன்றி. ஆனால், நம்முடைய உயர்நீதிமன்றம் நூற்றாண்டுகளைக் கடந்தபிறகும் கூட இன்றைக்கு இருக்கின்ற அமைப்பின்படி நலிந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு உத்தியோகம் கொடுப்பதிலே வேலை வாய்ப்பு ஸ்தாபனங்கள் மூலமாகச் செய்ய வேண்டிய நிலையில் இல்லை. அவர்களே நேரடியாக நியமனம் செய்கிறார்கள். ஆனால், அவர்களுக்குச் சேர வேண்டிய பங்குகளைக் கொடுப்பதில்லை. அதற்கு வருங் காலத்தில் ஆவன செய்ய அமைச்சர் அவர்கள் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு சேர வேண்டியதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஜெயிலிலே இருக்கின்ற வார்டர்களில் பெண்களும் இருக்கிறார்கள். அந்தத் தொகையை ரூ. 5-லிருந்து ரூ. 7½ஆக உயர்த்தியிருப்பதற்கு நன்றி சொன்னாலும், 10, 15 ஆண்டுகளுக்கு மேற்பட்டு வேலை செய்கின்றவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை, அவர்கள் ஓய்வுகாலத்தில் எந்தவிதமான உதவித் தொகையும் கொடுப்பதில்லை. குறிப்பாக, சென்னை சிறைச்சாலையிலே, பின்தங்கிய தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்கள்



வேலையிலிருந்து சென்ற பிறகு, அவர்கள் நடுத்தெருவில் நிற்கக் கூடிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. வருங்காலத்திலாவது, அவர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தேவையான சதவீதம் ஒதுக்கப்படவில்லையென்பது குறித்து, உயர்நீதிமன்றத்திற்குக் கண்டிப்பாக இந்த அரசு சொல்லும். உயர்நீதிமன்றமாக இருந்தாலும், மற்ற நீதித் துறையாக இருந்தாலும், அரசாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைப் பொறுத்தவரைக்கும் கண்டிப்பாக அந்த 18 சத விதம் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்ற கொள்கை அரசினுடைய ஆணித்தரமான கொள்கை. அதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்கும். அண்மையில் கூட டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் செலக்ஷன் பொறுத்தவரைக்கும் தாழ்த்தப்பட்ட ஒரு பிரதிநிதி அமர்த்தப்பட வேண்டுமென்று கம்யூனல் ஜி.ஓ.வில் இருந்தால் கூட யாரும் தேர்ந்தெடுக்கப்படாமல் அரசுக்கு அந்தப் பரிந்துரை வந்தபோது, அரசு அதைத் திருப்பி உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பி இருக்கிறது. தாழ்த்தப்பட்ட ஒருவர் பெயர் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் பேனலில் இல்லை. அதையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

(பிற்பகல் 2-10)

**கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்.**

திருவாளர்கள் சு. பாலன், ஏ. டி. கருப்பையா ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திருவாளர்கள் கே. கல்லன், கே. ஆர். சுந்தரம் ஆகியோர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப் பெற்றனவாக கருதப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கையின் எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,20,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.

திருவாளர்கள் கு. ரமணி, தி. க. நல்லப்பன், சு. பாலன் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு நா. சிவஞானம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி.

''மானியக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,47,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 23—கூட்டுறவு.

திருவாளர்கள் கே. எம். தங்கமணி, கு. ரமணி, எம். ஆறுமுகம் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெற்றுக்கொள்ளப் பெற்றன.

திரு பெ. சு. திருவேங்கடம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி.

''மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,72,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவலகள் இத்துடன் முடிவுற்று, 22-3-1982 காலை 9-0) மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

**பின்னர் பேரவை பிற்பகல் 2-12 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.**



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

ஏதுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

129. 1982-83ஆம் ஆண்டில் தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

130. 1982-83ஆம் ஆண்டில் பட்டுவளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

131. ''தமிழகத்தில் பட்டுத் தொழில்'' என்கிற சிறு புத்தகம் (தமிழ்).

132. கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

133. கோரிக்கை எண் 14—தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1982-83 (தமிழ் ஆங்கிலம்).

134. கோரிக்கை எண் 23—கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

135. ''தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்''—வங்கியின் வளர்ச்சி பற்றிய சிறு குறிப்பு—31-12-1981-ல் உள்ள படி (தமிழ், ஆங்கிலம்).

136. ''தமிழகத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள்'' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

137. ''தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள்'' பற்றிய குறிப்பு, 30-6-1981-ல் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்).

138. ''தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்'' பற்றிய குறிப்பு. 1981-82 (தமிழ், ஆங்கிலம்).

139. ''உழவர்களின் நண்பன் டான்ஃபெட்—தமிழக உழவர்களுக்கு ஒரு கூட்டுறவு நிறுவனம்'' என்ற புத்தகம் (தமிழ் ஆங்கிலம்).

140. ''சிறுதொழில்களுக்கு சிட்கோவின் சிறப்பான சேவை —1982'' என்கிற சிறு புத்தகம் (தமிழ்).

141. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77, 1977–78ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளில் சில துறைகளுடன் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் 16ஆவது அறிக்கை (ஏழாவது பேரவை).

## இணைப்பு I.

(5ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 582–க்கான விடையைக் காண்க.)

(1) பத்து அல்லது பதினைந்து அடி உயரம் வளர்ந்த பல நிறங்களில் பூத்துக்குலுங்கும் மரங்களையும், தென்னை மரங்களையும்; கடற்கரைக்கு எழிலூட்டும் வகையில் மறு நடுவை செய்தல். (By Burlapping Method)

(2) சீரணி அரங்கத்தில் கல்வி சம்பந்தப்பட்ட படக்காட்சிகளும் கார்டூன் படக்காட்சிகளும் காட்டுவதற்கு ஏற்பாடு செய்தல் ;

(3) சீரணி அரங்கத்திலிருந்து வெளியே செல்ல மணலின் நிறத்தோடு பொருந்தும் நிறத்தில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் ;

(4) திறந்த வெளி சிற்றுண்டிச் சாலைகள் நடத்துதல் ;

(5) திறந்த வெளி உடற்பயிற்சிச் சாலை ஒன்றினை ஏற்படுத்துதல் ;

(6) கடற்கரை மணற்பரப்பில் அழகிய வடிவமைக்கக்கூடிய குப்பைத் தொட்டிகளை வைத்தல் ;

(7) கட்டுமரங்கள் மற்றும் மீன்பிடிக்கும் வலைகளை மெரினாவுக்கு வரும் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் குறிப்பிட்ட சில இடங்களில் வைக்க ஏற்பாடு செய்தல்.;

(8) மணற்பரப்பை அசுத்தம் செய்வோர் மீது நடவடிக்கை எடுக்கவும் மணற்பரப்பை தூய்மையான நிலையில் பராமரிக்கவும் ஓர் துப்புரவு ஆய்வாளரை நியமித்தல் ;

(9) மணற்பரப்பை அசுத்தம் செய்வோருக்குத் தண்டனை வழங்க ஓர் நடமாடும் நீதிமன்றத்தை ஏற்படுத்துதல் ;



(10) கடற்கரை பகுதி முழுவதற்கும் பாதுகாப்பு அளிக்க அதிக காவலர்களை நியமித்தல் ;

(11) மின்சார விளக்குகளுடன் கூடிய அழகிய விளம்பரப் பலகைகளை அமைத்தல்.

## இணைப்பு II

(34ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 579க்கான விடையைக் காண்க).

விடை...

(அ) இம்மாநிலத்திற்குள் ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்துக்களில் காயமடைந்தவர் அல்லது விபத்தில் மரணமடைந்திருந்தால் அவர் தம் குடும்பத்தினர் மருத்துவச் செலவையும் பிற உடனடிச் செலவுகளையும் செய்ய ஏதுவான வகையில் முதலமைச்சர் விபத்து நிவாரண நிதியிலிருந்து மாவட்ட ஆட்சியர் மூலமாக ரொக்க உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) விபத்துக்குள்ளானவர்களுக்கு அல்லது விபத்தில் மரணமடைந்திருந்தால் அவர் தம் குடும்பத்தினர்களுக்குக் கீழ்க்கண்ட வீதங்களில் ரொக்கத் தொகை வழங்கப்படுகிறது.

| தொடர் எண். | விவரங்கள். | வழங்கப்பட வேண்டிய தொகை ரூ. | யாரிடம் கொடுக்கப் படவேண்டுமென்பது |
|---|---|---|---|
| 1 | விபத்தில் மரணம் அடைந்தால் | 1,000 | (1) கணவன் (2) மனைவி (3) இறந்தவர் கடைசியாக தங்கியிருந்த மகன் அல்லது மகள் அல்லது ஒரு மகன் அல்லது ஒரு மகளுக்கு மேற்பட்டிருந்தால் அவர்களில் மூத்தவர், (4) தாய் (5) தகப்பன், (6) தங்கை / அக்கா (7) இறந்தவர் தங்கியிருந்த குடும்பத்தில் ஆண் உறுப்பினர். |

| தொடர் எண். | விவரங்கள் | வழங்கப்பட வேண்டிய தொகை, ரூ. | யாரிடம் கொடுக்கப் பட வேண்டும் என்பது. |
|---|---|---|---|
| 2 | பணியாற்ற இயலாமல் போய் விடுதல் அல்லது இரு கண்களை இழத்தல் அல்லது இரு உறுப்புக் களை இழத்தல் அல்லது ஒரு கண்ணையும் ஒரு உறுப்பையும் இழத்தல். | 800 | காயமுற்ற நபர் அல்லது நியமன தாரர். |
| 3 | ஒரு கண்ணை அல்லது ஒரு உறுப்பை இழத் தல். | 400 | காயமுற்ற நபர் அல்லது அவரது நியமனதாரர். |
| 4 | பிற காயங்கள் | 50 | காயமுற்ற நபர் அல்லது அவரது நியமனதாரர். |

(இ) அந்தத் தொகையை உயர்த்தும் உத்தேசம் இல்லை.

## இணைப்பு III

### நீதி நிர்வாகம்.

### கோரிக்கை எண். 13

(57ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, அனைத்துக் குடிமக்களுக்கும் நீதி வழங்குவது இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிருவகிப்பது நீதிமன்றங்களின் பொறுப்பாகும். அரசின் நிருவாகச் செயல் துறையினின்றும் இது தனித்துச் செயற்படுகின்றது. புதிதாக நீதி மன்றங்கள் அமைப்பது பற்றி உயர்நீதி மன்றம் பரிந்துரைப்பதின் பேரில் காலந்தாழ்வின்றி அரசு ஒப்புதல் வழங்குவதோடு நீதி மன்றங்களுக்குத் தேவையான இடவசதி உட்பட அனைத்து வசதிகளுக்கும் வகை செய்வதன் வாயிலாக அரசு தனது பணிகளை ஆற்றுகிறது.



2. நீதி நிருவாகம் பற்றிய சிறப்புக் கூறுகள் பின்வருமாறு.—

13 ஆம் எண். கோரிக்கையும், 'நீதி நிருவாகம்'' தொடர்பான மானியங்களும், இதன் கீழ் குறிப்பிடப்பட்ட நீதிமன்றங்கள், அதிகாரிகள், பணியாளரமைப்பு ஆகியவை குறித்த செலவைக் குறிப்பதாகும்.

1. உயர்நீதி மன்றம் சென்னை.

2. நொடித்தவர் சொத்தாட்சியர் ( Official Assignee ) உயர்நீதி மன்றம், சென்னை.

3. (சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட) சிவில் செஷன்ஸ் நீதிமன்றங்கள்.

4. சிறு வழக்கு நீதிமன்றங்கள். சென்னை.

5. மாநகர மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றங்கள்.

6. சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள் (தலைமை நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள்).

7. அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.

8. அரசுச் சட்ட ஆலோசகர்கள்—வழக்குரைஞர்கள்

9. சென்னை மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னை தொழில் நடுவர் மன்றம்.

விற்பனை வரி மேல் முறையீடு நடுவர் மன்றம், அரசுப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் வழக்குகளுக்கான நடுவர் மன்றங்கள், தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகளைக் கவனிக்கும் மேல் முறையீட்டு அதிகார மன்றம் போன்ற நடுவர் மன்றங்கள் அவ்வவ்வத் துறையின் நிதிக் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. அத்தகைய நடுவர் மன்றங்களின் செலவு தொடர்புடைய துறைக் கணக்குகளில் பற்று எழுதத்தக்கதாகும்.

3. நீதிமன்றங்கள் அலுவலகங்களிடையே பின் வருவனவற்றைப் பற்றிய செலவு ''சாட்டிய செலவினம்'' என்றும் ''அனுமதிக்கப்பட்ட செலவினம்'' என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| சாட்டியவை. | அனுமதிக்கப்பட்டவை. |
| --- | --- |
| (1) | (2) |
| 1 உயர் நீதிமன்றம் (நீதிபதிகள் பதிவாளர், அசல் தரப்பு அப்பீல் தரப்புக் கொண்ட பணியாளர் அமைப்பு மொழிபெயர்ப்பு அச்சுத்துறை, சட்டத் துறை அறிக்கையாளர்கள் பணியாளரமைப்பு, புதுச்சேரிக்கு அதிகார வரம்பை நீட்டித்தல் குறித்த தனி அலுவலர், ஷெரீப், உயர்நீதி மன்றம், சென்னை பணியாளர்கள்). | 1 மாநகராட்சி சிவில் நீதிமன்றம் உட்பட சிவில், செஷன்ஸ் நீதிமன்றங்கள். |
| | 2. சிறு வழக்குகள் நீதி மன்றம், சென்னை. |
| | 3 மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றங்கள், சென்னை. |
| | 4 சார்நிலை குற்றவியல் நீதி மன்றங்கள். |
| | 5 அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை. |
| | 6 அரசுச் சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள். |
| | 7 சென்னை, மதுரை கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதி மன்றங்கள், சென்னையில் தொழில் நடுவர் மன்றங்கள். |
| | 8 முதன்மை ஆசிரியர், பணியாளர்கள், தமிழ் சட்ட இதழ் வெளியீடு சென்னை |

4. சென்னை உயர் நீதி மன்றம்.—இம்மாநிலத்தில் நீதி வழங்கும் தலைமை வாய்ந்த நீதி மன்றம் உயர் நீதிமன்றமாகும். உயர் நீதிமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆகும் (21 நிரந்தர நீதிபதிகள் 4 கூடுதல் நீதிபதிகள்).

5. உரிமை வழக்குகளில் அசல்தரப்பு வழக்குகளையும், 'ரிட்' வழக்குகளையும் உயர்நீதிமன்றம் விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றதாகும். உரிமை வழக்குகளிலும் குற்றவியல் வழக்குகளிலும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் இதற்கு உண்டு. சென்னை மாநகருக்குள், சொத்தின் மதிப்பு ரூ.1,00,000





மேற்பட்டுள்ள அசல்தரப்பு வழக்குகளை சென்னை உயர் நீதி மன்றம் விசாரணை செய்கிறது. தலைமை நீதிபதி நீதிபதிகளுக்கு பணிகளைப் பிரித்து வழங்குகிறார். தலைமை நீதிபதி உட்பட 19 நீதிபதிகள் தற்போது உள்ளனர். திங்களுக்குத் தலைமை நீதிபதி ரூ. 4000—ம், நீதிபதிகள் ரூ. 3,500-ம் ஊதியம் பெறுகின்றனர். நீதிபதிகளின் ஊதியம் அரசியலமைப்புச் சட்டத்தின்படி வரையறுக்கப்படுகிறது. அவர்களுடைய பணி நிலைமைகள் உயர்நீதி மன்ற நீதிபதிகள் (பணி நிலைமைகள்) சட்டத்திற்குட்பட்டவையாகும்.

6. பதிவாளர் உயர்நீதி மன்ற அலுவலகத்தின் நிருவாகத் தலைவர் ஆவார். இவருக்குத் துணையாக கூடுதல் பதிவாளர் மேலாளர், துணைப் பதிவாளர், நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், வழக்குகளை வகைப்படுத்தும் தனி அதிகாரி, உதவிப் பதிவாளர்கள், துணை உதவிப் பதிவாளர்கள், முதுநிலை கணக்கு அதிகாரிகள் ஆகியோர் உள்ளனர். உயர் நீதி மன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது. நிருவாகத்துறை நூலகம், அசல்தரப்பு வழக்குப் பிரிவு, மேல் முறையீட்டுத் தீரப்பு வழக்குப் பிரிவு, நொடிப்பு நிலை வழக்குப் பிரிவு, தலைமை நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் வழக்குப் பிரிவு பாண்டிச்சேரிப் பிரிவு, நீதி மன்ற அதிகாரிகள் துறை, மேல் முறையீடுகள் பரிசீலனையாளர் பிரிவு, சுருக்கெழுத்தர் பிரிவு மொழிபெயர்ப்பு அச்சுத்துறை, நகல் எடுப்போர் துறையின் ஆவணப் பிரிவு ஆகியவையாகும். பாண்டிச்சேரி மாநிலத்தில் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமும் உயர் நீதி மன்றத்திற்குரியதாகும். பாண்டிச்சேரி தொடர்பான வழக்குகளை உயர் நீதி மன்றத்தில் கவனிக்கும் அதிகாரி, பணியாளர் ஆகியோர் குறித்த செலவை தமிழ்நாடு அரசு முதலில் ஏற்றுக் கொண்டு, பின்னர் பாண்டிச்சேரி அரசிடமிருந்து அச் செலவுத் தொகையை பெற்றுக் கொள்கிறது.

நீதி வழங்குவதோடு, உயர் நீதி மன்றத்தின் பொறுப்புக்கள் முடிவதில்லை. மாநில நிதித்துறையின் நிருவாகத்திற்கும் உயர் நீதிமன்றம் பொறுப்பு வகிக்கிறது.

7. சட்ட அதிகாரிகள் மாநகரத்திலும் வெளியூரிலும் உள்ள சட்ட அதிகாரிகள், அரசுச் சார்பில் உச்ச நீதி மன்றத்தில் வழக்காட நியமிக்கப்பெற்றுள்ள வழக்குரைஞர் ஆகியோர் குறித்த செலவுகளை ஏற்க இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. அரசு உரிமையியல் வழக்குரைஞர் ஒருவரும், கூடுதல் அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள் இருவரும், அரசு வழக்குரைஞர்கள் ஐவரும், உரிமையியல் வழக்குகளுக்கு அரசு உரிமையியல் சிறப்புவழக்குரைஞர் ஒருவரும் உள்ளனர். குற்றவியல் வழக்குகளுக்காக குற்றவியல் வழக்குரைஞர் ஒருவரும், மூன்று அரசுத் வழககுரைஞர்களும் (குற்றவியல் வழக்கு) உயர்நீதிமன்றத்தில் உள்ளனர். மாநிலத் தலைமை வழக்குரைஞர் தவிர, மாநகர

[1982 மார்ச் 20

அரசு உரிமையியல் வழக்குரைஞர், மாநகரக் கூடுதல் அரசு உரிமையியல் வழக்குரைஞர் இருவர், மாநகர அரசு குற்றவியல் வழக்குரைஞர், மாநகர கூடுதல் அரசு குற்றவியல் வழக்குரைஞர் ஆகியோர் மாநகரிலுள்ள சட்ட அலுவலர்களாவர். வெளியூர்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு உரிமையியல் வழக்குரைஞர் ஒருவரும் அரசு குற்றவியல் வழக்குரைஞர் ஒருவரும் உள்ளனர். மாவட்ட முனிசீப் நீதிமன்றங்களிலும் துணை நீதி மன்றங்களிலும் அரசு வழக்குரைஞர்களை அரசு நியமிக்கிறது. அனுமதிக்கப்பட்ட சம்பளம் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அவர்கள் வழக்குத் தொடர் கட்டணம் எதுவும் பெறத் தகுதியுடையவர் அல்லர். மாநகரத்திலும், பிற இடங்களிலும் உள்ள குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் (நிலை I. II.) முறையான சம்பள நிலையில் உள்ள முழு நேர அரசுப் பணியாளர்களாவர்.

8. 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் (மத்தியச் சட்டம் 2/1974) 24 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவு, ஒரு மாவட்டத்திற்கென்று அரசு குற்றவியல் வழக்குரைஞர்களை நியமிப்பது பற்றி விவரிக்கிறது; ஒரு மாநிலத்தில் அரசு குற்றவியல் வழக்குரைஞர், கூடுதல் அரசு குற்றவியல் வழக்குரைஞர் பதவி இருந்தால், முறையான அரசு குற்றவியல் வழக்குரைஞர்களை அப்பதவிகளில் நியமிக்க 24ஆம் பிரிவைச் சேர்ந்த (6) உட்பிரிவு வகை செய்கிறது. அரசின் சார்பாக வழக்குகளைத் திறமையான முறையில் நடத்துவதற்காக மாவட்டங்களில் அரசு குற்றவியல் வழக்குரைஞர் கூடுதல் அரசு குற்றவியல் வழக்குரைஞர் முதலிய பதவிகளுக்கு வழக்கறிஞர் மன்றத்தில் உள்ள அனுபவ மிக்க குற்றவியல் வழக்கறிஞர்களைக் கொண்டு நேரடி நியமனம் செய்ய வேண்டியது அவசியம் என அரசு கருதுகிறது. மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகள் வழக்குரைஞர்கள் மன்றத்திலிருந்து தயாரித்த வழக்குரைஞர்கள் பட்டியலில் உள்ளவர்களிடையேயிருந்து அரசு குற்றவியல் வழக்குரைஞர்களாக கூடுதல் அரசு குற்றவியல் வழக்குரைஞர்களாக நியமிக்க இயலும் வகையில் அரசு அண்மையில் மேற்படி சட்டக் கோவையின் 24 ஆம் பிரிவைச் சேர்ந்த (6) உட்பிரிவை திருத்தியதுடன், அப்பிரிவில் (6-எ) என்னும் உட்பிரிவையும் சேர்த்துள்ளது. சட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும். அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள், சம்பந்தப்பட்ட துறையின் வரவு செலவுத் திட்டத் தலைப்பில் பற்று வைக்கப்படுகின்றன. சட்ட அதிகாரிகள் ஆற்றும் பணியைப் பொறுத்து அனுமதிக்கப்பட்ட கட்டணம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அவ்வாறு கட்டணம் அனுமதிக்க அரசு அல்லது சம்பந்தப்பட்ட துறை ஒப்புதல் அளிக்கிறது;



1982 மார்ச் 20]

9. பல்வேறு அரசுத் துறைகள் சார்பில் உரிமையியல் வழக்குகளை தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற முத்திரைத்தாள் வாங்கும் வகையில் கணிசமான தொகையை அரசு உரிமையியல் வழக்குரைஞர் செலவிடுகிறார். மேற்சொன்ன செலவினம் தற்போதைக்கு ''214-ஏ நீதி நிர்வாகம்-AH, சட்ட ஆலோசகர்கள், வழக்கறிஞர்கள்—AC, அரசு உரிமையியல் வழக்குரைஞர்-04 அலுவலகச் செலவுகள்'' என்பதன்கீழ் பற்று வைக்கப்பட்டு வருகிறது. இச்செலவினத்தை அரசின் சார்பில் உரிமையியல் வழக்குகளை தாக்கல் செய்யுமாறு அரசு வழக்குரைஞர்களுக்கு உத்தரவிடுகின்ற சம்பந்தப்பட்ட துறைகளின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் பற்று எழுத முடிவு செய்யப்பட்டுள்ளது.

10. 1982–83 ஆம் ஆண்டில் ''சட்ட அதிகாரிகள்'' என்ற தலைப்பின்கீழ் மொத்தச் செலவுத் தொகை ரூ. 58,49,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன செலவில், I,II ஆம் நிலை பதவித்தரத்திலுள்ள அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்களின் சம்பளமும், படியும், வெளியூரிலுள்ள பணியாளர்களின் சம்பளமும் படியும் அடங்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள சட்ட அதிகாரிகள் குறித்த செலவு, அதாவது, 1980–81 ஆம் ஆண்டு வரையில், I, IIஆம் நிலைபதவித் தரத்திலிருந்த அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்களின் செலவு, Aւ. குற்றவியல் நீதிமன்றங்கள்'' என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறே 1980–81ஆம் ஆண்டு வரையில் சென்னை மாநகரில் I, IIஆம் நிலைப் பதவித் தரத்தில் உள்ள அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் குறித்த செலவு ''AD'' மாநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் என்ற தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ளது. 1981–82ஆம் ஆண்டி லிருந்து மேற்சொன்ன சட்ட அதிகாரிகளுக்குரிய செலவு மறுவகைப்படுத்தப்பட்டு '' AH சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்'' என்ற தலைப்பின்கீழ் காட்டப்பட்டுள்ளன.

11. அரசு பொறுப்பு சொத்தாட்சியர் பொறுப்பு சொத்தாட்சியர் சென்னை, சென்னை, அரசு பொறுப்பு சொத்தாட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர் மாவட்ட நீதிபதி தரத்தில் உள்ள ஓர் அதிகாரியாவார். அவருக்கு உதவியாக துணை அரசு பொறுப்பு சொத்தாட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர், ஒருவர் உள்ளார். அவருடைய சம்பள வீதம் ரூ. 750—50-1,350 ஆகும். தற்போது அப்பதவி வகிப்பவர் மாவட்ட முனிசீப் ஒருவர் ஆவார். இவ்விரு அதிகாரிகளும், மரணமடைந்தவர்களின் உரிய வயதடையாப் பிள்ளைகளின் சொத்துக்கள், எஸ்டேட்டுகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக உள்ளனர். அவர்கள் அரசு பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும், பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும் உள்ள விதித்துறைகளுக்கு இணங்க தங்களது கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர். இவ்வதிகாரி

களுக்குத் தொழில் நுட்ப முறையில் உதவி செய்வதற்காக ரூ. 600-30-750 -35-890-40-1,050 என்ற சம்பள விதத்தில் உதவிப் பொறியாளர் பதவி ஒன்று உள்ளது.

1982–83 ஆம் ஆண்டிற்கு இத்தலைப்பின் கீழ் ரூ. 3,95,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

12. இம்மாநகரில் பெருநகர் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம், கூடுதல் மாநகரத் தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் உட்பட 21 மாநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநகரத் தலைமை மாஜிஸ்டிரேட், இரண்டாம் நிலை மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் இருப்பவராவார். கூடுதல் மாநகரத் தலைமை மாஜிஸ்டிரேட் துணை நீதிபதி பதவி தரத்தில் இருப்பவராவார். இரண்டாவது மூன்றாவது, நான்காவது, பத்தாவது, பதினோறாவது மாநகர மாஜிஸ்டிரேட்டுகள், துணை நீதிபதிகள் பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். ஏனைய மாநகர மாஜிஸ்டிரேட்டுகள் அனைவரும் மாவட்ட முனிசீப் பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். மாநகர மாஜிஸ்டிரேட்டுகள் , சென்னை மாநகரில் தொடர்பான காவல் நிலையங்களின் ஆட்சி வரம்பில் அதிகாரம் செலுத்தி வருகின்றனர்.

சென்னை மாநகரில் உள்ள மேற்சொன்ன குற்றவியல் நீதிமன்றங்களுக்கு 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 27,28,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்பவர்களை விசாரித்துத் தண்டனை அளிப்பதற்கு எழும்பூர், சென்ட்ரல் இரயில் நிலையங்கள் ஒவ்வொன்றிலும், இரயில்வே மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் உள்ளது. இது குறித்த செலவை முதற்கண் அரசு ஏற்று, பின்னர் இரயில்வேத் துறையிடமிருந்து பெறுகிறது.

13. சென்னை மாநகர சிவில் நீதிமன்றம்.—சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் 23 நீதிமன்ற அதிகாரிகள் (11 மாவட்ட நீதிபதிகள், 12 துணை நீதிபதிகள்) செயல்பட்டு வருகின்றனர். நிர்வாகப் பொறுப்பினை கவனிக்கும் பொருட்டு மாவட்ட முனிசீப் பதவித்தரத்தில் தனியே பதிவாளர் பதவி ஒன்று உள்ளது, மாநகர சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகர் முழுவதற்கும் பரந்து உள்ளது. மாநகர சிவில் நீதிமன்றம் 6–3–81 வரையில் ரூ. 50,000 வரையிலான சொத்து மதிப்பு முறை விவகாரங்களைக் கொண்ட வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. 7–3–1981 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்துள்ள தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சிவில் நீதிமன்றங்கள் சென்னை நகர சிவில் நீதிமன்றம் (திருத்தச்) சட்டத்தின்படி, (தமிழ்நாடு சட்டம்



34/1980) சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தின் வழக்கு மதிப்பு முறை அதிகார வரம்பு ரூ. 1,00,000 ஆகவும், மேல் முறையீட்டு அதிகார வரம்பு ரூ. 30,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை கோட்டத்தைப் பொறுத்தவரையில் மாநகர சிவில் நீதிமன்றம், செஷன்ஸ் நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதியின் பதவித் தரத்திலுள்ள நீதிபதிகளில் சிலருக்கு, குற்றவியல் சட்டத் திருத்த சட்டத்தின்படி பட்டியல் வழக்குகளை விசாரிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மாநகர சிவில் நீதிமன்றத்தைப் பொறுத்த மட்டில் 1982–83 ஆம் ஆண்டில் மொத்த செலவு ரூ. 31,34,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

14. வெளியூரிலுள்ள சிவில் நீதி மன்றங்கள்—இம்மாநிலத்தில் 16 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், இராமநாதபுரம், மதுரை (தெற்கு) மாவட்டங்களில் ஒவ்வொன்றும், திருநெல்வேலியில் இரண்டுமாக இம்மாநிலத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களும், செஷன்ஸ் நீதிமன்றங்களும் உள்ளன. மாவட்ட நீதிபதி அந்தந்தக் கோட்டத்தின் செஷன்ஸ் நீதிபதியாகவும் இருப்பார். தொழிலாளர் நலக் காப்புறுதி நீதிமன்றம், எஸ்டேட் ஒழிப்பு நடுவர் மன்றம், மோட்டார் வண்டிகள் விபத்து உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றங்கள் போன்ற குறிப்பிட்ட வகைத் தனிச் சட்டங்களின்கீழ் சிறப்பு நடுவர் மன்றங்களாகவும் அவர்கள் செயல்படுகின்றனர். மாவட்ட நீதிபதிகள் அவரவரது கோட்டங்களிலுள்ள சார்நிலை சிவில் நீதிமன்றங்களையும், நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களையும், பார்வையிடுகின்றனர். மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட நீதிபதிகள், மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் விசாரணை அதிகாரத்துடன் குற்றவியல் சட்ட திருத்தச் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரணை செய்கின்ற சிறப்பு நீதிபதிகள் எனப் பெயரிடப்பட்டுள்ளனர்.

15. சார்நிலை நீதிபதிகள்—இம்மாநிலத்தில் 65 துணை நீதிமன்றங்கள் (நிலையானவை 44, தற்காலிகமானவை 21) உள்ளன. சார்நிலை நீதிபதிகளுக்கு, அசல் தரப்பில் ( Original side ) வழக்குகளை விசாரணை செய்ய பண மதிப்பில் வரையிலா அதிகார வரம்பு உண்டு. அவர்களுடைய அதிகார வரம்பு, சிவில் நீதிமன்றங்கள், சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. துணை நீதிபதிகள் ரூ. 15,000 மதிப்பு வரை அந்தந்த பகுதி அதிகார வரம்பிற்குள் செயல்படும் மாவட்ட முன்சீப்களின் தீர்ப்புகளுக்கு எதிராகச் செய்துகொள்ளப்படும் மேல் முறையீடுகளை விசாரணை செய்ய மேல் முறையீட்டு அதிகாரமுண்டு.

துணை நீதிபதிகள், உதவி செஷன்ஸ் நீதிபதிகளுமாவர். மோட்டார் வண்டி விபத்துக்கள் உரிமை கோரிக்கை தொடர்பான வழக்குகளை விசாரணை செய்ய தலைமையிடங்களிலுள்ள முதன்மைத் துணை நீதிபதிகளுக்கும் ஏனைய துணை நீதிபதிகளுக்கும் மோட்டார் வண்டிகள் சட்டத்தின் கீழ் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

16. மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள்—மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் 110 (நிலையானவை 82, தற்காலிகமானவை 28) உள்ளன, மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் 6–3–1981 வரை ரூ. 5,000 வரை வழக்கு மதிப்பு அதிகார வரம்பைச் செலுத்துகின்றன. மாவட்ட முன்சீப் நீதிமன்றம் ஒவ்வொன்றும் வரையறுக்கப்பட்ட விசாரணை அதிகாரப் பகுதியைக் கொண்டுள்ளது. 7–3–1981 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்துள்ள தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு சிவில் நீதி மன்றங்கள் சென்னை மாநகர சிவில் நீதிமன்றங்கள் (திருத்தச்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 34/1980) மாவட்ட முனிசீப் நீதிமன்றங்களின் வழக்கு மதிப்பு அதிகார வரம்பு ரூ. 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மாவட்ட முனிசீப் நீதிமன்றம் ஒவ்வொன்றும் தனித்தனியாக வரையறுக்கப்பட்ட விசாரணை அதிகாரப் பகுதியைக் கொண்டுள்ளது. அவை ரூ. 500 வரை மதிப்புள்ள சிறு வழக்குகளையும் விசாரணை செய்கின்றன. அந்தந்த நீதிமன்றங்களுக்குரிய பகுதிகளில் வாடகைக் கட்டுப்பாட்டு அதிகார மன்றங்களாகவும் அவை செயல்படுகின்றன.

படி எடுப்போர், நீதிமன்றக் கட்டளைகளைச் சேர்ப்பிப்போர் ஆகியோர் உட்பட அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள், துணை நீதிமன்றங்கள், வெளியூரிலுள்ள மாவட்ட முனிசீப் நீதிமன்றங்கள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் 1982–83 ஆம் ஆண்டுக்குரிய செல்வு ரூ. 4,68,87,000 ஆகும். இச் செலவில் அதிகாரிகளின் சம்பளம், படிகள் ஆகியவையும் தபால் செலவுகள், கட்டணங்கள், வரிகள், வாடகைகள், அலுவலகச் செலவுகள், புத்தகங்கள், குறித்த கால வெளியீடுகள், மின்சாரக் கட்டணங்கள், தொலை பேசிக் கட்டணங்கள், மேசை நாற்காலிகள், செஷன்ஸ் நீதிமன்றங்களுக்கு விசாரணைக்காக வரும் சாட்சிகளுக்கு வழங்கக் கூடிய உணவு, போக்குவரத்துச் செலவுகள் போன்ற சில்லரைச் செலவுகளும் அடங்கும்.

17. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.—சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் ஐந்து (நிலையானவை 4, தற்காலிகமானவை 1) இயங்கி வருகின்றன். மாநிலம் முழுவதற்குமான அதிகார வரம்பு செலுத்தக் கூடிய தொழில் தகராறுகள் நடுவர் மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது. தொழிலாளர் நல நீதிமன்றங்கள்



தொழில் தகராறுகள் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் உள்ளவர்களாவர். தொழிலாளர் நல நீதிமன்றங்கள், அரசால் குறிப்பிடப்படும் தொழில் தகராறுகளையும், தரப்பினரால் தாக்கல் செய்யப்படும் உரிமைக் கோரிக்கை மனுக்களையும் விசாரணை செய்து தீர்ப்பு வழங்குகின்றன.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், தொழில் தகராறுகள், நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் அனைவரும் தங்களது அதிகார வரம்புப் பகுதிகளில், தொழில் தகராறுகள் ஏற்படும் இடங்களுக்குச் சென்று, தொழில் தகராறுகளையும், உரிமைக் கோரிக்கை மனுக்களையும் விசாரணை செய்து, தீர்ப்பு வழங்க முகாம் நீதி மன்றங்களை நடத்துவோராவர்.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள் குறித்த செலவு ''மானியக் கோரிக்கை எண் 13, 287ஏ. தொழிலாளர் நலன்—வேலை வாய்ப்பு'' என்ற தலைப்பில் பற்றெழுதப்பட்டு வருகிறது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், சென்னை தொழில் தகராறுகள் நடுவர் மன்றம் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் 1982–83 ஆம் ஆண்டிற்குரிய மொத்தச் செலவு ரூ. 8,00,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

18. சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றம்.—மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலுள்ள தலைமை நீதிபதி ஒருவர் இந்நீதிமன்றத்தின் நீதிபதியாக உள்ளார். துணை நீதிபதிகள் பதவித் தரத்தில் 6 நீதிபதிகளும் மாவட்ட முனிசீப் பதவித்தரத்தில் 7 நீதிபதிகளும் உள்ளனர். மாவட்ட முன்சீப் பதவித்தரத்தில் பதிவாளர் ஒருவர் உள்ளார், அவர் நிர்வாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். அவர் குறிப்பிட்ட சில நிறைவேற்றும் மனுக்களை, விசாரணை செய்தல் போன்ற நீதிமன்ற அலுவல்களையும் கவனிக்கிறார். மாநகர் சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ், தலைமை நீதிபதியும் II முதல் IV வரையுள்ள நீதிபதிகளும் சிறு வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் அதிகாரங்களைச் செலுத்தி வருகின்றனர். V ஆம் நீதிபதி மோட்டார் வண்டிகள் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றேவுள்ள நடுவர் மன்றமாகப் பணி புரிந்து வருகிறார். VI, VII ஆம் நீதிபதிகள் வாடகைக் கட்டுப்பாட்டு வழக்குகளுக்குரிய மேல் முறையீட்டு நீதிமன்றங்களாகச் செயற்பட்டு வருகின்றனர். VIII முதல் XIV வரையுள்ள நீதிபதிகள் சென்னை மாநகரத்திற்குரிய வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகச் செயற்பட்டு வருகின்றனர். தலைமை நீதிபதிக்கும் II, III, IV, VI, VII ஆம் நீதிபதிகளுக்கும் வாடகைக் கட்டுப்பாடு மேல் முறையீடுகளை விசாரணைசெய்யும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் குறித்து 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 18,23,000 செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. திருச்சி முன்னாள் ஜமீன் எஸ்டேட்டுகள் இனாம் ஒழிப்பு நடுவர் மன்றம் தொடர்பாக

இழப்பீட்டுத் தொகையைப் பங்கிட்டு அளிப்பதற்குரிய நடுவர் மன்றத்தைப் பொறுத்த வரையில் சிறு துணைத் தலைப்பின் கீழ் ஏற்பட்ட ரூ. 37,000 செலவும் மேற்சொன்ன தொகையில் அடங்கும்.

19. வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் :- இம் மாநிலத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் நீதி மன்றங்கள் 14 உள்ளன. தருமபுரி, கன்னியாகுமரி, திருநெல் வேலி மாவட்டங்கள், கும்பகோணம் ஆகிய இடங்கள் ஒவ்வொன் றிலும் ஒரு நீதிமன்றம் என்ற வீதத்தில் நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இவற்றில் துணை நீதிபதிகள் பதவித்தரத்திலுள்ளவர்கள் நீதிபதிகளாக உள்ளனர். நீதித்துறைத் தலைமை மாஜிஸ்டிரேட்டுகள், தங்களது மாவட்டங்களிலுள்ள குற்றவியல் துணை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர். அவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 தனி சம்பளம் வழங்கப்படுகிறது. நீதித்துறை தலைமை மாஜிஸ் டிரேட்டுகள் தங்களது நிர்வாகப் பணிகளை கவனிப்பதோடு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் விதித் துறைகளின் படி மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளிடம்செய்து கொள்ளப்படும் மேல்முறையீடுகள், இவர்களால், நீதித்துறைத் தலைமை மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதன் பேரில் அவற்றை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் பணியை யும் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் கவனிக்க மேற் சொன்ன சட்டக் கோவையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட் டுள்ளனர்.

20. துணைக் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள் 18 பேரும் மாவட்ட முனிசீப் - துணைக் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள் 7 பேரும், மாவட்ட முனிசீப் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் ஒருவரும் உள்ளனர். அவர்கள் மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் உள்ளனர். அவர்கள் முதல் வகுப்பு அதிகாரங்களைச் செலுத்துகின்றனர். ஆனால் நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் வழங்கும் தீர்ப்பு களுக்கெதிராகச் செய்துகொள்ளப்படும் மேல் முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை. நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் 34 பேர் உள்ளனர். அவர்கள் முதல் வகுப்பு வழக்குகளை முடிவு செய்வதில் நீதித் துறைத் தலைமை மாஜிஸ்டிரேட்டுகளுக்கு உதவி செய்வர்.

21. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் 141 பேர் உள்ளனர். இந்த மாஜிஸ்டிரேட்டுகள், 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் முதலாம் விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு அவர்களுக்குரிய அதிகார எல்லைக்குள் தாக்கல் செய்யப்படும் புகார்கள், வழக்குகள் ஆகியவற்றை விசாரணை செய்து முடிவு செய்கின்றனர்.





22. வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதி மன்றங்கள் அனைத்திற்கும் 1982—83 ஆம் ஆண்டில் ரூபாய் 2,39,44,000 செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர, பயணச் சீட்டு இன்றி பயணம் செய்வது முதலிய குற்றங்களை இந்திய இரயில்வே சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களில் இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள் உள்ளன. இரயில்வே மாஜிஸ் டிரேட்டு நீதிமன்றங்களுக்குரிய செலவு தொடக்கத்தில் மாநில அரசால் செய்யப்படுகிறது. பின்னர், சென்னை, மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் மூலமாக இரயில்வேத் துறையிட மிருந்து வசூலிக்கப்படுகிறது.

23. தமிழில் சட்ட இதழ்கள் : " தீர்ப்புத் திரட்டு " " குற்ற வழக்குத் தீர்ப்புத் திரட்டு " என்னும் தமிழ் சட்டத் திங்கள் இதழ்கள் இரண்டை உயர் நீதிமன்றம் வெளியிட்டு வருகிறது. மாவட்ட நீதிபதி நிலை II பதவித் தரத்தில் தலைமைப் பதிப்பாசிரியர் ஒருவரும், துணை நீதிபதி பதவித் தரத்தில் கூட்டுப் பதிப்பாசிரியர் ஒருவரும், உதவிப் பதிப்பாசிரி யர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர், தட்டச்சர், படிதிருத்து பவர், அடிப்படைப் பணியாளர்கள் ஆகிய பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாடு சட்ட இதழ் முதன்மைப் பதிப்பாசிரியருக்கும், அவரது அலுவலக பணியாளர் களுக்கும் வழங்கப்படும் சம்பளம், படிகள் குறித்த செலவு " 214ஏ. நீதி நிர்வாகம்—AH. ஏனைய செலவு. AG. சட்ட இதழ் வெளியிடுதல் " என்னும் தலைப்பில் பற்றெழுதப்படு கிறது. 1982-83 ஆம் ஆண்டுக்கான செலவு ரூ. 3,69,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாதாந்திர சட்ட இதழ் (தீர்ப்புத் திரட்டு) வழக்குரைஞர்களுக்கும், பொது மக்களுக்கும் ஓர் இதழ் ரூ. 3 என்ற விலையில் விற்பனைக்கு கிடைக்கிறது.

24. நீதிமன்றக் கட்டிடங்கள் : உயர்நீதிமன்றக் கட்டிடங் களையும், உயர்நீதிமன்றக் கட்டிடங்கள் தவிர ஏனைய கட்டிடங் களையும் பராமரிப்பதற்குரிய செலவு, 13 ஆம் எண். மானியக் கோரிக்கையில் "259. பொதுப் பணிகள் " என்ற கணக்கு தலைப்பின் கீழ் காட்டப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் செய்யக் கருதியுள்ள செலவு ரூ. 7,25,000 ஆகும்.

25. திண்டுக்கல்லில் அமைந்துள்ள சிவில், குற்றவியல் நீதி மன்றங்களை ஒரே கட்டிடத்தில் அமைக்கும் பொருட்டு, திண்டுக் கல்லில் ரூ. 34.10 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், சிவில்- குற்றவியல் நீதிமன்றக் கட்டிடங்களைக் கட்டுவதற்கென்று அரசு, 1981-82ல் அனுமதி அளித்தது. திருநெல்வேலி மாவட் டத்தைச் சேர்ந்த பாளையங்கோட்டை, மருத்துவக் கல்லூரி வளா கத்திலுள்ள மைதானத்தில் ரூ. 54·00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சிவில் குற்றவியல் நீதிமன்றக் கட்டிடத்தைக் கட்டு வதற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. மணப்பாறையில்

ரூ. 5.80 இலட்சம் மதிப்பீட்டு செலவில், நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றக் கட்டிடத்தைக் கட்டுவதற்கும், அரசு 1981-82ல் அனுமதி அளித்துள்ளது.

26. மதுரையில் உயர்நீதி மன்ற ஆயத்தை அமைத்தல் :— இந்திய அரசியலமைப்பின் 246 ஆம் பிரிவின்படி உயர்நீதி மன்றங்களை ஏற்படுத்தும் மற்றும் அமைப்பதற்கான அதிகாரம் நாடாளுமன்றத்திடம் உள்ளது. எனவே தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களிலுள்ள வழக்காடும் பொது மக்களின் நலன் கருதி சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றை மதுரையில் ஏற்படுத்துவது பற்றி மத்திய அரசோடு கலந்தாலோசித்து இந்த அரசால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேற்கூறிய செயற்குறிப்பு தொடர்பாக இந்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

27. சென்னையில் தலைமை நீதிமன்ற ஆயத்தை அமைத்தல் தென் மாநிலங்களிலுள்ள வழக்காடும் பொதுமக்களின் நலன் கருதி சென்னையை இருப்பிடமாகக் கொண்டு தலைமை நீதி மன்றத்தின் ஆயமொன்றை ஏற்படுத்த வேண்டும் என்று வேண்டி இவ்வரசு மைய அரசை கேட்டுக் கொண்டுள்ளது. இது தொடர்பாக இந்திய அரசுடன் கடிதத் தொடர்பு இருந்து வருகிறது.

28. இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் டெல்லியை— தவிர, ஏனைய இடத்தில் தலைமை நீதிமன்றத்தின் அமர்வுகள் இருக்கலாம் என்று குறிப்பிடும் அதிகாரத்தை இந்திய தலைமை நீதிபதிக்கு அரசியலமைப்பின் 130 ஆம் பிரிவு வழங்குகிறது.

29. சென்னையில் தலைமை நீதிமன்ற ஆயத்தை அமைக்க வேண்டிய இன்றியமையாமையை இவ்வரசு அண்மையில் மத்திய சட்ட அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளது.

30. பொது : குறிப்பிட்ட இடத்தில் பல நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதைத் தவிர்க்கவும், வழக்குகளுக்காகத் தலைமையிடங்களுக்குச் செல்வதில் தற்போதுள்ள இடர்பாட்டிலிருந்து பொதுமக்களுக்குப் போதிய நலம் செய்யவும் தலைமையிடங்களிலுள்ள நீதிமன்றங்களைப் பரவலாக பல்வேறு இடங்களில் அமைக்க வேண்டுமென்று அரசும் உயர்நீதிமன்றமும் கருதுகின்றன. உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகார எல்லைகள் குறித்து மாநில அளவிலான ஆய்வை மேற்கொள்ள 1970—ல் அரசால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு 1973-ல் அதன் அறிக்கையை அளித்தது. புதிதாக 28 உரிமையியல் நீதிமன்றங்களையும், 27 குற்றவியல் நீதிமன்றங்களையும் அமைக்க இக்குழு பரிந்துரைத்துள்ளது. இக்குழுவின் பரிவுரைகளை அரசு 1975-ல் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு ஐந்தாண்டுக் கால அளவில் இப்பரிவுரைகளை படிப்படியாக நிறைவேற்றுவதென முடிவு செய்துள்ளது. அதிகார வரம்பு குறித்த குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்துவதற்காக உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்கு உயர்நீதிமன்றம் முன்னுரிமைப் பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளது.





அதிகார வரம்பு குறித்து குழு பரிந்துரைத்த 28 உரிமையியல் நீதிமன்றங்களில் பின்வரும் 24 உரிமையியல் நீதிமன்றங்களை ஏற்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன :—

(1) மாவட்ட முன்சீப் நீதிமன்றம், அறந்தாங்கி, புதுக்கோட்டை மாவட்டம்.

(2) துணை நீதிமன்றம், குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

(3) துணை நீதி மன்றம், நாமக்கல், சேலம் மாவட்டம்.

(4) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், இராசிபுரம், சேலம் மாவட்டம்.

(5) துணை நீதிமன்றம், திண்டிவனம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

(6) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், செஞ்சி, தென் ஆர்க்காடு மாவட்டம்.

(7) துணை நீதிமன்றம், திருவள்ளூர் செங்கற்பட்டு மாவட்டம்.

(8) துணை நீதிமன்றம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

(9) துணை நீதிமன்றம், தென்காசி, திருநெல்வேலி மாவட்டம்.

(10) துணை நீதிமன்றம், விருத்தாச்சலம், தென் ஆர்க்காடு மாவட்டம்.

(11) துணை நீதிமன்றம், பெரியகுளம், மதுரை மாவட்டம்.

(12) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், பொன்னேரி, செங்கல்பட்டு மாவட்டம்.

(13) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், உத்தமபாளையம், மதுரை மாவட்டம்.

(14) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், மேட்டூர், சேலம் மாவட்டம்.

(15) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், திருச்செங்கோடு, சேலம் மாவட்டம்.

(16) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், ஆத்தூர், சேலம் மாவட்டம்.

(17) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், சங்கரன்கோவில், திருநெல்வேலி மாவட்டம்.

(18) துணை நீதிமன்றம், அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(19) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், பெரம்பலூர், திருச்சி ராப்பள்ளி மாவட்டம்.

(20) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், ஜெயங்கொண்டான், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

(21) மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம், மதுரை (வடக்கு) திண்டுக்கல்.

(22) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், போளூர், வட ஆர்க்காடு மாவட்டம்.

(23) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், பவானி, பெரியார் மாவட்டம்.

(24) துணை நீதிமன்றம், ஸ்ரீவில்லிப்புத்தூர், இராமநாத புரம் மாவட்டம்.

முன்னுரிமைப் பட்டியலின் முதல் கட்டத்தில் சேர்க்கப்பட்ட 11 குற்றவியல் நீதிமன்றங்களுக்கு 1979-80-ல் அனுமதியளிக்கப் பட்டது.

31. இது தவிர, 1981-82 ஆம் ஆண்டில், கோயம்புத்தூர் மாவட்டம் திருப்பூரில் துணை நீதிமன்றம் அமைப்பதற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. பின்வரும் உரிமையியல் நீதிமன்றங்கள் 1982-83-ல் அனுமதி அளிக்க கருதப்பட்டுள்ளன :—

(1) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்.

(2) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், நன்னிலம், தஞ்சாவூர் மாவட்டம்.

(3) மாவட்ட முனிசீப் நீதிமன்றம், முசிறி, திருச்சிராப் பள்ளி மாவட்டம்.



32. வள்ளியூரில், மாவட்ட முனிசீப் நீதிமன்றம் அமைப் பதைப் பொறுத்தமட்டில் ஏழாம் நிதிக் குழு அளித்த பரிந்துரை யின் கீழ் மத்திய அரசு அளித்த நிதி உதவியுடனும், திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் நீதித்துறை சப்-டிவிஷனல் மாஜிஸ் டிரேட்டு நீதிமன்றம் ஒன்றை அமைக்க ஏற்கெனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வள்ளியூர் உட்பட அதிகாரம் செலுத் தும் வகையில், சேரன்மாதேவியில் மாவட்ட முனிசீப் நீதிமன்றம் ஒன்றை அமைக்கவும் கருதப்பட்டுள்ளது. இது, 1982–83 ஆம் ஆண்டுக்குரிய பகுதி II திட்டமாகக் கருதப்படுகிறது. ஆகவே வள்ளியூரில் தனியாக மாவட்ட முனிசீப் நீதிமன்றம் ஒன்று அமைக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, 1982–83–ல் மேற்கூறிய நீதிமன்றங்களை அமைப்பதால், சிவில் நீதி மன்றங்களைப் பொறுத்தமட்டில், அதிகார வரம்புக் குழுவின் பரிந்துரைகள் முழுவதுமாக நிறைவேற்றப்படும்.

33. இவை தவிர, 1981–82 ஆம் ஆண்டில் பின்வரும் குற்ற வியல் நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது:—

(1) 1955 ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத் தின் கீழ்வரும் குற்றங்களை விசாரிக்க மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கும்பகோணம் ஆகிய இடங்களில் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு தனி நீதிமன்றங்கள்—4.

(2) மதுவிலக்கு வழக்குகளை விசாரிக்க நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு தனி நீதிமன்றங்கள்.—21.

(3) தென் ஆர்க்காடு கடலூரில் நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம்—1.

34. நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவி கள், முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகளாக நிலை உயர்த்தப் பட்டு, மாவட்ட முன்சீப் பதவித் தரத்துடன் ஒருங்கிணைக்கப் படலாமென அரசு முடிவு செய்துள்ளது. குற்றவியல் மாஜிஸ் டிரேட்டுகள், சிவில் நீதிபதிகள் ஆகிய இரு வகையினரும் மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளாகப் பதவி உயர்வு பெறுகின்ற காலத்தில் அவர்கள் நீதித்துறையின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பணிகளை நன்றாக அறிந்திருக்க வேண்டியும், மாஜிஸ்டிரேட்டு கள் சிவில் வழக்குகள் குறித்த அனுபவம் பெறவும், சிவில் நீதிபதி கள் குற்ற வழக்கு விசாரணைகள் பற்றி அனுபவம் பெறவும் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதனைச் செயல்படுத்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. விரைவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்படுகிறது.

35. உயர்நீதிமன்றமும், சார்நிலை குற்றவியல் நீதிமன்றங் களும், அசல் மேல் முறையீட்டு வழக்குகளின் மூலம், "நீதி நிர் வாகம்" என்ற தலைப்பின் கீழ் வருவாய் பெறுவது. மற்றொரு முக்கியமான தொடர்பான கூறு ஆகும்.

[1982 மார்ச் 20

36. ''065-A நீதி நிர்வாகம்'' 030-B முத்திரைத்தாள்கள் நீதித்துறை (நீதிமன்றக் கட்டணங்கள் முத்திரைத்தாள்கள் வடிவில் கொடுத்தல்) என்னும் தலைப்பின் கீழ் 1978–79, 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆகிய ஆண்டுகளுக்கான வருவாயின் வரவும் ''214-A. நீதி நிர்வாகம்'' என்னும் தலைப்பின் கீழ் மேற்சொன்ன ஆண்டுகளுக்கான செலவும் குறித்த விவர அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.—

| | 1978–79 ஆம் ஆண்டுக் கணக்குகள். | 1979–80 ஆம் ஆண்டுக் கணக்குகள். | 1980–81 ஆம் ஆண்டுக் கணக்குகள். | 1981–82 ஆம் ஆண்டுக் கணக்குகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| வரவு— | | | | |
| 065-A. நீதி நிர்வாகம் | 3,04.68 | 1,80.35 | 1,97.58 | 1,95.37 |
| 030-B. முத்திரைத்தாள்கள் நீதித்துறை. | 5,05.36 | 6,17.42 | 5,90.31 | 7,20.15 |
| மொத்தம். | 8,10.04 | 7,97.77 | 7,87.89 | 9,15.52 |
| செலவு— | | | | |
| 214-A. நீதிநிர்வாகம். | 6,07.41 | 6,62.02 | 7,58.27 | 8,67.20 |

37. ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை உதவி.—ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை உதவியளிக்கும், நோக்குடன், தமிழ்நாடு சட்ட உதவி ஆலோசனைக் குழுவை அரசு அமைத்ததோடு, சென்னை மாநகரிலும், மாவட்டங்களிலும் சட்ட உதவி ஆலோசனை நிலையங்களுக்காக மாவட்டக் குழுக்களையும் அமைத்துள்ளது.

38. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39-A பிரிவின்படி ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை உதவி அளிக்க வேண்டியது சட்டப்படிக்கான ஒரு கட்டுப்பாடு ஆகும். தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழு 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் வாரத்திலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. இக்குழுவுக்கு ஆகக்கூடிய செலவிற்காக அரசு மானியம் வழங்குகிறது. சென்னையில், எழும்பூர், சைதாப்பேட்டை, ஜார்ஜ் டவுன் ஆகிய இடங்களில் உள்ள மூன்று ஆலோசனை



1982 மார்ச் 20]

நிலையங்களும் 18 மாவட்டக் குழுக்களும், 88 வட்டக் குழுக்களும் உள்ளன. மோட்டார் விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வாங்கித் தர இக்குழு சட்ட உதவி செய்கிறது. மாவட்ட நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்களிலுள்ள அதிகாரிகள் மூலமாக நிவாரணம் வாங்கித்தர உதவி செய்வதும், மகளிருக்கும் குழந்தைகளுக்கும் வாழ்க்கைச் செலவு படியை அளிக்க உதவி செய்வதும் இக்குழுவின் பணித் திட்டத்தில் அடங்கும். 1982–83 ஆம் ஆண்டில் இக்குழுவிற்கு மானியமாக ரூ. 18,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

39. உரிமையியல் நீதிமன்றங்களில் தமிழை அறிமுகப்படுத்தல்.—உயர்நீதி மன்றத்தின் கீழுள்ள நடுவர் நீதிமன்றங்கள், வாடகை நீதிமன்றங்கள், வருவாய் நீதிமன்றங்கள் உட்பட உரிமையியல் நீதிமன்றங்களில் தமிழ் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

40. 1981–82 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது :—

(1) துணை நீதிபதிகளின் சம்பள வீதம் ரூ. 1,000–60–1,300–70–1,650-லிருந்து ரூ. 1,300–75–1,900–100–2,000 ஆக திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இதனால், ஆண்டொன்றுக்கு, ரூ. 5.35 இலட்சம் தொடரினச் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

(2) தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகள், நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோரின் பயனுக்கு 30 அம்பாசிடர் மார்க் 4 கார்கள் வாங்குவது, அவற்றுக்காக 30 கார் ஓட்டுநர்களை நியமிப்பது ஆகிய வகையில் ஏற்படும் செலவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்குக் கூடுதலாக ரூ. 29 இலட்சம் செலவு ஏற்படும்.

(3) உயர்நீதி மன்றம், மாவட்ட செஷன்ஸ் நீதி மன்றங்கள், நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்கள், சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள், சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை-எழும்பூர் தலைமைப் பெருநகர் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், ஜார்ஜ் டவுன் பெருநகர் மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம், சைதாப்பேட்டை பெருநகர் மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றம் ஆகியவை வழக்காடும் பொது மக்களுக்கு காலதாமதமின்றி தீர்ப்பு நகல்களை வழங்குவதற்கு ரூ. 36,45,634.32 மதிப்பீட்டுச் செலவில் 36 ஜெஸ்டெட்னர்களும், 2,015 பிபிசி எந்திரங்களும் வாங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(4) நீதி நிர்வாகத்தை விரைவுபடுத்தவும் சுருக்கெழுத்து தட்டச்சர் இல்லாதபோது தலைமை வகிக்கும் அதிகாரி தன்னுடைய இல்லத்தில் தீர்ப்பைப் பதிவு செய்து கொள்ள இயலும் வகையிலும், முக்கியமான பரப்பரப்பான வழக்குகளில், தகவல்களை நினைவுபடுத்திக் கொள்ளவும் 52 மாவட்ட நீதிபதிகள், 116 துணை நீதிபதிகள், 152 மாவட்ட முன்சீப்புகள், 30 நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள், 114 நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோரான நீதித்துறை அதிகாரிகள் 464 நபர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு டேப் ரெக்கார்டரும், 12 கேசெட்டுகளும் வழங்க ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது. இதற்காகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 5.61 இலட்சமாகும்.

(5) உரிமையியல், குற்றவியல் நீதி மன்ற நீதித்துறை, அதிகாரிகளின் பயனுக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 25·96 இலட்சம் (தொடரினம்) செலவில் கூடுதலாக 489 அடிப்படைப் பணியாளர் பதவிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

41. 1979, 1980, 1981 ஆம் ஆண்டுகளில் சென்னை உயர் நீதிமன்றத்திலும், சார்நிலை நீதிமன்றங்களிலும் (உரிமையியல், குற்றவியல்) தொடரப்பட்ட, முடிக்கப்பட்ட, விசாரணையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை குறித்த விவர அட்டவணை ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

42. 1980 ஆம் ஆண்டில் மாவட்ட நீதிமன்றங்கள், துணை நீதிமன்றங்களில் முடிவுறாமலிருந்த உரிமையியல் வழக்குகளின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில், முடிவுறாமலுள்ள சில வகை உரிமையியல் வழக்குகளின் எண்ணிக்கை 1981 ஆம் ஆண்டில் கணிசமாகக் குறைந்துள்ளது. 1981 ஆம் ஆண்டில் உயர்நீதி மன்றம், மாநகர உரிமையியல் நீதிமன்றம், சிறுவழக்குகள் நீதி மன்றம், மாவட்ட முனிசீப் நீதிமன்றம் ஆகியவற்றில் முடிவுறாமல் உள்ள உரிமையியல் வழக்குகளின் எண்ணிக்கை 1980 ஆம் ஆண்டில் இருந்ததை விடக் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு உயர்ந்துள்ளது; உயர்நீதி மன்றத்திலும், நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதி மன்றத்திலும் முடிவுறாமலுள்ள குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கை 1980 ஆம் ஆண்டைக் காட்டிலும் 1981 ஆம் ஆண்டில் குறைந்துள்ளது. எனினும், செஷன்ஸ் நீதிமன்றங்களிலும், பெரு நகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களிலும் முடிவுறாமல் இருந்த குற்றவியல் வழக்குகளின் எண்ணிக்கை 1980 இல் இருந்ததைவிட 1981 இல் சற்று உயர்ந்துள்ளது.





1979, 1980, 1981-ஆம் ஆண்டுகளில் சென்னை, உயர்நீதிமன்றத்திலும், சார்நிலை வழக்குகள் குறித்த புள்ளி விவரங்கள்.

| நீதிமன்றங்கள். | 1979 | | | | 1980 |
|---|---|---|---|---|---|
| | இவ் வாண்டில் தொடரப் பட்ட வழக்குகள் | முடிக்கப் பட வேண்டிய வழக்குகள் | இவ் வாண்டில் முடிக்கப் பட்ட வழக்குகள் | இவ் வாண்டின் இறுதியில் முடிவுறாமல் உள்ள வழக்குகள். | இவ் வாண்டின் தொடர பட்ட வழக்குகள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| உயர்நீதி மன்றம். | | | | | |
| 1 அசல் வழக்கு மேல் முறையீடுகள். | 1,246 | 4,746 | 892 | 3,854 | 1,296 |
| 2 அசல் வழக்குப் பிரிவு மேல்முறையீடுகள். | 129 | 284 | 76 | 208 | 150 |
| 3 இரண்டாம் மேல் முறையீடுகள். | 2,184 | 7,376 | 2,851 | 4,525 | 2,245 |
| 4 சிவில் பல்வகை மேல் முறையீடுகள். | 593 | 1,925 | 839 | 1,086 | 693 |
| 5 சிவில் பல்வகை இரண்டாம் மேல் முறையீடுகள். | 37 | 122 | 98 | 24 | 35 |
| 6 "லெட்டர் பேட்டண்ட்" குறித்த மேல் முறையீடுகள். | 153 | 345 | 162 | 183 | 142 |
| 7 "ரிட்" மனுக்கள் .. | 6,731 | 14,594 | 5,699 | 8,895 | 7,127 |
| 8 "ரிட்" மேல் முறையீடுகள். | 711 | 1,599 | 659 | 940 | 786 |
| 9 தனி நடுவர் மன்ற மேல் முறையீடுகள். | 130 | 961 | 10 | 951 | 67 |
| நகர் சிவில் நீதிமன்றம்.— | | | | | |
| 1 உரிமையியல் வழக்குகள் | 10,599 | 29,403 | 10,802 | 18,601 | 8,991 |
| 2 பல்வகை வழக்குகள் .. | 27,118 | 47,373 | 24,246 | 23,127 | 24,268 |
| 3 முறையான மேல் முறையீட்டு மனுக்கள். | 642 | 1,158 | 891 | 267 | 339 |
| பல்வகை முறையீட்டு மனுக்கள். | 361 | 596 | 376 | 220 | 170 |
| ஆணை [illegible] நிறைவேற்பு நடவடிக்கைகள். | 3,132 | 5,043 | 2,706 | 2,337 | 299 |

[1982 மார்ச் 20

நீதி மன்றங்களிலும் (உரிமையியல்) தொடரப்பட்ட முடிக்கப்பட்ட விசாரணையிலுள்ள

| 1980 | | | 1981 | | | |
|---|---|---|---|---|---|---|
| முடிக்கப்பட வேண்டிய வழக்குகள். | இவ் வாண்டில் முடிக்கப் பட்ட வழக்குகள். | இவ் வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்குகள். | இவ் வாண்டில் தொடரப் பட்ட வழக்குகள். | முடிக்கப்பட வேண்டிய வழக்குகள். | இவ் வாண்டில் முடிக்கப் பட்ட வழக்குகள். | இவ் வாண்டின் இறுதியில் முடிவுறாமல் இருந்த வழக்கு கள். |
| (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
| 5,159 | 1,583 | 3,588 | 926 | 4,514 | 953 | 3,561 |
| 358 | 120 | 238 | 197 | 435 | 114 | 321 |
| 6,770 | 2,053 | 4,717 | 2,289 | 7,006 | 1,578 | 5,428 |
| 1,779 | 884 | 895 | 851 | 1,746 | 611 | 1,135 |
| | | | | | | 61 |
| 59 | 29 | 38 | 41 | 71 | 10 | |
| 325 | 148 | 177 | 115 | 292 | 72 | 220 |
| 16,922 | 7,125 | 8,897 | 11,782 | 20,679 | 8,374 | 12,305 |
| 1,726 | 594 | 1,132 | 643 | 1,775 | 423 | 1,352 |
| 1,018 | 532 | 486 | 66 | 552 | 2 | 550 |
| 27,592 | 10,879 | 16,693 | 11,084 | 27,777 | 9,812 | 17,965 |
| 47,396 | 25,079 | 22,316 | 23,661 | 45,977 | 24,144 | 21,833 |
| 606 | 431 | 175 | 441 | 616 | 345 | 271 |
| 390 | 238 | 152 | 215 | 367 | 188 | 179 |
| 5,227 | 3,257 | 2,070 | 2,908 | 4,978 | 2,815 | 2,163 |



1982 மார்ச் 20]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| சிறு வழக்கு நீதிமன்றம்.— | | | | | |
| 1 உரிமையியல் வழக்குகள் | 5,232 | 8,583 | 5,441 | 3,142 | 5,023 |
| 2 பல்வகை வழக்குகள் .. | 11,276 | 14,169 | 11,368 | 2,801 | 13,360 |
| 3 ஆணை நிறைவேற்றல் மனுக்கள். | 1,465 | 1,948 | 1,493 | 455 | 1,525 |
| மாவட்ட நீதிமன்றங்கள்.— | | | | | |
| 1 உரிமையியல் வழக்குகள் | 1,377 | 1,567 | 1,393 | 174 | 767 |
| 2 மேல்முறையீடுகள் .. | 4,246 | 6,800 | 4,354 | 2,446 | 3,917 |
| 3 உரிமையியல் பல்வகை மேல்முறையீடுகள். | 1,317 | 2,279 | 1,429 | 850 | 860 |
| 4 உரிமையியல் பல்வகை வழக்குகள். | 26,104 | 30,146 | 25,872 | 4,274 | 17,981 |
| 5 ஆணை நிறைவேற்பு மனுக்கள். | 183 | 256 | 195 | 61 | 206 |
| 6 நொடிப்பு நிலைகுறித்த மனுக்கள். | 8 | 4 | 4 | .. | .. |
| சார்பு நீதிமன்றங்கள்.— | | | | | |
| 1 உரிமையியல் வழக்குகள் | 28,433 | 51,209 | 22,915 | 28,294 | 18,810 |
| 2 உரிமையியல் பல்வகை வழக்குகள். | 1,28,033 | 1,52,470 | 1,23,298 | 29,172 | 88,278 |
| 3 மேல்முறையீடுகள் .. | 5,609 | 11,821 | 6,508 | 5,313 | 3,681 |
| 4 உரிமையியல் பல்வகை மேல்முறையீடுகள். | 3,321 | 5,969 | 2,858 | 3,111 | 2,351 |
| 5 ஆணை நிறைவேற்பு மனுக்கள். | 9,951 | 14,928 | 8,059 | 6,869 | 8,530 |
| 6 நொடிப்பு நிலைகுறித்த மனுக்கள். | 601 | 1,133 | 527 | 606 | 449 |

| (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
|---|---|---|---|---|---|---|
| 8,165 | 4,979 | 3,186 | 4,855 | 8,041 | 4,567 | 3,474 |
| 16,161 | 13,469 | 2,672 | 14,124 | 16,816 | 13,250 | 3,566 |
| 1,980 | 849 | 1,131 | 838 | 1,969 | 1,406 | 563 |
| 941 | 832 | 109 | 925 | 1,034 | 943 | 91 |
| 6,363 | 4,095 | 2,268 | 3,638 | 5,906 | 3,991 | 1,915 |
| 1,810 | 1,255 | 555 | 1,450 | 2,005 | 1,161 | 844 |
| 22,255 | 17,390 | 4,865 | 21,242 | 26,107 | 2,247 | 4,060 |
| 267 | 177 | 90 | 216 | 306 | 190 | 116 |
| 1 | .. | 1 | 4 | 5 | 6 | .. |
| 47,104 | 19,554 | 27,550 | 12,557 | 40,107 | 31,693 | 8,414 |
| 1,17,448 | 92,070 | 25,378 | 66,425 | 91,803 | 75,168 | 16,635 |
| 8,994 | 4,462 | 4,532 | 5,300 | 9,832 | 5,672 | 4,160 |
| 5,462 | 2,502 | 2,960 | 2,983 | 5,943 | 2,895 | 3,048 |
| 15,399 | 8,875 | 6,524 | 6,262 | 13,786 | 8,823 | 3,963 |
| 1,055 | 642 | 413 | 589 | 1,002 | 509 | 478 |



| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| மாவட்ட முன்சீப் நீதி மன்றங்கள்.— | | | | | |
| 1 உரிமையியல் வழக்குகள் | 1,51,631 | 2,38,850 | 1,24,935 | 1,13,915 | 75,111 |
| 2 பல்வகை வழக்குகள் .. | 2,85,473 | 3,36,293 | 2,75,832 | 60,461 | 1,98,575 |
| 3 ஆணை நிறைவேற்பு மனுக்கள். | 51,754 | 65,796 | 37,028 | 28,768 | 42,616 |
| 4 நொடிப்பு நிலைகுறித்த மனுக்கள். | 75 | 94 | 41 | 53 | 47 |
| 1979, 1980, 1981-ஆம் ஆண்டுகளில் சென்னை, உயர்நீதிமன்றத்திலும், சார்நிலை (குற்றவியல்). | | | | | |
| உயர்நீதிமன்றம்.— | | | | | |
| குற்றவியல் மேல் முறை யீடுகள். | 876 | 3,147 | 612 | 2,535 | 906 |
| குற்றவியல் மறு விசாரணை | 1,263 | 3,000 | 859 | 2,141 | 826 |
| ஆய்வுக்குறிப்பு மனுக்கள் | 18 | 28 | 16 | 12 | .. |
| செஷன்ஸ் நீதிமன்றங்கள்.— | | | | | |
| செஷன்ஸ் வழக்குகள் .. | 1,385 | 2,064 | 1,324 | 740 | 1,960 |
| குற்றவியல் மேல்முறை யீடுகள். | 7,824 | 9,558 | 7,669 | 1,889 | 3,850 |
| குற்றவியல் மறு விசாரணை | 1,250 | 1,776 | 1,268 | 508 | 834 |
| பெருநகர் மாஜிஸ்ட்டிரேட்டு நீதிமன்றங்கள்.— | | | | | |
| முறையான வழக்கு விசா ரணைகள். | 1,99,352 | 2,19,699 | 1,99,546 | 20,153 | 2,25,535 |
| நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட்டு நீதிமன்றங்கள்.— | | | | | |
| மேல்முறையீடுகள் .. | 3,250 | 4,124 | 3,541 | 583 | 1,419 |
| ஏனையச் சட்டங்கள் .. | 15,10,202 | 15,89,031 | 15,00,264 | 88,767 | 3,13,90 |
| இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் கீழ்வரும் வழக்குகள். | 1,26,837 | 1,50,953 | 1,19,913, | 31,040 | 1,34,378 |
| குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை மற்றும் பல்வகை வழக்குகள். | 21,700 | 22,308 | 20,951 | 1,357 | 59,115 |

1982 மார்ச் 20]

| (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) |
|---|---|---|---|---|---|---|
| 1,89,726 | 1,00,259 | 88,757 | 1,28,748 | 2,17,505 | 1,01,465 | 1,16,070 |
| 2,59,036 | 2,16,498 | 42,538 | 2,14,999 | 2,57,537 | 2,03,362 | 54,175 |
| 71,384 | 49,063 | 22,321 | 71,662 | 93,983 | 53 ,352 | 40,631 |
| 100 | 59 | 41 | 195 | 236 | 116 | 120 |
| நீதிமன்றங்களிலும், தொடரப்பட்ட, முடிக்கப்பட்ட, விசாரணையிலுள்ள வழக்குகள் குறித்த புள்ளி விவரங்கள். | | | | | | |
| 3,441 | 964 | 2,477 | 745 | 3,222 | 1,077 | 2,145 |
| 2,967 | 1,409 | 1,558 | 902 | 2,460 | 1,096 | 1,364 |
| 12 | .. | 12 | 7 | 19 | 11 | 8 |
| 2,700 | 1,877 | 823 | 2,846 | 3,669 | 2,276 | 1,393 |
| 5,739 | 4,074 | 1,665 | 4,398 | 6,063 | 4,109 | 1,954 |
| 1,342 | 767 | 375 | 831 | 1,206 | 828 | 378 |
| 2,45,688 | 2,29,399 | 16,289 | 2,15,744 | 2,32,033 | 2,10,622 | 21,411 |
| 2,602 | 1,538 | 464 | 1,473 | 1,937 | 1,648 | 289 |
| 4,02,674 | 3,64,154 | 38,520 | 4,49,645 | 4,88,165 | 3,62,607 | 1,25,558 |
| 1,65,418 | 1,06,677 | 58,741 | 97,660 | 1,56,401 | 1,03,037 | 53,364 |
| 52,516 | 50,154 | 2,362 | 4,448 | 6,810 | 5,428 | 1,382 |



1982 மார்ச் 20]

### கோரிக்கை எண். 14.

### சிறைச்சாலைகள்— கொள்கை விளக்கக் குறிப்பு.

இம்மாநிலத்தில் எட்டு மத்திய சிறைகள், சிறுவர் சீர்திருத்தப் பள்ளி (புதுக்கோட்டை) ஆடவர் பிற்காப்பு இல்லம் (பல்லாவரம்), மாநில மகளிர் சிறை (வேலூர்), சேலம், திருச்சிராப்பள்ளி, கொக்கிரகுளம் ஆகிய மூன்று இடங்களிலும் தனிக் கிளைச் சிறைகள், தஞ்சாவூர், சிங்காநல்லூர் ஆகிய இடங்களில் இரு திறந்த வெளிச் சிறைகள், சேலம் மத்திய சிறையோடு இணைக்கப் பட்டுள்ள பண்ணை சிறை, தஞ்சாவூர், நாகர்கோவில் ஆகிய இடங்களில் கிளைச்சிறைகள் செங்கற்பட்டு, பெரியார், கோவை, நீலகிரி மாவட்டங்களிலுள்ள அனைத்துக் கிளைச் சிறைகள் ஆகியவற்றின் அமைப்பு, கட்டுப்பாடு, நிருவாகம் முதலியவற்றை சிறைத்துறை கவனிக்கிறது. எஞ்சிய மாவட்டங்களிலுள்ள 93 கிளைச் சிறைகளும் இத்துறையின் மேற்பார்வையுடன் வருவாய் துறையின் கட்டுப்பாட்டிலுள்ளன. குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்புப் பிரிவும் இத்துறையின் பொறுப்பில் இயங்குகிறது. குற்றவாளிகள்மீண்டும் குற்றம் செய்யும் நிலைக்குத் திரும்புவதைத் தடுத்து நிறுத்தவும், அவர்கள் விடுதலையான பின்னர் சட்டத் திற்குக் கட்டுப்பட்ட நன்மக்களாக வாழவும், மீண்டும் சமூகத் துடன் இணைந்து நன்றாகச் செயற்படவும், உரிய பயிற்சிகளை நல்கி சீர்திருத்துவதே இத்துறையின் மூக்கிய நோக்கமாகும்.

I. சிறைகளின் வகைப்பாடு.

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் பின்வருமாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன :

(1) மத்திய சிறைகள்.

(2) தனிச் சிறை (மாநில மகளிர் சிறை, வேலூர்).

(3) தனிக் கிளைச் சிறைகள்.

(4) கிளைச் சிறைகள்.

பொதுவாக ஒரு திங்களுக்கு மேலாகத் தண்டனை அடைந்த வர்களும், வழக்கமாகக் குற்றம் செய்வோரும், ஆயுள் தண்டனை அடைந்தவர்களும், மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். விசாரணைக் கைதிகளும் ஒரு திங்களுக்கும் குறைவாகத் தண்டனை பெற்றவர்களும் கிளைச் சிறைகளில் வைக்கப் படுகின்றனர். வயது வந்த கைதிகள், இளங்குற்றவாளிகளிட மிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். அதுபோல ஆண் கைதி களும், பெண் கைதிகளும் பிரித்து வைக்கப்படுகின்றனர். வழக்க மாகக் குற்றம் செய்யும் கைதிகள் ( Habitual Pilssoners )

சேலத்திலும், கடலூரிலும் உள்ள மத்திய சிறைகளில் வைக்கப்படுகின்றனர். வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையில் பெண் கைதிகள் வைக்கப்படுகின்றனர். இளங்கைதிகளை அடைப்பதற்காகப் புதுக்கோட்டையிலுள்ள சீர்திருத்தப் பள்ளி இயங்குகிறது. தற்காலிக நடவடிக்கையாக மனநோய்க்கைதிகள் சென்னை அரசாங்க மனநலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகின்றனர் வேலூர் திருச்சி மத்திய சிறைகளில் தொழுநோய், தொற்று நோய் கைதிகளுக்கெனத் தனிச் சிறைக் கூடங்கள் உள்ளன.

சிறைத் துறையின் பொறுப்பிலுள்ள பல்வேறு வகைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1. | மத்திய சிறைகள் .. .. .. | | 8 |
| 2. | மாநில மகளிர் சிறை (வேலூர்) .. | | 1 |
| 3. | சீர்த்திருத்தப் பள்ளி (புதுக்கோட்டை) .. | | 1 |
| 4. | தனிக் கிளைச் சிறைகள் .. .. | | 3 |
| 5. | கிளைச் சிறைகள் : | | |
| | (அ) சிறைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளவை .. .. | 26 | 119 |
| | (ஆ) வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளவை .. .. | 93 | |
| 6. | திறந்த வெளிச் சிறைகள் .. .. | | 2 |
| 7. | பண்ணைச் சிறை .. .. .. | | 1 |
| 8. | ஆடவர் பிற்காப்பு இல்லம் (பல்லாவரம்) | | 1 |

கிளைச் சிறைகள் நீங்கலாக மத்திய சிறைகளில் மொத்தம் 12,121 கைதிகளுக்கும், கிளைச் சிறைகளில் 3,446 கைதிகளுக்கும் இடவசதி உண்டு. சிறைத்துறை, வருவாய்த் துறை ஆகிய வற்றின் கட்டுப்பாட்டில் உள்ள சிறைகள் குறித்த பட்டியலொன்று தனியே IV-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## II. நிருவாகம் :

சிறைத்துறையின் நிருவாக அமைப்பைக் காட்டும் விளக்கப் படம் அத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது. இத்துறையிலுள்ள பதவிகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை ஒன்றும் தனியே பின்னால் சேர்க்கப்பட்டுள்ளது.





1972–73 முதல் 1980 81 வரையான சிறைத்துறையின் செலவினங்களும், 1981–82–க்குரிய திருத்த மதிப்பீடு 1982–83 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1972–73 முதல் 1980–81ஆம் ஆண்டு வரை சிறைத் துறையின் வரவினங்கள், 1981–82ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு 1982–83ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு குறித்த விவரங்கள் பின்னால் தனியே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கிளைச் சிறைகளைப் படிப்படியான திட்டத்தின் கீழ் சிறைத்துறை நிருவாகத்தில் எடுத்துக் கொள்ளுதல்.

1977ஆம் ஆண்டிற்கு முன்பு, இம்மாநிலத்திலுள்ள 119 கிளைச் சிறைகளில் 10 கிளைச் சிறைகள் சிறைத் துறையின் நிருவாகத்தில் கொண்டுவரப்பட்டன. 1–10–1981-லிருந்து பெரியார், கோவை நீலகிரி ஆகிய மாவட்டங்களிலுள்ள 16 கிளைச் சிறைகள் இத் துறையின் நிருவாகத்தில் கொண்டு வரப்பட்டன. 1982–83 ஆம் ஆண்டில் வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி, மதுரை இராமநாதபுரம், திருநெல்வேலி கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள 55 கிளைச் சிறைகளைச் சிறைத் துறை நிருவாகத்திற் கொண்டுவரப்பட இருக்கிறது. தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள 38 கிளைச் சிறைகள் 1983–84-ல் சிறைத் துறை நிருவாகத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும். ஏழாம் நிதிக் குழு பரிந்துரைத்ததன் பேரில் மேற்படி திட்டங்கள் அக்குழுவின் நிதி உதவியின் கீழ் வருகின்றன.

(இ) சிறைக் காவலர்கள் பயிற்சிப்பள்ளி :

சிறைக் காவலர்கள் பயிற்சிப் பள்ளி ஒன்று வேலூரில் உள்ளது. இதில் 48 இரண்டாம் நிலைச் சிறைக் காவலர்களுக்குச் சீர்திருத்த முறைகள், சிறை நிருவாகம், ஒழுங்கு உடற் பயிற்சி போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்க வசதியுள்ளது. பயிற்சிக் கால அளவு 6 மாதங்களாகும். மேலும் மத்திய சிறைகள், புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியைச் சேர்ந்த 6 முதல் நிலைச் சிறைக்காவலர்களுக்கும், 6 முதன்மை தலைமை சிறைக் காவலர்களுக்கும் முறையே 30, 15 நாள்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், பயிற்சிக் காலத்தில் தற்கால சீர்திருத்த முறைப்படி சிறைக் கைதிகளை அணுகும் முறை குறித்து முதன்மை அளித்துப் பயிற்சியளிக்கப்படுகிறது.

(உ) (குற்றவாளிகள்) சீர்திருத்த அலுவலர்களுக்கான மண்டலப் பயிற்சிப் பள்ளி.

தென் மாநிலங்களைச் சேர்ந்த (ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் கேரளம், தமிழ்நாடு) சீர்த்திருத்த அலுவலர்களுக்குக்கான மண்டலப் பயிற்சிப் பள்ளி வேலூரில் 1–10–1979 முதல் செயற்

பட்டு வருகிறது. சிறைகள், நன்னடத்தை, சான்றளிக்கப்பட்ட பள்ளிகள், அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் இதர இணைந்த சீர்திருத்தப் பணியிலுள்ள அலுவலர்களுக்குக் குற்றங்களைத் தவிர்க்கவும், குற்றவாளிகளைச் சீர்திருத்தவும் பயிற்சியளிக்க படுவதுடன், சமூகவிரோதிகளைச் சிறந்த முறையில் நடத்தி காலத்திற்கேற்ற மறுவாழ்வு அளிக்கவும், தக்க நடைமுறை நுணுக்கங்கள், வழிமுறைகளை அளிப்பதை இப்பயிற்சி நோக்க மாகக் கொண்டுள்ளது. கண்காணிப்பாளரிலிருந்து துணை உதவி சிறை அலுவலர் வரையுள்ள மற்றும் அதற்கு நிகரான பதவித்தர அலுவலர்களுக்கும், ஏனைய சீர்திருத்த நிலையங்களைப் போல் உள்ள அலுவலர்களுக்கும் இப்பயிற்சியளிக்கப்படுகிறது. குற்ற வியல் நூல், உளவியல் நூல், சமூக வாழ்வியல் நூல், சிறை நிருவாகம், இளங்குற்றவாளிகளை, நன்னடத்தை சமூக நலப் பணி, சட்டம் நிறுவன மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப் படுகிறது. ஒரே நேரத்தில் இம்மாநிலத்தைச் சேர்ந்த 9 அலுவலர்களுக்கு இந்நிறுவனத்தில் பயிற்சியளிக்கப்படுகிறது. இதுவரை இம்மாநிலத்தைச் சார்ந்த 33 அலுவலர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இந்நிறுவனத்தின் தொடர் மற்றும் தொடரா இனச் செலவுகள் நான்கு தென் மாநிலங்களாலும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

111. திறந்த வெளிச் சிறைகள்.

இம்மாநிலத்தில் திறந்தவெளிச் சிறைகள் தஞ்சாவூர் மாவட்டத் துள்ள நீலகிரி கிராமத்திலும், கோவை மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரிலும் உள்ளன. தஞ்சாவூர் சிறையில் 100 கைதி களுக்கும், சிங்காநல்லூர் சிறையில் 42 கைதிகளுக்கும் இடவசதி உள்ளது. இது தவிர, பண்ணைச் சிறை ஒன்று சேலம் மத்திய சிறையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

(2) திறந்த வெளிச் சிறைகளின் நோக்கங்களாவன :

(அ) பொதுவான சிறையில் ஏற்படும் நெருக்கடியைத் தவிர்த்தல்.

(ஆ) சிறைவாசிகளின் எதிர்காலப் புது வாழ்வுக்காக அவர் களுக்குச் சரியான முறையில் வேளாண்மையில் பயிற்சி அளித்தல்.

(இ) வேளாண்மைப்பொருள் உற்பத்தியில் சிறைகள் அனைத்து வகையிலும் தன்னிறைவு அடைதல்.

(ஈ) நன்முறையில் நடந்துகொள்ளும் கைதிகளை திறந்தவெளிச் சிறைகளுக்கு மாற்றி அவர்களுக்கும் ஓரளவு உரிமை அளித்தல்.



(உ) குறைந்த அளவு கட்டுப்பாடுள்ள சிறைகளில் கைதி களை நடத்துதல், அவர்கள் மீது கட்டுப்பாடுகள் விதித்தல் தொடர்பான கோட்பாடுகளை மேம்படுத்தல்.

(3) தற்போதுள்ள திறந்தவெளிச் சிறைகளின் அடிப்படையில், திறந்த வெளிச்சிறைகளை பின்வரும் இடங்களில் அமைப்பது குறித்த செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன.

(1) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகங்கை அருகில் முத்துப்பட்டி.

(2) திருநெல்வேலி மாவட்டத்தில் சிங்கம்பட்டி.

(3) தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள வேலப்பாக்கம், அரசு விதைப்பண்ணை.

(4) செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வேங்கடமங்களம் ஏழாம் நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மத்திய அரசால் அளிக்கப்படும் நிதி உதவியைக் கொண்டு, மேற்கண்ட 4 திறந்த வெளிச் சிறைகளையும் 1982–84ல் தொடங்கக் கருதப் பட்டுள்ளது.

(IV) கைதிகளின் வகைப்பாடும் சிறப்புரிமைகளும்.

சிறையில் கைதிகளுக்காக, 'ஏ', 'பி' என்ற இரண்டு பிரிவுகள் உள்ளன. சமூகத் தகுதிப்பாடு, கல்வி, வாழ்க்கைத்தரம், சொந்தமாக வைத்துள்ள சொத்து விவரம், நடத்தை, முன் வரலாறு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கைதிகளுக்கு மேற்கண்ட வகுப்புகளைத் தண்டனை வழங்கும் நீதி மன்றங்கள் அளிக்கின்றன. சமூகத் தகுதிப்பாடு, கல்வி, பழக்கவழக்கம் ஆகியவற்றால் உயர் வாழ்க்கை முறையில் பழக்கப்பட்டிருக்கும் கைதிகள் 'ஏ' வகுப்பு பெறத் தகுதியுடையவராவர். முற்றி லும் நாகரிகமற்ற முறையில் அல்லது நன்னடத்தையற்ற முறை யில் நடந்து கொண்ட குற்றத்தைச் செய்வதற்காகத் தண்டிக்கப் பட்ட எவருக்கும் 'ஏ' வகுப்பு அளிக்கப்பட மாட்டாது. சமு தாயத்திற்கு எதிராகக் குற்றங்கள் புரிந்த கைதிகளும் சிறையில் 'ஏ' வகுப்புப் பெறத் தகுதியுடையவரல்லர். 'ஏ' வகுப்பில் இல்லாத இதர சிறைவாசிகள் 'பி' வகுப்பைச் சேர்ந்தவர்களாவர்.

(V) (அ) உணவு.

(1) சாதாரண உணவு முறை.

'ஏ' வகுப்பு கைதிகளுக்கு அளிக்கப்படும் உணவு கீழ்க் காணும் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

(1) சைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள்; (2) சைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள்; (3) அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள்; (4) அசைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள். இக்கைதிகள் தங்களது சொந்தச் செலவில் பழங்களையும், பிஸ்கட்டு, கோகோ, ஓவல்டின் போன்ற உணவுப் பொருட்களையும் வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்புக் கைதிகளுக்கு வரையறுத்த அளவிற்குச் சைவ உணவு வழங்கப்படுகிறது. இந்த உணவின் அளவு, வேலை செய்யும் கைதிகளுக்கும், வேலை செய்யாக் கைதிகளுக்குமிடையே மாறுபடும், மருத்துவ அலுவளர், கைதிகளுக்கு மருத்துவ நிலையில் பால், இறைச்சி, ரொட்டி, வெண்ணெய், பழங்கள், முட்டை ஆகியவற்றைக் கொடுக்க அனுமதி வழங்கலாம்.

(2) சத்துணவு.

கைதிகளுக்கு உணவில், கலோரி அளவை அதிகம் அளிப்பதற்கு வகை செய்யும் சத்துணவுத் திட்டம் சென்னை சிறையில் 1971 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. இத்திட்டம் பின்னர் மதுரை, கோவை மத்திய சிறைகளிலும் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து செயல்படுத்தப்பட்டது. சத்துணவுத் திட்டத்தின்படி, காலையில் கொடுக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப் பதிலாக, வாரத்தில் மூன்று நாட்களுக்கு இட்டிலியும், மீதி நான்கு நாட்களுக்கு அரிசிப் பிட்டும் அளிக்கப்படுகின்றன. மாலையில் தரப்படும் கடலைச் சுண்டலுக்குப் பதிலாக, வேர்க்கடலைப் பருப்பும் வழங்கப்படுகின்றது.

அனைத்துச் சிறைகளிலுள்ள (கிளைச் சிறைகளில் உள்ள கைதிகள் தவிர) கைதிகளுக்கும் பல்வேறு உணவு வகைகளை அறிமுகப்படுத்தி, புளிசாதம், தயிர்சாதம், தேங்காய் சாதம் ஆகியவற்றுடன் பொருத்தமான கூட்டுக்கறியுடன் மதிய உணவை மாற்றி மாற்றி வழங்கவும், அசைவ உணவருந்தும் கைதிகட்கு 15 நாள்களுக்கு ஒருமுறை 100 கிராம் இறைச்சி வழங்கவும், சைவ உணவருந்தும் கைதிகட்கு இறைச்சிக்குப் பதில் தக்க மாற்றுணவு வழங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருந்து வருகிறது. எல்லா மத்திய சிறைகள், மாநில மகளிர் சிறை வேலூரிலும், சோளம், கேழ்வரகிற்கு பதிலாக ஆலையில் அரைக்கப்பட்ட அரிசி வழங்கப்படுகிறது.

(3) ஓரளவு சத்துணவுத் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ் 'பி' வகுப்பு கைதிகளுக்கு வாரத்திற்கு மூன்று நாட்களுக்கு இட்டிலி வழங்கப்படுகிறது. பிட்டு வழங்குவதைக் கைதிகள் விரும்பாததால், வாரத்தில் நான்கு நாட்களுக்கு பிட்டுக்குப் பதிலாக கஞ்சியோ அல்லது இட்டிலியோ வழங்கப்படுகிறது. மாலையில் கொண்டைக்கடலை சுண்டல் வழங்கப்படுகிறது. இத்திட்டம், திருச்சி, வேலூர், கடலூர், பாளையங்கோட்டை, சேலம் ஆகிய இடங்களிலுள்ள மத்திய சிறைகளிலும் வேலூர் மாநிலமகளிர் சிறையிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



அரசு ஆணை எண். 108, உள்துறை, நாள் 14-1-1980-ல் மாநில மகளிர் சிறையிலுள்ள கைதிகளுக்கு வழங்கப்படும் சோளப் பிட்டுக்கு (வாரத்தில் நான்கு நாட்கள் வழங்கப்படுகிறது) பதிலாகக் கொண்டைக் கடலை சுண்டல், காபி, கஞ்சி அல்லது உப்புமாவைத் தற்போது வழங்கப்படும் அளவிற்குச் சற்றும் மேற்படாமல் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

(4) உணவுக்காகும் செலவு.

பல்வேறு வகைக் கைதிகளுக்கு அனுமதிக்கத்தக்க பல்வேறு அளவு உணவுக்கு, கைதி ஒருவருக்கு நாளொன்றுக்கு ஆகும் தோராயமான செலவு குறித்த விவரங்கள் வருமாறு:—

(1) 'ஏ' வகுப்பு கைதிகள்.

| | ரூ. காசு. |
|---|---|
| சைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள் | 8.59 |
| சைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள் | 7.93 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யும் கைதிகள் | 10.85 |
| அசைவ உணவருந்தும் வேலை செய்யாக் கைதிகள் .. .. .. .. .. | 8.04 |
| (2) 'பி' வகுப்பு கைதி சத்துணவுத் திட்டத்தின் கீழ் | 5.22 |
| (3) 'பி' வகுப்பு கைதி ஓரளவுச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் | |
| வேலை செய்வோர் .. | 4.72 |
| வேலை செய்யாதோர் .. | 3.96 |

(5) சிறப்புணவு.

பொங்கல், விடுதலை நாள் முதலிய விழாக்களின்போது கைதிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 2 கூடுதல் செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

[1982 மார்ச் 20

(ஆ) உடையும் படுக்கையும்.

'ஏ' வகுப்புக் கைதிகள் சொந்தப் படுக்கை வைத்துக் கொள்ளவும், வேலை செய்யும் நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் சொந்த உடையைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை செய்யும் நேரங்களில் சிறையக ஆடையையே அவர்கள் அணிதல் வேண்டும். உறவினர்களைக் காணும்போது 'ஏ' வகுப்புக் கைதிகள் தங்களுடைய சொந்த உடைகளை அணியலாம். 'பி' வகுப்புக் கைதிகள் எல்லா நேரங்களிலும் சிறையக ஆடைகளையே அணியவேண்டும். அனைத்து மத்திய சிறைகள், வேலூர், மகளிருக்கான மாநிலச்சிறை, தனிக் கிளைச் சிறைகள், திறந்தவெளிச் சிறைகள் ஆகியவற்றில் சிறை வைக்கப் பட்ட 'பி' வகுப்பு சிறைக் கைதிகளுக்கும், புதுக்கோட்டை, சீர்திருத்தப் பள்ளியில் உள்ளவர்களுக்கும் உறையுடன் கூடிய ஒரு தலையணை வழங்க 1980-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் அரசு ஒப்பளித்துள்ளது. எல்லாச் சிறைகளுக்கும் உறையுடன் கூடிய தலையணை வழங்கப்பட்டுள்ளது.

(இ) சோப்பு முதலிய துணைப் பொருள்கள் :

மாதத்திற்கு ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக ஒவ்வொரு கைதிக்கும் 28 கிராம் எண்ணெயும் வழங்கப்படுகிறது. மேலும் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு கைதிக்கும் சீயக்காய்த்தூளும், சலவைச் சோப்பும் வழங்கப்படுகிறது. கோவை மத்திய சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் கைதிகள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக அவர்களுக்கு கூடுதலாக எண்ணெய் அளிக்கப்படுகிறது. நன்னடத்தையான அனைத்து வகுப்புக் கைதிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரண்டு வாரங்களுக்குத் தேவையான அளவை மட்டும் பெறுவது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஈ) நேர் காணலும் கடிதங்களும்—

'ஏ' வகுப்புக் கைதிகள் வாரத்திற்கு ஒருமுறை கடிதம் எழுதுவதற்கும் பெறுவதற்கும், இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை மூவருடன் ஒரு சமயத்தில் அரைமணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்புக் கைதிகள் மாதத்திற்கு இரண்டு கடிதங்கள் எழுதுவதற்கும், பெறுவதற்கும், மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை மூவருடன் ஒரேசமயத்தில் அரை மணி நேரம் கலந்துரையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.



1982 மார்ச் 20]

(உ) செய்தித் தாள்களும் இதழ்களும்—

அரசுச் செலவில் 'பி' வகுப்புக் கைதிகளுக்குக் கீழ்க்கண்ட நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன :—

1. தினமணி
2. சுதேசமித்திரன்
3. அண்ணா
4. தினத்தந்தி
5. தினமலர்
6. விடுதலை
7. இந்து

'ஏ' வகுப்புக் கைதிகள் தங்களது சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த செய்தித்தாள்களை வாங்கிக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அனைத்து வகுப்புக் கைதிகளும், தங்கள் சொந்தச் செலவில் அரசு ஏற்பளித்த பத்திரிகைகளை வாங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றனர். இது தவிர, சிறைச் சாலை நூலகத்தில் சில புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. மாவட்ட உள்ளூர் நூலக ஆணைக் குழுவிடமிருந்தும் புத்தகங்கள் பெறப்பட்டுக் கைதிகளுக்கு வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வி இயக்குநரைக் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்ட பயனுள்ள புத்தகங்களின் பட்டியல் ஒன்று அவசியமேற்பட்டால் அவற்றை வாங்குவதற்குச் சிறைச்சாலைக் கண்காணிப்பாளருக்கு அனுப்பப்படுகிறது.

(ஊ) இதர சலுகைகள் :

'ஏ' வகுப்புக் கைதிகள் மேசை, நாற்காலி, கொசுவலை, புகையிலை ஆகியவற்றைப் பயன்படுத்தவும், சமையலுக்கும், அருந்துவதற்கும் தேவைப்படும் கலன்கள் ஆகியவை போன்ற பிற வசதிகளை பயன்படுத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள். மருத்துவ ஆலோசனையின் பேரில், இதற்கு முன் சிறைத் தண்டனை அடையாத, வழக்கமாகக் குற்றம் செய்யாத சிறை மருத்துவமனையில் இருக்கும் கைதிகள், சிறை மருத்துவமனையின் வெளிப்புறத்தில் தகுந்த காவலரோடு உறங்கச் சிறை கண்காணிப்பாளரின் விருப்பத்தின் பேரில் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைக் கைதிகள் அவர்களுடைய நன்னடத்தையைப் பொருத்தும், அவர்கள் அனுபவித்துள்ள தண்டனைக் காலத்தைக்

கணக்கிட்டும் தண்டனை இரவுக் காவற்காரர்கள் (Convict Night) தண்டனை மேற்பார்வையாளர் (Convict Overse er) தண்டனைக் காவலர்கள் (Convict Warder) என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆவர்.

(எ) பொழுதுபோக்கு வசதிகள்:

ஞாயிற்றுக் கிழமைகள், சிறை விடுமுறை நாள்களில் அனைத்து மத்தியசிறைகளிலுள்ள எல்லாக்கைதிகளும் கைப்பந்து, சடுகுடு, பூப்பந்து ஆகிய விளையாட்டுக்களை விளையாடவும், வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையின் பெண் சிறைவாசிகள் வளைபந்து (Tennikoit) விளையாடவும் அனுமதிக்கப்படுகின்றனர். மதுரை மத்திய சிறையைப் பொறுத்தமட்டில், ஆழ்நிலை தியான முறை மதுரை சமூகப்பணி நிறுவனத்தின் மூலமும், இதர சிறைகளைப் பொறுத்தமட்டில் இந்தியக் குற்றவியல் கழகம், இந்திய இயற்கை சட்டவியல், நடைமுறை இந்திய நிறுவனம், தமிழ்நாடு நன்னடத்தை சீர்திருத்தக் கழகம், மகரிஷி நிறுவனம் ஆகியவற்றின் மூலமும் விரும்பும் கைதிகளுக்குக் கற்பிக்கப்படுகிறது.

(VI) கைதிகளுக்கான செய் தொழிலும் சிறைகளின் தொழிற்சாலைகளும்.

கடுங்காவல் தண்டனை பெற்ற கைதிகளுக்குச் சிறையில் வேலை அளிக்கப்படுகிறது. கைதிகள் விடுதலையடைந்த பின்பு அவர்களுக்கு புதுவாழ்வு கிடைக்க வகைசெய்யும் நோக்கத்துடன் சிறைகளில் உள்ள கைதிகளுக்கு தொழில் அளிக்கப்படுகிறது. எனவே, பயனில்லாத உற்பத்தியை நோக்கமாகக் கொண்டிராத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. சிறை வேலை, கடினம், நடுத்தரம், எளிமை என்று மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படி கைதிக்கு உரிய வேலை கொடுக்கப்படுகிறது. கைதிகளின் விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல் வேலை, நெசவு, சாயம் தோய்த்தல், கருமார் வேலை, தோலால் பொருட்களைச் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், சோப்பு செய்தல் ஆகிய தொழில்கள் கற்றுத்தரப்படுகின்றன. கைதிகள் தங்களது விடுதலைக்குப்பின் தங்களைச் சொந்தத் தொழிலில் ஈடுபடுத்திக் கொள்ளும்வகையில் நவீன வேளாண்மை முறைகள், பால் பண்ணை வளர்ச்சி ஆகிய தொழில்களிலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். கோவை மத்திய சிறையில் நெசவுப் பிரிவு, சாயப் பிரிவு அடங்கிய துணி ஆலை ஒன்றுள்ளது. இத்தொழிற்சாலைகள் 1977–79-ல் இந்திய அரசின் உதவி பெற்று நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. மத்திய சிறைகள், வேலூர் மகளிருக்கான மாநிலச் சிறை, புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்களின் பட்டியல் தனியே பின்னால் குறிக்கப்பட்டுள்ளது.



எட்டு மத்திய சிறைகளிலும், புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியிலுமுள்ள கைதிகளுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்ட சில தொழில்களில் பயிற்சி அளிக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது :—

1. செங்கல் உற்பத்தித் தொழில்
2. குழாய்களை பழுது பார்த்து இணைத்தல்
3. எளிய மின் இணைப்புப் பயிற்சி
4. மோட்டாருக்கான மின் கம்பியை மீண்டும் சுற்றுதல்
5. உலோகத் துண்டு இணைப்புப் பயிற்சி
6. தகர வேலை செய்தல்
7. வண்ணம் பூசுதல் (பெயர் பலகை எழுதுதல் உட்பட)
8. சைக்கிள் பழுது பார்த்தல்.

ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, இந்திய அரசின் நிதி உதவியுடன் இத்திட்டத்தை செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பயிற்றுநர்களால் மேற்கண்ட பயிற்சி அளிக்கப்படும். இத்தொழில்களில் பயிற்சி பெற்று, ஆதரவற்ற கைதிகள் குறைந்த முதலீட்டில் சொந்தமாகத் தொழில் செய்யலாம்.

கைதிகள் கீழ்க்காணும் வீதங்களில் பணிக்கொடைபெறத் தகுதி பெற்றவர்களாவர் :—

| | பணிக்கொடையின் வீதம். (ஒரு திங்களுக்கு) |
|---|---|
| | ரூ. காசு. |
| (1) கைதி இரவுக்காவலர் | 0. 50 |
| (2) கைதிகள்—மேற்பார்வையாளர் | 1. 00 |
| (3) கைதிகள்—காவலர் | 2. 00 |

[1982 மார்ச் 20

ஊதியம் ஈட்டும் திட்டமானது சேலம் மத்திய சிறைச்சாலையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் ஊதிய வீதங்கள் பின்வருமாறு :—

| | ரூ. காசு |
|---|---|
| (1) தேர்ச்சி பெற்ற வேலையாள் | 0.40 |
| (2) ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாள் | 0.20 |
| (3) தேர்ச்சி பெறாத வேலையாள் | 0.10 |

ஏனைய மத்திய சிறைகளுக்கும் இத்திட்டத்தை விரிவு படுத்துவதற்கான செயற் குறிப்புகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன. ஊதியம் பெறும் திட்டத்தின்கீழ் மேற் சொன்ன வகை கைதிகளுக்குத் தற்போது இருந்துவரும் 40 காசு, 20 காசு, 10 காசு ஊதியத்தை முறையே ஒரு ரூபாய் 50 காசு, 25 காசு என்று உயர்த்துவது பற்றிய செயற் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. ஏழாம் நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி நிதியுதவி பெற்று மேற்சொன்ன திட்டங்கள் நிறை வேற்றப்பட உள்ளன.

## VII. மருத்துவ துப்புரவு நல ஏற்பாடுகள்.

சிறைகளில் போதுமான மருத்துவ, துப்புரவு நல ஏற்பாடுகள் உள்ளன. ஒவ்வொரு மத்திய சிறையிலும், சீர்திருத்தப் பள்ளியிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும் ஒரு மருத்துவ அலுவலரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி மருத்துவ அலுவலரும் ஒரு மருந்தாளுநரும் கொண்ட மருத்துவமனை ஒன்று உள்ளது. பல்லாவரம், ஆடவர் பிற்காப்பு இல்லத்தில் பகுதி நேர மருத்துவர் ஒருவரையும், முழுநேர மருந்தாளுநர் ஒருவரையும் கொண்ட மருந்தகம் ஒன்று உள்ளது. தேவைப்படுகின்ற கைதிகளுக்கு மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுகிறது. மேலும், சிறையைப் பார்வையிடும் பல் மருத்துவரால் பல் நோய் சிகிச்சைக்கும் வகை செய்யப்படுகிறது. வேலூர், திருச்சிராப் பள்ளி மத்திய சிறைகளில் தொழு நோய்க் கைதிகள், தனியாகப் பிரித்துக் தனிக் கூடங்களில் வைக்கப்படுகின்றனர். மன நிலை சரியில்லாத கைதிகள், மனநோய்க் கைதிகள் சென்னை மனநல நிறுவனத்திற்கு அனுப்பப்படுகின்றனர்.

அனைத்து மத்திய சிறைகளிலும், வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையிலும் புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலும், தனிக் கிளைச் சிறைகளிலும், 89 கிளைச் சிறைகளில் தண்ணீர் வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏழாம் நிதிக் குழுவின் பரிந்துரையின்படி இந்திய அரசிடமிருந்து நிதியுதவி கிடைக்கும்போது, ஏனைய முப்பதுகிளைச் சிறைகளிலும் நீரடிக் கழிப்பிடங்கள் விரைவில் அமைக்கப்படும்.



1982 மார்ச் 20]

## VIII. கைதிகளுக்குக் கல்வி வசதி அளித்தல்.

கல்வியின் மூலம் பயனடையக் கூடிய கைதிகளுக்குக் கல்வி வசதி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் தகுதி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப் பள்ளி உள்ளது. முதியோர் கல்வியில் பயிற்சி பெற்ற ஆசிரியர் களைக் கொண்டு சிறைகளில் புதிய முறையில் முதியோருக்குக் கல்வி புகட்டப்படுகின்றது. சிறைக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு சிறைக் கண்காணிப்பாளர்கள் சிறந்த கல்வி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் வரவழைத்துச் சிறை விடுமுறை நாள்களிலும், ஞாயிற்றுக் கிழமைகளிலும் விரிவுரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள். கைதிகள் பல்கலைக் கழகங்கள் நடத்தும் முதுகலைப் பட்டப்படிப்பு வரையிலான தேர்வுகள எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். இது தொடர்பான புத்தகங்கள். தேர்வுக் கட்டணம், இதர செலவுகளை அரசு ஏற்றுக் கொள்கிறது. கைதிகள் தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால் மறுமுறையும் தேர்வுக்கு அரசு செலவில் செல்லலாம். இதுபோல் மொத்தம் மூன்று தடவை தேர்வுக்குச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் கைதிகள் தேர்வு எழுதச் செல்லும்போது அவர்களது சொந்த உடையிலேயே தேர்வு எழுத இசைவளிக்கப்படுகிறார்கள். அதே போல் அவர்களைக் காவல்காத்து, அழைத்துச் செல்லும் காலவர்களும் சாதாரண உடை அணிந்தே செல்கின்றனர்.

சிறையில் சமயம், நீதி நெறி வகையான விரிவுரைகள் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், நீதி அல்லது சமய சம்பந்தமான உரைகள் என்ற பெயரால் மத மாற்றம் செய்தல் கூடாது என்பதோடு விரிவுரையாற்றுவோர் எம்மதத்தைச் சேர்ந்தவராக உள்ளனரோ அம்மதத்தைச் சார்ந்த சிறைவாசிகளிடம் மட்டுமே, உரையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையுடன் அத்தகைய உரைகளும் போதனைகளும் அனுமதிக்கப்படுகின்றன.

## IX. சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை.

இப்பள்ளியில் 18 வயதிலிருந்து 23 வயது வரை உள்ள இளங் குற்றவாளிகள் சேர்க்கப்படுகின்றனர். இப்பள்ளி மாணவர்களுக்குக் கீழே குறிப்பிட்டுள்ள தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

(அ) தச்சு வேலை

(ஆ) கருமார் வேலை

(இ) புத்தகம் கட்டுதல்

(ஈ) தையல் வேலை

(உ) வேளாண்மை

(ஊ) கொத்து வேலை

(எ) சலவைத் தொழில்

(ஏ) 'பாண்டு' இசைக் கருவிப் பயிற்சி

(ஐ) சமையல் வேலை போன்ற வீட்டு வேலைகள்.

இப்பள்ளியில் உள்ளவர்கள், அங்கிருந்து அனுப்பப்பட்ட பின்னர், தாங்களாகவே வேலையைத் தேடிக் கொள்ள இயலும் பொருட்டு அவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இப்பள்ளியில் 405 மாணவர்களுக்கான இடவசதி செய்யப்பட்டுள்ளது. இங்குள்ள துயிற்கூடம் ஒன்று இளங் குற்றவாளிகளுக்கான இடமாக மாற்றப்பட்டு அங்கு 24–25 வயது பிரிவைச் சேர்ந்த இளங்குற்றவாளிகள் வைக்கப்படுகின்றனர். இத்தகைய கைதிகள் இங்கு 25 வயது வரை வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளியிலுள்ள துயிற்கூடம் 1894 ஆம் ஆண்டு சிறைகள் சட்டத்தின் (Prisons Act) கீழ் சிறையாக மாற்றப்பட்டுள்ளது. விடுதலை செய்யப்பட்ட பார்ஸ்டல் பள்ளி மாணவர்களின் புது வாழ்வுக்காக எந்திரங்கள் அல்லது பசுமாடு அல்லது எருமை மாடுகள் வாங்குவதற்காக நிதி உதவி வழங்கப்படுகிறது. இவ்வகையாக அவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி அவர்களிடமிருந்து எளிய தவணைகளில் வசூலிக்கப்படுகிறது.

## X. ஆடவர் பிற்காப்பு இல்லம், பல்லாவரம்.

பல்லாவரம் ஆடவர் பிற்காப்பு இல்லம், சீர்திருத்த நிறுவனங்களில் இருந்து அல்லது சீர்திருத்தப் பணிசாராத நிறுவனங்களிலிருந்து வெளிவருபவர்களுக்கு இலாபகரமான சொந்த தொழில் புரிந்து நல்ல முறையில் வாழ்வை அமைத்துக் கொள்ள இயலும் வண்ணம், இரண்டு ஆண்டுகளுக்குத் தச்சு வேலை, உலோக வேலை அல்லது தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, இருப்பிடம் அளிக்கப்படுவதோடு, முதலாண்டில் நாள் ஒன்றுக்கு ரூபாய் 1.50 வீதமும் இரண்டாம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு ரூ. 2.00 வீதமும் பயிற்சி உதவி தொகை வழங்கப்படுகிறது. அவர்களுக்குத் தொழில் பயிற்சிக் கூடங்களில் நடைமுறையில் உள்ள பாடத் திட்டத்தின், கீழ், ஆனால் பிற்காப்பு இல்லத்தின் நிலைமைக்கும், தேவைக்கும், ஏற்றாற்போன்ற மாற்றங்களுடன் பயிற்சி அளிக்கப்படுகின்றது. உரிய வயது வந்த ஆடவர் மட்டுமே இவ்வில்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வில்லத்தில் அங்கீகரிக்கப்பட்ட



மொத்த இருப்பிடங்கள் 100 என்றாலும், சராசரியாக 30 பேர்களே இந்த இல்லத்தில் தங்கி பயிற்சி பெறுகிறார்கள். இப் பிற்காப்பு இல்லத்தில் உள்ளவர்களுக்கும் சத்துணவுத் திட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

தற்போது இவ்வில்லம் பல்லாவரத்தில் தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. சிறைத் துறைக்குச் சொந்தமான புழலில் உள்ள கட்டிடங்கள் இவ்வில்லத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. அக்கட்டிடங்களில் மின்சார வசதி செய்யப் பட்டதும் இவ்வில்லம் விரைவில் அங்கு மாற்றப்படும்.

## XI. சிறைப் பார்வையாளர்கள்.

குற்றவியல் நீதித்துறை, நீதித்துறை, மருத்துவம், துப்புரவு நலம், தொழில், தீயணைப்புப் பணிகள் ஆகிய துறைகளிலிருந்து நியமிக்கப்படும் அரசுச் சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர இத்துறையில் நாட்டமுள்ள பொதுமக்கள் முக்கியமாக சமூக பணியாளர்கள், உளநோய் வல்லுநர்கள், மனவியல் நிபுணர்கள், சமூகவியல் வல்லுநர்கள் ஆகியோரும் ஒவ்வொரு சிறையிலும் அரசுச் சார்பற்ற சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். அரசுச் சார்பற்ற சிறைப் பார்வையாளர் வழக்கமாக விடுதலை செய்யப்பட்ட சிறைவாசிகள் உதவிச் சங்கத்தின் உறுப்பினர்களாகவும், சிறைவாசிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ளவர்களாகவும் உள்ளனர். ஒவ்வொரு சிறைக்கும் அரசுச் சார்பற்ற சிறைப்பார்வையாளர்கள் நியமிக்கப்படுவதுடன் மாவட்ட அரசு சார்பற்ற சிறைப் பார்வையாளர்களையும் அரசு நியமித்துள்ளது. இவர்கள் மாவட்டத்திலுள்ள எந்தச் சிறையையும் பார்வையிடலாம். சிறைவாசிகள், சிறைகள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தை முறைப்படுத்தும் சட்டங்கள், விதிகள் ஆகியவை சிறைகளில் உரியவாறு செயற்படுத்தப்படுகின்றவா என்று தாம் தெரிந்துகொள்வதும், சிறைகளின் பல பகுதிகளைச் சென்று பார்வையிடுவதும், அவரிடம் கைதிகள் எவரேனும் புகார் செய்தால் அதனைக் கேட்டு விசாரணை செய்வதும் பார்வையாளரின் கடமையாகும். சிறைப் பார்வையாளரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாகும்.

## XII. சிறைவாசிகளை விடுப்பில் விடுதல்.

சிறைவாசிகள் தங்களது குடும்பத் தேவைகளை கவனிப்பதற்காக அவர்களுக்கு வழங்கப்படும் விடுப்பு, சம்பந்தப்பட்ட நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலரின் அறிக்கையைப் பெற்ற பிறகு அரசால் அளிக்கப்படுகிறது. இது சம்பந்தமாக, அத்தகைய விடுப்பு அளிக்கப்படுவதற்கு முன்னர், காவல்துறையினரிடமிருந்து அறிக்கை பெறும் முறையை கைவிட்டுவிட அரசு ஆணை பிறப்

பித்துள்ளது. அதிகார வரம்புடைய சம்பந்தப்பட்ட நன்னடத்தை கண்காணிப்பு அலுவலர், சிறைவாசிகளின் முதல் விடுப்பு கோரிக்கை சம்பந்தப்பட்ட எல்லா நேர்வுகளிலும், உள்ளூர் காவல்துறை சப்-இன்ஸ் பக்டரை கலந்தாலோசித்து தனது அறிக்கையை அரசுக்கு நேரடியாக அனுப்புகிறார்; அதன் பிறகு விடுவிக்கப்படும் விடுப்பிற்கான கோரிக்கைகளின் மீதான தனது அறிக்கையை நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலர், உள்ளூர் காவல்துறை சப்-இன்ஸ்பக்டரை கலந்து ஆலோசிக்காமலேயே அரசுக்கு அறிக்கையை அனுப்புகிறார். 5 ஆண்டு சிறைவாசம் அனுபவித்துவரும் இதுவரையில் விடுப்பில் சென்றிடாதவருமான சிறைவாசிகளுக்கு முதலில் ஒருமாத விடுப்பு அளிக்கப்படுகிறது. அதன்பிறகு, இதற்கு முன்னர் கடைசியாக விடுப்பில் சென்று திரும்பிய நாளிலிருந்து இரண்டாண்டுகள், சிறைவாசம் அனுபவித்த பிறகு மீண்டும் விடுப்பு அளிக்கப்படுகிறது. இன்னும் 3 ஆண்டு காலம் சிறைவாசம் அனுபவிக்க வேண்டிய சிறைவாசிகளுக்கு அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு இயலும் வண்ணம், ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு மாதம் என்ற வீதத்தில் அவர்களுக்கு விடுப்பு அளிக்கப்படுகிறது.

இவற்றோடு அவசரக்கால விடுப்பு சிறைவாசிகளுக்கு அவர்கள் தங்களுடைய நெருங்கிய உறவினர்களான தந்தை தாய், கணவன் மனைவி, சொந்த மகன், சொந்த மகள் சொந்த சகோதரி சொந்த சகோதரர்கள் மிகவும் ஆபத்தான நிலையில் நோய்வாய்ப்பட்டிருந்தாலோ அல்லது இறந்து போனாலோ அவர்களை சென்று பார்க்கவோ மற்றும் நெருங்கிய உறவினர்களான சொந்த மகன் சொந்த மகள் மற்றும் சொந்த சகோதரன் சொந்த சகோதரி ஆகியோரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்காகவும், வருடத்திற்கு இத்தகைய அவசரக்கால விடுப்பு 15 நாட்களுக்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு, அளிக்கப்படுகிறது. இத்தகைய விடுப்புகள் 5 தவணைகளில் ஒரு தவணைக்கு 3 நாட்களுக்கு மேற்படாமல் குறைந்தது ? வருடம் சிறை தண்டனை கழித்த சிறைவாசிகளுக்கு அளிக்கப்படுகிறது. குறைந்தது மூன்று ஆண்டுகள் அச்சிறைவாசி சிறைவாசம் அனுபவித்து இருக்க வேண்டும் என்னும் நிபந்தனை அச்சிறை வாசியின் பெற்றோர், கணவன், மனைவி, மகன் அல்லது மகள் இறந்து விடும்போது அவர்களைச் சென்று காண்பதற்கு இது பொருந்தாது.

## XIII. தண்டணைக் குறைப்பு

கைதிகளின் நன்னடத்தை வேலை செய்யும் ஆர்வம் ஆகியவற்றை வளர்க்க ஒரு செயல் ஊக்கமளிக்க அமையும் பொருட்டு பலவிதமான தண்டனைக் குறைப்புகள் சிறைவாசிகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. சிறைவாசிகளின் நன்னடத்



தைக்கான, ஒரு மாதந்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், அவர்கள் செய்யும் சிறந்த பணிக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும், சாதாரண வகைத் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. சிறைகளில் ஞாயிறன்று ஏனைய சிறை விடுமுறை நாட்களிலும் சமையற்காரர்களாகவும், துப்புரவு செய்வோராகவும் பணிபுரியும் சிறைவாசிகளுக்கு இவ்விதிகளின்கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்போடு, மூன்று மாதத்திற்கு மூன்று நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. கான்விக்ட் வார்டர்களுக்கு மாதத்திற்கு எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. சிறைகளின் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டை பேணி வரும் கைதிகளுக்குச் சிறைக் கண்காணிப்பாளரால் சிறப்பு தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டிற்கு 30 நாட்களும் சிறந்த நற்பணிக்காக சிறப்பு தண்டனைக் குறைப்பாக சிறைத் துறைத் தலைவரால் ஓர் ஆண்டிற்கு 60 நாட்களும் சிறப்பு தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. கருத்தடை அறுவை சிகிச்சை செய்துக் கொள்ளும் சிறைவாசிகளுக்கு உயரளவு ஓராண்டுக்கால சிறப்பு தண்டனைக் குறைப்பும் இரத்த தானம் செய்யும் கைதிகளுக்கு ஒரு நேரத்தில் 10 முதல் 15 நாட்களுக்கு தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகிறது. மேற்கண்ட தண்டனைக் குறைப்பு தவிர, மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனைப் பெற்ற சிறைவாசிகளை, அக்கால அளவிற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து, ஆலோசனைக் குழு கருதிப் பார்க்கிறது. இதற்காக அந்த சிறைவாசியின் கடந்த கால நன்னடத்தை பற்றிய குறிப்புகளையும், உள்ளூர் அதிகாரிகள், அதாவது மாவட்ட ஆட்சியர், நன்னடத்தை கண்காணிப்பு அதிகாரி ஆகியோர் அளித்த அறிக்கையையும் பரிசீலித்து அச் சிறைவாசியை, அவருக்கு அளிக்கப்பட்ட சிறை தண்டனைக் கால அளவு முடிவடைவதற்கு முன்னரே அவரை விடுவிக்க அரசு கருதிப் பார்ப்பதற்காக இக்குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு அனுப்பி வைக்கிறது.

இந்திய அரசு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையில் 433-ஏ என்னும் புதிய பிரிவை அமைக்கும் முன்னர் ஆயுள் தண்டனைக் கைதிகள் தங்களுக்கு தண்டனை காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து கருதிப் பார்ப்பதற்காக ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்படுகிறது. ஆனால், அவர்கள் சிறையில் நன்முறையில் நடந்திருக்க வேண்டும் என்பதோடு, 10 ஆண்டு சிறை தண்டனையை அனுபவித்திருக்க வேண்டும். இந்த 10 ஆண்டில் அவர்கள் இரு பிரிவின்கீழ் ஈட்டிய தண்டனை குறைப்புக் காலமும் அடங்கும்.

ஆனால், குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை 433-ஏ என்னும் புதிய பிரிவின்படி, ஆயுள் தண்டனை அடைந்த கைதிகள் தாம் ஈட்டிய தண்டனைக் குறைப்புகளை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் 14 ஆண்டுகள்

சிறைவாசத்தை கழித்த பிறகே அவர்களை உரிய தண்டனைக்காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து ஆலோசனைக் குழுவின் முன் பரிந்துரைக்கு வைக்க வேண்டும். இப்புதிய பிரிவு நடைமுறைக்கு வந்த போதிலும், அதாவது 18-12-1978-க்கு முன், விசாரணை நீதிமன்றத்தால் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு, சிறைத் தண்டனையளிக்கப்பட்ட சிறைவாசிகளுக்குப் பொருந்தாது, என்றும் 18-12-1978 ஆம் நாளுக்குப் பின்னர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு சிறைத்தண்டனையளிக்கப்பட்ட சிறைவாசிகளுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் இந்திய தலைமை நீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது, இந்திய தலைமை நீதிமன்றத்தின் மேற்சொன்ன கருத்தினையொட்டி, குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் 433-ஏ என்னும் புதிய பிரிவு செயலுக்கு வருவதற்கு முன்னர், செயலிலிருந்த ஆலோசனைக் குழு திட்டத்தின் கீழுள்ள நடைமுறை விசாரணை நீதிமன்றத்தால் 8-12-1978க்கு முன்னர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சிறைவாசிகள் குறித்தும் கருதிப்பார்ப்பதற்கு பின்பற்றப்படும் என்று அரசு, உள்துறையின் 6-1-1981 ஆம் நாளிட்ட 34 ஆம் எண் அரசாணையில் ஆணை பிறப்பித்துள்ளது. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சிறைவாசி 14 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்திருக்க வேண்டும் என்னும் நிபந்தனையைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், அவரை மாநில அரசு விடுதலை செய்வதற்கு இயலும் வகையில் குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையில் 433-பி என்னும் புதிய பிரிவைச் சேர்க்க சட்ட முன்வடிவு ஒன்றை மீண்டும் கொண்டுவர அரசு கருதியுள்ளது.

65 வயதுக்கு மேற்பட்ட ஆண் சிறைவாசிகளும், 55 வயதிற்கு மேற்பட்ட பெண் சிறைவாசிகளும் முதன் முறையாக தண்டனை அளிக்கப்பட்டிருந்தது அவர்கள் ஈட்டிய தண்டனைக் குறைப்பு உட்பட 2½ ஆண்டுகள் அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்திருந்தால், "வயது முதிர்வுத் திட்டத்தின் கீழ் அவர்களை விடுதலை செய்ய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யத் தகுதி உடையவர்களாவார்கள். மாநிலச் சிறைச்சாலைகள் நடைமுறை நூல் சிறை விதிகளில் குறிப்பிடப்பட்டவாறு சிறை மருத்துவ அதிகாரி சான்றிதழ் வழங்குவதன் பேரில் நோயுற்ற ஆயுள் தண்டனைக் கைதிகள் அவர்களது தண்டனை காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்யக் கருதிப் பார்க்கப்படுகிறது.

புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளியிலுள்ளோரைப் பொறுத்த வரையில், காலக்கெடு முடியுமுன் விடுதலை செய்யும் முறை பிறிதொரு நடைமுறைபடி செயலில் உள்ளது. இம்முறை, "நல்லிணக்கத்தின் பேரில்"



"விடுதலை செய்தல் அல்லது விடுவித்தல்" என்று அழைக்கப்படுகிறது, 1925 ஆம் ஆண்டு பார்ஸ்டல் பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி, கண்காணிப்பாளர் நல்லிணக்கத்தின் பேரில், விடுதலை செய்யக் கருதப்பட்டுள்ளோரின் பெயர்களையும், அவர்கள் பெற்ற வாழ்க்கைத் தொழில் பயிற்சி குறித்த விவரங்களையும், அவசியமான விசாரணைகளைச் செய்து பெற்ற தகவலை பார்வையிடும் குழுவிடம், தாக்கல் செய்ய இயலும் வகையில், அக்குழு கூடுவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் வெளியூர்களிலுள்ள அந்தந்த மாவட்ட நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலர்களுக்கும் சென்னை மாநகரில் நன்னடத்தைக் கண்காணிப்பு, தலைமைக் கண்காணிப்பாளருக்கும், பார்ஸ்டல், பள்ளி கண்காணிப்பாளர் அனுப்பி வைக்க வேண்டும். நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்வதற்காக பார்வையிடும் குழு பரிவுரை செய்துள்ள சிறைவாசிகள் பற்றி, சிறைத் துறை தலைவரால் பரிசீலிக்கப்படுகிறது.

1925 ஆம் ஆண்டு பார்ஸ்டல் பள்ளிகள் சட்டத்தின் 10-A விதியின்கீழ் ஏனைய மத்திய சிறைகளிலிருந்து பார்ஸ்டல் பள்ளிக்கு மாற்றப்படும் (ஆயுள் தண்டனை அடைந்தவர்கள்) மாணவர்கள், 23 வயது அடைந்ததும் அவர்களை விடுதலை செய்வது குறித்து, அவர்கள் 23 வயதை அடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக அரசால் பரிசீலனை செய்யப்படுகிறது. அவர்களது தண்டனையை தள்ளுபடி செய்ய அரசு மறுத்தால், இம்மாணவர்கள் 25 வயதை அடையும்வரை சீர்திருத்தப் பள்ளியிலுள்ள துயிற் கூடத்தில் வைக்கப்பட்டு, பின்னர் அவர்கள் எந்த மத்திய சிறையிலிருந்து பார்ஸ்டல் பள்ளிக்கு மாற்றப்பட்டார்களோ அந்த சிறைக்கே மீதமுள்ள தண்டனையைக் கழிக்க மாற்றப்படுகின்றனர்.

## XIV. சிறைவாசிகளின் நலன்.

தற்போது சிறைவாசிகள் நல அலுவலர்களின் பதவிகள் மொத்தம் பத்து உள்ளன. எட்டு மத்திய சிறை ஒவ்வொன்றிற்கும் ஒரு பதவியும் வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறைக்கு ஒரு பதவியும், புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளிக்கு ஒரு பதவியும் உள்ளன. இந்த நல அலுவலர் சிறையின் விதிமுறைகளுக்கேற்ப சிறைவாசிகளுக்கு அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும், அவர்கள் உறவினர்களுடன் கடிதத் தொடர்பு கொள்ள உதவி செய்து வருகிறார்கள்,

(2) ஒரு வேளை, பெண் சிறைவாசிகளின் குழந்தைகளை வைத்து பராமரிக்க ஏற்பாடுகளைச் செய்ய முடியாது போனால், அக்குழந்தைகள் தாயோடு சிறையில் வைக்கப்படுகின்றனர். பெண் சிறைவாசிகளின் மூன்று

வயதும் அதற்குக் கீழ்ப்பட்டுள்ள குழந்தைகளுக்காக ஒரு குழந்தை காப்பிடமும், பெண் சிறைவாசிகளின் மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்காக ஒரு நர்ஸரியும் வேலூர் மாநில மகளிர் சிறையில் அமைக்கப்பட்டுள்ளது. பெண் சிறைவாசிகளின் குழந்தைகள் 6 வயதை அடைந்தவுடன் அவர்களின் தாய்மார்களோடு இருக்க தகுதியில்லாதபோது அவர்களை சரியான முறையில் வைத்துப் பராமரிக்க ஒருவரும் முன்வராவிட்டால் அக்குழந்தைகள் சென்னை மாநகரைச் சேர்ந்தவர்களாயிருந்தால் சென்னையிலுள்ள பாலமந்திர் மருத்துவமனைக்கும், மாநிலத்திலுள்ள இதர இடங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தால் மதுரை, காந்தி கிராமத்திலுள்ள குழந்தைகள் இல்லத்திற்கும் அனுப்பப்படுகின்றனர்.

சிறைவாசிகளின் நலத்திற்கும், பண்பாட்டுக்கும் ஒழுக்கச் சீரமைப்பிற்கும் ஒவ்வொரு மத்திய சிறையிலும் பண்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பண்பாட்டுக்குழு சிறைவாசிகளின் நன்மைக்காகக் குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை பல கலை நிகழ்ச்சிகளை வெளியில் உள்ளவர்களைக் கொண்டு சிறைக்குள் நடத்துகிறது.

மத்திய சிறைகளில் எல்லாவற்றிலும் சிறைவாசிகளுக்காகச் சிற்றுண்டி விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. பணிக்கொடை ஈட்டும் சிறைவாசிக்கும், தங்கள் கணக்கில் பணம் வைத்திருக்கும் சிறைவாசிகளும் இந்த சிற்றுண்டி விடுதி வசதியை பயன்படுத்த அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசிகளுக்கு அவர்களின் விடுதலைக்குப் பின்னர், அவர்களுக்கு புதுவாழ்வு அளிக்கும் வகையில் பெரம்பூரிலுள்ள டான்சி தோல் தொழிற்சாலையில் பூட்சு மற்றும் ஷூக்கள் தயாரிப்பிலும், இயந்திரங்களை இயக்குவதிலும், 50 ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகளுக்கு பயிற்சி அளிக்க அரசு அனுமதியளித்துள்ளது. இந்த ஏற்பாடானது வேலூர் மத்திய சிறையில் தயாரிக்கப்படும் பூட்சு மற்றும் ஷூக்களின் தரத்தை மேம்படுத்த உதவும்.

இந்திய குடியரசுத் தலைவரால், கருணை மனு நிராகரிக்கப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட இருக்கும் சிறைவாசியின் நெருங்கிய உறவினர்களான தந்தை/தாய், மனைவி கணவன், மகன் மகள் சொந்த சகோதரன் சொந்த சகோதரி ஆகியவர்கள் 5 நபர்களுக்கு மேற்படாமல் அச்சிறைவாசி தூக்கிலிடப்படுவதற்கு முன்வந்து பார்ப்பதற்கு வசதியாக, தமிழ் நாட்டிலுள்ள எவ்விடத்திலுமிருந்தும் குறைந்த வழித்தடம் மூலம், குறைந்த பட்ச வகுப்பில் புகை வண்டி மற்றும் சாலை வழிப்பயணத்திற்கான போக்குவரத்துச் செலவுகளை அனுமதிக்க எல்லா மத்திய சிறை கண்காணிப்பாளர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் மாநில மகளிர், சிறை வேலூர் கண்காணிப்பாளருக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது





## XV. சிறைவாசிகளுக்கு சட்ட உதவி.

விசாரணைக் கைதிகளுக்கும், தண்டனை பெற்றுள்ள கைதிகளுக்கும் தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆலோசனைக் குழு சட்ட உதவி அளித்து வருகிறது. மேலும் கைதிகளின் பிரச்சனையை

ஆராய்ந்து அவர்களுக்கு உதவி செய்ய மத்தியச் சிறைகளில் வழக்குரைஞர்களை அமர்த்தும் திட்டத்தை இக்குழு கொண்டு வந்துள்ளது.

## XVI. நன்னடத்தைப் பணி.

நன்னடத்தைப் பணியானது இளங்குற்றவாளிகள் வளர்ந்த சூழ்நிலை அவர்கள் நடந்துகொள்ளும் விதம் பற்றி விசாரிப்பது, பிணையப்பத்திரத்தின் பேரில் முன் விடுதலையாகும் இளங்குற்றவாளிகளையும், நன்னடத்தை ஜாமீனில் பார்ஸ்டல் பள்ளியிலிருந்தும், சீர்திருத்தப் பள்ளியிலிருந்தும் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லத்திலிருந்தும் விடுதலை செய்யப்பட்டவர்களைக் கண்காணிப்பதும், நீதிமன்றங்களுக்கு ஆலோசனை நல்குவதும் முதலியன ஆகும். சிறைத் துறைத் தலைவரின் முழுக்கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்ட நன்னடத்தைப் பணிப் பிரிவு, நன்னடத்தைக் கண்காணிப்பு தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் நேரடிப் பொறுப்பில் உள்ளது. வட்டார அலுவலர், ஒரு பதிவுரை எழுத்தரைக் கொண்ட ஒரு ஆராய்ச்சிப் பிரிவும் இப்பிரிவில் உள்ளது.

தமிழ்நாடு குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புச் சட்டத்திற்குப் பதிலாக, 1958-ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புச் சட்டம் எனப்படும் மத்திய சட்டம் ஒன்று (மத்திய சட்டம் 20/58) கொண்டு வரப்பட்டது. இம் மத்திய சட்டம், சென்னை, மாநகரத்திலும், செங்கல்பட்டு மாவட்டத்திலும் 1—12—1962 லிருந்து, தமிழ் நாடு முழுவதும் 1—5—1964 லிருந்து செயலுக்கு கொண்டு வரப்பட்டது. குற்றவாளிகள் புரிந்த குற்றம் முதல் தடவையாக இருந்தாலும், அக்குற்றத்திற்கான தண்டனை இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது அபராத தண்டனையோ அல்லது இவ்விரு தண்டனைக்கோ விதிக்கக்கூடிய வகையில் இருந்தால் தக்க முன் நடவடிக்கையின் பேரில், நன்னடத்தை கண்காணிப்பில் விடுதலை செய்ய இச் சட்டம் நீதி மன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. மத்திய சட்டத்தின் விதித் துறைகள் சீர்திருதத நிர்வாகத்தின் தற்காலபோக்கிற்கேற்ப எளிமையாக உள்ளது.

## XVII. விடுதலை பெற்ற கைதிகளின் உதவிச் சங்கம்.

தமிழ் நாடு விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் 1921 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. குற்றம் புரிந்து தண்டிக்கப்பட்டவர்களுக்கு புதுவாழ்வு அமைத்துக் கொடுத்தல், தேவைப்படும்

பலவித உதவிகள் செய்து கொடுத்தல், தற்செயலாக குற்றம் புரிந்தவர்களுக்கு புதுவாழ்வு அமைத்துக் கொடுத்தல், தேவைப்படும் பலவித உதவிகள் செய்துகொடுத்தல், தற்செயலாக குற்றம் புரிந்தவர்களும் இளங்குற்றவாளிளும் வழக்கமாகக் குற்றம் புரிகிறவர்களாக மாறுவதை தடுத்தல், அவர்களின் நலனுக்காக பதிய சட்டங்களை இயற்றுதல், ஏற்கெனவே இருக்கும் சட்டங்களை நல்லமுறையில் பயன்படுத்துதல் ஆகியவை இச்சங்கததின் நோக்கங்களாகும். இச்சங்கம் சிறு தொழில்கள் நடத்துவதற்கும் கருவிகள், தேநீர் கேண்டி, தையல் இயந்திரங்கள் வாங்குவதற்காகவும், உதவித் தொகை கொடுக்கிறது. மேலும் புகைவண்டி பேருந்து செலவிற்காக உதவித் தொகையும், தொழில் செய்வதற்கும் துணைக் கருவிகள் வாங்குவதற்கும் மானியங்களையும் வழங்குகிறது. தொழில் பயிற்சி பெறுவதற்கும், வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளவும் வழக்காட சட்ட உதவி செய்வதற்கும் வயது முதிர்வு ஓய்வூதியம் பெறுவதற்கும் உதவி செய்கிறது. ஆடைகள், மூக்குக் கண்ணாடி ஆகியவற்றையும் வழங்குகிறது.

இச்சங்கத்திற்கு அரசினால் அளிக்கப்பட்டு வந்த ஆண்டு மானிய உதவி ரூ. 12,000, 1980-81 லிருந்து ரூ. 18,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளில் இச்சங்கம் ஏறத்தாழ ரூ. 20,000 செலவில் 3,710 விடுதலை பெற்ற கைதிகளுக்கு உதவி செய்துள்ளது.

### XVIII. சென்னை நகர மற்றும் செங்கல்பட்டு மாவட்ட தண்டனை சிறைவாசிகளை வைப்பதற்கென ஒரு புதிய சிறையை புழலில் (செங்குன்றம்) கட்டுதல்

புழல் கிராமத்தில், சிறைத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீனமாக ஒரு புதிய சிறையை கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

1981-82 ஆம் ஆண்டுக் காலத்தில், முதற்கட்டமாக, கீழ்க் காணும் பணிகளை நிறைவேற்றிட அரசு உள் துறையின் 26—7—1981 ஆம் நாளிட்ட 1726 ஆம் எண்ணுள்ள அரசாணையில், ரூ. 50 இலட்சத்திற்கு அங்கீகாரம் அளித்துள்ளது,

(1) சுற்றுச்சுவர்.

(2) நிர்வாகக் கட்டிடம்.

(3) 200 சிறைவாசிகளுக்கு இடவசதி அளிக்க இணைக் கட்டிடத் தொகுதி ஒன்று.

(4) புறப்பணியாளர் சிகிச்சைக்கான மருத்துவக் கட்டிடம்.

(5) தொடக்கத்தில் தேவையான தண்ணீர் வசதி அளித்தல்.



மேற்காணும் பணிகளை நிறைவேற்றுவதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை பொதுப்பணித் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம், 1981-82 ஆம் ஆண்டில் புழலில் பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்காக, உள்துறையின் 31—10—1981 ஆம் நாளிட்ட 2555 ஆம் எண்ணுள்ள அரசாணையில் அரசு ரூ. 10 இலட்சம் வழங்கியுள்ளது.

(1) மேல்நிலை நீர்த் தொட்டி கட்டுதல்.

(2) கழிவு நீரின் நச்சுத் தன்மை நீக்கும் தளவாடம்.

ஏற்கெனவே, இது சம்பந்தமான தொடக்க பணிகளை தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-வடிகால் வாரியம் மேற்கொண்டுள்ளது.

### XIX. சிறை சீர்திருத்தக் குழு.

தண்டனை பெற்றவர்கள் சிறையிலிருந்து விடுதலையான பிறகு சமுதாயத்தில் கண்ணியமாகவும், நேர்மையுடனும் வாழ்க்கை நடத்தும் வகையில் அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதும், சமுகத்தில் மதிப்பை ஏற்படுத்துவதும் இம்மாநிலத்தின் சிறை சீர்திருத்தத்தின் முக்கிய நோக்கமாகும். இம்மாநிலத்தில் உள்ள சிறைகள் நிர்வாகத்தில் செய்ய வேண்டிய மேம்பாடுகள் குறிததுப் பரிசீலித்து தக்க சீர்திருத்தங்களைத் தெரிவிக்க வேண்டி பாட்னா உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ஆர்.எல். நரசிம்மன் ஐ.சி.எஸ். அவர்கள் தலைமையில் 1978 பிப்ரவரியில் அரசு சிறைசீர்த்திருத்தக் குழுவை நியமித்தது சிறைகள் கைதிகள் தொடர்பாக பல பரிந்துரைகளை இக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. குழுவின் 46 முக்கியப் பரிந்துரைகள் குறித்தும் 8 பரிந்துரைகள் குறித்தும் ஏற்கெனவே முடிவுகள் எடுக்கப்பட்டு அவை குறித்து ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இக்குழுவின் ஏனைய மூக்கிய பரிந்துரைகள் அதிக நிதி ஒதுக்கம் தேவைப்படுபவை ; சிறைச் சட்டங்களைத் திருத்த வேண்டியவை ; இம்மாநிலததின் நிதி ஆதாரம் மத்திய அரசு உறுதி அளித்துள்ள நிதி உதவி ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அரசு இவை குறித்துத் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது. சிறைகளின் நிலையிலும், கைதிகள் நிலைமைகளிலும் நல்ல முன்னேற்றம் காணும் வகையில் அரசு இயன்றவரையில் முடிந்த அளவிற்குப் பல பரிந்துரைகளைச் செயல்படுத்த ஆர்வம் கொண்டுள்ளது.

### XX. மாநிலச் சிறை நடைமுறை நூலைத் திருத்துதல்.

மத்திய அரசின் மாதிரிச் சிறை நடைமுறை நூலில் அடங்கியுள்ள விதித் துறைகளையும், 1978-79 ஆம் ஆண்டு சிறை சீர்திருத்தக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரை

களையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சிறைகள் சீர்திருத்த நடைமுறை நூலின் தொகுதி-II பாகம் 1-ல் உள்ள சட்டப்படியான விதிகளைத் திருத்தும் பணி 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்பட்டது. இப்பணி முடியும் தருவாயில் இருக்கிறது. திருத்தப்பட்ட தமிழ்நாடு சிறை-சீர்திருத்த விதிகளின் தொகுதி 11-ஐ இரண்டு தொகுதிகளாக, அதாவது ஒரு தொகுதி 5 அத்தியாயங்களில் விதிகளைக் கொண்டதாயும் மற்ற தொகுதி பிற்சேர்க்கை, இணைப்புகள் மற்றும் படிவங்களைக் கொண்டுள்ளதாகவும் வெளியிட அரசு முடிவு செய்துள்ளது.

## XXI. 1982-83 ஆம் ஆண்டில் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்.

பின்வரும் திட்டங்களை 1982-83 ஆம் ஆண்டில் நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

| தொடர் எண் | திட்டம் | செலவு ரூ. பை. |
|---|---|---|
| 1 | மதுரை மத்திய சிறை—கூடுதல்கண்காணிப்பாளருக்குக் குடியிருப்புகள் கட்டுதல் .. .. .. .. | 70,000.00 |
| 2 | வேலூர் மத்தியச் சிறை, வேலூர் மாநில பெண்கள் சிறை—பாலாற்றிலிருந்து நீர் எடுத்துச் செல்வதற்கு தண்ணீர்த் தொட்டியுடன் கூடிய டிராக்டர் (Tractor) வாங்குதல் .. | 1,30,000.00 |
| 3 | சைதாப்பேட்டையில் சிறைத் துறைத் தலைவருக்கு அலுவலகக் கட்டிடம் கட்டுதல் .. .. .. .. | 7,51,000.00 |
| 4 | பாளையங்கோட்டை, மத்திய சிறை 35 எம். எம். திரைப்படம் காட்டும் கருவி (Projector) வழங்குதல் .. | 87,000.00 |
| 5 | சேலம் தனி துணைச்சிறை (ஆடவர்) 4 வார்டர்கள் குடியிருப்புகளில் நேரடிக் கழிப்பிட வசதி செய்து கொடுத்தல் .. .. .. | 11,000.00 |
| 6 | மதுரை, மத்திய சிறை — வார்டர்கள் குடியிருப்புகளுக்கும், பணியாளர்கள் குடியிருப்புகளுக்கும், தனி மின் இணைப்புக் கொடுத்தல் .. .. | 19,000.00 |
| | மொத்தம் .. | 10,68,000.00 |



## XXII. ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரை.

அனைத்து மாநிலங்களிலுள்ள சிறைகள் நிர்வாகத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று ஏழாவது நிதிக்குழு வலியுறுத்தியுள்ளது. நாளொன்றுக்கு கைதி ஒருவருக்கு 6 ரூபாய் செலவிடப்பட வேண்டுமென்றும், தற்போதுள்ள சிறைகளை விரிவுபடுத்துவதன் மூலமும், புதிய சிறைகள் கட்டுவதன் மூலமும் சிறைகளின் அதிக எண்ணிக்கையில் கைதிகளை வைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் இக்குழு வலியுறுத்தி உள்ளது. அதன்படி, இக்குழு, 1979-80 முதல் 1983-84 வரையிலுள்ள காலத்திற்கு வருவாயினச் செலவு வகையில் ரூ. 631 இலட்சமும், மூலதனச் செலவு வகையில் ரூ. 862 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 1493 இலட்சமும் ஒதுக்கீடு செய்யும்படி பரிந்துரைத்துள்ளது, 1979—84-ஆம் ஆண்டுகளில் நிறைவேற்ற மூலதனச் செலவாக ரூ. 862 இலட்சமும், வருவாயினச் செலவாக ரூ. 631 இலட்சமும் ஆகக் கூடிய கீழ்க்காணும் திட்டங்கள் இப்போது அரசின் பரிசீலனையில் உள்ளன.

1979-80 ஆம் ஆண்டுக்கு மூலதனச் செலவின்கீழ் ரூ. 200 இலட்சமும், வருவாயினச் செலவின்கீழ் ரூ. 40 இலட்சமும் மத்திய அரசு வழங்கியுள்ளது. 1980-81 ஆம் ஆண்டிற்கு மூலதன செலவின்கீழ் ரூ. 100 இலட்சமும், 1981-82 ஆம் ஆண்டிற்கு வருவாய்ச் செலவின்கீழ் ரூ. 92 இலட்சமும் அனுமதித்துள்ளது. மூலதனச் செலவின் ரூ. 118.82 இலட்சமும் அனுமதித்துள்ளது. இந்த ரூ. 1981—82 இலட்சம் பின் வருவனவற்றிற்குப் பயன் படுத்தப்பட உள்ளது.

| திட்டம். (1) | செலவு. (2) |
|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. கூடுதல் சிறை கட்டுதல் .. .. | 99·82 |
| 2. தற்போதுள்ள சிறைகளில் வசதிகள் செய்து கொடுத்தல். | 19·00 |
| மொத்தம் .. | 118·82 |

[1982 மார்ச் 20

ஏழாம் நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீடு மூலதனச் செலவு.

| ஆண்டு. | கட்டிடங்கள் கட்ட. | வசதிகள் செய்து கொடுக்க. | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் | இலட்சத்தில்). | |
| 1979-80 | 269·78 | 30·60 | 300·38 |
| 1980-81 | 180·87 | 71·61 | 252·48 |
| 1981-82 | 99·82 | 19·00 | 118·82 |
| 1982-83 | 91·72 | 20·00 | 111·72 |
| 1983-84 | 69·84 | 8·50 | 78·34 |
| | 712·03 | 149·71 | 861·74 |
| மொத்தம் | (அல்லது) | (அல்லது) | (அல்லது) |
| | 712·00 | 150·00 | 862·00 |

ஏழாம் நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் உள்துறையின் 22—2—1980 ஆம் நாளிட்ட 487 ஆம் எண் அரசாணையில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் பட்டியல்.

| பணிகள். | செலவு. ரூ. |
|---|---|
| 1. பாளையங்கோட்டை மத்திய சிறையில் கூடுதல் இடவசதி ஏற்படுத்துவதற்காக ஏற்பாடுகள் செய்தல் .. .. | 47,00,000 |
| மேசை, நாற்காலிகள் தட்டச்சு இயந்திரம், தொலைபேசி இணைப்பு, தறிகள், தையல் எந்திரங்கள் வாங்குதல். .. | 78,350 |
| 2. கடலூர் கிளைச் சிறையை தனிக் கிளைச் சிறையாக மாற்றுதல் .. .. | 5,25,000 |
| மேசை, நாற்காலி வாங்குதல், இதர வசதிகள் செய்தல் .. .. .. | 9,500 |



1980 மார்ச் 20]

| பணிகள். | செலவு. ரூ. |
|---|---|
| 3. செங்கல்பட்டு கிளைச்சிறையை தனிக்கிளைச் சிறையாக மாற்றுதல் .. .. | 4,82,000 |
| மேசை நாற்காலி முதலியன வாங்குதல் | 8,840 |
| 4. சென்னை மத்திய சிறை கிளை அச்சகத்தை மாற்றுதல், கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல் வசதி ஏற்படுத்தல் .. .. | 28,50,000 |
| குடியிருப்புகள் .. .. .. .. | 14,21,800 |
| மேசை, நாற்காலி, தட்டச்சு எந்திரம் | 21,850 |
| 5. மதுரை, மத்திய சிறை கூடுதல் கட்டிடத் தொகுதி-சமையல் அறை. சாப்பாட்டுக் கூடம் முதலியவற்றைக் கட்டுதல் குடிநீர் வழங்கல் போன்ற வசதிகள் செய்து கொடுத்தல் .. .. .. .. | 60,50,000 |
| குடியிருப்புகள் கட்டுதல் .. .. | 11,50,000 |
| மேசை, நாற்காலி, தட்டச்சு பொறி வாங்குதல், தொலைபேசி நிறுவுதல், கைதிகளுக்கு பணிபுரிவதற்கு வசதிகள் செய்து கொடுத்தல் .. .. .. .. | 75,750 |
| 6. திருச்சி முகாம் அறை—1000 கைதிகளுக்கு இட வசதியுடன், சமையல் அறை, சாப்பாட்டுக் கூடம், நவீன வசதியுடன் கூடிய நீரடிக் கழிப்பிடங்கள், நேர்க்காணல் அறை போன்றவற்றுடன் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல் .. .. .. .. | 60,00,000 |
| மேசை, நாற்காலி தட்டச்சு எந்திரம் வாங்குதல், கைதிகள் பணி செய்யுமிட வசதிகள் அளித்தல் .. .. .. | 71,250 |
| வேலூர் மத்திய சிறையில் கூடுதல் கட்டிடத் தொகுதிகள் சமையல் அறை, சாப்பாட்டுக் கூடம் முதலியவற்றைக் கட்டுதல் குடிநீர், வழங்கல் .. .. .. .. | 31,00,000 |
| குடியிருப்புகள் கட்டுதல் .. .. | 8,08,9,00 |
| வேலூர் தனிக்கிளைச் சிறைக்குக் கட்டிடம் கட்டுதல், வசதிகள் செய்துகொடுத்தல். | 5,70,000 |
| மேசை, நாற்காலி, தட்டச்சு எந்திரம் தொலை பேசி இணைப்பு-கைதிகளுக்கு பணி செய்யுமிட வசதிகள் செய்து கொடுத்தல் .. .. .. .. | 79,400 |

[1982 மார்ச் 20

| | | |
|---|---|---|
| 8. | சேலம் மத்திய சிறையில் கூடுதல் கட்டிடத் தொகுதி நேர்க்காணல் அறை போன்றவை கட்டுதல்-குடிநீர் வசதி போன்ற வசதிகள் செய்து கொடுத்தல் .. | செலவு 16,00,000 |
| | மேசை, நாற்காலி, தட்டச்சு எந்திரம் வாங்குதல், கைதிகளுக்கு பணியிட வசதிகள் செய்து கொடுத்தல் .. .. | 70,495 |
| | மொத்தச் செலவு .. | 2,96,73,215 |

ஏழாம் நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ் 1982-83 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படும் மூலதனச் செலவின் கீழ்வரும் திட்டங்களின் பட்டியல் :

| தொடர் எண். | திட்ட விவரம். | மொத்தத் தொகை. ரூ. |
|---|---|---|
| I. | கீழ்க்காணும் சிறைகளுக்குக் கூடுதல் கட்டிடத் தொகுதி கட்டிடங்கள் கட்டுதல் நீரடிக் கழிப்பிடம் குடிநீர் வழங்கல் முதலிய வசதிகள் செய்து கொடுத்தல் :— | |
| | 1. மத்திய சிறை, திருச்சி .. | 54,00,000 |
| | 2. மத்திய சிறை, கோயம்புத்தூர் | 57,00,000 |
| | 3. மத்திய சிறை, கடலூர் .. .. | 37,43,000 |
| | 4. மாநிலத்திலுள்ள கிளைசிறைகள் .. | 1,04,10,370 |
| II. | செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள புழல் கிராமத்தில் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு மத்திய சிறையைக் கட்டுதல் .. .. .. .. | 1,53,81,900 |
| III | சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரில் வசதிகளுடன் கூடிய புதிய கிளைச் சிறையைக் கட்டுதல் .. .. | 12,92,37[illegible] |
| IV. | கீழ்க்காணும் இடங்களில் திறந்த வெளிச் சிறைகளை ஏற்படுத்தல்— | |
| | 1. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள வேலப்பாக்கம் .. .. .. | 17,00,000 |



1982 மார்ச் 20]

| தொடர் எண் | திட்டவிவரம் | மொத்தத் தொகை ரூ. |
|---|---|---|
| | 2. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சிங்கம்பட்டி .. .. .. | 17,00,000 |
| | 3. செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வேங்கடமங்கலம் .. .. | 18,00,000 |
| | 4. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள முத்துப்பட்டி .. .. .. | 18.00,000 |
| V. | புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியை மேம்படுத்தல் .. .. | 13,01,000 |
| VI. | கீழ்க்காணும் 250 கைதிகளுக்குக் குறையாமல் காவலில் வைக்குமளவிற்கு பின்வரும் சிறைகளை தனிக் கிளைச் சிறையாக மாற்றுதல் :— | |
| | 1. கிளைச் சிறை, ஈரோடு .. .. | 12,00,000 |
| | 2. கிளைச் சிறை, நாகர்கோவில் .. | 12,00,000 |
| | 3. கிளைச் சிறை, நாகப்பட்டினம் .. | 12,00,000 |
| | 4. கிளைச் சிறை, தருமபுரி .. .. | 12,00,000 |
| | 5. கிளைச் சிறை, அம்பாசமுத்திரம் .. | 10,00,000 |
| | சிங்காநல்லூர் திறந்த வெளிச் சிறைக்கு குடிநீர் வழங்கல் முதலிய வசதிகள் செய்து கொடுத்தல் .. .. | 4,00,000 |
| | மொத்தம் .. | 5,64,27,000 |

ஏழாம் நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை.

II. வருவாயினச் செலவு.

| வரிசை எண். | 1979-80. | 1980-81. | 1981-82. | 1982-83. | 1983-84. | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | |
| 1. சத்துணவுத் திட்டத்தை விரிவு படுத்துதல், சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்துதல், சிறையில் பணி புரியும் காலங்களில் காவலர்களுக்கு ஒரு வேளை உணவு வழங்குதல் | 5 | 28 | 31 | 34 | 37 | 135 |
| 2. (அ) கூடுதலாக்கப்படும் சிறை அறைகளைக் கணக்கிட பாதுகாத்திடத் தேவைப்படும் கூடுதல் பாதுகாப்புப் பணியாளர்களுக்கான நிர்வாக செலவுகள் | .. | 52 | 55 | 58 | 61 | 226 |
| (ஆ) வருவாய்த் துறையிலிருந்து கிளைச் சிறைகளை சிறைத் துறைக்கு மாற்றுதல்.. | .. | 18 | 46 | 78 | 117 | 259 |
| 3. சிறைக் கைதிகளுக்கு கூடுதலாக படுக்கை பாத்திரங்கள் வழங்குதல். | 3 | 4 | 5 | 6 | 7 | 25 |
| 4. சிறைக் கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டத்தை விரிவுபடுத்துதல், குறைந்த காலத் தண்டனையைபெற்ற சிறைக் கைதிகளுக்கு சிறு தொழில்களில் பயிற்சி அளித்தல், சிறையினுள் சிறைக் கைதிகளுக்காக சிற்றுண்டி இல்லம் அமைத்தல் .. | 2 | 20 | 26 | 27 | 28 | 103 |
| மொத்தம்.. | 10 | 122 | 163 | 203 | 250 | 748 |



(ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| ஐந்து ஆண்டுகளுக்கான செலவு .. .. .. | 748 |
| மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவி .. .. | 631 |
| 1979–84-ஆம் ஆண்டுகளில் மாநில அரசு நிதியிலிருந்து செலவிட வேண்டிய தொகை .. | 117 |

வருவாய் இனத்தில் செலவு வகையில் செயற்படுத்தப்படும் திட்டங்களின் பட்டியல்.

சிறைக் கைதிகளுக்கும், காவலர்களுக்கும் சத்துணவு அளிக்கும் திட்டத்தை நீட்டிப்பதற்காக மத்திய அரசு 1980–81-ல் ரூ. 40 இலட்சம் ஒதுக்கியது. இத் தொகையில் 'B' வகைக் கைதிகள்

[1982 மார்ச் 20

அனைவருக்கும் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தவும் உறையுடன் தலையணைகள், அலுமினியக் கிண்ணங்கள், தட்டுகள், குவளைகள் ஆகியவற்றை வழங்குவதற்கு 1980 பிப்ரவரியில் ரூ. 8 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 32 இலட்சம் செலவாகக் கூடிய திட்டத்தை அரசு ஆய்ந்து வருகிறது. விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

1981–82-இல் மத்திய அரசு பின்வரும் திட்டங்களுக்காக ரூ. 92 இலட்சம் வழங்கியது :—

| திட்டத்தின் பெயர். | செலவு (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. கூடுதலாக்கப்படும் சிறை அறைகளைக் கணக்கிட, பாதுகாத்திடத் தேவைப்படும் கூடுதல் பாதுகாப்புப் பணியாளர்களுக்கான நிர்வாகச் செலவுகள் .. .. .. .. | 52.00 |
| 2. சிறைத் துறைக் கிளைச் சிறைகளின் நிருவாகத்தை மேற்கொள்ளுதல் .. .. .. | 18.00 |
| 3. ஊதியம் ஈட்டும் திட்டத்தை நீட்டித்தலும் சிற்றுண்டிச் சாலை வசதிகளை அளித்தலும் | 22.00 |
| மொத்தம் .. | 92.00 |

பெரியார், கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களிலுள்ள 16 கிளைச் சிறைகளை வருவாய்த் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டிலிருந்து சிறைத்துறை மேற்கொள்வதற்காக உள்துறையின் 5-8-1981 நாளிட்ட 1840 ஆம் எண். அரசாணையில் ரூ. 18 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள எல்லாச் சிறைகளிலும் சிற்றுண்டிச் சாலைகளை ஏற்படுத்த உள்துறையின் 23—1—1982 நாளிட்ட 144 ஆம் எண். அரசாணையில் ரூ. 20,000-க்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பாதுகாப்புப் பணியாளர்கள் குறித்த செயற் குறிப்பை அரசு ஆய்ந்து வருகிறது. விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும். ஊதியம் ஈட்டும் திட்டத்தை எல்லாச் சிறைகளுக்கும் நீட்டிப்பதற்கு அரசு ஆய்ந்து வருகிறது.

# நிர்வாக அமைப்பு

**சிறைத் துறைத் தலைவர் (ரூ. 1,600-75-1,750-100-2,250.)**

- **ஆடவர் பிற்காப்பு இல்லம், பல்லாவரம்.**
  - கண்காணிப்பாளர் (ரூ. 750—50—1,350).
  - உற்பத்தி உதவியாளர். (ரூ. 525-25-675-30-855-35-925).
  - செய்முறை விளக்குநர் (ரூ. 400-15-490-20-650-25-700),
  - தச்சர் (ரூ. 325-10-445-15-550).
  - இணைப்பர் (ரூ. 325-10-445-15-550).
  - எந்திரம் இயக்குபவர் நிலை I (ரூ. 325-10-445-15-550),
  - எந்திரம் இயக்குபவர் நிலை II (ரூ. 295-5-315-10-475),
- **நன்னடத்தைப் பிரிவு.**
  - முதன்மை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் (ரூ. 1,000-60-1,300-70-1,650).
  - வட்டார நன்னடத்தை அலுவலகர் (ரூ. 750-50-1,350).
  - நன்னடத்தை அலுவலர். (ரூ. 600-30-750-35-890-40-1,050).
- **சிறைத் துறைத் துணைத் தலைவர் (ரூ. 1,300—75—1,900—100—2,000)**
  - **மத்திய சிறைச்சாலைகள் தேர்வு நிலை கண்காணிப்பாளர் (ரூ. 1,000-60-1,300-70-1,650).**
    - கண்காணிப்பாளர் (ரூ. 850-50-1,200-60-1,500).
      - அலுவலகம்,
      - சிறைச்சாலைக்குள்
        - கூடுதல் கண்காணிப்பாளர் (ரூ. 750-50-1,350).
        - சிறை அலுவலர். (ரூ. 600-30-750-35-890-40-1,050)
        - சிறைத்துணை அலுவலர் (ரூ. 450-20-590-25-740-30-800).
        - சிறை உதவி அலுவலர் (ரூ. 400-15-490-20-650—25-700).
        - முதன்மை தலைமைச் சிறைக் காவலர்/வாயிற்காவான் (ரூ. 350-10-420-15-600).
        - சிறைக்காவலர் நிலை I (ரூ. 295-5-315-10-475).
        - சிறைக்காவலர் நிலை II (ரூ. 280-5-320-10-450).
      - உற்பத்தி நிறுவனம்
        - தொழிற்சாலை மேலாளர், (ரூ. 600-30-750-35-890-40-1,050).
        - காலணி தயாரிப்புபணி மேற்பார்வையாளர். (ரூ. 525-25-675-30-855-35-925).
        - தச்சு ஆசிரியர், நிலை I தச்சு கம்மியர் (ரூ. 400-15-490-20-650-25-700),
        - நூற்பு ஆசிரியர், நெசவு ஆசிரியர், சாய. வேலை ஆசிரியர், சணல், கம்பளி சிக்கு. எடுப்பு ஆசிரியர், (ரூ. 525-25-675-30 855-35-925).
        - தையல் ஆசிரியர் நிலை I. (ரூ.325-10-445-15-550).
        - தையல் ஆசிரியர் நிலை II முதலியவர்கள் (ரூ. 280-5-320-10-450).
        - சிப்ப எழுத்தர், நெசவுப் பணியாள், புத்தகம் கட்டும் மேஸ்திரி. (ரூ. 265-5-325-10-425).
      - பயிற்சி.
        - இடைநிலை ஆசிரியர் (ரூ. 350-10-420-15-600).
        - தொடக்க நிலை ஆசிரியர் (ரூ. 280-5-320-10-450).
  - **பெண்கள் மாநிலச் சிறைச்சாலை, வேலூர். கண்காணிப்பாளர் (ரூ. 850-50-1,200-60-1,500).**
    - பாலர் பள்ளி
      - இடைநிலை.ஆசிரியர் (ரூ. 350-10-490-15-600)
      - தொடக்க நிலை ஆசிரியர் (ரூ. 280-5-320-10-450)
      - ஆயா (ரூ. 280-5 320-10-450).
    - சிறைச்சாலைக்குள்.
      - துணைக் கண்காணிப்பாளர் (ரூ. 600-30-750-35-890-40-1,050)
      - மூதாய் (ரூ. 450-20.-590-25-740-30-800)
      - உதவி மூதாய் (ரூ. 450-20 590-25-740-30-800).
      - தலைமை வாயிற் காவலாள் (பெண்) முதன்மைத் தலைமைச் சிறைக்காவலர் பெண் (ரூ.350-10-420-15-600)
      - சிறைக்காவலர் (பெண்) நிலை I (ரூ. 295-5-315 10-475).
      - சிறைக்காவலர் (பெண்) நிலை II (ரூ. 280-5-320-10-450).
  - **பார்ஸ்டன் பள்ளி, புதுக்கோட்டை கண்காணிப்பாளர் (ரூ. 850-50-1,200-60-1,500)**
    - அலுவலகம்.
    - பள்ளிக்கூடம்.
      - துணைக் கண்காணிப்பாளர் (ரூ. 600-30-750-35-890-40-1,050)
      - உதவிக்கண்காணிப்பாளர் (ரூ. 450-20-590-25-740-30-800).
      - துணை.உதவிக் கண்காணிப்பாளர் (ரூ. 400-15-490-20-650-25-700)
      - முதன்மை அலுவலர் (ரூ. 350-10-420-15-600)
      - சிற்றலுவலர், நிலை I ரூ. 295-5-375-10-475).
      - சிற்றலுவலர், நிலை II (ரூ. 280-5-320-10-450)
  - **அலுவலகம் .**
    - கணக்குகளும் தணிக்கையும்
      - கணக்கு அலுவலர் (ரூ. 750-50-1,350)
      - உதவி கணக்கு அலுவலர் (ரூ. 675-35-885-45-1,200).
      - கண்காணிப்பாளர் (ரூ. 525-25-675-30-855-35-925).
      - உதவியாளர் (ரூ. 400-15-490-20-650-25-700).
      - இளநிலை உதவியாளர் (ரூ. 350-10-420-15-600).
    - நிர்வாகம்
      - சிறைத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர் (ரூ. 750-50-1,350)
      - தேர்வு நிலை கண்காணிப்பாளர் (ரூ. 675-35-885-45 1,200).
      - அலுவலக மேலாளர் நிலை I கண்காணிப்பாளர் (ரூ. 525-25-675-30-855-35-925).
      - அலுவலக மேலாளர் நிலை II தேர்வு நிலை உதவியாளர் (ரூ 450-20-590-25-740-30-800)
      - உதவியாளர் (ரூ 400-15-490-20-650 25-700).
      - இளநிலை உதவியாளர் (ரூ. 350-10-420-15-600).

1982 மார்ச் 20

சிறைத்துறையில் உள்ள பதவிகளின் எண்ணிக்கை
அதிகாரிகள்.

| தொடர் எண். | பதவிகளின் பெயர். | தற்போதுள்ள பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | சிறைத்துறைத் தலைவர் .. .. .. | 1 |
| 2 | சிறைத் துணைத் தலைவர் (5-1-82 ஆம் நாளிலிருந்து நிருவாக அதிகாரி பதவி எடுக்கப்பட்டு விட்டது.) | 1 |
| 3 | கணக்கு அதிகாரி .. .. .. .. | 1 |
| 4 | உதவி கணக்கு அதிகாரி .. .. .. | 1 |
| 5 | சிறைத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர். | 1 |
| 6 | கண்காணிப்பாளர் (தேர்வு நிலை) .. | 1 |
| 7 | சிறைக் கண்காணிப்பாளர் (தேர்வு நிலை) .. | 6 |
| 8 | சிறைக் கண்காணிப்பாளர்கள் .. .. | 3 |
| 9 | கண்காணிப்பாளர், மகளிர் மாநிலச் சிறை வேலூர். | 1 |
| 10 | கூடுதல் சிறைக் கண்காணிப்பாளர்கள் .. | 6 |
| 11 | துணைக் கண்காணிப்பாளர்கள், மகளிர் மாநிலச் சிறை, வேலூர், பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. .. | 2 |
| 12 | சிறை அலுவலர்கள் .. .. .. | 8 |
| 13 | அரசு உதவி மருத்துவர்கள் .. .. | 1 |
| 14 | தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர் | 1 |
| 15 | வட்டார நன்னடத்தை அதிகாரிகள் .. | 12 |
| 16 | கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பு இல்லம், பல்லாவரம். | 1 |

### நிருவாகப் பிரிவு.

### I. பொதுவான வகையினர்.

| | | |
|---|---|---|
| 17 | அலுவலகக் கண்காணிப்பாளர்கள் .. | 7 |
| 18 | உதவியாளர்கள் .. .. .. .. | 64 |
| 19 | இளநிலை உதவியாளர்கள் .. .. | 78 |
| 20 | சுருக்கெழுத்து-தட்டச்சர்கள் .. .. | 3 |
| 21 | தட்டச்சர்கள் .. .. .. .. | 23 |
| 22 | மேல் நிலைத் தட்டச்சர்கள் .. .. | 5 |
| 23 | பதிவேட்டு எழுத்தாளர்கள் .. .. | 36 |
| 24 | டபேதார் .. .. .. .. | 1 |
| 25 | அரசு அடிப்படை ஊழியர்கள் .. .. | 92 |
| 26 | அரசு அடிப்படை ஊழியர்கள் (தேர்வு நிலை). | 3 |

### II தனி வகையினர்.

| | | |
|---|---|---|
| 27 | காப்பாளர் .. .. .. .. | 1 |
| 28 | துணைச் சிறை அலுவலர்கள் .. .. | 9 |
| 29 | உதவி கண்காணிப்பாளர் .. .. | 1 |
| 30 | சார்நிலை உதவிக் கண்காணிப்பாளர் .. | 1 |
| 31 | கண்காணிப்பாளர்கள்-தனிக் கிளைச் சிறைகள் | 3 |
| 32 | சேம உதவிக் காப்பாளர் .. .. | 1 |
| 33 | உளவியல் வல்லுநர்கள் .. .. .. | 3 |
| 34 | சமூகப் பணியாளர்கள் .. .. .. | 3 |
| 35 | உதவிச் சிறை அலுவலர்கள் .. .. | 39 |
| 36 | தொழிற்சாலை மேலதிகாரி .. .. | 1 |
| 37 | செவிலியர் .. .. .. .. | 10 |
| 38 | மருந்தாளுநர் .. .. .. .. | 18 |
| 39 | செவிலியர் உதவியாளர்கள் (ஆண்) .. | 29 |





| (1) | (2) | (3) |
|---|---|---|
| 40 | முதன்மைத் தலைமைச் சிறைக் காவலர்/ வாயில் காவலாள். | 35 |
| 41 | வாயிற் காவலாள்-தனிக் கிளைச் சிறைகள் | 3 |
| 42 | சிறைக்காவலர்-சிற்றலுவலர் (நிலை I) .. | 161 |
| 43 | சிறைக்காவலர்-சிற்றலுவலர் (நிலை II) .. | 1,302 |
| 44 | அலுவலக மேலதிகாரிகள் (நிலை I) .. | 3 |
| 45 | அலுவலக மேலதிகாரிகள் (நிலை II)/ தேர்வு நிலை உதவியாளர்கள். | 16 |
| 46 | சிப்ப எழுத்தர்கள் .. .. .. | 10 |
| 47 | இடைநிலை ஆசிரியர்கள் (தேர்வு நிலை) .. | 33 |
| 48 | தொடக்க நிலை ஆசிரியர்கள் .. .. | 4 |
| 49 | உடற்பயிற்சி ஆசிரியர் .. .. .. | 1 |
| 50 | தச்சுத் தொழில் பயிற்றுநர்கள் (நிலை I மற்றும் II). | 17 |
| 51 | நெசவுத் தொழில் பயிற்றுநர்கள் .. .. | 5 |
| 52 | புத்தகம் கட்டும் மேலாளர்கள் .. .. | 2 |
| 53 | தையல் தொழில் பயிற்றுநர்கள் .. .. | 12 |
| 54 | கருமார் தொழில் பயிற்றுநர்கள் .. .. | 3 |
| 55 | தச்சுத் தொழில் முதலாள் .. .. | 3 |
| 56 | மின் கம்பியாட்கள் .. .. .. | 12 |
| 57 | கிளைச் சிறைச்சாலை சிறை அலுவலர்கள் (நிலை I). | 5 |
| 58 | கிளைச் சிறைச்சாலை சிறை அலுவலர்கள் (நிலை II). | 5 |
| 59 | நன்னடத்தை அதிகாரிகள் .. .. | 96 |
| 60 | நல அதிகாரிகள் .. .. .. .. | 10 |
| 61 | லாரி ஓட்டுநர்கள் .. .. .. | 8 |
| 62 | பிரம்புத் தொழில் பயிற்றுநர் .. .. | 1 |
| 63 | தச்சுக் கம்பியர் .. .. .. .. | 1 |
| 64 | லாரி ஆள் .. .. .. .. | 1 |
| 65 | காலணி தயாரிப்புப் பணி மேற்பார்வையாளர். | 1 |
| 66 | காலணி தயாரிப்புப் பணி கம்பியர் .. | 1 |
| 67 | காலணி தயாரிப்புப் பணி மேலாள் .. | 4 |
| 68 | அலுமினியப் பட்டறை முதலாள் .. .. | 1 |

1982 மார்ச் 20]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 69 | வண்டிக்காரர்கள் .. .. .. | 6 |
| 70 | நூற்பு ஆசிரியர் .. .. .. | 1 |
| 71 | நெசவு ஆசிரியர் .. .. .. | 1 |
| 72 | சாய வேலை ஆசிரியர் .. .. .. | 1 |
| 73 | கூடுதல் சாய வேலை ஆசிரியர் .. .. | 1 |
| 74 | பாவு ஆசிரியர் .. .. .. .. | 1 |
| 75 | சணல், கம்பளி முதலியவற்றின் சிக்கு எடுக்கும் ஆசிரியர். | 1 |
| 76 | இசைக் குழு ஆசிரியர் .. .. .. | 1 |
| 77 | உயரிய பயிற்சி பெற்ற தொழிலாளர் .. | 1 |
| 78 | பயிற்சி பெற்ற தொழிலாளர் (நிலை II, III). | 4 |
| 79 | கைத் தொழில் ஆசிரியர்கள் .. .. | 3 |
| 80 | முதலாள் ஆசிரியர் .. .. .. | 1 |
| 81 | கூடார உதவி மேலாள் .. .. .. | 1 |
| 82 | பாவு அமைத்துக் கஞ்சி போடும் பணியாள் | 1 |
| 83 | கொதிகலன் சிற்றாள் .. .. .. | 1 |
| 84 | பொருத்துத் தச்சர் .. .. .. | 1 |
| 85 | பருத்தி கலந்து சுத்தம் செய்யும் அறைப் பணியாளர். | 1 |
| 86 | நெசவுப் பணியாளர்கள் (நிலை I) .. | 2 |
| 87 | நூற்பாலை எழுத்தர் | 1 |
| 88 | நெசவுப் பணியாளர் (நிலை II) | 1 |
| 89 | நெசவுப் பணியாளர் (நிலை III) | 3 |
| 90 | கட்டுக் கட்டும் பணியாளர் | 1 |
| 91 | நீர் இறைப்பு நிலையப் பொருத்துநர் | 1 |
| 92 | கொதிகலன் முதலாள் | 1 |
| 93 | குழாய் பொருத்துநர் | 1 |
| 94 | உருளை மூடுபவர் | 1 |
| 95 | மோட்டார் பணியாட்கள் | 3 |
| 96 | நூற்புத் தலைமைப் பணியாளர் | 1 |
| 97 | உதவி நூற்புப் பணியாளர்கள் | 2 |
| 98 | நூற்பு ஆசிரியர் | 1 |
| 99 | செய்முறை விளக்குநர்கள் | 3 |



1982 மார்ச் 20]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 100 | எந்திரம் இயக்குபவர்கள் (நிலை I) | 2 |
| 101 | எந்திரம் இயக்குபவர்கள் (நிலை II) | 2 |
| 102 | உற்பத்தி உதவியாளர் | 1 |
| 103 | தச்சர்கள் | 4 |
| 104 | பால்காரர் | 1 |
| 105 | கால்நடை உதவியாளர்கள் | 6 |
| 106 | பாலர் பள்ளி பயிற்சி பெற்ற ஆசிரியர் | 1 |
| 107 | செவிலியர் உதவியாளர் (பெண்) | 1 |
| 108 | பற்ற வைப்பவர்கள் | 2 |
| 109 | தலைமை ஆயா | 1 |
| 110 | ஆயாக்கள் | 8 |
| 111 | மின்சார மோட்டார் பணியாட்கள் | 2 |
| 112 | மேற்பார்வையாளர்கள், ஆசிரியர்கள் கையால் தயாரிக்கப்படும் காகிதத் தொழில். | 6 |
| 113 | மின்துறை மேற்பார்வையாளர் | 1 |
| 114 | சவுக்கார வேதியல் பணியாளர் | 1 |
| 115 | இயந்திரம் ஓட்டுநர் | 1 |
| 116 | மெருகிடும் உதவியாளர் | 1 |
| 117 | காகிதம் கூழ் செய்யும் உதவியாளர்கள் | 5 |
| 118 | காவற்காரர்கள் | 10 |
| 119 | கிளைச் சிறையின் அடிப்படைப் பணியாளர்கள்/வார்டர்கள். | 92 |
| 120 | இயன் மருத்துவ தொழில் நுட்பப் பணியாளர். | 1 |
| 121 | கால்நடை மேய்ப்பவர் | 1 |
| 122 | எந்திரக் கலப்பை (உழுவை) ஓட்டுநர்கள். | 2 |
| 123 | துப்புறவாளர்கள் | 6 |
| 124 | சமையற்காரர்கள் | 19 |
| 125 | தோட்டக்காரர் | 1 |
| 126 | உழுவை (எந்திரக் கலப்பை) சுத்தம் செய்பவர். | 1 |

[1982 மார்ச் 20

வரவு-செலவு திட்ட மதிப்பீடு.

1972–73 முதல் 1980–81-ஆம் ஆண்டு வரை சிறைத்துறை ஈட்டிய வருவாய் வரவுகள், செய்த செலவு ஆகியவை தொடர்பானதும், 1981–82-ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடு, 1982-83-ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, ஆகியவை குறித்த விவரங்கள் அடங்கிய விவர அறிக்கை:—

(ரூபாய் ஆயிரத்தில்)

| (1) | (2) | (3) |
|---|---|---|
| I செலவு | | |
| 1972–73 | ,, | 2,58,50 |
| 1973–74 | ,, | 2,91,61 |
| 1974–75 | ,, | 3,76,34 |
| 1975–76 | ,, | 4,78,26 |
| 1976–77 | ,, | 4,56,44 |
| 1977–78 | ,, | 4,27,02 |
| 1978–79 | ,, | 4,53,23 |
| 1979–80 | ,, | 5,32,94 |
| 1980–81 | ,, | 5,61,44 |
| 1981–82 | ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீடு | 5,95,37 |
| 1982–83 | ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 6,38,13 |
| வருவாய் வரவுகள் | | |
| 1972–73 | ,, | 96,12 |
| 1973–74 | ,, | 1,33,13 |
| 1974–75 | ,, | 1,00,61 |
| 1975–76 | ,, | 99,82 |
| 1976–77 | ,, | 1,18,61 |



1982 மார்ச் 20]

வருவாய் வரவுகள்—தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்)

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 1977–78 | ,, | 1,24,99 |
| 1978–79 | ,, | 1,14,02 |
| 1979–80 | ,, | 80,43 |
| 1980–81 | ,, | 1,41,20 |
| 1981–82 | ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீடு | 1,22,75 |
| 1982–83 | ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 1,32,75 |

1. சிறைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ளவை

| | | | |
|---|---|---|---|
| 1. | மத்திய சிறை | ,, | சென்னை |
| 2. | மத்திய சிறை | ,, | வேலூர் |
| 3. | மத்திய சிறை | ,, | கடலூர் |
| 4. | மத்திய சிறை | ,, | திருச்சிராப்பள்ளி |
| 5. | மத்திய சிறை | ,, | சேலம் |
| 6. | மத்திய சிறை | ,, | கோயம்புத்தூர் |
| 7. | மத்திய சிறை | ,, | மதுரை |
| 8. | மத்திய சிறை | ,, | பாளையங்கோட்டை |
| 9. | மாநிலச் சிறை (மகளிர்) | ,, | வேலூர் |
| 10. | பார்ஸ்டல் பள்ளி | ,, | புதுக்கோட்டை |
| 11. | தனிக் கிளைச் சிறை(ஆண்கள்) | | சேலம் |
| 12. | தனிக் கிளைச் சிறை | ,, | கொக்கிரகுளம் |
| 13. | தனிக் கிளைச் சிறை | ,, | திருச்சிராப்பள்ளி |
| 14. | திறந்த வெளிச்சிறை | ,, | தஞ்சாவூர் |
| 15. | திறந்த வெளிச் சிறை | ,, | சிங்காநல்லூர் |
| 16. | கிளைச் சிறை (தரம் I) | ,, | சைதாப்பேட்டை |
| 17. | கிளைச் சிறை (தரம் I) | ,, | நாகர்கோவில் |

[1982 மார்ச் 20

| | | |
|---|---|---|
| 18 கிளைச் சிறை (தரம் II) | .. | செங்கல்பட்டு |
| 19 கிளைச் சிறை | .. | மதுராந்தகம் |
| 20 கிளைச் சிறை | .. | பூவிருந்தவல்லி |
| 21 கிளைச் சிறை | .. | திருவள்ளூர் |
| 22 கிளைச் சிறை | .. | திருத்தணி |
| 23 கிளைச் சிறை | .. | பொன்னேரி |
| 24 கிளைச் சிறை | .. | காஞ்சிபுரம் |
| 25 கிளைச் சிறை | .. | தஞ்சாவூர் |
| 26 கிளைச் சிறை | .. | அவினாசி |
| 27 கிளைச் சிறை | .. | மேட்டுப்பாளையம் |
| 28 கிளைச் சிறை | .. | திருப்பூர் |
| 29 கிளைச் சிறை | .. | உடுமலைப்பேட்டை |
| 30 கிளைச் சிறை | .. | பொள்ளாச்சி. |
| 31 கிளைச் சிறை | .. | பல்லடம் |
| 32 கிளைச் சிறை | .. | தாராபுரம் |
| 33 கிளைச் சிறை | .. | பவானி |
| 34 கிளைச் சிறை | .. | ஈரோடு |
| 35 கிளைச் சிறை | .. | கோபிச்செட்டிபாளையம் |
| 36 கிளைச் சிறை | .. | காங்கேயம் |
| 37 கிளைச் சிறை | .. | சத்தியமங்கலம் |
| 38 கிளைச் சிறை | .. | பெருந்துரை |
| 39 கிளைச் சிறை | .. | உதகமண்டலம் |
| 40 கிளைச் சிறை | .. | குன்னூர் |
| 41 கிளைச் சிறை | .. | கூடலூர் |

II வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கிளைச் சிறைகள் பற்றிய பட்டியல் (மாவட்ட வாரியாக).

வட ஆர்க்காடு மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 1 கிளைச் சிறை | .. | அரக்கோணம் |
| 2 கிளைச் சிறை | .. | ஆம்பூர் |
| 3 கிளைச் சிறை | .. | செய்யார் |
| 4 கிளைச் சிறை | .. | ஆரணி |
| 5 கிளைச் சிறை | .. | செங்கம் |
| 6 கிளைச் சிறை | .. | குடியாத்தம் |



1982 மார்ச் 20]

| | | |
|---|---|---|
| 7 கிளைச் சிறை | .. | போளூர் |
| 8 கிளைச் சிறை | .. | திருப்பத்தூர் |
| 9 கிளைச் சிறை | .. | திருவண்ணாமலை |
| 10 கிளைச் சிறை | .. | வாணியம்பாடி |
| 11 கிளைச் சிறை | .. | வாலாஜாப்பேட்டை |
| 12 கிளைச் சிறை | .. | வந்தவாசி |

தென் ஆர்க்காடு மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 13 கிளைச் சிறை | .. | கள்ளக்குறிச்சி |
| 14 கிளைச் சிறை | .. | சிதம்பரம் |
| 15 கிளைச் சிறை | .. | கடலூர் |
| 16 கிளைச் சிறை | .. | செஞ்சி |
| 17 கிளைச் சிறை | .. | காட்டுமன்னார் கோயில் |
| 18 கிளைச் சிறை | .. | பரங்கிப்பேட்டை |
| 19 கிளைச் சிறை | .. | திண்டிவனம் |
| 20 கிளைச் சிறை | .. | திருக்கோவிலூர் |
| 21 கிளைச் சிறை | .. | உளுந்தூர்ப்பேட்டை |
| 22 கிளைச் சிறை | .. | விழுப்புரம் |
| 23 கிளைச் சிறை | .. | விருத்தாசலம் |
| 24 கிளைச் சிறை | .. | பண்ணுருட்டி |

சேலம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 25 கிளைச் சிறை | .. | ஆத்தூர் |
| 26 கிளைச் சிறை | .. | நாமக்கல் |
| 27 கிளைச் சிறை | .. | ஓமலூர் |
| 28 கிளைச் சிறை | .. | பரமத்தி |
| 29 கிளைச் சிறை | .. | இராசிபுரம் |
| 30 கிளைச் சிறை | .. | சங்ககிரி |
| 31 கிளைச் சிறை | .. | திருச்சங்கோடு |
| 32 கிளைச் சிறை (மகளிர்) | .. | சேலம் |

மதுரை மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 33 கிளைச் சிறை | .. | திண்டுக்கல் |
| 34 கிளைச் சிறை | .. | கொடைக்கானல் |
| 35 கிளைச் சிறை | .. | நிலக்கோட்டை |
| 36 கிளைச் சிறை | .. | பழனி |
| 37 கிளைச் சிறை | .. | பெரியகுளம் |
| 38 கிளைச் சிறை | .. | திருமங்கலம் |
| 39 கிளைச் சிறை | .. | உசிலம்பட்டி |
| 40 கிளைச் சிறை | .. | உத்தமபாளையம் |
| 41 கிளைச் சிறை | .. | வேடசந்தூர் |
| 42 கிளைச் சிறை | .. | மேலூர் |

[1982 மார்ச் 20

### கன்னியாகுமரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 43 | கிளைச் சிறை | .. தக்கலை |
| 44 | கிளைச் சிறை | .. குழித்துறை |

### இராமநாதபுரம் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 45 | கிளைச் சிறை | .. அருப்புக்கோட்டை |
| 46 | கிளைச் சிறை | .. முதுகுளத்தூர் |
| 47 | கிளைச் சிறை | .. பரமக்குடி |
| 48 | கிளைச் சிறை | .. இராமநாதபுரம் |
| 49 | கிளைச் சிறை | .. சாத்தூர் |
| 50 | கிளைச் சிறை | .. திருவில்லிப்புத்தூர் |
| 51 | கிளைச் சிறை | .. திருப்பத்தூர் |
| 52 | கிளைச் சிறை | .. திருவாடானை |
| 53 | கிளைச் சிறை | .. விருதுநகர் |
| 54 | கிளைச் சிறை | .. சிவகங்கை |

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 55 | கிளைச் சிறை | .. அரியலூர் |
| 56 | கிளைச் சிறை | .. செயங்கொண்டம் |
| 57 | கிளைச் சிறை | .. குளித்தலை |
| 58 | கிளைச் சிறை | .. லால்குடி |
| 59 | கிளைச் சிறை | .. மணப்பாறை |
| 60 | கிளைச் சிறை | .. முசிறி |
| 61 | கிளைச் சிறை | .. பெரம்பலூர் |
| 62 | கிளைச் சிறை | .. துறையூர் |
| 63 | கிளைச் சிறை | .. கரூர் |

### புதுக்கோட்டை மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 64 | கிளைச் சிறை | .. புதுக்கோட்டை |
| 65 | கிளைச் சிறை | .. அறந்தாங்கி |
| 66 | கிளைச் சிறை | .. கீரனூர் |
| 67 | கிளைச் சிறை | .. திருமயம் |

### திருநெல்வேலி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 68 | கிளைச் சிறை | .. .. அம்பாசமுத்திரம். |
| 69 | கிளைச் சிறை | .. .. கோவில்பட்டி. |
| 70 | கிளைச் சிறை | .. .. சங்கரன் கோவில். |
| 71 | கிளைச் சிறை | .. .. தூத்துக்குடி. |
| 72 | கிளைச் சிறை | .. .. ஸ்ரீவைகுண்டம். |



1982 மார்ச் 20]

| | | |
|---|---|---|
| 73 | கிளைச் சிறை | .. .. தென்காசி. |
| 74 | கிளைச் சிறை | .. .. திருச்செந்தூர். |
| 75 | கிளைச் சிறை | .. .. நாங்குநேரி. |

### தஞ்சாவூர் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 76 | கிளைச் சிறை | .. .. கும்பகோணம். |
| 77 | கிளைச் சிறை | .. .. மயிலாடுதுறை. |
| 78 | கிளைச் சிறை | .. .. மன்னார்குடி. |
| 79 | கிளைச் சிறை | .. .. நாகப்பட்டினம். |
| 80 | கிளைச் சிறை | .. .. நன்னிலம். |
| 81 | கிளைச் சிறை | .. .. பட்டுக்கோட்டை. |
| 82 | கிளைச் சிறை | .. .. பாபநாசம். |
| 83 | கிளைச் சிறை | .. .. சீர்காழி. |
| 84 | கிளைச் சிறை | .. .. திருத்துறைப்பூண்டி. |
| 85 | கிளைச் சிறை | .. .. திருவையாறு. |
| 86 | கிளைச் சிறை | .. .. திருவாரூர். |
| 87 | கிளைச் சிறை | .. .. தரங்கம்பாடி. |
| 88 | கிளைச் சிறை | .. .. திருவிடைமருதூர். |

### தருமபுரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 89 | கிளைச் சிறை | .. .. ஓசூர். |
| 90 | கிளைச் சிறை | .. .. அரூர். |
| 91 | கிளைச் சிறை | .. .. தருமபுரி. |
| 92 | கிளைச் சிறை | .. .. கிருஷ்ணகிரி. |
| 93 | கிளைச் சிறை | .. .. ஊத்தங்கரை. |

மத்திய சிறைகள்/வேலூர் மகளிருக்கான மாநிலச் சிறை/புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி ஆகியவை ஒவ்வொன்றிலுமுள்ள தொழில்களின் பட்டியல்.

| நிறுவனம். | தொழிற்சாலைகள். |
|---|---|
| 1 மத்திய சிறை, சென்னை. | தச்சு, தையல், பினைல் உற்பத்தி, நாடா உற்பத்தி, அட்டை கட்டுதல், முத்திரை அரக்கு, காகித உற்பத்தி. |

[1982 மார்ச் 20

| நிறுவனம். | | தொழிற்சாலைகள். |
|---|---|---|
| 2 | மத்திய சிறை, வேலூர். | நெசவு, தையல், அட்டை கட்டுதல், தச்சு, பூட்ஸ் தயாரித்தல், பலவகை. |
| 3 | மத்திய சிறை, சேலம். | அலுமினியம், கருமார் பட்டறை, தச்சு, நெசவு, காகித உற்பத்தி, அட்டை கட்டுதல், தையல். |
| 4 | மத்திய சிறை, கோவை. | நெசவு, சாயம் தோய்த்தல், தையல், கூடாரம் உற்பத்தி, காகித கைவினை உற்பத்தி, புத்தக அட்டை கட்டுதல், சோப்பு தயாரிப்பு, தச்சு. |
| 5 | மத்திய சிறை, திருச்சி. | தச்சு, நெசவு, பாய் உற்பத்தி, தையல், அட்டை கட்டுதல், சோப்பு தயாரித்தல். |
| 6 | மத்திய சிறை, மதுரை. | நெசவு, தையல், காகித உற்பத்தி, மற்றும் அட்டை கட்டுதல், தச்சு. |
| 7 | மத்திய சிறை, பாளையங் கோட்டை. | தச்சு, நெசவு, தையல், காகிதக் கைவினை உற்பத்தி மற்றும் அட்டை கட்டுதல். |
| 8 | மத்திய சிறை, கடலூர். | நெசவு, தையல், தச்சு. |
| 9 | ஆண்கள் பிற்காப்பு இல்லம், பல்லாவரம், சென்னை. | தச்சு, தையல், உலோக வேலை. |
| 10 | பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை. | தச்சு, தையல், அட்டை கட்டுதல், கருமார் பட்டறை. |
| 11 | மாநில மகளிர் சிறை, வேலூர். | நாடா உற்பத்தி, முறுக்கு நூல் உற்பத்தி, தையல் மற்றும் நெசவு. |



1982 மார்ச் 20]

## கோரிக்கை எண் 23.

### கூட்டுறவு—கொள்கை விளக்கக் குறிப்பு.

கூட்டுறவுத் துறையின் 1982–83 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கம்.

கூட்டுறவு இயக்கம் தமிழ்நாட்டில் மக்களின் பல்வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பாக வேளாண்மைக் கடன் மற்றும் இடு பொருட்களை வழங்குதல், விளை பொருட்களை விற்பனை செய்தல், இன்றியமையாத நுகர் பொருட்களை விநியோகித்தல் ஆகியவற்றில் மக்களுக்கு பணியாற்றி வருகிறது.

2. முன்னேற்றம் பற்றிய கண்ணோட்டம்.

| விபரம். | முன்னேற்றம். 1980–81-ல் | முன்னேற்றம். 1981–82 டிசம்பர் முடிய. | 1982–83-க்கான திட்டம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் கோடியில்.) | | |
| 1 குறுகிய கால, மத்திய காலக் கடன்கள் வழங்குதல். | 25.77 | 65.57 | 130.00 |
| 2 நீண்ட காலக் கடன்கள் வழங்குதல். | 4.76 | 2.24 | 15.00 |
| 3 நகை ஈட்டுக் கடன்கள் வழங்குதல். | 116.23 | 135.83 | 140.00 |
| 4 விளை பொருட்கள் விற்பனை செய்தல். | 89.87 | 52.52 | 110.00 |
| 5 இரசாயன உரங்கள் வழங்குதல். | 21.14 | 41.29 | 76.00 |
| 6 நுகர் பொருட்கள் சில்லறை விற்பனை செய்தல். | 181.55 | 166.00 | 200.00 |
| 7 கிராமக் கடைகளில் இன்றியமையாப் பொருட்கள் வழங்குதல். | 29.53 | 67.09 | 100.00 |

3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு.—கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்காக அரசு 1980–81 ஆம் ஆண்டு செய்த செலவு, நடப்பாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் திருத்த மதிப்பீடு, 1982–83 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| திட்டங்களின் விவரங்கள். | 1980–81-ல் செலவு. | 1981–82-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1981–82-க்கான திருத்த மதிப்பீடு. | 1982–83-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (இலட்சம் ரூபாயில்.) | | |
| அ) மாநிலத் திட்டப் பணிகள். | | | | |
| 1 கொள்முதலும் விநியோகமும் (கிராம அங்காடித் திட்டம்). | 1,57.58 | 1,80.51 | 2,34.93 | 2,58.89 |
| 2 கடன் கூட்டுறவுச் சங்கங்கள் | 3,99.70 | 3,61.48 | 8,78.37 | 2,33.79 |
| 3 விற்பனை கூட்டுறவுச் சங்கங்கள் | 44.20 | 29.11 | 66.07 | 28.44 |
| 4 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 36.89 | 31.22 | 62.87 | 23.65 |
| 5 ஏனைய வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் | 3.89 | 19.70 | 26.77 | 20.70 |
| 6 கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | .. | 0.65 | 0.30 | 0.97 |
| 7 பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் | 30.02 | 25.01 | 37.04 | 36.90 |
| மாநிலத் திட்டப் பணிகளின் மொத்தம்... | 6,72.28 | 6,47.68 | 13,06.35 | 6,03.34 |



| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நிதியுதவி அளிக்கும் திட்டங்கள். | 3,71.28 | 1,90.38 | 3,87.35 | 1,81.13 |
| திட்டப் பணிகளின் மொத்தம் .. | 10,43.56 | 8,38.06 | 16,93.70 | 7,84.47 |
| (இ) திட்டத்தில் சேராத பணிகள் .. | 74,24.74 | 33.74 | 11,22.65 | 38.48 |
| பெரு மொத்தம் .. | 84,68.30 | 8,71.80 | 28,16.35 | 8,22.95 |

[1982 மார்ச் 20

கூட்டுறவு விவசாயக் கடனுதவி ;

(குறுகிய கால மத்திய கால நீண்ட காலக் கடன்கள்.) :

4. முகவுரை.—தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை அமைப்பாக சுமார் 4,700 கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் விளங்குகின்றன. இச்சங்கங்கள், பயிர் செலவிற்காக குறுகிய காலக் கடன்களையும், விவசாயத்தைச் சார்ந்த துணைத் தொழில்களுக்காக மத்திய காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. நிலத்தை வளப்படுத்துவதற்கான நீண்ட காலக் கடன்களை 182 பிரதமக் கூட்டுறவு நிலவள வங்கிகள் வழங்கி வருகின்றன.

5. விவசாயிகளைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்த்தல் :— விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் 1981–82 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள விவசாயக் குடும்பங்களில் இரண்டு சதவீதத்தினரை உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளன. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை, மாநிலத்தில் உள்ள விவசாயக் குடும்பங்களில் முக்கால் பங்கிற்கும் மேல் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இதுபற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை.
(விவசாய நிலவுடைமைகள்படி.)

| (1) | எல்லா விவசாய குடும்பங்களும். (2) | சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளின் குடும்பங்கள். (3) |
|---|---|---|
| | (இலட்சத்தில்.) | |
| 1 மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை. | 53.14 | 42.05 |
| 2 கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை. | 42.04 | 32.03 |
| 3 சேர்க்கப்பட்ட குடும்பங்களின் சதவீதம். | 79 | 76 |

ஆறாவது ஐந்தாண்டு திட்டக் கால இறுதியில் மொத்த குடும்பங்களையும் கூட்டுறவு இயக்கத்திற்குள் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.



1982 மார்ச் 20]

6. ஷெடியூல்டு வகுப்புகளைச் சார்ந்த விவசாயிகளைப் பெருமளவில் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவரும் நோக்கத்துடன், ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவரை விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக்குவதின் மூலம், ஷெடியூல்டு வகுப்புகளைச் சார்ந்த நாற்பது ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் நடப்பு 1981–82 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகின்றனர். இதனால் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்கும் கடனுதவியையும் ஏனைய சேவைகளையும் பெற்று தம்முடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள ஏதுவாகும். கூட்டுறவுச் சங்கங்களில் இவ்வாறு உறுப்பினராகச் சேர்க்கப்படும் ஒவ்வொருவருக்கும் அரசின் மானியமாக நூறு ரூபாய் வழங்கப்படுகிறது. இம்மானியம், விவசாயக் கடன்களையும், பால் பண்ணை, கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல் போன்ற காரியங்களுக்காக மத்திய காலக் கடன்களையும், கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெரும் பொருட்டு, அவர்கள் சங்கங்களுக்குச் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்சாகக் கொடுக்கப்படுகிறது. 1982–83 ஆம் ஆண்டில் மேலும் இருபது ஆயிரம் குடும்பங்களை, அரசின் மானியம் வழங்கி, கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

7. கடன் வழங்கியது.—கூட்டுறவுச் சங்கங்கள் கீழ்க்கண்ட விவரப்படி விவசாயக் கடன்களை வழங்கியுள்ளன :—

| ஆண்டு. (1) | குறுகியகால மற்றும் மத்தியக் காலக் கடன்கள். (2) | நீண்டகாலக் கடன்கள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | | |
| 1977–78 | 127·13 | 12·28 | 139·41 |
| 1978–79 | 102·65 | 11·24 | 113·89 |
| 1979–80 | 42·70 | 8·85 | 51·55 |
| 1980–81 | 25·77 | 4·76 | 30·53 |
| 1981–82 (டிசம்பர் முடிய) | 65·57 | 2·24 | 67·81 |

அண்மை ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய கடனளவு குறைந்த
தற்கு முக்கிய காரணம், உறுப்பினர்களின் தவணை தவறிய கடன் தொகை
பெருமளவில் அதிகரித்தது ஆகும். கூட்டுறவு கடன்களைத் திருப்பிச் செலுத்
துவதை விவசாயிகளின் சங்கங்கள் 1977-78 ஆம் ஆண்டிலிருந்து கடுமையாக
எதிர்த்து வந்தது தவணை தவறிய கடன்கள் அதிகரித்ததற்குக் காரண
மாகும். ஆயினும் கடன் வழங்குவதில் நடப்பு ஆண்டில் முன்னேற்றம்
உள்ளது.

8. தவணை தவறிய கடன்கள்.—தவணை தவறிய கடன்கள் பற்றிய
விவரங்கள் பின்வருமாறு :—

| தேதி | கேட்பில் தவணை தவறிய கடன்களின் சதவிகிதம் | |
|---|---|---|
| | விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்கள் | பிரதம நிலவளக் கூட்டுறவு வங்கிகள் |
| (1) | (2) | (3) |
| 30—6—1978-ல் | 32.9 | 67 1 |
| 30—6—1979-ல் | 52.5 | 80 8 |
| 30—6—1980-ல் | 73.4 | 88 7 |
| 30—6—1981-ல் | 43.8 | 79 6 |
| 31—12—1981-ல் | 88.0 | 93 2 |

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் தவணை தவறிய கடன்களின்
நிலுவையை 1981 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் தேதியில் குறைத்தது
குறிப்பிடத்தக்கதாகும். இதன் விளைவாக எல்லா மத்தியக் கூட்டுறவு வங்கி
களும் விவசாயக் காரியங்களுக்கு புதிய கடன்களை வழங்குவதற்காக இந்திய
ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன்கள் ஒப்பளிக்கப்பட்டுப் பணம் பெறும் தகுதியை
அடைந்துள்ளன.

9. விவசாயிகளுக்கு இடர் உதவிப் பணிகள்.—விவசாயிகளுக்கு இடர் உதவி
செய்யும் பொருட்டு, 1978 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியில் நிலுவை நின்ற
எல்லா தவணை தவறிய விவசாயக் கடன்களுக்கும் 1979 ஆம் ஆண்டு ஜுன்
மாத இறுதி வரையில் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்தது ; 1977-78 ஆம்



ஆண்டு செலுத்தப்பட்ட அபராத வட்டியைத் திருப்பித் தந்தது ; மேலும் ஏற்கெனவே மூன்று அல்லது ஐந்தாண்டுக் கடன்களாக மாற்றப்பட்டு 1978 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியில் நிலுவை நின்ற எல்லாக் கடன்களின் மீதும் சாதாரன வட்டியைத் தள்ளுபடி செய்தது இவ்வகையில் 4.85 கோடி ரூபாய், விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன்தாரர்களின் 5.21 இலட்சம் பேர்களுக்கு வழங்கப்பட்டது. அன்றியும் 1978 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியில் எந்த ஒரு உறுப்பினர் பேரிலும் நிலுவை நின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மத்திய கால மாற்றுக் கடன்களையும், தவணை நீட்டித்த மத்திய கால மாற்றுக் கடன்களையும், மூன்று முதல் ஆறு ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தும் வகையில் ஒரே கடனாக ஒருங்கிணைக்கவும் அரசு ஆணையிட்டது. இவ்வகையில் 52 72 கோடி ரூபாய் அளவிற்கு 2.35 இலட்சம் பேர்களுடைய கடன்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. மேலும் நிலுவை நின்ற மத்திய கால மாற்றுக் கடன்கள் மற்றும் தவணை நீட்டித்த மத்திய கால மாற்றுக் கடன்களின் மேல் வட்டி விகிதம் 13.8-லிருந்து சிறு விவசாயிகளுக்கு 10 5 சதவீதமாகவும், இதர விவசாயிகளுக்கு 12 சதவீதமாகவும், 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி முதல் குறைக்கப்பட்டது. ஐந்து ஏக்கர் அல்லது அதற்கு குறைந்த அளவு நிலம் சொந்தமாக வைத்திருக்கும் அல்லது குத்தகைக்குப் பயிரிடும் 4.52 இலட்சம் சிறு விவசாயிகளின் சார்பில் இயற்கைப் பேரிடர்களின் காரணமாக மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டு 1980 ஆம் ஆண்டு மார்ச்சு மாத இறுதியில் அவர்களிடம் நிலுவை நின்ற குறுகிய காலக் கடன்களை வட்டி, அபராத வட்டி உள்பட 49.64 கோடி ரூபாய் அளவிற்கு விவசாய சேவை கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு திருப்பித் தந்தது. விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் 9 29 இலட்சம் சிறு விவசாயி கடன்தாரர்கள் 1—7—1975 முதல் 31—3—1980 வரை சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்திய மத்திய கால மாற்று கடன்கள், வட்டி, அபராத வட்டி உட்பட 23.59 கோடி ரூபாய் அளவிற்கு, 1981-82 ஆம் ஆண்டில் அவர்கள் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களை சரிக்கட்டிய வகையில், அவர்களுக்கே திருப்பிக் கொடுக்கப்பட்டது ரிசர்வ் வங்கி அனுமதித்த கடனைப் பெற்று புதுக் கடன்களை வழங்க ஏதுவாகும் பொருட்டு, தவணை தவறாத கடன்களை ஈடு கட்டுவதில் உள்ள குறையை நீக்குவதற்காகவும், தவணைத் தேதியில் செலுத்த தவறிய தொகையை செலுத்துவதற்காகவும் மத்திய கூட்டுறவு வங்கிகள் அரசிடமிருந்து வழிவகை முன்பணமாக 41.99 கோடி ரூபாய் பெற்றுள்ளன.

10 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாத முடிவிற்குள் தமது குறுகிய கால பயிர்க் கடன்களை முழுமையாக திருப்பிச் செலுத்திய சிறு விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டியை அரசு தள்ளுபடி

செய்தது. 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிக்குப்பின் அவ்வகைக் கடன்களின் பேரில் செலுத்தப்பட்ட வட்டி மற்றும் அபாரத வட்டியை அவர்களுக்கே திருப்பித் தந்தது. அதுபோல 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாத முடிவிற்குள் தமது குறுகிய காலப் பயிர்க் கடன்களை முழுமையாக அதற்கான வட்டியுடன் திருப்பிச் செலுத்திய இதர விவசாயிகள் செலுத்த வேண்டிய அபராத வட்டியை அரசு தள்ளுபடி செய்தது 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிக்குப்பின் அவ்வகைக் கடன்களின் பேரில் செலுத்தப்பட்ட அபராத வட்டியை அவர்களுக்கே திருப்பித் தந்தது. இச்சலுகைகளின் வாயிலாக 8 67 இலட்சம் கடன்தாரர்கள் 15.41 கோடி ரூபாய் அளவிற்கு 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய பயனடைந்துள்ளனர். குறித்த காலத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் கடன்தாரர்களை ஊக்குவிக்கும் வகையில் 1981-82 ஆம் ஆண்டில் தமது குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன் தவணைகளையும் குறிப்பிட்ட நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தும் சிறு விவசாயிகளுக்கு வட்டியில் 2 சதவீதத் தள்ளுபடி சலுகையை அரசு அளித்து வருகிறது. இச்சலுகை 1982-83 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து அளிக்கப்படும்.

11. வறட்சி நிவாரண பணியாக வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள 2.95 இலட்சம் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளுக்கு நெல், பயறு வகைகள், சிறு தானியவகைகள், குளிர்காலப் பருத்தி, மணிலா மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றைப் பயிரிடத் தேவைப்படும் உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை வாங்குவதற்காக 304·09 இலட்சம் ரூபாயை மானியமாக அரசு நடப்பாண்டில் வழங்கியுள்ளது. இந்த மானியம், அரசு ஒவ்வொரு விவசாயிக்கும் நிர்ணயித்த அளவிற்கும் அதிக பட்ச வரம்பிற்கும் உட்பட்டு, உரம்/பூச்சிக் கொல்லி மருந்தின் விலையில் 25 சதவீத அளவிற்கு சிறு விவசாயிகளுக்கும், 331/3 சதவீத அளவிற்கு மிகச் சிறு விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டது.

12. 1974–75 முதல் 1977–78 முடிய இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட நிலவள வங்கிக் கடன்தாரர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, 1·39 இலட்சம் கடன்தாரர்களிடம் நிலுவை நின்ற தவணை மாற்றி அமைக்கப்பட்ட கடன்கள் 75·84 கோடி ரூபாய் அளவிற்குத் தனியாக ஒரு மூட்டக்கப்பட்ட கணக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. இக்கடன் தொகை திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய காலம் நீட்டிக்கப்பட்டு, சுலபமான தவணைகளில் வசூலிக்கப்படும். இந்த ஏற்பாட்டினால் மொத்த தவணை தவறிய கடன்களின் அளவு 13·2 சதவீதம் குறைக்கப்பட்டு, 1981 ஆம் ஆண்டு



ஜூன் மாத இறுதியில் தவணை தவறிய கடன்களின் அளவு 66·4 சதவீதத்திற்கு கொண்டு வரப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கி நிர்ணயித்த நெறிமுறைகளின்படி, மாநிலத்திலுள்ள 182 நிலவள வங்கிகளில் 15 வங்கிகள் வரையறையின்றி கடன் வழங்கும் தகுதியையும், 84 வங்கிகள் வரையறுக்கப்பட்ட அளவு கடன் வழங்கும் தகுதியையும் பெற்றுள்ளன. கடன் வழங்கும் தகுதியற்ற மீதமுள்ள 83 வங்கிகளில், 23 வங்கிகள் அவற்றில் அரசு பங்கு மூலதனமாக 47·44 இலட்சம் ரூபாய் செலுத்தியதன் காரணமாக, ஓரளவு கடன் வழங்கும் தகுதியைப் பெற வகை செய்யப்பட்டது. இதனால் நடப்பு ஆண்டில் கடன் வழங்கும் தகுதியுள்ள மொத்த வங்கிகளின் எண்ணிக்கை 122 ஆக உயர்ந்துள்ளது. புதுக்கிணறுகள் வெட்டுவதற்கான செலவில் 25 சதவீதம் வரையில் கொடுக்கப்படும். அரசு மானியத்தின் அதிக பட்ச அளவு, 1981 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் தேதியிலிருந்து நிலவள வங்கிகளால் வழங்கப்படும் கடன்களைப் பொறுத்தவரையில்; கிணறு ஒன்றுக்கு 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

13. கடன் வழங்குவதற்குத் திட்டம்.—கடன்கள் திருப்பிச் செலுத்தப்படுவதில் முன்னேற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையில் நடப்பு ஆண்டில் குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன்களையும் 130 கோடி ரூபாய்அளவிற்கு வழங்கத் திட்டமிடப்பட்டது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய 65.57 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. உறுப்பினர்களின் தவணை கடந்த கடன்கள் அதிகரித்தாலும், அதன் விளைவாகக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்கும் தகுதியை இழந்திருப்பதாலும் நடப்பாண்டிற்கான இலக்கை முழுமையாக எய்த இயலாது. 1982–83 ஆம் ஆண்டிற்கான இலக்கு, மத்திய திட்டக் குழுவின் செயற்குழு குறைத்து நிர்ணயித்தபடி, 130 கோடி ரூபாய் ஆகும். நீண்ட காலக்கடன்களைப் பொறுத்தவரையில் நடப்பாண்டிற்கான இலக்கு 10 கோடி ரூபாய் ஆகும் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய வழங்கப்பட்ட கடன்கள் 2.24 கோடி ரூபாய் ஆகும். மேற்சொன்ன அதே சாரணங்களுக்காக இவ்விலக்கையும் எய்த இயலாது. 1982–83 ஆம் ஆண்டிற்கான இலக்கு, மத்திய திட்டக் குழுவின் செயற்குழு குறைத்து நிர்ணயித்தபடி, 15 கோடி ரூபாய் ஆகும்.

14. விவசாய மறுநிதி வளர்ச்சி கழகத் திட்டங்கள்—1968–69 ஆம் ஆண்டிலிருந்து விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் திட்டங்களை வகுப்பதின் மூலம் விவசாய வளர்ச்சிக்குக் கடன் வழங்குவதற்காக, பகுதிவாரியாக வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 34.27 கோடி ரூபாய் செலவிலான 96 சிறுபாசனத் திட்டங்களும், 18·49 கோடி ரூபாய் செலவிலான 90 சிறுபாசனமல்லாத பிற திட்டங்களும் தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 5,073 நீர் இறைக்கு மின் விசை இயந்திரங்களுக்கு மின் இணைப்பு செ...

காக மாநில நிலவள வங்கி தமிழ்நாடு மின் வாரியத்திற்கு 1976–77 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 2,46 கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளது.

15. நலிந்த பிரிவினர்களுக்குத் கடன் வழங்குதல்.—விவசாயிகளில் நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குவதில் தனி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது இந்திய ரிசர்வ் வங்கியின், வழிமுறையின்படி மொத்தச் கடன் தொகையில் 20 சதவீதம் நலிந்த பிரிவினர்களுக்கு அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குத் குறைவான நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு அல்லது குத்தகைக்குப் பயிரிடுபவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் எனினும் தமிழ்நாட்டிலுள்ள விவசாய சேவைக கூட்டுறவு சங்கங்கள் 1980–81 ஆம் ஆண்டில் தாம் வழங்கிய மொத்தக் கடன்களில் 51 சதவீதத்தை, அதாவது 13·11 கோடி ரூபாயை நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கியுள்ளனர். முந்தைய ஆண்டிற்கான சதவீதம் 49 மட்டுமேயாகும். நடப்பு ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 36.76 கோடி ரூபாய் குறுகிய காலக் கடன்களாகவும் 4.46 கோடி ரூபாய் மத்திய காலக் கடன்களாகவும் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன. இவை, வழங்கப்பட்ட மொத்த குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்களில் முறையே 60 சதவீதமும் 98 சதவீதமும் ஆகும். வழங்கும் கடன்களில் நலிந்த பிரிவினரின் பங்கை மேலும் உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

16. உள்நிதி வசதிகள்.—மேன்மேலும் அதிக அளவில் விவசாயக் கடன்களை வழங்க ஏதுவாகும் பொருட்டு, விவசாயக் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள், (சென்னை மாநகரில் உள்ளது தவிர மற்ற) மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் உள்நிதி வசதிகள் போதிய அளவிற்கு வளர்க்கப்பட்டுள்ளன அவற்றின் பங்கு மூலதனம் (அரசு பங்கு மூலதனம் நீங்கலாக) 1980–81 ஆம் ஆண்டு இறுதியில் 58.50 கோடி ரூபாய் இருந்தது. அது 1979–80 ஆம் ஆண்டு இறுதியில் 60.70 கோடி ரூபாயாக இருந்தது. அதிகமாக இருந்த பங்கு மூலதனத்தைக் கடன்களுக்குச் சரிக்கட்டியதன் காரணமாக 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் அது 58.32 கோடி ரூபாயாகக் குறைந்தது. அச்சங்களின் மொத்த வைப்புத் தொகை 1979–80 ஆம் ஆண்டு இறுதியில் 312.92 கோடி ரூபாயாக இருந்திருக்க, 1980–81 ஆம் ஆண்டு இறுதியில் 379.30 கோடி ரூபாயாக உயர்ந்தது. அது 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் 414.88 கோடி ரூபாயாக மேலும் உயர்ந்தது. 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய உள்ள காலத்தில் வைப்புத் தொகைகள் 33 சதவீத அளவிற்கு அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். முப்பது ஆயிரம் ரூபாய் வரையில் உள்ள வைப்புத் தொகைகளுக்கான வைப்பத் தொகைகள் காப்புறுதித்திட்டம் மாநிலத்தில்



பல மட்டங்களில் உள்ள 145 கூட்டுறவு வங்கிகளுக்கு 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதி முதல் கொண்டு வரப்பட்டுள்ளது.

17. அரசு பங்கு மூலதனம்.—கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் போதுமான அளவு கடன் பெறுவதற்குத் தகுதியுடையனவாக இருப்பதற்காக, இவற்றின் பங்கு மூலதனத்தில் அரசும் முதலீடு செய்து வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கியும் இதற்காக தேசிய விவசாயக் கடனுதவி (நீண்ட கால செயல் முறைகள்) நிதியிலிருந்து மாநில அரசுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. நிலவள வங்கிகள், நகர வங்கிகள் உட்பட இக்கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசின் மொத்த முதலீடு 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதி நிலவரப்படி 30 கோடி ரூபாயாகும்.

18. மாநில நிலவள வங்கிக்கு உதவி—மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி கடனீட்டுப் பத்திரங்கள் வாயிலாக நிதி திரட்டுகிறது. மாநில அரசு, மத்திய அரசு, விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம், இன்னும் பல நிறுவனங்கள் இப்பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. இவ்வகைப் பத்திரங்களின் பேரில் மாநில அரசு நிதி வழங்கி 1981 ஆம் ஆண்டில் டிசம்பர் மாத இறுதியில் நிலுவையாக இருந்த தொகை 15.26 கோடி ரூபாயாகும். 1982–83 ஆம் ஆண்டில் மாநில அரசு கடனீட்டு பத்திரங்களில் முதலீடு செய்வதற்காக 60 இலட்சம் ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. தவணை கடந்த கடன்கள் பெருகியது காரணமாக மாநில நிலவள வங்கிக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடியினைச் சமாளிக்க உதவும் வகையில், அவ்வங்கிக்கு அரசு வழிவகை முன்பணமாக 17 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. அவ்வங்கிக்கு ஏற்கனவே கொடுத்திருந்த வழிவகை முன்பணமாக 7 கோடி ரூபாயையும் அதற்கான வட்டியையும் வசூலிப்பதையும் மாநில அரசு தள்ளி வைத்துள்ளது. மேலும் 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய காலம் முடிந்த கடனீட்டுப் பத்திரங்களின் பேரில் அரசுக்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியிருந்த 5.1[illegible] கோடி ரூபாயை மாநில நிலவள வங்கியில் பங்கு மூலதனமாக அரசு மாற்றி அமைந்துள்ளது. 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு காலம் முடிந்து, ஆனால் 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் திருப்பிச் செலுத்தப்படாமல் இருந்த கடனீட்டுப் பத்திரங்களின் மதிப்பான 4.82 கோடி ரூபாயை 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பிறகு திருப்பிச் செலுத்த அரசு அனுமதித்துள்ளது. மாநில நிலவள வங்கி 1979–80 ஆம் ஆண்டு முடிய முடக்சப்பட்ட கணக்கிற்குக் கொண்டு சென்று அதில் வசூலிக்கப்பட வேண்டிய தொகையில் ஏற்பட்ட குறையை ஈடுசெய்வதற்காக, அரசு 4.95 கோடி ரூபாயை மானியமாகத் தந்தது. புகளூர் நதி நீரேற்றுப் பாசனச் சங்கம், கரூர் கூட்டுறவு நிலவள வங்கிக்கு கொடுக்கப்பட வேண்டியிருந்த கடன் அசல் மற்றும் வட்டித் தொகைகளாகிய 1.82 கோடி ரூபாயை அரசு

[1982 மார்ச் 20

தாம் அளித்திருந்த உத்தரவாதப்படி அச்சங்கத்திற்கு வழங்கியுள்ளது. பொய்த்த கிணறுகள் நிதியிலிருந்து நிதியுதவி தருவதற்கான விதிகளை அரசு மேலும் தளர்த்தியுள்ளது பொய்த்த வடிகுழாய்க் கிணறுகள் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகளால் பாசனம் செய்யப்பட வேண்டிய ஏக்கரின் அளவு உயர்த்தப்பட்டுள்ளது; பொய்த்த கிணறுகளால் பாதிக்கப்பட்டவர்கள் செலுத்த வேண்டிய கடனுக்கான வட்டியில், சிறு விவசாயிகளுக்கு 90 சதவீதமும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீதமும் தள்ளுபடி செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 1,384 பொய்த்த கிணறுகளுக்காக 32.03 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

19. பயிர்க் காப்புறுதித் திட்டம்.—வெள்ளம், வறட்சி போன்ற பல இயற்கை இடர்களால் பயிர்கள் சேதமாகி, அதனால் ஏற்படும் நட்டத்தை விவசாயிகளுக்கு ஈடுகட்ட பயிர்க் காப்புறுதித் திட்டம் நெல் பயிருக்காக முன்னோடியாக விவசாய சேவைக் கூட்டுறவு சங்கங்களால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் தவணைக் கட்டணத்திலும், கொடுக்கப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையிலும் 25 சதவீதம் பங்கு ஏற்று தமிழ்நாடு பயிர்க் காப்புறுதி நிதி, ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பரேஷனுடன் காப்புறுதி செய்துள்ளது. ஒரு விவசாயி காப்புறுதி செய்து கொள்ளக் கூடிய அதிக அளவு தொகை 2,000 ரூபாய் ஆகும். தவணைக் கட்டணம், சராசரி விளைச்சலைப் பொருத்து இடத்திற்கு இடம் மாறுபடும். பயிர் விளைச்சல் தேர்வாராய்ச்சியைப் பொறுத்து ஜெனரல் இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் நிர்ணயிக்கும் அளவிற்குக் கீழ் பயிா விளைச்சல் ஆகின்ற இடங்களில் மட்டுமே இழப்பீட்டுத் தொகை கொடுக்கப்படும். இழப்பீட்டுத் தொகை செலவிற்காக தமிழ்நாடு பயிர்க் காப்புறுதி நிதிக்கு மாநில அரசு மானியமாக இரண்டு இலட்சம் ரூபாய் இதுவரை வழங்கியுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றியது பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன ;—

| விவரம். | நெல் 2 1979–80. | நெல் 1 1980. | நெல் 2 1980–81. | நெல் 1 1981. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| வட்டங்களின் எண்ணிக்கை .. | 17 | 6 | 7 | 9 |
| பயனடைவோரின் எண்ணிக்கை .. | 6,955 | 2,283 | 1,757 | 1,996 |
| திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நிலம் (ஏக்கரில்) .. | 12,566 | 4,406 | 4,110 | 2,749 |
| காப்புறுதி செய்யப் பட்ட தொகை (இலட்சம் ரூபாயில்) | 72.34 | 21.81 | 19.06 | 20.49 |
| வசூலிக்கப்பட்ட மொத்த தவணைத் தொகை (இலட்சம் ரூபாயில்) .. | 2.98 | 1.13 | 0.77 | 0.87 |



1982 மார்ச் 20]

புள்ளி விவரத்துறை, 1979–80 நெல் 2 பயிருக்காகவும் 1980, நெல் 1 பயிருக்காகவும் கிராமங்களில் நடத்திய பயிர்விளைச்சல் தேர்வாராய்ச்சி. 1979–80 நெல் 2 விளைச்சல் திருத்தணி, மதுராந்தகம், விழுப்புரம், ஆத்தூர் மற்றும் நாமக்கல் வட்டங்களிலும், 1980 நெல் 1 விளைச்சல் விழுப்புரம், திருமயம் மற்றும் ஆலங்குடி வட்டங்களிலும் காப்புறுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கும் கீழ்இருந்ததாக தெரிவித்தது. இவ்வித பயிர்களுக்காக வசூலிக்கப்பட்ட இழப்புத்தொகையின் விபரங்கள் பின்வருமாறு:—

| பயிர். | வட்டங்களின் எண்ணிக்கை. | பயனடைந்தவர்கள் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட இழப்புறுதித் தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| நெல் 2—1979–80 ... | 5 | 2,734 | 4.51 |
| நெல் 1—1980 .. | 3 | 1,358 | 1.42 |
| மொத்தம் | | 4,092 | 5.93 |

1980–81 நெல் 2 பயிருக்கான விளைச்சல் தேர்வாராய்ச்சி சம்பந்தப்பட்ட எல்லா வட்டங்களிலும் விளைச்சல், காப்புறுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிமாக இருந்ததாகத் தெரிவித்தது. 1981 நெல் 1 பயிருக்கான விளைச்சல் தேர்வாராய்ச்சி முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. 1981–82 நெல் 2 பயிருக்கான பயிர் காப்புறுதித் திட்டம் 16 வட்டங்களில் 32 இலட்சம் ரூபாய் அளவிற்கு காப்புறுதி செய்ய செயற்படுத்தப்பட்டு வருகிறது.

[1982 மார்ச் 20

20. கடன் நிவாரணச் சட்டத்தால் ஏற்பட்ட நிதி வசதிக் குறைவைத் தீர்ப்பதில் கூட்டுறவு சங்கங்களின் பங்கு.—கடன் நிவாரணச்சட்டம் இயற்றப்பட்ட பிறகு நிறுவன அமைப்பில்லாத தனியார்களிடமிருந்து கடன் கிடைப்பது அரிதாகி இதனால் ஏற்பட்டுள்ள நிதி வசதிக் குறைவை இயன்ற அளவு தீர்ப்பதில் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் நகையீட்டின் பேரில் கடன்கள் வழங்குவதன் மூலம் முக்கியப் பங்கு வகித்து வருகின்றன 1,190 விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும்,மாநில மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் 385 கிளைகளும், 128 கூட்டுறவு நகர வங்கிகளும், அவற்றின் 12 கிளைகளும் ஆக 1,715 கூட்டுறவு அமைப்புகள் தற்பொழுது நகைக் கடன்கள் வழங்குவதில் ஈடு பட்டுள்ளன. 1979–80 ஆம் ஆண்டு இறுதியில் 1,581 கூட்டுறவு அமைப்புகளே நகைக்கடன்கள் வழங்கின. சவரன் ஒன்றுக்கு வழங்கப்படும் நகைக்கடன் 600 ரூபாயிலிருந்து 800 ரூபாய்க்கு உயர்த்தப்பட்டுள்ளது. நகையீட்டுக் கடன்களின் பேரில் கடன் தாரர்களிடமிருந்து வாங்கும் வட்டி ஒன்றுக்கு 15-லிருந்து 14 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய நகைக் கடன்களின் அளவு 116·23 கோடி ரூபாயாகும். இதனால் பயனடைந்தவர்கள் 9.43 இலட்சம் பேர்கள். நடப்பு ஆண்டு முழுவதற்குமான இலக்கு 130 கோடி ரூபாயாக இருக்க, டிசம்பர் மாதம் முடிய, கூட்டுறவுச் சங்கங்கள் 135·83 கோடி ரூபாய் அளவிற்கு 9·11 இலட்சம் பேர்களுக்கு நகைக் கடன்களை வழங்கியுள்ளது. 1982–83 ஆம் ஆண்டிற்கான இலக்கு 140 கோடி ரூபாயாகும். மாநிலம் முழுவதிலும், அநேகமாக கிராமப் புறங்களில் 1,715 கூட்டுறவு அமைப்புகளில் நகைக் கடன்கள் வழங்குவது மூலம், கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்த பிரிவினரின் அவசரக் கடன் தேவை களைப் பயன் விளையத் தக்க வகையில் நிறைவு செய்கின்றன. இத்துறையில் கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயச் சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் இரும்பு பெட்டகங்கள் வாங்குவதற்காகவும், மத்திய வங்கிகளின் கிளைகள் பெட்டக அறைகளைக் கட்டுவதற்காகவும் அரசு நிதியுதவி அளித்து வருகிறது.

21. நகர்ப்புறக் கடன் வசதி.—தமிழ்நாட்டில் 131 கூட்டுறவு நகர வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. நகர்ப்புற மக்களுக்கும், ஓரளவு நகர்புறத்தை ஒட்டியுள்ள மக்களுக்கும், குறுகிய கால மத்தியக் காலக் கடன்களையும், வங்கி வசதிகளையும் அளித்துவருவதுடன் அவை, குடிசைத்தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு நிதியுதவி செய்யும் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் அவை 1980–81 ஆம் ஆண்டில் 147.86 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன்களை வழங்கியுள்ளன. நடப்பு ஆண்டில் டிசம்பர் முடிய 149 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. கூட்டுறவு நகர வங்கிகளின் வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு, மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நகர வங்கிகளின் இணையம் ஒன்று பதிவு செய்யப் பட்டுள்ளது.



1982 மார்ச் 20]

22. சென்னையிலுள்ள சென்னை மத்திய கூட்டுறவு வங்கி, விவசாயம் நீங்கலான இதர காரியங்களுக்காக கடன் வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. அது, 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் 3.61 கோடி ரூபாய் அளவிற்குப் பங்குத் தொகையையும், 21·93 கோடி ரூபாய் அளவிற்கு வைப்புத் தொகையையும் கொண்டிருந்தது. 1980 ஆம் ஆண்டு மே மாதத்தில் அது ஒரு நடமாடும் கிளையைத் துவக்கியது. சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் நடமாடும் கிளை நாட்டில் மூன்றாவது ஆயினும், நடமாடும் கிளை துவங்குவது தமிழ்நாட்டில் வங்கித் துறையின் வரலாற்றில் ஒரு புதிய துணிகரச் செயலாகும். இந்த நடமாடும் கிளை எல்லாவித வங்கி வசதிகளையும் தருவதுடன், சிறு சேமிப்பில் தனிக்கவனம் செலுத்தி தமது வாடிக்கையாளர்கள், குறிப்பாக நலிந்த பிரிவைச் சார்ந்தவர்கள், பிற்காலத்திற்காக சேமித்து வைப்பதற்கு உதவுகிறது. இக்கிளை மாநகரில் குறிப்பிட்ட இடங்களில் எல்லா வேலை நாட்களிலும் குறிப்பிட்ட நேரத்தில் இயங்கி. வ்ங்கி வசதிகளைத் தருகிறது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய, இது 15.58 இலட்சம் ரூபாய் அளவிற்கு வைப்புத் தொகைகளை வசூலித்துள்ளது.

23. நலிந்த பிரிவினருக்கு குறைந்த வட்டிக்குத் தொழில் கடன் வசதி.—நடப்பு ஆண்டிலிருந்து நிறைவேற்றப்படும் ஒரு திட்டத்தின் கீழ் மிகக் குறைந்த வட்டிக்கு, அதாவது ஆண்டொன்றுக்கு 4 சதவீதத்தில், தொழில் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இக் கடன்களை தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகள், உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் 64 கூட்டுறவு நகர வங்கிகள் வழங்குகின்றன. இக் கடன்கள் இந்திய ரிசர்வ் வங்கி அங்கீகரித்துள்ள 22 வகை சிறு தொழில்கள் மற்றும் குடிசைத் தொழில்களின் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ளும் நலிந்த பிரிவினருக்கு, அதாவது எல்லா வகையிலும் ஆண்டு வருவாய் கிராமப் புறங்களில் 2,500 ரூபாய்க்கும், ஓரளவு நகர்ப்புறங்களிலும், நகரங்களிலும் 3,000 ரூபாய்க்கும் மேற்படாமல் உள்ளவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இக் கடன் நடைமுறை மூலதனத்திற்காக 2,000 ரூபாயும், மூலதனச் செலவிற்காக 5,000 ரூபாயும் ஆக 7,000 ரூபாய் நபர் ஜாமீன் பேரில் வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஆரம்ப நிலையில் உள்ளது. 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் தேதி வரையில் 3·48 இலட்சம் ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கப் பட்டுள்ளன. நடப்பு ஆண்டு இறுதிக்குள் சுமார் 25 முதல் 30 இலட்சம் ரூபாய் வரை கடன்கள் வழங்கப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. இத்திட்டம் 1982–83 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, கணிசமான முன்னேற்றம் காணப்படும்.

கூட்டுறவு விற்பனை, பதப்படுத்துதல், மற்றும்
கிடங்கு வசதி கூட்டுறவு விற்பனைகள்.

24. விவசாய விளை பொருட்களை விற்பனை செய்தல்.—114 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தம் உறுப்பினர்களின் விவசாய விளை பொருட்களை விற்பனை செய்வதில் அவர்

[1982 மார்ச் 20

களுக்கு உதவி செய்து அதன் வாயிலாக அவர்கள் நியாயமான வருமானம் பெறுவதில் அவர்களுக்குத் துணை புரிகின்றன. 1980–81 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட விவசாய விளை பொருட்களின் மதிப்பு 89.87 கோடி ரூபாய் ஆகும். இதில் பருத்தி மட்டுமே 17·50 கோடி ரூபாய் அளவிற்கு விற்கப்பட்டது. தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1980–81 ஆம் ஆண்டில் 1·42 கோடி ரூபாய் மதிப்புள்ள எண்ணெய் பிழிந்த மணிலாப் பிண்ணாக்கு, பருத்தி ஆகியவற்றை சிங்கப்பூருக்கும் சோவியத் யூனியனுக்கும் ஏற்றுமதி செய்தது. நடப்பு ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 52·52 கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாய விளைப்பொருட்கள் விற்கப்பட்டன. 1982–83 ஆம் ஆண்டிற்கான இலக்கு 110 கோடி ரூபாய் ஆகும். விவசாய விளைப்பொருட்களின் கொள்முதலிலும், விற்பனையிலும் வாணிபச் சூதாட்டத்தில் ஈடுபடும் இடைத் தரகர்களைத் தவிர்க்கும் நோக்குடன் விவசாய விளைப்பொருட்களை உற்பத்தியாளர்களிடமிருந்து நேரிடையாகக் கொள்முதல் செய்து, அவற்றைக் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக நுகர்வோர்க்கு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வேற்பாடுகளின் கீழ், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் பிரதமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் ஒத்துழைப்புடனும், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தோடு தொடர்புடனும், விவசாய விளை பொருட்களின் கொள் முதலை மாபெரும் அளவில் மேற்கொண்டுள்ளது. இவ்விளைப்பொருட்கள் மாநிலத்திலுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக நுகர்வோர்க்கு விநியோகிக்கப்படும். கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தமிழ்நாடு பஞ்சாலை கழகத்துக்கும், தேசியப் பஞ்சாலைக் கழகத்துக்கும் பருத்தி, வழங்குவதற்காக, அக்கழகங்களுடன் ஓர் இணைந்த ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

25. சரக்கீட்டுக் கடன்கள் வழங்குதல்.—விவசாயிகள் தம் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வரையில் காத்திருக்கும் பொருட்டு அவர்களுக்கு அவர்களது விளை பொருட்களின் ஈட்டின் பேரில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களும் கடன்களை வழங்குகின்றன. 1980–81 ஆண்டில் 2·07 கோடி ரூபாய் அளவுக்குச் சரக்கீட்டுக் கடன்கள் வழங்கப்பட்டன.

26. நெல் கொள்முதல்.—ஆதார விலைத் திட்டத்தின் கீழ் 1980–81 ஆம் ஆண்டில் நெல் கொள்முதல் செய்வதற்காகத் தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையம் அரசின் ஏஜெண்டாக நியமிக்கப்பட்டது. குறுவைப் பருவத்தில் அது 2,862 டன் நெல் கொள்முதல் செய்தது. 1981 ஆம் ஆண்டு சம்பாப் பருவத்தில் நெல்லின் சந்தை விலை, ஆதார விலையைவிட மிகவும் அதிகமாக இருந்ததால் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரிடை



1982 மார்ச் 20]

யாக வெளிச்சந்தை வாணிப முறையில் அவ்வப்போது நிலவிய சந்தை விலையை அவர்களுக்குத் தந்து கொள்முதல் மேற்கொண்டு 96,170 டன் நெல் கொள்முதல் செய்தது. இவ்வாறு கொள்முதல் செய்த நெல் முழுவதையும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் எடுத்துக் கொண்டது. தற்போதைய சம்பாப் பருவத்தில் இந்திய அரசு நிர்ணயித்துள்ள ஆதார விலைக்கு நெல் கொள்முதல் செய்யுமாறு கூட்டுறவுச் சங்கங்கள் கோரப்பட்டுள்ளன.

27. இரசாயன விநியோகம்.—விவசாய சேவைக்கூட்டுறவுச் சங்கங்களும் விற்பனைச் கூட்டுறவுச் சங்கங்களும் இரசாயன உரங்களை உறுப்பினர்களுக்குப் பயிர்க் கடன்களில் ஒரு பகுதியாகவும், உறுப்பினர்களுக்கும் உறுப்பினரல்லாதாருக்கும் ரொக்கத்திற்கும் தம்முடைய 4,541 சில்லறைக் கடைகள் மூலம் விற்பனை செய்து வருகின்றன. 1980–81 ஆம் ஆண்டில் 21.14 கோடி ரூபாய் மதிப்புள்ள 1·44 இலட்சம் டன் உரங்கள் விநியோக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 41.29 கோடி ரூபாய் மதிப்புள்ள 1·83 இலட்சம் டன் உரங்கள் விற்கப்பட்டுள்ளன. தவணை தவறிய கடன்கள் காரணமாகக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடன்கள் பெருமளவு குறைந்ததால் 1980–81ஆம் ஆண்டில் உர விற்பனையில் குறைவேற்பட்டிருந்த போதிலும் நடப்பு ஆண்டில் உர விற்பனையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உர விற்பனையில் முன்னேற்றம் காண்பதற்காக தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை நிலைய இணையம் 1981ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நவம்பர் மாதம் முடிய விவசாயிகள் பெருமளவு பயன்படுத்தும் சில குறிப்பிட்ட வகை உரங்களை வாங்கும் விவசாயிகளுக்கு 50 கிலோகிராமுக்கு 3 ரூபாயிலிருந்து 4 ரூபாய் வரை வாங்கும் விலையில் தள்ளுபடி செய்தது. இத்திட்டத்தின் கீழ் 72,000 டன் உரங்கள் விற்பனை செய்யப்பட்டன. 1982–83ஆம் ஆண்டில் 76 கோடி ரூபாய் மதிப்புள்ள 3.80 இலட்சம் டன் உரங்களை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

28. விற்பனை வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டம்.—கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் படிப்படியாக ஒரு கோடி ரூபாய் அளவிற்கு விற்று முதல் செய்யத் துணை புரியும் பொருட்டு, ஒருங்கிணைந்த திட்டமொன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதன்கீழ் ஒவ்வொரு ஆண்டிலும் ஐந்து சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றில் ஒவ்வொன்றுக்கும் கீழ்க்கண்டவாறு நிதியுதவி தரப்படுகின்றது.—

1. விற்பனைக் களம் கட்ட (40·60 விகிதத்தில்) மானியமும் கடனுமாக 2 இலட்சம் ரூபாய்.

2. லாரி வாங்க மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் பெறுவதற்காகத் தொடக்க நிலை உதவித் தொகையாக மானியம் 50,000 ரூபாய்.

3. தரம் பிரிக்கும் கருவிகள் வாங்க மானியம் 10,000 ரூபாய்.

4. விற்பனைக்காகப் பொதுவில் சேர்க்கப்படும் விளை பொருள்களின் மதிப்பில் ஒரு சதவீதம் என்ற கணக்கில் உறுப்பினர்களுக்கு ஊக்கப் பணமாகக் கொடுக்க மானியம் 2,000 ரூபாய்.

1979–80-ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஆண்டொன்றுக்கு ஐந்து வீதம் பதினைந்து சங்கங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் உதவி வழங்கப்பட்டது. 1982–83-ஆம் ஆண்டில் மேலும் ஐந்து சங்கங்களுக்கு உதவி வழங்கப்படும்.

29. கூட்டுறவு பதப்படுத்துதல்.—அரசிடமிருந்து பங்கு மூலதனமாகவும் கடனாகவும் உதவி பெற்றுக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பதப்படுத்தும் பிரிவுகளை விற்பனை வசதிக்கு துணையாக நிறுவியுள்ளன. 30 அரிசி ஆலைகள் 24 கடலை உடைக்கும் இயந்திரங்கள், 18 பருத்தி விதை நீக்கும் இயந்திரங்கள் , 9 எண்ணெய் ஆலைகள் உட்பட 87 பதப்படுத்தும் பிரிவுகள் உள்ளன. 1980–81-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பதப்படுத்தும் பிரிவுகள் நிறுவ அரசு நிதியுதவி அளித்துள்ளது.

| | பிரிவின் பெயர். | மொத்தச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் திருவண்ணாமலை எண்ணெய் ஆலையில் சுத்திகரிப்பு பிரிவு. | 16·45 |
| 2 | சங்கரன்கோவில் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் பருத்தி விதை நீக்கும் ஆலை. | 14·90 |
| 3 | திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் அரிசி ஆலை. | 9·00 |
| 4 | கல்குளம் விளவங்கோடு வட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் தனது பழம் பதனிடும் நிலையத்தை விரிவுபடுத்துதல். | 5·60 |

நடப்பு ஆண்டில் திருப்பத்தூர் வட்டக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் பருத்தி விதை நீக்கும் ஆலை 5·24 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவுவதற்கு நிதி உதவியும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் திருவண்ணாமலை மணிலா எண்ணெய் ஆலைக்குக் கூடுதல் தொடக்க நிலைத் தொகை (margin money) யாக 27.80 இலட்சம் ரூபாயும் அரசு இதுவரை ஒப்பளித்துள்ளது.



30. தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலத்தில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் நிறுவப்பட்டுள்ள சூரியகாந்தி விதை எண்ணெய் ஆலையையும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒண்டிப்புத்தூரில் கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு விற்பனை விநியோகச் சங்கத்தால் நிறுவப்பட்டுள்ள இன்னொரு சூரியகாந்தி விதை எண்ணெய் ஆலையும், சூரியகாந்தி விதை போதிய அளவிற்குக் கிடைக்காததாலும் கிடைக்கும் குறைந்த அளவிற்கும் வணிகர்களிடையே கடும் போட்டி நிலவுவதாலும், கடலை எண்ணெய் தயாரித்து வருகின்றன. இவ்விரு ஆலைகளிலும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் வடாற்காடு மாவட்டம் திருவண்ணாமலையில் நிறுவியுள்ள மணிலா எண்ணெய் ஆலையும் 1980–81-ஆம் ஆண்டில் 3,042 டன் கடலை எண்ணெயும் நடப்பு ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 776 டன் கடலை எண்ணெயும் தயாரித்துள்ளன.

31. துடியலூர் கூட்டுறவு விவசாய சேவைச் சங்கம், 1980–81-ஆம் ஆண்டில் 67 இலட்சம் ரூபாயும், நடப்பு ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 39 இலட்சம் ரூபாயும் மதிப்புள்ள பூச்சிக்கொல்லி மருந்து தயாரித்தது.

32. அரிசி ஆலைகளை நவீனப்படுத்துதல்.—திருத்தப்பட்ட அரிசி அரவைத் தொழில் (முறைப்படுத்துதலும், உரிமம் வழங்குதலும்) சட்டப்படி பழைய அரிசி ஆலைகள் நவீனப்படுத்தப்படவேண்டும். கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடம் 30 அரிசி அரவை ஆலைகளும், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களிடம் நவீனப்படுத்தப்பட வேண்டிய நிலையில் 7 ஆலைகளும் உள்ளன. ஆலைகளை நவீனப்படுத்துவதற்காகப் பங்கு மூலதனமாகவும் கடனாகவும் 1977–78-ஆம் ஆண்டிலிருந்து நிதி உதவி தரப்படுகிறது. 1981-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய 22 ஆலைகளை நவீனப்படுத்துவதற்காக 7·53 இலட்சம் ரூபாய் தரப்பட்டுள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டு ஒரு ஆலைக்கு நிதி உதவி வழங்க அனுமதி அளித்துள்ளது. மீதி உள்ள 14 ஆலைகள் சங்கங்களின் சொந்த நிதியைக் கொண்டு நவீனப்படுத்தப்படும். அரிசி அரவை ஆலைகளை முழு அளவில் பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக நெல்லை வாங்கி அரைப்பதற்கு நிதி உதவி தரப்பட்டு வருகிறது. 1980–81-ஆம் ஆண்டில் 6 அரிசி அரவை ஆலைகளுக்காக 7·60 இலட்சம் ரூபாய் தரப்பட்டது. நடப்பு ஆண்டில் 10 அரிசி அரவை ஆலைகளுக்காக 20·55 இலட்சம் ரூபாய் நிதி உதவி கோரப்பட்டு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

33. **விதை மேம்பாட்டுத் திட்டம் :** துடியலூர் கூட்டுறவு விவசாய சேவைச் சங்கமும், கோயம்புத்தூர் பெரியார் மாவட்டங்களில் உள்ள 9 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் சேர்ந்து 170·50 இலட்சம் ரூபாய் செலவில், நெல், இதர தானியங்கள், பருத்தி, வேர்க்கடலை, பயறு வகைகள் ஆகியவற்றின் தரமான விதைகளை பெருக்குவதற்காக விதை

மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை 1976—77-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகின்றன. 11 இடங்களில் 23,000 ஏக்கர் நிலத்தில், 23,000 டன் விதைகள் திருத்த பட்ட இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்ய படும். குடியனூர் கூட்டுறவு விவசாயச் சேவைச் சங்கமும் 5 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் இத் திட்டத்தின் முதற் கட்டத்தை செயல்படுத்தி வருகின்றன. இம் முதற்கட்டத்தின் செலவு மதிப்பு முதலில் 93·50 இலட்சம் ரூபாயாக இருந்தது. இயந்திர பொறிகளின் விலை, கூலி, முதலியன ஏறியதால் இது 130 இலட்சம் ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. இச் திட்டத்தின் கீழ் முதல் கட்டத்திற்காக அரசு பங்குத் தொகை 9·35 இலட்சம் ரூபாயும் கடன் தொகை 65·45 இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன. இத் திட்டத்தின் முதற் கட்டம் பெரும்பாலும் நிறைவேற்ற பட்டுள்ளது. இத் திட்டத்தின் இரண்டாவது கட்டம் 77 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட முதலில் திட்டமிடப்பட்டது. இது இப்போது 116·40 இலட்சம் ரூபாய்க்குத் திருத்தப்பட்டுள்ளது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் அனுமதி கிடைத்ததும் இது நிறைவேற்றப்பட எடுத்துக்கொள்ளப்படும்.

### கிடங்கு வசதி.

34. கிடங்கு கட்டுதல்.—கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டுதோறும் 200 கிராமக் கிடங்குகளை கிராம அளவிலும், 5 விற்பனைக் கிடங்குகளை மண்டி அளவிலும், மாநில அரசிடமிருந்து 40 சதவீத மானியத்தையும், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 60 சதவீத கடனையும் கொண்டு கட்டும் திட்டத்தை மேற்கொண்டிருந்தன. கட்டுமானச் செலவு அதிகரித்ததின் காரணமாக 107 டன் கொள்திறனுள்ள கிராமக் கிடங்கு ஒன்றுக்கு தரப்படும் நிதியுதவியின் அளவை 1979—80-ஆம் ஆண்டில் உதவி பெற்ற கிடங்குகளுக்காக 58,000 ரூபாயிலிருந்து 63,000 ரூபாய்க்கும், 1980—81-ஆம் ஆண்டில் உதவி பெற்ற கிடங்குகளுக்காக 70,000 ரூபாய்க்கும், நடப்பு ஆண்டில் உதவி பெற இருக்கும் கிடங்குகளுக்காக 85,500 ரூபாய்க்கும் உயர்த்த தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது. 1000 டன் கொள்திறனுள்ள விற்பனை கிடங்கு ஒன்றுக்காகத் தரப்படும் உதவி 3·40 இலட்சம் ரூபாய், 500 டன் கொள்திறனுள்ள விற்பனைக் கிடங்குக்காகத் தரப்படும் உதவி 2 இலட்சம் ரூபாய். இக்கிடங்குகளின் ஒரு பகுதி சங்கங்களின் அலுவலகமாகப் பயன்படுவதோடன்றி இரசாயன உரங்கள் இன்றியமையாத நுகர் பொருட்கள் வேளாண் விளைப் பொருட்கள் ஆகியவற்றைச் சேமித்து வைத்து விற்பனை செய்ய இக் கிடங்குகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கிராமிய நுகர்வோர் திட்டத்தின் கீழ் முதன்மைச் சங்கங்களாக விளங்கும் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் விற்பனைக் கிடங்குகள் கட்ட நிதியுதவி அளிக்கப்படுகின்றன. 1981-ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் 3,282 கிராமக் கிடங்குகளும், 242 விற்பனைக் கிடங்குகளும் 4·96 இலட்சம்



டன் மொத்தக் கொள்திறனுடன் இருந்தன. மொத்தம் 0·73 இலட்சம் டன் கொள்திறன் கொண்ட 463 கிராமக் கிடங்குகளும், (நுகர்வோர் சங்கங்களுக்கான 11 கிடங்குகளையும் சேர்த்து) 26 விற்பனைக் கிடங்குகளும் கட்டப்பட்டு வருகின்றன. சிமெண்ட் கிடைப்பது அரிதானதாலும், அதன் விளைவாக பல கிடங்குகள் கட்டி முடிக்கப்படாது உள்ளதாலும், 1982—83 ஆம் ஆண்டில் உதவி பெறும் கிராமக் கிடங்குகளின் எண்ணிக்கை 100 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. கிடங்குகள் கட்டுவதைக் கூட்டுறவுப் பதிவாளர் அலுவலகத்தில் கண்காணிப்புப் பொறியாளர் (கட்டுமானம்) தலைமையிலான கட்டுமானப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

35. குளிர்ப்பதனம்.—உருளைக் கிழங்கு, ஆப்பிள் போன்ற அழுகும் பொருட்களைச் சேமித்து வைப்பதற்காக, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் சென்னையில் 1,250 டன் திறனுள்ள ஒரு குளிர்ப்பதன ஆலையை நடத்தி வருகிறது. இவ்விணையம் சென்னையில் 2,000 டன் திறனுள்ள இன்னொரு குளிர்ப்பதன ஆலையை நிறுவுவதற்காக 1980—81 ஆம் ஆண்டில் அரசு 28 இலட்சம் ரூபாய் நிதி உதவி ஒப்பளித்தது. ஒவ்வொன்றும் சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் மூன்று குளிர்ப்பதன ஆலைகளை நிறுவுவதற்கான செயற் குறிப்புகளை, புது டெல்லியிலுள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பியதில், அந்தக் கழகம் இரண்டு ஆலைகளுக்கு மட்டுமே ஒப்புதல் அளித்துள்ளது.

### நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

36. நுகர் பொருட்கள் விநியோகம்.—இம்மாநிலத்தில் 3,662 பிரதமக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும், செயல்பட்டு வருகின்றன. இவற்றில் மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள் மற்றும் எழுது பொருட்கள் வழங்கும் 2,805 கல்லூரி மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகசாலைகளும், மகளிருக்கு மட்டுமேயான 15 பண்டகசாலைகளும், தொழிற்சாலை மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கென 282 பண்டகசாலைகளும் அடங்கும். மாநிலத்தில் 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் செயல்பட்டு வருகின்றன. அவை பிரதம பண்டகசாலைகள் இல்லாத அல்லது பண்டகசாலைகள் செம்மையாகச் செயல்படாத இடங்களில் சில்லறை விற்பனைக்காக 944 கிளைகளை அமைத்துள்ளன. நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பிரதமப் பண்டகசாலைகளும் 384 கிளைகளை நடத்துகின்றன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1980—81 ஆம் ஆண்டில் செய்த சில்லறை விற்பனை மதிப்பு 181.55 கோடி ரூபாய் ஆகும். நடப்பு ஆண்டிற்கான இலக்கு 192 கோடி ரூபாயாக இருக்க, டிசம்பர் மாதம் முடிய செய்த சில்லறை விற்பனை மதிப்பு சுமார் 166 கோடி ரூபாய் ஆகும். 1982—83 ஆம் ஆண்டிற்கான

திட்டம் 200 கோடி ரூபாயாகும். இதில் நகரப் பகுதிகளில் 127 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களும், கிராமப் பகுதிகளில் 73 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்களும் விற்பனை செய்யப் படும்.

37. மத்திய அரசிடமிருந்து நிதி உதவி.—வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் தீவிர வளர்ச்சிக்காக மத்திய அரசு பொறுப்பேற்கும் நுகர்வோர் திட்டங்களின் கீழ், மத்திய அரசு 1971–72ஆம் ஆண்டு முதல் நிதி உதவி அளித்து வருகிறது. 1971–72ஆம் ஆண்டிலிருந்து டிசம்பர் 1981 முடிய கீழ்க்காணும் திட்டங்களுக்காக நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது :—

(1) 9 சிறப்பங்காடிக்களை நிறுவுதல் ; ஒரு சிறப்பங்காடியை விரிவுபடுத்துதல் ; சிறப்பங்காடிகளில் 7 கிளைகளை நிறுவுதல்.

(2) 43 பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடி களை நிறுவுதல் ; ஒரு பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடியை விரிவுபடுத்துதல்.

(3) நலிந்த பிரிவினருக்காகவும் தொழிற்சாலைத் தொழி லாளருக்காகவும் 66 சிறு கிளைகளை ஏற்படுத்துதல் ; மாநகர் களிலும், நகர்களிலும் உள்ள குடிசைப்பகுதிகளில் வாழும் நலிந்த பிரிவினரில் மிகவும் நலிந்தவருக்கென்று 100 மிகச் சிறு கிளை களை அமைத்தல்.

(4) 2 மண்டல நுகர்பொருள் விநியோக நிலையங்களை கோயம்புத்தூரிலும், சென்னையிலும் முறையே கோயம்புத்தூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கமும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் நிறுவுதல்.

(5) 3 கிளை மற்றும் விநியோகப் பிரிவுகளை மதுரை யிலும், திருச்சியிலும், சேலத்திலும் தமிழ்நாடு நுகர்வோர் கூட் டுறவு இணையம் நிறுவுதல்.

(6) பல்கலைக் கழக, கல்லூரி மாணவர்களுக்கான 17 பொதுச் சமையற் கூடங்களை அமைத்தல்.

(7) பனியன் தொழிற்சாலை ஒன்றை திருப்பூரில் கோயம்புத்தூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கமும், பாலிதின் பைகள் செய்யும் பிரிவு ஒன்றை சென்னையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் நிறுவுதல்.

(8) 8 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை மறு சீரமைத்தல். மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் கீழ் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1980–81ஆம் ஆண்டில் 82.89 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி உதவி பெற்றன. ரூபாய் 77 இலட்சம் நிதி உதவிக்கான முன் மொழிவுகள் பரிசீலனையில் உள்ளன. மத்திய அரசைக் கலந்து இவற்றில் முடிவு எடுக்கப் படும்.





38. மாநில அரசின் நிதி உதவி—நிர்வாகப் பணியாளர் செலவு, தரச் சோதனை ஆய்வுக்கூடம் அமைத்தல் போன்ற காரியங்களுக்காக மானியமாகவும், நடைமுறை மூலதனத்தைப் பெருக்குதல், சரக்கு வண்டிகள் வாங்குதல், மேசை நாற்காலிகள் வாங்குதல், நவீன சில்லறை விற்பனைப் பிரிவுகள் நிறுவுதல் சிறப்பங்காடிகளுக்காகக் கட்டடம் கட்டுதல், நலிந்த நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குப் புத்துயிர் ஊட்டுதல் போன்ற காரியங்களுக்காகப் பங்கு மூலதனமாகவும் மற்றும் கடனாகவும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில அரசு நிதி உத்வி தந்து வருகிறது. பல்வேறு மாநிலத் திட்டப் பணிகளின் கீழ் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டுக்காக 1980–81 ஆம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்ட மொத்த நிதி உதவி 36.89 இலட்சம் ரூபாயாகும். நடப்பு ஆண்டில் நிதி உதவி 36 இலட்சம் ரூபாம் அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

39. சிறப்பங்காடிகளும், சிறப்புச் சிற்றங்காடிகளும்.—இம் மாநிலத்தில் 29 சிறப்பங்காடிகள் செயற்பட்டு வருகின்றன. மன்னார்குடியில் ஒரு சிறப்பங்காடி திறக்கப்பட உள்ளது. நுகர் வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரத்தைப் பெருக்க, சிறப் புச் சிற்றங்காடிகள் எனப்படும் 148 நவீன சில்லறை அங்காடி களைக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், பிரதம பண்டகசாலைகளும் திறந்துள்ளன. நடப்பு ஆண்டில் நிதி உதவி அளிக்கப்பட்ட பத்து நவீனச் சில்லறை அங்காடிகள் விரைவில் திறக்கப்பட உள்ளன. இவற்றில் இரண்டு அங்காடி கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில், போடிப்பட்டியிலும் பொள் ளாச்சியிலும் ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதிகளை அடுத்து நிறுவப்படும். 1982–83ஆம் ஆண்டில் பத்து நவீன சில்லறை அங்காடிகள் நிறுவுவதற்கான நிதி உதவியை அளிக்க அரசு திட்ட மிட்டுள்ளது.

40. நலிந்த பிரிவினர்களுக்கு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங் களின் பணி.—பின்தங்கிய பகுதிகளில் உள்ள நலிந்த பிரி வினர், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் முதலியோருக்காக 66 சிறு கிளைகளும், மாநகரங்களிலும் நகரங்களிலும் குடிசைப் பகுதி களில் உள்ள நலிந்த பிரிவினருள் மிகவும் நலிந்த பிரிவினருக் கென 100 மிகச் சிறு கிளைகளும் (மக்கள் அங்காடிகள்) செயல் பட்டு வருகின்றன. இக்கிளைகள் 1980–81ஆம் ஆண்டில் 5.99 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்தன.

[1982 மார்ச் 20

நடப்பு ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய இக்கிளைகள் செய்த விற்பனையின் மதிப்பு 6.42 கோடி ரூபாய் ஆகும். தொழிற் சாலைத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், குறைந்த வருமானமுள்ள பிரிவினர், பின்தங்கிய வகுப்பினர், குடிசைப் பகுதியில் வாழும் மக்கள், ஆதி திராவிடர், மலை ஜாதிப் பிரிவினர் ஆகியவர்களுக்காக 17 சிறிய அளவு சில்லறை விற்பனை நிலையங்கள் திறப்பதற்கான முன் மொழிவுகள் பரிசீலனையில் உள்ளன.

41. மண்டல நுகர்பொருள் விநியோக நிலையங்கள் : நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தயாரிப்பாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்து சுமுகமாகவும், தொடர்ச்சியாகவும் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு மண்டல நுகர்பொருள் விநியோக நிலையங்கள் கோயம்புத்தூரிலும் சென்னையிலும் நிறுவப்பட்டு உள்ளன. கோயம்புத்தூர் மண்டல விநியோக நிலையம் 1980-81 ஆம் ஆண்டில் 15.72 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்களை விநியோகம் செய்துள்ளது. நடப்பு ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 12:54 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்களை விநியோகம் செய்துள்ளது. சென்னை மண்டல விநியோக நிலையம் சென்னையில் 101.41 இலட்சம் ரூபாய் நிதி உதவியுடன் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நிறுவப்பட்டுள்ளது.

42. நலிந்த நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை மறுசீரமைத்தல்.—ல்திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் உட்பட எட்டு கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் மறு சீரமைப்பிற்காக அரசு 111 இலட்சம் ரூபாய் நிதி உதவி தந்துள்ளது. இச்சங்கங்களின் புனரமைப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், ஐந்து கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை மறு சீரமைப்பதற்காக நிதி உதவி ஒப்பளிக்கும் முன் மொழிவுகள் மத்திய அரசுடன் கலந்து ஆலோசிக்கப்படுகின்றன.

43. நுகர்வோர் தொழில் பிரிவுகள்.—ஒன்பது எண்ணெய் ஆலைகள், 8 அரிசி ஆலைகள், 6 காப்பிப் பொடி பிரிவுகள் உட்பட, 39 நுகர்வோர் தொழிற் பிரிவுகள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகின்றன. திருப்பூரில் உள்ள பனியன் தொழிற்சாலை 1980—81-ஆம் ஆண்டில் 47,306 டஜன் பனியன்களைத் தயாரித்தது. 1.30 இலட்சம் ரூபாய் செலவில் அனுமதிக்கப்பட்ட பாலிதின் பைகள் செய்யும் பிரிவு ஒன்று சென்னையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் அண்மையில் நிறுவப்பட்டது. சென்னையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தால் 5.05 இலட்சம் ரூபாய் செலவில் குறிப்பேடுகள் தயாரிக்கும் பிரிவு ஒன்று நிறுவுவது பற்றி மத்திய அரசுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.



1982 மார்ச் 20]

44. தரச் சோதனை ஆய்வுக் கூடம் அமைத்தல்.—நுகர் வோருக்குத் தரமான பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு விற்பனை செய்யப்படுகிற உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுகர்பொருட்களின் தரம் குறித்து முன்சோதனை செய்வதற் காகத் தரச் சோதனை ஆய்வுக் கூடங்கள் அமைக்கத் தமிழ்நாடு நுக்ர்வோர் கூட்டுறவு இணையம், திருச்சிராப்பள்ளி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை, மதுரை பாண்டியன் நுகர் வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை ஆகிய வற்றிற்கு மொத்த செலவில் ஒரு பங்காக ஒவ்வொன்றுக்கும் 75,000 ரூபாய் மானியத்தை அரசு அளித்துள்ளது. 1982—83ஆம் ஆண்டில் ஒரு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு 75,000 ரூபாய் உதவி தரச் சோதனை ஆய்வுக் கூடம் நிறுவுவதற் காகத் தரப்படும்.

45. கிராம நுகர்வோர் திட்டம் : கிராமப் புறங்களில் கிராம விவசாயக் கடன் சங்கங்கள் மூலமாக நுகர்பொருள் விநி யோகம் செய்ய, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் அறி முகப்படுத்தப்பட்ட ''கிராம நுகர்வோர் திட்டத்தை'' 1976ஆம் ஆண்டிலேயே செயற்படுத்த மேற்கொண்ட முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும். 1980—81ஆம் ஆண்டு வரையில் இத்திட்டத் தின்கீழ் 4,391 கிராமச் சங்கங்களை உள்ளடக்கிய 195 திட்டப் பகுதிகளில் கிராம நுகர்வோர் திட்டத்தை செயற்படுத்த, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் 4.92 கோடிரூபாய் வழங்கியிருக் கிறது. மேலும், நடப்பு ஆண்டில் 3,850 கிராமச் சங்கங்களுக்கு மண்ணெண்ணெய், பாமாலின் எண்ணெய் முதலியன விநியோகம் செய்வதற்காக பெரிய எண்ணெய் கூடுகள் (பாரல்ஸ்) போன்ற வற்றை வாங்க, ஒவ்வொரு சங்கத்திற்கும் நிதி உதவியாக 2,000 ரூபாய் வீதம் 77 இலட்சம் ரூபாயைத் தேசியக் கூட்டுறவு வளர்ச் சிக் கழகம் ஒப்பளித்துள்ளது.

46. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கடைத் திட்டம் : அரிசி கோதுமை, கோதுமைப் பொருட்கள், சர்க்கரை, மிளகாய், புளி, தனியா, கடலெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் கிராமப்புற மக்களுக்கு தாராளமாகவும் நியாய விலையிலும் கிடைக்கச் செய்யும் பொருட்டு மாநிலம் முழுமையும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் வகையில் தமிழக அரசால் அறிமுகம் செய்யப்பட்ட கிராமந் தோறும் கடைத் திட்டத்தின் கீழ், கூட்டுறவுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட கீழ்க்கண்ட 11 மாவட்டங்களில் 5,387 முழுநேரக் கடைகள் மற்றும் 1,273 பகுதி நேரக் கடைகள் ஆக 6,660 புதிய கடைகள் இத்திட்டத்தை செயற்படுத்த திறக்கப்பட்டுள்ளன :—

(1) செங்கற்பட்டு.

(2) வடாற்காடு.

(3) சேலம்.

(4) கோயம்புத்தூர்.

[1982 மார்ச் 20

(5) பெரியார்
(6) நீலகிரி
(7) திருச்சிராப்பள்ளி
(8) புதுக்கோட்டை
(9) மதுரை
(10 )இராமநாதபுரம்
(11) கன்னியாகுமரி

அரசு ஒவ்வொரு கடைக்கும் தளவாடச் சாமான்கள் வாங்க 1,250 ரூபாயும் எட்டு முதன்மைச் சங்கங்களுக்கு லாரி வாங்க தலா ஒரு இலட்சம் ரூபாயும் தொடராச் செலவினத்தின் கீழ் மானியமாக அளித்துள்ளது. மேலும் ஊழியர் சம்பளம், வாடகை போன்ற செலவுகளுக்காக, ஆண்டொன்றுக்கு முழுநேரக் கடை ஒன்றுக்கு 3,000 ரூபாயும் பகுதி நேரக் கடை ஒன்றுக்கு 2,100 ரூபாயும் ஆகத் தொடரும் மானியத்தையும் அரசு அளித்து வருகிறது.

47. எல்லா மாவட்டங்களிலும் கிராமப் புறங்களில் ஏற்கனவே கூட்டுறவுச் சங்கங்களால் நியாய விலைக் கடைகளாக நடத்தப்பட்டு, பின்னர் எல்லா அத்தியாவசியப் பொருட்களையும் விற்பனை செய்யும் கடைகளாக மாற்றப்பட்ட 4,441 கடைகளையும் சேர்த்து, தற்சமயம் 11,101 கிராமக்கடைகள், கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. பெரியார் மாவட்டத்தில் மேலும் 9 புதிய கடைகளைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1980–81 ஆம் ஆண்டில் 29.53 கோடி ரூபாய் அளவிற்கும் நடப்பு ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 67.09 கோடி ரூபாய் அளவிற்கும் பொருள்களை விற்பனை செய்துள்ளன. தற்சமயம் ஒரு கிராமக் கடையில் சராசரி விற்பனை 9,000 ரூபாய் ஆகும் 1982–83 ஆம் ஆண்டில் கிராமக் கடைகளின் விற்பனை 100 கோடி ரூபாய் அளவினை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

48. **பாடப் புத்தகங்கள் வழங்குதல்.**—1980–81 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்திடமிருந்து 5.55 கோடி ரூபாய் மதிப்புள்ள 332 இலட்சம் நாட்டுடைமயாக்கப்பட்ட பாடநூல்களை வாங்கி விநியோகித்தன. நடப்பு ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய கூட்டுறவுச் சங்கங்கள் 5.69 கோடி ரூபாய் மதிப்புள்ள 345 இலட்சம் நூல்களை விநியோகித்துள்ளன. அந்த நூல்கள் 2,525 பள்ளி மாணவர் கூட்டுறவுப் பண்டசாலைகள் உட்பட, பல சில்லறைக் கடைகள் மூலமாக 36,775 பள்ளிகளில் பயிலும் 91 இலட்சம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

49. **கட்டுப்பாட்டு விலைத் துணி வழங்குதல்.**—மாநிலம் முழுவதிலும் கட்டுப்பாட்டு விலைத் துணி விநியோகம் கூட்டுறவுச் சங்கங்களிடம் விடப்பட்டுள்ளது. 1980–81 ஆம் கூட்டுறவு ஆண்டில், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையும் 5.71 கோடி



1982 மார்ச் 20]

ரூபாய் மதிப்புள்ள 22,031 பேல் துணியை விநியோகத்திற்காக எடுத்தது. நடப்புக் கூட்டுறவு ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய 2.43 கோடி ரூபாய் மதிப்புள்ள 6,071 பேல் துணி எடுக்கப்பட்டது. கட்டுப்பாட்டு விலைத் துணி 5,268 கூட்டுறவு சில்லறை விற்பனை அங்காடிகள் மூலமாக விற்கப்படுகிறது. இவற்றில் 4.483 அங்காடிகள் கிராமப் பகுதிகளில் உள்ளன. மத்திய அரசு அண்மையில் கட்டுப்பாட்டு விலைத் துணியின் விலையை ஏற்றியுள்ளதால், இத்துணியை மக்கள் விரும்பி வாங்குவது குறைந்து வருகிறது.

50. **குறிப்பேடுகளை வழங்குதல்.**—1980–81 கல்வி ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் வழங்கிய 1.91 கோடி ரூபாய் மதிப்புள்ள குறிப்பேடுகளை மாணவர்களுக்கு விற்பனை செய்தன. நடப்புக் கல்வியாண்டில் டிசம்பர் மாதம் முடிய 2.83 கோடி ரூபாய் மதிப்புள்ள குறிப்பேடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

51. **காய்கறி விநியோகம்.** விவசாயிகளுக்குத் தகுந்த விலை கிடைப்பதற்காகவும், நுகர்வோருக்கு நியாயவிலையில் கிடைபதற்காகவும் சென்னை மாநகரத்தில் உள்ள திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கமும், பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டசாலையும் 26 சில்லறை அங்காடிகள் மூலமாக சென்னை மாநகரத்தில் காய்கறி விற்பனை செய்யும் திட்டத்தை 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் நிறைவேற்றி வருகின்றன. ஐந்து மூன்று சக்கர வண்டிகள் வாங்குவதற்காகவும், 22 பெட்டிக் கடைகள் நிறுவுவதற்காகவும் இவ்விரு சங்கங்களுக்கும் அரசு 2.10 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. இந்தச் சங்கங்கள் சராசரியாக நாளொன்றுக்கு 4.000 ரூபாய் மதிப்புள்ள காய்கறிகளை விற்பனை செய்கின்றன. 1982–83 ஆம் ஆண்டில் இத்திட்டம் இதர சில முக்கிய நகரங்களுக்கு விஸ்தரிக்கப்படும்.

52. **நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சிக்கல்கள் பற்றி ஆராய்க்குழு.**—நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய பல சிக்கல்களையும் ஆராய்ந்து தக்க பரிந்துரைகள் வழங்குவதற்காக குழு ஒன்றை அரசு 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமைத்துள்ளது. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவித்த அவற்றின் சிக்கல்கள் பற்றிய கருத்துக்களை இக்குழு தற்சமயம் ஆராய்ந்து வருகிறது.

53. **ஆலோசனைக் குழுக்கள் அமைத்தல்.**—பொது விநியோக முறையைப் பயன் விளைவிக்கும் வகையில் நிறைவேற்றுவதில் சென்னை மாநகரத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஆலோசனை தரவும், உதவி புரியும் பொருட்டு, சென்னை மாநகருக்காக நான்கு அலுவலர் சார்பில்லாத ஆலோசனைக் குழுக்களை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாலோசனைக் குழுக்களின் உறுப்பினர்களில் பெரும்பாலோர் இல்லத்தரசிகளாக் இருப்பர். இதுபோன்ற ஆலோசனைக் குழுக்களை மாநிலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**54. மின்சக்தி வழங்குதல்.**—கிராமப்புறங்களில் மின்சக்தியைப் பரவலாக வழங்குவதற்காகவும், பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்காகவும் இயங்கி வரும் கும்பகோணம் கிராமப்புற மின் இணைப்புக் கூட்டுறவுச் சங்கம், நலிந்த பிரிவினருக்கான ஒவ்வொரு குடிசைக்கும் ஒரு மின் விளக்குத் திட்டத்தின்கீழ் 658 மின் இணைப்புகள் உட்பட 3,741 மின் இணைப்புகளை 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய வழங்கியுள்ளது. புது டில்லியில் உள்ள கிராமப்புற மின் இணைப்புக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று, புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயத்தில் இன்னொரு கிராமப்புற மின் இணைப்புக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் யோசனை பரிசீலனையில் உள்ளது

### நலிந்த பிரிவினருக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள்

55. தொழிலாளர்கள் சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள் மற்றும் மலைச் சாதியினர் போன்ற நலிந்த பிரிவினரின் நலனுக்காகவே சில கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்பந்த வேலைகளைப் பெறுவதன் வழியாக அவற்றின் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன. பிற வகைச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்கு பணி வசதிகளையோ அல்லது கடன் உதவியையோ அளிக்கின்றன. இச்சங்கங்களுக்குப் பங்கு மூலதனம் கடன் மானியம் மற்றும் துறை அலுவலர்களின் இலவச சேவை போன்ற உதவிகளை அரசு அளித்து வருகிறது

**56. மோட்டார் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்.**—மோட்டார் சைக்கிள் ரிக்ஷாக்களைச் சொந்தமாக வைத்துக்கொள்ளவோ அல்லது தமது சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்திக் கொள்ளவோ, விலையில் 25 சதவீதம் வரையில், ஒவ்வொன்றுக்கும் 1,125 ரூபாய்க்கு அதிகப்படாமல் மானிய உதவியை ஓராயிரம் பேருக்கு வழங்கும் திட்டம் ஒன்று நடப்பு ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மீதிப்பணம் மத்தியக் கூட்டுறவு வங்கிகளால் கடனாகக் கொடுக்கப்படும். 1982-83 ஆம் ஆண்டில் மேலும் ஆயிரம் பேர்களுக்கு உதவி புரிய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**57. உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள்.**—உடல் ஊனமுற்றோரின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தும் போக்குடன், ஊனமுற்றோரின் சர்வதேச ஆண்டாகிய 1981-ல் வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உடல் ஊனமுற்றோர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள் ஐந்து பதியப்பட்டுள்ளன. இச்சங்கங்களுக்கு நிதி உதவி தருவதற்கான யோசனைகள் பரிசீலனையில் உள்ளன.



**58. சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முதலியன.**—நவீன உலர் சலவைக் கூடங்கள் அமைக்க சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நவீன முடி திருத்தகம் அமைக்க முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கும் நிதி உதவி தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் ஐந்து தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், இரண்டு உப்பளத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அவற்றின் பணிகளை மேம்படுத்துவதற்காக, நிதி உதவி தரப்படும்.

**59. பெரிய அளவிலான பலநோக்கு வுட்டுறவுச் சங்கங்கள்.**—பயிரிடுவதற்கும் பிற உற்பத்திக் காரியங்களுக்கும் 4 சதவீதம் என்கிற சலுகை விகித வட்டியில் கடன் வழங்குதல், விவசாய மற்றும் சிறு வனப் பொருட்களை விற்பனை செய்தல், விவசாய இடுபொருட்களையும் நுகர்பொருட்களையும் விநியோகித்தல் ஆகிய பணிகளைத் தம் பழங்குடி உறுப்பினர்களுக்கு ஒரே இடத்தில் வழங்குவதன் வாயிலாக, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் மாநிலத்திலுள்ள 12 பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்து செயலாற்றுகின்றன. நீலகிரி மாவட்டத்தில் மசினகுடி மலையிலும், சேலம் மாவட்டத்தில் பச்சை மலையிலும் வடாற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையிலுள்ள நம்மியம்பட்டியிலும் ஆக மேலும் மூன்று பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதற்கான முன்மொழிகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. பழங்குடியினரின் நலிந்த பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு அரசு பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொடர்ந்து தாராளமாக நிதியுதவி செய்து வருகிறது 1980-81 ஆம் ஆண்டில் வழங்கிய 29.80 இலட்சம் ரூபாய் உட்பட 1976-77 ஆம் ஆண்டிலிருந்து 1980-81 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் அரசு இச்சங்கங்களுக்கு 79.35 இலட்சம் ரூபாய் அளவுக்கு உதவி வழங்கியுள்ளது. 1981-82 ஆம் ஆண்டில் இது வரை 16 49 இலட்சம் ரூபாய் அளவுக்கு அரசு உதவி வழங்கப்பட்டுள்ளது. 68 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிதி உதவுவதற்கான கோரிக்கைகள் அரசின் பரிசீலனையிலுள்ளன. 1982-83 ஆம் ஆண்டில் 36 90 இலட்சம் ரூபாய் நிதியுதவி தர வகை செய்யப்பட்டுள்ளது. தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மூன்று பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தம் எல்லையிலுள்ள பழங்குடிக் குடும்பங்களில் 62 சதவீதத்தினரை உறுப்பினராகச் சேர்த்துள்ளன. மற்ற ஒன்பது சங்கங்களும் தம் எல்லையிலுள்ள பழங்குடிக் குடும்பங்கள் அனைத்தையும் உறுப்பினராகச் சேர்த்துக் கொண்டுள்ளன இப்பன்னிரண்டு பெரும் பல இன்றைக்கு அவர்கள் எடுக்கின்ற வேலையை எப்படிச் செய்கிறார்கள் என்பது தெரிவித்துக் கொள்கிறேன்.

[1982 மார்ச் 20

நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதியில் 33,222 உறுப்பினர்கள் இருந்தனர். இச் சங்கங்கள் ஆற்றிய பணிகள் கீழே குறிக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | வழங்கிய கடன்கள். | கொள்முதல் செய்த சிறுவனப் பொருட் களின் மதிப்பு. | வழங்கிய விவசாய இடு பொருட் களின் மதிப்பு. | வழங்கிய நுகர் பொருட் களின் மதிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (இலட்சம் ரூபாயில்.) | | |
| 1976–77 .. | 9.10 | 0.20 | 0.06 | 0.38 |
| 1977–78 .. | 34.23 | 8.52 | 1.23 | 7.70 |
| 1978–79 .. | 39.57 | 11.09 | 1.17 | 14.73 |
| 1979–80 .. | 38·31 | 8.66 | 5.74 | 21.64 |
| 1980–81 .. | 23.85 | 8.01 | 7.31 | 33.51 |
| 1981-82 டிசம்பர் முடிய | 18.99 | 4.10 | 4.09 | 40.78 |

60. வேலையில்லாத பொரியியல் பட்டதாரிகளுக்காழ கட்டுமானக் கூட்டுறவுச் சங்கம்.—பொதுப் பணித் துறையில் கட்டுமானப் பணிகளை நிறைவேற்றுவதில் கூடிய வரையில் தனியார் ஒப்பந்த முறையைத் தவிர்ப்பதன் வாயிலாக வேலையில்லாத பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் நோக்குடன் பரிசோதனை முறையில், வேலையில்லாத பொறியியல் பட்டதாரிகளுக்கும் டிப்ளமோதாரர்களுக்குமான கட்டுமானக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று சென்னையில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பதியப்பட்டுள்ளது.. பஞ்ச நிவாரணத் திட்டங்களையும், இதர முக்கியக் கட்டடத் திட்டங்களையும், நிறைவேற்றுவதில் உள்ள கட்டுமானப் பணிகள் இச்சங்கத்திற்கு கொடுக்கப்படும். அரசு, இச்சங்கத்திற்கு 3.64 இலட்சம் ரூபாய் நிதி உதவி ஒப்பளித்துள்ளது.

### கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி.

61. ஆராய்ச்சிப் பணி மேற்கொள்ளுதல்.—கூட்டுறவுச் சங்கங்கள் பின்பற்றும் பல்வகை நடைமுறைகளைத் தனியே ஆராய்ந்து, அவ்வாராய்ச்சியின் அடிப்படையில் பலவகைச் சிக்கல்களையும் களைய வழிவகைகளைப் பரிந்துரைக்கவும், புதிய திட்டங்களை வரையும் பொருட்டு 1982–83 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் துணைப் பதிவாளர் ஒருவர் தலைமையின்கீழ் ஆராய்ச்சிக் குழு ஒன்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



1982 மார்ச் 20]

62. பயிற்சி.—பெரிய கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை நிர் வாக அலுவலர்களாகப் பணிபுரியும் கூட்டுறவுத் துறை அலுவலர் களுக்குக் கொள்முதல், விற்பனை, கணக்கு, பணியாளர் மேலாண்மை போன்ற நடவடிக்கைகளில் நவீன நுட்பங்களையும் தொழிலாளர் சட்டங்கள், விற்பனை வரிச் சட்டங்கள், வருமான வரிச் சட்டம் போன்றனவற்றில் அவர்கள் நிர்வகிக்கும் சங்கங் கள் சம்பந்தப்பட்டவைகளையும் விளக்கும் நோக்கத்துடன் தக்க மேலாண்மைப் பயிற்சித் திட்டங்களை வகுத்துத் தருமாறு சென்னை அண்ணா இன்ஸ்டிடியுட் ஆப் மேனேஜ்மெண்ட். அஹமதாபாத் இந்தியன் இன்ஸ்டிடியுட் ஆப் பிசினஸ் மேனேஜ் மெண்ட் போன்ற பல மாநில தேசிய மற்றும் சர்வதேச நிலை யிலுள்ள நிறுவனங்களைக் கேட்டுக்கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ளது.

63. கொள்கை பரப்புதலும், விளம்பரமும்.—ஆங்கிலத்தி லும் தமிழிலும் மாத இதழ்கள் வெளியிட்டும், கொள்கை பரப்பு தலுக்காக ஏழு ஊர்திகளையும் பயன்படுத்தியும், அனைத்து இந்தியக் கூட்டுறவு வாரம் கொண்டாடியும், நூலகங்கள் நடத்தி யும், நூல்களையும் சிறு வெளியீடுகளையும் வெளியிட்டும், மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தியும், பொருட். காட்சிகளில் பங்கு கொண்டும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தொடர்ந்து கூட்டுறவு இயக்கத்தின் முயற்சிகள் பற்றி விளம்பரம் செய்து வருகிறது. இவ்வொன்றியம் கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளைப் பற்றி இந்திய வானொலி மற்றும் தொலைக் காட்சி மூலமும் செய்தி பரப்பி வருகிறது. கூட்டுறவுக் கடன் களைத் திருப்பிச் செலுத்துவதன் அவசியம் பற்றியும் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள் பற்றியும் உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் சிறிய சினிமாப் படங்களையும் இவ் வொன்றியம் வெளியிட்டுள்ளது. மாவட்ட அளவில் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மாத இதழ்கள் வெளியிட்டும், நூல் நிலையங்கள் நடத்தியும் வருகின்றன. கூட்டுறவுத் துறையின் முக்கிய நடவடிக்கைகளையும், சாதனைகளையும் பலதரப்பட்ட பொதுமக்களுக்கும் எடுத்துச் கூறுவதற்காக ஒரு மாதாந்திரச் செய்திக் கடிதத்தைப் பரவலாக வெளியிட உத்தேசிக்கப்பட்டுள் ளது. தற்சமயம் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் இல்லாத சென்னை, தர்மபுரி, பெரியார் மற்றும் கன்னியாகுமரி மாவட் டங்களில் அவ்வகை ஒன்றியங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் கொண்டாடப்படும் அனைத்து இந்தியக் கூட்டுறவு வாரத்தில் மிகச் சிறந்த முறையில் செயல்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கேடயங்கள் வழங்கப் படுகின்றன.

### பொது.

64. சட்டத்திற்குத் திருத்தம்.—கூட்டுறவு இயக்கத்தின் சீரிய வளர்ச்சிக்காக 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தையும் 1934 ஆம் ஆண்டு தமிழ்நாடு

கூட்டுறவு நிலவள வங்கிகளின் சட்டத்தையும் தள்ளுபடி செய்து தக்க மாற்றங்களுடன் விரிவான சட்டம் ஒன்றைக் கொண்டு வரும்பொருட்டு, ஒரு முழுமையான சட்ட முன்வடிவு 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் நாள் சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டு, அது ஆய்வுக் குழுவின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டது. ஆய்வுக் குழு சட்ட முன்வடிவின் ஒவ்வொரு பகுதியினையும் பரிசீலனை செய்வதை 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் முடித்து, சில பகுதிகளுக்கான மாறுதல்களைத் தெரிவித்துள்ளது. மாற்றங்கள் செய்யப்பட்ட சட்ட முன்வடிவை ஆராயக் குழு விரைவில் கூடவிருக்கிறது. அக்குழு முடிவெடுத்ததும் சட்ட முன்வடிவு சட்டமன்றத்தில் சட்டமாக்குவதற்காகக் கொண்டு வரப்படும். இப்புதிய சட்டத்தின் அடிப்படையில் கூட்டுறவுச்சங்கங்களின் குழுக்களுக்குத் தேர்தல்கள் நடைபெறும்.

65. கூட்டுறவாளர்கள் இரத்த நன்கொடை செய்தல்.—1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அனைத்து இந்தியக் கூட்டுறவு வாரம் கொண்டாடப்பட்டதையொட்டி, சென்னை பொது மருத்துவமனையில் உள்ள இரத்த வங்கிக்கு 102 கூட்டுறவாளர்கள் மனமுவந்து இரத்த நன்கொடை செய்தனர்.

66. உடல் ஊனமுற்றோர், ஏழை மகளிர் போன்றவருக்கு உதவி :—தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் உடல் ஊனமுற்றோருக்கு 1978 ஆம் ஆண்டிலிருந்தே உதவி புரிந்து வந்துள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில், சென்னை மாநகரிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டுதோறும் கிடைக்கிற இலாபத்திலிருந்து வைக்கப்பட்டுள்ள தம் பொது நல நிதியிலிருந்து, 1.24 இலட்சம் மதிப்புள்ள சக்கர நாற்காலி போன்ற துணைக் கருவிகளை 317 உடல் ஊனமுற்றோருக்கு வழங்கியும், ஏழை மகளிருக்கு ஐந்து தையல் மெஷின்களைக் கொடுத்தும், தமிழ்நாடு சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியும் உதவி புரிந்துள்ளன.

67. கூட்டுறவு சமூகக் கூடங்கள் கட்டுதல்.—திருமணம் போன்ற விழாக்களைக் கொண்டாடக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் பணியாளர்களுக்கும் குறைந்த வாடகைக்கு இடவசதி செய்து கொடுக்கவும், கூட்டுறவுச் சங்கங்களின், பேரவைக் கூட்டங்கள், கருத்தரங்குகள் போன்றவற்றை நடத்தவும், படிப்பகங்கள் கொண்ட நூல் நிலையங்களையும் நடத்தவும், திருச்சி, சேலம், மதுரை ஆகிய இடங்களில் சம்பந்தப்பட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளால் கூட்டுறவுச் சமூகக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

திங்கட்கிழமை, 1982, மார்ச் 22, பங்குனி 9, துன்மதிங் திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு ".

வீரம், மானம், நன்னடத்தை, தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்கு (தொண்டர்படைக்கு) சிறந்ததாகும்.

### (1) வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

1979–80 ஆம் ஆண்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அரிசி.

*வினா 585— திரு. என். பழனிவேல் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் 1979–80 ஆம் ஆண்டு அரிசி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த நாடுகளுக்கு ?

(இ) அதன் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) கெனியா, பெரு, மேற்கு ஜெர்மனி, கியூபா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

(இ) ஏற்றுமதி செய்ததில் கிடைத்த மொத்த லாபம் ரூ. 84.59,4..

[1982 மார்ச் 22

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, தமிழ்நாட்டி
லிருந்து வெளிநாடுகளுக்கு சப்ளை செய்யப்படும் இந்த உணவு
என்ன விலையில் ஏற்றுமதி செய்யப்படுகிறது ? நம்முடைய
தமிழ்நாட்டு மக்களுக்கு சப்ளை செய்யப்படும் விலையைக் காட்டி
லும் அதிகமா அல்லது ஏதாவது ஒப்பந்தத்தின் அடிப்படையில்
இந்தச் சப்ளை செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்
களே, 1978–79 ஆம் ஆண்டில் நெல் விளைச்சல் நன்றாக இருந்த
தால் வெளிச் சந்தையில் அரிசி நியாயமான விலையில் தாராள
மாகக் கிடைத்ததால் 3 இலட்சம் டன் அரிசி அரசிடம் தேங்கி
இருந்தது. இந்திய அரசின் அனுமதியின் பேரிலும் அவர்கள்
சொல்லியதன் பேரிலும் வெளிநாடுகளுக்கு அந்த அரிசி ஏற்றுமதி
செய்யப்பட்டது.

அந்த வகையிலே கென்யா நாட்டுக்கு 10,000 டன் அரிசி
2,10,17,510 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அனுப்பி வைக்கப்
பட்டது. அதேமாதிரி பெரு நாட்டுக்கு 10,000 டன் அரிசி
1,95,34,308 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் அனுப்பி வைக்கப்
பட்டது. கென்யா நாட்டைச் சேர்ந்த மொம்பசாவுக்கு 10,000
டன் அரிசி 2,08,16,653·32 ரூபாய்க்கான மதிப்பீட்டுச் செலவில்
அனுப்பி வைக்கப்பட்டது. மேற்கு ஜெர்மனிக்கு 4,962·25 டன்
குறுணை 79,39,600 ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலும், கியூபா
நாட்டுக்கு 10,000 டன் அரிசி 208 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச்
செலவிலும்; கியூபா நாட்டைச் சேர்ந்த ஹவானாவுக்கு 10,000
டன் அரிசி 2,12,49,030·07 ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலும்,
கென்யா நாட்டைச் சேர்ந்த மொம்பசாவுக்கு 10,000 டன் அரிசி
2,03,44,287·84 ரூபாய் மதிப்பீட்டுச் செலவிலும் அனுப்பி வைக்
கப்பட்டது. அவை ஓரளவுக்கு வெளிச்சந்தை விலைக்கு மேலாக
இருக்கிற மதிப்பீட்டின் அடிப்படையில்தான் அனுப்பி வைக்கப்
பட்டிருக்கின்றன.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் மொத்தமாக எவ்வளவு தொகைக்கு விற்
பனை செய்தோம் என்பதை மட்டும்தான் அறிவித்தார்கள்.
இங்கே நாம் நம்முடைய தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன விலைக்கு
சப்ளை செய்கிறோம் ? அதைவிட அதிகமான விலைக்கு அனுப்
பப்பட்டதா அல்லது கம்மியான விலைக்கு அனுப்பப்பட்டதா
என்பதை விளக்கவில்லை. மத்திய அரசின் வேண்டுகோளுக்
கிணங்க சப்ளை செய்தோம் என்று சொன்னார்கள். நமக்கு
பற்றாக்குறை இருக்கிற காலத்தில், நாம் அவர்கள் சொல்கிற
போது அதன்படி கேட்டு நடக்கிறோம், நாம் கேட்பதை அவர்கள்
மறுத்துக்கொண்டிருக்கிறார்களே. அது சம்பந்தமாக அரசு ஆட்
சேபணை ஏதாவது தெரிவித்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு
கிறேன்.



982 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, அதை நாம் கொள்முதல் விலைக்கோ அல்லது நாம்
நியாய விலைக்கடைகள் மூலம் விற்கிற அந்த விலைக்கோ கொடுக்க
வில்லை. வெளிச்சந்தை விலைக்குக் கொடுக்கப்பட்டது. அப்
போது மூன்றுஇலட்சம் டன் அரிசி தேங்கி இருந்தது. நீண்ட நாட்க
ளாக கிடங்கிலே இருந்த காரணத்தால் அரிசியின் தரம் குறைந்து
விடக்கூடாது என்ற காரணத்தால், தேங்கிக் கிடக்கின்ற அந்தச்
சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால், மத்திய அரசு அந்த நிலையை
அனுசரித்து வெளிநாடுகளில் கிராக்கி இருப்பதால், ஏற்றுமதி
செய்யலாம் என்று சொல்லி ஏற்றுமதி செய்யப்பட்டது. 1978
ஆம் ஆண்டில் நமக்கு தாராளமாக அரிசி கிடைத்தது. 1979–80
ஆம் ஆண்டில் நமக்கு நல்ல விளைச்சல் இருந்தது. 1980–81ஆம்
ஆண்டில் தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டதன்காரணமாக
ஓரளவு உணவு தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போதுதான்
மத்திய அரசிடமிருந்து வாங்க வேண்டிய அவசியம் வந்தது.
கூடுதல் என்று வருகிறபோது நம்முடைய மாநிலத்தில் மட்டும்
இல்லாமல், வேறு பல மாநிலங்களிலும் விளைச்சல் அதிகமான
அளவில் இருந்த காரணத்தால், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி
செய்து, அதன் மூலம் அந்நியச் செலாவணி திரட்டலாம், லாபம்
சம்பாதிக்கலாம் என்ற முறையில் மத்திய அரசு இந்த முடிவை
மேற்கொண்டது.

திரு. பெ. சு. திருவங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே,
வெளி மார்க்கெட் விலைக்குத்தான் வெளி நாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். இந்த ஆண்டு உணவில் தன்னிறைவு பெற்று
இருக்கிறோம். வெளிமார்க்கெட்டில் இருந்து வாங்கி வெளி
நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :: தலைவர்
அவர்களே, அந்த அளவிற்கு அதிகமாக இருக்குமா என்பது ஐயப்
பாட்டுக்குரிய ஒன்று. நாமே கொள்முதல் செய்யவேண்டிய
தற்கான இந்த இலக்கை அடைய முடியாமல் இருக்கிறோம். நம்
முடைய உள்நாட்டுத் தேவைகளை நிறைவேற்றிய பிறகு, மிஞ்சு
கின்ற நிலைமை அகில இந்திய அடிப்படையில் ஏற்படுமானால்
வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய இந்திய அரசு அனுமதிக்கும்.
இந்தியாவில் ஒரு மாநிலத்தில் உபரி இருந்தாலும், வேறு மாநிலத்
தில் பற்றாக்குறை இருப்பதன் காரணமாக இந்த ஆண்டு வெளி
நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் சூழ்நிலை ஏற்படாது என்று
கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மத்திய
அரசின் இந்த இறக்குமதி செய்கின்ற கொள்கையால் பல நேரங்
களில் மாநில அரசுகள் பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்கிற
தகவல்கள் வருகின்றன. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள்
சமீபத்தில் கலந்து கொண்ட, மாநில முதலமைச்சர்கள்
மாநாட்டில் கூட, குஜராத் முதலமைச்சர் அவர்கள் சொல்லி

யிருக்கிறார்கள்—எலக்ட்ரானிக் கருவிகளை இந்திய அரசு இறக்குமதி செய்வதால் நம்முடைய உள்நாட்டு வளர்ச்சிக் குன்றி விடுகிறது என்று கூறி, கண்டனம் தெரிவித்து இருக்கிறார்கள். கேரளமும் மற்ற மாநிலங்களும்கூட, கொப்பரைத்தேங்காய் இறக்குமதி செய்வதால் உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டு இருக்கிறது என்றும், சணல் இறக்குமதி செய்வதால் உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டு இருக்கிறது என்றும் கூறியிருக்கிறார்கள். கோதுமை பம்பர் கிராப் இருக்கிறபோது கூட மத்திய அரசு குவிண்டால் ஒன்றுக்கு இங்கேயிருக்கும் விவசாயிகளுக்கு 130 ரூபாய் கொடுக்கின்றபோது, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் இருந்து ரூபாய்196.60 குவிண்டாலுக்குக் கொடுத்து மத்திய அரசு இறக்குமதி செய்கிறது என்று அறிகிறோம். இந்த முறையில், மத்திய அரசின் இத்தகைய ஏற்றுமதி, இறக்குமதி கொள்கையால், நம்முடைய மாநிலத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து மத்திய அரசுக்குச் சொல்லப்பட்டுள்ளதா? இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் இருந்து வெல்லம், வெங்காயம், நிலக்கடலை ஏற்றுமதி செய்யலாம். ஆகவே, இது குறித்து மாநில சர்க்கார் மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகிறதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மத்திய சர்க்காரின் இறக்குமதி, ஏற்றுமதி கொள்கையால் ஏற்படுகின்ற சில பல நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஏற்றுமதி செய்வதோ, இறக்குமதி செய் வதோ மாநிலத்திற்கு நலன் பயப்பதாக இருக்க வேண்டும். மாநிலத்திற்கு கேடு ஏற்படாமல் இருக்க வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது அந்தந்த மாநிலங்களில் உள்ள தன்மைகள் அந்தந்த மாநிலங்களால் எடுத்து தெரிவிக்கப்படுகின்றன. அந்த வகையில் குஜராத் மாநிலம் தன்னுடைய நிலைமையை எடுத்துச் சொல்லியி க்கிறது. அப்படி இறக்குமதி செய்யப்படுவதால், தனது மாநிலத்தின் உற்பத்தி பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். கேரளமும் அதனால் எந்த வகையில் தனக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை எடுத்துச் சொல்லி அருக்கிறது. அந்த நிலைமையில்தான் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் நாம் குறிப்பிட வேண்டியிருக்கிறது. உள்நாட்டிலே உள்ள தேவைகளை நிறைவேற்றிவிட்டு, மிகுதியாக இருந்தால், அவற்றை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமாக வியாபாரபெருக்கம் ஏற்படும். நம்முடைய நாட் டுக்கும் அந்நிய செலாவணி கிடைக்கும் என்கிற நிலை வருகிற போது அப்படிப்பட்ட திட்டங்களை நாம் ஆதரிக்கிறோம். ஆனால், நம்முடைய உள்நாட்டு உற்பத்திக்கோ, வியாபாரத் திற்கோ பாதகம் ஏற்படுகின்ற சூழ்நிலையில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி இருக்குமானால் அதைத் தடுக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியிருக்கிறது. அந்த வகையில் நம்முடைய மாநிலம் மத்திய அரசிடம் எடுத்துச்சொல்லி வற்புறுத்தி வருகிறது. **ஆனால்**





முடிவு எடுக்க வேண்டியது மத்திய அரசாக இருக்கிறது. கோதுமை பற்றாக்குறை இருக்கிறது. கோதுமை தேவையைப் பூர்த்திச் செய்ய முடியாமல் இருப்பதால்தான் அந்நிய நாட்டில் இருந்து அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலை வந்தது என்று மத்திய உணவு அமைச்சர் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இப் போது நமக்கு 60,000 டன் அரவைக்குத் தரவேண்டும். பற் றாக்குறை இருப்பதன்காரணமாக, 30,000 டன்தான் கொடுத்து இருக்கிறார்கள். பற்றாக்குறை இருப்பதன்காரணமாகத்தான் அதிக விலை கொடுத்து கோதுமை இறக்குமதி செய்வதாகச் சொல்லப்படுகிறது.

## நவீன அரிசி ஆலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 586—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய நவீன அரிசி ஆலைகளை ஏற்படுத்த அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம், எனில் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) **ஆம்.**

(ஆ) நாள் ஒன்றுக்கு 100 மெட்ரிக் டன் நெல் அரவைத் திறன் கொண்ட பெரிய (gian) நவீன அரிசி அரவை ஆலை ஒன்று ஏற்படுத்துவதுபற்றி தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ஆராய்ந்து வருகிறது.

[முற்பகல் 9.10]

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர் களே, அமைச்சர் அவர்கள் அறிவித்த நவீன அரிசி ஆலைகளானது எந்த மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படும் என்பதையும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படும் நெல்லை, தனியார்களுடைய அரவை ஆலைகளுக்கு அரைப்பதற்காக கொடுக்கும்போது, அவர்கள் அதிகமாக அவுட் டேர்ன் வரவேண்டும் என்பதற்காக, நாற்றம் பிடித்த தண் ணீரில் டபிள் ஊரல் போடுவதன் காரணமாக, அதை உண்ணக் கூடிய மக்களுக்கு வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு போன்ற சில டிரபிள்கள் வருவதை அரசு அறியுமா? அதைப் போக்க தமி ழகத்தின் பல இடங்களில் அரிசி அரவை ஆலைகளை நிறுவ அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் 13 அரிசி அரவை ஆலைகள் இருக்கின்றன. திருவாரூர், அம்மாப்

பேட்டை, சுந்தரக்கோட்டை, திருநாகேஸ்வரம், மாயூரம், பட்டுக்கோட்டை, செய்யாறு, கள்ளக்குறிச்சி, அடவத்தூர், பொள்ளாச்சி, கடச்சநேந்தல், தாழையூத்து, திம்மாவரம் ஆகிய இவற்றின் அனைத்தினுடைய அரவைத் திறன் 1 இலட்சத்து 20 ஆயிரத்து 600 மெட்ரிக் டன்கள் அளவுக்கு இருக்கிறது. ஆகவே, பச்சையரிசி அரவை 30 ஆயிரம் டன்கள் அளிப்பதற்கென ஏழு அரவை ஆலைகளில் கூடுதல் அரவை இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதனையும் சேர்த்து 1 இலட்சத்து 50 ஆயிரம் டன்கள் அளவுக்குத்தான் அரவைத்திறன் இருந்து கொண்டிருக்கிறது. இதற்கும் மேலாக 3 இலட்சத்திலிருந்து 4 இலட்சம் டன் அளவுக்கு நாம் தனியாக அரவை ஆலைகளுக்குத் தரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி ஏற்படுகிறபோதுதான், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல சில பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. அவர்கள் அரைத்துத் தருவதிலே பல்வேறு சங்கடங்கள் ஏற்படுகின்றன. நாம் முகவர்களை ஏற்படுத்தியிருக்கிறோம். அவர்கள் நம்முடைய நோக்கம் நிறைவேற முடியாத அளவுக்கு சில பல சங்கடங்களை ஏற்படுத்துகிறார்கள்.

ஆகவேதான் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஒரு பெரிய நவீன ஆலையை ஏற்படுத்தி 100 டன்கள் அரைக்கிற அளவுக்கு அது வருமேயானால் நல்லதென இந்த அரவைத் திறனை உயர்த்துவதற்கு முயன்று வருகிறோம். நாமே நமக்கு வேண்டிய அரவையை செய்துகொள்ளலாம் என்ற நோக்கத்தோடு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 1982—83 ஆம் ஆண்டில் தொடங்க வேண்டும் என்ற நிலையை அரசுக்கு நுகர் பொருள் வாணிபக் கழகம் அறிவித்திருக்கிறது. அரசு அதைப்பற்றி ஆராய்ந்து வருகிறது. அந்த ஆலையை எந்த இடத்திலே வைக்கலாம் என்பது பற்றிய சில பல முறைகளை தந்திருக்கிறார்கள். அந்த இடங்களில் தண்ணீர் கிடைக்க வேண்டும், மின்சாரம் கிடைக்க வேண்டும், தொழிலாளர்கள் கிடைக்க வேண்டும், போக்குவரத்து வசதி இருக்க வேண்டும். நெல் அதன் சுற்றுப் புறத்திலே கிடைக்கிற அளவுக்கு இருக்கவேண்டும். இந்தத் தன்மைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் நாம் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இதற்கென ஒரு இடத்தை தேர்ந்தெடுப்பதற்கு அவர்கள் குறித்துக் கொடுத்திருப்பதில் ,தஞ்சை மாவட்டத்தில் சீர்காழி, தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம், புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயம், இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரை, திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம், என்று தேர்ந்தெடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவைகளில் நான் ஏற்கெனவே, சொன்னது போல தண்ணீர், மின்சாரம் தொழிலாளர்கள், போக்குவரத்து, நெல் கொள்முதல் செய்வதற்கான வசதி, ஆகியவைகளை எல்லாம் ஆராய்ந்து தக்க ஒரு இடத்தை நாம் தேர்ந்தெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.





**திரு ஆர் நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதிய நவீன அரிசி ஆலைகளை அரசு ஏற்படுத்துவதோடு, தனியார்களுக்கும் நவீன அரிசி ஆலைகளை ஏற்படுத்த வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டிருக்குமேயானால், கிட்டத்தட்ட உமியை மட்டும் நீக்கிய அந்த அரிசியை சாப்பிடுவதற்கு தோதாக இல்லை. அந்த அரிசியை யாரும் சாப்பிட மாட்டார்கள் என்ற எண்ணம் பரவலாக ஏற்பட்டு, உருளை ரப்பர்கள் போட வேண்டிய திட்டத்தை கைவிட வேண்டும் என்று அரிசி ஆலை அதிபர்கள் மனுக்கொடுத்தார்களே அந்த விவரம் என்ன ஆயிற்று என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ரப்பர் உருளைகளைத்தான் போட வேண்டும் என்று மத்திய அரசு வற்புறுத்தி வருகிறது. 2, 3 தடவைகளாக தவணைகளை நீட்டித்துக் கொடுத்துள்ளது. அந்த ரப்பர் உருளைகள் மூலமாக, அரிசி சேதாரம் அதிகமாக ஏற்படாமல் இருக்கிறது என்பதும், அரிசியின் அளவு அதிகமாக வருகிறது என்ற காரணத்தாலும்தான், இரும்பை விட ரப்பர் உருளைகளை பயன்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். தற்போது ஒரு வருட காலத்திற்கு மத்திய அரசு அனுமதி தந்திருக்கிறது. அதற்குள்ளாக அவைகளையெல்லாம் மாற்ற வேண்டும் என்று சொன்னதன் பேரில் அந்தத் தவணைகளை மத்தியஅரசு புதுப்பித்து தந்திருக்கிறது. ஒரு ஆண்டுக்குள் மாற்றிவிடுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பெறுகிறது.

**சென்னை நகரிலுள்ள ஓட்டல்களை தரம் பிரித்து விலைகளை நிர்ணயிக்கும் திட்டம்.**

*வினா எண். 587—**திரு. சி. கோபால் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் உள்ள ஓட்டல்களை தரம்பிரித்து அவைகளுக்கு ஏற்ற விலைவாசியினை நிர்ணயிக்க திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

**திரு. ந. குலசேகர பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓட்டல்களுக்கு விலைவாசிகளை தரம் பிரிப்பதை, எந்த ஓட்டல்களை எந்த அடிப்படையில் பிரிக்க அரசு முடிவு செய்யவிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாளன்று தமிழ்நாடு உணவு விடுதிகளின் அதிபர்களின் சங்கம் அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்

படையில், உணவு விடுதிகளை ஏ, பி, சி என்று 3 வகையாகப் பிரித்து அவற்றில் கொடுக்கப்படும் உணவுகளில், ஏழை எளிய நடுத்தர மக்கள் அதிகம் உண்ணும் இட்லி, காபி, தேநீர் ஆகிய உணவுப் பண்டங்களுக்கு மட்டும் சுயவிலைக் கட்டுப்பாட்டைச் செய்தார்கள். அதற்கேற்ப அரசு வெளிச் சந்தையில் விற்கிற மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய், சர்க்கரை, ரவா கோதுமை, அரிசி போன்ற பொருள்களை குறைந்த விலையில் கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள்.

நாம் கொடுத்துக் கொண்டு வந்தோம். ஆனால் தட்டுப்பாடு ஏற்பட்டதன் காரணமாக அவ்வாறு கொடுக்கப்படுவது நிறுத்தப் பட்ட உடனே மறுபடியும் விலைகளை உயர்த்தி இருக்கிறார்கள். 1—1—1982 முதல் விலைகள் ஏறி இருக்கின்றன. மீண்டும் அரசாங்கம் தங்களுக்குத் தேவையான இன்றியமையாத பொருட் களை நியாயமான விலைக்காவது தருவார்களேயானால் பண்டங்களின் விலைகளை ஒரு 5பைசா அளவுக்காவது குறைக்க முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அதுபற்றி அரசு பரிசீலித்து வருகின்றது.

திரு. இரே. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கின்ற ஹோட்டல் களின் தரங்களைப்பிரித்திருப்பதன் காரணத்தால் பண்டங்களின் விலைகள் அதற்குத் தகுந்தவாறு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதனால் ஏழை எளிய வர்கள் சாப்பிட முடியாத நிலைமை இருக்கின்றது. ஆகவே எந்தெந்த பண்டங்களுக்கு என்னென்ன விலைகள் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர்அவர் கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஏ.பி.சி. என்று மூன்று தரமாக ஹோட்டல்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது அதிகவசதி கள் உள்ளவை, நடுத்தரமானவை. மிகச்சாதாரணமானவை என்ற மூன்று வகையிலே பிரிக்கப்பட்டு அவற்றின் விலைகள் ஐந்து தந்து காசுகள் குறைவாக விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கின் றன. ஆனால் அதுபற்றிய விவரமான குறிப்புகள் என்னிடத்தில் இப்போது இல்லை. ஆனால் ஏற்கெனவே இந்த விலைக்குறிப்புக் களை இந்த அவையிலே நான் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். ஆனால் விலையினைக் குறைக்க வேண்டும் என்றால் அரசாங்கம் அவர்களுக்கு நியாயமான விலையிலேயாவது ரவை, மைதா, அரிசி போன்றவற்றை வழங்கவேண்டும் என்று சொன்னார் கள். அதன்படி வழங்கிக்கொண்டு வந்தோம். ஆனால் தற்போது கார்டுதாரர்களுக்கு வழங்குவதற்கே போதுமானதாக இல்லாமல் இருப்பதால் அவர்களுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் சப்ளை செய்யமுடியவில்லை. ஆகவேதான் விலையினை



ஏற்றிவிட்டோம் என்று சொல்கிறார்கள். ஆகவே நியாய விலைக்கு மீண்டும் பொருட்களை அவர்களுக்கு சப்ளை செய்தால் உணவுப்பண்டகங்களின் விலையினை ஒரு 5 காசு அளவுக்காவது குறைப்போம் என்று சொல்கிறார்கள். ஆகவே இவ்வாறு விலை களை நிர்ணயிப்பதற்கு ஒரு சட்டம் இயற்ற முடியுமா என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஆந்திரப்பிரதேச அரசு அப்படி ஒரு சட்டம் போட்டவுடன் அதற்கு உயர்நீதிமன்றத்திலே சென்று ஸ்டே ஆர்டர் வாங்கிவிட்டார்கள். அந்த வழக்கின்முடிவு வந்ததற்குப் பிறகு நாமும் அதுபற்றி யோசித்து முடிவு எடுக்க வேண்டும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹோட்டல்கள் தரம் பிரிக்கப் பட்டிருப்பதாகவும் அதன் அடிப்படையிலே விலை நிர்ணயிக்கப் பட்டிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஏ. பி. சி. என்று பெயர் மட்டும் இருக்கின்றதே ஒழிய உணவின் தரம் எல்லாம் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றது. ஆகவே விலைகளை வித்தியாசப்படுத்தி இருப்பதன் காரணத்தால் மக்கள் பாதிக்கப்படுவதை அரசாங்கம் அறியுமா? ஆகவே அதுபற்றியா வது அடிக்கடி சென்று செக் பண்ணி நல்ல முறையிலே உணவு விநியோகம் செய்வதற்குரிய முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு விடுதி அதிபர்களின் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையிலே தான் இந்த விலைகள் நிர்ணயிக்கப்பட்டன. ஆகவே அவர்களின் சங்கத்தினர்தான் இவ் வாறு தரம் பிரித்து விலைகளையும் ஓரளவுக்கு வைக்கவேண்டும் என்ற வகையிலே நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் இதனை அரசாங்கமே கட்டுப்பாடு செய்து விதிமுறைகளை ஏற்படுத்த வேண்டும் என்றால் அதற்கு சட்டம்தான் கொண்டுவரவேண்டும். ஆனால் அப்படி ஒரு சட்டம் ஆந்திரா மாநிலத்திலே கொண்டு வரப்பட்டபோது அதற்கு உச்சநீதிமன்றத்திலே ஸ்டே வாங்கி விட்டார்கள். ஆகவே அதுபற்றிய முடிவு தெரிந்ததற்குப் பிறகு அதனுடைய விவரங்களைத் தமிழக அரசுக்குத் தெரிவிக்குமாறு ஆந்திரா அரசுக்கு எழுதி இருக்கிறோம்.

திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிர்ணயித்துள்ள விலையினை மீறுகிறவர்களைக் கண்டுபிடிப்பதற்கும், அவர்களுக்குத் தண்டனை வழங்கவும் அரசு ஏதாவது முறைகளைப் புதிதாகக் கையாளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு விலைகளை எல்லாம் நிர்ணயித்து அதன்படி கண்டிப்பாக நடவடிக்கைகளை எல்லாம்

[1982 மார்ச் 22

எடுக்க வேண்டும் என்றால் அதற்குச் சட்டம்தான் கொண்டுவர வேண்டும். அப்போது உணவுப் பொருளின் எடை எப்படி இருக்க வேண்டும். விலை எப்படி இருக்க வேண்டும். தன்மை எப்படி இருக்கவேண்டும் என்று இவைகளைஎல்லாம் நிர்ணயிக்கவேண்டும். ஆகவே அதிலே பல்வேறு சங்கடங்கள் ஏற்படும் எனவே ஒரு ஒத்துழைப்பின் அடிப்படையிலே இது சிறப்பான முறையிலே நடைபெறுமேயானால் இருசாராருக்கும் சங்கடம் ஏற்படாது என்பதற்காகத்தான் இதுபற்றி அவர்களுடன் கலந்து பேசி எந்த அளவுக்கு நல்ல முறைகளை நடைமுறைப்படுத்தலாம் என்கிற வகையிலே அதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். ஆனால் தமிழ்நாட்டிலுள்ள உணவு விடுதிகளுக்கான உணவுப் பொருள்விலை நிர்ணயம் செய்வதைப் பொறுத்த வரையிலே சட்டம் கொண்டு வருவது பற்றி அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கின்றது.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹோட்டல் உணவுப்பொருளின் மூலமாகத்தான் அமிபியா என்ற வயிற்று வலி வருவதாகச் சொல்கிறார்களே, அந்த நிலைமையைப் போக்க ஹோட்டல்களைத் தரம் பிரிக்கும் போது அவற்றின் சமையல் அறை மற்றும் சர்வர்களின் சுத்தம், சுகாதாரம் போன்றவற்றை கருத்தில் கொள்ளப்படுமா? மேலும் பழையபடியே ஜனதா சாப்பாடு ஒரு ரூபாய்க்குப் போடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9·20]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஹோட்டல்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும்போது அவைகள் சுத்தமாக இருக்கவேண்டும் என்ற விதிமுறைகள் எல்லாம் இருக்கின்றன. பண்டங்களின்விலைகள் பொறுத்த வரையில் விலைகள் நிர்ணயிப்பது பற்றித்தான் கேள்வி. ஜனதா உணவு என்று சொல்லும்போது அது ஓரளவு ஒரு ரூபாய்க்கு கட்டுபடியாகக் கூடியகாலத்தில் வைத்திருந்தார்கள் இப்போது ஜனதா உணவு ரூ. 1.25, ரூ. 1.50 ரூ. 1.75 என்று ஏறிப்போயிருக்கிறது. விலைவாசியின் அடிப்படையில்தான் அதை நிர்ணயிக்க முடியும் என்று அதிபர்கள் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண்கள் 588, 589, 590, 591 மாண்புமிகு கல்வி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

வினா எண்கள் 592, 593, 594 ஆகியவை பின்னால் எடுத்துக் கொள்ளப்பெறும்.



982 மார்ச் 22]

**குடிநீர் வடிகால் வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட வகை (Ca egory) முறை.**

*வினா எண் 595—**திரு. ரா. கிருஷ்ணன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குடிநீர் வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட (Category) முறையானது அல்ல என்பதை அரசு அறியுமா ?

(ஆ) அவற்றை மாற்றி முறையாக தெரிந்தெடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(ஆ) விஞ்ஞான ரீதியான ஆய்விற்குப் பின்னரே குடியிருப்புகளின் வகைகள் பிரிக்கப்பட்டுள்ளன. எனினும் மாவட்டங்களிலுள்ள குடியிருப்புகள் வகையில் மாற்றம் அவசியம் ஏற்பட்டால் அங்குள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்களைக் கலந்தாலோசித்து மாற்றிக் கொள்ளலாமென்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. ரா. கிருஷ்ணன் :** இந்த காட்டிகரியாக பிரிக்கப்பட்ட இடங்கள் குறித்து ஏற்கனவே ஒரு லிஸ்ட்கொடுத்து அதன் அடிப்படையில் எது எது வரும் என்று பிரசுரிக்கப்பட்டுள்ளதால், நல்ல குடிநீர் கிடைக்காத கிராமங்கள் சில 5 ஆவது, 6 ஆவது நம்பரில் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுகுறித்து குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தொடர்ச்சியாக ஆட்சேபணை மனுக்கள் வந்திருப்பது அரசுக்கு தெரியுமா? ஆக்வே அதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்து அந்தந்த தொகுதிகளிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனையுடன் அந்த கிராமங்களை எந்தெந்த காட்டிகரியில் கொண்டுவரலாம் என்பது பற்றி பரிசீலிக்க விசேஷ ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** உறுப்பினர்களின் ஆலோசனையைப் பெறமுடியாது முறையீடுகள்தான் பெற முடியும். உறுப்பினர்கள் அதில் டெக்னிக்கல் எக்ஸ்பர்ட்ஸ் அல்ல. அவர்கள் கொடுக்கும் முறையீடுகளை வாரியப் பொறியாளர்களை கலந்தாலோசித்து அந்தக் குடியிருப்புகளை மாற்றிக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. ஏதாவது ஊர்கள் விட்டுப்போய்விட்டன என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்வார்களானால் அதைப் பரிசீலனை செய்து பட்டியலில் சேர்த்துக் கொள்ளக்கூடிய அதிகாரம் மாவட்ட ஆட்சியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. தி. அன்பழகன் : இந்த காட்டிகரி முறையைப் பயன் படுத்துவதால் நீண்ட காலதாமதமாகிறது. ஆகவே வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக ஏற்படுகிறது. எனவே இந்தமுறையை நீக்கி கிராமப்பகுதிகளுக்கு முன் உரிமை தந்து இத்திட்டத்தைச்செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த காட்டிகரி முறை என்பது பெரிய அதிசயமானதல்ல. எந்தெந்தக் கிராமங் கள் எந்த எந்த வகையில் வருகிறது. தண்ணீர் எங்கே கிடைக் கிறது. எவ்வளவு காலத்திற்கு இருக்கிறது. எவ்வளவு தூரத்தில் இருக்கிறது. யாருக்குச் சொந்தமானது என்பது பற்றி பிரித்து செய்வது, எனவே அதை அடிப்படையாக வைத்து இதைச் செய்து வருகிறோம். திரு. சொரணம் அவர்கள் சொன்னது போல் சங்கடங்கள் ஏதாவது இருந்தால், அதைப்பற்றி முறை யிட்டால் அதைப்பற்றி பரிசீலனை செய்து ஆவன செய்ய இந்த அரசு எப்போதும் தயாராகயிருக்கிறது.

திரு. இ. கா. நல்லப்பன் இந்த காட்டிகரி முறையில் பிரிக்கப் பட்டிருந்தும் குடிநீர் இருக்கிறது. ஆனால் அது குடிக்க முடியாத அளவிற்கு பயனற்றதாக இருக்கிறது என்று சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு விண்ணப்பித்தால் அதன் அடிப் படையில் ஏதாவது மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : யார் விண்ணப் பித்தாலும் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு கலந்தா லோசித்து மாற்றலாம் என்று மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சின்னசாமி : தன்னிறைவுத் திட்டம் வருகிற ஒன்றியங்களில் ஆவது அதைப் பொறுத்தமட்டில் உடனடியாகச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மூன்று வகை வரைதான் இப்பொழுது செய்வதாக திட்டமிட்டு வேலை செய்து வந்தோம். தன்னிறைவுத் திட்டத்தின் ஐந்தாவது வகை வரை சேர்த்துக் கொள்ள அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்கள் கலெக்டர் அவர்களிடம் சொல்லிச் செய்யலாம் என்று சொன் னார்கள். குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் விளாம் பாக்கத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை என்று கலெக்டர் சொன் னதற்குப் பிறகும் கூட குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கவனிக்காமல் நேற்று உண்ணாவிரதம் இருக்கக் கூடிய அளவிற்கு கலெக்டர் ஆபீஸ் முன் சென்றிருக்கிறார்கள். எனவே அரசு



வருங்காலத்திலாவது இப்படி கவனிக்கப்படாத இடங்களை உடனடியாகக் கவனிக்க ஆவன செய்யப்படுமா ? பலயிடங்களில் ஆதி திராவிடர் குடியிருக்கக்கூடிய இடங்களில் இப்படிப்பட்ட நிலை இருக்கும் இடங்களில் அதைப்போக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வர் அவர்களே, கலெக்டர் அதைச் செய்வார் என்று நான் சொல்லவில்லை. நான் சொன்னதை மீண்டும் படிக்கிறேன்.. குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர் அவர்களிடம் கலந்தா லோசித்து, 'தே ஆர் டெக்னிகல் எக்ஸ்பர்ட்ஸ்', அந்தக் குடியிருப்புகளை மாற்றிக் கொள்ளும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. உதார ணமாக, முதல் பிரிவை எடுத்துக் கொள்வோம். குடியிருப்பு களுக்கு நீர் மூலங்கள் இல்லாத குடியிருப்புகள். இரண்டாவது, குடிக்கத் தகுதியற்ற நீர் மூலங்கள் இருக்கக் கூடிய குடியிருப்புகள். ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இதற்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய தகுதி உள்ளதா, இல்லையா என்பதைப் பற்றி பரிசீலனை செய்ய அவரும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கலந்தாலோ சித்து முடிவெடுப்பார்கள். இதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். தங்களிடம் மக்கள் சொல்வதையும் சொல்லலாம். ஆனால், அதற்கான முடிவுகளை இவர்கள் இருவரும் சேர்ந்து எடுப்பார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சுகாதாரப் பணிகள்.

*வினா எண் 596—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் சுகாதாரப் பணி களுக்காக உலக வங்கியிடமிருந்து கடன் பெறப்படுகிறதா ?

(ஆ) அந்தக் கடனுக்கு செலுத்தப்படும் வட்டி விகிதம் என்ன ?

(இ) கடன் வழங்கும் உலக வங்கி விதித்துள்ள வேறு நிபந் தனைகள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) ஆம். உலக வங்கியின் நிதி உதவி பெரும்பாலும் வட்டி இல்லாக் கடனாக அளிக்கப்படுகிறது. அந்தக் கடன் உதவிக்கு அவர்கள் நிர்வாகச் செலவிற்காக 3/4 சதவீதம் மத்திய அரசிடமிருந்து

பெறுகிறார்கள். மத்திய அரசால் மாநில அரசுக்கு கடன் வடி விலும், மானிய வடிவிலும் மத்திய அரசின் கூடுதல் உதவியாக உலக வங்கியின் நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்தக் கடன் தொகைக்கு 5½ சதவிகிதம் வட்டி செலுத்த வேண்டும். மத்திய அரசு உலக வங்கி நிதி உதவி வாங்கி எல்லா மாநிலங்களுக்கும் ஒரே மாதிரியாகத் தரவேண்டும் அல்லது ஒரே மாதிரியாக கவ னிக்க வேண்டும் என்பதற்காக 5½ சதவிகிதம் என்று பொதுவாகப் போட்டு எல்லா மாநிலங்களுக்கும் தருகிற முறையைத்தான், மத்திய அரசு கையாண்டு வருகிறது. உலக வங்கிக்கு இம்மாநில அரசு நேரடியாக எந்தவித வட்டியும் செலுத்துவது இல்லை.

(இ) சுகாதாரப் பணிகளைப் பொறுத்தவரையில் உலக வங்கியின் நிபந்தனைகள் ஏதும் இல்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, சுகாதாரப் பணி களுக்காகத் தான் இந்தப் பணத்தை உலக வங்கியிடம் கடன் வாங்கி இது நடத்தப்படுகின்றது என்பது ஒரு பக்கம் இருந்தாலும், இந்த சுகாதாரப் பணிகளை குடிசை மாற்று வாரியத்தால் கட்டப் பட்ட பகுதிகளில் சரியான முறையில் நடைபெறாத பெருங்குறை இருந்து வருகிறது. மாநகராட்சி, நகராட்சிக்கு உட்பட்ட பகுதி களில் அப்படிப்பட்ட குடிசைப் பகுதி மாற்று வாரியக் கட்டி டத்தை, வீடுகளை கட்டியுள்ள இடங்களில் அந்த முனிசிபாலி டிக்கே, மாநகராட்சிக்கே அந்தச் சுகாதாரப் பணிகளைக் கவனிக் கும்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்படியானால், இவைகளை கவனிப்பதற்கான ஆட்கள் அவர்கள் கையில் இருப்பதாகச் சொல் லுகிறார்கள். இதைச் செய்வதற்கு அரசு முன்வந்து ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் பணிகள் மிகவும் சிறப்பாக நடைபெறுவதாகத்தான் தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, வேறு தகவல் கிடைத்திருந்தால், எங்கெங்கே அப்படிச் சிறப்பாக நடை பெறவில்லை என்கிற தகவலைக் கொடுப்பார்களானால், அதை வைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை யைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

## சென்னை பெருநகர் திட்டம்.

*வினா எண் 597—திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை சுற்றி அமைக்கப்பட இருந்த பெருநகர திட்டம் செயல்படுத்தப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை நகர்கள் அமைக்க அரசு கருதி யிருக்கிறது ?



மாண்புமிகு திரு. என். இராகவானந்தம் (அ) ஆம்.

(ஆ) முழுமை திட்டத்தின்படி ஆறு புறநகர் திட்டங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன. அவைகள் முறையே :—

(1) மணலி,

(2) மீஞ்சூர்,

(3) ஆவடி,

(4) அம்பத்தூர்,

(5) ஆலந்தூர் மற்றும்

(6) பல்லாவரம்.

தற்பொழுது மணலி புறநகர் மட்டுமே அரசு சார்ந்த முதலீட் டுடன் அமைக்கப்பட்டு வருகிறது. மற்ற ஐந்து புறநகர் திட்டப் பகுதிகளில் தனிப்பட்டவர்கள் முதலீட்டுடன் அமைக்கப்படும் வளர்ச்சிப் பணிகள் உரிய திட்ட விதிகளின்படி கட்டுப்படுத்தப் பட்டு, சீராக அமையும் வகையில் உருவாக்கப்படுகின்றன.

## சென்னை நகரில் தனியார்களால் கட்டப்படும் பலமாடிக் கட்டிடங்களைத் தடை செய்யும் திட்டம்.

*வினா எண். 598—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் பல மாடிக் கட்டிடங்களை கட்டும் தனியார்களை தடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) சென்னை பெருநகர்க்குரிய முழுமைத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை, 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண். 2395-ன் படியும், வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித்துறை, அரசு ஆணை எண். 1764, தேதி: 6—9—1979-ன் படியும் கீழ்க்குறிப்பிட்டுள்ள இடங்களில்தான் பல மாடிக்கட்டிடங்கள் 15 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்ட அனுமதிக்கப்பட்டது.

எலியட்ஸ் சாலையின் வடக்கு மற்றும் கிழக்கு பக்கம், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, மைக் நிக்கோல்ஸ் சாலை, மில்லர்ஸ் சாலை, குக்ஸ் சாலை, அம்பத்தூர்—ராயபுரம் இரயில் பாதை மற்றும் தெற்குக் கடற்கரைப் பகுதியில் மேற்குப்பக்கம். விரிவான பரிசீலனைக்குப் பிறகு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்று மேலும் பல இடங்களில் பல மாடிக் கட்டிடங்கள் அனுமதி அளிக்கும் வகையில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அரசின் ஒப்புதலுக்காக செயற் குறிப்பு அனுப்பியது. இதனை நன்கு பரிசீலனை செய்து, அரசு தனது 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 21 ஆம் நாளிட்ட ஆணை எண். 345-ல் மேலும் 16 பகுதிகளில் பல மாடிக் கட்டிடங்கள் கட்ட அனுமதிக்க ஒப்புதல் அளித்தது. ஆனால் மேற்சொன்ன ஆணைக்கு, பொது மக்களிடமிருந்து மற்றும் பத்திரிகைகளிலிருந்தும் ஆட்சேபனைகள் எழுந்தாலும், இது சம்பந்தமாக அரசுக்கு பல்வேறு இடங்களிலிருந்து வந்த கோரிக்கைகளை பரிசீலிக்க வேண்டியுள்ளதாலும் மேற்சொன்ன ஆணைகளின் பேரில் நடவடிக்கை எடுப்பதை தடை செய்துள்ளது. இதன்படி அரசின் மறு ஆணை வரும் வரை, சென்னைப் பெருநகர் பகுதியில் பல மாடிக்கட்டிடங்கள் கட்ட அனுமதி கொடுக்கப்படமாட்டாது. இப்பொருள் பற்றி அரசு, தீவிர பரிசீலனை செய்து வருகிறது.

[முற்பகல் 9-30.]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, அரசினுடைய பரிசீலனையில் அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறார்கள். எப்போது அது முடிவு அடைந்து அறிவிக்கப்படும் ? எத்தனை பேர்கள் விண்ணப்பித்து இருக்கிறார்கள் ? எத்தனை அனுமதிக்கப்படாமல் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, அதைப்பற்றிய முடிவு விரைவிலே எடுக்கப்படும். அதற்காக கேபினட் சப் கமிட்டி நியமிக்கப்பட்டு, அது இரண்டு மூன்று முறைகள் உட்கார்ந்து பரிசீலனை செய்திருக்கிறது. எத்தனை வந்திருக்கிறது, எத்தனை நிராகரிக்கப்பட்டு இருக்கிறது என்ற தகவல் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இப்படிப் பல மாடிக் கட்டங்கள் கட்டப்படுவதைத் தடை செய்கிற எண்ணம் அரசுக்கு எப்போது வந்தது ? ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டதற்குக் காரணம் என்ன ? இப்போது உடனடியாகத் தடை செய்வதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாலே இருந்ததைத் தொடர்ந்தோம். இடையிலே பிரச்சினைகள் எழுந்தன. சந்திக்கிறோம்.





**திரு. கோவைத் தம்பி :** தலைவர் அவர்களே, இந்த பல மாடிக் கட்டடங்களை எழுப்புகிறவர்களில் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஒரு வகையில் நம் மாநிலத்திலே முதலீடு செய்வதற்கு அது ஏதுவாக இருந்தாலும் இனியொரு வகையில் வளர்ந்து வருகின்ற மாநகராட்சி என்ற அடிப்படையில் தேவைக்கு ஏற்றபடி வசதிகளைச் செய்து கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலைமையை அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு, இதுவரையில் கட்டப்பட்டிருக்கின்ற பல மாடிக்கட்டடங்களானாலும் புதிதாகக் கட்டப்படுகின்ற பல மாடிக் கட்டடங்களானாலும் மறுபரிசீலனை செய்து அந்தக் கட்டடங்களின் மதிப்பைக் கருத்தில் கொண்டு புதிய வரிமுறையை உருவாக்கி அவைகளுக்கு அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, இது ஒரு டிக்ளிஷ் பிராப்ளம். அதைப்பற்றிய அவசரமாக முடிவு எடுத்துவிட முடியாது. தீர ஆலோசனை செய்ததற்குப் பிறகுதான் எடுக்க முடியும். அதற்காக கேபினட் சப் கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அது மிக ஆழமாக அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. ப. நெடுமாறன் :** அவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரிலே பல மாடிக் கட்டடங்கள் கட்டுவதைத் தடுப்பதற்கு இந்த அரசு போட்ட அரசு ஆணையின் பேரில் தேனாம்பேட்டையிலே பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கு ஒரு நினைவாலயம் எழுப்புவது என்று முடிவு செய்து அந்த வேலைக்கு அவர்கள் விண்ணப்பித்தபோது அதற்கும் அரசு தடை விதித்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா ? அந்தத் தடையிலிருந்து விசேஷமான விதிவிலக்குக் கொடுத்து பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் நினைவாலயத்தை எழுப்புவதற்கு அரசு உத்திரவிடுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை. மிகவும் மரியாதையோடும் அக்கறையோடும் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் தகுந்த பதில் சொல்கிறேன்.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினை. வெளி மாநிலத்திலிருந்து பல வசதி படைத்தவர்கள் தமிழகத்தை படையெடுப்பதைப் போல் படையெடுத்து அதிகமாகப் பணம் கொடுத்து — நாம் வாங்காவிட்டாலும், நம்மால் வாங்கமுடியாது—வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பல மாடிக் கட்டடங்களைக் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். சென்னை நகரத்திலே நடைபெறுவது எல்லாம் வாங்கப்படுகிற வீடுகள் எல்லாம் பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களிலிருந்து

வருகின்ற முதலாளிகள்தான். ஆகவே வெளி மாநிலத்தவர்கள் இந்த மாநிலத்திலே வீடு வாங்குவதற்குத் தடை எதுவும் பிறப்பிக் கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வெளி மாநிலத்திலே இருக்கின்றவர்கள் வேறு மாநிலத் திலே சென்று இடங்களை வாங்கக்கூடாது என்று சட்டம் இல்லை. வாங்கலாம் என்ற உரிமை இருக்கிறது. காஷ்மீரத் திலே மட்டும்தான் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. ஆகவே, இதை இந்த அரசு செய்வது இயலாததாகும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

முசிறி, பேரூர் எடையப்பட்டி ஏரி.

*வினா எண். 599—திரு. திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி, பேரூர், எடையப்பட்டி ஏரி எப்போது தேக்கப் பட்டது ?

(ஆ) அப்போது நீர்ப்பாசன ஆயக்கட்டு நிலங்களாக எந் தப் பகுதியை சார்ந்த நிலங்கள் இருந்தன ? அல்லது நிர்ணயிக் கப்பட்டது ?

(இ) இப்போது ஆயக்கட்டுகளை மாற்றி அமைத்து முறை கேடுகள் நடந்துள்ளது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) முசிறி, பேரூர், எடையப்பட்டி ஏரி 1971 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

(ஆ) பேரூர் கிராம எல்லையில் 59 ஏக்கர் நிலங்கள் இதன் ஆயக் கட்டாக முதலில் நிர்ணயிக்கப்பட்டது.

(இ) இந்த ஏரி எடையப்பட்டி கிராம மக்களின் வேண்டு கோளின்படி அப்பகுதி நிலங்கள் பயன்பெறும் வகையில் திட்டம் அனுமதிக்கப்பட்டதாகும். இந்நிலங்கள் ஏரி அமைக்கப்படும் முன்னரே ஓடை மூலம் நேரிடை பாசனம் பெற்றவையாகும். எடையப்பட்டி மக்களின் வேண்டுகோளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பொதுப்பணித்துறையினரால் ஸ்தல பார்வையிடப்பட்டும், ஆயக்கட்டுதாரர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்தும் அவர்களது கோரிக்கைகள் நன்கு பரிசீலிக்கப்பட்டும் இந்த ஏரியின் ஆயக்கட்டு மாற்றியமைக்கப்பட்டது. ஆயக் கட்டை மாற்றி அமைத்ததில் யாதொரு முறைகேடும் நடக்க வில்லை.



திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர் களே, பேரூர் வட்டாரத்து மக்கள் 1979 வரையில் சுமார் மூவாயிரம் ஆதி திராவிட மக்கள் இந்த ஆயக்கட்டு மூலம் பயன்பெற்று வந்தார்கள். தனியாரின் வேண்டுகோளுக்கு இணங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவு மாற்றி யமைக்கப்பட்டிருக்கிறதா ? 33 ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டு அந்த ஆயக்கட்டை மாற்றியமைக்க கலெக்டரிடம் உத்தரவு பெற்றிருக்கிறார் என்பது உண்மையா ? இதை தடுப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே விடையிலேயே நான் சொல்லியிருக்கிறேன். அந்த பகுதியிலே இருக்கிற மக்களுடைய வேண்டுகோளை பொறுத்து தான் ஆயக்கட்டை மாற்றியமைத் திருக்கிறார்கள். மேலும் இந்த ஏரி இப்போது 100 ஏக்கருக்கும் குறைவான அளவிலே பாசனம் கொடுக்கக்கூடிய வகையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது முசிறி ஊராட்சி ஒன்றி யத்தின் பராமரிப்பிலே இது விடப்பட்டிருக்கிறது. அந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இது சம்பந்தமாக திரும்பவும் அரசு ஒரு பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லி 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ஆம் நாளில் ஒரு தடை வேண்டியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு பிறப்பித்த மேற்படி உத்தரவு களுக்குத் தடை விதித்து அரசு உத்தரவு இட்டுள்ளது. எனவே இப்போது நாம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம்.

மணிமுத்தாறு அணை கட்டியதற்கான செலவு.

*வினா எண். 600—திரு. எஸ். என். இராமசாமி : மாண்பு மிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணிமுத்தாறு அணை கட்டியதற்கு ஆன செலவு எவ் வளவு ?

(ஆ) இதுவரை நெல்லை மாவட்டத்தில் 1389 பசலி வரை விவசாயிகளிடத்தில் செஸ் சேர்த்து வாங்கிய வரித் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ரூ. 505 இலட்சம்

(ஆ) ரூ. 48·53 இலட்சம்.

[1982 மார்ச் 22

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலத்திலே மணிமுத்தாறு அணை கட்டுவதற்கு விவசாயிகளிடம் பணம் வசூல் செய்து குறிப்பிட்ட வருஷத்திலே அந்த அணை கட்டிய செலவுகளை தீர்வை மூலம் வசூல் செய்து கொள்ள வேண்டுமென்று அரசு முடிவு செய்து கொண்டது. ஆனால் இன்னும் நெல்லை மாவட்டத்தில் விவசாயிகளிடம் மணிமுத்தாறு அணை கட்டியதற்கு செஸ் வசூலிக்கப்படுவதை உடனடியாக அரசு நிறுத்துவதற்கு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 505 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிற இந்த அணைக்கு, செஸ் மூலமாக கிடைத்திருப்பது 48.53 இலட்சம் ரூபாய்தான். 10-லே ஒரு பங்கு கூட இன்னும் வசூலிக்கப்படவில்லை. ஆகவே இந்தக் கேள்விக்கு இடமில்லை.

சென்னையில் ஹஜ் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண் 601—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் ஹஜ் யாத்திரியர்கட்கு பயன்பெறும் வகையில் பெரியமேடு பகுதியில் ஹஜ் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) ஹஜ் விடுதி கட்டட வேலைகள் விரைவில் துவங்கப்பட இருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் எவ்வளவு மூலதனத்தில் கட்டப்படும் ? பெட்ரோல் வளம் கொழிக்கும் சவுதி அரேபியாவில் இருக்கிற மெக்காவிற்கு நமது ஹஜ் யாத்ரீகர்கள் பெருமளவில் செல்வதால், இந்த விடுதியை கட்டுவதற்கு சவுதி அரேபியா அரசிடம் நமது அரசு உதவி கேட்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்கட்டிடத்தின் உத்தேச மதிப்பீடு 70 இலட்சம் ரூபாய் ஆகும். அது இங்கேயுள்ளவர்களாலேயே கட்டி முடிக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. பிற நாட்டினுடைய உதவி இது விஷயமாக எதிர்பார்ப்பதற்கு இல்லை.



1982 மார்ச் 22]

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஹஜ் யாத்திரை சென்று ஹஜ் பட்டம் பெற்றவர்கள் அதிக அளவிலே இருக்கிற காரணத்தாலே, இதற்கு தேர்வு செய்யப்படுவதில் கடுமையான இஸ்லாமிய நிபந்தனைகள் பின்பற்ற அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எந்த யாத்ரீகர்களை குறிப்பிடுகிறார்கள் என்று புரியவில்லை. அதை தான் யோசித்துக் கொண்டு இருந்தேன். பொதுவாக 2 ஆயிரம், 3 ஆயிரம் பேர்கள் விண்ணப்பித்தால் 700, 800 என்ற அளவுக்குத் தான் அனுப்புகிறோம். அதிலே உரிய விதிமுறைகள் எல்லாம் கடைபிடிக்கப்படுகின்றன.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதி கட்டுவதற்கு எவ்வளவு இடம் 'அக்வீயர்' செய்யப்பட்டுள்ளது ? அந்த இடம் போதுமான அளவிற்கு 'அக்வீயர்' செய்யப்பட்டுள்ளதா ? நகரின் மத்திய பகுதியிலே இருக்கிற தீவு திடல் போன்ற இடத்திலே கட்டுவதற்கு மத்திய அரசினுடைய அனுமதி பெற்று அரசு கட்ட முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடம் கட்ட 8½ கிரவுண்ட் நிலத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆணையின் பேரிலே 'ஹஜ் இல்லம்' கட்டுவதற்காக அரசே, இனாமாக வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 700 அல்லது 800 பேர்கள் என்று அறிவித்தார்கள். தமிழகம் முழுவதும் அநேகர் ஹஜ் யாத்திரை மேற்கொள்ள ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே, இந்த ஆண்டாவது குறைந்தது 1,500 பேர் ஹஜ் பிரயாணம் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ? மேலும், இந்த ஆண்டு ஹஜ் செல்லக்கூடியவர்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கக்கூடிய ஹஜ்காரர்களுக்கு அதிக இடம் அரசு ஒதுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இது அனைத்திந்திய அளவிலே ஒவ்வொரு மாநிலத்திற்கும் கோட்டா ஒதுக்கப்பட்டு அந்த எண்ணிக்கை அடிப்படையிலே தான் நாம் அனுப்புகிறோம். எனவே, அதிகமான பேர் ஆர்வம் காட்டி விண்ணப்பித்தாலும், அந்த விதிமுறைகளுடைய அடிப்

படையிலேதான் நாம் எண்ணிக்கையை நிர்ணயிக்க வேண்டியவர் களாக இருக்கிறோம். மேலும் மெக்காவிலும், மதினாவிலும் தங்கக்கூடிய பயணிகளுடைய இட நிலைமையைப் பொறுத்து, நாம் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. நம் இடமே அங்கேயிருப் பதைத் திரும்பவும் பெற்று இங்கே இருக்கக்கூடிய யாத்திரிகர்கள் அங்கே போய் இன்னும் சிரமம் இல்லாமல் அந்தப் பயணத்தைச் சிறந்த முறையில் முடிக்க வேண்டுமென்பதற்காக நம்முடைய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியகுளம் கோட்டத்தில் பாசன வசதி செய்து தரும் திட்டம்.

*வினா எண் 602—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் கோட்டத்தில் வைரவன் அணையிலிருந்து பெரியகுளம் வரை மேற்கு மலை அடிவாரத்தில் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் பதினெட்டாம் கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) ஆய்வில் உள்ளது.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர் களுக்கான சம்பள விடுப்பு வசதி.

*வினா எண் 603—திரு. எஸ்.டி. உகம் சந்த் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள தொழிலாளர்களால் மற்ற ஆலைகளில் வழங்கப்படுவது போன்று தங்களுக்கும் ஒரு மாத சம்பள விடுப்பு தேவை என்னும் கோரிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) எல்லா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலும் ஒரே மாதிரியான விடுப்புச் சலுகைகள் வழங்கப்படுவது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது.



திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் அலுவலகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குச் சம்பளத் துடன் 30 நாட்கள் விடுப்பு விடப்படுகிறது. அதே நேரத்தில், பேக்டரியிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு 15 நாட்கள் தான் விடுப்பு விடப்படுகிறது. அதை மாற்றி பின் தேதியிட்டு அவர்களுக்கு இந்தச் சம்பள விடுப்பு விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் ஆலையில் மட்டும் அல்ல, மற்ற கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் இன்னும் இருக்கிற பொதுத் துறை நிறுவனங்களிலும் இருக்கிற பணியாளர்களுடைய விடுமுறை நாட்கள், மற்ற சலுகைகள் குறித்து, தலைமைச் செயலகத்திலே உள்ள அரசுத் துறைச் செயலாளர்கள் மட்டத்திலே பேசப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு துறையிலே இருந்தும், பொதுத் துறை, கூட்டுறவுத் துறை நிறுவனங்களிலே, அலுவலகங் களிலே பணியாற்றுபவர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள், விடுமுறை நாட்கள் பற்றிய அனைத்து விவரங்களை யும் சேகரித்து நிதித் துறைக்கு அனுப்பும்படி சொல்லப்பட்டிருக் கிறது. அதற்குப் பின்னாலே தக்க முடிவுகள் மேற்கொள்ளப் படும்.

EXPORTS OF THE PRODUCTS OF TAMIL NADU CERAMICS LTD.

*Q. No. 604—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Tamil Nadu Ceramics Ltd., has been exporting its products (1) Outside the state; and (2) Outside India; and

(b) If so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) வெளி மாநிலங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அனுப்பப் படும் உற்பத்திப் பொருட்களின் உத்தேச மதிப்பு :

| | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| பீங்கான் சாமான்கள் .. .. .. | 6.00 |
| துப்புரவு சாமான்கள் .. .. .. | 5.00 |
| உப்பு மெருகிட்ட கற்குழாய்கள் .. .. | 1.50 |
| பீங்கான் ஜாடிகள் .. .. .. | 4.50 |
| மொத்தம் .. | 17·00 |

பொதுவாக வெளிநாடுகளுக்குப் பீங்கான் உற்பத்திப் பொருட்கள் அனுப்பப்படுவதில்லை, என்றாலும் சென்ற ஆண்டு ஸ்ரீலங்காவிற்கு (1980–81) ரூ. 1·10 இலட்சம் பெறுமான துப்புரவு சாமான்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் வாழக்கூடிய கைவினைஞர்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய இந்தத் தொழில் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய மண்பாண்டப் பொருள்களை, வெளிநாடுகளில் அதிக அளவு விற்பனை செய்வதற்காக ஏஜென்ஸி முறை ஏற்பாடு செய்யக்கூடிய செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன், ஸ்ரீலங்காவிற்கு மட்டும் சென்ற ஆண்டு 1,10,000 ரூபாய் பெறுமான துப்புரவு சாமான்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. மற்ற மாநிலங்களிலே ஏஜென்ஸி மூலம் வியாபாரம் நடக்கிறது. வெளிநாடுகளில், மற்ற நாடுகளிலே தேவை இருப்பதாக, டிமாண்ட் இருப்பதாக அரசுக்குத் தெரிய வந்தால் அதற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களில் செயல்பட்டு வரும் நிர்வாகிகள்.

*வினா எண் 592—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் பெரும்பான்மையானவைகளில் சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய கடன்களைச் செலுத்த தவறியவர்கள் (defaulters) சங்க நிர்வாகிகளாகச் செயல்பட்டு வருகிறார்கள் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவர்களை நீக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய கடன்களைச் செலுத்தக் தவறிய சங்க நிர்வாகிகள் மீது தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 28 மற்றும் விதி 40-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் அந்தச் சங்கத்தில் தலைவராக இருக்கின்றவர்கள், அந்தச் சங்கத்திலே நிர்வாகிகளாக இருக்கின்றவர்கள், அவர்கள் பட்ட கடனைச் செலுத்தாமல் இருப்பதுடன், அந்தக் கடன்



வசூலிலும் சுணக்கம் காண்பிக்கிறார்கள். இவர்கள் மீது மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல் கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றாலும்கூட, ஆங்காங்கு இருக்கின்ற மாவட்ட அதிகாரிகள் அங்கே தனி அதிகாரிகளைப் போடுவது சிரமம் என்கின்ற அடிப்படையிலே பதவியில் நீடிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். ஆகவே, தமிழக அரசு உடனே வற்புறுத்தி மாவட்ட வாரியாக இப்படிக் கடன்கள் தவணை தவறியும் செலுத்தப்படாமல் இருக்கும் விவரங்களை அறிந்து அப்படிக் கடன்களைச் செலுத்தத் தவறியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர்வைத் தலைவரவர்களே, ஏற்கெனவே அரசு இதில் கடும் நடவடிக்கையெடுத்து வருகிறது. மாவட்டத்திலேயிருக்கின்ற துறையின் பொறுப்பாளர்கள் அப்படிச் சலுகை யாருக்கும் காட்டவில்லை. ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தில் 4,724 விவசாயக் கூட்டுறவு சேவை சங்கங்கள் இருக்கின்றன. அவற்றில் 2,484 சங்கங்களிலுள்ள 8,082 நிர்வாகிகள்மீது நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற டிஃபால்டர்ஸாகி தலைவராக இருந்து நீக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ? அல்லது உப தலைவரிடம் பொறுப்பு கொடுக்கப்பட்ட சங்கங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 2,200 பேர்மீது நடவடிக்கையெடுத்து அவர்கள் சங்கங்களிலிருந்து நிர்வாகப் பொறுப்பிலேயிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள். 5,882 பேர்மீது சட்டப்படி நடவடிக்கையெடுக்கப்பட்டு வருகிறது.

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, அப்படித் தவறு செய்தவர்களை உடனடியாகப் பதவியிலிருந்து நீக்கி விசாரணை செய்தால்தான் உண்மை வெளிவரும். ஆகையால் ஐயாயிரத்திற்கும் அதிகமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அவர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின்படி அவர்களைப் பதவியிலிருந்து நீக்குவதற்கும் முறைப்படி ரீசனபிள் ஆப்பர்ச்சுனிட்டி கொடுத்தாக வேண்டும். ஷோ காஸ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து முறைப்படி பதிலைப் பெற்றாக வேண்டும்; பெறப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டு நீக்கப்படுவார்கள்,

[1982 மார்ச் 22

திரு. எம். சின்னசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படி டிஃபால்டர்ஸாகி இருப்பவர்கள் பெரும்பாலும் பெரிய விவசாயிகள். அவர்கள் கடன் கட்டக்கூடிய வசதியிருந்தும் கட்டாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய படங்களைப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பெரிய விவசாயிகளாயிருந்தாலும் சிறிய விவசாயிகளாக இருந்தாலும், சங்க விதிகளை மீறுகின்றபோது வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாத நிலையிலிருக்கும் போது எடுக்கப்படும் நடவடிக்கைகளின் அடிப்படையில் அவர்கள் அந்தப் பதவியிலிருக்கும் தகுதியை இழக்கிறார்கள். ஜப்தி நடவடிக்கை முதற்கொண்டு மேற்கண்ட கடனைத் திருப்ப வேண்டுமென மைய அரசு மாநில அரசுக்கு அறிவுறுத்தியிருப்பதாலும், உலக வங்கி விவசாயிகள் கடனை எப்படியும் வசூலித்தாகவேண்டும், இல்லையென்றால் தமிழ்நாடு பிளாக் லிஸ்ட் செய்யப்படும் என்று அச்சுறுத்தியிருப்பதாலும், கடுமையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் அந்த நடவடிக்கைகளின் கீழ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

## திருமலை கல்லுடைக்கும் தொழிற் கூட்டுறவு சங்கம்.

*வினா எண். 593— திரு. சோ. அழகர்சாமி, திரு. ஏ. டி. கருப்பையா, திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கை தாலுக்கா திருமலை என்ற கிராமத்தில் திருமலை கல்லுடைக்கும் தொழிற் கூட்டுறவு சங்கம் என்று ஒரு சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சங்கம் எப்போது பதிவு செய்யப்பட்டது? அதனுடைய நிர்வாகஸ்தர்கள் நியமிக்கப்பட்டவர்களா அல்லது அந்த உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா? அதன் பொது சபையைக் கூட்ட வேண்டுமென்று தொடர்ந்து 10 ஆண்டுகளாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உறுப்பினர்களால் கோரிக்கைகள் அனுப்பப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) அந்தச் சங்கம் 14—7—1970 அன்று பதிவு செய்யப்பட்டது. 16—7—1970-ல் துவங்கப்பட்ட சங்கத்திற்கு 30—9—1972 வரை நிர்வாகஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர். 30—9—1972 க்குப் பின்னர் மகாசபை கூட்டப்பட்டு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்



1982 மார்ச் 22]

தெடுக்கப்பட்டனர் இல்லை. 30—9—1972-லும் அதற்கு முன்னும் பின்னரும் பல முறை மகாசபைக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன.

[முற்பகல் 9.50]

திரு ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கை தாலுக்கா திருமலை என்ற கிராமத்தில் உள்ள குவாரி கோவாப்பரேட்டிவ் சொசைட்டிக்கு அரசு மானியம் கொடுத்ததா, அந்த மானியம் இப்போது திரும்பப் பெறப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மானியம் கொடுத்ததைப் பற்றிய தகவல் என்னிடம் தற்போது இல்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சிவகெங்கையில் இருக்கிற கல்லுடைக்கும் லேபர் சொசைட்டியினுடைய பதவிக் காலம் 30—6—1975-லே முடிந்துவிட்டது. அங்கே பலவிதமான முறைகேடுகள் நடந்து, ஏராளமான தவறுகள் நடந்து எல்லாவிதமான காண்ட்ராக்ட்களும் தனிப்பட்ட காண்ட்ராக்டர்களுக்கே கொடுக்கப்பட்டு, கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட முறைகேடுகள் இருப்பதால் அந்த போர்டை நீக்கி தலைவரும் நீக்கப்படுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தச் சங்கம் 30—9—1972-லே அமைக்கப்பட்ட சங்கமாகும். ஆனால் 1976-லேயே இதனுடைய பதவிக்காலம் முடிந்துவிட்டபோதும் கூட, தேர்தல் நடத்துவதற்குக் காலம் ஆகும் என்ற காரணத்தால் 1976-லேயே அந்தச் சங்கங்களுக்கெல்லாம் நீட்டிப்பு அளிக்கப்பட்டது. அந்தக் கால நீட்டிப்பின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருந்த இந்தச் சங்கத்தினுடைய நிர்வாகஸ்தர்கள் யார் யார் தவறு செய்தார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தச் சங்கத்தினுடைய நிர்வாகக் குழுவைக் கலைப்பதற்கு அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1975 க்குப் பிறகு நிர்வாகக் கமிட்டி கூட்டங்கள் நடைபெற்றதாகச் சொன்னார்கள். ஆனால் 65 ஆவது செக்ஷன் படி, அவர்களை ஏன் கலைக்கக்கூடாது என்று நோட்டீஸ் அனுப்பியும், 30—6—1975 அன்று தலைவர் உட்பட 3 டைரக்டர்களை பதவியில் இருந்து நீக்கியும் அவர்கள் சட்ட விரோதமாகத் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தனிப்பட்டவர்களுக்கு காண்ட்ராக்டுகள் கொடுத்து சொசைட்டிக்கு லாபம் வராத நிலையில், அங்கே உள்ள மொத்தம் 6 டைரக்டர்களில் 5 பேர்கள் அதைக் கலைக்க வேண்டும், அங்கே

நிர்வாகம் சரியாக நடக்கவில்லை என்று சொல்லியும், இது போன்ற பல குற்றச்சாட்டுக்களைக் கூறிய பிறகும், செக்ஷன் 65-ன் பிரகாரம் அவர்கள் கொடுக்கப்பட்ட நோட்டீசுக்கு பதில் இருக்கிறதா? இதே போன்று மற்ற சொசைட்டிகளுக்கும் இப்படிப்பட்ட கால நீட்டிப்பு கொடுக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கத்தைப் பொறுத்த வரைக்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போலவே 30-6-1975-ல் 3 டைரக்டர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டும், அவர்கள் தவறுதலாக தொடர்ந்து பணியில் இருப்பதைக் கண்டுபிடித்து அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. மகாசபைக் கூட்டத்தைப் பொறுத்தவரைக்கும் 26-6-1978 அன்றும் 26-12-1980 தேதிகளில் மகாசபைக் கூட்டம் நடந்திருக்கின்றது. அவர்கள் தவறு செய்தார்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டு 30-6-1975-லே நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, அவர்களுடைய பதில் பெறப்பட்டு, அந்த நிர்வாகம் கலைக்கப் படக்கூடிய ஆய்வு தற்போது இருக்கின்றது.

**திரு செ. சிவசாமி :** தலைவர் அவர்களே, 65 செக்ஷன் என்குயரி பிரகாரம் கலைக்கப்பட வேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதன்படி கலைக்க ஏற்பாடு செய்வதாக சொல்லப்பட்டது. ஆனால் இந்தநாள் வரையில் அந்த சொசைட்டி இயங்கிக் கொண்டு இருக்கின்றது. அதை உடனடி யாகக்கலைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, That being an independent enquiry by an independent authority அரசே கலைக்க வேண்டுமென்று உத்தரவிட முடியாது. அரசைப் பொறுத்த வரைக்கும் ஆதாரங்கள் அடிப்படையில் நடவடிக்கை எடுங்கள். ஆய்ந்து நடவடிக்கை எடுங்கள். ஷோ காஸ் நோட்டீஸ் கொடுத்து எடுங்கள் என்றுதான் சொல்ல முடியும். சட்டமும் அப்படித்தான் இருக்கிறது. சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டப்படி எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கையினால் சங்கம் கலைக்கப்பட ஆய்வு இருக்கிறது என்பது தகவலிலிருந்து அரசு அறிகிறது. அதைத்தான் சொன்னேன்.

**திருச்சி மாவட்டத்திற்கு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைக்கும் திட்டம்.**

*வினா எண். 594—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

திருச்சி மாவட்டத்திற்குக் கூடுதல் மூன்றாவது மாவட்ட நீதி மன்றம் District and Sessions Cour அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** ஆம்.



**திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திற்கு கூடுதல் மூன்றாவது மாவட்ட நீதிமன்றம் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சி மாவட்டத்தில் திருச்சி நகரத்திற்கு அடுத்தபடியாக இருக்கிற நகரம் கரூர். எல்லா தகுதியையும் பெற்றிருக்கின்ற அந்தக் கரூர் நகரத்தில் இந்த நீதி மன்றம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே இருக்கின்ற பல்வேறு நீதி மன்றங்களின் அமைப்புகள், வழக்குகளுடைய தன்மையையும் வழக்குகளுடைய எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அங்கு அமைக்கலாம் என அரசு உயர்நீதி மன்றத்தைக் கேட்டு இருக்கிறது. உயர் நீதிமன்றத்தின் பரிந்துரை அரசுக்கு வந்தவுடன் அந்தப் பரிந்துரையின் அடிப் படையில் அமைக்கப்படும்.

**திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் ஏற்கனவே, ஒரு துணை மாவட்ட நீதிமன்றம் உருவாக்கக்கூடிய அளவிற்கு ஸ்டாடிஸ்டிக்ஸ் எல்லாம் இருக்கிறது. ஆகவே, கரூருக்கு ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை நீண்ட நெடுங் காலமாக அந்தப் பகுதி மக்களிடையே இருக்கிறது. ஆகவே, அவர்கள் சார்பில் அந்தக் கோரிக்கையை நான் வைக் கிறேன். இதை அரசு கவனிக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப் படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிவு, கனிவு ஆகியவற்றின் அடிப்படை யில் நடவடிக்கை எடுப்பது சிரமம். காரணம் புள்ளி விவரங் களின் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்க முடியும். உயர் நீதிமன்றம் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் என்ன பரிந்துரை செய்கிறதோ, அந்தப் பரிந்துரையை அரசு நடை முறைப்படுத்தும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தினை அரசு உயர்நீதிமன்றத்திற்குச் சொல்லும்.

**திரு. பி.எம். தங்கவேல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே ஒரு டிஸ்டிரிக்ட் கோர்ட்டும், குளித்தலையிலே ஒரு சப்-கோர்ட்டும் அமைக்க ஒரு முயற்சி செய்யப்பட்டு வருவதாக அறிகிறேன். ஆகவே அந்த சப்-கோர்ட்டு குளித்தலையில் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறையில் ஒரு டிஸ்ட்டிக் கோர்ட் அமைக்கப்பட்ட பிறகு, குளித்தலையில் சென்ட்ரல்

[1982 மார்ச் 22

பிளேஸ் ஆக வரும் என்ற நிலை இருக்கின்ற காரணத்தால் சப்-கோர்ட்டு ஒன்று அங்கு அமைப்பது உகந்ததாக இருக்கும் என்று அரசு கருதி உள்ளது. நீதிமன்றத்தினுடைய ஆலோசனையைக் கேட்டு இருக்கிறது. உயர் நீதிமன்றத்தினுடைய ஆலோசனை வந்தபிறகுதான் அதைப்பற்றி அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

பாளையங்கோட்டை அருகில் ஓர் அரிசன கிறிஸ்தவர் கொலை செய்யப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள், எல். இளையபெருமாள், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், ஜே. ஹேமச்சந்திரன், ஆகியோர், "திருநெல்வேலி மாவட்டம், சமாதானபுரம், பாளையங்கோட்டை நகர்ப் பகுதியிலுள்ள திரு. செல்வதுரை என்பவர், 26-2-82 அன்று கொலை செய்யப்பட்டு இருப்பதனால் பாளையங்கோட்டைப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. இளையபெருமாள் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சம்பவத்திற்கு முன்பாக 80 ஆம் ஆண்டிலே, 81-ஆம் ஆண்டிலே தொடக்கப்பட்ட சங்கனாம்குளம், திருநெல்வேலி மாவட்டம் சங்கநாங்குளம் என்ற கிராமத்தில் ஏழை ஆதி திராவிடர்கள் அடிக்கப்பட்டும், பெண்கள் அவமானப்படுத்தப்பட்டும் இருந்தது. இதை அரசுக்கு நான் தெரிவித்து இருந்தேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் நேரிலே சென்று அதனுடைய உண்மையான நிலையைக் கண்டு, ஒரு நீதிவிசாரணை அமைத்தார்கள். அந்த நீதி விசாரணையிலே இந்த இறந்து போன செல்வதுரை என்பவர் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை நகரத்தை சேர்ந்தவர் அவர் முன்நின்று பல விஷயங்களை அந்த



1982 மார்ச் 22] [திரு. எல். இளையபெருமாள்]

ஏழை மக்களுக்கு உறுதுணையாக இருந்து நகரத்தில் விசாரணை நடக்கின்ற காலத்திலே உதவி செய்துவந்தார். மேலும் 1981-ஆம் ஆண்டிலே, 13–10–80-லே, அங்கே படித்த இளைஞர்கள், சமுதாய ஊழியர்கள், ஏன் சர்வ கட்சியைச் சேர்ந்த நண்பர்கள்கூட 13–10–80-லே ஒரு ஊர்வலமாக சென்று அந்த ஊர்வலத்திலே இந்தக் கொடுமைகள் நடத்தப்பட்டு இருக்கிறது. அந்தக் கொடுமைகளுக்கு நீதி வழங்க வேண்டும் என்று ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். ஆனால் அந்தக் கூட்டத்திலே அவர்கள் உத்திரவு வாங்குவதற்கு காலதாமதம் செய்யப்பட்ட காரணத்தினால் அதற்கு முன்பே போலீசார் வந்து கலைந்துபோக வேண்டுமென்று கூடச் சொல்லாமல் அவர்களை அடித்து, இம்சை செய்து கிட்டத்தட்ட 68 நபர்களைச் சிறைச் செய்தார்கள். மேலும், அவர்கள் மேல், 147, 148, 332, 427, 188, 153, 307, 149 ஐ.பி.சி. போன்ற பலவிதமான செக்‌ஷனிலே வழக்குகள் தொடர்ந்து, இன்று அதனுடைய முடிவும் தெரியவில்லை. இதை ஏன் சொல்கிறேன் என்றால், இதற்கெல்லாம் காரணமாக திருநெல்வேலி, பாளையங்கோட்டை பகுதியிலுள்ள படித்த இளைஞர்கள், சமுதாய நண்பர்கள், இன்று இந்த மக்களுக்கு உதவி செய்து வந்த காரணத்தை வைத்துக்கொண்டு, 28–2–82ம் தேதி, அங்கே செல்லதுரை என்பவர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். எனக்குக் கிடைத்த தகவல்படி 3 தினங்களுக்கு முன்புவரையில் கொலை செய்தவர்கள் இன்னின்னார் என்று குறிப்பிட்டுக் கொடுத்தும் அவர்கள்மீது இதுவரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை; அவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை.

[முற்பகல் 10.00]

மேலும் இறந்து போனவருடைய தகப்பனார், அவருடைய தம்பி ஆகியோர் பேரிலும் ஏதோ பக்கத்து வீடுகளில் கொள்ளை அடித்ததாகப் பொய் வழக்குகள் போட்டிருக்கிறார்கள். இந்தக் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் என்று, எனக்குக் கிடைத்த தகவல்படி, ஜெபமணி, எக்ஸ் போலீஸ்மென், சமாதானபுரம்; சித்தமதாஸ், மணக்காவலன் நகர், பாளையங்கோட்டை ; வைகுண்டதேவன், பரமசிவம்—இவர்களும் மணக்காவலன் நகர், பாளையங்கோட்டைதான்—மணி, புதுப்பேட்டைத் தெரு, பாளையங்கோட்டை ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்லி, புகார் கொடுத்திருக்கிறார்கள். எனக்குக் கிடைத்தத் தகவல்படி இவர்களில் யாரும் 3 தினங்களுக்கு முன்பு வரையில் கைது செய்யப்படவில்லை, அவர்கள் மேல் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேலும் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சம்பவம் நடைபெற்றதற்கு முதல்நாள் இரவு சென்று இறந்துபோன செல்லதுரை என்பவரை கண்டபடி திட்டி, கேவலமாகப் பேசி வந்திருக்கிறார். அங்கே அவர்

[திரு. எல். இளையபெருமாள்] [1982 மார்ச் 22

கொலை செய்யப்பட்ட இடத்தில் டி.எம்.பி. 514 மற்றும் டி.எம்.பி. 1317 எண்ணுள்ள இரண்டு கார்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகத் தகவல் வந்திருக்கிறது. காவல் துறையைச் சேர்ந்த வேணுகோபால் என்பவர் மிகவும் கேவலமாக நடந்திருக்கிறார் என்றும் தகவல் வந்திருக்கிறது. இப்படிப்பட்ட அவலநிலைமைகள் இன்றைக்கு பல்வேறு இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது மாண்பு மிகு முதல்மைச்சர் அவர்களுக்கும் தெரியும். நான் பல நேரங்களில் இதைப்பற்றி அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். (குறுக்கீடு) நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சாட்சிக்குக் கூப்பிடுவதாகச் சொல்கிறார்கள். அவர்கள் சாட்சி சொல்ல முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அவர்கள் இந்த அவல நிலைமைகளை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள், புரிந்துகொண்டிருக்கிறார்கள் நானும் அவ்வப்போது எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

இந்தச் சம்பவத்தைப்போன்று தாழையூத்தில் அழகு என்ற அரிசன பெண் கை துண்டிக்கப்பட்டது. 3 மாதங்களுக்கு மேலாகியும் அதிலும் எந்தவிதமான நடவடிக்கையும் போலீ சாரால் எடுக்கப்படவில்லை என்றுதான் தெரிகிறது. அதைப் போல திருநெல்வேலி நகரில் நடைபெற்ற ஊர்வலம் சம்பவம் பற்றி நான் சொல்ல வேண்டும். இறந்துபோனவர் பற்றி சொல்வது சரியாக இருக்காது. ஆனால் அவரும் ஒரு சினிமா நடிகர், இறந்து போன சகோதரர் தலைமை தாங்கி ஊர்வலம் நடத்தினார். அங்கே இருந்த மாவட்ட போலீஸ் அதிகாரி யிடம் விவரமாகச் சொல்லியிருந்தும் அவர்மீது ஒரு நடவடிக்கை யும் எடுக்கவில்லை ; கேஸ் போடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்ட. இந்த பிரச்சினை பற்றி மட்டும் சொல்லுங்கள் ; மற்ற விவரங்கள் வேண்டாம்.

திரு. எல். இளையபெருமாள் :- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சம்பவங்கள் எப்படி எல்லாம் நடைபெறுகின்றன என்பதை நினைவுபடுத்துவதற்காக ஒன்றிரண்டைக் குறிப் பிட்டேன், அவ்வளவுதான். பலர் கொலை செய்யப்பட்டிருக் கிறார்கள், இப்படிப்பட்ட சம்பவங்களில். அதிகாரிகளிடம் புகார் கொடுக்கப்படுகிறது ; இன்னின்னார்மீது இந்தக் கொலை நடைபெற்றதுபற்றி சந்தேகம் என்று பெயரை எழுதிக் கொடுத்தும் போலீஸ் அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இது போன்று பல்வேறு பட்ட பிரச்சினைகளை விரிவாக இங்கே பேசி, உரிய நட வடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால் அவையின் இன்றைய அலு வல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 22]

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தக் கொலை சம்பந்தமாக ஒத்தி வைப்புத் தீர்மானம் இங்கே வந்திருக்கிறது. இந்த கொலைக்கு ஒரு பின்னணி இருக்கிறது என்பதை முதலில் குறிப்பிட விரும்பு கிறேன். ஏற்கெனவே சங்கனாங்குளம் கற்பழிப்புச் சம்பவம் ஒன்று இருக்கிறது. விசாரணை நடை பெற்றுக் கொண்டிருப் பதால் அதற்குள் நான் செல்ல விரும்பவில்லை. அந்த கமிஷ னுடைய வேலைக்கு இடைஞ்சலாகப் போகக் கூடாது என்பதால் அது பற்றிச் சொல்லவில்லை. ஒரு அரிசனப் பெண் கற்பழிப்பு சம்பந்தமாக நானும், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜான் வின்சென்ட் அவர்களும் இப்பிரச்சினையைக் கிளப்பி, அது முதலமைச்சரின் கவனத்திற்கு வந்து, அவர்கள் நேரடியாகப் பார்த்தார்கள். இப்படிப்பட்ட பல சம்பவங்கள் நடைபெற் றிருக்கின்றன. இப்படிப்பட்ட பிரச்சினைகளில் தெளிவாக போலீஸ் அதிகாரிகளின் கவனம் செல்லவில்லை. அந்த கற்பழிப்பு சம்பந்தமாக கமிஷன் போடப்பட்டிருக்கிறது. அந்தக் கமிஷன் முன் யாரும் சாட்சி சொல்ல வரக் கூடாது என்று பல்வேறு நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சாட்சி சொல்ல யாரும் வரக் கூடாது என்ற அச்சுறுத்தல் போலீஸ் தரப்பு முலம் வந்து இருக்கிறது ; சாட்சி சொல்ல வருகிறவர்களை பயமுறுத் கிறார்கள். அதனுடைய ஒரு தொடர் விளைவாகத்தான், அதனுடைய உச்சக் கட்டமாக இந்த செல்லத்துரை கொலை நடைபெற்றிருக்கிறது என்று குறிப்பிட நான் ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, இந்த செல்லத்துரை என்பவர் கொலை செய்யப்படுவதற்கு முதல் நாள் அந்த வட்டாரத்தில் இருக்கிற போலீஸ் இன்ஸ்பெக்டர்,—அவருடைய பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை.—எவ்வளவோ சொல்லியிருந்தும் நீங்கள் எல் லாம் சாட்சிக்கு ஏற்பாடு செய்து, என்னுடைய முயற்சிக்கு பாதகம் ஏற்படுத்தினால் நீ எப்படி உயிரோடு இருக்கிறாய் பார்க்கலாம் என்று சொல்லி மிரட்டியிருக்கிறார். அதைப் பற்றியும் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது ; போலீஸ் நிலையத்தில் தகவல் கொடுத்தும் மேல் அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனுடைய விளைவு அவருக்குப் பாதுகாப்புக் கொடுக்க முடியாத நிலையில் மறுநாள் செல்லத்துரை பலரால் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். கொலை செய்யப்பட்டது யாரால் என்பதைப் பற்றிய விவரங்களைப் போலீசுக்குத் தெரிவிக்கப் பட்டு இருந்த போதிலும் கூட இதுவரையில் யாரும் கைது செய்யப்படவில்லை. கைது செய்யாதது மட்டுமல்ல, ஆதரவாக யார் யார் வருவார்களோ அவர்களை எல்லாம் மிரட்டும் நிலையும் இருக்கிறது. இப்படிப்பட்ட மோசமான நிலைமைகளைத் தவிர்க்கவும், நீதி கிடைக்க வழி செய்யவும், செல்லத்துரையைக் கொலை செய்த கொலையாளி தப்பிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுத்தவும் அவசியமாக இருப்பதால், இந்தப் பிரச்சினை

குறித்து சாங்கோபாங்கமாகப் பேச வேண்டியிருப்பதால், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்துள்ள ஒத்திவைப்புப் பிரச்சினை குறித்து, அரசுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நான் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

28–2–82 இரவு, 1–3–82 அதிகாலை பாளையம்கோட்டை மணக்காவல் நகரைச் சேர்ந்த பெஞ்சமின் என்பவருடைய 26 வயது மகன் செல்லத்துரை அடையாளம் தெரியாத நபரால் மணக்காவல் நகர் சக்கிலியர் தெருவில் கொலை செய்யப்பட்டார். இறந்தவரின் கழுத்தில் இரண்டு அரிவாள் வெட்டுகள் இருந்தன. செய்தி தெரிந்தவுடன், இறந்து போன செல்லத்துரையின் தந்தை பெஞ்சமின் கொலை நடந்த இடத்திற்கு ஓடிச் சென்று இறந்த மகன் உடலைப் பார்த்தார். பின்னர் அவர் காலை 9 மணி அளவில் பாளையம்கோட்டை காவல் நிலையத்தில் புகார் செய்தார். இந்தியத் தண்டனைச் சட்டம் 302 பிரிவின் கீழ் ஒரு வழக்கு பாளையம் கோட்டை காவல் நிலையத்தின் குற்ற எண். 218/82-ன் கீழ் பதிவு செய்யப்பட்டது. பாளையம் கோட்டை இன்ஸ்பெக்டர் செல்லத்துரை உடலை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பினார். சம்பந்தப்பட்ட குற்றவாளியைக் கண்டுபிடிக்க புலன் விசாரணை நடைபெறுகிறது.

முன்னாள் ராணுவ வீரரான செல்லத்துரை ஆதித்திராவிட கிருஸ்துவர். இதற்கு முன்பு சங்கர் நகரில் உள்ள இந்தியா சிமெண்ட்ஸ் ஆலையில் லாரி ஓட்டுநராக பணி புரிந்து வந்தார். இவர் பாளையம்கோட்டை ரவுடிகளில் ஒருவர். 1980–81, 1981–82 ஆம் ஆண்டுகளில் பாளையம்கோட்டை காவல் நிலைய வழக்குகள் 5-ல் சம்பந்தப்பட்டுள்ளார். கடைசியாக பாளையம் கோட்டை காவல் நிலைய குற்ற எண். 92/82-ன் கீழ் பிரிவு 110-ன் குற்றவியல் விசாரணை முறைச் சட்டத்தின் கீழ் 28–1–82-ல் மேற்படி குற்றவாளி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. செல்லத்துரையின் இளைய சகோதரர் ஜான் பாண்டியன் என்பவரும் ஒரு ரவுடி ஆவார். 1975-ல் அவர் 10 வழக்குகளில் சம்பந்தப்பட்டு இருக்கிறார். அவர் மீது 17–2–82 அன்று பிரிவு 110-இ மற்றும் ஜி குற்றவியல் விசாரணை முறைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கொலை செய்யப்பட்ட செல்லத்துரையைப் பார்த்த பிறகு, செல்லத்துரையின் இறப்புக்கு சுப்பையா ரெட்டியார் என்பவர் தான் காரணம் என்று 1–3–82- அன்று காலை 8 மணி அளவில் செல்லத்துரையின் தந்தை பெஞ்சமின்னும், ஜான் பாண்டியன், 4 ஆட்களுடன் நேரு தெருவில் உள்ள சுப்பையா ரெட்டியார் வீட்டிற்குள் அவர் இல்லாத நேரத்தில் பலவந்தமாக நுழைந்து, அங்கேயுள்ள பெண்களை பயங்கரமான ஆயுதங்களைக் காட்டி மிரட்டி, 20 சவரன்





நகைகள், ரூ. 4,000 உள்பட அவர் வீட்டில் இருந்த பொருள்களைக் கொள்ளை அடித்துச் சென்றதாக முதல் தகவல் அறிக்கை ஒன்று அது சம்பந்தமாக பாளையம்கோட்டை குற்ற எண். 219/82 பிரிவுகள் 117, 148, 448 427, 307,395 ஆகிய இந்திய' தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் ஆய்வில் உள்ளது.

இறந்தவரின் உடலை மருத்துவப் பரிசோதனைக்கு எடுத்து செல்லக் கூடிய நேரத்தில், செல்லத்துரையின் தந்தை பெஞ்சமின் காவல் துறைத் தலைவர் வரவேண்டும் என்று கூறி உடலை எடுத்துச் செல்லும் வண்டியை தடுத்து நிறுத்த முயன்றார். காவல் துறையினர் அதைச் சமாளித்து, மணக்காவல் நகரைச் சுற்றி ஆயுதக் காவல் படை பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டது. இச்சம்பவம் காரணமாக வேறு எந்த நிகழ்ச்சியும் தொடரவில்லை. 1–3–82 அன்று மாலை 4-30 மணி அளவில் இறந்தவரின் உடல் அவருடைய தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டு, அந்தோணி கிறிஸ்துவ ஆலயத்தில் சவ அடக்கம் செய்யப்பட்டது.

சுப்பையா ரெட்டியாரின் வீட்டில் புகுந்து கொள்ளை அடித்ததாக முதல் தகவல் அறிக்கையின்படி புலன் ஆய்வு செய்ததில் கீழ்க்கண்ட 6 பேர்கள் சம்பந்தப்பட்டதாகத் தெரிகிறது:

(1) ஜான் பாண்டியன், இறந்து போன செல்லத்துரையின் சகோதரர், (2) பெஞ்சமின், இறந்து போன செல்லத்துரையின் தந்தை (3) இராமகிருஷ்ணன், (4) பழனிச்சாமி, (5) ஷண்முகவேல் (6) சந்திரபோஸ் 4 வது எதிரி பழனிசாமியிடம் சுப்பையா ரெட்டி வீட்டில் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களில் ஒரு பகுதி இருந்தது என்றும் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதில் மற்றவர்களுடைய பங்குபற்றிய புலனாய்வும் நடந்து வருகிறது. இந்தக் கொலைக்கு காரணமானவர்களைப் பற்றியும் காவல் துறையினர் புலனாய்வு செய்துவருகிறார்கள். அவர்களால் தேடப்பட்டு வந்தவர்களில் ஒருவர் இராமச்சந்திரன் என்பவர் நீதிமன்றத்தில் சரண் அடைந்திருக்கிறார். மேற்கொண்டும் புலனாய்வு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கூறும்போது இன்னின்னார் கொலை செய்திருக்கக் கூடும் என்று காவல் நிலையத்திலேயே மனு கொடுத்திருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அது பற்றியும் காவல்துறை புலன் ஆய்வு செய்து வருகிறார்கள்.

(முற்பகல் 10-10)

அந்த அடிப்படையிலே அவர்களும் சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுமானால், அவர்களும் கைது செய்யப்பட்டு தக்கப்படி தண்டனை அளிப்பதற்குரிய வழக்குகளை காவல் துறையினர் தொடுப்பார்கள். அதிலே தேடப்பட்டு வந்தவர்களில் இராமச்சந்திரன் என்பவர் மட்டும் நீதிமன்றத்தில் சரண்

அடைந்துள்ளார். அவர் மீது வழக்கு தொடர ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. மேலும் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுவதன் காரணமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையிலேயே இந்த புலன் விசாரணை தொடர்ந்து நடத்தப்படும் என்றும் கூறிக் கொள்கிறேன், சில உண்மைகள் கிடைக்கக் கூடும். அந்த உண்மைகளின் அடிப்படையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிப்பதற்குரிய முயற்சிகளை அரசு எடுக்கும் என்பதைக் கூறிக் கொண்டு, ஆகவே இது குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால், அவையை ஒத்தி வைக்க வேண்டிய தேவையில்லை என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இது குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால், இதற்கு அனுமதி மறுக்கப் பெறுகிறது.

## (3) கவன ஈர்ப்பு.

### மதுரை மாவட்டம், குண்டாற்றின் குறுக்கே அணைகட்டுதல்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சுற்றி கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் போன்ற பகுதிகளில் எப்படி வறட்சி பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அதைப் போலவே மதுரை மாவட்டத்தின் திருமங்கலம் தொகுதியிலும் வறட்சி நிலவி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் எடுத்து வந்த இந்தப் பிரச்சினை, ஏற்கெனவே இதற்கு முன்னாலே சட்டசபையிலே எழுப்பப்பட்டதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்து விட்டார்கள். இப்போது திரும்பவும் 54 வது விதியின் கீழ் கொண்டு வரப்படுமேயானால் அந்தப் பகுதியில் இல்லாத பிரச்சினையை இருப்பதுபோன்ற தோற்றம் கொடுத்து ஒரு பதட்டம் உண்மையிலேயே அந்தப் பகுதியில் உருவாக்க இது ஏதுவாகும். ஆகவே........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. சத்தியமூர்த்தி என்ன கேட்கப் போகிறார், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார் என்பதை பார்த்துவிட்டு பிறகு பேசலாம். அனுமானம் தேவையில்லை.





திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே, ''மதுரை மாவட்டத்தில் குண்டாற்றின் குறுக்கே அணை கட்ட நடவடிக்கை எடுப்பதால், இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, கடலாடி, முதுகுளத்தூர் போன்ற பகுதிகளிலுள்ள விவசாயிகளிடையே நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சென்னம்பட்டி கிராமத்தில் குண்டாற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டது. திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

2. இப்பகுதியில் கிடைக்கும் நீரின் அளவு, இப்பொழுது பயன்பெறும் நிலங்களின் அளவு ஆகிய முழு விவரங்கள் அடங்கிய அறிக்கை தலைமைப் பொறியாளரிடமிருந்து பெறப்படும். இந்த விளக்க அறிக்கை கிடைத்தபின், இவ்வணைக்கட்டைக் கட்டுவதனால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பகுதியில் ஏற்படக்கூடிய விளைவுகளை நன்கு ஆய்ந்து அதன் பிறகே அரசு முடிவெடுக்கும்.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர், கமுதி, கடலாடி போன்ற பகுதிகளில் குண்டாறு தவிர வேறு ஆறே கிடையாது. மழைக்காலங்களில் மதுரைப் பகுதிகளில் மழைப் பெய்தாலும், இந்த ஆற்றின் வழியாகத்தான் தண்ணீர் வரவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, இந்த ஆறு உற்பத்தியாகும் இடத்திலே அந்த அணையைக் கட்டுவதால், அங்கேயுள்ள விவசாயிகள் விவசாயத்தையே விட்டு விட வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே அதன் அடிப்படையில் அணையைக் கட்ட தலைமைப் பொறியாளருக்கு அறிவுறுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர் அவர்கள், சுதந்திரமாக அது பாதிக்கப்படுமா? படாதா? என்று அறிக்கை

கொடுத்தபிறகுதான் பரிசீலிக்க வேண்டுமே தவிர, பாதிக்கப் படும் என்று நாமாகவே முடிவு செய்து தலைமைப் பொறியாள ருக்கு அறிவுரை கூறுவது சரியல்ல. அது குறித்த விளக்க ரிப்போர்ட்டுகளைத்தான், அந்த அடிப்பண்டயில் நாம் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னதைப் போல் திருமங்கலம் பகுதியும் வறண்ட பகுதிதான். மேலும் கிழக்கு இராமநாதபுரம் பகுதியிலே உள்ள அருப்புக்கோட்டை யும் வறண்ட பகுதிதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய முதுகளத்தூர் பகுதியும் வறண்ட பகுதிதான். இந்தப் பகுதிகள் எல்லாம் பாதிக்கப்படாத வகையிலேதான் இந் தத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று நான் சொல்லி இருக்கிறேன். ஆகவே திரும்பவும் அந்த அடிப்படையிலேதான் ஆய்வு செய்யச் சொல்லி இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவலை என்னவென்றால் மதுரை மாவட் டத்திலே இந்த அணை கட்டப்படுமேயானால் மழை பெய்யும் நீர் எல்லாம் அங்கே தேக்கப்பட்டுவிடும், எனவே இந்தப் பகு திக்கு தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்பதுதான். ஆனால் கீழ்ப் பகுதிகளிலே உள்ள மக்களின் நலன்களும் பாதுகாக்கப்படும். ஆகவே அதுபற்றி எல்லாம் நன்கு ஆய்வு செய்யப்பட்டதற்குப் பிறகுதான் இடங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டி ருக்கின்றது. ஆகவே ஏற்கனவே பயன் பெற்று வருகின்ற அந்த ஸ்டெபிலைசேஷன் பாதிக்கப்படாத வகையிலேதான் நிச்சய மாக இந்த அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (4) இறுதித் துணை நிதி அறிக்கை, 1981–82.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை* இம் மாமன்றத்தில் வைக்க முன் வந்துள்ளேன். இவற்றில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் ரூ. 502.67 கோடியில், ரூ. 235.73 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ. 266.94 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் வருகின்றன. பல்வேறு கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள தொகை பற்றிய விவரங்களும் கூடுதல் நிதி ஒதுக்கத்திற்கான காரணங்களும் இத் துடன் இணைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. முதல் துணை மானியக் கோரிக்கை வைக்கப்பட்ட பின்னர் அனு மதிக்கப்பட்ட செலவினங்களும் இப்போதுள்ள நிதி ஒதுக்கத்திற்கு

*நிதி அமைச்சரின் உரையை ஆங்கிலத்தில் 358-359-ம் பக்கங் களில் இணைப்பு I-ல் காண்க.





மேற்பட்டுக் கூடுதலாக நிதி ஒதுக்கம் தேவைப்படுகிற செல வினங்களும் இந்த மதிப்பீடுகளில் உள்ளன. இந்த மதிப்பீடு களில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு இனங்களில் முக்கியமான சில திட்டங்களைக் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

2. ஆதி திராவிடர்களின் நலனைக் கட்டிக் காப்பதிலும் அவர்கள் ஏழ்மைக் கோட்டிற்கு மேலாக வர அவர்களுக்கு உதவி செய்வதிலும் இந்த அரசு கண்ணும் கருத்துமாய் இருந்து வருகி றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இந்த நோக்கத்தை எய்தும் பொருட்டு, தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகத்தின் பங்கு மூலதனத்திற்கு ஒரு கோடி ரூபாய் மேற்கொண்டும் வழங்கப்பட்டுள்ளது. இக் கழகம் ஆதி திராவிடர்களின் மேம்பாட்டிற்காகப் பல்வேறு திட் டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பழங்குடியினர் பள்ளி களுக்காகக் கட்டிடம் கட்ட மேற்கொண்டும் ரூ. 12 இலட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிட மாணவர்களுக்கு மெட்ரிக்குக்கு மேற்பட்ட படிப்பு பயில உதவித் தொகை அளிக் கும் பொருட்டு, மேற்கொண்டும் ரூ. 22.70 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

3. இந்த ஆண்டில் 150 வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்ட தன்னிறைவுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக இந்த அரசு மேற்கொண்டும் ரூ. 33.57 கோடி அனுமதித்துள்ளது. இந்தத் துணை மதிப்பீட்டில் இதற்கான அனுமதி உள்ளது.

4. கிராமப் பகுதிகளில் கடன் வழங்குவதில் முக்கிய நிறுவன மாக விளங்கி வருகின்ற கூட்டுறவுக் கடன் வழங்கு நிறுவனங் களை வலுப்படுத்த எல்லா முயற்சிகளையும் இவ்வரசு மேற் கொண்டு வருகிறது. கிராமக் கடன் வழங்கு கூட்டுறவு நிறு வனங்களின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்துவதற்காக இந்த மதிப்பீடுகளில் மேலும் ரூ. 80.36 இலட்சம் ஒதுக்கப்பட் டுள்ளது. ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு வேலை வாய்ப்பு அளிக்க, கூட்டுறவு நூற்பாலைகளில் பங்கு மூலதன மாக முதலீடு செய்யும் பொருட்டு மேற்கொண்டும் ரூ. 153.75 இலட்சம் தனியே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. நெசவாளர் கூட்டுறவுத் தொடக்கச் சங்கத்தின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்துவதற்காக, இறுதித் துணை மதிப்பீடுகளில் மேற் கொண்டும் ரூ. 100 இலட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

5. கல்வி கற்பதற்கான வாய்ப்புகளையும் கல்வியின் தரத்தை யும் எல்லா நிலைகளிலும் உயர்த்துவதே இவ்வரசின் குறிக் கோளாகும். தமிழ்ப் பல்கலைக் கழகத்தையும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்தையும் ஏற்படுத்துவதற்காக இந்த மதிப்பீடு களில் மேற்கொண்டும் ரூ. 56 இலட்சம் ஒதுக்கி வைக்கப்பட் டுள்ளது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 22

6. சாலைகள் அமைப்பதில் இவ்வரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. இதன் பொருட்டு; இந்தத் துணை மதிப்பீடுகளில் மேலும் ரூ. 5.27 கோடி ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. உலக வங்கி சத்துணவுத் திட்டத்தின் கீழ் துணை நிலையங்களை அமைப்பதற்காக ரூ. 1.60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

7. போக்குவரத்து நிறுவனங்கள் திறமையுடன் செயல்படுவதற்கு உதவி அளிக்கும் பொருட்டு, இந்தத் துணை மதிப்பீட்டில் பல்லவன் போக்குவரத்து நிறுவனத்திற்கு ரூ. 2.59 கோடியும் தந்தை பெரியார் போக்குவரத்து நிறுவனத்திற்கு ரூ. 1.50 கோடியும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

8. முதியோர் உதவித்தொகை, கைம்பெண்கள், உடல் ஊனமுற்றவர் உதவித்தொகை வழங்கும் தற்போதைய திட்டத்தில் மேற்கொண்டும் 17,934 பேர்களும், வேளாண்மைத் தொழிலாளர்களில் 30,000 பேர்களும் உதவித் தொகை பெறுவர். இக் கூடுதல் செலவிற்கு அனுமதி வழங்குமாறு இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

9. 150 காவல் நிலையங்களை ரூ. 3.50 கோடி செலவில் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ரூ. 75 இலட்சம் செலவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

10. அவையில் வைக்கப்பட்டுள்ள 1981—82 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கையில் உள்ள சில முக்கியச் செலவினங்களை மட்டுமே எடுத்துக் கூறியுள்ளேன். இந்தக் கோரிக்கைகளில் அரசு கேட்டுள்ள தொகைகளை வழங்கி, திட்டங்கள் அனைத்திற்கும் இசைவளிக்குமாறு அவையை வேண்டி அமருகிறேன். வணக்கம்.

(முற்பகல் 10-20)

(5) அறிவிப்பு.

இறுதித் துணை நிதி அறிக்கை 1981-82 வெட்டுத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981-82 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கையின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், அவைகளை பேரவையின் 205-வது விதிக்கிணங்க 23—3—1982 செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.



1982 மார்ச் 22] (6) வரவு செலவுத் திட்டம், 1982-83—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 15—காவல்துறை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை, எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 69,50,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, காவல் நிலையங்களில் அடிக்கடி தொலைபேசி பழுதாகி விடுவதால், சில சமயங்களில் சரியாக தகவல் கிடைக்காமல் துரித நடவடிக்கை எடுக்க முடியாமல் போவதால் எல்லாக் காவல் நிலையங்களிலும் வயர்லஸ் மூலம் செய்தி தொடர்பு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 69,50,74,000 இல், ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. கே. எம். தங்கமணி : தலைவரவர்களே, சுமார் 12,000 காவலர்கள் நியமிக்கும் திட்டத்தின் கீழ், போட்டி மற்றும் நேர்முக தேர்வு முடிவுற்றும், ஆயிரக்கணக்கானோர் வேலை கிடைக்கப் பெறாததோடு அவர்களிடமிருந்து பெறப்பட்ட கல்வி சான்றிதழ்களும் திரும்பப் கிடைக்கப் பெறாமல் அல்லலுறுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 15—காவல்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 69,50,74,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. ரு. ரமணி : தலைவரவர்களே, காவல் துறையினரிடத்தில் அதிகாரவர்க்க ஆதிக்கப் போக்கும், பொது மக்களை மதிக்காத ஆவணப் போக்கும் தலைதூக்கி வருவதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 15—காவல்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 69,50,74,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, பெருந்துறை காவலர் குடியிருப்பை புதுப்பிக்கவும், குடியிருப்பு இல்லாதவர்களுக்கு குடியிருப்பு கட்டிக் கொடுக்கவும் வகை செய்யக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 69,50,74,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. எஸ். என். இராமசாமி : தலைவரவர்களே, நெல்லை மாவட்டம், குரும்பூரில் ஒரு காவல் நிலையம் அமைப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 69,50,74,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்பு பணிகள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,97,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம் திருவந்திபுரத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன். :

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,97,53,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. டி. மணி : தலைவரர்களே, கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை தீயணைப்பு நிலையத்தில் இருக்கும் தீயணைக்கப் பயன்படுத்தும் லாரி பழுதடைந்த நிலையில் உள்ளதால் புதிய வண்டி வாங்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,97,53,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."





திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, தீயணைப்பு நிலையம் திருத்துறைப்பூண்டியில் அமைப்பதாக அறிவித்து இரண்டாண்டு ஆகியும் இன்னும் அமைக்கப்படாததால் உடன் தீயணைப்பு நிலையம் அமைக்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கபெறுகின்ற ரூ. 4,97,53,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி ஊத்துமலையில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,97,53,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே வைக்கப் பட்டுள்ள தமிழ்நாடு காவல் துறை, தமிழ்நாடு தீயணைப்புத் துறை ஆகிய மானியங்களின் கொள்கைக் குறிப்புகளை * இந்த அவையிலே நான் படித்ததாகக் கருதி, அவைகளை அவைக் குறிப்பேட்டிலே எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை மானியம் பற்றி விவாதம் நடைபெறுகிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு ஒரு புரட்சிகரமான திட்டத்தை அறிவித்தார்கள். போலீஸ்காரர்களுக்கு மானிய விலையில் உணவுப் பண்டங்கள் வழங்கும் திட்டம். இந்தத் திட்டம் இப்போது மரணப்படுக்கையில் இருக்கிறது. முதலில் எவ்வளவு யூனிட்டுகள் கொடுத்தார்களோ, அந்த அளவுக்கு அரிசியாக இருந்தாலும், சர்க்கரையாக இருந்தாலும், மைதாவாக இருந்தாலும் கொடுக்கப்படாமல், அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. தம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டார்கள். என்னுடைய மைத்துனர் போலீஸ்காரர். ஆகவே, போலீஸ்காரர் சிரமம் எனக்குத் தெரியும் என்று சொன்னார். இன்றைக்கு

* 360-437-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[திரு. அ. ரகுமான்கான்] [1982 மார்ச் 22

24 கிலோ அரிசியாக இருந்தது, 16 கிலோவாக ஆக்கப்பட்டிருக்கிறது. ; பாமாலின் எண்ணெய் 4 கிலோவாக இருந்தது, 1 கிலோவாக ஆக்கப்பட்டிருக்கிறது. எனவே, இது வெறும் சாதாரண அறிவிப்பாக இருக்கிறதே தவிர, மக்களை ஏமாற்றுகின்ற திட்டமாக இருக்கிறதே தவிர, இன்றைக்கு அது மரணப் படுக்கையிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

அடுத்து, 12,000 போலீஸ்காரர்கள் புதிதாக நியமிக்கப் போகிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக தேர்வு நடைபெற்று $1\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகியும் அந்த 12,000 போலீஸ்காரர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை. இன்றைக்கு பலர் தங்களுடைய சர்டிபிகேட்டுகளைக் கேட்டு, அதை அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு வயதாகி, வேறு வேலைகளுக்குப் போக முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. போலீஸ்காரர்களாக நியமிக்க படுவார்கள் என்று நம்பி, சில பேர் பெண்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அவர்களுக்கு சர்டிபிகேட் கிடைத்தால் போதுமென்ற நிலை இருக்கிறது. ஆக, 12,000 போலீஸ்காரர்கள் நியமிப்பது என்பது ஒரு நாடகம். ஊரை ஏமாற்றுவதாக அமைந்திருக்கிறது.

மேலும், சப் இன்ஸ்பெக்டர்கள் செலக்ஷன் என்னஆயிற்று என்று தெரியவில்லை. முதலமைச்சர்அவர்கள் இந்த இலாகாவில் தலைவர். அவரே இதிலே ஊழல் இருப்பதாகச் சொல்லுகிறார். அவர் இலாகாவில் உள்ள போலீஸ் அதிகாரிகளே ஊழல் செய்கிறார்கள் என்றால், அதைப் பொறுப்பேற்றிருக்கின்ற முதலமைச்சர் பதவியிலே இருக்கக்கூடாது. ஆனால் அவர் இராணுவத்தை வைத்து செய்யப்போவதாகச் சொல்லுகிறார்; இராணுவம் மத்திய ஆட்சியிலே இருக்கிறது. ஆனால், அவர் மாநில சுயாட்சியைப் பற்றியும் பேசுகிறார். நான் கேட்க விரும்புகிறேன்? அப்படி ஊழல் செய்த அதிகாரி யார்? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இன்றைக்கு சப் இன்ஸ்பெக்டர் செலக்ஷனில் ஏன் இவ்வளவு காலதாமதம் ஏற்படுகின்றது?

அதைப்போலவே, தலையில்லாமல் வால் ஆடாது என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் இன்றைக்கு நியமிக்கப்படவில்லை. தலைமை இல்லாமல் வால் ஆடிக் கொண்டிருக்கிறது. டாப்லெஸ் டிபார்ட்டுமென்டாக இன்றைக்கு போலீஸ் இலாகா இருக்கிறது. பதவி நீடிப்பு யாருக்கும் கிடையாது என்று முதலமைச்சர் சொன்னார். ஆனால், ஸ்டேசிக்கு பதவி நீடிப்பு



1982 மார்ச் 22] [திரு. அ. ரகுமான்கான்]

கொடுக்கப்பட்டது; அப்துல்லாவுக்கு பதவி நீடிப்புகொடுக்கப் பட்டது; ஷெனாய்க்கு பதவி நீடிப்பு கொடுக்கப்பட்டது. பதவி நீடிப்பு இல்லை என்று சொன்னால், இதற்கு என்ன பொருள் எனக்கு இது விளங்கவில்லை? இன்றைக்கு டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் நியமிக்கப்படாமல் இருப்பதற்கு என்னகாரணம்? விளங்கவில்லை.

அடுத்து போலீசார் சங்கம் வைப்பதற்காகப் போராடினார்கள். அந்த உரிமை தரப்பட்டது என்று முதல்வர் அவர்கள் சொன்னார். ஏதோ ஜிம்கானா விதிகளுக்கு உட்பட்டு, அந்த சங்கத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ''மியர் அப்ரூவல் பார் பார்மேஷன் ஆப் ஒன் அசோசியேஷன்''. ஆனால், அதே நேரத்தில் அந்த அனுமதியைக் கொடுத்துவிட்டு, அசோசியேஷன் நடவடிக்கைகளில் யாரும் ஈடுபடக்கூடாது என்று 1—11—1981 அன்று உத்தரவு போட்டால், நான் கேட்கின்றேன். அனுமதி கொடுத்துவிட்டு, பிறகு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று சொன்னால், திருமணத்தை நடத்திவிட்டு, சாந்தி முகூர்த்தம் இல்லை என்று சொன்னால் என்ன நியாயம்? முதலமைச்சர் இப்படிச் சொல்வது முறையா? என்று கேட்கிறேன். போலீஸ்காரர்கள் சங்கம் வைப்பதற்காகப் பேராடியவர்களில் பலர் இன்றைக்கு டிரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட முழுச் சம்பளம் கொடுக்கப் படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 10.30]

அதைப்போல்வே ஆர்டலி முறை ஒழிக்கப்பட்டுவிட்டதாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பெயர்தான் மாற்றப்பட்டிருக்கிறதே தவிர இன்னும் அந்த முறை இருந்து கொண்டுதான் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் ஒரு நாகரிகமற்ற முறையிலே. காவலர்களை கொத்தடிமைகளாக ஆக்கக்கூடிய அநாகரிகமான முறையிலே நடத்தப் படுகிற நிலைமை இருக்கிறது. பெயர்தான் மாற்றப்பட்டிருக் கிறது. Old wine in new bottle என்று ஆங்கிலத்திலே சொல்லப் படுவதைப் போல்.

10 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றுகின்ற பல இன்ஸ்பெக் டர்களுக்கு இன்னும் டி.எஸ்.பி.யாக புரமோஷன் கிடைக்கவில்லை. ஆனால், இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களுடைய செக்யூ ரிட்டி விவேகானந்த ராஜ் மட்டும் டி.எஸ்.பி. யாக புரமோஷன் ஆகியிருக்கிறார். நான் கேட்கிறேன். 10 ஆண்டுகள் சர்வீஸ் பெற்ற பல இன்ஸ்பெக்டர்களுக்கு டி.எஸ்.பியாக புரமோஷன் கிடைக்கவில்லை. ஆனால் முதலமைச்சருடைய செக்யூரிட்டிக்கு மட்டும் கிடைத்திருக்கிறது. அப்படி யானால் முதலமைச்சர் செக்யூரிட்டியாக இருந்தால்தான் புர மோஷன் கிடைக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1982 மார்ச் 22

இன்னொன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
தமிழ்நாடு அரசிதழ் கெஜட், இரண்டாம் தேதி டிசம்பர் 1981
ஆம் தேதியன்று வெளியிடப்பட்டது. அந்த கெஜட்டிலே
கவர்ன்மென்ட் ஒரு உத்தரவு போடுகிறது. ஹோம் டிபார்ட்
மென்ட் போடுகிறது, திரு. சொக்கலிங்கம் அவர்கள் கையெழுத்
துப் போட்டு ஒரு உத்திரவைப் பிறப்பிக்கிறார். அது என்ன
உத்திரவு என்றால் 68 இன்ஸ்பெக்டர்களை டி.எஸ்.பியாக புர
மோட் பண்ணுகிறார்கள். அப்ரூவ்ட் லிஸ்டிலே இல்லாத
13 பேர்களுக்கு—இந்த 68 பேர்களிலே அவர்கள் எல்லாம்
இன்ஸ்பெக்டர்களாக இருக்கிறார்கள். — டி.எஸ்.பியாக
புரமோஷன் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கவர்ன்மென்ட்
அப்ரூவ்ட் லிஸ்ட் வெளியிடப்படுகிறது. ஹோம் டிபார்ட்
மென்ட் உத்தரவு போடுகிறது. திரு. சொக்கலிங்கம் உத்திரவு
போடுகிறார். அந்த 68 பேர்களிலே இல்லாதவர்கள் 13
பேர்கள் டி.எஸ்.பியாக வேலை பார்க்கிறார்கள். அந்த 13
பேர்கள் பட்டியல் இருக்கிறது. எப்படி இந்த மாயம் நடந்தது
என்று புரியவில்லை. அந்த லிஸ்ட்டிலே நம்முடைய மதிப்புக்
குரிய முதலமைச்சர் அவர்களுடைய செக்யூரிட்டி இருக்கிறாரா
என்றால் இல்லை. இதிலே வேடிக்கை என்னவென்றால்
அந்த அப்ரூவ்ட் லிஸ்ட்டிலே இருக்கின்ற 18 பேர்கள் இன்
னும் இன்ஸ்பெக்டர்களாக வேலை பார்க்கிறவர்கள். இப்படி
ஒழுங்கீனங்கள் ஏன் நடைபெறுகின்றன என்று தெரியவில்லை.

அடுத்து உங்களாட்சியில் குற்ற நிகழ்வுகள் அதிகமாக
நடக்கின்றது என்பதைக் கோடிட்டு காட்ட விரும்புகிறேன்.
இன்னும் சொல்லப்போனால் நம்முடைய மதிப்பிற்குரிய அதிகாரி
பரமகுரு அண்மையிலே ஒரு கூட்டத்திலே ஒரு கருத்தைத்
தெரிவித்தார்கள். அந்த கருத்து கூட 27—12—1981 அன்று
இண்டியன் எக்ஸ்பிரஸ், தினமணி பத்திரிக்கைகளிலே வந்திருக்
கிறது.

அவர்களே சொல்லியிருக்கிறார்கள். 71ஐயும் இப்போது
இருப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் குற்ற நிகழ்வுகள் இப்
போது அதிகமாகியிருக்கின்றன. கொலைகள் அதிகமாகி
யிருக்கின்றன என்ற கருத்தில் அவர்கள் தெரிவித்திருக்கிறார்
கள். 1971 இல் 51,611 குற்றங்கள், 1980-ல் 1,16,110
குற்றங்கள்; 1971 இல் 785 கொலைகள், 1980-இல் 1,289
கொலைகள். ஆகவே குற்றங்கள் அதிகமாகியிருக்கின்றன.
அகில இந்திய அண்ணா தி. மு. க. ஆட்சியில் என்று ஐ.ஜி
யாக இருந்த பரமகுரு அவர்களே ஒரு மாதத்திற்கு முன்னாலே
கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் நீங்கள் அளித்த
குறிப்பிலே நீங்கள் குற்ற நிகழ்வுகள் பற்றிச் சொல்லுகிறபோது
1980ஐயும் 1981-ஐயும் ஒப்பிட்டிருக்கிறார்கள். அதிலேயே
1980 இல் 53 கொலைகள், 1981 இல் 66 கொலைகள் நடை
பெற்றிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.
உங்கள் ஆட்சியில் குற்றங்கள் அதிகரித்து இருக்கின்றன.



1982 மார்ச் 22] [திரு. அ. ரகுமான்கான்]

கொலைகள் அதிகரித்திருக்கின்றன. கொள்ளைகள் அதிகரித்
திருக்கின்றன. திருட்டுகள் அதிகரித்திருக்கின்றன. வழிப்
பறிகள் அதிகரித்திருக்கின்றன, கற்பழிப்புகள் அதிகரித்திருக்
கின்றன என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது.

அது மட்டுமல்லாமல் போலீஸ் லாக்கப்பில் பலர் மரணம்
அடைந்திருக்கிறார்கள். சின்னமனூரில் ஒச்சாத் தேவர், கம்பத்
தில் முத்துசாமி, நெல்லிக்குப்பத்திலே சிதம்பரம், திருவொற்றி
யூரிலே மணி, வண்ணாரப்பேட்டையிலே இருளான், தியாகராய
நகரிலே நித்தியானந்தம், பணவிடை சத்திரத்திலே குணசேகரன்
செங்கோட்டையிலே காளிமுத்து, அயனாவரத்திலே சீதாபதி
என்று கண்ணீர்க் கதைகள் தொடர்கதையாகிக் கொண்டிருக்
கிறது. நான் கேட்கிறேன். சாதாரணமாகக் கருதப்
பட்டவரை விட போலீஸ்காரர் மூலம் கொலை நடந்திருக்கு
மானால் அவரையே 302 செக்ஷன் போடுவேன், என்று பீகார்
முதல்வர் கர்பூரி தாக்கூர் போல செய்வேன் என்று முதல
மைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த அவையிலே
நான் தெரிவிக்க விரும்புகிறேன். போலீஸ் லாக்கப்பிலே
வைக்கப்பட்டவர்கள் உயிரோடு திரும்பமுடியாது என்ற நிலை
தான் உங்கள் ஆட்சியிலே ஏற்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, போலீஸ் அட்ராசிட்டிஸ் அதிகமாகிக்
கொண்டு இருக்கின்றன. வைத்தியநாதன் என்ற பத்திரிக்கை
ஆசிரியர், இந்தியா டுடே, பத்திரிக்கை, அவருக்கு அசோக்
நகரிலே வீடு இருக்கிறது. அங்கே போலீஸ் போகிறது. அவ
ருடைய மனைவியை கேவலமாகப் பேசுகிறது, அவரை அடிக்
கிறார்கள். பக்கத்து வீட்டுக்காரர்கள் கூடினார்கள். ஆட்கள்
வந்தவுடனே போய்விட்டார்கள். தொலைபேசியிலே தொடர்பு
கொண்டு என்ன என்று கேட்டால் அது பிராத்தல் ஹவுஸ்
என்று நினைத்து ரெய்ட் பண்ணுவதற்காக வந்தோம் என்று.
இது எவ்வளவு பெரிய அக்ரமம் என்பதை முதலமைச்சரின்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சட்டம் ஒழுங்கு
நிலைமை கெட்டு விட்டது மாத்திரமல்ல, நம்முடைய
அமைச்சர் திருநாவுக்கரசு அவர்களின் மாவட்டம் புதுக்
கோட்டை, அறந்தாங்கி தாலுக்காவிலே அரச குளத்திலே
சின்னையா என்பவரின் மகள் மல்லிகா என்ற 16 வயது
பெண். பேராவூரணி பஸ் ஸ்டாண்டிலே—காரைக்குடி பால
நாகம்மா போல—பஸ்ஸிற்காக காத்திருந்த நேரத்திலே, படுத்
திருந்த நேரத்திலே, அந்தப் பெண், போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்
துச் செல்லப்பட்டு கையெழுத்துப் போடச் சொல்லி, கற்பழிக்கப்
பட்டிருக்கிறார். கற்பழித்த அந்த இன்ஸ்பெக்டர் ரொம்பவும்
பெருமைக்குரியவர், பாரிவள்ளல் போன்று ரொம்பவும் கொடைத்
தன்மையோடு நடந்திருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அதைப்போலவே பாளையங்கோட்டையிலே புகார் கொடுக்கப் போன பெண் கற்பழிக்கப்பட்டிருக்கிறார். அதிகார பூர்வமாக அது பற்றி கம்ப்ளெயின்ட் செய்யப் பட்டிருக்கிறது. இராமேஸ்வரத்திலே ஓசி மீன் கொடுக்கவில்லை என்பதற்காக சில மீன் வியாபாரிகள் ஐந்து பேரை லாக்-ஆப் செய்து, அடித்து, உதைத்து அதில் ராஜன் என்பவருடைய பல் உடைக்கப்பட்டிருக்கிறது. டி.எம்.ஓ. ராம்நாட் அவர்களின் சர்டிபிகேட் கூட இதிலே பல் உடைக்கப்பட்டிருக்கிறது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. மாமூலாக கொடுக்கிற ஓசி மீன்கள் கொடுக்கவில்லை என்பதற்காக இந்தக் கொடுமை நடந்திருக்கிறது. இதை யெல்லாம் பார்க்கிற போது போலீஸ் எவ்வளவு தவறான பாதையிலே போய் கொண்டிருக்கிறது ? சென்னையிலே கைது செய்யப்பட்டிருக்கிற ரவுடிக்கு பதிலாக இன்னொரு ரவுடி லாக்கப்பிலே வைத்து, அந்த ரவுடியின் குற்றத்தை ஒத்துக் கொள்ள வைத்து, நீதிமன்றத்திலே உண்மையான குற்றவாளிக்குப் பதிலாக ஒரு நிரபராதியை அபராதம் கட்ட வைத்து அதை மெட்ராஸ் ஹைகோர்ட் கண்டித்துத் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இதெல்லாம் நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே நடைபெறுகிற போலீஸ் நிர்வாகத்தின் அலங்கோலங்கள்.

இங்கே கூட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பல கொண்டு வரப்பட்டன. வாடிபட்டியிலே சீனியம்மா என்ற வாத்தியாரம்மா கொடுமைப்படுத்தப்பட்டார்கள். பெண்களை லாக்கப்பிலே வைக்கக் கூடாது, ஸ்டேஷனுக்கு அழைத்து போகக் கூடாது, ஆனால் கொண்டு போய் கொடுமைபடுத்தினார்கள். திருச்செந்தூரிலே இருக்கிற கோவில் அர்ச்சகர் அன்னாசி, பிராமண சகோதரர் எவ்வளவு கொடுமை படுத்தப்பட்டார் என்பதெல்லாம் இங்கே விவாதிக்கப்பட்டது. அடுத்து நான் கேட்கிறேன், முதலமைச்சர் அவர்கள் தாய்க்குலம், தாய்க்குலம் என்று சொல்கிறாரே வள்ளியூரில் நடந்தது என்ன ? வள்ளியூரிலே தாய்மார்கள் கேவலமாக கொடுமைப்படுத்தப்பட்டார்கள். போலீஸ் லாக்கப்பிலே கற்பழிக்கப்பட்டார்கள் என்று சொல்லி, 'இன்டியா டு டே'யிலும் சண்டேயிலும் கண்ணீர் விட்டு . எழுதினார்களே, அதற்கு ஒரு கமிஷன் கூட போட்டீர்களே ; நான் கேட்கிறேன், அத்துமீறி விவசாயப் பெண்களை கற்பழித்து, சித்திரவதை செய்த அந்தப் போலீஸ்காரர்கள்மீது தாய்க்குலத்தின்மீது கண்ணீர் வடிப்பதாக சொல்லக்கூடிய முதலமைச்சர் என்ன நடவடிக்கை எடுக்கிறார் ? அந்த சதாசிவம் கமிஷன் ரிப்போர்ட் என்னவாயிற்று ? ஊறுகாய் பானையிலே தூங்குகிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதேபோல் ஹால்டாவிலே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. திராவிடக் கழக தலைவராக இருந்த ஐயாவினுடைய துணைவியார் மணியம்மையார் அவர்கள்பற்றி கேவலமாக பேசிய ஒரு போலீஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கலாம்





என்று சோமசுந்தரம் கமிஷன் சொல்லியதற்குப் பிறகும், பெரியாருக்குச் சிலை வைத்துக் கொண்டு, பெரியார் வழியிலே நடக்கிறோம் என்று சொல்லக்கூடிய ஒரு சர்க்கார் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதன் காரணம் என்ன என்பதை இந்த நேரத்தில் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

விஜிலன்ஸ் டிபார்ட்மென்ட் வைத்திருக்கிறீர்கள். ஒரு நிரபராதியை அப்சல்கான் என்பவர் திண்டுக்கல்லில் டி.எம்.ஓ வாக இருந்தார். அநியாயமாக அவர்மீது லஞ்சம் வாங்கினார் என்று குற்றம் சுமத்தி, இன்றைக்கு அவர் இந்த உலகத்திலே இல்லை. உலகத்தை விட்டே போய் விட்டார். அந்த அறிக்கையை இந்தச் சர்க்கார் இன்னும் வைக்காததனுடைய மர்மம் என்ன என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எனக்குக் கிடைத்த தகவல்படி சொல்கிறேன். அந்த அப்சல்கான் நிரபராதி என்றும் இன்னும் சொல்லப்போனால் போலீஸ் அதிகாரிகள் வேண்டுமென்றே பொய் வழக்கு போட்டார்கள் என்று திரவியம் இருக்கிறாரே சீப் செகரட்டரி, எழுதியிருப்பதாக சொல்கிறார்கள் நாளைக்கு வெளியே இந்த அறிக்கை கிடைத்ததா என்று கூட வரக்கூடும். ஆகவே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஐ ஆம் வெல் இன்பார்மட். எனக்கு தகவல் கிடைக்கப் பெற்றிருக்கிறது. ஏன் அதன்மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல பால் கமிஷன் அறிக்கையை திருடி விட்டதாக சதாசிவம் என்ற அதிகாரியை போலீஸ் லாக்கப்பில் கொடுமை படுத்தினீர்கள் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். பால் கமிஷன் திருடப்பட்டதா, இல்லையா, சட்டப்படி அது என்ன என்பது வேறு விவகாரம். நான் அதற்கு வரவில்லை. ஆனால் சதாசிவத்தை எவ்வளவு கொடுமைப்படுத்தினீர்கள் என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல சண்முகநாதன், எதிர்க்கட்சித் தலைவருடைய பி.ஏ., அவருக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ? எதிர்க்கட்சித் தலைவர் பால் கமிஷன் அறிக்கையை பத்திரிகையாளர்கள் மத்தியிலே வெளியிட்டால் சண்முகநாதன் எப்படி பொறுப்பு ஆவார்? சட்டப்படி குற்றமென்றால் எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுங்கள். சண்முகநாதன் வீட்டிலே போய் அவர்கள் மனைவி, குழந்தைகள் எல்லாம் போலீஸ் அதிகாரிகள் மேலே இருக்கிற அதிகாரிகளின் தூண்டுதல் காரணமாக ஹராஸ் செய்திருக்கிறார்கள் என்றால் அது அநாகரீகம் இல்லையா ? இந்த நிலைக்கு என்ன காரணம் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதேபோல கலைஞருடைய மருமகன் செல்வத்திற்கும், இதற்கும் என்ன சம்பந்தம் ? அவரை ஏர் போர்ட்டிலே, வெளியூருக்கு போய் விடுவார் என்பதை குற்றச்சாட்டாக குறித்து, அதையும் விசாரிக்காமல், செல்வம் கலைஞருடைய மருமகனை

கைது செய்து வழக்கு போட்டிருக்கிறார்களே ? ஆனால் பால் கமிஷன் சோடிட்டு காட்டிய அந்த அறங்காவலர் குழுவைச் சார்ந்தவர்களை விசாரித்து, நியாயப்படி நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக இப்படியெல்லாம் மேல்மட்ட உத்தரவுகள் காரணமாக நடத்துவது அராஜகமானது, காட்டு மிராண்டித்தனமானது என்று நான் கண்டிக்க விரும்புகிறேன். இது உள்ளூர் போலீஸ், ஆனால் கேரளாவிலிருந்து போலீஸ் வருகிறது. மதுரை மாவட்டத்திலே போடிக்கு பக்கத்திலே டாப் சிலிப் இருக்கிறது. கேரளா போலீஸ் அங்கே இருக்கிற ஏழை, எளிய மக்களை அடித்து பள்ளிக்கூடத்தை சிதைத்து பல சேதங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழ்நாட்டு போலீஸ் தவறு செய்வதை நீங்கள் கேட்கவில்லை. ஆனால் கேரளா போலீஸ் வருகிறதே, அது என்ன நியாயம் ? அந்த கொடுமையை முதலமைச்சர் கேட்க வேண்டாமா ? தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடுகிற அளவிற்கு தன்னை அவர் வளர்த்துக் கொள்ள வேண்டாமா ? ஆகையால், இன்றைக்கு, கேரள போலீஸ்காரனும் உள்ளே நுழைந்து போடியிலே, டாப் ஸ்டேஷன்லே அடிக்கிற நிலைமை இருக்கிறது. இந்தச் சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10.40]

அது மட்டுமல்ல, இந்த ஆட்சியிலே பல கொலைகள் நடைபெற்றிருக்கின்றன. இங்கே எரிசாராயம்பற்றி கலைஞர் பேசுகின்றபொழுது, ஒரு முக்கியமான புள்ளி, கொலை செய்யப்பட்டு மர்மமான முறையில் இறந்து போனதாகச் சொன்னார். பெயர் மகாதேவன். கேரள மாநில நிதித் துறைச் செயலாளர் பத்பநாபனுடைய சகோதரர். நான் கேட்கிறேன். அந்த மகாதேவனைக் கொலை செய்தது யார் ? நடவடிக்கை எடுத்தீர்களா ?

நான் கேட்கிறேன், தாரமங்கலம் கோவிலிலே சிலை திருடப்பட்டதே, சாட்சிகள் கொல்லப்பட்டார்களே, காவல்காரன் கொல்லப்பட்டிருக்கிறாரே, அதிலே என்ன நடவடிக்கை ? உங்கள் கட்சியைச் சேர்ந்த பழனியப்பன் இதிலே சம்பந்தப்பட்டிருப்பதாலே நீங்கள் முறையான நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் குற்றம் சுமத்துகிறேன்.

திருத்தணி கெஸ்ட் ஹவுசிலே ஒரு பெண் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாரே, நான் உங்களைக் கேட்கிறேன், அந்த வழக்கில் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் ?

புட்லூர் தண்டபாணி, உங்களுடைய கட்சிக்காரர் என்னுடைய கணவனைக் கொன்றவர் அகில இந்திய அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த இன்னார்தான் என்று சொல்லியதற்குப் பிறகும், இந்தச் சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை நீதி வழங்கவில்லையென்று கேட்கிறேன்.





இளஞ்செழியனைக் கொன்றவன் இன்னார்தான் என்று இன்றைக்கு உங்கள் கட்சியிலே இருக்கக்கூடிய பழக்கடை பாண்டி போலீசிலே புகார் கொடுத்ததற்குப் பிறகும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை—ரத்தத்தின் ரத்தம் என்பதாலா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

ஷோபா—நடிகை—இன்றைக்குப் புதிராக இருக்கிறது. தற்கொலையா, மரணமா, புலன் விசாரணை என்னவாயிற்று? தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் வெங்கடாசலம் கொல்லப்பட்டார். என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

போலீஸ் கஸ்டடியிலே, பழனியிலே, இப்ராகிம் கொல்லப்பட்டார். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, இன்னொன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், காரைக்குடி சுப்பிரமணியபுரம் டவுன் பாங்க் செயலாளர்—பெயர் சுப்பிரமணியம். அவர் 1981ஆம் ஆண்டு ஒரு நாள் மெய்யப்ப நிலையத்திலே மரணம் அடைகிறார். ஆனால் அவருடைய சடலத்தைத் திடீரென்று அந்தச் சங்கத்தினுடைய தலைவரும், அந்தச் சங்கத் தலைவருடைய மகனும்—அவர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாவட்டப் பிரதிநிதி, எம்.ஜி. ஆர். மன்றத்திலே தொடர்புடையவர்—சிவகங்கைக்குக் கொண்டு போய் அடக்கம் செய்து விடுகிறார்கள். யாருக்கும் தகவல் தெரிவிக்கப்படவில்லை. பின்னாலே, விசாரித்தால், அந்த பாங்க் செயலாளர் ரூ. 5 இலட்சத்துக்கு கையாடல் செய்திருப்பதாகத் தெரிகிறது. நான் சொல்ல விரும்புவது, ஏற்கனவே, அந்த மரணத்திலே சந்தேகம் இருப்பதாகத் தெரிகிறது. இது தற்கொலையா, அல்லது மரணமா, அல்லது இயற்கை மரணமா, அல்லது அடித்துக் கொன்று விட்டார்களா ? ஏனென்றால், அவரிடம் ரூ. 5 இலட்சம் இருக்கிறது. எல்லோருக்கும் இல்லாத அக்கறை, சிலபேருக்கு எப்படி வந்தது ? இதை இந்த அரசு விசாரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, நம்முடைய சிவ இளங்கோ, என்.ஜி.ஓ. சங்கத் தலைவர் கூட ஒரு முறையீடு விட்டிருக்கிறார். சிதம்பரத்தைச் சேர்ந்த தாசில்தார் சண்முகசுந்தரம் 18–10–1981-ல் நீரில் மூழ்கி இறந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவருடைய மரணம் சந்தேகத்திற்கு இடம் உள்ளதாக இருக்கிறது. காரணம், அதற்கு முன்னதாகத்தான் 2,400 நெல் மூட்டைகள்

[திரு. அ. ரகுமான்கான்] [1982 மார்ச் 22

அவரால் பிடிக்க பட்டிருக்கின்றன, விசாரிக்கப்பட்டிருக்கிறார்.
சப் கலெக்டரோடு இருந்திருக்கிறார். இத்தனைக்கும் பிறகு
திடீரென்று மரணம் அடைந்திருக்கிறார். ஆனால், இது சம்பந்
மாகப் போடப்பட்ட வழக்கு வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறது.
இன்னும் சொல்லப்போனால் இது போன்ற கொலைகள்
தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திருத்தணி கோவிலில் தங்க வேல் காணாமல் போய் பல
நாட்கள் ஆகிவிட்டன. நம்முடைய அமைச்சர் வீரப்பன் அவர்கள்
இங்கே இருக்கிறார்கள். விசாரணை முடிந்து, கமிஷன்
ரிப்போர்ட் எல்லாம் வந்து விட்டது என்று சொன்னால், அவை
ஏன் இன்னும் வைக்கவில்லை ? ஏன் தயங்குகிறார்கள் ? நீங்கள்
நியமித்த கமிஷன் ரிப்போர்ட்டை பரிசீலனைக்கு வைக்க மாட்
டீர்களா ? மேலவையில் பேசுகிறபொழுது சொன்னார்கள்
அந்தக் கமிஷன் ரிப்போர்ட் வந்து விட்டது, என்று. அதற்கு
கோபாலகிருஷ்ணன் வரமாட்டார்கள், தயவுசெய்து வையுங்கள்
அதிலே உண்மை தெரியுமென்று நான் நம்புகிறேன்.

அச்சுக்குட்டன் ஒரு கடிதம் உங்களுக்கு அனுப்பினார், திருத்
தணி உண்டியல் உடைக்கப்பட்டது, என்று. அதை உடைத்தது
யார் ? அறங்காவலர் குழுவுக்கும் அதற்கும் சம்பந்தம் என்று
அந்தக் கடிதத்திலே இருப்பதாகத் தெரிகிறது. ஏன் நடவடிக்கை
எடுக்கவில்லை ? இதெல்லாம் திருட்டு விவகாரம். இதற்கு
அமைச்சர் என்ன பதில் சொல்கிறார் என்று நான் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

மியூசியத்திலே புத்தர் சிலை மோன நிலையிலே திருடு
போயிருக்கிறது. அவர் முழித்துக் கொண்டிருந்தாலும் திருடத்
தான் செய்வார்கள் ; ஆனால் மோன நிலையில் இருந்ததால்
சௌகரியமாகத் திருடியிருக்கிறார்கள். அது குறித்து என்ன நட
வடிக்கை எடுத்திருக்கிறீர்கள் ?

இந்திரா நகரிலே ஒரு விபச்சார விடுதி சந்திரசேகரன்,
இந்திராணி என்பவர்கள் அதை நடத்தியதாக, பெரிய புள்ளிகள்
எல்லாம் அதிலே சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள்.
அந்த வழக்கு என்ன ஆயிற்று ? ஊறுகாய் பானையிலே இருக்
கிறதா ?

நக்சல்பாரிகள் என்று சொல்லி அநியாயமாக நிரபராதிகளைக்
கொல்கிறார்கள். சுப்ரீம் கோர்ட் உங்களைக் கேட்டிருக்கிறது
நக்சல் பாரிகள் என்றால் என்ன ? Please define என்று சொல்லி
இருக்கிறார்கள். 23 பேர்களை இன்றைக்கு நக்சல்பாரிகள் என்று
சொல்லி, சுட்டுப் பொசுக்கியிருக்கிறார்கள்.



1982 மார்ச் 22] [திரு. அ. ரகுமான்கான்]

அது மட்டுமல்ல, மச்சக்காளை என்ற ஒரு சகோதரர், சேத்
தூர் பகுதியைச் சேர்ந்தவர். ஆளையே காணோம். அடித்துக்
கொன்று மலையிலே உருட்டி விட்டதாகத் தகவல் தெரிவிக்கப்
படுகிறது. இந்த அநியாயம் நக்சல்பாரி என்ற பெயரால் நடக்
கிறது. நான் கேட்கிறேன், பிடிக்காத போலீஸ் நாளைக்கு
மந்திரிசபையில் இருப்பவர்களைக் கூடத் துப்பாக்கியால் சுட்டுப்
பொசுக்கிவிட்டு அவர்களெல்லாம் நக்சல்பாரிகள் என்றும்,
எம். எல். ஏ.க்களைச் சுட்டுப் பொசுக்கி விட்டு அவர்களெல்லாம்
நக்சல்பாரிகள் என்றும், இப்படித் தனக்குப் பிடிக்காதவர்களை
சுட்டுப் பொசுக்கிவிட்டு நக்சல்பாரிகள் என்றும் சொல்லும்
நிலைமை வந்து விடும். வன்முறைதான் நக்சல்பாரி என்ற
கொள்கை நக்சல்பாரிகள் மத்தியிலேகூட இன்றைக்கு மறு பரி
சீலனை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்து
கொள்ள விரும்புகிறேன். ஆகவே இன்றைக்கு இந்த நிலைமையை
மாற்ற வேண்டும். நக்சல்பாரிகள் தவறு செய்வார்களேயானால்
வன்முறையில் ஈடுபடுவார்களேயானால் அது கண்டிக்கத் தகுந்தது.
ஆனால் அதே நேரத்தில் வன்முறையில் ஈடு பட்டார்கள்
என்று நக்சல்பாரிகள் என்ற முத்திரையைக் குத்தி, நிரபராதி
களைக் கொல்லுகின்ற நிலையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கி
றார்கள. 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் 'போலீஸ்
ராஜ்' என்ற தலைப்பின்கீழ் மேல் மட்ட அதிகாரிகள் எப்படி
அந்தக் காரியத்தை முடுக்கி விட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று
சிறப்பாக எழுதியிருக்கிறார்கள். ஒய்வு இருந்தால் முதலமைச்சர
வர்கள் அதைப் படித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் கொள்ளை நடைபெற்றிருக்கிறது, சம்பல் நதிப் பள்ள
தாக்கில் நடப்பதைப்போல. அமைச்சரவர்கள் ஆயுதம் வழங்கு
வதாகச் சொல்கிறார்கள். எப்பொழுது கண்டக்டர்களுக்கும்
டிரைவர்களுக்கும் ஆயுதம் வழங்கப் போகிறீர்கள் ? அதோடு
சேர்த்து பயணிகளுக்கும் ஆயுதம் வழங்கினால் பாதுகாப்பாக
இருக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் பேசும்
பொழுது தமிழகத்தைச் சேர்ந்த 24,000 பெண்கள் விபசாரத்
திற்காகத் தமிழகத்திலிருந்து கடத்தப்பட்டுப் போயிருக்கிறார்கள்
என்று இந்த அவையிலே அறிவித்திருந்தார்கள். நான் கேட்
கிறேன், கண்ணகி பரம்பரையிலே வந்த 24,000 பெண்கள் தமிழ்
மண்ணிலிருந்து கடத்தப்பட்டிருக்கிறார்கள் என்றால் போலீஸ்
இலாக்காவிற்கு இதைக்காட்டிலும் அவமானகரமான காரியம்
ஒன்று இருக்கிறதா? இந்த அளவில், மேல் மட்டத்தில் எத்தனை
பதவிகள் ? போலீஸ்காரர்களின் எண்ணிக்கையைக் கூட்டவேண்டு
மென்று கேட்டால் கூட்டுவதற்கு மறுக்கிறீர்கள் ? மேலே உள்ள
ஐ. ஜி. லெவலில், அடிஷனல் என்று எவ்வளவு ? நான் கேட்
கிறேன். அறுக்க மாட்டாதவனுக்கு எதற்கு எண்பது அரிவாள்

என்று எங்கள் தென்பாண்டி மண்டலத்திலே சொல்லுவார்கள். இங்கே குற்றங்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டிருக்கிறது. எனவே இது என்ன நியாயம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஒன்றிரண்டு குற்றச்சாட்டுக்களை நான் சொல்ல விரும்புகிறேன். பாரூர் பகுதியில், மருதேரி என்ற கிராமத்தில் * என்பவர், அவருடைய மனைவி * * என்பவர் கடத்திப் போய் இருக்கிறார். ஏராளமான நகைகள். அவர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். பாரூர் போலீஸ் ஸ்டேஷனிலே கம்ப்ளெயின்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. * * * * * * ஆகவே, இதுகுறித்து முதலமைச்சர் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் * * * * * * *

**திரு. பாபு ஜனார்த்தனன்:** * * என்று சொல்லவில்லை.

**டாக்டர் கே. சமரசம்:** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். துணைத் தலைவரவர்களே, * * ஏதோ கடிதம் கொடுத்திருப்பதாகத் தெரிவித்துச் சொல்கிறார்கள். தயவு செய்வு அந்தக் கடிதத்தைச் சபாநாயகரவர்களிடத்திலே ஒப்படைக்கட்டும் *, * என்ன இக்கிறது என்ற விவரத்தைக் கொடுக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெளியிலே இருக்கும் ஒரு நபராக இருந்தாலும் அவர் இங்கேயிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்ற காரணத்தால் அந்தப் பெயரை நீக்குகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர் பிரச்னைக்காக நடந்த ஒரு மறியல் போராட்டத்தை சட்டம்-ஒழுங்குப் பிரச்னையாக நம்முடைய முதலமைச்சரவர்கள் கருதினார்கள். என் மத்தியிலிருப்பது 'பிளிட்ஸ்' பதிரிகை, டெல்லியிலேகூட அமெரிக்க ஏபாதிபத்தியம் நாபான் குண்டுகளைப் பாகிஸ்தானுக்கு வழங்குகிறது என்று சொல்லி எல்லா அமைப்பை சார்ந்தவர்களும் பேராட்டம் நடத்தினார்கள், பெண்கள் உள்பட. முதலமைச்சருக்கு எப்படிச் சட்டத்தைப் பாதுகாக்கின்ற கடமை இருக்கிறதோ, அதைப்போல பிரதம அமைச்சருக்கும் சட்டத்தையும்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஒழுங்கையும் பாதுகாக்கக் கூடிய கடமை இருக்கிறது. ஆனால் அங்கே யார் மீதும் இதுசம்பந்தமாக வழக்கு இல்லை. ஜெயிலில் தள்ளவில்லை. ஆனால் நம்முடைய முதலமைச்சரவர்கள் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதாகச் சொல்லி, மறியல் செய்ததாக எங்கள்மீது வழக்குப் போட்டார். நாங்கள் மறியல் செய்யவே இல்லை. மறியல் செய்யப் புறப்படுவதற்கு முன்பாக வழக்கு. நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். எங்களோடு தாய்மார்களும் மறியல் செய்த குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் ஆண்களாகிய நாங்கள் சிறையிலே வைக்கப்பட்டோம், வழக்கு இருக்கிறது. ஆனால் பெண்களைப் பொறுத்த மட்டிலும் உடனே நம்முடைய முதலமைச்சர் விடுதலை செய்கிறார்.

[முற்பகல் 10.50]

நான் கேட்கிறேன், சட்டத்திலே பெண்கள் கொலை செய்தால் வெளியே வரலாம் என்ற பிரிவு இருக்கிறதா? அது மட்டுமல்ல, பிரிவென்டிவ் அரஸ்ட்—நம்முடைய உறுப்பினர் வேலூர் தேவராஜ் அவர்கள் வேலூர் கலெக்டர் ஆபீஸ் முன்னாலே மறியல் செய்தார். அவர் கைது செய்யப்படவில்லை. அவரை நீங்கள் சிறையிலே தள்ளவில்லை. ஆனால் துரைமுருகன் போன்றவர்கள் இன்னும் சொல்லப்போனால் அவர்களையெல்லாம் பிரிவென்டிவ் அரஸ்ட் என்று சொல்லி கைது செய்து அவர்கள் பேரில் 15 நாட்கள் ரிமாண்டு. இது என்ன நியாயம்? நான் கேட்கிறேன். இதிலே ஏதாவது பொருள் இருக்கிறதா? அடுத்து கலைஞர் அவர்களை மாஜிஸ்டிரேட் அவர்கள் 15 நாட்கள் ரிமாண்டு செய்கிறார். சிறைக்கு அனுப்புகிறார். அங்கே இருந்த உங்கள் போலீஸ் தரப்பிலே வரக்கூடிய பிராசிகியூட்டர்கள் உடனே சொல்லி இருக்கலாம், காவல் நீட்டிப்பு வேண்டாம் என்று. ஆனால் அவரை சிறைக்கு அனுப்பியதற்குப் பிறகு, அவர் உள்ளே போனதற்குப் பிறகு, மக்கள் கொதித்து எழுந்ததற்குப் பிறகு, நான் யாருக்கும் பணியமாட்டேன் என்று சொல்லுகின்ற முதலமைச்சர்—அவர் உடனே வெளியே போகலாம் என்று சொல்லுகிறார் என்று சொன்னால், இது முறைகேடு இல்லையா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது 24 ஆயிரம் பெண்கள் தமிழகத்திலே இருந்து விபச்சாரத்திற்கு கடத்திச் செல்லப்பட்டார்கள் என்றும் காவல் துறை என்ன நடவடிக்கை எடுத்தது என்றும் பேசினார்கள். நான் அந்தக் குறிப்பிட்ட சட்டம் வந்தபோது அவையிலே தெளிவாகச் சொன்னேன். கொடியவர்கள், சமுதாய விரோதிகள், பெண்களை இதுபோன்று விபச்சாரத்தில் பலவந்தமாகக் கடத்திச் சென்று ஈடுபடுத்துகிறார்கள். காவல்துறை பல ஆண்டுகளாக நடந்துவருகின்ற

இதுபோன்ற கொடுமைகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இருந்தபோதிலும் தொடர்ந்து இது போன்ற கொடிய சக்திகள் செயல்படுகின்ற காரணத்தால் இந்தச் சட்டம் தேவைப்படுகிறது என்று சொன்னேன். காவல் துறை செம்மையாகச் செயல்பட்டு நடவடிக்கை எடுத்த காரணத்தினால்தான் 24,000 பெண்கள் அதிலே பாதிக்கப்பட்டார்கள் என்ற தகவலே அரசுக்கு வந்திருக்கின்றது. நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) அதுவும் பல ஆண்டுகளாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் அடிப்படையிலே நான் கூறினேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** துணைத் தலைவர் அவர்களே,

* * * * * * *

**திரு. துரைமுருகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

* * * * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் வி.பி. பாலசுப்பிரமணியம், துரைமுருகன் ஆகியோர் பேசியவை நீக்கப்படுகின்றன.

***திரு. பி. ஜி. நாராயணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் மானியத்தின் மீதும் தீயணைப்புத் துறை மானியத்தின் மீதும் அவைகளை வரவேற்றுப் பேச வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தமட்டில் மக்களுக்கு இன்றியமையாத முக்கியத் துறையாக இருந்து சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்து நாட்டின் நலத்தையும், அமைதியையும் ஏற்படுத்தும் பொறுப்பை நாம் ஒப்படைத்திருக்கிறோம். இரவு பகலாக இயங்குகின்ற இந்தத் துறையானது இரண்டு பக்கங்களிலும் அடிவாங்கக் கூடிய மத்தளத்தைப் போன்று நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெறமுடியாமல், அனைத்துத் தரப்பு மக்களும் குறைகாண்கின்ற பிரச்சினைக்கு உரிய ஒரு துறையாக இருந்து வந்தது. நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவர் அவர்கள் இந்த 4 ஆண்டுகாலமாக எடுத்து வந்த பெருமுயற்சியின் காரணத்தால் போலீஸ் நிர்வாகம் பல மாற்றங்களையும், திருத்தங்களையும் பெற்று இன்று இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு காவல்துறை தமிழகத்திலே சிறப்பாக, செம்மையாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

---

* மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





துப்பு துலக்குவதிலே ஸ்காட்லாந்து போலீசுக்கு அடுத்தபடியாக தமிழக போலீஸ் உள்ளது என்று சொல்வார்கள். அதனுடைய் திறனும் பெருமையும்' புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே மேலும் உயர்ந்து ஸ்காட்லாந்து போலீசுக்கு சமமான அந்தஸ்தைப் பெற்றுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த ஆட்சியில் தான் போலீஸ் நிர்வாகத்தில் எந்தத் தலையீடும், குறுக்கீடும் இல்லாமல் தன்னிச்சையாகவும், சுதந்திரமாகவும் செயல்பட்டு வருகிறது. குற்றம் செய்கிறவர் யாராக இருந்தாலும், அவர்கள் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்ற ஒரு நிலைமை இருந்து வருகிறது.

* * * * * * *

அந்த முறையிலே, அன்றையதினம் போலீஸ் நிர்வாகத்தில் தலையீடும் குறுக்கீடும் இருந்தது. அப்படிப்பட்ட நிலைமை புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு இந்த ஆட்சிக்குத் தொல்லை தரவேண்டும் என்றும், கெட்ட பெயர் ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற எண்ணத்தோடும் திட்டமிட்டு, வன்முறை தூண்டிவிடப்பட்டு இந்த நாட்டிலே போராட்டங்கள், கிளர்ச்சிகள் என்ற பெயரிலே குழப்பத்தை விளைவித்த போதும் (குறுக்கீடு) அவைகளையெல்லாம் கடமையுணர்வோடு சமாளித்து நாட்டில் அமைதியை நிலைநாட்டிய பெருமை தமிழக காவல் துறையைச் சாரும்.

**திரு. துரைமுருகன் :** சார் பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உட்காருங்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது யாரும் குறுக்கிடவில்லை, இப்போது குறுக்கிட்டுக் கொண்டிருந்தால் என்ன செய்வது? உங்கள் பக்கத்திலிருந்து அடுத்துப் பேசும்போது பதில் சொல்லலாம் (குறுக்கீடு).

**திரு. துரைமுருகன் :** தவறான தகவல்களை உறுப்பினர் சொல்கிறார். அதற்குப் பதில் சொல்ல வேண்டியது எங்கள் கடமை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கடமை எல்லோருக்கும் இருக்கிறது. உங்கள் கட்சியிலிருந்து பேசும்போது பதில் சொல்லுங்கள். இப்போது பேசியது எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது (குறுக்கீடு) திரு. நாராயணன் சீக்கிரம் முடித்துக் கொள்ளவேண்டும்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1982 மார்ச் 22

[முற்பகல் 11.00]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இங்கே பேசும்போது பல்வேறு விவரங்களைக் குறிப்பிட்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு இதிலே சம்பந்தம் இருக்கிறது என்ற வகையிலே பேசிவந்தார்கள். அதை எப்படி நிரூபிக்க முடியும் என்று நாங்கள் கேட்டால் பிரச்னைகள் வரும். அவர் ஒவ்வொரு கொலை வழக்கையும் குறிப்பிடும்போது, அதிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது அதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டால் எப்படி ஆதாரம் கொடுக்க முடியும்? அவர்கள் என்ன சொன்னாலும் எங்களுடைய பதிலிலே விளக்கம் சொல்ல முடியும் என்ற காரணத்தால் அவர்கள் எதை வேண்டுமானாலும் பேசட்டும் என்று பேசாமல் இருந்தோம். அதைப்போன்று ஆளும்கட்சி சார்பிலே பேசும்போது அவர்கள் குறுக்கிடாமல் இருந்து, அவர்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் அதைத் தாங்கிக்கொள்ளாமல் நாங்கள் பேசும்போது இடையிலே குறுக்கிடுவது என்ன நியாயம்?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : :** துணைத் தலைவரவர்களே, திரு. நாராயணன் அவர்கள் பேசும்போது நடைபெற்று முடிந்துவிட்ட ஒரு வழக்கை, செஷன்ஸ் கோர்ட்டில் முடிந்து விட்ட ஒரு வழக்கை 'ரீ ஓப்பன்' செய்கின்ற முறையிலே பேசுகிறார்கள். அந்த வழக்கில் அரசாங்கம் அப்பீல் செய்திருக்கிறது. அப்பீல் பென்டிங்காக இருக்கிறது. அதைப்பற்றி இங்கே பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

**திரு. அ. ரகுமான்கான் :** கோர்ட்டிலே இருக்கும் வழக்கைப்பற்றி இங்கே பேசுவது முறையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கோர்ட்டிலே இருப்பதை பற்றி இங்கே பேச வேண்டாம். இப்போது நடைபெறுவது காவல் துறை மானியக் கோரிக்கை சம்பந்தமான விவாதம். ஆகவே, காவல் துறையை விட்டுவிட்டு, நீதித் துறைக்குப் போக வேண்டாம் ; காவல் துறையோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவரவர்களே, அவர்கள் சில பெயர்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள் ; அதை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கைப் பற்றிச் சொல்லியிருந்தால், நான் அவைக் குறிப்பைப் பார்த்து அதை எல்லாம் நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.



982 மார்ச் 22]

**திரு. பி. ஜி. நாராயணன் :** தலைவரவர்களே, இந்தச் செய்தி
த்திரிகையில் வந்திருக்கிறது. இதில் ஆதாரம் இல்லாமல் நான்
சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பத்திரிகையில் வந்த செய்தி ஆதாரம் ஆகாது (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே,
இன்றும் நாளையும் நடப்பது காவல் துறை மானியத்தின் மீதான
விவாதம். இதிலே பேசும்போது; எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்
கள் காவல் துறை எங்கெங்கே சரியான நடவடிக்கை எடுக்க
வில்லை ; ஆளும் கட்சியினர் தலையீடு என்று குறிப்பிடுவார்கள்.
அதற்கு ஆளும் கட்சியின் சார்பில் பதில் சொல்லுகின்றபோது
எதிர்க்கட்சியினர் ஆட்சியின்போது அந்தக் காலத்தில் என்னென்ன
செய்தார்கள் என்று குறிப்பிடுவார்கள். நீதிமன்றத்திலே ஒரு
வழக்கு இருந்தாலும் அதனுடைய '' பாக்ட்ஸை '' சொல்லலாம்;
ஒப்பினியன் தான் சொல்லக் கூடாது. அந்த வகையிலே பேசு
வதற்கு அனுமதித்தால் தான் சரியாக இருக்கும் என்று நான்
கருதுகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** அரசாங்கம் போட்ட வழக்கு
தள்ளுபடி ஆகி விட்டது. அதைப் பற்றி இங்கே குறிப்பிட்டால்
'' கண்டம்ட் ஆஃப் தி கோர்ட் '' ஆகாதா ? (குறுக்கீடுகள்).

The matter is sub-judice and it is before the High Court now That should not form part of the Proceedings.

**திரு. பி. ஜி. நாராயணன் :** தலைவரவர்களே, * * *

**திரு. அ. ரகுமான்கான் :** *

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர்
அவர்களே, வழக்கு மன்றத்தில் இருப்பதைப் பற்றி பேசுகிற
போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பிறர் மனதைப்
புண்படுத்துகின்ற விதத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி.
நாராயணன் குறிப்பிட்டவைகளை அவைக் குறிப்பில் இருந்து
நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த வழக்குச் சம்பந்தப்பட்ட குறிப்புகளை, அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**திரு. பி. ஜி. நாராயணன் :** சில நேரங்களில் பத்திரிக்கையில் வரும் எழுத்துக்களும், மேடைப் பேச்சுக்களும் வன்முறையைத் தூண்டும் விதத்தில் இருக்கின்றன. ஜனநாயக நாட்டில் சுதந்திரம் இருக்கிறது என்று சொல்லி, எதை வேண்டுமானாலும் பேசலாம், எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்றால், அதிலே சில சமயங்களில் விபரீதங்கள் ஏற்படுகின்ற சூழ்நிலை அமைந்து விடுகிறது. அதிலே அமைதி சீர் குலைவதற்கு வழி ஏற்படுத்தும் நிலைமை வந்து விடுகிறது. ஆகவே, பத்திரிகையில் வன்முறையைத் தூண்டிவிடும் அளவிற்கு கருத்துக்களை வெளியிடும் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடமை உணர்ச்சியோடு பணியாற்றி வரும் காவல் துறை சில சமயங்களில் தங்கள் உயிரையும் பணயம் வைத்து பணியாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுடைய நல்ல சேவையை உணர்ந்தும், பாராட்டியும் அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் தரும் அரசின் நடவடிக்கையை நான் பாராட்டுகிறேன். அந்த அடிப்படையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவர் அவர்கள் தாய் உள்ளத்தோடு அந்தக் காவல் துறையினருக்குப் பல சலுகைகளை அளித்துள்ளதற்காக நாங்கள் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

காவல் துறையினர் சங்கம் அமைத்துக்கொள்ள அனுமதி தந்தும், அரிசி, பருப்பு போன்ற அத்தியாவசியமான பொருள்கள் மலிவு விலையில் தந்தும், காவல் துறையினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க தனித் திட்டம் வகுத்தும், அவர்களின் நல்ல சேவையைப் பாராட்டி பரிசும், பதக்கமும் வழங்கியும் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு ஆண்டு தோறும் முதலமைச்சர் பதக்கங்கள், குடியரசுத் தலைவர் பதக்கங்கள் அளித்தும் வருவதை நல்ல உள்ளம் படைத்த காவல் துறையினர் நல்ல முறையில் பாராட்டிக் கொண்டு வருகிறார்கள். (மணியடிக்கப்பட்டது).

வாகன வசதி குறைவாக இருக்கிறது என்று சொல்லி இங்கே தெரிவிக்கப்பட்டது. உதவி-ஆய்வாளர்களுக்கு மோட்டார் சைக்கிள் கொடுக்கப்பட்டு இருக்கிறது. கைதிகளைக் கைது செய்து, காவல் நிலையத்திற்குக் கொண்டு வருவதோ அல்லது காவலர்களை அழைத்துக்கொண்டு குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கச் செல்வதற்கோ இதைப் பயன்படுத்திக்கொள்ள முடியாது ஒரு சர்க்கிள்ளுக்கு 6—7 போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. ஆகவே, ஒரு சர்க்கிளுக்கு ஒரு ஜீப் என்ற முறையில் வாகன வசதி ஏற்படுத்திக் கொடுத்தால், காவல் துறையினர் நல்ல முறையில் பணியாற்ற வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).





**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிக்க முதலமைச்சர் அவர்களால் இந்த மன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள காவல்துறை மானியத்தின் மீதும், தீயணைப்புத் துறை மானியத்தின் மீதும் இந்திய தேசீயக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து எனது ஒரு சில கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

இங்கே மன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையிலே மக்கள் நல மேம்பாட்டையும், பொது அமைதியையும், ஒழுங்கையும் நிலை நாட்டுவது என்றும், அறத்தைக் காப்பதும் அறம் அல்லாதவைகளை மக்களிடையே போக்குவதும் காவல் துறையின் இன்றியமையாத பணியென்றும், காவல் துறை என்பது "காப்பது, தடுப்பது" என்ற இரண்டு வகைகளால் இயங்கும் துறை என்றும், தடம் மாறாது விழிப்புணர்வை தன்னகத்தே கொண்டுள்ளதும் என்று சொல்லப்பட்டு இருப்பது உண்மையாக இருக்க வேண்டும் என்றால், அது நிதர்சனமான முறையில் நடைபெற வேண்டுமானால், போலீஸ் இலாகா நிர்வாகத்தை பாரபட்சமற்ற நேர்மையான சுய ஆதிபத்தியம் படைத்த நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று முதற்கண் குறிப்பிட விரும்புகிறேன்.

[முற்பகல் 11-10]

முன்னாள் மேற்கு வங்க கவர்னர் தர்மவீரர் தலைமையில் அமைக்கப்பட்டிருந்த போலீஸ் கமிஷன் சிபாரிசுகளில் பலவற்றை பார்க்கும்போது அரசியல்வாதிகளுடைய தலையீடு ஆளுங்கட்சிகள் மாறும்போது போலீசாருடைய செயல்பாட்டு முறையும் மாறி ஒருதலைபட்சமான போக்கு தலை தூக்குவதை தடுக்க இது போன்ற ஒரு ஏற்பாடு அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதை கருத்தில் கொண்டு ஒரு சுயாதிப்த்தியம் பெற்ற அமைப்பை உருவாக்க வேண்டும். ஆளுங்கட்சிக்காரர்களுக்கு கைப்பாவைகளாக போலீசார் செயல்படும் அவலநிலையை போக்குவதற்கு இது பெரிதும் உதவிகரமாக இருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னதைப்போல—தலையில்லாத முண்டம் என்று சொன்னால் நன்றாக இருக்காது—எனவே தலையில்லாத துறையாக இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். அப்படிப்பட்ட தலையில்லாத ஒரு துறையைப் பற்றி நாம் இங்கே விவாதிக்க வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது. போலீஸ் துறையின் தலைமை அதிகாரி என்ற வகையில் டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்று ஒரு பதவி உருவாக்கப்பட்டது. அதற்கு அடுத்தடுத்து மூவர் நியமிக்கப்பட்டு, அந்த

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 மார்ச் 22

3 பேர்களுக்கும் பதவி ஓய்வு வருகிற காலத்திலே கூட, அவர்களுக்கு பதவி நீட்டிப்புக் கொடுக்கப்பட்டது. அப்படிக் ட காடுக்கப்பட்ட காரணத்தினால், போலீஸ் அதிகாரிகள் மேல்மட்ட லெவலில் முணுமுணுப்பும் மனக்கசப்பும் இருந்து வந்திருக்கிறது. இது ஒரு முறை பிசகான காரியம் என்ற வகையில் அதிகாரிகள் மட்டத்தில் மனக்கொதிப்பும் அதிருப்தியும் மேலோங்கியிருக்கிறது என்றும் கூறிக்கொள்ளவிரும்புகிறேன். திரு. அப்துல்லா அவர்கள் பதவி விலகி சவூதி அரேபியாவிற்கு தூதுவராக சென்றபிறகு, போலீஸ் துறையின் தலைவராக எவருமே நியமிக்கப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்று அறிய பொதுமக்களைப் போலவே, இந்த மன்ற உறுப்பினர்களாகிய நாங்களும் தெரிந்துக் கொள்ள ஆவலாக இருக்கிறோம். இத்துறைக்கு ஒரு தலைவரை நியமிக்க முடியாததற்கு அரசாங்க மேல்மட்டத்தில் ஊசலாட்டம் ஏற்பட்டுவிட்டது என்பதுதான் காரணமா? அல்லது யாரை நியமித்தால் என்ன விளைவு ஏற்படுமோ, யாரை பகைத்துக் கொள்ளவேண்டிய நிலைமை உண்டாகுமோ என்ற அச்சம் காரணமா என்று கேட்கவிரும்புகிறேன். ஏறத்தாழ 10 மாதங்களுக்கு மேலாக இந்தத் துறையின் தலைவர் பதவி காலியாகவே உள்ளது அல்லது இதற்கு முன்னாலே தலைமை செயலர் அந்தஸ்தில் எட்டு பதவிகளை உருவாக்கியதைப்போலவும் எட்டு ஐ. ஜிக்களை உருவாக்கியதைப் போலவும், டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் பதவியின் எண்ணிக்கையையும் உயர்த்த அரசு எண்ணியுள்ளதோ என்ற ஐயமும் எழுகிறது. அது நியாயமான ஐயம் தான். அப்படிச் செய்தால் அது ஒன்றும் இந்த ஆட்சிக்கு புதிதல்லவே.

அடுத்ததாக, இன்றைய தினம் மாநிலத்தில் இனக்கலவரங்கள், வகுப்பு மோதல்கள் நடைபெறுவது, சட்டம் ஒழுங்கு குலைக்கப்படுவது, அநேகமாக அன்றாட சம்பவங்கள் ஆகிவிட்டன என்று சொன்னால் அது மிகையாகாது. சென்ற வாரம் கூட கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட வகுப்புக் கலவரம் குறித்து இந்த மன்றத்திலேயே விவாதித்து இருக்கிறோம். தென்காசி அருகே இதுபோன்ற வகுப்புக் கலவரம் நடைபெற்றிருப்பதாக இன்றுகூட பத்திரிகையிலே பார்த்தோம். சட்டம் ஒழுங்கு நிலை குலைந்து விட்டது என்பதற்கு இதைவிட என்ன அத்தாட்சி வேண்டும்? இந்தக் குறைபாட்டை போக்க மாநில ரகசிய புலனாய்வுத்துறையை பயன்படுத்தவேண்டும் என்பது என்னுடைய ஒரு யோசனை. இதற்கான காரண காரியங்களை முன்கூட்டியே தகவல் சேகரிக்கும் வகையில் மாநில குற்றப் புலானய்வுத் துறைக்குத் தேவையான வசதிகளைசெய்து கொடுக்க அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 1981-ஆம் ஆண்டிலே மட்டும், நடைபெற்ற கலவரங்களின் காரணமாக 23 இடங்களில் துப்பாக்கி சூடும், ஏறக்குறைய 20 முறை கண்ணீர்ப்புகை குண்டு வீச்சும் நடை



1982 மார்ச் 22] [திரு. என். எஸ். வி. சித்தன்]

பெற்றிருப்பதாக தக்வல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆய்வுத் துறையின் எட்டாம் பக்கத்தில் 1980-ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மொத்த வழக்குகளில் 29·4 சதவீத வழக்குகளும், 1981 ஆம் ஆண்டில் 35·7 சதவீத வழக்குகளுக்குமே துறையினால் தண்டனை பெற்றுத் தர முடிந்தது என்பதைப் பார்க்கும்போது, இவ்வளவு குறைந்த அளவிற்கே குற்றங்கள் நிரூபிக்கப்படுகின்றன என்பதை கவனிக்கும்போது, புலன் விசாரணைகள் சரியாகச் செய்யப்படாததாலும், சாட்சியங்களைச் சரியானபடி பயன் படுத்திக் கொள்ளாததும், வழக்கு மன்றங்களுக்கு உரிய காலத்தில் சென்று வழக்குகளை உரிய முறையில் எடுத்து உரைக்காததுமே இதற்குக் காரணங்களாக இருக்க முடியும் என்று தோன்றுகிறது. ஆகவே, இனி வருங் காலத்திலேயாவது வழக்குகளைப் பதிவு செய்யும்போதே, உண்மையான வழக்குகளாக இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்தே பதிவு செய்ய வேண்டும். அதற்கு உரிய கவனத்தை செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, உண்மைக்குப் புறம்பான வழக்குகளை பதிவு செய்வதை போலீசார் தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே விசாரணைக்காக உள்ள வழக்குகள் 1980-ஆம் ஆண்டு 59·1 சதவீதம் என்றும், 1981-ஆம் ஆண்டில் 69·1, சதவீதமாகவும் இருக்கிறது. இவைகளையும் கணிசமான அளவில் குறைக்க காவல்துறையினர் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் சுட்டிக் காட்டவிரும்புகிறேன்.

அடுத்ததாக, காவல்நிலையங்களில் பெண்கள் விசாரணைக்காக அழைத்து வருவதில் பல்வேறு தவறுகள் நடைபெறுவதாகவும், அதனால் விசாரணைக்காகக் கூட காவல் நிலையத்திற்கு பெண்களை அழைத்து வரக்கூடாது என்றும், வேண்டுமானால் அவர்களை வீட்டிற்கே சென்று விசாரித்து, பின்னால் தேவைபட்டால், நீதிமன்றத்திற்கு அப்படியே அழைத்துச் செல்ல வேண்டும் என்று உத்தரவிருப்பதாகவும் அறிகிறேன். ஆனால் நடைபெறும் சம்பவங்கள் இந்த உத்தரவிற்கு மாறாகவே உள்ளன. உதாரணத்திற்காக சொல்லவேண்டுமானால், அண்மையில் சிதம்பரத்தில் கலைமதி என்னும் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த இளம்பெண், இரவு இரண்டாவது காட்சி சினிமா பார்த்துவிட்டு செல்லும்போது, சிதம்பரத்தின் டெபுட்டி சூப்பிரண்டெண்டண்ட், அந்தப் பெண்ணையும் அவளோடு இருந்த பெண்ணையும் வழியில் தடுத்து நிறுத்தி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்.

இரவு முழுவதும் கொடுமைப்படுத்தப்பட்டு சித்திரவதைப் படுத்தியதன் காரணத்தால் அந்தக் கலைமதி என்ற பெண் அவமானமடைந்து இந்நிகழ்ச்சி நடந்த மறுநாள் வீட்டிற்கு வந்து மண்ணெண்ணெயைத் தன் உடம்பில் ஊற்றிக்கொண்டு சாவதற்கு முயற்சி செய்யக்கூடிய ஒரு துர்பாக்கியமான நிலைமைக்கு அவர் ஆளாக்கப்பட்டு ரண காயங்களுடன் சிதம்பரத்திலே உள்ள தலைவர் காமராஜ் மருத்துவமனையிலே சேர்க்கப்

பட்டிருக்கிறார். ஆனால் முறையாக சிகிச்சை அளிக்கப்படாமல் மருத்துவ மனையிலே உள்ளவர்களின் தூண்டுதலின் பேரிலே வெளியே அனுப்பப்பட்டார். பல்வேறு கட்சிக்காரர்கள் வற்புறுத்திய காரணத்தால் மீண்டும் சேர்க்கப்பட்டு இன்றையதினம் போலீசாருடைய காவலிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம் அபலைப் பெண்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டும் என்ற வகையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு படங்களில் நடித்திருக்கிறார்கள். இன்றைய தினம் அப்படி நினைத்துக்கொண்டிருக்கிறார். ஆகவே இந்தமாதிரி சம்பவங்கள் நிகழ்வதும், வேலியே பயிரை மேய்கின்ற நிலைமைகள் இருப்பதையும் நாம் எப்படி அனுமதிக்க முடியும்? இதோ அந்தப் பெண்ணின் படம் என்னிடத்தில் இருக்கின்றது. (தன்னுடைய கையிலே வைத்திருந்த ஒரு புகைப்படத்தைக் காட்டினார்). ஆகவே மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அந்த டி.எஸ்.பி. அவர்களுடைய பெயர் ஜோசப் என்று நினைக்கிறேன். அவர் வேறு ஊருக்கு மாற்றப்பட்டிருக்கிறார் என்ற செய்தி வந்திருக்கின்றது. இவ்வளவு பெரிய கொடுமையைச் செய்தவரை மாற்றுவது என்பது ஒரு தண்டனையா? ஆகவே அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அவருக்கு உடனடியாக சஸ்பென்ட் உத்தரவு வழங்கப்படவேண்டும். வருகின்ற காலங்களில் இனிமேல் அப்படி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று முதலமைச்சரவர்கள் உறுதி அளிக்க வேண்டும் என்று கேட்பது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் லாக் அப்பிலே மரணம் அடைந்தால் அப்போது அதனைக் கொலைக் குற்றமாகக் கருதி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முடிந்த அளவுக்கு காவல் நிலையங்களுக்கு கொண்டு வந்து லாக் அப்பிலே அடைக்காமல் நேரடியாக குற்றம் சாட்டப்பட்டவர்களை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்கின்ற முறை பற்றி அரசு ஆலோசனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னையைப் போல் பெரு நகரங்களிலும் மற்றும் தமிழகத்திலே உள்ள பல்வேறு காவல் நிலையங்களிலும் 24 மணி நேரத்திற்கு மேலாக லாக் அப்பில் வைத்துக் கொள்ளக்கூடாது என்று விதி இருந்தாலும் கூட ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்கள் கூட வைத்து இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் ஒரு மாதம் கூட வைத்துக்கொள்ளக் கூடிய நிலைமை இருக்கின்றது, அதற்கான சான்றுகளைச் சொல்ல முடியும். எத்தனையோ பேர் இப்படி லாக் அப்பிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். லாக் அப்பிலே சுகாதார வசதிகள் இல்லாத நிலைமைகள் இருப்பதன் காரணத்தால் இந்த லாக் அப் பற்றி ஒரு தெளிவான முடிவு எடுக்க வேண்டும்.



அடுத்து லாக் அப்பிலே ஒருவர் மரணம் அடைந்தால் அதைப் பற்றி துணை கலெக்டர் அவர்கள்தான் விசாரணை செய்ய வேண்டும். அதன்படி லாக் அப்பிலே இறந்தவர்களில் 100-க்கு 99 பேர் இயற்கையாக மரணம் அடைந்தார் என்ற அந்த தீர்ப்புத் தான் கிடைக்கின்றது. ஆகவே இனிமேல் வருகின்ற காலங்களிலாவது யாராவது இப்படி லாக் அப்பிலே இறந்தால் உடனடியாக அரசாங்கம் நீதிவிசாரணைக்கு ஏற்பாடு செய்தால் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் குறைக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து காவல் துறையில் உள்ள மிகப் பெரிய பதவிகளான டைரக்டர்-ஜெனரல் பதவியைப் போலவே ஐ.ஜி. என்போர்ஸ்மென்ட் பதவியும், அடிசனல் ஐ.ஜி. அட்மினிஸ்ட்ரேஷன் பதவியும் கடந்த பல மாதங்களாகவே நிரப்பப்படாமல் இருக்கின்றன. டைரக்டர்-ஜெனரல் பதவி நிரப்பப்படாமல் இருப்பதன் காரணத்தால் ஐ.ஜி-க்களின் பணிகளை ஒருங்கிணைக்கும் பணி சரியாக நடைபெறவில்லை. சில நேர்வுகளில் மேல் முறையீடுகளுக்குத் தீர்ப்பு வழங்கும் அதிகாரம் டைரக்டர்-ஜெனரலிடம் இருக்கின்றது. இதுபோன்ற பல பணிகள் முடக்கப்பட்டிருப்பதான நிலைமை தமிழகத்திலே பல மாதங்களாக இருக்கின்றது.

அடுத்து ஆர்டர்லி முறையினை இந்த அரசு ரத்து செய்யும் என்று இரண்டாண்டுகளுக்கு முன்பு அறிவித்ததாக நான் அறிகிறேன். ஆனால் இன்று வரையில் இந்த ஆர்டர்லி முறை ரத்து செய்யப்படவில்லை. உயர் அதிகாரிகளின் வீடுகளுக்கு நியமிக்கப்படுகின்ற ஆர்டர்லிகளின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டிருக்கின்றது.

அடுத்து போலீஸ்காரர்கள் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னாலே தேர்வு செய்யப்பட்டார்கள். ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏறத்தாழ 300 ரூபாய்க்கும் அதிகமாக செலவாகிறது என்று சொல்லப்படுகின்றது. அப்படி செலவழித்து ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இன்னும் பயிற்சிக்காக அனுப்பப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய சான்றிதழ்களும் திரும்ப வழங்கப்படாமல் இருக்கின்றன. இப்படி எந்தப் பதவிகளுமே நிரப்பப்படாத நிலைமை இன்றைய தினம் உருவாகிக்கொண்டிருக்கின்றது. அதேபோன்று சப்-இன்ஸ்பெக்டர்கள் இன்றையதினம் நியமிக்கப்படாமல் இருப்பதால் அந்த வேலைக்கு வந்தவர்களின் மத்தியிலே ஒரு குழப்பமான நிலைமை இருந்து கொண்டிருக்கின்றது.

அடுத்து போலீஸ் கோஆப்பரேட்டிவ் சொசைட்டியிலே ஊழல் இருப்பதன் காரணத்தால் அங்கே உள்ள 3,200 உறுப்பினர்களில் 2,700 பேர் ராஜினாமா செய்திருப்பதாக நான் அறிகிறேன். அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 மார்ச் 22

[முற்பகல் 11-20]

பத்தாண்டுகளுக்கு மேலாக நன்கு பணிசெய்பவர்களுக்
குட் சர்வீஸ் அலவன்ஸ் ஒரு ரூபாய் கொடுப்பதாக அறிகிறேன்.
இதை உயர்த்த வேண்டும்.

மாநிலத்தில் உள்ள பல உயர்தர போலீஸ் அதிகாரிகளுக்கு
குடியிருப்புகள் அமைக்கப்படவில்லை. போலீஸ்
கமிஷனர் அவர்கள் கூட இதற்கு விதிவிலக்கு இல்லை என்று
அறிகிறேன். புதுக்கோட்டை, ராமநாதபுரம், பெரியார்
மாவட்டங்களில் உள்ள எஸ். பி., டி. எஸ். பிக்கள் இவர்
களுக்கு வீடுகள் வழங்கப்படவில்லை என்று அறிகிறேன்.
தமிழ்நாட்டில் 40,000 க்கு மேற்பட்டு காவலர்கள்
இருக்கிறார்கள். அவர்களில் 12,000 பேர்களுக்குத்தான் வீடு
கள் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே காவலர்கள் தங்கள்
கடமைகளை சரிவர நிறைவேற்ற, அவர்கள் குடும்பங்கள்
அமைதியாக இருக்க அவர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக்
கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்
கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

முதல் அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் அறிவிக்
கப்பட்டு காவலர்களுக்கு மலிவு விலையில் உணவுப்பொருட்கள்
வழங்கும் திட்டம் இன்று தள்ளாடிக் கொண்டிருப்பதாக
அறிகிறேன். 24 யூனிட்ஸ் என்று இருந்தது. ஒரு குடும்பத்
திற்கு அதிகபட்சம் நான்கு பேர்கள் என்றிருந்தது. இப்
போது அந்த 24 யூனிட்ஸ் என்பது 16 யூனிட்சாக
குறைக்கப்பட்டு இருப்பதாக செய்தி கிடைத்திருக்கிறது.

யூனிபாரம் அலவன்ஸ் இரண்டாண்டுக்கு ஒருமுறை ரூ. 120
கொடுக்கிறார்கள். இன்றுள்ள விலைவாசி நிலைமையில் இது
மிக மிகக் குறைவாகும். எனவே இதை கணிசமாக உயர்த்திக்
கொடுக்க வேண்டுமென்றும் அதற்கான நடவடிக்கைகளை
முதல் அமைச்சர் அவர்கள் எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

ஓய்வுபெற்ற இராணுவத்தினருக்கு டயரக்ட்ரேட் ஆப் சர்
வீஸ்மென் என்றிருப்பதுபோல் ஓய்வுபெற்ற காவலருக்கும்
ஒரு டயரக்ட்ரேட் இருக்குமானால் அவர்கள் சந்ததியினர்
நல்வாழ்வு பெற அது உதவியாக இருக்கும்.

போலீஸ் மினிஸ்டிரியல் ஸ்டாஃபை பொறுத்தவரையில் 892
பேர்கள் அதிகமாக வேண்டுமென்று கேட்டதற்கு 92 பேர்களுக்கு
மட்டும்தான் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அறிகிறேன்.
இதையும் கணிசமாக உயர்த்த வேண்டும்.



1982 மார்ச் 22] [திரு. என். எஸ். வி. சித்தன்]

டிஸ்மிஸ் செய்யப்பட்டு
காவலர் ஸ்ட்ரைக்கின்போது
பிறகு வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கு, சுமார் ஆயிரம்
பேர்களுக்கு இன்னும் அதற்கான ஊதியம் வழங்கப்படவில்லை
என்று தெரிகிறது.

சங்கம்
ஒட்டன்சத்திரத்தில் தமிழ்நாடு விவசாயச்
புறம்போக்கு நிலத்தில் கட்டிய ஏறத்தாழ மூன்று இலட்சம்
பெறுமானமுள்ள கட்டடத்தை தடுப்பாணை வழங்கப்பட்ட
காரணத்தால்; கட்டும்போது அதைப் பார்த்துக் கொண்டிருந்து,
நிலை வைக்கும்போது பார்த்துக் கொண்டிருந்து விட்டு
அந்தக் கட்டி முடிக்கிறவரையில் பார்த்துக் கொண்டிருந்து
விட்டு அதன் திறப்பு விழாவிற்கு இரண்டு நாட்களுக்கு
முன்னால் அதிகாரிகள் முனைப்பாக வேலை செய்கிறார்கள்.
உடனடியாக புல்டோஸர் போகிறது, மூன்று லட்சம் ரூபாய்
பெறுமானமுள்ள அந்தக் கட்டிடம் இடித்துத் தள்ளப்பட்டு
தரைமட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்).

திரு. கே. குப்புசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்பு
மிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் ஒட்டன்சத்திரத்தில்
விவசாயிகள் சங்கக்கட்டடம் இடித்தது பற்றிக் குறிப்பிட்டார்
கள். அவர்களுக்கு சரியான தகவல் கிடைக்கவில்லை என்று
எண்ணுகிறேன். காரணம், ஒட்டன்சத்திரம் பேரூராட்சி
அனுமதி பெறாமல் விவசாய சங்கம் அந்தக் கட்டடத்தைக்
கட்டியிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்கு போடப்பட்
டிருக்கிறது. நோட்டீஸ் முறைப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது.
(குறுக்கீடு) நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது, பதில் எதிர்
பார்க்கப்படுகிறது, மீண்டும் நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது,
எச்சரிக்கை கொடுக்கப்படுகிறது, இப்படி பல ஸ்டேஜ்கள்
உள்ளன. வழக்கு போடப்பட்டது. இன்ஜெங்க்ஷன்னையும்
மீறி அவர்கள் கட்டி விழா எடுக்கும்போது சட்டத்திற்
குட்பட்டுத்தான், கோர்ட் ஆணைக்குட்பட்டுத்தான் அந்தக்
கட்டடம் இடிக்கப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் கேட்கவிரும்புகிறேன்,
இதுமாதிரியான தடுப்பு ஆணைகள் வழங்கப்பட்டதற்குப்
பின்னால், தமிழகத்திலே எத்தனைக் கட்டிடங்கள்
நின்று கொண்டிருக்கின்றன ? தமிழகத்திலே இது
மாதிரி புறம்போக்கு நிலங்களிலே கட்டப்பட்ட கட்டிடங்கள்
இல்லை என்று சொல்ல முடியுமா? நான் இன்னும் கேட்க
விரும்புகிறேன். இது மாதிரியான காரியத்தை அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நகரச் செயலாளர்
செய்திருக்கிறார். அதைத் தடுத்திருக்கிறீர்களா? இப்படி
முறைப்படி லைசென்ஸ் பெறாமல், பல இடங்களிலே கட்டி
டங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் இடிக்
கப்பட்டிருக்கின்றனவா ? அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக நகரச் செயலாளர் இப்படி கட்டி
யிருக்கிறார். நான் கேட்க விரும்புகிறேன். ஒட்டன்

சத்திரத்திலே முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்தக் கட்டிடத்தை இடிக்கப் போன புல்டோசர், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நகரச் செயலாளர் வீட்டிற்குப் போகுமா? பொறுத்திருந்து நான் பார்க்கத் தயாராக இருக்கிறேன். அதைப்போலவே, நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்............ (கூச்சல்).

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரிடத்தில் நான் இந்த நேரத்தில் ஒரு விளக்கம் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். டெல்லியிலே, அனுமதி கொடுக்கப் பட்டு, கட்டப்பட்ட அழகான கட்டிடங்கள் இடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் இந்த நேரத்தில் நான் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டெல்லியிலே நடவடிக்கை எடுக்கப் பட்டதைப் பற்றிச் சொன்னார்கள். சஞ்சய்காந்திப் பற்றிக் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் யார் பெயரையும் சொல்லவில்லை. இறந்து போனவர் பெயரைச் சொல்லக் கூடாது.

**திரு. அ. ரகுமான்கான் :** மகாத்மாகாந்தி பெயரைச் சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இறந்தவர்கள் பெயரை நல்லவற்றுக்கு உபயோகப்படுத்தலாம். ஆனால் குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் பெயரைச் சொல்லக் கூடாது.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, டெல்லியிலே அந்தக் கட்டிடங்களினால் பல்வேறு சிரமங்கள், சங்கடங்கள் இருந்ததால், அப்படிச் செய்தார்கள். ஆனால், அதற்காக அவர்களுக்கு மாற்று இடங்கள் கொடுக்கப்பட்டன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு துணை தலைவர் அவர்களே, இது காவல் துறை மானியம். இதிலே எல்லோரும் பேசினால் நல்லது. இதைத் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் காவல் துறையைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறேன்.





தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இளைஞர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தோழர்கள் தாக்குதல் நடைபெற்று வருகிறது (சிரிப்பு).

இந்தச் சிரிப்பிற்கு என்ன அர்த்தம்? இளைஞர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் தாக்கப்படுகிறார்கள் என்றால், என்ன கேலி செய்கிறீர்கள்? இப்படிச் செய்யலாமா?........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படியெல்லாம் ஒன்றும் செய்யக் கூடாது?

(முற்பகல் 11-30).

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அண்மையிலே ராஜ்யங்கள் அவையிலே பதவியேற்பதற்காகச் சென்று வந்த நடிகர் திலகம் அவர்களுக்கு வரவேற்புக் கொடுக்க காங்கிரஸ் தொண்டர்கள் சென்னை விமான நிலையத்திலே கூடி இருந்த நேரத்திலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த அவையிலே நாம் ஏற்கனவே பேசிய சில விளக்கங்களை திரும்பத் திரும்பப் பேசிவருகிறோம். ஏற்கனவே இதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசுகிறபோது பேசியாகி விட்டது. ஏற்கனவே பேசியதையே மீண்டும் பேசாமல் இருப்பது நல்லது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஓட்டன்சத்திரம் நிகழ்ச்சிபற்றி ஆய்வு குறிப்பிலேயே சொல்லப் பட்டிருக்கிறது. இது ஒன்று. இரண்டாவது, இது அண்மையிலே நடந்தது, இதுபற்றி நான் காவல்துறை மானியத்திலே பேசாமல் வேறு எதிலே பேசுவது? விமான நிலையத்திலே காங்கிரஸ் தொண்டர்கள் தாக்கப்பட்டு காயம் அடைந்து இருக்கிறார்கள். பேரவை உறுப்பினர் திரு. ராஜசேகரன் அவர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய கவலை எல்லாம் கூட்டம் வருகின்ற இடங்களிலே எவ்வளவு கூட்டம் வரும் என்று எதிர்பார்த்து காவல் துறை முறையாக நடந்திருந்தால் இப்படிப்பட்ட அசம்பாவிதம் நடந்திருக்காது. வரும் காலத்திலே முன்னெச்சரிக்கையோடு காவல் துறை நடந்துகொள்வதன் மூலம் நல்ல நிகழ்ச்சிகளுக்கு மாசுபடுத்தக்கூடிய நிலைமையை ஏற்படுத்தக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே நடைபெற்ற கலவரங்களைப் பற்றிச் சொன்னேன். பெரிய அதிகாரிகள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாற்றப்படுகின்ற நேரத்திலே இங்கே நமக்கு யாரையாவது பிடிக்கவில்லை என்றால் கன்னியாகுமரிக்கு மாற்றிட வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அந்த நிலைமை

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 மார்ச் 22

இல்லாமல் நல்ல அனுபவம் மிகுந்த அதிகாரிகளை கன்னியா குமரிக்கு போட்டால் இதுமாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையிலே நிலவுகின்ற லஞ்ச ஊழல்கள் களையப்பட வேண்டும். திடீர் சோதனைகள் மூலமாக தக்க அதிகாரிகளைக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான் கள்ளச்சாராயக் காய்ச்சல், விற்றல், சூதாட்ட கிளப் போன்ற நடவடிக்கைகள் தடுக்கப்பட முடியும். அகில இந்திய அண்ணா தி.மு.க. நகரச் செயலாளர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக சாதாரண நிலைமையிலே இருந்தவர் இன்று சூதாட்டக் கிளப் நடத்தி கொழுத்த பணம் சேர்த்திருக்கிறார். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குற்றச்சாட்டு வேண்டாம், ஜெனரலாக மானியத்திலே பேசுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: நான் நகரச் செயலாளர் என்று தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது வேண்டாம், ஒரு கட்சியைப்பற்றிப் பேசினால், அடுத்த கட்சியைப் பற்றி அவர்கள் சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, அவர் தனிப்பட்ட ஒருவர் பற்றி இங்கே குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார். குற்றஞ் சுமத்தியிருக்கிறார். அப்படிக் குற்றம் சுமத்துகிறபோது அதற்கான பதிலைத் தருகிற வாய்ப்பு வெளியிலே இருக்கின்றவர்களுக்கு இல்லை. ஆகவேதான் நம்முடைய விதிமுறைகளிலே, சபையிலே இல்லாத ஒருவரை குற்றஞ்சாட்டக்கூடாது என்று போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சட்ட மன்றத்திலே நல்ல அனுபவம் உள்ளவர்கள். அவர்கள் எந்த அடிப்படையிலே அப்படிப் பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: துணைத் தலைவர் அவர்களே, சபையினுடைய விதிகளை நன்றாக அறிந்துகொண்டு தான் பேசினேன். நான் சொல்கிற குற்றச்சாட்டுகளுக்கு முழுப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு நானே நேரிலே கண்டறிந்த காரணத்தினாலே இந்த சபையிலே நான் சொல்ல விரும்புகிறேன். (அவையில் சில விளக்குகள் எரியவில்லை). அதனால் தான் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு அவருடைய பெயரை நான் சொல்லாமல் ஊரைச் சொல்லாமல் சொல்லியிருக்கிறேன். முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் தெரிவித்தால் நான் அவற்றைச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.



1982 மார்ச் 22]

திரு. ப. பொன்னுரங்கம்: அவையில் ஆளுங்கட்சிப் பக்கம் விளக்குகள் எரிகின்றன, எங்கள் பக்கம் எரியவில்லை, பாரபட்சம் ஏதாவது இருக்கிறதா?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மின்சாரத்திற்கு ஆளுங்கட்சி எது என்று தெரியாது. அமருங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எப்படி நடக்கிறது என்று தெரிந்து சொல்கிறேன். ஒரு வேளை அவரவர்களுடைய நல்வினை, தீவினைபடி வருகிறது என்று நினைக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: தீவினை தான் அப்படி என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆண்டவன் பெயரில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: எனக்கு ஆண்டவன் மேல் நம்பிக்கை கிடையாது. வினை என்றால் செயல் என்று அர்த்தம்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்வினை, தீவினை பயனாகத்தான் மின்சாரம் வரும் என்றால் அதற்காக அமைச்சரும், ஒரு வாரியமும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து உறுப்பினர் உமாநாத் அவர்கள். எவ்வளவு குறுக்கீடுகள் இந்த காவல்துறை மானியத்தில். ஆண்டவனை விவாதித்துக் கொண்டிருப்பதற்கு இதுவா நேரம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கீடுகள் வந்துவிட்டன. எலெக்ட்ரிக் கரன்ட் கூட இல்லை. இரண்டு நிமிஷத்தில் முடித்துவிடுகிறேன். என்னுடைய திருமங்கலம் தொகுதியில் கள்ளிக்குடி ஒன்றியத்திலே, வீரப்பெருமால்புரத்திலே காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது. அதனை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவோடு ஏற்றுக் காண்டு, காவல் நிலையத்தை திறப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாகையாபுரத்தில் காவலர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற பிரச்னை இருக்கிறது. அதையும் நிறைவேற்றித் தரவேண்டும்.

(திரு. என். எஸ். வி. சித்தன்] [1982 மார்ச் 22

தீயணைப்புத் துறையை குறித்து ஒரே ஒரு வார்த்தை. திருமங்கலத்தை சுற்றி சிறிய, பெரிய தொழில்கள் வளர்ந்து வருகிற காரணத்தால், திருமங்கலத்திலே தீயணைப்பு அலுவலகம் ஒன்று ஏற்படுத்த வேண்டும். நான் இந்த ஆய்வு அறிக்கையிலே பார்க்கிறேன். முன்னுரிமை கொடுக்கப்பட்டவைகளில் அது இரண்டாவது இடத்திலே இருக்கிறது. அதற்கான இடத்தை ஆர்ஜிதம் செய்கிற வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆர்ஜிதம் செய்கிற பணிகள் காலதாமதமாகிற காரணத்தால் திருமங்கலத்தின் மத்தியிலே இருக்கிற சந்தையிலே வாடகைக்கு ஒரு இடத்தை எடுத்துக்கொண்டு இந்த ஆண்டே திருமங்கலத்தில் தீயணைப்புத் துறை அலுவலகம் ஏற்படுத்த வேண்டும். புதிய வாகனமாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும். பல இடங்களில் பழைய வாகனமாக கொடுத்திருப்பதால் தீயணைப்பு வேலைகளைச் சமாளிக்க முடியவில்லை என்பதை இந்த நேரத்தில் கூறி, தீயணைப்புத் துறை அலுவலகம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை மாற்றார் ஆதிக்க இருள் கவ்வி வேட்டைக் காடாக மாற்றி விடுமோ என்று ஒவ்வொரு தமிழ் குடிமகனும் நியாயமாக அஞ்சுகிற சூழ்நிலையிலே, அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுத்த அனுமதிக்க மாட்டேன் என்று வீர முழக்கம் இட்டு தமிழ் நெஞ்சங்களிலே ஆறுதல் பாலை வார்த்துக்கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள் முன் மொழிந்துதிருக்கிற காவல் துறை, தீயணைப்புத் துறை மானியங்களிலே கலந்து கொண்டு பேசுவதற்கு ஒரு வாய்ப்பு பெற்றமைக்கு நான் முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை காணிக்கையாக்குகிறேன்.

மக்களின் மேம்பாட்டையும், பொது அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதுதான் காவல் துறையினுடைய கடமை என்பதை நாம் அனைவரும் ஒத்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். நாட்டின் மிகச் சிறந்த திறமை மிக்க காவற்படை தமிழ் நாட்டின் காவற்படையே என்கிற நல்ல பெயரையும், புகழையும் தமிழ்நாட்டு காவற்படை இன்று சில ஆண்டுகளுக்கு பின்னாலே இடைவிடாது பாதுகாத்து வருகிறது என்பதை சொன்னால் அந்தப் பெருமை எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்ற காரணத்தினால் தான் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாரதியார் கண்ட பெண்மையை நனவாக்க வேண்டுமென்று தமிழகத்தில் பாரதியார் நூற்றாண்டு கொண்டாடப்படுகிற இந்த நேரத்திலே இந்தியாவிலேயே முதல் முதலாக பெண்கள் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ள அந்த பெருமையைத் தேடித் தந்த இந்த பெருமை தமிழ் மாநிலத்திற்குத்தான் உண்டு என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



1982 மார்ச் 22] [திரு. சி. கோபால்]

[முற்பகல் 11-40]

தமிழ்நாட்டிலே உள்ள அனைத்து முக்கியக் காவல் நிலையங்களிலும் தனியே பெண் காவலர் பிரிவு ஏற்படுத்துவது என முடிவு சய்துள்ள புரட்சித் தலைவர் அவர்களை இன்று நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை 1977ஆம் ஆண்டுக்கு முன்பாக இருந்த நிலைமையை விட, 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னாலே, களவாடப்பட்ட சொத்துக்களை மீட்டுக் கொடுத்த அந்தப் பெருமை, புரட்சித் தலைவர் அரசினைச் சாரும் என்பதனை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளகிறேன். 1980 ஆம் ஆண்டிலே, களவாடப்பட்ட சொத்துக்களிலே 47·8 சதவீதம் மீட்கப்பட்டன. 1981–82 ஆம் ஆண்டில் களவாடப்பட்ட சொத்துக்களிலே 53·3 சதவீதம் மீட்கப்பட்டு விட்டன.

அது போன்று தமிழகத்திலே, காவல் துறை எந்த அளவிற்குச் செயல்பட்டு வருகின்றது, காவல் துறையினருக்கு எந்த அளவிற்கு நல்ல எண்ணத்தினுடைய அடிப்படையிலே, புரட்சித் தலைவர், எப்படிப்பட்ட வசதிகளை எல்லாம் செய்து வருகிறார்கள் என்பதை மட்டும், குறிப்பாக, சுருக்கமாகச் சொல்கின்ற நிலையிலே தமிழ்நாடு காவலர் நல நிதி, தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு விழா படிப்பு உதவித் தொகை நிதி, தமிழ்நாடு காவலர் குடும்பநல நிறுவனம் ஆகியவற்றை, ஏற்படுத்திக் காவலர்களுடைய குடும்பங்கள் நலம் பெற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த புரட்சித் தலைவர் அவர்களை இந்த மாமன்றத்திலே இருக்கிற நாம் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

குறிப்பாக, நம்முடைய தமிழகத்தில் காவலர் வீட்டு வசதி திட்டத்திற்கு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. சார்நிலைக் காவலர்களில் குறைந்தது 80 சதவிகிதத்தினருக்காவது, வீட்டு வசதி அளிக்க இருப்பது புரட்சித் தலைவருடைய கொடை வள்ளல் தன்மைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

காவலர்களுக்கு வீட்டு வசதி கழகத்திற்காக ரூ. 1 கோடி மூலதனத்தை ஒதுக்கி, அவர்களே சொந்தமாக வீடுகளைக் கட்டிக் கொள்கின்ற ஒரு நிலைமையினை ஏற்படுத்தித் தந்த புரட்சித் தலைவர் அவர்களை, இந்த நேரத்திலே நாங்கள் எல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த மன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபொழுது பால் கமிஷனுடைய அறிக்கையைப் பற்றி பேசி, அந்த அறிக்கையிலே யார், யார் குற்றவாளிகள் என்று சொல்லவில்லையென்கிற நிலைமை இருந்தாலும்கூட அந்தக் கோவிலுடைய அறங்காவலர்களையெல்லாம் கைது செய்யவில்லை, இது

ஒரு காட்டுமிராண்டித்தனம் என்கின்ற வார்த்தையைப் பயன்படுத்திப் பேசியிருக்கிறார்கள். நான் அவரை மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன், குற்றம்சாட்டப்பட்டவர்களைக் கைது செய்ய வில்லை என்பது காட்டுமிராண்டித்தனம் என்று சொன்னால் (கூச்சல்—குழப்பம்.)

* * * *

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சர்க்காரியா கமிஷன் பற்றிப் பேசப்பட்ட அனைத்தையும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன்.

திரு. சி. கோபால் : அடுத்து, காவல் துறையைப் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய தினம் ஆண்டு கொண்டிருக்கும் புரட்சித் தலைவரவர்கள், நியாயமான முறையிலேயும், நேர்மையான முறையிலேயும் காவல்துறைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்கள் இந்த நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் நேர்மையாகவும், நியாயமாகவும் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு நிலைமை இன்று இந்திய நாட்டிலே உள்ள பல மாநிலங்களாலேயும் பாராட்டப்பட்டு வருகிறது என்ற சூழ்நிலையை உணர்ந்து சில சந்தர்ப்பங்களிலே சில பகுதிகளிலே காவல் துறையிலே இருக்கின்ற ஒருசிலர்கூட எதிர்க்கட்சிகளைச் சார்ந்த ஒருசிலருக்கு உடந்தையாகச் சிலயிடங்களிலே நடந்து அரசுக்கும், புரட்சித் தலைவரவர்களுக்கும் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு நிலைமையிலே செயல்பட்டு வருகின்றனர். இந்த நேரத்தில் நான் புரட்சித் தலைவரவர்களுக்கு வேண்டுகோளாக வைப்பது என்ன வன்றால் அதைப் பற்றிக் கண்காணிக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை மட்டும் நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராணிப்பேட்டை தொகுதியிலே மேல்விஷாரம் என்ற பகுதியில் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சென்று கொண்டிருந்த ஒரு பஸ் தாறுமாறாக ஓடி நடைபாதையின்மீது ஏறிவிட்டது என்பதால் அன்றைக்கு மாற்றுவழியாகத் திருப்பி விடப்பட்ட பகுதிகளில் தனியார் பஸ்ஸை விட்டுவிட்டு, அதற்கென்று

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





ஒரு கும்பல் தனித் திட்டம் தீட்டி, தமிழகத்தில் போக்குவரத்துக் கழகம் நல்லமுறையிலே இயங்குகிறது. நல்ல பெயரைப் பெற்று வருகிறது; புரட்சித் தலைவரவர்களின் அரசு நியாயமான அரசாக நடந்து வருகிறது என்பதால் அதற்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் குறிப்பாகத் தமிழக அரசின் சார்பாக விடப்படும் அந்த பஸ்களை மட்டும் தீயிட்டுக் கொளுத்தி, 9 வண்டிகளைக் கல்லால் அடித்து நான்கு மணி நேரம் அங்கே போராட்டம் நடந்திருக்கிறது. அங்கு பொறுப்பு வாய்ந்தவர்கள் இதற்கு உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-50]

அடுத்து குறிப்பாகக் காவல் துறையில் அளிக்கின்ற சலுகைகளை போலவே, கண்ணுக்குப் புலப்படாத இடத்தில் இருந்து கொண்டு தடயங்களைக் கண்டு விஞ்ஞான முறையில், கொலை கொள்ளை, திருட்டு வழிப்பறி முதலிய பெருங்குற்றங்களை எல்லாம் நல்ல முறையிலே கண்டுபிடிக்க இந்த அரசுக்கு உழைத்து வருகிறார்கள். இந்த விரல்பதிவு ஊழியர்கள் மிகவும் குறைவாக வாகவே இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் காவல் துறையினருக்கு அளிக்கும் அனைத்துச் சலுகைகளையும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே சோளிங்கர் நகரிலே இருந்து நான்குபுறங்களிலும் 20 மைலுக்கு தீயணைப்புப் படை இல்லை என்ற நிலைமையை சுட்டிக்காட்டி, தீயணைப்புநிலையத் த ஏற்படுத்திக் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மானியக் கோரிக்கையை வரவேற்று முடிக்கிறேன்.

திரு ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அனைவரும் கவலைப்பட வேண்டிய கிரைம் டிரெண்டு ஒரு குற்றப் போக்கைப் பற்றி குறிப்பிட்டுத்தான் நான் என்னுடைய பேச்சைத் துவக்குகிறேன். அந்தக் குற்றப்போக்கு என்பது, நம்முடைய மாநிலத்திலே உள்ள உழைக்கும் பெண்கள் சம்பந்தமானது. நம்முடைய வயல்களிலும், தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் உழைக்கும் பெண்கள் வேலை செய்கிறார்கள். ஏற்கனவே அவர்களது விருப்பத்திற்கு மாறாக முதலாளிகள் அல்லது தனியார் துறை, பொதுத்துறை அலுவலகங்களிலே உள்ள அதிகாரிகள் போன்றவர்கள் துன்புறத்தல்களுக்கு அவர்கள் ஆளாக்கப்படுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும், அதில் ஒரு புதுபோக்கு நம் மாநிலத்திலே தலைதூக்கி ஆரம்பித்திருக்கிறது, அந்தப் பெண்கள் முதலாளிகளின் காம வெறிக்கு பணியவில்லை என்று சொன்னால் அவர்கள் எதிர்த்தார்கள் என்று சொன்னால், அவர்கள் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்படுவது என்பதுதான் அந்த பயங்கரமான

போக்கு. இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் ஈர்க்க வேண்டியது இந்த நாட்டினுடைய நலன், நம்முடைய தாய்மக்களுடைய நலன். அதற்கு இருக்கக்கூடிய லேட்டஸ்ட் உதாரணத்தை நான் சொல்லவிரும்புகிறேன். மானாமதுரையிலே ஒரு 'டைல்' பேக்டரி இருக்கிறது. அதிலே உழைக்கும் பெண்கள் இருக்கிறார்கள், தேவி வயது 15, விஜயா ஆகிய இரண்டு இளம் பெண்கள். அவர்கள் மீது அந்த முதலாளியின் மகனுக்கு ஒரு கண். அதை அவர்கள் எதிர்த்தார்கள். ஆனால் 26-5-1981 அன்று அந்த முதலாளியின் மகனும் வேறு சிலரும் சேர்ந்து அந்தப் பெண்களைக் கற்பழித்து, அப்போதே கழுத்தை நெறித்துக் கொலை செய்து விட்டார்கள். போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்—தேவியினுடையது என்ன சொல்கிறது என்றால், இறந்தவர் குரல் வளையை நெறித்ததால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக இறந்துபோய் இருக்கலாம் என்று நான் அபிப்பிராயப் படுகிறேன். இதனுடைய பொருள் கொலை செய்யப்பட்டார் என்பது தெளிவாகத் தெரிகின்ற ரிப்போர்ட்.

அந்த ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கின்ற இரண்டாவது அம்சம், இன்னொரு அதிர்ச்சியைத் தரக்கூடியதாக இருக்கின்றது. அந்த உடம்பிலே, தொடையிலே காணப்படுகின்ற காயங்கள்—நான் அதைக் கோட் பண்ணத் தயங்குகிறேன்—ஏனென்றால், கற்பழித்திருக்கிறார்கள் என்பதற்கு என்ன ருசு வேண்டுமோ அது தெளிவாக அந்த போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டிலே இருக்கின்றது. நம்முடைய சகோதரிகள் இங்கே இருப்பதாலே அந்தப் போர்ஷனை கோட் பண்ண முடியவில்லை. ஆகவே அந்த இரண்டு பெண்களும் கற்பழிக்கப்பட்டு, கழுத்தை நெறித்து கொலை செய்யப்பட்டார்கள் என்பதற்கு இதை விட வேறு அத்தாட்சித் தேவையில்லை. போலீஸ் என்ன செய்கிறது. சட்டம் அமைதி, கற்பு போன்றவைகள் பாதுகாப்பதற்கு என்று அன்றைக்கு 'குண்டா' ஆக்ட் வருகிறபோது எவ்வளவோ பேசினார் நமது அமைச்சர். இது கிளியராக இருக்கின்றது. போஸ்ட்மார்டம் ரிப்போர்ட்டு இருக்கின்றது. ஆனால் அங்கே இருக்கக்கூடிய ஸ்தல போலீஸ் வேண்டும் என்றே பிராசிகியூஷனைத் தாமதப் படுத்தி இருக்கிறார்கள். இன்றுவரையிலும் யாரும் கைது செய்யப் படவில்லை. அந்த முதலாளி மகன் கைது செய்யப்படவில்லை. அவர்கள் பணக்காரர்கள். அதனாலே பணத்தைக் கொடுத்து ஒரு பெண்ணின் பெற்றோரை விலைக்கு வாங்கிவிட்டார்கள். கேஸ் இல்லாமல் செய்து விட்டார்கள். ஆனால் தேவி என்ற பெண்ணின் தாயார் பணம் வாங்க மறுத்துவிட்டார்கள். எனக்கு பணம் தேவையில்லை நீதிதான் தேவை என்று சொல்லிவிட்டார்கள். அந்த அம்மையாரை அடையாளம் தெரியாத சிலர் மிரட்டுகிறார்கள். அவரைக் கொலை செய்வோம் என்று அந்த முதலாளி ஆளை விட்டு மிரட்டுகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பாதகர்கள் தப்பிக்க எடுக்கும் முயற்சிக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றுதான் போலீஸ் தாமதம் செய்கிறது. அக்யூஸ்டு யாரும் பிடிக்காமல் இருப்பதற்கு இன்னும் தாமதம்





ஆகிறது என்று சொன்னால், இந்த அம்மாவையும் அந்த ரூபாய்க் கொடுத்து வாங்குவதற்கும், இந்த அம்மாவையும் மிரட்டி பணிய வைப்பதற்கும், அப்படிப்பட்ட ஒரு பயங்கரமான கொலையை இந்த உழைக்கும் பெண்களுக்கு ஏற்பட்டு இருப்பதற்கு அந்த லோகல் போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த நிலை நம்முடைய மாநிலத்தில் இருக்கும் உழைக்கும் பெண்களுக்கு பேரபாயத்தை விளைவித்திருப்பது தேவைதானா என்று நான் கேட்க விரும்புகிறேன். இந்தப் பேரபாயத்திலிருந்து அவர்களைக் காக்க என்ன நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது என்பதை இந்த அவையில் பதில் சொல்லும்போது முதல் அமைச்சர் அவர்களிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்ததாக, விவசாயிகள் கடன் ஜப்தி நடவடிக்கைகளை எடுப்பதற்கு போலீஸ் வன்முறையை உபயோகப்படுத்துவது என்பது போலீஸ் கொள்கையின் ஒரு முக்கிய கொள்கையாகும் நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில். முந்தாநாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடன் கட்டாயமாக வசூல் செய்யவேண்டுமென ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா வற்புறுத்துகிறது. வசூல் செய்யவில்லை என்றால் என்று மத்திய அரசும் மிரட்டுகிறது. மிரட்டியவர்களை எச்சரிக்கிறார்கள். ஆகவே, ஜூன் 30-க்குள் வசூல் செய்தே தீருவேன் என்று நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். அதனுடைய பொருள் இந்தப் பேரவைக்கூட்டம் முடிந்ததும், போலீஸ் வன்முறையை வைத்து, போலீஸ் பலத்தை வைத்து, ஜப்தி நடவடிக்கையை ஆரம்பிக்கும் என்பதை, அதை தெளிவாகச் சொல்கிறது, அதனுடைய பொருள் பயங்கரமான பொருள், கிராம மக்களுடைய வீட்டிலே போலீஸ் நுழையப் போகிறது. அப்பொது பயரிங்ஸ்-ஐ நடத்தப் போகிறார்கள் என்று நமக்குத் தெரியும். அத்தனைப் பெண்களுடைய தாலி அறுக்கப்படும் என்பதும் நமக்குத் தெரியும். நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள். நீங்கள் செய்யக்கூடிய அந்த நடவடிக்கைகளின் விளைவுகளை, இம்பிளிகேஷனை, நீங்கள் புரிந்து கொண்டீர்களா, நான் சர்க்காரைக் கேட்கிறேன், இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன? கடன் விஷயத்தில் இன்னும் நிவாரணம் கொடுக்கவேண்டுமென்பதுதான் நமது அரசாங்கத்தின் கொள்கை, நான் ஒத்துக்கொள்கிறேன். தட் ஈஸ் யுவர் பாலிசி. ஆனால் மத்தியில் ஆளும் இந்திரா காங்கிரசினுடைய கொள்கை. என்ன? இந்தக் கடன் வசூல் செய்தே தீரவேண்டும் என்பது அவர்களுடைய பாலிசி. அது அவர்களுடைய கொள்கை. இந்திரா காங்கிரஸ் உங்களைப் பார்த்து, உங்கள் கொள்கையை நீங்கள் கைவிட்டுவிட்டு, காங்கிரஸ் கொள்கையைத்தான் நடைமுறைப்படுத்த வேண்டுமென உங்களை கேட்கிறார்கள். உங்களை நிர்ப்பந்திக்க மத்திய அரசு அதன் கையில் இருக்கும் அந்த நிதிக் கயிறினை, அவர்கள் இறுக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் அமைச்சர் சொன்னதிலிருந்து நான் புரிந்துகொள்கிறேன்.

நீங்கள் அனைத்துத் தமிழக மக்களையும், கட்சிகளையும் திரட்டி எங்கள் கொள்கையைத் தான் செயல்படுத்துவோமே தவிர உங்கள் கொள்கையைச் செயல்படுத்துதற்காக ஜனங்கள் எங்களைத் தேர்ந்தெடுக்கவில்லை, எங்கள் கொள்கையைச் செயல்படுத்துவதற்காகத்தான் எங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று பல கட்சிகளையும், ஜனங்களையும் ஒன்று திரட்டி, இந்த முறையில் பார்த்து, நிர்ப்பந்தம் கொடுத்து உங்கள் கொள்கையை அமுல்படுத்துவதற்கு வாய்ப்பு பெறுவதற்கு பதிலாக நீங்கள் என்ன செய்கிறீர்கள். சரி, நாங்கள் எங்கள் கொள்கையை கைவிட்டுவிட்டு, காங்கிரஸ் கொள்கையை செயல்படுத்துவோம் என்று பணிந்து போகிறீர்கள். அதுவும் இந்திரா காங்கிரஸ் கொள்கையைச் செயல்படுத்தி தமிழக விவசாயிகள் மீது துப்பாக்கிச்சுடுவதற்கும் தயார் செய்து கொண்டிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட உங்களைப் பார்த்து நான் என்னதான் சொல்வது. எனக்கு ஞாபகம் என்ன சொல்வது என்கிற போது ஒன்று சொல்லியும் திருந்தாத பாவிகளைப் பற்றி கர்த்தரிடம் இயேசு கூறுவதாக பைபிலிலே இருப்பது. அவர் சொன்னார், கர்த்தரே இந்தப் பாவிகளை மன்னியுங்கள், அவர்கள் செய்வது என்ன என்பதை அவர்கள் புரியாமலே செய்கிறார்கள் என்று பைபிலிலே இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாற்றுத் தலைவர் அவர்களே, பாவிகள் அல்ல அவர்கள், அப்பாவிகள்.

திரு. ரா. உமாநாத் ; மாற்றுத் தலைவர் அவர்களே, ஆகவே இப்போது நான் கோட் பன்னியது.இயேசு சொல்லி இருப்பதுதான். நாங்கள் மார்க்சிஸ்ட்கள். எங்களுக்குத் தமிழக மக்கள்தான் கர்த்தர்கள். அவர்களைப் பார்த்து நாங்கள் என்ன கூறுகிறோம் கர்த்தாகளே, இந்தப் புண்ணியவான்களை மன்னியுங்கள், அவர்கள் செய்வதெல்லாம் புரிந்தே செய்கிறார்கள், என்று எங்களுடைய கர்த்தரான மக்களிடம் சொல்கிறோம் விவசாயிகளைச் சுடுவதற்கும், ஜப்தி செய்வதற்கும் இருக்கக்கூடிய உத்தேசத்தை நீங்கள் கைவிடவேண்டு மென்பதற்காகத்தான் சொல்கிறேன்.

[நண்பகல் 12-00]

அடுத்து கிராமப் புற ஏழை எளிய மக்கள் வாழ்க்கை மேம்பாடு சம்பந்தமாக இருக்கிற போலீஸ் கொள்கை. அன்றைக்கு விலைவாசிப் பற்றி பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஸ்தாபன ரீதியாக திரண்டு இருக்கிற தொழிலாளர்களுக்கு பஞ்சப்படி எல்லாம் கிடைக்கிறது. ஆனால் மற்ற பொது மக்களுக்கு, கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு என்ன கிடைக்கிறது. பாவம் என்று முதலமைச்சர் 10, 15 நாட்களுக்கு முன்னால் கூறினார். முதலமைச்சருக்கு உண்மையிலேயே அந்த மக்கள் மீது அனுதாபம் இருந்திருந்தால், அந்த வறுமை கோட்டிற்கு கீழே இருக்கிற மக்களுக்கு நீங்கள் அறிவித்த





எட்டியிருக்குமே ;
கூலி இன்றைக்கு அவர்களுடைய கைக்கு
விவசாயத் தொழிலாளிக்கு நீங்கள அறிவித்த கூலி எட்டி
யிருக்குமே இன்றைக்கு தமிழ் நாட்டில் பெரும்பாலான இடங்களில்
நீங்கள் அறிவித்த கூலி அவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை.

சில ''பாக்கெட்' களில் நீங்கள் அறிவித்த கூலியைவிட கூடுத்
லாகக் கொடுக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் ஆர்னக
னைஸ்ட் செக்டாராக இருக்கக்கூடிய இடத்தில் சட்டப்படி உள்ள
கூலி கிடைக்கிறது. ஆனால் பெரும்பாலான இடங்களில் நீங்கள்
அறிவித்த கூலி கிடைக்கவில்லை.

வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கும் குடும்பத்தைச் சேர்ந்த
குழந்தைகளுக்கு ஒரு வேளை சோறுபோட 100 கோடி செலவிடப்
போவதாகச் சொன்னீர்களே. நீங்கள் அறிவித்த சட்டக்கூலி
அவர்களுக்கு கிடைத்தாலே அந்தக் குடும்பங்களில் வாழும் இலட்
சக்கணக்கான குழந்தைகளுக்கு ஒரு வேளை ஊழல் இல்லாத
சோறு, புழு இல்லாத சோறு, மண் இல்லாத சோறு, அவர்
களுடைய தாய்மார்களே சமைத்த சோறு கிடைக்கும் என்பதை
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படிப்பட்ட, நீங்கள் அறிவித்த கூலி கிடைப்பதை தடுப்
பது யார்? நீங்கள்தான், நீங்கள் அறிவித்த கூலியை அந்த
கிராமப் புற ஏழை எளிய மக்களுக்கு கொடுக்க தடுப்பது நம்
முடைய அரசாங்கம்தான். நம்முடைய அரசாங்க போலீஸ்
கொள்கைதான். சட்டக்கூலி கேட்டால் நிலபிரபுக்கள் அவர்
களை அப்புறப்படுத்துவார்கள் என்பது எல்லோருக்கும் தெரி
யும். வெளியூரிலிருந்து சட்டக்கூலியை விட குறைந்த
கூலிக்கு ஆட்களைக் கொண்டுவருவார்கள். அந்த நேரத்தில்
சட்டக்கூலியை பாதுகாக்க வேண்டிய போலீஸ் சட்டக் கூலியை
மறுக்க, கூலிச் சட்டத்தை மீற, ஆட்களை (கொண்டுவர, மிராஸ்
தாரர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும். அப்படிச் செய்தால் நீங்கள்
குறிப்பிட்ட சட்டக் கூலி எப்படி யாருக்குக் கிடைக்கும்? விவ
சாயிகள் சட்டக்கூலி கேட்டால் அவர்களை போலீஸ் தாக்கும்,
இந்த சர்க்கார் தாக்கும்.

இதற்கு குடவாசல் போலீஸ் சரகத்தைச் சேர்ந்த பெரும்
பண்ணையூர் சம்பவம், இதுதான் லேடஸ்ட் உதாரணம். கீழ்த்
தஞ்சையில் அநேகமாக எல்லா மிராசுதாரர்களும் கொடுத்து
வந்த எட்டில் ஒரு பங்கு (1/8) என்ற அறுவடைக் கூலியை 1981
குறுவையில் பெரும்பண்ணையூர் பகுதியில் மேலும் ஐந்து கிராமங்
களைச் சேர்ந்த மூன்றே மிராசுதார்கள் கொடுக்க மறுத்தார்கள்.
போலீஸ் டி..எஸ்.பி. யை கைக்குள் போட்டு பொய் கம்பிளைன்ட்
போட்டு வைத்தனர். அந்த டி.எஸ்.பி. பெயர் சிவதாஸ்.
12-10-81-ல் ஒரு பேச்சு வார்த்தை நடை பெற்றது. நாகப்
பட்டினம். ஆர்.டி.ஓ. மிராசுதார்கள், விவசாயத் தொழிலாளர்
கள் கலந்துகொண்டார்கள். திருவாரூர் எம்.எல்.ஏ.;யும் வந்

திருந்தார். அந்தக் கூட்டத்திற்கு டி.எஸ்.பி. மிஸ்டர் சிவதாஸ் தான் பிரசிடென்ட், ஆர்.டி.ஓ. சிபாரிசு செய்கிறார். 2 நாட்கள் பழைய கூலியே வாங்குங்கள். மூன்றாவது நாளிலிருந்து புதிய கூலி, 1/8 கூலியை மிராசுதார்களைக் கொடுக்கச் சொன்னார். இதில் கௌரவப்பிரச்னை பார்க்க வேண்டாம் ; இரண்டு நாட்களுக்கு பழைய கூலியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று தொழிலாளிகளிடம் சொன்னார். தொழிலாளிகள் ஒத்துக் கொண்டார்கள். ஆனால் மிராசுதார்கள் மறுத்து விட்டனர்.

அதன் பிறகு அந்த டி.எஸ்.பி. என்ன சொன்னார்? ஆர்,டி.ஓ. பக்கம் அந்த டி.எஸ்.பி. நிற்பதற்குப் பதிலாக மறுநால் 13–10–81 முதல் 16–10–81-க்குள் எந்த நிகழ்ச்சியும் நடக்காமல் டி.எஸ்.பி. உத்தரவின் பேரில் 169 விவசாயத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். இதில் எங்கள் தஞ்சை மாவட்ட கட்சி அலுவலகத்தில் டி.எஸ்.பி. நுழைந்து, மற்ற காவல் துறையினர் உள்ளே புகுந்து அங்கே இருந்தவர்களை கைது செய்தார்கள். இது மிராசுதார்களை திருப்திப்படுத்த செய்த நடவடிக்கை என்பதற்கு இந்த இரண்டு உதாரணம் போதாதா? கைது செய்த 169 பேர்கள் பேரிலும் 307 செக்ஷன்படி வழக்குப் போட்டார். டி.எஸ்.பி.யிடம் திருவாரூர் எம். எல். ஏ. சொல்லிப் பார்த்தார் கேட்கவில்லை. 307 செக்ஷன் போடுவதற்கு பேசிஸ் கொஞ்சம் கூட கிடையாது. டி.ஐ.ஜி.யிடம் பேசிஸ் இல்லாமல் 307 போட்டிருக்கிறார் ; நீங்கள் விசாரித்துப் பாருங்கள் அஸ்திவாரம் இல்லை என்றால் அந்த செக்ஷனை ரிமூவ் செய்யுங்கள் என்று சொன்னோம். டி.ஐ.ஜி. விசாரித்த பிறகு 307 செக்ஷனுக்கு பேசிஸ் இல்லை, ஆதாரம் இல்லை என்று சொல்லி நீக்கி விட்டார். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் டி.எஸ்.பி. போட்ட கேசில் பேசிஸ் இல்லை என்று டி.ஐ.ஜி. நீக்குகிறார் என்பதைப் பார்க்கும்போது டி.எஸ்.பி. இந்த 307-வது செக்ஷனை தொழிலார்கள் மீது பொய்யாகப் போட்டார் என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? அவர் பொய் கேஸ் போட்டார் என்பது தெளிவல்லவா? ஆகவே, சட்டக் கூலியை கொடுக்க கூடாது என்பதிலே மிராசுதார்களுக்கு அந்த டி.எஸ்.பி. கையாளக இருந்தார் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். சட்டக்கூலியை குறைக்க டி.எஸ்.பி. சிவதாஸ் 'ஆக்டட் ஆஸ் டவுன்ரைட் ஏஜென்ட் ஆஃப் லான்ட்லார்ட்ஸ். இதிலே கையூட்டு வாங்கினாரா, அவருக்கு கையூட்டு கிடைத்திருக்குமா என்று அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டங்கள் நடத்த போலீசார் தடை போட்டார்கள். அதாவது போலீஸ் ஆக்ட் 30–144 அல்ல. 20–10–81 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் பொதுக்கூட்டம் போட அனுமதி கொடுத்தார்கள். கலெக்டர், ஏன் என்றால் செக்ஷன் 30-ன் படி தடை என்பதால் அது ரெகுலேட்டரிதான். அதனால் கொடுத்தார்கள். ஆனால் 19-ம் தேதி நாங்கள் கேட்டோம். மறுநாள் கூட்டம் நடத்த அதே டி.எஸ்.பி. முந்திய நாள் கூட்டம் போட அனுமதி மறுத்து விட்டார்கள். நான் சொல்லவிரும்பு





கிறேன். அனுமதி மறுப்பதற்கு போலீஸ் ஆபீசருக்கு அதிகாரம் கிடையாது. Under Sec. 30 the Police Officer has no right. This Sec. is not prohibitary. It is only regulatory. அப்படி மறுக்கவேண்டுமானால் 144 தடை உத்தரவு போட்டிருக்க வேண்டும். செக்ஷன் 30-ன் கீழ் தடை என்பது Not prohibitary. It is only regulatory. தடை செய்யும் அதிகாரம் இல்லை. கட்டுப்படுத்தும் அதிகாரம் தான் உண்டு. இங்கே கூட்டம் போடாதே, அங்கே போடு என்று போலீஸ் அதிகாரிகள் சொல்லலாம். அப்படி இருக்கிறபோது, அவர் அனுமதி கொடுக்க மறுத்து இருக்கிறார். நாம் சட்டத்தால் ஆளப்படுகிறோமா அல்லது போலீசாரின் விருப்பு வெறுப்பு ஆளப்படுகிறோமோ அல்லது அரசாங்கத்தின் விருப்பு, வெறுப்பு படி ஆளப்படுகிறோமா அல்லது சட்டங்களைத் தூக்கி எறிந்து விட்டு Throw over board all laws, even elementary laws விருப்பு வெறுப்போடு ஆளப்படுகிறோமோ என்று எனக்குத் தெரிய வேண்டும். இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புற ஏழைகள் இந்த அரசு நிர்ணயித்த கூலி பெறுவதை இந்த அரசே தான்—இந்த அரசின் போலீஸ்தான் தடுக்கிறது. என்று இந்த அவையில் முதல்வர் அறிய நான்கு முறை பேசினேன். நாட் ஒன்ஸ் ஆர் டுவைஸ், நான்கு முறை சொல்லியிருக்கிறேன். அப்படி இருந்தும் அந்தப் போலீஸ் கொள்கை மாற்றம் செய்யப்பட வில்லை யென்றால், விவசாயத் தொழிலாளி சட்டக் கூலி பெறுவதை இந்த அரசு விரும்பவில்லை என்று நாங்கள் எடுத்துக் கொள்கிறோம். நான் பர்ஸ்ட் டைம் பேசினால், வெயிட் பண்ணுவேன், செகன்ட் டைம் பேசிவிட்டும், வெயிட் பண்ணுவேன். ஆனால் I spoke for the fourth time. It is your police which has prevented. தெரிந்தே நீங்கள் தடுக்கவில்லை, நடவ்டிக்கை எடுக்கவில்லை. அந்தக் கூலி கிடைப்பதற்கு போலீஸ் கொள்கையை மாற்றவில்லை என்று சொன்னால் நீங்கள் இந்தக் கூலி பற்றிய நோட்டிபிகேஷனை ஜனங்கள் தெரிய சொல்லியிருக்கிறீர்கள். உண்மையிலேயே அவர்களுக்குக் கிடைப்பதற்காகப் போடவில்லை என்றுதான் அர்த்தம், That is how I feel it. போலீசின் இந்த அக்கிரமங்களை எல்லாம், ஒன்று ஆதரிப்பது, அல்லது நடவடிக்கை எடுக்காமல் விடுவது என்ற அரசின் நிலைதான் 19-ம் தேதி ஜனவரி துப்பாக்கிச் சூட்டுக்கு கொண்டு போய் விட்டது. இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கம் எனக்குக் 'கன்வின்சிங்காக' இல்லை. துப்பாக்கிச் சூடு விஷயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கோரமான போலீஸ் அட்டூழியத்தை நியாப்படுத்த முயற்சித்தார் என்பது என்னுடைய கருத்து. ஆகவேதான் அந்த விளக்கத்தில் அவர் அறியாமலேயே ஒரு முரண்பாட்டில் அவர் சிக்கியிருக்கிறார்.

[திரு. ரா. உமாநாத்] [[1982 மார்ச் 22

கவர்னர் உரை விவாதத்திற்கு பதில் கூறுகிறபோது, இந்த விஷயம் சம்பந்தமாக பதில் கூறுகிறபோது-பஸ் விவகாரம் மெயின் ரோடில் நடந்தது என்கிறபோது, 3 மைல் உள்ளே கிராமத்தில் போய் சுடுவானேன் என்று கேட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் டான் என்று பதில்,சொன்னார். குற்றம் செய்தவர்களைப் பிடிக்கத்தான் திருமெய்ஞானத்திற்குச் சென்றதாகவும், அங்கே அதைத் தடுக்க, போலீசை தாக்கியதாகவும், அப்பொழுது போலீஸ் தற்காப்புக்கர்க சுட்டதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் கூறினார். ரோட்டில் குற்றம் செய்தவர்களைப் பிடிக்க விரட்டி விரட்டி ஊர் வரைக்கும் போனோம், அந்த ஊருக்குள்ளே அரெஸ்ட் செய்ய அவர்கள் விடவில்லை, துப்பாக்கியால் சுட்டோம் என்று சொன்னார். அதை ஊர்ஜிதம் செய்யும் பொருளில் தான் பிச்சக்கட்டளை கிராமத்தில் குற்றவாளிகளைப் பிடிக்கத்தான் வீட்டிற்குள் நுழைந்தோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதைச் சொல்வதன் மூலமாகவும் குற்றவாளிகளைப் பிடிப்பதற்காகத்தான் திருமெஞ்ஞானத்திற்குச் சென்றதும் ஊர்ஜிதப்படுகிறது.

ஆனால் சர்கிள் இன்ஸ்பெக்டர் செல்வராஜ் போட்ட பர்ஸ்ட் இன்பர்மேஷன் ரிப்போர்டில்-கைது செய்யும் நோக்கத்தோடு சென்றதாகக் கூறவில்லை, அதற்கு நேர்மாறான நோக்கத்தோடு குறிப்பிட்டு இருக்கிறார்கள். எப்.ஐ.ஆர்.ல் மிஸ்டர் செல்வ ராஜ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் குறிப்பிட்டுள்ளதை ஒரு போர்ஷன் படிக்கிறேன்.

''அம்மனாறு பாலம் அருகில் இந்திய கம்யூனிஸ்ட் (எம்)-மார்க்சிஸ்ட் என்ற அர்த்தத்தில் சேர்த்து இருக்கிறார்-சேர்ந்த சுமார் 1000 பேர்கள் கையில் அறிவாள், இரும்புக்கம்பி (இது யூசுவல் ஸ்டோரி) கம்பு, கல்போன்ற ஆயுதங்களை வைத்துக் கொண்டு மேற்படி ரோட்டில் கற்களை போட்டு, ரோட்டில் போக்குவரத்துக்குத் தடை ஏற்படும்படி செய்தும், பொறையார் விருத்தாசலம் பஸ் டி.எம்.எஸ். 4002 பஸ்ஸை மறித்து, காற்றை பிடுங்கிவிட்டும் பஸ்களை கொளுத்துவோம், போலிஸார் வந்தால் அடிப்போம், உதைப்போம் என்று சத்தம் போட்டுக் கொண்டிருந் தனர்.'' இது யூசுவல் ஸ்டோரி. சொல்லியிருக்கிறார்கள். இப்போதுதான் கவனிக்க வேண்டும்.

[பிற்பகல் 12–10]

அதிலே மேலும் என்ன சொல்லியிருக்கிறது என்றால் அவர்களைக் கலைந்து போகும்படிச் சொல்லியும், கலைந்து போகாமல், அவர்கள் போலீசாராகிய எங்கள் மீது கற்களையும் எடுத்து அடித்தார்கள். '' முதலிலே ரோட்டிலேயே அவர்களைக் கலைத்தும், பிறகு திருமெய்ஞ்ஞானம் சென்று அங்கேயும் அவர்களைக் கலைந்து போகும்படி சொல்லியும் கூட ''—



1982 மார்ச் 22] [திரு. ரா. உமாநாத்]

என்று சொன்னால், முதலிலே அவர்களை ஒரு முறை ரோட்டி லேயே சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே கலைந்து போகும் படிச் சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு, அவர்களுடைய சொந்தக் கிராமமான திருமெய்ஞானம் வரையில் சென்று அவர்களை மறுபடியும் கலைந்து போகும்படிச் சொல்லியிருக் கிறார்கள். அவர்கள் தான் அவர்களுடைய சொந்த ஊருக்கே போய்விட்டார்களே, அங்கே போய் ஏன் கலையச் சொல்ல வேண்டும். சொந்த ஊரிலேயே கலையச் சொன்னால் அங் கிருந்து அவர்கள் எங்கு போவார்கள் ? அப்படியே வேறு ஒரு ஊருக்குப் போனாலும், அங்கேயிருந்தும் கலையச் சொல்ல மாட்டார்களா. ஆகவே, It is not for arrest ng the offenders. கலைந்து போனதற்குப் பின்னால் 3 மைல் தூரம் பின்னாடியே சென்று மறுபடியும் கலையச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த வார்த்தை களையெல்லாம் கூர்ந்து பார்க்கவேண்டும். ஆகவே, எப்.ஐ.ஆர்—ல் கூறியிருப்பது உண்மைக்கு புறம்பான தகவல்கள். மாண்பு மிகுமுதலமைச்சர் அவர்களுக்கு அவர்கள் தந்த தகவல் பொருத்த மானதாக தெரியவில்லை. போலீசாரின் தகவல்கள் ரெடிகுலஸ் எக்ஸ்பிளநேஷன். ஆகவே உண்மையில் நடந்தது என்னவென் றால், பெரும்பண்ணையூர் கூலிப் போராட்டத்தில் டி.எஸ். பி., எஸ். ஐ. ஆகியவர்களின் பதவிகள் நிலப் பிரபுக்களுக்கு விலை போயிருக்கின்றன. டி.எஸ்.பி. சிவதானையும், எஸ். ஐ. நடராஜ னையும் நிலப் பிரபுக்கள் விலைக்கு வாங்கிக் கொண்டு, 19-ஆம் தேதி நடக்கும் பஸ் தடுப்பு மறியலை சாக்காக வைத்து, கிராமத்திற்குள் சென்று அவர்களை பழிவாங்கும் நடவடிக்கை யாகத்தான் நடந்திருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் உரைக்கு பதில்தரும் போது ஒரு வாக்குறுதி தந்தார். அதாவது இந்த சம்பவம் குறித்து அவர் சொல்லும்போது, அப்படி ஏதாவது அவர்கள் தவறுதலாக நடந்திருப்பார்களேயானால், நடவடிக்கை எடுப்பேன், என்னை நம்புங்கள் என்று சொன் னார். உங்களை நம்பித்தான் நான் இவ்வளவு சிரமப்பட்டு இத்தனை விவரங்களையும் சேகரித்துக்கொண்டு வந்து உங்க ளிடம் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆகவே, இனிமேலாவது தஞ்சை மாவட்டத்தில் ஏற்கனவே நடைபெற்ற 2 துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தோடு இதையும் சேர்தது நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வைக்க முன் வருவீர்களா ? உங்கள் மீது நம்பிக்கை வைத்து தான் கேட்கிறேன். உங்கள் மீது நம்பிக்கை வைத்திருப்பதற்கு, நீங்கள் கொடுத்த வாக்கையாவது காப்பாற்ற முன் வரவேண் டாமா? நாங்கள் என்ன கேட்கிறோம்? நாங்கள் அந்த மக்களுக்காக பணம் கேட்கவில்லை. W: deliberat ly did not want your money. நாங்களாகவே அங்கேயுள்ள சி.பி.ஐ., சி.பி.எம்., ஏ.ஐ.டி.யூ.சி., சி.ஐ.டி.யூ. போன்றவைகளின் மூலம் வசூல் பண்ணி அவர் களைக் காப்பாற்றிக் கொள்கிறோம். நாங்கள் கேட்பது நீதி

[திரு. ரா. உமாநாத்] [1982 மார்ச் 22

விசாரணையைத்தான். உங்களை நம்பியவர்களுக்கு அதை எதிர்பார்ப்பதற்கு உரிமையிருக்கிறது அல்லவா? அதில் தவறு இல்லையே என்று கேட்க விரும்புகிறேன்.

அதைப்போலவே இதே போன்ற உச்ச கட்ட தொழிலாளர்கள் பிரச்னை, விவசாயத் தொழிலாளர்கள் பிரச்னை தர்மபுரியிலும், வட ஆற்காட்டிலும் நடைபெற்றபோது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். ‘‘தர்மபுரி மாவட்டத்தில் அதர்மங்கள் நடைபெறுகின்றன’’ என்று கூறினார்கள். ஒப்புக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் அப்போது அதர்மங்கள் தான் நடந்துக்கொண்டிருந்தன. ஆனால் அதர்மங்கள் என்பது எது?

தமிழகத்தில் உள்ள கிராமப்புறங்களின் சமூகப் பொருளாதாரத்தைப் பற்றி மைய அரசின் உள்துறை அமைச்சரகம் ஒரு ரிப்போர்ட்டை அனுப்பியிருக்கிறது. அதன் பெயர் (Dynamics of Rural Transformation) என்பது. நான் மத்திய அரசினுடைய மினிஸ்ட்ரி ரிப்போர்ட் என்பதினாலேயே ஜாக்கிறதையாகவே இருப்பேன். இது மாதிரியான தமிழகத்தைப் பற்றிய சர்வே ரிப்போர்ட் என்ற பெயரில் ஏதாவது ப்ளே பண்ணுவார்கள் அவர்கள் என்று (குறுக்கீடு) நான் காங்கிரஸ் கட்சி தோழர்களிடம் சொன்னேன். காங்கிரஸ் கட்சிக் காரர்கள் அந்த ரிப்போர்ட்டில் ஏதாவது செய்திருப்பார்கள் என்று சர்வ ஜாக்கிரதையாகவே அதை அணுகுவேன் என்று குறிப்பிட்டேன். ஆளும் கட்சியைப் பற்றிச் சொல்லவில்லை. அதிலே என்ன சொல்லியிருக்கிறது என்றால்—மணி லெண்டர்ஸ் அதாவது வட்டிக் கடைக்காரர்கள்— ‘‘ஒரு புதிய மணி லெண்டர்ஸ் வர்க்கம் உருவமெடுத்திருக்கிறது. அவர்கள் சிறு விவசாயிகளிடம் 200 சதவீதம் 300 சதவீதம் என்று வட்டி வாங்கி, அந்தச் சிறு விவசாயிகளை சிறுகச் சிறுக விழுங்கிவிட்டார்கள் ........’’

விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் ஹரிஜனங்களுக்கு வருடம் ஒன்றுக்கு ரூபாய் 350-ம் ஒரு நாளைக்கு இரண்டு உணவுமாகும். இந்த உணவின் மதிப்பு ஒரு ரூபாய்க்கும் குறைவாக இருக்கும். வருடத் தொகையில் ஒரு பகுதியை அட்வான்ஸாகக் கொடுப்பார்கள். அதற்கு வட்டியும் வசூல் செய்வார்கள். கொத்தடிமைத்தனம் பரவலாக இருக்கிறது. கடன் பட்ட விவசாயத் தொழிலாளிகள் அவர்களுடைய சிறு பையன்களையும், பெண் குழந்தைகளையும் நிலப் பிரபுக்களிடம் அடகு வைத்துள்ளனர்.

ஆகவே அதர்மங்கள் தர்மபுரி மாவட்டத்திலே நடைபெறுகின்றன என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். இவைதான் அந்த அதர்மங்கள். ஆனால் இப்படிப்பட்ட அதர்மங்களை ஒழிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? இந்த அதர்மங்களை ஒழிப்பதற்கு பதிலாக இந்த அ...



1982 மார்ச் 22] [திரு. ரா. உமாநாத்]

செய்யும் நிலப்பிரபுக்களுக்கு ஆயுதம் கொடுத்துள்ளீர்கள். ஆனால் இந்த அதர்மங்களுக்கு எதிராக குரல் எழுப்பக் கூடியவர்களை நக்ஸலைட் என்று பட்டம் வைத்துக் கொண்டு அவர்களை லிக்யுடேட் பண்ணுவதற்கும், அழிப்பதற்கும், சுட்டுக்கொல்லுவதற்கும் ஸ்பெஷல் போலீஸ் மிகவும் தேர்ந்து விட்டார்கள். கொள்கை குறிப்பிலே நக்ஸலைட் நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் ஒழிக்கவில்லை. இலைகளையும், கிளைகளையும் தான் வெட்டியுள்ளீர்கள். வேர் நான் குறிப்பிட்ட அந்த அதர்மங்கள் அப்படியே தான் இருக்கின்றன. ஆகவே மரம் முளைக்கும்—நக்ஸலைட் மரமல்ல—அங்குள்ள உழைப்பாளிகள் ஒன்றுபட்டு இந்த அதர்மங்களை ஒழிக்கும் மரம் வளரத்தான் செய்யும். அது விரைவில் நடக்கும் என்று நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து வகுப்புக் கலவரம் சம்பந்தமாக ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். வகுப்பு ஒற்றுமைக்கு பேர்போன தமிழகத்தில் சீர்குலைவு சக்திகள் தலை தூக்கியுள்ளன. இதில் புதியது என்னவென்றால் இதுவரை சில சந்தர்ப்பங்களில் முஸ்லீம்கள் என்ற மைனாரிட்டியினருக்கு எதிராகத் தான் கலவரம் நடக்கும் என்ற நிலைமை இருந்தது. ஆனால் இப்போது கிறிஸ்டியன் மைனாரிட்டிக்கு எதிராக கலகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலே மதநம்பிக்கையிலே ஹிந்து மதத்தைச் சார்ந்த மக்கள் அதிகமாக இருக்கின்றனர். இருப்பினும் நமது அரசியல் சட்டமும், மைய, மாநில அரசு அமைப்புகளும் மதச்சார்ப்பற்றது செக்யூலர். நாட்டின் ஒற்றுமையைக் காக்க மதச் சார்பற்ற தன்மையை காக்க வேண்டும். மதச் சார்பற்ற தன்மை காக்கப் படவேண்டும் என்றால் முஸ்லீம், கிறிஸ்டியன் என்ற மற்ற மைனாரிட்டிகளைப் பாதுகாப்பது என்பதாகும். இதுதான் நமது அனைவருடைய கடமையாகும், நமது நாட்டின் ஒற்றுமை ஜனநாயகத்திற்கு தேவையானதாகும். இந்தநிலையில் மெஜாரிட்டி மதத்தினருக்கு மதவெறி ஏற்றினால் ஷாவனிசம் ரிலிஜியஸ் ஃபெனட்டிசிசம் ஏற்றினால் சிறுபான்மை மக்களின் கதி என்னவாகும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.

ஹிந்து மதத்திற்கு அபாயம் என்ற திரை மறைவில் இன்று தமிழகத்தில் மெஜாரிட்டி மக்களுக்கு ஆர். எஸ். எஸ்-ம் ஹிந்து முன்னணியும் மதவெறியைத்தான் ஊட்டுகிறார்கள் என்பது எங்களுடைய கருத்து. ஹிந்து எழுச்சி மாநாடாம். பெரியார் உயிருடனிருந்தால் இதற்கு துணிச்சலுடன் சரியான பதில் கூறியிருப்பார். ஆனால் நம்முடைய துர்ப்பாக்கியம் என்னவென்றால் பெரியாரின் வாரிசு என்று க்ளெய்ம் பண்ணக்கூடிய டி. கே. டி.எம்.கே., ஏ.டி.எம். கே., ஆகிய இந்த மூன்று கட்சிகளும்

[திரு. ரா. உமாநாத்] [1982 மார்ச் 22

பெரியாரின் கொள்கையின் பேசிசிலே அந்த ப்ரப்பொகண்டாவிற்கு கவுண்டர் ப்ரொப்பொகண்டா செய்ய முன்வரவில்லை. சில சந்தர்ப்பங்களில் அதில் சிலர் ஹிந்து முன்னணியின் போக்கிற்கு இரையாகவும் செய்கிறார்கள். நான் கேட்கிறேன் எழுச்சி மாநாட்டின் தேவை என்ன ? இப்போது எழுச்சி இல்லையா ? அந்த மதத்திலே உள்ள பண்டிகைகளுக்கு முன்னைவிட இப்போது கூட்டம் அதிகமாகத்தான் போய்க்கொண்டிருக்கின்றன. இதை மறுக்க முடியுமா ? ஆகவே தனி எழுச்சி ஏன் தேவை ? உண்டியலை உடைத்துப் பார்த்தால் பணம் அதிகமாகச் சேர்ந்திருக்கிறதா இல்லையா ? —மற்ற உண்டியல் உடைப்புகளைப் பற்றி நான் சொல்லவில்லை—ஆகவே இப்போது என்ன எழுச்சி குறைந்துவிட்டது? போதாததற்கு தமிழக கிராமங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கான புதிய ஐயப்பசாமி பக்தர்கள் பெருக்கெடுத்துப்போகவில்லையா ? என்ன எழுச்சி குறைந்துவிட்டது என்று நான் கேட்கிறேன். ஆகவே இந்த மாநாடுகள் எழுச்சி ஊட்டும் மாநாடுகள் அல்ல. வெறியூட்டும் மாநாடுகள் என்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து.

[பிற்பகல் 12.20]

இந்த வெறியூட்டலை நாம் அனுமதிக்கக்கூடாது. நான் ஒரு 'ஆஃபர்' வைக்கிறேன். சர்க்காருக்கும் சரி, ஆளும் கட்சிக்கும் சரி, எல்லாக் கட்சிகளுக்கும் சரி. இந்த வெறியூட்டும் ஆர். எஸ்.எஸ்., இந்து முன்னணி வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக எல்லா வகுப்பினரும் ஒன்றுபட்டு அறைகூவி அழைக்க நம் நாட்டில் மதச்சார்பற்ற நிலையை பாதுகாத்து பிரச்சாரம் செய்ய இங்குள்ள அனைத்து செக்குலர் கட்சிகளும், டெமாக்ரேட்டிக் கட்சித் தலைவர்கள் அனைவரும் மாநிலம் முழுவதும், ஒரே மேடையில் தோன்றி பிரம்மாண்டமான அணிவகுப்பை நடத்தி அதற்கு கூட்டு அறைகூவல் இயக்கம் நடத்த முன்வருவார்களா, முன்வரவேண்டும் என்று எல்லாக் கட்சிகளையும் மார்க்ஸஸட் கம்யுனிஸ்ட் கட்சி சார்பில் நான் வேண்டிக்கொள்கிறேன். தேசபக்தி மிகுந்த எல்லோரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று வகுப்புக் கலவரங்களை தயவுசெய்து பழைய மாதிரி பார்க்கக்கூடாது. அமெரிக்கா ஏகாதிபத்தியம் அஸாம் கிளர்ச்சியையும், பஞ்சாப் காலியஸ்தான் கிளர்ச்சியையும் அது ஊக்குவித்து நாட்டை துண்டாட முயற்சிக்கிறது என்ற உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது. இப்படிப்பட்ட பிரிவினை இயக்கங்களை, வகுப்பு வெறி இயக்கங்களை—அது ஆட்களைப் பிடிக்கிறது Americans, they are there நான் சிறுபான்மை வகுப்பு மக்களையும் கேட்டுக் கொள்கிறேன். வேண்டிக்கொள்கிறேன். உங்கள் குறைகளைப் பயன்படுத்தி ஏகாதிபத்திய ஏஜெண்டுகள் நுழைவதற்கு நீங்கள் விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதல் நீங்கள் உஷாராக, ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். என்று அவர்களையும் நான் மார்க்ஸஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.



1982 மார்ச் 22] [திரு. ரா. உமாநாத்]

போலீஸ் நிர்வாகம் நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் இந்த கம்யூனல் ப்ராப்ளம்ஸ் பற்றி, நான் முன்னதாகவே ஒரு கலவரம் பற்றி இங்கே விவாதிக்கிறபோது பேசுகிற நேரத்தில் அன்று கூட What was your intelligence wing doing ? என்று கேட்டேன். கொஞ்ச நாட்களாகவே பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது அந்த வட்டாரத்தில். சி.ஐ.டி. என்ன செய்கிறது ? ஸ்பெஷல் ப்ராஞ்ச் என்ன செய்கிறது ? என்று நான் கேட்டேன். எங்கள் பின்னால் வரத்தான் ஸ்பெஷல் ப்ராஞ்சா என்று கேட்டேன். இன்றும் நான் கேட்க விரும்புகிறேன். இன்டெலிஜன்ஸ் ஏஜென்ஸ், இப்படி ஒரு வடிவத்தில் கலவரம் ஏற்பட்டுக்கொண்டிருப்பதை என்ன செய்கிறது ? பதட்ட நிலை வளரும்போது ஏன் அரசுக்கு தகவல் அனுப்பவில்லை ? அப்படி தகவல் அனுப்பவில்லையென்று சொன்னால் சர்க்கார் ஏன் அவர்களை தட்டிக் கேட்கவில்லை ? அப்படிச் செய்யத் தவறியவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ? கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த எட்டுமாத காலத்தில் ஆர்.எஸ்.எஸ்-ஆல் வெறியூட்டப்படுகிறது. இன்டெலிஜன்ஸ் ஏஜென்ஸி அதற்கு என்ன செய்தது ? Did they warn the Government? சர்க்காரை எச்சரிக்கை செய்தார்களா ? இப்படி டெவலப்மென்ட் இருக்கிறது என்று எச்சரிக்கை செய்தார்களா ? அவர்கள் என்ன செய்தார்கள் ? மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். அவர்கள் அப்படி செய்யவில்லை என்றால் எந்த செக்ஷன் பேரில் அதற்கு பொறுப்பான அதிகாரிகள்மீது நீங்கள் நடவடிக்கைகள் எடுத்தீர்கள் ? அதற்கும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

இப்போது வேலூர் பக்கத்தில் இந்து முன்னணியினர் க்ரிஸ்டியன்ஸ்-யை தாக்கியதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதே பத்திரிகையில் நாலைந்து நாட்களாக இந்தப் பதட்ட நிலை இருந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. At least after the incident happened in Kanyakumari district. கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்படி நடந்திருக்கிறது என்று பார்த்தோம். இங்கேயும் அப்படி ஒரு பதட்ட நிலை இருக்கிறது என்றால் அது குறித்து ரிப்போர்ட் கொடுத்தார்களா ? Did they inform the Government. அப்படி ஒன்றும் கொடுத்ததாகத் தெரியவில்லை. இது குறித்து ரீஸண்ட் ஆ ஹைகோர்ட் ஜட்ஜ்மெண்ட் இருக்கிறது. இதில் சர்க்கார் கௌரவம் பார்க்கக்கூடாது. எட்டு பேர்கள் கொலை செய்யப்பட்ட ஒரு கேஸ் இது. கொலை செய்வதற்கான ஆயுதமும், துப்பாக்கியும் ஊருக்குள்ளேயே ஐந்தாண்டுகளாக உற்பத்தி செய்து கொண்டிருக்கிறாராம் அந்தக் கொல்லன். இது ஹைகோர்ட் ஜட்ஜ்மெண்ட்.

ஐந்து ஆண்டுகளாக இப்படி ஆயுத உற்பத்தி செய்யக்கூடிய நிலை இருந்தும் சர்க்காருடைய போலீஸ் இன்டெலிஜன்ஸ் ஏஜென்ஸ் Police intelligence departmen faile to take action தவறிவிட்டார்கள், கண்டுபிடிக்க. ஆகவேதான் ஹைகோர்ட் ஜட்ஜ்மெண்ட் சொல்லியிருக்கிறார்கள். intelligence and crime wings.

இரண்டிற்கும் புது ட்ரெயினிங் கொடுத்து இப்படிப்பட்ட தவறுகள் வராமல் பார்த்துக்கொள்ள தனியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஒருபக்கம் கண்டித்தும் இன்னொரு பக்கம் யோசனையும் சொல்லியிருக்கிறார்கள் ஹைகோர்ட் ஜட்ஜ். சர்க்கார் இதை அந்தஸ்து பிரச்சனையாகக் கருதாது ஸிரியஸாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஏதோ ஆயுதங்கள் கடல் வழியாக வருகின்றன என்று போட் போக்குவரத்தை கன்னியாகுமரியில் தடை செய்வதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா ? இல்லையா ? என்று எனக்குத் தெரியாது. ஆனால், படகுப் போக்குவரத்தைக் கடலோரத்தில் தடை செய்தால் ஒரு சிக்கல் அங்கே ஏற்படும். கடலோரத்தில் இருக்கக்கூடிய மீனவர்கள் நகரத்திற்கு வரமுடியாது இந்தப் பதட்ட நிலையில். சாப்பாடு மற்றப் பொருள்கள் வாங்க கடல் வழியும் செல்ல முடியாது என்றால் என்ன செய்வது ? போட்களை செக் செய்யுங்கள், ஆட்சேபணையில்லை. வரக்கூடிய போட்களை செக் செய்யுங்கள், ஆயுதங்கள் மற்றும் ஏதாவது அதுமாதிரி இருக்கிறது என்று சொன்னால் ஸீஸ் செய்யுங்கள். தடை இருந்தால்தான் இதைச் சொல்கிறேன்.

இல்லையென்றால் பிரச்னை இல்லை. இருந்தாலும், நிச்சயமாக இந்தச் சர்க்கார் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிகாரிகள் அணுகும் முறை மிகவும் முக்கியமானது. இன்றைக்கு திருச்சியிலே, சோழமாதேவி என்ற ஊரில் பல ஆண்டு காலமாக பொது வழியிலே தேரை அரிஜன கிறித்துவர்கள் இழுத்துக் கொண்டு வந்திருந்தார்கள். இன்றைக்கு இந்துக்கள் அதைத் தடுக்கிறார்கள். பொது வழியாக தேரைக் கொண்டு போகக் கூடாது என்று 1979-ஆம் ஆண்டிலே தடுக்கிறார்கள். தாசில்தார், எஸ்.பி.யும், சிவில் ரைட்ஸ் ஆக்ட்படி; அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக, என்ன செய்கிறார்கள். நாம் சிவில் ரைட்ஸைப் பற்றி அடிக்கடி பேசுகிறோம். Her is a case where civil rights act has got to be used. அவர்கள் இப்போது பொது ரோடு வழியாக அந்தத் தேரை இழுத்துக் கொண்டு போகலாம் என்றால், முடியாது என்று தடுக்கிறார்கள். அங்கிருக்கும் எஸ்.பி., தாசில்தார் என்ன செய்கிறார்கள் ? சிவில் ரைட்ஸைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, 1979-லே அந்த அரிசனங்களுக்கு எதிராக 144 தடை விதிக்கிறார்கள். 1980-லேயும், அரிசனங்களுக்கு எதிராக 144 தடை விதிக்கிறார்கள். 1981-லேயும், அரிசனங்களுக்கு எதிராக 144 தடை விதிக்கிறார்கள். 1982 ஆரம்பத்திலே அந்த அரிசனங்கள் கோர்ட்டுக்கு போகிறார்கள். நீங்கள் சொல்லுகிறீர்கள் வன்முறை கூடாது என்று. அந்தப்படிக்கு அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றார்கள். கோர்ட்டிலே, அந்த வழியாகத் தேர் கொண்டு போகலாம் என்று தீர்ப்பு கூறியாகி விட்டது.





கோர்ட்டின் தீர்ப்பு தெளிவாக இருக்கிறது. எதிரிகள் சொல்லக்கூடிய காரணங்களைக் கேட்டு, டிபென்ட் பண்ணியதைக் கேட்டு அதிலே ஆதாரம் இல்லை என்று சொல்லி, இந்த அரிசனங்கள் சொல்வதுதான் உண்மை என்று, இந்த பப்ளிக் ரோடு வழியாக தேர் போகலாம் என்று தீர்ப்பு, உத்தரவு வந்தாகி விட்டது. ஆனால், இப்போதும் எஸ்.பி.யும், தாசில்தாரும் சிவில் ரைட்ஸ் ஆக்டைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, கோர்ட்டு தீர்ப்பை மதிப்பதற்குப் பதிலாக அந்த அரிசன மக்களுக்கு எதிராக 144 போடப்பட்டிருக்கிறது. இது தான் சிவில் ரைட்சைப் பாதுகாக்கின்ற இலட்சணமா ? அடிக்கடி கோர்ட்டிலே கேஸ் இருக்கிறது என்று சொல்லி, அது சப்ஜுடிஸ் என்று சொல்லுகிறோமே, இதுதான் கோர்ட்டின் தீர்ப்பை மதிக்கின்ற முறையா ? என்று நான் கேட்கிறேன். சட்டம், அமைதியைப் பற்றி அடிக்கடி கூறுகிறீர்கள். இதுதான் சட்டம் அமைதியைப் பாதுகாக்கின்ற முறையா ?

கடைசியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். போலீஸ்காரர்கள் கோரிக்கை ஒருபக்கம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் நம்மை உதைக்கிறார்கள் ஒருபக்கத்தில். இருந்தாலும், இன்னொரு பக்கத்தில் அவர்கள் உழைக்கும் வர்க்கத்தில் வந்தவர்கள் தான். ஒருநாள் அவர்கள் திருந்துவார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, அதைப் பற்றிப் பேசுகிறேன். 1980-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28-ஆம் நாள் அன்று அ.தி.மு.க.வின் செயற் குழுவில் ஒரு தீர்மானம் போடப்பட்டது. அதிலே, போலீசார் சங்கம் வைக்கும் உரிமை வழங்கப்படும் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அந்தச் செயற்குழுவின் ரெசலூஷன் காபி என்னிடத்தில் இருக்கிறது. '' அண்ணா '' பத்திரிகையில் வந்த அந்த காப்பியை எல்லாம் பத்திரமாக வைத்திருப்பேன். பைல் வைத்திருக்க மாட்டேன். இந்தத் தீர்மானம் போட்டு இரண்டு வருஷங்களாகி விட்டது. அந்த போலீஸ்காரர் சங்கமும் இல்லை ; அங்கீகாரமும் இல்லை. இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டது. இப்படி ஓல் ஆர்கனைசேஷன் சேர்ந்து ஒரு தீர்மானம் போட்டு, தேர்தலுக்கு முன்னாலே வாக்குறுதி கொடுக்கப்பட்டும், அதற்கான உரிமை வழங்கப்படவில்லை. மைய அரசுக்கு ரெபர் செய்திருப்பதாக சட்டசபையிலே சொன்னீர்கள். மைய அரசிடம் இருந்தும் அதற்கான அனுமதி வந்துவிட்டது. மைய அரசு உத்தரவுப்படி, இந்த மாநில அரசும் அதற்கு உத்தரவு போட்டது. அப்படி உத்தரவு போட்டு ஓராண்டுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால், சங்கம் இல்லை ; அங்கீகாரம் இல்லை ; ஒன்றும் இல்லை.

திடீரென்று ஒரு நாள், 3, 4-ஆம் தேதி ஜூன் 1981-லே உங்கள் அமைப்பிற்கு எலெக்ஷன் நடத்தலாம் என்று சொல்லப்பட்டு, தேர்தல் நடைபெறுகிறது. ஆனால், அந்த எலெக்ஷன் மாவட்ட அளவிலேதான் ; மாநிலக் குழுவைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்று தடுத்துவிட்டீர்கள். மாதிரி சங்க விதிகள், மாடல்

[திரு. ரா. உமாநாத்] [1982 மார்ச் 22

சங்க விதிகள் அனுப்ப வேண்டும் என்று அதற்கு ஏற்பாடாகி;
அது லா டிபார்ட்மெண்ட்டுக்கு வந்து, இப்போது அது ஐ.ஜி.
ஆபீசில் இதுவரைக்கும் தூங்கிக்கொண்டு இருப்பதாக கேள்விப்
படுகிறேன். ஆனால், இன்றைக்கு இந்தியன் எக்ஸ்பிரஸ்சில் ஒன்
றைப் பார்க்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்
னதாக. அந்த மாதிரி விதிகள் மத்திய சர்க்காரின் அனுமதிக்காக
அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி
முதல்வர் சொன்னதாக அறிகிறேன். இன்றைக்கு மானியம் வரு
கிறது என்பதால் அப்படி இந்தியன் எக்ஸ்பிரசில் வந்ததோ,
என்னவோ ? காரணம் எதுவாக இருந்தாலும், உண்மை வந்
திருக்கிறது.

[பிற்பகல் 12.30]

அதிலே வேடிக்கை என்னவென்றால் விதிகள் இல்லாமல்,
சங்கத்தை இயங்க விடக்கூடாது என்று இங்கேயிருந்து போலீஸ்
எஸ்.பி.க்கு இன்ஸ்டரக்ஷன்ஸ். விதிகள் இல்லாமல் சங்கத்தை
நடத்த விடாதே, இது ஒரு பக்கம். மறு பக்கம், விதிகள் அனுப்பி
பிய பிறகும் அதை பாஸ் பண்ணாமல் அதை தடுத்து வைப்பது.
இப்படி நடந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசின் கைட்
லைன்ஸ்க்கு காத்திருப்பது என்ற வாதத்தற்கு நான் முதலமைச்
சர் அவர்களைக் கேட்கிறேன், எதற்காக கைட்லைன்சிற்குப்
போக வேண்டும். சங்கத்திற்கு பெர்மிஷன் வேண்டுமென்று
சொல்லி என்னமோ அது வந்தாகி விட்டது. உத்தரவு போட்டு
விட்டார்கள். ஏன் விதிகளைப் பற்றிய கைட்லைன்சிற்குப்
போக வேண்டும்? What is the necessity? இந்த நாட்டிலே
18 போலீஸ் சங்கங்களுக்கு விதிகள் அமைக்கப்பட்டு
அந்த அந்த மாநிலங்களிலே பாஸ் பண்ணி பங்க்ஷன்
பண்ணிக் கொண்டிருக்கின்றன. அப்படி இருக்கிறபோது
நமக்கு மட்டும் ஏன் சென்டருடைய தயவு தேவை ? மற்ற
மாநிலங்களுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது என்றால் நம்மு
டைய மாநிலத்திற்கு மட்டும் இல்லையா ? அண்ணா நாளன்
றைக்கு நீங்கள் எல்லோரும் சேர்ந்து பிரதிக்ஞை ஏற்றுக் கொண்
டிருக்கிறீர்கள். என்னவென்றால் மாநில சுயாட்சியைப் பாது
காப்போம் என்று உறுதிமொழி எடுத்து இருக்கிறீர்கள். மற்ற
மாநிலங்களிலே போலீஸ் யூனியன்களுக்கு விதிகள் அமைத்து இருக்
கின்ற நேரத்திலே நமக்கு அதைச் செய்வதற்கு உரிமை இருக்கிற
போது அந்த உரிமையை மத்திய அரசிடம் ஏன் பிளட்ஜ் பண்ண
வேண்டும் ? இது தான் அந்த வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய
முறையா ? நான் முதலமைச்சரைக் கேட்பது உங்களுடைய
மாநிலத்தில் அரசால் அமல் நடத்த முடியவில்லையா ?
I want to know the truth. அல்லது உங்களுடைய உத்திரவை
அதிகாரிகள் மீறுகிறார்களா ? அவர்கள் அப்படி மீறுகிறார்கள்
என்றால் உங்களால் கட்டுப் படுத்த முடியவில்லையா அல்லது
ஏ.டி.எம்.கே. செயற்குழு கொடுத்த வாக்குறுதியிலிருந்து
செயற்குழு பின்வாங்க விரும்புகிறதா ? The Houses wants a
straight answer on this question. என்ன உண்மை என்பது
எங்களுக்குத் தெரிய வேண்டும்.



982 மார்ச் 22] [திரு. ரா. உமாநாத்]

இந்த அவையிலே போலீஸ் துறை சம்பந்தமாக செய்த
அறிவிப்புகள் எல்லாம் அமல்படுத்தப்படவில்லை. போன வருஷம்
இந்த விவாதத்தின்போது மினிஸ்ட்ரியல் ஸ்டாப் வேலைப் பளு
சம்பந்தமாக ரிலிப் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது.
1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 28 ஆம் நாளில் நீங்களே
சொல்லி அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு கூடி 2,330 போஸ்ட்
கள் மினிஸ்ட்ரியல் ஸ்டாபிற்கு புது ஸ்டாண்டர்டு படி கொடுக்க
வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு இமிடியட்டாக 892 ஆவது
கொடுங்கள் என்று போயாகிவிட்டது, அந்த 892 இல் 8 ஐ
சர்க்கார் அடித்துவிட்டார்கள். அதுதான் நிலைமை.

அதேமாதிரி 1980 ஆம் ஆண்டு சொல்லப்பட்டது, 10 ரூபாய்
சைக்கிள் அலவன்ஸ் என்று. பாஸ் பண்ணி உத்தரவு போட்டும்
கூட இன்னும் பல இடங்களில் கொடுக்கப்படவில்லை. குடும்ப
அங்கத்தினர் அடிப்படையில் வைத்த ரேஷன் கார்டுகளை நீங்களே
வாபஸ் வாங்கிக் கொண்டு புதிய கார்டு என்று அவர்களுக்கு
கொடுத்திருக்கிறீர்கள். இப்போது அந்தக் கார்டினுடைய
நிலைமை என்ன என்றால்—பலரும் பேசியாகிவிட்டது—அளவும்
குறைத்தாகிவிட்டது, விலையும் ஏறியாகிவிட்டது, ஆட்களின்
எண்ணிக்கையும் குறைத்தாகிவிட்டது. இது அந்தமாதிரி இருக்
கிறது.

ஜி.ஓ. 458, 15-4-1980 ஆம் தேதி—அதற்கு கவர்ன்மெண்ட்
அமென்மெண்ட் கொண்டு வந்தார்கள். 10 ஆண்டுகள் சர்வீஸ்
ஆனவர்கள் புரமோஷனுக்கு அருகதையிருந்தாலும் இல்லாவிட்
டாலும் ஆட்டோமேடிக்காக ஸ்பெஷல் அல்லது செலக்ஷன் கிரேட்
போஸ்ட் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரு
டைய அமென்ட்மெண்ட் போடப்பட்டது. அந்த அமென்ட்
மெண்ட் கான்ஸ்டபிள்ஸ்க்கும், ஹெட் கான்ஸ்டபிள்ஸ்க்கும் அமல்
நடத்தப்படவில்லை.

1980 இல் ஒரு உத்திரவு போடப்பட்டது. செலக்
ஷன் கிரேட் பத்து வருடம் ஆனால் 5 ரூபாய் கொடுக்க வேண்டும்
என்று. ஆனால் சிடியில் இன்னும் அது அமல் நடத்தப்படவில்லை.

தேர்தலின் போது திருச்சியிலே நடந்த ஒரு பொதுக்கூட்டத்
திலே மாண்புமிகு முதலமைச்சர் ஒரு வாக்குறுதி தந்தார்.
ஸ்ட்ரைக்கில் கலந்து கொண்டவர்களுக்கும் கலந்து கொள்ளா
தவர்களுக்கும் பாகுபாடு இருப்பது சரியல்ல, அதை அவரே
சொன்னார். ஆகவே வேலைக்கு வந்தவர்களுக்கு கொடுத்த
இன்கிரிமெண்ட் மாதிரி வேலைக்கு வராதவர்களுக்கும் கொடுப்
போம் என்பது, எலக்ஷனுக்கு முன்னாலே கொடுத்த வாக்குறுதி.
கொடுத்தார் என்று நினைக்கிறேன், சமப்படுத்தினார் என்று
நினைக்கிறேன். இப்போது என்னவென்றால் முதலமைச்சர்
அவர்கள் பொங்கல் தின அவார்ட் என்று கொடுத்திருக்கிறார்கள்.
அதிலே கோயம்புத்தூரிலே ஸ்ட்ரைக் காலத்திலே வேலை செய்த
வர்களை மனதிலே வைத்து உயர்த்திக் கொடுத்து இருக்கிறார்கள்.

[திரு. ரா. உமாநாத்] [1982 மார்ச் 22

—பிளாக் லெக்காகப் பார்த்து கொஞ்சம் ஸ்பெஷலாக
பிரத்தியேகமாகக் கொடுத்திருக்கிறார்கள்.—மற்றவர்களுக்கும்
கொடுத்திருக்கிறார்கள். ஒரு அட்வான்ஸ் இன்க்ரிமெண்ட்,
ரூபாய் இனாம், இப்போது பொங்கல் இன்க்ரிமெண்ட், 50
கொடுப்பது என்பது வாக்குறுதியை மீறுவது ஆகாதா? வேறு
வருக்கும் டிபரன்ஸ் இருக்கக் கூடாது என்று நீங்களே இரு
டிபரன்ஸை நீக்கி விட்டு இப்போது நீங்களே சொல்லி
டாக்கிவிடுகிறீர்கள் என்று சொன்னால் அது தப்பு. டிபரன்ஸை உண்

ஆர்டர்லி முறை அப்படியே இருக்கிறது. நான் டீடெய்ல்ஸ்க்
குள் போகவில்லை. புரூப் தரத் தயாராக இருக்கிறேன், வேண்டு
மென்றால்,

24 மணி நேரம் டியூட்டி பார்க்கிறவர்களுக்கு காலை 7
மணிக்கு சாப்பாடு கொடுத்தார்கள். மெட்ராஸ் சிடி, நார்த்
அண்ட் சௌத்—இல் கொடுக்கப்படவில்லை.

கடைசியிலே போலீஸ்காரர்கள் ஒரு கோரிக்கையை வைத்து
இருக்கிறார்கள். செத்தால் ஒரு வண்டி வேண்டுமென்று. செத்
தால் வீட்டிலிருந்து சுடுகாடு வரைக்கும் அமைதியாகப் படுத்துக்
கொண்டு போக ஒரு வண்டி வேண்டுமென்று கேட்கிறார்கள்.
நீங்கள் கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். அதிலே பிரச்சினை
இருக்காது என்று நினைக்கிறேன்.

போலீஸ் மானியத்திலே பதிலளிக்கிறபோது முதலமைச்சர்
அவர்கள் இந்த அவையிலே ஒரு உறுதி கொடுத்தார்கள். அதா
வது வேறு எந்த விஷயமானாலும் நான் சேலஞ்சாக எடுத்துக்
கொள்கிறேன், அவர்களை ஹியூமனைஸ் பண்ணுவேன், மனிதத்
தன்மை படைத்தவர்களாக் அந்த இயந்திரத்தை ஆக்குவேன்
என்று.

ஆனால் இன்று நான் பார்க்கிறேன். கடந்த 4 ஆண்டுகளாக,
'இன் சம் கேசஸ் தே ஹேவ் பீன் மோர் ப்ருட்டலைஸ்ட், மோர்
பார்பாரீய்ஸ்ட் மோர் கோல்ட் ப்ளடட், அண்ட் சம் கேசஸ்
தே ஈவன் டர்ன்ட் மர்டரர்', சில கேஸ்களைத் தான் நான் சொல்
கிறேன். கடந்த நான்கு ஆண்டுகளாக, அதாவது சில இடங்களில்
மிருகத்தனம், காட்டுமிராண்டித்தனம், கல்நெஞ்சம், மேலும்
அதிகரித்துள்ளது. சிலர் கொலைகாரர்களாகவே மாறியிருக்
கிறார்கள். இதற்கு சான்றுகள் பல கால் அட்டென்ஷன்ஸ் பல
இடங்களிலிருந்தும் வந்திருக்கிறது. அவற்றை ரிபீட் பண்ணு
வதற்கு விரும்பவில்லை. அரசாங்க குறிப்புகளைப் பார்த்தாலே
தெரியும்.

மேலெழுந்தவாரியாக பார்த்தாலே அந்த இன்ஸ்பெக்டர்ஸ்
புரோவகேஷனில் தான் ஏற்பட்ட பயரிங்க்ஸ் என்பது தெரிய
வருகிறது. திட்டக்குடி இன்ஸ்பெக்டர், அவர் டிரைவர்



982 மார்ச் 22] [திரு ரா. உமாநாத்]

லைசென்சை கேட்டு ஒரு பஸ்ஸை நிறுத்தி, நீ லைசென்சை
கொடுக்காவிட்டால் பஸ்ஸை விடமாட்டேன் என்று சொல்லி
அதையொட்டி தான் கடைசியிலே பயரிங். அவர் எதற்காக
டிரைவர் லைசென்சை கேட்டார் தெரியுமா? அதுவும் அந்த
குறிப்பிலே சொல்கிறார்கள். செக்கிங்கிற்காக கேட்கவில்லை.
முதல் நாள் அந்த சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஒருவரை ஏற்றச்
சொன்னாராம். டிரைவர் மறுத்தாராம், அதற்காக மறுநாள்
ரிட்டாலியேஷன். செக் பண்ணுவதற்காக டிரைவர் லைசென்ஸ்
கேட்டால் அது வேறு, ஆனால் இதற்கு காரணம் முந்தின நாள்
நடந்த சம்பவம், அதற்கு தான ரிட்டாலியேஷன். டிரைவர்
அதை மறுத்தது தப்பானாலும் சரி, மறு நாள் ரிட்டாலியேஷன்,
உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது. அதன் விளைவாக
தகராறு நடந்து கடைசியிலே பயரிங்கிலே கொண்டு போய் விட்
டது. அதேபோல பாரா 82-லே இரண்டு டிரைவர்கள், ஒரு
பஸ்ஸிலே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் போய்க் கொண்
டிருந்தாராம். அவர் போய் கொண்டிருந்த பஸ்ஸிற்கு எதிராக
இன்னொரு பஸ்—இரண்டு பேர்களும் மாறாமல் தகராறு பண்ணு
வார்கள் சமயத்திலே, அந்த தகராறு நடந்திருக்கிறது. பஸ்
போகவில்லை. சர்க்கிள் இன்ஸ்பெக்டர்—அந்த நோட் டடி—
இறங்கி அடுத்த பஸ்,—தான் போக முடியவில்லை பாருங்கள்—
அந்த டிரைவரை இழுத்து போட்டு அடித்திருக்கிறார். இதுதான்
கடைசியில் பயரிங்கிலே கொண்டு போய் விட்டது. போலீஸ்
ஸ்டேஷன்லே போய் அங்கே கும்பல், இவற்றால் போலீசினுடைய
நடத்தையே, 'சம் ஆப் தீஸ் ஆபீசர்ஸ், சம் ஆப் தீஸ் எலி
மென்ட்ஸ்' இதுபோல் இன்றைக்கு இருக்கிறது.

ஆட்டை கடித்து, மாட்டை கடித்து, மனுஷனை கடிக்கும்
என்று முன்னோர்கள் சொன்னார்களே, அதுபோல ஆளும்
கட்சிக்கு சொல்ல விரும்புகிறேன். கடைசியிலே உங்களிடமும்
வந்து விட்டது. கீழக்கரையிலே 1982 ஆம் ஆண்டு பிப்ரவரித்
திங்கள் 4 ஆம் நாளில் இரண்டு பேர் லாக்கப்பிலே அடிக்கப்பட்
டிருக்கிறார்கள். ஏ.ஐ.டி.எம்.கே. செகரட்டிரி நமச்சிவாயம்
அங்கே போய் அடித்தது தப்பு என்று சொல்லியிருக்கிறார். உன்
வேலையை பார் என்று சொல்லியிருக்கிறார்கள். மறுநாள் $6\frac{1}{2}$
மணிக்கு அந்த ஏ.ஐ.டி.எம்.கே. செகரட்டரியை பிடித்து சங்கிலி
போட்டு மாலை 4 மணிக்கு பப்ளிக் ரோட்டிலே கீழக்கரையிலே
நடக்க வைத்து, பஸ் ஏற்றி, இராமநாதபுரம் மாஜிஸ்ட்டிரேட்
டிடம் கொண்டு போய், மாஜிஸ்ட்ரேட் இராமேஸ்வரம் போயிருக்
கிறார் என்று சொல்லி, அந்த சங்கிலியை போட்டு 9 மணிக்கு
நைட் ட்ரெயினிலே ஏற்றி விட்டார்கள். அங்கு அடிக்கிறது
தப்பு என்கிற போது அவர் தலையிட்டது சரிதான் என்று நான்
கருதுகிறேன். எந்த பப்ளிக்கும் தலையிட வேண்டியது தான்.
அதற்காக சங்கிலி போட்டு பழி வாங்கக் கூடிய நிலை இருக்கிறது.
இப்படி பழிவாங்கும் நிலை போலீஸ் மத்தியிலே இருப்பதை
தடுக்கவில்லை என்றால், சாதாரண ஜனங்களுக்கு ஸ்டேஷனுக்
குள்ளே போய் உயிரோடு வெளியே வருவோமா, அடிபட்டு வரு
வோமோ என்ற அச்சம் இன்னும் சீரியசாகும் என்று சொல்லி
முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வணக்கத்திற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற காவல் துறை, தீயணைப்புத்துறை மானியக்கோரிக்கைகள் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தமிழக மக்களின் உணர்வுகளை இந்த மன்றத்திலே பகிர்ந்துகொள்வதற்குரிய வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாகவே இந்தியாவிலே தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு திருப்திகரமாக திட்டங்களை வெற்றிகரமாக நடத்துகிறார்கள் என்றும், ஜனநாயக இலக்கணமாக, சம வாழ்வின் இலட்சணமாக, பாதுகாப்புப் பெட்டகமாக, ஒரு சமாதான பூமியாக இன்று தமிழகம் விளங்குகிறது என்று பல்வேறு அரசியல் தலைவர்களும், இந்த மாநிலத்திற்கு அப்பாலிருக்கிற முதலமைச்சர்களும், டெல்லியில் இருக்கிற பலரும் பாராட்டுகிற அளவிற்கு தமிழகம் இருக்கிறது என்பதை எண்ணுகிற நிலையிலே உண்மையில் மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகிறோம். அதே நேரத்தில் காங்கிரஸ் நண்பர்கள்கூட சில கருத்துக்களைச் சொன்னார்கள். ஒன்றை மட்டும் அவர்களுக்குத் தெளிவாக்க விரும்புகிறேன். தமிழகத்தைத் தவிர வேறு இந்திய துணைக் கண்டத்திலே எந்த மாநிலமானாலும், எந்தக் கட்சி ஆட்சி செய்து கொண்டிருந்தாலும் இதைவிட திருப்திகரமாக இருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலையில் எந்தச் சர்க்காரும் இல்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

[பிற்பகல் 12.40]

இங்கே பேசுகின்ற பொழுது சில குற்றச்சாட்டுகளைக்கூடச் சொன்னார்கள். 12,000 பேர் காவலர் தேர்வுக்கு எடுத்துக் கொள்வதாகச் சொன்னீர்களே, எடுத்துக் கொண்டீர்களா என்று கேட்டார்கள். 12,000 பேர்—போலீஸ் துறைக்குத்—தேவை, என்று சொன்னோம். ஆனால், ஒரே நாளில் போட்டுவிடுகிறோம் என்று சொல்லவில்லை. அப்படி எடுத்துக்கொள்வது என்பது இந்த அரசின் கொள்கை என்ற ஒரு முடிவுக்கு வந்து, முதன் முதலாக, சுமார், 4,000 பேர் எடுத்து இருக்கிறோம். அதைத் தொடர்ந்து ஆயிரம் பேர் எடுத்து இருக்கிறோம். படிப்படியாகக் காலப் போக்கில் தேவையைக் கருதி, நாம் சொன்ன அந்த இலக்கினைப் பெற முடியும் என்பதனை நான் பதிலாக வைக்க விரும்புகிறேன்.

இன்னொன்றைச் சொன்னார்கள், எஸ்.ஐ. தேர்வுகள் நடைபெற்றது, அந்தத் தேர்வுக்குச் சென்ற யாரும் இன்னும் பதவியிலே நியமனம் செய்யப்படவில்லையென்று. உண்மைதான். வேலியே பயிரை மேயக்கூடிய ஒரு சூழ்நிலை அந்த நேரத்திலே அந்தத் துறையிலே ஏற்பட்டு விட்டதாக, முதலமைச்சரிடத்திலே





இருக்கிற ஒரு இலாகா தகவல் சொல்லியும், பொதுமக்களிடமிருந்து சில கருத்துக்கள் கிடைத்ததன் காரணமாகவும், அதை, எப்படி நடத்தினால் சரியாக இருக்கும் என்பதை ஆராய்ந்து, இராணுவத்தை வைத்தா அல்லது, இராணுவ அதிகாரிகளோடு கலந்து ஆலோசனை செய்தா, அல்லது இவர்கள் இருவரையும் கலந்து அந்தத் துறையிலே, எந்த முறையிலே தேர்ந்தெடுத்தால் மிக நன்றாக இருக்கும், வெற்றிகரமாக இருக்கும், எதிர்க்கட்சி உறுப்பினர்கூட குறை சொல்ல முடியாத அளவு நடத்துவதற்கு வாய்ப்பு இருக்குமோ அப்படி செய்யலாம் என்று வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் அதனைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஒன்றைச் சொன்னார்கள். சில நேரங்களில், போலீஸ் மிகப் பெரிய குற்ற இலாகா என்று சொல்வார்கள். சில நேரங்களில், அவர்களுக்குச் சலுகை கொடுத்திருக்கிறீர்களே தவிர, அதைச் சரியாக கொடுக்கவில்லை, அந்தச் சலுகைகளை முழுமையாக நீங்கள் அளிக்கவில்லை என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்) பேசுகின்ற உறுப்பினர் யீல்டானால் நீங்கள் குறுக்கிடலாம்.

டாக்டர் கே. சமரசம்: நான் யீல்ட் பண்ணவில்லை. நான் பேசி முடித்ததற்குப் பிறகு எந்தக் கேள்வியை வேண்டுமானாலும் கேட்கட்டும். நான் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லிவிட்டு உட்காருகிறேன். (குறுக்கீடுகள்).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு உறுப்பினர் பேசும்பொழுது குறுக்கிடவே கூடாது. அதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: நான் பேசும்போது குறுக்கிட்டார்களே........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: குற்றச்சாட்டு சொல்லும்போது, விளக்கத்திற்காக் குறுக்கிட்டிருக்கலாம். சில முன் உதாரணங்கள் சில நேரங்களில் ஒத்துப் போகும், சில நேரங்களில் ஒத்துப்போகாது. இப்பொழுது குறுக்கீடுகள் வேண்டாம், டாக்டர் சமரசம் பேசட்டும்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சர்க்கரையோ, இன்னும் சில தட்டுப்பாடு பொருள்களோ சலுகையாக வழங்கப்படுவதைப் பொறுத்தவரை, தனியாக, இவர்

களுக்கென கொடுக்கப்பட்ட சலுகைகள், தமிழ்நாட்டினுடைய மொத்த வரம்பினுடைய நிலைக்கேற்றவாறு சில மாறுதல்கள் ஏற்பட்டன. அப்படி இருக்க வேண்டுமென்று நீங்கள் கருது கிறீர்களா, இல்லையா என்று தெளிவாகச் சொன்னால் அதைக் கூட மறுபரிசீலனை செய்வதைப் பற்றி கவலை இல்லை. பொது வாக சர்க்கரை இப்படித்தான் கொடுக்க வேண்டு மன்று நாம் சொன்னோம். பிறகு, வருமானத்தின் அடிப்படையில் என்று வைத்தோம். பிறகு, வருமானத்தின் அடிப்படையிலா, நபர் வாரியா என்று வந்தபோது, நபர்வாரி என்று வைத்தோம். இப் படித்தான் இருக்க வேண்டுமென்று எதிர்க்கட்சியிலே சிறந்த, யோசனை சொல்கின்ற நேரத்தில் ஆளுங்கட்சி பரிசீலிப்பதைப் பற்றி கவலை இல்லை. ஆனால், '' முந்திர- சுசினா முனிரத்தினம் குர்ரங்கா உந்தி வெனக்கே சூசினா வெங்கட்டரத்தினம் குர்ரங்கா உந்தி '' என்கின்ற நிலையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன் றாகச் சொல்லிக்கொண்டிருக்கும்போது வாதங்கள் வளருகிறதே தவிர, முற்றுப்பெறாமலிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு இருந்ததை விட இப்போது குற்றங்கள் எல்லாம் அதிகமாக இருப்பதாகக் குற்றம் சுமத்திப் பேசினார்கள். இருக்கலாம். காரணம் இப் பொழுது அது நாடு தழுவிய பிரச்னையாகத்தானிருந்துகொண் டிருக்கிறது. இன்றைக்குத் குற்றங்கள் முன்பைவிட அதிகம் என்று சொல்கின்ற நேரத்தில், சென்னையிலே கூட 49 கொலைகள் என்று சொன்னார்கள். ஆனால், அதிலே 36 கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றன. 13 இன்வெஸ்டிகேஷனிலே இருக்கின்றன. அப் படிப்பட்ட சூழ்நிலையை நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

இன்னும் சொல்லப்போனால், இந்தக் கொலைகள் தொடர்ந்து வரக்கூடியதை எல்லாம் பார்த்தால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேகூட, கண்டுபிடிக்க முடியாத பல கொலைகள் உண்டு. திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலேகூட ஒவ்வொரு ஆண்டும் துப்பாக்கிச்சூடு நடந்திருக்கிறது. 1971-லே துப்பாக்கிச்சூடு 4 ; அதிலே இறந்தது 2 பேர். 1972-லே துப்பாக்கிச்சூடு 16 ; அதிலே இறந்தது 18. 1973-லே துப்பாக்கிச்சூடு 7 ; அதிலே இறந்தது 3. 1975-ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூடு நடந்தது 13; இறந்தது 8. 1977-ஆம் ஆண்டு துப்பாக்கிச்சூடு நடந்தது 4; இறந்தது 4. 1978-ஆம் ஆண்டு துப்பாக்கிச்சூடு நடந்தது 12; இறந்தது 9. 1979-ஆம் ஆண்டு துப்பாக்கிச்சூடு நடந்தது 13; இறந்தது 13. 1980-ஆம் ஆண்டு துப்பாக்கிச்சூடு நடந்தது 21; இறந்தது 20. 1981-ஆம் ஆண்டு துப்பாக்கிச்சூடு நடந்தது 23; இறந்தது 12. இந்த நிலைமையில் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆனால், அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி யிலேகூட தியாகராய நகர் தணிகாசலம் பிள்ளைத் தெருவில் நடந்த கொலை பற்றிக் கண்டுபிடிக்கப்படவில்லை. இதை யாரும் மறந்துவிட முடியாது ; மறைத்து விடவும் முடியாது.



நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்படுவதற்கு முன்பு ஏற்கனவே பல்வேறு அரசாங்கங்கள் இந்த நாட்டிலே நடந்து கொண்டிருந்தாலும்கூட, வெள்ளைக்காரர்கள் ஆட்சியிலே இருந்தபோழுது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்யாத அர்த்தால்கள், போராட்டங்கள்; அடுத்து காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்த பொழுது எதிர்க்கட்சியிலே இருந்தவர் கள் செய்யாத அர்த்தால்கள், போராட்டங்கள், அடுத்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலேயிருக்கும்பொழுது எதிர்க்கட்சியில் இருந்தவர்கள், மற்றுமுள்ள கட்சிக்காரர்கள் ஆகியோர் செய்யாத அர்த்தால்கள், போராட்டங்கள் அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக இருக்கின்ற நேரத்தில் எவ்வளவு போராட்டங்கள், எவ்வளவு அர்த்தால்கள் நாட்டிலே நடைபெற்றிருக்கின்றன என்பதை அருள் கூர்ந்து சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் போராட்டம், மரம் வெட்டி ரோட்டில் போடு வது, பாலைக் கீழே ஊற்றுவது, பாலங்களுக்கு வெடிகுண்டு வைப்பது, பணி செய்வதைத் தடுப்பது, பணி செய்யாமலிருப்பது, கோவணம் கட்டிக் கொண்டு போராட்டம், மொட்டை அடித்துக் கொண்டு போராட்டம், சட்டையில்லாமல் போராட்டம், நாமம் போட்டுக்கொண்டு போராட்டம், முக்காடு போட்டுக் கொண்டு போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம், மௌனம் என்று போராட்டம், பலவிதப் பயணங்கள் என்ற போராட்டங்கள், பஸ் எரிப்புப் போராட்டம் என்ற பலப்பல விநோதங்களைச் சந்தித்திருக்கிறது இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழக அரசு. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் மின் கட்டணம் செலுத்தாதே என்று போராட்டம், வங்கிக் கடனைச் செலுத்தாதே என்று போராட்டம். இப்படிப்பட்ட எண்ணற்ற போராட்டங்கள் நாட்டிலே நடந்தன. ஆகவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்றும் அளவிற்குச் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ இல்லை. ஆனால் எந்த ஆட்சியிலும் ஏற்படாத ஒரு நிலைமை, ஒரு கொடுமை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு மற்றவர்களால் வந்தது என்பதை அவரவர்கள் நெஞ்சிலே கை வைத்துக் கொண்டு பார்த்தால் தெரியும் என்பதை இந்த நேரத் தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், அப்படிப்பட்ட சூழ்நிலையில் உலகத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பாக நடந்திருக்கிறது. போலீஸ் இலாக்கா அதன் நடைமுறைக்கு ஒரு முன்னுதாரணமாக விளங் கியது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எதிர்க்கட்சியினர் மீது அதிக அளவில் வழக்குப் போடப்படுகிறது என்று சொல்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இரண்டு முறை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எதிர்க்கட்சிகள் மீது போடப்பட்ட வழக்குகளை விட மிக அதிகமாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மீது மூன்று மாத காலத்தில் போடப்பட்டு நாங்கள் சந்தித்திருக்கிறோம் என்பதைப் புள்ளி விவரத்தோடு, ஆதாரத்தோடு சொல்லிக் கொள்ளவும் தயாராக இருக்கிறேன். நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சென்றோம் என்பதற்காக அப்பொழுது எந்தெந்த வகைகளிலே பழி வாங்கப்பட்டோம் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். நானே பழி வாங்கப்பட்டிருக்கிறேன். என் மீது குற்றம் சுமத்தப்பட்டு வழக்குப் போடப்பட்டது. கூட்டுறவுத் துறையிலே மோசடி செய்தேன் என்று குற்றம் சுமத்தப்பட்டு சப்-ஜெயிலில் வைக்கப்பட்டேன். சென்னையில் ஆறு மாதங்கள், தர்மபுரியை விட்டு வெளியே ஆறு மாதங்கள் என்று கன்டிஷன்ட் பெயில் என்று விடப்பட்டேன். 50 ரூபாய்க்கு ஒரு ரசீது போடாத காரணம் என்று சொல்லி, கடைசியிலே எனக்கே பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொடுத்தார்கள். மேலும் பொருளாதார நிலையிலே சீர்குலைய வைக்க வேண்டும், பொருளாதாரத்திலே நசிவு ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக எனக்குள்ள பன்னிரண்டரை ஏக்கர் நிலத்தில் 1,200 மாஞ்செடிகள் வைத்து, காம்பவுண்ட் கட்டியிருந்தேன். அரசாங்கத்திலிருந்து கடன் வாங்கிய இடம், வறட்சிப் பணியிலே திட்டம் என்று போட்டு செலவு செய்தால், பத்தில் ஒரு பங்கு, நூறில் ஒரு பங்கு என்று கூட நன்மை கிடைக்காத அளவில் ஐடியலாகப் போட்டார்கள்.

ஆகவே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசில், சிறையில் அடைக்கிறார்கள் என்றும், வழக்குப் போடுகிறார்கள் என்றும் என்னென்ன பழி பாவங்கள் என்று சொல்வதை விட, அவர்கள் ஆளுங் கட்சியிலே இருக்கின்றபொழுது எதிர்க்கட்சியிலே இருந்த நாங்கள் எப்படியெப்படிப் பாதிக்கப்பட்டோம் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். அந்த நேரத்தில் நாங்கள் இதைப் பற்றிப் புரட்சித் தலைவரவர்களிடத்தில் சொல்கிறபொழுது அவர்கள் சொன்னார்கள், எதையும் தாங்கும் இதயத்தோடு இதையும் தாங்கிக் கொள்ளுங்கள், காலம் வரும் என்று சொன்னார்கள். அந்த வகையில் எங்களுடைய பணிகள் இருக்கின்றன. (மணியடிக்கப்பட்டது.)

[பிற்பகல் 1250.]

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதும், தீயணைப்பு துறை மானியக் கோரிக்கையின் மீதும் இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியின் சார்பாக சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.





முதலிலே தீயணைப்பு நிலையம் ஒன்று திருத்துறைப்பூண்டிக்கு வேண்டும் என்று 2 ஆண்டு காலமாக கேட்டு நம் முதலமைச்சர் அவர்களால் இந்த அவையில் அறிவிக்கப்பட்டு, திருத்துறைப்பூண்டியில் தீ அணைப்பு நிலையம் அமைப்பதற்காக குறிப்பு இந்த விளக்கக் குறிப்பில் இடம் பெற்றிருப்பதற்கு நன்றி கூறி, மேலும் காலம் கடத்தாமல் துரிதமாக திருத்துறைப்பூண்டியிலே அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காவல் துறை. காவல் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது மத்திய அரசாங்கத்திலே உள்ள உள்துறை அமைச்சகம் விரிவான ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே குற்றங்கள் அதிகரிப்பதன் விகிதமானது, நாட்டின் ஜனத்தொகை அதிகரிப்பு விகிதத்தை மிஞ்சும் விதத்தில் இருக்கின்றது என்று மத்திய அரசாங்கம் இந்த நாட்டில் எந்த அளவுக்குக் கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், வழிப்பறிக் கொள்ளைகள், இவைகள் அத்துமீறி இருக்கின்றன என்று மத்திய அரசாங்கமே இன்றைக்கு ஒத்துக் கொண்டு தினமணியிலே அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள். அதிலே தமிழகம் விதிவிலக்காக இருக்கின்றதா என்று பார்த்தால், அதையும் மிஞ்சி நிற்கின்றது. காவல் துறை அதிகாரிகளுக்கும் எங்களுக்கும் தனிப்பட்ட முறையில் எதிரிகள் கிடையாது. ஒரு நாட்டின், மாநிலத்தின் கொள்கையை அடிப்படையாக வைத்து அந்த இலாகா செயல்படும் நிலை இருக்கிறது. அந்த அடிப்படையில் காவல் துறை செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு உழைக்கும் பெண்கள், விவசாயத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். கிராமங்களிலே இன்றைக்கு அழகான ஒரு பெண் வேலைக்குச் செல்ல முடியாது. தஞ்சை மாவட்டம், வலங்கைமான் தாலுகாவில் கோவிந்தக்குடி என்ற கிராமத்தில் மாரிமுத்து மகள் ராஜாத்தி, வயது 16, அவர் ஜனவரி மாதம் 27 ஆம் தேதி கரும்புக் காட்டிலே வேலை செய்துவிட்டு, வீட்டுக்குத் திரும்புகிறபோது, ஒரு நிலப்பிரபுவின் மகன் அந்தப் பெண்ணைத் தூக்கிச் சென்று கரும்புக் காட்டில் வைத்து கற்பழித்து இருக்கிறான். அந்தப் பெண் அலறி தன் தந்தையிடம் சொல்லுகிறாள். பல முக்கியஸ்தர்கள் தலையிட்டும் நியாயம் கிடைக்காமல் காவல் நிலையம் செல்லுகிறார்கள். காவல்துறை என்ன செய்திருக்க வேண்டும். 16 வயதே ஆன ஒரு தாழ்த்தப்பட்ட மகள், ஒரு நிலப்பிரபுவின் மகனான ஒரு முரடனால், கற்பழிக்கப்பட்டு, அங்கமெல்லாம் ரத்தம் ஒழுக வந்த அந்தப் பெண்ணை காவல் துறை என்ன செய்தது? தன் மகளைப் போல பாவித்தார்களா, நடவடிக்கை எடுத்தார்களா, இல்லை, அதற்குப் பதிலாக அந்த நிலப் பிரபுவுக்குச் சாதகமாக, அந்தப் பெண்ணுக்கு ஒரு சோப்பு வாங்கிக் கொடுத்து குளிக்க வைத்து டாக்டரிடம் சென்றால் இது நிரூபணம் ஆகிவிடும் என்று சொல்லி அதை மறைத்திருக்கிறார்கள்.

ஆகவேதான் இன்றைக்கு உழைக்கின்ற பெண்களுக்குத், தாய்மார்களுக்கு காவல் துறையால் பாதுகாப்பு இல்லை என்பதற்காக ஒரு சான்றுக்காக இதைச் சொல்லுகிறேன்.

அதேபோல, விவசாயத் தொழிலாளர் பிரச்சினை. வருவாய்த் துறை அமைச்சர் சட்டம் கொண்டு வந்திருக்கிறார். தமிழகம் முழுவதும் 7 ரூபாய், 5 ரூபாய். கீழத் தஞ்சைக்கு 9 ரூபாய் 7 ரூபாய். 8—இல் 1 பங்கு அறுவடைக் கூலி என்று சட்டம் கொண்டு வந்தார். நான் கேட்கின்றேன். இந்தக் கூலி ஒழுங்காகக் கொடுக்கப்படவில்லை என்பதற்காக எந்த மிராஸ்தாரரை யாவது காவல் துறையினர் கைது செய்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ? அப்படி செய்ததாக நிரூபிக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். இன்றைக்குக் குடவாசல் பகுதியில் சட்டப்படி கூலி கொடுக்கவில்லை என்பதற்காக, 8 இல் 1 பங்கு கொடுக்காததற்காக நூற்றுக்கணக்கான விவசாயத் தொவிலாளர்கள் வேலை நிறுத்தம் நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் மீது பொய் வழக்குகள் போட்டிருக்கிறார்கள். அந்த விவசாயத் தோழர்களின் தலைவன் இடும்பன் என்பவர் பேரில் இதுபோன்று பொய் வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். சட்டக் கூலியைக் கேட்ட விவசாயத் தொழிலாளி மீது பொய் வழக்குகள். அடி தடி. அதோடு விடுகிறார்களா ? அந்த விவசாயிகளை அடிப்பதோடு மட்டுமல்ல. அந்தத் தெருவிலே நுழைந்து அந்த வீடுகளிலே உள்ள மண்பாண்டங்களை உடைக்கிறார்கள். அந்த மண்பாண்டங்கள் என்ன செய்தது ? தட்டுமுட்டுச் சாமான்கள் என்ன செய்தன ? குடவாசல் வட்டாரத்தில் அந்த தெருவிலே இருக்கின்ற அந்த விவசாயத் தொழிலாளர்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதேபோல் காவல் துறையினர் சங்கம் வைக்கிறபோது நமது முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காவல் துறையினர் சங்கம் வைத்து ஒருவார காலமாகப் போராடுகிறார்கள். இப்போதுதான் தமிழகத்தில் மக்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படியானால், காவல் துறையினர் சங்கம் வைத்ததன் பெயரால்தான் தமிழகமே அமைதி என்று சொன்னார்கள். அதே முதலமைச்சர் இன்றைக்குச் சொல்கிறார், மக்கள் எங்கு பார்த்தாலும் வன்முறையில் ஈடுபடுகிறார்கள், எங்கள் காவல் துறையினர்தான் இன்றைக்கு நியாயமாக நடக்கிறார்கள் என்று அவர்கள் இன்றைக்கு வியாக்கியானம் பேசுகிறார்கள் என்று சொன்னால், காவல் துறையைப்பற்றி எந்த அளவுக்கு இன்றைக்கு மக்கள் மூன்னால் ஒரு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அதேபோல் கள்ளச் சாராயம், மதுவிலக்கு ஆகியவைகளுக்கு இன்றைக்கு சட்டமுறைகள் ஏற்பட்டிருக்கிறது. நான் ஒன்றைச் சொல்கிறேன். இந்தக் கள்ளச்சாராயம், மதுவிலக்கு இரண்டையும் இந்தச் சட்டத்தின் பெயரால் அமுல்படுத்தி



விடமுடியுமா? காவல் துறையினர் இந்த மாநிலத்தில் கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்று உறுதியாக நின்று போராடினால், இந்தக் கள்ளச்சாராயத்தை 24 மணி நேரத்தில் ஒழிக்க முடியும். ஆனால், முடியாது என்பதுதான் எங்களுடைய தாழ்மையான கருத்து. காரணம், அரசியல் தலையீடு இன்றைக்கு இருக்கிறது. கையூட்டும் இன்றைக்கு வாங்கப்படுகிறது. இந்த இரண்டையும் ஒழிக்காமல், கள்ளச்சாராயத்தை காவல் துறை ஒழித்து விடும் என்று சொன்னால், அதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லையென்றுதான் நான் சொல்கிறேன்.

தர்மபுரி மாவட்டம் இன்றைக்கு நமது முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், அதர்மம், நக்சல்பாரிகள், அதிதீவிரவாதிகள் ஆகியவர்கள் இருக்கிறார்கள், ஆகவே இன்றைக்கு துப்பாக்கிச் சூடு என்கிறார்கள். நாங்கள் நக்சல்பாரிகளுடைய கொள்கையை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. உண்மையிலேயே, அவர்கள் நக்சல்பாரிகள் தானா? தர்மபுரி மாவட்டத்தில், பெண்ணாடம் தொகுதியில், சின்னப்பநல்லூர் என்ற கிராமத்தில் போலீஸ் அராஜகம் நடைபெற்றிருக்கிறது. இந்தக் கிராமத்திலே போலீசார் ஒரு வீடு தவறாமல் புகுந்து பண்ட பாத்திரங்களையெல்லாம் அடித்து நொறுக்கி இருக்கிறார்கள், நான் அந்தக் கிராமத்திற்கு நேரிலே சென்று பார்த்தேன். அங்கிருப்பவர்கள், அத்தனை குடும்பங்களும் நக்சல்பாரிகள் தானா? விவசாயத் தொழிலாளர்கள் கூலி கேட்டால், அவன் போராடினால், அதிதீவிரமாகப் போராடினால் அவன் நக்சல்பாரியா ? நக்சல்பாரி என்று பட்டம் சூட்டுவது இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய காவல் துறையினருக்கு கைவந்த கலையாக மாறிவிட்டது. அதேபோல் தர்மபுரி மாவட்டத்தில், இனாம் நிலத்தில் விவசாயம் செய்து கொண்டிருந்த அந்த விவசாயிகள் அத்தனை பேரையும் காவல் துறையினர் பாதுகாக்காது, அங்குள்ள மிராசுதாரர்களுக்கு துணையாக இருந்ததோடு மட்டுமல்லாமல், அந்த மிராசுதார்களின் பண்ணையாட்களை விட்டு, அந்த கிராமத்திலிருக்கக் கூடிய விவசாயிகளையெல்லாம் துரத்திவிட்டு, அந்தப் பெண்களையெல்லாம் கற்பழித்திருக்கிறார்கள். காவல் துறையினர் இதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? யார் பக்கம் நின்றார்கள் காவல் துறையைச் சார்ந்தவர்கள் ? நிலப் பிரபுக்களுக்குச் சாதகமாக நின்றார்கள்? இன்றைக்கு தர்மபுரி மாவட்டத்தில், எங்கு பார்த்தாலும், விவசாயிகளும், தொழிலாளர்களும் அடிக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் இருக்கிறார்களே தவிர, நிலப்பிரபுக்கள் இன்று பாதுகாக்கப்படுகிறார்கள். அதேபோல் விவசாயிகள் கோரிக்கை வைத்துப் போராடினால், கடன் தள்ளுபடி என்ற பெயரால் அல்லது குத்தகை அதிகம் வேண்டுமென்ற பெயரால், போராடினால், உடனடியாக போலீஸ் தலையிடும். ஏன் தலையிட வேண்டும் ?

இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில், கடன் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். காவல் துறையினருக்கு என்ன வேலை? பழமொழி ஒன்று சொல்வார்கள். அமீனா புகுந்தவீடும், ஆமை

புகுந்த வீடும் உருப்படாது என்று சொல்வார்கள். இன்றைக்கு பெரியவர்கள்கூட, கிராமத்திலே காலிலே செருப்பு அணிந்தால் வெளியிலே விட்டு விட்டுத்தான் செல்லுகிறார்கள் உள்ளே. ஆனால், காவல்துறையினர் விவசாயிகளும், தொழிலாளிகளும் போராடுகின்றபோது, காட்டுமிராண்டித்தனம்போல் காலிலே செருப்பு போட்டுக் கொண்டு, வீட்டுக்குள் சென்று, அந்த பூட்ஸ் காலால் இருக்கக்கூடிய மண் பாத்திரங்களை உடைக்கிறார்கள். இது நியாயமா ? இது என்ன மக்கள் ஜனநாயக ஆட்சியா? அல்லது போலீசினுடைய அராஜக ஆட்சியா? என்று தெரியவில்லை.

அதேபோல், திருச்சி மாவட்டத்தில் ஒரு கிறிஸ்தவ பாதிரியார் ஒரு பண்ணை வைத்திருக்கிறார். இந்தச் சட்டம் அவர்களுக்குச் செல்லாதா ? அங்கே இருக்கக்கூடிய பெரிய அதிகாரிகள், இன்றுவரையிலும் என்ன சொல்கிறார்கள்? அதை நம்பி வாழ்ந்து கொண்டிருந்த விவசாயத் தொழிலாளர்கள் இன்றைக்கு வெளி யேற்றப்பட்டு, நடு ரோட்டிலே பிச்சையெடுத்துக் கொண்டி ருக்கிறார்கள். அதற்கு பெரிய அதிகாரிகள் என்ன சொல்கிறார் கள் தெரியுமா ? இது ஒரு சிறுபான்மையோர் சமுதாயத்தைச் சேர்ந்த பண்ணை. ஆகவே இந்தச் சட்டம் அவர்களிடத்தில் போகாது என்று வியாக்கியானம் பேசுகிறார்கள் காவல்துறை யினர். இதில் நான் குறிப்பிடுவதெல்லாம், சட்டம் என்பது எல்லோரையும் பாதுகாப்பதுதான் (குறுக்கீடு)

[பிற்பகல் 1.00]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே இதிலே சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பிரச்சனை இல்லை. இந்தச் சட்டம் எல்லோருக்கும் செல்லும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். திருச்சி மாவட்டத்திலும் விவசாயக் கூலி என்பது எல்லோருக்கும் பொருந்தும். இதிலே சிறுபான்மை, பெரும்பான்மை, ஜாதி, மதம் என்று ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு பொ. உத்திராபதி :** அமைச்சர் அவர்கள் சொன்னதை நாங்கள் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்; சட்டத்தை மதிக் கிறோம். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அதே திருச்சி மாவட்டத்தில் காவல் துறையினர் இந்த நடவடிக்கையை மேற் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறேன். காவல் துறையினர் சட்டத்தைக் கட்டிக்காத்து, நிலைநிறுத்துவதற்குப் பதிலாக அதற்குப் பாதகமான முறையிலே ஈடுபடுகிறார்கள், அது கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் ஒரு கொலை நடந்திருக்கிறது. தஞ்சுகுட்டி கவுண்டர் வந்து சாட்சி சொல்ல வேண்டும் என்று நிர்ப்பந்திக்கிறார்கள். அவருக்கு 70 வயதாகிறது. அவரால் முடியவில்லை. எவ்வளவோ சொல்லியும் அவரை நிர்ப்பந்திக் கிறார்கள், அவர்தான் சொல்ல வேண்டுமென்று கொடுமைப் படுத்துகிறார்கள்.



அதைப்போல நன்னிலத்தில் உச்சகட்டளை கிராமம். அந்த கிராமத்தில் முழுவதும் விவசாயத் தொழிலாளர்கள்தான். அவர் களுக்குள் ஒரு சம்பவம் நடந்தது. காவல்துறை அவர்களை சமாதானப் படுத்தி வைக்க வேண்டும். இல்லை என்றால் அந்தக் கொலைக்கு சம்பந்தப்பட்டவர் யார், யார் என்று கண்டுபிடித்து, அவர்களை கைதுசெய்து, தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும். அதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதற்கு என்ன செய்தார்கள்? 5 கிராமங்களை அடியோடு அடித்து நொறுக்கி, ஒரு பள்ளிக்கூட மாணவியின் சர்டிபிகேட்டை கிழித் தெறிந்து, ஒரு மாணவனுடைய பேன்டை கிழித்தெறிந்து, இப்படி பல தகாத சம்பவங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி யான போக்குகள் தடுக்கப்படவேண்டும்.

இன்றைக்கு சட்டத்தைப்பற்றி நாம் பேசுகிறோம். 19-1-1982 அன்று ஒரு பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள் போராடினால் அராஜ கத்தில் ஈடுபட்டால் போலீஸ் உள்ளே நுழையாமல் என்ன செய்வார்கள் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். காவல் துறை யினர் அன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் வீடு புகுந்து அடிக்கும் போது 19 ஆம் தேதி ஏதாவது அசம்பாவிதம் நடைபெற்றதா ஒரு பஸ் எரிக்கப்பட்டதா ? ஏதாவது வன்முறை நடைபெற்றதா? இல்லை. அப்படி இருந்தும் அங்கே மூன்று உயிர்கள் பறிக்கப் பட்டதற்கு காவல் துறையின் காட்டுமிராண்டித்தனமும், அவர் களுடைய வன்முறையும்தான் காரணம். தஞ்சை மாவட்டத்தில் போலீஸ் காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொண்டது இதற்கு காரணம் தமிழக அரசின் தவறான கொள்கைதான் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர் களால் கொண்டுவரப்பட்டிருக்கிற காவல் துறை மற்றும் தீ அணைப்புத் துறை மானியக் கோரிக்கைகள் மீது காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக் களைச் சொல்ல விரும்புகிறேன்.

காவல் துறையில் இன்றைக்கு பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன அவர்கள் எல்லோரும் சமமாக நடத்தப்பட வேண்டுமென்பது எங்களுடைய வேண்டுகோள். காவல் துறையில் இருப்பவர்கள் சட்டம், ஒழுங்கைக் காப்பதிலே எவ்வளவு அக்கறையோடு இருக் கிறார்களோ அவ்வளவு அக்கறையோடும் சிரமத்தோடும் அங்கே இருக்கிற காவல் துறை வானொலி பிரிவிலே பணியாற்றுகிறவர் களும் இருக்கிறார்கள். அவர்களும் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டிலே எங்காவது துப்பாக்கிச் சூடு, இனக் கலவரம் நடக்கிறது என்றால் அதிகாரிகள் அங்கே விரைந்து செல்வதற்கு காவல் துறையில் இருக்கிற வானொலிப் பிரிவினர்

திறமையாக செயல்பட வேண்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் பல கோரிக்கைகளைக் கொடுத்தும் அவை நிறைவேற்றப்பட வில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு கூட காவல் [illegible] இருக்கும் வானொலிப் பிரிவினர் மனு கொடுத்த போது நிதி நிலை பற்றாக்குறை இருப்பதால் முடியவில்லை, பின்னால் ஆவன செய்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையில் எந்தவிதமான சலுகைகளும் அவர்களுக்குக் கிடைக்க வில்லை. அவர்களுக்கு காவல் துறையினருக்கு உள்ள அத்தனை சலுகைகளையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு காவல் துறையினருக்கு மலிவு விலையில் மானிய அடிப்படையில் உணவுப்பொருள் வழங்குகிறார் கள். அதைக் கொடுக்காமல் இருந்திருக்கலாம். கொடுத்துவிட்டு பின்னால் அதைக் குறைப்பது சரியல்ல. ஆகவே, ஆரம்பத்தில் எந்த அளவுக்குக் கொடுக்கப்பட்டதோ அதே அளவுக்கு, குறைவு இல்லாமல் கொடுக்க வேண்டும். அதோடு, காவல் துறையிலே இருக்கின்ற மூன்று பிரிவினருக்கும் இந்தச் சலுகை அளிக்கப்பட வேண்டும். காவல் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, தீ அணைப்புப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, வானொலிப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல காவல் துறையில் 12,000 பேர்களை எடுக்கப் போவதாக நீங்கள் சொன்னீர்கள். இதுவரையில் யாரும் எடுக்கப் படவில்லை.

சப்-இன்ஸ்பெக்டர் வேலைக்கு என்பது கூட இன்றும் அமல் படுத்தப்படவில்லை. இது எல்லோரும் மிகவும் விரும்பக்கூடியது தான்.

இங்கே இருக்கும் வாட்ச்-அன்ட்-வார்ட் சிறப்பாகப் பணி யாற்றுகிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கொடுக்கும் அலவன்சு 4 ரூபாய். ஒரு நாளைக்கு சபை காலையிலும் நடக்கிறது, மாலையிலும் நடக்கிறது. 4 ரூபாயை வைத்துக் கொண்டு அவர் களால் காலம் தள்ள முடியுமா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

1974-ல் பயிற்சி முடிந்து 1976 வரையில் ஏ.எஸ்.ஐ. என்று பணியாற்றியவர்கள் 1977-ல் எஸ்.ஐ. ஆகப் பணியாற்றினார்கள். அப்போது அவர்களுக்கு 550 ரூ. சம்பளம் கொடுக்கப்பட்டு இருந் தது. ஆனால் இன்றைக்கு அவர்கள் மறுபடியும் ஏ.எஸ்.ஐ. ஆக ஆக்கப்பட்டு, அவர்கள் சம்பளம் ரூ. 475 என்று குறைக்கப் பட்டு இருக்கிறது. அந்தச் சம்பளம் அங்கேயிருக்கும் தலைமைக்



காவலருக்குக் கிடைக்கும் சம்பளத்தை விடக் குறைவாக இருக் கிறது என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

அதே போல் சி.ஐ.டி. களுக்குக் கொடுக்கப்படும் அலவன்சை இன்றைக்கு சென்னை நகரம் அல்லது கிராமத்தில் உள்ள காவல் நிலையத்தில் பணிபுரிபவர்களுக்கும் கொடுக்க வேண்டும். மெடி கல் அலவன்சு இன்று அதிகாரிகளுக்கு மட்டும் இருக்கிறது, அந்த மெடிகல் அலவன்சு கூடுமான வரையில் எல்லோருக்கும்- அடி மட்டத்தில் இருப்பவர்களுக்கும் சேர்த்து வழங்க வேண்டும். இன்று பல பிரச்னைகள் சொல்லப்பட்டன.

காவலர்களைப் பொறுத்தவரையில், காவலர்களுக்கு மருத்துவ மனை வைத்து இருக்கிறார்கள். ஆனால் அந்த மருத்துவ மனை யில் டாக்டர்கள் சரியாக வருவது இல்லை. எப்போதோ வந்து போகிறார்கள். மருந்து கிடையாது. அந்த மருத்துவ மனை இதனால் சரியாக இயங்கவில்லை அங்கே மின்சார வசதி கிடை யாது. குடிநீர் வசதி கிடையாது. டாக்டர்களும் எப் போதோ வந்து போகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. காவலர்களுக்கு கட்டியிருக்கின்ற வீடுகளில் மின் சார வசதி இல்லை, குடிநீர் வசதி இல்லை. அதுபோக அவர் களுக்கு 20 யூனிட்டுகள் மின்சாரம் அளிப்பதாகக் கணக்கிட்டு 15, ரூ. பிடித்தம் செய்து விடுகிறார்கள். அவர்கள் மினிமம் யூனிட்டுகள் தான் செலவழிக்கின்றனர் என்றும், 5 ரூபாய்க்கு மேல் ஆகாது என்றும் சொல்கிறார்கள். இப்படி கூடுதலாக மின் சாரத்திற்கு பிடித்தம் செய்து விடுகிறார்கள் என்று குறைபட்டுக் கொள்கிறார்கள்.

காவல் துறையினரைப் பொறுத்தவரையில் வீட்டுப் பிரச்னை இருந்தால் அவர்களால் சரியான முறையில் பணியாற்ற முடியாது. ஆகவே, அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் வாகன வசதி வேண்டும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். ஒரு கைதியை மருத் துவ மனைக்கோ அல்லது நீதிமன்றத்திற்கோ அழைத்துச் செல்ல வேண்டும் என்று சொன்னால் எந்தவிதமான வாகன வசதியும் அவர்களுக்குக் கிடையாது. எஸ்.ஐ. கூட எஸ்கார்ட் செல்கின்ற நேரத்தில் கைதிகள் தப்பித்துக் கொண்டு விட்டால் கூட காவலர் களுக்குத்தான் தண்டனை கொடுக்கப்படுகிறது. இப்படி எஸ் கார்ட் செல்கிறநேரத்தில் தப்பித்து விட்டால், அதற்கு மன் னிப்புக்கூட கொடுப்பது இல்லை. அவர்களை உடனடியாக டிஸ்மிஸ் செய்கிற நிலைமை இருக்கிறது. இதை மாற்ற வேண்டும்.

[திரு ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1982 மார்ச் 22

எஸ்கார்ட் அழைத்துச் செல்கிறபோது கையில் விலங்கு போட்டு அழைத்துக் கொண்டு போகிறார்கள். தப்பித்துச் செல்லும் குற்றவாளிகளுக்கு இப்படிப்பட்ட முறையில் விலங்கு போட்டு அழைத்துச் செல்லவேண்டியதுதான். அல்லது பயங்கரமான கொலைக் குற்றம் செய்தவர்களை, கொள்ளை அடித்தவர்கள் அல்லது மிகப் பெரிய குற்றங்கள் செய்தவர்கள் போன்றவர்களை கையில் விலங்கிட்டு அழைத்துச் செல்லவேண்டியதுதான். காவல் துறையினருக்குத் தெரியும் யார் தப்பித்துக் கொண்டு போவார்கள் என்று, ஆனால் அவர்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்காக அவர்கள் கையில் விலங்கிட்டு, அவர்களை வழிநெடுகிலும் அடித்து, துன்புறுத்தி, தெருத்தெருவாக அழைத்துச் செல்வது சரியானதல்ல. அதைக் கண்டிக்கிறேன்.

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு திருத்தங்கல் என்ற இடத்தில் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் காவல் நிலையத்தில் அடித்து மரணம் அடைந்து இருக்கிறார்.

ஆர்.டி..ஓ. விசாரணை நடத்தினார், அந்த விசாரணை அறிக்கையில் ஆர்.டி.ஓ. தெளிவாகச் சொல்லிவிட்டார். குற்றவாளி போலீஸ் ஸ்டேஷனில் அடித்ததால்தான் இறந்து விட்டார் என்று. அதற்காக அந்த ரெங்கராசன் என்ற எஸ்.ஐ. அந்த இடத்தில் இருந்து மாற்றப்படுகிறார். ஆனால் இன்றைக்கு அவர் திரும்பவும் திருத்தங்கலுக்கே மாற்றப்பட்டு இருக்கிறார் என்று அறிகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகள் காவல்துறையில் இருப்பதன் காரணத்தால் தான் காவல் துறையைப் பற்றி ஒரு மோசமான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே காவல் துறையில் இருப்பவர்கள் தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளை மறந்துவிட்டு மக்கள் பணியைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஆலங்குளத்தில் ஊத்துமலைப் பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டும் என்று ஏற்கெனவே கேட்டு இருக்கிறேன். அதை இப்போது வலியுறுத்துகிறேன். ராதாபுரம் திசையன்விளையில் காவல் துறைக்கு கட்டிடம் வேண்டும். காவல்துறையினருக்கு குடியிருப்பு கட்டவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.10]

ராதாபுரம் தொகுதியிலே கூடங்குளம் வட்டத்தில் இருக்கும் வழுவூர் கிளைக் காவல் நிலையத்திற்குச் சரியான கட்டிட வசதியில்லை. அதற்கு ஒரு நிரந்தரமான கட்டிடத்தினை ஏற்படுத்திதரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.



1982 மார்ச் 22]

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போலீஸ் துறையிலே இன்றைக்கு தமிழகத்தில் உள்ள அனைவரையும் கவலைக்குள்ளாக்கியிருக்கிற ஒரு பிரச்சினையைப் பற்றி நான் முதலிலே சில வார்த்தைகளை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் அண்மைக் காலமாக, எந்த நாளும் இல்லாத வகையில், ஜாதிக் கலவரங்களும், மதக் கலவரங்களும் அதிகமாகியிருக்கின்றன. இந்தியாவில் தமிழகம் தான் மதக் கலவரமும், ஜாதிக் கலவரமும் இல்லாத மாநிலமாக இதுவரை விளங்கி வந்திருக்கிறது என்பதற்கு மாறாக அண்மைக் காலத்திலே இங்கே கலவர உணர்வு அதிகமாகியிருக்கிறது. அதிலும் அண்மையிலே குமரி மாவட்டத்தில் நடைபெற்ற அந்தக் கலவரங்கள் இன்றைக்கு அரசாங்கத்தையே அச்சத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது. எல்லாக் கட்சிகளும், கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்களும் கூட, அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழகத்திலே இப்படிப்பட்ட ஒரு நிலைமை வந்து விட்டது, அனைவரும் வருத்தப்படக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

அதைப்பற்றி விசாரிப்பதற்காக ஒரு கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நான் அதைப்பற்றி மற்ற விவரங்களுக்குள் செல்லவில்லை. இந்தக் கமிஷன் ஒரு ஆண்டுக் காலத்திற்கு முன்னால் இருந்த நிலைமைகளையும் ஆராயும் என்று மதிப்பிற்குரிய நமது முதலமைச்சர் அவர்கள் இங்கே சட்டமன்றத்திலே அறிவித்தார்கள். அப்படியானால் ஒரு ஆண்டுக் காலமாக இதற்கான கலவர உணர்வுகள் அந்த மாவட்டத்திலே இருந்து வந்திருக்கிறது என்பது அவர்களுடைய அறிவிப்பின் மூலம் நமக்குத் தெரிகிறது. ஒரு ஆண்டுக்காலமாக அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருந்தபோது, போலீஸ் துறை என்ன செய்தது என்பதுதான் இன்றைக்கு எழுந்திருக்கக்கூடிய ஒரு கேள்வி. இது போன்ற ஒரு நிலைமை அந்த மாவட்டத்தில் ஒரு ஆண்டுக் காலமாக உருவாகி வருகிறது என்பதை முன்னதாக அறிந்து, சம்பந்தப்பட்டவர்களுக்குத் தகவல் கொடுத்து அறிவித்து, அல்லது தகவல் கொடுத்து என்னென்ன தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அதைச் செய்திருக்க வேண்டும். ஆனால் கலவரம் முற்றி வெடித்து இரு தரப்பிலும் பலர் மாண்ட பின்னால் அரசாங்கமே தலையிடக் கூடிய நிலைமை வந்திருக்கிறது என்றால், போலீசார் இந்த துர்ப்பாக்கியமான செயலை எதிர்த்து நன்கு செயல்படவில்லை என்பது நிரூபணமாகிறது. அதைப் போலத்தான் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட ஜாதி கலவரத்தின் போதும் அதை முற்றவிட்டு, பின்னாலேதான் போலீஸ் தலையிடக் கூடிய நிலைமை வந்திருக்கிறது. முன்கூட்டியே இதைத் தடுக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

அதற்கான திறமை என்ன நம் போலீஸ் துறைக்கு இல்லாமல் போய் விட்டதா என்ற கேள்வி இன்றைக்கு எழுந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழக போலீஸ் துறை

எவ்வளவு திறமை வாய்ந்தது என்பதை இந்தியா பூராவும் அறி
யும். ஒரு காலத்தில் இந்து முஸ்லீம் கலவரம் ஏற்பட்ட நேரத்
தில் தமிழகத்திலேயிருந்து போலீசார் சென்று அதை அடக்கி
யிருக்கிறார்கள். இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்தில், 1947
ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள், டெல்லி மாநிலமே பற்றி
எரிந்துக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் இந்து, முஸ்லீம்
ஆகிய இரு வகுப்பினரிடையே இருந்த அந்தச் சண்டை போலீஸ்
படையிலும் ஊடுருவி, போலீசார்களே ஒரு சார்பாக நடக்கிறார்
கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தபோது, இரும்பு மனிதர் என்று
அழைக்கப்பெற்ற சர்தார் வல்லபாய் பட்டேல் என்ன சொன்னார்
என்றால், சென்னையிலிருந்து போலீஸ் படை வரட்டும் என்று
சொல்லி, சென்னையிலிருந்து உயர் போலீஸ் அதிகாரியாக இருந்த
திரு. சஞ்சீவி அவர்களை அழைத்து டெல்லி போலீஸ் கமிஷனராக
அறிவித்து, டெல்லியிலே தமிழக போலீசைக் கொண்டு
கலவர்த்தை அடக்கினார். அதற்குப் பிறகுதான் இந்து, முஸ்லீம்
கலவரம் ஒடுக்கப்பட்டது, நிறுத்தப்பட்டது.

இப்படி வெளி மாநிலங்களிலேயெல்லாம் ஏற்பட்ட கலவரங்
களை ஒடுக்கிய புகழ்வாய்ந்த நமது தமிழக போலீஸ் இன்றைக்கு
என்ன ஆகியிருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.
நம்முடைய தமிழகத்தில் குமரி மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கக்
கூடிய கலவரச் சூழ்நிலையை முன்னதாகவே ஊகித்து அறிந்து
அதற்கான நடவடிக்கைகளை ஏன் முன்னதாகவே எடுக்கவில்லை
என்பதை அறிய விரும்புகிறேன். குமரி மாவட்டத்தில் மட்டும்
இன்றி மற்ற இடங்களிலேயும் முளையிட்டிருக்கிற அந்த சாதி,
சமய கலவரங்களுக்கு பின்னாலே ஏதோ ஒரு ''டிப்ளோமட்டிக்
கான்ஸ்பிரசி '' இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக்
காட்டவிரும்புகிறேன். அப்படியிருக்கக்கூடிய அந்தக் கார
ணத்தை அதற்கு எந்தச் சூழ்நிலை காரணமாக இருந்தாலும்
கண்டுபிடித்து அதை முளையிலேயே கிள்ளி எறிந்திருக்க
வேண்டும். அதை முற்றிலுமாக களைந்து எறிவதற்கு என்னென்ன
நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமோ, அவைகளையெல்லாம்
எடுத்திருக்கவேண்டும்.

இது முற்றிப்போய் இருக்கின்றது. இதை முற்றவிட்ட ஒரு
தவறு போலீஸ் துறையைச் சாரும் என்பதை நான் இங்கே
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடுத்து இராமநாதபுரம் மாவட்
டத்தில் சென்ற ஆண்டு ஜாதிக் கலவரங்கள் ஏற்பட்டது உங்க
ளுக்குத் தெரியும். அப்போதும் இதுபோல்தான் நடந்தது.
அதற்கு என்ன காரணம்? போலீஸ் படைக்குள்ளேயே ஜாதி, மத
உணர்வுகள் புகுந்து விட்டதா ? அதனால்தான் அவர்கள்
சரியாக நடவடிக்கை எடுப்பதற்கு யோசிக்கிறார்களா ? எத
னால் இந்தத் தயக்கங்கள் போலீஸ் படைக்கு வருகின்றது என்
பதை நான் அறிய விரும்புகிறேன். அதிலே குறிப்பாக சமூகத்
திலே ஒடுக்கப்பட்டிருக்கின்ற அரிசன மக்கள் பல்வேறு கொடுமை
களுக்குத் தொடர்ந்து ஆளாகி வருகிறார்கள். இதை நான்





மட்டும் சொல்லவில்லை. எனக்கு முன்னாலே பேசிய மாண்பு.
மிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சுட்டிக்காட்டினார்களே,
அந்த மைய அரசினுடைய ஹோம் மினிஸ்ட்ரியின் சார்பிலே
தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையிலே அவர்களே சொல்கிறார்கள்.

The report of the Union Home Ministry based on investigations
of the treatment of Harijans in Tamil Nadu in 1979 indicated the
State Government for the distinctly upward trend in the number
of crimes committed against Harijans. ஆகவே அரிசனங்களுக்கு
எதிராக இழைக்கப்படுகின்ற கொடுமைகள் 1979 ஆம்
ஆண்டிலிருந்தே உயர்ந்துகொண்டே போகிறதே தவிர, அது
குறையவில்லை என்ற குற்றச்சாட்டினை மைய உள்
துறை இலாக்காவின் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது.
அதுமட்டுமல்ல. இந்த மைய உள்துறை அமைச்சரவை எடுத்த
சர்வேயிலே இன்னொரு முக்கியமான விஷயத்தையும்
சொல்லி இருக்கிறார்கள். தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை
அமல் நடத்த வேண்டிய பொறுப்பிலே உள்ள போலீஸ் அதிகாரி
களுக்கு அந்த சிவில் ரைட்ஸ் ஆக்டைப் பற்றி எதுவுமே தெரிய
வில்லை. அதனால் அந்தச் சட்டத்தை முழுவதுமாக அவர்கள்
உணர்ந்திருக்கவில்லை என்ற குற்றச்சாட்டையும் அந்த அறிக்
கையிலே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

The Police Inspectors vested with the responsibility of
enforcing civil rights were not aware of the Protection of Civil
Rights Act of 1976. The other Police Officers are not sufficiently
familiar with the provisions of the Act. இப்படி ஒரு முக்கிய
மான குற்றச்சாட்டினை மைய அரசின் உள்துறை
அமைச்சரவை சொல்கிறது. அது எவ்வளவு பெரிய விஷயம்
என்பதை அரசு எண்ணிப்பார்க்க வேண்டும். இப்படி ஒரு
குற்றச்சாட்டு தமிழக போலீஸ் துறையைப்பற்றி வந்திருப்பது
ரொம்ப வருந்தத்தக்கது.

அடுத்து இங்கே நக்ஸலைட் இயக்கத்தைப்பற்றி நான் சில
வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இந்தியா
வில் எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவுக்குத் தமிழகத்திலே
போலீஸ் படைக்கும் நக்ஸலைட்டுகளுக்கும் இடையே அடிக்கடி
மோதல்கள் ஏற்படுகின்றன. அதன் காரணமாக பலர் சுட்டுக்
கொல்லப்படுகிறார்கள் என்ற செய்திகள் வந்துகொண்டே இருக்
கின்றன. இந்த என்கவுண்டர்ஸ் என்று சொல்லக்கூடிய மோதல்
கள் தொடர்ச்சியாகத் தமிழகத்திலே மட்டும் அதிலேயும் குறிப்
பாக வடாற்காடு, தர்மபுரி ஆகிய இரண்டு மாவட்டங்களில்
மட்டும் அதிகமாக ஏற்படுவதன் அடிப்படை என்ன ? அதை
நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எதுவும் அறியாத அப்பாவி
விவசாயத் தொழிலாளர்களை ஒடுக்குவதற்குத்தான் போலீஸ்
இந்த நடவடிக்கைகளிலே ஈடுபட்டு வருகின்றது என்பதை நான்

[திரு ப. நெடுமாறன்] [1982 மார்ச் 22

மட்டும் சொல்லவில்லை, பலரும் அரசியலுக்கு அப்பாற்பட்டு
நின்று சுட்டிக்காட்டுகின்றனர். சர்வோதய இயக்கத்தினர் கூட
இதைச் சுட்டிக்காட்டினர். ஆகவே இது ஒரு சோசியோ எக்கனா
மிக் ப்ராப்ளம். ஆகவே நில பிரபுக்கள் ஏழை, எளிய விவசாயத்
தொழிலாளர்களை வஞ்சிக்கிறார்கள்., சுரண்டுகிறார்கள்,
ஏமாற்றுகிறார்கள், கொடுமைப்படுத்துகிறார்கள். அதை
எதிர்த்து அவர்கள் போராடினால் அவர்கள்மீது நக்ஸலைட்டுகள்
என்ற குற்றம் சுமத்தப்பட்டு போலீஸ்காரர்களால் சுட்டுக்
கொல்லப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பலராலும்
சொல்லப்பட்டிருக்கின்றது.

[பிற்பகல் 1.20]

1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் தேதி திருப்பத்து
ரிலே காரிலே குண்டு வெடித்த நிகழ்ச்சியோடு இது ஆரம்பமாகி
நடைபெற்று இதுவரை 21 பேர் போலீசாராலே அங்கே சுட்டுக்
கொல்லப்பட்டிருக்கிறார்கள். எமர்ஜன்சி இந்த நாட்டிலே
அமலில் இருந்த நேரத்திலே இந்தியா பூராவும் 1977 ஆம்
ஆண்டில் 1,419 பேர்தான் நக்ஸலைட்டுகள் என்று குற்றம்
சாட்டப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டார்கள்.

ஆனால் இப்போது தமிழ்நாடு அதையும் மிஞ்சி ஏறத்தாழ
1,100 பேர்கள் நக்ஸலைட்ஸ் என்று குற்றஞ்சாட்டப்பட்டு
அவர்கள் எல்லாம் சிறையில் அடைக்கப்படக்கூடிய ஒரு கொடுமை
யிருக்கிறது. இந்தியா பூராவும் 1,419 பேர்கள்தான் எமர்ஜன்ஸி
காலத்தில் நக்ஸலைட்ஸ் என்ற பெயரால் சிறைபிடிக்கப்பட்டார்
கள். ஆனால் இன்று 1,500 பேர்கள் தமிழ்நாட்டில் நக்ஸலைட்
என்ற பெயரால் சிறைபிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால்
காரணம் என்ன ? நக்ஸலைட்ஸ் இயக்கம் தமிழ்நாட்டில் தீவிர
மாக வளர்ந்துவிட்டதா ? அப்படியானால் அது வளருவதற்கு
எது அடிப்படைக் காரணமோ அந்த அடிப்படைக் காரணத்தை
நீங்கள் நீக்காமல் எப்படி அந்த இயக்கத்தை ஒடுக்கமுடியும்
என்று கேட்க விரும்புகிறேன். பல போலீஸ் நிலையங்களில்
இன்று ரிக்கார்ட் செய்யாமல் நக்ஸலைட்ஸ் என்ற பெயரால்
விவசாயத் தொழிலாளர்கள் இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்
களையெல்லாம் போலீஸ் பிடித்து வாரக்கணக்கில் அடைத்து
வைத்து சித்திரவதை செய்கிற ஒரு கொடுமை இன்னும்
தொடர்ந்து நீடித்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். இதைப்பற்றியும் மைய அரசின் உள்
துறை இலாகா எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

One of the important trends observed during the recent
naxalites attack on the local landlord-*cum*-money lending interests
is that they have been able to get official support and patronage
in forming selfdefence squads. However, there is no indication



1982 மார்ச் 22] [திரு ப. நெடுமாறன்]

whatsoever that the State Government has taken any initiative
to organise agricultural workers and small farmers for the enforce-
ment of the minimum wages, abolition of bonded labour, debt
relief, abolition of untouchability.

நிலப்பிரபுக்கள் அவர்கள் நலன்களைப் பாதுகாத்துக்கொள்
வதற்காக ஸெல்ப் டிபென்ஸ் ஸ்க்வாட் அமைப்பதற்கு எல்லா
விதத்திலும் உதவியாக இருக்கிற போலீஸ் துறை விவசாயத்
தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய குறைந்தபட்சக்
கூலியை அவர்களுக்குக் கொடுப்பதில், அதை அமல்படுத்துவதில்
போலீஸ் அக்கறை காட்டவில்லை. அதேபோல் சிறிய விவசாயி
கள் வாங்கக்கூடிய கடன்கள். கொத்தடிமைப் பிரச்சினை
அவற்றில் போலீஸ் அக்கறை காட்டுவதில்லை. ஆனால் நிலப்
பிரபுக்களை பாதுகாப்பதில் போலீஸ் அக்கறை காட்டுகிறது.
இப்படி மத்திய உள்துறை ஆய்வில் அது தெளிவாகச் சுட்டிக்
காட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்து வைக்கக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் 1981 ஆகஸ்ட் வரை ஏறத்
தாழ ஒரு மாதம் ஒருவர் வீதம் 12 பேர்களுக்கு மேல் சுட்டுக்
கொல்லப் பட்டிருக்கிறார்கள் நக்ஸலைட்ஸ் என்று குற்றஞ்
சாட்டப்பட்டு. அந்த 12 பேர்களில் 7 பேர்கள் ஆதி திராவிட
சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இரண்டு பேர்கள் மலை ஜாதி
மக்கள். ஆக ஒன்பது பேர்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில்
இருக்கக்கூடியவர்கள். சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கக்
கூடிய இந்த இளைஞர்கள் என்ன காரணத்தினால் இந்த இயக்
கத்தில் சேர்ந்தார்கள்? சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற
இந்த இளைஞர்களை இந்த இயக்கம் ஈர்க்கக்காரணம் என்ன
என்பதை ஆராய்ந்து அதற்குப் பரிகாரம் காண முயலவேண்டும்.
அந்த மாவட்டங்களில் சமுதாயத்தில் இருக்கக்கூடிய
பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்து அதற்குப் பரிகாரம் என்ன?
ஸோஷியோ எக்கனாமிக் நடவடிக்கையாக எதை எடுத்தால்
இந்த இயக்கத்திலிருந்து அந்த இளைஞர்களை மீட்கமுடியுமோ
அதைச் செய்ய வேண்டும். இதை லா அண்ட் ஆர்டர் ப்ராப்ள
மாக நினைத்து, ஏழை எளியவர்களை, இளைஞர்களை சுட்டுக்
கொல்வதால் மட்டும் பிரச்சினைக்கு பரிகாரம் காணமுடியாது.
எனவே, இந்த மாவட்டங்களில் நக்ஸலைட்ஸ் இயக்கத்தை
ஒடுக்குவது என்ற பெயரால் முடுக்கிவிடப்பட்டிருக்கிற போலீஸ்
வேட்டையை தயவுசெய்து நிறுத்துங்கள். அந்த இளைஞர்கள்
மனதை மாற்றி அவர்களைச் சரியான வழியில் திருப்புவதற்கு
என்போன்றோர் தயாராகயிருக்கிறோம். ஏற்கனவே, நான்
தர்மபுரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்த
போதும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களிடம் அதைத்
தான் நான் சொன்னேன். இந்த மாவட்டங்கள் மிகவும் பிற்
பட்ட மாவட்டங்களாக இருக்கின்றன. அந்த மாவட்டங்களில்

[திரு ப. நெடுமாறன்] [1982 மார்ச் 22

இருக்கக்கூடிய மக்கள் மிகவும் ஏழைகளாக இருக்கிறார்கள்.
ஒரு வேளை உணவுக்குக்கூட வழியில்லாத நிலையில் அவர்கள்
வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்நிலையை மாற்றினால்
இதுபோன்ற இயக்கங்களுக்கு அந்த மாவட்டங்களில் இடம்
இருக்காது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

அடுத்து, போலீஸ் துறை பொதுவாக செயல்படுவதைப்பற்றி
சில விஷயங்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்
திலே இன்றைக்கு போலீஸ் துறையிலே சிறந்த அதிகாரிகள், உயர்
மட்டத்திலே இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை.
அவர்களைப் பாராட்டுகிறேன். ஒரு நல்ல டிரெடிஷனை அவர்
கள் எல்லாம் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால், இன்
றைக்கு அடிமட்டத்திலே இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள்
எப்படியிருக்கிறார்கள் ? எல்லா ஊர்களிலும் போலீஸ் நிலையங்
களிலே இன்னொரு வகையிலே அவர்கள் மக்களிடமிருந்து வரி
வசூல் போன்ற வேலையிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஒரு நகரத்திலே லாட்ஜ்கள் இருக்குமானால் ஒவ்வொரு லாட்,
ஜூம் இவ்வளவு மாமூல், இந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு கொடுக்க
வேண்டுமென்று கட்டாயப்படுத்தி, வசூல் செய்யப்படுகிறது.
அதைப்போலவே, சாராயம், பிராந்தி போன்ற மதுக் கடைகள்
இருந்தால், இவ்வளவு மாமூலை இந்த இந்த போலீஸ் ஸ்டேஷ
னுக்குக் கொடுக்கவேண்டுமென்று வசூல் செய்யப்படுகிறது. இது
தமிழகத்திலே எல்லோரும் அறிந்த இரகசியம். இதிலே கருத்து
மாறுபாடு இல்லை. ஆளுங் கட்சியாக இருந்தாலும், எதிர்க்
கட்சியாக இருந்தாலும், எல்லோருக்கும் தெரியும் ; பகிரங்க
மாகவே நடக்கிறது.

அதுமட்டுமல்ல. சிவில், கிரிமினல் புகார்களை போலீஸ்
ஸ்டேஷனிலே கொண்டுபோய் கொடுத்தால், சம்பந்தப்பட்ட
இரண்டு தரப்பினரையும் மிரட்டி பணம் வாங்கிய பிறகுதான்
எந்தக் காரியமும் நடக்கிறது. யார் பணம் கொடுக்கவில்லையோ
அவர்மீது பொய்யான வழக்குப்போட்டு, அவர்கள் போலீஸ்
லையத்திலே அடித்து, சித்திரவதை செய்யப்படுகின்ற நிலைமை
இருக்கிறது. இதே சட்டமன்றத்திலே நாம் பார்க்கிறோம். அன்
றாடம், ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம்
கொண்டுவரப்பட்டு, இந்தப் போலீஸ் ஸ்டேஷனிலே அவர்
கொலை செய்யப்பட்டார், சித்திரவதை செய்யப்பட்டார்,
அந்தப் போலீஸ் ஸ்டேஷனிலே அவர் சித்திரவதை செய்யப்பட்டு
கொல்லப்பட்டார் என்ற புகார்கள் அன்றாடம் வரக்கூடிய
நிலைமை இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே மதிப்பிற்குரிய உமாநாத் அவர்கள் சுட்டிக்காட்டிய
தைப்போல், ஆளுங்கட்சியினரைக்கூட இந்தப் போலீசார் விட்டு
வைக்கவில்லை. கீழக்கரையிலே, அ.தி.மு.க. செயலாளர் அரி
நமசிவாயம் அவர்கள் போலீசாரால் அடிக்கப்பட்டு, சித்திரவதை



1982 மார்ச் 22] [திரு ப. நெடுமாறன்]

செய்யப்பட்டு, கையிலே விலங்கிட்டு, வீதி வழியே போலீசார்
அழைத்துச் சென்று வழக்கு போட்டிருக்கிறார்கள். அந்தத்
தொகுதியின் எம்.எல்.ஏ., மதிப்பிற்குரிய சத்தியமூர்த்தி அவர்
களும், அங்கே இராஜ்யசபா உறுப்பினராக இருக்கும் மதிப்பிற்
குரிய அன்பழகன் ஆகியோர்—ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்கள்
அவர்கள் தலையிட்டும்கூட, இந்த நிலைமையைப் பார்க்கிறோம்
என்றால், யாருக்குப் பாதுகாப்பு இருக்க முடியும் என்பதை நான்
கேட்க விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. போலீஸ் நிலையங்களிலே போலீஸ் காவலிலே
ஒருவர் இருக்கிறார் என்று சொன்னால், அவருக்குச் சித்திர
வதை இழைக்கப்படுகிறது அல்லது அடித்துக் கொலை செய்
கிறார்கள். அதிலும், பெண்கள் அடைக்கப்பட்டிருந்தால், பல
போலீஸ் நிலையங்களிலே அவர்கள் கற்பழிக்கப்படுகிறார்கள்.
இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக இருந்துகொண்டிருக்
கின்றன. இதற்குப் பரிகாரம் காண்பதற்கு நம்முடைய அரசு
துரிதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நேஷனல் போலீஸ் கமிஷன் இதுபற்றி சிபாரிசு செய்திருப்
பதை, நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.
போலீஸ் காவலிலே சித்திரவதை, கொலை அல்லது கற்பழிப்பு
போன்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்தால், இதுகுறித்து விசாரணை
நடத்துவதற்கு டிஸ்டிரிக்ட் என்கொயரி அதாரிட்டி என்று
அமைக்க வேண்டுமென்று போலீஸ் நேஷனல் கமிஷன் ரிப்போர்ட்
டிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த டிஸ்டிரிக்ட் என்கொயரி
அதாரிட்டியாக அடிஷனல் செசன்ஸ் நீதிபதி அந்தஸ்திலே ஒருவர்
நியமிக்கப்பட வேண்டுமென்றும், இத்தகைய புகார்கள் அவ
ரிடம் அளிக்கப்பட்டால், உடனுக்குடன் விசாரித்து தக்க நட
வடிக்கைகள் எடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்று அதிலே
சொல்லப்பட்டிருக்கிறது. அதை அமுல்படுத்த வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொரு முக்கியமான பிரச்சினை. ஏற்கெனவே,
அரசாங்கம் அமைத்திருக்கக்கூடிய கிருஷ்ணசாமி நாயுடு
கமிஷன், தன்னுடைய பரிந்துரையை அளித்திருக்கிறது. பல
போலீஸ் அதிகாரிகள் வேலையிலிருந்து விலக்கப்பட்டிருப்பவர்
களை, மீண்டும் வேலையில் சேர்க்க வேண்டும் என்று
அந்தக் கமிஷன் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.
ஆனால், இதுவரை யாருக்கும் அந்த வேலை அளிக்கப்படாத
நிலை இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து, அரசு தக்க
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை நான் வற்புறுத்திக்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு ப. நெடுமாறன்] [1982 மார்ச் 2

[பிற்பகல் 1.30]

அடுத்து, இலங்கையிலே இராணுவ போலீஸ் கொடுமைகளுக்கு
ஆளாகி அங்கேயிருந்து நிறைய ஈழநாட்டுத் தமிழர்கள் இங்கே
வந்து அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். அண்மையிலே இலங்
கைப் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. தமிழ்நாடு
போலீஸ் அதிகாரியை இலங்கை போலீஸ் அதிகாரிகள் வந்து
சந்தித்ததாகவும், தமிழ்நாட்டிலே அடைக்கலம் புகுந்திருக்கின்ற
இலங்கை இளைஞர்களைப் பிடித்து இலங்கை அரசாங்கத்திடம்
ஒப்படைப்பதற்கு தமிழ்நாடு போலீஸ் துறை ஒத்துழைக்கும் என்ற
செய்தி வந்திருக்கிறது. அது உண்மையாக இருக்குமானால்,
ரொம்ப வருந்தத் தக்கது. அத்தகைய போலீஸ் அதிகாரி யார்
என்பதை அரசு அறிந்து இது போன்ற செயல்களில் ஈடுபடக்
கூடாது என்று எச்சரிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். (மணி
யடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அனு
மதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

டாக்டர் கே. சௌரிராஜன் : துணைத் தலைவர் அவர்களே,
மானியக் கோரிக்கைகளான காவல் துறை, தீயணைப்பு இவை
களின்மீதான விவாதத்தில் பங்கு எடுத்துக் கொள்ள வாய்ப்பு
அளித்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். இரண்டு தினங்
களுக்கு முன்னதாக இந்தப் புத்தகம் எங்களுக்குக் கொடுக்கப்
பட்டது. தமிழ்நாடு போலீஸ்—1981–82-ரிவ்யூ என்று. இதைப்
படித்துப் பார்க்கிற நேரத்திலே இதனால் என்ன இலாபம்
சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று எனக்குச் சந்தேகத்திற்கு
இடமாகிவிட்டது.

ஒருவேளை அகஸ்தா கிரிஸ்டி, ஜேம்ஸ் ஹாட்லி சேஸ்,
சுஜாதா, டபிள்யூ. ஆர். சொர்ணலதா ஆகியவர்களுக்கு துப்
பறியும் கதைகள் எழுதுவதற்கு பிரயோசனப்படலாமே தவிர,
அல்லது மாடர்ன் தியேட்டர்களுக்கு சினிமாப் படங்கள், திகில்
படங்கள், துப்பறியும் படங்கள் எடுப்பதற்குப் பிரயோசனப்பட
லாமே தவிர, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன இலாபம்
என்பது சர்ச்சைக்கிடமாகிவிட்டது. கிட்டத்தட்ட 45 பக்கங்
கள் கேஸ் டைரிகளை மட்டும் போட்டு 76 பக்கத்திற்கு நிரப்பி
யிருக்கிறார்கள் என்று சொன்னால் உள்ளபடியே நான் வேதனைப்
படுகிறேன்.

காவல் துறையினர் மூன்று தலைப்புகளிலே தங்களுடைய
கடமைகளைச் செய்து வருகிறார்கள். பிரிவன்ஷன் ஆப் கிரைம்,
குற்றத்தைத் தடுப்பது, குற்றம் நடந்தால் குற்றவாளிகளைக்
கண்டுபிடித்து நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று தக்க தண்டனை
வாங்கிக் கொடுப்பது, சமுதாயத்திலே அமைதியும் சட்டமும்
ஒழுங்கும் பாதுகாக்கப்பட வேண்டியது, இந்த மூன்று கடமை
களையும் அவர்கள் மூன்று பிரிவுகளாகச் செய்து வருகிறார்கள்.



982 மார்ச் 22] [டாக்டர் கே. சௌரிராஜன்]

மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற குற்றங்களைக் காட்டிலும்
நம்முடைய மாநிலத்திலே குற்றங்கள் குறைவாக இருக்கின்றன
என்று சொல்லிப் பெருமைப்படுவதில் இலாபம் இல்லை. 1971
ஆம் ஆண்டுக்கு முன்னதாக நம்முடைய மாநிலத்திலே எந்தவித
மான ஒழுங்கும், அமைதியும் இருந்தது. அதை வைத்து இப்
போதுள்ள நிலையை எடைபோட வேண்டுமே ஒழிய, மற்ற
மாநிலங்களிலே கொலைகள் நடக்கவில்லையா ? மற்ற மாநிலங்
களிலே கொள்ளை அடிக்கவில்லையா ? தீவட்டிக் கொள்ளை
கள் ; டெக்காய்ட்ஸ், ராபர்ஸ், பேங்க் கொள்ளைக்காரர்கள்
இல்லையா என்று கம்பேரிசன் செய்து பார்த்து நாம் நன்றாக
இருக்கிறோம் என்று திருப்திபட்டுக்கொண்டால் அது தமிழ்நாடு
காவல் துறைக்கு நற்சான்றிதழாக இருக்காது. திரும்பிப் பாருங்
கள் பழைய வரலாற்றை, 1967, 1969-க்கு முன்னாலே திரும்பிப்
பாருங்கள். தமிழகத்திலே காவல் துறை ஐ.ஜி. எந்த அளவுக்குச்
சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாத்து வந்தார்கள் என்பதைச்
சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இருக்கின்ற ரிப்போர்ட்டுகளைப் படிக்கிற நேரத்
திலே குற்றங்கள் குறைந்துவிட்டன என்று ஸ்டேட்டிஸ்டிக்ஸ்
கொடுத்திருக்கிறார்கள். மர்டர் பார் கெயின், மேஜர் தெப்ட்,
மைனர் தெப்ட், கேட்டில் தெப்ட் என்று 4, 5 தலைப்புகளிலே
கொடுத்திருக்கிறார்கள். இந்தத் தலைப்புகளில் வராமலே எத்
தனைக் குற்றங்கள் நாட்டிலே நடந்துகொண்டிருக்கின்றன?
உதாரணத்திற்குச் சொல்கிறேன். கவுண்டர்பீட்டிங் ஆப்
நோட்ஸ், அண்மையில் பார்த்தோம், எந்த எந்த இடங்களிலே
எத்தனை பேர்கள் சாதாரண அச்சு இயந்திரங்களை வைத்து
செய்திருக்கிறார்கள். அந்தக் கணக்கு இதிலே இல்லை, அடல்ட்
ரேஷன் ஆப் புட்ஸ்டப், சிமிண்ட் கலப்படம் போன்றவை எல்லாம்
குற்றங்கள்தான். இவையெல்லாம் இந்த ஸ்டேட்டிஸ்டிக்ஸிலே
கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. வேலை வாங்
கித் தருகிறேன் என்று சொல்லி மோசடி செய்த எத்தனை பேர்
கள் இருக்கிறார்கள்? அதைப் போலவே நம் நாட்டிலிருந்து இம்
மாரல் டிராபிக் என்ற அடிப்படையிலே விபச்சாரத்திற்காக பெண்
களை ஏமாற்றி ஏற்றுமதி செய்கின்ற ஸ்தாபனங்கள் எத்தனை
இருக்கின்றன? அவைகள் எல்லாம் இந்தக் கணக்கிலே எடுத்துக்
கொள்ளப்பட்டிருக்கிறதா ? இப்படி பல குற்றங்கள் இருந்தாலும்
கூட 5, 6 தலைப்புகளைக் கொடுத்து குற்றங்கள்
குறைந்து கொண்டிருக்கின்றன என்று சொல்வது சரியல்ல.

நண்பர் உமாநாத் சொல்லியது போல இன்டெலிஜென்சி அதா
வது வருமுன் காப்போம் என்று சொல்வார்களே, அதேபோல தங்
களுடைய கடமையை செய்ய இந்த சி.ஐ.டி. பிரான்ச் தவறி
விட்டார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. எங்கே
பார்த்தாலும், ஒரு பிரிவினர் கூட பாக்கியில்லை. வாத்யார்கள்
ஆகட்டும், தொழிலாளர்கள் ஆகட்டும், மாணவர்கள் ஆகட்டும்,
விவசாய கூலிகள் இப்படி எல்லாப் பிரிவுகளிலும் எப்போது பார்த்
தாலும், டெமான்ஸ்ட்ரேஷன், அஜிட்டேஷன் என்று இந்த சமு

தாயத்தினுடைய வாழ்க்கை நிலையை ஸ்தம்பிக்க வைக்கக்கூடிய
நிலை இருக்கிறது. காலையிலே பார்த்தால் ஒரு போராட்
டம், மாலையிலே ஒரு போராட்டம், இரவிலே ஒரு போராட்டம்.
இதற்கு என்ன காரணம் என்பதை நாம் சிந்தித்து பார்க்க வேண்
டும். அதே நேரத்தில், எங்கே பார்த்தாலும் ஜாதிக் கலவரங்கள்
வரலாறு காணாத அளவிலே தமிழகத்திலே இருந்து கொண்டிருக்
கின்றன. இந்துக்களிடையும், முஸ்லீம்களிடையும் எப்போதோ
தகராறு என்று சொல்வார்கள். அது கூட தமிழகத்திலே சில
பகுதிகளிலே தான் நடக்கும். வரலாறு காணாத அளவிலே
இந்துக்களுக்கும், கிறிஸ்த்துவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும்
சண்டை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் நிச்சயமாக நம்மை
பாராட்டிக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்பதை சொல்
லிக் கொள்கிறேன். சட்டம் இருக்கிறது, அதை அமல் படுத்த
வேண்டிய கடமையும் இருக்கிறது.

நேற்று கூட சைதாப்பேட்டையிலே பார்த்தேன். திராவிட
கழகத்தைச் சார்ந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்த
வர்களை அசிங்கமாக, அநாகரிகமாக, கேவலமாக சுவரொட்டி
களை போட்டும், சுவர்களில் எழுதியும் வைத்துக் கொண்டிருக்
கிறார்கள். இதெல்லாம் குற்றமாக உங்கள் கண்ணுக்குப் பட
வில்லையா ? சமுதாயத்தில் ஒரு நலிந்த பிரிவினர்; சிறுபான்மை
யோர் அவர்களுடைய நேர்மைக்கும், சுயமரியாதைக்கும், மானத்
திற்கும் பங்கம் விளைவிக்கிற வகையிலே, சுயமரியாதையை காப்
போம் என்று சொல்லிக் கொள்கிற ஒரு இயக்கத்தைச் சார்ந்தவர்
கள் இப்படி மாநாடுகளை நடத்துவதெல்லாம் எந்தச் சட்டத்திலே
இடமிருக்கிறது ? பிற ஜாதியைப் இழிவுபடுத்துவதற்கு எந்த
சட்டத்திலே இடமிருக்கிறது ? சாது மிரண்டால் காடு கொள்
ளாது என்பார்கள், அதைப்போல எவ்வளவு தான் குட்ட குட்ட
குனிந்தாலும், இந்தச் சமுதாயத்தை சேர்ந்த இளைஞர்கள் எல்
லோரும் ஒரு நாள் நக்சலைட்டுகளாகவே மாறிவிடுவார்கள்
என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு).

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, சாது மிரண்டால் காடு கொள்ளாது என்று சொல்
கிறார்கள். நக்சலைட் இயக்கத்தை ஆதரிக்கிறார்களா ? அல்லது
தமிழகத்தில் இளைஞர்களை தூண்டி விடுகிறார்களா ?

திரு. டாக்டர் கே. சௌரிராஜன் : துணைத் தலைவரவர்களே,
சூழ்நிலைகள் உருவாகும் என்றுதான் சொன்னேன்.

அடுத்தது லவுட் ஸ்பீக்கர் மெனேஸ். மாஸ்க்களிலே,
சர்ச்சுகளிலே, இந்து கோவில்களிலே எல்லா இடங்களிலும்
காலாகாலம் இல்லாமல் தங்கள் கோவில்களுக்குள்ளே,
பிரார்த்தனை கூடங்களுக்குள்ளே வைத்துக் கொள்ளாமல்
வெளி இடங்களில், பப்ளிக் ப்ளேஸ்களில் வைத்துக்
கொண்டிருக்கிறார்கள். சரியான முறையில் இந்தச் சட்
டத்தை அமல்படுத்தவில்லை என்று தான் இதற்கு அர்த்தம்.
இதன் மூலமாக தமிழகத்தில் கலவரங்களுக்கு வித்திடப்படுகிறது
என்பதை நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.



காவல் துறையிலே குற்றங்கள் அதிகமானதற்குக் காரணம்
சமுதாயத்தில் தனி நபர் ஒழுக்கமும், நாணயமும், நேர்மையும்
குறைந்து விட்டது, அதனால் காவல் துறையிலும் கூட ஒழுக்கம்
குறைந்துவிட்டது. இங்கே உறுப்பினர்கள் இதற்கு பல உதாரணங்
களை எடுத்துச் சொன்னார்கள். காவல் துறையிலே ஒரு பர்ட்டி
குலர் போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் உத்யோகம் வேண்டு
மென்றால் அதற்கே லஞ்சம் கொடுக்க வேண்டிய நிலை இருக்
கிறது. மாம்பலம் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் வேலையா?
அதற்கு இவ்வளவு ரூபாய். மைலாப்பூர் வேண்டுமா? அதற்கு
இவ்வளவு ரூபாய் கொடுத்தால் மாற்றல் கிடைக்கிறது. இதனால்
அந்தத் துறையில் ஊழல் அதிகரித்து இருக்கிறது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொது சொத்துக்
களுக்கு சேதம் விளைவிக்கிறபோது மொத்தமாக ஒரு கலெக்ட்
டிவ் பைன் போட வேண்டுமென்று ஒரு அனவுன்ஸ்மென்ட்
கொடுத்தார்கள். ஆகவே பொதுச் சொத்துக்களை பாதுகாக்க
வேண்டிய கடமை இந்தக் காவல் துறைக்கு இருக்கிறது. பஸ்ஸை
கொளுத்துகிறார்கள் என்றால், அது சாதாரண காரியம் இல்லை.
பெட்ரோல் வேண்டும், ஆட்கள் வேண்டும். இவைகளைப் பார்க்
கிறபோது The intellig nce wing has t oroughly failed to maintain
the law a d order and also should ave anticipat d certain possible
cata trophies என்று சொல்லி பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு
நன்றி கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின்
இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 23-3-1982
காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-39 மணிக்கு ஒத்தி வைக்கப்
பெற்றது.

## (7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

145. தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டம்
செயலுக்கு வரும் நாள் குறித்து 18-1-1982 ஆம் தேதியிடப்
பெற்ற சட்டத் துறையின் 9 ஆம் எண் அரசாணையில் வெளியான
அறிவிப்பு (தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டத்
தின் (தமிழ்நாடு சட்டம் 39/1956) 6 ஆவது பிரிவின் கீழ் பேரவை
முன் வைக்கப் பெற்றது.)

146. இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் நிறுவனம் தயாரிக்
கும் பாலியெஸ்டர் ஸ்டேபில் பைபர் விற்பனை மீதான விற்பனை
வரி வீதத்தைக் குறைப்பது குறித்து 15-2-1982 ஆம் தேதி
யிடப்பெற்ற வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின்

175 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

147. 25-2-1978 ஆம் தேதியிடப்பெற்ற வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் அறிவிக்கை எண் 11 (1) வ.வ.ச.அ. 54/78 இல் சில திருத்தங்கள் செய்வது குறித்து 8-1-1982 ஆம் தேதியிடப்பெற்ற வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 43 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

142. தமிழ்நாடு காவல் துறை குறித்த ஆய்வுரை, 1981-82 (தமிழ்-ஆங்கிலம்).

143. தமிழ்நாடு தீயணைப்புத் துறை குறித்த ஆய்வுரை, 1981-82 (தமிழ்-ஆங்கிலம்).

நிதி அமைச்சரின் உரை ஆங்கிலத்தில்
(278-ம் பக்கத்திலுள்ள அடி குறிப்பை காண்க)

ir,

I rise to place before this august House, the Final Supplement-y Estimates for the year 1981—82. Of the total amount of s. 502.67 crores included in these estimates, 235.73 crores is the Revenue Account and Rs. 266.94 crores on the Capital d Loan Accounts. The details of the amounts included in the various Demands and the reasons for the additional provisions have been indicated in the statement annexed. These estimates cover the expenditure on items which have been sanctioned after the presentation of the First Supplementary Estimates and those for which additional provision is required, over and above the existing appropriation. Of the various items included in the Estimates, I shall highlight a few important schemes.

2. The Honourable Members are aware, that the welfare of the Scheduled Castes and the efforts in helping them to cross the poverty line is of great concern to this Government and



towards achieving this end, an additional amount of Rs. 1 crore has been granted, in the form of share capital assistance, to Tamil Nadu Adi Dravidar Housing and Development Corporation which is implementing several schemes for the upliftment of the Adi Dravidars. An Additional sum of about Rs. 12 lakhs has been set apart for the construction of buildings for the tribal schools. An additional sum of Rs. 22.70 lakhs is provided for, in the estimates, towards post-matric scholarships to Adi Dravidar students.

3. For the successful implementation of the self-sufficiency programme in 150 blocks taken up this year, Government have sanctioned an additional provision of Rs. 33.57 crores. The Supplementary Estimates cover this sanction.

4. Government is taking every step to strengthen the structure of co-operative set up, which forms the main lending agency in the rural areas. An additional sum of Rs. 80.36 lakhs has been provided for, in these estimates for strengthening of the share capital structure of village credit societies. Also, an additional sum of Rs. 153.75 lakhs has been ear-marked for investment as share capital in the Co-operative Spinning Mills for employing repatriates from Sri Lanka. In order to strengthen the share capital structure of the Primary Weavers Co-operative Society, an additional sum of Rs. 100 lakhs has been provided for, in the Final Supplementary Estimates.

5. Increasing the opportunities for education and raising the standards of education, at all levels have been the objectives of the Government. An additional sum of Rs. 56 lakhs has been provided for, in these estimates towards the establishment of the Tamil University and the Bharathidasan University.

6. The Roads sector has been receiving the special attention of the Government. An additional sum of about Rs. 5.27 crores has been porvided for in the Supplementary Estimates for this sector. A sum of Rs. 1.60 crores has been provided for, on the contruction of sub-centres under the World Bank Nutrition Project.

7. In order to help the Transport Corporations to function efficiently, an amount of Rs. 2.59 crores and Rs. 1.50 crores have been provided for in these estimates as share capital assistance to Pallavan Transport Corporation and Thanthai Periyar Transport Corporation respectively.

8. Seventeen thousand nine hundred and thirty-four more persons will receive assistance under the existing old age pension scheme, which covers old persons, widows and physically handicapped persons and 30,000 agricultural labourers will also receive this pension. The approval of the House is sought, for this additional expenditure.

9. Government have sanctioned the construction of 150 police stations at a cost of Rs. 3.50 crores. An amount of Rs. 75 lakhs is likely to be spent in the current financial year.

10. I have highlighted a few important schemes which have been provided for, in the Supplementary Estimates. I seek the approval of the House for all the schemes and the necessary appropriation for them.

## இணைப்பு-11

(283-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

கோரிக்கை எண் 15.

காவல்துறை—கொள்கை விளக்கக் குறிப்பு.

தமிழ்நாடு காவல்துறை.

ஆய்வுரை.

மக்கள் நல மேம்பாட்டையும், பொது அமைதியையும், ஒழுங்
கையும் நிலைநாட்டுவது காவலரின் பெருங் கடமையாகப் பண்டு
தொட்டு இன்றுவரை அமைந்துள்ளது. அறத்தைப் காப்பதும்
அறம் அல்லாதவைகளை மக்களிடையே போக்குவதும் காவ
லரின் இன்றியமையாத பணியென்று அறிந்து தமிழகக்காவல்துறை
செயல்பட்டு வருகிறது. நமது தமிழக அரசின் காவல்துறை
தன்னிகரற்ற வகையில் தன் பணிகளை ஓயாது பல இடர்ப்பாடு
களுக்கு நடுவிலும் சிறப்பாக செய்து வருகிறது என்பதை இந்தியத்
துணைக்கண்டமே போற்றுகிறது என்பது உலகறிந்த உண்மை.
காவல்துறை என்பது காப்பது, தடுப்பது, என்ற இரண்டு வகை
களால் இயலும் துறையாகும். தடம் மாறாது விழிப்புணர்வை
தன்னகத்தே சாவல் துறை எப்போதும் கொண்டிருக்கவேண்டு
மென்பது காவல்துறையின் கோட்பாடாகும். மக்கள் நன்மை
யில் நாட்டம் கொண்டு, மக்களை ஆர்வத்தோடு அரவணைத்து
காத்ததால்தான் '' காவலன் '' '' புரவலன் '' எனும் பெயர்கள்





முன்னாளில் மன்னர்களுக்கு இருந்தன. அந்த முதன்மையான
பணியை முறையாக செய்யவேண்டுமென்பதால் போலீஸ் துறை,
காவல்துறை என்று அழைக்கப்படுகிறது. நடைமுறைகளை
ஓர்தல், பகை, நட்பு, அயலவர் அலுவலர், உறவினர் என்று
எவரிடத்தும் கண்ணோட்டம் காட்டாமை. நடு நிலை பிறழாமை,
தீர்ந்து தெளிவான முடிவெடுத்தல் முதலிய இயல்புகளை இலக்கண
மாகக் கொண்டு காவல்துறை பணி புரிந்து வருகிறது. காவல்
துறை நேர்த்தி உள்ளதாக அமையவேண்டுமென்பதற்கு நாம்
இரண்டு காரியங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று காவல்
துறையின் மாநிலக் கோரிக்கையின்மீது பேசிய பேரறிஞர்
அண்ணா அவர்கள் குறிப்பிட்ட கருத்தை இந்த விளக்கக்
குறிப்பில் காட்டுவது பெரிதும் பொருத்தமாகும். நாட்டின்
சிக்கல்களான மக்கள் தொகையின் பெருக்கம், தொழில்
மனைகளின் வளர்ச்சி, அறிவியல் சாதனங்களின் எழுச்சி, பொரு
ளாதாரத் தேவைகளின் தாக்கம், சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வு
கள் முதலியவற்றால் சில இடர்ப்பாடுகளும் அவ்வப்போது புதிதாக
தோன்றுகின்றன. எனவே அறத்தைக் காப்பதும் மக்களிடையே.
ஒழுங்கை நிலை நிறுத்துவதும் அமைதியை நடைமுறைப்படுத்து
வதும் இடர்ப்பாடுகளுக்கிடையே துணிந்து செய்யப்படவேண்டிய
பணியாக அமைந்து வருகிறது. தமிழகக்காவல்துறை, தனக்கு
அளிக்கப்பட்டுள்ள பணியினைக் கடமை உணர்வுடன் நிறை
வேற்றத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. பின்வரும்
பத்திகளில், காவல்துறை 1981–82 ஆம் ஆண்டில் ஆற்றியுள்ள
பணிகள் மற்றும் அதன் சாதனைகள் பற்றிய விவரங்கள் தரப்
பட்டுள்ளன.

2. தற்போதுள்ள காவல் துறைப்பணியாளர் அமைப்பு தொடர்
பான விவரங்கள் இணைப்பு 1-ல் தரப்பட்டுள்ளன.

### படைக்கலந்தாங்கிய காவற்படை அணிகள்!

படைக் கலந்தாங்கிய,காவல்படை
3. இம் மாநிலத்தில் உள்ள படைக் கலந்தாங்கிய காவல்படை ஏழாக
அணிகளின் எண்ணிக்கை இவ்வாண்டில் ஐந்திலிருந்து ஏழாக
உயர்த்தப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு பிப்ரவரியில் கூடுதலாக
ஏற்படுத்தப்பட்ட அணிகளில் ஒன்று நீலகிரி மாவட்டத்திலும்
கூடலூர் தாலூகாவில் வனப்பகுதி ஆக்கிரமிப்பைத் தடுக்கவும்
மற்றொன்று தீவிரவாதிகள் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தவும்
நியமிக்கப்பட்டது. ஒவ்வோர் அணியும் ஆறு இயங்கும் பிரிவு
களையும் ஒரு தலைமையிடப் பிரிவையும் தன்னகத்தே கொண்
டுள்ளது. ஏழு சிறப்புக் காவல்படை அணிகளில் ஒன்றான ஆவடி
யில் அமைந்துள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை இரண்டாம்
அணி மாநிலத்திற்கு வெளியே மத்திய அரசின்கீழ் புது டில்லியில்
பணி புரிய 1980ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 25 ஆம் தேதியன்று
முகாமையில் அனுப்பப்பட்டு அங்கேயே உள்ளது.

### தேர்வும் பயிற்சியும்.

4. (அ) தமிழ் நாட்டிற்கென ஒதுக்கப்பட்ட இந்தியக் காவல்
பணிப் பதவிகள் 130 ஆகும்.

(ஆ) ஆறு இந்தியக் காவல் பணி அதிகாரிகள் இவ்வாண்டில்
ஒய்வு பெற்றனர்.

(இ) ஒரு காவல் துறை உதவி கண்காணிப்பாளர் 1981 ஆம்
ஆண்டு நவம்பர் மாதம் தனது செயல்முறைப் பயிற்சியை முடித்த
பின்னர் ஒரு காவல் துணைக் கோட்டத்திற்குப் பொறுப்பேற்க
நியமிக்கப்பட்டார்.

(ஈ) தமிழ்நாடு காவல் பணிக்கென இந்திய காவல் பணித்
தரத்தில் நேரடி நியமன மூலம் நியமிக்கப்பட்ட இந்திய காவல்
பணி அதிகாரிகள் மூவர் மேற்கொண்டும் பயிற்சி பெறுவதற்கு
1982 ஆம் ஆண்டு ஜனவரியில் சென்னை காவலர் பயிற்சிக்
கல்லூரியில் சேர்ந்தார்கள்.

(உ) பதவி உயர்வு மூலம் நியமிப்பதற்கென நம் மாநிலத்
திற்கு ஒதுக்கப்பட்ட ஒரு இந்தியக் காவல் பணியிடத்தில் மாநிலக்
காவல் பணி அதிகாரி ஒருவர் 1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில்
நியமிக்கப்பட்டார்.

(ஊ) 1981 ஆம் ஆண்டில் நேரடி நியமனம் மூலம் காவல்
துறை துணை கண்காணிப்பாளர் (வகை-1) ஒருவர் பணியமர்த்தப்
பட்டார். இவருக்கு, விரைவில் சென்னை காவலர் பயிற்சிக்
கல்லூரியில் நிர்வாகப் பயிற்சி (Institutional training)
அளிக்கப்படும்.

(எ) இவ்வாண்டில் ஒரு துணை கண்காணிப்பாளர், புது
டில்லியில் குற்றத் தடைய அறிவியல் நினைவுகள் (orientation
to Foremsie science) பயிற்சி பெற்றார். இரண்டு
இந்திய காவல் பணி அதிகாரிகள் '' முக்கிய பிரமுகர்கள் பாது
காப்பு (V. I. P. security) பயிற்சியில் பங்கு கொண்டனர்.

(ஏ) மூன்று காவல் துறை ஆய்வாளர்கள் ஐதராபாத்தில்
உள்ள மத்திய துப்பறியும் பயிற்சிப் பள்ளியில் '' அறிவியல்
முறையில் புலனாய்வு செய்தல் '' (Orientation to
Seientific Invesica'ion) பற்றிய மூன்று வாரகாலப் பயிற்சிக்கு
முகமையில் அனுப்பப்பட்டனர்.

### பெண் காவலர் பிரிவு.

5. இந்தியாவிலேயே முதன்முதலாக பெண்காவலர்கள் நமது
மாநிலத்தில்தான் நியமிக்கப்பட்டனர். 1973 ஆம் ஆண்டு
டிசம்பரில் சென்னை மாநகரில் பெண்காவலர் பிரிவு ஒன்று முதன்
முதலில் ஏற்படுத்தப்பட்டது. 1975 ஆம் ஆண்டு மீனம்பாக்கம்
விமான நிலையத்தில் பெண் பயணிகளைச் சோதனையிடுதல்,
பாதுகாப்பு மற்றும் விமானக் கடத்தலைத் தடுத்தல் ஆகிய பணி
களுக்கென பெண் காவலர் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.



இந்த இரண்டு பிரிவில் உள்ள பெண் காவலர், உதவி ஆய்வாளர்
எண்ணிக்கை 1979 ஆம் ஆண்டு கணிசமான அதிகரிக்கப்பட்டது.
மேலும் திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயமுத்தூர் விமான
நிலையங்களிலும் பெண் காவலர் பிரிவு ஏற்படுத்தப்பட்டது.
1976 ஆம் ஆண்டு மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோய
முத்தூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு உதவி ஆய்வாளர்,
ஒரு தலைமைக் காவலர் மற்றும் 12 காவலரைக் கொண்ட ஒரு
பெண் காவலர் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு சிறிய
அளவில் இருந்த பெண் காவலர் பிரிவை மாநில முழுவதும்
பரவலாக்கி அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இம்
மாநிலத்திலுள்ள அனைத்து முக்கிய காவல் நிலையங்களிலும்
தனியே பெண்காவலர் பிரிவு ஏற்படுத்துவதென முடிவு செய்யப்
பட்டது. 60 பெண் உதவி ஆய்வாளர்கள். 60 பெண் தலைமைக்
காவலர் மற்றும் 600 பெண் காவலர் கொண்ட கூடுதல் பெண்
காவலர்கள் நியமனம் செய்யப்பட்டனர். பெண் தலைமைக்
காவலர் மற்றும் காவலர்கள், சென்னை நகர் மற்றும் இதர
மாவட்டங்களில் 6 மாத செய்முறை பயிற்சி பெற்று வருகின்றனர்.
தவிர 77 பெண் உதவி ஆய்வாளர்கள் சென்னைக் காவலர் பயிற்சிக்
கல்லூரியில் 1—3—1982 அன்று தங்கள் பயிற்சியை முடித்த
பின் ஆறுமாத செய்முறைப் பயிற்சிக்காக சென்னை நகர் மற்றும்
இதர மாவட்டங்களில் நியமிக்கப்பட உள்ளனர். இவ்வாறு
நியமிக்கப்பட்டுள்ள பெண் காவலர்கள் அண்மையில் நடந்த
திருப்பத்தூர் இடைத் தேர்தலின்போது சிறப்பான முறையில்
பணி புரிந்தனர், வழிதவறி வரும் மகளிர் வசதிக்காக சென்னை,
மதுரை, கோயமுத்தூர் ரயில் நிலையங்களில் செயல்படும் வழி
காட்டி நிலையங்களில் முற்றிலும் பெண் காவலர்கள் நியமிக்கப்
பட்டு சிறந்த முறையில் பணிபுரிகின்றனர்.

### பயிற்சி.

6. 1981—82-ஆம் ஆண்டில் உயர் அதிகாரிகளுக்குப் பல்வேறு
பயிற்சி நிறுவனங்கள் மூலமாக நிர்வாகம் மற்றும் செயல்முறை,
நிர்வாக முறை முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது. 28
இந்திய காவல்பணி அதிகாரிகளும், ஐந்து மாநிலக் காவல் பணி
அதிகாரிகளும் மூன்று பணி நாட்கள் முதல் 14 வாரங்கள் வரை
பல்வேறுபட்ட கால அளவில் ஐதராபாத், புதுடில்லி, மவுண்ட்
அபு, இந்தூர், சென்னை, குவாலியர் போன்ற இடங்களில்
பயிற்சி அளிக்கப்பட்டனர்.

### நாய்ப்படை.

7. சென்னை, மதுரை, கோயம்புதூர் மற்றும் திருச்சிராப்
பள்ளி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றிலும் ஒன்று வீதம், நான்கு
புலனாய்வு நாய் அணிகள் இம்மாநிலத்தில் உள்ளன. 1981-ஆம்
ஆண்டு 726 நேர்வுகளில் புலனாய்வு நாய்கள் பயன்படுத்தப்
பட்டன. 309 நேர்வுகளில் இவை துப்புத்துலக்கிய விவரங்கள்
பயனுள்ளவையாக இருந்தன.

## குற்ற நிகழ்வுகள்.

8. சொத்து குறித்து நிகழ்ந்த 1980–81-ஆம் ஆண்டு நடந்த குற்றங்கள் பற்றிய ஒப்பு நோக்குப்புள்ளி விவர அறிக்கை கீழ் வருமாறு :—

| குற்றங்களின் வகைப்பாடு. | 1980 | 1981 |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆதாயத்திற்காகக் கொலை .. .. | 53 | 66 |
| கொள்ளை .. .. .. .. | 60 | 37 |
| வழிப்பறி.. .. .. .. .. | 271 | 266 |
| கன்னக்களவு .. .. .. .. | 9,410 | 9,075 |
| பெரிய திருட்டுகள் .. .. .. | 25,991 | 25,623 |
| சிறிய திருட்டுகள் .. .. .. | 2,061 | 1,806 |
| கால்நடைத் திருட்டு .. .. .. | 1,241 | 1,156 |

## குற்றங்களைத் துப்பு துலக்குதல்.

9. தமிழ்நாடு காவல்துறை சீரிய முறையிலும், திறமையாகவும் குற்ற நிகழ்வுகளைச் சமாளிப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. வழக்குகள் தடையின்றி பதிவு செய்யப்பட்டுள்ளன. 1980 மற்றும் 1981-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகளில் 1980-ஆம் ஆண்டில் 29.4 சதவீத வழக்குகள் தண்டனையில் முடிந்தன. 1981-ஆம் ஆண்டில் 35.7 சதவீத வழக்குகள் தண்டனையில் முடிந்தன. விசாரணையில் உள்ள வழக்குகளின் சதவீதம் 1980-ஆம் ஆண்டில் 59.1 சதவீதம் 1981-ஆம் ஆண்டில் 69.1 சதவீதம் ஆகும்.

## களவாடப்பட்ட சொத்துக்களை மீட்டல்.

10. 1980-ஆம் ஆண்டில் களவாடப்பட்ட சொத்துக்களில் 47·8, சதவீதம் மீட்கப்பட்டுவிட்டன. 1981-ஆம் ஆண்டில் களவாடப்பட்ட சொத்துக்களில் 53.3 சதவீதம் மீட்கப்பட்டுவிட்டன. குற்றங்கள் தொடர்பாக அறிவியல் முறையில் புலனாய்வு செய்தல் மாநில விரல் ரேகைப் பதிவுக் கழகம், எல்லா மாவட்டங்களிலுமுள்ள ஒற்றை விரல் பதிவுப் பிரிவுகள், தமிழ்நாடு குற்றத் தடயப் பொருள் அறிவியல் ஆய்வகம், மாவட்டங்களிலுள்ள குற்றத் தடயப்பொருள் அறிவியல் நடமாடும் ஆய்வுக் கூடங்கள்



போன்ற அமைப்புகள், காவல்துறை கணக்கீட்டுப் பொறிப்பிரிவு ஆகியவற்றை புலனாய்வு பணியாளர்கள் பெருமளவில் பயன்படுத்தி தங்கள் பணியில் மேலும் மேலும் பெருமளவு வெற்றி கண்டுள்ளனர்.

## காவல்துறையின் துப்பு துலக்கப்பட்ட சில முக்கிய வழக்குகளின் விவரங்கள்.

### ஆதாயத்திற்காக கொலை செய்தல்.

11. சென்னை, கீழ்ப்பாக்கம், திவான் இராம ஐயங்கார் தெருவில் 54-ஆம் எண். வீட்டில் வசித்த 75 வயதான திருமதி. கனகவல்லி 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ஆம் நாள் அன்று கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். ரூபாய் 17,000 மதிப்புள்ள நகைகளும் ரொக்கமும் காணாமல் போயிருந்தன. இந்திய தண்டனைச் சட்ட விதிகள் 302 மற்றும் 392-இன் கீழ் கீழ்ப்பாக்கம் காவல் நிலையத்தில் 358/81 எண்ணுள்ள வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அயராப் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு அக்குடியிருப்பு ஒன்றில் வேலை பார்த்த தஞ்சாவூர் மாவட்டம் கபிஸ்தலத்தைச் சேர்ந்த இரகுபதி என்பவர் மேற்படி கொலையைச் செய்தார் என்பதை சென்னை நகரக் காவலர் கண்டுபிடித்து அவரைக் கைது செய்தனர். அவரிடமிருந்து திருடப்பட்டச் சொத்துக்கள் முழுவதும் மீட்கப்பட்டன. அவருக்குச் சென்னை முதலாம் கூடுதல் செஷன்ஸ் நீதிபதி ஆயுள் தண்டனை விதித்தார்.

12. சென்னை, எழும்பூர், கெங்குரெட்டிச்சாலையில் 122-ஆம் எண். வீட்டில் வசித்து வந்த 40 வயதான திருமதி தனம்மாளும் அவரது 18 வயது மகள் மல்லிகாவும் 1981-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 15-ஆம் நாள் அன்று குத்திக் கொலை செய்யப்பட்டனர். ரூபாய் 15,000 மதிப்புள்ள நகைகளும் ரொக்கமும் காணாமல் போயிருந்தன. இந்திய தண்டனைச் சட்ட 302 மற்றும் 392 விதிகளின் கீழ் கீழ்ப்பாக்கம் காவல் நிலையத்தில் குற்ற எண் 853/81-இல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. புலனாய்வில் இறந்தவர்களின் நெருங்கிய உறவினரே இந்த பயங்கரக் கொலையைச் செய்திருக்க வேண்டும் எனத் தெரிய வந்தது. இறந்தவரின் நெருங்கிய உறவினரான 26 வயதுள்ள குமார் என்கிற ஜெயகுமாரையும், அவரது கூட்டாளியான 30 வயது இலிங்கசாமியையும் 1981-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 21-ஆம் நாள் அன்று மைசூரில், சென்னை நகர போலீசார் கைது செய்தனர். ரொக்கம் தவிர, நகைகள் மீட்கப்பட்டன. இந்திய தண்டனைச் சட்ட விதிகள் 302 மற்றும் 392 பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு சென்னை, நகர இரண்டாவது கூடுதல் செஷன்ஸ் நீதிபதிமுன் வழக்கு விசாரணையில் உள்ளது.

கொள்ளை மற்றும் வழிப்பறி.

13. சில திருடர்கள் 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6-ஆம் நாள் அன்று வட ஆற்காடு, விரிஞ்சிபுரம் விவசாயக் கூட்டுறவு வங்கியின் ஜன்னல் கம்பிகளை உடைத்து உள்ளே நுழைந்து ரூபாய் 1,78,000 மதிப்புள்ள தங்க நகைகளைத் திருடினர். விரிஞ்சிபுரம் காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்ட விதிகள் 457 மற்றும் 380 பிரிவின் கீழ் குற்ற எண். 47/81-இல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. புலனாய்வில் ஆம்பூர் நகர உள்ளூர் பழைய குற்றவாளி சுப்பிரமணியத்தைக் கைது செய்து விசாரித்தனர். அதன் பலனாக ரவீந்தரன் என்கிற ரவி என்னும் ஆம்பூர் நகர பொற்கொல்லர் ஒருவரையும் கைது செய்தனர். அவர்கள், குற்றத்தை ஒப்புக்கொண்டனர். ரூபாய் 1,78,000 மதிப்புள்ள தங்க நகைகள் அனைத்தும் மீட்கப்பட்டன. சுப்பிரமணியம் 18 மாதம் கடுங்காவல் தண்டனையும், ரவி 6 மாதம் கடுங்காவல் தண்டனையும் பெற்றனர்.

14. 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ஆம் நாள் அன்று பஞ்சாப் மாநில அமிர்தசரசைச் சேர்ந்த பிரதாப்சிங், மேற்கு வங்காள அவுராவைச் சேர்ந்த இரு குற்றவாளிகளுடன் பீகார் மாநிலத்தில் வஜ்ரா கிராமத்தில் BRB. 7654 எண்ணுள்ள காரைத் திருடிவிட்டு, சேலம் மாவட்டத்திலுள்ள ஓமலூர் வந்தனர். அங்குள்ள பொறியியல் கல்லூரியில் பரிசோதனைக்கூடக் கதவை உடைத்து ஒரு இலட்ச ரூபாய் மதிப்புள்ள 12 நில அளவைக் கருவிகளைத் திருடினர். ஓமலூர் காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்ட விதிகள் 457 மற்றும் 380 பிரிவுகளின் கீழ் குற்ற எண். 76/81-இல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. தீவிர புலனாய்வுக்குப் பின் சேலம் மாவட்டக் காவல் துறையினர் ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் தக்கலையில் குற்றவாளிகளைத் திருடப்பட்ட கருவிகள் மற்றும் காருடன் கைது செய்தனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு நடைபெறுகிறது.

15. சென்னை நகரில், இராயபுரம் காவல் நிலைய எல்லைக்குள் நடந்த குற்ற எண். 1603/80, தண்டையார்ப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குள் நடந்த குற்ற எண். 1082/80, 40/81 மற்றும் 47/81-இல் நடந்த பயங்கரமான கன்னக் களவுகளில் சில விரல் தடயங்கள் மட்டும கிடைத்தன. விரல் தடயங்களைப் பரிசோதித்ததில், குற்றம் நடந்த இடத்தில் கிடைத்த விரல் ரேகைத் தடயங்கள், மேற்கு இராமநாதபுரம் சிவகாசியைச் சேர்ந்த முன்னாள் குற்றவாளி ஜெயபால் விரல் ரேகையுடன் ஒத்து இருந்தன. அவரைக் கைது செய்து விசாரித்தபோது அவர் குற்றங்களை ஒத்துக்கொண்டதுடன் அவரிடமிருந்து ரூபாய் 1,25,000 மதிப்புள்ள தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், டிரான்சிஸ்டர், டேப் ரிக்கார்டர் முதலியவை கைப்பற்றப்பட்டன. மேலும்,





விசாரித்ததில் இவர் சென்னையில் 8 கன்னக் களவுகளுக்கும். 3 திருட்டுகளுக்கும் பொறுப்பானவர் என்று தெரிய வந்தது, இவருக்கு 18 மாதக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

16. திரு. குருசாமி என்பவரைத் தலைவராகக் கொண்ட 5 பேர் உள்ள ஒரு கும்பலைத் திருநெல்வேலி மாவட்டக் காவல் துறையினர் 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ஆம் நாள் அன்று கைது செய்தனர். திருநெல்வேலி மாவட்டத்தில் நான்கு வழிப்பறிகளுக்கும் நான்கு சங்கிலி பறித்தல் முதலான குற்ற வழக்குகளுக்கும் இவர்களே பொறுப்பானவர்கள் என்று தெரிய வந்தது. ரூபாய் 44,600 மதிப்புள்ள தங்க நகைகள் மீட்கப்பட்டன. இந்திய தண்டனைச் சட்டம் 401-ஆவது பிரிவின் கீழ் பாளையங்கோட்டை காவல்நிலையக் குற்ற எண். 347/81-இல் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்குப் பலதரப்பட்ட கால அளவு சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது.

17. தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம் திருவாரூரைச் சேர்ந்த துரைக்கண்ணு செட்டியார் தனது நகைக் கடை களவாடப்பட்டதாக 1981-ஆம் ஆண்டு மே திங்கள் 11-ஆம் நாள் அன்று புகார் செய்தார். இந்திய தண்டனைச் சட்ட விதிகள் 457 மற்றும் 380 பிரிவின்படி திருவாரூர் நகரக் காவல் நிலையத்தில் குற்ற எண். 133/81-இல் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. விரல் ரேகை நிபுணர் உதவியுடன் குற்றம் நடந்த இடத்தில் கிடைத்த விரல் ரேகை அடையாளத்தைக் கொண்டு உள்ளூர் பழைய குற்றவாளி வீரசேகர் என்ற சேகரின் விரல் ரேகைக்கு ஒத்து இருந்தது. இதற்காகத் தனிக்காவல் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி பெங்களூரில் குற்றவாளியைக் கைது செய்தனர். அவர் கொடுத்த தகவல்படி ரூபாய் 8,20,000 மதிப்புள்ள தங்க நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள் முதலிய அனைத்துச் சொத்துக்களும் மீட்கப்பட்டன. குற்றவாளிக்கு இரண்டாண்டு கடுங்காவல் தண்டனை அளிக்கப்பட்டது.

18. உள்ளூர் குற்றவாளி விஸ்வநாதன் தலைமையில் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19ஆம் நாளன்று ஐந்து குற்றவாளிகள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில் சுவரைத் தாண்டி கோவிலில் உள்ள காவலரை மிரட்டி, சாவியைப் பறித்து உள்ளே சென்று உண்டியல் மற்றும் இரும்புப் பெட்டகங்களை உடைத்து ரூபாய் 30,000 மதிப்புள்ள வெள்ளி நகைகள், மற்றும் ரொக்கத்தைத் திருடிச் சென்றனர். தஞ்சாவூர் நகர மேற்கு காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்ட விதிகள் 397 ஆம் பிரிவின் கீழ் குற்ற எண் 499/81 வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலனாய்வு செய்யப்பட்டது. குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். திருடு போன சொத்துக்கள் மீட்கப்பட்டன. வழக்கு விசாரணையில் உள்ளது.

19. கிழக்கு இராமநாதபுரம், திருப்பத்தூர் காவல் நிலைய எல்லையிலுள்ள கந்தவராயன்பட்டி சிவன் கோவில் தெருவில் உள்ள இராமசாமி செட்டியார் வீட்டில் சில குற்றவாளிகள் புகுந்து ரூபாய் 1,18,000 மதிப்புள்ள தங்க, வைர நகைகள் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களை இராமசாமி செட்டியாருக்கும் அவரது மனைவிக்கும் காயம் உண்டாக்கிவிட்டு 25-7-1981 அன்று எடுத்துச் சென்றுவிட்டனர். இந்திய தண்டனைச் சட்ட விதிகள் 457 மற்றும் 397 பிரிவுகளின் கீழ் திருப்பத்தூர் காவல் நிலையத்தில் குற்ற எண் 194/81 இல் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. கிடைத்த விரல் ரேகை அடையாளத்தின் ஆதாரத்தில், உதயநாதபுரம் முன்னாள் குற்றவாளி செல்வராஜ் என்பவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். விசாரணையில், செல்வராஜ், தானும் உள்ளூர் குற்றவாளி மாதவ ராயன்பட்டி சேவுகன் என்பவரும் மற்றும் ஐவரும் அக்குற்றத் தைச் செய்ததாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்தனர். அதன்படி மற்ற அறுவரும் கைது செய்யப்பட்டனர். ரூபாய் 1,14,800 மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. குற்றவாளிகள் மீது விசாரணை நடந்து வருகிறது.

20. வேலூரில் உள்ள முத்துரங்கம் கலைக் கல்லூரியில் இரண்
டாம் வருட இளங்கலை பயிலும் 20 வயது மாணவர் மகேந்திரன்
என்பவர் பனப்பாக்கம் கனரா வங்கியில் 23-11-1981 அன்று
நுழைந்து துப்பாக்கிமுனையில் (உண்மையில் அது விளையாட்டுத்
துப்பாக்கி) ரூபாய் 76,000 த்தைத் திருடிக் கொண்டு பின் வழி
யாக ஓடிவிட்டார். அவரை விரட்டி பிடித்துப் பணம் மீட்கப்
பட்டது. இந்திய தண்டனை சட்டம் 448, 342 பிரிவுகளின் கீழ்
காவேரிப்பாக்கம் காவல் நிலையத்தில் 335/81 எண்ணுள்ள
குற்றம் பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றவாளி மீது வழக்கு
நடைபெற்று வருகிறது.

21. தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம், திருவாரூர் எல்லையம்
மன் கோவில் தெருவில் அருணாசலம் செட்டியார் வீட்டில்,
முகத்தை மறைத்துக் கொண்டு நுழைந்து வீட்டில் உள்ளோரை
தனி அறையில் பூட்டிவிட்டு ரூபாய் 2,25,000 மதிப்புள்ள தங்க
நகை மற்றும் வெள்ளி பாத்திரங்களை 28-11-1981 அன்று
இரவு சிலர் திருடிச் சென்று விட்டனர். இந்திய தண்டனைச்
சட்ட விதிகள் 457, 395 மற்றும் 307 பிரிவுகளின்படி 472/81
எண்ணுள்ள குற்ற வழக்கு திருவாரூர் நகர காவல் நிலையத்தில்
பதிவு செய்யப்பட்டுள்ளது. புலனாய்வில் அருணாசலம் செட்டி
யாரின் சகோதரர் ஐயராமன் மற்றும் நால்வர் திருட்டுக்குக்
காரணமானவர்கள் என்று தெரிய வந்தது. அவர்களின் ஒப்புதல்
வாக்கு மூலத்தின் மேல் ரூபாய் 2,13,000 மதிப்புள்ள பொருட்கள்
மீட்கப்பட்டன. வழக்கு விசாரணையில் உள்ளது.



ஆள் கடத்தல் :

22. சேலம் மாவட்டம் சூரமங்கலத்தில் செவ்வாய்ப்பேட்டை
யைச் சேர்ந்த 24 வயதுள்ள பரமசிவத்தை 14-9-1981 அன்று
பிற்பகல் 12-30 மணிக்கு சூரமங்கலம் காவல் நிலையத்தில்
கைது செய்தனர். அவர் தன் ஆதிக்கத்தில் வைத்திருந்த 10
வயதுள்ள மோகன் மற்றும் 10 வயதுள்ள சத்தியநாராயணன்
ஆகிய இரு சிறுவர்களை, அவர் பொறுப்பிலிருந்து மீட்டு, அவர்
களை பம்பாயில் பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபடுத்தவிருந்த
முயற்சியை முறியடித்தனர். அவர் மீது இந்திய தண்டனைச்
சட்ட விதிகள் 363-ஏ பிரிவின் கீழ் குற்ற எண் 457/81 இல்
சூரமங்கலம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது,
குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வு நடத்தியதில் 15 சிறுவர்களை
யும், 5 சிறுமிகளையும் தமிழ்நாட்டின் பல இடங்களிலிருந்து
இரண்டாண்டு கால கட்டத்தில் கடத்தி மேற்சொன்ன குற்ற
வாளி பம்பாயில் தனது நண்பன் கலியனிடம் அவர்களை ஒரு
சிறுவன் ரூ. 50, ஒரு சிறுமி ரூ. 75 என்ற விலைக்கு விற்றுள்ளார்
எனத் தெரிந்தது. குற்றப் புலனாய்வுத் துறையினர் பம்பாய்
சென்று இது தொடர்பாக 7 குற்றவாளிகளைக் கைது செய்து
3 சிறுவர்கள் மற்றும் 4 சிறுமிகளை மீட்டுள்ளனர். இந்தச்
சிறுவர்-சிறுமியர்கள் பிச்சையெடுக்கவும், கழிவுக் காகிதங்கள்
பொறுக்கவும் பயன்படுத்தப்பட்டு வந்தனர். குற்றவாளி பரம
சிவமும், அவரது சகா முகமது உசைனும் குற்றவியல் வழிமுறைச்
சட்டப் பிரிவு 164 இன் கீழ் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்
ளனர். முகமது உசைன் அரசுத் தரப்பு சாட்சியாக மாறியதால்
அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. வழக்கில் மேலும் புல
னாய்வு நடக்கிறது.

23. சேலம் காந்தி சாலையில் பாலசுப்பிரமணியம் என்பவரின்
ஐந்து வயதுள்ள மகன் சைதன்யன் என்பவன் 16-11-1981
அன்று சேலம் குளுனி மெட்ரிகுலேஷன் பள்ளியிலிருந்து கடத்தப்
பட்டான். இப் பையனுக்குப் பணயமாக ரூ. 3 இலட்சம் கோரப்
பட்டது. இந்திய தண்டனைச் சட்ட விதிகள் 363, 354, 357
மற்றும் 388 பிரிவுகள்படி குற்ற எண் 956/81 இல் ஒரு வழக்கு
சேலம் மாவட்ட அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் பதிவு செய்
யப்பட்டது. கடத்தியவர்களிடமிருந்து சிறுவனின் சட்டை,
அரைக்கால் சட்டை, கேசட் டேப் மற்றும் பழைய நோட்டுகளாக
ரூ. 3 இலட்சம் பணயப் பணம் கேட்டு எழுதப்பட்ட ஒரு கடிதம்
ஆகியவை கொண்ட ஒரு பார்சல் வந்தது. பணயப் பணத்தினை
சேரமனூர் புகைவண்டி நிலையத்தில் கோவை எக்ஸ்பிரசில்,
அன்றே கொண்டு வந்து போட வேண்டும் எனக் கேட்கப்பட்
டிருந்தது. கடத்தப்பட்ட சிறுவனின் தந்தை சோமனூர் இரயில்
நிலையத்தில் கடிதத்தில் குறிப்பிட்ட இடத்துக்கு சிறிது முன்பே
ரூ. 3 இலட்சம் கொண்ட துணிப் பையை வீசி எறிந்தார்.
இரயில்வே ஊழியர்கள் இந்தப் பணத்தை எடுத்துப் பங்குப்
போட்டுக் கொண்டனர். இதனால் ஏற்பட்ட குழப்ப நிலையில்

போலி எண் TMV 2127 பொறிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு இருவர் ஓடிவிட்டனர். இரயில்வே ஊழியர்களிடமிருந்து ரூ. 1,94,300 மீட்கப்பட்டது. 22–11–1981 அன்று காரமடை ஆசிரியர் முருகேசன் என்பவர் தன் கிராமத்தில் சந்தேகப்படத்தக்க வகையில் ஒரு தம்பதியர், ஒரு சிறுவனுடன் இருப்பதாகத் தகவல் அறிவித்ததன் பேரில் காவல் துறையினர் உடனே விரைந்து சென்று சிறுவனை மீட்டனர். நாகராசனையும், அவரது மனைவி செல்வி, அவளது சகோதரர் ரங்கன் ஆகியோரைக் கைது செய்தனர். கடத்தலுக்குப் பயன்படுத்தப் பட்ட மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டது. வழக்கு விசாரணையில் உள்ளது.

தெய்வச் சிலைத் திருட்டு :

24. 30–4–1981 அன்று கோயம்புத்தூர் (ஊரகம்) மாவட்டத்தில் இராமநாதபுரம் கிராமத்தில் உள்ள கோவிலை கள்ளச் சாவியின் உதவியால் திறந்து செல்லாண்டி அம்மன், உமா மகேஸ்வரி ஆகிய பஞ்ச லோகச் சிலைகளைத் திருடிச் சென்று விட்டனர். திருடப்பட்ட சிலைகளின் மதிப்பு ரூ. 5,00,000.

பொள்ளாச்சி காவல் நிலையத்தில், இந்திய தண்டனை சட்ட விதிகள் 457 மற்றும் 380 பிரிவுகளின் கீழ் குற்ற எண் 76/81 இல் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. புலனாய்வு செய்து கேரளாவில், கொழிஞ்சன் பாறை காவல் நிலைய எல்லைக் குள்ளிருக்கும் இராசப்பன் மகன் இராமகிருஷ்ணனை போலீசார் கைது செய்து தெய்வச் சிலைகளை மீட்டனர். குற்றவாளிக்கு 9 மாத கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது.

25. கேரளாவைச் சேர்ந்த ஸ்டீபனும் அவரது கூட்டாளி சுரேஷ் குமாரும் கன்னியாகுமரி மாவட்டம் குமார கோவிலிலுள்ள முருகன் கோவிலில் 11–5–1981 அன்று நுழைந்து சாஸ்தா பிள்ளை என்ற கோயில் காவலரைக் கொலை செய்து விட்டு மற்றொரு கோவில் காவலர் நல்லபெருமாள் பிள்ளையைக் காயப் படுத்திவிட்டுச் சிலைகளைத் திருட முயன்றனர். ஆனால் முடியாமல் ஓடிவிட்டனர். தக்கலை காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்ட விதிகள் 120 பி, 324, 302, 457 மற்றும் 380 உடன் 511 பிரிவுகளின் கீழ் 191/81 எண்ணுள்ள குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. கேரள மாநிலக் காவல் துறையினர் வேறொரு கோவில் களவு சம்பந்தமாக திரு. ஸ்டீபனைக் கைது செய்தனர். தமிழ்நாடு குற்றப் பிரிவுப் புலனாய்வுத் துறையினர் இதனை அறிந்து அங்கு சென்று ஸ்டீபனை விசாரணை செய்தனர். விசாரணையில் குற்றவாளி 11–5–1981 அன்று, தானும், தனது கூட்டாளியும் குமாரகோவிலில் உள்ள கோயிலில் செய்த குற்றத்தைத் தானாகவே ஒப்புக் கொண்டனர். குற்ற நோக்கம், ஏற்பாடுகள், குற்றவாளிகளின் பிந்திய நடவடிக்கைகள் முதலியவற்றிற்கான சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. கேரளாவில் பல இடங்களுக்குச் சென்று தடயங்கள் சகரித்து புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருறேது.





தமிழ்நாடு குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை புலனாய்வு செய்த சில முக்கிய பரபரப்பூட்டும் வழக்குகள்.

26. திருநெல்வேலி மாவட்டம் அச்சன்புதூர் காவல் நிலைய எல்லைக்குள் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று இரவு மேக்கரை கிராமத்தில் ஜெமினித் தோட்டக் Gemini Estate) காவலர்களான திரு. அருணாசலத் தேவர், திரு. இராமையாத் தேவர் ஆகிய இருவர், தங்கராசு என்ற யூசப் மற் றும் நால்வரால் அடித்துக் கொலை செய்யப்பட்டனர். மாநிலக் குற்றப் பிரிவின் குற்றப் புலனாய்வுத் துறையினர் இவ்வழக்கை முழுமையாகப் புலனாய்வு செய்து 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 ஆம் நாளன்று சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தனர். தென்காசி இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிபதி முன்பு இவ்வழக்கு விசாரணையில் உள்ளது.

27. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் போக்குவரவுக் கண்காணிப்பு அதிகாரி கொடுத்த புகாரின்படி சில பல்லவன் போக்குவரத்துக் கழக நடத்துநர்கள். பைண்டர்கள் பிளாக் மேக் கர் மேலும் ஒரு தனியார் அச்சக உரிமையாளர் ஆகியோர் கூட் டாகக் கள்ள டிக்கட் தயாரித்து மோசடி செய்த சதிக் குற்றத்தைப் புலனாய்வுக்காக மாநில குற்றப் பிரிவுக் குற்றப் புலனாய்வுத் துறையினர் ஏற்றுக் கொண்டு இச் சதியினை வெளிக் கொணர்ந் தனர். பிளாக்குகள், அச்சடிக்கப்பட்ட டிக்கட்டுகள் மற்றும் பல குற்றச் சார்புள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டன. குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். இவ் வழக்கில் புலன் விசாரணை நடைபெற்று வருகிறது.

பேருந்தை வழி மறித்து நடத்திய கொள்ளைகள் :

28. 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் இரவு 10-30 மணி அளவில் வட ஆர்க்காடு மாவட்டம் வேலூர் சித்தூர் நெடுஞ்சாலையில் காட்பாடி எல்லைக்குள் 20 பேர் கூட் டாகச் சேர்ந்து பயங்கர ஆயுதங்களுடன் சாலையின் நடுவே பாறைகளைப் போட்டு மாட்டு வண்டிகளை நிறுத்தி, 3 பஸ் கள் மற்றும் 3 லாரிகளை வழிமறித்துத் தாக்கி பயணிகளிடமிருந்து ரூ. 40,244 மதிப்புள்ள பொருட்களைக் கொள்ளையடித்துக் கொண்டு ஓடி விட்டனர். இந்திய தண்டனைச் சட்டம் 397 பிரிவின்படி 562/81 எண்ணுள்ள ஒரு குற்றவழக்கு காட்பாடி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. புலனாய்வில் சேகரிக்கப் பட்ட செய்திகளின்படி குற்றவாளிகள் வடநாட்டைச் சேர்ந்தவர் களென்றும், இந்தி பேசுபவர்களென்றும் தெரிய வந்தது. வட ஆர்க்காடு மாவட்டத் துணை ஆய்வாளர் ஒருவர் தலைமையில் ஒரு காவலர் குழு பீகார் மாநில பலமால் மாவட்டம், தோல்ரா கிராமத்திற்குச் சென்று, பீகார் மாநிலக் காவல் துறையின் உதவி யுடன் அவ்விடத்தைச் சோதனையிட்டு, சந்து என்கிற கொள்ளைக் கும்பலின் தலைவர் உட்பட எட்டு பேரைக் கைது செய்தனர்.

மேலும் நடந்த விசாரணையில் மேற்சொன்ன குற்றம் சாட்டப்பட்டவர்களே ஆந்திர மாநிலததிலும். கர்நாடக மாநிலத்திலும் நடந்த பஸ் வழிப்பறிக் கொள்ளை வழக்குகளும் பொறுப்பானவர்கள் எ‍ேறு தெரிய வந்தது. இவ் வழக்கில் மேலும் புலனாய்வு நடக்கிறது.

29. புதுக்கோட்டை மாவட்டம் திருகோகர்ணம் காவல் நிலைய எல்லைக்குள இருக்கும் உசிலம்குளம் கிராமத்தில் பாண்டியன் போக்குவரத்து கழகப் பேருந்து நடத்துநரிடமிருந்து உள்ளூர் குற்றவாளி ஆறுமுகம் மற்றும் முத்துக்குமார் என்பவரும், அன்று வசூலான ரூ. 126·09-ஐக் கத்தி முனையில் பறித்துச் சென்றனர். இந்திய தண்டனைச் சட்ட விதிகள் 392 பிரிவின்படி 347/81 எண்ணுள்ள குற்ற வழக்கு திருகோகர்ணம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. பழம்பெரும் குற்றவாளியான பழையசேக்கு ஆறுமுகமும் முத்துக்குமாரும் கைது செய்யப்பட்டனர். ரொக்கத் தொகையையும் மீட்கப்பட்டது. அவர்கள் மீது வழக்கு விசாரணையில் உள்ளது.

30. தூத்துக்குடி மதுரை நெடுஞ்சாலையில் தண்ணீர் பந்தல் கிராமம் (திருநெல்வேலி மாவட்டம்) அருகில் TMN 8693 என்ற எண்ணுள்ள பல்லவன் போக்குவரத்துப் கழகப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த நான்கு சக பிரயாணிகள் முகமூடியால் முகத்தை மூடிக்கொண்டு கத்தி முனையில் பேருந்தினை நிறுத்தி, எதிர்த்த ஓட்டுநருக்கு தோளிலும் கையிலும் காயம் உண்டாக்கி, பெண் பயணி ஒருவரிடமிருந்து 24 பவுன் தங்க நகைகள், மற்றும் ஒரு சக பிரயாணியிடமிருந்து ஒரு கைக்கெடிகாரம் ரூ. 20 ரொக்கம் ஆக மொத்தம் ரூ. 28;320 மதிப்புள்ள பொருட்களைப் பறித்துச் சென்றனர். அந்தப் பேருந்தினை அடுத்து வந்த TMN 8687 என்ற பேருந்து முதல் பேருந்து நின்றதற்கான காரணங்களை அறிய வேகத்தைக் குறைத்த போது அதன் மீது நாட்டு வெடிகுண்டுகளை வீசினர். இந்திய தண்டனைச் சட்ட விதிகள் 341, 397 பிரிவுகளுடன் வெடிபொருள் சட்ட விதி 5(3)(1)(பி)(பிரிவின்படி குளத்தூர் காவல் நிலையத்தில் 140/81 எண்ணுள்ள குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வு நடைபெறுகிறது.

31. செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் தாங்கல் கிராமத்தின் அருகில் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 ஆம் நாளில் அந்தோணி என்கிற அந்து மற்றும் மூவரும் ஒரு காரை வழிமறித்துத் தாக்கி, தங்கத்தாலி, தங்கச் சங்கிலி, கைக் கடிகாரம் முதலிய ரூ. 15,000 மதிப்புள்ள பொருட்களைக் காரிலிருந்தவர்களிடமிருந்து பறித்துச்சென்றனர் இந்திய தண்டனைச் சட்டம் 397-வது பிரிவின் படி 1430/81 எண்ணுள்ள குற்ற வழக்கு திருவொற்றியூர், காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு திருடு போன பொருட்கள் மீட்கப்பட்டன. குற்றவாளிகளை விசாரித்ததில் திருவொற்றியூர், எண்ணூர் புது வண்ணாரப்



பேட்டை, அடையாறு ஆகிய இடங்களில் சங்கிலி பறித்துச் சென்ற 8 வழக்குகளுக்கும் பொறுப்பானவர்கள் இவர்களே எனத் தெரிந்தது. புலனாய்வு மேலும் தொடருகிறது.

இனக்கலவரங்கள் :

32. கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் நொச்சூரணி என்ற ஊரில் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் நாளன்று நடைபெற்ற பங்குனி உததிரத் திருவிழாவின்போது சில ஆதி திராவிட இளைஞர்கள் அங்கிருந்த சில சாதி இந்துப் பெண்களைக் கேலி செய்ததன் விளைவாக சாதி இந்துக்களுக்கும் ஆதி திராவிட மக்களுக்குமிடையே காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டது. இதன் விளைவாக ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளுதல், தீ வைப்பு, போக்குவரததிற்கு இடையூறு செய்தல் முதலிய நிகழ்ச்சிகள் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7 ஆம் நாள் முதல் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் வரை நடைபெற்றன. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் முதல் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் வரையிலான நாட்களில் தொடர்ந்து மோதல்கள் ஏற்பட்டன. வன்முறையில் ஈடுபட்டுள்ள கூட்டத்தினரை அடக்கவும், தற்காப்புக்காகவும், காவலர்கள் நான்கு தடவை கீழ்க்கண்டவாறு கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாயிற்று.

33. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாளன்று ஆதி திராவிட இனத்தவர்கள் இராமநாதபுரம் நகர எல்லையில் கூட்டமாகக் கூடி, பரமக்குடி இராமநாதபுரம் சாலையில் ஓடிக்கொண்டிருந்த பேருந்து வாகனங்களை மறியல் செய்து போக்குவரததிற்கு பாதிப்பு ஏற்படுத்தினர். காவல் மற்றும் வருவாய்த துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். எச்சரிக்கைக்குப் பின்னர் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசிக் கூட்டத்தினரைக் கலைத்தனர். இதற்கிடையில் பேராவூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள ஆதி திராவிடர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கேணிக்கரையில் உள்ள இதர வகுப்பினரைத் தாக்குவதற்காக சென்றபோது காவலர்கள் அங்கு விரைந்து சென்று ஆதி திராவிட இனத்தவரைத் தடுததனர் கூட்டத்தினர் காவலர்களைக் தாக்கியதால் ஒரு காவலருக்கு அரிவாள் வெட்டும் மேலும் 11 அதிகாரிகளுக்கு கல் வீச்சுக் காயமும் ஏற்பட்டது. கூட்டத்தைக் கலைந்து செல்லும்படி காவலர் எச்சரிக்கை செய்தும் அக்கூட்டத்தினர் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டதால் வன் முறையாளரைக் கலைக்கவும், தற்காப்பிற்காகவும் காவலர் சுட்டனர். இதில் 5 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் ஒருவர் அன்றே மரணம் அடைந்தார். மற்றொருவர் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாளன்று காயங்களின் விளைவாகக் காலமானார். இராமநாதபுரம் கோட்டாட்சித் தலைவரால் நீதிவிசாரணை நடத்தப்பட்டு, துப்பாக்கிச் சூடு நியாயமானதே என்கிற அவரது அறிக்கையை அரசு ஏற்றுக் கொண்டது.

34. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாளன்று
சத்திரக்குடி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த
ஆதி திராவிட இனத்தவர் சத்திரக்குடி அருகில் உள்ள பரமக்குடி-
இராமநாதபுரம் நெடுஞ்சாலையில் தடுப்புகளை ஏற்படுத்தி
போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தனர். கூட்டத்தின் ஒரு
பகுதியினர் சததிரக் குடி காவல் நிலையத்திற்கு வந்து சரமாரி
யாகக் கற்களை வீசி எறிந்தனர். இதில் 4 காவல் அதிகாரிகள்
காயம் அடைந்தனர். நிலைமை மிகவும் மோசமடையவே காவ
லர்கள் தற்காப்பிற்காக துப்பாக்கியால் சுட்டு வன்முறையில் ஈடு
பட்ட கூட்டத்தினரைக் கலைத்தனர். இதில் ஏழுபேர் காயம்
அடைந்தனர். இச்சம்பவம் குறித்து சிவகங்கை கோட்டாட்சி
தலைவரால் நீதி விசாரணை நடத்தப்பட்டு, துப்பாக்கிச் சூடு
நியாயமானதே என முடிவு செய்யப்பட்டது. இதனை அரசு
ஏற்றுக் கொண்டது.

35. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13 ஆம் நாளன்று
இராமநாதபுரம் காவல் எல்லைக்குட்பட்ட வெள்ளா கிராமத்தில்
உள்ள சாதி இந்துக்களை ஆதி திராவிட இனத்தவர் தாக்கி அங்
குள்ள 30 வீடுகளுக்குத் தீ வைத்தனர். இது பற்றிய தகவல்
கிடைத்தவுடன் உத்திரகோசமங்கை புறக்காவல் நிலையத்தில்
உள்ள காவலர் பிரிவு சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றது.
அங்கு ஆதி திராவிட இனத்தவர் காவலர்களை தாக்க ஆரம்,
பித்தனர். தற்காப்பிற்காக காவல் பிரிவினர் இரண்டு முறை
சுட்டனர். இதில் யாரும் காயமடையவில்லை. இச்சம்பவம்
குறித்து இராமநாதபுரம் கோட்டாச்சித் தலைவரால் நீதி விசா
ரணை நடத்தப்பட்டு துப்பாக்கிச் சூடு நியாயமானதே என முடிவு
செய்யப்பட்டது. இதனை அரசு ஏற்றுக் கொண்டது.

36. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாளன்று
கருங்குளத்தில் உள்ள தேசீய நெடுஞ்சாலையில் (இராமநாத
புரம்-மதுரை) ஆதி திராவிட இனத்தவர் கூடி நின்று அவ்வழியே
சென்று கொண்டிருந்த வாகனங்களின் மீது கல்லெறிந்து,
போக்குவரத்துக்கு இடையூறு செய்தனர். அவ்வழியாக
உத்திரகோசமங்கைக்கு சென்றுகொண்டிருந்த கிழக்கு இராம
நாதபுரம் காவல் துறைக் கண்காணிப்பாளர், கூட்டத்தினரைக்
கலைந்து செல்லும்படி எச்சரித்தார். ஆனால், கூட்டத்தினர்
காவல் அதிகாரி மீது கற்களை எறிந்தனர். போதிய எச்சரிக்
கைக்குப் பின்பு கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வெடிக்கப்பட்டன.
அது பலனளிக்காமல் போகவே வன்முறைக் கூட்டத்தினரைக்
கலைப்பதற்காக காவல் துறையினர் துப்பாக்கியால் சுட்டனர்.
இதில் ஒருவரும் காயமடையவில்லை. இச்சம்பவம் பற்றி இராம
நாதபுரம் கோட்டாட்சித் தலைவரால் நீதி விசாரணை நடத்தப்
பட்டு துப்பாக்கிச்சூடு நியாயமானதேஎன முடிவு செய்யப்
பட்டது. இதனை அரசு ஏற்றுக்கொண்டது.





37. மேலே விவரிக்கப்பட்ட கலவரங்கள் தொடர்பாக ஆதி
திராவிடர், சாதி இந்துக்கள் ஆகிய இரு பிரிவினர் மீதும் வழக்கு
கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் குற்றவியல் நடை
முறைச்சட்டப் பிரிவு 107-ன்படி இரு பிரிவினர் மீதும் நடவடிக்கை
எடுக்கப்பட்டுள்ளது. இப்போது அங்கு அமைதியான சூழ்நிலை
நிலவுகிறது.

38. 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 2 ஆம் நாளன்று கன்னியா
குமரி மாவட்டத்தில் குளச்சல் என்ற ஊரில் உள்ள ஒரு உள்ளூர்
திரை அரங்கில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஒரு முஸ்லீம் வகுப்
பினர் 3 மீனவர்களால் தாக்கப்பட்டார். இதை அறிந்த முஸ்
லீம்கள் ஒன்று சேர்ந்து திரையரங்கின் முன் கூடி கற்களால்
தாக்கினர். சரியான சமயத்தில் காவலர்கள் தலையிட்டதனால்
முஸ்லீம்களுக்கும் மீனவர்களுக்குமிடையே ஏற்பட்டவிருந்த ஒரு
பெரிய மோதல் தடுக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டு மே திங்கள்
3 ஆம் நாளன்று மீனவர்கள் மீது முஸ்லீம்கள் கல் எறிந்ததாகக்
கூறி மீனவர்களைக் கொண்ட கூட்டம் முஸ்லீம்களுக்குச் சொந்த
மான கடைகளைத் தாக்கி சேதம் விளைவித்தனர். காவலர்
சம்பவ இடத்திற்கு வீரைந்து சென்று தடியடிப் பிரயோகம்
செய்து கூட்டத்தினரைக் கலைத்தனர். அமைதிக் குழுவின
ரால் ஏ.வி. எம். கால்வாயில் முஸ்லீம்களுக்குக் குளிக்குமிடம்
ஒதுக்கியதை ஒரு பகுதி மீனவர்கள் எதிர்த்ததனால் இரு பிரிவின
ருக்குமிடையே மீண்டும் பதட்ட நிலை உருவானது. காவலர்
இதில் குறுக்கிட்டு அவர்களை அமைதிப் படுத்தினர்.

39. 1981 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25 ஆம் நாளன்று
வட ஆற்காடு மாவட்டம் வந்தவாசியில் இந்துக்கள் 30 காவடி
களுடன் தப்பட்டகளை அடித்துக்கொண்டு அங்காடியிலுள்ள
மசூதி வழியாகச் சென்றனர். மசூதியின் முன்னால் நின்று
கொண்டிருந்த முஸ்லீம்கள் சிலர் தப்பட்டைகளை அடித்துக்
கொண்டு செல்வதை ஆட்சேபித்தனர். அந்த மசூதியின் வழி
யாக ஊர்வலம் சென்றுகொண்டிருந்தபோது மசூதியின் உள்
ளிருந்து ஊர்வலத்தில் சென்றுகொண்டிருந்தவர்கள் மீது ஒரு
சைக்கிள் சக்கர வளையம் வீசப்பட்டது. இச்சம்பவம் அங்கு
ஒரு பதட்ட நிலையை உருவாக்கியது. பாதுகாப்பிற்காகச் சென்
றிருந்த காவலர் அங்கு குழுமியிருந்த இந்துக்கள் மற்றும் முஸ்
லிம்களைக் கலைந்து போகச் செய்தனர். இச்சம்பவத்தினால்
ஆறு முஸ்லிம்களும் இரண்டு இந்துக்களும் சிறு காயம் அடைந்
தனர். ஒரு அமைதிக் குழு ஏற்படுத்தப்பட்டு இச்சம்பவம் சுமுக
மாகத் தீர்க்கப்பட்டது.

40. 1981 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29 ஆம் நாளன்று
தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள தோளார் கிராமத்தில் உள்ள
ஒரு ஆதி திராவிட இளைஞன் அங்கு வந்த வன்னியர் வகுப்பைச்
சார்ந்த பெண்களின் தோற்றம் குறித்து கேலி பேசியதன் விளை
வாக சாதி இந்துக்களுக்கும் ஆதி திராவிட இனத்தவர்களுக்கும்

இடையே மனக் கசப்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30 ஆம் நாள், 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1 ஆம் நாள், 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 3 ஆம் நாள் ஆகிய நாட்களில் ஆதி திராவிடர்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையே ஆங்காங்கே மோதல்கள் நடந்தன. இது சம்பந்தமாக இரு சாரார் மீதும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. திட்டக்குடி வட்டாட்சியர் மற்றும் பெண்ணாடம் காவல் இளம் உதவி ஆய்வாளர் இருவரும் தலையிட்டு சமாதான முயற்சியில் ஈடுபட்டனர். பாதுகாப்பின் பொருட்டு கிராமத்தில் காவலர்கள் நிறுத்தப்பட்டனர். விருத்தாசலம் துணை காவல் கண்காணிப்பாளர், சம்பவம் நடந்த கிராமத்தை பார்வையிட்டு இருதரப்பினரையும் எச்சரிக்கை செய்தார். ஆனால் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 4 ஆம் நாளன்று சாதி இந்துக்கள் அடங்கிய கூட்டம் ஒன்று ஆயுதங்கள், தீப் பந்தங்களுடன் தோளார் கிராமத்தில் உள்ள ஆதி திராவிட காலனிக்குள் சென்று அங்கிருந்த வீடுகளுக்குத் தீயிட்டனர். இதில் 184 வீடுகளும் 5 ஆடுகளும் ஒரு டயர் வண்டியும் எரிந்து போயின. குடிநீருக்குப் பயன்படுத்தப்பட்ட பம்பும் நாசப்படுத்தப்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதம் சுமார் ரூபாய் ஆறு இலட்சம் என்று மதிப்பிடப்பட்டது.

விருத்தாசலம் துணை காவல் கண்காணிப்பாளர், ஆறு ஆயுத சேமப்படைப் பிரிவுடனும் கண்ணீர் புகைக்குண்டு பிரிவுடனும் சம்பவம் நடந்த இடத்திற்குக் கோட்டாட்சியருடன் விரைந்து சென்றனர். தீயணைப்பு வண்டிகள் பல இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்டு, தீயணைக்கப்பட்டது. 5 பெண்கள் உட்பட 23 ஆதி திராவிடர்கள் காயமுற்றனர். 50 சாதி இந்துக்களும் 2 ஆதி திராவிடர்களும் கைது செய்யப்பட்டனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் உணவுப் பொருள்கள், துணிமணிகள், ரொக்க நிவாரணம் முதலியவற்றை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இது பற்றிய வழக்கு நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

41. திருநெல்வேலி மாவட்டம் குறிஞ்சிக்குளம் கிராமத்தில் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம்நாள் அன்று தெற்குப்பட்டியைச் சேர்ந்த இந்துக்கள் மாரியம்மனை ஊர்வலமாக எடுத்துவரும் பொழுது வேலு என்பவருக்கும் சில முஸ்லிம் சிறுவர்களுக்கும் ஏற்பட்ட சச்சரவில் முஸ்லீம் சிறுவர்கள் வேலுவை அடித்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. வேலுவின் தகப்பனார் திரு. காசிப்பாண்டி இதைக் கேட்டு ஆத்திரமடைந்து 40 இந்துக்களுடன் குறிஞ்சிக்குளம் சென்று முஸ்லீம்கள் மீது தனது துப்பாக்கியால் சுட்டார். இதனால் 5 முஸ்லீம்கள் காயமுற்றனர். மேலும் கற்கள் வீசியதனால் ஒரு முஸ்லீம் காயமுற்றார். திரு. காசிபாண்டி கைது செய்யப்பட்டார். மானூர் காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச்சட்ட விதிகள் 147, 148, 324 மற்றும் 307 பிரிவுகளின்படியும், படைக்கலன்





சட்ட விதி 28(1)-ன் படியும் 154/81 எண்ணுள்ள குற்ற வழக்கு ஒன்றும், இந்திய தண்டனைச் சட்ட விதி 147, 341 மற்றும் 323 பிரிவுகளின்படி 155/81 எண்ணுள்ள இன்னொரு குற்ற வழக்கும் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

தீவிரவாதிகளின் நடவடிக்கை :

42. 1978 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் தீவிர வாதிகளின் நடவடிக்கை வெகு குறைவாகவே இருந்து வந்தது. பின்னர் தீவிரவாதிகளின் நடவடிக்கை, குறிப்பாக வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் தலைகாட்ட ஆரம்பித்தது. 1979–80 ஆம் ஆண்டுகளில் தீவிரவாதிகள் தங்களை வன்முறைக் கும்பலாக அமைத்துக்கொண்டு, நாட்டு வெடிகுண்டு மற்றும் கொலை ஆயுதங்களுடன் நிலச்சுவான்தார்கள் மற்றும் அப்பகுதி மக்கள் மீது தங்கள் ஆதிக்கத்தை உறுதியாக நிலைநாட்டும் நோக்கத்துடன் அவர்களைப் பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். காவல் துறையிடமிருந்து உதவி மற்றும் பாதுகாப்பை மக்கள் நாடுவதைத் தடுப்பதே இத்தீவிர வாதிகளின் முக்கிய நோக்கமாகும். 1981 ஆம் ஆண்டில் கீழே கூறப்பட்டுள்ள சில வன்முறைச் சம்பவங்களுக்கு தீவிரவாதிகளே பொறுப்பானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

43. வட ஆற்காடு மாவட்டம், கொல்லக்கோட்டையில் 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 15 ஆம் நாளன்று இரண்டு தீவிரவாதிகளைக் கைது செய்யக் காவல் துறையினர் முற்பட்டபோது அவர்களில் ஒருவர் ஒரு நாட்டு வெடிகுண்டைக் காவல் துறையினர் மீது எறிந்தார். ஆனால் அது வெடிக்கவில்லை. காவல்துறையினர் வானை நோக்கி மூன்று தடவை சுட்டனர். தீவிரவாதிகளைப் பிடித்துக் கைது செய்தனர். திருப்பத்தூர் காவல் நிலைய குற்ற எண். 105/81-ல் இந்திய தண்டனைச் சட்ட விதி எண். 307 மற்றும் இந்திய வெடி பொருள் சட்டம் 5(3) (பி) பிரிவின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வு செய்யப்பட்டு வருகிறது.

44. தென்னாற்காடு மாவட்டம், கொரப்பூர் மற்றும் வீராணம் கிராமங்களில் தலைமறைவாகியிருந்த தீவிரவாதி ஒருவரைக் கைது செய்ய காவல்படை ஒன்று 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 22 ஆம் நாளன்று சோதனையிட்டபோது தீவிரவாதிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் அடங்கிய 150 பேர்கள் கொடிய ஆயுதங்களாலும் செங்கற்களாலும் காவல்படையைத் தாக்கினர். காவல் துறையினர் அந்தக் கும்பலை விரட்டி ஐந்து தீவிரவாதிகளைக் கைது செய்தனர். இச்சம்பவத்தால் காவல்துறை லாரி சேதப்படுத்தப்பட்டதுடன் நான்கு காவலர்கள் காயமுற்றனர். இது பற்றிய வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.

45. வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூருக்கு அருகில் உள்ள நாயக்கனேரி குன்றுகளில் தீவிரவாதிகள் நடமாடுவதாகக் கிடைத்த தகவலின்பேரில் ஒரு காவல் படையினர் 24–8–1981 அன்று அதிகாலையில் இரண்டு ஜீப்புகளில் சென்றனர் ஆம்பூரிலிருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அவலோடைக் கொல்லைக்கு அருகில் காலை 3–45 மணியளவில் வரும்பொழுது சாலை பெரும் பாறைக் கற்களால் தடை செய்யப்பட்டிருந்ததால் ஜீப்புகள் நிறுத்தப்பட்டன. உடனே தீவிரவாதிகள் காவல் படையினரை நோக்கிச் சுட்டனர். வெடிகுண்டுகளையும் வீசினர். காவல் துறையினர் தற்காப்புக்காகத் தீவிரவாதிகள் மீது சுட்டனர். அதில் மூன்று தீவிரவாதிகளின் தலைவர்கள் கொல்லப்பட்டனர். காவல் துறையினரில் 2 உதவி ஆய்வாளர்கள், 7 காவலர்கள் ஆகியோர் காயமுற்றனர். வெளிநாட்டுக் கைத்துப்பாக்கி ஒன்று உட்பட ஐந்து துப்பாக்கிகளும் துண்டுப் பிரசுரங்கங்கள் அடங்கிய ஒரு பையும் தீவிரவாதிக்ளிடமிருந்து கைப்பற்றப்பட்டன. திருப்பத்தூர் உதவி ஆட்சியர், காவல் நிலை ஆணை எண். 145ன் கீழ் விசாரணை செய்தார். தற்காப்பிற்காக காவல் துறையினர் சுட நேர்ந்தது என்ற அவரது அறிக்கையை அரசு ஏற்றுக்கொண்டது.

46. 1981-ஆம் ஆண்டில் வட ஆற்காடு மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் காவல்துறையினர் மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைகளினால் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் கணிசமான அளவிற்குக் குறைந்துள்ளன. தலைமறைவாக உள்ள மற்ற தீவிரவாதிகளைத் தேடும் பணி தொடர்கிறது.

## விவசாயிகளைப் பற்றிய நிலைமை.

47. பொதுவாக விவசாயிகளின் பொருளாதார நிலையை ஒட்டி சில சலுகைகள் அளிக்க வேண்டுமென விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கைகளை அரசுக்கு வைத்தனர். அவற்றைப் பரிசீலனை செய்து பல கோரிக்கைகள் மீது அரசு சாதகமான ஆணை பிறப்பித்தது. சென்ற ஆண்டை நோக்குமிடத்து இவ்வாண்டில் விவசாயிகள் சங்கப் போராட்டங்கள் கணிசமாக குறைந்துள்ளது. மேலும் விவசாயிகளின் பிரச்சினைகளை நேரில் கண்டறிந்து அவற்றின்மீது அரசுக்கு அவ்வப்போது பரிந்துரைகளை அளிக்க பல்வேறு விவசாய சங்கங்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட விவசாயிகள் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு செயல் பட்டு வருகிறது. இவ்வாறு விவசாயிகளின் நலனுக்காக அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. இருப்பினும் விவசாய விளைபொருள் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டியும், மின் கட்டண வசூலை எதிர்த்தும் ஆங்காங்கே சில போராட்டங்கள் நடந்தன. சட்டம் ஒழுங்கு பொது அமைதியைக் காக்க காவல் துறையினர் இப்போராட்டங்களின் போது தலையிட வேண்டியிருந்தது.



48. தென்னாற்காடு மாவட்டம் சின்னக் கண்ணாடி கிராமத்தில் 2–6–1981 அன்று வருவாய்த்துறை அதிகாரிகள் நிலவரி வசூலிக்கும் பொழுது தமிழக விவசாய சங்க உறுப்பினர்கள் என்று சொல்லப்படும் ஒரு பகுதியினர் சட்ட விரோதமாகக் கூடி இரண்டு வருவாய்த் துறை அதிகாரிகளைத் தாக்கின. ஒரு ஜீப்பினுடைய டயர்களில் காற்றைப் பிடுங்கி விடவும் முற்பட்டனர். இது பற்றிய வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

49. மதுரை மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் தமிழக விவசாய சங்கத்தினர் உள்ளூர் கிளைக் கட்டிடம் ஒன்றை அனுமதியின்றி நெடுஞ்சாலை புறம்போக்கு நிலத்தில் கட்டத் துவங்கினர். ஒட்டன்சத்திரம் நகர பஞ்சாயத்து அதிகாரிகள் பழனியிலுள்ள மாவட்ட முன்சீப் நீதி மன்றத்தை அணுகி, அனுமதி இல்லாமல் கட்டடம் கட்டப்படுவதை நிறுத்த தடுப்பு ஆணை கோரினர். 1979-ல் தடுப்பாணை வழங்கப்பட்டது. இருந்தும் தமிழக விவசாய சங்கத்தினர் கட்டிடத்தைக் கட்டி முடித்தனர். இந்த ஆக்கிரமிப்பு போக்குவரத்துக்கு இடையூராக இருந்ததால் இது அகற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டது. 3–6–81 அன்று இந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. அதே நாளில் 50 நபர்கள் ஒட்டன்சத்திரம் இடையன் கோட்டை சாலையில் சென்ற பாண்டியன் போக்கு வரத்துக் கழகப் பேருந்தினை நிறுத்தி பயணிகளை இறங்கச் செய்து பேருந்துக்குத் தீ வைத்தனர் பேருந்து முழுவதுமாக எரிந்து போயிற்று. இச்சம்பவம் பற்றி வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.

50. 1–7–1981 அன்று மேற்கு செங்கல்பட்டு மாவட்டத்தில் அத்திமாஞ்சேரிப்பேட்டையில் 200 விவசாயிகள் மின் இணைப்பு துண்டிப்பு நடவடிக்கையைக் கண்டித்துச் சாலைகளில் தடுப்புக்களை ஏற்படுத்தினர். காவல் துறையினர் அந்த இடத்திற்கு விரைந்து சென்று சாலைத் தடுப்புகளை அகற்றினர்.

51. விவசாயிகள் தினம் அனுசரிப்பதைத் தொடர்ந்து சென்னையில் கண்ணப்பர் திடலிலிருந்து சீரணி அரங்கம் வரை தமிழ்நாடு விவசாயக் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் 5–7–1981 அன்று பேரணி நடத்தினர். மற்ற மாநிலங்களிலிருந்து விவசாயிகளின் பிரதிநிதிகள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இப்பேரணியில் கலந்து கொண்ட 118 விவசாயிகள் திருச்சிராப்பள்ளி இரயில்வே நிலையத்தில் டிக்கட் இல்லாமல் பயணம் செய்ததற்காக 7–7–1981 அன்று தடுத்து நிறுத்தப்பட்டனர். இதை எதிர்த்து அவர்கள் தண்டவாளங்களில் உட்கார்ந்து இரயில்கள் செல்லுவதற்கு இடையூறு ஏற்படுத்தினர். கைது செய்யப்பட்ட அனைவரும் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

52. பால் விலையை அதிகரிக்கக் கோரி தமிழக பால் உற்பத்தியாளர்கள் சங்கம் 1–9–1981 அன்று சேலத்தில் கூடி 5–9–1981 லிருந்து பால் விநியோகத்தை நிறுத்துவது என முடிவெடுத்தனர். இருந்தும், சேலம், பெரியார், கோவை ஆகிய மாவட்டங்களில் ஓரளவிற்கு பால் விநியோகம் பாதிக்கப்பட்டதைத் தவிர பால் வழங்கு சங்க அதிகாரிகள் பால் விநியோகம் செய்வதைக் காவல் துறையினரின் உதவியுடன் செய்ய முடிந்தது. அரசு பால் விலையை அதிகரித்ததாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து போராட்டம் 9–9–1981 லிருந்து கைவிடப்பட்டது.

53. கரும்பு விலையைக் குறைத்ததை எதிர்த்தும் அதன் கொள்முதல் விலையை அதிகரிக்க கோரியும் 132 விவசாயிகள் மேற்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் கருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை முன்பு 24–11–1981 அன்று மறியல் செய்ய முற்பட்டபோது குற்றப்பிரிவு 151-ன்கீழ் அவர்கள் காவலர்களால் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். 26–11–1981 அன்று பெண்ணாடம் அருணா சர்க்கரை ஆலையில் கரும்பு ஏற்றிக்கொண்டு நுழையும் டிராக்டர்களைத் தடுத்ததால் 51 விவசாயிகள் காவல் துறையினரால் இந்திய தண்டனைச் சட்ட விதி 147 ன் கீழும் திருத்தப்பட்ட குற்றச் சட்டம் 7(1) (ஏ)ன் கீழும் கைது செய்யப்பட்டனர்.

54. 1981-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 முதல் 3 வரையிலான தேதிகளில் கரும்பு விலையைக் குறைத்ததை எதிர்த்து தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மறியல் செய்ய முற்பட்ட கரும்பு வளர்ப்போர் சங்கத்தின் 144 உறுப்பினர்கள் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

55. கரும்பு கொள்முதல் விலையை அதிகரிக்கக் கோரி திரு சி. நாராயணசாமி நாயுடு தலைமையிலான சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள் சுமார் 150 பேர் 28–11–1981, 29–11–1981, 30–11–1981 மற்றும் 1–12–1981 அன்று தென் ஆர்க்காடு மாவட்டம் பெண்ணாடம் மற்றும் மூங்கில் துறைப்பட்டு ஆகிய இடங்களில் உள்ள சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு ஏற்றிச் சென்ற வாகனங்களை இடைமறித்ததால் கைது செய்யப்பட்டனர். 1981-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3-ஆம் நாள் அன்று தென் ஆர்க்காடு மாவட்ட கரும்பு பயிர் செய்வோர் சங்கம் கடலூரில் கூடி கைது செய்யப்பட்ட விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும் சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பை விநியோகம் செய்யலாம் என்றும் முடிவெடுத்தன.

தொழிலாளர் அமைதியின்மை.

56. 1981-ஆம் ஆண்டு தொழிலாளர்களிடையே பொதுவாக அமைதி நிலவியது. அவ்வப்போது சிற்சில இடங்களில் சிறு சம்பவங்கள் தனிபட்ட பிரச்சினைகளின்மீது நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. காவல் துறையினர் தலையிட வேண்டிய குறிப்பிடத்தக்க சில போராட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.





விசைத்தறிப் பணியாட்கள்

57. தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் அளித்த உறுதிமொழிக்கிணங்க கூலி உயர்வை நிறைவேற்றக் கோரி திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோயில் பகுதியில் உள்ள சுமார் 3,000 விசைத்தறித் தொழிலாளர்கள் 1981-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26-ஆம் தேதியில் வேலை நிறுத்தம் செய்தார்கள். சங்கரன்கோயிலில் 1981-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ஆம் தேதி அன்று வேலை நிறுத்தம் செய்தனர். விசைத்தறி உரிமையாளர்களின் வீடுகளையும், ஆலைகளையும் வேலை நிறுத்தம் செய்தவர்கள் தாக்கினர். ஒரு பிரிவினர் மோட்டார் சைக்கிள் ஒன்றிற்கும் 5 பேல்கள் நூலுக்கும் தீ வைத்தனர். ரூ. 500 பெறுமானமுள்ள வைக்கோல் போர்கள் கொளுத்தப்பட்டன. மதியம் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. 17 வழக்குகள் பல சட்டப் பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டன. ரூ. 1,80,000 மொத்த இழப்பு ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டது. ஒப்பந்தம் ஏற்பட்ட தும் 1981-ஆம் ஆண்டு மே மாதம் 16-ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

அசோக் லேலண்ட் தொழிலாளர்கள்

58. தொழிலாளர்களுக்குத் தரப்படும் காலை உணவின் அளவு குறைவாக உள்ளதாகக் கூறி தருமபுரி மாவட்டம் ஓசூர் அசோக் லேலண்ட் தொழிற்சாலையில் சி.ஐ.டி.யூ. பிரிவைச் சேர்ந்த ஒரு தொழிலாளர் 1981-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ஆம் தேதி அன்று உணவு விடுதிக் காண்ட்ராக்டரைத் தாக்கினார். இதனால் அசோக் லேலண்ட் சி.ஐ.டி.யு. தொழிலாளர் சங்கம் தொழிலாளர்களைப் பணிக்குச் செல்ல வேண்டாம் எனக் கூறியது. ஆலையின் உதவி நிர்வாகி தலையிட்டு சமரசம் செய்ய முற்பட்டபோது அவர் தாக்கப்பட்டார். இதன் தொடர்பாக இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. தொழிலாளர்கள் அன்று மாலையில் அலுவலகப் பணியாளர்களையும் கண்ணாடிச் சன்னல்களையும் தாக்கினர். தட்டச்சு இயந்திரத்தையும் பணியாளர்களின் ஸ்கூட்டர் மற்றும் மோட்டார் வண்டிகளையும் நாசம் செய்தனர். காவல் துறையினர் தலையிட்டு அமைதி ஏற்படுத்தினர். அதன்பிறகு 1981-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12-ஆம் தேதியிலிருந்து நிர்வாகம் கதவடைப்பு செய்தது. 1981-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் தேதி அன்று கதவடைப்பு நீக்கப்பட்டது. தொழிலாளர் சங்கத்தின் முடிவுப்படி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றனர்.

லட்சுமி தானியங்கும் விசைத் தொழிற்சாலை

59. 1981 ஜூலையிலிருந்து சம்பள உயர்வு மற்றும் சீருடை தருவது போன்ற சில கோரிக்கைகளை அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி தர்மபுரி மாவட்ட ஓசூரிலுள்ள

லட்சுமி தானியங்கும் விசைத்தறி தொழிலாளர்கள் வேலையில் நிதானப் போக்கு ( Go slow) முறையைக் கையாண்டனர். அவர்களுடைய ஒழுங்கீன நடத்தைக்காக நிர்வாகம் 12—7—1981 லிருந்து 14—7—1981-க்குள் 17 பேரைத் தற்காலிக வேலை நீக்கமும், 23 பேரை லே ஆப்பும்'' செய்தது. வேண்டுமென்றே பணியினைத் தொடங்கத் தாமதித்ததற்காக 70 தொழிலாளர்களுக்கு 8 நாட்கள் ஊதியத்தைப் பிடித்தம் செய்ததை எதிர்த்து தொழிலாளர்கள் 7—8—1981-லிருந்து பணி நிறுத்தம் செய்தனர். எவ்விதப் பிடித்தமுமின்றி முழு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று கோரி 13—8—1981 அன்று சுமார் 500 தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டு நிர்வாகத்தின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததுடன், திட்ட நிர்வாகி, தலைமைப் பொறியாளர், போர்மேன் ( Foreman ) உதவிப் பாதுகாவலர் மற்றும் சில பணியாளர்களையும் தாக்கினர். மேற்பார்வைப் பணியாளர்களின் ஒரு கார், சில ஸ்கூட்டர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கும் சேதம் விளைவித்தனர். எனவே 14—8—1981-லிருந்து நிர்வாகம் கதவடைப்பு செய்தது. 16—11—1981 அன்று ஏற்பட்ட உடன்படிக்கையின்படி கதவடைப்பு நீக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்கள்

60. ஊதிய உயர்வு கோரி 1981-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19-ஆம் நாளிலிருந்து வடக்கு மதுரை மாவட்டம் மாவடிஞ்சிக்காடு மற்றும் வண்ணாத்திப் பாறையைச் சேர்ந்த ஏலக்காய் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். தோட்டத்தை விட்டு வெளியேறவும் அவர்கள் மறுத்தனர். தோட்ட உரிமையாளரும் மற்றும் 150 பேர்களும் 1981-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16-ஆம் நாள் அன்று தோட்டத்திற்குச் சென்று தொழிலாளர்களை வெளியேறுமாறு ஆணையிட்டனர். ஆனால், அவர்கள் வெளியேற மறுத்ததால், தோட்ட உரிமையாளர் தனது துப்பாக்கியால் அவர்கள் மீது சுட்டார். அதில் ஆறு பேர் காய முற்றனர். இதன் தொடர்பாக கூடலூர் காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 147, 148, 323, 324, 307-ஆம் பிரிவு, இந்தியப் படைக்கலன் சட்டம் 25(1) பிரிவு ஆகியவற்றின் கீழ் குற்ற எண். 184/81-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட 5 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

உப்பளத் தொழிலாளர்கள்

61. ஊதிய உயர்வு கோரி திருநெல்வேலி மாவட்டம் தூத்துகுடியிலுள்ள சுமார் 15,000 உப்பளத் தொழிலாளர்கள் 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5-ஆம் நாள் அன்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்களிடையே ஏற்பட்ட கருத்து வேற்றுமையினால் அவர்களுக்குள் இரு பிரிவினருக்கிடையே 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 5-ஆம் நாள்





அன்று இரவு கைகலப்பு ஏற்பட்டது. இரு பிரிவினரும் கொடுத்த புகார்களின் மேல் இரண்டு வழக்குகளைப் பதிவு செய்து 28 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். இதை எதிர்த்து அடையாள வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் அனைவரும் தொடர்ந்து வேலைக்கு வரவில்லை. 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் அன்று வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

கைத்தறி நெசவாளர்கள்.

62. மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் சத்திரப்பட்டி, சங்கரபாண்டியபுரம் மற்றும் சமுசிகாபுரம் கிராமங்களில் சுமார் 12,000 நெசவுத் தொழிலாளர்கள் உள்ளனர். கைத்தறித் துணி தேக்கத்தினாலும் வேறு சில காரணங்களாலும் அதிருப்தியுற்ற சுமார் 5,000 நெசவுத் தொழிலாளர்கள் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் அன்று சத்திரப்பட்டியில் ஊர்வலம் நடத்தி, வங்கிகளையும் தபால் அலுவலகத்தையும் மூடும்படி கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர். ஒரு பகுதியினர் அங்குள்ள மேசை நாற்காலி முதலியவற்றுக்குச் சேதமேற்படுத்தினர். வங்கிகள், தபால் அலுவலகம் மற்றும் காவல் துறையினர் மீது கல்லெறிந்தனர். இதனால், மூன்று காவலர்கள் காய முற்றனர். தொழிலாளர்களின் வன்முறை அதிகரித்ததால் சிவகாசி வருவாய்க் கோட்ட அலுவலர் ஆணையின்படி காவல் துறையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்தனர். இதனால், பயன் ஏற்படாததால், வன்முறைக் கும்பலைக் கலைக்கக் காவல் துறையினர் தடியடி நடத்தினர். 18 பெண்கள் உட்பட 139 பேர் கைது செய்யப்பட்டனர். இதன் தொடர்பாக கீழ்ராஜகுலராமன் காவல் நிலையத்தில் குற்ற எண் 29/81 இல் வழக்கு ஒன்று இந்திய தண்டனைச் சட்டம் 147, 148, 336, 332, 448, 427, 307 பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

63. கட்டுப்பாடு விலையில் நூல் விநியோகம் செய்யக் கோரி 200 மாஸ்டர் நெசவாளர்கள் மதுரையிலுள்ள தங்கள் ஆலைகளை 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15 ஆம் நாள் அன்று மூடினர். இதை எதிர்த்து நெசவுத் தொழிலாளர்கள் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20 ஆம் நாள், 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 23 ஆம் நாள், 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24 ஆம் நாள், 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25 ஆம் நாள், 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26 ஆம் நாள் மற்றும் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27 ஆம் நாள் ஆகிய நாட்களில் மாஸ்டர் நெசவாளர்களின் வீடுகளின் முன்பாக ஊர்வலமும், மறியலும் செய்தனர். இதன் தொடர்பாக 270 கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். நியாய விலையில் நூல் விநியோகம் செய்யக் கோரி நெசவுத் தொழிலாளர்களுக்கும் மாஸ்டர் நெசவாளர்களும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஆட்டோமேட்டிக் தொலைபேசி நிலையம் மற்றும் மதுரையிலுள்ள துணைப் பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றின் முன்பு

1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25, 26 மற்றும் 27 ஆம் தேதிகளில் மறியல் செய்ய முயற்சித்தனர். இதன் தொடர்பாக சுமார் 620 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் கட்டுப்பாடு விலையில் நூல் விநியோகம் செய்வது பற்றி ஏற்பட்ட உடன்படிக்கையின்படி மாஸ்டர் நெசவாளர்கள் தங்களுடைய ஆலைகளை 1981 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாள் அன்று திறந்தனர். கைதாகிய அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

கட்டிடத் தொழிலாளர்கள்.

64. தமிழ்நாடு கட்டிடம் கட்டும் தொழிலாளர்களின் மத்திய சங்கத்தினர், இறந்து போகும் ஊழியர்களுக்கு ரூபாய் 10,000 வழங்குமாறும், சிமெண்ட் விலைக் கட்டுப்பாடு சட்டத்தை நீக்கக் கோரியும் 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ஊர்வலம் நடத்தியும், மறியல் செய்தும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர். அமைதிக்குப் பங்கம் ஏற்பட்ட நேரங்களில் காவல் துறையினர் தலையிட்டனர்.

மாணவர்கள்.

65. கோவை பெரியநாயக்கன் பாளையம், திரு. இராம கிருஷ்ண வித்யாலயா விவசாயப் பள்ளி மாணவர்கள், இராம கிருஷ்ண வித்யாலயா நடத்தும் பாலிடெக்னிக், கலைக் கல்லூரி மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் உதவியுடன், '' செய்முறை தேர்வினை '' நீக்குமாறு கோரிப் போராட்டம் நடத்தினர். அவர்கள் பள்ளிக்குச் சொந்தமான 3 கார்களையும், ஸ்டேஷன் வேகன் ஒன்றையும் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3 ஆம் நாள் அன்று நாசம் செய்தனர். வித்தியாலயத்தின் ஓய்வு விடுதியையும் அவர்கள் நாசப்படுத்தினர். சேதம் சுமார் ரூ. 2 இலட்சம் என மதிப்பிடப்பட்டது. இதன் தொடர்பாக பெரிய நாயக்கன் பாளையம் காவல் துறையினர் மாணவர்கள் மீது வழக்கு ஒன்றைப் பதிவு செய்தனர். இச்சம்பவத்தின் விளைவாக 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3 ஆம் நாள் முதல் விவசாயப்பள்ளி மூடப்பட்டு 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாள் அன்று மீண்டும் திறக்கப்பட்டது.

66. சென்னை, சட்டக் கல்லூரி மாணவர்கள் மீது காவல் துறையினர் எடுத்த நடவடிக்கையை எதிர்த்து கோவை சட்டக் கல்லூரியைச் சேர்ந்த ஒரு பிரிவு மாணவர்கள் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7 ஆம் நாள் அன்று வகுப்புக்குப் போகாமல் கல்லூரிக்கு முன்னால் நின்று வாகனப் போக்குவரத்தைத் தடுத்தனர். இதன் தொடர்பாக 2 வழக்குகள் இந்திய தண்டனைச் சட்ட விதிகள் 143, 341-ன் படி பதிவு செய்யப்பட்டு 60 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 11 ஆம் நாளிலிருந்து கல்லூரி திறக்கப்பட்டு மாணவர்கள் வகுப்பிற்கு மீண்டும் சென்றனர்.



67. சென்னை வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கார் அரசு கலைக் கல்லூரியைச் சேர்ந்த 94 மாணவர்கள் தங்களுடைய கல்லூரிக்கு சுற்றுபுறச் சுவர் எழுப்புமாறும், சில வசதிகளைச் செய்து தருமாறும் கோரி 1981ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2ஆம் நாளன்று தலைமைச் செயலகத்திற்கு, தடைச் சட்டத்தை மீறி ஊர்வலமாகச் சென்றனர். மாணவர்கள் கைது செய்யப்பட்டுப் பிறகு பிணையத்தின் மீது, விடுதலை செய்யப்பட்டனர்: 1981ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 3ஆம் நாளன்று இதே காரணத்திற்காக 25 மாணவர்கள் கல்லூரி முன்பாக தொடர் உண்ணாவிரதம் இருந்தனர். சுமார் 50 மாணவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை கல்லூரிக் கல்வி இயக்குநரிடம் தெரிவிக்க ஊர்வலமாகச் சென்றனர். அங்கு மாணவர்கள் இயக்குநர் அலுவலகத்திற்குள் நுழைந்து கண்ணாடிகளையும், நாற்காலிகளையும், பூக்குடங்களையும் சேதப்படுத்தினர். தகவல் கிடைத்து கலவரம் நடந்த இடத்திற்குக் காவல் துறையினர் விரைந்து சென்று 11 மாணவர்களைக் கைது செய்தனர். நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் 142/81 எண்ணில் இந்திய தண்டனைச் சட்ட விதிகள், 147. 448, 242, 427-இன் கீழ் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட மாணவர்கள் பிறகு பிணையத்தின் மீது விடுவிக்கப்பட்டனர்.

68. தெற்கு மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம், தியாகராஜர் பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த இரு பிரிவு மாணவர்களிடையே விரோதம் காரணமாக 1981 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் நாளன்று கலவரம் ஒன்று ஏற்பட்டதில் 5 மாணவர்கள் காயமுற்றனர். அவர்கள் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் இருவர் இறந்து போயினர். இரு பிரிவினரின் புகார்களின் மேல் திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் இதன் தொடர்பாக இந்திய தண்டனைச் சட்ட விதிகள் பிரிவுகள் 147, 148, 323, 302-இன் கீழ் குற்ற எண் 65/81-லும், பிரிவுகள் 147, 148, 324-இன் கீழ் குற்ற எண் 66/81-லும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

69. சென்னை பச்சையப்பன் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 500 மாணவர்கள் 1981ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14ஆம் நாளன்று கல்லூரி முன்பு மாணவர் யூனியன் தேர்தல் பிரசாரம் செய்வது தொடர்பாக ஈ. வெ. ரா. பெரியார் நெடுஞ்சாலையில் கூடிப் போக்குவரத்திற்கு இடையூறு செய்தனர். போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காமல் கல்லூரிக்குட்புறம் பிரசாரம் செய்யுமாறு காவல் துறையினர் கூறியபோது மாணவர்கள் கற்களையும், செங்கல்லையும் அவர்கள் மீது வீசி, 9 காவலர்களுக்குக் காயங்களையும், 3 பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கும், இரண்டு காவல்துறை வாகனங்களுக்கும் சேதத்தையும் விளைவித்தனர். மாணவர்களின் வன்முறை அதிகமானதால் நிலைமையைக் கட்டுப்படுத்த காவல் துறையினர்

கண்ணீர் புகைக் குண்டு வெடித்தனர். இதன் தொடர்பாக சென்னை மத்திய குற்றப் பிரிவு காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று குற்ற எண் 414/81-இல் இந்திய தண்டனைச் சட்ட விதிகள் பிரிவுகள் 147, 148, 336, 353, 332, 427 மற்றும் 149-இன் கீழ் பதிவு செய்யப்பட்டது. கல்லூரி முதல்வர் பச்சையப்பன் கல்லூரியைக் காலவரம்பின்றி மூடப்பட்டதாக அறிவித்தார். பிறகு கல்லூரி 1981ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22ஆம் நாளன்று மீண்டும் திறக்கப்பட்டது.

70. சலுகைக் கட்டணப் பேருந்து பயணச் சீட்டுகளை மாணவர்களுக்கு வழங்கக் கோரி மாணவர்களும், பொதுமக்களும் கலந்த 300 பேர் கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி அருகே 1981ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 18ஆம் நாளன்று போக்குவரத்தைத் தடை செய்தனர். காவல் துறையினர் அவர்களைக் கலைந்து செல்லுமாறு கூறியது பயன்தராததால் காவல் துறையினர் லேசான பிரம்படி செய்து அவர்களைக் கலைத்தனர். இந்தக் குழப்பத்தில் 24 மாணவர்கள் காயமுற்றனர். ஆரல்வாய்மொழி காவல் நிலையத்தில் குற்ற எண் 118/81-இல் இதன் தொடர்பாக இந்திய தண்டனைச் சட்ட விதிகள் பிரிவு 147, 341-இன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

71. 1981ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10ஆம் நாளன்று சென்னை நந்தனம் கலைக் கல்லூரியைச் சேர்ந்த சில மாணவர்கள் பயணச் சீட்டு இல்லாமல் பல்லவன் பேருந்தில் பயணம் செய்வதை பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து பணியாளர்கள் கண்டு பிடித்தனர். போக்குவரத்துப் பணியாளர்களுக்கும், மாணவர்களுக்குமிடையே இதன் விளைவாக ஏற்பட்ட கைகலப்பில் அந்த பேருந்து நடத்துனர் மாணவர்களால் தாக்கப்பட்டார். தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் இந்திய தண்டனைச் சட்ட விதிகள் பிரிவுகள் 147, 323-இன் கீழ் குற்ற எண் 1523/81-இல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இதை தொடர்ந்து கல்லூரியைச் சேர்ந்த சுமார் 300 மாணவர்கள் கல்லூரிக்கு வெளியே வந்து அந்த வழியே, போகும் 5 பல்லவன் பேருந்துகளைத் தாக்கிச் சேதப்படுத்தி இரண்டு காவலர்களுக்கு காயம் ஏற்படுத்தினர். மாணவர்கள் கலைந்து செல்ல மறுத்ததாலும், வன்முறையைத் தொடர்ந்ததாலும் காவல் துறையினர் அமைதியை ஏற்படுத்த கண்ணீர் வெடி குண்டுகளை வெடித்தனர். இதன் தொடர்பாக சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் குற்ற எண் 973/81 இல் இந்திய தண்டனைச் சட்ட விதிகள் பிரிவுகள் 147, 333, 426 மற்றும் 427இன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

72. 1981ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாளன்று 4 பச்சையப்பன் கல்லூரி மாணவர்களைச் சேர்த்து 14 பேர்கள் பல்லவன் பேருந்தின் படியில் நின்று பயணம் செய்ததாகப் பிடிக்கப்பட்டனர். அவர்கள் எழும்பூர், ஏழாவது பெருநகர் நீதிபதி முன்பு நிறுத்தப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டு விடப்பட்டனர். இதன் காரணமாக பச்சையப்பன் கல்லூரியைச்





சேர்ந்த 200 மாணவர்கள் பல்லவன் பேருந்து ஒன்றை ஈ. வெ.ரா. பெரியார் நெடுஞ்சாலையில் நிறுத்தி அதை நாசப்படுத்தியதல்லாமல் அதற்குத் தீ வைக்கவும் முற்பட்டனர். பெட்ரோல் கிடங்கு ஒன்றின் மீதும், நிறுத்தப்பட்டிருந்த ஒரு சுற்றுலா டாக்சி மீதும் கற்களை வீசி அவற்றை நாசப்படுத்தினர். காவல் துறையினருக்குச் சொந்தமான மூன்று மிதி வண்டிகளும் நாசப்படுத்தப்பட்டன. கலவரம் நடந்த இடத்திற்குக் காவல் துறையினர் விரைந்தனர். முறையாக எச்சரித்த பின்னர் காவல் துறையினர் கூட்டத்தைக் கலைக்கக் கண்ணீர் புகைக் குண்டுகளை வெடித்தனர். வழக்கு ஒன்றும் குற்ற எண் 550/81-இல் சென்னை மத்திய குற்றப் பிரிவு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. 45 மாணவர்கள் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டு எழும்பூர் கூடுதல் தலைமைப் பெருநகர் நீதிபதி முன்பு நிறுத்தப்பட்டனர். அவர்கள் பின்பு பிணையத்தின் மீது விடுதலை செய்யப்பட்டனர்.

73. அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் 80 சத வீத பயிற்சி பிரிவினை உயர் செகண்டரிப் பள்ளி பொறியியல் மாணவர்களுக்கென ரிசர்வ் செய்ததை எதிர்த்து திருவெறும்பூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) தொழிற் பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த சுமார் 400 மாணவர்கள் 1981-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21ஆம் நாளன்று ஊர்வலமாகச் சென்றனர். திருச்சிராப்பள்ளி ரயில் நிலையச் சந்திப்பை அடைந்ததும் மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டு இரயில்வே சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தினர். இதைக் கண்டு ஆத்திரம் அடைந்த ரெயில்வே ஊழியர்கள் மாணவர்களைத் தாக்கவே மாணவர்கள் திரும்பிக் கற்களை வீசினர். பிறகு அவர்கள் பேருந்துகளின் மீது கற்களை வீசிச் சேதம் விளைவித்தனர். எச்சரிக்கையை மீறி வன்முறையில் ஈடுபட்டதால் மாணவர்களைக் காவல் துறையினர் துரத்தி விரட்டினர். இச்சம்பவத்தில் 17 மாணவர்கள் காயமுற்றனர். திருச்சிராப்பள்ளி கண்டோன்மெண்ட் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்றும் குற்ற எண் 2367/81-ஆல் இந்திய தண்டனைச் சட்ட விதிகள் பிரிவுகள் 147, 341, 336 மற்றும் 427இன்கீழ் பதிவு செய்யப்பட்டு 25 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 17 மாணவர்கள் காயமடைந்தவர்கள்.

## ஆசிரியர்கள்.

74. மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக வாழ்க்கைத் தர படி, ரூ. 10,000 பணி ஓய்வு பெறும்போது வழங்குதல், போனஸ் வழங்குதல், மலிவு விலையில் அத்தியாவசிய பொருள்களை வழங்குதல் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி 4–5–1981 முதல் 15–5–1981 வரை தமிழக ஆரம்பப் பள்ளிக் கழகத்தின் (Tamil Nadu Elementary School Federation.) உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் மறியல் செய்தனர். சென்னையில் ஊர்வலங்களை நடத்தி தடைச்

சட்டத்தை மீறி தலைமைச் செயலகத்திற்கு செல்ல முயன்றனர். 3,506 உறுப்பினர்கள் மாநில முழுவதிலும் கைது செய்யப்பட்டனர்.

75. அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி நிர்வாகத்தின் பழிவாங்கும் நோக்கத்தை எதிர்த்தும் கல்லூரியை அரசே ஏற்று நடத்தக்கோரியும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் கல்லூரியில் 4–8–1981-லிருந்து 8–8–1981 வரையிலும், கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 10–8–1981-லிருந்து 14–8–1981 வரையிலும் மறியல் செய்தனர். இதன் காரணமாக 133 உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

துப்பாக்கிச் சூடு.

76. 1–1–1981 முதல் 31–12–1981 வரை காவலர்கள் 23 முறை துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஆறு நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள் ''இனக் கலவரங்கள்'' மற்றும் ''தீவிரவாதிகள் நடவடிக்கைகள்'' என்ற பத்திகளில் தரப்பட்டுள்ளன. எஞ்சிய 17 நிகழ்வுகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

77. மேற்கு செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருக்கழுங்குன்றம் காவல் நிலைய எல்லைக்குள் 10–3–1981 அன்று நடந்த ''இடைவிடாது சைக்கிள் ஓட்டும்'' நிகழ்ச்சியில் ஆதி திராவிடர்களுக்கும், ஆதிதிராவிடரல்லாதாருக்கும் இடையே ஏற்பட்ட சிறிய சச்சரவு, பின்னர் பெரும் மோதலாக மாறியது. 12–3–1981 அன்று முத்து நல்லான் குப்பத்தைச் சார்ந்த (நாயக்கர் வகுப்பைச் சார்ந்த) சுமார் 500 நபர்கள் பயங்கர ஆயுதங்களுடன் சாலையின் குறுக்கே மாட்டு வண்டிகளையும் பெரிய மரக்கட்டைகளையும் கிடத்திப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதை அறிந்து திருக்கழுக்குன்றம் காவல் நிலைய உதவி ஆய்வாளர், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையுடன் லாரியில் சென்ற போது கூட்டத்தினர், லாரியைச் சூழ்ந்து கொண்டு கற்களால் தாக்கினர். கூட்டத்தினர் எச்சரிக்கையைக் கேளாததால் அவர்களை அச்சுறுத்தக் காவலர் வானத்தை நோக்கி ஒரு முறை சுட்டனர். துப்பாக்கி வேட்டைக் கேட்டுக் கூட்டத்தினர் கலைந்து சென்றதும், சாலைத் தடைகளை நீக்கிவிட்டுக் காவலர் ஊர்தியை காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர். யாருக்கும் காயம் இல்லை.

78. 18–3–1981 அன்று திருச்சினாங்குப்பம் காசிமேடு மற்றும் இராயபுரத்தைச் சார்ந்த கட்டுமர மீனவர்களிடையே தாழங்குப்பம் கடற்கரை அருகே (கிழக்கு செங்கற்பட்டு மாவட்டம் எல்லை) கோஷ்டி மோதல் ஏற்பட்டது. இதன் தொடர்பாக எண்ணூர் காவல் நிலையத்தில் 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. தாழங்குப்பத்தைச் சேர்ந்த 9 மீனவர்களும் திருச்சினாங்குப்பத்தைச் சேர்ந்த 18 மீனவர்களும் கைது



செய்யப்பட்டனர். அன்று தாழங்குப்பத்தைச் சேர்ந்த சில மீனவர்கள் அடித்துக் கொல்லப்பட்டதாக வதந்தி பரப்பப்பட்டது இதைக் கேட்டு தாழங்குப்பம், மற்றும் மூன்று குப்பங்களைச் சேர்ந்த சுமார் 1,000 மீனவர்கள் ஒன்று கூடித் திருச்சினாங்குப்பத்தில் உள்ள மீனவர்களைத் தாக்கச் சென்றனர். இதற்கிடையில், திருச்சினாங்குப்பத்தைச் சேர்ந்த மீனவர்களும் ஒன்று சேர்ந்தனர். காவலர்கள் அவர்களைக் கலைந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டபோது, தாழங்குப்பத்தையும் இதர குப்பங்களையும் சேர்ந்த மீனவர்கள் கலைய மறுத்து போலீசார் மீது கற்களை வீசினர். அதன் பிறகு கண்ணீர் புகைக்குண்டு வீசியும் பலனளிக்காததால் கூட்டத்தைக் கலைக்க காவலர் சுட்டனர். கூட்டத்தில் யாருக்கும் காயம் இல்லை. எண்ணூர் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர், இந்நிகழ்ச்சியில் காயமுற்றார். இச்சம்பவம் குறித்து மாவட்ட ஆட்சியரின் விசாரணை அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

79. 27–3–1981 அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் மருதூர் அணையில் ஒரு காவற்படை, குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு குற்றவாளியைப் பிடிப்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தபோது, சில நபர்கள் கையில் ஆயுதங்களுடன் அக்காவலர்களைத் தாக்க முயற்சித்தனர். அதில் ஒருவர் நாட்டு வெடிகுண்டை வீசினார். ஆபத்து ஏற்படாலாம் என்று எண்ணி திருநெல்வேலி தாலுக்கா காவல் நிலையத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் 6 முறை துப்பாக்கியால் சுட்டார். யாரும் காயமடையவில்லை. அந்த இடத்திலிருந்து, கைவிடப்பட்ட மூன்று அரிவாள்களையும் ஒரு நாட்டு வெடி குண்டையும் காவலர்கள் கைப்பற்றினர்.

80. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சீவலப்பேரி கிராமத்தைச் சேர்ந்த பாண்டி என்பவர் கொலைக் குற்றத்துக்காக திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் தண்டனை அனுபவித்து வந்தார். அவர் 1973-ல் சிறையிலிருந்து தப்பி விட்டார். அதன் பின் பல திருட்டுகளில் ஈடுபட்டார். கொடைக்கானல் பக்கத்தில் (மதுரை வடக்கு மாவட்டம்) உள்ள பூம்பாறை என்ற இடத்தில் பாண்டி ஒளிந்திருப்பதாக நம்பகமான தகவல் கிடைத்ததும் அவரைப் பிடிக்க 6–4–1981 அன்று பிரத்தியேகக் காவலர் குழு ஒன்று திருநெல்வேலியிலிருந்து சென்றது. காவலர்கள் மீது பாண்டி இரண்டு நாட்டு வெடி குண்டுகளை வீசினார். இதனால் ஏற்பட இருந்த ஆபத்தினை உணர்ந்த சேமப்படை உதவி ஆய்வாளர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டார். ஆனால் குற்றவாளி தப்பிவிட்டார். அந்த இடத்தை முழுவதும் துருவித் தேடி 7–4–1981 அன்று பாண்டியைப் பிடித்துத் திருநெல்வேலிக்குக் கொண்டுவந்துவிட்டனர். குற்றவாளி சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது பாளையங்கோட்டை மைதானத்தின் அருகில் காவலர்களின் பிடியிலிருந்து தப்பித்துச் சென்று விட்டார் 9–4–1981 அன்று வல்லநாடு குன்றுகளின் கிழக்குப் பகுதியில்

குற்றவாளியைக் கண்டுபிடித்து அவரைப் பிடிக்கும் முயற்சியில் காவலர்கள் ஈடுபட்டபோது அவர்களை நோக்கி பாண்டி 2 வெடி குண்டுகளை வீசி, மீண்டும் தப்பிக்க முயன்றார். காவலர்கள் அவரைச் சுற்றி வளைத்த போது ஒரு காவலரை அரிவாளால் வெட்டினார் உதவி ஆய்வாளர் தன்னுடைய துப்பாக்கியால் இருமுறை குற்றவாளியை நோக்கிச் சுட்டார். காயமுற்ற குற்றவாளி பாண்டியை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்குக் கொண்டு வந்ததும் அங்கு அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டார். இச்சம்பவம் குறித்து தூத்துக்குடி கோட்டாட்சித் தலைவர் நடத்திய விசாரணை அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

81. தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திட்டக்குடி காவல் நிலைய ஆய்வாளர் காயமுற்ற ஒரு நபரை சிகிச்சைக்காக பெண்ணாடம் வரையில் பேருந்தில் அழைத்துச் செல்லுமாறு நாராயணன் பேருந்து நிறுவனத்தைச் சேர்ந்த பேருந்து ஓட்டுநரை 22–4–1981 அன்று கேட்டுக் கொண்டார். அதற்கு ஓட்டுநர் மறுத்த போது , ஓட்டுநரை மறுநாள் வரை பேருந்து ஓட்ட வேண்டாமென்றும், தக்க உரிமத்தைக் காண்பித்த பின் வண்டியை எடுக்கலாம் என்றும் உத்தரவிட்டார். ஆய்வாளரின் இப் போக்கை எதிர்த்து மோட்டார் பணியாளர் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களும், இதர ஓட்டுனர்களும், நடத்துனர்களும் விருத்தாசலத்தில் கூடி 23–4–1981 அன்று வேலை நிறுத்தம் செய்தனர் எல்லா பேருந்துகளையும் அவர்கள் தடுத்து நிறுத்தினர்.

கலவரம் ஏற்படலாம் என்று கருதிய விருத்தாசல கோட்டாட்சித் தலைவர் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் நாளிலிருந்து 7 நாட்களுக்கு குற்றவியல் சட்டம் 144 பிரிவுப்படி தடையுத்தரவு பிறப்பித்தார். ஆனாலும் கலவரம் செய்வோர் வாகனப் போக்குவரத்தைத் தடுத்தனர். காவலர் அவ்விடத்திற்கு விரைந்து சென்றபோது தடையை மீறி சுமார் 1,000 நபர்கள் குழுமியிருந்த காவல் துறையினர் மீது கற்களையும், சோடாபுட்டிகளையும் வீசினர். அவர்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகளைக் காவலர்கள் வீசினர். இது பலனளிக்காதது கண்டு தடியடிப் பிரயோகம் செய்தனர். இதனால் ஆத்திரமுற்ற கூட்டத்தினர் காவலர்கள் மீது கற்களை எறிந்து கொண்டு நெருங்கி வந்தனர். கூட்டத்தினர் திருவள்ளுவர் போக்குவரத்து கழகப் பேருந்து ஒன்றையும் தீயிட்டுக் கொளுத்தினர். இச்சம்பவத்தில் 8 காவலர்கள் காயமுற்றனர். மேலும் ஏற்படக்கூடிய கலவரத்தைத தவிர்க்க எண்ணி காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் யாருக்கும் காயம் இல்லை. இச் சம்பவம் குறித்து தென்னாற்காடு மாவட்ட கூடுதல் மாவட்ட ஆட்சியாளரின் விசாரணை அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.



82. மேற்கு தஞ்சை மாவட்டத்திலுள்ள, கீழத்திருப்பன்துருத்தியைச் சேர்ந்த ஒரு ஜாதி இந்து இளைஞர் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் நாள் அன்று மேலத்திருப்பன்துருத்தியைச் சேர்ந்த ஆதிதிராவிடர்களின் தெருவில் வேயப்பட்டிருந்த திருமணப் பந்தலில் சைக்கிளில் நுழைந்து திருமணத்திற்கு இடையூறு செய்ததால் அவர் அடிக்கப்பட்டார். இதன் பின் ஜாதி இந்துக்கள் ஆதிதிராவிடர்களை கல்லால் அடித்து அவர்களது வைக்கோல் போருக்கும் மூன்று வீடுகளுக்கும் தீயிட்டனர். 1981 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் தேதி அன்று திருவையாறு வட்டாட்சித் தலைவரின் தலைமையில் அமைதிக்குழுக்கூட்டம் நடத்தப்பட்ட போது, மேலத்திருப்பன்துருத்தி கிராமத்தில் இன்னும் மூன்று ஆதிதிராவிடர்களின் குடிசைகளுக்கு சாதி இந்துக்கள் தீவைத்து காவலர்களின் மீது சரமாரியாகக் கற்களை எறிந்தனர். காவலர் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகளின் முயற்சிகள் பலனளிக்காது போகவே, இரண்டு கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. தடியடியும் நடந்தது. ஆனாலும் கலவரம் குறையும் அறிகுறி தென்படவில்லை. எனவே வட்டாட்சியரின் உத்திரவின்பேரில் காவலர்கள் ஊனமக்காயம் ஏற்படுத்தும் தோட்டாக்களைக் கொண்டு 2 முறை சுட்டனர். நான்குபேர் லேசாகக் காயமுற்றனர். இதுகுறித்து மாஜிஸ்டிரேட் நீதி விசாரணை செய்வதை உயர் நீதிமன்றம் தடை செய்துள்ளது.

83. குரோம்பேட்டையில் பல நபர்களை அச்சுறுத்தியும் வன்மையாகத் தாக்கியும் தலைமறைவாயிருந்த இரு ரவுடிகளை ஓட்டியாம்பாக்கக் காட்டுப் பகுதியில் (கிழக்கு செங்கற்பட்டு மாவட்டம்) 1981 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் நாள் அன்று காவலர்கள் கண்டுபிடித்தனர். அவர்களைத் துரத்திச் சென்ற காவலர்களை இரு ரவுடிகளும் கொடிய ஆயுதங்களால் தாக்கினர். ஒரு துணை ஆய்வாளரும், இரண்டு காவலர்களும் இதனால் காயமுற்றனர். தற்காப்புக்காக காவலர்கள் கைத்துப்பாக்கியால் சுட்டபோது அவ்விரண்டு சமூக விரோதிகளும் படுகாயமுற்றனர். அவர்களில் ஒருவர் மருத்துவமனையில் இறந்தார். சைதை உதவி ஆட்சியாளரால், காவல்நிலை ஆணை 145-ன் கீழ் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

84. மேற்கு தஞ்சை நாச்சியார்கோயிலிலுள்ள ஆகாச மாரியம்மன் கோயிலில் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 ஆம் நாள் அன்று ஆண்டுத் திருவிழா நடந்தபொழுது தீப் பிடித்துக் கொண்டது. அத் தீயினால் கோயிலில் வேயப்பட்டிருந்த பந்தல் எரிந்து அருகாமையிலிருந்த குடிசைகளுக்கு தீ பரவியது. இதனால் ஒரு பெண்மணி உயிரிழக்க நேரிட்டது. கோயில் பூசாரி உட்பட மூன்று பேர் தீக்காயம் அடைந்தனர். சுமார் 50 குடிசைகள் எரிந்துபோயின. ஒரு எருமை மாடு, இரண்டு கன்றுக்குட்டிகள் மற்றும் இரண்டு ஆடுகள் இத்தீயில் மரித்தன. இதனால் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் நாசமடைந்தன. இதற்கிடையில், பெருங் கூட்டமொன்று, கோயிலுள் நுழைய முயற்சி செய்தது.

இதைத் தடுத்த மூன்று காவலர்கள் அக்கூட்டத்தினரால் தாக்கப்பட்டனர். கோயிலினுள், விலை மதிப்பு மிக்க ஆபரணங்கள் இருந்தமையால் ஒரு உதவி ஆய்வாளர், கூட்டத்தைக் கலைப்பதற்காக வானத்தை நோக்கிச் சுட்டார். அதற்கப்பால், கூட்டத்தினர், அவ்விடத்தை விட்டு அகன்றனர். இதனால் யாருக்கும் காயமில்லை. இதுபற்றி மாஜிஸ்டிரேட் நீதி விசாரணை தேவையில்லை என்ற தஞ்சை மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரையை அரசு ஏற்றுக் கொண்டது.

85. தென் ஆர்க்காடு மாவட்டம் தேவனாம்பட்டினத்தைச் சேர்ந்த இரு பிரிவு மீனவர்களுக்கிடையே நெடுநாளைய பகையின் காரணமாக 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28 ஆம் நாள் அன்று ஒரு மோதல் ஏற்பட்டது. இதைத் தடுக்க முயன்ற காவல்ரைச் சில விஷமிகள் பயங்கர ஆயுதங்களைக் கொண்டு தாக்கியதால் 6 காவலர்கள் காயமடைந்தனர். காவலரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்பட்டபோது, துப்பாக்கிச் சூடு நடத்த நேரிட்டது. இதனால் ஒருவர் உயிர் இழந்தார். இச்சம்பவம் குறித்து சிதம்பரம் உதவி ஆட்சியாளரின் விசாரணை அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

86. தனியார் துறையைச் சேர்ந்த இரு பேருந்து ஓட்டுநர்கள், ஆத்தூர் அருகிலுள்ள சேலம்-இராசிபுரம் சாலையில் 1981 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாள் அன்று ஒருவருக்கொருவர் வழி விடாமல் தடங்கல் செய்தார்கள். இச்சண்டைக்குக் காரணமாயிருந்த ஓட்டுநரை இன்னொரு பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்த ஆய்வாளர் கண்டித்தார். தன்னை ஆய்வாளர் அடித்துவிட்டதாகப் புகார் செய்து, அந்த பேருந்தை இராசிபுரம் பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ள சாலையில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வண்ணம் நிறுத்திவிட்டார். வட்டாட்சியரும், காவல் துறையினரும் தலையிட்டு போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர். இதனால் பாதிக்கப்பட்ட ஓட்டுநரும் அவரது ஆதரவாளர்களும் சேர்ந்துகொண்டு காவலர் மீது கல் எறிந்து காயப்படுத்தினர். ஓர் உதவி ஆய்வாளரின் மோட்டார் சைக்கிளுக்கும், ஒரு பால் விற்பனைக் கூண்டுக்கும் போக்குவரத்துக் குடை ஒன்றுக்கும் தீ வைக்கப்பட்டது. பிறகு, அக் கூட்டத்தினர் இராசிபுரம் காவல்நிலையத்தைச் சூழ்ந்து கொண்டு தாக்கினர். தகுந்த எச்சரிக்கைக்குப் பிறகு, கூட்டத்தைக் கலைப்பதற்காக ஊமை காயம் ஏற்படுத்தும் குண்டினால் மூன்று முறை வானத்தை நோக்கி சுடப்பட்டது. இதனால் யாருக்கும் காயம் இல்லை. இது குறித்து நாமக்கல் கோட்டாட்சியாளரால் விசாரணை நடத்தப்படுகிறது.

87. சேலம் வெண்ணந்தூரில் உள்ள புறம்போக்கு நிலத்தின் ஒரு சிறு பகுதி குப்புசாமி என்பவரின் ஆதிக்கத்தில் இருந்தது. அந்நிலத்தில் உள்ள கிணற்றைப் பொது மக்கள் உபயோகித்து வந்தனர். தன்னுடைய நிலத்தில் உள்ள கிணற்றை



ஆழப்படுத்துவதை குப்புசாமி அனுமதிக்காததால், 1981 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26 ஆம் நாள் அன்று வெண்ணந்தூரைச் சேர்ந்த சுமார் 2,000 நபர்கள் குப்புசாமி வீட்டருகே கூடி அந்நிலத்திலிருந்து காலி செய்யுமாறு வற்புறுத்தினர். நிலைமை மோசமாகுமென எதிர்பார்த்து, காவல் துறையினரும், வருவாய்த்துறை அதிகாரிகளும் தலத்துக்கு விரைந்து கூட்டத்தினரைக் கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தினர். ஆனால் அங்கு கூடியிருந்த கிராம மக்கள் கொதிப்படைந்து அதிகாரிகள் மீது கற்களை எறிந்து ஐந்து காவல் துறை மற்றும் இரண்டு வருவாய்த்துறை அதிகாரிகளைக் காயப்படுத்தினர். தடியடிப் பிரயோகம் பலனளிக்காததால், காவல்துறையினர் கூட்டத்தைக் கலைக்க வானத்தை நோக்கிச் சுட்டனர். இதனால் யாருக்கும் காயம் இல்லை. இது பற்றி சேலம் மாவட்டக் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவரால் விசாரணை நடத்தப்படுகிறது.

88. மதுரை (தெற்கு) மாவட்டம் நத்தம் காவல் நிலைய எல்லைக்குள்ளிருக்கும் எடையப்பட்டி கிராமத்தில் பெருமாள் என்ற கைதிக்கு காவலாகச் சென்ற பாலுசாமி என்ற ஆயுத சேமக் காவலரை 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 16 ஆம் நாள் அன்று பெருமாள் அரிவாளால் வெட்டிக் கொன்றுவிட்டு 20 சுற்றுத் தோட்டாக்களுடன் கூடிய துப்பாக்கியுடன் தப்பிவிட்டார். தலைமறைவான கைதியைத் தேடிப்பிடிக்கத் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டன. காவல் படைக்கும் கைதிக்கும் அப்பாஸ்புரத்தில் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17 ஆம் நாளன்று நடைபெற்ற சண்டையில் கைதி சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் பற்றி மதுரை கோட்டாட்சித தலைவர் விசாரணை நடத்தினார். அவரது விசாரணை அறிக்கை அரசின் பரிசிலனையில் உள்ளது.

89. கிரிமினல் வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்ட ராஜ் மோகன் என்பவர் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாளன்று கைது செய்யப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குலசேகரப்பட்டினம் காவல்நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்தார். 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19 ஆம் நாளன்று ராஜ்மோகனின் சகோதரரும் மற்றும் 12 நபர்களும் ஆயுதங்களுடனும் நாட்டு வெடிகுண்டுகளுடனும் காவல் நிலையத்திற்குள் நுழைந்து காவலரைத் தாக்கிவிட்டு குற்றவாளியை விடுவித்துச் சென்றுவிட்டனர். காவல் நிலைய மதில் சுவருக்கு வெளியே நாட்டு வெடிகுண்டை வீசினர். பணியிலிருந்த தலைமைக் காவலர் தற்காப்பிற்காக துப்பாக்கியால் சுட்டபோது ராஜ்மோகன் இறந்துவிட்டார். திருநெல்வேலி மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியால் இது குறித்து விசாரணை நடத்தப்படுகிறது.

90. மேற்கு இராமநாதபுரம் மாவட்டம், போத்தையன் பட்டியைச் சேர்ந்த கொலைக் குற்றவாளி மாரிமுத்து என்பவரைக் கண்டுபிடிக்க சாத்தூரிலிருந்து 1981ஆம் ஆண்டு செப்டம்பர்

திங்கள் 1 ஆம் நாளன்று ஒரு காவலர் குழு செயல்பட்டது. அத்திப்பட்டிக்கும் மூத்தாரப்பட்டிக்கும் இடையே உள்ள பகுதியில் கொலையாளியைத் தேடும்போது, அவர் ஓர் உதவி ஆய்வாளரை திடீரென்று அரிவாளால் வெட்டிக் கொல்ல முயற்சித்தார். தற்காப்பிற்காக உதவி ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்டபோது, குற்றவாளி இறந்தார். சிவகாசி கோட்ட ஆட்சித்தலைவரால் இது குறித்து விசாரணை நடத்தப்படுகிறது.

91. 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22 ஆம் நாளன்று, சென்னை மத்திய சிறைச்சாலையில் இருந்து எழும்பூர் மாநில மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்துக்கு காவல் துறை லாரியில் 34 கைதிகளை அழைத்துச் சென்ற பொழுது, அவர்களில் சிலர் தாறுமாறாக நடந்து கொண்டனர். தற்காப்பு நடவடிக்கையாக காவலர்களில் ஒருவர் துப்பாக்கியால் ஒரு சுற்று சுட்ட பொழுது காவலர் எண் 2051 செல்லப்பன் என்பவரின் முதுகில் குண்டு பட்டு இறந்துவிட்டார். இது சம்பந்தமாக சென்னை மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளரால் விசாரணை நடத்தப்படுகிறது.

92. 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25 ஆம் நாளன்று கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்பாச்சேத்தி என்னும் கிராமத்தில் முன் விரோதம் காரணமாக ஆவாரங்காட்டைச் சார்ந்த முனியாண்டி சேர்வை, மற்றும் 200 நபர்கள், இராமலிங்கம் பிள்ளை என்பவரையும் மற்றவரையும் தாக்கினர். அதனால் திருப்பாச்சேத்தியைச் சேர்ந்த 11 பேர்கள் காயமடைந்தனர். அவ்விடத்திற்கு காவலர் விரைந்தபோது, முனியாண்டி சேர்வையும், மற்றவர்களும் அவர்கள் மீது கற்களை வீசினர். கூட்டத்தைக் கலைக்க காவலர்கள் தடியடிப்பிரயோகம் செய்தும் பலனளிக்காமல் போகவே, துப்பாக்கியால் சுட்டனர். ஒருவருக்கும் காயமில்லை. சிவகங்கை உதவி ஆட்சியாளர் அவர்களால் விசாரணை நடத்தப்படுகிறது.

93. திரு. பிச்சையத் தேவரை திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி காவல் நிலையத்தில் காவலில் வைத்திருந்தபோது காவலர் 1578, தம்மை துன்புறுத்தினார் என்று கூறி 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 16 ஆம் நாளன்று நாங்குநேரி பேருந்து நிலையத்தில் அவர் காவலரைத் தாக்கினார். காவலர் அளித்த புகார் மீது நாங்குநேரி காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று காவல் குழு ஒன்று பிச்சையத் தேவரைக் கைது செய்வதற்காகத் தென்னி மலைக்குச் சென்றபொழுது அவர் காவலர் குழுவிலிருந்த காவலர் 1578-ஐ அரிவாளால் வெட்டிக் கொல்ல முயற்சி செய்தார், அதன் பின் ஓர் ஆயுதம்



தாங்கிய காவலர் துப்பாக்கியால் சுட்டபொழுது, குண்டடிப்பட்டு மருத்துவ மனைக்குச் செல்லும் வழியில் பிச்சையத் தேவர் இறந்துவிட்டார். இது குறித்து திருநெல்வேலி மாவட்ட வருவாய் அதிகாரி அவர்களால் நீதி விசாரணை நடத்தப்படுகிறது.

### கண்ணீர் புகை பயன்படுத்தியது.

94. 1981 ஆம் ஆண்டில் சட்டம் ஒழுங்கினை நிலை நாட்ட செங்கற்பட்டு (மேற்கு), செங்கற்பட்டு (கிழக்கு), திருநெல்வேலி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு முறையும் தென்னாற்காடு , சேலம் மாவட்டங்களில் ஒவ்வொன்றிலும் இரு முறையும், மதுரை (கிழக்கு) மாவட்டத்தில் மும்முறையும், சென்னை நகரில் 9 முறையும் கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டன.

### காவல் துறை வானொலிப் பிரிவு.

95. தமிழ்நாடு காவல் துறை மாவட்டத் தலைமை இடங்கள் அனைத்தும் சென்னையுடன் இணைக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர், செங்கற்பட்டு சரகங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று வீதம் ஆறு செய்தித் தொடர்பு நிலையங்கள் உள்ளன. இவை தவிர, சென்னை மாநகரக் காவல்படை வானொலி தொடர்பு அமைப்பு உள்ளது. சென்னை மாநகரம், அணைக்கரை, மேல் அணை, கல்லணை, தஞ்சாவூர், பவானிசாகர், தேக்கடி, மேட்டூர், இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, பொள்ளாச்சி ஆகிய இடங்களில் வெள்ளக்கால நெருக்கடி அறிவிப்பு நிலையங்கள் உள்ளன. 15 நிலையான வானொலி அமைப்பு நிலையங்கள், 5 உட்கோட்ட வானொலி அமைப்பு நிலையங்கள், 29 மீவுயர் அதிர்வலைச் செய்தி அஞ்சல் நிலையங்கள் 20 மாநகரச் செய்தி தொடர்பு நிலையங்கள், 12 வெள்ளக்கால நெருக்கடி அறிவிப்பு நிலையங்கள் ஆகியவை தமிழ்நாடு காவல்துறை வானொலி அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளன. எல்லா முக்கியமான திருவிழாக்கள், புயல், வேலை நிறுத்தங்கள், முக்கிய பிரமுகர்கள் வருகை, மற்ற நெருக்கடி காலங்கள் எல்லாவற்றிலும் இந்நிலையங்கள் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. சென்னையிலுள்ள நான்கு வானிலை அறிவிப்பு நிலையங்கள் மாநிலத்தில் பல்வேறு இடங்களுக்கு தேவைக்கேற்ப அனுப்பப்படும்.

### தமிழ்நாடு காவல் படையை நவீனப் படுத்துதல்.

96. காவலர் படையை நவீனப் படுத்துவதற்கான திட்டம் ஒன்றை மத்திய அரசு தொடங்கியுள்ளது. இதற்கான நிதி உதவியையும் அளித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வண்டிகள், கம்பியில்லாத் தந்திச் சாதனங்கள், அறிவியல்

சாதனங்கள் இவற்றை வாங்குவதற்காக 1969–70 முதல் 1978–79 வரை ரூ. 425.47 இலட்சத்திற்கு கடனாகவும் மானிய மாகவும் இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றை இயக்குகின்ற பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காக ரூ. 38.50 இலட்சம் தொடரினச் செலவாக இம்மாநில அரசும் வழங்கி உள்ளது.

97. மத்திய அரசு 1980–81 ஆம் ஆண்டு முதல் 1989–90 வரையிலான கூடுதல் 10 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு காவல் படையை நவீனமாக்கும் திட்டத்தை மறுபடியும் புதுப்பித்துள்ளது. அதன்படி 1980–81, 1981–82 ஆம் ஆண்டின் கடன் மற்றும் மானியமாக ரூ. 93.92 இலட்சம் வழங்கியுள்ளது. இத்தொகை மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு கருவிகள் (V. H. F.) மற்றும் இருவழிச் செய்தித் தொடர்புக் கருவிகள் (Walkie Talkies) மற்றும் சிறப்புப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு அதிமீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்புக் கருவிகளும் (U. H. F.) வாங்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசின் உதவியுடன் கூட இம்மாநில அரசு மேற் சொன்ன கம்பியில்லாதத்தந்தி சாதனங்கள் வாங்குவதற்கு 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 35.65 இலட்சம் செலவழித்துள்ளது.

செய்தித் தொடர்பு.

98. உயர் அதிர்வலை, மீவுயர் அதிர்வலைச் செய்தித் தொடர்பு மூலம் அனைத்து காவல் நிலையங்களையும் மாவட்டத் தலைமையிடங்களுடனும், மாநிலத் தலைமையிடத்துடனும் இணைப்பதே அரசின் நோக்கமாகும். ஒலி வடிவிலும் வரி வடிவிலும் வானொலி மூலம் அனுப்புவதற்கு வகை செய்ய மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்தும் மாநிலத் தலைமையிடத்துடன் ஏற்கனவே மீவுயர், அதிர்வலைச் செய்தித்தொடர்பு மூலம் இணைக்கப்பட்டுள்ளன. தவிர 924 காவல் நிலையங்களில் 652 காவல் நிலையங்களும் 92 துணைக் கோட்டங்களில் 50 துணைக் கோட்டங்களும், சம்பந்தப்பட்ட மாவட்டத் தலைமையிடத்துடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளன. விரல் ரேகைப் பதிவுகள், நிழற் படங்கள் ஐயத்திற்கிடமான ஆவணங்கள் ஆகியவற்றின் படிகளை புகைப்பட ஒளிபரப்பு முறையில் அனுப்பும் வசதிகள் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சென்னை ஆகிய இடங்களில் உள்ள சரகத் தலைமை இடங்களில் தற்போது உள்ளன.

99. மாநில தலைமையிடத்திற்கும் மாவட்டத் தலைமை இடங்களுக்கும் இடையே போக்குவரத்து அதிகரித்து வருவதால் தற்போதுள்ள ஒரு வழி மீவுயர் மின்னலைச் செய்தி தொடர்பு வசதி போதுமானதாக இல்லை. எனவே, சுமார் ரூ. 100 இலட்சம் செலவில் நுண்ணலைப் பல்வழிச் செய்தித் தொடர் வசதி ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த பல்





வழிச் செய்தித் தொடர்பு அமைப்பு சுமார் 540 கிலோ மீட்டர் தொலைவுக்கு செய்தியை அனுப்பக்கூடியது. இத்தொலைவு ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் கீழ் மிக உயரமான இடங்களில் 5 மறு ஒலிபரப்பு வானொலி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பின் மூலம் விரல் ரேகைப் பதிவுகள், குற்ற வழக்குகள் குறித்த புள்ளி விவரங்கள் தேவைப்படும் பொழுது மாநிலத்தின் எப்பகுதியிலிருந்தும் அறிந்து கொள்வதற்கு முடியும் என்பதோடு, மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்திலிருந்தும் தொலை அச்சுப் பொறிகள் உருவ நேர்படி தொடர்பு (Teleprinter Facsimile Transmission) ஆகியவற்றின் மூலம் ஒரே நேரத்தில் குற்ற வழக்குகள் குறித்த தகவல்களை விரைவாக அனுப்பவும் முடியும். இந்த நுண்ணலைத் திட்டம் நிறுவப்பட்டு செயல்படத் தொடங்கிவிட்டது. 1–10–1978 முதல் அன்றாடத் தேவைகளுக்குச் செயல்படுத்தப்படுகிறது.

100. இதுவரை செய்தி தொடர்பு வசதி பெறாத தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளுக்கும் காவல் நிலையங்களுக்கும் மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு வசதிகளுக்கு வகை செய்ய 1980 ஆம் ஆண்டு 350 மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு கருவிகளும் (V. H. F. Sets) 1800 இருவழிச் செய்தித் தொர்டர்பு கருவிகளும் (Walkie Talkies) துணைப் பொருட்களும் ரூ. 1,98,45,000 செலவில் வாங்க அனுமதி வழங்கப்பட்டதில் 350 மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்புக் கருவிகள் 405 இருவழிச்செய்தி தொடர் கருவிகள் வரப் பெற்றன. இந்த கம்பியில்லாத் தந்தி சாதனங்களை அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவைகள் அமைக்கப்படும் பொழுது மாநிலம் முழுவதுமுள்ள நடப்பு நிதி ஆண்டில் திறக்கப்பட்ட 31 காவல் நிலையங்களைத் தவிர, எல்லா காவல் நிலையங்களும் மீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்பு வசதிகளைப் பெற்றிருக்கும்.

101. மேலும், மாவட்ட தலைமையிடங்களிலுள்ள குற்றப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த 15 சிறப்புப் பிரிவு (Special Branch C. I. D.)களுக்கு ரூ. 120 இலட்சம் செலவில் அதிமீவுயர் மின்னலைச் செய்தித் தொடர்புக்கு வகை செய்ய இவ்வாண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேவையான சாதனங்களை வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இச்சாதனங்கள் நிறுவப்பட்டவுடன் குற்றப் புலனாய்வுத் துறை மாநிலத் தனிப்பிரிவின் பொறுப்பில் இது தனியானதொரு வானொலி அமைப்பாக இருக்கும்.

102. மாநிலத்தில் 924 காவல் நிலையங்களும், 192 புறக் காவல் நிலையங்களும் உள்ளன. இவற்றில் 890 காவல்நிலையங்களுக்கும், 185 புறக்காவல் நிலையங்களுக்கும் தொலை பேசி வசதி செய்து கொடுப்பதற்கு அரசு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. ஆனால், தொலை பேசித் துறை, இதுவரை 83,

காவல் நிலையங்களிலும், 125 புறக் காவல் நிலையங்களிலும் மட்டுமே தொலை பேசிகளை அமைத்துள்ளது. தொலை பேசித் துறை அதிகாரிகளின் உதவியுடன் எஞ்சிய காவல் நிலையங்களிலும், கூடிய விரைவில் தொலை பேசிகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

காவல் துறையினருக்கு அறிவியல் தொழில் நுட்ப சாதனங்கள்.

103. சட்டத்தையும் ஒழுங்கையும் திறம்படப் பேணி வரவும் குற்ற நிகழ்வுகளையும், குற்றவாளிகளையும் கண்டு பிடிக்கவும், எல்லா மாவட்டங்களிலும் அறிவியல் சாதனங்களை அமைப்பதென அரசு முடிவு செய்துள்ளது. மாநிலத் தடய அறிவியல் ஆய்வகத்தில் எல்லா வகையான நவீன கருவிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. அனைத்து காவல் துறை மாவட்டங்களிலும் எல்லா வசதிகளும் நிறைந்த நடமாடும் தடய அறிவியல் ஆய்வுக் கூட பிரிவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவுகளின் உதவியுடன் புலனாய்வு செய்வதில் நல்ல பயன் கிட்டியுள்ளது. எல்லாக் காவல் துறை மாவட்டங்களிலும், ஒரு விரல் ரேகைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. குற்றம் நடைபெற்ற இடத்தில் காணப்படும் தடயங்களையும் கைரேகைகளையும் விரைவாக அடையாளம் கண்டு கொள்வதற்காக ரூ. 11.2 இலட்சம் செலவில் 1977 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 'கோடக் மிராகோடு'' (Kodak Miracode) மைக்ரோ பிலிம் என்னும் சாதன அமைப்பு நிறுவப்பட்டது. நுண்படச் சுருளில் கைவிரல் ரேகைப் பதிவேடு வைத்து வரும் முறை ஏற்கனவே தொடங்கப்பட்டு மூன்றில் ஒரு பங்கு பணி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள இப்பணியை முடிக்கத் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காவல் துறைப் பற்றி விவரக் கணக்கீட்டுப் பிரிவு.

104. காவல் துறைப் புள்ளி விவரக் கணக்கீட்டுப் பிரிவிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அங்கு 5 இலட்சம் குற்ற நிகழ்வுகள், 3 இலட்சம் தேர்ந்த தொழில் ரீதிக் குற்றவாளிகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, குறியீடு இடப்பட்டுள்ளன. 3.82 இலட்சம் விரல் ரேகைப் பதிவுகளும் கணக்கீட்டுப் பொறி முறையில் வைத்து வரப்படுகின்றன. குற்ற நிகழ்வுகள், குற்றவாளிகள் பற்றிய புள்ளி விவரங்கள், விரல்ரேகைப் பதிவுகள் ஆகியவற்றை கணக்கீட்டு பொறி முறையில் வைத்து வரும் பணி முடிவடைந்துள்ளது. இம் மாநிலத்திலுள்ள காவல் நிலையங்கள் அனைத்திற்கும் அன்றாடம் செய்தி வழங்கும் நடைமுறை 1—2—1975 முதல் இயங்கி வருகிறது. குற்ற நிகழ்வுகளையும் குற்றவாளிகளையும் விரைவில் கண்டு பிடிக்க மாநிலம் முழுவதிலும் காவல் துறையினருக்கு இது மிகவும் பயனுள்ளதாய் இருக்கிறது. தேசிய காவல் துறைக் கணக்கீட்டுப் பொறி கணிப்பு முறைத் திட்டத்தின் கீழ் ரூபாய் 74 இலட்சம் செலவில் டி.டி.சி. (T. D. C.) 316 கணக்கீட்டுப் பொறியைப் பெறவிருக்கும் மாநிலக் காவல் படை முதல் அணியில் தமிழ்நாடும் இடம் பெற்றுள்ளது. திருவாளர்கள் எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்னும் நிறுவனத்துடன் செய்து கொண்ட ஓர் உடன்பாட்டின்படி, அந்த நிறுவனம் இரண்டு கட்டமாக கணக்கீட்டுப் பொறியினை வழங்கி இருக்கிறது. முதல் கட்டம் தொடர்பான இயந்திரங்கள் வழங்கப்பட்டு விட்டன. இவை சோதனைக்குட்படுத்தப்பட்ட பின் இயங்கி வருகின்றன. இரண்டாவது கட்டம் தொடர்பான முதற் பகுதி இயந்திரங்களும் வழங்கப்பட்டு விட்டன. இரண்டாம் கட்ட இரண்டாம் பகுதி சம்பந்தப்பட்ட இயந்திரமும் வழங்கப்பட்டு அவை சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.



தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகம்.

105. தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பிரிக்கப்பட்ட இரசாயனப் பரிசோதகர் ஆய்வகம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை ஆய்வகம், ஆவணம் மற்றும் கூடுகலன் ஆய்வகப் பகுதி இவைகள் மீண்டும் தடய அறிவியல் ஆய்வகத்துடன் இணைக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட தடய அறிவியல் ஆய்வகமாக ஒரு தனி இயக்குநரின் தலைமையின் கீழ், தனித் துறையாக 15—3—1980-ல் இருந்து செயல்படத் தொடங்கிற்று.

106. ஒருங்கிணைக்கப்பட்ட தடய அறிவியல் ஆய்வகம் கீழ்க்கண்ட பகுதிகளைத் தன்னுள் கொண்டுள்ளது—

1. துப்பாக்கி இயல்.
2. உயிரியல்.
3. வேதியல்.
4. ஆவண ஒப்பீட்டுப் பிரிவு.
5. ஆயத் தீர்வை.
6. பௌதீகம்.
7. மதுவிலக்கு.
8. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி.
9. குருதி நீரியல்.
10. நச்சு இயல்.

மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களிலும் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்கள் உள்ளன. ஐந்தாவதாக வேலூரில் வட்டார தடய அறிவியல்

ஆய்வகம் ஒன்றினை ஏற்படுத்த அரசினரால் ஆணையிடப்பட்டு அந்த ஆய்வகம் குறைந்த பட்ச பணியாளர்களைக் கொண்டு இப்போது செயல்பட்டு வருகிறது.

107. இருபத்தியொரு மாவட்ட நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்களும் அதனுடனான புகைப்படப் பிரிவுகளும் இந்த ஆய்வகத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும், செயல்பட்டு வருகின்றன. 1981-ல் சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர் ஆகிய மூன்று இடங்களிலும் ஒவ்வொரு மாவட்ட தடய அறிவியல் ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டு தற்போது மதுவகை மாதிரிகளை ஆய்வு செய்து வருகின்றன. பெருகி வந்துள்ள வேலைப் பளுவைச் சமாளிப்பதற்காகவும் பிரதான ஆய்வகத்திலும் மாவட்டங்களிலுள்ள சரக ஆய்வகங்களிலும் அதிக அளவு நிலுவையிலுள்ள நேர்வுகளை விரைந்து ஒரு காலவரைக்குட்பட்டு முடிப்பதற்காகவும் இந்த ஆய்வகத்திற்கு அதிகப்படியான பணியாளர்களை நியமனம் செய்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

108. சென்னை பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் முதறிவியல் (தடய அறிவியல்) இரண்டாண்டு மேல்நிலைப் பட்டத்திற்கான முழு நேர வகுப்புகளை இவ்வாய்வகம் நடத்தி வருகிறது. இதற்கென இவ்வாய்வகத்தின் தகுதி வாய்ந்த விஞ்ஞானிகள் பேராசிரியர்களாகவும் (Professors) இணைப் பேராசிரியர்களாவும் (Readers) உதவிப் பேராசிரியர்களாகவும் (Assistant Professors) நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். 1981–82 ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பிற்குச் சேர்க்கப்படும் நபர்களின் எண்ணிக்கையை ஆறிலிருந்து பத்தாக அரசு உயர்த்தியுள்ளது.

**109. அக்டோபர் 1981-லிருந்து** இந்த ஆய்வகம் **தடய** அறிவியல் பண்டாரகர் பட்டம் (Ph.D. in Forensic Science) பெற ஆராய்ச்சி நடத்த வல்ல ஆய்வுக் கூடமாக் சென்னைப் பல்கலைக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. இது வரையிலும் இரண்டு முழு நேர ஆராய்ச்சியாளர்களும், நான்கு பகுதி நேர ஆராய்ச்சியாளர்களும் இதற்காகப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

110. 1981-ல் சென்னை ஆய்வகமும், வட்டார ஆய்வகங்களும் ஆய்வு செய்த மொத்த வழக்குகள் மற்றும் சான்றுப் பொருட்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டு உள்ளது.

| | |
|---|---|
| வழக்குகள் .. .. .. | 59,113 |
| **சான்றுப் பொருட்கள்** .. .. | 1,44,685 |



புதிய ஊர்திகள் வாங்க ஒப்புதல்.

111. அறிக்கை ஆண்டில் பல்வேறு பிரிவுகளுக்கும் 37 ஜீப்புகள், 6 அம்பாசிடர் கார்கள், 3 பிக் அப் வேன்கள், 12 சிறு பேருந்துகள், 6 மோட்டார் சைக்கிள்கள், 11 '' ஸ்டாண்டர்டு 20 '' வண்டிகள், 14 லாரிகள், 25 பேருந்துகள் ஆக மொத்தம் 114 வண்டிகளை ரூபாய் 94,80,000 செலவில் வாங்க அரசு ஒப்புதல் அளித்தது.

112. காவல் துறையில் தற்போதுள்ள வண்டிகளுக்குப் பதிலாக 10 சதவீதம் புதிய வண்டிகளை வாங்க ரூபாய் 157 இலட்சத்திற்கு மேற்படாத தொகைக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனால் சுமார் 187 புதிய வண்டிகள் வாங்கப்பட்டு காவல் துறை மேலும் திறம்படச் செயலாற்றப் பல்வேறு பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

போக்குவரத்துப் பணிமனை பயிற்சிப்பள்ளி, ஆவடி.

113. தமிழ்நாடு காவல்துறை ஆணைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஆவடியில் 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட போக்குவரத்து பணிமனை, பயிற்சிப் பள்ளி, சென்னை மாநகரக் காவல்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படை ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. காவல்துறையை நவீனமாக்கும் திட்டத்தின் கீழ் மாநில அரசின் பங்காக இந்தப் பணிமனையை விரிவுபடுத்த ரூபாய் 10 இலட்சம் செலவிட கீழ்க்கண்ட வகையில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

| | | ரூபாய். |
|---|---|---|
| 1. | வாகனங்கள் கட்டுதல் .. .. | 4,00,000 |
| 2. | புதிய சாதனங்கள், கருவிகள் .. | 1,61,000 |
| 3. | மேஜை நாற்காலிகள் .. .. | 15,000 |
| 4. | கூடுதல் பணியாளர்கள் நியமனம் | 4,24,000 |

வட்டாரப் பணிமனைகள் அமைத்தல்.

114. காவல்துறையின் வாகனங்களை மட்டும் பராமரிப்பதற்கும் பழுது பார்ப்பதற்கும் வசதியாக, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் 3 வட்டாரப் பணிமனைகளை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த வட்டாரப் பணிமனைகள் வாகன பராமரிப்புப் பகுதியைச் சார்ந்தவர்களைக் கொண்டு செயல்படும். மத்திய

அரசு காவல்படையை நவீனமாக்கும் திட்டத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு அளிக்கும் ரூபாய் 25 இலட்சத்தைக் கொண்டு இந்த வட்டாரப் பணிமனைகள் அமைக்கப்படும்:—

| ஆண்டு. | (ரூபாய் இலட்சத்தில்) செலவு. |
|---|---|
| 1982–83 .. .. .. | 8.33 |
| 1983–84 .. .. .. | 8.33 |
| 1985–86 .. .. .. | 8.34 |

### தமிழ்நாடு காவலர் நல நிதி.

115. காவல்துறையைச் சேர்ந்த சார்நிலைப் பணியாளர்களுக்கு, இறப்பு பிணிகுறித்த செலவுகளுக்காக நிதி உதவி, குறிப்பிட்ட சில பிரிவுகளில் பயிலும் குழந்தைகளுக்குப் படிப்புதவி, ஏனைய நல உதவி, பொழுதுபோக்கு வசதி ஆகிய உதவிகள் செய்து கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு காவலர் நல நிதி தொடர்ந்து செவ்விய முறையில் செயல்பட்டு வருகிறது. காவல்துறையில் பணிபுரியும் சார்நிலை அலுவலர்கள் மனமுவந்து கொடுக்கும் அன்பளிப்புத் தொகைகள் மூலமும் உயர் அலுவலர்களிடமிருந்து பெறும் நன்கொடைகள் மூலமும் இந்நிதிக்குப் பணம் திரட்டப்படுகிறது. 1971–72 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு நிதி ஆண்டும் ஒரு மொத்த மானியமான 1.5 இலட்சம் ரூபாயை அரசும் இந்நிதிக்கு வழங்கி வருகிறது. 1981–82 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து ரூ. 2,32,339 வழங்கப்பட்டது. இதனால் 1320 பேர் பயனடைந்தனர்.

### தமிழ்நாடு காவல்துறை நூற்றாண்டு விழாப் படிப்புதவித் தொகை நிதி.

116. தமிழ்நாடு காவலர் நல நிதியைத் தவிர தமிழ்நாட்டு காவல்துறை நூற்றாண்டு விழா படிப்புதவித் தொகை நிதியும் உள்ளது. காவல்துறை சார்நிலை நிர்வாக அலுவலர்களின் பிள்ளைகளில் தகுதியுடையோருக்குக் கல்லூரிகளில், மேல் படிப்பும் தொழில் நுட்பக் கல்வியும் கற்க ஆண்டுதோறும் இந்நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. தனிப்பட்டவர்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள் மூலம் இந்நிதிக்குப் பணம் திரட்டப்படுகிறது. 1980–81 ஆம் ஆண்டில் 134 பேர்களுக்கு ரூபாய் 29,500 படிப்புதவித் தொகையாக வழங்கப்பட்டது.



### தமிழ்நாடு காவலர் குடும்ப நல நிறுவனம்

117. தமிழ்நாடு காவலர் குடும்ப நல நிறுவனம் தொடர்ந்து நற்பணியாற்றி வருகிறது. இந்த அமைப்பு வகுத்த பல்வேறு திட்டங்களின்கீழ் நூற்பு, தையல் வேலை, பாய் முடைதல், ஜமுக்காளம் நெசவு, தீக்குச்சி செய்தல், பட்டாசு உறைகள் செய்தல் , பீடி சுற்றுதல் , காகித உறைகள் செய்தல், புத்தகம் கட்டுதல்,பால் பண்ணை, கோழிப்பண்ணை, கைவினைத் தொழில்கள், பனியன் தயாரித்தல் முதலிய பல்வேறு தொழில்கள் காவலர் குடும்பங்களில் வருவாயைத் தொடர்ந்து பெருக்கி வருகின்றன.

### ஊர்க்காவல் படை.

118. இந்தத் தொண்டு நிறுவனம், காவல்துறையினருக்கு தொடர்ந்து துணைப்படையாகத் திறம்பட செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள 96 அணிகளில் $24\frac{1}{2}$ அணிகள் சென்னை மாநகரில் உளளன. மீதிய $71\frac{1}{2}$ அணிகள் மாவட்டங்களில் 59 மையங்களில் அமைந்துள்ளன. ஊர்க்காவல் படை மகளிர் அணிகள் 5 உள்ளன. அவற்றில் $2\frac{1}{2}$ அணிகள் சென்னை மாநகரிலும் $2\frac{1}{2}$ அணிகள் ஒரு மாவட்டத்திற்கு $\frac{1}{2}$ அணி வீதம்ஐந்து மாவட்டத் தலைமை இடங்களான திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், நாகர்கோவில் மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலும் அமைந்துள்ளன. இந்த அறிக்கை ஆண்டில் போக்குவரத்தை முறைப்படுத்துதல், இரவு நேரத்தில் ரோந்துப் பணி, பிரமுகர்கள் வருகை, திருவிழா, பொதுநிகழ்ச்சிகள் ஆகியசமயங்களில் பாதுகாப்புப் பணி மற்றும் சமூக சேவை ஆகியவற்றிற்கு ஊர்க்காவல் படை அணிகள் பயன்படுத்தப்பட்டன. எல்லா வகுப்பினரிடையேயும் ஒற்றுமையை ஏற்படுத்த ஊர் காவல் படையினர் சில மாவட்டங்களில் பெரும்பாலும் ஆதி திராவிடர்கள் வசிக்கும் பொருளாதார வசதியில் பின் தங்கிய கிராமங்களைத் தத்து எடுத்துக் கொண்டு கிராம மக்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து தந்துள்ளனர். முதலுதவி, தீயணைப்புப் பணி மோட்டார் வண்டி ஓட்டுதல், உள் நாட்டுப் பாதுகாப்பு ஆகிய பணிகளிலும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்படும் இடங்களான புதுக்கோட்டை, அறந்தாங்கி, திருச்சிராப்பள்ளி, குளித்தலை, நாகப்பட்டினம், வேதாரண்யம், மதுராந்தகம், பெரம்பூர் மற்றும் சைதாப்பேட்டை ஆகிய இடங்களில் கிராமப் பகுதி ஊர்க்காவல் படையினர் பணிபுரிகின்றனர்.

119. முதல் முறையாக 1981–ஆம் ஆண்டு ஜூன் திங்களில் கோயம்புத்தூரில் மாநில அளவில் ஊர்க்காவல் படையினருக்காக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. 1981ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பாட்னாவில் நடைபெற்ற அகில இந்திய ஊர்க்காவல் படைகள் மற்றும் பாதுகாப்புப் படை

விளையாட்டுப் போட்டிகளில் தமிழ் நாட்டைச் சேர்ந்த 89 ஊர்காவல் படையினர் கலந்து கொண்டு தீயணைப்புப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் முதலுதவிப் போட்டியில் நான்காம் இடத்தையும் பெற்றனர். மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 50 ஊர்க்காவல் படையினர் 1982 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26 ஆம் நாளன்று சென்னை மாநகரில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பில் பங்கு கொண்டனர்.

### போக்குவரத்து நெறிக்காவல் அமைப்பு.

120. சென்னை மாநகர காவல் போக்குவரத்து நெறிக் காவலர் அமைப்பு 1978 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அது முற்றிலும் தானாக முன்வந்து செயல்படும் அமைப்பாக உள்ளது. ஒரு முதன்மைப் பாதுகாவலர், ஒரு துணை முதன்மைப் பாதுகாவலர், 70 போக்குவரத்துக் காவலர் ஆகியோரைக்கொண்ட இந்த அமைப்பு போக்குவரத்துப் பாதுகாப்பினைப் பராமரிக்கவும், விபத்தைத் தவிர்க்க திட்டமிடுவதிலும், போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதிலும், பாதைகளைப் பயன் படுத்துவோர் சுளிடையே பாதுகாப்பு தேவையை உணர்த்தவும் காவல்துறை அலுவலர்களுக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு அளித்து வருகிறது. முக்கிய பிரமுகர்கள் வருகையின் போது பெருந்திரளாக மக்கள் கூடுமிடங்களில் போக்குவரத்தை நெறிப்படுத்தும் பணியிலும் கிரிக்கெட் விளையாட்டுக்களின்போது பாதுகாப்புப் பணியிலும் பாராட்டத்தக்க வகையில் இந்த அமைப்பு செயல்புரிந்துள்ளது.

### காவலர் வீட்டு வசதித் திட்டம்

121. நம்மாநிலத்தில் காவலர் வீட்டு வசதித் திட்டத்திற்கு அரசு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. சார்நிலைக் காவலர்களில் குறைந்தது 80 சதவீதத்தினருக்காவது வீட்டு வசதி அளிப்பதே நோக்கமாகும். காவலர்களுக்கு மனநிறைவு அளிக்கும் வகையில் இந்த அளவுக் குறிக்கோளை அடைய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

122. இந்திய அரசின் ஏழாவது நிதிக்குழுவின் பரிந்துரையின் படி 1979–80 முதல் 1983–84 வரையிலான ஐந்து ஆண்டு கால அளவிற்கு 6451 குடியிருப்புகள் கட்டும் திட்டத்திற்கு ரூ.675 இலட்சம் உதவியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசும் இதற்காக கணிசமான அளவு நிதி ஒதுக்க வேண்டியிருக்கிறது. இதுவரை 1979 முதல் 1981 வரையிலான கால அளவில் 2,434 வீடுகள் கட்ட ரூ. 345 இலட்சம் இந்திய அரசு அளித்துள்ளது. மேலும் 1,350 குடியிருப்புகள் கட்ட நிதி அளிக்கும்படி இந்திய அரசு கேட்கப்பட்டுள்ளது. இதுவரை 12,069 குடியிருப்புகள் காவலருக்காக கட்டப்பட்டுள்ளன.



### தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்.

123. மேற்சொன்ன காவலர் வீட்டு வசதித் திட்டம் தவிர காவலர்களும் காவல் அதிகாரிகளும் சொந்த வீடுகள் கட்டிக் கொள்வதற்கென ஒரு கோடி ரூபாய் மூலதனத்துடன் தமிழ் நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ஆரம்பிக்க அரசு ஒப்புதல் வழங்கியது. இக்கழகம் 30–4–1981 அன்று பதிவு செய்யப் பட்டு, காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவித் தரத்தில் ஒரு அதிகாரியை நிர்வாக இயக்குநராக நியமித்து அவருக்கு உதவி புரியத் தேவையான அலுவலர்களுடன் இக் கழகம் 11–5–1981 முதல் தனது பணியை ஆரம்பித்துள்ளது. இக்கழகம் பரங்கிமலையில் ரூ. 4 இலட்சம் செலவில் 16 அரசுத் துறை குடியிருப்புகள் கட்டும் பணியை முடித்துள்ளது. மற்ற மையங்களில் கட்டத் தீர்மானித்திருக்கும் குடியிருப்புகளுக்கு இப்பதினாறு வீடுகள் முன்மாதிரியாகும்.

124. இக்கழகம் ,புறநகர் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி வாரியத்தின் (HUDCO)கடன் உதவி ரூ.88.5 இலட்சத்துடன் திருச்சிராப்பள்ளியில் நவல்பட்டு என்ற இடத்தில் 720 குடியிருப்புகள் கட்டும் பணியை மேற் கொண்டுள்ளது. திருமுல்லைவாயல், திண்டிவனம், காரைக்குடி, ஓசூர், கோயம் புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய முக்கிய மையங் களுக்கு இத்திட்டங்களை விரிவாக்கும் செயற் குறிப்புகளும் உள்ளன. ''உங்களுக்கு சொந்த வீடு'' என்ற திட்டத்தில் காவலர் களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை விரைவுபடுத்தக் காவல்துறை அதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் வீடுகட்ட முன் பணம் வழங்குவதற்கும், மாநிலக் காவல்துறை தலைமை அதிகாரிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு ஆண்டு தோறும் வரவு செலவுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்க அரசு தீர்மானித்துள்ளது.

### காவல் நிலையங்களுக்கு அரசுக் கட்டிடம்

125. தற்பொழுது தனியார் கட்டடங்களில் வாடகைக்கு இருக்கும் காவல் நிலையங்களுக்கும் புறக் காவல் நிலையங்க களுக்கும் படிப்படியாக அரசுக் கட்டிடங்களைக் கட்டித்தர அரசு விரும்புகிறது. முதல் கட்டமாக 150 காவல் நிலயைங்களுக்கு ரூ. 341 இலட்சம் செலவில் கட்டிடம் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

### பதக்கங்கள்.

### குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கங்கள் மற்றும் காவல்துறைப் பதக்கங்கள்.

126. தமிழ்நாட்டைச் சேர்ந்த 15 காவல்துறை அலுவலர் களுக்கும் காவலர்களுக்கும் 1981 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவரின் காவலர் பதக்கங்களும் காவல் துறையினர் பதக்கங் களும் வழங்கப்பட்டன. தமிழ் நாட்டைச் சேர்ந்த 2 ஊர்க் காவல் படையினருக்குக் குடியரசுத் தலைவரின் ஊர்க்காவல் படை மற்றும் உள் நாட்டுப் பாதுகாப்புப் பதக்கம் 1981 ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

[1982 மார்ச் 22

உயிர் காப்பிற்கான பிரதம மந்திரியின் காவலர் பதக்கம்.

127. நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த காவலர் எண். 444 திரு. மணி என்பவருக்கு 1979 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் பெரும் நிலச்சரிவின் போது உயிரைத் திரணமாக மதித்துப் பெரும் தைரியத்துடன் பல உயிர்களைக் காப்பாற்றியதற்காக இந்த ஆண்டு உயிர் காப்பிற்கான பிரதம மந்திரியின் காவலர் பதக்கம் அளிக்கப்பட்டது.

முதலமைச்சரின் காவலர் பதக்கம்.

128. வீரச் செயலுககான முதலமைச்சரின் காவலர் பதக்கங்கள், 20 காவல் துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும், 1981 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டன. இதில் 3 பேர்களுக்கு, இறந்த பிறகு அளிக்கப்பட்டது. 35 காவல்துறை அலுவலர்களுக்கும் காவலர்களுக்கும் சிறப்பு மிக்க பணிக்கான முதலமைச்சரின் காவலர் பதக்கம் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர்க்கான பதக்கம்.

129. அறிக்கையாண்டில் தலைமைக் காவலர்களுக்கும், காவலர்களுக்கும் மற்றும் அப்பதவிகளுக்கு இணையான பதவியில் உள்ளவர்களுக்கும் அளிப்பதற்காக 'தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர்க்கான பதக்கம்' என்ற புதிய பதக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. காவலர்கள் தரம் 2, காவலர்கள் தரம் 1 மற்றும் தலைமைக் காவலர்கள், மாவட்ட ஆயுதப்படையைச் சேர்ந்த லேன்ஸ் நாயக்குகள், நாயக்குகள், தலைமைக் காவலர்கள் மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த நாயக்குகள் மற்றும் ஹவில்தார்கள் 10 ஆண்டுகளுக்குக் குறையாமல் எவ்விதப்பிழையும் இன்றிச் சிறப்புமிக்க பணிபுரிந்திருந்தால் இப்பதக்கம் பெறத் தகுதியுடையவர் ஆவார். இந்தப் பதக்கம் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளன்று அரசால் அறிவிக்கப்படும்.

130. இப்பதக்கம் பெற்றவர்கள் கீழ்க்கண்டவாறு மாதந்தோறும் பதக்கப்படி பெறுவார்கள்;—

| | | |
|---|---|---|
| (1) | உள்ளூர்க்காவலர்கள் தரம்—1, தரம்—2, மாவட்ட ஆயுதப் படையைச் சேர்ந்த லேன்ஸ் நாயக்குகள் மற்றும் நாயக்குகள் தமிழ்நாடு சிறப்புக் காவம் படை அணியைச் சேர்ந்த லேன்ஸ் நாயக்குகள். | மாதமொன்றுக்கு ரூ. 20. |
| (2) | உள்ளூர் மற்றும் ஆயுதப்படையைச் சேர்ந்த தலைமைக் காவலர் மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த நாயக்குகள் மற்றும் ஹவில்தார்கள். | மாதமொன்றுக்கு ரூ. 25 |

ஓர் ஆண்டில் அளிக்கப்படும் பதக்கங்கள் எண்ணிக்கை 1,500-க்கு மிகாது. இவ்வாண்டில் 1,351 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு பதக்கங்கள் வழங்கப்பட்டனர்.



1982 மார்ச் 22]

விளையாட்டுக்கள்.

131. தமிழ்நாடு காவல்துறை 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் 25-ந் தேதி முதல் 29-ந் தேதி வரை 30-வது அகில இந்தியக் காவலர் விளையாட்டு போட்டியில் நீச்சல் போட்டியையும் பெரு ஓட்டப் போட்டியையும் நடத்தியது.

132. பெங்களூரில் 17—12—81 முதல் 24—12—81 வரை நடந்த அகில இந்திய காவல் துறை விளையாட்டு போட்டிகளில் தமிழ்நாடு காவல்துறையினர் கலந்துகொண்டு ஒரு தங்கப்பதக்கம், 6 வெள்ளிப்பதக்கங்கள் மற்றும் 12 வெண்கல பதக்கங்கள் பெற்றனர். இது தவிர புலனாய்வுக்கான அறிவியல் உதவி, காவல் துறை, நாய்ப்படை மற்றும் காவல் துறைப் புகைப்படப் போட்டிகளில் 3 கேடயங்கள் பெற்றனர். இம்முறை பெற்ற பதக்கங்கள் முன்பு பெற்றவைகளை விட அதிகமாகும். இது தவிரக் காவலர் நலக் கருத்தரங்கு மற்றும் கண்காட்சிக்காக 1 தங்கப் பதக்கம், 1 வெள்ளிப் பதக்கம் மற்றும் 1 வெண்கலப் பதக்கம் பெறப்பட்டது.

சுற்றுக் காவல் படையினர்.

133. மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் விதிகளை மீறி நடப்பவர்களைக் கண்டுபிடிக்கவும், குற்றவாளிகளைக் கைது செய்யவும் முன்பு 6 மாவட்டங்களில் அதாவது கோயம்புத்தூர் நகர்ப்புறம், மதுரை தெற்கு, தென்னாற்காடு, தஞ்சாவூர் (மேற்கு), திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சுற்றுக் காவல்படையினர் செயல்பட்டு வந்தனர். சுற்றுக் காவல்படை ஒவ்வொன் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஒருவர், சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர், தலைமைக் காவலர் இருவர், காவலர் இருவர் உள்ளனர். அது போன்ற சுற்றுக் காவல்படைகள், செங்கற்பட்டு கிழக்கு, வடாற்காடு இராமநர்தபுரம், மேற்கு கன்னியாகுமரி, சேலம், தர்மபுரி, நீலகிரி ஆகிய மேலும் ஏழு மாவட்டங்களில் 1979 செப்டம்பர் முதல் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறாக, 20 காவல்துறை மாவட்டங்களில் 13 மாவட்டங்களில், சுற்றுக் காவல் படையினர் தற்போது செயற்பட்டு வரு, கின்றனர். மேலும் ஏழு சுற்றுக் காவல் படையினை ஏற்படுத்த அரசு கருதுகிறது. இதனால் ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் ஒரு சுற்றுக் காவல்படை ஏற்படுத்த இயலும்.

134, முதன் முதலாக 6 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட சுற்றுக் காவல்படைகளுக்கு, ஒவ்வொன்றுக்கும் ஒரு ஜீப் கொடுக்கப்பட்டுள்ளது, ஆய்வாண்டில் கூடுதலாக மற்ற ஏழு மாவட்டங்களிலுள்ள சுற்றுக்காவல் படைகளுக்கு ஜீப் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தவிர மாநிலத் தலைநகரில் மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பாக வரும் பணிகளைக் கவனிக்கத் தனியாகத் துணைக் காவல்துறை தலைமை அதிகாரி,

நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்டங்களில் செய்யப்படும் பணி களைக் கவனித்தல், புள்ளி விவரங்களைச் சேகரித்தல், ஆதி திரா விடர்களுக்குக் கொடுமைகள் இழைக்கப்படும் சம்பவங்களைத் தெரிவித்தல் அவற்றைப் புலன் விசாரணை செய்ய உள்ளூர்க் காவல் நிலையத்தினருக்கு அறிவுறுத்தல் எல்லாச் சுற்றுக் காவல் படையினரின் பணியினைக் கண்காணித்தல் ஆகியவை இவரது பணியாகும்.

135. ஆதி திராவிடர்களுக்கு வன்முறைகளால் இழைக்கப் படும் கொடிய காயங்கள், கற்பழிப்பில் ஆதி திராவிடர்கள் பலி யாதல் ஆதி திராவிடர்களின் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட பெரும் சச்சரவுகள், தீ வைப்புகள் மேலும் மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவுகள் 3 மற்றும் 4 சம்பந்தப்பட்ட குற்றங்கள் ஆகியவற்றை காவல் கண்காணிப்பு அதிகாரிகளும் உட்கோட்ட காவல் துறை அதிகாரிகளும், தாமே குற்றங்களை நேரடியாக விசாரிக்க பொறுப்புள்ளவர்கள் என்று காவல் நிலை ஆணை எண் 135 மற்றும் 136 திருத்தப்பட்டுள்ளன.

136. மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரும் வழக்குகளை மட்டும் விசாரிக்கவும், அச்சட்டத்தின் கீழ் நிலுவை யாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும் அவ் வப்போது நீதி வழங்கும் சிறப்பு வழக்கு மன்றங்களை திருச்சி ராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய மாவட் டங்களில் ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

தேர்தல்கள்.

137. 29—11—1981 அன்று திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெற்றது. இந்த இடைத் தேர்தல் அமைதியாக நடைபெற விரிவான பாதுகாப்பு ஏற் பாடுகள் காவல் துறையில் செய்யப்பட்டன. தேர்தல் அமைதி யாக நடைபெற்றது.

காவல்-பொது மக்கள் தொடர்பு.

138. அரசும், காவல் துறை அதிகாரிகளும் காவலர்-பொது மக்கள் தொடர்பினை மேம்படுத்தும் உணர்வுமிக்க பணிக்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். இந்த முயற்சிகள் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக நல்ல பலன் அளித்தது. குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இருப்பினும் இத்துறையில் புதிய சூழ்நிலைகள் உருவாகும்போது ஏற்படும் நிலைகளைச் சமாளிக்கும் பொருட்டு, காவலர்-பொது மக்கள் தொடர்பு சம்பந்தமாகத் தொடர்ந்து அதிக கவனம் செலுத்தப்பட்டுப் புதிய கருத்துக்கள் அவ்வப்போது உருவாக் கப்படுகின்றன.



139. ஆரம்ப கட்டமாக நிர்வாக முறைக்கு (management) முக்கியத்துவம் கொடுத்தும், எந்தெந்தச் சூழ்நிலையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி நிர்வகிக்கும் முறையில் அடிப்படைக் கொள்கைகளில் காவல் துறையினரைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பல்வேறு பயிற்சி நிலையங்களிலும் துறையிலும் அளிக்கப்படும் பயிற்சிகள் தவிர அண்ணா நிர்வாக பயிற்சி நிலையத்தில் இடை நிலை காவல்துறை அதிகாரிகளுக்கு என தனி பாடங்கள் நடத்தப்படு கின்றன, வட்டாரத் தலைமையிடங்களில் பயிற்சியாளர்களுக்கு அடிக்கடி இப்புதிய நிர்வாக முறைகளை பற்றித் தெரிவிக்கப் படுகிறது.

140. செய்தித் தாள்கள், தொலைக்காட்சி இவைகளைத் திறமையாகப் பயன்படுத்தி காவலர்களின் பணி, அவர்கள் பணி யில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் முதலியவை பற்றிப் பொது மக்களுக்குத் தெரிவிக்கும் முறை ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டது. தொலைக்காட்சியில் " உங்களுக்குத் தெரியுமா ?" என்ற ஏழு தொடர் நிகழ்ச்சிகள் மூலம் காவல் துறையின் பல்வேறு பணிகளைப் பற்றி பொது மக்களுக்கு விரிவாக விளக்கிச் சொல்லப் படுகிறது. இது தவிர காவலர் பொது மக்கள் தொடர்பின் அவசியத்தை வலியுறுத் தித் தொடர் நாடகங்கள் நடத்தவும் உத்தேசிக் கப்பட்டுள்ளது. இந்த இருவகைத் தொடர் நாடகங்களும் காவலரின் பணிகளைப் பற்றி மக்களுக்குத் தெரிவித்து காவலர் களின் பால் ஒரு பரிவு மனப்பான்மையை ஏற்படுத்தவும் அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்குவதற்கும் உதவி புரியும் என எதிர் பார்க்கப்படுகிறது. பொது மக்களின் அன்றாட வாழ்க்கையில் பதியும் அளவிற்குக் காவல்துறையின் பல்வேறு பணிகளைச் சித்தரித்து ஒரு திரைப்படத் தொடர் எடுக்கும் யோசனையும் தீவிர பரிசீலனையில் உள்ளது.

141. காவல் துறையில் பெண் காவலர்களின் நியமனம், அவர்களுக்குப் பயனுள்ள பயிற்சியளித்துக் குறிப்பிட்ட பணி களில் அவர்களை ஈடுபடுத்தல் ஆகியவை காவல்துறையின் நற்பெயரையும் காவலர் பொதுமக்கள் தொடர்பினையும் கணிச மான அளவுக்கு மேம்படுத்தியுள்ளன. பெண்கள் குழந்தைகள் பிரச்சினைகளை கவனிப்பதற்கும், கோயில் மற்றும் மகளிர் கல்வி பயிலும் இடங்களில் ரோந்துப் பணி புரிவதற்கும் ரயில்வே நிலையங்களிலும் பேருந்து நிலையங்களிலும் பெண் காவலர்கள் பயன்படுத்தப்பட்டு வருவது பொது மக்களில் மகளிரின் அச்ச உணர்வை நீக்குவதில் மிக்க பயனளித்துள்ளது. பயிற்சி முடிந்தவுடன், பெண் உதவி ஆய்வாளர்கள் அமர்த்தப் பட உள்ளனர். சில காவல் நிலையங்களில் இணைப்பாக

பெண் காவலர்களை மட்டுமே கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ள பெண் காவலர் நிலையங்கள் ஆகியவை நாளடைவில் காவல் துறையின் நற்பெயரையும் திறனையும் அதிகரித்து காவல் பொதுமக்கள் தொடர்பினை மேம்படுத்தப் பெருமளவு உதவும்.

காவல் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினரை மாவட்ட சேமப் படைக்கு மாற்றம் செய்தல்.

142. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் 10 ஆண்டுகள் பணிபுரிந்து மாவட்ட சேமப்படைக்கு மாறுதலாவதற்கு விருப்பம் தெரிவித்தால், மாற்றலுக்கு வகை செய்யப்படுகிறது.

இடர்ப்படி.

143. இந்த ஆண்டில், கூடுதல் மாவட்ட கண்காணிப்பாளர் களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 வீதமும் மற்றும் சுருக்கெழுத்துப் பிரிவிலுள்ள இளநிலை முதுநிலை சுருக்கெழுத்தாளர்களுக்கு மாதம் ரூ.20 வீதமும், இடர்ப்படி நீட்டிக்கப்பட்டுள்ளது. கொல்லி மலை மேல்பட்டு, சென்னிமலை, கோதையாறு மற்றும் சேர்வ ராயன் மலைப்பகுதிகளில் பணிபுரியும் காவல் துறை வானொலிப் பிரிவைச் சார்ந்த நுண்கலைப் பணியாளர்களுக்கும் இடர்ப்படி நீட்டிக்கப்பட்டுள்ளது.

நுகர்பொருட்கள் மலிவு விலையில் வழங்குதல்.

144. மலிவு விலையில் நுகர் பொருள் வழங்கும் திட்டம், சுருக்கெழுத்துப் பிரிவைச் சேர்ந்த இளநிலை மற்றும் முதுநிலை சுருக்கெழுத்தாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.



குற்றப்புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவினருக்குச் சிறப்பு ஊதியம்.

145. குற்றப் புலனாய்வுத் துறை சிறப்பு பிரிவைச் சேர்ந்த அலுவலர்களுக்கு 1—5—1981 முதல் சிறப்பு ஊதியம் கீழ்க்கண்டுள்ளவாறு உயர்த்தப்பட்டுள்ளது:—

| வரிசை எண்ணும் பதவியும். | | வழங்கப்பட்ட சிறப்பு ஊதிய விகிதம். | உயர்த்தப்பட்டுள்ள சிறப்பு ஊதியம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| சென்னை நகரம்— | | ரூ. | ரூ. |
| 1. | காவல் துறை உதவி ஆணையாளர். | 75 | 100 |
| 2. | காவல் துறை ஆய்வாளர்கள் | 50 | 75 |
| 3. | காவல் துறை துணை ஆய்வாளர்கள். | 25 | 50 |
| 4. | காவல் துறை சார்பு ஆய்வாளர்கள். | 25 | 35 |
| 5. | தலைமைக் காவலர் | 10 | 25 |
| 6. | காவலர் தரம் I | 10 | 25 |
| 7. | காவலர் தரம் II | 10 | 25 |
| சென்னை நகரம் தவிர மற்ற இடங்களில்— | | | |
| 1. | காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள். | 75 | 90 |
| 2. | காவல்துறை ஆய்வாளர் கள். | 35 | 50 |
| 3. | காவல் துறை துணை ஆய்வாளர்கள். | 15 | 35 |
| 4. | காவல் துறை சார்பு ஆய்வாளர்கள். | 15 | 25 |
| 5. | தலைமைக் காவலர்கள் | 7 | 15 |
| 6. | காவலர் தரம் I | 5 | 15 |
| 7. | காவலர் தரம் II | 5 | 15 |

146. சீருடை பராமரிப்புப் படி :

காவல் துறையிலுள்ள துணை சார்பு ஆய்வாளர்களுக்கும் தலைமைக் காவலர்களுக்கும் மற்றும் காவலர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த சீருடை பராமரிப்புப்படி ரூ. 10 லிருந்து ரூ. 15 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தியக் காவல் பணி யைச் சேராத தமிழ்நாடு காவல் துறை கண்காணிப்பாளர் களுக்கும் காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர்களுக்கும் காவல் துறை துணை கண்காணிப்பாளர்களுக்கும் மாதம்

ஒன்றுக்கு ரூ. 30 வீதமும் மற்றும் காவல் துறையிலுள்ள ஆய்வாளர்களுக்கும் சார்பு ஆய்வாளர்களுக்கும் மாதம் ரூபாய் 20 வீதமும் சீருடை பராமரிப்புப்படி வழங்கப்பட்டுள்ளது.

147. வீட்டு வாடகைப் படி.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை முகாம்களில் உள்ள பாரக்ஸ் குடியிருப்புகளில் தங்கியுள்ள திருமணமான சார்புப் பணியாளர்களுக்கும் காவல் துறையிலுள்ள பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் உயர் விகித வாடகைப்படி 1—9—1981 முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

148. சமையற்காரர்களின் பணியினை ஒழுங்குப் படுத்துதல்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சார்ந்த, சமையற்காரர்களுடையப் பணியினை 26—9—1981 முதல் வரைமுறை செய்து அவர்களுக்கு அடிப்படை அரசு ஊழியர்களுக்கு உரிய எல்லாச் சலுகைகளும் வழங்கப்பட்டிருக்கிறது. சலவைத் தொழிலாளர்கள் மற்றும் நாவிதர்களின் பணியினை வரைமுறைப் படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

149. அறிவுரைப்படி.

வேலூர் மற்றும் கோயம்புத்தூரிலுள்ள காவல் பயிற்சிப் பள்ளி மற்றும் சென்னையிலுள்ள காவலர் பயிற்சி கல்லூரியில் பணிபுரியும் பல்வேறு அறிவுரையாளர்களுக்கு ' அறிவுரைப் படி ' எனப்படும் புதிய படி ஒன்று கீழ்க்குறிப்பிட்டுள்ளபடி வழங்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும் தரமும். | மாதம் ஒன்றுக்கு வழங்கப் படும் படி. |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. |
| 1. காவல்துறை துணை இன்ஸ்பெக்டர்ஜெனரல் | 150 |
| 2. காவல் துறை கண்காணிப்பாளர் .. .. | 125 |
| 3. காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் .. | 100 |
| 4. காவல் துறைக் கண்காணிப்பாளர் (துணை முதல்வர்கள்). | 100 |
| 5. காவல்துறை ஆய்வாளர்கள் .. .. | 75 |
| 6. காவல் துறை ரிசர்வ் ஆய்வாளர்கள் .. .. | 75 |
| 7. காவல் துறை சார்பு ஆய்வாளர்கள் (உதவி சட்ட அறிவுரையாளர்கள்). .. .. .. | 50 |
| 8. ரிசர்வ் சார்பு ஆய்வாளர்கள் .. .. | 50 |
| 9. ஹவில்தார்கள் தலைமைக் காவலர்கள் (நாயக்குகள்). | 40 |
| 10. ஆர்மரர் தலைமைக் காவலர்கள்/ஓட்டுநர்-தலைமைக் காவலர். | 35 |
| 11. காவலர்கள் (தரம் 2) .. .. | 20 |



150. காவல்துறையை வலுப்படுத்துதல்

இந்த ஆண்டில் 2,501 கூடுதல் பணியிடங்கள், இணைப்பு 2-ல் கண்டுள்ளவாறு வழங்கப்பட்டுள்ளன ; அவைகளில் சில முக்கியமானவைகள் வருமாறு :—

(அ) இரயில்வே காவல் துறை நிர்வாகத்தை மேம்படுத்தும் வகையில் அத்துறைக்கெனத் தனியாக ஒரு கூடுதல் காவல் துறை துணைத் தலைவர் பதவி 1981 ஆம் ஆண்டு, அக்டோபர் திங்களில் திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது.

(ஆ) நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் வட்டத்தில் வன நில ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதற்காக 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், காவல் துறை கண்காணிப்பாளர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

(இ) 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் கூடுதலாக இரண்டு தமிழ் நாடு சிறப்பு காவல் படைகள் கீழ்க்கண்ட பணியாளர் அமைப்புடன் ஏற்படுத்தப்பட்டன:—

| | |
|---|---|
| தளவாய்கள் .. .. .. | 2 |
| உதவி தளவாய்கள் .. .. .. | 8 |
| ஆய்வாளர்கள் .. .. .. | 18 |
| சார்பு ஆய்வாளர்கள் .. .. | 42 |
| உதவி சார்பு ஆய்வாளர்கள் .. .. | 12 |
| ஹவில்தார்கள் .. .. .. | 200 |
| நாயக்குகள் .. .. .. .. | 134 |
| லான்ஸ் நாயக்குகள் .. .. .. | 134 |
| காவலர்கள் தரம் 2 .. .. .. | 1,272 |

(ஈ) கீழ்க்கண்ட இடங்களில் 29 புதிய காவல் நிலையங்கள் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.—

| | |
|---|---|
| 1 சிட்லப்பாக்கம் .. | செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம். |
| 2 பெரிய காலனி விழுப்புரம் நகரம் .. | தென்னாற்காடு மாவட்டம். |
| 3 கம்மாபுரம் .. .. | தென்னாற்காடு மாவட்டம். |
| 4 ஆரோவில் .. .. | தென்னாற்காடு மாவட்டம். |
| 5 மேல் செங்கம் .. | வட ஆற்காடு மாவட்டம். |
| 6 தலசப்பாக்கம் .. | வட ஆற்காடு மாவட்டம். |
| 7 தல்சம்பட்டி .. | வட ஆற்காடு மாவட்டம். |
| 8 சேலம் இரும்பு உருக்கு ஆலை. | சேலம் மாவட்டம். |

| | | |
|---|---|---|
| 9 | ஒகேனக்கல் .. | தர்மபுரி மாவட்டம். |
| 10 | ஆலந்துறை .. | கோவை புறநகர் மாவட்டம். |
| 11 | திருப்பூர் (ஊரகம்) .. | கோவ ஊரகம் மாவட்டம். |
| 12 | கருங்கல்பாளையம் .. | பெரியார் மாவட்டம். |
| 13 | மேல்கூனூர் .. | நீலகிரி மாவட்டம். |
| 14 | தஞ்சாவூர் நகரம் (தெற்கு) | தஞ்சாவூர் மேற்கு மாவட்டம். |
| 15 | கரியா பட்டினம் .. | தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம். |
| 16 | மண்டையூர் .. | புதுக்கோட்டை மாவட்டம். |
| 17 | மாங்குடி .. .. | |
| 18 | தென்னிலை .. | |
| 19 | இடமலைப்பட்டிபுதூர் | திருச்சி மாவட்டம். |
| 20 | மதுரை பேருந்து நிலையம். | மதுரை தெற்கு மாவட்டம். |
| 21 | சேடபட்டி .. .. | |
| 22 | விளாம்பட்டி .. | மதுரை வடக்கு மாவட்டம். |
| 23 | இராயப்பன்பட்டி .. | இராமநாதபுரம் கிழக்கு மாவட்டம் |
| 24 | கேணிக்கரை .. | |
| 25 | சிவகாசி .. .. | இராமநாதபுரம் மேற்கு மாவட்டம். |
| 26 | மம்சாபுரம் .. | |
| 27 | பத்மமடை .. .. | திருநெல்வேலி மாவட்டம். |
| 28 | கோயில்பட்டி மேற்கு | |
| 29 | நித்திரவிளை .. | கன்னியாகுமரி மாவட்டம். |

(உ) செங்கல்பட்டு கிழக்கு மாவட்டத்திலுள்ள கே. கே. நகர் புறக்காவல் நிலையமும், செங்கல்பட்டு மேற்கு மாவட்டத்திலுள்ள கூவத்தூர் புறக்காவல் நிலையமும் காவல் நிலையங்களாக மாற்றப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சூரங்குடி மற்றும் சேர்வளார் அணை ஆகிய இரண்டு புறக்காவல் நிலையங்களும் திறக்கப்பட்டன.

(ஊ) 1981 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் புதிதாக இரயில்வே காவல் துறை கண்காணிப்பாளர் பதவி ஒன்று சென்னையைத் தலைநகராகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது.



(எ) அமைச்சுப் பணிகளுக்காக கீழ்க்கண்ட கூடுதல் பணியாளர்கள் வழங்கப்பட்டனர் :—

| | |
|---|---|
| நேர்முக உதவியாளர்கள் .. .. .. .. | 2 |
| கண்காணிப்பாளர்கள் .... .. .. .. | 19 |
| உதவியாளர்கள் .. .. .. .. .. | 20 |
| இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 40 |
| தட்டச்சர்கள் .. .. .. .. .. | 11 |
| இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்கள் .. | 2 |
| சுருக்கெழுத்தாளர்கள் .. .. .. .. | 3 |
| பதிவேட்டெழுத்தர்கள் .. .. .. | 6 |

நுண்ணறிவுப் பிரிவில் கீழ்க்கண்ட கூடுதல் பணியாளர்கள் வழங்கப்பட்டனர்—

| | |
|---|---|
| நுண்ணறிவு அலுவலர் .. .. .. .. .. | 1 |
| நுண்ணறிவு உதவியாளர்கள் .. .. .. .. | 4 |
| வானொலி மேற்பார்வையாளர்கள் .. .. .. | 10 |
| வானொலி நுண்ணறிவாளர்கள் .. .. .. | 40 |
| வானொலி ஆய்வாளர்கள் .. .. .. .. | 6 |
| வானொலி சார்பு ஆய்வாளர்கள் .. .. .. | 6 |
| வானொலி உதவி சார்பு ஆய்வாளர்கள் .. .. | 5 |
| காவல்துறை வானொலி பிரிவைச் சேர்ந்த வானொலி சார்பு ஆய்வாளர்கள். | 5 |

151. பெருநகர காவல்துறை சரகம் ஏற்படுத்துதல் :

சென்னை பெருநகரிலும் அதைச் சுற்றியிலுள்ள பகுதிகளிலும், ஏழக்கூடிய சிக்கலான காவல்துறை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் திறமையான முறையில் கையாளுவதற்கேற்ற வகையில் சென்னை பெருநகரை நான்கு காவல் மாவட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு காவல் மாவட்டத்திற்கும் தனியே ஒரு காவல் துணை ஆணையாளரை நியமித்து, அந்த நான்கு துணை ஆணையாளர்களையும் காவல்துறை ஆணையாளரின் நிர்வாக அதிகாரத்தின் கீழ் கொண்டு வரலாம் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்பொழுது செங்கல்பட்டு கிழக்கு மாவட்டத்திலுள்ள 10 காவல் நிலையங்களையும் சென்னை பெருநகர் காவல் சரகத்துடன் இணைத்துக் கொள்வதே இந்தக் கருத்தின் முக்கிய நோக்கமாகும்.

152. மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களின் ஜனத் தொகை 10 இலட்சத்திற்கு மேல் இருப்பதால் இந்நகரங்களிலும் பெருநகர காவல் அமைப்பு (Me ropoli an Police Setup) ஏற்படுத்தலாம் என அரசு முடிவெடுத்துள்ளது.

153. இராமநாதபுரம், மற்றும் திருநெல்வேலி மாவட்டங் களின் காவல் நிர்வாக எல்லைகளில் தேவையான மாற்றங்கள் செய்து, மேலும் ஒரு காவல் மாவட்டத்தை ஏற்படுத்தலாம் எனவும் கருதியுள்ளது.

காவல் ஒழுங்குணர்வு.

154. காவல்துறையின் எல்லாத் தரத்தினரும் கட்டுப்பாடு டனும், ஆர்வத்துடனும் தொடர்ந்து நல்ல முறையில் தங்கள் கடமையைச் சிறப்புற நிறைவேற்றி அனைவருடைய நன்மதிப்பை யும் பெற்றுள்ளனர்.

155. மாநிலத்தில் பாதுகாப்பிற்கு உறுதி செய்தல், பொது ஒழுங்கைப் பராமரித்தல், குற்றங்கள் நடைபெறா வண்ணம் தடுத்தல், குற்றங்கள் குறித்துப் புலனாய்வு செய்துகண்டறிதல் ஆகியவற்றில் சட்டப்படி தமிழ்நாடு காவல்துறை தனது பங்கை தொடர்ந்து செயற்படுத்தும். பொதுச் சுகாதாரம், பாதுகாப்பு வசதி ஆகியவற்றிற்கு உகந்ததாக உள்ள ஒழுங்குமுறைச் சட்டங் களைச் செயல்படுத்துதல், சமூக நலச் சட்டங்களை குறிப்பாக தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், மக்கள் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் போன்ற சட்டங்களைச் செயல்படுத்துதல் ஆகியவையும் தொடர்ந்து காவல்துறையின் முழுக் கவனத்தையும் பெறும். குறிப்பாக கீழ்வரும் அணுகு முறைகளுடன் காவல்துறை தனது பணிகளை நிறைவேற்றும் ;

(அ) தெரிவிக்கப்பட்ட குற்றங்கள் அனைத்தையும் புள்ளி விவர நிலையைக் கருதாமல் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்படும் குற்றங்களை பதிவு செய்வதின் மூலம்தான் அக்குற்றங்களை வெளிப்படுத்தி நடவடிக்கை எடுக்க முடியும்.

(ஆ) மிகச் சிறிய குற்றங்கள் குறித்து, இயன்ற வரையில் அக்குற்றங்களைச் செய்தோரை எச்சரித்து விட்டுவிட வேண்டும். காவல்துறை, நீதிமன்றங்கள், சிறைத்துறை, குற்றவாளிகள் நன்னடத்தை குறித்து கண்காணிக்கும் பிரிவு ஆகியவை அடங்கிய மாநிலக் குற்றவியல் நிர்வாகம், தன்வசமுள்ள வரையறுத்த அளவு வசதிகளை மிகச் சிறிய குற்றங்களை குறித்து, அநாவசிய மாகப் பயன்படுத்தவோ அல்லது சிதரடிக்கவோ கூடாது. மது விலக்கைப் பொறுத்தமட்டில் காவல்துறையினர் மதுவிலக்கு குற்றம் புரிவதற்குக் காரணமாக உள்ள வாயில்களை, அதாவது கள்ளத்தனமாக மது தயாரித்தல், அவற்றைக் கடத்துதல், அதிக





அளவிற்கு கையிருப்பில் வைத்திருத்தல், விற்பனை செய்தல் ஆகியவை குறித்து கண்டறிவதில் தங்களது கவனத்தை தீவிரப் படுத்த வேண்டும்.

(இ) புகார் செய்பவர்களாகவோ, குற்றம் சாட்டப்பட்ட ராகவோ அல்லது உதவி நாடி வருவோராகவோ காவல்நிலையங் களுக்கு வரக்கூடிய மக்களில் பெரும்பாலானவர்கள் சமுதாயத்தில் ஏழ்மை நிலையில் உள்ளவர்களாக அல்லது கீழ்நிலையில் உள்ளவர் களாக இருக்கின்றனர் என்னும் உண்மையைக் காவல்துறை புரிந்துக் கொள்ள வேண்டும். எனவே, அவர்களிடம் அனுதாபத் தோடும் உதவி புரியக் கூடிய தன்மையிலும் நடந்துக் கொள்ள வேண்டும்.

(ஈ) காவல்துறை ஒட்டு மொத்தமாக மிகுந்த ஒழுங்குமுறை கட்டுப்பாட்டுடன் கூடியதாகவும், திறன் வாய்ந்ததாகவும் எப்பொழுதும் இருக்க வேண்டும். இதற்காக கட்டுப்பாடு, அனைத்துத் துறைகளிலும் உயரிய தரங்களையும் குறிப்பாக நேர்மையும் வேலைத்திறனும் அற்றவர்கள் விஷயத்தில் தயை தாட்சண்யமின்றிச் செயல்படுத்த வேண்டும். இவ்வாறு செய்கை யில் காவலர்களை விட காவல்துறை அதிகாரிகளைப் பொறுத்த மட்டில் இதனை மேலும் கண்டிப்பாகவே செயற்படுத்த வேண்டும்

(உ) காவல்துறையினரின் தூய்மையையும் திறமையையும் உறுதி செய்யும் பொருட்டு, அவர்களின் ஒழுங்கையும் கட்டுப் பாட்டையும் உயரிய நிலையில் பேணி வர வேண்டும். எனவே, இக்குறிக்கோளை எய்துவதற்கான இன்றியமையாத அடிப்படை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

(ஊ) பொது மக்கள் காவல்துறையினரால் நன்கு பாதுகாக் கப்படுவதற்கு உரிமையுடையோராவர். எனவே, இதுகாறும் போதிய அளவிற்கு காவல் பாதுகாப்பு இல்லாத பகுதிகளில் காவல் நிலையங்களை ஏற்படுத்தி, இவற்றில் நன்கு பயிற்சி பெற்ற காவலர்களும் அதிகாரிகளும் போதிய எண்ணிக்கையில் நியமிக்கப்படுவார்கள்.

(எ) அவ்வாறு திறம் படைத்த காவல் பாதுகாப்பு கிட்டு வதை உறுதி செய்யும் பொருட்டு காவல்துறையில் பயிற்சி வசதிகள் மேம்படுத்தப்படும். ஆராய்ச்சி வசதிகள் வலுப் படுத்தப்படும். காவல்துறையை நவீன முறைப்படுத்துவதும் தொடரும்.

(ஏ) இயன்றவரை வனங்கள்-வனவிலங்குகள் ஆகியவற் றைப் பாதுகாத்தல், விலங்குகளுக்குக் காடுமைகள் இழைக்கப்படு வதைத் தடுத்தல், துப்புரவுக் கேடு, சத்தத்தால் வரும் கேடு தூய்மைக்கேடு ஆகியவற்றைத் தடுத்தல் போன்ற ஏனைய பணி களிலும் காவல் துறை முனைப்புடன் உதவி புரிய வேண்டும்.

(ஐ) பொது மக்களின் நன்மதிப்புடன் பெறும் ஆதரவு இன்றியமையாதது என்பதைக் காவல் துறையினர் உணர்ந்து இத்தகைய ஒத்துழைப்பை மிக அதிக அளவில் பெறும் வகையில் மக்கள் தொடர்பைச் சீர் படுத்திக் கொண்டு மேலும் தங்கள் பணிகளைத் தொடர வேண்டும்.

## இணைப்பு 1. (பத்தி 2).

31–12–1981 நிலவரப்படி — காவல்துறையின் அமைப்பு.

| | |
|---|---|
| காவல்துறை தலைவர் .. .. .. .. | 1 |
| காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் .. .. | 5 |
| காவல்துறை கூடுதல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் | 4 |
| காவல்துறை ஆணையாளர் .. .. .. | 1 |
| காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் .. | 12 |
| காவல்துறை கண்காணிப்பாளர்கள் .. .. | 43 |
| காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் .. | 23 |
| காவல்துறைகூடுதல் கண்காணிப்பாளர்கள் (சேமப் படை). | 7 |
| காவல்துறை துணை ஆணையாளர் (சேமப்படை) | 1 |
| காவல்துறை இணை கண்காணிப்பாளர் .. .. | 5 |
| தளவாய்கள் .. .. .. .. .. | 8 |
| துணை தளவாய்கள் .. .. .. .. | 8 |
| காவல்துறை உதவி கண்காணிப்பாளர்கள் .. | 12 |
| காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் (நிலை 1) | 176 |
| காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் (நிலை 2). | 34 |
| காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் (நிலை 3). | 29 |
| ஆய்வாளர்கள் [ஆட்சுடன்ட் ஆய்வாளர்கள் .. | 755 |
| ரிஸர்வ் ஆய்வாளர்கள் .. .. .. .. | 84 |
| துணை ஆய்வாளர்கள் .. .. .. .. | 254 |
| சார்பு ஆய்வாளர்கள் .. .. .. .. | 2.422 |
| ரிஸர்வ் சார்பு ஆய்வாளர்கள் .. .. .. | 310 |
| உதவி சார்பு ஆய்வாளர்கள் .. .. .. | 891 |
| ரிஸர்வ் உதவி சார்பு ஆய்வாளர்கள் .. .. | 164 |
| தலைமைக் காவலர்கள் .. .. .. | 4,777 |
| ஹவில்தார்கள் .. .. .. .. .. | 659 |
| நாயக்குகள் .. .. .. .. .. | 564 |
| லான்ஸ் நாயக்குகள் .. .. .. .. | 519 |



| | |
|---|---|
| காவலர்கள் தரம் 1 .. .. .. .. | 4,575 |
| காவலர்கள் தரம் 2 .. .. .. .. | 36,075 |
| பெண் சார்பு ஆய்வாளர்கள் .. .. .. | 82 |
| பெண் தலைமை காவலர்கள் .. .. .. | 64 |
| பெண் காவலர்கள் .. .. .. .. | 662 |
| | 53,221 |

## இணைப்பு 2 (பத்தி 150).

1–1–1981 முதல் 31–12–1981 முடிய வழங்கப்பட்ட கூடுதல் பணியாளர்களின் விவரப்பட்டியல்.

நிர்வாகப்பணி—

| | |
|---|---|
| 1 காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல். | 1 |
| 2 காவல் துறை கண்காணிப்பாளர் .. | 1 |
| 3 காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் (நிலை 1). (குற்றம் மற்றும் புலனாய்வுத்துறையில் உயர்த்தப்பட்ட காவல்துறை துணை கண் காணிப்பாளர் பதவியையும் சேர்த்து). | 2 |
| 4 காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் (நிலை 2). | 5 |
| 5 தளவாய்கள் .. .. .. .. | 2 |
| 6 காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் .. | 2 |
| 7 காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் (நிலை 2). | 7 |
| 8 காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் (நிலை 3). | 8 |
| 9 ஆய்வாளர்கள் .. .. .. .. | 22 |
| 10 சார்பு ஆய்வாளர்கள் .. .. .. | 82 |
| 11 ரிஸர்வ் சார்பு ஆய்வாளர்கள் .. .. | 2 |
| 12 துணை சார்பு ஆய்வாளர்கள் .. .. | 41 |
| 13 ஹவில்தார்கள் .. .. .. .. | 200 |
| 14 தலைமைக்காவலர்கள் .. .. .. | 87 |
| 15 நாயக்குகள் .. .. .. .. | 134 |
| 16 லான்ஸ் நாயக்குகள் .. .. .. | 134 |
| 17 காவலர்கள் தரம் 1 .. .. .. | 6 |
| 18 காவலர்கள் தரம் 2 .. .. .. | 1,765 |
| | 2,501 |

அமைச்சுப்பணி—

| | | |
|---|---|---|
| 1 | நேர்முக உதவியாளர்கள் .. .. .. | 2 |
| 2 | கண்காணிப்பாளர்கள் .. .. .. | 19 |
| 3 | உதவியாளர்கள் .. .. .. .. | 20 |
| 4 | இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 40 |
| 5 | தட்டச்சர்கள் .. .. .. .. | 11 |
| 6 | இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் | 2 |
| 7 | சுருக்கெழுத்தாளர்கள் .. .. .. | 3 |
| 8 | பதிவேட்டெழுத்தர்கள் .. .. .. | 6 |
| | | 103 |

இதர பணியாளர்கள்—

| | | |
|---|---|---|
| 1 | நுண்ணறிவு அலுவலர் .. .. .. | 1 |
| 2 | நுண்ணறிவு உதவியாளர் .. .. .. | 4 |
| 3 | வானொலி மேற்பார்வையாளர்கள் .. | 10 |
| 4 | வானொலி நுண்ணறிவாளர்கள் .. .. | 40 |
| 5 | வானொலி ஆய்வாளர்கள் .. .. | 6 |
| 6 | வானொலி சார்பு ஆய்வாளர்கள் .. .. | 6 |
| 7 | வானொலி உதவி சார்பு ஆய்வாளர்கள் .. | 5 |
| 8 | வானொலி தலைமைக் காவலர்கள் .. | 5 |
| | | 77 |

கோரிக்கை எண் 16.

தீயணைப்புப் பணிகள்—கொள்கை விளக்கக் குறிப்பு.

தமிழ்நாடு தீயணைப்புத்துறை, 1967 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தனித் துறையாக இயங்கி வருகிறது. நாட்டிலேயே மிகப் பெரியதாகவும், சீரிய திறமை வாய்ந்த துறையாகவும் தமிழ்நாடு தீயணைப்புத்துறை, தொடர்ந்து பணியாற்றி வருகிறது. மக்களின் உயிரையும் உடமைகளையும், தீ விபத்துகளிலிருந்தும், பிற விபத்துக்களிலிருந்தும் காத்து வருவதே, தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் நோக்கமும், குறிக்கோளும் ஆகும். இத்துறையின் பணி, இரவு பகல் எந்நேரத்திலும் பொது மக்களுக்கு கிடைக்குமாறு செயலாற்றி வருகிறது.

2. தீ விபத்தைத் தடுப்பதும், தீயை அணைப்பதும், இத்துறையின் தலையாய பணியாயினும், மக்களின் நலனுக்காக பிற வகையிலும் பல நிலைகளில் இத்துறை நற்பணியாற்றி வருகின்றது



மேலும் பொருட்காட்சிகளிலும், திருவிழாக்களிலும், தீத்தடுப்பு ஏற்பாடுகளைச் செய்வதுடன், சிதைந்த கட்டிடங்களின் இடி பாடுகளிலும், வெள்ளம், கிணறுகள் முதலிய இடர்களில் சிக்கிக் கொண்ட மக்களையும், கால் நடைகளையும் காப்பாற்றும் நல்ல பணியையும் புரிந்து வருகிறது. நோயுற்றவர்களையும், காயமுற்றவர்களையும் உடனடி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக் கூடிய நோயாளர் ஊர்தி கள், பெரிய நகரங்களிலுள்ள தீயணைப்பு நிலையங்களில் பரா மரிக்கப்பட்டு வருகின்றன. கொள்ளை நோய்கள் தோன்றிப் பரவும் காலங்களில், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இத்துறை பெரிதும் உதவுகிறது. தேர்தல் காலங்களிலும், கலவரங்களின் போதும் காவல் துறையினருடன் இணைந்து பணியாற்ற தீயணைப்புத்துறை பணியாளர்களும் அனுப்பி வைக்கப்படுகின்ற னர். மேற் கூறிய சமுதாய நலப் பணிகளைத் தவிர பொது மக்கள் கூடும் இடங்கள் பற்றிய சட்டம், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், சென்னை மாநகராட்சிச் சட்டம், தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம், படைக்கலச் சட்டம் ஆகியவற்றில் இயற்றப்பட்ட விதிகளின்படியும் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்படவுள்ள பல்வேறு இடங்களை ஆய்வு செய்யும் பணியையும் இத்துறை அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

3. பணியாளர்களின் எண்ணிக்கை :

1982 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு தீயணைப்புத்துறைப் பணியாளர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் இணைப்பு 1-ல் குறிக்கப்பட்டுள்ளன.

4. தீயணைப்பு நிலையங்கள் :

நமது மாநிலத்தில், 1982 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20 ஆம் நாள் நிலவரப்படி, இத்துறைப் பணியாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் சேலம் உருக்காலையில் இயங்கி வரும் தீயணைப்பு நிலையம் உட்பட மொத்தம் 123 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. (இணைப்பு 2).

இவற்றில் 15 தீயணைப்பு நிலையங்கள் சென்னை மாநகரிலும் ஏனைய 108 தீயணைப்பு நிலையங்கள் வெளியூர்களிலும் அமைந் துள்ளன. இவ்வாண்டில் மதுராந்தகத்திலும், அறந்தாங்கியிலும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட இரு தீயணைப்பு நிலையங்களும் இதனுள் அடங்கும். சாத்தூர், பொன்னமராவதி, அரூர், சங்க கிரி, நாங்குனேரி ஆகிய ஐந்து இடங்களில் புதிதாக ஐந்து தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. மேலும், 1982–83 முதல் அரையாண்டில் 12 இடங் களில் புதிதாகத் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிதாகத் தீயணைப்பு நிலை யங்களை ஏற்படுத்துவதற்காக முன்னுரிமைப் பட்டியலிலுள்ள நகரங்களின் பட்டியல் இணைப்பு 3-ல் காட்டப்பட்டுள்ளது.

5. தீயணைப்பு—உதவி அழைப்புகள் :

1981 ஆம் ஆண்டில் இம்மாநிலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்களில் 10,697 உதவிக்கான அழைப்புகளைப் பெற்றன. அவற்றில் 158 போலி அழைப்புகளாகும். அவசர மீட்பு அழைப்புகள் 1,828 ஆகும். எஞ்சிய 8,711 அழைப்புகள் உண்மையிலேயே தீ விபத்துத் தடுப்புப் பற்றிய அழைப்புகளாகும். இத் தீ விபத்து விளிகளில் 129 விபத்துக்களில் ஒவ்வொன்றிலும் மனித உயிர் அல்லது ரூ. 50,000-க்கு மேற்பட்ட உடைமைகள் இழப்பேற்பட்டது. இம்மாநிலத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்களினால், அழிந்து விட்ட அல்லது சேதமடைந்த உடைமைகளின் மதிப்பு ரூ. 6,12,72,840 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது பற்றிய விவரங்கள் இணைப்பு (4)-இல் காட்டப்பட்டுள்ளது.

6. அவசர மீட்புப் பணி அழைப்புகள் :

(i) 1981 ஆம் ஆண்டில் நேர்ந்த அவசர மீட்பு அழைப்புகளின் எண்ணிக்கை 1,828. தீயணைப்புத் துறைப் பணியாளர்கள் அல்லும் பகலும் அயராமல் அரும்பாடு பட்டு மக்களின் உயிர்களையும்; உடைமைகளையும் காப்பாற்றியுள்ளனர். இத் துறையினரின் சீரிய பணியைப் பொது மக்களும், செய்தித் தாள்களும் பெரிதும் பாராட்டியுள்ளது.

(ii) 11–2–1981 அன்று வாணியம்பாடி இரயில்வே நிலையத்திற்கு அருகில் ஏற்பட்ட மிகப் பெரிய இரயில் விபத்தில் இத்துறையைச் சார்ந்த அலுவலர்களும், பணியாளர்களும், தங்கள் உயிரை துச்சமென மதித்து, விபத்தில் சிக்குண்ட பயணிகளைக் காப்பாற்றினர். இதனைப் பாராட்டு முகமாக அரசு மீட்பு அழைப்பில் ஈடுபட்ட அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் ரொக்கப் பரிசு வழங்கியுள்ளது.

7. நோயாளர் ஊர்தி உதவிப் பணி :

தீயணைப்பு ஊர்த்திப் பிரிவுகளைத் தவிர, நகரங்களில் தேவைக் கேற்ப, அவசரச் சிகிச்சைக்காக, நோயாளிகளை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் ஊர்திகளும் தீ அணைப்பு நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1981 ஆம் ஆண்டு மட்டும் இவ்வூர்திகள் 5,893 அழைப்புகளுக்குச் சென்று பணி புரிந்துள்ளன. இவற்றில் 299 அழைப்புகள் விபத்து மற்றும் இலவச அழைப்புகள், மீதமுள்ள 5,594 அழைப்புகளுக்கு கட்டணம் பெறப்பட்டுள்ளன. நோயாளிகளைச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றதற்காக, நோயாளர் ஊர்தி வாடகைக் கட்டணமாக ரூ. 1,44,396.50 தொகை பெறப்பட்டு, அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.



8. ஊர்தி விபத்து உதவி வண்டி :

இத்துறையில் ஒரே ஒரு ஊர்தி விபத்து வண்டி உள்ளது. தென் சென்னைக் கோட்டத்தைச் சார்ந்த எழும்பூர் தீயணைப்பு நிலையத்தில் இவ்வூர்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சாலை விபத்துக்களில் கவிழ்ந்த ஊர்திகளைத் தூக்கி அகற்றவும், இடிந்த கட்டிடங்களில் மீட்புப் பணியின்போது பெரும் பாரமான கட்டிடப் பகுதிகளை அகற்றவும் இவ்வூர்தியில் தனித்துணைப் பாகங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இது போன்ற பணிகளுக்காக 51 முறை இவ்வூர்தி பயன்படுத்தப்பட்டு ரூ. 10,310 கட்டணமாக பெறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இப்பணிகளின் வாயிலாக ரூ. 6,128 கிடைத்துள்ளது.

9. பணிமனை நடமாடும் பழுது தீர்வுக்குழு :

இத்துறையின் ஊர்திகள், எந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றைப் பழுது பார்ப்பதற்காக, சென்னையில் பணிக்களரி ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. துறை வண்டிகள் தொடர்பாக 190 பழுது பார்ப்புப் பணி நடைபெற்றது. பழுது பார்ப்பதற்காக ஏற்பட்ட செலவு ரூ. 1,13,211.48 ஆகும். ஒவ்வொரு கோட்டத் தலைமையிடத்திலும், ஒரு நடமாடும் பழுது தீர்வுக் குழு இயங்கி வருகிறது. இக்குழு, அந்தந்தக் கோட்டங்களிலுள்ள பழுதற்ற ஊர்திகளைச் செப்பனிட்டு வருகிறது. தீ அணைப்புத் துறையில் கோட்ட வாரியாக ஒப்புதல் அளிக்கப்பட்ட சாதனங்களின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை இணைப்பு 5-இல் குறிக்கப்பட்டுள்ளது.

10. பரிசுகள் :

இவ்வாண்டில் ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலர் உள்பட ஏழு தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கு, 1981 ஆம் ஆண்டில் வீரதீரச் செயல்களுக்கான பாரதக் குடியரசுத் தலைவரது பதக்கமும் பாராட்டத்தக்க நற்பணிக்காக ஐந்து பணியாளர்களுக்கு குடியரசுத் தலைவரது பதக்கமும் வழங்கப்பட்டுள்ளன.

பாராட்டத்தக்க பணி புரிந்ததற்காக ஓட்டுநர்-எந்திரக் கம்மியருக்கும், தீயணைப்புப் பணியாளர் ஒருவருக்கும் தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

11. தீயணைப்புத்துறைப் பணியாளர்களின் நல நிதி :

தமிழ்நாடு தீயணைப்புத்துறை பணியாளர் நல நிதி நிறுவனம் 1962 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனத்தின் நோக்கம் தீயணைப்புத்துறை பணியாளர்களுக்கு துன்பமேற்படும்போது அவர்களுக்கு நிதியுதவி செய்வதும் அவர்களின் நலனை மேம்படுத்துவதுமாகும். இத்துறையைச் சார்ந்த பணியாளர்களோ அவர்களைச் சார்ந்தவர்களோ காசநோய், தொழு

நோய், புற்றுநோய் ஆகியவற்றால் பீடிக்கப்படும்போது, அவர்களின் சத்துணவுக்காக நிதி உதவி வழங்கப்படுகிறது. பணியாளர்களின் குழந்தைகளின் உயர் கல்விச் செலவிற்கும், இறந்த பணியாளர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்கவும் அவர்களைச் சார்ந்தவர்களுடைய ஈமச் சடங்குச் செலவிற்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்த நிதியிலிருந்து பணிக்காலத்தில் எவ்வித நிதி உதவியும் பெறாதவர்களுக்கு அவர்களுக்கு ஓய்வு பெறும்போது அடையாள மானியத் தொகை அளிக்கப்படுகிறது. இந்நிதியிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 3,598 ஆகும். கடந்த ஆண்டில் இந்நிதியிலிருந்து ரொக்க நிவாரணமாக ரூ. 11,644.75 வழங்கப்பட்டிருக்க 1981—82 ஆம் ஆண்டில் ரூ. 12,842.95 வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் அரசு இந்நிதிக்கு மொத்த மானியமாக ரூ. 10,000 வழங்கி வருகிறது.

12. பயிற்சி :

சென்னையிலுள்ள தமிழ்நாடு தீயணைப்புத்துறை மாநிலப் பயிற்சிப் பள்ளி நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும் இத்துறை பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் தொடர்ந்து பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சிப்பள்ளி ஒரு கோட்டத் தீ அணைப்பு அலுவலரின் கீழ் செயற்பட்டு வருகிறது. அவருக்கு உதவியாக நிலையத் தீயணைப்பு அலுவலர் இருவரும், தீயணைப்புப் பணியாளர்கள் இருவரும் உள்ளனர். இந்த ஆண்டில் தீயணைப்புப் பணியாளர்களுக்காக 4 பயிற்சி வகுப்புகளும், நிலைய தீயணைப்பு அலுவலர்களுக்கும் நேரடியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட கோட்டத் தீயணைப்பு அலுவலர் ஒருவருக்கும் ஒரு பயிற்சி வகுப்பும் நடத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டில் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பத்து பணியாளர்கள் உட்பட மொத்தம் 367 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

13. பணியாளர் நலத் திட்டம் :

(i) உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கும் அப்பதவித் தரத்திற்கு கீழுள்ள பணியாளர்களுக்கும் சலுகை விலையில் இன்றியமையாத உணவுப் பொருள்களை வழங்க அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது. இத் திட்டம் 1—1—1981 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால், அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 30 இலட்சம் செலவாகிறது.

(ii) கடந்த ஆண்டில் ரூ. 40.5 இலட்சம் செலவில் உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் தீயணைப்புத்துறை பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளித்தது. இக்கட்டிடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் மூன்றிலிருந்து ஆறு மாதங்களுக்குள்ளாக கட்டிடப் பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணிகள் முடிவடைந்ததும், 3 நிலைய தீயணைப்பு அலுவலர்களுக்கும் 117 பணியாளர்களுக்கும் இலவச குடியிருப்புகள் அளிக்கப்படும்.



14. பொது :

இம்மாநிலத்தில் தீயணைப்புத் துறையை மேம்படுத்துவதற்கும், நவீன சாதனங்கள் வாங்குவதற்காகவும் இந்திய பொது ஈட்டுறுதிக் கழகம் ரூ. 1.41 கோடி கடன் வழங்கியுள்ளது. இந்நிதியிலிருந்து சில பழைய ஊர்திகளை மாற்றி விட்டு புதிய ஊர்திகள் வாங்கவும் நவீன சாதனங்களை வாங்கவும் கருதப்பட்டு உள்ளது. இங்கிலாந்திலிருந்து ரூ. 42 இலட்சம் செலவில் "ஸ்நார்க்கல்" என்னும் நவீன சாதனம் ஒன்று இறக்குமதி செய்யப்பட்டு சென்னை மாநகரில் 1980 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொது காப்புறுதிக் கழகத்திடமிருந்து கடன் பெற்று நவீன சிறப்புத் தீயணைப்புச் சாதனங்களை வாங்கவும் கருதப்பட்டுள்ளது. இந்துறையின் பயனை கருத்திற் கொண்டு, இதன் செயல் திறனை மேம்படுத்த வேண்டி கூடுதலாக இரு வட்டாரங்கள், மற்றும் 4 கோட்டங்களும் தேவையான பணியாளர்களுடன் (கோயம்புத்தூரில் மேற்கு வட்டாரமும், திருச்சிராப்பள்ளியில் மைய வட்டாரமும்) ஏற்படுத்துவதன் வாயிலாக இத்துறையை மீண்டும் மாற்றியமைக்க அரசு முடிவு செய்துஉள்ளது. துறை ஊர்திகளை இன்னும் சிறப்பான முறையில் பராமரிக்கவும், உடனடியாக பழுது பார்க்கவும் சென்னையில் உள்ள தமிழ்நாடு தீயணைப்புத் துறை பணிக்களரியில் உதவிக் கோட்ட தீயணைப்பு அதிகாரிக்கு (போக்குவரத்து) பதிலாக உதவிப் பொறியாளர் ஒருவருக்கும், தொழில் நுட்ப உதவியாளர் ஒருவருக்கும் ஒப்புதல் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. தனி வகை ஊர்திகளின் ஓட்டுநர்களுக்கு சிறப்புப் பயிற்சியளிக்கும் பொருட்டு சென்னையிலுள்ள தமிழ்நாடு அரசு தீயணைப்பு ஆசினர் பயிற்சிப் பள்ளிடில் ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவும் அரசு வடிவ செய்துள்ளது.

இவ்வாறு இத்துறை தொடர்ந்து பொதுமக்களுக்கு பயன் உள்ள பணியாற்றி வருகிறது.

[1982 மார்ச் 22

## இணைப்பு 1—(பத்தி 3.)

தமிழ்நாடு தீயணைப்புத் துறை—1982 ஆம் ஆண்டு சனவரி திங்கள் முதலாம் நாள் அன்று ஒப்பளிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை.

| வரிசை எண்ணும் பதவிப் பெயரும். | பதவி எண்ணிக்கை. |
|---|---|
| (நிருவாகம்). | |
| 1. தீயணைப்புத்துறை இயக்குநர் .. .. | 1 |
| 2. தீயணைப்புத்துறை துணை இயக்குநர் .. | 2 |
| 3. கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் .. | 9 |
| 4. உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் .. | 10 |
| 5. உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் (போக்குவரத்து). | 1 |
| 6. நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் .. | 138 |
| 7. நிலைய அலுவலர் (போக்குவரத்து) .. .. | 9 |
| 8. முன்னணித் தீயணைப்போர் .. .. .. | 459 |
| 9. ஓட்டுநர்-எந்திரக் கம்மியர் .. .. .. | 123 |
| 10. தீயணைப்புத்துறை கம்மியர் .. .. .. | 8 |
| 11. தீயணைப்புத்துறை ஓட்டுநர்கள் .. .. | 693 |
| 12. பற்றவைப்பாளர் (வெல்டர்) .. .. | 1 |
| 13. தீயணைப்புத்துறை தச்சர் .. .. .. | 1 |
| 14. தீயணைப்புப் பணியாளர் அதற்கு நிகரான பதவித் தரத்திலுள்ளவர்கள். | 2,612 |
| மொத்தம் .. | 4,067 |

நிருவாகப் பணியாளர்கள்.

| | |
|---|---|
| 1. தீயணைப்புத்துறை இயக்குநரின் நிருவாக நேர்முக உதவி அலுவலர். | 1 |
| 2. கண்காணிப்பாளர்கள் (தேர்வுத்தரம்) .. | 4 |
| 3. கண்காணிப்பாளர்கள் .. .. .. | 9 |
| 4. உதவியாளர்கள் .. .. .. .. | 44 |
| 5. இளநிலை உதவியாளர்கள் .. .. .. | 48 |
| 6. சுருக்கெழுத்து தட்டச்சர்கள் .. .. | 3 |
| 7. தட்டச்சர்கள் .. .. .. .. | 16 |
| 8. பதிவேட்டு எழுத்தர்கள் .. .. .. | 10 |
| 9. அடிப்படை பணியாளர்கள் .. .. | 25 |
| மொத்தம் .. | 160 |



1982 மார்ச் 22]

## இணைப்பு 2.

(பத்தி 4.)

20—2—1982 ஆம் நாள் நிலவரப்படி இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பட்டியல்.

| மாவட்டத்தின் பெயர். (1) | வட்டத்தின் பெயர். (2) | இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். (3) |
|---|---|---|
| சென்னை மாநகர் (வடக்கு) | | |
| | | வட வட்டாரம். |
| | | சென்னை மாநகர் கோட்டங்கள். |
| | | வண்ணாரப்பேட்டை |
| | | எசுபிளனேடு |
| | | இராயபுரம் |
| | | வியாசர்பாடி |
| | | செம்பியம் |
| | | கீழ்ப்பாக்கம் |
| | | வேப்பேரி |
| | | தண்டையார்பேட்டை |
| | | சென்னை மாநகர் (தெற்கு) |
| | | எழும்பூர் |
| | | திருவல்லிக்கேணி |
| | | மயிலாப்பூர் |
| | | தேனாம்பேட்டை |
| | | அசோக் நகர் |
| | | சைதாப்பேட்டை |
| | | கிண்டி |
| | | தென் ஆர்க்காடு—செங்கற்பட்டு கோட்டங்கள். |
| | | தென் ஆர்க்காடு மாவட்டம். |
| சிதம்பரம் .. | .. | சிதம்பரம் |
| கடலூர் .. | .. | கடலூர் |
| பண்ருட்டி .. | .. | பண்ருட்டி |
| விருத்தாசலம் .. | .. | விருத்தாசலம் |
| கள்ளக்குறிச்சி .. | .. | கள்ளக்குறிச்சி |
| திருக்கோவிலூர் .. | .. | திருக்கோவிலூர் |
| உளுந்தூர்ப்பேட்டை | .. | உளுந்தூர்ப்பேட்டை |
| விழுப்புரம் .. | .. | விழுப்புரம் |
| திண்டிவனம் .. | .. | திண்டிவனம் |
| செஞ்சி .. | .. | செஞ்சி |

## தென் ஆர்காடு—செங்கற்பட்டு கோட்டங்கள்—தொடர்ச்சி.

### செங்கல்பட்டு மாவட்டம்.

| | |
|---|---|
| காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் |
| ஸ்ரீபெரும்புதூர் | ஸ்ரீபெரும்புதூர் |
| மதுராந்தகம் | மதுராந்தகம் |
| செங்கற்பட்டு | செங்கற்பட்டு |
| சைதாப்பேட்டை | அம்பத்தூர் |
| | தாம்பரம் |
| பொன்னேரி | மணலி |
| | எண்ணூர் |
| திருவள்ளூர் | திருவள்ளூர் |
| கும்மிடிப்பூண்டி | கும்மிடிப்பூண்டி |

## சேலம்—தருமபுரி—வட ஆர்க்காடு கோட்டங்கள்.

### சேலம் மாவட்டம்.

| | |
|---|---|
| சேலம் | சேலம் |
| | சேலம் உருக்குத் தொழிற்சாலை. |
| ஆத்தூர் | ஆத்தூர் |
| மேட்டூர் | மேட்டூர் |
| நாமக்கல் | நாமக்கல் |
| இராசிபுரம் | இராசிபுரம் |

### தருமபுரி மாவட்டம்.

| | |
|---|---|
| தருமபுரி | தருமபுரி |
| ஓசூர் | ஓசூர் (S) |
| கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி |

### வட ஆர்க்காடு மாவட்டம்.

| | |
|---|---|
| வேலூர் | வேலூர் |
| வாலாஜா | இராணிப்பேட்டை |
| | இராணிப்பேட்டை (சிப்காட்) |
| அரக்கோணம் | அரக்கோணம் |
| வந்தவாசி | வந்தவாசி |
| ஆரணி | ஆரணி |
| திருவண்ணாமலை | திருவண்ணாமலை |
| செங்கம் | செங்கம் |
| திருப்பத்தூர் | திருப்பத்தூர் |
| வாணியம்பாடி | வாணியம்பாடி |
| | ஆம்பூர் |
| குடியாத்தம் | குடியாத்தம் |



## தென் வட்டாரம்.

### மதுரைக் கோட்டம்.

#### மதுரை மாவட்டம்.

| | |
|---|---|
| மதுரை (S) | மதுரை |
| மதுரை (N) | தல்லாகுளம் |
| மேலூர் | மேலூர் |
| நத்தம் | நத்தம் |
| உசிலம்பட்டி | உசிலம்பட்டி |
| நிலக்கோட்டை | வத்தலக்குண்டு |
| திண்டுக்கல் | திண்டுக்கல் |
| பழனி | பழனி |
| | ஒட்டன்சத்திரம் |
| பெரியகுளம் | பெரியகுளம் |
| | தேனி-அல்லிநகரம் |
| உத்தமபாளையம் | உத்தமபாளையம் |
| | போடிநாயக்கனூர் |

### கோயம்புத்தூர்—பெரியார்—நீலகிரிக் கோட்டம்.

#### கோயம்புத்தூர் மாவட்டம்.

| | |
|---|---|
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் (S) |
| | கோயம்புத்தூர் (N) |
| மேட்டுப்பாளையம் | மேட்டுப்பாளையம் |
| பல்லடம் | திருப்பூர் |
| பொள்ளாச்சி | பொள்ளாச்சி |
| உடுமலைப்பேட்டை | உடுமலைப்பேட்டை |

#### பெரியார் மாவட்டம்.

| | |
|---|---|
| ஈரோடு | ஈரோடு |
| தாராபுரம் | தாராபுரம் |
| | காங்கேயம் |
| கோபிசெட்டிப்பாளையம் | கோபிசெட்டி பாளையம் |

#### நீலகிரி மாவட்டம்.

| | |
|---|---|
| உதகமண்டலம் | உதகமண்டலம் |
| குன்னூர் | குன்னூர் |

## திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை—தஞ்சாவூர் கோட்டம்.

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

| | | | |
|---|---|---|---|
| திருச்சிராப்பள்ளி | .. | .. | திருச்சிராப்பள்ளி |
| | | | திருவரங்கம் |
| முசிறி | .. | .. | முசிறி |
| துறையூர் | .. | .. | துறையூர் |
| பெரம்பலூர் | .. | .. | பெரம்பலூர் |
| | | | சயங்கொண்ட சோழபுரம் |
| கரூர் | .. | .. | கரூர் |
| மணப்பாறை | .. | .. | மணப்பாறை |

### புதுக்கோட்டை மாவட்டம்.

| | | | |
|---|---|---|---|
| புதுக்கோட்டை | .. | .. | புதுக்கோட்டை |
| அறந்தாங்கி | .. | .. | அறந்தாங்கி |

### தஞ்சாவூர் மாவட்டம்.

| | | | |
|---|---|---|---|
| தஞ்சாவூர் | .. | .. | தஞ்சாவூர் |
| கும்பகோணம் | .. | .. | கும்பகோணம் |
| மன்னார்குடி | .. | .. | மன்னார்குடி |
| நாகப்பட்டினம் | .. | .. | நாகப்பட்டினம் |
| திருவாரூர் | .. | .. | திருவாரூர் |
| நன்னிலம் | .. | .. | நன்னிலம் |
| மாயூரம் | .. | .. | மாயூரம் |
| பட்டுக்கோட்டை | .. | .. | பட்டுக்கோட்டை |

## திருநெல்வேலி—கன்னியாகுமரி—இராமநாதபுரம் கோட்டம்.

### திருநெல்வேலி மாவட்டம்.

| | | | |
|---|---|---|---|
| திருநெல்வேலி | .. | .. | பாளையங்கோட்டை |
| | | | திருநெல்வேலி (பேட்டை) |
| தென்காசி | .. | .. | தென்காசி |
| | | | கடையநல்லூர் |
| கோவில்பட்டி | .. | .. | கோவில்பட்டி |
| அம்பாசமுத்திரம் | .. | .. | அம்பாசமுத்திரம் |
| தூத்துக்குடி | .. | .. | தூத்துக்குடி |
| | | | தூத்துக்குடி (TTPS) |
| திருச்செந்தூர் | .. | .. | திருச்செந்தூர் |



### கன்னியாகுமரி மாவட்டம்.

| | | | |
|---|---|---|---|
| அகத்திசுவரம் | .. | .. | நாகர்கோவில் |
| | | | கன்னியாகுமரி |
| விளவங்கோடு | .. | .. | குழித்துறை |

### இராமநாதபுரம் மாவட்டம்.

| | | | |
|---|---|---|---|
| இராமநாதபுரம் | .. | .. | இராமநாதபுரம் |
| | | | இராமேஸ்வரம் |
| காரைக்குடி | .. | .. | காரைக்குடி |
| தேவகோட்டை | .. | .. | தேவகோட்டை |
| சிவகங்கை | .. | .. | சிவகங்கை |
| பரமக்குடி | .. | .. | பரமக்குடி |
| ஸ்ரீவில்லிப்புத்தூர் | .. | .. | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| இராஜபாளையம் | .. | .. | இராஜபாளையம் |
| சாத்தூர் | .. | .. | சிவகாசி |
| அருப்புக்கோட்டை | .. | .. | அருப்புக்கோட்டை |
| விருதுநகர் | .. | .. | விருதுநகர் |

## இணைப்பு 3.

(பத்தி 4).

தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

தீயணைப்பு நிலையங்கள் தொடங்குவதற்கான முன்னுரிமைப் பட்டியலிலுள்ள நகரங்கள்.

1. சங்கரன்கோயில்
2. திருமங்கலம்
3. சீர்காழி
4. காட்டுமன்னார்கோயில்
5. செய்யாறு
6. திருத்துறைப்பூண்டி
7. வால்பாறை
8. கீரனூர்
9. ஏர்க்காடு
10. நெல்லிக்குப்பம்
11. பாபநாசம்
12. நாட்டாரம்பள்ளி
13. விளாத்திகுளம்
14. திட்டகுடி
15. ஆலங்குடி
16. திருமயம்
17. வத்திராயிருப்பு
18. பேராவூரணி
19. மறைமலைநகர்

## இணைப்பு 4.

(பத்தி 5).

1981 தீ அழைப்புகள்.

| மாவட்டம். | பெருந் தீ. | நடுத்தரத் தீ. | சிறிய தீ. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சென்னை .. .. .. | 17 | 13 | 842 | 872 |
| தென் ஆற்காடு .. .. .. | 6 | 40 | 950 | 996 |
| செங்கற்பட்டு .. .. .. | 2 | 20 | 627 | 649 |
| சேலம் .. .. .. | 13 | 20 | 413 | 446 |
| தருமபுரி .. .. .. | 1 | 7 | 96 | 104 |
| வட ஆற்காடு .. .. .. | 10 | 35 | 873 | 918 |
| திருச்சிராப்பள்ளி .. .. .. | 16 | 51 | 662 | 729 |
| புதுக்கோட்டை .. .. .. | 3 | 6 | 102 | 111 |
| தஞ்சாவூர் .. .. .. | 9 | 30 | 737 | 776 |
| கோயம்புத்தூர் .. .. .. | 9 | 16 | 480 | 505 |

| (1) | (2) | (3) | (4) | [5) |
|---|---|---|---|---|
| பெரியார் .. .. .. | 9 | 20 | 313 | 342 |
| நீலகிரி .. .. .. | 1 | 1 | 58 | 60 |
| மதுரை .. .. .. | 11 | 53 | 756 | 820 |
| திருநெல்வேலி .. .. .. | 8 | 48 | 530 | 586 |
| கன்னியாகுமரி .. .. .. | 4 | 2 | 113 | 119 |
| இராமநாதபுரம் .. .. | 10 | 45 | 623 | 678 |
| மொத்தம் .. .. | 129 | 407 | 2,175 | 8,711 |



## இணைப்பு 5.

(பத்தி 9).

20–2–1982 ஆம் நாள் நிலவரப்படி ஒப்புதலளிக்கப்பட்ட தீயணைப்புப் பிரிவுகளின் சாதனங்களின் எண்ணிக்கை.

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். (1) | இயல் நீர்த் தொட்டிப் பிரிவு. (2) | பயர்டெண்டர். (3) | இழுவைக் குழாய். (4) | நோயாளர் ஊர்தி. (5) | வான் தந்தி ஊர்தி. (6) | மோட்டார் சைக்கிள். (7) | தண்ணீர் லாரிகள். (8) | ஏனைய வண்டிகள். (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வட சென்னை (8) | 13 | 3 | 3 | 4 | 3 | ... | 3 | பிக்கப் வேன் 1 (பண்டக சாலை). பாதுகாப்பு சாதனப் பிரிவு—1. நீர்க்குழாய் வண்டி—1 |
| 2 தென் சென்னை (7) கோட்ட ஒதுக்கீடு. | 10<br>1 | 3 | 3 | 5 | 3 | 3 | 3 | மடக்கு ஏணி—1 அவசரகால வேன் (ஸ்நார்க்கல்) நீர்க்குழாய் வண்டி—1 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 தென் ஆர்க்காடு (10) | 10 | 5 | 10 | 6 | 1 | 1 | .. | |
| கோட்ட ஒதுக்கீடு. | 1 | | | | | | | |
| 4 செங்கற்பட்டு (10) | 10 | 6 | 9 | 4 | .. | .. | .. | கிராஷ் டெண்டர் 1 |
| 5 வட ஆர்க்காடு (12) | 12 | 7 | 12 | 7 | 1 | 1 | .. | |
| கோட்ட ஒதுக்கீடு. | 1 | | | | | | | |
| 6 தருமபுரி (3) | 3 | 1 | 3 | 1 | .. | .. | .. | |
| 7 சேலம் (6) .. | 5 | 2 | 5 | 1 | .. | .. | 1 | சேலம் உருக்கு தொழிற்சாலை பிரிவு சேர்க்கப்படவில்லை. |
| 8 திருச்சிராப்பள்ளி (8) | 8 | 5 | 7 | 5 | 1 | 1 | .. | |
| கோட்ட ஒதுக்கீடு. | 1 | | | | | | | |
| 9 புதுக்கோட்டை (2) | 2 | 1 | 1 | 1 | 1 | .. | .. | |
| 10 தஞ்சாவூர் (8) | 8 | 6 | 7 | 6 | .. | .. | .. | |
| 11 கோயம்புத்தூர் (6) | 6 | 5 | 6 | 5 | 1 | 1 | 1 | |
| கோட்ட ஒதுக்கீடு. | 1 | | | | | | | |
| 12 பெரியார் (4) | 4 | 2 | 3 | 2 | .. | .. | .. | |
| 13 நீலகிரி (3) .. | 3 | 2 | 2 | 3 | .. | .. | .. | |
| 14 மதுரை (13) | 13 | 7 | 9 | 6 | 1 | 1 | .. | |
| கோட்ட ஒதுக்கீடு. | 1 | | | | | | | |
| 15 திருநெல்வேலி (9) | 10 | 4 | 8 | 4 | 1 | 1 | .. | கிராஷ்டெண்டர்—1 |
| கோட்ட ஒதுக்கீடு. | 1 | | | | | | | |
| 16 கன்னியாகுமரி (3) | 3 | 1 | 2 | 1 | .. | .. | .. | |
| 17 இராமநாதபுரம் (11) | 11 | 6 | 10 | 6 | — | .. | .. | |
| மொத்தம் (123) | 138 | 66 | 100 | 67 | 12 | 8 | 8 | |
| அனுமதி வழங்கப்பட்டுத் தொடங்கப்படாமலுள்ள தியணைப்பு நிலையங்கள். (17). | 17 | ... | ... | ... | .. | .. | .. | |
| அனுமதி வழங்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை (140). | 155 | 66 | 100 | 67 | 12 | 8 | 8 | |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

செவ்வாய்க்கிழமை, 1982 மார்ச் 23,
பங்குனி 10, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாம் தலை.''

எல்லா உறுப்புக்களும் நிறைந்ததாய், இடையூறுகளுக்கு அஞ்சாததாய் உள்ள வெற்றி தரும் படை, அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

### 1. தகவல் கோரல்.

வினாத்தாள் மாறியதன் காரணமாக மாணவர்களை பள்ளி விடுதியிலேயே வைத்திருப்பது.

திரு. ரா. உமாநாத் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். வேறு வழியில்லாமல் நான் இதை எழுப்புகிறேன். 150 மாணவர்கள் நேற்றிரவு திருவல்லிக்கேணியிலுள்ள ஸ்கூலில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்திருக்கிறது. அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக இருந்தாலும்கூட இப்பொழுது They are now under illegal arrest in the institution.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : No point of orde during question hour கேள்வி நேரம் முடிந்ததும்தான் வரும்.

[1982 மார்ச் 23

திரு. ரா. உமாநாத் : They have no business to restrain the students. Let them be released forthwith. அரசாங்கம் உடனடியாக அந்த மாணவர்களை ரிலீஸ் செய்யட்டும். நான் டிஸ்கஷனுக்குள்ளே வரவில்லை. Illegal restraint-ல் இப்பொழுது இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணி நேரம் பொறுத்துக்கொள்ளுங்கள்.

திரு. ரா உமாநாத் : ஒரு நிமிஷம்கூட அவர்களை அங்கு வைத்திருப்பதற்கு அனுமதிக்கக் கூடாது. The Officers have no business to detain them illegally. They must be released forthwith.

HON. THIRU S. RAMACHANDRAN : I would request the hon. Member not to keep this House under illegal restraint.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாணவர்கள் செய்யாத தவறுக்காக அவர்களை அங்கே வைத்திருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : இப்பொழுது அவர்களை ரிலீஸ் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறேன். அவர்களை அரெஸ்ட் செய்ய உரிமை கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரெஸ்டாக வைத்திருக்க வில்லை. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அரெஸ்ட் மாதிரி தெரிகிறதே தவிர அரெஸ்ட் அல்ல. மாணவர்களை ஹாஸ்டலில் தங்க வைப்பது மாதிரி தங்க வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; பேரவைத் தலைவர் அவர்களே, என்ன விவரங்கள் என்பதை அறிந்து சபைக்குச் சொல்லலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : எங்களுக்கு விவரம் வந்து விட்டது.

திரு. ரா. உமாநாத் : நேஷனல் செக்யூரிட்டி ஆக்டிலே கைது செய்தால்கூட சாப்பாடு, துணி கொடுக்கிறீர்கள். இல்லீகல் அரெஸ்டாக வைத்திருக்கிறீர்கள்.



1982 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ராங்புல் கன்ஃபைன் மென்ட் என்று சொல்கிறீர்களா?

திரு. ரா. உமாநாத் : உடனடியாக அவர்களை ரிலீஸ் செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதுபற்றி எழுப்பு வதற்கு நேரம் காலம் இல்லையா?

திரு. என். எஸ். வி. சித்தன் : ரிலீஸ் செய்வதற்கு காலம் நேரம் தேவையில்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இது போன்ற முக்கியமான பிரச்னைகள் வரும்பொழுது என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே தீர்மானம் செய்திருக்கிறோம். அது என்னவென்றால், கேள்வி நேரம் முடிந்த பிறகு எதிர்க்கட்சியிலே இருக்கின்ற முக்கிய மான தலைவர்கள் இதைப்போன்ற பிரச்சினைகளை அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக எழுப்பலாம் என்று தீர்மானித்திருக்கிறோம். அந்த வரைமுறைக்குக் கட்டுப் படக் கூடாதா?

திரு. ரா. உமாநாத் : அவர்களை இப்பொழுது ரிலீஸ் செய்யவேண்டுமென்றுதான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவ ரவர்கள் காலையிலே எட்டு மணிக்கு முதன்முதலாக இதைப் பற்றிக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : கேள்வி நேரத்திற்குப் பிறகு என்ன முடிவு செய்தாலும் அதைப்பற்றிப் பிரச்னை இல்லை. ஆனால் அவர்களை உடனடியாக ரிலீஸ் செய்ய வேண்டும். அந்த அவை முன்னவரவர்கள் இப்பொழுது வந்திருக்கிறார்கள். அந்த மாணவர்களை இப்பொழுது ரிலீஸ் செய்துவிட்டு, ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பிறகு எப்பொழுது வேண்டு மானாலும் எடுங்கள். ஒருவரையும் இல்லீகலாக ரெஸ்ட் ரெயின்ட் செய்யக் கூடாது. அவர்களைப் பிடித்து வைத்திருக் கிறார்கள். அவர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு நீங்கள் என்ன முடிவு வேண்டு மானாலும் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே என்ன நிலை மைகள் என்பது பற்றி அரசாங்கம் விசாரித்துக் கொண்டிருக் கிறது.

[1982 மார்ச் 23

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,
எழுப்ப வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள், எழுப்பி
விட்டார்கள். கேள்விநேரம் தொடரட்டும், அதற்குப் பிறகு
சொல்லலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருவல்லிக்கேணி பள்ளி
யிலே பரீட்சை எழுதிய மாணவர்கள் அங்கே நேற்று இரவும்,
இன்று காலையும் வைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதை
மட்டும் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்றிலிருந்து
எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு ஆரம்பமாகி இருக்கிறது. 3 இலட்சத்
திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் நாடெங்கும் பரீட்சை
எழுதிக் கொண்டிருக்கிறார்கள். நேற்று தமிழ் பாடத்தின் முதல்
பகுதி எழுத வேண்டிய ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரிலீஸ் பற்றி மட்டும்
தான் கேட்கிறார்கள். காரண காரிய விளக்கங்களை எல்லாம்
சொல்ல வேண்டிய தேவையில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, காரணம் சொன்னால்தான் ரிலீஸ் பண்ணலாமா
வேண்டாமா என்கிறது தெரியும். (குறுக்கீடு). இப்போது
கைது செய்யப்பட்டு வைக்கப்படவில்லை என்பதற்காகத்தான்
வருகிறேன் — ஆகவே நேற்று தமிழ் பாடம்—தாள் ஒன்று—
எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆகவே தமிழ் பாடம்—தாள்
இரண்டு—இன்றைக்கு எடுக்கப்பட வேண்டிய ஒன்று. அங்கே
இருந்த தலைமை ஆசிரியர், கண்காணிப்பாளர்களாக வைக்கப்
பட்டிருந்தவர்கள், நேற்று கொடுக்க வேண்டிய பரீட்சைத் தாளுக்
குப் பதிலாக இன்று கொடுக்க வேண்டிய பரீட்சைத் தாளை
எடுத்து மாணவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். அப்படி
கொடுத்ததற்குப் பிறகு, அரை மணி நேரம் கழித்து அதை
அறிந்து கொண்டதற்குப் பிறகு, இன்றைக்கு முதல்தாள் தான்
கொடுக்கப்பட வேண்டும். ஆனால் இரண்டாம் தாள் கொடுக்
கப்பட்டுவிட்டது என்பதை அறிந்து, அதை வாங்கிக் கொண்ட
தற்குப் பிறகு பரீட்சை இயக்குநர் அவர்களுக்குத் தெரிவித்
தார்கள். அவரும் மற்றைய அதிகாரிகளும் உடனடியாக அங்கே
சென்று அந்தத் தாள்களை எல்லாம் மறுபடியும் வாங்கி வைத்துக்
கொண்டு, முதல் தாளைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இரண்
டாம் தாள் அரைமணி நேரம் பையன்களுடைய கைகளிலே
இருந்ததன் காரணமாக, அவர்கள் நேற்று வெளியே செல்வார்
களானால், வெளியே சொல்லி, அந்தத் தாள்கள் ' அவுட் '
என்று ஆகிவிடுமானால் அதன் காரணமாக இன்று இரண்டு
தன்மையிலேதான் வைக்க முடியும். அல்லது பரீட்சையை மறு
படியும் ஒரு தடவை வைக்க வேண்டி வரும். மறுபடியும் வைக்
கும்போது 3 இலட்சம் மாணவர்கள் கஷ்டப்படும் அளவுக்கு சூழ்



நிலை ஏற்படுமோ என்று அங்கே இருக்கின்ற ஆசிரியர்கள் கருதி,
அங்கே இருக்கின்ற ஆசிரியர்கள் அங்கே இருக்கின்ற மாணவர்
களைக் கலந்து கொண்டு, அவர்கள் வெளியே சென்றால் இந்தக்
கேள்விகள் ' அவுட் ' ஆகும் என்பதற்காக, திருவல்லிக்
கேணியில் உள்ள உயர்நிலைப் பள்ளியிலே இருக்கின்ற ஆஸ்டலிலே
அவர்களை வைத்து, நேற்று மதியம், நேற்று மாலை, நேற்று
இரவு, இன்று காலை அவர்களுக்கு உணவு மற்றும் உடைகள்
செலவுகள் அத்தனையையும் அரசே ஏற்றுக் கொண்டதன்
காரணமாக அவர்கள், இரண்டாவது பரீட்சை எழுதியதற்குப்
பிறகு இது ' அவுட் ' என்ற நிலை ஏற்படாது என்ற காரணத்
தால், அவர்கள் இந்த ஏற்பாட்டை செய்து இருப்பதாகச் சொன்
னார்கள்.

இவ்வளவு தவறையும் அங்கே இருக்கின்ற ஆசிரியர்கள்
அந்த கண்காணிப்பாளர்கள் இவர்களால் செய்யப்பட்டு
அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கின்ற அளவுக்கு
கல்வித் துறை இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது
போன்று இந்த மாணவர்களைச் சிறை பிடிக்க வேண்டும்
என்றோ, அவர்களைக் கொடுமைப்படுத்த வேண்டும் என்றோ
இல்லை. இந்த 128 மாணவர்களுக்காக 3 இலட்சம் பேர்கள்
வதைக்க வேண்டிய ஒரு அவசியம் ஏற்படுமே என்ற காரணத்தி
னாலேதான் இந்த நிலைமை வந்ததற்குப் பிறகு, நேற்று மதியம்
என்னிடத்திலே கேட்டார்கள். அரசாங்கத்திற்கு எவ்வளவு
செலவானாலும் பரவாயில்லை, அவர்கள் எல்லாம் ஒப்புக்
கொள்ளுகிறார்களா என்று கேளுங்கள், ஒப்புக்கொள்ளவில்லை
என்றால் அவர்களை வற்புறுத்துவதற்கில்லை என்கின்ற நிலை
ஏற்பட்டதற்குப் பின்னால்தான் அவர்களை வைத்து இன்றைக்கு
பரீட்சை எழுத வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதே தவிர, இது
அரசினுடைய தவறு உள்ளபடியே வருந்த வேண்டிய ஒன்றுதான்,
நடக்கக் கூடாத ஒன்றுதான், நடக்கக்கூடாத ஒன்று நடந்து
விட்டது. அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுப்போமானால்
இப்படி இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டதன் காரண
மாகத்தான் இந்த நிலைமை இங்கே ஏற்பட்டது. அவர்களை
சிறைப்பிடிக்க வேண்டும் என்றோ, காடுமைப் படுத்த வேண்டும்
என்றோ இல்லை. அங்கே இருக்கின்ற ஆஸ்டலில், திருவல்லிக்
கேணியிலே இருக்கின்ற விடுதியிலே அவர்களை வைத்திருக்
கிறார்கள். வேறு ஏதாவது கம்ப்ளைன்டுகள் வருமானால் அதன்
மீது தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும். அவர்களை
சிறைப்படுத்தவில்லை என்பதும், அவர்களைக் கொடுமைப்
படுத்த வேண்டும் என்பதற்காகவும் அல்ல. மாணவர்கள் உலகத்
தினுடைய நன்மையைக் கருதித்தான் இது செய்யப்பட்டிருக்
கிறது. இந்தத் தவறுக்குக் காரணமானவர்கள், கடுமையான
தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். அவர்கள் மீது கடுமை
யான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்
கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை

எழுப்பியதன் காரணமாகத்தான் இது பற்றிய விளக்கங்கள்
தருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தியதற்கு நான் அவர்களுக்கு நன்றி
யைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்தப் பிரச்சி
னையை உள்ளபடியே யாரும் படித்துப் பார்த்தால் உடனே
மனதை உருக்கக் கூடிய ஒன்றுதான். ஆகவே இந்தப் பிரச்சி
னையை இத்துடன் விட்டுவிடலாம் என்று நான் கூறிக்கொள்
கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து ஒரு ஒத்தி
வைப்புத் தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்திருக்
கிறார். அவர் வந்து கேட்பார், நான் ஒத்திவைப்புத் திர்
மானம் கொடுத்திருந்தேன், அதற்குள் ஏன் பதில் சொல்லப்
பட்டது என்று. இதில் பிரச்சினை வரப்போகிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதற்காகத்தான்
கேள்வி நேரத்திலே பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப நாம் அனு
மதிப்பதில்லை.

திரு. ரா. உமாநாத் : T.ey are not expected to arrest the
s ud-rts.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : The hon. Member Thiru
Umanath is a good Parliamentarian. He should not raise such
things off-hand. (Thiru R. Umanath—Extraordinary)
இன்றைக்கு சட்டசபைக் கூட்டம் இருந்ததால் எக்ஸ்ட்ரா ஆர்டி
னரியாகக் கேட்கிறீர்கள். சபைக் கூட்டம் இல்லையென்றால்
என்ன செய்திருப்பீர்கள் ?

திரு. ரா. உமாநாத் : சபை இல்லாவிட்டால் அந்தப்
பள்ளிக்கூட கேட்டிலே போய் ரகளை பண்ணுவோம். துப்
பாக்கிப் பிரயோகம் நடக்கும். துப்பாக்கி பிரயோகத்தைத்
தவிர்ப்பதற்காகத்தான் இந்தச் சபையிலே எழுப்பியிருக்கி
றோமே தவிர இல்லையென்றால் அங்கேயே போவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த கற்பனைகளுக்கு
எல்லாம் நான் போக விரும்பவில்லை. துப்பாக்கிப் பிரயோகம்
எல்லாம் இதற்கு வராது.

திரு. ரா. உமாநாத் : எக்ஸாமிநேஷன் பேப்பர்கள் எல்
லாம் முன்னாலே லீக்காகவில்லையா ? எதோ ஒரு லட்சம்
பேர்களுக்காக இந்த 150 பேர்கள் அபெக்ட் ஆக வேண்டுமா ?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சட்டசபை
யில்லாவிட்டால் நாங்கள் போய் அங்கே ரகளை செய்வோம்.
சட்டசபை இருந்ததால் நாங்கள் போய் ரகளை செய்யவில்லை
என்று சொல்லுகிறார்கள். இதிலேயிருந்து அவர்கள் தெரிவித்
துக்கொள்வது, மாணவர்கள்பற்றி அவர்களுக்கு மட்டும் கவலை
இருக்கிறது என்றும் மற்றவர்களுக்கு கவலை இல்லை என்றும்
தவறான எண்ணத்திலே சொல்லுகிறார்கள். நான் இங்கே
தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு மாணவர்களைப்பற்றி
எவ்வளவு தூரம் கவலை இருக்கிறதோ அதிலே எந்த அளவுக்கும்
குறைவான கவலை எங்களுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : கவலை இருந்தால் அவர்களை இப்ப
படி வைத்திருப்பீர்களா ? அவர்கள் இப்போது கூட ரிலீஸ்
பண்ணுங்கள், ஐ ஹாவ் நோ அப்ஜக்ஷன். எக்ஸாமிநேஷன்
ஆரம்பிப்பதற்கு முன்னாலே அவர்களை ரிலீஸ் பண்ணுங்கள்
(கூச்சல் , குழப்பம்).

They should not have been arrested.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, நான் முதலிலே இருக்கின்ற சூழ்நிலையைச் சொன்
னேன். அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்றோ, கொடு
மைப்படுத்த வேண்டும் என்ற சூழ்நிலையோ இல்லை. ஆகவே,
நேற்றே இந்தப் பிரச்சினை வந்திருக்குமானால், நன்றாக இருந்
திருக்கும். அந்தக் கஷ்டத்தை ஏற்றுக்கொள்வது என்பதுதான்.
3 லட்சம் பேர்களுக்கு தேர்வு வைக்க வேண்டும் என்ற முடிவு
வந்திருக்குமானால், நேற்றே அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைத்
திருக்கலாம். இன்றைக்கு பரீட்சையை நாடெங்கும் கேன்சல்
செய்திருக்கின்ற நிலைமை வந்திருக்கும். ஆனால் இப்போது
ரிலீஸ் என்ற பேச்சுக்கே இடமில்லை. இன்னும் அரை மணி
நேரத்தில் பரீட்சை ஆரம்பிக்கப் போகின்றது. இந்த செய்தி
போவதற்குள் அவர்கள் உட்கார்ந்துவிடுவார்கள். இரண்டா
வது நாள் தேர்வு இப்போது ஆரம்பம் ஆகிறது. ஆகவே,
மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய உணர்வை நாங்கள்
மதிக்கிறோம். அந்த உணர்வைப் பற்றி எந்த ஆட்சேபனையும்
இல்லை. இருக்கின்ற சூழ்நிலையைப் பற்றிதான் நாமெல்லாம்
சேர்ந்து உணர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின்
உணர்வுகளை ஏற்றுக்கொண்டு அதற்குப் பிறகு ஏதாவது பிரச்
சினைகள் இருக்குமானால் அது பற்றி நடவடிக்கை எடுக்க
அரசு ஆயத்தமாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொண்டு
இந்த பிரச்சினையை இத்தோடு விட்டு விடலாம் என்று தெரிவித்
துக் கொள்கிறேன்.

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சாதனை போனஸ் வழங்கும் திட்டம்.

*வினா எண் 605—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மின்சார வாரியத்தில் சாதனை போனஸ் திட்டத்தை செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) எப்பொழுது திட்டம் அமுலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) (1) மாதாந்திர அனல்மின் உற்பத்தி ஊக்கப்படி;

(2) பட்டியல் தயாரிக்கும் உதவியாளர்களுக்கும், கணக்காளர்களுக்கும் வழங்கப்படும் ஊக்கப்படி ;

(3) காசாளர்களுக்கும்/துணை காசாளர்களுக்கும் வழங்கப்படும் ஊக்கப்படி.

(இ) இத்திட்டம் முறையே, 1—4—1978, 1—1—1981 மற்றும் 1—4—1981 முதல் அமுலாக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9-10]

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாதனை போனஸ் திட்டம் யார் யாருக்கு வழங்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதை எந்த விகிதாச்சாரத்தில் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதுவரை பயன்பெறாமல் உள்ளவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ? இதனால் வாரியத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூர் அனல் மின் நிலையம், பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் ஆகியவற்றில் பணியாற்றுகின்றவர்களுக்கு தூசிப்படி வாங்காதவர்களுக்கு ஒரு விகிதாச்சாரமும் தூசிப்படி வாங்குபவர்களுக்கு ஒரு விகிதாச்சாரமும் அமைந்துள்ளது. அதேபோல், இரண்டாவது திட்டம், பட்டியல் தயாரிக்



கும் உதவியாளர்கள், வேறு யாரேனும் விடுமுறையில் சென்று விடுகிறபோது, அவர் பட்டியல் தயாரித்தால், ஒவ்வொரு பட்டியலுக்கும் 10 பைசா என்று தரப்படுகிறது. காசாளர்களுக்கும், துணைக் காசாளர்களுக்கும், இதேபோல்; யாரேனும் ஒரு மாத காலத்திற்கு மேல் விடுப்பில் செல்கிறபோது, அவர்களுக்கும், இதே அடிப்படையில் 7 பைசா என்று தரப்படுகிறது. இது ஏற்கனவே இருந்து வருகின்ற திட்டம் தான். ஆனால் நான் அண்மையில் இதுபற்றி வெளியிட்டது ஒவ்வொருவருக்கும் அவர் எவ்வளவு வேலை என்ற நிர்ணயம் செய்து அந்த வேலையை அவர் இயல்பாகச் செய்யவேண்டும். அதைவிட கூடுதலாக ஒருவர் பணியாற்றுவாரேயானால், அவருக்குக் கூடுதல் ஊதிய உயர்வு தர வேண்டுமென்ற அடிப்படையில் இதை திட்டமிட்டு, நிறைவேற்றித் தர, மின் வாரியத்திற்கு நான் சொல்லி இருக்கிறேன். அவர்கள் இப்போது திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, அதிக நேரம் வேலை செய்தால் அதற்கு ஏற்கெனவே ஓவர் டைம் சம்பளம் அல்லது அலவன்ஸ் என்று தரப்படுகிறது. இந்த சாதனை போனஸ் என்கிறபோது அதிக வேலை செய்வது இதில் கணக்கிடப்படுமா ? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் போக்குவரத்துக் கழகங்களில் டிரைவர், கண்டக்டர்களுக்கு ஊக்கப் போனஸ் தரப்படுகிறது. அதைப்போன்ற மின்வாரியத்தில் பணியாற்றுகின்றவர்களுக்கும் தருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா ? அவர்களுடைய வேலைத் திறனைக் கணக்கிட்டு அதற்குத் தகுந்த கூடுதல் வருவாய் தர தொழிலாளர்களுக்கு இதில் வழி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்

* மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, போக்கு வரத்துக் கழகங்களில் அமுல்படுத்துவதைப்போல மின் சார வாரியத்தில் அமுல்படுத்தும் வாய்ப்பு இல்லை. ஆனால் நான் ஜெர்மன் ஜனநாயக குடியரசு நாட்டுக்கு—அது கம்யூனிஸ்டு நாடு—சென்றிருந்தேன். அங்கே தொழிலாளர்களுக்கு ஒரு திட்டத்தை அமுல்படுத்துகிறார்கள். ஒருவர் இவ்வளவு வேலை செய்ய வேண்டுமென்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அந்த வேலையைச் செய்து முடித்தால் 100 ரூபாய் சம்பளம் என்று வைத்துக்கொள்வோம். அந்தக் குறிப்பிட்ட வேலையை செய்யவில்லை என்றால் 40 ரூபாய்தான் சம்பளம் கொடுக்கப்படும். ஆக. பேசிக் பே 40 ரூபாய், பெர்பார்மன்ஸ் பே 60 ரூபாய் என்ற அடிப்படையிலே சம்பளத்தை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மின்சார வாரியத்திலும் நாம் கொண்டு வந்தால் இப்போது வேலை செய்கிறவர்களுக்கும் செய்யாதவர்களுக்கும் வேறுபாடு இல்லாத சூழ்நிலை மாறி, ஒவ்வொருவரும் உற்சாகமாக வேலை செய்ய வாய்ப்பு ஏற்படும். ஆனால் இப்போது நாம்

[1982 மார்ச் 23

சம்பளத்தை குறைப்பது என்பது இயலாது. ஆகவே வேலை எவ்வளவு என்ற நிர்ணயம் செய்து, அதற்கு மேல் கூடுதலாக வேலை செய்தால் ஒரு தொகையைக் கொடுக்கலாம் என்ற யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, நீர் மின்சாரம் உற்பத்திச் செய்யும் இடம் பெரும்பாலும் மலைப்பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கே பணியாற்ற அலுவலர்கள் செல்ல விருப்பம் இல்லாமல் இருக்கிறார்கள். பணியாளர்கள் அங்கே பணியாற்றச் சென்றாலும் அடிக்கடி விடுப்பிலே செல்லுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இத்தகைய மலைப் பகுதிகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் சாதனை போனஸ், ஊக்க போனஸ், இதர விசேஷ சலுகைகள் தந்து அவர்களை ஊக்குவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது உண்மை. அவர்கள் சமூகத்தை விட்டு வெளியிலே இருக்க வேண்டிய நிலைமை, மலை உச்சியிலேயும் காடுகளிலேயும் வாழ்க்கை நடத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தை ஒட்டி கூடுதல் ஊதியம் தருவதற்கு ஒரு ஆய்வு மின்சார வாரியத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

* திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இப்போது மின்சாரக் கட்டணம் வீட்டிலே வந்து கலெக்ட் செய்யப்படுகிறது. அந்த திட்டம் ஒரு நல்ல திட்டம். ஆனால் காலை 10 மணிக்கு முன்னாலும் மாலை 5 மணிக்குப் பின்னாலும் மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லை என்றாலும் அந்த யோசனை கருத்திற்கொள்ளப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் இந்த சாதனை போனஸ் என்பதிலே மின்சார வாரியத்தினுடைய மேம்பாட்டுக்கு குறிப்பாக லைன் லாஸ் என்பதைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் வாரியத்தின் இழப்பைக் குறைப்பது, அதைப்போன்ற சிறந்த சாதனைகளுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்குவது, ஸ்பாட் பில் சிஸ்டத்தை நல்லமுறையில் செயல்படுத்துவது போன்றவர்களைக் கணக்கிட்டு அந்தச் சிப்பந்திகளுக்கு ஊக்க போனஸ் கொடுக்க அரசு முன்வருமா ?



1982 மார்ச் 23]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, லைன் லாஸ் என்பதைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே ஒரு உயர்மட்டக் குழு ஆராய்ந்து வருகிறது. இது மின்சார வாரியத்தில் சுமார் ஒரு இலட்சம் பணியாளர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு என்ன வேலை என்று அறுதியிட்டு உறுதிபடுத்துவதற்கான ஒரு திட்டமே தவிர வேறு அல்ல.

திண்டுக்கல் போன்ற தொழில் நகரங்களில் ஏற்பட்ட மின்வெட்டு.

*வினா எண் 606 : திரு. என். வரதராஜன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் திண்டுக்கல் போன்ற தொழில் நகரங்களில் பெருமளவு மின்வெட்டு ஏற்பட காரணமென்ன ?

(ஆ) இத்தகைய குறைகளை தீர்க்க மின்வாரியம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தமிழ்நாட்டில் கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் மின்வெட்டு ஏதுவுமில்லை. இருப்பினும் மின் உற்பத்தி தேவையான அளவு இல்லாமையால் மின் உச்சத்தேவை முழுதும் சமாளிக்க ஒரு சில பகுதிகளில் சில மணிநேரங்கள் மின் நிறுத்தம் செய்யப்பட்டது.

(ஆ) மின் தேவையை முழுதும் சமாளிக்க 4—3—1982 முதல் மின்சாரம் வழங்குவதில் சில கட்டுப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, நான் இந்த கேள்வியை எழுப்பிய நேரத்தில் இருந்த நிலைமையைவிட இன்றைக்கு மிகவும் மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கடந்த 20-ந் தேதி திண்டுக்கல் பகுதி வர்த்தகர்கள் அர்த்தால் நடத்தியிருக்கிறார்கள். நேற்றும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். ஆக, நவம்பர், டிசம்பர் மாதங்களைவிட கடுமையான நிலைமை இன்றைக்கு இருக்கிறது. எவ்வளவு மின்வெட்டு, 40 சதவீதம் 50 சதவீதம் அல்லது 30 சதவிதம் என்று திட்டவட்டமாக அறிவித்து விடுங்கள். எந்த அளவுக்கு மின்வெட்டு இருக்கிறது என்று தெரியவில்லை. ஒரு நாளைக்கு 7, 8 தடவை மின்சாரம் நின்றுவிடுகிறது. அதனால் தொழில் நடத்த முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகையால்

[1982 மார்ச் 23

மின்சார வெட்டு எவ்வளவு என்பதை திட்டவட்டமாக முடிவு செய்து, வர்த்தகர்களைவும் தொழிலாளர்களையும் அமைச்சரவர்கள் நேரில் சென்று சந்தித்து, இருக்கிற நிலைமைகளை விளக்கி, அவர்களைச் சமாதானப்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே. திண்டுக்கல்லைப் பொறுத்தவரையில் என்னிடத்தில் புள்ளி விவரங்கள் விவரமாக இருக்கின்றன. ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானமும் வருவதாக உணர்கிறேன். 20-ம் தேதி 17 மணி நேரம் 50 நிமிடங்கள் அதாவது கிட்டத்தட்ட 18 மணி நேரம் — மின்சாரம் இருந்து இருக்கிறது. ஆனால் நிலைமை என்னவென்றால் மின் நிறுத்தம் என்றால் முன் அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்றார்கள். மின் நிறுத்தம் என்பது ஏதேனும் மின் உற்பத்தி செய்யும் இயந்திரம் திடீரென்று கோளாறு ஆகி நிறுத்தப்பட்டு விட்டால்; அந்த நேரத்தில், விவசாயப் பகுதிகளில் மின் நிறுத்தங்களைச் செய்வதற்கு பதிலாக நகரப் பகுதிகளில் அதைச் செய்யுங்கள் என்று அண்மையில் நாம் மின் வாரியத்திற்குச் சொல்லியிருக்கிறோம். காரணம், மார்ச்சு மாதம் ஏப்ரல் மாதம் வேளாண்மைக் காரியங்கள் நல்ல முறையில் நடக்கின்ற காலம். அது கெட்டு விடக்கூடாது என்ற எண்ணத்தில் இந்த நடவடிக்கைகளை நாம் எடுத்து இருக்கிறோம், ஆகவே, ஓரளவிற்கு இந்தச் சுமையை நகர்ப்புறங்களில் இருப்பவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மின் நிறுத்தத்தை அறவே தடுப்பது என்று சொன்னால், அதற்கு ஒரு வழி மின் உற்பத்தி-மின் கன்சம்பஷன் 100 மெகாவாட் இருக்கிறது என்று சொன்னால்—130 மெகாவாட் என்று கூடுதலான முறையில் செய்ய வேண்டும். ஒரு இடைக்கால நிவாரணம் அளிக்கும் வகையில், காஸ் டர்பன்களை போட்டு ஒரு 300 மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்கான திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அதை நாம் நடைமுறைப்படுத்தினால், அந்த நேரத்தில், மின் உற்பத்தி யந்திரங்கள் ஏதேனும் கோளாறாகி நின்ற ஒரிரு நிமிடங்களிலேயே நாம் இந்த காஸ் டர்பைன்கள் மூலம் மின் உற்பத்தியைச் செய்து, இழந்த மின்சாரத்தை மீண்டும் பெற்று விடலாம், மறுபடியும் அந்த யந்திரங்கள் சீர் செய்யப்பட்ட உடன் இந்த காஸ் டர்பைன்களை நிறுத்திவிடலாம். எனவே இந்த திடீரென்று மின் நிறுத்தம் ஏற்படுவது காஸ் டர்பைன் மூலம் மின் உற்பத்தி செய்யும் வரை இருக்கத்தான் செய்யும். அது வந்த பிறகு தான் இந்தப் பிரச்னை தீரும்.



1982 மார்ச் 23]

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நான் மீண்டும் கேட்கவிரும்புவது, அந்த தொழில் நிறுவனங்கள் கேட்பது எல்லாம் ஒரு நாளைக்கு இந்த மணியில் இருந்து இந்த மணி வரையில் மின்சாரம் தரப்படும் இரவு இவ்வளவு நேரம், பகலில் 2 மணி முதல் 6 மணி வரை என்கிற உத்தரவாதம். ஏனென்றால் திடீரென்று மின்சாரம் நிறுத்தப்பட்டு விட்டால், அவர்கள் காலை முதல் தொழிற்சாலையைத் திறந்து வைத்துக் கொண்டு, தொழிலாளர்களையும் காக்க வைத்துக் கொண்டு தேவையில்லாமல் உட்கார்ந்து கொண்டு இருக்கவேண்டியிருக்கிறது. இரவு நேரங்களில் கொடுப்பது என்றால் கூட அவர்கள் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, ஒரு குறிப்பிட்ட நேரத்தை நிர்ணயித்து, அந்த நேரத்தில் மின்சாரம் தரப்படும் என்கிற உத்திரவாதம் அளிக்கப்படுமா? அதைப் போலவே, குறிப்பாக, நீரேற்று நிலையங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றிற்குத் தொடர்ச்சியாக மின்சாரம் வெட்டு இல்லாமல் கொடுக்க அரசு ஆவன செய்யுமா? அமைச்சர் அவர்கள் உடனடியாக இதில் தலையிட்டு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, திட்டமிட்டு 6 மணி நேரம், 8 மணி நேரம் என்ற வகையில்தான் இப்போது ஏற்பாடு செய்து இருக்கிறோம். அதாவது பகலில் விவசாயிகளுக்கு காலை 6 மணி நேரம் என்று சில பகுதிகளிலும், மாலை 6 மணி நேரம் என்று சில பகுதிகளிலும் என்று வைத்து இருக்கிறோம். ஆனால், அதற்குள்ளே என்ன நிலைமை ஏற்பட்டு விடுகிறது என்றால் ஏதேனும் மின் உற்பத்தி செய்யும் இயந்திரம் திடீரென்று பழுதுபட்டு விடுமானால், அது எங்கே எந்த நிலைமையை ஏற்படுத்தும் என்று பார்க்க முடியாது. ஆகவே, உடனே சில பகுதிகளில் தடை செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையை அறவே தவிர்ப்பதற்கு நமக்கு மின் தேவை 100 மெகாவாட் என்றால், 150 மெகாவாட் என்கிற அளவில் உற்பத்தி செய்ய வேண்டும். அந்த வகையில் அந்நிய நாடுகளில் உற்பத்தித் திறனைப் பெருக்கியிருக்கிறார்கள். நாம் இப்போதுதான் கடந்த காலத்தில் இருந்த நிலைமைகளையெல்லாம் சீர்படுத்தி, சரிக்குச் சரி என்று வந்து இருக்கிறோம். எனவே ஒரு யந்திரம் பழுதுபட்டால் கூட நமக்குப் பிரச்சினை வந்து விடுகிறது. நாம் உற்பத்தித் திறனைப் பெருக்கினால் தான் திடீர் திடீரென்று மின் நிறுத்தத்தை தடுக்க முடியும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் மின் உற்பத்தி செய்கிற இயந்திரங்கள் பழுதடைந்து விட்டால் திடீர் திடீரென்று மின் நிறுத்தம் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். இந்தப் பிரச்சினை திண்டுக்கல்லில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் வியாபித்து இருக்கிறது. நான் சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்பு என்னுடைய தந்தையார்

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசினார். திருமங்கலத்தில் நேற்று இரவு 3 முறை திடீர் திடீரென்று மின் நிறுத்தம் செய்து இருக்கிறார்கள். அப்படியானால் 3 முறை மின்சார யந்திரங்கள் பழுதுபட்டு விட்டன என்று எடுத்துக்கொள்ளலாமா? மின்சார வெட்டு என்று நாம் திட்டவட்டமாக அறிவிப்பதால் நமக்கு எந்தவிதமான கௌரவக் குறைவும் வந்து விடப் போவது இல்லை. திடீர் திடீரென்று நிறுத்திவிடுவதால் பொது மக்களுக்கு, விவசாயிகளுக்கு, சிறு தொழில் செய்பவர்களுக்கு தொல்லை இருக்கின்ற காரணத்தால் தேவை இவ்வளவு இருக்கிறது, உற்பத்தி இவ்வளவு இருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, இந்த அவல நிலையைப் போக்குவதற்கான முறையில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதை இந்த அவையில் உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, சாதாரணமாக எந்தத் தடையும் இல்லாமல் இருக்குமானால் நமக்கு 2,400 மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகிறது. ஆனால் இப்போது நம்மால் உற்பத்தி செய்யக்கூடிய திறன் அளவு-அதாவது எல்லாவற்றையும் சேர்த்து—கேரளம் நமக்குக் கொடுக்கும் 100 மெகாவாட் மின்சாரத்தையும் சேர்த்து எடுத்துக் கொண்டால்—அதேபோல் தூத்துக்குடியும் எண்ணூரும் ஒழுங்காக இயங்கினால்—நமக்குக் கிடைக்கும் மின்சாரம் 1700 மெகாவாட் தான். ஆகவே, ஒரு பெரிய வேறுபாடு இருக்கிறது. நாம் லோட்-ஷெட்டிங் இல்லாமல் இருக்க வேண்டுமானால் எல்லாத் தொழில்களையும் இழுத்து மூட வேண்டியதுதான். அதைச் செய்ய முடியாது. இதை ஓரளவிற்குச் சமாளிக்க லோட்-ஷெட்டிங் செய்யத்தான் வேண்டும். இது இந்தியா முழுவதும் நடந்து கொண்டு இருக்கிறது. உற்பத்தித் திறன் எந்த அளவிற்கு வேகமாக நம்மால் பெருக்க முடிகிறதோ அதைப் பொறுத்துத்தான் இதை வேகமாகத் தடுக்க முடியும்.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** தலைவர் அவர்களே, திண்டுக்கல் பகுதியில் குறிப்பாக ஆத்தூர் தொகுதியில் இந்த மின்சாரத் தட்டுப்பாடு திடீர் திடீரென்று வருவதால் விவசாயிகள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். இது குறித்து நானே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். ஆகவே, இதை முறைப்படுத்தி இன்னின்ன பகுதிகளில் இன்னின்ன நேரத்தில் இன்னின்ன முறையில் மின்சாரம் வரும் என்று நிர்ணயித்து, விவசாயிகளின் துயரை நீக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன :** தலைவர் அவர்களே, அதைப் பற்றித்தான் இவ்வளவு நேரம் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன்.



**திரு. ப. நெடுமாறன் ;** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த லோட் ஷெட்டிங் செய்வது இன்றியமையாதது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதைச் செய்வதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் கர்நாடகா மாநிலத்தில் எந்தெந்த தேதியில், எந்தெந்த நேரத்தில், எந்தெந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் எவ்வளவு காலத்திற்கு நிறுத்தப்படும் என்ற விவரங்களை பத்திரிகைகளின் மூலம் விளம்பர வாயிலாக அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, தொழிற்சாலைகளும், மற்றவைகளும், அதற்கேற்ப தங்களுடைய வேலைகளை அமைத்துக்கொள்ள வசதியாக இருக்கிறது. ஆகவே, அதைப் போல லோட்-ஷெட்டிங் செய்வதை எந்தெந்த நேரத்தில் என்பதை தமிழகத்திலும் அறிவிக்க அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, நாமும் அறிவித்திருக்கிறோம். சில அடிப்படையான திட்டங்களை வைத்து எந்தெந்த நேரத்தில், எந்தெந்தப் பகுதி என்று அறிவித்திருக்கிறோம். அதற்கும் மேலாகப் போகிறபோதுதான் இந்தப் பிரச்சினையே எழுகிறது. கர்நாடகத்திலும் இந்தப் பிரசினை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவை முடிந்ததற்குப் பிறகு, பெங்களூருக்குப் போய் 2 நாட்கள் இருந்து பார்த்தார் என்றால் தெரியும்.

***திரு. ரா. உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கூறியது போல மாநிலம் பூராவும் பல இடங்களிலும், இத்தகைய நிலைமை தற்போது நிலவி வருகிறது. ஆனால் திண்டுக்கல்லைப் பொறுத்தவரையில்-நான் அங்கே அடிக்கடிப் போய் வருகிறவன் என்கிற காரணத்தால் சொல்கிறேன். ஆண்டு முழுவதும், 12 மாதங்களும் இதேபோன்ற நிலைதான் இருக்கிறது. மற்ற நகரங்களில் சம்மர் சீசன் காரணமாக இருக்கிறது என்றால், அங்கே எப்போதுமே இந்த நிலைதான். நான் எலக்ட்ரிசிட்டி போர்டில் மெம்பராக இருந்தபோது இதை ரெய்ஸ் பண்ணியிருக்கிறேன். திண்டுக்கல் மின்சார அலுவலகத்தில் போய் கேட்டால் ஈரோடில் போய் கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அந்த ஊரைப் பொறுத்த மட்டில், நீங்கள் சொல்லிய காரணங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டு, பிரத்யேகமாக ஏதோ ஒரு காரணம் இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவே, அந்த மாதிரி நிலைமையை மாற்றுவதற்கு, அங்கே இப்படிப்பட்ட நிலைமை வருவதற்கு உண்மையான காரணம் என்ன என்பதை ஆராய்ந்து தனியாக ஸ்பெசல் என்குயரி வைத்து, கண்டுபிடித்து அதை தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா? அப்போதுதான் மற்ற நகரங்களில் இருப்பது போன்ற ஏதோ ஒரு சீசன் காலத்தில் மட்டுமே பாதிக்கப்படக்கூடிய நிலைமை உண்டாகும். அந்த நிலைமையை உண்டாக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரங்களைச் சேகரித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் வருகிறபோது தருகிறேன்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் இப்படிப்பட்ட மின் பற்றாக் குறை இருக்கும்போது, சமயநல்லூர் தெர்மல் பிராஜக்ட்டை முன்பெலாம் உபயோகப்படுத்தி வந்தார்கள் என்று நினைக்கி றேன். தற்போது இவ்வளவு கடுமையான தட்டுப்பாடு, அந்த சமயநல்லூர் மின் நிலையத்தை விற்றதினால் தான் ஏற்பட்டிருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சமயநல்லூர் நிலையம் இருந்தாலும் யானைப்பசிக்கு சோளப் பொறிபோலதான். ஆகவே, அதையெல்லாம் வைத்து இதோடு பேசுவது சரியல்ல. தலைவர் அவர்களே. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், ஒரு விஷயம் சொல்கிறார்—அவர் பெங்களூரில் தங்கியிருந்தார் என்றும், அங்கே லைட்டுகளே எரியவில்லை என்றும் சொல்கிறார்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 607, 608 ஆகியவை மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றன.

## காடுகளில் மரம் வெட்ட ஏலம் விடுவதில் பின்பற்றப்பெறும் நடைமுறைகள்

*வினா எண். 609—திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா.—

(அ) காடுகளில் மரம் வெட்டுவதற்காக ஏலமிடுவதில் பின் பற்றப்பெறும் நடைமுறைகள் யாவை ?

(ஆ) எந்த வகையான மரங்களை வெட்ட அரசு அனுமதிக் கிறது ?

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) வினாக்களுக்கு அவை முன்பு ஓர் விவர *அறிக்கை வைக்கப் பட்டுள்ளது.

---

* 565 முதல் 567 ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவையின் சபாநாயகர் அவர்களே, இந்த மரம் வெட்டுவது சம்பந்தமாக விவரங்களிலே ரொடேஷன் கிராப் எனப்படும் வகையில் மரங்களை குறிப்பிட்ட வருடங்களுக்கு பின் வெட்டுவதற்கு அரசு முன்பு அனுமதியளித்து வந்தது. அதிலே நீர் பிடிப்பு இருக்கும் இடங்களிலும், உயர் மலைப் பாங்கான பகுதிகளிலும் உள்ள மரங்களை வெட்டக் கூடாது என்று சொல்வது நியாயம். அதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் கீழான தரைப் பகுதிகளில் வளர்க்கப்பட்டு விறகுக்காகவே வெட்டப்படும் இந்த ரொடேஷன் கிராப் மரங்கள் இருந்த இடங்கள் தற்போது காலியாக வெறும் பொட்டல் வெளியாக நிற்கின்றன. ஆகவே, அந்த இடங்களில் மீண்டும் மரங்களை வளர்த்து, 10 வருடங்களுக்குப் பிறகு, அவைகளை வெட்டி விறகுக்காக பயன்படுத்தும் முறையை மறுபடியும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான பதிலைத்தான் இந்த அறிக்கை யிலே விவரமாக தந்திருக்கிறோம். இயற்கையான காடு களில் மரங்களை வெட்டுவதிலே தான் கட்டுப்பாடு விதிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல ரொடேஷன் கிராப் மரங்கள் வெட்டுவதற் காகவே வளர்க்கப்படுகின்றன. அப்படி வெட்டப்பட்டவைகள் தாமாகவே திரும்பவும் வளரும் தன்மை படைத்தவைகள். அப்படி இல்லாத பகுதிகளில் எல்லாம் மறுபடியும் மரங்கள் வளர்க்கப்படவேண்டும் என்பதினால்தான், சோஷியல் ஃபாரெஸ்ட்ரி என்கிற சமுதாய காடு வளர்ப்பு திட்டம் தற்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9–30)

திரு. பி.எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளில் உள்ள சந்தன மரக்கட்டை களை வெட்டி பொடி செய்து கடத்துவது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே அப்படி வெட்டிக் கடத்துவதை எல்லாம் கண்டுபிடிப்பதற்காகத் தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவை எல்லாம் தடுக்கப் பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் வேளாங்கண்ணியில் ஓய்வு இல்லம் கட்டும் திட்டம்.

*வினா எண். 610—திரு. நன்னிலம் ஆ. கலையரசன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா :—

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வேளாங்கண்ணியில் ஓய்வு இல்லம் ஒன்று கடற்கரை ஓரத்தில் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தற்சமயம் இல்லை.

**திரு. மி. வின்செண்ட் :** தலைவர் அவர்களே, இண்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டராக அறிவிக்கப்பட்டுள்ள மகாபலிபுரம், கன்னியாகுமரி ஆகியவற்றின் கடற்கரை ஓரங்களில் பயணிகள் ஓய்வு இல்லங்கள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற கேள்வி வேளாங்கண்ணியைப் பற்றியது. அதற்குப் பதில் சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி கேட்டால் தகவல்கள் சேகரித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று சொன்னார்கள். நாகூர் வேளாங்கண்ணி போன்ற இடங்களுக்கு இந்தியா முழுவதிலும் இருந்து யாத்திரிகர்கள் வந்துகொண்டு இருக்கிறார்கள். ஆகவே தக்க பரிசீலனை செய்து உடனடியாக அந்த இரண்டு இடங்களிலும் சுற்றுலா இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, அதனாலேதான் நான் ஜாக்கிரதையாக விடையிலே தற்சமயம் இல்லை என்று சொல்லி இருக்கிறேன். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றது. நாகப்பட்டிணத்திலே ஒரு நிலம் கூட அதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அதுபற்றி சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஆண்டுத் திட்டத்திலே தனியாக பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. வீராசாமி:** தலைவர் அவர்களே, நாகப்பட்டிணம் அருகிலே இருக்கும் வேளாங்கண்ணி மாதா கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயம். அந்த ஆலயத்திற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்து மட்டுமல்லாமல் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் யாத்ரீகர்கள் வருகிறார்கள். அப்படி வருகின்ற யாத்ரீகர்கள் தங்க அங்கே ஓய்வு இல்லம் இல்லை. எனவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அத்தியாவசியத்தைக் கருதி விரைவில் அங்கே தமிழக சுற்றுலா வாரியத்தின் சார்பாக இல்லம் கட்ட ஆவன செய்வார்களா ?



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, நான் அதற்கான பதிலைத்தான் முன்னாலேயே தெரிவித்திருக்கிறேன். நாகப்பட்டிணத்தில் ஒரு தங்கும் விடுதி கட்டுவது சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் பரிசீலனையில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நன்னிலம் ஆ. கலையரசன் :** தலைவர் அவர்களே வேளாங்கண்ணி ஆலயம் எந்த அளவுக்கு பிரசித்தி பெற்ற ஆலயமாக இருக்கின்றதோ அதைப்போல அருகாமையில் இருக்கக்கூடிய நாகூர் தர்காவும் முக்கியத்துவம் வாய்ந்தது. எனவே இவை இரண்டின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு அமைய இருக்கின்ற அந்த தங்கும் இல்லத்தினை நாகூருக்கும், வேளாங்கண்ணிக்கும் வசதி ஏற்படுத்தித் தருகின்ற அளவுக்கு அமைப்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, வேலாங்கண்ணி, நாகூர் மாத்திரமின்றி பக்கத்திலேயே சிக்கலும் இருக்கின்றது. ஆகவே இந்தியாவினுடைய மத ஒற்றுமையைக் குறிப்பிடுகின்ற 3 திருத்தலங்கள் அங்கே இருக்கின்றன. அதனாலேதான் அங்கே ஒரு தங்கும் விடுதி கட்ட வேண்டும் என்று சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மிகத் தீவிரமாகப் பரிசீலனையில் எடுத்துக்கொண்டிருக்கின்றது.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, அவற்றின் முக்கியத்துவத்தை மாண்புமிகு அமைச்சரவர்களும் சொல்லிவிட்டார்கள். டூரிஸ்ட் டெவலெப்மென்ட் கார்ப்பரேஷன் பரிசீலனையில் இருக்கின்றது என்று சொல்லக்கூடிய அந்த இல்லம் அங்கே இருக்கக்கூடிய தேவைக்குப் போதுமானதாக இல்லாமல் மிகச் சிறிய ஒரு ப்ரப்போஸலாகத்தான் இருக்கும் என்று எனக்குத் தெரிகிறது. ஆகவே இந்த முக்கியத்துவத்தைக் கருதி அங்கே இருக்கின்ற முனிசிபாலிட்டியின் ஃபைனான்ஸ் ரொம்ப வீக்காக இருப்பதையும் கருதி அதனை ஒரு டூரிஸ்ட் சென்டர் என்று டிக்ளேர் பண்ணி அதற்கான கான்சிகுவன்சியல் ஆக்ஷன் எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, எப்போதுமே ஒரு இடத்தினை சுற்றுலா மையம் என்று அதாவது டூரிஸ்ட் சென்டர் என்று அறிவித்துவிட்டதற்குப் பிறகு நடவடிக்கை எடுப்பதில்லை. அவை இயற்கையாகவே மக்களுடைய கவனத்தை ஈர்த்து மக்கள் பெருமளவில் கூடுகின்ற இடங்கள் இயற்கையாகவே சுற்றுலாத் தலங்களாக மாறிக்கொண்டிருக்கின்றன.

அப்படி உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களிலேயே இப்போது போதுமான அளவிற்கு அடிப்படை வசதிகள் செய்ய முடியாமல் நாம் நிதி ஆதாரத்திற்கு சிரமப்பட்டுக் கொண்டிருக் கிறோம். இந்த நாகப்பட்டிணம், வேளாங்கண்ணி பகுதியில் ஆண்டு முழுவதும் மக்கள் வருகிறார்களா என்று நாம் பார்க்க வேண்டும். சில திருவிழாக்களையொட்டி அங்கே இலட்சக்கணக் கான மக்கள் கூடுகிறார்கள். அதை அடிப்படையாக வைத்து நிரந்தரமான அமைப்புகள் ஏற்படுத்துவதற்கு இன்றைய பொரு ளாதார சூழ்நிலையில் அது கஷ்டமாக இருக்கும். ஆகவே அங் கிருக்கிற அடிப்படை வசதியையெல்லாம் கணக்கிலெடுத்து கூடிய விரைவில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அதன் பொருளாதார சக்திக்கேற்றவாறு ஒரு தங்கும் இட வசதியை ஏற்படுத்த முடியுமா என்பதைப் பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

நாகர்கோவிலில் வானொலி நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 611—திரு. மி. வின்செண்ட் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் ரேடியோ நிலையம் அமைப்பதில் மாநில அரசு இன்னும் இடஒதுக்கீடு செய்யாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) நாகர்கோவிலில் வானொலி நிலையம் அமைப்பதற்கு வானொலித் துறைக்கு தகுந்த இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு, மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கேட்கப்பட்டிருக்கும் நிலம், மற்றும் அதிலுள்ள கட்டிடங்களின் விலை மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. விரையில் இதற்கான முடிவு மேற் கொள்ளப்படும்.

திரு. மி. வின்செண்ட் : ரேடியோ நிலையம் எந்த அளவிற்கு மக்களுக்கு முக்கியமானது என்பதை உணர்ந்து நாகர்கோவிலில் ரேடியோ நிலையம் அமைக்க இடம் ஒதுக்கி மற்ற அனைத்துத் தேவைகளையும் உடனடியாக செய்து வேகமாக அந்தப் பணியை மேற்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ரேடியோ நிலையம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எண்ணித்தான் மாநில அரசு மத்திய அரசைக் கோரி அதை அமைக்க



வேண்டுமென்கிற அவர்கள் அனுமதியைப் பெற்றிருக் கிறது. ஆனால் அங்கே ஏற்ற இடம் கண்டுபிடிப்பதில் இவ்வளவு நாள் சிரமம் இருக்கிறது. இப்போது தகுதியான இடம் தேர்ந்தெடுக்கப்பற்றிருக்கிறது. அந்த இடம் டான் சிக்கு சொந்தமாகயிருந்தது. அவர்களோடு பேசி, அதில் பல கட்டடங்கள் எல்லாம் இருக்கின்றன. அதன் முதலீடு எவ்வளவு என்று நிர்ணயிப்பதற்கு அதில் தாமதமாகிக் கொண்டிக்கிறது. விரைவில் அவையெல்லாம் முடிவு செய்யப்பட்டு அந்த இடத்தை வானொலித்துறைக்கு மாநில அரசு வாங்கிக் கொடுக்கிற முயற்சி யில் ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்செண்ட் : நாகர்கோவில் வானொலி நிலை யத்தை சக்திவாய்ந்த ஒரு நிலையமாக அமைக்க மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதை இப்போது மாவட்ட அளவில் ஒரு வானொலி நிலையமாக அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது, அது வந்த பிறகு அதை சக்தி வாய்ந்ததாக ஆக்குகிற முயற்சியில் ஈடுபடலாம்.

திரு. இ. முத்து இராமலிங்கம் : நெல்லை, குமரி மாவட்டங் களில் சென்னை வானொலி நிலையத்தில் ஒலிபரப்புகிற நிகழ்ச்சி களைக் கேட்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. எனவே மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி அதன் வானொலித்திறனை கூட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சென்னை வானொலி யைக் கேட்க வேண்டிய அளவிற்கு அவசியம் இல்லாத வகையில் மதுரையில் ஒரு சக்திவாய்ந்த வானொலி நிலையம் அமைய இருக்கிறது. அதைபோல் திருநெல்வேலியில் இப்போது ஒரு ஒலி பரப்பு நிலையம் இருக்கிறது. அந்த நிலையம் தன்னளவில் இயங்குகிற நிலையமாக மாற்றுகிற திட்டமும் இருக்கிறது. அவை களுக்கெல்லாம் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு மத்திய அரசின் செய்தி ஒலிபரப்பு துறையிடம் ஒப்படைத்தும் ஆகிவிட்டது. மற்ற கட்டட வேலைகளையெல்லாம் மத்திய அரசு இப்போது துவக்கிக் கொண்டிக்கிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வங்கிகளுக்கு அனுப்பப்படும் கடன் மனுக்கள்.

*வினா எண் 612—திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பெறப்படும் கடன் மனுக்கள் ஒன்றிய ஆணையரின் பரிந்துரையின் பேரில் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டும் எந்த வங்கிகளிலும் கடன் வழங்க மறுக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அப்படி மறுக்கும் வங்கிகளுக்கு விரைந்து செயல்பட அறிவுறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) வங்கிகளின் நிபந்தனைகளுக்கும், நிதி வரம்புகளுக்கும் கட்டுப்பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன. மனுதாரர்கள் பெயரில் எவ்வித கடன் நிலுவையில் இருந்தாலோ அல்லது விண்ணப்பங்களில் குறையிருந்தாலோ அம்மாதிரி மனுக்கள் மீது வங்கிகள் கடன் அளிக்க மறுக்கின்றன. அம்மாதிரி கடன் மனுக்கள் மீண்டும் ஒன்றிய ஆணையாளராலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்ட அலுவலர்களாலும் மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டு கடன் மனுவில் உள்ள குறைகள் நிவர்த்திக்கப்பட்டு தகுதியுள்ள மனுக்கள் மீண்டும் வங்கிகளுக்கு கடன் அளிக்க சிபாரிசு செய்யப்படுகின்றன.

திரு. க. பாலசுப்பிரமணியன் : ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டம் என்று சொல்ல கூடியது இன்டக்ரேட்டட் ரூரல் டெவலப்மென்ட் ப்ரோக்ராம். இந்தத் திட்டத்தின் கீழ் கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கு அனைத்து வசதிகளும், நகரங்களில் உள்ளவர்களுக்கு செய்து கொடுப்பது போல் செய்து கொடுப்பதுதான். அப்படியிருக்க ஆணையர் பரிந்துரை செய்தும் கூட சில வங்கிகள் கிராமங்கள் தூரத்தில் இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி, சில கிராமங்களில் சாலைவசதி இல்லை, எனவே பணம் வசூல் செய்ய முடியாது என்ற காரணத்தைக் காட்டி கிராமப்புற மக்களுக்கு கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலையில் அந்த மக்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே அந்த வங்கிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?





(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் கிளைகள் பெரும்பாலும் கிராமப் பகுதிகளில் இல்லாமல் இருப்பது இந்தக் குறைக்கு ஒரு காரணம். ஆனால், செகியூரிடி, கியாரண்டு, மார்ஜன் மணி போன்ற நிபந்தனைகள் ரூ. 5,000 வரை வழங்கத் தேவையில்லை, அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ரிசர்வ் வங்கி தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இது குறித்து அறிவுரை வழங்கியிருக்கிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் கிளைகள் சில கிராமங்களில் வெகு தொலைவில் இருக்கின்றன. அப்படிப்பட்ட வங்கிகளில் பணி புரிபவர்கள், சில தவறான தகவல் கேட்கப்பட்டு, வேண்டுமென்றே ஒதுக்கிறார்கள். அவர்கள் பேரில் புகார் வந்திருக்கிறதா? ஏதாவது நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அம்மாதிரி ஒரு சிக்கல் இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆங்காங்கு வங்கியின் மேலாளர் போன்றவர்களை அழைத்துப் பேசி, இந்த சிக்கல்களுக்கு முடிவு கண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஒதுக்கப்பட்ட தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் தரப்படுகின்ற அந்த மானியத் தொகை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் முதலில் கட்டிவிட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த நலிந்த பிரிவினருக்கு, ஆதிதிராவிட மக்களுக்கு கடனாக கொடுக்கப்படும் அந்த மானிய தொகையை முதலிலே தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலே கட்டவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அங்குள்ள ஆணையர் உறுதியளித்தால், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் அந்தத் தொகையைக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அம்மாதிரியான நிபந்தனைகள் ரூ. 5,000 வரையில் தேவையில்லை என்ற விதியிருக்கிறது. அந்த விதியை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

**திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கிரெடிட் ஸ்குவீஸ் இருப்பதினால், கடன் தொகை வழங்குவதை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதை அரசு அறியுமா ? இதை நீக்குவதற்கு, முறைப்படி கடன் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, அம்மாதிரி புகார் வரவில்லை. அப்படி இருக்குமானால், அதைப் பற்றி அரசு ஆராயும்.

**திரு. இல. பலராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென மைய அரசு எவ்வளவு ஒதுக்கீடு செய்தது ? இந்தக் கடன்களை எந்தத் துறைக்கு அதிகமாக ஒதுக்கப்படுகிறது ? கறவை மாடுகள் வாங்குவதற்கா அல்லது வேறு எதற்காக இந்தக் கடன் கோரிக்கை வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கா காளிமுத்து :** தலைவர் அவர்களே, 1981—82 ஆம் ஆண்டு வட்டாரத்திற்கு 6 இலட்சம் வீதம், 376 வளர்ச்சி வட்டாரங்களுக்கு ரூ. 22·58 கோடி செலவு செய்ய திட்டமிட்டு, அவைகள் செலவு செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக, இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கமே, சுய வேலை வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்பது. வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள பெருமக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்பது இதிலே கால்நடை, விவசாயம், மீன் வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்ச்சி கிராமத் தொழில் இப்படிப்பட்ட முயற்சிகளுக்காக் கடன் வழங்கப்படுகின்றது. இது வட்டாரத்திற்கு வட்டாரம் வேறு விதமாக அமைந்திருக்கிறது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 5,000 வரை எந்தவிதமான செக்யூரிடியும் இல்லாமல் கடன் கொடுக்கப்படுகின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கிராமங்களிலே இருக்கக்கூடிய தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் தனிச் சொத்துக்களைக் கேட்கிறார்கள். வில்லங்க சர்டிபிகேட் 13 ஆண்டுகளுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படியே கொடுத்தாலும், ரூ. 3,000 தான் கடன் தருகிறார்கள். கடந்த ஒரு ஆண்டு காலமாக எனது ஊரில் இப்படிப்பட்ட ஒரு அனுபவம் இருக்கிறது. இம்மாதிரியான போக்குகளை நீக்குவதற்கு அரசு கறார் நடவடிக்கை எடுக்குமா ? அவர்களுக்கு முறையாக கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, ரிசர்வ் வங்கி, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு தக்க அறிவுரைகளை சொல்லியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இதற்காக ஆங்காங்கே இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். சிக்கல்கள் ஓரளவுக்குத் தீர்ந்ததன் காரணமாகத்தான், ஒதுக்கிய தொகையை செலவு செய்திருக்கிறார்கள்.

**திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராம ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கொடுக்கவில்லை என்றாலும், இது தமிழ்நாட்டைப் பொறுத்த வரை மட்டுமல்ல ; இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலே கொடுக்கவில்லை என்று புகார் சொல்லப்படுகிறது. அந்த நிலையில் மாநில அளவிலே, மாவட்ட அளவில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னாலும் கொடுப்பதில்லை. எங்கள் தென்னாற்காடு மாவட்டக் கலெக்டர் இதுகுறித்து கடுமையாகச் சொல்லியும், தேசிய மயமாக்கப் பட்ட வங்கிகள் அந்தக் கடனை கொடுக்கவில்லை. 1981—82ஆம் ஆண்டிலே மொத்தம் தமிழ் மாநிலத்திற்கு, இந்த ஒருங்கிணைப் புத் திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு ? ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ? எவ்வளவு வழங்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பார்த்தாலே தெரியும். வழங்குவதற்கு கிளார்கு இல்லை என்று சொல்லுகிறார்கள்.

ஆகவே மாவட்ட அளவிலே தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளைக் கட்டுப்படுத்த எந்த ஸ்தாபனம் இருக்கிறது ? எந்த அதிகாரி இருக்கிறார் ? மாவட்ட அளவிலே. . ... ... ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி என்ன என்று சொல்லுங்கள். என்ன வேண்டுமென்று சொன்னால் தரச் சொல்லலாம். கலெக்டரைப் பாராட்டிக் கொண்டிருந்தால் என்ன செய்ய முடியும் ? கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. வி. வி. சுவாமிநாதன் :** சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மாவட்ட அளவில் கலந்து பேசி உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளை ரிசர்வ் வங்கிதான் கட்டுப்படுத்த முடியும். நாம் வேண்டுகோள் அல்லது கோரிக்கை தான் விடமுடியும்.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே ஒருங்கிணைந்த ஊரக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகள் வேளாண்மைத் துறையினாலும் ஒன்றிய அளவிலே ஆணையாளர்கள் மற்ற பணியாளர்களினாலும் செய்யப்படுகிறது. இரண்டு துறைகளும் ஒருங்கிணைந்து இந்தப் பணிகளைச் செய்வதால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே உள்ளாட்சித் துறையே இந்த வேலையைச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: முன்வந்து விட்டது. ஆணை பிறப்பிக்கப்பட்டாகிவிட்டது.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, கிராமபுறங்களில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் பல காரணங்களைச் சொல்லி கடன்களைக் கொடுக்காமல் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு பூராவும் இப்படிப்பட்ட நிலைமை பெரும்பாலும் இருக்கிறது என்பதை நாங்கள் அனுபவத்திலே சொல்கிறோம்.—மாவட்ட கலெக்டர் இதிலே ஒன்றும் செய்யமுடியாது — ஆகவே மாநில அரசே ரிசர்வ் வங்கியோடு பேச்சுவார்த்தை நடத்தி கடன்களைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அரசு அத்தகைய முயற்சி எடுத்துக்கொண்டதன் அடிப்படையிலே தான் ஓரளவிற்கு நிலைமை சீர்திருத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட தொகை செலவிடப்பட்டிருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மட்டுமல்ல, மத்திய கூட்டுறவு வங்கிகளும் இப்படிப்பட்ட கடன்களை வழங்குவது அரசுக்குத் தெரியுமா ? கூட்டுறவு மத்திய வங்கிகள் ஒரு சில கடன்கள் வழங்குகிறபோது 50 கிலோ மீட்டர், 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் சென்றுகூட மாடு வாங்க வேண்டுமென்று அவர்கள் சொல்கிற இடங்களிலேதான் வாங்கவேண்டுமென்று வற்புறுத்துவது அரசுக்குத் தெரியுமா ? மாடு வாங்குவதற்கு மருத்துவச் சான்றிதழ் பெறுகிறபோது கிராம அதிகாரிகளுக்கு என்று 20 சதவீதம் பணம் குறைத்துக்கொள்வது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கூட்டுறவு வங்கிகளும் இதிலே இணைந்து நின்று கடன் வழங்குகின்றன. 1981–82 ஆம் ஆண்டில் 5·37 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது என்ற விவரம் தான் இருக்கிறது. வேறு சிக்கல்கள் இருந்தால் அரசு தனியாக ஆராயலாம்.





**1974 ஆம் ஆண்டு முதல் பாசன மேம்பாட்டுப் பணிக்காக மைய அரசு அளித்த நிதி உதவி.**

*வினா எண் 613—திரு. வேடசந்தூர் வி.வி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் Command Area Development Programme-க்காக மைய அரசு 1974 ஆம் ஆண்டு முதல் கொடுத்த உதவித் தொகை ஆண்டுவாரியாக எவ்வளவு ?

(ஆ) ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்ப காலத்தில் மைய அரசு அந்த திட்டத்திற்கு உதவாததற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : விடை (அ) மற்றும், (ஆ) : அரசு கேட்டதற்கிணங்க, காவேரி பாசனப் பகுதியில் பாசன மேம்பாட்டு பணியினை 1974–75 முதல் 1980–81 ஆம் ஆண்டுகள் வரை செய்ததற்கு மைய அரசின் ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 38·34 இலட்சம் மானியமாகவும், ரூபாய் 55·32 இலட்சம் கடனாகவும் 1980–81 ஆம் நிதியாண்டில் மைய அரசு வழங்கியுள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த கமான்ட் டெவலப்மெண்ட் ஏரியா புரோக்ராமிற்காக மைய அரசு 1974–75 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கிய பணம் மாநில அரசால் பெறப்பட்டதா ? 1974–75 ஆம் ஆண்டிலிருந்து பெறப்பட்டதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1974–75 ஆம் ஆண்டிற்கான தொகை இப்போது பெறப்பட்டதா ? அப்படியானால் காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை நீர்ப்பாசனப் பகுதி மேம்பாட்டு ஆணைக்குழு அமைத்து மைய அரசின் நிதி உதவி கோரப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு 1974–75 ஆம் ஆண்டு கோராததால் வேளாண்மைத்துறை மூலமாக 1980–81 ஆம் ஆண்டில் கேட்கப்பட்டு 1981 ஆம் ஆண்டில் 1974–75 ஆம் ஆண்டிலிருந்து 1981 ஆம் ஆண்டு வரைக்கும் உள்ள தொகை மைய அரசால் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த மானியத் தொகை 1971 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு மாநிலங்களுக்கு மைய அரசின் இந்த உதவி கிடைத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே நம் மாநிலத்திலேயும் 1971 ஆம் ஆண்டிலிருந்து கொடுக்கப்பட வேண்டிய தொகையை மாநில அரசுக்கு வழங்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டிலிருநது நாம் செய்திருக்கின்ற பணிகளுக்கு நாம் வாங்கியிருக்கிறோம். 1971 ஆம் ஆண்டில் பணிகள் செய்யப்பட்டிருக்குமானால் அதை வாங்குவதற்கு உரிய முயற்சியில் அரசு ஈடுபடும்.

### தாம்பரம்—காஞ்சிபுரம் சாலையை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண் 614—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்திலிருந்து பெருங்களத்தூர், முடிச்சூர், படப்பை வழியாகக் காஞ்சீபுரம் வரை உள்ள சாலை விரிவு படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ). தாம்பரம் முடிச்சூர் சாலையில் கி.மீ. 1/8—3/0 மற்றும் 5/7— 6/10 ஆகிய இரு பகுதிகளை விரிவுபடுத்துவதற்கு முறையே ரூ. 36,000 மற்றும் ரூ. 38,000-க்கு மதிப்பீடுகளுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது. சாலையின் மற்றப் பகுதிகள் போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளது.

[முற்பகல் 9—50]

திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாம்பரத்திலிருந்து பெருங்களத்தூர், முடிச்சூர், படப்பை வழியாக செல்கிற சாலையில, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் ஒரு பகுதியிலே மட்டும் இப்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். அது எப்போது முடிக்கப்படும் என்றும் ஏனைய பகுதியையும் செப்பனிடுவதற்கு பணிகள் முறையாக எடுத்தால் இது குறுக்கு வழியாக செல்கிற காரணத்தால் மற்ற பகுதிகளுக்கும் பயன்படும் என்று தெரிவித்து மற்ற பணிகளை எப்போது தொடங்குவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982—83-ஆம் ஆண்டு இரண்டாம் பகுதி திட்டத்தின்கீழ் 12 இலட்சம் ரூபாய் மேம்பாட்டு பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த ஆண்டுக்குள்ளாக முடிக்கப்படும்.



### *Provision of Platic Buckets for each house in Madras City to collect garbage.*

615 Q.—THIRU R. UMANATH (THIRU R. THAMARTIKKANI) : Will the Hon. Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have any proposal that each house in the city of Madras should be provided with a plastic Bucket for people to dumb garbage; and

(b) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இதற்கான திட்டம் ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தினுடைய டீடெய்ல்ஸ் என்ன? அதனுடைய நோக்கம் என்ன? எந்த ஒரு திட்டமும் பரிசீலனையில் இருந்தால் அதற்காக ஒரு பர்ப்பஸ், அதாவது : பிராட் ஃயூச்சர்ஸ்' இருக்குமே, அது பற்றி விளக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்புறவு பணியை தூய முறையில் செய்ய வேண்டும் என்பதற்காக மாநகராட்சியினுடைய பல்வேறு பகுதிகளுக்கும், வீட்டிலே ஏற்படுகிற குப்பைகளை வெளியே கொட்டாமல், வீட்டிலேயே அவைகளை பிளாஸ்ட்டிக் பக்கெட்டில் போட்டு வைத்து, மாநகராட்சியினுடைய குப்பை வண்டிகள் வருகிற நேரத்தில் அந்த வண்டிகளில் நேரடியாக கொட்டலாம் என்பதற்காகத்தான் இந்த திட்டத்தை மாநகராட்சி கொண்டு வந்திருக்கிறது. மாநகராட்சியில் பல்வேறு பகுதிகளிலும் இந்த திட்டத்தை செயல்படுத்தலாம் என்று கருதி முதலிலே ஜார்ஜ் டவுன் பகுதியிலே கொண்டு வரலாம் என்று கொண்டு வந்தோம். ஜார்ஜ் டவுன் பகுதியிலே ஒரு வாளிக்கு ஒரு ரூபாய் மானியம் கொடுக்கிறோம் என்று சொன்னோம். அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு பின்னாலே 25 சதவீதம் கொடுக்கிறோம் என்று சொன்னோம். அதற்கு கூட முன் வரவில்லை. கோட்டூர்புறத்திலே இருக்கிற மக்கள் அவர்களாகவே முன் வந்து வாளிகளை வாங்கி மாநகராட்சிக்கு அவர்களே கொடுத்து அந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதற்கு பின்னாலே ஆயிரம் விளக்கு பகுதிக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு பகுதிகளுக்கும் மாநகராட்சியின் மூலமாக பக்கெட்டுகள் வழங்குகிற திட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இதன் மூலமாக மாநகரை சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம்.

**திரு ரா. உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி மானியம் கொடுத்து பக்கெட் கொடுக்கிற பேசிஸ்லே புரொப்போசல் உருவாகி அதை அக்செப்ட் பண்ணுகிற நிலை ஏற்படுகிற போது வாளிக்கு இப்போது நல்ல டிமாண்ட் இருக்கிற நிலை. அவர்கள வேறு நோக்கத்திற்காக வாளியை உபயோகப்படுத்தாமல் இருக்க, அல்லது 'லாஸ்ட்' என்று கடைசியில் சொல்லி அந்த முறையில போகாமல் இருக்க, எந்த பர்ப்பசிற்காகவும் கொடுக்கப்பட்டதோ அதற்காக பயன்படுத்த என்ன உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் ஒரு உபயோகத்திற்காக—ஒரு பொருளை கொடுக்கிறோம். அதை மாற்று உபயோகத்திற்காக மக்கள் எடுத்துக்கொள்கிற நேரத்திலே நாம் வலியுறுத்தி இந்த உபயோகத்திற்காகத் தான் வைத்துக்கொள்ளவேண்டும் வேறு உபயோகத்திற்கு போனால் உங்களுக்கு பெனாலிட்டி போடவேண்டி வரும் என்றெல்லாம் சொல்ல முடியாது. எந்த பர்பசிற்காக கொடுக்கப்படுகிறதோ அதற்காக உபயோகப் படுத்த வேண்டும் என்பது தான். இப்பொது கொடுக்கக்கூடிய பக்கெட்டுகள் மூடிகள் போட்டு காலால் மிதித்தால அந்த மூடி திறக்கிற வகையிலே இருக்கவேண்டுமென்று நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது கொடுக்கப்படுகிற பக்கெட்டுகள் உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப் போல பல்வேறு பணிக்காக உபயோகப்பட்டு வருகின்றன. ஆகவே தான் குறிப்பிட்ட பணிக்காக மட்டுமே அவைகள் உபயோகப் படுத்த வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் வாளி கொடுத்தும், குப்பையை வீதியிலே கொட்டுபவர்கள் மீது சிங்கப்பூரிலே இருப்பதைப் போல அந்தந்த இடத்திலேயே அபராத கட்டணம் வசூலிக்கப்படுமா? மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஒவ்வொரு அறையிலும் குப்பைக் கூடைகள் கொடுக்கப்பட்டிருந்தும், சில எம். எல. ஏ. விடுதியின் முன்பு அழகாக இருக்கிற புல்வெளியிலே எச்சில் இலைகளை வீசி எறிகிறார்களே, இவைகளைத் தடுக்க வராண்டாவிலே கம்பி வலை போடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலேதான் சிங்கப்பூர் போய் வந்திருக்கிறார்கள். ஆகவே அந்த நிலைமையை இந்தச் சிங்கார





சென்னைக்கும் கொண்டு வரவேண்டும்மென்று அவர்கள் விரும்புகிறார்கள். இந்த சென்னை நகரம் எப்போது சிங்கப்பூராக மாறுகிறதோ அப்போது அந்த நிலை பரிசீலிக்கலாம். இப்போது எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் எல்லாம் சிங்கப்பூரை போல அப்போதே 'பைன்' போட்டு அப்போதே கட்டவேண்டுமென்ற நிலைமையை கொண்டு வராமலே, மக்களிடத்திலே ஒரு நல்ல எண்ணத்தை வளர்க்க வேண்டும். துப்புறவு பணிகளிலே மக்களாகவே ஈடுபடவேண்டும் என்பதற்காக மெரினா கடற்கரையிலே காமராஜ் சாலையில் கூட தூய்மை பகுதி திட்டமென்று அந்த திட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே பல்வேறு சாலைகளிலேகூட அந்த திட்டத்தின் அடிப்படையிலே கொண்டு வந்து அடுத்ததாக மவுண்ரோடு அண்ணாசாலையை எடுத்திருக்கிறோம். அதைப்போல பல்வேறு பகுதிகளிலே எடுத்து மக்களுடைய மனதிலே நல்ல எண்ணத்தை வளர்க்கவேண்டுமென்பதற்காகத்தான் இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே குப்பைகளை கூட்டுவதற்கு மெக்கானிக்கல் 'ஸ்வீப்பர்' என்ற இராட்சஸ குப்பை கூட்டும் இயந்திரத்தை சென்னை மாநகராட்சி வில்லியம் ஜாக்ஸ் கம்பனியிடமிருந்து வாங்கியதே, அந்த இயந்திரம் பயன்படுத்தப்படுகிறதா இல்லையானால், அதைச் செயல்படுத்தாததற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, அந்த இயந்திரம் பழுதடைந்து அதன்மீதே குப்பைகள் விழுந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, பழுதடைந்த அந்த இயந்திரத்தைப் பழுது பார்க்க முடியாத நிலையில் அது அங்கேயே இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு பேவைத் தலைவர்அவர்களே, இந்தக் குப்பைகளைக் கொட்டுவதற்காக வீட்டு.சொந்தக்காரர்கள் கட்டாயம் அவர்கள் வீட்டுக்கு வெளிப்புறத்தில் குப்பைத் தொட்டி கட்ட வேண்டுமென்று நியதி இருந்தது. அந்த நியதி இப்பொழுது வலியுறுத்தப்படுகிறதா, அல்லது கைவிடப்பட்டதா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, குப்பைத் தொட்டிகளைக் கட்ட வேண்டுமென்பதற்குப் பதிலாக, குப்பைத் தொட்டிகளை எவ்வளவு வேண்டுமானாலும் மாநகராட்சி கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கேட்டால், கண்டிப்பாக நாம் எவ்வளவு குப்பைத் தொட்டிகள் வேண்டுமானாலும் கொடுக்கத் தயார். ஆனால், குப்பைகளை அந்தக் குப்பைத் தொட்டிகளில் மட்டும்தான் கொட்ட வேண்டுமென்ற நிலையினை ஏற்படுத்த வேண்டும். நாம் என்ன உபயோகத்திற்காகத் குப்பைத் தொட்டிகளைக்

[1982 மார்ச் 23

கொடுக்கிறோமோ அதற்கு உபயோகப்படுத்தாமல், குப்பைத் தொட்டிகளை, உடைத்து அதிலேயிருக்கிற இரும்புக் கம்பிகளை எடுத்துப் போகின்ற நிலைமையைத் தான் பல்வேறு சந்தர்ப்பங்களில் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது மட்டு மல்ல, சாலைகளிலே, 'மான்ஹோல்ஸ்' மேல் மூடப்படுகின்ற மூடிகள் திருடு போகின்றன. ஆகவே, அந்தச் சூழ்நிலைகள் மாற்றப்பட வேண்டும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்படுகின்ற இந்தக் குப்பைத் தொட்டிகள் போல், தமிழகத்திலே கோவை, திருச்சி, மதுரை போன்ற பெரிய நகராட்சிகளுக்கு வழங்க அரசு ஆலோசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது மாநகராட்சிப் பகுதியான சென்னையில் நல்லமுறையில் நடந்தால், அவைகளை மற்றுமுள்ள மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் விஸ்தரிப்புதற்கு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகர மேம்பாட்டிற்காக, சுகாதார வசதிகளைப் பெருக்குவதற்கு வீட்டிற்கு ஒரு பிளாஸ்டிக் வாளி கொடுக்கப்படுகிறது. ஆனால், அதே நேரத்தில், சாலைகளில் ஆடு மாடுகள் சுதந்திரமாக மேய்ந்து, சாணம் சிறுநீர் கழிப்பதுடன், சுகாதாரக் கேடு விளைவிப்பதுடன், சாலை விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகின்றதே, அதைத் தடுக்க மாநகராட்சியிடம் திட்டம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 10 மனிதர்கள் எவ்வளவு குப்பைகளை அல்லது கழிவுகளை ஏற்படுத்துகிறார்களோ அதை ஒரு மாடு அல்லது எருமை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது; இந்த மாநகராட்சிப் பகுதியிலே ஏறத்தாழ 1 இலட்சத்திற்கு மேல் கால்நடைகள் இருக்கின்றன. அவைகளைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். பல்வேறு பகுதிகளில் நாம் பார்க்கின்றோம். முக்கியமான சாலைகளில் கூட எருமைகள் அல்லது பசுமாடுகள் போன்றவைகள் தடைகளை ஏற்படுத்தி போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்யக்கூடிய சூழ்நிலைகள் எல்லாம் இருக்கின்றன. இதற்காக, ஏற்கெனவே விதிமுறைகளிருந்தாலும் கூட மக்கள் முன்னுக்கு வந்து அவைகளை யெல்லாம் பகல் நேரத்தில் அல்லது இரவு நேரத்திலே வெளியே விடக் கூடாது, வீட்டிலே தான் கட்டி வைக்க வேண்டும். அல்லது தொழுவத்திலேதான் கட்டி வைக்கவேண்டுமென்ற நிலைகள் இருந்தால் தான் அவைகளைக் கட்டுப்படுத்தமுடியும்.



1982 மார்ச் 23]

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிளாஸ்டிக் வாளி கொடுப்பதைவிட அமெரிக்காபோன்ற நாடுகளில் பெரிய பிளாஸ்டிக்பைகள் கொடுக்கின்றார்கள். அப்படிப்பட்ட பைகள் கொடுத்தால், இப்படிப்பட்ட நிலைமைகள் வராது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே நாம் கொடுக்கின்ற பிளாஸ்டிக் பக்கெட்டிற்கே இப்படிப்பட்ட நிலை என்றிருக்கும்போது, இன்னும் பைகளைக் கொடுத்தால் வேறு உபயோகங்களுக்கு மாற்றப்படுமோ என்கின்ற அச்சம்தான் நிலவுகிறது.

## நெடுஞ்சாலைத்துறையில் தினக் கூலி அடிப்படையில் பணியாற்றுபவர்கள்

*வினா எண். 616—திரு. க. நெடுமாறன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலைத்துறையில் தின ஊதிய அடிப்படையில் வேலை பார்ப்போரின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் 1981 முடிய நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; (அ) 263.

(ஆ) 25.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 263 பேர் தின ஊதிய அடிப்படையிலே வேலை பார்க்கின்றார்கள். அவர்களிலே நிரந்தரம் செய்யப்பட்டவர்கள் 25 பேர்கள் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த 263 பேர்கள் எத்தனை ஆண்டுகளாக வேலை பார்க்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, கடந்த 1-8-6-81 இல் அரசாணைப் போடப்பட்டதன் காரணமாக ஐந்தாண்டுகளுக்கும் மேல் பணியாற்றியவர்கள், குறிப்பாக வேலைவாய்ப்பகத்தின் மூலம் பணியில் சேர்ந்தவர்கள் நிரந்தர

மாக்கப்பட்டிருக்கிறார்கள். பாக்கியிருப்பவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்றால் ஐந்தாண்டுகளுக்கும் குறைவாக அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது தான்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, சாதாரணமாக 240 நாட்கள் வேலை பார்த்தாலே நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று விதியிருக்கும்பொழுது ஆண்டுக்கணக்கிலே வேலை பார்ப்பவர்கள் கூட வேலையிலே நிரந்தரமாக்கப்படாமல் இருப்பது நியாயமா? உடனடியாக அவர்களை நிரந்தரமாக்குவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே பல்வேறு இடங்களில் நியாயம் இல்லை என்று தெரிந்துதான் இந்த அரசாணையைக் கடந்த 1981 ஆம் ஆண்டில் ஆறாவது மாதத்தில் போட்டோம். அதன் மூலம் 25 பேர்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள், இது போன்று இருப்பவர்களெல்லாம் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற எண்ணம்தான் இந்த அரசுக்கு இருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நெடுஞ்சாலைத்துறையில் வேலைபார்க்கின்ற தினக்கூலி தொழிலாளர்களைப் பற்றிய எண்ணிக்கையை அமைச்சரவர்கள் சொன்னது மிகக் குறைவான எண்ணிக்கையாகத் தெரிகிறது. நெடுஞ்சாலைத் துறையில் வேலை செய்யும் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அப்படியானால் இப்பொழுது அமைச்சரவர்கள் சொல்லியிருக்கக்கூடிய எண்ணிக்கையைத் தவிர பாக்கியிருப்பவர்கள் நிரந்தரமான தொழிலாளர்களா? அவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் ? அதுபோக கான்ட்ராக்ட்தொழிலாளர்கள் அந்த நெடுஞ்சாலைத் துறையில் வேலை செய்கிறார்களா? அவர்களுக்கு கான்ட்ராக்ட் சட்டப்படி சம்பளமும், வசதிகளும் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, தின ஊதிய அடிப்படையில் வேலை பார்ப்போர் இவ்வளவு பேர்கள்தான் 263 பேர்கள் தான் இந்த நெடுஞ்சாலைத்துறையில் இருக்கிறார்கள். பாக்கியிருப்பவர்கள் ஆங்காங்கு காண்ட்ராக்ட் அடிப்படையில் வேலை செய்பவர்கள். அவர்களுக்குக் காண்ட்ராக்ட் ஆக்ட் அல்லது இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட் ஆக்ட் மூலமாக என்னென்ன பாதுகாப்பு கொடுக்கப்பட முடியுமோ அவைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில் தின ஊதிய அடிப்படையில் வேலை பார்ப்போரின் எண்ணிக்கை 263 என்று எனக்குக் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.



திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது 25 பேர் தான் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர் என்று சொல்கிறார்கள். ஆனால் 200-க்கும் மேற்பட்டவர்கள் நான்காண்டுக் காலம், மூன்றாண்டுக் காலம் வேலை செய்தாலும் கூட இதுவரையில் அவர்களை நிரந்தரம் செய்யாமல் இருப்பதற்கான காரணம் என்ன? அதுமட்டுமல்லாமல் காண்ட்ராக்ட் லேபர் மூலம் செய்பவர்களுக்குக்கூட சட்டப்படி மினிமம் வேஜஸ் ஆக்ட்படி கூலி கொடுக்கப்படாமல் இருப்பது உண்மையா? அரசுக்கு அது சம்பந்தமாக ரிப்போர்ட் வந்திருக்கிறதா? வந்திருக்குமேயானால் அவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி கொடுக்க வருங்காலத்திலாவது சட்டப்படி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, வேலைவாய்ப்பகத்தின் மூலம் வருபவர்கள் ஐந்தாண்டுகளுக்கும் மேலே பணியிலே உள்ளவர்கள் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். 25 பேர் நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். நேரடியாக நியமனம் செய்து பணியில் அமர்த்தப்பட்டவர்கள் பத்தாண்டுகளுக்கு மேல் பணியாற்றினால்தான் அவர்களை நிரந்தரம் செய்ய முடியும். இப்படி இரண்டு வித்தியாசங்கள் இருப்பதால்தான் இப்பொழுது 25 பேர்களை மட்டுமே நாம் நிரந்தரம் செய்திருக்கிறோம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் ஐந்தாண்டுகள் அல்லது பத்தாண்டுகள் வேலை செய்வதால் நிரந்தரமாக்கியிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் ஓராண்டுக் காலம் பணியாற்றினால்கூட அவர்களை நிரந்தரம் ஆக்குவதற்கு அரசு முன்வருமா ? ஏனென்றால் இன்னும் 263 பேர்கள் தான் பாக்கியிருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் அவர்களை நிரந்தரமாக்குவதற்கு அமைச்சர் அல்லது அரசு முன்வருமா ? இந்த அமைச்சரின் நிர்வாகம் உள்ளாட்சித் துறையிலும் இருப்பதால் உள்ளாட்சித் துறையில் நிரந்தரமாக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அப்படிச் செய்ய முடியாத ஒரு சூழ்நிலையிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, நெடுஞ்சாலைத் துறையில் இப்பொழுது பத்து பதினைந்தாண்டுகளாக கேங்க் மஸ்தூர்கள் எடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதற்குப் பதிலாக காண்ட்ராக்ட் முறையை அமல்படுத்துவ

தாகச் சொல்லப்படுகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு எடுத்த அடிப்படையில் மீண்டும் கேங்க் மஸ்தூர்கள் எடுக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய யோசனையைப் பரிசீலிக்கலாம்.

**சொந்த ஜீப்பு, கார் வைத்திருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பெட்ரோல் வழங்கும் திட்டம்.**

*வினா எண் 617—திரு. ஆர். தவசி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சொந்த ஜீப்பு, கார், வைத்திருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 50 லிட்டர் பெட்ரோல் போட பஞ்சாயத்து யூனியன்களின் மூலமாக அனுமதி வழங்க அரசுக்கு உத்தேசம் ஏதும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

திரு. ஆர். தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 50 லிட்டர் பெட்ரோலோடு, ஒவ்வொரு மாதமும் 2 நாட்களுக்கு அந்த யூனியன் வண்டியைக் கொடுக்க வேண்டும் என்ற இந்த அரசினுடைய உத்தரவு இருந்தும், சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கிற நேரங்களில் இன்ஜினீயர் கொண்டுபோய் இருக்கிறார், சூப்பர்வைசர் கொண்டுபோய் இருக்கிறார், பி.டி.ஓ. கொண்டுபோயிருக்கிறார், என்று சொல்லி தட்டிக் கழித்து விடுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு அரசு பங்ஷனுக்குப் போகவேண்டிய காரணத்தினால் 50 லிட்டர் பெட்ரோலை, சொந்த ஜீப், கார் வைத்திருக்கின்றவர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? ஆம் என்றால் அதன் விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேர்களும் ஜீப், கார்கள் வைத்துக் கொள்ளும் உரிமை பெற்றவர்களாக இல்லை. வேண்டுமானால் ஒன்றிரண்டு பேர்களுக்கு இருக்கலாமே தவிர, அத்தனை பேர்களிடத்திலும் ஜீப்கள் இல்லை. அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுடைய உபயோகத்திற்காக மாதம் ஒரு நாள், அதுவும் குறிப்பாக ஒன்றியங்களினுடைய ஜீப்புகளை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டு அதற்காக 50 லிட்டர் பெட்ரோல் அதிகமாக கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் அந்த 50 லிட்டர் பெட்ரோலைத் தனியாக அவர்களிடம் கொடுத்தால் அது எப்படி உபயோகப்படுத்தப்படுகிறது என்பதைக் காண முடியாது. ஆகவேதான் அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஜீப்புகளை அவர்கள் உபயோகப்படுத்திக் கொண்டால், வரக்கூடிய அதிகாரிகளும் அதே ஜீப்பிலே வரமுடியும். நீங்கள் என்னென்ன பணிகளை சொல்லுகிறீர்களோ அந்தப் பணிகளைச் செய்யவும் அவர்களும் சேர்ந்து அதைப் பரிசீலிக்க முடியும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியனிலே இருக்கின்ற கமிஷனர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஜீப் கொடுக்கவே மாட்டேன் என்கிறார்கள். இது குறித்து கலெக்டரிடமும் ரிப்போர்ட்டு கொடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல. நாங்கள் தனிப்பட்ட முறையில் ஜீப்புகளை எடுத்து வரும்போது, அவர்கள் கூப்பிட்டால் இன்று எங்களுக்கு வேறு வேலை இருக்கின்றது, நாங்கள் அங்கே போக வேண்டும் இங்கே போக வேண்டும் என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பொருத்தவரையில் இப்படி, மற்ற தொகுதிகளிலே எப்படியோ எனக்குத் தெரியாது. சொந்தமாக ஜீப் எடுத்துக் கொண்டு போனால் கூட எனக்கு இன்றைக்கு கல்வர்ட் வேலை இருக்கின்றது அல்லது வேறுவேலை இருக்கின்றது என்று சொல்லும் நிலை இருக்கின்றது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், இந்த 50 லிட்டர் பெட்ரோல் என்பது வெறும் எழுத்து மூலமாகத்தான் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே 2 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. எனவே கட்டாயமாக அந்த 50 லிட்டர் பெட்ரோல் இருக்கின்ற காரணத்தினால் ஒரு மாதத்தில் அல்ல, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கின்ற நேரத்தில் அந்த ஜீப்களை கொடுக்க அமைச்சர் உத்தரவாதம் கொடுக்க வேண்டும். இப்போதுள்ள ஆர்டர் வெறும் பார்மல் ஆர்டராக இருக்கின்றது.

[1982 மார்ச் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஆர். தியாகராசன் : எனவே அந்த ஒன்றிய ஜீப்புகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 2 நாளைக்குக் கொடுக்க அமைச்சர் வாக்குறுதி கொடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு வளர்ச்சி அலுவலர்களுக்கு நீங்கள் உடனடியாக அறிவிப்புக் கொடுத்து இந்த நாட்களில் ஜீப் வேண்டுமென்று சொல்லி அது டி.டி.ஓ.-வாக இருந்தாலும் பி.டி.ஓ.-வாக இருந்தாலும் அவர்கள் வரமுடியாது என்று சொன்னால் தயவு செய்து எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்று சொன்னால் இப்போது தன்னிறைவுத் திட்டம் நடைபெறுகின்ற காரணத்தினால் ஏதாவது சாக்குப் போக்கு சொல்கிற நிலை கூட வரலாம். ஆகவே தான் உங்களுக்காக மாதம் ஒருநாளை ஜீப் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாமன்றம் அதற்கு உரிமம் கொடுத்திருக்கிறது. அந்த உரிமத்திற்குத் தடங்கல் ஏற்படுத்துகிறவர்கள் யாராக இருந்தாலும் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். இப்போதுகூட ஒவ்வொரு ஜீப்புக்கும் 250 லிட்டர் பெட்ரோல் மாதத்திற்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே 200 ஆக இருந்து 250 ஆகப் பின்னர் இப்போது தன்னிறைவுத் திட்டம் அமுலால் இருக்கும் ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் 300 லிட்டர் பெட்ரோல் ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் உள்ள ஒவ்வொரு ஜீப்புக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை மக்களுக்காகச் சேவை செய்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் நல்ல முறையிலே பணியாற்றவேண்டும் என்பதாலே பயன்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் அந்த நிலைமையைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே தனியாக பெட்ரோல் கொடுப்பது என்பது சரியாக இருக்காது. உங்களுக்கு எல்லாம் நிரந்தரமாக ஜீப்புகள் அனுமதிக்கப்பட்டால் கண்டிப்பாக அந்த நிலைமை பரிசீலனை செய்யப்படும்.

[முற்பகல் 10-10]

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் இல்லாத பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கும் ஜீப்புகளை தன்னிறைவுத் திட்டம் நடக்கும் இடத்திற்கு இப்போது அதிகாரிகள் கொண்டு செல்கிறார்கள். தன்னிறைவுத் திட்டம் நடக்காத பகுதிகளிலே மிகவும் கண்டிஷன் இல்லாத ஜீப்புகளை வைத்திருப்பதனால் அதை எப்போது கேட்டாலும், அது ரிப்பேர் என்று கூறக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்த 50 லிட்டர் பெட்ரோலை கொடுக்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.



1982 மார்ச் 23]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்டிஷன் இல்லாமல் இருக்கின்ற ஜீப்புக்களை ரீ-கண்டிஷன் செய்ய வேண்டும். ஆகவே, இருக்கக்கூடிய ஜீப்புகளை எல்லாம் அதிக காலம் உழைத்த ஜீப்புகள் நம்முடைய ஒன்றியத்திலே இருப்பது அரசுக்குத் தெரியும். இப்போதும் கூட நிதிநிலைமை சரி இல்லாத காரணத்தால், புதிய ஜீப்புகள் வாங்கமுடியவில்லை. இந்த ஆண்டிலே கூட இருக்கக்கூடிய வட்டார நல அலுவலகங்களுக்கு புதியதாக ஜீப் கொடுக்க ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து கடந்த ஆண்டில் 10 ஜீப்புகளும், இந்த ஆண்டிலே 10 ஜீப்புக்களும் என்று கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, எல்லா ஒன்றியங்களுக்கும் ஜீப்புக்களை கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற உத்திரவுப்படி மாதாமாதம் ஜீப் கொடுக்கப்பட்டால்தான் அந்த 50 லிட்டர் பெட்ரோல் கொடுக்கப்பட முடியும். எந்தக் காரணத்தினாலோ ஒன்று வண்டி கிடைக்காத போதிலோ, அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த மாதம் வண்டியை எடுத்துக்கொள்ள முடியாவிட்டாலோ கூட அடுத்த மாதத்திற்கு இந்த 100 லிட்டராகக் கொடுத்து, அந்தப் பணிகளைச் செய்வதற்கு அரசாங்கம் உத்திரவு இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஒரு மாதத்திற்கு 50 லிட்டர் என்றுதான் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதை இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை 100 லிட்டர் என்று மாற்றுவது என்று கேட்டாலும், ஒவ்வொரு மாதமும் நீங்கள் மக்களைச் சந்திக்க வேண்டுமென்பது தான் எங்களுடைய எண்ணம். இந்த மாதம் வேண்டுமானால், சட்டமன்றக் கூட்டம் நடக்கிற காரணத்தினால் வேண்டுமானால் நீங்கள் சொல்லலாமே தவிர, ஆனால் சட்டமன்றக் கூட்டம் இருக்கிறபோதும் கூட, ஞாயிற்றுக்கிழமைகளிலோ அல்லது விடுமுறை நாட்களிலோ கண்டிப்பாகப் போவீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே, இதை உபயோகித்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. எம். என். சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 லிட்டர் என்று ஒவ்வொரு உறுப்பினரும் கூறி இருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் 1½ ஒன்றியங்கள் இருக்கின்றன. ஆகவே, 1½ யூனியன்களிலே 75 லிட்டர் ஒவ்வொரு மாதம் செலவழிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. ஆகவே, ஏற்கெனவே, ஒவ்வொரு யூனியனிலே உள்ள பி.டி.ஓ.-க்கு கார் இல்லாத காரணத்தால், கிடைக்கும் போதெல்லாம் அதை எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். ஆகவே,

கார் வைத்துள்ள, ஜீப் வைத்துள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று, அந்தப் பெட்ரோலுக்கான பில்லை பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் கொடுத்தால் அதற்கு பணம் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டினை அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அது தவறான போக்கிற்கு வழி செல்லும் சூழ்நிலையை உருவாக்கிவிடும். ஆகவே, அந்த நிலை சரியாக இருக்காது.

வத்தலக்குண்டிலுள்ள அரசு மருத்துவமனையை விரிவு படுத்தும் திட்டம்.

*வினா எண் 618—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலக்கோட்டை தொகுதி வத்தலகுண்டிலுள்ள அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி, புதிய கட்டிடம் கட்டி, 32 படுக்கை வசதி உடையதாக ஆக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் என்றால் எப்போது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

குடும்பக் கட்டுப்பாடு திட்டம்

*வினா எண் 619— திரு. செ. செம்மலை : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை பிரச்சாரத்தின் மூலம் தீவிரப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) அதற்காக சென்ற ஆண்டு அரசால் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) குடும்ப நலத் திட்டத்தை பிரச்சாரத்தின் மூலம் தீவிரப்படுத்துவதற்கு கீழ்க்கண்ட வழிகளில் விளம்பரங்கள் செய்யப்பட்டன:—

" வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், திரைப்படங்கள், நாடகங்கள், கிராமிய நடனங்கள், வில்லுப்பாட்டு, துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், விளம்பரப் பலகைகள், பொருட்காட்சிகள், குடும்பநல இரு வார விழாக்கள், மக்கள் தலைவர்களுக்கான பயிற்சி முகாம்கள் மற்றும் துறையினரால் நடத்தப்படும் செய்தித் கதிர் முதலியன.

(ஆ) 1980—81-ல் குடும்ப நல விளம்பரங்களுக்காக ரூ. 19·11 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

திரு. செ. செம்மலை தலைவரவர்களே, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைக் கடைப்பிடிக்கிறவர்களுக்கு அல்லது அவர்களுடைய பிள்ளைகளுக்கு அரசு வேலை வாய்ப்பு அல்லது அரசு அளிக்கிற பல்வேறு சலுகைகளை அளிக்க முன்னுரிமை கொடுக்கப்படுமா ? அப்படிச் செய்வதன் மூலம் மற்றவர்களும் இந்தத் திட்டத்தை விரும்பி ஏற்றுக்கொள்ளும் முறையில் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, சென்ற ஆண்டு டில்லியிலே நடைபெற்ற அகில இந்திய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் இதற்கு என்று ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவிற்கு என்னை தலைமை தாங்கச் சொல்லி, அங்கே சில கருத்துகளைப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஒரு தீர்மானத்தின் மூலம் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு என்ன என்ன சலுகைகள் கொடுக்கலாம். (இன்செண்டிவ்ஸ்), அதை எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்பதைப் பற்றி ஆராய்வதற்கு ஒரு சப் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்த வரையில் அந்த சப் கமிட்டி தீர்மானம் செய்து, மீண்டும் ' ஆல் இந்தியா ஹெல்த் மினிஸ்டர்ஸ் கான்பிரன்ஸில்' முடிவு செய்து ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுவரையில் அறுவை சிகிச்சைக்கு இப்போது என்ன சலுகை, தொகை அளிக்கப்படுகிறதோ அது தொடர்ந்து கொடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பரப்புவதற்கு தனியாகத் தொழில் நடத்தி வருகிற ஆர். ஐ. எம். பி., எல். எம். பி. படித்த டாக்டர்களுக்கு பயிற்சி அளிக்க முகாம்கள் நடத்தப்பட்டன. அவர்களை எந்த வகையிலே இந்தத் தொழிலில் ஈடுபடுத்த அரசு உத்தேசித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் டிஸ்டிரிக்ட் ஃபாம்லி ஹெல்த் ஆபீசர் இருக்கிறார்கள். அவர்கள் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் யார், யார் தீவிரமாகக் கவனம் செலுத்துகிறார்கள் என்று பார்த்து, அவர்கள் தனியார் துறையிலே இருக்கிற மருத்துவர்களாக இருந்தாலும், அவர்களை அணுகி, அவர்களுடைய ஒத்துழைப்பை நாடுகிறார்கள். அந்த வகையிலே, அவர்களுடைய பணி பயன்படுத்திக் கொள்ளப்படும்.

**திரு. ரா. உமாநாத்** : தலைவரவர்களே, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை ஊக்குவிப்பதற்காக சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு 'கோட்டா' நிர்ணயிக்காமல் அவர்கள் இஷ்டப்படி பிரச்சாரம் செய்வது என்பது இதுவரை இருந்துவந்த நடைமுறை. அந்தக் கொள்கையை இப்போது மாற்றி, அவர்களுக்கு ஒரு கோட்டா நிர்ணயித்து, கட்டாயமாக அந்தக் கோட்டாவைப் பூர்த்தி செய்யவில்லை என்றால் 'கான்பிடன்ஸ் பைலில்' எழுதி, டிசிப்பிளினரி ஆக்ஷன் எடுக்கிற ஒரு கொள்கை இப்போது உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை இதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று பல்வேறு வகைகளிலே உத்தரவு போட்டிருக்கிறோம். ஏனென்றால் ஒவ்வொரு மாநிலமும் இதில் கட்டாயமாக ஒரு இலக்கு நிர்ணயித்து, இதைச் செயல் படுத்த வேண்டுமென்று 'ஆல்மோஸ்ட் மான்டேட்டரி' என்ற முறையில் மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான துன்பமும் இல்லாமல் அதற்கு என்று நியமித்திருக்கிற அலுவலர்கள் இத்தனை பேர்களை அணுக வேண்டுமென்ற இலக்கை வைத்திருக்கிறோம்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிற அலுவலர்கள் அந்த இலக்கை எட்டவில்லை என்றால் அவர்கள் மீது டிசிப்பிளினரி ஆக்ஷன் எடுக்கப்படும். அது மட்டுமல்ல. கலெக்டரிடம் இதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஒரு அதிகாரி இந்தப் பணியிலே எவ்வளவு ஆர்வமாகச் செயல்படுகிறார் என்பதைக் கண்டறிய அவர்களுக்கு ஒரு அளவுகோலாக இதை நாம் வைத்துக் கொள்ளலாம்.

**திரு. ஜே. எஸ். இராசு** : தலைவரவர்களே, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக அதிகாரிகள் செயல்படும்போது ஊராட்சி ஒன்றியங்களில், பேரூராட்சி மன்றங்களில் பணியாற்றுகின்ற





துப்புரவு பணியாளர்களைக்கூட நீங்கள் ஒவ்வொருவரும் இத்தனை ஆள் பிடித்து வர வேண்டும், இல்லாவிட்டால் வேலையிலிருந்து நீக்கிவிடுவோம் என்று சொல்லி, கட்டாயப்படுத்துகிறார்கள். அதைப் போல ஒரு வாரம், 1.. நாள் வேலை நீக்கம் செய்யப்பட்டு, நாங்கள் எடுத்துச் சொல்லிய பிறகு மீண்டும் அவர்கள் வேலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அடிப்படை ஊழியர்கள் நாடெங்கிலும் இப்படி கட்டாயப் படுத்தப்படுவது அரசுக்குத் தெரியுமா ? இனிமேல் இப்படி நடக்காமல் இருப்பதற்கு அமைச்சரவர்கள் உத்தரவாதம் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே**: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துவதற்கு கேள்வி மூலம் நல்ல யோசனைகள் தருவார் என்று கருதினேன். ஏனென்றால் இது ஒரு தேசியப் பிரச்சனை. இதிலே மந்தப் போக்கு காட்டுவது நல்லதல்ல என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இதற்கு ஒத்துழைப்பார்கள் என்று கருதுகிறேன். அதற்காகத் தான் அண்மையில் எல்லாக் கட்சிகளையும் அழைத்து ஒரு கூட்டத்தை நடத்தினோம். மத்திய அரசில் இருக்கிற பல அதிகாரிகளும் அதற்கு வந்தார்கள். பாராளுமன்றத் தலைவர் கூட வந்திருந்தார். இந்த விஷயத்தில் நாம் சரியான முறையில் பணி செய்வதற்கு ஊக்கம் கொடுக்கும் வகையிலே கருத்துக்கள் தெரிவிக்க வேண்டும். சரியாக வேலை செய்யாதவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பேசினால் அது இந்த நாட்டுக்கு பயனளிக்காது என்பது என்னுடைய பணிவான கருத்து. ஒவ்வொருவருக்கும் 4, 5 பேர்கள் என்று தான் இலக்கு வைத்திருக்கிறோம். குடும்ப நல இலாகாவில் இருக்கிறவர்கள் கூட அதைச்செய்யவில்லை என்றால் நாம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் இன்னும் எடுக்கவில்லை. எடுத்தால் நல்லது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதில் அரசியல் பிரச்சனை பார்க்காமல் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பணியிலே ஈடுபட்டிருப்பவர்கள் அதிலே உரிய கவனம் செலுத்தவில்லை என்றால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தின் காரணமாக நாட்டிற்கு நன்மை பயக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

**திரு. ஜி. கே. சுப்பிரமணியன்**: பேரவைத் தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு பிரச்சார நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் இன்று நாடெங்கிலும் நடத்திக்கொண்டு இருப்பவர்கள், ஏற்கெனவே நலிந்து போய் இருக்கும் நாடகக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் அவர்கள் இதன் மூலம் பயன்பெற்று வருகிறார்கள். இப்போது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் ஊதியம் குறை

வாக இருக்கிறது. அதை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஊதியத்தை அதிகரிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன். அதைப் போலவே, இந்தப் பிரச்சாரத்தை சினிமா மூலம் செய்வது பொருத்தமாக இருக்கும். ஆகவே, மினி ப்ரொஜக்டர் மூலமாக ஓரளவிற்கு அந்தப் படங்களை, கிராமப்புறங்களில் போட்டுக் காண்பித்து இந்தக் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை பிரபலப் படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இரண்டு விஷயங்களைப் பற்றி எழுப்பியிருக்கிறார்கள். சினிமாத்துறையை இதிலே பயன் படுத்துவது நலமாகத்தான் இருக்கும். இது உண்மையிலேயே ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு கருத்து, அந்த வகையில் இந்தக் கருத்தை எடுத்துக்கொள்கிறேன். அண்மையில் நாம் ஒரு படத்தை எடுத்து இருக்கிறோம். அது ஒரு மணி நேரம் ஓடுகிறது. 5,000 அடி இருக்கிறது என்று நினைக்கிறேன். 'கல்யாணத்திற்கு ஒரு நிபந்தனை' என்பது அதன் பெயர். அதை டெலிவிஷனில் கூட போட்டுக் காண்பித்து இருக்கிறார்கள். மிக நல்ல படமாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல், மத்திய அரசிலே இப்போது கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

ஒவ்வொரு சினிமாவிலும் கூட, ஒவ்வொரு படத்திலும் கூட, ஏதாவது ஒரு இடத்தில் ஒரு கான்வர்சேஷன், ஒரு சொற்பொழிவு, ஒரு பேச்சு, ஒரு அறிவுரை அல்லது ஒரு குறிப்பு இந்தக்குடும்பக் கட்டுப்பாடு பற்றி வரும் அளவிற்கு செய்ய வேண்டும். இப்படி ஏதாவது ஒரு சீன் ஒவ்வொரு படத்திலும் இணைத்துவிட்டால் நல்லது என்று 'மான்டேடரியாக' ஒரு ஆணைவெளியிடலாமா என்று மத்திய அரசு கருத்து கொண்டு இருக்கிறது. அப்படிச் செய்யலாம் என்று நாமும் கருத்துச் சொல்லியிருக்கிறோம்.

இன்னொரு விஷயத்தைப் பற்றியும் சொன்னார்கள். அந்த நாடகம் நடத்துபவர்கள் நலிந்துபோன கலைஞர்கள், அவர்களுக்கு அதிகமான அளவிற்கு ஊதியம் தர வேண்டும் என்று சொன்னார்கள். அந்தத் தொகையை உயர்த்த வேண்டும் என்று நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறோம். அவர்கள் தான் இப்பொழுது அதற்கான தொகையைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இத்தகைய ஒரு நல்ல பிரச்சாரத்தைச் செய்து வரும் அவர்களுக்கு மேலும் அதிக அளவில் தொகை கொடுத்து உபயோகித்துக்கொள்ளலாம் என்று நாம் மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கிறோம். அதைத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம்.



### இடைப்பாடி நகரிலுள்ள மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம்.

*வினா எண். 620 திரு. இ. கணேசன்—மாண்புமிகு மக்கள்–நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைப்பாடி நகரில் உள்ளவர்களுக்கு போதுமான அளவிற்கு மருத்துவமனை வசதி இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம்எனில், மருத்துவமனையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) இம்மருத்துவமனையை விரிவு படுத்துவதற்கான காலி நிலம் நகராட்சியால் மருத்துவத்துறைக்கு சட்டபூர்வமாக மாற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இக்காலி நிலம் நகராட்சியால் சட்டபூர்வமாக மாற்றப்பட்டவுடன் இம்மருத்துவமனையை விரிவு படுத்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இடப்பாடி மருத்துவமனை 1937 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட . அன்று கண்ட மேனிக்கு அழிவு இல்லை என்பார்களே அதைப் போல, அந்த மருத்துவமனை எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறது. இன்றைக்கு இடப்பாடி நகரத்தில் சுமார் 40,177 பேர்கள் 1981ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு படி இருக்கிறார்கள். அந்த இடப்பாடி நகரத்தை ஒட்டியிருக்கிற அந்த மருத்துவமனைக்கு அருகாமையில் உள்ள இடப்பாடி ஒன்றியப்பகுதியில் சுமார் 25,000 மக்களுக்கு மேல் இருக்கிறது. அந்த மக்களும் இந்த மருத்துவமனையை நம்பித்தான் இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அதை விரிவுபடுத்த அரசு முயற்சிக்குமா என்பதை நான் பணிவோடு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் இடப்பாடியில் இருந்து வந்து இருப்பதால் அந்த ஊரைப்பற்றி எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் 1–11–72 ஆம் நாளன்று அந்த மருத்துவமனையை அரசு ஏற்றுக் கொண்டது. அதுவரையில் அது பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரியாக இருந்தது. அந்த மருத்துவமனையை அரசாங்கம் எடுத்துக் கொண்டு பிறகு 10 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக அதை விஸ்தரித்தது. அதற்குப் பிறகு இன்னும் கொஞ்சம் இடம் இருந்தால் அதை மேலும்

விஸ்தரிக்க முடியும் என்கிற வகையில், இடத்தைக் கொடுங்கள் என்று முனிசிபாலிட்டியிடம் கேட்டோம். முனிசிபாலிட்டி கொடுப்பதற்குத் தயாராக இருந்தது. ஆனால் அந்தப் பகுதியில் சிலபேர் என்கரோச்மென்ட் செய்து விட்ட காரணத்தால், அந்த இடத்தை கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். அவர்களை அப்புறப்படுத்துவது என்பது இயலாத காரியமாக இருப்பதால் அந்த என்கரோச்மென்ட் தவிர வேறு பகுதியை அரசாங்கத்திற்குக் கொடுத்து விட்டால் அங்கே மருத்துவமனையை விஸ்தரிக்க முடியும் என்று சொல்லி இருக்கிறோம். அந்த நடவடிக்கைகள் இப்போது நடந்து வருகின்றன.

திரு இ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின் போது நான் அமைச்சர் அவர்களிடம் இதே கேள்வியைக் கேட்கிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்.அந்த இடத்திலே இன்னொரு ஆக்கிரமிப்பு இருக்கிறது என்றும், அதை.உடனடியாக அகற்றி அதை விரிவு படுத்த அரசுமுயலும் என்றும் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். இதுவரை அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை விரிவுபடுத்துவதற்கான எந்தவிதமான திட்டமும் இல்லை. தயவு கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆக்கிரமிப்பை அகற்றவும், அந்த ஆஸ்பத்திரியை விரிவு படுத்தவும் முயற்சியை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : உடனடியாக அந்த முயற்சியை அரசு எடுக்கும்?

பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதி.

*வினா எண். 126—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டையில் உள்ள இந்திய மருத்துவக் கல்லூரியில் மாணவர் விடுதி வசதிக்குறைவுகளுடன் இயங்கிவருகிறது என்பது உண்மையா?

(ஆ) விடுதிக்கான கட்டிடம் புதிதாகக் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் தனித்தனியாகக் கட்ட ஏற்கெனவே ஆணையிடப்பட்டு, கட்டிடப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.



திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை அறைகள் கொண்ட விடுதிக் கட்டிடம் ஆண்களுக்காக கட்டப்படுகிறது. அதேபோல எத்தனை அறைகளைக் கொண்ட விடுதி கட்டிடம் பெண்களுக்காக கட்டப்படுகிறது? எவ்வளவு தொகை அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,, ஜி.ஓ. எம்.எஸ். நெம். 1366, ஹெல்த் மற்றும் பேமிலி வெல்பேர், தேதி 3–8–1979–இல் 23·80லட்சம் ரூபாய் அளவுக்கு ஆண்களுக்கு விடுதி கட்டுவதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல ஜி. ஓ. எம்.எஸ் நெ. 1386, ஹெல்த் மற்றும் பேமிலி வேல்பேர்,தேதி 4–8–79–ல் ரூபாய் 7·75 லட்சம் ரூபாய் செலவில் பெண்களுக்கு விடுதிக் கட்டிடம் கட்டுவதற்கென்று உத்தரவு போட்டிருக்கிறோம்.

புதுக்கோட்டை சென்னை-விரைவுப் பேருந்துப்பணி.

*வினா எண். 622—திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை-சென்னைக்குஅரசு பேருந்துகள் விடும் உத்தேசமுண்டா?

(ஆ) இல்லையெனில் பேருந்துகள் விட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) 9–2–81 முதல் இத்தடத்தில் இரு விரைவுப் பேருந்துகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பது போல கேள்வி வரும் முன்பே, அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி, நன்றி. நன்றி. அது மட்டுமல்லாமல், தற்போது புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு வரும் பேருந்துகளில் அதிகமான அளவில் நெரிசல் ஏற்பட்டு விட்டதால், மேலும் 2 பேருந்துகளை விட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே அவருடைய பாராட்டுதலுக்கு நன்றி. கேள்வியை இப்போது தான் கேட்டிருக்கிறார். பின்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுநேரம் பயணம் செய்யும் பேருந்துகளில், பயணச் சிரமம் பிரயாணிகளுக்கு ஏற்படாமல் இருக்க தூங்கும் வசதி கழிப்பிட வசதி, தொலைக் காட்சி வசதி போன்றவசதிகளைச் செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய அறையிலே இருப்பது போன்ற எல்லா வசதிகளும் பஸ்களில் வேண்டும் என்கிறார். அந்த வகையிலேதான் நாங்களும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே முதற்கட்டமாக 2 பேருந்துகளைத் தயார் செய்திருக்கிறோம். அவைகள் எப்படி வெற்றிகரமாக இருக்கின்றது என்பதைப் பார்த்து, தொடர்ந்து விரிவாகச் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் ஓடிக்கொண்டிருக்கும் ஆம்னி பஸ்கள்.

*வினா எண். 623 திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசு அனுமதி வழங்கியுள்ள ஆம்னி பஸ்கள் எத்தனை ஓடிக்கொண்டிருக்கின்றன.?

(ஆ) அவைகளில் மிக உயர்வான கட்டணங்கள் வசூலிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில் கட்டணங்களை நிர்ணயம் செய்ய அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா?

(ஈ) ஆம்னி பஸ்களின் போட்டியினால் அரசு போக்குவரத்துக் கழகங்கள் நட்டமடைவது உண்மையா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; (அ) 96

(ஆ) அவ்வாறான புகார் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(இ) எழாது

(ஈ) ஆம்

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தமிழகத்திலே இந்த பேருந்துகள் 96 ஓடுகின்றன என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பேருந்துகள் 96க்கு மேலும் பல பேருந்துகள் ஓடுகின்றன என்ற புகார்கள், பொதுமக்கள் மத்தியிலே இருந்து வந்திருக்கின்றனவா. அந்தப் பேருந்துகளிலேயெல்லாம் வசூலிக்கப்படுகிற கட்டணங்கள், அரசுப் பேருந்துகளில் வசூலிப்பதை விட மிக அதிகமான கட்டணங்களாக வசூலிக்கப்படுவது பற்றியும் ஏதாவது புகார்கள் அரசுக்கு வந்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே உரிமம் வழங்கியிருக்கிற பேருந்துகள் 97 பக்கத்து மாநிலங்களிலிருந்து பேருந்துகள் நம்முடைய மாநிலத்திற்குள்ளே வருவதற்கும் உரிமம் வழங்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பேருந்துகளில் சில முறையாக உரிமம் பெறாமல் இருந்தும் இங்கே வந்து விடுகிறார்கள். அதிலே புகார்கள் வந்திருக்கின்றன. அப்படிப்பட்டவைகளை நம்முடைய பேருந்து கண்காணிப்பாளர்கள் கண்டுபிடித்து தடுத்து நிறுத்துவதோடு, அவர்கள் மீது நடவடிக்கையும் எடுத்து வருகிறார்கள். அதிலேயுள்ள கட்டண விகிதங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பேருந்துகளில் கட்டணவிகிதங்கள் ஒரு நாளைக்கு இவ்வளவு என்ற விகிதத்திலேதான் வாங்க வேண்டும் அதாவது 50 பேர்கள் அதிலே ஒரு நாளைக்கு வருகிறார்கள் என்றால், அந்த 50 பேர்கள் ஒரு நாளைக்கு அதைப் பயன்படுத்துவார்களேயானால் எவ்வளவு தொகை என்றுதான் பார்த்துக் கொடுக்க வேண்டும்.

(முற்பகல் 10-30)

ஒரு இருக்கைக்கு இவ்வளவு தூரத்திற்கு என்ற கணக்கு அதில் இல்லை. அப்படி வாங்குவதாகப் புகார் வரவில்லை. புகார் வந்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தப் பேருந்துகளுடைய போட்டியினால் அரசாங்க வழித்தடங்களிலே ஓடுகின்ற அரசாங்க பஸ்களுக்குக்கூட வசதி குறைவாக வருகின்றது என்ற பிரச்சினை எழுந்து அது பல இடங்களிலே மக்கள் மத்தியிலே பேசப்படுகின்றது. இந்த நிலையில் இந்தத் தொல்லைகள் இல்லாமல் இருக்க இந்த ஆம்னி பஸ்கள் ஓட்டுவதை அரசே ஏற்று நடத்துவதற்கும் இந்த ஆம்னி பஸ்கள் ஓட்டப்படுவதை கட்டுப்படுத்துவதற்கு கஷ்டமாக உள்ள நிலைமையில் அவை ஓடாமல் செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே 97 பேருந்துகளின் காரணமாக அரசினுடைய போக்குவரத்துக் கழகத்தினைப் பொறுத்த வரையில் கொஞ்சம் பிரச்சினை இருக்கின்றது. ஆனால் அது பெரிய பிரச்சினை என்று சொல்ல முடியாது. 7,000 பேருந்துகளுக்கு மேலே இருக்கின்றது.

இந்த ஆம்னி பஸ்களைப் பொறுத்தவரையிலே ஒரு இடத்திலே இருந்து இன்னொரு இடத்திற்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லவேண்டும் என்கின்ற வகையிலே மற்ற பேருந்துகளிலே வசூலிப்பதைப்போன்று வசூலிக்கக்கூடாது. இது ஒப்பந்த பேருந்து என்ற வகையிலே ஒரு நாளைக்கு 50, 60 பேர் சேர்ந்து எடுத்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட அளவுக்குத்தான் அதைப்

பயன்படுத்தவேண்டும். ஆனால் அவர்கள் தொடர்ந்து ஒரு
குறிப்பிட்ட இடங்களிலேயே பயன்படுத்துவதாகக் தகவல் வரு
கின்றது என்றால் அவர்களைப் பிடிக்கிறார்கள். ஆனால்
கடுமையான நடவடிக்கை எடுக்க முடியாத வகையிலே சில சட்டச்
சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் தப்பித்துக்கொள்கிறார்
கள். இதுபற்றி முழுமையாக நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி
எடுத்தபோது கூட நீதிமன்றத்திலே அது தடை செய்து வைக்கப்
பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இந்த
ஆம்னி பஸ்களுக்காக ஆள்பிடிப்பதற்காக ஆட்கள் இரயில் நிலை
யங்களுக்கு வருகிறார்கள். அவர்கள் வந்து பொதுமக்களை
அழைத்துக்கொண்டு செல்கின்றனர். அதற்காக அவர்களுக்குக்
கமிஷனும் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலைமையைத் தடுக்க
அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கும் பயணிகளைப்
பிடித்து வருகின்றவர்களுக்குக் கமிஷன் தரும் முறையை அரசு
அமல் படுத்துமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
அரசுப் போக்குவரத்துத் துறையிலே அப்படிச் செய்வதற்குச்
சாத்தியம் இல்லை. ஆனால் பேருந்துகளை நல்ல முறையிலே
வைத்துக்கொண்டு அதன்மூலம் பயணிகள் தாங்களாகவே வரக்
கூடிய சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, சென்ற ஆண்டு
ஆம்னி பஸ் சம்பந்தமாக ஒரு பெரிய ஊழல் நடந்ததாகவும்
அதிலே பல காவல்துறை அதிகாரிகளும், போக்குவரத்து துறை
அதிகாரிகளும் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்ட
தாகச் சொல்லப்பட்டது. அவர்கள் மீது என்ன நடவடிக்கை
எடுக்கப்பட்டது. அவர்களுக்கு ஏதாவது தண்டனை கொடுக்
கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் என்
னுடைய ஞாபகத்தில் இருப்பதைச் சொல்கிறேன். அந்த அதி
காரிகளின் மீது சட்டப்படி துறையினுடைய விசாரணைப்படி
என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த அளவுக்கு தண்
டனை கொடுப்பதற்காக துறை அதனை விசாரித்துக் கொண்
டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## தமிழகத்தில் உற்பத்தியாகும் பனை வெல்லம்.

*வினா எண். 624—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு
கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு ஆண்டுக்கு தமிழகத்தில் உற்பத்தியாகும் பனை
வெல்லத்தின் அளவு என்ன ?

(ஆ) தமிழகத்திலிருந்து பனை வெல்லம் வெளிநாடுகளுக்கு
ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?

(இ) ஆம் எனில் அதன் அளவு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்
களே, (அ) 1980–81 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உற்பத்தியான
பனைவெல்லத்தின் அளவு 59,645 மெட்ரிக் டன்களாகும்.
மதிப்பு ரூ. 12,57·77 இலட்சம் (பன்னிரண்டு கோடியே ஐம்பத்தி
ஏழு இலட்சத்து எழுபத்தி ஏழாயிரம் ருபாய்).

(ஆ) மற்றும் (இ) தமிழகத்திலிருந்து அமெரிக்காவுக்கு
1979–80ல் பரிட்சார்த்தமாக 37 டன் புனை வெல்லப்பாகு
அனுப்பப்பட்டது. அதனுடைய மதிப்பு இரண்டு இலட்சத்து
அறுபத்திஆறாயிரம் ருபாய்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே,
தமிழகத்தில் பதனீர் இறக்கும் தொழிலிலும் வெல்லம் தயாரிக்
கும் தொழிலிலும் எத்தனை தொழிலாளர்கள் வேலைசெய்கிறார்
கள். அவர்களிலே எவ்வளவு பெண்களுக்கு வேலை வாய்ப்பு
கொடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்
களே, தமிழகத்திலே 1980–81 ஆம் ஆண்டிலே, 1,23,000 பேர்
பதனீர் இறக்குவதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். 82,000 பெண்
கள் பனைவெல்லம் உற்பத்தி செய்வதிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே,
இந்தத் தொழிலுக்காக மாநில இணையம் கதர் வாரியத்திட
மிருந்து ஏதாவது நிதியுதவி பெற்றிருக்கின்றதா ? அப்படியா
னால் கடந்த ஆண்டுகளில் பெறப்பட்ட நிதி எவ்வளவு என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கதர் வாரியத்திடம் பனைத்தொழில் சம்பந்தமாக மாநில இணையம் இந்த திட்டத்திற்காக நான் காண்டுகளில்பெற்றுள்ள நிதியுதவியின் விவரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :—

| ஆண்டு. (1) | | | | கடன். (2) | மானியம் (3) |
|---|---|---|---|---|---|
| 1977–78 | .. | .. | .. | 21,13,500 | 4,20,384 |
| 1978–79 | .. | .. | .. | 34,04,500 | 5,07,190 |

1979–80-ல் ரூ. 31,57,500. இதில் மானியம் ரூ. 4,88,350 1980–81-ல் பெறப்பட்ட கடன் ரூ. 43,53,000. மானியம் ரூ. 14,29,196. 1981–82-ல் கடனாகப் பெற்றது ரூ. 23,22,500. இதில் மானியம் ரூ. 17,27,252 ஆகும்.

திரு. எம். சின்னசாமி : அமெரிக்காவிற்கு மட்டும்தான் ஏற்றுமதி செய்வதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். வேறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகள் நடைபெறுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : இதற்கு ஜெர்மன், இட்டாலி போன்ற நாடுகளிலிருந்தும் மாதிரி பனை வெல்லம் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய கொட்டேஷன் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற் கான அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். சின்னசாமி : இந்த பனைவெல்லத்தை மாநிலத்தி லிருந்து தனியார் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : நம் தனியார் ஏற்றுமதி செய்வதுபற்றி குறிப்பு இல்லை வாரியத்தின் வாயி லாக நாம் அனுப்பிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க் கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

*வினாத்தாள் மாறிவிட்டதன் காரணமாக 86 மாணவர்களைப் பள்ளி விடுதியில் வைத்திருப்பது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் மு. கருணாநிதி, திருவாளர்கள் பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன், தி. கா. நல்லப்பன், மு. அம்பிகாபதி, என். எஸ். வி. சித்தன், பெ. சு. திருவேங்கடம், த. ஆறுமுகம், கே. எம். தங்கமணி, ப. நெடுமாறன், ஆகியோர் ''சென்னை சேப்பாக்கம் தொகுதி யில் உள்ள முஸ்லீம் உயர்நிலைப்பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. தேர் வில் வழங்கப்பட வேண்டிய வினாத்தாள்கள் மாற்றித் தரப் பட்டதின் காரணமாக அங்கு தேர்வு எழுத வந்த மாணவர்கள் சட்டத்திற்கு விரோதமாக பள்ளியிலேயே வைத்துப் பூட்டப்பட்ட தால் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர் மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத் துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந் தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

*டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கேள்வித் தாளைத் தவறுதலாகக் கொடுத்துவிட்ட செயலால் சென்னை யில் மாணவர்கள் இரண்டு நாட்களாக சிறைப்படுத்தப்பட்டுள்ள னர். இதைப்பற்றி இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று தீர்மானத்தை காலை எட்டுமணிக்கு முதன் முத லாக நான் தங்களுக்கு அனுப்பி வைத்தேன். ஆனால் கேள்வி நேரத்திலே இதுகுறித்து விவாதிக்கப்பட்டு நிறைய பேசப்பட்டு விவகாரம் முடிந்திருக்கிறது. எனவே நான் அரைத்த மாவை அரைக்க விரும்பவில்லை. அடைக்கப்பட்ட 150 மாணவர்களும் 75 ஆசிரியர்களும் விடுவிக்கப்பட்டால் சரி. இழைக்கப்பட்ட இந்தக் கொடுமைக்கு காரணமானவர் தண்டிக்கப்பட்டால் போதுமானது. இன்றைக்கு தங்களாலும் அவை முன்னவர் அவர்களாலும் அனுமதிக்கப்பட்ட மரபு வருங்காலத்தில் கடைப் பிடிக்கக்கூடிய முன்மாதிரியாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன் நம்புகிறேன். எனவே என்னைப் பொறுத்தவரையில் இதுபற்றி அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்றுதான் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட் சித் தலைவர் அவர்களின் உணர்வுகளை நான் ஏற்றுக்கொள் கிறேன். '' 150 மாணவர்கள் சிறைப்படுத்தப்பட்டார்கள் '' என்கிற உணர்ச்சியில் திடீரென்று அப்பிரச்னை இன்று காலை யில் எழுப்பப்பெற்றது. '' கேள்வி நேரத்தில் இதுபோல் எந்தப்

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1982 மார்ச் 23

பிரச்னையும் எடுத்துக்கொள்வது மரபல்ல ; எதிர்க்கட்சித் தலை
வரும் இதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்,
கேள்வி நேரம் முடிந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம்'' என்று
சொன்னேன் ; அதைக் கேட்கவில்லை. (குறுக்கீடு). அந்தச்
சமயத்தில் அவை முன்னவர் அவர்களும் ஒரு பதிலைச்
சொன்னார். இப்போதுதான் ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து
பேச அனுமதித்திருக்கிறேன்.

[முற்பகல் 10-40]

அப்படி ஆகும் என்றால், இந்த அவையை நடத்த முடியாது
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், ஆகவே, சபை மரபு
களை மாற்றுவதற்கு, நான் இருக்கின்றவரையில், அனுமதிக்க
மாட்டேன் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்
டிருக்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர்
அவர்களே, நேற்றைய தினம் முதன் முதலாக எஸ்.எஸ்.எல்.சி
பரீட்சை ஆரம்பமாகியிருக்கிறது. அந்த ஆரம்ப தினத்தன்று
இரண்டாவது நாள் கொடுக்கப்பட வேண்டிய கேள்வித்தாளை
தவறாக நேற்று கொடுத்திருக்கிறார்கள். அதை ஆரம்பத்திலே
கொடுத்தவர்கள் கவனித்தார்களா, இல்லையா என்பது தெரியாது
அது வேறு விவகாரம். ஆனால், யாரோ ஒருவர், இருவர் தவறு
செய்ததால், அரை மணி நேரம் கழித்துத் தான் அந்தத் தவறு
கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கவனித்ததற்குப் பிறகு, அவசர
அவசரமாக அந்தக் கேள்வித் தாளை திரும்ப வாங்கிக் கொண்டு
நேற்றைய தினம் முறைப்படி எழுத வேண்டிய பரீட்சையின்
கேள்வித் தாளை மீண்டும் கொடுத்திருக்கிறார்கள். அதன்படி
தேர்வு நடந்திருக்கிறது. பரீட்சை முடிந்த பிறகு, அந்த
மாணவர்கள் வீடு செல்வதற்கு அனுமதிக்கப்படாமல், ஆஸ்டல்
அறையிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்
போனால், திடீரென்று கைது செய்யப்பட்டவர்கள்போல், கைது
செய்யப்பட்டு, ஆஸ்டலிலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள்.
இந்த முறை சரிதானா என்பதைப் பற்றி விவாதிக்க வேண்டிய
அவசியம் ஏற்பட்டிருக்கிறது. யாரோ ஒன்றிரண்டு பேர்களின்
அஜாக்கிரதையின் காரணமாக, ஏற்பட்ட தவறுக்காக இந்த
150 மாணவர்கள் சட்டபூர்வமற்ற முறையில் விடுதியில் வைக்கப்
பட்டு, இன்று காலை பரீட்சை எழுதுகிற வரையில், அந்த
விடுதியிலே வைக்கப்பட்டு, இன்று பரீட்சை எழுதுவதற்கு கொண்டு
வரப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு மோசமான
நிலை, குறிப்பிட்ட ஓரிருவர் செய்த அஜாக்கிரதையினால் ஏற்
பட்டிருப்பதால், அதற்குக் காரணமானவர்கள் யார் யார் என்
பதைப் பற்றி விரிவாக விவாதித்து அவர்கள்மீது நடவடிக்கை
எடுப்பதற்குப் பதிலாக, மாணவர்களை பழிவாங்கப்படுகின்ற
இந்தப் போக்கு சரியில்லை என்பதைப் பற்றிவிவாதிக்க இந்த
அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 23]

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே சென்னையில் நடைபெறும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை
எழுதச் சென்ற மாணவர்களை பள்ளியில் பூட்டி வைத்திருக்கும்,
விஷயம் பற்றி மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களும்
மாண்புமிகு உறுப்பினர் சொர்ணம் அவர்களும் கூறியிருக்கிறார்கள்.
எவ்வளவு தூரம் கவனக்குறைவாக அந்த ஆசிரியர்கள், அந்த
பரீட்சையை நடத்துகின்றவர்கள இருந்திருக்கின்றார்கள் என்பதற்கு
இது ஒரு உதாரணமாகத்திகழ்கிறது. இப்போது அந்த மாணவர்கள்
எழுதுகின்ற பரீட்சையிலே அவர்கள் தேருவார்களா என்பதே
ஒரு சந்தேகம். ஏனென்றால், அறையிலே பூட்டப்பட்டு இருப்
பவர்கள், மீண்டும் பரீட்சை எழுத வருகின்றபோது,
என்ன நடக்குமோ என்று கருதி, இரண்டாம் நாள் தேர்வை
அவர்கள் சரியாக படிக்க முடியாமல், எழுத முடியாமல் போகலாம்.
அவர்களுக்கு ஏற்படக்கூடிய மனச் சங்கடம் காரணமாக, அவர்கள்
சரியான முறையிலே இரண்டாம் நாள் பரீட்சையை எழுதுவார்
களோ என்பது சந்தேகம். இப்படி நேற்று அவர்கள் பரீட்சை
எழுதிய பிறகு, இன்றைக்கு எழுத வேண்டிய பேப்பரைக் கொடுத்து
விட்டு, அந்த மாணவர்களை சிறையிலே அடைப்பது போல்
அடைத்து, ஆசிரியர்களையும் சாத்தி வைத்து, இப்படிப்பட்ட
ஒரு மோசமான செயல் நடந்திருக்கிறது. அதைப்பற்றி இன்னும்
விவாதிப்பதற்காக இந்த அவையின் இன்றைய அலுவலகள்
அனைத்தையும்.....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கேள்வித் தாளையே
பார்த்துவிட்டார்களே, அவர்களுக்குப் பிரச்சினையிருக்காது.

திரு. மு. அம்பிகாபதி : இன்றைக்கு வேண்டிய தேர்வுக்கு
நேற்று இரவு படிக்கவேண்டிய மூளையை, மனோநிலையை
இந்தச் செயல் தடுத்துவிட்டது. எனவே அந்த மாணவர்கள்
பரீட்சையிலே தேறுவார்களா என்பதே சந்தேகம். இப்படிப்
பட்ட பல்வேறு விஷயங்களைப்பற்றி விவாதிக்க இன்றைய
தினம் இந்த அவையின் மற்ற அலுவல்கள் அனைத்தையும் ஒத்தி
வைக்க ஆவன செய்யவேண்டுமென்று தலைவர் அவர்களை,
இந்திய கம்யூனிஸ்டு கட்சியின்சார்பாக நான் கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன் : பேரவைத் தலைவர்
அவர்களே, திருவல்லிக்கேணியில் உள்ள உயர்நிலைப்பள்ளியிலே
நடந்துவிட்ட இந்த சம்பவம்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்
யாவரும் சொன்னார்கள். எனக்குக் கிடைத்த தகவலின்படி
இன்றைக்கு வெளியாகவேண்டிய வினாத்தாள் நேற்றே வெளி
யான காரணத்தினால் அவர்கள் அந்தக் கேள்வித்தாள் வெளி
யாகாமல் பாதுகாக்கப்படுவதற்காக அடைக்கப்பட்டு இருக்கிறார்
கள். அதைப்பற்றிக் கவலையில்லை. அவர்கள் இரண்டாவது
நாள் பரீட்சை எழுதுவதற்கு புத்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது.
வினாத் தாள் எப்படியோ வெளியாகி அந்த 150 மாணவர்களும்

வினாத்தாள்களைத் தெரிந்துகொண்டு இருக்கிறபோது அவர்
களுக்குப் புத்தகம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கிற
போது இவர்களுக்கு எப்படி மார்க் போடுவார்கள், மற்றவர்
களுக்கு எப்படிப் போடுவார்கள் என்ற விஷயங்களை யெல்லாம்
விவாதிக்க வேண்டி இருப்பதால், இந்த அவையின் அலுவல்களை
ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, தமிழகத்
திலே இதற்கு முன்னால் ஏற்படாத நிகழ்ச்சி நடந்திருக்கிறது.
தலைநகரிலே நடந்திருக்கிறது. (குறுக்கீடு) சார், தயவுசெய்து
நான் பேசும்போது குறுக்கிடக்கூடாது என்று உத்தரவிடுங்கள்.
என்னுடைய அட்டன்ஷன் டைவர்ட் ஆகக் கூடிய நிலை இருக்
கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும்
எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களும் விரிவாகச்
சொல்லியிருக்கிறார்கள். தலைநகரிலே நடந்த காரணத்தினால்
உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இது
போன்று தமிழகத்திலே வேறு எங்காவது நடந்திருந்தால்—
நடந்திருக்கிறதா என்பதை அரசாங்கம் சொல்லவேண்டும்—என்ன
நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் என்பதை அரசாங்கம்
சொல்லியிருக்க வேண்டும். எனக்கு வந்த செய்திப்படி,
நேற்றைய தினம் அங்கே வைக்கப்பட்ட மாணவர்களுக்கு சுகாதார
வசதிகள் இல்லை, கழிப்பறை வசதிகள், குளியலறை வசதிகள்
கிடையாது, அவர்கள் வேறு இடங்களுக்கு அதற்காக அழைத்துச்
செல்லப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 150 மாணவர்
களின் பெற்றோர்கள்—அவர்களுக்குத் தகவல்கள் சொல்லாத
காரணத்தினால்—அவர்கள் அவதிப்பட்டிருக்கிறார்கள். அவர்
களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்பட்டு அவர்கள் பாதிக்கப்
பட்டிருக்கிறார்கள். களவு போயிற்று என்று போலீஸ் ஸ்டேஷ
னிலே புகார் கொடுத்தால் புகார் கொடுத்தவரை சில நேரங்களிலே
அடைத்துவிடுவார்கள். அதுபோல் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்
கிறார்கள். அந்த வினாத்தாள்கள் சரியாக இருக்கின்றனவா
என்பதை ஆசிரியர்களும் பார்க்கவில்லை, எக்ஸாமினர்களும்
பார்க்கவில்லை, கொடுப்பதற்கு முன்னாலே பார்த்திருக்க
வேண்டும்—ஆனால் கொடுத்து அரை மணி நேரம் கழித்துத்தான்
பார்த்திருக்கிறார்கள்—அவர்கள் மீது இலாகா நடவடிக்கை என்ன
எடுத்திருக்கிறது என்பதைப்பற்றியும் இனிமேல் இப்படிப்பட்ட
காரியங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு என்ன நடவடிக்கை
எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றியும் விவாதிப்பதற்கு
அவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி
ரொம்பவும் வருந்தத்தக்க நிகழ்ச்சி. 150 மாணவர்கள், 75
ஆசிரியர்கள் 24 மணி நேரத்திற்கு பூட்டிவைக்கப்பட்டிருக்கின்ற
நிலை ஏற்பட்டிருக்கிறது. இதிலே அதிகாரிகள் எந்த அளவுக்கு
சரியான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப்





பார்க்க வேண்டும். இந்த 150 மாணவர்களுக்கு ஏற்கெனவே
கேள்விகள் தெரிந்திருக்கின்றன. இன்றைக்கு கேள்விகள்
தெரிந்த நிலையிலே தேர்வை எழுதுகின்ற நிலையை ஏற்படுத்தி
யிருக்கின்ற நிலை, அந்த வகையில் அதிகாரிகளின் நடவடிக்கை
சரியானதல்ல. மாணவர்கள் அவரவர்களுடைய புத்தகங்கள்,
நோட்டுகள் இவைகளிலே குறிப்புகளை எழுதி வைத்திருப்பார்கள்.
அதைப் படித்துவிட்டு அவர்கள் தேர்வு எழுத வேண்டும். அப்படி
எழுதினால்தான் அவர்களுக்கு வசதியாக இருக்கும். இப்போது
அவர்களுக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டு இரவிலே படிப்
பதற்கு வழியில்லாமல். சரியான சாப்பாட்டு வசதியில்
லாமல் அவதிப்பட்டிருக்கிறார்கள். யாரோ சில அதிகாரிகள்
செய்த இந்தத் தவறான நடவடிக்கையால் மாணவர்கள்
இன்னலுறுவது என்பது சரியல்ல. சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து எதிர்காலத்
தில் இதுபோன்ற செயல் ஏற்படாமல் இருப்பதற்காக விவாதிக்க
இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் வற்புறுத்து
கிறேன்.

[முற்பகல் 10–50]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, திருவல்லிக்கேணியில் முஸ்லீம்
உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் தேர்வு எழுதியதை
பொறுத்து ஏற்பட்ட நிகழ்ச்சியை யொட்டி மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர் அவர்களும், மற்ற மாண்புமிகு உறுப்பினர்
களும், ஒத்திவைப்புத் தீர்மானங்களை கொடுத்து, தங்களுடைய
கருத்துக்களையும் வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள் ஒரு புதியதொரு உத்தியைக்கையாண்டு
இங்கே கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அதோடு மரபைப்
பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்கள் அந்த மரபுக்கு மீறிய நிகழ்ச்சி நடைபெற்ற
தற்கான காரணத்தை இங்கே குறிப்பிட்டுக் கூறினார்கள்.
உள்ளபடியே மரபு மீறவேண்டும் என்ற எண்ணம் இல்லை.
காலை 8 மணிக்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் தந்திருக்கிறார்கள் என்று
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என்னிடத்திலே
தெரிவித்தார்கள். ஆகவே இதைப்பற்றி முழு விவரத்தையும்
அறிந்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கிறபோது
இதற்கு விளக்கம் தருவது பொருத்தமாக இருக்கும். இன்றைக்கு
கல்வி அமைச்சர் அவர்கள் இல்லையே, நாளைக்கு எடுத்துக்
கொள்ளலாமா என்று தான் பேரவைத் தலைவர் அவர்களிடம்
கேட்டேன். பேரவைத் தலைவர் அவர்கள் முக்கியமான பிரச்
சினையாக இருப்பதாகவும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்
அவர்களே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதன்
காரணமாக இன்றே எடுத்துக் கொள்வதுதான் பொருத்தமாக
இருக்கும் என்று அவர்கள் சொன்னதன் காரணமாக முழு விவரத்

தையும் விளக்கமாகத் தர முடியாவிட்டாலும், எனக்குத்
தெரிந்த விளக்கத்தைத் தரலாம் என்ற உணர்வோடு நுழைந்தேன்
அப்போதே அந்த பிரச்சினை எழுப்பப்பட்டுவிட்டதன் காரண
மாக மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளிக்க
வேண்டிய ஒரு தன்மை ஏற்பட்டு விட்டதன் காரணமாக உடனடி
யாக விளக்கங்கள் தர வேண்டிய நிலை ஏற்பட்டதே தவிர
மரபு மீறப்பட வேண்டு மென்று நிலை இல்லை. தாங்கள் எடுத்து
தெரிவித்த மாதிரி மரபுகள் காப்பாற்றப்படுவதற்கு எல்லா சாரா
ரும் ஒத்துழைப்புத் தர வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித்
தலைவர் அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானம் மற்றும் மற்ற
உறுப்பினர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்த உணர்வுகளின்
அடிப்படையிலே தான் ஆளும் கட்சியினரும், ஆட்சியினரும்
இருக்கிறார்கள்.

இது ஒரு வருந்தத்தக்க நிகழ்ச்சி தான், வேண்டத்தகாத
நிகழ்ச்சி தான். ஆனால் நம்முடைய கட்டுப்பாட்டிற்கு மீறி
எதிர்பாராத வகையிலே ஏற்பட்டதன் காரணமாகஅதைச்சமாளிக்க
வேண்டிய பொறுப்பு அரசுக்கும் மற்றவர்களுக்கும் சேர்ந்து இருப்
பதால் தான் அதற்கான விளக்கத்தை காலையிலேயே எடுத்துத்
தெரிவித்தேன். இதிலே ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையை
மட்டும் விளக்கிக் கூற விரும்புகிறேன். இதிலே 140, 150
மாணவர்கள் இல்லை. 129 மாணவர்கள் திருவல்லிகேணி முஸ்லீம்
உயர்நிலைப்பள்ளியில் எஸ். எஸ். எல். சி. தமிழ் தேர்வு எழுது
கிறார்கள். 22–3–82 ஆம் தேதி தமிழ் முதல் தாளுக்கு பதிலாக
இரண்டாம் தாளை மாணவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள்.
இந்தத் தவறை உடனே நிவர்த்தி செய்து சரியான முதல் தாள்
15 நிமிடங்களுக்குள் கொடுக்கப்பட்டது. இந்தத் தவறுக்குப்
பொறுப்பான டிபார்ட்மென்டல் ஆபீசர் திரு. பெருமாள்.
தேர்வு இயக்கக கண்காணிப்பாளர்கள் திருமதி கிருஷ்ணவேணி
திருமதி ஹில்டா ஜான் இருவரும் சஸ்பென்ஷனில் வைக்கப்பட்
டுள்ளார்கள். இதில் சம்பந்தப்பட்ட மற்றவர்களையும் விசாரித்து
உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இரண்டாம் தாள் சில மாணவர்களுக்கு தெரிந்துவிட்டதால்
மாணவர்களை வெளியே அனுப்பினால் பேப்பர் பரவலாக அவுட்
ஆகிவிடக்கூடாதே என்ற நல்லெண்ணத்தில் 129 மாணவர்
களுக்கும் பள்ளியிலேயே 22–ஆம் தேதி இரவு தங்க வைத்து
அவர்களுக்கு சாப்பாடு, மற்ற வசதிகள் செய்யப்பட்டு வைக்கப்
பட்டார்கள். 22–3–1982 இரவு முழுவதும் தேர்வுத் துறை
அலுவலர்களும், பள்ளிக் கல்வித்துறை அலுவலர்களும் பள்ளி
யிலேயே இருந்தார்கள். மாணவர்களின் பெற்றோர்களும் பள்ளிக்கு
வந்து மாணவர்களை மகிழ்ச்சியுடன் பார்த்துச் சென்றார்கள்
இன்று 23–3–1982 காலை 10 மணிக்கு இரண்டாம்
தாளில் தேர்வு எழுதியவுடன் அவர்கள் அனைவரும் வெளியே
அனுப்பப்படுவார்கள். மாநிலம் முழுவதும் 3·2 இலட்சம்



மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவதால், இந்த
மாணவர்களை திருவல்லிக்கேணி முஸ்லீம் உயர்நிலைப்பள்ளியி
லிருந்து 22–3–1982 பிற்பகல் வெளியே அனுப்பியிருந்தால் தமிழ்
இரண்டாம் தாள் அவுட் ஆகி மறு தேர்வு, 'ரீஎக்சாமினேஷன்'
நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். இந்த மாதிரி மறு
தேர்வு நடத்துவது மிகவும் கடினம். மாநிலம் முழுவதிலு
முள்ள 3.2 லட்சம் மாணவர்கள் இதனால் பாதிக்கப்
பட்டிருப்பார்கள். திருவல்லிக்கேணி முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி
மாணவர்களுக்கோ, பெற்றோர்களுக்கோ இதனால் பெரும்
பாதிப்பு ஒன்றுமில்லை. மாணவர்கள் ஒவ்வொருவருக்கும்
வேளா வேளைக்கு சாப்பாடு, டிபன், காபி முதலியவை
சப்ளை செய்யப்பட்டதோடு அல்லாமல், 23–3–1982-ல் நடை
பெறும் தமிழ் இரண்டாம் தாள் தேர்வை எழுதுவதற்காக 'தமிழ்
இலக்கணப் புத்தகம், ஒன்றும் ஒவ்வொரு மாணவர்களுக்கும்
இலவசமாக சப்ளை செய்யப்பட்டது. இந்த
நடவடிக்கை மாநிலம் முழுவதும் உள்ள 3,20, 000
மாணவர்கள் மறுதேர்வு எழுதும் தொல்லைக்கு
உட்படுவதைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை
யாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்ததைப்
போல், இதிலே மாணவர்களுக்கு ஏற்பட்ட சங்கடங்களுக்குக்
காரணம் மாணவர்கள் தவறே அல்ல. மாணவர்களைச் சிறைப்
படுத்தி வைக்கவும் இல்லை. ஏற்பட்ட விளைவுகளைப்
பொறுத்துத்தான் சிலபல நிலைமைகளை நாம் கையாள
வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதை நான் காலையிலே
குறிப்பிட்டுச் சொன்னேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

நேற்றே இந்த நிலைமை ஏற்பட்டவுடனே, உரிய அதிகாரிகள்
என்னிடத்தில் அதுபற்றி விசாரித்தார்கள். மாணவர்களை
வெளியே விட்டோமானால், கட்டாயம் அந்தக் கேள்வித்தாள்கள்
வெளியே பரப்பப்பட்டு, அந்தக் குறைபாடு வந்து, பிறகு மாநிலம்
முழுவதும் இருக்கிற 3,20,000 மாணவர்களும் எழுத வேண்டிய
பரீட்சையைத் தள்ளி வைக்க வேண்டி வரும். தள்ளி வைக்க
வேண்டி வந்தால், கிட்டத்தட்ட 5 இலட்சம் கேள்வித்தாள்கள்
நாம் அச்சடிக்க வேண்டி வரும். அப்படி அச்சடித்து வருவது
என்றால், 1 மாதம் கழித்துதான் வரும். தேர்வு தள்ளி வைக்கப்
படுவதன் காரணமாக, மாணவர்கள் மேல் படிப்பு படிக்கவோ
வேலைக்குப் போகவோ, இடர்ப்பாடுகள் ஏற்படும் என்று
சொன்னதன் காரணமாக, இரண்டு வழிகளை என்னிடத்தில்
கேட்டார்கள். ஒன்று, 129 மாணவர்களை அங்கேயே வைத்து,
அவர்களுக்கு வேண்டிய வசதி வாய்ப்புகளையெல்லாம் கொடுத்து
அரசே செலவை ஏற்றுக்கொள்கிற சூழ்நிலையை ஏற்படுத்த
வேண்டும். இதனால், மாநிலம் முழுவதும் பாதிக்கப்படாத
நிலைமை இருக்கும். இல்லாவிட்டால், மாநிலம் முழுவதும்

பாதிக்கப்படுகிற நிலைமை ஏற்படும் என்று சொன்னார்கள். நான் அந்த 129 மாணவர்களுடைய விருப்பத்தை அறிந்து, அங்கே இருக்கிற ஆசிரியர்களுடைய விருப்பத்தை அறிந்து, அதற்கேற்ப செய்யுங்கள். 129 மாணவர்களுக்கும் பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்தி வைத்தீர்களானால், அதன் மூலமாக அதிக சங்கடம் ஏற்படாது என்பதைத்தான் நான் தெரிவித்தேன். இதன் காரணமாக, 75 ஆசிரியர்களும் மாணவர்களுடன் இருந்திருக்கிறார்கள். மாணவர்களுக்குச் சில சங்கடங்கள் ஏற்பட்டது என்பது உண்மைதான். அந்தச் சங்கடங்கள் தவிர்க்கப்பட வேண்டியவைதான். அதை நான் உணர்கிறேன். அதனால், பின்னால், அதிகமான சங்கடங்கள் வரக்கூடாது என்பதற்காகத்தான் இந்த நிலை ஏற்பட்டதே தவிர, அவர்களைக் கைது செய்து வைக்க வேண்டுமென்பது அல்ல.

மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க இந்த நடவடிக்கைக்குச் காரணமாக இருப்பவர்கள் உள்ளபடியே தண்டிக்கப்படுவதன் மூலம் எதிர்காலத்திலே எல்லா துறைகளும் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்ற முறையிலேதான் 3 பேர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். மேற்கொண்டும் அதிலே ஆராய்ந்து, யார் யார் காரணம் என்பதை அறிந்து அவர்கள்மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கே இரவு படிப்பதற்கு அவர்களுக்குப் புத்தகம் அரசுத் தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்திடமிருந்து வழங்கப்பட்டிருக்கிறது.

கேள்வித்தாள்களை அனுப்புவதைப் பொறுத்தவரை உறுதியான பைகளிலேதான் அனுப்பி வைக்கிறோம். உறைக்கு உள்ளே பிளாஸ்டிக் உறை, மறுபடியும் ஒரு உறை வைத்து, கிட்டத்தட்ட 3,500 உயர்நிலைப்பள்ளிகளுக்கு 1,500 மையங்களை ஏற்படுத்தி நாம் தருகிறோம். இதிலே இரண்டு இடத்திலே தவறுகள் செய்திருக்கிறார்கள். இந்த உறை மேலே, முஸ்லீம் ஹைஸ்கூல், டிரிப்ளிக்கேன் என்று போட்டு, Tuesday, dated 23rd March 1982 10.00 a.m. to 12.30 p.m. என்று தெளிவாக இருக்கிறது. அங்கேயிருந்து அனுப்பியவர் முதல் நாள் வினாத் தாளுக்குப் பதில், இரண்டாவது நாள் வினாத்தாள் அனுப்பிய இடத்திலேயிருந்து தவறு தொடங்குகிறது அங்கேயிருந்து அனுப்பியவர் செய்த தவறு இது. அதை வாங்கியவர், வெரிபிகேஷன் பண்ணிக் கொடுத்திருக்க வேண்டும். வெரிபிகேஷன் பண்ணாமலே கொடுத்து விட்டபிறகு, மாணவர்கள் கைக்குப் போய், இது நாளை எழுத வேண்டிய கேள்வித்தாளாயிற்றே, இன்றைக்குக் கொடுத்துவிட்டீர்களே என்று சொன்ன



தற்குப் பிறகுதான் அது மேற்பார்வையாளருக்கு வந்து, பிறகு கொடுத்தவைகளையெல்லாம் மறுபடியும் 1/4 மணி நேரத்தில் வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு, முதல் நாள் தாளைக் கொண்டு வர வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இது எதிர்பாராமல் ஏற்பட்ட வேண்டத்தகாத, விரும்பத்தகாத நிகழ்ச்சிதான். ஆனால் அதனுடைய சங்கடங்களை நாம் ஓரளவிற்குச் சமாளிக்க வேண்டுமென்றுதான் மாணவர்களுடைய ஒத்துழைப்போடு பெற்றோர்களுடைய ஒத்துழைப்போடு, பெற்றோர்கள் அத்தனை பேருக்கும் தெரிவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்ப்பட்டுள்ளது.

பள்ளியிலேயே மாணவர்கள் அடைபட்டு பரீட்சை எழுதுவது என்பது இங்கே ஓரளவுக்கு அவர்களுடைய விருப்பத்திற்கு மீறி, பள்ளியிலே இருக்கச் செய்தோம் என்றாலும் கூட, 1,500 மையங்கள் வைத்து, 3,500 பள்ளிகளிலே என்று வரும்போது, சில இடங்களிலே மையம் வைக்கின்றபொழுது 10 மைல் 8 மைல் அப்பாலிருக்கின்ற பள்ளியிலே பயில்கின்ற மாணவர்கள் வந்திருந்து ஒரு வாரம் பரீட்சை எழுதிவிட்டுச் செல்கிற நேரத்தில், அந்தந்தப் பள்ளிகளிலே அவர்கள் இருந்து, இரவு படித்து, மறுநாள் பரீட்சை எழுதுவதற்குக் கூட வாய்ப்புகள் 1,500 மையத்திலேயே நாம் ஏற்படுத்தித் தருகிறோம். அது போன்று ஓரளவுக்குச் சென்னையிலே தேவை இல்லையென்றாலும்கூட, அந்த முறையினுடைய அடிப்படையிலேதான் நடைபெற்றது என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். இன்று ஓரளவுக்கு இதனால் ஏற்பட்ட விளைவுகளை அரசு உணர்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதுபற்றி விவாதித்தன் காரணமாக, ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று நான் சொல்லவேண்டியதை, எனக்குப் பதிலாக, எதிர்க் கட்சித் தலைவரே இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க துணைத் தலைவர் அவர்களே ..................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மாதிரி கேட்கின்ற வழக்கம் சரியல்ல. ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் குறுக்கிடக் கூடாது. இந்த மரபு வேண்டாம். (குறுக்கீடு).

(முற்பகல் 11.00)

திரு. என். எஸ். வி. சித்தன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைக் கேட்டு அமைச்சர் பதிலளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த மரபு வேண்டாம். நீங்கள் தனியாகப் பேசலாம், இப்போது அமருங்கள்.

மாண்புமிகு டாஈடர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் இங்கே கேட்டிருப்பது அதே
தாளா அல்லது வேறு தாள் தரப்பட்டதா என்பது. அதே தாள்
தான் தரப்பட்டிருக்கிறது. அதை எழுதிக் கொள்ளவோ
குறிப்பு வைத்துக்கொள்ளவோ அவகாசம் இல்லாத அளவுக்கு
அவர்கள் பார்த்துக்கொண்டுவரும்போதே அதை வாங்கி
விட்டதன் காரணமாக அபாரமான நினைவாற்றல் கொண்ட
மாணவர்களைத்தவிர மற்றவர்களுக்கு நினைவு இருக்குமா
என்பது ஒன்று. ஆனாலும்கூட அத்தகைய தன்மைகள்
எல்லாம் 129 பேரோடு போயிற்று என்று இருக்கவேண்டுமே
தவிர 3 லட்சத்து 20 ஆயிரம் பேர்களை கவனிப்பது என்பது
வேறு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள்
கூறும்போது அவர்கள் சங்கடப்படுவார்களே என்று சொன்
னார்கள் ; .உள்ளபடியே மற்ற மாணவர்களுக்கு இருக்கின்ற
வசதியைவிட அவர்களுக்கு வசதி ஏற்பட்டிருக்கிறது என்ப
தையும் மாண்புமிகு சித்தன் அவர்கள் குறிப்பிட்டதுபோல்
அவர்களுக்கு புத்தகத்தையும் நாம் கொடுத்திருப்பதன் காரண
மாக ஓரளவுக்கு உணர்ந்து பதில் எழுதுவதற்கு வாய்ப்பு
ஏற்பட்டிருக்கிறது.

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே,
அவை முன்னவர் அவர்கள் அபாரமான நினைவாற்றல் இருந்
தால்தான் நினைவுபடுத்திக் கொண்டு எழுத முடியும் என்று
சொன்னார்கள் ......

மாண்புமிகு பேரவைத் துலணத தலைவர் : அமைச்சர்
அனுமதித்தாலும் தாங்கள் இப்போது பேசுவது மரபல்ல, இதற்கு
அனுமதித்தால் அடுத்து திரு. சித்தன் அவர்களுக்கும் வாய்ப்புத்
தர வேண்டியிருக்கும். (குறுக்கீடு)

டாக்டர் மு. கருணாநிதி : அபார நினைவாற்றல் இருக்கு
மென்றால் அதே அடிப்படையில் அவர்கள் எல்லாம் நேற்று
முதல் கேள்வித் தாளை எழுதிவிட்டு நேற்றைய இரவே அவர்
களை வீட்டிற்கு அனுப்பியிருந்தால் என்ன ? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துனண்த் தலைவர்: எதிர்கட்சித்
தலைவர் எழுந்து இருக்கும்போது அவரை நான் உட்காரச்
சொல்லமுடியாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அப்படியானால் அவர்களை
வீட்டிற்கு அனுப்பியிருக்கலாமே என்று கேட்டார்கள். அந்த
ஒருவர் போதும், சென்னை முழுவதும் ஒரு மணி நேரத்தில்
பரப்ப. அது கிடு கிடு கிடுவென்று வானொலி மூலமாக கூ
அவ்வளவு விரைவாக செய்திகள் பரப்பமுடியாத அளவுக்கு



பரவிவிடும். ஏற்கனவே பல அனுபவங்களிலிருந்து நாம்
கண்டுகொண்டிருக்கிறோம். ஆகவேதான் இருப்பதிலேயே
கூடுமானவரையில் சமாளித்து எடுக்கக்கூடிய நடவடிக்கை
களை நாம் எடுத்திருக்கிறோம். இதற்கு மாண்புமிகு உறுப்
பினர்கள் அத்தனை பேர்களுடைய இருக்குமென்று நம்பு
கிறேன். எதிர்காலத்தில் ஒரு எச்சரிக்கையாக இது அமைந்
திருப்பதன் காரணமாகவும் இதிலே எப்படிப்பட்ட கண்டிப்
பான நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதற்கு இங்கே
நடைபெற்ற விவாதமும் எடுத்துச் சொன்ன கருத்துக்களும்
பயன்படும் என்ற முறையிலே மேற்கொண்டு இந்த அவையை
ஒத்திவைத்து விவாதிக்கவேண்டிய தேவையில்லை என்பதைக்
கூறி முடிக்கிறேன்.

திரு என். எஸ. வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே,
ஒரு விளக்கம்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர்
முடித்ததற்குப் பிறகு வேண்டாம். நீங்கள் எதிர்கட்சித்
தலைவர் எழுப்பியபோதே கேட்டு இருந்தால் கொடுத்திருப்
பேன்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப்
பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்
தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால்
இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

திரு. ரா உமாநாத் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்,
ஒரு நல்ல மரபை தாங்கள் உண்டாக்கியிருப்பதை வரவேற்
கிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் அமைச்சர் விளக்க
திற்குப் பிறகு எந்த விதமான கேள்வியும் கூடாது என்பது
நம்முடைய விதியிலுள்ள முறை அதற்கு மாறாக இன்றைக்கு
எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை கேள்வி கேட்க அனுமதித்
தீர்கள். நான் அதை வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் அவரை
கேட்கவில்லை. ஆனால் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து
கேட்கும்போது நான் எப்படித் தடுக்க முடியும். அந்தப் பொறுப்
பிலே அவர்கள் பேசுகிறார்கள். அவர்கள் பேச விரும்பினால்
நாம் மதிப்புக் கொடுக்கத்தான் வேண்டியிருக்கிறது.

திரு. ரா உமாநாத் : அவர். கேட்டார், முன்னவர் பதில்
சொன்னார், இது நல்ல மரபு.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : இது மரபல்ல.
இனிமேல் இது பின்பற்றப்பட மாட்டாது.

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகளை தாங்களும் படிக்கவேண்டும், என்னுடைய அருமை நண்பர் திரு. உமாநாத் அவர்களும் படிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களில் பல நேரங்களில் இந்த மன்றத்திலே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு, கொண்டுவந்தக உறுப்பினர்களால் இடையிலேயே சில விளக்கங்கள் கேட்கப்பட்டு அமைச்சரவையில் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே இது புதிய மரபல்ல என்பதை என்னுடைய பழைய நண்பருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா உமாநாத் : எதிர்கட்சித் தலைவர் சொன்னதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

(4) வரவு-செலவுத் திட்டம், 1982-83—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண். 15—காவல்துறை.

(ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்—. தொடர்ச்சி.

* திரு. துரைமுருகன் : மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கின்ற போலிஸ் மானியத்தின் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். மிக முக்கியமான ஒரு இலாகா இந்த போலிஸ் இலாகா. இந்த இலாகாவிலே சூடு பறக்கும், ஆதே சமயத்தில் சுவையும் இருக்கும். அப்படி ஏதாவது சூடு ஏற்படவேண்டுமானால், அதை அணைப்பதற்காகத்தான் தீயணைப்பு படையைக்கூட சேர்த்து வைக்கிறோம் என்று முன்னாலே கலைஞர் அவர்கள் இந்த மாமன்றத்திலே ஒரு தடவை குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட சூடுமிக்க இந்த அவையின் விவாதத்தில் மாண்புமிகு இந்த முதல் அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவிற்காக பதில் சொல்ல வேண்டியவர் இந்த மன்றத்திலே இல்லாதைத் வருத்தத்தோடு குறிப்பிட்டு என்னுடைய உரையை நான் துவக்குகிறேன்.



போலிஸ் மிக மிக முக்கியமான ஒன்றாகும். ஜோடியில்லாத மாடப்புறா, சேடி இல்லாத ராஜகுமாரி, மோடி செய்யாத மாது என்று எப்படி நாம் காணமுடியாதோ, அப்படி போலிஸ் இல்லாத நாட்டையும் நாம் காண முடியாது. உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு அளித்து, சட்டத்தையும், அமைதியையும் இந்த நாட்டிலே நிறைவேற்றித் தருகின்ற பொறுப்பு இந்த போலிஸ் இலாகாவிற்குத்தான் உண்டு. அப்படிப்பட்ட இந்த போலிஸ் இலாகா, அதனுடைய பெருமைகளை நான் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. தமிழகத்தின் போலிஸ் இலாகா உலகத்தில் உள்ள ஸ்காட்லாந்து போலிசுக்கு நிகராக உயர்ந்திருந்தது என்ற கீர்த்தி மிக்க காலம் ஒரு காலத்திலே இருந்தது. அந்த போலிஸ் இலாகாவிலே, இன்றைக்கு புரையோடிப் போய் இருக்கிற நிலைமையை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது. இந்த போலிசும் உருவாக்கியிருக்கிறது. காரணம் ஒரு ஐ. ஜி. அவருக்குக் கீழே டி.ஐ.ஜி.க்கள் என்ற இருந்த ஒரு செட். ஆப்பை மாற்றி, டி.ஜி.பி. அவருக்குப் பஞ்சபாண்டவர்.போல் 5 ஐ.ஜிக்கள், அவர்களுக்குள்ளே 8 தகராறுகள், குட்டி மோதல்கள், ஐ.பி.எஸ். ஆபிசர் கேடர்களுக்கும், தமிழகத்திலிருந்து ப்ரமோஷன் ஆகி வருகின்றவர்களுக்கும், இருக்கின்ற தகராறு, இரண்டு பெரும் ஜாதி, ஐ.பி.எஸ். பிரிவு என்றும், நான்—ஐ.பி.எஸ். பிரிவு என்றும், இப்படிப்பட்ட ஒரு புரையோடிப் போன உட் பூசல்கள் மிகுந்த அதிகமாக ஒரு தகராறு படைத்த, டீ-மாரலைஸ் ஆன ஒரு இலாகா இந்த போலிஸ் இலாகா என்ற ஒரு குற்றச்சாட்டை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எதிர்கட்சி என்றால் அதிகமாக குற்றச்சாட்டுகளை சுமத்தவேண்டும் என்பது அல்ல. நாம் போலிஸ் இலாகாவினுடைய திறமையை குறைத்து மதிப்பிடுகிறவன் நான் அல்ல. இந்த இலாகா எதையும் செய்யும். காட்பாடி தொகுதியில் பஸ் மறிக்கப் படுகிறது. பீகார் மாநிலத்திலே இருக்கிறவர்கள் வருகிறார்கள். திரிசூலத்தை ஏந்தி கொள்ளை அடிக்கிறார்கள். ஆனால் துணைத் தலைவர் அவர்களே, கொள்ளைக்கூட்டத்தினுடைய சரணாலயமாக கருதப்படுவது பீகார். உ.பி. மற்றும் ம.பி. மாநிலங்கள் ஆகும். அந்த மாநிலத்திலே இருந்து தமிழகத்திற்கு வந்து கொள்ளை அடித்தால், கொள்ளை அடித்தவர்களை ஒரு மாத காலத்திற்குள் இதே போலிஸ் இலாகா அந்த மொழி தெரியாத பீகார் மாநிலத்திற்குச் சென்று அந்தக் கைதிகளை, திருடர்களை பிடித்து வந்து சிறைக்கூடத்தில் அடைத்ததை நான் குறைத்து மதிப்பிடவில்லை. அதற்காக நம்முடைய ஐ.ஜி. ராதாகிருஷ்ணனுக்கு ஜனாதிபதி விருது கொடுத்தால் நான் வேண்டாமென்று சொல்லமாட்டேன். ஆனால் இன்று பெரியவர்கள் மட்டும் மெடல் வாங்கிக் கொண்டு, மொழி தெரியாத இடத்திலே உயிரைப் பணயம் வைத்த பரசுராமன் என்ற ஒரு சிறிய அதிகாரியை அப்படிப்பட்ட அதி

காரிகளை மறந்து விடக்கூடாது. நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் இந்த போலீஸ் இலாகாவினுடைய சுயேட்சையான இந்த நடவடிக்கைகளை இந்த அரசு தடுக்கிறது. இன் றைக்குச் சொல்லுகிறார்கள், நாட்டிலே சட்டம், ஒழுங்கு, அமைதி, இதைப் போல ராம ராஜ்யம் ஒன்றைக் காண முடியாது என்கிறார்கள். நான் கேட்கிறேன்; 365 நாட்களிலே, ஒரு ஆண்டிலே, 332 நாட்கள் சிடி போலீஸ் ஆக்ட் 42-ன் கீழ் இந்த சென்னை நகரத்திலே் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. அதா வது, சிடி போலீஸ் ஆக்ட் எவ்வளவு நாட்கள் இருந்திருக்கிறது 365 நாட்களிலே, 332 நாட்கள் இன்று சென்னை நகரத்திலே அமல்படுத்தப்பட்டிருக்கிறது.

அதே போல், டிஸ்ட்டிரிக்ஸ்-லே எல்லாம் 30 போலிஸ் ஆக்ட் அதே நிலைமைதான். மற்ற மாவட்டங்களிலேயும் இதே நிலைமைதான். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிற போது, போலீஸ் ஆக்ட் 42 பிரகடனப் பட்டதற்குப் பின்னாலே ஒதுங்கி இருக்கிற சர்க்காரே தவிர, தைரியமாக இந்தப் போலிஸ் சட்டத்தை எடுத்துவிட்டு, ஆட்சி நடத்துகின்ற திறமை இந்தச் சர்க்காருக்கு இருக்கிறதா? ஆனால் இந்த ஆட்சியிலே இருக் கின்றவர்கள் குறிப்பாக, முதல் அமைச்சர் அவர்கள், போலீஸ் இலாகாவை நம்ப மறுக்கிறார்கள். நேற்றைய தினம் நம் முடைய அருமை நண்பர்கள் பலர் பேசினார்கள். ஏன், சப்-இன்ஸ்பெக்டர்கள் தேர்விற்கு ராணுவத்தினுடைய உதவியை நாடு கிறீர்கள் : 'வேலியே பயிரை மேய்கிறது என்பதுதான் அதற்குப் பொருள்' என்றார் சமரசம்.

(முற்பகல் 11-10.)

அப்படியானால் போலிஸ் இலாகா லஞ்ச லாவண்யத்தில் திழைத்து விட்டது என்று சொல்கிறார்கள். யார் சொல்வது? இந்த நாட்டினுடைய முதலமைச்சர் சொல்கிறார். முதலமைச் சர் சொல்லியிருக்க வேண்டும் ? என்னுடைய இலாகா இப்படி புரையோடிப் போய் விட்டது, நான் இராஜிநாமா செய்கிறேன் என்று அவர் சொல்லியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இதயத் திலே கொஞ்சமாவது மானம் இருக்குமானால் காக்கிச் சட்டை அணிந்திருக்கிற பெரிய போலிஸ் அதிகாரிகள் எங்கள் எஜமானன் எங்களை இப்படிச் சொல்லி விட்டார். எனவே நாங்கள் இராஜி நாமா செய்கிறோம் என்று சொல்லி யிருக்க வேண்டும். அதையும் செய்யவில்லை ; இதையும் செய்யவில்லை. ஆனால் நாட்டிலே சட்டம், ஒழுங்கு அமைதியாக இருக்கிறது என்று சொல்லியிருக் கிறார்கள்.



இன்னும் ஒன்று கூடச் சொல்கிறேன். இந்த போலீஸ் இலாகாவை இந்த அரசு நம்பவில்லை என்பதற்கு துப்பறிவதற்கு என்று தனியாக ஒரு ஐ.ஜி. யை அமர்த்தியிருக்கிறார்கள். அவருக்கு ஸ்பெஷல் அலவன்ஸ் மாதம் 40,000 ரூபாய் கணக்கிலே வராத அக்கவுண்டுகளில், இங்கே பேச முடியாத அளவுக்குத் தரப்படுகிறது, மோகன்தாஸ் கையிலே. 'டிஃபாக்டோ', 'டிஜிவோ' என்றெல்லாம் அவரைப் பற்றி எழுதினார்கள். போலிஸ் ஹெட் என்று சொன்னார்கள். ஆனால் அவர் துப்பறி வதைக் கூட நீங்கள் நம்பவில்லை. இன்றைக்கு 'குளோப் டிடக்டிவ் ஏஜென்சி' யிலிருந்து 80 பேர்களை நியமித்திருக்கி றீர்களே, துப்பறிவதற்காக. முதலமைச்சர் நியமித்திருக்கிறார்.

நான் கேட்கிறேன். மோகன் தாஸ் அந்தப் பதவியிலே இருப் பதற்கு வெட்கப்பட வேண்டாமா ? அவர் இராஜிநாமா செய்ய வேண்டாமா ? ஆனால் சொல்கிறார்கள். குற்றங்கள் குறைந் திருக்கிறது என்று. குற்றங்கள் கூடிப் போய் இருக்கின்றன. என்னுடைய அருமை நண்பர் ரகுமான்கான் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள் எப்படி குற்றம் அதிகரித்திருக்கிறது என்று. அதற்கு என்ன சொன்னார்கள் தெரியுமா ? மதுவிலக்குக் குற்றங்களைப் பிடிப்பதில் இந்த லா அன்ட் ஆர்டர் போலீஸ் ஈடுபட்டிருக்கிற காரணத்தால் இன்றைக்கு ப்ரொகிபிஷனை தனி யாகப் பிரிப்போம் என்றார்கள். பிரித்த பிறகு என்ன நிலைமை தெரியுமா ? அதே நிலைமை தான் இன்றைக்கும் தொடர்ந்து இருக்கிறது. ப்ரொகிபிஷனாவது நன்றாக இருக்கிறதா என்றால் அங்கே 40 பேர்கள் ஓடாத ஒரு ஜீப்பை வைத்துக் கொண்டு அவர்கள் காலத்தைத் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் கேட்கிறேன், இன்றைக்கு மேலை நாடுகளிலே 3,000 பேர்களுக்கு ஒருவர் போலீஸ்காரர். ஆனால் தமிழ் நாட்டிலே 5½ கோடி பேர் இருக்கிறோம். இங்கே எத்தனை போலீஸ் இருக்கிறார்கள் தெரியுமா? 53,000 பேர். இந்த 53,000 பேரை வைத்துக் கொண்டு இருந்தால் இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கை எப்படி அமைதிப்படுத்த முடியும் என்று கேட்கிறேன். 53,000 பேரும் அப்படியே இருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. இன்றைக்கு அதிலே பாதி பேர் வீட்டிலே இருக் கிறார்கள். ஒரு ஐ. ஜி.யை வி. ஆரிலே இருக்கச் சொன்ன ஆட்சி இந்த ஆட்சிதானே ? எத்தனை எஸ்.பி.க்கள் இன்றைக்கு போஸ்ட் இல்லாமல் திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறார்கள் ? அதைப் போல எத்தனை இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள் ? இங்கே உட்கார்ந்திருக்கிற மதிப்பிற்குரிய ஐ.ஜி. இராதாகிருஷ்ணன் அவர்களுக்குத் தெரியும்.

எத்தனை இன்ஸ்பெக்டர்கள் இன்றைக்கு 13, 15 இடங்களுக்கு மாற்றப்பட்டு, 3 மாதம், 6 மாதம் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் ? இருக்கிற மேன்பவரே போதாது. அதிலே ஐ. ஜி. யைப் பார்த்து வி. ஆரிலே இருக்கச் சொல்கிறார்கள் ; எஸ். பி.யைப் பார்த்து வி. ஆரிலே இருக்கச் சொல்கிறார்கள் ; இன்ஸ்பெக்டரைப் பார்த்து வி. ஆரிலே இருக்கச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இங்கே அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

இந்த பாலிசி நோட்டைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். இங்கே குதிரைப் படை அமைக்கப்படும் என்று ஒரு டி.ஐ.ஜி. சொல்லி இருக்கிறார். தலைவரவர்களே, இந்த நாட்டிலே சுப்ரீம் பாடி இந்த சட்டமன்றம். சட்ட மன்றம் நடக்கிறபோது ஒரு பாலிசியைச் சொல்வதாக இருந்தால் முதலமைச்சரோ அல்லது வேறு அமைச்சர்களோ இந்த அவையிலே சொல்ல வேண்டும். ஆனால் பத்திரிகையிலே பரப்பரப்பாக செய்தி வெளியிடப்படுகிறது. கோயம்புத்தூர் டி.ஐ.ஜி. மதுரையிலும் கோவையிலும் குதிரைப் படை அமைக்கப்படும் என்று சொல்கிறார். மதுரையிலே குதிரைப்படை அமைக்கப்படும் என்று சொல்வதற்கு கோயம்புத்தூர் டி.ஐ.ஜியா ? ஆஃப்டர் ஆல் ஒரு டி.ஐ.ஜி. அவருடைய ரேஞ்சைத் தாண்டிப் போய் சொல்கிறார். என்ன காரணம் ? காரணம் என்ன தெரியுமா ? வீரராகவன், ஐ.பி.எஸ்., ரவீந்திரன், ஐ.பி.எஸ்., இராஜகோபால் ஐ.பி.எஸ்., இன்னொருவர்—இப்படி 4 அதிகாரிகளைத் தூக்கி எறிந்து விட்டு அவரைக் கொண்டு போய் டி.ஐ.ஜி. ஸ்தானத்தில் உட்கார வைத்த பெருமை. அவர் இலங்கைக்குப் போய் பாலு மகேந்திராவுக்கு பாஸ்போர்ட் கொண்டு வந்த பெருமை. பழனியிலே 300 சவரன் எடுத்ததை 30 சவரன் என்று சொன்ன பெருமை. அது மட்டுமல்ல, கரப்ஷன் சார்ஜிலே பிடிக்கப்பட்டு, அன்றைக்கு விசாரிக்கப்பட்டு, அந்தக் குற்றங்கள் இன்றைக்கும் அப்படியே பண்டிலாகக் கட்டப்பட்டு இருக்கிற நேரத்தில் கேரளாவுக்குச் சென்று அங்கே இருக்கிற எரி சாராய டாக்குமென்டை எடுத்து வந்த ஒரே காரணதிற்காக டி.ஐ.ஜி. மதிப்போடு கோவை வீதியில் பவனி வருகிறவர் இன்று முதலமைச்சரை விட பெரிய மனிதர் என்று கருதிக் கொண்டு குதிரைப் படை அமைக்கிறேன் என்கிறார். எங்கே குதிரைப் படை ? ஏன் பாலிசி நோட்டில் இல்லை ? ஹூ இஸ் ஹி? என்ன அதாரிட்டி? அவரா அறிவிப்பது ?

இன்னொன்று இன்றைக்கு இந்தக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் குற்றங்களைக் கண்டுபிடிப்பது பற்றி பெருமைப் பட்டிருக்கிறார்கள். குற்றங்களைக் கண்டு பிடிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கே கண்டு



பிடித்தார்கள்? கம்ப்யூட்டர் சிஸ்டம். குற்றத்தைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று கோடிக் கணக்கில் அழுதீர்களே ? எங்கேயாவது குற்றத்தைக் கண்டு பிடித்தது உண்டா ? ஆனால் போலீஸ் இவைகளை எல்லாம் செய்யாது. நீங்கள் போலீசை குற்றங்களைக் கண்டுபிடிக்க விடவில்லை ; எங்கே ஏவுகிறீர்கள்? திராவிட முன்னேற்றக் கழக்கத்தின் மீது. இன்றைக்கு எதிர்க் கட்சிகள் மீது, மாணவர்கள் மீது, தொழிலாளர்கள் மீது போலீசை ஏவுகிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கையில் தமிழர்களுக்கு நடக்கும் கொடுமைகளைத் தடுப்பதற்காக ஒரு மாபெரும் போராட்டம் நடத்தியது. அந்தப் போராட்டத்திலே எங்களுடைய தானைத் தலைவர் கலைஞர் கைது செய்யப்பட்டார். சிறைக் கூடத்திலே அடைக்கப்பட்டார். நாங்கள் எல்லாம் சிறைக் கூடத்திலே அடைக்கப்பட்டோம். அரசாங்கத்தின் கணக்குப்படியே 17,000 பேர்கள் சிறைக் கூடங்களிலே, தமிழ்நாடு முழுவதும் அடைக்கப்பட்டு இருந்தார்கள். அந்த நேரத்தில் எங்களுடைய தலைவர் விடுதலையாக வேண்டும் என்று பல பேர் தீக்குளித்தார்கள். உலக வரலாற்றில் வியட்நாம் வீதிகளில் தீக்குளித்த புத்த பிட்சுக்களை பற்றி நாம் படித்து இருக்கிறோம். மொழிக்காக தீக்குளித்த சிவசாமி, சிவலிங்கம், அரங்கநாதன், கீரனூர் முத்துபோன்ற தியாகிகள் தீக்குளித்ததை நாம் படித்து இருக்கிறோம். ஆனால் ஒரு தலைவர் சிறைபுகுந்தார் என்பதற்காக கோயில்பட்டியில் பிருந்தாவன், திருச்சியில் மனோகரன், பெருந்துரையில் முத்துப் பாண்டியன், திருவாரூரில் கிட்டு, சென்னையில் மணி, கல்லாவி ராசேந்திரன், மேல்மாயில் ஜெகன்நாதன் போன்ற 8 மறவர்கள் தங்களுடைய தேக்குமர தேகங்களுக்கு தீவைத்துக் கொண்டு, சுருண்ட கேசங்கள் தீப்பற்றி எறிய, முத்துப் போன்ற பற்கள் படீர் படீரென்று வெடிக்க, இந்த மாநிலத்திலே கலைஞர் வாழ்க, கலைஞர் வாழ்க என்று கத்திக் கொண்டு மடிந்து போனானே அந்த தியாகிகளைப் பற்றி இந்தக் காவல் துறை என்ன வேண்டுமானாலும் பேசட்டும். ஒரு வீரனை இன்னொரு வீரன் தான் மதிப்பான், ஒரு தியாகியை இன்னொரு தியாகி தான் மதிப்பான். இந்தப் போலீஸ் இலாகா செய்த நல்லதைப் பாராட்டுகிறேன். குற்றம் செய்கிறபோது சாடுகிறேன். இங்கேயுள்ள ஐ. ஜி. அது பற்றி என்ன அறிக்கை விட்டார் தெரியுமா ? தீக்குளித்து இறந்து போனார்களே அந்தத் தியாகச் செம்மல்களுக்கு வாழ்க்கையில் ப்ரஸ்ட்ரேஷனாம்'. அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட விரக்திதான், கடன் தொல்லைதான், மனைவி கற்பிழந்தாள் என்கிற துக்கம் தான் இதற்குக் காரணம் என்று நாக்கூசாமல் பேசினார்கள், அறிக்கை விட்டார்கள். அந்தப் போலீஸ் அதிகாரிகளைப் பார்த்துக் கேட்கிறேன், நீங்கள் போலீஸ் அதிகாரிகளா, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏஜெண்டுகளா? அது மட்டுமல்ல. இங்கே ஒரு அமைச்சர்

சொன்னார். காதல் தோல்வியால் செத்தார்கள். என்னவோ இவர் தான் காதல் கடிதத்தை எடுத்துக் கொண்டு போய் அவருக்கும், அந்தக் காதலிக்கும் இடையே கொடுத்து, ** * * சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு உறுப்பினர் இங்கே வேண்டாத ஒரு வார்த்தையைப் பேசுகிறார். அதை அவர் வாபஸ் பெற வேண்டும். இல்லையென்றால் யார் ** ** என்பதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அதை ஏற்றுக் கொள்ளத் தயாரா ?

**திரு துரைமுருகன் :** அந்த வார்த்தையை எடுத்து விடுங்கள்.

* * *

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் பேசியபோது சொன்ன அந்த வார்த்தையையும், மாண்புமிகு அமைச்சர் பேசியபோது சொன்ன அந்த வார்த்தையையும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்த வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

**திரு. துரைமுருகன் :** போலீஸ் துறையில், ஐ.பி.எஸ். அதிகாரிகளாக வருபவர்களுக்கு ஆல் இந்தியா பேசிஸ்ஸில் சர்வீஸ் ரூல்ஸ் இருக்கிறது. அதன் அடிப்படையில், ஐ.பி.எஸ். அதிகாரியாக வரும் ஒருவர் 4 வருஷத்தில் எஸ்.பி. ஆகிவிடலாம், 12 வருஷத்தில் டி.ஐ.ஜி. ஆகிவிடலாம், 4 வருஷத்தில் ஐ.ஜி. ஆகிவிடலாம், இங்கே ஆகமுடியவில்லை ஏன்றாலும், வேறு இடத்தில் ஆகிவிடலாம். ஆனால் இந்த நாட்டிலே டெபுடி இன்ஸ்பெக்டர் என்கிற பதவியில் 5 ஆண்டு காலமாக எந்தவிதமான பொறுப்பும் இல்லாமல் திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறார்கள். அவர்கள் மீது இந்த அரசு எந்தவிதமான அக்கரையும் காட்டவில்லை. அவர்களை உயர்ந்த அதிகாரி என்ற நிலைக்கு உயர்த்தியதால் என்ன செய்து இருக்கிறார்கள் என்றால், அவர்களுடைய பாட்ஜில் சிவப்பு லைனிங் கொடுத்து இருக்கிறார்கள். நான் ஒரு டெபுடி இன்ஸ்பெக்டரைப் பார்த்துக் கேட்டேன், இது என்ன சிகப்பு லைனிங் என்று, அதற்கு அவர் சொன்னார்—இது வறுமை

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணையின்படி அகற்றப்பெற்றது.



யின் நிறம் சிகப்பு என்று சொன்னார். அவர்களுக்கு என்ன நிலைமை தெரியுமா ? எஸ்.ஐ.-க்கும் இன்ஸ்பெக்டருக்கும் இடைப்பட்ட நிலை. அதாவது, அவர் எஸ்.ஐ. யும் இல்லை, இன்ஸ்பெக்டரும் இல்லை. அதாவது ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை, அலி என்பதுபோல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெண் போலீஸ் இந்தத் தமிழ்நாட்டிலே ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. அதை வரவேற்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பெண் போலீசுக்கும், ஆண்களைப்போல் ஒரு டைட் பிட்டிங் பேண்ட் கொடுத்து இருக்கிறார்கள். அந்த டைட் பிட்டிங் உடை சிலநேரங்களில் ரொம்ப டைட் பிட்டிங்காகப் போய்விட்டால், அதைப் பார்க்க ஒரு கூட்டம் கூடிவிடுகிறது. பின்னர் அந்தக் கூட்டத்தைக் கலைக்க ஆண் போலீசுக்கு உத்தரவிட வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த பெண் போலீசுக்கு ஒரு காக்கி புடைவை கட்டச் சொல்லி, அதன்மேல் ஒரு பேட்ஜ் போட்டுக்கொள்ளச் சொல்லுங்கள். இந்த வகையில் அந்தப் பெண் போலீஸ் உடையில் மாற்றம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக அந்த பெண் போலீஸ் எவ்வளவு பெரிய கொடுமை அனுபவிக்கிறார்கள் தெரியுமா ? பெண் போலீஸ் எல்லாப் போலீஸ் ஸ்டேஷன்களிலும் இருக்கிறார்கள். அந்த ஸ்டேஷனில் ஓப்பன் லெட்ரின்கள்தான் உண்டே தவிர இவ்வளவு டைட் பேண்ட் போட்டுக் கொண்டு இருக்கிற அவர்களுக்கு ஒரு அவசியம் ஏற்பட்டுவிட்டால் போவதற்கு தனி லெட்ரின் வசதி செய்து தரப்படாமல் இருக்கிறது. இந்த நிலையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சொல்லியிருக்கிறார்கள், போலீஸ் வேகமாக ஓடுகிறது என்று. போலீஸ் வேகமாக ஓடும். ஆனால் அவர்கள் வைத்திருக்கக்கூடிய வண்டிகள் வேகமாக ஓடுவதில்லை. அந்த வண்டிகளைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. மற்ற இடங்களில் ஒரு பல்பு போடுவதற்கு 100 ரூபாய் பில் போட்டு காட்டுவார்கள். ஆனால் இந்த வண்டிகளில் ரிப்பேர் என்றால் அது வாரக்கணக்கில் வொர்க்ஷாப்பில் இருக்கின்ற நிலையைப் பார்த்திருக்கிறேன். ஒரு சின்ன ரிப்பேர் என்றால் கூட, அந்த வண்டிகளுக்கு பெல்ட் மாட்டுகிற வேலைகளுக்காகக் கூட, 3 வாரங்கள் 4 வாரங்கள் வொர்க்ஷாப்பிலே அந்த வண்டிகள் தூங்குகிற நிலை இருக்கிறது. ஒழுங்காக உடனுக்குடன் ரிப்பேர் பார்த்து, நல்ல நிலையில் அந்த வண்டிகளை வைத்துக் கொள்ளக்கூடாதா ?

(முற்பகல் 11–20.)

எது எதற்கோ வெளிநாடுகளுக்கு அனுப்புகிறீர்கள். ரப்பர் குண்டுகள் வரும் என்று சொன்னீர்கள். ஆனால் வரவில்லை. ஜப்பான் நாட்டிலேயிருக்கும் கண்ணீர் புகை குண்டுகளை கீழே போட்டு வெடித்தால், அதிலிருந்து தண்ணீர் வரும், அவைகளை யெல்லாம் வரவழைக்கப் போகிறோம் என்றீர்கள். ஆனால் ஒன்றும் வரவில்லை. இப்போது நம்முடைய போலீஸ்களின் கையிலே இருக்கும் கண்ணீர் புகை குண்டு ஹைதர் அலி காலத்தது. அதை வெடிக்கச் செய்வதே கஷ்டம். கீழே தூக்கிப் போட்டால், வயிற்றிலே போய் நுழைந்துக் கொண்டு விடும். அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் துப்பாக்கிகள், வெத்து வேட்டுத் துப்பாக்கிகள். வெடிக்காத துப்பாக்கிகள். ஆனால் அந்த வெடிக்காத துப்பாக்கிகளை வைத்தே இந்த அளவுக்கு சுடுகிறார்கள் என்றால், இன்னும் நல்ல ஆயுதங்களைக் கொடுத்தால் என்ன நிலை என்பது வேறு விஷயம். இருந்தாலும், இந்தப் போலீஸ்காரர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஆயுதங்கள் எல்லாமே, நாம் சுதந்திரம் வருவதற்கு முன்பு உபயோகப்படுத்திய ஆயுதங்களைத்தான், இன்னும் அவர்களுக்கு கொடுத்து வருகிறோம். உபயோகித்தால் கடுமையானது, உபயோகிக்க. கடினமானது. ஆனால் இந்த அளவில் ஆயுதங்களை வைத்துக் கொண்டே நம் போலீசார் இவ்வளவு வேகமாகச் சுடுகிறார்கள்.

அடுத்து கூறியிருக்கிறார்கள். நாங்கள் போலீசை மக்களோடு தொடர்பு கொள்ளச் செய்யப்போகிறோம் என்று, எப்படி முடியும் ? அவர்களை மக்களுக்கு விரோதமாக பழக்கிவிட்டு, இப்போது அவர்களை நண்பனாக்கப் போகிறேன் என்றால் எப்படி முடியும் ? எலக்ட்ரிசிட்டி பில் கட்டவில்லையா ? கூப்பிடு போலீசை, விவசாயிகள் பிரச்சினையா, கூப்பிடு போலீசை, கூட்டுறவுச் சங்கத்திற்கு கடனை திருப்பவில்லையா கூப்பிடு போலீசை, லேபர் பிராப்ளமா கூப்பிடு போலீசை, மாணவர்கள் பிரச்சினையா கூப்பிடு போலீசை என்று எதற்கெடுத்தாலும் போலீசைக் கூப்பிட்டு, போலீசாருக்கும் மக்களுக்கும் மத்தியில் ஒரு விரோத பாலத்தை ஏற்படுத்திவிட்டு, இப்போது போய் அவர்களை நண்பராக்கப் போகிறேன் என்றால் எப்படி ? எந்தச் சினிமாவில் நடித்து அவர்கள் இனி நல்லவர்களாகப் போகிறார்கள் ? அல்லது அது போல் வேறு வகையில் செயல்களைச் செய்து நல்லவர்களாகப் போகிறார்கள் ? அது இனி கிடையவே கிடையாது. முடியாது.

இன்னொன்றைச் சொல்கிறேன். ஒரு டி.ஜி.பி. போடுகிற போதே சொன்னோம். வேண்டாம் இதெல்லாம் உங்களால் முடியாது என்று. ஆனால் போட்டே தீருவோம் என்று போட்டீர்கள். ஆனால் இப்போது என்ன நிலை. அந்தப் போஸ்ட் காலியகாவே இருக்கிறது. காரணம் 8 ஐ.ஜியைப் போட்டிருக்கிறீர்கள். யாரை டி.ஜி.பி. ஆக்குவது. ஒவ்வொருவரும் எனக்கு வேண்டும் எனக்கு வேண்டும் என்று போட்டி போடுகிற நிலைமை ? இதில் யாரை போடுவீர்கள் ? ஆகவே போலீஸ் டிபார்ட்மெண்டே குட்டிச் சுவராகக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறது என்று சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். (மணி அடிக்கப்பட்டு, திரு. முத்தையா அவர்கள் பேச அழைக்கப் பெற்றார்.).



திரு. இரா. முத்தையா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற, தமிழ்நாடு காவல் துறை மானியத்தின்மீதும், தமிழ்நாடு தீ அணைப்புத் துறை மானியத்தின்மீதும், அவைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்த தங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவதாக இந்த ஆண்டு என்னுடைய தொகுதியான சேடப்பட்டியில் ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்த அனுமதி வழங்கியிருப்பதற்காக, என்னுடைய தொகுதி மக்கள் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு என்னுடைய தாலுக்கா திருமங்கலம் தாலுக்கா. அந்த திருமங்கலம் தாலுக்காவில் ஒரு தீ அணைப்பு நிலையத்தையும் விரைவிலே அமைத்துத் தர வேண்டும் என்று சொல்கிற ஒரு வேண்டுகோளையும், உங்கள் மூலமாக நான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொண்டு, அதை இந்த ஆண்டே ஏற்படுத்தி தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கு, ஒரு மாநிலத்தில் செம்மையாக நேர்மையாக நிகழ்கிறது என்று சொன்னால், அது தமிழகத்திலேதான் என்கிற நிலைமையை உருவாக்கிக் கொடுத்திருக்கிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, அவர் இந்தத் துறையின் பெருமையையும், புகழையும் காப்பாற்றிக் கொடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால், அவர்களுக்கு தமிழக மக்கள் மெத்த நன்றி பெருக்கோடு, நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் எடுத்துக் கொண்டால், எந்த ஒரு மாநிலத்திலேயாவது சட்டம் ஒழுங்கு உண்மையாகக் காப்பாற்றப்படுகிறது என்று சொன்னால், அது தமிழகத்திலேதான். எங்கேயாவது நிம்மதியான அமைதி நிலவுகிறது என்று சொன்னால், அது தமிழகத்திலேதான்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

பயம் ஏதும் இன்றி ஜனங்கள் நடமாட முடிகின்றது என்றால் அது தமிழகத்திலேதான். அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படாத ஒரு சூழ்நிலை இன்றைக்கும் இருக்கின்றது என்று சொன்னால் அது இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் ஒன்றிலேதான் என்கின்ற நிலைமையை நியாய உள்ளம் படைத்த அனைவரும், நியாயமான நடுநிலை உணர்வு கொண்ட பத்திரிகைகள் அனைத்தும் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் இங்கே இருக்கின்ற நம்முடைய பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு சில கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார்கள்.

ஆனால், இந்தக் குறிப்பு புத்தகத்திலே கொடுத்திருக்கிறார்கள், இந்தத் துறையின் சார்பிலே எந்தெந்தக் குற்றங்களைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள். எந்த அளவுக்கு சிக்கலாக இருந்த குற்றங்களை எல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள், கண்டுபிடிக்க முடியுமோ முடியாதோ என்கிற அளவுக்கு இருந்த குற்றங்களை எல்லாம் கண்டுபிடித்து இருக்கிறார்கள் என்பதை எல்லாம் குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார்கள். பீகார் மாநிலத்திலே ஒரு காரைத் திருடியவர்கள் இங்கே சேலத்திற்கு அதைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். கார் திருடப்பட்ட பீகார் மாநிலத்திலே பிடிபடாத அவர்கள் இங்கே ஒரு குற்றத்தைச் செய்துவிட்டு பெங்களூருக்கும், ஆந்திராவிற்கும் ஓடிய பிறகும் கூட அவர்கள் பிடிக்கப்படுகிறார்கள் நம்முடைய காவல்துறையாலே என்று சொன்னால், இந்த காவல்துறை முன்னாலே இருந்த பெருமை குலையாத அளவுக்கு காக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டல்லவா ?

அடுத்து இன்னும் பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்கள். அருமை நண்பர் துரைமுருகன் அவர்கள் இந்தத் துறை புரையோடிக் கிடக்கின்றது என்று சொன்னார்கள். என்ன செய்வது ? புரையோடிய புண்ணுக்கு நான்காண்டு காலமாக புரட்சித் தலைவர் அவர்கள் மருந்து ஊற்றிக்கொண்டுதான் வருகிறார்கள். புரையைத் தீர்க்க முடியவில்லை. அந்த அளவுக்கு அந்தப் புரை நரம்பு மண்டலத்தையே பாதிக்கக்கூடிய நிலைமையிலே எங்களிடத்திலே விட்டுப் போன காரணத்தாலேதான் இன்னும் அந்தப் புரை இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அந்தப் புரையை போக்க வேண்டும் என்பதற்காகத்தான் சிலபல நடவடிக்கைகளை எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் தீவிரமாக எடுத்து வருகிறார்கள். இன்றைக்கு சப்-இன்ஸ்பெக்டர்களைக் கூட ராணுவத்தை வைத்து



எடுப்பேன் என்று அவர்கள் சொல்வதும் அந்தப் புரையோடிப் போன புண்ணுக்கு எந்த அளவுக்கு மருந்து தடவ வேண்டும் என்பதை யோசித்துப் பார்த்து வெளியிடுகின்ற ஒரு முடிவுதானே தவிர வேறொன்றும் இல்லை. ஆனால் ஏதோ இந்த மாநிலத்தினுடைய மக்களுக்குள்ள உரிமைகளை எல்லாம் கொண்டு போய் அங்கே பட்டாளத்திலே கொடுக்கப் போகிறோம் என்றெல்லாம் கேட்பதுபோல் இவர்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள் அதிலே நேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான். அவர்கள் எந்தெந்த ஊர்களிலே எந்தெந்தக் கொலைகள், கொள்ளைகள் நடந்தன என்று கூறி குற்றங்கள் கூடிவிட்டது, கொலைகள் அதிகரித்து விட்டது என்று குறிப்பிட்டுக் காட்டினார்கள். இன்றைக்கு அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் பட்டியல்களைக் காட்டுகின்றபோது குற்றங்கள் கூடிவிட்டது என்று அவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது. அவை எல்லாம் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள்தான். ஆனால் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே பல்வேறு குற்றங்களையும், கொலைகளையும் கொள்ளைகளையும் மூடி மறைத்தீர்கள் என்பதற்கு ஆதாரங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஆனால் இன்றையதினம் அந்தக் கொலை, கொள்ளைகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு பதிவு செய்யப்படுகின்றன. அந்தக் குற்றங்கள் எல்லாம்....

திரு. அ. ரகுமான்கான் : மாற்றுத் தலைவரவர்களே, என்னுடைய பெயரைச் சொல்லி இருப்பதன் காரணத்தால் நான் அதற்கு விளக்கம் அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன்) : நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இந்த மாநிலத்திலே குற்றங்கள் கூடிவிட்டது என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்கு பதிலுரையாக மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தையா அவர்கள் குற்றங்கள் கூடவில்லை, அவற்றைக் கண்டுபிடிப்பது கூடி இருக்கின்றது என்று கூறுகிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது குறுக்கிட வேண்டாம் அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் பேசுகின்றபோது இதற்குப் பதிலளித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கின்றது.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, தவறான தகவல் என்னைப்பற்றிச் சொல்கிறார்கள். எனக்கு ஒரு நிமிஷம் தர வேண்டும். அதுபற்றி நான் விளக்க வேண்டும்........

திரு. இரா. முத்தையா : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்து விட்டதற்குப் பிறகு வேண்டுமானால் அவர்கள் பதில் சொல்லட்டும்........

(முற்பகல் 11-30)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. இங்கே தவறான தகவல்களை, புள்ளி விவரங்கள் சம்பந்தமாக, குற்ற நிகழ்வுகள் சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தையா அவர்கள் சொல்கிறார்கள். நான் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டதை அவர்கள் தவறாகச் சொல்லுகிறார்கள் அல்லது தவறாகப் புரிந்துக் கொண்டு சொல்கிறார்கள் என்பதற்காக ஒரே ஒரு வரியில் நான் விளக்க விரும்புகிறேன். 1971-ல் குற்றங்களின் எண்ணிக்கை 59,616. 1980-ல் 1,16,110. அதேபோல் குற்ற நிகழ்வுகள் பொறுத்து 1971-யோடும், 1980 யோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது குற்றங்கள் அதிகமாகியிருக்கிறது. .......... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம்) : மாநிலத்தில் நடந்த கொள்ளைகள், கொலைகள் பற்றியெல்லாம் இப்போது ஒட்டு மொத்தமாக விளக்கம் சொல்லமுடியாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது அதைப் பற்றிச் சொல்லலாம்.

திரு. இரா. முத்தையா : திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னதை நான் அப்படியே திரும்பச் சொல்கிறேன். அன்றைக்கு எண்ணிக்கையை நீங்கள் குறைவாகக் காட்டினீர்கள். இன்றைக்கு, நடைபெறுகின்ற குற்றங்கள் கொலைகளைக் கண்டு பிடித்து இவ்வளவு கொலைகள் கொள்ளைகள் இங்கே நடைபெற்றிருக்கிறது என்பதை நாட்டுக்கு அறிவிக்கிறோம். அந்தக் காலத்தில் அவர்கள் கொலைகள், குற்றங்களை மூடி மறைத்தார்கள் என்பதற்கு இது ஒரு சான்று. (குறுக்கீடுகள்) அன்றையத் தினம் நடைபெற்ற அத்தனை கொடுமைகளையும், மூடி மறைப்பது போல் இன்று இங்கே வேகமாக, ஆத்திரமாக, ஆவேசமாக வார்த்தைகளை உச்சரித்துவிட்டால், அன்றைக்கு ஏதோ நாணயமாக ஆட்சி நடந்தது போலவும் இன்று ஏதோ குறைந்து விட்டது போலவும் நாட்டு மக்கள் நம்பிவிடுவார்கள் என்று கருதுவீர்களானால் நாட்டு மக்களின் அந்த நம்பிக்கையை நீங்கள் பெறப்போவதில்லை என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அருமை நண்பர் திரு. துரைமுருகன் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர்களுடைய தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் சென்ற ஆண்டு கைது செய்யப்பட்டபோது நாடே கொந்தளித்தது. ஏழெட்டு பேர்கள் தங்கள் தேக்குமரத் தேகங்களை தீ வைத்துக் கொண்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள் ஒரு பகுதியை மட்டும் சொல்லி விட்டு இன்னொரு பகுதியை **அவர்கள் திட்டமிட்டு மறைத்து விட்டார்கள் என்பதை நான்**



இந்த நேரத்தில் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அந்த நேரத்தில் எரிந்தது அந்த எட்டு பேர்களின் தேகங்கள் மட்டுமல்ல. எவ்வளவு அரசுப் பேருந்துகள் எரித்து நாசமாக்கப்பட்டன ? எவ்வளவு இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொதுச் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன ? என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அன்று எவ்வளவு வீராவேசத்தோடு பஸ்களை எரித்தார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

எங்கள் மதுரை நகரில் ஒரு நாள் திடீரென்று இன்ன தேதியில் நாங்கள் ஹர்த்தால் செய்யப் போகிறோம், மறியல் செய்யப் போகிறோம் என்று ஒரு அறிவிப்பினை அவர்கள்—தினகரனில் வெளியிடுகிறார்கள். மறுநாள் காலை வீரத்தோடு வருவார்கள், மறியலில் ஈடுபடுவார்கள், வேலை நிறுத்தம், கடையடைப்பு இவற்றில் நகர மக்களைச் சேர்த்துக் கொள்வார்கள் என்றுதான் நாங்கள் எல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் அன்று காலை செய்தி வருகிறது. அதிகாலை 4-15-க்கு பஸ் ஸ்டாண்டிலிருந்து முதல் வண்டிகளை எடுத்துச் செல்வதற்காக பி. ஆர். சி. பஸ் ஸ்டாண்டில் பஸ் வந்து கொண்டிருக்கிறது. 6-15 மணிக்கு வீராதி வீரர்கள் மதுரைக் கல்லூரி அருகில் கூடுகிறார்கள். பத்து ஐம்பது பேர்கள் கையில் அரிவாள், வேல்கம்பு முதலிய ஆயுதங்களோடு இவர்கள் ஒரு கொள்ளைக்கூட்டம் ஒரு பஸ்ஸை மறிப்பது போல் ஒரு பஸ்ஸை மறிக்கிறார்கள். அதில் உள்ள ஒரே ட்ரைவரை கையைப் பிடித்து கீழே இறக்கிவிட்டு மூன்று இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பி. ஆர். சி. பேருந்தை தீ வைத்து கொளுத்துகிறார்கள். அதிகாலை 6-15 மணிக்கு. இரண்டு நாட்களுக்கு பின்னால் அதிகாலையில் 3-45 மணிக்கு இன்னொரு நிகழ்ச்சி.

அதிகாலை மூன்றே முக்கால் மணிக்கு ஒரு நிகழ்ச்சி நடக்கிறது பாத்திமா கல்லூரிக்கு அருகில். ஒரு 10, 15 பேர்கள் கூடுகிறார்கள், பெட்ரோல் சகிதம். முதல் பஸ் வருகிறது. அதிகாலை மூன்றே முக்கால் மணிக்கு. எல்லோரும் உறங்கிக் கொண்டிருக்கும் நேரம். அந்த நேரத்திலே, இவர்களுக்கு வீரம் வருகிறது. டாக்டர் கலைஞரை விடுதலை செய்யவேண்டும் என்று போராடுகிறார்கள். அந்தப் பெட்ரோலை வண்டியின் மீது ஊற்றியிருந்தால் மட்டும் பரவாயில்லை. அந்த வண்டியை ஓட்டிவந்த டிரைவர் மீது ஊற்றுகிறார்கள். அந்த டிரைவர் தப்பியோடி பிழைக்கிறார். $3\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அந்த பி. ஆர். சி. பேருந்து எரித்து சாம்பலாக்கப்படுகின்றது. சமூக விரோதிகள் செய்கிறார்கள், இந்த நாட்டின்மீது அக்கறையில்லாதவர்கள் செய்கிறார்கள் என்று அந்தக் கட்சிக்காரர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அதற்கு மறுநாள்

முரசொலியைப் பார்க்கிறேன். டாக்டர் கலைஞரை விடுதலை செய்யக் கோரி மதுரை மாநகரே ஆர்பரித்து எழுந்தது, பொங்கி எழுந்தது என்று வருகிறது. அதுவும் விடியற்காலை 4¼ மணிக்கு. இந்த அளவுக்குப் போராட்டம் இருக்கிறபோது, இதை ஒடுக்குவதற்கோ, அடக்குவதற்கோ இந்தக் காவல் துறை எந்த முறையைக் கையாள முடியும் ? அந்த நேரத்தில், அரசியல் கட்சிகளிலே இருக்கின்றவர்கள், இந்த மாநிலத்தில் நாங்கள் இந்த அளவிலே துன்புறுத்தப்பட்டோம் என்று சொல்ல முடியுமா ? ஆரசியல் கட்சிகளிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள், ஆளுங் கட்சியினுடைய தலையீடு காரணமாக காவல் துறை துன்புறுத்தியது என்பதற்கு அவர்களாலே காரண காரிய விளக்கங்கள் எடுத்துச் சொல்ல முடியுமா ?

நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள்—கீழக்கரையில் அ.தி.மு.க. செயலாளர் ஒருவர் காவல் துறையால் அடிக்கப்பட்டார். அதற்கு அங்குள்ள சட்ட மன்ற உறுப்பினர் சத்தியமூர்த்தி அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் அன்பழகன் அவர்களும் சொல்லியும் அந்தக் காவல் துறை கேட்கவில்லை என்பதைத் தான் சொன்னார்களே தவிர, ஆளுங் கட்சி சொன்னால் நடக்காது. ஆளுங்கட்சியினர் அம் என்றால் சிறைவாசம், உம் என்றால் வனவாசம் என்ற அளவில் நடக்கின்றது என்று சுட்டிக் காட்டினார்களா ?

இன்றையத்தினம் வட மாநிலங்களிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் என்ன ? இங்கே பேசிய இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள்கூட சொன்னார்கள். அந்த அளவுக்கு இந்த மாநிலத்திலே இவைகள் எல்லாம் நடக்க வேண்டுமென்று, அதற்கான காரண காரிய விளக்கங்ளைச் சொன்னார்கள், இன்றையதினம் உத்திரப் பிரதேச மாநிலத்தில், தமிழகத்தில் நடப்பதைப்போல் 10மடங்கு அளவுக்குச் துப்பாக்கிச் சூட்டால் இறந்தவர்களின் எண்ணிக்கை, லாக்-அப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை பல மடங்கு அங்கே நடைபெற்றிருக்கிறது. உத்திரப் பிரதேச மாநிலத்தில் இன்றையத் தினம் மத்திய அமைச்சராக இருக்கின்ற கல்பநாத் ராயை தேர்தலில் எதிர்த்து நின்றார் என்பதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த தோழர், லாக்-அப்பில் அடைக்கப்பெற்று, கொல்லப்பட்டார் என்ற குற்றச்சாட்டு சொல்லப்பட்டு, அதற்காக இன்றையதினம் அங்கே மக்கள் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அதேபோன்ற நிலை ஒரு அமைச்சரை எதிர்த்தார் அல்லது சட்டமன்ற உறுப்பினரை எதிர்த்தார் என்பதற்காக இந்த மாநிலத்தில் எதிர்க்கட்சிக்காரர்கள் லாக்-அப்பில் வைத்து கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்ற நிலைமை இங்கே இருக்



கிறதா ? ஒரு நீதிபதி வண்டியிலே சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த நீதிபதி துப்பாக்கியால் கொல்லப்படுகிறார் என்ற நிலைமையெல்லாம் வட மாநிலத்தில் நடந்து கொண்டிருக்கின்ற நிகழ்ச்சியாக இருக்கிறது. அதைப்போன்ற நிலைமை இந்த மாநிலத்தில் இருக்கிறதா ? சொல்ல முடியுமா ? சுட்டிக் காட்ட முடியுமா ? இன்றையத்தினம் இந்த மாநிலத்தில் அரசியல் கட்சிகளுடைய தலையீடு இருக்கிறதா ? ஆளுங் கட்சியினுடைய தலையீடு இருக்கிறதா ? சட்டம், அமைதி, ஒழுங்கு காப்பாற்றப்பட வில்லை என்று இந்திரா காங்கிரஸ் நண்பர்களால் சொல்ல முடியுமா ? ஆனால், நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல முடியும். இந்தியத் துணைக் கண்டத்தில், ஒரு மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு, அமைதி முழுமையாக. பூரணமாக பராமரிக்கப்படுகின்றது என்று சொன்னால்; அது தமிழகம் ஒன்றிலேதான். அதுவும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆளுகின்ற இந்த மாநிலத்தில் தான் என்பதை மார்தட்டிச் சொல்ல முடியும். அதற்கு ஒரு மணி நேரம் தனி விவாதம் வைத்தாலும், இந்தக் கருத்தை எங்களாலே உறுதியிட்டு வாதாடுவதற்கு எங்களுக்கு எத்தனையோ காரண காரிய விளக்கங்கள், சான்றுகள் கையிலே இருக்கிறது. ஆனால், அதையெல்லாம் விட்டு விட்டு, இவ்வளவு அமைதியாக தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற காவல் துறையைப் பற்றி, குறை கூற வேண்டும் என்பதற்காக, திட்டமிட்டு இங்கே சிலர் பிரசாரம் செய்கிறார்கள். அது உண்மையாகி விடாது என்பதைத்தான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

(முற்பகல் 11-40.)

அதேபோல் இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம் சில நிர்வாக காரியங்களில் ஒரு டெபுடி இன்ஸ்பெக்டருக்கு பிரமோஷன் இல்லை, மாற்றப்பட்ட ஒரு இன்ஸ்பெக்டருக்கு வேறு இடம் கொடுக்கப்படவில்லை. மாற்றப்பட்ட ஒரு எஸ்.பி.க்கு வேறு இடம் கொடுக்காமல் திரிசங்கு சொர்க்கத்திலே விட்டுவிட்டார்கள் என்று பெரிய குறைகளைப்போல சொன்னார்கள். அந்தக் குறைபாடுகள் எல்லாம் அவர்கள் ஆண்ட காலத்திலே நிகழவில்லையா ? அரசாங்கத்தில் ஒருவர் மாற்றப்பட்டால் மாற்று இடம் கொடுக்கிற வரையில் மாற்றுப் பணி கொடுக்கிற நிலை இன்றைக்குத்தான் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறதா ? இதற்கு முன்னாலே ஏற்படவில்லையா? ஒரு தலைமைச் செயலாளரையே திரிசங்கு சொர்க்கத்திலே விடவில்லையா நீங்கள். ஒரு தலைமைச் செயலாளரையே திரிசங்கு சொர்க்கத்திலே விட்டவர்கள் இன்றைய தினம் டெபுடி இன்ஸ்பெக்டர் திரிசங்கு நிலையிலே விடப்பட்டார் என்று கேட்க என்ன நியாயம் இருக்கிறது ?

ஆகவே எந்த வகையிலே எடுத்துக் கொண்டாலும் குறைகள் கூற முடியாத அளவுக்கு ஒரு துறை இருக்கிறது என்றால் அது எங்கள் தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்களுடைய காவல் துறை தான் என்பதை நான் சொல்லித் தீரவேண்டும். இன்னொன்றையும் இங்கே நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளாக இதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணா தி.மு.க. வினுடைய ஆட்சி 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கவிழ்க்கப்பட்ட பிறகு இருந்த ஒரு மூன்று மாத கால ஆட்சியிலே தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு காவல் நிலையங்களிலே என்ன நடந்தது, என்ன என்ன அக்கிரமங்கள் நடந்தன, அண்ணா தி.மு.க. வுக்கு எதிராக எத்தனை அக்கிரமங்கள் ஏவிவிடப்பட்டன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு காவல் நிலையங்களிலே அண்ணா தி.மு.க. தோழர்கள் வேட்டையாடப்பட்டனர். பலபேர்கள் மீது பொய் வழக்குகள் புனைந்து சூட்டப்பெற்றன. பல பேர்களை ரவுடி லிஸ்டிலே போட ரவுடி லிஸ்ட் ஒப்பன் செய்யுங்கள் என்று திட்டமிட்டு எழுதச்செய்து அதை ஒப்பன் செய்தார்கள்.

என்னுடைய தொகுதியிலே சாத்தூர் என்ற ஊரிலே ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அந்த காவல் நிலையத்திற்கு மாவட்ட போலீஸ் அதிகாரி இன்ஸ்பெக்ஷனுக்கு வருகிறார். இன்ஸ்பெக்ஷன் செய்கிறபோது ரிப்போர்ட்டை எழுதுகிறார். அந்த ரிப்போர்டிலே கடைசி பாராவிலே அந்த தொகுதிலே உள்ள அண்ணா தி.மு.க. தோழர்கள் 3 பேர்கள்—அவர்கள் எந்த வழக்கிலும் சம்பந்தப்படாதவர்கள், எந்தக் குற்றமும் செய்யாதவர்கள், 1, 2 முறைகள் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள் என்றால் அண்ணா தி.மு.க. நடத்திய போராட்டத்திலே கலந்துகொண்டு சிறைக்குச் சென்றவர்கள் அவர்கள்மீது ஒரு பெரிய போலீஸ் அதிகாரி ரவுடி லிஸ்ட் தயாரிக்கச் சொன்னார். இது அப்போது மறைமுகமாக இருந்த ஆட்சியின் தூண்டுதலா இல்லையா என்பதைக் கேட்க விரும்புகிறேன். இதுபோன்று பல்வேறு காவல் நிலையங்களில் நடந்திருக்கிறது. இதுபோன்ற நிலைமைகளை எல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் மறு பரிசீலனை செய்து எந்தவிதமான தவறும் செய்யாத அண்ணா தி.மு.க. தோழர்கள் மீது அரசியல் காரணத்தினால் போடப்பட்ட வழக்குகளை — பழிபாவங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறவர்களுக்கு—மறுபரிசீலனை செய்து பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எந்த வகையிலும் குறைகள் சொல்லமுடியாத அளவுக்கு காவல் துறை நடந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி இது வரையிலே இல்லாத அளவுக்கு காவல் துறையினருக்கு பல்வேறு





சலுகைகளை வாரி வழங்கியிருக்கிறார்கள் புரட்சித் தலைவர் அவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்கிற நேரத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*திரு. மு. அம்பிகாபதி : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக்கோரிக்கையின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூறிக் கொள்ள விழைகிறேன். காவல் துறையிலே இன்றைக்கு இருக்கின்ற போக்கு, சாதாரண தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு எதிராக பல்வேறு இடங்களிலே செயல்படுகிற போக்கு அதிகரித்திருக்கிறது. உதாரணமாக ஜனவரி மாதம் 19 ஆம் தேதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் என்று அறிவித்து இந்தியா முழுவதும் நடந்த அந்த வேலை நிறுத்தத்தின் தொடர்பாக தமிழகத்திலே நடைபெற்ற அந்த வேலை நிறுத்தத்தை உடைப்பதற்காக பல்லாயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலே எந்த விதமான வசதியும் இல்லாமல் அடைத்துவிட்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் அம்மாதிரியான வேலைநிறுத்தத்திலே மூன்று பேர்கள் ஞானசேகரன், நாகூரான், அஞ்சான் என்பவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஜனவரி மாதம் 19 ஆம் தேதி தஞ்சை மாவட்டத்திலே நடந்த துப்பாக்கி சூடு பற்றி நீதிவிசாரணை ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியை கொண்டு செய்யவேண்டுமென்று மீண்டும் வலியுறுத்துகிறேன். இந்த நீதிவிசாரணை செய்ய வேண்டும் என்று நாங்கள் கோரி வருகிறோம். இதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

சில பிரச்னைகளிலே காவல்துறையை சார்ந்தவர்கள் அணுகு முறையினால் அது தவறாகவோ, கொலையாகவோ முடிந்திருக்கிறது என்பதற்கு உதாரணமாக தென்னார்காடு மாவட்டத்தில் காட்டு மன்னார்கோவில் தாலுகா கந்தகுமாரன் என்ற கிராமத்தில் வேதாந்த சந்நியாசி என்ற ஆசிரமத்திற்கு சொந்தமான நிலம். அந்த நிலத்தின் குத்தகைதாரர் ராமசாமி மற்றும் மூன்று பேர் அவருடைய சகோதரர்கள். அவர்களுடைய குத்தகை உரிமையை நிலைநாட்டுகிற முறையிலே, அவர்களுக்கு இருக்கிற உரிமைகளை வைத்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலே இன்ஜங்ஷன் வாங்குகிறார்கள். 26—2—1982 அன்று அறுவடை செய்யும்போது, இந்த நிலத்திற்கு சம்பந்தம் உள்ளவர்கள் போலீஸ் பாதுகாப்பை கேட்டும் கொடுக்காத காரணத்தால், குத்தகை உரிமை பெற்றிருந்தவர்களை, இன்ஜங்ஷன் வாங்கியிருந்தவர்களை 26—2—1982 அன்று தாக்கி அன்றே கடலூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 9—3—1982

அன்று பன்னீர்செல்வம் என்பவர் இறந்திருக்கிறார். அவர் கிட்டத்தட்ட 11 நாட்கள் உயிரோடு இருந்திருக்கிறார் அவரிடத்திலே டையிங் டெக்லரேஷன் கூட வாங்காத நிலையில் அங்கேயிருக்கிற காவல்துறையினர் செயல்பட்டிருக்கிறார்கள். அந்த குத்தகை விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுத்திருந்தால் பன்னீர்செல்வம் மாண்டிருக்க மாட்டார், இப்படி ஒரு சம்பவம் இந்தக் கொள்கையை குத்தகைதாரர் விஷயத்திலே காவல் துறையைச் சார்ந்தவர்கள் அனுஷ்டிக்கிறார்கள் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நீடாமங்கலம் காவல் நிலையத்தில் ஹெட் கான்ஸ்டேபிள் 2736, இவர் மீது நூற்றுக்கு மேற்பட்ட புகார்கள் உள்ளன. இதனை அனுசரித்து மன்னார்குடி டி.எஸ்.பி. இவரை மாற்றச் சொல்லி எஸ்.பி.க்கு எழுதியிருக்கிறார். பல் வேறு ஊழல்கள், பல்வேறு குற்றச்சாட்டுக்கள். சப் இன்ஸ் பெக்டருக்கு பதிலாக இவரே சப் இன்ஸ்பெக்டராக செயல் படுவது, இன்ஸ்பெக்டராக செயல்படுவது இந்த ஹெட் கான்ஸ் டேபிள் 2736. அங்கே இருக்கிற அனைத்து கட்சிகளும் இது குறித்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர் எந்த கட்சியையும் சார்ந்தவர் இல்லை. எவன் பணம் கொடுக்கிறானோ அந்த கட்சி. இவரை மாற்றச் சொன்னதில் எஸ்.பி. என்ன செய்கிறார் என்றால் மதுவிலக்கு பிரிவிலே அவரை மாற்றியிருக்கிறார்கள். அது ரொம்ப வசதியாகிவிட்டது. பழம் நழுவி பாலில் விழுந்தது போல விழுந்து விட்டது. வல்லத்திற்கு பக்கத்திலே சாராயம் காய்ச்சுகிற ஒருவர் வீட்டை சோதனை செய்ய சென்றிருக்கிறது இந்த மதுவிலக்கு பிரிவு. அவன் எப்போதோ காய்ச்சியிருக்கிறான் இப்போது அவன் காய்ச்சுவது இல்லை என்று கேள்வி. அந்த வீட்டை சோதனை என்ற பெயராலே போய் அவன் கடலை விற்று 2,600 ரூபாய் பணம் வைத்திருக்கிறான். அந்த பிரிவு ஹெட் கான்ஸ்டேபிள் அந்த 2,600 ரூபாயை எடுத்துக்கொண்டு வந்து விட்டார். வல்லம் பகுதி போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த சப்-இன்ஸ்பெக்டர் நல்லவர் போலயிருக்கிறது. நானும் வீட்டுக்குள்ளே போயிருந்தேன். ஹெட் கான்ஸ்டேபிள் எடுக்கவில்லை என்று சொல்லியிருக் கிறார். அந்த சப்-இன்ஸ்பெக்டரையும் அந்த ஹெட் கான்ஸ் டேபிள் சரி செய்துவிட்டார். எனவே இந்த ஹெட் கான்ஸ் டேபிளையும், அந்த ஹெட் கான்ஸ்டேபிளையும் சஸ்பென்ட் செய்து அவர்கள் மீதிருக்கிற குற்றங்கள் முழுவதிற்கும் விசாரணை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இவர் ஏதோ ஒரு சங்கத்திற்கு தலைவராம். இவர் ஒரு சங்கம் வைத்திருக்கிறாராம். காவல் துறைக்கு சங்கம் என்பது தேவை



18 மாநிலங்களில்இருக்கிறது. அது வேறு விஷயம்: அவர்கள் சங்கம் வைத்து அவர்களுடைய உரிமையைக் கேட்கிறார்கள். அவர்கள் சங்கத்தின் மூலமாக பிரச்னையை அணுகட்டும்.

* * * * * *

இவர் குப்பத்து ராஜாவாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். இந்த ஹெட் கான்ஸ்டபிள்கள்மீது சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50).

அடுத்து ஒரு நடவடிக்கை. வல்லத்திற்கு பக்கத்திலே ஒரு ஏழை விவசாயி, மாடு விற்பதற்குத் தஞ்சாவூர் வந்திருக்கிறார். மாடு விற்று விட்டு, 6 சாக்குகளை வாங்கி, தலையிலே வைத்துக் கொண்டு டவுன் பஸ் ஏறுவதற்காக நின்று கொண்டிருந்தார். நின்று கொண்டிருந்தவரை இரண்டு காவலர்கள் மடக்கி—அவர் மடியில் ரூ. 600-க்கு மேல் வைத்திருந்தார்.—ஒரு சந்துக்கு அழைத்துப் போய், சாக்கு ஏதடா என்று கேட்டு, அவர் மடியிலே வைத்திருந்த அந்த மொத்தப் பணத்தையும் பிடுங்கிக்கொண்டு, வல்லத்திற்கு போவதற்கு 75 காசு மட்டும் கொடுத்து, நீ பஸ்ஸிலே ஏறி ஓடிவிடு என்று சொல்லி விரட்டுகிறார்கள். இதற்கு ஆதாரம் வேண்டும் என்று கேட்டால், எனக்கு அந்த விவரங்கள் எல்லாம் தந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பரையே கொண்டு வந்து நிறுத்தத் தயார். எனவே, இப்படி வழிப்பறி செய்கிறவர்கள் சிலர் காவல் துறையிலே புகுந்திருக்கிறார்கள். இவை தனிப்பட்ட முறை யிலே விசாரிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்ததாக, கீழ்த்தஞ்சை மாவட்டம் மாயவரம் டி.எஸ்.பி. சரகம், பூந்தோட்டம் போலீஸ் ஸ்டேஷன். அந்தச் சரகத்திலே இருக்கக் கூடிய விவசாயத் தொழிலாளர்கள் அறுவடை கேட் கிறார்கள். கடகம்பாடி கிராமத்தைச் சேர்ந்த விஜயராகவ னுடைய நிலம்—விவசாயிகள் அறுவடை கேட்கிறார்கள். அவர் அறுவடை கொடுக்க மறுக்கிறார். இந்த அறுவடை கொடுக்க வேண்டுமென்பதற்குத் தலைமை தாங்கியவர், சின்னையன் என்ற எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தைச் சேர்ந் தவர். அந்த அறுவடையைக்கேட்க தலைமை தாங்கினார் என்பதற் காக, விஜயராகவனுடைய ஆட்கள், சின்னையனுடைய வீட்டைக் கொள்ளை அடிக்கிறார்கள். அந்தக் கொள்ளை அடிக்கிற சம் பவத்தைக் கேள்விப் பட்ட விவசாயத் தொழிலாளர்கள் தலைவர் வீட்டையா கொள்ளை அடிக்கிறார்கள் என்று விஜயராகவன்

---

*(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நீக்கம் செய்யப்பெற்றது.)

வீட்டை நோக்கிப் போகிறார்கள். போக மாட்டார்களா ? போனது தவறா ? அறுவடை கேட்டதற்காகச் சின்னையனுடைய வீடு கொள்ளை அடிக்கப்படுகிறது. இதை எதிர்த்துக் கேட்டார்கள் என்பதற்காக, எங்கள் தோழர், இடும்பையன், மற்றும் நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு, கும்பகோணத்திலே ரிமாண்ட் செய்யப்பட்டு, மாயவரம் கோர்ட்டிலே செக்ஷன் 147, 148, 326, 307, இன்னும் என்ன, என்ன, செக்ஷன்கள் இருக்கிறதோ, அவை அத்தனையும் போடப் பட்டிருக்கின்றன. அதன் மீது ஒரு விசாரணை நடத்த வேண்டும். இப்படி, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் சிலர் தனிக்காட்டு ராஜாக்களாகச் சில இடங்களிலே செயல்படுகிறார்கள். போக்கிரி ராஜாக்களும் இருக்கிறார்கள். குப்பத்து ராஜாக்களும் இருக்கிறார்கள். 'போக்கிரி ராஜா, குப்பத்து ராஜா, 'தனிக்காட்டு ராஜா '—, இப்படிக் காவல் துறையிலே சில பேர், நான் ஜெனரலாகச் சொல்லவில்லை, சில பர்ட்டிகுலர் இடங்களில் இருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட காவலர்கள் சில பேர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் காவல் துறையைச் சேர்ந்தவர்களுடைய நிலையைச் சொல்ல வேண்டுமானால், குமரி மாவட்டத்திலே, மண்டைக்காடு சம்பவத்தை ஒட்டி 6 பேர் சுடப்பட்டிருக்கிறார்கள் 6 பேர் அந்த ஊருக்குள்ளே சுடப்பட்டிருக்கிறார்கள். சுட வேண்டிய அவசியம் என்ன ? அது பற்றி நீதி விசாரணைக்கு உத்தர விடப்பட்டிருக்கிறது.

அதே போல், ஆர். எஸ். எஸ். காக்கி உடை அணிந்து, கோவலம் என்ற கிராமத்தினுள்ளே நுழைய முயற்சித்திருக்கிறார்கள். அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களைத் தடுக்கிறார்கள். இந்த ஆர்.எஸ். எஸ். காரர்கள், நாங்கள் காவலர்கள் என்று சொல்லி, ஊருக்குள்ளே போய் சுட்டிருக்கிறார்கள். குமரி மாவட்டத்திலே, ஆர்.எஸ். எஸ். புகுந்து விளையாடியிருக்கிறது. எனவே, தமிழகத்திலே ஆர்.எஸ்.எஸ். யைத் தடை செய்வதற்கு இந்தத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோவலத்திலே, ஆர்.எஸ்.எஸ். சுட்டு ஒருவர் இறந்திருக்கிறார். மண்டைக் காட்டிலே காவலர்கள் ஊருக்குள் புகுந்து பயந்து கொண்டிருந்த மக்களைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். இது நியாயமற்ற நடவடிக்கை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



அதே போல், காவல் துறையைச் சேர்ந்தவர்கள் சங்கம் வைக்க உரிமை வேண்டுமா என்றால், வேண்டும். 18 மாநிலங்களிலே சங்கங்கள் இருக்கின்றன. அதே போல், தமிழகத்திலே சட்டப்படியாக, முறையாக, இயங்குகின்ற ஒரு சங்கத்தை உருவாக்கிட வேண்டும். காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு வார விடுமுறை கொடுக்கப்படுகிறது. அன்று அவர்கள் வேலைக்கு வர வேண்டுமென்ற அவசியம் கிடையாது. வேலைக்கு வந்தால், அவர்களுக்கு ரூ. 7 மட்டும் கொடுக்கப்படுகிறது. அது சரியல்ல. வீக்லி ஆஃப் காலத்தில், அவர்கள் பணி புரிந்தால் இரட்டைச் சம்பளம், ஒரு நாளைக்கு அவர்களுக்கு ரூ. 15 ஊதியம் என்றால், டபுள் வேஜ் கொடுக்க வேண்டும், ரூ. 7-க்குப் பதிலாக. ஒரு நாள் ஊதியம் போதாது. ஒரு நாள் வீக்லி ஆஃப் அன்று வேலை செய்தால், இரண்டு நாள் ஊதியம்—ஒரு நாள் வேலைக்கு இரண்டு நாள் ஊதியம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவலர்களுக்கு சீனியாரிட்டி பிரகாரம் பதவி கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும் அவர்களுக்கு உரிய அந்த ஊதியத்தைக் கொடுக்கின்ற முறையில் பதவி உயர்வு கொடுக்க வேண்டும். பத்தாண்டு சர்வீஸ் முடிந்தவுடன் மற்றத் துறைகளில் எப்படி அந்தப் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை என்றாலும் ஊதிய உயர்வு கொடுக்கிறோமோ அந்த வகையில் கொடுக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எனக்குத் தெரிந்த வரையில் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கான வீடுகள் மிகவும் மோசமாக இருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டவை. மங்களூர் ஓடு போடப்பட்ட வீடுகள். அங்குள்ள லெட்ரீன் பழைய லெட்ரீன். ஆண், பெண் அத்தனை பேரும் அதிலே தான் போக வேண்டும். சில சமயங்களில் வெளியாட்களும் அதிலே புகுந்து விடுவார்கள். அந்த வீட்டிலுள்ளவர்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள். அவர்கள் வீட்டிற்கு ஹால் இல்லை, கிச்சன் இல்லை. பொதுவான லெட்ரீன், காலையில் எழுந்தவுடனேயே ஒரு இரிடேஷன் ஏற்படும். இன்றைக்கு எவனை உதைக்கலாம் என்று. லெட்ரீன் போக வேண்டுமென்றால் ஒரே கூட்டமாக இருக்கும். குளிக்கப் போனால் கூட்டம். ஆனால் இதையெல்லாம் முடித்துக்கொண்டு எட்டு மணிக்கு டூட்டிக்கு வர வேண்டும். அமைச்சர்கள் காலை 9 மணிக்கு வருகிறார்கள். என்றால் காலை 6 மணிக்கே போய் நிற்க வேண்டும். இப்படிப்பட்ட சிக்கலான நிலைமையில் இரிடேஷன் ஏற்பட்டு, எவனாவது சைக்கிளில் லைட் இல்லாமல் வந்தால் அவனைப் பிடிப்பார்கள். 100 ரூபாய் கொடுத்து சைக்கிள் வாங்குபவன் 200 ரூபாய் கொடுத்து மில்லர் லைட்டா

வாங்குவான் ? மண்ணெண் ணய் விளக்கை ஏற்றிக் கொண்டு வருவான். அந்த லைட் வழியில் நின்று விடும். அது என்ன தேசத் துரோகமா ? உடனே அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் சைக்கிளின் வால் டியூப்பைப் பிடுங்கி விடுவது, அவனோடு தகராறு செய்வது, போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துக் கொண்டு செல்வது போன்ற காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) எனக்கு இன்னும் டைம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : டைம் இருக்கிறது என்பதற்காக லைட்டைப் பற்றியே இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருக்கிறீர்களே.

**திரு. மு. அம்பிகாபதி** : இப்படிப்பட்ட நிலைமையில் ஈடுபடுகிறார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன். இதையெல்லாம் மாற்றுகின்ற வகையில் நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மினிஸ்டீரியல் சர்வீசைப் பொறுத்த வரையில் 2,200 பேர்களுக்கு மேல் அந்தத் துறைக்கு தேவை என்று சொல்லப்படுகிறது. காவலர்களின் உடை, உணவு போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அலுவலகங்களில் இருந்து பணியாற்றும் ஊழியர்கள் அவர்கள். இவர்களுடைய பணிச்சுமை அதிகமாகிறது. சில இடங்களில் சப்-இன்ஸ்பெக்டர்களே நிறுத்துக் கொடுக்கின்ற வேலையைத்தான் அதிகமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அரிசி, எண்ணெய், போன்றவைகளை நிறுத்திக் கொடுக்கும் வேலைதான் சரியாக இருக்கிறதே தவிர கம்ப்ளெயிண்டுகளைக் கவனிக்கின்ற நிலைமை இல்லை. இரண்டாயிரத்துச்சொச்சம் பேர் இருக்க வேண்டுமென்று சொல்லி, இடைக்கால நிவாரணமாக 892 பேர் இருக்கலாம் என்று கூறி, அது 90 ஆகப் போய் முடிந்திருக்கிறது. இப்படியிருந்தால் ஒர்க் லோட் அதிகமாகி வேலை செய்ய முடியாத நிலை ஏற்படும். 8—5—1981-லே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மினிஸ்டீரியல் ஸ்டாஃபின் கோரிக்கை நிறைவேறும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அவர்களுக்குப் போதுமான பணியாளர்களை நியமிக்க வேண்டும். வீடு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். மலிவு விலையில் காவலர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களை வழங்க ஏற்பாடு செய்யும் அவர்களுக்கும் அந்த மலிவு உணவுகிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்பொழுது காவலர்களுக்குக் கொடுத்து வந்த அரிசிரேஷன் 24 கிலோவிலிருந்து 16 கிலோ ஆகிவிட்டது. அடுத்து சர்க்கரை 5 கிலோவிலிருந்து $1\frac{1}{2}$ கிலோவாக ஆகிவிட்டது. அடுத்து



பாமாயில் 4 கிலோ விலிருந்து 1 கிலோவாகக் குறைக்கப்பட்டுவிட்டது. போகும் போக்கைப் பார்த்தால் இதையும் நிறுத்தி விடுவார்கள் போல் இருக்கிறது. காவலர்களுக்குக் கொடுக்கப்படும் அரிசி ரப்பரிலே தயாராகிறதோ என்னவோ தெரியவில்லை. டிரிபிள் பாயில்ட் ஆக இருக்கிறது. ஒரு கிலோ அரிசியை வேக வைப்பதற்கே 25 கிலோ விறகு வேண்டும் போல் இருக்கிறது. அது வேவதற்கு மூன்று மணி நேரம் ஆகிறது. கலைஞர் அவர்கள் நாடகம் ஒன்றில் காவல் துறையைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். நான் பார்த்திருக்கிறேன். 8 மணிக்கு வேலைக்குப் போக வேண்டுமென்று சொன்னால் 6 மணிக்கு உலை வைத்தால் அது 11 மணிக்குத்தான் அரைவேக்காடாக வந்திருக்கும் அதை சாப்பிட்டு விட்டு டியூட்டிக்குப் போனால் வயிற்று வலி ஏற்படும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் உபாதை ஏற்படுகிறது. எனவே கொடுப்பதை நல்ல அரிசியாக, நல்ல எண்ணெயாகக்கொடுங்கள். காவலர்களுக்குக் கொடுக்கிறோம் என்ற பெயரில் மோசமான அரிசியைக் கொடுக்க வேண்டாம். கலப்படமான பொருட்களை வழங்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாக 45 வயதுக்குப் பிறகு காவலர்கள் கவாத்து செய்வது சம்பந்தமாகத் தேவையில்லை என்று 1952 என்று கருதுகிறேன், ஆர்டர் போடப்பட்டிருக்கிறது.

(நண்பகல் 12—00.)

ஆனால் இப்போது அது அமல்படுத்தப்படவில்லை என்று கூறப்படுகிறது. அதைத் தகுந்த முறையிலே ஏற்பாடு செய்து கொடுப்பதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல்துறையைச் சேர்ந்தவர்களுடைய வீடுகள் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். டி.எஸ்.பி. என்று சொன்னால் அவருக்கு எச். ஆர். ஏ. 90 ரூபாய் கிடைக்கிறது. மன்னார்குடியில் சப்-இன்ஸ்பெக்டருக்கு குவார்ட்டர்ஸ் இருக்கிறது. இன்ஸ்பெக்டருக்கோ அல்லது டி.எஸ்.பி.-க்கோ குவார்ட்டர்ஸ் இல்லை. இந்த 90 ரூபாய் எச். ஆர். ஏ. கொடுத்தால் அந்த பணத்தில் அவர்களுக்கு யார் வீடு கொடுப்பார்கள். ஏதாவது சந்துபொந்துகளிலேதான் அவர்கள் குடியிருக்கிறார்கள். அதேபோல கான்ஸ்டேபிள்களுக்கு வீடுகள் முறையாகக் கிடையாது. அவர்கள் இருக்கின்ற சில வீடுகளில் 2, 3 வாழைக்கன்று போன்றவைகளை வைத்திருக்கிறார்கள். அதைக்கூட இன்ஸ்பெக்டர்கள் வெட்டிவிடுகிறார்கள்.

மேலும் இராமநாதபுரம் டி.எஸ்பி. க்கு ஆர்டர்லி கிடையாது டைப்பிஸ்ட் கிடையாது. அப்படி என்றால் மினிஸ்டிரியல் சர்வீஸ் ஊழியர் போடவேண்டிய அவசியம் என்ன. காவல் துறையில் உள்ள குறைகளைப் போக்குகின்ற அதே நேரத்தில், காவல்துறையினரிலே ஒரு சிலர் பண்ணுகிற அட்டூழியங்கள், அதனை எதிர்த்து மக்கள் எழுகிறார்கள். ஒரு சிலர் மக்கள் விரோத சக்தியாகச் செயல்படுகிறார்கள். மக்களைக் கொள்ளை அடிக்கின்ற, வீடு புகுந்து கொள்ளை அடிக்கின்ற அந்த காவல் துறையினரை மக்கள் கொதித்து எழுவதற்கு முன்பாக தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

## 5. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

24— 3—1982 (புதன்) மற்றும் 25—3—1982 (வியாழன்) — ஏற்கனவே அறிவித்துள்ளபடி—மாறுதல் இல்லை.

26—3—1982 (வெள்ளி) — தெலுங்கு வருடப் பிறப்பு—விடுமுறை.

27— 3—1982 (சனி) —

காலை :
கேள்வி நேரம் இல்லை.

1. 1981–82 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு—விவாதமின்றி நிறைவேற்றல்.
2. மானியக் கோரிக்கை எண். 15—காவல்துறை மற்றும் மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் மீது மேலும் விவாதம்.





மாலை :

1. பிற்பகல் 4 மணி முதல் 6 மணி வரை—மானியக் கோரிக்கை எண். 26 — கைத்தறியும், நெசவுத் தொழிலும்.
2. பிற்பகல் 6 மணி முதல் 8 மணி வரை—மானியக் கோரிக்கை எண். 22 கால்நடை வளர்ப்பு.

மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன்.

28— 3—1982 (ஞாயிறு) — விடுமுறை.

29— 3—1982 (திங்கள்) — எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்

எண். 7—மாநில சட்டமன்றம்.

விவாதமின்றி 1 மணிக்கு வாக்கெடுப்படுபவை

எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

எண். 8—தேர்தல்கள்.

எண். 43—பல்வகை.

எண். 55—பல்வகை மூலதனச் செலவு.

எண். 56—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

1982–83 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.

30— 3—1982 (செவ்வாய்) — 1982–83 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

| | |
|---|---|
| 31—3—1982 (புதன்) | அரசினர் சட்ட முன்வடிவுகள். |
| 1—4—1982 (வியாழன்) | தனியார் அலுவல்கள். |
| 2—4—1982 (வெள்ளி) | அரசினர் சட்ட முன்வடிவுகள். |
| 3—4—1982 (சனி) | |
| 4—4—1982 (ஞாயிறு). | விடுமுறை. |
| 5—4—1982 (திங்கள்) | அரசினர் சட்ட முன்வடிவுகள். |
| 6—4—1982 (செவ்வாய்) | மகாவீர் ஜயந்தி—விடுமுறை. |

தேவையிருப்பின் பேரவை 7—4—1982 மற்றும் 8—4—1982 அன்றும் கூடி அரசினர் சட்ட முன்வடிவுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு நிறைவேற்றும்.

4. வரவு-செலவுத் திட்டம் 1982–83 வாக்கெடுப்பு—தொடர்ச்சி

***திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1973-லே, பெண்கள் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் சென்ற ஆண்டிலே, பெண் போலீஸ்காரர்களுக்கும், ஆண் போலீஸ்காரர்களுக்கும், கிட்டத்தட்ட 12 ஆயிரம் பேர்களுக்கு மேல் இன்டர்வியூ செய்யப்பட்டார்கள். ஆனால் அவர்களுடைய சான்றிதழ்கள் வாங்கி வைத்துக்கொண்டு, ஒரு சிலரைத் தவிர வேறு யாருக்கும் எந்தவிதமான தகவலும் அதைப் பற்றி கொடுக்கப்பட இல்லை. அவர்கள் வேறு உத்தியோகத்திற்குப் போவதற்குக்கூட தங்களுடைய சான்றிதழ்கள் இல்லாத காரணத்தினால் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் நேரிலே கொண்டு வந்தேன். நிச்சயமாக பெண் போலீஸ்காரர்களுக்கு உத்தியோகம் கொடுத்துவிடுவோம். ஆண்களுக்கும் கொடுக்கப்படும், இல்லையானால், சான்றிதழ்கள் எல்லாம் திருப்பி கொடுக்கப்படும் என்று உறுதிமொழி கொடுத்தார்கள். ஆனால் இன்றையவரையிலும் அது கொடுக்கப்படாமல் இருப்பது வருந்தத்தக்கது என்பதை நான் வருத்தத்துடன் **தெரிவித்துக் கொள்கிறேன்.**



இன்றைக்கு போலீசிலே இருக்கின்ற இந்த அவல நிலைமையை நாம் சொல்லவேண்டுமானால், மேல் நிலையில்இருக்கின்ற அதிகாரிகள் எப்படி இருந்தாலும். கீழ்த்தர சிப்பந்திகளுக்கு வீட்டுவசதி கிடையாது. பல இடங்களிலே, அவர்கள் தனியார் வீடுகளிலே குடியிருக்கிறார்கள். அதிலும் கிராமப் பகுதியிலே, எடுத்துக் கொண்டால், சமூக விரோத சக்திகளால் தூண்டிவிடுகிறவர்கள் வீட்டிலே அவர்கள் வாடகைக்கு குடியிருக்கிறார்கள். அவர்களும் மனிதர்கள்தான், அவர்களுக்கும் குழந்தைகள் இருக்கின்றன. அவர்கள் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டால் தங்களுடைய கடமையைச் செய்ய முனையும்போது இந்த சமூகவிரோத சக்திகள் வீடுகளிலே குடி இருக்கின்ற ஒரு அவல நிலை இருக்கின்ற காரணத்தால் அவர்கள் எந்தத் தகவலும் கொடுக்க முடியாமல், நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது. அத்தனை காவல்துறைச் அதிகாரிகளுக்கு வீட்டு வசதி கொடுக்க வேண்டுமென்று ஒரு முடிவினை நாம் ஒருபோர்க் கால திட்டமாக இருந்தாலும் பரவாயில்லை. அவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுத்தாலன்றி, அந்தச் சமூக விரோத சக்திகளை அவர்களை கன்காணிக்க முடியாது. தகவல் கொடுக்க முடியாது. நடவடிக்கை எடுக்க முடியாது. இந்த அவல நிலையை நாம் சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகள் ஆகியும் நாம் காண்டிருந்தால், இதில் கவனம் செலுத்த தவறி இருக்கிறோம், ஆகவே அரசாங்கத்தில் இதை செய்ய தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நாம் நீதி சட்டம், ஒழுங்கு என்பனவற்றைப் பற்றிப் பேசலாமே தவிர, அரசியல்வாதிகளாக இருக்கின்ற நாம் ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டிக் கொள்வதை நிறுத்தி, இந்த கடந்தகால அரசியலில் இருந்தவர்களை குறைகூறுவதை நாம் விட்டுவிட்டு, இந்த போலீஸ்காரர்களுக்கு அவர்கள் உண்மையைச் சொல்வதற்கு, உண்மைக்குத் துணையாக இருப்பவர்களுக்கு, எல்லாக் கட்சி நண்பர்களும் ஒத்துழைத்து அவர்களுக்கு வீட்டு வசதி போன்றவற்றை செய்துகொடுத்தால் மட்டுமே நாம் குற்றங்களை தடுக்க முடியும்.

அதேபோல் குற்றங்களைக் கண்டு பிடிப்பவர்களுக்கு உண்மையிலே நாம் பரிசு கொடுக்காமல், யாரோ சொல்வதைக் கொண்டு நாம் செய்கின்ற ஒரு அவல நிலை இருந்துவருகிறது. அந்த நிலைமையை நாம் மாற்ற வேண்டும். மேலே உள்ள சூப்பிரண்டன்ட் ஆக இருப்பவர்கள் அதை கண்காணித்து வருங்காலத்திலே உண்மையாக கண்டுபிடிப்பவர்களுக்கு பரிசுகள் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் இப்போது இருக்கின்ற நிலைமையிலே குற்றங்கள் அதிகப்பட்டுக் கொண்டிருக்கும்போது, போதுமான அளவுக்கு காவல் துறையை விரிவுபடுத்தி, காவல் துறையினர் எண்ணிக்கையை நாம் உயர்த்த வேண்டும். அதேபோல் அவர்களுக்குக்

கொடுக்கின்ற தினப்படிகளையும் நாம் உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதை நாம் இன்னும் உயர்த்தாமல் இருக்கிறோம். எதிர்காலத்திலாவது அவர்களுக்கு உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக சென்னையில் கூட ஸ்பெசல் ஆர்ம்ட் போலீஸ் இருக்கின்றது. அவர்களுக்கு குடிதண்ணீர் வசதி இடவசதி இல்லை, நானும் அரசாங்கத்திற்குச் சொல்லியிருக்கிறேன். அதிகாரிகள் இடத்திலும் சொல்லியிருக்கிறேன். அதை திட்டமிட்டு செயல்படுத்தப்படும் என்று உறுதிமொழி கொடுக்கப்பட்டு 2 ஆண்டுகள் ஆகியும், இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை.

மேலும், இந்தக் குறிப்புகளிலே திருநெல்வேலி மாவட்டத்தில் அச்சம்புதூர் என்ற இடத்தில் நடந்த சம்பவத்தை இங்கு சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலே அங்கு நடந்தது வேறு. அங்கிருந்த போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் யாரையாவது பிடிக்க வேண்டுமென்பதற்காக, நிரபராதிகளை பிடித்தது, மட்டுமல்லாமல் இம்சை செய்திருக்கிறார்கள். அது அனைத்தும் அரசாங்கத்திற்குத் தெரிந்தும் கூட, இந்தக் குறிப்பில் ஒரு பகுதியை மட்டும் எழுதி இருப்பது இந்த அரசாங்கத்திற்கு கெட்ட பெயரை கொண்டு வருவது மட்டுமல்லாமல் இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தவறான தகவல்களை தருவது போலாகும், என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கனாங்குளம் என்று விஷயத்தில் எஸ். பி. கலெக்டர் இடத்திலே கேட்டபோது ஒன்றும் நடக்கவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அதில் பெண்கள்கூட பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். என்பதுதான் உண்மை. முதல் அமைச்சர் அவர்களும் நேரில் சென்று பார்த்து ஒரு நீதிவிசாரணையை அமைத்து இப்போது பல விஷயங்கள் உண்மையாக இருக்கிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் போலீஸ் உத்தியோகத்தில் மேல் மட்டத்தில் இருப்பவர்கள் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் சொல்வதை அப்படி நம்பிக்கை வைத்து ஒரு பாவமான காரியத்தை உயர் அதிகாரிகள் செய்யக்கூடாது. அவர்கள் தீர விசாரணை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக சிவந்தியூர் என்ற கிராமத்திலே 4 பேருக்குச் சொந்தமாக பாகம் உள்ள ஒரு ரைஸ் மில்லை ஒருவன் என்று வாங்கிக் கொண்டு, அந்த ஆதி திராவிட மகனை அந்த ஊரை விட்டே துரத்தி விட்டார்கள். இப்போது உண்மை தெரிந்து இந்த நிர்வாகத்திலே ஒருவனைத் தவிர மற்ற 3 பேர்களுக்கும் பங்குண்டு என்று கீழ்க் கோர்ட் முடிவு செய்திருக்கிறது.



அதேபோல் பரமக்குடி, ராமநாதபுரம் மாவட்டத்தில் போகலூர் என்ற இடத்திலே கலவரம் நடக்கிறபோது ஒரு சமுதாய மக்கள் என்று குறிப்பு இருக்கிறது. அது மிகத் தவறான குறிப்பு. அதேபோல் 13—4—81, 24 ஆம் பக்கத்தில் உள்ள குறிப்பிலே சந்திரன்குடி போலீஸ் ஸ்டேசன் தாக்கப்பட்டது என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

அங்கே கலவரம் நடந்தது உண்மை. துப்பாக்கிச் சூடு நடந்தது உண்மை. காயம் 5 பேர்கள். அதில் 3 பேர் ஆதி திராவிடர் 2 பேர்கள் ஆதி திராவிடர் அல்லாத மற்றவர்கள். நான் கூட அந்த போலீஸ் ஸ்டேஷனை நேரில் சென்று பார்த்தேன். போலீஸ் ஸ்டேஷனில் ஒரு கண்ணாடி கூட உடையவில்லை. ஆனால் தவறான தகவல் கொடுத்து, ஒரு சமுதாய மக்களுக்கு தவறு செய்தது மட்டுமல்ல, உண்மைக்குப் புறம்பான ஒரு குறிப்பை அங்கே கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல 13—4—1981-ல் வெள்ளா கிராமத்தில் தாக்கப்பட்டது பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. தேவர்களும் ஆதி திராவிட மக்களும் வருஷப் பிறப்பு தினத்தன்று அங்கே கூடா அறுத்து சமைத்துக் கொண்டிருந்தார்கள். உணவு சாப்பிடுகிற போது இரண்டு இனத்தையும் சேர்ந்தவர்களை வெளியூரிலிருந்து வந்த சிலர் தாக்கினார்களே தவிர தேவர்களோ ஆதிதிராவிடர்களோ ஒருவரை யாருவர் தாக்கிக் கொள்ளவில்லை, அவர்கள் சண்டையிடவில்லை. அந்த ஊரில் ஆதிதிராவிடர்கள் தாக்கினார்கள் என்று சொல்வது உண்மைக்கு விரோதமானது.

அதுமட்டுமல்ல, 29—7-1981 அன்று தோளார் கிராமத்தில் கலவரம் நடைபெற்றது. அது பற்றி தவறாக தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம இதைக் கவனிக்க வேண்டும். அதில் 5 பெண்கள் உட்பட 23 ஆதிதிராவிடர்கள் காயமடைந்தார்கள். அங்கே கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு பேர் ஆதிதிராவிடர் 50 பேர் ஆதிதிராவிடர் அல்லாத மக்கள். ஆனால் உண்மை என்ன? சர்க்கரை என்ற அருந்ததி பெண்தான் அவமானப்படுத்தப்பட்டதாக சொன்னார்கள். ஆனால் அதற்குமாறாக வன்னியர் பெண் அவமானப்படுத்தப்பட்டாள் என்று இருக்கிறது. சர்க்கரை என்ற அருந்ததி பெண் தான் பஸ் ஸ்டான்டிலே அவமானப்படுத்தப்பட்டு, துணி இழுக்கப்பட்டது கிருஷ்ணமூர்த்தி என்பவரால். இது சம்பந்தமாக அந்த ஊரிலே பஞ்சாயத்து நடந்தது. 5 ரூபாய் அபராதம் போட்டார்கள். ஐர்க்காரர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அருந்ததி பெண் சர்க்கரைதான் அவமானப்படுத்தப்பட்டாள் என்று. ஆனால் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே வன்னியர் பெண் என்று சொல்லிருக்கிறார்கள். வன்னியர் பெண் அவ

மானப்படுத்தப்பட்டாள் என்றால் ஏன் 50 வன்னியர்கள் கைது செய்யப்பட வேண்டும்? ஏன் இரண்டு ஆதிதிராவிடர் மட்டும் கைது செய்யப்பட வேண்டும்? இதிலிருந்து பாதிக்கப்பட்ட பெண் ஆதி திராவிடர் வகுப்புஎன்று தெரிகிறது.

இந்தக் குறிப்பிலே கூட ஆதிதிராவிடர், ஜாதி இந்து என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறது ? ஆதிதிராவிடர்கள் என்றால் அவர்கள் இந்து இல்லையா ? அன்றைக்குக் கூட ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இனிமேல் நான் ஜாதி இந்துக்கள் என்று சொல்ல மாட்டேன் இந்த அமைச்சு சொல்லாது என் றார்கள். ஆனால் இன்றைக்கு இந்த குறிப்பிலே ஆதிதிராவிடர், ஜாதி இந்து என்று இருக்கிறது. என்ன காரணத்தால் இப்படி அச்சடிக்கப்பட்டிருக்கிறது ? அரசாங்கம் ஏன் இதை கவனிக்க வில்லை என்று தெரியவில்லை.

அதைப்போல வடாற்காடு, தர்மபுரிமாவட்டத்ங்களில், அங்கே ஒரு சில கலவரங்கள் இருந்திருக்கலாம். ஆனால் உண்மை என்ன ? அங்கே தொழிலாளர்கள் குறைந்த பட்ச கூலி வேண்டு மென்று கோரினார்கள். அது நீண்ட நாட்களாக மறுக்கப்பட்டு வந்தது. உண்மையிலே தவறு செய்தவர் யாராக இருந்தாலும் நம்முடைய காவல் துறையோ அரசாங்கமோ கடுமையான நட வடிக்கை எடுப்பதில் எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் சட்டம் போட்டு இத்தனை நாள் ஆகியும் அந்தச் சட்டம் அமுலாகவில்லை. அப்படியானால் அரசாங்கம் போட்டச் சட் டத்தை அவமானம் பண்ணியது நிலவுடைமையாளர்கள், முத லாளிகள்தான். அவர்கள் பேரில் அரசாங்கம் என்ன நட்வடிக்கை எடுத்திருக்கிறது ? அது சம்பந்தமாக இந்த ரிப்போர்ட்டில் தெளிவாக சொல்லப்படவில்லை. அதில் யாரெல்லாம் தவறு செய்தார்கள் என்று பார்க்கிறபோது அதிலேயெல்லாம் இந்த போலீசாரும் அரசாங்கமும் உண்மையை உணர்ந்து செயல் படவில்லையோ என்று நான் அஞ்ச வேண்டிருக்கிறது.

சேலம் ஜில்லாவில் கமலாபுரம் என்ற இடத்தில் பெருமாள் என்பவரின் மகன் கணேசன் உயிரோடு தீயிட்டு எறிக்கப்பட்டார் அப்படி உயிரோடு தீயிட்டு எரிக்கப்பட்டவர் சென்ற வாரம் தான் ஜெனரல் ஆஸ்பிடலில் சிகிச்சை பெற்று திரும்பியிருக்கிறார். அவர் அருந்ததி சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் ஒரு ஏக்கர் நிலம் வைத்து இருந்தார். அந்த நிலத்திற்கு அருகில் இருந்த முதலாளி அந்த ஒரு ஏக்கரை விலைக்கு கொடு என்று கேட்டார் கொடுக்க மறுத்தக்காரணத்திற்காக இப்படிஉயிரோடு கொளுத்தப் பட்டார். அது பற்றி எந்த விதமான நடவடிக்கையும் இது வரையில் எடுக்கப்படவில்லை. ஆனால் அந்தக் கலெக்டர் நல்ல வராக இருப்பதால் அவர் கடிதம் கொடுத்து ஜெனரல் ஆஸ்



பிடலுக்கு சிகிச்சைக்காக அனுப்பியிருக்கிறார். அவர் சென்ற வாரம் தான் டிஸ்சார்ஜ் ஆகிச் சென்று இருக்கிறார். இப்படிப் பட்ட நிலைமைகள் இருக்கின்றன.

அதைப் போலவே, செங்கற்பட்டு மாவட்டத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எடையாத்தூர் ஊரை விட்டு குடியேறி விட்ட, வெளியேறிவிட்ட ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த ஒருவன் வெள்ளரிக்காய் ஒன்றைத் திருடிவிட்டான் என்பதற்காக அந்த வெள்ளரிக்காயில் உள்ள விதைகளை எண்ணி, அதில் 750 விதைகள் இருந்தது என்பதற்காக அதற்குத் தண்டனையாக 750 ரூபாய் அபராதம் விதித்து இருக்கிறார்கள். இது குறித்து முதலமைச்சர் அவர்களிடம் கூட சொல்லப்பட்டது. நியாயம் வழங்கப்படும் என்று சொன்னார், ஆனால் இன்று வரையிலும் உண்மை மறுக்கப்பட்டு, அந்த மக்கள் பட்டினியாலும் பசியாலும் மடிந்து, ஏதோ செத்தவன் போக மற்றவர்கள் வீடு திரும்பி யிருக்கிறார்கள். இப்படி ஒரு பாதுகாப்பற்ற நிலையில் அந்த சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் இருக்கிறார்கள்.

மதுரை மாவட்டத்தில் மேலூர் தாலுக்காவில் மாரியப்பன் என்ற பி.ஏ. படித்த பையன் சைக்கிளில் போனான் என்பதற்காக அவனை அடித்து உதைத்து இருக்கிறார்கள். அதைப்பற்றி கேட்டால் அவன் மற்ற இனத்து பையனை அடித்தான் ஆகவே அவனை பிடித்துக் கொண்டு போலீஸ் நிலையம் போனோம் என் கிறார்கள். அந்தப் பையனைக் கேட்டால் சைக்கிளில் சென்றதற் காக அடித்ததாகச் சொல்கிறான்.. நான் போலீஸ் சூப்பிரண் டென்டிடம் சொன்னேன். அவரும் நியாயம் வழங்கப்படும் என்று சொன்னார். ஆனால் உண்மை மறைக்கப்பட்டு இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ராஜா என்ற அரிசன சகோ தரர் குலசேகரம் என்ற போலீஸ் நிலையத்தில் சென்ற ஆண்டு அழைத்துச் சென்று அடிக்கப்பட்டதால் மரணம் அடைந்து இருக்கிறான். இதையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் என்றால், நம்முடைய அரசாங்கத்திற்கு போலீஸ் சரியான தகவல் கொடுக்க வில்லை என்பதால் தான் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அதைப் போலவே, இராமநாதபுரம் கலவரங்களிலே முதலில் ஆதிதிராவிட பையன்கள் மற்ற சமுதாயப் பெண்ணை கேவலப் படுத்தியதால் தான் என்று காரணம் சொல்லப்பட்டது. ஆனால் நிலைமை என்னவென்றால், முதலில் ஆதிதிராவிட பெண்ணை மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கேவலப்படுத்தியதாகவும், பின்னர் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற சமு தாயப் பெண்ணைக் கேவலப் படுத்தியதாகவும் சொல்லப்படு

கிறது. இதில் 436 ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 36 பேர் ஆதிதிராவிடர் அல்லாத மக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது ஒரு தனிப்பட்டவரின் தகராறு. அதற்கு ஜாதி பெயர் சூட்டப்பட்டு பெரிய கலவரம் நடந்து விட்டது. இந்த இரண்டையும் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் இப்படி உண்மைக்கு மாறான தகவல்கள் தெரிவிக்கப் படுகின்றன. இந்த போக்கை அரசாங்கம் திருத்த வேண்டும்.

தற்போது ஆதி திராவிடர்களுக்கு என்று இந்த இலாகாவில் ஒதுக்கப்பட்டுள்ள 18 சதவிகிதம் கொடுக்கப்படவில்லை. அதைக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சந்தர்ப்பம் கொடுத்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. ஆர். [illegible]ரன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ** ** ** என்று சொல்லியிருக்கிறார்கள். அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

திரு. இ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களால் வைக்கப்பட்டு இருக்கின்ற காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நாட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, மக்களைப் பாதுகாத்து, சட்டங்களை நடைமுறைப்படுத்தி, நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும், பாதுகாப்பையும் ஏற்படுத்தும் கடமையை காவல் துறை செய்து வருகிறது. காவல் துறை அநியாயங்களின் புகலிடமாக இல்லாமல் நியாயத்தின் சிகரமாக அமைகின்ற அந்த அக்கறையோடும், பொறுப்புணர்ச்சியோடும் இந்த அரசு காவல் துறை சரியான முறையில் செயல்பட்டு வருகிறது. காவல் துறை

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மானியத்தின் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து கடுமையான கண்டனங்களும், விமர்சனங்களும் கிளம்பும் என்று எல்லோரும் எதிர்பார்த்த ஒன்றுதான். ஆனால், கடுமையான விமர்சனங்களைச் செய்வதும், விவகாரங்களைப் பெரிது படுத்துவதும், கண்டிப்பதும் எதிர்க்கட்சிகளின் வாடிக்கையான நிலைமை என்பதை இந்த விவாதத்தின் போது நம்மால் உணர முடிந்தது. சிலர் தங்களுடைய மன அரிப்பை அதன் மூலம் தீர்த்துக் கொண்டார்கள். சில நிகழ்ச்சிகளைப் பற்றி சிலர் அரசியல் வர்ணம் பூசி, தேறுதல் அடைந்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிற போது சற்று வீராவேசமாகப் பேசினார்கள். இந்த அரசு ராஜினாமா செய்ய வேண்டும் அல்லது காக்கிச் சட்டை அணிந்த போலீஸ் துறையினர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். நான் அவருடைய கவனத்திற்கு ஒன்றை கொண்டுவர விரும்புகிறேன். [illegible] கழக ஆட்சியில் நீதி விசாரணையில் ஒரு முறை நீதிபதி ஒருவர் ஒரு தீர்ப்பினை எழுதும் போது இது [illegible] ஒரு கரும்புள்ளி என்று சொன்னார். அப்படி அவர் தீர்ப்பிலும் எழுதி இருக்கிறார். ஆகவே அன்றைக்கு நீதிபதி கரும்புள்ளி என்று தீர்ப்பில் அறிவிக்கப்பட்டபோதே உங்களுக்கு ராஜினாமா செய்வதற்கான மான உணர்வு வரவில்லையே ஏன் என்று கேட்க விரும்புகிறேன். அல்லது அன்று உங்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த காக்கிச் சட்டை அணிந்த போலீஸ் துறையாவது அன்றைக்கு ராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வரவில்லையே என்று கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

அதேபோல நேற்றைய தினம் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு பல உறுப்பினர்கள் பேசினார்கள். அதிலே குறிப்பாக மாண்புமிகு திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது காவல் துறை தலையில்லாத முண்டம் என்று மொழிந்தார். அதை இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் மாண்புமிகு சித்தன் அவர்கள் பேசுகிறபோது வழி மொழிந்தார் நான் அவர்களுக்கு ஒன்றை நினைவுப்படுத்தவிரும்புகிறேன். இன்று தலையில்லாத துறை என்று வர்ணிக்கப்பட்ட அந்தக் காவல் துறைதான், அன்று நம்முடைய இன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், அன்றைய தினம் மாஜி பிரதமராக இருந்த போது, மதுரை வந்த நேரத்திலே அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது, பாதுகாப்பளித்து அவருடைய உயிரை

காப்பாற்ற வேண்டும் என்பதற்காக தங்களுடைய உயிரைக்
கொடுத்து, அவர்மீது பட்ட கல்லடிகளையும், தாக்குதல்களையும்
தாங்கிக் கொண்ட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்
தாலும், அவர் மீது பட்ட காயங்களும், அவர் சிந்திய ரத்தமும்
அவருக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கும். ஆனால் அதை
இன்று அவர் மறந்துவிட்டுப் பேசியிருக்கிறார் என்று குறிப்பிட
விரும்புகிறேன்.

கடந்த காலங்களில் காவல் துறை ஆளுவோரின் பகடைக்
காயாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது, இப்போது அந்த நிலைமை
மாறி சுதந்திரமாக செயல்பட்டு வருகிறது. உதாரணமாகச்
சொல்ல வேண்டுமானால் தமிழகத்தில் போலீஸ் துறையில்
டி.ஜி.பி.யாக பெரிய பதவியில் இருந்த திரு. அப்துல்லா
அவர்கள் ஓய்வு பெற்று போகிறபோது, ''இந்த
அரசு நிர்வாகத்தில் தலையீடு இல்லாத வகையில் சிறப்பாக
பணியாற்ற உதவியிருக்கிறது'' என்று பாராட்டிவிட்டுச் சென்று
இருக்கிறார்கள். பெரிய அதிகாரி ஒருவர், பதவியில் இருக்கும்
போது அல்ல, பதவியினை விட்டு ஓய்வு பெறும்போது பாராட்டு
கிறார் என்றால் எந்த அளவுக்கு உண்மையான நிலைமையில்,
நிர்வாகத் தலையீடு இல்லாமல் இருந்திருக்கிறது என்பதை
நான் இங்கே இந்த மன்றத்தின் வாயிலாக எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன்.

அதேபோல எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் பேசும்
போது பழி வாங்குவதற்கான நடவடிக்கைகளை அவர்கள்
எடுக்கிறார்கள் என்று குறிப்பிட்டுக் கூறினார்கள். வன்
முறையிலே ஈடுபட்டு மக்கள் நலனுக்கு ஊறுவிளைவிப்பவர்கள்
மீது புரட்சித் தலைவர் அவர்களின் கண்காணிப்பில் உள்ள
போலீஸ் துறை பழி வாங்குகிறது என்று சொன்னால், அதில்
எந்தவித வியப்பும் இருக்க முடியாது. சமூக விரோதிகள் ஒடுக்
கப்படவேண்டும் என்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடிய
ஒன்று. போராட்டங்கள் என்ற பெயராலே கடந்த காலங்களில்
ஆங்காங்கே நடைபெற்ற சில வன்முறைச் சம்பவங்களை
போலீஸ் துறையினர் கட்டுப்படுத்தி வந்ததை, பாராட்ட வேண்
டும், அதை பழி வாங்கும் நடவடிக்கை என்று எடுத்துக் கொள்ளக்
கூடாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழக காவல் துறையானது இந்தியாவிலேயே வேறு எந்த
மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு மிகச் சிறப்பான முறையிலே
திறமையோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்று சொன்
னால் அது மிகையாகாது. சிலை திருட்டை எடுத்துக் கொண்
டால், கோவையிலே இராமநாதபுரம் கிராமத்திலே 5 இலட்ச
ரூபாய் பெறுமானமுள்ள பஞ்சலோக சிலைகள் களவாடப்பட்ட
போது, அந்தச் சிலையை திருடியவர்களை, கேரளாவில் உள்ள



கொழிஞ்சன்பாறை காவல் நிலைய எல்லைக்குள் சென்று கைது
செய்து வந்து, அவர்களுக்கு 9 மாத கடுங்காவல் தண்டனையை
வாங்கித் தந்திருக்கிறார்கள்.

அதே போல வட ஆற்காடு மாவட்டத்தில் விரிஞ்சாபுரம்
விவசாய கூட்டுறவு வங்கியில் அந்தச் சங்கத்தினுடைய கதவுகளை
எல்லாம் உடைத்து எறிந்து உள்ளே புகுந்து 1 இலட்சத்து
78 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகளை களவாடிச் சென்று
இருக்கிறார்கள். அப்படி களவாடியவர்களைக கண்டு பிடித்து
கைது செய்து, அவர்களுக்கு 18 மாதங்கள், 6 மாதங்கள் என்று
கடுங்காவல் தண்டனையை வாங்கித் தந்திருக்கிறது நமது
காவல் துறை.

அதே போல 1979 ஆம் ஆண்டு தஞ்சையிலே புஞ்சம் என்ற
கிராமத்தில் உள்ள ஈஸ்வரன் ஆலயத்தில் 8 பஞ்ச லோக சிலைகள்
கடத்தப்பட்டன. அப்படிக் கடத்தப்பட்ட அந்தச் சிலைகள்
பம்பாய்க்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கேயிருந்து லண்டனுக்கு
கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. சர்வதேச குற்றஇயல்
காவல் துறையின் உதவியோடு அதைக் கண்டு பிடித்து, அந்தச்
சிலைகளை தமிழகத்திற்கு கொண்டு வருகிற வகையில் நட
வடிக்கைகளை நம்முடைய காவல் துறை மேற்கொண்டிருக்கிறது.

அதே போல பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர், மேற்கு
வங்க மாநிலத்தைச் சேர்ந்த ஒருவரைக் கூட்டு சேர்த்துக்
கொண்டு, பீகார் மாநிலத்தில் ஒரு காரை திருடி எடுத்துக்
கொண்டு, நம்முடைய மாநிலத்தில் உள்ள சேலம் மாவட்டத்திற்கு
வந்து, அங்கே ஓமலூர் பக்கத்தில் உள்ள பொறியியல் கல்லூ
யின் உள்ளே புகுந்து ஏறத்தாழ 1 இலட்சம் பெறுமானம் உள்ள
கருவிகளைத் திருடி விட்டு, ஆந்திர மாநிலத்திற்கு ஓடிவிட்டார்
கள்.

பல புலனாய்வுகளுக்குப் பிறகு ஆந்திரா மாநிலத்திலே உள்ள
தக்கலை என்ற கிராமத்திலே காரோடும் களவாடிய பொருட்
களோடும் அவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கு
தொடரப்பட்டிருக்கின்றது. ஆகவே இது போல் பல குற்றங்
களைக் காவல் துறை மிகச் சிறப்பாகக் கண்டு பிடித்திருப்பதை
இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து 1981–82 ஆம் ஆண்டைப் பொறுத்த வரையிலே
சென்னை நகரிலே சட்டம் ஒழுங்கு நல்ல நிலைமையில் பாது
காக்கப்பட்டு வருகின்றது. ஆகவே திருட்டப்பட்ட சொத்துக்கள்
பொருட்கள் ஆகியவற்றைப் பொறுத்த வரையிலே ஏறத்தாழ
70 சதவீதம் இன்றைக்கு துப்பு துலக்கப்பட்டு பொருட்கள்
கைப்பற்றப்பெற்று வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை
நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. கி. அன்பழகன்] [1982 மார்ச் 23

சிந்தாதிரிப்பேட்டையில் 4—2—1981 அன்று இரவு ஒரு வீட்டிலே 1½ இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகள் திருடப் பட்டன. ஆனால் அது திருடப்பட்ட 6 மணி நேரத்திற்குள் அத்தனைப் பொருட்களும் மீட்கப்பட்டன. அதே போன்று சென்னை மாநகரிலே லிங்கிச் செட்டித் தெருவில் மகிலேஸ்வரர் ஆலயத்தில் களவு போன சுமார் 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சிலை களவாடப்பட்ட 3 நாட்களில் காவல் துறையினரால் களவாடியவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இங்குமங்குமாக நடந்த தங்கச் சங்கிலிகள் அறுக்கும் நிகழ்ச்சிகளையொட்டி 4 கும்பல்களைப் பிடித்து அவர்களிடம் இருந்து சொத்துக்கள் மீட்கப்பட்டு நீதிமன்றத்திலே வழக்குகள் நடைபெற்று வருகின்றது. இவைகள் எல்லாம் காவல் துறை யினரின் பெருமைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினை. நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் தீவிர வாதிகளைப் பற்றிப் பேசினார்கள். தீவிரவாதிகளை இந்த அரசு பழி வாங்குகிறது என்றும், சுட்டுக் கொல்கிறது என்றும் சொன்னார்கள். தங்களுக்கு உரிமை வேண்டும் என்பதற்காக மற்றவர்களின் உரிமைகளையும், உடைமைகளையும், உயிரையும் பறிப்பது என்பது எந்த அளவுக்கு நியாயமானது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் தீவிரவாதிகளின் ஆணவ செயல்கள் மூலமாகவும் அக்கிரமங்களின் மூலமாகவும் கொடுமைகள் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது தவறு என்று சொல்வது எந்த வகையில் நியாயம் என்பது எனக்குப் புரியவில்லை.

1973–74 ஆம் ஆண்டு காவல் துறையின் மானியக் கோரிக்கை யின் மீது விவாதம் நடைபெற்றபோது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் அந்த அரசின் காவல்துறையினர் எந்த அளவுக்குச் சிறப்பாக் இருக்கின்றது என்பதற்கு உதாரணம் சொல்கின்ற போது, இந்த மாநிலத்தில் நக்ஸலைட்டுகள் முளை விட்ட நேரத்திலே அவற்றை நசுக்கி புல் முளைக்கச் செய்தவர்கள் நம்முடைய காவல் துறையினர்'' என்று சொன்னார்கள். அப்படி இந்த இயக்கத்தை முளை விடாமலேயே செய்தவர்கள் இன்று அது பெரிதாக வளர்ந்து அதனால் பல பேர் பாதிக்கப்பட்டதற் குப் பிறகும் இந்த அரசு நடவடிக்கை எடுத்து அடக்கியதை எப்படி பழி வாங்குகிறது என்று சொல்கிறார்கள் என்பது புரிய வில்லை. அப்படிச் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. அவர் கள் மீது நடவடிக்கை எடுப்பது தவறா ? இது போலீஸ் அராஜகமா ? இது போலீஸ் அட்டூழியமா ? இது பற்றி நிச்சய மாக உணர வேண்டும்.



1982 மார்ச் 23] [திரு. கி. அன்பழகன்]

அது மட்டுமல்ல அந்தப் பகுதியிலே எந்த அளவுக்கு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களால் யார் யார் பாதிக்கப்பட்டார்கள் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் பெரிய மிட்டா மிராசுதார்களைத் தாக்கவில்லை. சாதாரண அப்பாவி மக்களைத் தாக்கினார்கள். தர்மபுரி மாவட்டத்திலே அப்படித் தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டவர்களில் ஒருவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். திருப்பத்தூர் பகுதியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த பலபேர் தாக்கப்பட்டு கொல்லப்படிருக்கிறார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம் அந்தப் பகுதியிலே எப்படிப்பட்ட நிலைமை இருந்தது என்பதைச் சொல்வதற்காகத்தான். அந்த நேரத்திலே காவல் துறையினர் தங்களுடைய உயிர்களையும் பொருட்படுத்தாமல் கடமையைச் சிறப்பாகச் செய்ததற்காகப் பாராட்டுவதை விட்டுவிட்டு அவர்கள் மீது பழி சொல்வது எந்த அளவுக்கு நியாயம் என்பதை நாம் உணர வேண்டும். இன்றைக்கு காவல் துறையைச் சார்ந்த வர்கள் பலர் தாக்குதலுக்கு ஆளாகிறார்கள். கொல்லப்படு கிறார்கள். ஆனால் அந்த நிலையிலேயும் அவர்கள் இத்தகைய தியாக உணர்வோடும் கடமை உணர்வோடும் பணியாற்றுகிறார் கள் என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையில் சில இடங்களில் சிலர் தவறு செய்திருக்க லாம். குறைகள் இருக்கலாம், இல்லை என்று சொல்லவில்லை. அப்படிப்பட்ட குறைகளைச் செய்வதை திருத்துவதற்கு அரசு முனைய வேண்டும். ஆனால் இன்றைக்கு காவல் துறையைப் பொறுத்த வரை மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கத்தக்க அளவுக்கு அவர்கள் பணியாற்றுகிறார்கள். அவ்வாறு பணிபுரிகிற காவல் துறைக்கு புரட்சித் தலைவர் அவர்கள் தான் பாதுகாவலராக இருக்கிறார்கள். அவர் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் காவல் துறையிலே இருப்பவர்களுக்கு சம்பள உயர்வுகள, சிறப்பு ஊதியங்கள் மற்றய அலவன்ஸ்கள் எல்லாம் உயர்த்தப்பட்டது. மலிவு விலையிலே அவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அவர்கள் வீட்டுவசதி திட்டத்தில் மூலம் வீடு பெறுவதற்குரிய வாய்ப்பை இந்த அரசு தான் தந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12.30]

இன்று போலீஸ்காரர்களுக்கு உரிமைகளைப் பெறுகிறவகையில் சங்கம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. காவல் துறையைப் பொறுத்த வரையில் இந்த அரசுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களுக்கும் காவல் தெய்வமாக புரட்சித் தலைவர் இருந்து வருகிறார் என்று எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்,

அதே போல் இன்று நாட்டிலே நடைபெறுகிற வன்முறைகள் வன்முறைச் செயல்கள், பஸ்களை கொளுத்துதல், அரசாங்கச் சொத்துக்களை நாசப்படுத்துதல், அரசு சொத்துக்கள் அழிக்கப் படுவது போன்றவற்றை ஒடுக்குவதற்கு காவல் துறையினர் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் உண்மையைச் சொல்லாமல் கற்பனை வளத்தோடு, களங்கத்தை பூசுகிற அளவிற்கு, மக்கள் மனதில் தீய எண்ணங்களை எதிரொலித்துக் கொண்டிருக்கிற பத்திரிகைகளைக் கூட கண்காணித்து நாட்டு மக்களுக்கு ஒரு அமைதியான முறையில் வாழ அவர்களுக்கு பாதுகாப்பை தேடித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறையினர் அதைக் கண்காணிக்க வேண்டும்.

அடுத்து, என் தொகுதியைப் பொறுத்த வரையில் அங்கு புதிதாக ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாநிலத்திலுள்ள பல தீ அணைப்பு நிலையங்களிலும் பல என்ஜின்கள் பழுதடைந்திருக்கின்றன, பல வாகனங்கள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. எனவே அவற்றை எலலாம் மாற்றி நவீன முறையில புதிய வாகனங்களை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாட்ராம்பள்ளியில் புதிதாக ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து பாராட்டி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. ஜி. மூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்வது என் கடமையென்று நினைக்கிறேன். இன்று அரசாங்கத்தில் நீதித்துறை, நிர்வாகத்துறை என்பவை தனித்தனியாக இயங்கி வந்தாலும் காவல் துறை என்பது ஒரு ஆட்சிக்கு நல்ல பெயரையோ அல்லது கெட்ட பெயரையோ ஏற்படுத்தித் தருவதில் அவர்கள் 50 சதவிகிதம், 60 சதவிகிதம் பொறுப்பாகி விடுகிறார்கள். அவர்கள் செயல்படக்கூடிய முறையில்தான் இன்று தமிழகத்தை பொறுத்து நிலமைகளை உருவாக்க முடியும் என்ற ஒரு சிந்தனையோடு இந்தத் துறையைச் சார்ந்தவர்கள் அவர்களுடைய துறையை நடத்திச் செல்ல வேண்டும் என்ற என் வேண்டுகோளை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்,



(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

காவல் துறை பல ஆட்சிகளின் கீழ் இருந்ததைப் போல் தான் இந்த ஆட்சியிலும் இருந்து கொண்டிருக்கிறது என்பதை தமிழகம் உணர்ந்திருக்கிறது. பல ஆட்சிகள் தமிழகத்தில் நடந்துகொண்டிருந்தபோது காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அவர்கள் கடமையை ஆற்றவிடாமல் கூட தடுந்திருந்த காலம் உண்டு. அரசாங்கத்தை ஆளுகிறவர்கள், சர்க்காரைச் சேர்ந்தவர்கள் இதை நினைத்து இப்படிச் செய்ய வேண்டும் என்று ஆலோசனைகள் வழங்கினால் கூட அதை ஆணையாக ஏற்று செயல்பட்ட காலம் கூட உண்டு. ஆனால் இன்றுள்ள தமிழக அரசைப் பொறுத்தவரையில் —காவல் துறை மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல், சுதந்திர எண்ணத்தில் இன்று செயல்பட்டுக் கொண்டிருப்பதை அவர்கள் உணருவார்கள் என்று கருதுகிறேன். குறிப்பாக ஆளுகிற இயக்கத்தைச் சார்ந்தவர்களும் இந்த நாட்டின் அரசியல் தலைவர்களும் எந்தவிதத்திலும் காவல் துறையைக் கட்டுப்படுத்த முன்வருவது கிடையாது. காரணம், இன்றைக்கு அந்தத் துறை சுதந்திரமாகக் செயல்பட வேண்டும் என்று நாம் பல காலமாக விரும்பினோம். அது இன்று நடைமுறைப்படுத்தப்படுகிறது. இன்று காவல் துறை சுதந்திரமாக செயல் பட்டுக் கொண்டுவருகிறது. எங்களைப் போன்றவர்கள் கூட ஏதாவது ஒரு விவகாரத்தில் காவல் துறையினரிடம் செல்வோமானால் அதில் நியாயம் இல்லை என்று தெரிகிற போது அதை எடுத்துக்கொள்ள முடியாது அதை கருத்தில் கொள்ள முடியாது என்கிறார்கள். நான் அவர்களை நிச்சயமாகப் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட நிலையை எல்லாத் துறைகளிலும் காவலர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற என் வேண்டுகோளை இந்தநேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தை, சார்ந்த திரு. துரை முருகன் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். காவல் துறை இன்று அராஜகமான முறையில் செயல்படுகிறது. சர்வாதிகார முறையில் செயல் படுகிறது. சட்டத்திற்குப் புறம்பாக செயல்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள்என்றெல்லாம் குற்றஞ்சாட்டினார்கள். நான் அவர்களிடம் மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக போலீஸ் இன்றைக்கு சட்டத்திற்கும் மனசாட்சிக்கும் விரோதமாக நடைபெறுகிறது என்பது உண்மை என்று சொன்னால் அதை உங்களால் நிரூபித்துக் காட்ட முடியும் என்று சொன்னால் இன்று உங்களிடம் ஒரு விளக்கம் கேட்க ஆசைப் படுகிறேன்.

பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், தமிழகத்திற்கு வருகை தந்த போது, அந்த அம்மையார் உயிர் கேள்விக்குறியாக இருந்தது. அந்த நேரத்தில் அவர்கள் திரும்பிப் போவார்களா, மீண்டும் டெல்லிக்குப் போவார்களா என்று ஏற்பட்ட, அப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் அந்த அம்மையாரைப் காப்பாற்றி, பொறுப்பு-உணர்ச்சி யோடு டெல்லிக்கு அனுப்பிவைத்தது இந்த போலீஸ் துறைதான். இன்றைக்கு நான் காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அன்றைக்கு போலீஸ் துறையினர் பொறுப்புணர்ச்சியோடு நடக்கவில்லை யென்றால், இப்பேர் பட்ட ஒரு பிரதமர் இந்த நாட்டிற்கு கிடைத்திருக்க மாட்டார் கள்; அப்பேர்ப்பட்ட பிரதமரை பார்த்திருக்க முடியாது. அப் பேர்பட்ட ஒரு பயங்கரமான சூழ்நிலை இருந்தது. நமது புரட்சித் தலைவர் கீழுள்ள இந்த காவல் துறையினர், அந்த அம்மையார் அவர்களை காப்பாற்றி, டெல்லிக்கு வழியனுப்பி வைத்த பெருமை, அந்தத் துறைக்குச் சாரும் என்பதை காங்கிரஸ் கட்சியினருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

* * * * *

திரு. அ, ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மன்ற உறுப்பினர் நண்பர் துரைமுருகன் தற்போது பேரவைத் தலைவர் இருக்கையில் உள்ளார். அங்கு அமர்ந்து கொண்டி ருக்கையில், அவர் மீது இந்த மன்றத்தில் சாட்டப்படுகின்ற குற்றச்சாட்டுகளுக்கு அவரால் பதிலளிக்க இயலாது..........

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் : (திரு. துரை முருகன்): நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த வன் என்றாலும், இந்த இடத்தில் அமர்ந்த பிறகு கட்சி மாச்சரியங்களை மறந்து விட்டு செயல்படுவது உணர்ந்து மாண்புமிகு உறுப்பினர் அவ்வாறு பேசுவது சரியல்ல.

திரு. ஜி. முர்த்தி :

* * * * *

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): ''யு ஆர் கோயிங் பியான்ட் யுவர் லிமிட்''. பேர வைத் தலைவரின் இருக்கையில் உட்கார்ந்திருப்பவரைப் பற்றி பேசுவது அவை மரபல்ல. எனவே, அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

---

** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, இன்றைக்கு காவல் துறையைப் பொறுத்த வரையில் அப்பேர்பட்ட குற்றச் சாட்டுகளைச் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்த வரையில். குறிப் பாக, கடமையுணர்ச்சியோடு அவர்கள் தங்கள் கடமையை ஆற்றியிருக்காவிட்டால், தமிழக அரசியலிலே பெரிய மாற்றமே ஏற்பட்டிருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வது என் கடமை.

மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் காவல் துறையைப் பற்றி குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நான் அவைகளை ஏற்றுக் கொள்ளத் தயரராக இருக்கிறேன். ஆனால், ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். காவல் துறையிலே இருக்கின்ற மேல் அதிகாரியிலிருந்து, அடிமட்ட கான்ஸ்டபிள் வரை இந்தத் தவறை செய்கிறார்களா என்பதை உணர்ச்சி பூர்வமாக பார்க்கவேண்டும். காரணம், இந்தத் துறையை பொறுத்த வரை யாரோ ஒரு இடத்தில் செய்கிற தவறு, அந்தத் துறையை, டிபார்ட்மென்ட்டை களங்கப்படுத்துகின்ற அளவுக்கு இன்றைக்கு தமிழகத்திலே நிலைமை உருவாகிக் கொண்டிருக் கிறது. இதற்கு என்ன காரணம்? அந்தத் துறை, இந்தத் தமிழகத்தைப் பொறுத்த வரையில், சிறப்பான முறையிலே, கடமையுணர்ச்சியோடு செயல்படுகின்றது என்று, அந்தத் துறை யில் பெரிய பொறுப்பிலே இருந்தவரே பாராட்டிச் சென்றிருக்கிறார். இதை நான் இந்த நேரத்திலே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும், மன்ற உறுப்பினர்கள் கூறிய அந்தக் குற்றச் சாட்டுக்களை. குறைகளை நம்முடைய காவல் துறையினர் அவற்றை நீக்குவதற்கு தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அது மாத்திரமல்ல, பல இடங்களிலே சாதிக் கலவரங்கள் நடைபெறுகின்றன. சாதிக் கலவ்ரங்கள் பெயரால் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் பழிவாங்கப்படுகிறது என்பதை காவல் துறையினர் உணரவேண்டும். இரண்டு பேர்கள் அடித்துக் கொள்கிறார்கள் என்றால் அடிபட்டவரை மருத்துவ மனை யில் சேர்த்துவிட்டு அடித்தவர் மீது வழக்குப்போடுவதை நாம் எல்லாம் நியாயம் என்று ஏற்றுக்கொள்ளுகிறோம். நான் காவல் துறையினரைக் கேட்டுக் கொள்வது சாதிக் கலவர விவகா ரங்களில் அந்த சமுதாய அமைப்பினைச் சிந்தித்துப் பார்த்து செயல்படவேண்டுமென்பதுதான்.

பல நேரங்களிலே குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் எந்த நிலையிலும் மற்ற சமுதாயத்தினர் மீது தாக்குவதற்கோ அடிப்பதற்கோ முதன் முறையாயாகவோ அல்லது மொத்தமாகவோ சேர்ந்து கொண்டு செய்கிற தைரியம், துணிச்சல் அந்த சமுதாயத்திற்குக் கிடையாது. தங்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறபோது பொங்கியெழுகின்றபோது அவர்கள் தங்கள் மான உணர்வை பாதுகாத்துக்கொள்கிறபோது, கூட்டமாகக் கூடுகிறபோது அந்தக் கூட்டத்தை அடக்குவதற்கு காவல்துறையினர் முனைகிற போது அந்த சமுதாயத்தின் அடிப்படையையும் அமைப்பினையும் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் கலவரத்திலே நடைபெற்ற விவகாரம், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சாதி இந்துப் பெண்களைக் கிண்டல் செய்தார்கள் என்று ரிப்போர்ட் இருக்கிறது. ஆனால் அந்த விவகாரமே ஏற்கனவே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை கிண்டல் செய்த காரணத்தினாலே அவர்கள் அதற்கு மாற்றாகச் செய்கிறபோது அதைத் தான் எடுத்துக் கொள்கிறார்களே தவிர முன்னாலே நடந்ததை காவல் துறையினர் எடுத்துக்கொள்ளவதில்லை.

இந்தச் சமுதாயத்திலே தூண்டிவிடுகின்ற அமைப்புகள் இருக்கின்றன. ஆர். எஸ்.எஸ். போன்ற இயக்கங்கள் இனக் கலவரங்களைத் தூண்டிவிடுகிற நிலைமை இருக்கிறது என்பதைக் காவல் துறையினர் கவனத்திலே கொண்டு காவல் துறையினர் அதற்காகத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு அப்பேர்பட்ட அமைப்புகள் பள்ளிக்கூடங்களிலே மட்டுமல்ல, கோர்ட் மைதானங்களிலே கூட டிரெயினிங் எடுக்கிறார்கள் அதை அனுமதிக்கக் கூடாது. இன உணர்வை தூண்டிவிடுகிற அமைப்புகளை தடுத்து நிறுத்துவதற்கு காவல் துறையினர் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு கே. தனுக்கோடித் தேவர் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற காவல் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக என்னைப் பேச அனுமதித்ததற்காக நான் நன்றி கூறி இன்றைக்கு காவல் துறையைப் பொறுத்தவரையில்—பெரியவர்கள் சொல்வார்கள், நூற்றைக் கெடுத்ததாம் குருணி என்று—அதைப்போல அதிகாரிகள் செய்த தவறுகளின் காரணத்தினாலே சில குற்றங்கள் சாட்டப்படுகின்றன. தமிழகத்தைப் பொறுத்த



வரையில் காவல் துறை அதிகாரிகளுக்கு அவர்களுடைய குடும்பங்களுக்கு அரசு அவர்களுடைய வாழ்க்கையில் அவர்கள் ஆற்றுகிற பணிக்காக தகுந்த முறையில் நல்ல சலுகைகளைச் செய்து இருக்கிறது. அது வரவேற்கத்தக்க விஷயம். அதை வரவேற்க வேண்டிய காலகட்டத்திலே இருந்தாலும் காவல் துறை அதிகாரிகளுடைய கவனம் —சில அதிகாரிகள் இருக்கிறார்கள், அவர்களிடம் சில தவறுகள் இருக்கின்றன--ஏற்கெனவே எந்த நிலையில் இருந்ததோ அந்தப் பாணியிலேயே நடந்து கொண்டு வருகின்ற சில அதிகாரிகள் இருக்கிறார்கள், அவர்களைக் கண்காணிப்பதற்கு தட்டிக் கேட்பதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். இந்த நிலையை துறை அதிகாரிகள், 'வேலியே பயிரை மேய்ந்ததைப்' போல சில இடங்களில் செய்கிறார்கள். அதிலே பாதிக்கப்படுகிறவர்கள் பெரும் பகுதியினர் வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிறவர்கள் தான் அவர்களிடத்தில் சிக்கிக் கொள்கிறார்கள். காவல் துறை அதிகாரிகளின் சில பேர்களின் வெறித்தனமான காரியங்களை தடுத்து நிறுத்துவதற்கு தவறுகிறார்கள். ஆகவே அவர்களுடைய நடவடிக்கைகளில் ஒரு மாறுதல் ஏற்படவேண்டும். தவறு செய்கிறவர்களை தண்டிக்க சட்டம் கொடுத்திருக்கிறார்கள். காவல் துறையினரின் கவனக்குறைவால் சிறு சிறு சம்பவங்கள் நடக்கிற இடத்திலே அதைத்தடுப்பதற்கு தவறிவிடுவதால் அது பெரிய அளவில் வந்து விடுகிறது என்பது நான் கண்டறிந்த உண்மை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முகவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரசியல் சூழ்ச்சி காரணமாக அது ஒரு பழி வாங்கப்பட்ட ஏரியா. காவல் அதிகாரிகளின் கவனக்குறைவால், அரசியல்வாதிகளின் குறுக்கீடுகளால் சில சம்பவங்கள் சில ஆண்டுகளுக்கு முன் நடந்து விட்டன. இது நாடறிந்த உண்மை. அது சாதி கலவரமல்ல, அரசியல் கலவரம் தான் என்பதை நான் கூறிக் கொள்கிறேன். அந்த நிலையை மீண்டும் சில அதிகாரிகள் இந்த அரசின் மீது தவறான எண்ணத்தை பரப்ப வேண்டுமென்ற எண்ணத்தோடு, அப்போது இருந்த அதிகாரிகளே இப்போது இருக்கிறதால், அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். காக்கி சட்டை அணிந்திருக்கிறோம் என்பதை மறந்து அவர்கள் அரசியல்வாதிகளாக நடமாடி வருகிறார்கள். அவர்கள் அதிகார துஷ்பிரயோகத்தை மறந்து அவர்கள் கடமையுணர்வோடு கடமையாற்ற வேண்டும். நீதியை நிலைநாட்டுகிற அந்த அதிகாரிகள், நீதியின் பெயரால் இந்த தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நமக்கு சகோதர, சகோதரிகள் என்ற எண்ணத்தோடு அவர்கள் பணியாற்ற வேண்டும். அந்த எண்ணம் அந்தத்துறை அதிகாரிகளுக்கு வரவேண்டுமென்பதால் தான் இரவு பகலாக அவர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதால் தான் தமிழக அரசு அவர்களுக்கு பல சலுகைகளைத்தந்திருக்கிறார்கள் ஆனால் சில அதிகாரிகள் தவறு செய்து விடுவதால், நான் ஏத்

கெனவே சொன்னதை போல, 'நூற்றைக் கெடுத்ததாம் குறுணி. என்பது போல அனைவருக்கும் ஒரு கெட்ட பெயர் வந்து விடுகிறது தவறு செய்பவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுத்தால் தான் இந்த நிலை மாறும் என்பதை கூறிக்கொள்கிறேன்,

குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் மூர்த்தி இராமநாதபுரம் மாவட்டம் பற்றிச்சொன்னார்கள். அவருக்கு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். அங்கே கலவரம் எந்தச்சூழ்நிலையில், எப்படி நடந்தது என்பது நாங்கள் அந்த மாவட்டத்திலே இருக்கிறதால் நன்றாகத்தெரியும், அவ்வளவு பெரிய .மோதல் ஏற்பட்டும் கூட அங்கு அமைதியை ஏற்படுத்தியிருக்கிறோம். பாதயாத்திரை சென்று அங்கே இருக்கிற இரண்டு பிரிவினர்களிடத்திலும் பெருத்த ஒற்றுமையை ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த நிலை உறுப்பினர் அவர்களுக்குத்தெரியாது. சென்னையிலே அவர் வாழ்கிற காரணத்தால், யாரோ.ஒரு சிலர் அளித்த தவறான தகவல்கள் அடிப்படையிலே மீண்டும் இது போன்ற பிரச்சினையை சொல்லியிருக்கிறார். அவர் தன்னுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்வார் என்று நினைக்கிறேன். அவருக்குச்சந்தேகம் இருந்தால் என்னுடன் வந்தால் அங்கு மக்களிடத்திலே எப்படி ஒற்றுமையை ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதை காட்டுகிறேன். ஆகவே உறுப்பினர் அவர்கள் மறந்த அந்த நிகழ்ச்சியை மீண்டும், மீண்டும் துருவ வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12—50)

ஆகையால், இங்கே நம்முடைய அரசு, நம்முடைய முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையில் போலிசாருடைய சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதுடன் மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் சில குறிப்பிட்ட நேரங்களில் போவதற்கு கார் போன்ற வாகனங்கள் இல்லாத காரணத்தினால், சில நேரங்களில், அவர்களை அணுகும் போது, அவர்களால் செல்ல முடியவில்லை. ஆகவே, சில தவறுகள் நடப்பதைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது, ஆகவே, பெரிய ஸ்டேஷன்கள் இருக்கும் இடத்திற்கு வாகனங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அறிக்கையில் அவர்களுக்கு மீண்டும் ஒரு சில சலுகைகளைத் தமிழக முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன் அவர்கள் பணியாற்றும்போது இரவு பகல் என்று பார்ப்பதில்லையென்ற காரணத்தால், காவல் அதிகாரிகளுக்குச் சலுகைகள் தருவது நியாயம்தான். அந்தச் சலுகைகளுக்கேற்ற வகையில் அவர்கள் கடமை தவறாமல் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்,



திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் இந்த மன்றத்திலே சமர்ப்பித்திருக்கிற காவல் துறை, தீயணைப்புத் துறை யானியக் கோரிக்கைகளிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு தந்ததற்கு முதற்கண் நன்றி தெரிவித்து, என்னுடைய கருத்தைச் சொல்ல முன்வருகிறேன். இந்த மாநிலத்திலே இருக்கிற காவல் துறை வெகு சிறப்பாகச் .செயல்படுகிறது என்பதனை ஆளும் தரப்பிலே இருக்கிற நாங்கள் சொல்வதைவிட எப்போதுமே பாராட்டாத அருமை நண்பர் துரைமுருகன் வேலூரிலே நடைபெற்ற வழிப்பறி கொள்ளை வழக்கில், பீகாருக்குப்போய், பாஷை தெரியாத, மொழி தெரியாத மாநிலத்திற்குப் போய், இந்த மாநிலத்தைச் சேர்ந்த காவல் துறையினர் போய் குற்றவாளிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்று சொல்லியிருப்பது இந்தத் துறை ஆற்றுகிற பணிக்குச் சாட்சியாக இருக்கிறது. இந்தத் துறை மட்டுமல்ல, இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், இந்த மாநிலத்திலே ஒவ்வொரு முறையும் பிரச்சினைகள், கலவரங்கள் எழுகின்றபோது , கலவரங்கள் தொடங்குகின்றபொழுது, ஒவ்வொரு தடவையிலும் எப்படியெல்லாம் கண்ணும் கருத்துடனும், காரியங்களை ஆற்றுகிறார்கள் ; எதிர்க்கட்சிகள் என்ற பேதங்கள் இல்லை, எதிர்க்கட்சித் தலைவர்கள் என்ற பேதங்கள் இல்லை அந்தப் பாகுபாடில்லை என்ற முறையிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்ததன் விளைவுதான், ஓரளவுக்குத் துரைமுருகன் அவர்கள் கூட இந்தத் துறையைப் பாராட்டி இருக்கிறார்கள் என்ற கருத்தை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

பல்வேறு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள், பல இலட்சம் மக்கள் கூடிய தமிழ் மாநாட்டிலே எந்தவித சிறு பிரச்சினை இல்லாமல் மாநாடு நடப்பதற்குக் காவல் துறை உதவி செய்திருக்கிறது என்று. அது மட்டுமல்ல, ஆளுங்கட்சி நடத்திய நிகழ்ச்சி என்ற காரணத்திற்காக மட்டுமல்ல, சமீபத்திலே எதிர்க்கட்சித் தலைவர் தொடங்கிய நடைபயணத்திற்குக் கூட எவ்வளவு சிறப்பான பாதுகாப்பை காவல் துறையினர் கொடுத்தார்கள் என்பதும், அதே போல், இராமநாதபுரம் என்கிற ஊரிலே எதிர்க்கட்சித் தலைவர் மீது உளி வீசப்பட்டது என்ற செய்தி வந்தபொழுது, எதிர்க்கட்சி, எதிர்க்கட்சித் தலைவர் என்ற பேதங்கள் காணாது, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற வகையிலே, இந்தத் துறையிலே இருந்து ஒரு தனி செக்யூரிட்டி ஆபீசர் நியமிக்கிறோம் என்ற அளவுக்கு தாயுள்ளம் கொண்ட அளவிலே புரட்சித் தலைவர் அவர்கள் நியமித்தார்கள். என்ன காரணத்தினாலோ தெரியவில்லை

அதை ஏற்றுக் கொள்கிற மனப்பக்குவம் இல்லாமல் போய் விட்டது. அல்லது என்ன காரணத்திற்காக வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள் என்று தெரியவில்லை. பேதங்கள் இல்லா நிலையில் செயல்படுகிறது அரசு என்பதை நான் சொல்வதற்குக் காரணம், எதிர்க்கட்சியைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாத, ஆட்சி நடத்துகின்ற புனிதத் தலைவர், தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் முதலமைச்சர் பொறுப்பிலே இருக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான்.

அதேபோல், கலவரங்கள் நடக்கின்றன என்றாலுங்கூட, போராட்டம் என்றாலுங்கூட அவைகளை நேரிலே சென்று கவனிக்க வேண்டுமென்ற தத்துவத்தைக் கடைபிடித்து புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டு வருகிறார்கள். மற்றவர்களைப் போல் இரும்புக் கரங்களைக் கொண்டு நசுக்குவேன், இரும்புக் கரத்தால் அழிப்பேன் என்கின்ற வார்த்தையை இந்த முதலமைச்சர் வந்த நாளிலேயிருந்து, இந்த 4 ஆண்டுக் காலம் பொறுப்பிலே இருக்கும்போது, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எங்காவது சொல்லியிருப்பார்களா என்பதை மாமன்றஉறுப்பினர்கள் நினைவுகூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, திருப்பத்தூரிலே கலவரம், நக்சல்பாரிகள் பிரச்சினை, கலவரம் என்று சொல்லும்போது, காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அங்கே குண்டு வீசப்பட்டது என்று சொன்னபோதுகூட, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அந்தக் குண்டைப்பற்றி எண்ணிடவில்லை. அந்தக் குண்டை வைத்து ஒரு விளம்பரம் தேடித் கொள்ள வேண்டுமென்று விரும்பவில்லை. அந்தக் குண்டு இருந்தாலும் பரவாயில்லை. அங்கு நடக்கிற கலவரத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்திலே, திருப்பத்தூருக்கு விரைந்தவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர்அவர்கள்.

அதே போன்று குமரி மாவட்டத்திலே இனக் கலவரம் என்றபோது, ரத்தக் கண்ணீர் விடுகின்ற நிலையிலே அறிக்கை விட்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். அந்த இனக்கலவரம் எந்த எந்தக் கிராமங்களில் நடந்ததோ, அங்கே நடைபயணம் தொடங்கினார்கள். ஆங்காங்கு தானே நேரில் சென்று அந்தப் பகுதி மக்களிடையில் காணப்படும் கலவரங்களை நீக்க வேண்டும் ; அந்தப் பகுதி மக்களின் இன்னல்களைக் களைய வேண்டும் என்று கருதி அத்தனைத் தரப்பாரையும் அழைத்துப் பேசி சுமுகமான முடிவு வர வேண்டுமென்று கருதி, கலவரம் நடந்த இடமாயிற்றே என்று கூடப் பார்க்கவில்லை, துப்பாக்கிச் சூடு நடந்த இடமாயிற்றே என்றுகூடக் கருதவில்லை, நாம் சென்றால் அந்தத் துறைக்குப்





பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நம்மை பார்த்து ஏதாவது கேட்பார்களே என்று கூட அஞ்சவில்லை, தாய் உள்ளம் என்றால் என்ன என்பதை நிரூபிக்கின்ற வகையில் அந்தக் கலவரம் நடந்த ஒவ்வொரு பகுதியாகச் சென்று அமைதியை ஏற்படுத்தினார்கள்.

அதேபோன்று, எண்ணூரிலே இடுகாட்டுக்குப் போகும் பாதையைப் பற்றிய பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தபொழுது புரட்சித் தலைவரவர்கள் என்ன செய்தார்கள் ? அதிகாரிகளை வைத்து நடவடிக்கை எடுக்கச் செய்திருக்கலாம் ; அதிகாரிகளைப் பார்த்து நடவடிக்கை எடுங்கள் ; இடையூறை நீக்கிக் கொடுங்கள் என்று சொல்லியிருக்க முடியும். பல்வேறு கட்சிகள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் ; குமரி அனந்தன் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள் ; எனவே அதுபற்றி நடவடிக்கை எடுங்கள் என்று அதிகாரிகளைப் பார்த்துச் சொல்லியிருக்க முடியும். ஆனால் தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவரவர்கள் சம்பந்தப்பட்ட இடத்திற்குத் தானே விரைந்து சென்று தானே முன்னின்று, அந்த ஆக்கிரமிப்பை, இடையூறை அப்புறப்படுத்திக் காட்டியவர்தான் புரட்சித் தலைவரவர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளிமாநிலங்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த மாநிலத்தின் காவல்துறையைப்பற்றி நாங்கள் மட்டுமல்ல ; எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் பாராட்டுவது மட்டுமல்ல ; மற்ற மாநிலங்களிலே இருப்பவர்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆளுங்கட்சித்தரப்பிலே இருப்பவர்கள் இங்கே புரட்சித் தலைவர் தலைமையில் இராமராஜ்யம் நடக்கிறது என்றும், காவல்துறை சீரும் சிறப்புமாக இருக்கிறது என்றும் சட்டம்—ஒழுங்கு மிகச் சிறப்பாக இருக்கிறது என்றும் சொல்கிறார்களே என்று கேட்டார்கள். நான் திரு. துரைமுருகன் அவர்களுக்குப் பதிலாகச் சொல்ல விரும்புவது, ஆளுங் கட்சிக்காரர்களாகிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசினார்கள் என்றால் அவர்கள் சொல்வது நியாயம்தான். ஆனால் அவர்களுக்குச் சொல்கிறேன், பாண்டிச்சேரி சட்டமன்றத்திலே கடந்த சனிக்கிழமையன்று உங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் அங்கே கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதுபேசுகின்ற நேரத்தில் புரட்சித் தலைவரின் அரசுக்கு எப்படி அத்தாட்சி கொடுக்கிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இங்கேயுள்ளஆளும் தரப்பிலே உள்ளவர்கள

பேசுகிறார்கள் என்பது மட்டுமல்ல, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகிறார், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் அல்ல, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறார். ''பாண்டிச்சேரி மாநிலத்தில் சட்டம்—ஒழுங்கு எல்லா மட்டத்திலும், எல்லா நிலையிலும் சீர்கெட்டுக் கிடக்கிறது; ஆனால் தமிழகத்திலே சட்டம்—ஒழுங்கு எல்லா நிலையிலும் மிகச் சிறப்பாகப் பராமரிக்கப்படுகிறது'' என பாண்டிச்சேரி சட்டமன்றத்தில் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது விவாதத்தில் கலந்து கொண்டு அங்கு ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த எம்.எல்.ஏ., திரு. பி. இராமலிங்கம் கூறினார்.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நீங்கள் மட்டுமல்ல, இந்த மாநிலத்திலே சட்டம்—ஒழுங்கு எவ்வளவு சீரும் சிறப்புமாக இருக்கிறது என்று மேற்கு வங்க சட்டமன்றத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

பாராளுமன்றத்திலே புள்ளி விவரங்களைச் சொல்லுகின்ற பொழுது, குற்றங்களை ஒப்பிட்டு நோக்குகின்றபொழுது உள்துறை அமைச்சரவர்கள் சொல்லுகின்ற நேரத்தில் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது என்பது தெரிகிறது. எனவே, உண்மையிலேயே கணக்குப் போட்டுப் பார்த்தால் அமைதிப் பூங்காவாகத் தமிழகம்தான் திகழ்கிறது என்பது விளங்கும்.

அதுமட்டுமல்ல, கடந்த காலங்களைவிட பல்வேறு குற்றங்கள் இந்த மாநிலத்தில் புரட்சித் தலைவரவர்கள் அரசை ஏற்றதற்குப் பிறகு குறைந்திருக்கின்றன என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆளுங்கட்சித் தலையீடு இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆளுங்கட்சித் தலையீடு என்று சொல்லிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆளுங்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களையே காவல் துறையினர் அடிக்கிறார்கள் என்று. ஆகவே, உண்மையிலேயே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள ஆட்சியில் ஆளுங்கட்சியினர் தலையீடு இருக்கும் என்று சொல்வீர்களேயானால் நீங்கள் மனச்சாட்சியை மறந்து பேசுகிறீர்கள் என்ற நிலைதானே தவிர வேறல்ல. ஆளுங்கட்சிக்காரர்களின் தலையீடு என்று சொல்லு-



கின்றபொழுது கடந்த காலத்தைத் தயவுசெய்து எண்ணிப் பாருங்கள். கடந்த காலங்களிலே நடந்த கொடுமைகள் இப்பொழுது இருக்கிறதா என்பதை எண்ணிப் பாருங்கள்.

தான் பெற்றெடுத்த மகனையே என்னுடைய மகன் அல்ல என்று, உதயகுமார் அல்ல என்று தாய் தந்தையர்கள் கண்ணீர் மல்க அறிக்கை விட்டார்களே காவல்துறை அதிகாரிகள் மூலம், அப்பொழுது இதே மாமன்றத்தில் பேசியவர்கள் இறந்தது உதயகுமார்தான் என்று சொன்னபொழுது இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அன்று சொன்னது நடவடிக்கைக் குறிப்பிலேஇருக்கிறது. காவல்துறையினர் தருகின்ற அறிக்கையை நம்பி மாண்புமிகு முதலமைச்சர் சொல்கிறார் என்று சொல்லுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினரைப் பார்த்துக் கேட்கிறேன். உதயகுமார் பிரச்னையில், காவல்துறை யார் என்று தெரியவில்லை என்று சொல்லியிருக்கிறது, உதயகுமார் என்று சொல்லி அமளி ஏற்படுத்த எதிர்க் கட்சிக்காரர்கள் நினைக்கிறார்கள் என்று மாண்புமிகு இன்றைய எதிர்க்கட்சித் தலைவர்—அன்றைய முதலமைச்சர் கூறியிருக்கிறார். காவல்துறையினரை வைத்து மிரட்டும் அப்படிப்பட்ட கொடுமை இப்பொழுது நடந்தது உண்டா ?

அடுத்து, சிட்டி போலீஸ் ஆக்ட் செக்ஷன் 42-ஐப் போட்டு அமல் நடத்துவதாகச் சொல்கிறார்கள். நாங்கள் சட்டமாவது போட்டோம், ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், நீங்கள் சட்டம் போட்டு, அந்தச் சட்டத்தை மீறினார்களே அவர்கள்மீது நடவடிக்கை எடுக்காத காலங்களை இந்த நாட்டு மக்கள் மறந்துவிட மாட்டார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். இந்த நாட்டு மக்களுக்கு ஞாபக சக்தி இல்லையென்று பேசலாமா என்றுதான் கேட்கிறேன்.

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் வீட்டு முன்னால் மறியல். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நண்பர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று கருதுகிறேன். மரியாதைக்குரிய அந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் அன்றையதினம் கலைஞர் கருணாநிதி அவர்களைக் குறை சொல்லவில்லை.

(பிற்பகல் 1-00)

குற்றம் சாட்டவில்லை. அவர்களைப் பற்றித் தவறாக சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அதைத் தெளிவு படுத்த வேண்டிய கடமை முதலமைச்சருக்கு இருக்கின்றது என்று சொன்னார்கள். அதை வெளியிட்ட ஒரே காரணத்திற்காக சென்னைப் பெருநகரத்தில் அந்தப் போலீஸ் சட்டம் போட்-

தடை உத்தரவு இருந்தபோது அந்த மூதறிஞர் அவர்கள் வீட்டு முன் மறியல் செய்தார்கள். இந்தப் பெருநகரத்திலே போலீஸ் தடைச் சட்டம் இருந்தபோது மறியல் சேய்த அவர்கள்மீது எப்.ஐ.ஆர். போடப்பட்டது உண்டா? வழக்கு நடத்தியது உண்டா? நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்டா? என்று கேட்க விரும்புகிறேன். அன்றைக்கு ஆளுங்கட்சித் தலையீடு எந்த அளவுக்கு இருந்தது என்று பாஸ்கரா என்ற போலீஸ் அதிகாரியின் இருவாரக் குறிப்பு இருக்கிறது. எந்த சூழ்நிலை யிலே நான் விட்டேன் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். எந்த நிலையில் ஆளுங்கட்சி தலையிட்டது என்பதை சுட்டிக் காட்டியிருக்கிறார். அப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு ஆளுங் கட்சி தலையிட்டது என்று சொல்வது எந்த வகையிலே பொருத்த மாக இருக்கும்?

அமைதிப் பூங்காவாக இருக்கின்ற தமிழகத்திற்கும் மற்ற மாநிலங்களுக்கும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இங்கே குற்றங்கள் குறைவாக இருக்கின்றன என்று பாராளுமன்றத்திலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆளுங்கட்சியாக இருக்கிற நாங்கள் சொல்லவில்லை, பிற மாநிலங்களிலே குற்றங்களின் அளவு பற்றிச் சொல்கிறபோது தமிழ்நாட்டிலே தான் குற்றங்கள் குறைவு என்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை பாராளுமன்றத்திலே உள்துறை துணையமைச்சர் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அதேபோன்று டெல்லி, கிரைம் கேபிடல் என்று ஒரு பத்திரி கையிலே கூட சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். குற்றங்கள் இந்த மாநிலத்திலே எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதைப்பற்றி மேற்கு வங்க முதல்வர் திரு. ஜோதிபாசு அவர்கள் சட்டமன்றத்தி லேயே புள்ளி விவரங்களைக் கொடுக்கிறபோது சுட்டிக் காட்டி யிருக்கிறார்கள். இந்த அரசின்மீது குற்றஞ் சாட்டுகிறவர்கள், இங்கே குற்றங்கள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்கி றார்கள், ஆனால் மேற்கு வங்க சட்டமன்றத்திலே அதற்கு பதிலளிக்கிற வகையிலே ஜோதிபாசு அவர்கள் குறிப்பிடும்பொழுது அங்கே கூட தமிழகத்திற்குத்தான் பாராட்டு கிடைக்கிறது. ஸ்டேட்ஸ்மென் என்ற பத்திரிகை 12—3—1982இல் குறிப்பிட் டிருக்கிறது.

Mr. Basu said that in 1980, the number of murders recorded in Andhra Pradesh was 1,467, in Bihar 2,114, in Madhya Pradesh 2,347, in Maharashtra 1,641, in Tamil Nadu 1,227, in West Bengal 1,369....

என்று சொல்லப்பட்டிருக்கிறது.



அது மட்டுமல்ல, பாண்டிச்சேரியிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒருவர் தமிழகம் அமைதிப் பூங்காவாக இருக் கிறது, பாண்டிச்சேரியிலே தான் சட்டம் ஒழுங்கு கெட்டுக் கிடக் கிறது என்று சொல்லியிருக்கிறார். இங்கே குற்றங்கள் குறைவு என்பதை நியாயப்படுத்துகின்ற போது அதையெல்லாம் விட்டு விட்டு குற்றங்கள் அதிகரித்து இருக்கின்றன என்று அருமை நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்டார்கள். பல் வேறு குற்றங்கள் குறைந்திருக்கின்றன என்பதற்கு கிரைம் இண்டக்ஸ் என்ற புள்ளி விவரத்தைப் பார்ப்போமானால் ஒரு லட்சம் பேருக்கு எவ்வளவு பேர்கள் குற்றம் செய்தார்கள் என்ற கணக்கு விவரத்தைப் பார்க்கிறபோது—ஆனால் தி.மு.க. நண்பர் களே, நீங்கள் ஆண்ட காலத்தை தயவுசெய்து எண்ணிப் பாருங் கள்—1971ஆம் ஆண்டு பத்தாவது இடத்திலே இருந்த தமிழகம் 1975ஆம் ஆண்டு ஆட்சிக் கட்டிலிலேயிருந்து நீங்கள் இறக்கப் பட்டதற்கு முன்பு ஏழாவது இடத்திற்குப் போகிறது. தொழில் துறையிலே நீங்கள் பத்திலிருந்து ஏழாவது இடத்திற்குப் போயி ருப்பீர்களானால் நாங்கள் சேர்த்து பாராட்டக் கடமைப் பட்டவர்கள். ஆனால் குற்றங்கள் அதிகரிப்பிலே பத்தாவது இடத்திலிருந்த இந்த மாநிலம் ஏழாவது இடத்திற்குப் போகிறது. நான் ஏதோ தவறான தகவல் கொடுப்பதாகக் கருத வேண்டாம். 1975ஆம் ஆண்டு மத்திய உள்துறை வெளியீடான கிரைம்ஸ் இன் இண்டியா என்ற பத்திரிகையில் புள்ளி விவரம் போட்டுச் சொல்லியிருக்கிறார்கள். குற்றங்கள் கூடியிருக்கின்றன என்று சொல்கிற அருமை நண்பர்களுக்குச் சொல்லிக் கொள்வேன், குற்றங்கள் செய்யப்படுகிற பதிவு எண் கூடியிருக்கிறது என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். அதற்கான காரணங்களை நியாயங்களை எதிர்க்கட்சி என்றாலும்கூட அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் இதயத் தராசிலே எடை போட்டுச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1980ஆம் ஆண்டை விட 1981ஆம் ஆண்டு குற்றங்கள் குறைந் திருக்கின்றன, கூட்டுக் கொள்ளை—1980 ஆம் ஆண்டு 82; 1981ஆம் ஆண்டு 46; 50 சதவீதம் குறைந்திருக்கிறது. அடுத்து கொள்ளை—1980 ஆம் ஆண்டில் 336; 1981ஆம் ஆண்டு 287. கன்னக்களவு—1980ஆம் ஆண்டில் 10,206; 1981ஆம் ஆண்டு 9,804: திருட்டுகள்:—1980ஆம் ஆண்டு 36,376; 1981ஆம் ஆண்டு 32,565; குற்றங்கள் குறையவில்லை என்று நீங்கள் சொல்லலாமா? ஒரு சில குற்றங்கள் பதிவு செய்யப்படுகின்ற வழக்குகள் கூடியிருக்கின்றன என்ற வாதத்தை நானும் ஒத்துக் கொள்கிறேன். அதற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் உங்கள் இதயத் தராசிலே எடை பார்த்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். எதிர்க் கட்சிகள் குற்றம் சொல்வது உரிமை, ஜனநாயகக் கடமை என்றாலும்கூட அவை நியாயங்களாக இருக்க வேண்டும்,

1976 ஆம் ஆண்டுதான், 17–7–1976 ஆம் ஆண்டுதான், இந்த மாநிலத்திலே உள்ள 'காவல்துறை, பொதுமக்கள் கொடுக்கின்ற புகார்கள் அத்தனையும் நாங்கள் பதிவு செய்யவேண்டும் என்று ஸ்ட்ரேசி என்கிற ஒரு உயர் அதிகாரி இருக்கின்றபோது ஒரு ஆணையைப் போட்டார்கள். அந்த ஆணை எண். மெமோ. ஆர். சி. 153048/சி1/76, அந்த ஆணையின்படி இந்த மாநிலத்திலே இருக்கின்ற காவல் துறை அதிகாரிகள் எந்தப் பொதுமக்கள் கொடுத்தாலும், அந்தப் பொதுமக்கள் கொடுக்கின்ற அந்தப் புகாரை நீங்கள் பதிவு செய்தாக வேண்டும் என்று ஒரு கடுமையான உத்திரவை போட்டார்கள். அருமை நண்பர்களை நான் கேட்கிறேன். 15 ஆண்டுக்காலம் இந்த மாநிலத்திலே ஆண்ட காங்கிரஸ் ஆட்சியிலே, அல்லது 7 ஆண்டுக்காலம் ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, காவல் துறையிலே வருகின்ற புகார்களை எல்லாம் பதிவு செய்தாகவேண்டுமென்ற ஒரு சட்டத்தை போட்டார்களா. அதேபோல் லட்சம் மக்களுக்கு, கிரிமினல் இன்டக்ஸ், குற்றக் குறியீட்டு எண், என்பதைப் போட்டு, 1980 ஆம் ஆண்டு இந்த மாநிலத்திலே இந்த குற்றக் குறியீட்டு எண் 1 லட்ச மக்களுக்கு எவ்வளவு குற்றங்கள் நடைபெறுகிறது என்ற குற்றக் குறியீட்டு எண்ணைத் தயாரித்து இருக்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திற்கும், மத்திய அரசும் மாநில அரசும் தயார் செய்கிறது. 1980 ஆம் ஆண்டு இந்த மாநிலத்தில், தமிழகத்திலே குற்றக் குறியீட்டு எண். 243.1. 1981 ஆம் ஆண்டு குற்றக் குறியீட்டு எண். 238.1. ஏறத்தாழ 5 புள்ளிகள் குறைந்திருக்கிறது புரட்சித் தலைவர் ஆட்சியிலே. இந்த மாநிலத்தினுடைய காவல் துறையினர் செய்துகாட்டி இருக்கிறார்கள். அருமை நண்பர்களே, மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியம் : 5 புள்ளிகள் குறைந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஆண்டபோது, அல்லது தி.மு.க. ஆண்டபோது எந்த ஒரு ஆண்டிலாவது, இந்த குற்றக் குறியீட்டு எண். 1 புள்ளியாவது குறைக்கப்பட்டதா. இப்போது புனிதமான ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள் புரட்சித் தலைவர் அவர்கள். இப்படி குற்றங்கள் குறைக்கப்பட்டிருப்பதற்கு முழுக்க முழுக்க நிர்வாகத் துறையினர், காவல் துறையினர் தான் என்று பேசுவதை நான் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குக் காரணம், பொதுமக்களுடைய கோ-ஆப்பரேஷன் இருக்கவேண்டும். அப்போதுதான் குற்றங்கள் குறையும் என்று கருதுகிறேன். உங்களுக்குச் சொந்தக்காரர்களாக உள்ள இந்திரா காங்கிரஸ்காரர்கள் சொல்லுகிறார்கள். கடந்த சுதந்திரதினத்தன்று பேசுகிற போது, இந்திரா



வானொலியில் பேசுகிறார், குற்றங்கள் இந்த நாட்டிலே, மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலும் கூட கூடிக்கொண்டே போகிறது. இதைத் தடுக்கவேண்டுமென்றால் it can be arrested only by popular co-operation பொதுமக்களுடைய ஒத்துழைப்பின் மூலம்தான் குற்றங்களைக் குறைக்க முடியும் என்று நான் சொல்லவில்லை, மேற்கு வங்கத்தின் முதல் அமைச்சர் ஜோதி பாசு சொல்லியிருக்கிறார். நிர்வாகத்தின் மூலமோ; அதிகாரிகளை வைத்தோ, அதில் பல்வேறு திட்டங்களை வைத்தோ, முடியாது என்பதை மிகத் தெளிவாக சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஜோதி பாசு அவர்கள் மேற்கு வங்கத்தின் சட்டமன்றத்தில் பேசும் போது கூறுகிறார்கள். இந்தக் குற்றங்கள் குறையவேண்டுமென்று சொன்னால் நிர்வாகத்தால் மட்டும் முடியாது, மக்களுடைய முழு மனமாற்றம் மக்களுடைய முழு ஒத்துழைப்பு இருந்தால் தான் முடியும், பாப்புலர் கோ-ஆப்பரேஷன் இருந்தால்தான் முடியும் என்று சொல்கிறார்கள். இதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 12–3–1982 அன்று ஸ்டேட்ஸ்மேன் பத்திரிகையில் ஜோதிபாசு பேசியதாக வந்திருக்கிறது.

Mr. Jyoti Basu said in the West Bengal Assembly on Thursday that popular co-operation was necessary to control crime in the State. Administrative action alone would not be enough . . .

(பிற்பகல் 1–10.)

இந்த நாட்டினுடைய பிரதமர் சொல்கிறார். மேற்கு வங்கத்தில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற ஜோதிபாசு சொல்கிறார். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் எவ்வளவு சிறப்பாக குற்றங்கள் நடக்காமல் சீரும் சிறப்புமாக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

திரு. கே. சொக்கலிங்கம் : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர்* *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வராது. வேண்டுமானால் ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டுவரலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டரில் குறிப்பிட்ட அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற காவல்துறை மற்றும் தீ அணைப்புத் துறை மானியக் கோரிக்கைகளை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்தையா அவர்களும், திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும் குறிப்பிட்ட கருத்துக்களை ஒட்டி நானும் ஒன்றிரண்டு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் முத்தையா அவர்கள் பேசும்போது தமிழ்நாட்டிலே இன்றைய தினம் காவல் துறையிலே குற்றங்கள்நடைபெற்றதாகச் சொல்லப்படும் அனைத்தும், நாம் சொல்லுகின்ற வழக்குகள் அனைத்தும் பதிவு செய்யப்படுகின்ற காரணத்தால் குற்றங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதுதான் உண்மை. இன்றைக்கு வழக்கு மன்றத்திலே சொல்வார்கள். ஒரு நிரபராதி கூட தண்டிக்கப்படக் கூடாது என்று சொல்வார்கள். அதற்கு ஒப்ப இன்றைக்கு நம்முடைய காவல்துறை எந்த அளவுக்கு சிறப்பாக பணியாற்றுகிறது என்ற புள்ளிவிவரங்களைப் பார்க்கிறபோது தெளிவாகத் தெரிகிறது.

1980-லே பதிவு செய்யப்பட்ட வழக்குகளிலே 29.4 சதவீதம் வழக்குகளில் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. 1981-லே பதிவு செய்யப்பட்ட வழக்குகளிலே 35.7 சதவீதம் வழக்குகளில் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள வழக்குகளில் 1980-ல் 59.1 சதவீதம் விசாரணையில் இருக்கிறது ; 1981-ல் 69.1 சதவீதம் விசாரணையில் இருக்கிறது. ஆக இந்த அளவுக்கு இந்தக் காவல்துறை சிறப்பாகப் பணியாற்றி, குற்றத்தைக் கண்டுபிடிப்பதிலும், குற்றம் புரிந்தவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுப்பதிலும் திறமையாகப் பணியாற்றி வருகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலே அரும்பாடுபட்டு, பல்வேறு சிக்கலான வழக்குகளை எல்லாம் கண்டுபிடிப்பதிலே திறமையாகச் செயல்பட்டு வருகிறது நம்முடைய காவல்துறை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கு இந்தகொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாக ஆதாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். கீழ்ப்பாக்கத்தில் நடைபெற்ற கனகவல்லி கொலையில் இருந்து பல்வேறு ஆதாரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் ஒரு கருத்தை மட்டும் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நடைபெற்றிருக்கிற பல்வேறு குற்றங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் யார் ? தண்டனை அடைந்திருப்பவர்கள் யார் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒவ்வொரு குற்றத்திலும் ஈடுபட்டிருக்கிற குற்றவாளிகள் குறிப்பாக திருட்டுக் குற்றத்தை பழைய



கேடிகள்தான் தொடர்ந்து செய்து வருகிறார்கள். ஒவ்வொரு குற்றத்திலும் முன்பு தண்டனை பெற்ற குற்றவாளிகள்தான் மீண்டும், மீண்டும் ஈடுபடுகிறார்கள். இந்த திருட்டுக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் பற்றியும் அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் பற்றியும் ஒன்றிரண்டை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் விரிஞ்சிபுரம் விவசாயக் கூட்டுறவு வங்கியிலே ஜன்னல் கம்பிளை உடைத்து, 1,28,000 ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகளைத் திருடிச் சென்ற குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்ட தண்டனை, சுப்பிரமணியம் என்பவருக்கு 18 மாதம் தண்டனையும், ரவி என்பவருக்கு 6 மாதம் தண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு கூட்டுறவு வங்கியை உடைத்து 1,28,000 ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகளைத் திருடிய குற்றத்திற்கு குற்றவாளிக்கு அளிக்கப்பட்ட தண்டனை 18 மாதம், 6 மாதம்.

அதைப்போல சென்னை நகரில் இராயபுரம் காவல் சரகத்திற்கு உட்பட்ட இடத்தில் பயங்கரமான கன்னக்களவில் அளிக்கப்பட்ட தண்டனை 18 மாதம் ஆகும்.

அதைப்போல கோவை மாவட்டத்தில் இராமநாதபுரம் கிராமத்தில் 5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சிலைத் திருட்டில் சம்பந்தப்பட்ட குற்றவாளிக்கு அளிக்கப்பட்ட தண்டனை 9 மாதம் ஆகும். சிலைகள் அடிக்கடி திருட்டுப் போகிறது. இங்கிருந்து வெளிநாடுகளுக்கு சிலைகளைத் திருடிக் கொண்டு போகிறார்கள். அப்படிப்பட்ட சிலைத் திருட்டில் ஈடுபட்ட குற்றவாளிக்கு வழங்கப்பட்ட தண்டனை 9 மாதம் ஆகும். சிலை திரும்பப்பெறப்பட்டதா இல்லையா என்று பார்க்கவேண்டியது இல்லை. அப்படிப்பட்ட குற்றம் புரிந்தவர்களுக்கு கொடுத்த தண்டனை 9 மாதங்கள்தான். இவ்வளவு பெரிய குற்றத்திற்கு இவ்வளவு குறைவான தண்டனை காடுப்பதற்குக் காரணம் நம்முடைய குற்றவியல் சட்டத்தில் உள்ள பிரிவுகள்தான். அதில், திருட்டுக் குற்றம் செய்தவர்களுக்கு இவ்வளவு தண்டனை கொடுக்கவேண்டும் என்று தான் இருக்கிறது. அந்த விதி முறை இருப்பதால்தான் 6 மாதம், 3 மாதம் என்று தண்டனை கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி தண்டனை அடைந்தவர்கள் மீண்டும் வெளியே வந்தபிறகு அதே குற்றத்தைத் தொடர்ந்து செய்கிறார்கள். ஆகவே, அந்த ஐ.பி.சி. சட்டத்தை, இந்தியக் குற்றவியல் சட்டத்தை இப்படிப்பட்ட குற்றங்களுக்கு அதிக தண்டனை விதிக்கும் வகையில் மாற்ற வேண்டும், திருத்தவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளைக் கொடுத்து இருக்கிறார்கள். நானும் ஒசிரு கோரிக்கைகளை இங்கே வைக்க விரும்புகிறேன். என்னுடைய ஆத்தூர் தொகுதி மலைப்பாங்கான பகுதி. அங்கே கன்னிவாடி என்கிற காவல் நிலையம் இருக்கிறது. அந்தக் காவல் நிலையத்தின் எல்லையில் பாதை வழியாக 40 மைல் சென்றால், ஆடலூர், பன்றிமலை, தோடப்பாறை என்ற கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் ஏதாவது குற்றங்கள், தவறுகள், அல்லது கலவரங்கள் நடந்து விட்டால், உடனடியாகச் சென்று அதைத் தடுக்க முடியவில்லை. ஆகவே, ஆடலூர் கிராமத்தில் ஒரு காவல் நிலையம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே காவல் நிலையம் அமைப்பதற்காக ஏற்கனவே இடம் வாங்கிப் போட்டு இருப்பதாக அறிகிறேன். ஆகவே, அங்கே ஒரு காவல் நிலையம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கை மாவட்டம் உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சார்பாக ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். செங்கை மாவட்டம் உத்திரமேரூர் பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருமுக்கூடலில் ஒரு காவல் நிலையம் அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சீபுரம் பள்ளிப்பாளையத்தில் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் சங்ககிரி என்ற இடத்தில் ஒரு துணை சண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்க வேண்டும் என்று அந்த பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பன்னெடுங்காலமாக இருந்து வரும் இந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. த. இராமசாமி : துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிற காவல் துறை, தீயணைப்புத் துறை மானியத்தின் மீது பேசுகிற வாய்ப்பினை அளித்தமைக்கு துணைத் தலைவர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு இதே வரவு-செலவுத் திட்டத்தின் விவாதம் இந்த மன்றத்தில் நடந்துகொண்டிருந்தபோது, இராமநாதபுரம் மாவட்டத்தில், என்னுடைய தொகுதியான இராமநாதபுரத்தில்,





கண்ணிலிருந்து இரத்தம் சொறியும் தன்மையில், இதயத்தில் வேல்கொண்டு தாக்குகிற நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்ச்சிகள்—ஜாதிக் கலவரங்கள் இராமநாதபுரம் நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடந்தது என்பதை யாரும் மறந்து இருக்க முடியாது. இந்தச் சந்தர்ப்பத்தில் காவல் துறையானது எந்த அளவிற்கு இராஜதந்திரங்களை எல்லாம் கையாண்டு ஒருதலைப்பட்சம் என்ற நிலை இல்லாது நடுநிலைமை நின்று அந்தப் பகுதி மக்களை இரு தரப்பினரையும் காப்பாற்றினார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூற நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிற நேரத்தில் ஏழை எளிய மக்களின் இதயங்களில் தங்கச் சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டிருக்கும் எம்.ஜி.ஆர். அவர்கள் இராமநாதபுரம் பகுதிகளில் விரைந்து சென்று சுற்றிப்பார்த்து, நிலைமைகளை அறிய, கிராமம் கிராமாகச் சென்று, குடிசை வாழ் மக்களின் உண்மை நிலையைக் கேட்டறிந்து, யார் குற்றவாளிகள் என்ற நிலையை அந்த இடத்தில் எடுக்காத அளவிற்கு இரு தரப்பினரையும் சமாதானப் படுத்தி, ஒற்றுமையோடு வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணத்தை அந்த மக்கள் மத்தியில், உணர்த்திவந்தார்கள். அவர்கள் இங்கே வந்ததற்குப் பிறகு அந்தப் பகுதியில் இது நாள் வரை எந்தக் கலவரமும் இல்லை. அந்த மக்கள் ஒற்றுமையோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்த உணர்வோடு இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில், முதுகளத்தூர் பகுதியில் 1954-இல் ஜாதிக் கலவரம் ஒன்று ஏற்பட்டது. அப்படி ஏற்பட்ட நேரத்தில், மரியாதைக்குரிய பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் செல்வாக்கை அரசியலில் ஒழித்தாக வேண்டும் என்ற நிலையிலே ஏற்பட்ட ஒரு கலவரம் என்றுதான் அன்றையதினம் இருந்த பெரியவர்கள் சொன்னார்கள்.

(பிற்பகல் 1.20)

ஆனால், இன்றையதினம் அந்தப் பகுதியிலே ஏற்பட்ட கலவரம் எந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டது என்பதை தயவு செய்து நல்ல உள்ளம் கொண்டவர்கள் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கொந்தளிப்பான சூழ்நிலையில் காவல் துறையும், காவல் துறையைக் கையிலே வைத்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும் விரைந்து செயல்பட்டிருக்கா விட்டால், எந்த அளவுக்கு அந்தச் சூழ்நிலை அந்தப் பகுதியிலே இருந்திருக்கும் என்று இந்தச் சட்டமன்றத்திலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம்.

[திரு. த. இராமசாமி] [1983 மார்ச் 23

அதைப்போலவே இன்றையதினம் மதக் கலவரம் என்று சொல்லக்கூடிய அளவுக்கு, மதத்தோடு மதம் மோதக்கூடிய அளவுக்கு, குமரி மாவட்டத்திலே, இன்றைக்கு இந்த சட்டமன்றம் நடந்துக்கொண்டிருக்கிற நேரத்திலேயே நடக்கிறது என்று சொல்கிறபோது, பாரதியாருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நாமெல்லாம் மெத்த வேதனையோடு, சங்கடப்படுகிற சூழ்நிலைதான் இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த காலத்திலே எந்தச் சூழ்நிலை இருந்ததோ அதே நிலை மீண்டும் வளர்கிற சூழ்நிலை ஏற்பட்ட பிறகு, புரட்சித் தலைவர் அவர்கள் இராமநாதபுரத்திற்கு விரைந்து சென்று, இரு தரப்புகளையும் அழைத்துச் பேசி அமைதிபடுத்திய பிறகு, இன்றைய தினம் அங்கே அமைதியான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தினுடைய எந்த மூலை முடுக்குகளிலேயும், எந்தக் கலவரம் நடப்பதாக இருந்தாலும், அந்தக் கலவரங்களை அடக்குவதிலும் மக்களை ஒற்றுமைப்படுத்துவதிலும், கலவரங்களைத் தூண்டியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய முகமூடிகளை கிழித்துச் சட்டத்தின் முன்னாடி நிறுத்துவதுதான் இந்த அரசினுடைய கடமை என்பதை தெள்ளத் தெளிவாக, நம்முடைய அருமைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள், கடந்த காலத்திலும் சரி, இன்றும் சரி, உணர்த்திக்கொண்டு வருகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதற்கு தனுக்கோடித்தேவர் கூட பதிலுரை தந்தார்கள். கடந்துபோன விவரங்களையெல்லாம் இங்கே போலீஸ்துறையின் அறிக்கைகளிலே அறிவித்திருக்கிறார்கள். முறையாக ஆய்வு செய்துதான், 1981—82-ன் ஆய்வு அறிக்கையாக ஒரு புத்தகத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கலவரம் எப்படி உருவானது என்பதை, தெளிவாக ஆய்வு செய்துதான், இந்த அறிக்கையிலே விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் கூட யார் மேல் தவறு இருக்கிறது என்பதை, மேலும் நாம் விவாதித்து அதே நிலைமையை மீண்டும் அந்தப் பகுதியிலே உண்டாக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை நமது மூத்த உறுப்பினரான இளையபெருமாள் போன்றவர்கள் உருவாக்கக் கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டும் அல்லாமல், நாமெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள். அந்தத் தகுதியிலேயிருந்து பார்க்கிறபோது, அனைத்து மக்கள் இடையே, ஜாதி மத உணர்வு என்ற அடிப்படையில் பார்க்காமல் அவர்களுக்கு கட்சியை வைத்துத்தான், அந்தக் கட்சியின் தலைவர்



1983 மார்ச் 23] [திரு. த. இராமசாமி]

களைக் கொண்டுதான், மக்கள் வாக்களித்து தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால், இந்த நிலைமையை பொறுத்தமட்டில், நான் சட்டமன்றத்திற்கு வந்த நாள் முதலாய் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நமது மரியாதைக்குரிய மூத்த உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள், ஒரு வகுப்பினருக்கு மட்டுமே பரிந்துக் கொண்டு பேசுவது எனக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது. அவர் ஒரு சட்டமன்ற உறுப்பினர். அனைத்து மக்களையும் ஒன்றாகப் பார்க்க வேண்டும். எல்லோருக்காகவும் பேசுவதுதான் சாலச் சிறந்தது என்பதை, அவருடைய தம்பி என்ற முறையில், அவருக்கு இளையவர் என்ற முறையில், அவர் மிகுந்த அனுபவம் பெற்றவர் என்ற முறையில் இந்தச் சந்தர்ப்பத்திலே, மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தத் துறையைப் பற்றி எவ்வளவு தூரம் பேச முடியுமோ, எவ்வளவு தூரம் தாக்கிப் பேச முடியுமோ, அவ்வளவு தாக்கிப் பேசினார்கள், அந்த நண்பர்களிடம் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளவதெல்லாம், 1972 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் நாள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம் உருவான நேரத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களை, புரட்சித் தலைவர் அவர்களின் பின்னாலே சென்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக உங்களுடைய காட்டுதர்பார் ஆட்சியில், காவல் துறை உங்களுடைய கையிலே இருந்தது என்பதற்காக, எந்த அளவுக்கு கட்டவிழ்த்து விட்டு விட்டீர்கள் என்பதை எல்லாம், பழைய சூழ்நிலைகளையெல்லாம் நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஆனால் இன்றைய தினம் இந்தக் கட்சி ஆட்சி பொறுப்பேற்று 4 ஆண்டுகள் தான் ஆகிறது. இந்த 4 ஆண்டுக்காலத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மீதுதான் வழக்குகள் போடப்பட்டு வருகின்றன. ஆனால், எங்களுடைய தங்கத் தலைவன், தனித் தலைவன், ஏழை எளிய மக்களுடைய இதயத்திலே தங்கச் சிம்மாசனம் கொண்டு அமர்ந்திருக்கும் உத்தமத் தலைவன், புரட்சித் தலைவர் அவர்கள், கட்சி பேதம் இன்றி, அந்தக் கட்சி, இந்தக் கட்சி என்ற பாகுபாடு இல்லாமல், யார் தவறு செய்கிறார்களோ, அவர்கள் தண்டனை பெற்றுத்தான் ஆகவேண்டும் என்ற முடிவில் தமிழக அரசை தலைமை ஏற்று நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லாமலேயே எதிர்க்கட்சி நண்பர்கள் அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இருந்தாலும்கூட கட்சி கட்டுப்பாட்டிற்காக பேசித்தானே தீர வேண்டும் என்ற அடிப்படையில், இன்றைய தினம் அவர்கள் காவல் துறையைத் தாக்கி பேசுகிறார்களே தவிர, அவர்களுடைய மனசாட்சிக்கு உண்மையிலேயே தெரியும். புரட்சித் தலைவர்

அவர்களின் தலைமையிலே இயங்குகிற அந்தக் காவல் துறை எவ்வளவு சிறப்பாக செயல்படுகிறது என்று வியந்து மனதிற்குள்ளாகவே பாராட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேண்டுமானால் கோபம் இருக்கலாம். இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பிரதமர் பதவியினை இழந்துவிட்டதற்குப் பிறகு ஒரு இந்தியப் பிரஜை என்ற முறையிலே நம்முடைய மாநிலத்திற்கு மதுரைக்கு, வந்திருந்தபோது, அவர்களை ஒழித்துக் கட்ட திட்டம் தீட்டப்பட்டபோது காவல் துறை அவர்களுக்கு ஒத்துழைக்கவில்லையே என்று அவர்களுக்கு வருத்தம் இருக்கலாம். எங்களுடைய தங்கத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்த வரையிலே இந்திய நாட்டிலே மட்டுமல்ல, உலகத்திலே உள்ள எந்த உயிருக்கும் எதுவும் வந்துவிடக்கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கக்கூடிய தலைவர் அவர். அவருடைய கையிலேதான் காவல் துறை இருக்கின்றது. ஆகவே பதவியில் இருப்பவர்களுக்குத்தான் பாதுகாப்புத் தர முடியும் என்ற நிலை இல்லாமல் பதவியில் இல்லாத நேரத்திலும் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த பாதுகாப்புத் தந்து அவர்களை டெல்லிப் பட்டணத்திற்கு அனுப்பினார்கள். அந்த நன்றியினைக்கூட இந்திரா காங்கிரஸ் நண்பர்கள் உணராமல் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரோடு சேர்ந்து கொண்டு இந்த காவல் துறையினைக் குறை கூறுகிறார்களே என்பதை நினைக்கின்றபோது வேதனையாக இருக்கின்றது.

காவல் துறை சிறப்பாக இந்த நாட்டிலே செயலாற்றி வருகின்றது என்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் மட்டுமா சொல்லுகிறார்கள், அனைத்து மக்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இன்றைய தினம் காவல்துறை சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கின்றது. ஒரு சில இடங்களில் தவறு நடக்கலாம், கடலிலே கூவம் கலக்கிறது என்பதால் கடலையே கூவம் என்று யாரும் சொல்வதில்லை. ஒரு சில தவறு நடக்கலாம், ஆனால் அதுபற்றி அரசின் கவனத்திற்கு வருகின்றபோது புரட்சித்தலைவர் அவர்கள் கவனமாக இருந்து நடவடிக்கை எடுத்து வருவதை நாம் அறிவோம். ஆகவே, இந்தத் துறையைப் பொறுத்த மட்டிலே இது புனிதமான துறையாக இருக்கின்றது. இந்தத்துறை முறையாகவும் சரியாகவும் நடந்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இராமநாதபுரத்திலே காவல் நிலையம் வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்திருந்தார்கள். ஆனால் அதை அடிப்படையாக வைத்து 6 மாதத்திற்கு முன்னாலே கேளிக்கரை



யிலே ஒரு காவல் நிலையத்தை உருவாக்கிய புரட்சித் தலைவர் அவர்களுக்கு, தங்கத் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, உச்சிப்புளியிலே ஒரு புறக்காவல் நிலையம் இருக்கின்றது. அந்தப் பகுதியிலே ஏராளமான கிராமங்கள் இருக்கின்றன. ஆகவே அங்கே ஒரு புறக்காவல் நிலையத்தை வைத்திருப்பது போதாது. அந்த புறக்காவல் நிலையத்தினை ஒரு பக்கா காவல் நிலையமாக ஆக்கித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாம்பனில் ஏற்கனவே சிறை இருந்திருக்கின்றது. காவல் நிலையமும் இருந்திருக்கின்றது. ஆனால் இப்போது இராமேஸ்வரத்திலே தான் ஒரு காவல் நிலையம் இருக்கின்றது. பாம்பன் ஒரு பெரிய நகரமாக உருவாகிக் கொண்டு வருகின்றது. அது மீனவர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாகும். ஆகவே அங்கே ஒரு புறக்காவல் நிலையத்தை உருவாக்கித்தர வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வாலாந்துறையிலே ஒரு புறக்காவல் நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இராமேஸ்வரத்திலே காவலர்களை அதிகப்படுத்தி அந்தப் பகுதியிலே நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தீயணைப்புப் படை பற்றி நான் சொல்லியாக வேண்டும். இராமநாதபுரத்திலே ஒரு சாதாரண தகரக் கொட்டகையிலேதான் தீயணைப்பு நிலையம் அமைந்திருக்கின்றது. அதைப் பார்ப்பதற்கே சங்கடமாக இருக்கின்றது. இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகர் என்று சொல்லக்கூடிய இராமநாதபுரத்திலே அப்படி சாதாரண தகரக் கொட்டகையிலே தீயணைப்பு நிலையம் இருக்கின்றது. ஆகவே அதற்கு நல்லதொரு கட்டிடத்தை ஏற்படுத்தி அந்தக் கட்டிடத்திற்கு அந்த தீயணைப்பு நிலையத்தை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமேஸ்வரம் என்பது ஒரு தீவிலே இருக்கின்ற பகுதியாகும். அந்தப் பகுதியிலே ஒரு கிடுகுக் கொட்டகையிலேதான் தீயணைப்பு நிலையம் இருக்கிறது. அந்தப் பகுதி அதிகமாக மீனவர்கள் வாழ்கின்ற பகுதி. அங்கே குடிசைகள் அதிகம். ஆகவே அங்கே

ஒரு நல்ல நிலையிலான தீயணைப்பு நிலையத்தைக் கட்டித் தந்து பழுதடைந்த இயந்திரங்கள் இல்லாமல் நல்லவிதமான இயந்திரங் கள் கொடுக்கின்ற வகையிலேயும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தீயணைப்பு வீரர்கள் போர் வீரர்களைப் போல் பணியாற்றக்கூடியவர்கள். வெள்ளமாக இருந்தாலும், புயலாக இருந்தாலும், தீப்பற்றிக்கொண்டாலும் அவர்கள் தங்களுடைய உயிரைப் பணயம் வைத்து மக்களைக் காப்பாற்றுகின்றவர்கள். ஆகவே அரசு காவல் துறையினருக்கு எப்படிச் சலுகைகளை வழங்குகின்றதோ அதே போன்று அந்த தீயணைப்புப் படை வீரர்களுக்கும் சலுகைகளை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வாழ்க தமிழக அரசு, வாழ்க புரட்சித் தலைவர் என்று சொல்லி வாய்ப்பு தந்த தலைவருக்கு நன்றி சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 24—3—1982 காலை 9—00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது..

## 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

144. 1981—82 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

145. 1981—82 ஆம் ஆண்டில் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை களின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

146. 1981—82 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ் செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்),



## இணைப்பு I.

[ 454 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 609-க்கான விடையைக் காண்க.

### விவர அறிக்கை.

(அ) இயற்கை காடுகளை வெட்டி அப்புறப்படுத்த தடை இருப்பதால் விறகுக் காடுகளை வெட்டி அப்புறப்படுத்த அரசின் முன் அங்கீகாரம் பெறப்படுகிறது. அரசின் அங்கீகாரம் பெற்ற பிறகே விறகு கூப்புகளை விற்கும் விற்பனை அறிவிப்புகள் செய்யப்படுகின்றன. இந்த விற்பனை அறிவிப்புகள் அந்தந்த வனக் கோட்டத்தில் பதிவு பெற்ற குத்தகைதாரர்களுக்கு அனுப்புவது தவிர மாவட்ட அரசிதழ்களிலும் தினசரிப் பத்திரிகை களிலும் விளம்பரப்படுத்தப்படுகின்றன. ஏலத்தில் அதிகமான வர்கள் கலந்து கொள்ளவும் அதிகமாக போட்டியிடவும் அதனால் அரசுக்கு அதிக வருவாய் வரவும் ரூ. 10,000-க்கு மேல் மதிப்புள்ள வனப் பொருட்கள் ஏலமிடப்பட்டால் தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட வேண்டுமென அரசு அண்மையில் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்திரவின் கீழ் விற்பனையை குத்தகைதாரர்க்கு உறுதிப்படுத்தும் அதிகாரம் அரசிற்கு உள்ளது.

இயற்கை காடுகளில் உள்ள விறகுக் கூப்புகள் தவிர ஊராட்சி யின் நிலங்களில் எழுப்பப்பட்டுள்ள வனப் பண்ணைத் தோட்டங் களும் மக்களின் விறகுத் தேவையைப் பூர்த்தி செய்ய ஏலத்தில் விற்கப்படுகின்றன. இப்பண்ணைக் காடுகள் இயற்கைக் காடு களுக்கு வெளியே உள்ளதால் அரசின் தடை உத்தரவு மேற்படி தோட்டங்கள் விற்பனைக்கு பொருந்தாது.

இத்தோட்டங்கள் மக்களின் விறகுத் தேவையை பூர்த்தி செய்யவும், மரம் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளின் தேவையை பூர்த்தி செய்யவும் வளர்க்கப்படுகின்றன. இவை களை விற்பதற்கு அரசின் அங்கீகாரமோ, விற்பனையை உறுதிப் படுத்த அரசின் அனுமதியோ தேவையில்லை. இத்தோட்டங் களின் விற்பனையை குத்தகைதாரர்களுக்கு அறிவிப்பதோடு தினசரிப் பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்படுகின்றன.

ஒதுக்குக் காடுகளில் உள்ள விறகுக் கூப்புகளுக்கு காலமுறை பின்பற்றப்படவில்லை. ஆனால் வனப் பண்ணைத் தோட்டங்கள் பொதுவாக 10 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் வெட்டப்படு கின்றன. நியாய விலை மற்றும் விளைச்சல் வனத்துறையினால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கூப்பில் எவ்வளவு விறகு

கிடைக்கக்கூடும் என்பதையும் விறகுகளை வெட்டுவதற்கான, கூலியளவு மற்றும் அவைகளை அப்புறப்படுத்துவதற்கான போக்கு வரத்துக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இந்த நியாய விலையை வனத்துறை நிர்ணயிக்கிறது.

விறகுக் கூப்புகள் கீழ்க்கண்டவாறு ஏலத்தில் கொண்டுவரப் படுகின்றன.—

முதல் விற்பனை :

விளம்பரத் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை ஒரு மாத காலம்.

மறு விற்பனை :

முதல் விற்பனையில் ஏலம் கேட்கப்படவில்லையானால் 15 நாட்களில் மறு விற்பனை நடத்தப்படும்.

டெண்டர் :

மறு விற்பனையில் ஏலம் கேட்கப்படவில்லையானால் 15 நாட்களில் டெண்டர் கோரப்படும்.

ஏல விற்பனையில் கலந்துகொள்ள அந்த வனக் கோட்டத்தில் அந்த வருடத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள குத்தகைதாரர்கள் மட்டுமே தகுதியுடையவர்கள். ஏல விற்பனையில் கலந்து கொள்வதற்கு முன்பு ஏலதாரர், மாவட்ட வன அலுவலரால் நிர்ணயிக்கப்பட்ட பிணைவைப்புத்தொகை (Earnest Money Deposit) செலுத்த வேண்டும். ஏல விற்பனை தொடங்க முன்பு ஏலதாரர் வருமான வணிக வரி நிலுவை இல்லாச் சான்றிதழ்கள் சொத்து மதிப்பு சான்றிதழ் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும். அவரால் கொடுக்கப்படும் சொத்து மதிப்புச் சான்றிதழ் அல்லது பத்திரத்திற்கு அதிகமான தொகைக்கு கேட்கும் ஏலதாரர் அவ்வாறு அதிகமாக உள்ள தொகையை ரொக்கமாக வைப்புத் தொகையாகச் செலுத்தினாலன்றி ஏலமெடுக்க அனுமதிக்கப்பட மாட்டார். அதிகத் தொகைக்கு கேட்ட ஏலதாரர் ஏலம் நடத்தும் வன அலுவலரிடம் சம்பந்தப்பட்ட விற்பனையில் முடிவில் முழுத் தொகை அல்லது பாதி அல்லது மூன்றில் ஒரு பங்கு பிணை வைப்புத் தொகையைக் கழித்துச் செலுத்த வேண்டும். ஏலதாரருடைய ஏலத் தொகையை ஏற்று விற்பனைத் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் ஆணை வெளியிடப்படும். ஏலதாரர் ஏலம் எடுத்ததை மறுக்க இயலாது. ஏல விற்பனை நிபந்தனைகளின்படி (Sale Notice Conditions) மாவட்ட வன அலுவலர் விற்பனையை நடத்துவர்.



(ஆ) விறகுக் கூப்புகளை பொறுத்தமட்டில் வேப்ப மரம், புளிய மரம், சந்தன மரம் மற்றும் நூக்க மரம் (Rosewood) மர வகைகள் அடையாளம் இடப்பட்டு நிலைப் படுத்திய மரங்கள் (Reserved Species) தவிர புதர் காடுகளும், விறகுக் காடுகளும் வெட்டி அப்புறப்படுத்த அனுமதியளிக்கப் படுகிறது. வனப்பண்ணைத் தோட்டத்தை பொருத்த வரையில் கருவேல மரங்கள் அப்புறப்படுத்தப்படுகின்றது. வனப் பண்ணைத் தோட்டத்தில் எழுப்பப்படும் தல மரங்கள் மரம் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால் பொதுவிற்பனைக்கு அனுமதிக்கப்படுவதில்லை. மரக்கூழ் வகை மரங்கள் பொது ஏல விற்பனையை அரசு தடை செய்துள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1982 மார்ச் 24.

பங்குனி 11, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவைக் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—

'' பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.''

மயிலிறகு ஏற்றிய வண்டியே ஆனாலும், அந்தப் பண்டமும் (அளவோடு ஏற்றாமல்) அளவு கடந்து மிகுதியாக ஏற்றப்படு மானால், அந்த வண்டியின் அச்சு முறிந்து விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 625, 626, 627 ஆகியவை கடைசியில் எடுத்துக் கொள்ளப்பெறும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

வேளச்சேரி பகுதியில் வாழும் மக்களுக்கு குடிமனைப்
பட்டா வழங்கும் திட்டம்.

*வினா எண். 628—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வேளச்சேரி கக்கன் நகர், பெரியார் நகர், நேரு நகர் வாழ் மக்களுக்கு குடிமனைப்பட்டா வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) : கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் '' பெரிய ஏரி '' என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் மழைக்காலங்களில் இரண்டு அடி முதல் மூன்று அடி வரை தண்ணீர்

தேங்கும். தண்ணீர் தேக்க அளவினைக் குறைப்பதற்கான முன்
மொழிவு, சம்பந்தப்பட்ட துறைகளின் பரிசீலனையில் உள்ளது.
அது முடிந்த பிறகே குடிமனைப்பட்டா வழங்குவது பற்றி நட
வடிக்கை எடுக்க இயலும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, தண்
ணீரைக் குறைத்ததற்குப் பிறகே, பட்டா வழங்கப்படும் என்று
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பிட்ட காலங்களில்
தான் அங்கே தண்ணீர் நிற்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. கிட்டத்
தட்ட ஆறாண்டுக் காலம் இப்படிப்பட்ட நிலை இருந்து கொண்
டிருக்கிறது. கலெக்டர், தாசில்தாரை வைத்துப் பார்த்தார்கள்.
ஆனால், இன்றுவரை ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கப்
படாமல் இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு முடிவிற்குள்ளாவது
தற்போதைய நிலையை நீக்கி அவர்களுக்குப் பட்டா கிடைக்க
ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : குறிப்பிட்ட
காலத்தில் தான் தண்ணீர் பிடிப்பு என்பது உண்மை. அந்தக்
குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் பிடிக்கிறபோது 2 அடியிலிருந்து
மூன்று அடி வரை தண்ணீர் இருக்கிறது. இப்படியிருக்கும்
போது வீடு கட்டமுடியாது என்பதை உறுப்பினர் அவர்கள்
உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன். அது பெரிய ஏரி.
அது பெரிய ஏரி என்பதால் தண்ணீர் குறைந்துவிட்டால் அந்த
ஏரி சம்பந்தப்பட்ட ஆயக்கட்டுகள் பாதிக்கப்படுமா
என்பதையும் யோசிக்கவேண்டியிருக்கிறது. பட்டா கொடுத்து
விட்டால் உடனடியாக ஆயக்கட்டுகள் பாதிக்கும்போது
உச்சநீதிமன்றம் வரை செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது
இன்றைய சட்டதிட்டங்கள்படி, ஆகவே இவைகளை எல்லாம்
வகைப்படுத்திச் ஒழுங்காகச் செய்யவேண்டும் என்பதில்
அரசு தீவிர முயற்சி எடுத்துக்கொள்கிறது. விரைவில் இதற்கு
ஆவன செய்யப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : நீர்குறைந்த பின்பு குடியிருப்பு
மனைப்பட்டா கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்
டார்கள். இதுபோல் மீண்டும் மழைக்காலங்களில் மழை பெய்து
நீர் அதிகமாக வந்தால் குடியிருப்பு வசதி ஏற்படுமா? ஆகவே
அதற்குப் பதிலாக வெறு இடங்களுக்கு மாற்றிக்கொடுக்க
ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு. திரு. எஸ் டி. சோமசுந்தரம் : வேறு இடத்திற்கு
மாற்றிக் கொடுப்பதற்கு சென்னைக்கு அருகாமையில் இடம்
இல்லை என்பது உறுப்பினர்களுக்கு தெரியும். மழைக்
காலங்களில் தண்ணீர் தேக்க அளவினைக் குறைத்து பட்டா
கொடுக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.





திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
சொல்கிற நேரத்தில் மண்ணை நிரப்பிய பின்னர் பட்டா
கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இதுவரை மண்ணை
நிரப்புவதற்கு,2 ,3, அடிகள் உயரும் அளவிற்கு ஏதாவது திட்டங்
கள் உண்டா? அப்படியில்லையென்றால, அவர்களுக்கு பட்டா
கொடுத்து விட்டால் அவர்கள் மண்ணை நிரப்பி அதன் மூலம்
வாழ்க்கை நடத்த அது ஏதுவாக அமையாதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மண்ணை நிரப்பு
கிற என்ற வார்த்தையையே நான் சொல்லவில்லை. மண்ணை
நிரப்புவது என்பது வேறு, தண்ணீர் பிடிக்காமல் வழிவகை
செய்வது என்பது வேறு. மண்ணை நிரப்பவே முடியாது அங்கே.
அந்த இடத்தைநான் அதிகாரிகளோடு பார்த்து விட்டு வந்திருக்
கிறேன். அங்கேமண்ணைப் போட்டு நிரப்பவே முடியாது.
தண்ணீர் பிடிக்காமல் அதற்கு போக்கிடம் ஏற்படுத்த முடியுமா
என்பதை அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

**பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு முதல் உதவி பயிற்சியை கட்டாயமாக போதிக்கும் திட்டம்.**

*வினா எண் 629—வேடசந்தூர்வி. திரு. பி. பாலசுப்பிரமணியன் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும்
மாணவ, மாணவியர்களுக்கு முதல் உதவி பயிற்சியை கட்டாய
மாக போதிக்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 4, 5, 7 வகுப்புகளில்
அறிவியல் பாடத் திட்டத்தின் கீழ் முதலுதவியைப் பற்றிக் கற்றுத்
தரப்படுகிறது. மேலும் மாணவர்களின் உபயோகத்திற்கென முத
லுதவிப் பொருள்களும் மருந்துகளும் அடங்கிய முதலுதவிப்
பெட்டி வைத்தல், ஒவ்வொரு வகுப்புக்கும் முதலுதவிக்கென
முதலுதவிபெட்டி வைத்திருத்தல், முதலுதவி அவ்வப்
போது செய்ததைக் குறித்து ஒரு குறிப்புப் புத்தகம் வைத்திருத்
தல் ஆகியவற்றில் 7 ஆம் வகுப்பிலேயே பயிற்றுவிக்கப்படுகிறது.
எட்டாம் வகுப்பு ஆங்கிலப் பாட நூலிலும் முதலுதவி பற்றிய
பாடம் ஒன்று உள்ளது. முதலுதவியைப் பற்றி இவ்வாறு கீழ்
வகுப்புகளிலேயே நன்கு தெரிந்து கொள்ள வகை செய்யப்பட்
டுள்ளதால் பள்ளிகளில் உயர் வகுப்புகளிலும் கல்லூரிகளிலும்
முதல் உதவிப் பயிற்சியைக் கட்டாயமாகப் போதிப்பது தேவை
யெனக் கருதப்படவில்லை.

[1982 மார்ச் 24

மோட்டாரக நூல் கைத்தறிக்கு நியாயவிலையில் வழங்கும் திட்டம்

*வினா எண் 630—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோட்டாரக நூலை நியாய விலையில் கைத்தறிக்கு விநியோகிக்க தகுந்த ஏற்பாடு செய்யுமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

(இ) மத்திய அரசிடமிருந்து என்ன பதில் வந்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்

(ஆ) மற்றும் (இ) கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்க தமிழக அரசு 1981ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் 10,000 மோட்டா ரக நூல் பேல்களை தேசிய பஞ்சாலைக் கழகத்தின் கீழ் இயங்கும் நூற்பாலைகள் மூலம் நியாயவிலையில் சப்ளை செய்யுமாறு, மத்திய அரசின் கீழ் இயங்கும் கைத்தறி அபிவிருத்தி ஆணையாளரை கேட்டுக் கொண்டது. தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு மோட்டா ரக நூல் விநியோகிப்பதற்காக மத்திய அரசு ஒரு திட்டத்தை வகுத்து அமுல் படுத்தியது. அதன்படி ஜூலைத் திங்கள் 1981 ஆம் ஆண்டு முதல் 4,565 பேல் மோட்டா ரக நூல் ஒதுக்கீடு பெறப்பட்டு தனியார் துறை நெசவாளர் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஹேண்ட்லூம் கார்ப்பரேஷன் என்ற ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதற்கு 50 இலட்சம் ரூபாய் தமிழக அரசு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும், அதைத் தமிழக அரசு கொடுத்திருக்கிறதா ? அதேபோன்று, இன்று இந்த ஹேண்ட்லூம் செண்டரில் வேலை செய்யக் கூடிய ஆட்களுக்கு கன்செஷன் முறையில் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிய வருகிறது. அவர்களுக்கு அதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் , மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்குத் தனி கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 24]

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டா ரக நூல் என்பது எந்தெந்த நம்பர் நூல்களுக்கு ஒதுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 20 எஸ், 2/17 எஸ், 40 ஆம் நெம்பர்.

1981 ஆம் ஆண்டு நடைபெற்ற மேல்நிலைப் பள்ளித் தேர்வின் முடிவுகள்.

*வினா எண் 631—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் நடைபெற்ற மேல்நிலைப் பள்ளி அரசு தேர்வில் சுமார் 2,000 மாணவர்களுக்கு இன்னும் முடிவுகள் அறிவிக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடந்த மேல்நிலைத் தேர்வு எழுதிய மாணவர்களில், ஒன்பது பேருக்கு மட்டுமே இன்னும் முடிவுகள் அறிவிக்கப்படாமல் உள்ளன.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிக்கப்படாத முடிவுகள் இன்னும் 9 பேர்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அந்த மாணவர்களுக்கு குறிப்பிட்ட கால கட்டத்தில் அறிவிக்கப்படாதது ஏன் என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அறிவிக்கப்படாததற்குக் காரணம், தேர்வுத் துறையிலே இருக்கின்றவர்கள் சரியாக வேலை செய்யாததன் காரணமாக அறிவிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைக்கக்கூடும். ஆனால் அப்படியல்ல. அந்தக் காரணங்களை நான் இங்கே சொல்ல வேண்டும்:

(1) 43 மாணவ மாணவியர் தேர்வு எழுதுவதில் ஒழுங்கீனச் செயல் புரிந்ததாக சம்பந்தப்பட்ட தலைமைக் கண்காணிப்பாளர்கள் கொடுத்த புகாரின்மேல் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனால் அவர்களின் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

(2) 56 மாணவர்கள் தாங்கள் மேல்நிலைத் தேர்வுக்கு இதற்கு முன்பு வந்திருந்தார்கள் என்பதற்கும், ஏப்ரல் 1981 தேர்வுக்கு வர தகுதியுள்ளவர்கள் என நிர்ணயிக்க பழைய மதிப்பெண் சான்றிதழ் அனுப்பாததால் அவர்களின் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

(3) 35 மாணவர்கள் அரசு ஆணையை மீறி தேர்ச்சியடைந்த பாடங்களுக்கு மறுபடியும் வருகை தர விண்ணப்பம் அனுப்பியதால் அம்மாணவர்களிடமிருந்து விளக்கம் கேட்டு அவர்களின் விளக்கம் வராமையால் தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

அதற்குக் காரணம், பி.யு.சி. தேர்வில் சென்னை போன்ற நகரங்களிலே இருக்கின்றவர்கள் 50 மார்க்கு வாங்கி பாஸ் செய்துவிட்டாலுங்கூட, மறுபடியும் இரண்டாவது முறை எழுதி 80, 90 மார்க்குகள் வாங்கி பி.ஈ. அல்லது எம்.பீ.பீ.எஸ். க்கு மனு போட்டு, அந்த மார்க்கின் அடிப்படையிலே, முதல் தடவையாக பாஸ் செய்தவர்களைவிட, இவர்கள் முன்னுரிமை பெறும் தப்பான ப்ழக்கம் இருந்துக் கொண்டு வந்தது.

[முற்பகல் 9-10]

நாம் அதை ஹையர் செகண்டரியிலே எடுத்துவிட்டோம். ஆனால் அதையும் மீறி டிபார்ட்மெண்டிற்குத் தெரியாமலே எழுதியிருக்கிறார்கள்.

(4) மேல்நிலைப்பள்ளிகளில் பயிலாமல் நேரடியாக மேல்நிலைத் தேர்விற்கு விண்ணப்பம் செய்திருந்தனர்.

(5) 242 மாணவர்களுக்குத் தேர்வு மையத்திலிருந்தும் பள்ளிகளிலிருந்தும் தேர்வுக்குரிய சில தகவல்கள் வரவில்லை. சில தகவல்கள் வரவில்லையென்றால் கம்ப்யூட்டரிலே சரியாக ரிசல்ட் போடமுடியாது.

(6) 6 மாணவர்கள் நேரிடையாகத் தனித் தேர்வுகளாக மனுச் செய்துகொண்டபோது அவர்கள் படித்த மற்ற மாநிலப் பள்ளிகளின் சான்றிதழ்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவர்கள் அனுப்பவில்லை. இங்கே இருக்கின்ற எஸ்.எஸ் எல்.சி.-க்கு அவர்கள் படித்த எஸ்.எஸ்.எல்.சி. ஈக்குவல் என்று சர்டிபிகேட் தர வேண்டும். அதுதரவில்லை.

(7) 2 மாணவர்கள் தேர்வுக்கு மனு அனுப்பாமல் தேர்வு மையத்திற்கு நேரிடையாக சென்று அங்கு தான் தேர்வுக்கு மனுச் செய்துள்ளதாக எழுதிக்கொடுத்து தேர்வு எழுதியுள்ளார்கள், அவர்கள் தேர்வு மனு செய்து கொண்டதற்கான அத்தாட்சி கேட்டு அதற்கான சரியான தகவல்கள் அவர்களிடம் இருநது வரவில்லை.

(8) தங்களின் சான்றிதழ்களில் அதிகாரமற்ற முறையில் திருத்தங்கள் செய்துள்ளார்கள்.





(9) 96 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் அனுப்பப்பட்டு இருக்கிறது. அவர்கள் மனுவில் குறிப்பிட்ட விலாசத்தில் இல்லை என்ற காரணத்தினால் அரசுத் தேர்வுகள் அலுவலகத்திற்கு சான்றிதழ்கள் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டன.

(10) 9 மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட தேர்வு கட்டணம் செலுத்த வில்லை. தேர்வுக் கட்டணம் செலுத்திய கருவூலச் சீட்டும் அனுப்பவில்லை.

இப்போது இருக்கின்ற அந்த ஒன்பது மாணவர்கள் ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபட்டதாலும் மதிப்பெண் சான்றிதழ்களில் அதிகாரப் பூர்வமற்ற முறையில் திருத்தங்கள் செய்துள்ளதாலும் அவர்கள் மீது கடுமையான முறையில் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏம். சின்னசாமி : தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளித் தேர்வானாலும் மற்ற தேர்வானாலும் தேர்வு முடிவுகள் தெரிவதற்கு சற்றுக் காலதாமதம் ஆகிறது. இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்கும் முறையிலே தேர்வு தேதி எப்படி அறிவிக்கப்படுகிறதோ அதைப்போன்று தேர்வு முடிவுகள் தேதி எப்போது வரும் என்பதையும் அறிவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கதபயகம் : தலைவரவர்களே, அநதப் பழக்கம் நாம் வைத்துக்கொள்ளவில்லை. இதற்கு முன்னாலே தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாட்களைவிட சென்ற ஆண்டு நாட்களை நாம் குறுக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு இன்னும் அதைக் கொஞ்சம் குறுக்குவதற்கு நாம் ஏற்பாடு செய்கிறோம். அனுபவத்தின் அடிப்படையில் காலதாமதத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை அரசு ஒவ்வொரு ஆண்டும் எடுத்து வருகிறது.

ருரு. ஏ. சி. சண்முகம் : தலைவர் அவர்களே, தேர்வு நேரங்களிலே ஆசிரியர்கள் விடுப்பு—லீவு—போட்டுவிடுகிறார்கள். ஆகவே தேர்வு காலங்களிலே எந்தப் பணியாக இருந்தாலும் ஆசிரியர்கள் விடுப்புப் போடுவது தவிர்க்கப்படுமா ?

மாதூபுமிகு திரு. செ. அரங்கநாயகம் : லீவு எடுப்பது என்பது பல்வேறு காரணங்களுக்காக ஆசிரியர்கள் எடுக்கலாம். நாம் அனுமதி தந்துதான் தீரவேண்டும். ஆனால் நம்முடைய பரிட்சைகளை நடத்த முடியாத அளவுக்கு ஏதாவது எடுப்பார்களானால் அதுபற்றி அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

ஆர் எஸ் மங்கலம் மேல்நிலைப் பள்ளியில் தேசிய மாணவர் ஆரம்பிக்கும் திட்டம்

*வினா எண் 632— திரு. செ. சிவசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர். எஸ். மங்கலம் மேல்நிலைப் பள்ளியில் N.C.C. ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : ஆர். எஸ். மங்கலம் மேல்நிலைப்பள்ளியிலிருந்து தேசிய மாண வர் படை ஆரம்பிப்பதற்கு விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. ஆனால் போதுமான படை ஒதுக்கீடு இல்லாமையால் இப் போது ஆரம்பிக்க இயலாது. புதுடெல்லியிலுள்ள தேசீய மாணவர் படை இயக்குநர் தலைவர் அலுவலகத்திலிருந்து தமிழக தேசீய மாணவர் படைக்கு கூடுதலான படை ஒதுக்கீடு (additional troop allotment ) பெறப்பட்டால், இம்மாதிரி யான மற்ற பள்ளிகளின் கோரிக்கைகளுடன் இப்பள்ளி யின் கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, ஆர். எஸ். மங்களம் பள்ளியிலும் சரி, சுற்றுப்புறத்திலே இருக்கின்ற உயர் நிலைப்பள்ளியிலும் சரி அநதப் பகுதியிலே என்.சி.சி. இல்லாத தன் காரணத்தால் அரசு மீண்டும் பரிசீலனை செய்து அதைக் கொண்டு வர ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநயகம் : தலைவர் அவர் களே, நாம் அதிகமான அளவில் நடத்தவேண்டுமென்றுதான் விரும்புகிறேன். ஆனால் அது மத்திய அரசினுடைய அனுமதி யைப் பெற்றுத்தான் செய்யப்பட வேண்டும். நாம் அதைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதிகமாக தேசிய மாணவர்கள் படையை அவர்கள் அனுமதிப்பார்களானால் நாம் இதுபோன்ற பள்ளிகளுடைய கோரிக்கையை ஆலோசிக்கலாம்.

திரு. கே. தனக்கோடித் தேவர் : தலைவர் அவர்களே, நாம் குடும்ப நலத் திட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகின்ற நேரத்திலே பிற்காலத்திலே நாட்டிறகுப் பாதுகாப்பு தேவைப் படும் என்பதால் கட்டாயமாக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நிலைபில்நாம் கட்டாயப்படுத்த முடியாது. அதுமட்டுமல்ல, இப்போது இருக்கின்ற தேசிய மாணவர் படையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுக்கவு



தற்கே மத்திய அரசு அனுமதிக்காமல் இருக்கிறபோது எல்லா மாணவர்களுக்கும் தேசிய மாணவர் படை பயிற்சி அளிக்க வேண்டுமென்று கேட்டால் நிச்சயமாக அவர்கள் தர மாட்டார் கள். அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்கிறபோது அனு மதித்தால் அதிகப்படுத்தலாம்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் மத்தியில் ஒழுங்கீனம் அதிகமாகி கட்டுப்பாடற்ற நிலையில் அவர்கள் இருக்கிறதால், மத்திய அரசி டமிருந்து நிதி குறைவாக வந்திருந்தாலும், மாணவர்களிடத்தில் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் வளர்க்கும் விதத்தில் மாநில அளவிலே ஸ்கவுட் மூவ்மெண்ட்ஸ் போன்ற பயிற்சியை அமுல் படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்நாகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலே பாடங்களைத்தான் நாம் கட்டாயப் படுத்திக் கொண்டு வருகிறோம். ஒழுங்கனத் தையும், கட்டுபாடற்ற தன்மையும் குறைப்பதற்கு சில இயக் கங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று ஆரம்பிக்கிறோம் அதிலே ஒன்று என்.சி.சி. அது டிபென்ஸ் சம்பந்தமான பயிற்சி யாக இருப்பதால் இதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறவேண்டும். துப்பாக்கியெல்லாம் கொடுத்து பயிற்சி தர வேண்டியிருக்கிறது. அதற்கு அடுத்து என்.எஸ்.எஸ். அதிலே மாணவர்கள் சேர்ந்து மக்களுக்கு தொண்டு செய்வதன் மூலமாக கட்டுப்பாடு மட்டும் அல்லாமல் மக்களுடன் சேர்ந்து தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்கிறார்கள். ஸ்கவுட்டிலே கூட மேல்நிலை பயிற்சியை நாம் தரலாம். இருப்பினும் அவர்களாக இஷ்டப் பட்டு வருகிறபோது நாம் பயிற்சி அளித்தால் தான் அது வெற்றி பெறுமே தவிர நாம் கட்டாயப்படுத்துவது சரியாக இருக்காது. மாணவர்கள் அவர்களாக முன்வர வேண்டும். மாணவர்கள் ஏதாவது ஒரு பயிற்சியில் இருப்பது அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்கு அல்லது வேலைவாய்ப்பு தேடிச் செல்கிறபோது உதவியாக இருக்கும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.எஸ்.எஸ்.-ல் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு மத்திய அரசு அனுமதி தரவில்லை யென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். என்ன காரணத் தாலே அனுமதி தரவில்லை ? இந்த நிலையில் தமிழ்நாடு கேட்ட் கார்ப்ஸ் என்று தமிழ்நாடு அரசு சார்பிலே ஆரம்பிக்க திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கேடட் கார்ப்ஸ் என்று நாம் தனியாக ஒரு படையை ஆரம்பிப்பது அவ்வளவு வரவேற்

கக்கூடிய கருத்தாக படவில்லை. இந்த தேசிய மாணவர் படை மூலம் கிடைக்கக்கூடிய பயிற்சி அதிகப்படியான மாணவர் களுக்கு கிடைக்க வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள் கிறது. எல்லா மாணவர்களுக்கும் கொடுத்தால் கூட இந்த அரசு மகிழ்ச்சி அடைகிறது. அதற்கு பயிற்சி தரவேண்டிய பொறுப்பு என்.எஸ்.எஸ். டைரக்டரேட் வசம் இருக்கிறது. அது ஒரு சென்ட்ரல் கவர்ன்மெண்ட் அமைப்பாகும். ஆகவே அவர்கள் அகில இந்திய அளவிலே தான் இந்த ஒதுக்கீட்டை செய்து கொண்டு வருகிறார்கள். நாம் அதிகம் கேட்கிறோம் அவர்கள் கொடுத்தால் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு முயற்சியை மேற்கொள்வோம்.

## பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கான நீதிமன்றங்கள்.

வினா எண் 633: திரு. ஏ.எம். சேதுராமன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் விசாரணைசெய்ய குற்றவியல் நீதி மன்றங்கள் ஏற்படுத்தும் உத்தேசம் அரசிடமுள்ளதா ?

(ஆ) மாவட்டங்கள் ரீதியில் அவைகள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பெண்களுக்காக குற்றவியல் நீதிமன்றங்கள் ஏற் படுத்தும்போது ஜட்ஜ்களாக இருக்கிறவர்கள் பெண்களாக நியமிக்கப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகள் பெண்களாகத் தான் இருக்க வேண்டுமென்ற அவசியமும் இல்லை; அதற்கு சாத்தியக்கூறும் இல்லை. பெண்கள் நீதிபதியாக இருக்கிற பகுதிகளிலே அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் குற்றவாளிகளாக கருதப்பட்டு அவர்களை காவல் நிலையங்களிலிருந்து அழைத்துச் செல்லும்போது பெண் காவலர்களை வைத்து அழைத்துச் செல்லப்படுமா ? அதேபோல



விசாரணைக்காக கோர்ட்டுகளுக்கு அழைத்து செல்லும் பெண் காவலர்களுடைய காவலில் இருக்க அனுமதி தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல்ல ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்கு தனி கோர்ட் அமைக்கவிருப்பதாகசொல்லியிருக்கிறார் கள். பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை இன்-கேமரா முறை யிலே விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்-கேமரா முறையை பொறுத்தவரையில் ஏற்கனவே சட்டத்திலே வழிவகை இருக்கிறது. It is left to the diseretion of the Judiciary[ அது டிஸ்கிரிஷன் என்ற அளவிலே இருக்கிறதால் பல இடங்களில் பெண்களே முன் வந்து பெண்கள் சார்பிலே வழக்குரைஞர்களை வைத்து இன்-கேமரா முறையிலே விசாரிக்க வேண்டுமென்று சொன்னால் அந்த முறையிலே விசாரிக்கலாம். அவ்வாறு கேட்க வில்லையென்றால் நடக்காமலும் போய்விடுகிறது. உயர்நீதிமன் றத்தோடு அரசு இதுபற்றி கலந்து இன்-கேமராவிலே முடிந்த அளவிற்கு அதிகப்படியான பெண்கள் வழக்குகளை நடத்து வதற்கு வாய்ப்பளிக்கவேண்டும் என்று அரசு கேட்கும்.

(முற்பகல் 9-20)

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நீதிதுறை மற்றும் எல்லாத் துறைகளிலும், பெண்கள் அதிக அளவில் புகுத்தப்படுவதால், 'ஆரவல்லி இராஜ்யம்' ஏற்பட்டு, பெண்களுக்கு ஆண்கள் அடிமை என்ற அபாயம் ஏற்படாத என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்குத் தேவையான பிரதிநிதித்து வமே இல்லை என்பதுதான் குறையாக இருக்கிறது.

## மதுராந்தகம் நகராட்சிக்குப் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கும் திட்டம்.

வினா எண் 634:— திரு எஸ். டி. உகம்சந்த் ; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுராந்தகம் நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் எப்போது பூர்த்தியாகும் ?

(ஆ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இத் திட்டம் மார்ச், 1982 இறுதியில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) இத் திட்டத்திற்கு மதிப்பீடு ரூ. 32.92 இலட்சங்களாகும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மதுராந்தகம் நகரத்தில் உள்ள குடிநீர்ப் பிரச்னையைத் தீர்த்துவைத்திருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் இந்தத் திட்டம் மூன்று கிணறுகளைத் கொண்டு ஆரம்பிக்கப்படவேண்டுமென்று மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் இரண்டு கிணறு வேலைகள் தான் இதுவரையில் பூர்த்தியாகியிருக்கிறது. மேலும், மூன்றாவது கிணறு வேலை பூர்த்தியாக்கப்படவில்லையென்று தெரிகிறது. அதையும் பூர்த்தி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. எல்லா வேலைகளையும் பூர்த்தியாக்கி, மார்ச் இறுதிக்குள் தண்ணீர்கொடுக்க முழுமையான ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன், மதிப்பீடு ரூ. 32.92 இலட்சங்கள் என்றாலும், இப்பொழுதே ரூ. 27.23 இலட்சம் ஆகியிருக்கிறது; ரூ. 5 இலட்சம் அதிகமாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகளுக்குக் குடிநீர் இணைப்பு எப்பொழுது கொடுக்கப்படும் ? இதற்காக யாருக்கு உரிமம் வழங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்கு ஹவுஸ் கனெக்ஷன்ஸ் வேண்டுமென்று மனு செய்தால் அதன் மெரிட்ஸ் மீது அவர்கள் கவனிப்பார்கள்.



## வேலூர் காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கென தனிப்பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

வினா எண் 635—திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தொழிலாளர் நல வாரியத்தின் 13 ஆவது கூட்டத்தின் 3 ஆவது தீர்மானத்தின்படி வேலூர் காசநோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கென தனி பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எத்தனைப் படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 13 வது கூட்டத்தின் 3வது தீர்மானத்தின்படி வேலூர் காச நோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்கென 24 படுக்கைகள் கொண்ட தனிப்பிரிவு ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தொழில்கள் அபாயகரமான தொழில்கள் ஹஸார்டுவஸ் இன்டஸ்ட்ரீஸ். அந்தத் தொழில்கள் செய்வதன் மூலமாகக் காச நோய் வருகின்ற நிலை சிலருக்கு உண்டு. உதாரணமாக, கெமிக்கல் அண்ட் மன்ஓர்க்கர்ஸ், பீடி ஓர்க்கர்ஸ், இன்னும் பெர்ட்டிலைசர்ஸ் ஓர்க்கர்ஸ், செய்பவர்களுக்கெல்லாம் அனல் மின் நிலையத்தில் வேலை இருக்கிறது. ஆகவே, காச நோய் வரக்கூடிய வாய்ப்பு அவர்கள், அரசுக்குச் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் குறிப்பாக, சொந்தமான எல்லா மருத்துவ மனைகளிலும், கட்டாய இந்த மாதிரியான ஹார்டுவஸ் ஓர்க்கர்ஸுக்குக் என்பதை மாகப் படுக்கைகள் ரிசர்வ் செய்ய முன்வருவார்களா அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இாகவானந்தம் : தலைவர் அவர்களே, அரசாலேயே, காச நோய் மருத்துவ மனைகள் நிரம்ப ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றன. தொழிலாளர் களுக்கென தனியாக அந்தப் பகுதிகளில் தேவையென தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டு வருவார்களேயானால், அந்த வாரியத்தின் தலைவர் என்ற முறையில் நாங்கள் எல்லாம் உட்கார்ந்து ஆலோசனை செய்து, பரிசீலனை செய்து, அதற்கு வேண்டிய முடிவுகள் எடுத்துச் செயல்படுத்துகின்றோம்.

திரு. ஜே. ஹேமச்சந்துரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலூர் காச நோய் மருத்துவ மனையில் இட ஒதுக்கீடு செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். பீடித் தொழிலாளர்களுக்குத் தனியாக செஸ் நிதியில் இப்படிப்பட்ட ஏற்பாடு செய்யப்படுகிறதா? அப்படியென்றால், செஸ் நிதியிலிருந்து இதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொழிலாளர் நல வாரியம் சம்மந்தப்பட்ட கேள்வி. செஸ் நிதி பற்றியது அல்ல. இருந்தாலும் அந்த செஸ் நிதிகூட நிறுத்தப்பட்டு, இந்த அரசினுடைய முயற்சியால் அதை மத்திய அரசாங்கம் மீண்டும் கொண்டு வந்திருக்கிறது. தனிக்கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் அதிகம் பேர்கள் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே அந்த 24 படுக்கைகளை மேலும் உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா? 24 படுக்கைகளை இவர்களுக்கு ஒதுக்கிவிட்டால் பொது மக்களுக்கு இட நெருக்கடி ஏற்பட்டு அவர்கள் பாதிக்கப்பட மாட்டார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இந்த 24 படுக்கைகள் தனியாக அந்தத் தொழிலாளர்களுக்காவே கட்டப்படும். பொதுமக்களுக்கு என்று இருக்கும் படுக்கைகளில் இருந்து எடுத்துக் கொள்வதில்லை. தனியாக இது கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இவர்களுக்குத் தனியாக கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அந்தக் கட்டடம் எப்போது கட்டப்படும்? தொழிலாளர்களிடத்தில் எப்போது ஒப்படைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட கோப்பு, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, பொதுப்பணித் துறை, மற்றும் நிதித் துறைக்கு 2-3-1982 அன்று அனுப்பப்பட்டுள்ளது. விரைவிலே அது வரப்பட்டவுடன் வேலைகள் துவங்கப்படும்.



## கோவை சிறுவாணி குடிநீர்த் திட்டம்

வினா எண். 633 திரு. மா. சின்னராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கோவை-சிறுவாணி குடிநீர்த் திட்டத்தின் கீழ் தொண்டாமுத்தூர் தொகுதியில் (அதாவது கோவை நகருக்கு [illegible]) எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யப்படும்?

(ஆ) மேற்கொண்டும் சில கிராமங்களை இத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) 16 கிராமங்கள்

(ஆ) இயலாது.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, Wayside Village Scheme என்ற திட்டத்தின்கீழ் சிறுவாணி குழாய்கள் வருகிற பகுதிகள் தொண்டாமுத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த நான்கே நான்கு கிராமங்கள் தவிர அத்தனை, கிராமங்களின் வழியாக வந்து, அத்தனை கிராமங்களும் பயன்பெற்றிருக்கின்றன. மாயாம்பட்டி — தென்கரை என்ற பேரூராட்சியும், வேளாம்பட்டி—தெனமல்லூர் என்ற இரண்டு கிராமப் பகுதிகள் மட்டுமே விடப்பட்டிருக்கின்றன. அந்த கிராமங்களின் வழியாகவும் இந்தக் குழாய்கள் செல்லுகின்றன. அதற்குத் தேவையான தண்ணீர் மிகக் குறைவாக இருக்கிறது. அரசு எல்லா கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுக்கின்றபோது இந்த கிராமங்கள் விடப்பட்டால் அந்த கிராம மக்களுக்கு அதிருப்தி ஏற்படும் என்ற காரணத்தினாலும், மிகுந்த குறைவான அளவே செலவு ஏற்படும் என்ற காரணத்தினாலும் இவைகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று நான் கோரிக்கை விடுத்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு இதைச் சேர்த்துக் கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, ஆலந்துறை, புலவர்பட்டி, பேரூர், தொண்டாமுத்தூர், வட்டவள்ளி, தாயூர் வீரகிழாரம், குறிச்சி, குரியமுத்தூர், சூலூர், தித்திப்பாளையம், பேரூர்செட்டிப் பாளையம், நரசிபுரம், மாதவாராயபுரம், தேவராயபுரம், செப்பேடு, ஆகிய 16 வழிவரும் கிராமங்களுக்கும் தண்ணீர் தருகிறோம். சிறுவாணி தண்ணீரில் இருந்து எவ்வளவு எடுப்பது என்று முடிவாகி இருக்கின்றது. அதைத்தான் வழிவரும் கிராமங்களுக்குக் கொடுக்க முடியும். அதற்கு மேல் அதிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாது. இதைத்தவிர வேறு வழிவரும் கிராமங்களுக்கு சிறுவாணி நீர்திட்டத்தில் இருந்து கொடுப்பதற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே இந்த (Way side Village Scheme) திட்டத்தில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு? இதில் ஊராட்சி மன்றங்களுடைய செலவை பொறுத்தவரையில் அரசு மானிய

மாக ஏற்றுக் கொள்கின்றது. பேரூராட்சி பகுதிகளுக்கு அது மிக சின்ன குக்கிராமங்களைக் கொண்டதாக இருக்கின்ற பேரூராட்சிகளாக இருக்கின்ற காரணத்தால், அந்த செலவை மானியமாக அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. பெரும்பாலான அந்தப் பேரூராட்சிகள் அந்தத் திட்டச் செலவை கட்டமுடியாமல் இருக்கின்றன. ஆகவே இதையும் மானியமாகவே ஏற்றுக் கொண்டு சில இடங்களில் அது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கின்றது. அதேபோல் இதையும் மானியமாக ஏற்றுக் கொள்ள அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். இந்தத் திட்டத்தின் கீழ் எப்போது அந்த கிராமங்களுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கேள்வி, கோவை சிறுவாணி குடிநீர்த் திட்டத்தின் கீழ் தொண்டாமுத்தூர் தொகுதியில் (அதாவது நகருக்கு மேற்கு) எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யப் படும் என்பது பற்றியதாகும். அது பற்றிய தகவல்களைக் கொடுத்திருக்கிறேன். மற்றத் தகவல்களுக்கு தனிக் கேள்வி போட்டால் தருகிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில்சொல்லுகின்ற நேரத்தில் சிறுவாணி குடிநீர் திட்டத்தின் கீழ் 16 கிராமங்களுக்கு விரிவாகக்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். புதிதாக அறிவிக்கப்பட்டிருகின்ற மாநகாராட்சிக்குட்பட்ட காளப்பட்டு பகுதிகளுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கேள்வி நகருக்கு மேற்குபகுதியைப் பற்றியது. அந்த ஒரு பகுதியைத்தான் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள 16 கிராமங்களைப் பற்றி தகவல் கொடுத்து இருக்கிறேன். தங்களுக்கு கீழ்ப் பகுதி வேண்டும் என்றால் அதற்காக தனிக் கேள்வி போட்டால் தகவல் தருகிறேன்.

வைகைத் தண்ணீரை கம்பிக்குடி மற்றும் பெரியகண்மாய் களுக்கு திருப்பி விடும் திட்டம்.

வினா எண் 637—திரு. எம். பிச்சை : மாண்புமிகு நீர்ப்பாசனத் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலையூர் கண்மாயில் வரும் வைகை தண்ணீரை உலகாணி கால்வாய் மூலம் அருப்பு கோட்டை தொகுதியில் உள்ள கம்பிக்குடி மற்றும் பெரிய கண்மாய்களுக்கு திருப்பி விட அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) இக்கால்வாய் ஆழப்படுத்தப்படுமா?

(இ) ஆம் எனில், வேலை எப்பொழுது தொடங்கும்,



(ஆ) விரிவாக ஆய்வு செய்தபின் இதுபற்றி முடிவு செய்யப்படும்.

(இ) முன்னுரிமைத் திட்டங்களின் ஆய்வுகள் முடிந்தபின் இவ்வேலைக்கான ஆய்வு எடுத்துக்கொள்ளப்படும்.

(முற்பகல் 9—30)

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஆய்வில் இல்லை என்று சொன்னார்கள். பின்னால் பரிசீலிக்கலாம் என்றும் சொன்னார்கள். வைகை அணை கட்டி முடிக்கிறபோது அதை விஸ்தரிக்கிறபோது, ஏற்கெனவே வைகை அணையின் மூலமாக பாசன வசதி பெறுகின்ற நிலங்களுக்கு விஸ்தரிப்பு கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று அரசு ஏற்கெனவே ஒரு முடிவு எடுத்துள்ளது. அன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராக இருந்த சின்னகருப்பத்தேவர் எல்லாம் அதை வலியுறுத்திப் பேசி இருக்கிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி என்ன என்று சொல்லுங்கள்; 20 வருஷ கதைக்குப் போக வேண்டாம்.

திரு. க. பாரமலை : அதையும் கவனத்தில் கொண்டு இதை விஸ்தரிக்கின்றபோது, வைகை அணைக்கட்டினால், ஏற்கெனவே, பாசன வசதி பெற்ற பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : வைகை கால்வாய் மேம்பாட்டுத் திட்டம் ஏற்பட்டு 394 இலட்சத்தில் நிறைவேற்றப்பட மார்ச்சு 1968-இல் அரசால் அனுமதிக்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பிறகு 823 இலட்சத்திற்கான திருத்திய மதிப்பீடு ஜூலை 1977 இலே அனுமதிக்கப்பட்டது. அந்த வேலைகள் எல்லாம் 1977 லே முடிந்தது. இந்த திட்டத்தின் நோக்கமே, புதிய நிலங்கள் பாசன வசதி பெறாது, ஆனால், ஆயக்கட்டுகளில் சேர்ந்திருந்தும், பாசன வசதி பெற முடியாத அளவிற்கு இருந்த 13,900 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி பெறவும், ஏற்கெனவே பாசன வசதி பெற்ற நிலங்களுக்கு நிலையான பாசன வசதி பெறுவதற்கும், இத்திட்டம் தீட்டப்பட்டு, அதற்குப் பிறகு 1979-லே ஏற்பட்டபெரும் வெள்ளம் காரணமாக பல பகுதிகள் உடைந்து, அதை ரீ-டிசைன் செய்து கொண்டிருக்கிறோம். அந்த வேலைகள் எல்லாம் முடிந்ததற்குப் பிறகுதான் திரும்பவும், ஏதாவது எடுக்கமுடியுமா என்பதை

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் இருக்கின்ற அந்த நிலை
யூர் கண்மாயிலே வரும் தண்ணீர் திருமங்களம் தொகுதியிலே
இருக்கின்ற உலகாணி கால்வாய் வழியாக அருப்புக்கோட்டை
தொகுதிக்குச் செல்வது என்பது நல்ல திட்டம் தான். வருடம்
எல்லாம் வறண்ட நிலையிலே இருப்பவர்களுக்கு அது ஒரு வரப்
பிரசாதமாக இருக்கும். இப்போது வைகைக் கால்வாயை நவீன
மாக்குகின்ற காரணத்தினால், தண்ணீர் எஞ்சி இருக்கின்றபோது,
அந்தப் பகுதியிலே இருக்கின்ற பிற்பட்ட நிலைகளைக் கருத்தில்
கொண்டு, அரசாங்கம் இதை விரைவிலே பரிசீலித்து நடவடிக்கை
எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, இப்போது ஏற்கெனவே, 1977–79-லே
ஏற்பட்ட வெள்ள உடைப்புகளை சரி செய்வதற்கு 313 இலட்சம்
நாம் மதிப்பீடு தயார் செய்யப்பட்ட பிறகு இது அரசினுடைய
பரிசீலனையில் இருக்கிறது. அந்த வேலைகள் முடிந்த உடனே,
இதை நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடனா நீர்த்தேக்கத்திலிருந்து மேல்மட்டக் கால்வாய் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 638—திரு. என்.எஸ்.வி. சித்தன் : மாண்புமிகு
நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் கடனா நீர்த்தேக்க மேல்
மட்ட கால்வாய் புதிதாக அமைக்க அரசின் பரிசீலனையில்
உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ):
கைவசமுள்ள திட்டங்களின் ஆய்வுகள் முடிந்தவுடன், இத்திட்
டம் முதல் நிலை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும் என தலைமை
பொறியாளர் (ஆய்வு) தெரிவித்துள்ளார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, மாண்புமிக்க அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலி
லே, அடுத்த இந்தக் கைவசம் இருக்கின்ற திட்டங்களை எடுத்துக்
கொண்டு நிறைவு பெறும், அப்படி பின்னாலே, அவைகளுக்கு
முன்னுரிமை கொடுத்து எடுக்கப்படுகிற நேரத்திலே, இப்போது



ஏதாவது பூர்வாங்க ஆய்வை ஒரு முன்னுரிமையாக எடுத்து இருக்
கிறீர்களா. அப்படி எடுத்திருந்தால், அதனுடைய விபரங்கள்
என்ன என்பதை சபைக்கு அறிவிக்க முடியுமா என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : திருநெல்வேலி
மாவட்டத்தில் கடானா நீர்த்தேக்கத்தில் கிடைக்கும் உபரி நீரை
அரசப்பட்டி வாய்க்காலில் இருந்து கடானா உயர்மட்ட கால்வாய்
வழியாக விட்டு, அதன்மூலம், கடானா ஆற்றில் வடபகுதியில்
உள்ள 11 மானாவாரி குளங்களை நிரப்புவதுதான் இதனுடைய
நோக்கம். ஏற்கெனவே, ஒரு பிரிலிமினரி இன்வஸ்டிகேஷன்
ஒரு தோராயமான முதல் நிலை ஆய்வு நடத்தப்பட்டு இருக்கிறது.
அதன்படி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், 677 ஏக்கர்
நிலங்கள் பாசன வசதி பெறும். 65 ஏக்கர் நிலங்களில் பாசன
வசதி பற்றாக்குறையைப் போக்கவும், 118 ஏக்கர் புதிய நிலங்
களுக்கு பாசன வசதி பெறுவதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது
என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இந்தக் கடையம்
பஞ்சாயத்து ஒன்றியம் ; தெற்கு மடத்தூர்; வடமலைப்பட்டி,
வெங்காரம்பட்டி ஆகிய பகுதிகளிலே; இதிலே நம்முடைய
பேரவைத் துணைத் தலைவர் அவர்களுடைய அந்தத் தொகுதி
யைச் சார்ந்திருக்கக்கூடிய சில குளங்கள் அதிலே பயன்பெறு
கின்றன. அதற்காகச் சொல்லவில்லையென்றாலும், பொது
வாகவே அதைத் தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டுமென்று
இப்பொழுது அரசு கருதிக்கொண்டு இருக்கிறது.

காவிரி டெல்டாப் பகுதியை நவீனப்படுத்தும் திட்டம்.

*வினா எண். 639—திரு. எம். சின்னசாமி, திரு. கு.
ரமணி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நதியின் டெல்டா பகுதியை நவீனப்படுத்தும்
திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இந்திய அரசு இந்தப் பணிக்கு நிதி உதவி செய்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) காவிரி நதியின்
டெல்டாப் பகுதியை நவீனப்படுத்தும் திட்டம் அரசின்
பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ரூ. 366.60 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்
டுள்ளன.

(இ) மத்திய அரசின் மூலமாக உலக வங்கியின் நிதிஉதவி
கோரலாமா என்பதும் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, இந்தத் திட்டம் எந்த ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டது?
ஏன் இன்னும் செயல்படவில்லை. இப்பொழுது அந்தத் திட்டம்
என்ன நிலையில் உள்ளது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்
பார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் தலைவ
ரவர்களே, காவிரி டெல்டா பகுதியை நவீனப்படுத்துவதற்கான
பணிகள் 1967 ஆம் ஆண்டு முதலே அரசால் ஒரு ஒட்டுமொத்த
மாக ஒதுக்கீடு செய்யப்பட்டு அதிலிருந்து அந்தத் திட்டங்கள்
நிறைவேற்றப்பட்டு வந்தன. ஆனால் 1969 ஆம் ஆண்டில் 49
கோடி ரூபாய் செலவில் காவிரி டெல்டாவை நவீனப்படுத்து
வதற்கான ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு முதலிலே
உலக வங்கியினுடைய நிதியைக் கோரி அனுப்பப்பட்டது.
அதற்குப் பிறகு காவிரி நீரைப் பங்கீடு செய்வதில் காவிரிப்
படுகை மாநிலங்களிடையே தீர்வு ஏற்படாததால் இது ஏற்றுக்
கொள்ளப்படவில்லை. அதற்குப் பிறகு 1976 ஆம் ஆண்டு
ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் மேலும் ஒரு திட்ட அறிக்கை
தயாரிக்கப்பட்டது. அப்பொழுது இந்தத் திட்ட அறிக்கை
தயாரிப்பதில் மத்திய நீர்க் குழுவினுடைய பிரதிநிதிகளும் இடம்
பெற வேண்டுமென்று மத்திய அரசு விரும்பிய காரணத்தாலே
நாம் திரும்பவும் அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு கொடுத்துப்
புதிய முறையிலே வேளாண்மை முறைகள், சாகுபடி தன்மை
விற்பனை வசதிகள், நிறுவனக் கடன் வசதிகள், நிலத்தடி நீர்
கிடைப்பது, செலவு, பயன் விகிதம் பற்றிய அனைத்து
விவரங்களையும் சேகரித்துப் பல்நோக்குத் திட்டமாக 1976 லே
இந்தத் திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்குச் சில முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டன. அதற்குப் பிறகு 23-7-1980 இல்
சிறப்பு அலுவலர், ஒருவரை, இண்டர்ஸ்டேட் வாட்டர் கன்வீன
ராகக் கொண்டு இந்த நிலைமைகளையெல்லாம் கருத்தில்
கொண்டு காவிரி டெல்டாவை நவீனப்படுத்துவதற்கான திட்ட
அறிக்கையைத் தயாரிப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டது.
இக்குழு, 366.60 கோடி ரூபாய் செலவில் காவிரி டெல்டாவை
நவீனப்படுத்துவதற்கான ஒரு திட்ட அறிக்கையைத் தயார்
செய்து அரசுக்கு இப்பொழுது கொடுத்திருக்கிறது.



திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசின் மூலமாக உலக
வங்கியிடம் உதவி கேட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்
னார்கள். எவ்வளவு தொகை உதவியாக அரசு கேட்டிருக்கிறது
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர்
அவர்களே, காவிரி நதி நீர்ப் பங்கீடு பற்றி காவிரிப் படுகை
மாநிலங்களிடையே இன்னும் ஒப்பந்தம் ஒன்றும் ஏற்படாத
காரணத்தினால் இது இப்பொழுது தயாரிக்கப்பட்டு மத்திய
அரசின் மூலமாக உலக வங்கியினுடைய நிதியைக் கோரலாமா
என்கின்ற அளவிலே அரசின் பரிசீலனையில்தான் இருக்கிறது.

திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு சட்டப்பேரவைத்
தலைவரவர்களே, நீர் வளம், நிலவளம் ஆகியவற்றில்
காவிரி டெல்டாப் பகுதிக்கு-தஞ்சையிலுள்ள பகுதிக்கு இணை
யாக சிதம்பரம் பொதுப் பணித் துறையிலுள்ள நீர்ப்பாசன
வாய்க்கால்கள் இருக்கின்றன. அது மாத்திரம் அல்லாமல்
மேட்டூர் அணை கட்டப்படுவதற்கு முன்பே சோழப் பேரரசர்
களால் கட்டப்பட்ட லோயர் அணைக்கட்டு, சேத்தியா தோப்பு
அணைக்கட்டு வழியாகப் பாய்கின்ற நீர்ப்பாசன வாய்க்கால்களை
நவீன மையமாக்க வேண்டுமென்று தமிழக தலைமைப் பொறி
யாளர் அலுவலகம் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறதா ?
ஆம் என்றால் காவிரி டெல்டாப் பகுதியை நவீனப்படுத்தும்
திட்டத்தைச் சிதம்பரம் பொதுப்பணித்துறை டிவிஷனுக்கு
நீட்டப்பட அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே,
இந்தக் கேள்வி காவிரி டெல்டாவினுடைய ஒட்டு மொத்தமான
ஒரு பொதுத் தன்மையைக் கருதி உருவாக்கப்பட்ட திட்டம்.
தனிப்பட்ட முறையிலே சேத்தியா தோப்பு அணை மற்றவை
களெல்லாம் நாம் ஆண்டுதோறும் தோராயமாக, சென்ற
காவிரியினுடைய டெல்டாப் பகுதிகளிலே சிலவற்றை நவீனப்
படுத்துவதற்கு இப்பொழுது பணம் ஒதுக்கீடு செய்து கொண்
டிருக்கிறோம். ஒன்று, அதிலே இதை எடுத்துக்கொள்வதா
அல்லது இதிலே சேர்த்துக்கொள்வதா என்பதைப் பற்றி
வேண்டுமானால் அரசு பரிசீலனை செய்திருக்கும் என்று நினைக்
கிறேன். தனிக் கேள்வியாகப் போட்டால் தெளிவாக விளக்கம்
சொல்லலாம்.

[முற்பகல் 9–40]

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, காவேரி டெல்டா பகுதியை மேம்பாடு செய்வது என்பது நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் தரணியை மேலும் சிறப்பான வகையில் பயிர் வளம் கொழிக்கச் செய்வதற்கான ஒரு முயற்சி, அந்தப் பகுதி வெள்ளக்காலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது. வறட்சிக் காலத்தில் தண்ணீர் வராமல் பாதிக்கப்படுகிறது. இந்த காவிரி நதி நீர் பற்றி தொடர்ந்து பேச்சுவார்த்தையும் நடைபெற்று வருகிறது. தஞ்சைத் தரணி வறட்சியிலும் வெள்ளத்திலும் பாதிக்கப்படுவதினால் அரசு துரிதமான நடவடிக்கை எடுத்து, பேச்சுவார்த்தையை முடித்து, அந்தப் பகுதியை மேம்பாடு செய்ய துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே குறிப்பிட்ட மாதிரி காவிரி நதி டெல்டா பகுதி மழைக்காலத்திலும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்படுகிறது; வறட்சிக் காலத்திலும் தண்ணீர் வராமல் பாதிக்கப்படுகிறது; ஆகவே, விரைவில் அந்த டெல்டா பகுதியை மேம்படுத்துவதோடு நவீனப்படுத்தும் திட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே எந்த எந்த பகுதிகள் என்பதெல்லாம் குறிப்பில் இல்லை. பொதுவாக நவீனப்படுத்தும் திட்டத்தினுடைய நோக்கமே தஞ்சை மாவட்டத்தினுடைய நிலைமைகளைப் கருதிப் பார்த்து உருவாக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வஃபு போர்டு

*வினா எண். 640—திரு. கே. ரமணி : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—



(ஆ) ஆம் எனில் அதற்கான காரணங்கள் யாவை ?

(இ) வக்ஃபு போர்டின் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முறைகேடுகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) வக்ஃபு வாரியத்தின் பெரும்பான்மை உறுப்பினர்கள் வாரியத் தலைவரோடு கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். இதனால் வக்ஃபு வாரியத்தின் பணிகளும் கடமைகளும் தடைபட்டு அது செயலற்ற நிலையிலிருந்தது. மீண்டும் வக்ஃபு வாரியத்தை இயங்கச் செய்யும் நோக்கத்தில் அரசு வக்ஃபு வாரியத்தைக் கலைத்தது.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த வக்ஃபு போர்டை கலைத்து விட்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது அந்த வக்ஃபு போர்டு இயங்குகிறதா? மேலும் வக்ஃபு போர்டுக்கு சில குறைகளைப் பற்றி எழுதினாலும் அங்கே இருக்கிறவர்கள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா ? கும்பகோணத்தில் இப்படிப்பட்ட வக்ஃபு போர்டுக்குச் சொந்தமான இடங்களை சமூக விரோதிகள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, அங்கிருந்து சில சமாதிகளைக் கூட அடித்துத் தள்ளியிருந்தார்கள். வக்ஃபு போர்டுக்கு அதுபற்றி எழுதியிருக்கிறேன். இப்படிப்பட்ட காரியங்களில் இனி மேலாவது அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, புதிதாக வக்ஃபு போர்டு திருத்தி அமைக்கப்பட்டு, இப்போது செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பிரச்சனைகளை அரசு எற்கனவே தலையிட்டு, நியாயம் வழங்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும். முஸ்லீம், முஸ்லீம் அல்லாதவர்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். வழக்கு மன்றம் இருக்கிறது. எனவே அரசு இதிலே செயல்பட முடியாமல் அல்ல. நிதானமாக ஆனால் உறுதியாக செயல்படுகிற கொள்கையை கடைபிடிக்கிறது. தொடர்ந்து இந்த முறை பின்பற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1982 மார்ச் 2

கரும்புக் சாறிலிருந்து எரி சாராயம் தயார் செய்யும் திட்டம்.

* வினா எண் 641—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) கரும்புச் சாறிலிருந்து எரிசாராயம் தயார் செய்து மோட்டார் வாகனங்களுக்கு பயன்படுத்தும் முறையை ஆராய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) கரும்புச் சாறிலிருந்து நேரடியாக எரி சாராயம் தயார் செய்து மோட்டார் வாகனங்களுக்கு பயன்படுத்தும் முறையை அரசு இதுவரை மேற்கொள்ளவில்லை. ஆனால் கரும்பு சாறிலிருந்து சர்க்கரை எடுக்கப்பட்ட பிறகு அதிலிருந்து உண்டாகும் கழிவுப் பொருள்களில் ஒன்றான மொலாசசிலிருந்து எரிசாராயம் தயாரிக்கப்பட்ட பின்பு அதனை பெட்ரோலுக்குப் பதிலாக 'எத்னீால்' என்கிற பெயரில் அரசு மோட்டார் வாகனங்களுக்கு உபயோகிக்கலாம் என்கிற உத்தேசம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) தமிழக அரசுக்குச் சொந்தமான முன்று வண்டிகளை எத்னாலை எரிபொருளாக உபயோகித்து ஆராய்ச்சி முறையில் ஓட்டுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

திரு. என். எ.ஸ் வி. சித்தன் : தலைவரவர்களே, எரிபொருள் பற்றாக்குறை உலகம் பூராவும் வியாபித்திருக்கிறபோது இந்த கரும்புச் சக்கையிலிருந்து எத்னால் எடுத்து அதை எரிபொருளாகப் பயன்படுத்துவது ஒரு நல்ல திட்டம். அரசுக்குச் சொந்தமான ஒன்றிரண்டு வாகனங்களுக்கு அதை பரீட்சார்த்தமாக பயன்படுத்திப் பார்க்கும் முடிவை எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படியானால் அகற்கு ஆகும் செலவு என்ன



1982. மார்ச் 24]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்திடம் இதற்கான பரிசீலனைகள் ஒப்படைக்கப்பட்டு, அங்கு அதற்கான ஆராய்ச்சிகள் ஒரு வல்லுநர் குழுவால் மேற்கொள்ளப்பட்டது. 2—3 வாகனங்கள் பரீட்சார்த்தமாக இந்த எரிபொருளைப் பயன்படுத்தி ஓட்டப்பட்டு வருகின்றன. இன்னும் 5 வண்டிகள் தேவை என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கும் ஆவன செய்யப்பட்டு இருக்கிறது. ரூபாய் 5 இலட்சம் வரை அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. தீவிரமான ஆராய்ச்சி முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் முடிவின் அடிப்படையில் அதற்கு ஏற்ப முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

திரு. இல. பலராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, எரி சாராயத்தின் மூலம் தயாரிக்கப்படும் எரி பொருளைக் கொண்டு மோட்டார் வாகனங்கள் ஓட்டப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று மின்சாரம் தட்டுப்பாடாக இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் தண்ணீர் இறைக்கப் பயன்படுத்தும் யந்திரங்களையும் ஓட்டுவதற்கு இந்த எரிபொருளைப் பயன்படுத்த அரசு பெரிய் திட்டத்தை ஏதேனும் ஆய்வு செய்து இருக்கிறதா ? அதனால் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும் என்று தெரிந்தால், அதை அமல்படுத்த அரசு தீவிரம் காட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஆராய்ச்சி இப்போது முதல் பகுதியிலேதான் இருக்கிறது. அது முடிவுற்ற பின்னாலே மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை பற்றி முடிவு செய்யலாம்.

சிறு சர்க்கரை ஆலைகள் அமைக்கும் திட்டம்

*வினா எண் 642—திரு. செ. செம்மலை, வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 6-ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கூட்டுறவுத் துறையில் சிறு சர்க்கரை ஆலைகள் அமைப்பதற்கான திட்ட அறிக்கை அரசால் தயாரிக்கப்பட்டு விட்டதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் அத்தகைய ஆலைகள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆய்வில் உள்ளது. ஆறாவது ஐந்தாண்டுக் திட்டத்தில் இரண்டு பெரிய சர்க்கரை ஆலைகளையும், 3 சிறிய சர்க்கரை ஆலைகளையும் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. அதற்கான இடம் தேர்வு போன்ற பணிகள் நடைபெறுகின்றன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக திட்ட மதிப்பீடு எவ்வளவு என்று அறிய விரும்புவதோடு, அந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்து விட்டதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவுவது என்ற அரசின் முடிவிற்கிணங்க ரூ. 3 கோடியே 40 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெரிய ஆலையும் 1,250 டன் பிழி திறன் கொண்ட சர்க்கரை ஆலையாக அமைக்க சுமார் 9 கோடி ரூபாய் ஆகும். 500 டன் பிழி திறன் கொண்ட சர்க்கரை ஆலை அமைக்க சுமார் 4–5 கோடி ரூபாய் வரையாகும். ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி சொல்ல விரும்புகிறேன். திருத்தணியில் சர்க்கரை ஆலை அமைப்பதற்காக மத்திய அரசிடம் நாம் கேட்டு இருந்த அனுமதி 20 ஆம் தேதி வந்து விட்டது என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற ஆலைகள் அமைப்பது குறித்தும் நாம் தொடர்ந்து மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறோம்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இதுபோன்ற சர்க்கரை ஆலை அமைக்க தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளதா ? அப்படி வந்திருந்தால் அரசின் முடிவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, பொதுத்துறையிலே, கூட்டுறவுத் துறையிலே சர்க்கரை ஆலை அமைக்க இயலாது என்கிற இடங்களில் தனியார்கள் சர்க்கரை ஆலை துவங்க விண்ணப்பம் செய்தால் அதைப் பரிசீலிக்கலாம் என்கிற அரசின் முடிவுக்கு ஏற்ப சுமார் இதுவரையில் 5 மனுக்கள் பெரியார் மாவட்டம், சேலம் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் ஆகிய இடங்களில் இருந்து வந்து இருக்கின்றன. அவற்றையும் மத்திய அரசுக்கு முறையாகப் பரிசீலித்து அனுப்பி இருக்கிறோம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இப்போது இரண்டு பெரிய சர்க்கரை ஆலைகள், 3 சிறிய சர்க்கரை ஆலைகள் முறையே 1,200 டன் பிழி திறன் கொண்டது மற்றும் 500 டன் பிழி திறன் கொண்டது—நிறுவுவதற்கு இடங்கள் தேர்வு செய்வது ஆய்வில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வடாற்காடு மாவட்டத்தில் செய்யாறு கோட்டத்தில் பெரிய அளவில் கரும்பு பயிரிடும் விவசாயிகள் இப்போது வேலூருக்கோ, அல்லது ஆம்பூருக்கோ தான் அவர்கள் உற்பத்தி செய்த கரும்பை எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, ஒரு சர்க்கரை ஆலை செய்யாறு கோட்டத்தில் அமைக்க அரசு ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்வேறு வகைகளிலே கோரிக்கைகள் வருகின்றன. ஆனால் எங்கே எக்னாமிகலி வயபிள்ளாக அந்த ஆலை இயங்கும் என்று கருத இடம் இருக்கிறதோ, அங்கே அமைக்க அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சிவகங்கைக்கு அருகில் கிடைக்கும் கிராபைட் கனிமம்

*வினா எண் 643— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கைக்கு அருகில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் கிராபைட் கனிமம் கிடைக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அக்கனிமத்தை வெட்டி எடுத்து அப்பகுதியில் தொழிற்சாலை துவங்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம் சிவகெங்கை அருகில், கிடைக்கும் கிராபைட் கனிமத்தை அகழ்ந்தெடுத்து, அதனைப் பயன்படுத்தி கிராபைட் சம்பந்தப்பட்ட உற்பத்தி பொருட்களை தயாரிக்க சுமார் 2 கோடி ரூபாய் அளவில் தொழிற்சாலை நிறுவும் திட்டம் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பரிசீலனையில் இருந்து வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சிவகெங்கை பகுதியில் கிடைக்கும் கிராபைட் கனிமத்தின் மதிப்பு எவ்வளவு ? அளவு எவ்வளவு ? கிராபைட்டில் இருந்து பெறப்படும் உப பொருள்கள் யாவை ?

(முற்பகல் 9–50)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 15 மீட்டர் ஆழத்திற்கு மொத்தம் 2.5 இலட்சம் டன் கிராபைட்டு கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. கிராபைட்டிலேயிருந்து வெப்பம் தாங்கி கருவி போன்ற பல்வேறு துணைப் பொருள்களை தயாரிப்பதற்கான திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராபைட் கனிமத்தை வெட்டி தனியார்கள் கொள்ளை லாபம் பெறுவதாக அறிகிறேன். அப்படி தனியார்கள் கொள்ளை அடிப்பதை தடுக்க, அரசே கிராபைடை கொண்டு உப தொழில்களை ஆரம்பிக்க முன் வருமா ? அத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டால் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் யாரும் இதுவரை கிராபைட் வெட்டி எடுக்க அனுமதிக்கப்படவில்லை. அரசின் சார்பிலே அந்தப் பகுதிகளிலே தொழிற்சாலை நிறுவப்படுமேயானால், பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். மைனிங் போன்ற வேலைகளை முதலிலே பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராபைடு என்ற மூலப் பொருளை வெட்டி எடுத்து, அதைத் தனியாக செய்ய விருப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். ஏற் கெனவே அவருடைய மானியக் கோரிக்கையின் மீது பேசும்போது, இது குறித்து மைனிங் செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் மைனிங் வேலை என்பது மட்டும் அல்லாமல், கிராபைடி லிருந்து க்ருகிபிள்ஸ் போன்ற பொருள்களை உடனடியாக மேன்னி யூபேக்சர் செய்து, அதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்படியான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மானியக் கோரிக்கையின் போது நான் என்ன சொன்னேனோ, அதைத்தான் இப் போதும் சொல்கிறேன். மைனிங் என்பதில் முதற் கட்டமாக நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு, மைனிங் வேலை ஆரம்பிக்கப் பட வேண்டும். இந்த ஆண்டு அவ்வாறு மைனிங் செய்கிற வேலையைத் தொடங்கவும், கிடைக்கிற கிராபைட்டை வைத்துக் கொண்டு மூலத் தொழிற்சாலையையும், உப தொழிற்சாலையை யும் நிறுவுவதற்கான திட்டம் பற்றி சொல்லி, அதற்கென 2 கோடி ரூபாய் கனி வள நிறுவனத்தின் மூலமாக அரசு ஒதுக்கி யிருக்கிறது. மற்ற விவரங்கள் அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்று சொன்னேன்.

### சட்ட கல்லூரியில் பயிலும் ஆதி திராவிடர் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை

*வினா எண் 644—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு, விடையளிப்பாரா —



(அ) சட்டக் கல்லூரியில் பயிலும் தாழ்த்தப்பட்ட மாண வர்களுக்கு இப்போது வழங்கப்படும் உதவித் தொகை மிகவும் குறைவு என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், உதவித் தொகையை உயர்த்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) மாநில அரசுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவருக்கும் சென்னையில் ரூ. 70 வீதமும், மாவட்டங்களில் ரூ. 55 வீதமும் உண்டி உறைவிடத் தொகை வழங்கப்படுகிறது. இதற்கு மேல் ஆகும் செலவினத்தை ஒவ்வொரு மாணவருக்கும் கடனாக ரூ. 1,200 வழங்கப்படுகிறது. மத்திய அரசு உதவித் தொகை திட்டத்தின் கீழ் தற்பொழுது ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 80 முதல் ரூ. 100 வரை பராமரிப்புத் தொகை வழங்கப்படு கிறது. மேற்படி உண்டி உறைவிடத் தொகையை உயர்த்தி மத்திய அரசு சமீபத்தில் ஆணையிட்டுள்ளது. இதன்படி ஒவ் வொரு மாணவருக்கும் ரூ. 125 முதல் ரூ. 145 வரை உதவித் தொகை கொடுக்கப்படும். இவ்வாணை ஜூலை 1981 முதல் அமுல்படுத்தப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியில் பயிலும் ஆதித் திராவிட வகுப்பு மாணவர்களுக்கு சென்னை நகரத்திலே ரூ. 70 என்றும், மாவட் டங்களிலே ரூ. 55 என்றும் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர் கள் சொன்னார்கள். இந்தத் தொகை எப்பொழுது நிர்ணயிக்கப் பட்ட தொகை. இதை வைத்துக் கொண்டு ஒரு சட்டக் கல்லூரி மாணவனுக்கு உணவு கொடுக்க முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உதவித் தொகையானது மிகவும் குறைவானது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. இருந்தாலும் மைய அரசு தற்போது உயர்த்தியிருக்கிற காரணத்தின் அடிப்படை யில், இயக்குநர் அவர்கள் இந்த உதவித் தொகையை, மாநில அரசு உதவித் தொகை பெறுகிற மாணவர்களுக்கும் உயர்த்த வேண்டும் என்ற செயற் குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் விரைவாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விரைவாக உயர்த்திக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச் சர் அவர்கள் சொல்கிறார்கள். விரைவாக என்றால், இந்த ஆண்டே அது அமுலுக்கு வருமா ? மேலும் எவ்வளவு தொகையை உயர்த்தப் போகிறீர்கள் ? அதை ரூ. 150 என்ற அளவுக்காவது உயர்த்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜய்சாரதி இவைகளை யெல்லாம்
அரசு பரிசீலனை செய்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, இந்த உதவித் தொகையை வழங்குகிற போது மாணவர்
களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கு வைத்துக்
கொண்டு வழங்குகிறீர்களா ? அல்லது அவர்களுடைய குடும்பங்
களின் பொருளாதார பின்னணியை வைத்து பார்த்துக் கொடுக்
கிறீர்களா ? அப்படி என்று சொன்னால், அந்த மாணவர்களு
டைய குடும்பச் சூழ்நிலை மிகவும் ஏழ்மையாக இருந்தால் 15(
ரூபாய் என்பதைக் கூட இன்னும் உயர்த்திக் அதை இந்த
ஆண்டே கொடுக்கும் வகையில் அரசு ஏற்பாடு செய்ய முன்
வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாணபுமிகு திரு எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அந்த மாணவர்களின் குடும்ப சூழ்நிலையை
அடிப்படையாக வைத்துத்தான் இந்த உதவித் தொகையை நாம்
வழங்குகிறோம் என்பதோடு மட்டும் அல்ல, அரசைப் பொறுத்த
வரையில் ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த விடுதிகளில் பயிலுகிற
மாணவர்களுக்கு புத்தகங்கள் வாங்கவும் தனியாக உதவித்
தொகையை அளிக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்
திருக்கக்கூடிய கருத்துக்களின் அடிப்படையில் அதனை பரிவோடு
அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

சின்னதாராபுரத்தில் யணைக்கும் நிலையம் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண் 625—திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி
மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா :

(அ) கரூர் வட்டம், சின்னதாராபுரத்தில் தீயணைக்கும்
நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும்
(ஆ தமிழகத்தில் புதிய தீயணைப்பு நிலையங்கள் நிறுவுவதற்
கான ஊர்களின் முன்னுரிமைப் பட்டியல் அரசினரால் அரசு
ஆணைஎண் 2819, உள்துறை, நாள் 18–10–1979 இல் அங்கீ
கரிக்கப்பட்டுள்ளது. அதில் சின்னதாராபுரம் இடம் பெறவில்லை.
பட்டியலில்புதியதாக ஒரு ஊரைச் சேர்ப்பதாயின் அந்த ஊரின்
மக்கள்தொகை, தீ விபத்து அபாயங்கள் குறித்து பரிசீலனை
செய்வதல்லாமல் அவ்வூரிலிருந்து 25 கி.மீ. தொலைவில்
எந்த தீயணைப்பு நிலையமும் இல்லாமல் இருக்கவேண்டும். ஏற்





கெனவே 25 கி.மீ.தொலைவிற்குள் கரூர் வட்ட தலைமையகத்
தில் ஓர் முழுமையான தீயணைப்பு நிலையம் இயங்கி வருவதால்,
சின்ன தாராபுரத்தின் தேவைகளை கரூர் தீயணைப்பு நிலையத்
திலும் பூர்த்தி செய்து கொள்ளலாம். முன்னுரிமைப் பட்டிய
லிலுள்ள எல்லா ஊர்களிலும் புதியதாக தீயணைப்பு நிலையங்
கள் திறக்கப்பட்ட பின்னர் சின்ன தாராபுரத்தில் அவசிய நிலை
மைக்கேற்ப எடுத்துக் கொள்ளப்படும்.

ஈட்டி பாலா போன்ற ஆயுதங்களை வைத்துக்
கொள்வதற்கான உரிமம்.

வினா எண் 626—திரு. ஆர். நவநீத கிருஷ்ண பாண்டியன் :
மற்றும்திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு முதல் அமைச்சர்
கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஈட்டி, பாலா போன்ற ஆயுதங்கள் வைத்துக் கொள்ள
லைசென்ஸ் பெற வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும்
(ஆ) படைக்கல விதிகள் 1962 இன் அட்டவணை 1 (Schedule—)
இன் பகுதி V இல் குறிப்பிடப்பட்டுள்ள படைக் கருவிகள் கல
மற்றும் வெடி மருந்துகளின் பட்டியலின்படி 9 அங்குல நீளம்
மற்றும் 2 அங்குல அகலத்திற்கு மேற்பட்ட குத்து பாகமுள்ள,
வீட்டு, விவசாய, விஞ்ஞான மற்றும் தொழில் உபயோகங்களுக்
கானவாறு செய்யப்படாத, ஈட்டி, (நீளக்) கத்தி மற்றும் இதர
கூர்முனைக் கருவிகள், ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள்,
உயிருக்கு ஆபத்தானவை என குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கருவி
களை வைத்துக் கொள்ளவும், பயன்படுத்தவும், படைக்கலச்
சட்ட விதிகளின்படி உரிமம் பெற வேண்டும்.

திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன்: தலைவர் அவர்
களே, இந்த ஈட்டி, பாலா போன்றவற்றை சாதாரணமாக கிரா
மங்களிலே எல்லோரும் வைத்திருப்பார்கள். வயலுக்குத் தண்
ணீர் பாய்ச்சப் போகின்ற போது பாம்பு போன்றவை எதிர்படு
கின்றபோது எட்டி நின்று எறிவதற்கு இந்த ஈட்டி பாலா போன்
றவை வசதியாக இருக்கும். மேலும் உழவர்கள் உபயோகப்
படுத்துகின்ற கலப்பையினுடைய கொளு ஈட்டி மாதிரித்தான்
இருக்கும். ஆகவே கொல் பட்டறையிலே அதைத் தயாரித்துக்
கொண்டிருக்கும்போது கூட அவர்கள் ஈட்டிதான் தயாரிக்கிறார்
கள் என்று கருதப்படுகின்ற நிலைமை ஏற்பட்டு அதனால் அவர்
கள் பாதிக்கப்படக்கூடும். ஆகவே அந்த நிலைமையை மாற்றி
இந்த ஈட்டி, பாலா போன்ற ஆயுதங்கள் வைத்துக் கொள்வதற்கு
லைசன்ஸ் பெற வேண்டும் என்ற அந்த விதி ரத்து செய்யப்படுமா?

[1982 மார்ச் 24

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன். : தலைவர்
அவர்களே, இப்போது இதற்கெல்லாம் உரிமம் பெற வேண்டும்
என்ற நிலை இருக்கின்ற போதே ஆங்காங்கு வகுப்புக் கலவரங்கள்
போன்றவை ஏற்படுகின்றபோது இவற்றைப் பெரும்பாலும் பயன்
படுத்திவிடுகிறார்கள். அதனால் சிலபல இடங்களில் தற்காலிக
மாக அந்த உரிமங்களை ரத்து செய்து விட்டு அந்த ஆயுதங்களைக்
கூட பறித்திருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இப்படி
இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்
டங்களில் அந்த உரிமைகங்கள் ரத்து செய்யப்பட்டு அவர்களின்
கையிலே உள்ள ஆயுதங்கள் தற்காலிகமாக பறித்து வைக்கப்
படக்கூடிய சூழ்நிலைகள் எல்லாம் ஏற்பட்டன. ஆகவே இப்படிப்
பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கும்போது அந்த ஆயுதங்களை
வைத்துக் கொள்வதற்கு உரிமம் பெற்றுத் தீரவேண்டும் என்ற
அந்த விதியினைத் தளர்த்துவதாக இல்லை.

திரு. ஆர். நவநீத கிருஷ்ணபாண்டியன் : தலைவர் அவர்
களே கலவரப் பகுதிகளில் ஈட்டி, பாலா போன்றவற்றை உப
யோகப்படுத்துகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்
கள். ஆனால் ஒருவனைக் கொல்ல வேண்டும் என்றால் பெரிய
ஈட்டிதான் வேண்டும் என்று இல்லை. சாதாரண பேனாக்
கத்தியால் கூட கொன்றுவிட முடியும். மேலும் இந்த ஈட்டி,
பாலா போன்றவை சாதாரண கிராம மக்கள் உபயோகப்படுத்
தக்கூடியது. மேலும் பாம்பு பிடிக்கின்றவர்கள் கூட இந்த
ஈட்டி மாதிரி ஒரு ஆயுதத்தை தான் வைத்திருக்கிறார்கள்.
ஆகவே இந்த உரிமம் பெறவேண்டும் என்ற விதி இருப்பதன்
காரணத்தால் சிலரை வேண்டும் என்றே சங்கடப்படுத்தக்கூடிய
சூழ்நிலை ஏற்படும். மேலும் இந்த ஈட்டி, பாலா போன்ற
வற்றை யாரும் நிச்சயமாக தவறாக பயன்படுத்தமாட்டார்கள்.
மேலும் இது அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. ஆகவே
இதற்கு விதிவிலக்கு அளிக்க அரசு தக்க பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, வீட்டு, விவசாய, விஞ்ஞான மற்றும் தொழில் உப
யோகங்களுக்கான சிலபல ஆயுதங்களைப் பயன்படுத்தலாம் என்று
சொல்லி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொல்வது போன்று விவசாயத் துறையிலே உள்ளவர்கள் இதைப்
பயன்படுத்த வேண்டும் என்றால் அதற்காக உரிமம் பெறுவ
திலே எந்த விதமான சங்கடமும் இருக்காது. மேலும் உரிமம்
பெற்றவர்களே தவறாகப் பயன்படுத்தி இருந்தாலும் நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்றால் இது பயன்படும். ஆகவே தேவைப்
பட்டால் இந்த உரிமத்தைப் பெற்று பயன்படுத்திக் கொள்ள
லாம். ஆனால் அப்படி உரிமம் பெறுவதிலே ஏதாவது சங்
கடங்கள் ஏற்படுகின்றன என்று சொன்னால் அந்தச் சங்கடங்
கள் ஏற்படாமல் அரசு பார்த்துக் கொள்ளும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.



1982 மார்ச் 24]

(முற்பகல் 10–00.)

மாண்புமிகு, பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதி
யோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : உத்தரப்பிரதேசத்தில் ஹரிஜனங்
களின் பாதுகாப்பிற்காக துப்பாக்கி வழங்குவதுபோல் தமிழ்
நாட்டிலும் எல்லா ஹரிஜன்ங்களுக்கும் துப்பாக்கி வழங்கப்படுமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெசெழியன்: உத்தரப்
பிரதேசத்தின் நிலை தமிழ்நாட்டில் ஏற்படவில்லை, ஏற்படவும்
வேண்டாம், ஏற்படவும் கூடாது.

திரு. இரா தாமரைக்கனி: கிராமங்களில் கத்தி, அரிவாள்
ஈட்டி, கோடாரி போன்றவற்றை ஆயுதங்களாக பயன்படுத்துவது
போல் சென்னை நகர், மற்ற நகரங்களில் உள்ள கேடிகள்
சோடாப்புட்டி, கோலி சோடாபுட்டிகள் பயன்படுத்துகிறார்கள்.
இந்த கோலிக்குண்டு சோடாப்புட்டி மிகவும் வேகம் உள்ளது.
ஆகவே இந்த கோலிக்குண்டு சோடாவிற்கு அதைத் தயாரிப்
பதற்கு தமிழ்நாட்டில் அரசு தடை விதிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுசெழியன். : ஒருவரை
அடிப்பதற்கு கைகள் கூட போதும். அதற்காக இருப்பவர்கள்
கைகளை எல்லாம் அகற்றுவது என்பது கடினமான ஒன்று. நல்ல
எண்ணத்தோடுதான் உபயோகிப்பவர்கள் என்று விதிமுறைகள்
வைக்கிறோம். கூடுமான வரை வன்முறைக்குப் பயன்படுத்து
வதற்கு ஏதுவாக இருப்பவைகளை தடை செய்கிறோம். சமா
தான காலத்தில் பயன்படுத்தக்கூடிய பலவற்றிற்கு தடை விதிப்
பது என்று சொன்னால் அதனால் ஏற்படுகிற சங்கடங்கள் அதிக
மாகும். எனவே சோடாபுட்டி, மற்றவைகளுக்குத் தடை
விதிப்பதற்கில்லை.

வடாற்காடு மாவட்டத்திலுள்ள முன்னாள் இராணுவத்தினர்

*வினா எண். 627—திரு. இல. பலராமன். மாண்புமிகு
முதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் உள்ள மொத்த முன்னாள்
இராணுவத்தினர் எண்ணிக்கை தாலுகா வாரியாக யாது ?

(ஆ) இவர்களுக்கு தொழில் வேலைவாய்ப்புக்கு வழங்கிய
வசதி எவ்வளவு ?

[1982 மார்ச் 24

மாண்புமிகு டாக்டர் இரா. நெஞ்செழியன்:

(அ) வடாற்காடு மாவட்டத்தில் ஓய்வூதியம் பெற்று வரும் முன்னாள் இராணுவத்தினர் மொத்த எண்ணிக்கை 13,781 ஆகும். தாலுக்கா வாரியாக எண்ணிக்கையாவன.—

| தாலுக்காவின் பெயர். | ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| வேலூர் .. | |
| ஆரணி .. .. .. | 6,630 |
| போளூர் .. .. | 1,364 |
| திருவண்ணாமலை .. .. | 686 |
| வந்தவாசி .. .. | 1,303 |
| ஆர்க்காடு .. .. .. | 208 |
| வாலாஜா .. .. .. | 524 |
| அரக்கோணம் .. .. | 632 |
| குடியாத்தம் .. .. .. | 302 |
| திருப்பத்தூர் .. .. | 934 |
| வாணியம்பாடி .. .. | 417 |
| செங்கம் .. .. .. | 316 |
| செய்யார் .. .. .. | 226 |
| | 239 |
| மொத்தம் .. | 13,781 |

(ஆ) 1969 முதல் 1977 வரையிலும் தொகுப்பு நிதியிலிருந்து ரூ. 7,35,610 கடனாகவும் 1978 முதல் 1981 வரை வங்கிகள்மூலம் பெறும் கடன்களில் வட்டிக்கு உதவித் தொகை கொடுக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 3,72,690-ம் கடனாக, தொழில்—வேலை வாய்ப்புக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. இல. பலராமன் : இந்த முன்னாள் இராணுவத்தினருக்கு வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள 13,787 முன்னாள் இராணுவத்தினருக்கு இந்த வாரியம் மூலம் கடன் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? பாங்குகள் மூலம்



1982 மார்ச் 24]

கடன்கள் வாங்கிக் கொள்ளலாம் என்ற உத்தரவு இருப்பதால் அவர்களுக்கு கடன்கள் கிடைப்பதில்லை என்ற நிலை இருப்பதால் இந்நிலையை அரசு மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால் அவர்களுக்கு தொழில்கள் செய்வதற்கு கடன் உதவி செய்கிறவகையில் வங்கிகளுக்கு சிபார்சு செய்கிற முறையில் வாரியம் இருக்கிறது. வட்டியை ஓரளவிற்கு குறைக்கிற தன்மையில்—வங்கிகள் குறிப்பிட்ட வட்டி விகிதத்தை வைக்கிறார்கள்—வட்டியைக் குறைத்துக் கொடுப்பதற்கு அதில் சலுகைகள் கொடுக்க வாரியத்திற்கு ஓரளவிற்கு தொகை ஒதுக்கி ரூ. 3,72,590 கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. இல. பலராமன் : இந்த முன்னாள் இராணுவத்தினருக்கு மழுவாவூரில் 72 கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் கடைகளையாவது முன்னாள் இராணுவத்தினருக்கு வழங்க அரசு உத்தரவிடுமா ? இன்று அங்கே கட்டப்பட்ட கடைகள் தனியாருக்கு விட்டிருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? இதுபற்றி முன்னாள் இராணுவத்தினரிடமிருந்து அரசுக்கு பல கோரிக்கைகள் வந்திருக்கும். அவை இன்றுவரை பரிசீலிக்கப்படாமல் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த 72 கடைகள் முன்னாள் இராணுவத்தினருக்கு அவர்கள் நலன்களுக்குப் பயன்படவேண்டும் என்ற நோக்கத்தினால்தான் கட்டப்பட்டன. முதலில் 300 கடைகளும் அவர்களுக்கு தரப்பட்டன. குறைந்த வாடகை தரலாம் என்று வாடகை நிர்ணயித்து வைத்தோம். வந்தவர்கள் எண்ணிக்கை குறைவு. வந்தவர்கள் அந்த இடத்தைப் பெற்றுக்கொண்டார்களே தவிர வாடகை கட்டவில்லை. அதற்குப் பிறகுதான் மாவட்ட ஆட்சித் தலைவர் முயன்று அந்தக் கடைகளை ஏலத்தில் விடுவதன் மூலம் அதிகத் தொகை வருகிறது, அப்படி வருகிற தொகையை முன்னாள் இராணுவத்தினரின் நலன்களுக்குப் பயன்படுகிற நிதியோடு சேர்க்கப்பட்டு வருகிறது. அவர்கள் முன்வருவார்களானால் அவர்கள் நலனுக்காகத்தான் முன் உரிமை தரப்பட வேண்டும் என்ற கொள்கை இருந்தது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே எக்ஸ்சர்வீஸ்மென் போர்டு ஒன்றிருக்கிறது. அது சரியாக இயங்கவில்லை என்று கேள்விப்படுகிறோம். அது அரசுக்குத் தெரியுமா ? அடுத்து, அந்த ரீ-ஹாபிலிடேஷன் சென்டரை எக்ஸ்-சர்வீஸ்மென் வைத்திருக்கிறார்கள். அதிலே எத்தனை பேர் இருக்கிறார்கள் ? அவர்களுக்கு வேலை

வாய்ப்பு கொடுக்கும்போது முன்னுரிமை கொடுக்கப்படுகிறதா?
முன்புகூட அரசு ஒரு பிரி-டிரெயினிங் கோர்ஸ் வைத்து, எக்ஸ்-
சர்வீஸ் மேனை இங்கே வேலைக்கு வைப்பதாக அறிவித்தீர்கள்.
அது இப்போது நடந்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில்
முன்னாள் இராணுவ வீரர்கள் சங்கம் நடைபெறவில்லை என்ற
குறிப்பை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள்.
அதனுடைய முழு விவரக் குறிப்புகள் என்னிடம் தற்போது
இல்லை. அது சரிவர நடைபெறவில்லை என்ற குறைபாடு
இருக்குமானால், அதைச் சீர்திருத்தி அமைக்கும் முயற்சியை அரசு
மேற்கொள்ளும். முன்னால் இராணுவத்தினர், முதியோராக
இருக்கின்றவர்கள் தங்குவதற்கான இல்லம் நடைபெற்று வரு
கிறது. அதிலே எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற
விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதைத்
தர முடியும். முன்னுரிமை எந்தெந்த அளவுக்கு எந்தெந்த
துறையில் முன்னாள் இராணுவத்தினருக்கு தரப்படுகிறது என்ற
விவரக் குறிப்பும் இல்லை. அதற்கும் தனிக் கேள்வி போட்டால்
தரலாம். முன்னாள் இராணுவத்தினரை கூடுமானவரை பயன்
படுத்திக் கொள்ள வேண்டுமென்று எல்லாத் துறைகளுக்கும்
அறிவித்திருக்கிறோம். அது மட்டுமல்ல. சில பேர் இதிலே
நாங்கள் ஆட்களைத் தருகிறோம் என்று அந்த அமைப்பு தலை
மைச் சங்கததிற்கு எழுதினால், அத்தகைய நேரங்களில் அவர்
களுக்குத் தேவையான முன்னாள் இராணுவ வீரர்களை அந்தத்
தொழிலில் பயன் படுத்திக் கொள்வார்கள். இதுகுறித்து நாங்
கள் எல்லாத் தனியார் நிறுவனங்களுக்கும் எழுதியிருக்கிறோம்.
அவர்களுக்கு எந்தெந்த வகையில் இந்த முன்னுரிமை அளிக்கப்
பட்டிருக்கிறது என்ற குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்
டால், அந்த விவரத்தைத் தரலாம்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் முன்னாள் இராணு
வத்தினர் சங்கம் எல்லாத் தாலுகாக்களிலும் இருக்கிறது. அவர்
களுக்கு என்று சங்கக் கட்டிடம் கட்டுவதற்கான இடத்திற்கு
முன் உரிமை கொடுத்து, அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி கோரிக்கை வந்
திருப்பதாகத் தெரியவில்லை. அப்படி ஏதாவது வந்தால், அது
பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, முன்னாள் இராணுவத்தினருக்கு அனைத்துத் துறை
களிலும் அரசு முன்னுரிமை அளிக்கிறதா என்று அறிய விரும்பு
கிறேன் ? இதற்கான ஆணையை அரசு இட்டிருக்கிறதா
என்பதை அறிய விரும்புகிறேன் ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்
அவர்களே, சில பல துறைகளில் இதற்கு முன்னுரிமை அளிக்க
வேண்டுமென்றும், உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்றும்,
வாய்ப்பளிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது
பற்றி தனிக் கேள்வி போட்டால், எந்தெந்தத் துறைகளால் எந்த
அளவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது? என்பதையும், குறிப்பாக
இராணுவத்தினர் ஓட்டுநர் பயிற்சி பெற்றிருப்பார்களானால்,
அவர்களுக்கு போக்குவரத்துத் துறையிலே இடமளிக்க வேண்டும்
என்று நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இதனுடைய முழு
விவரங்களையும் தனிக் கேள்வி போட்டால் தரலாம்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,
முன்னாள் இராணுவத்திற்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள்,
முன்னுரிமைகள் சுபாஸ் சந்திர போஸ் அவர்களின் இராணு
வத்தைச் சேர்ந்தவர்களுக்கும், இந்திய தேசிய
இராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அளிக்கப்படுகிறதா?
இல்லையா ? அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர்
அவர்களே, அது பற்றி விவரக் குறிப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்
முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்
பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது
என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்புதல்.

திரு. மு. அம்பிகாபதி : பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு
தலைவர் அவர்களே, சட்டமன்ற நிகழ்ச்சிகள் பத்திரிகைகளில்
வருகிறது ; வானொலியில் சொல்லப்படுகிறது. டெலிவிஷனில்
வருவதில்லை. இந்த டெலிவிஷன் என்பது மத்திய அரசுக்குச்
சொந்தமா ? அதிலே இந்த நிகழ்ச்சியைக் காட்டுவதற்கு, நீங்கள்
ஏதாவது ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாடாளுமன்றம் சட்ட
மன்றம் ஆகியவைகளின் நிகழ்ச்சிகள காட்டப் படுவதில்லை;
அவ்வாறு காட்டுவது சரியாக இருக்காது.

[1982 மார்ச் 24

ஆ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. து. இராசரத்தினம் : தலைவர் அவர்களே, என்
னுடைய தொகுதியில் இருக்கும் பட்டாபிராமில் கலவரம்
தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது. இது சம்பந்தமான
ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிடி பேரவைத் தலைவர்: இன்று காலைதான் நீங்கள்
கொடுத்திருக்கிறீர்கள். நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10.]

திரு. கு. பா. பழனியப்பன் : தலைவர் அவர்களே, விழுப்
புரத்திற்கு அருகிலே பிடாரம் என்ற கிராமத்திலே கை காகிதத்
தொழிற்சாலையிலே 51 பேர்கள் கைது செய்யப்பட்டு ஒரு
பதட்டமான சூழ்நிலை இருப்பது குறித்து நான் ஒரு ஒத்தி
வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கொடுத்து
இருக்கிறீர்கள். அதை எடுத்துக்கொள்ள வேண்டுமா இல்லையா
என்பது ஆய்வில் இருக்கிறது.

3 ஒத்திவைப்புத் தீர்மானம்.

பி.டி.சி. பேருந்துகளுக்கு வேலூரில் சேதம்
விளைவித்திருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சோ.
அழகர்சாமி, இரா. கருப்பையா, செ. சிவசாமி, ஏ. டி.
கருப்பையா, என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி
ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், என். பழனிவேல், இ.ரெ.
இராசமாணிக்கம், இ. எஸ். எம். பக்கீர் முகமது, செ. இராம
லிங்கம், துரைமுருகன், ஜி. சொக்கலிங்கம் ஆகியோர் "வட
ஆற்காடு மாவட்டம் வேலூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக்
கழக பேருந்து ஒன்றுக்கு தீ வைதத்தும் மேலும் 7 பேருந்து
களுக்கு சேதமேற்படுத்தியும் உள்ளதால் அப்பகுதியில் ஏற்பட்டு
உள்ள கவலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்
களை ஒத்தி வைக்க வேண்டும்" என்று தீர்மானத்தை மொழிய
என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது
எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது
குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி உறுப்பினர்களைக் கேட்டுக்
கொள்கிறேன்.



1982 மார்ச் 24]

அதோடு இதே பொருள் குறித்து அநேக மாண்புமிகு உறுப்
பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்
களின் பெயர்களையும் படித்து விடுகிறேன். கவன ஈர்ப்புத்
தீர்மானமாக இது எடுத்துக்கொள்ளப்படாமல் ஒத்திவைப்புத்
தீர்மானமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானத்தை திரு,
வாளர்கள் பி. வெங்கடசுப்பிரமணியன், இல. பலராமன்,
ஏ. எம். சேதுராமன், பெ. சு. திருவேங்கடம், சோ. அழகர்
சாமி, இரா. கருப்பையா, ஏ. டி. கருப்பையா, செ. சிவசாமி,
என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்மணி, ஆர். நவநீத
கிருஷ்ண பாண்டியன், என். பழனிவேல், இரெ. இராசமாணிக்கம்
துரை முருகன், ஜி. சொக்கலிங்கம், செ. இராமலிங்சம் இ. எம்,
எஸ். பக்கீர் முகமது ஆகியோர் கொடுத்திருக்கிறார்கள்

அதிலே ஒரு 17 பேர்களும், இதிலே ஒரு 11 உறுப்பினர்களும்
ஆக மொத்தம் 28 பேர்கள் இது சம்பந்தமாகக் கொடுத்திருக்கி
றார்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படு
கிறது. திரு. சோ. அழகர்சாமி அவையில் இல்லை. திரு.
துரைமுருகன் அவர்களுடைய தொகுதியிலே நடந்திருப்பதால்
அவர் பேசட்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த முன் மாதிரி எல்லா
நேரங்களிலும் கடைப்பிடிக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முன்மாதிரி இல்லை.
தங்கள் தொகுதியிலே அப்படி நடக்கிற போது அதைப் பார்த்துக்
கொள்ளலாம். அமருங்கள்.

*திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, வட ஆற்காடு
மாவட்டத்திலே குறிப்பாக இராணிப்பேட்டைத் தொகுதியில்.
மேல்விஷாரம் என்ற ஊரில் 17—3—1982 ஆம் நாளன்று
தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பஸ் ஆற்காட்டிலிருந்து
வேலூருக்குச் சென்று கொண்டிருக்கிறது—மேல்விஷாரம் வழி
யாக—$1\frac{1}{4}$ மணிக்குப் போய்க்கொண்டிருக்கிறது. ஏற்கனவே
கத்திவாடி போகிற பஸ் நின்றுக் கொண்டிருக்கிறது, இந்த பஸ்
ஓவர்டேக் பண்ணுகிறபோது முன்னாலே போய்க் கொண்டிருந்த
35 வயதுள்ள பருக் மேலே ஏற்றி அவர் அதே இடத்திலே
நசுங்கி செத்துவிட்டார். விந்த டிரைவர் சட்டையைக் கழற்றி
ஒரு கடையிலே போட்டுவிட்டு ஓடிவிட்டார், அந்தக் கண்டக்டரும்
தன் பையை ஒரு கடையிலே போட்டுவிட்டு ஓடிவிட்டார். இந்த
விபத்தை ஏற்படுத்திய இந்த பஸ்மீது யாரும் கை வைக்கவில்லை.
மேல்விஷாரம் தலைவர் அவர்களைத் தங்களுக்குத் தெரியும்
ஜன நெரிசல் அதிகமாக உள்ள சாலை அது, அங்கே ஆயிரக்
கணக்கானவர்கள் நின்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த பஸ்
ஏறி ஒருவர் செத்த உடனே டிரைவரையோ, கண்டக்டரையே

ஒருவர் கூட அடிக்கவில்லை. எந்த பஸ் மேலே ஏறியதோ
அந்த பஸ்மீது யாரும் கைவைக்கவில்லை. காரணம், மேல்விஷா
ரம் பகுதியில் அடிக்கடி பஸ் விபத்துக்கள் நடந்து இருந்தாலும்
கூட வன்முறையில் ஈடுபடுகின்றவர்கள் அல்ல, கண்ணெதிரே
விபத்து ஏற்படுத்திய அந்த பஸ் ஒன்றும் செய்யப்படவில்லை.
ஆனால் 2, 3 பர்லாங் தூரத்திற்கு அப்பால் உள்ள பைபாஸிலே
ஒரு பஸ் போய்க் கொண்டிருக்கிறது, அந்த பஸ்ஸை—இந்த
விபத்து $1\frac{1}{4}$ மணிக்கு நடந்திருக்கிறது. ஆனால் கிட்டத்தட்ட
$2\frac{1}{2}$ மணி அளவிலே—யாரோ எரித்தார்கள். அதுவும் அரசாங்
கத்திற்குச் சொந்தமான பஸ்தான். போலீஸ் கிட்டத்தட்ட 31
பேர்களை கைது செய்திருக்கிறது. 307-வது செக்ஷன் அதுதான்
ஜெனரல் நேஷனல் செக்ஷன்—அதைத் தவிர ஐ.பி.சி.யில் உள்ள
செக்ஷன்களை எல்லாம் போட்டு—பெயிலில் விடமுடியாது என்று
சொல்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் பைபாஸிலே எரிந்
திருக்கின்ற அந்த பஸ்ஸை கோட்டை, மைதானத்திலே வைத்து
இருக்கிறார்கள். அதிலே ஒரு போர்டை எழுதி வைத்திருக்கிறார்
கள். என் நிலையைப் பாருங்கள், யாருக்கு நான் என்ன தவறு
செய்தேன், என்னைக் கொளுத்தி விட்டார்கள் என்று ஒப்பாரி
வைத்து கண்ணீர் விடுவதைப் போல் எழுதி வைத்திருக்கிறார்கள்.
அந்தப் பகுதியிலே ஒரு டென்ஷன் இருக்கிறது. அப்படி எழுதி
இருந்தும், ஆர்.எஸ்.எஸ். தோழர் என்ன சொல்லியிருக்கிறார்
என்றால் பொதுவாக முஸ்லீம் சகோதரர்கள் மனதைப்
புண்படுத்துகிற வகையிலே —*என்ற ஒரு கெட்ட வாசகத்தை
எழுதியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வாசகம் அவைக்
குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகிறது.

திரு. துரைமுருகன்: இப்போது என்ன நடந்தது என்றால்
படிக்கிற இஸ்லாமியர் சமுதாயத்தினர் உள்ளத்திலே ஒரு
குமுறலை உண்டாக்கியிருக்கிறது. அதே நேரத்தில் இப்படி
நடந்திருக்கிறதே என்று இந்துக்களின் மத்தியிலே உணர்வு
ஏற்பட்டிருக்கிறது. இது எங்கே போய் முடியும் என்றால்
ஒரு மதச் சண்டையிலே போய் முடிகிற நிலைமை உருவாகி
யிருக்கிறது. நான் அரசை கேட்கிறேன். நீங்கள் கைது செய்
கிறீர்கள், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அவர்கள்
மீது வழக்கு போடுகிறீர்கள், அதையும் வேண்டாமென்று
சொல்லவிலலை). இன்றைக்கு நீதி மன்றத்திலே பார்த்து
நிரபராதி என்றால் விடுதலையாகி வெளியே வருகிறார்கள்.
ஆனால் எரிக்கப்பட்ட பஸ்ஸை கொண்டு போய் கோட்டை
மைதானத்திலே வைத்திருக்கிறீர்களே. இது என்ன நியாயம்
என்று கேட்கிறேன். கேட்டால் சொல்வீர்கள். பஸ் என்று
செய்தது? ஓட்டிய டிரைவர் தான் ரேஷாக ஓட்டிவிட்டார்
என்று நான் ஒத்துக்கொள்கிறேன். அதே மேல்விஷாரத்தில்
1972-ஆம் ஆண்டு நம்முடைய முதலமைச்சர் தி.மு.க வில்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.



ருந்து வெளியேற்றப்பட்டபோது அன்பு டிரான்ஸ்போர்ட்
என்ற பஸ் எரிக்கப்பட்டது. அதுவா பொதுக்குழு
கூட்டிற்று? அதுவா செயற்குழு கூட்டிற்று? நடவடிக்கை
எடுத்தது என்றால் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசியலுக்குப் போக
வேண்டாம்; பஸ் கொளுத்தியது நியாயம் என்று சொல்கிறீர்
களா? அல்லது நியாயம் இல்லையென்று சொல்கிறீர்களா?
இரண்டில் ஒன் றைச் சொல்லி முடியுங்கள்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, பஸ்
கொளுத்துவது நியாயமென்று நான் வாதாட மாட்டேன். ஒரு
அரசுக்குச் சொந்தமான பஸ்ஸை யார் எரித்திருந்தாலும் அந்த
சமூகவிரோதிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால்
எரிக்கப்பட்ட பஸ் ஒரு இடம், ஆனால் கைதான மேல்விஷா
ரம் இஸ்லாமிய தோழர்கள் அவ்வளவு பேரும் கைது செய்யப்
பட்டு இன்றைக்கு பெயிலிலே கூட விடமாட்டேன் என்று
சொல்வது என்ன நியாயம்? பழி ஒரு இடம், பாவம் ஒரு
இடம் என்பது போல இருக்கிறது. அரசு சரியாக புரிந்து
கொள்ளவில்லை. பை பாஸிலே எரிந்த பஸ்களுக்கும்,
மேல்விஷாரம் தோழர்களுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.
இது குறித்து ஏராளமான ஆதாரங்கள் என்னிடம் இருக்
கின்றன. இது குறித்து விவரமாகப் பேசுவதற்கு தலைவர்
அவர்கள் அனுமதித்ததால், மற்ற பிரச்சினைகளை பேசி
முடிவெடுக்கலாம் என்று கூறி முடிக்கிறேன்.

திரு. ஏன். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர் சொன்
னதைப் போல இது ஒரு. வருந்தத்தக்க, கண்டிக்கத்
தக்க நிகழ்ச்சியாகும். மேல்விஷாரம் சாலை குறுகலாக
இருக்கிறதால் இது மாதிரியான விபத்துக்கள் ஏற்பட்டு,
உயிர் பலி ஏற்பட்டு அரசாங்கத்தினுடைய சொத்துக்கும் சேதம்
விளைகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அதற்கு பக்கத்திலே
பை-பாஸ் ரோடு இருக்கிறதென்று நமக்கு வந்திருக்கிற
செய்திகள் குறிப்பிடுகின்றன. அப்படியானால் இதனை
ஒரு வழித்தடமாக அல்லது மாற்று வழியிலே போக்கு
வரத்து செல்வதற்கு இதற்கு முன்னாலே ஏதாவது ஏற்பாடு
செய்யப்பட்டிருக்கிறதா என்பதை நாம் தெரிந்து கொள்ள
வேண்டும். து மாதிரி விபத்துக்கள் ஏற்படுகிற போது,
அல்லது அரசியல் கட்சிகள் நடத்துகிற வரவேற்பு அல்லது
போராட்டம் போன்ற நிகழ்ச்சிகளில், அவற்றை சாக்காக
வைத்துக்கொண்டு வன்முறை கும்பல் உள்ளே புகுந்து பொதுச்
சொத்துக்களுக்கு சேதம் விளைவித்து, நிகழ்ச்சிகளுக்குக் களங்
கம் ஏற்படுத்துகிற வகையிலை பஸ் எரிப்பு போன்ற நிகழ்ச்சி
கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இதறகு ஒரு முடிவு

ஏற்படுத்துவதற்கும், நம்முடைய சொத்துக்களுக்கு சேதம் ஏற்படாமல் பாதுகாப்பதற்கும் போக்குவரத்துத் துறையிலே இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடக்காது இருக்கவும், பாதிக்கப் பட்டவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதோடு, நஷ்டயீடு கொடுப்பது பற்றியும், பாதிக்கப்படாதவர்கள் இன்றும் தினம் வழக்குகளிலே ஈடுபட்டிருக்கிறதால் இது பற்றி விரிவாகப் பேசுவதற்கு அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17.3.82 அன்று ஆற்காட்டிலிருந்து வேலூருக்கு சென்ற பெரியார் பேருந்து ஒன்று மேல் விஷாரத்தில் பாருக் என்கிற மேல்விஷார கூட்டுறவு பண்டக சாலையில் பணிபுரியும் ஊழியர் மீது மோதி அவர் ஸ்தலத்திலேயே மாண்டிருக்கிறார். அதையறிந்து அந்த பஸ் மீது கல் எறிந்தவுடன், மேல் விஷாரத்திலிருந்து போக்குவரத்து மாற்றுப்பாதையில் திருப்பி விடப்பட்டு அங்கு 8 பஸ்கள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. அரசு தரப்பிலே சொல்கிற போது 4 லட்சம் ரூபாய் அளவிற்குச் சேதம் என்று சொல்லியிருக்கிறார்கள். பஸ் டிரைவர் வேண்டுமென்றே ஒரு ஆள் மீது ஏற்றுகிற நிலைமையிருக்காது. முன் விரோதம் இருக்கவேண்டிய காரணமும் இல்லை. விபத்துக்கள் ஏற்படுவது சாதாரணம். இதிலே ஆத்திரமடைந்து சம்பந்தமில்லாத மாற்று வழியிலே சென்ற 8 பஸ்கள் தாக்கப்பட்டு, சுமார் 1 1/2 மணி நேரம் அங்கு போக்கு வரத்து நிறுத்தப் பட்டு அந்தப் பகுதி மக்கள் இன்னல் பட்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட காரியங்களைச் சமூக விரோதிகள் செய்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், 1 1/2 மணி நேரம் அந்தச் சம்பவம் நடந்து கொண்டிருக்கிறபொழுது ஆற்காடு அல்லது வேலூர் மிக அருகிலே தானிருக்கிறது. காவல் துறையினர் மிக விரைந்து வந்திருந்தாலும் கூட இந்தச் சம்பவங்களைத் தடுத்திருக்க முடியும். ஆனால், இப்படிப்பட்ட சம்பவங்கள் மேன்மேலும் தொடர்ந்து நடந்து வருகிற காரணத்தாலே, இப்படிப்பட்ட அரசாங்கச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கின்ற சமூக விரோதிகளைப் பற்றி இன்னும் தீவிரமாகத் தெரிந்து விசாரித்து, அதுபற்றி இன்னும் விரிவாகப் பேச வேண்டிய காரணத்தாலே, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விரிவாகப் பேச வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

(முற்பகல் 10-20)

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காட்டிலிருந்து வேலூர் சென்ற தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பஸ் ஒன்று கடந்த 17 ஆம் தேதி, பண்டக சாலை ஊழியர் ஒருவர் விறகு வாங்கிக் கொண்டு சைக்கிளில் சென்ற பொழுது, அவர்மீது மோதி, அந்த 30 வயது வாலிபன் அந்த இடத்திலேயே இறந்திருக்





கிறான். அதைத் தொடர்ந்து அந்தப் பகுதியிலே ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், பொதுவாக பஸ், லாரி விபத்துக்களில், யார் மீதாவது மோதியோ அல்லது ஏற்றியோ இறந்துவிட்டால் அதற்கு எந்தவிதமான ஒரு பலனும் அந்த இறந்தவர் தரப்பினருக்குக் கொடுக்கப்படவில்லை என்பதைத் தான் காட்டுகிறது. யார் இறந்தாலும் அது சாதாரண விஷயமாகப் போய்விடுகிறது. ஏற்றியவருக்கு 6 மாத தண்டனையோ அல்லது ரூ. 200 அபராதமோ போடுகிறார்கள். இது தான் நிலைமை. ஆகவே, இந்த மாதிரி நிலைமை நாடு பூராவும் தொடர்ந்து நடைபெறுகின்ற காரணத்தால், சாதாரணமாகப் பொது மக்கள் மத்தியிலே இம்மாதிரி ஒரு பழக்கம் தோன்றிவிடுகிறது. ஆகவே, இம்மாதிரி விபத்துக்கள் நடக்கக்கூடிய காலங்களில், விபத்துக்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் போதிய அளவு நஷ்ட ஈடு கொடுத்து அவர்கள் மனதைத் திருப்திப்படுத்தக்கூடிய அளவிலே அரசு தரப்பிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஏற்பட்ட கலவரத்தில், இன்றைக்கு 30-க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் கூட வரமுடியாத செக்ஷன்கள் போடப்பட்டு உள்ளே வைத்திருப்பதாகத் தெரிகிறது. இது தேவையில்லாத ஒன்று. ஏதோ ஒரு விபத்து நடத்திருக்கிறது. ஒரு நபர் இறந்திருக்கிறார். அதனால் சில பதட்டங்கள் ஏற்படுவது இயற்கை. அதனால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய, அதிலும் குறிப்பாக, ஒரு சமூகத்தினரை வேண்டுமென்றே துன்பப் படுத்துகின்ற நடவடிக்கைகள் எடுத்திருப்பதாகத் தெரிகிறது. இதையெல்லாம் கைவிட்டு, இது சம்பந்தமாக, பரிசீலிக்க வேண்டியிருப்பதால், அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 17—3—1982 ஆம் தேதி அன்று வேலூருக்கு அருகிலே சாலம் என்ற இடத்திலே பஸ்ஸுக்கு ஆக்சிடென்ட் ஏற்பட்டு ஒரு முஸ்லீம் நண்பர் இறந்திருக்கிறார். அவருடைய பெயர் ஃபரூக் என்பது. அதன் காரணமாக சுற்றுப்புறத்திலே ஒரு ஆபத்தான நிலைமை ஏற்பட்டு, ஒரு பஸ்ஸைக் கொளுத்தியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ரூ. 4 1/2 இலட்சம் பெறக்கூடிய அந்த பஸ்ஸுக்கு மிகப் பெரிய சேதத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். அதைப் போல் தொடர்ந்து சட்டசபை நடக்கக்கூடிய நேரத்திலே, தமிழகத்திலே பல சம்பவங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதை எல்லாம் கட்டுப்படுத்தும் முறையிலே, நடவடிக்கை எடுக்கும் முறையிலே, வேகக் கட்டுப்பாடு முறைகளை ஒழுங்காகப் புகுத்தி, வேகக் கட்டுப்பாடு எல்லாம் கொண்டு வந்திருந்தால், இப்படிப்பட்ட சிறு சந்துகளிலே போகக் கூடிய நேரத்திலே சர்வசாதாரண

மான விபத்துக்கள் ஏற்பட்டிருக்க முடியாது. இவைகளை
யெல்லாம் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும். கிட்டத்
தட்ட 30 பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள். அவர்
களை எல்லாம் விடுதலை செய்யும் முறையிலே நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த விவரங்களை
மிகவும் விரிவாக விவாதிக்கவேண்டி இருப்பதால், இன்றைய
சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 17—3—1982 அன்று தந்தை பெரியார்
போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த நகரப் பேருந்து
டி.எம்.என். 7831 ஆற்காட்டிலே வேலூர் வழித்தடகத்தி.
லிருந்து சென்று கொண்டிருந்தது. மதியம் சுமார் 1.25
மணி அளவில் மேல்விஷாரம் கத்திவாடி ரோடுப் பேருந்து
திற்கும் இடத்திற்குச் சுமார் 100 அடி தொலைவு இருக்கும்
போது, அதே திசையில் பேருந்தின் முன்னால் மிதிவண்டியில்
சென்று கொண்டிருந்த ஃபரூக் என்பவர் இடது புறத்திலிருந்து
வலது புறம் செல்ல தனது சைக்கிளைத் திடீரென்று திருப்பிய
பொழுது பின்னால் வந்துகொண்டிருந்த பேருந்தின் முன்
இடது புறத்திலே மோதி தார் ரோடிலே விழுந்தார்.
விழுந்த வேகத்தில் தலையில் அடிபட்டதால் ரத்தக் காயங்கள்
ஏற்பட்டு அவர் அந்த இடத்திலேயே இறந்து விட்டார்.
அவரது வயது 30 இருக்கலாம். மேல்விஷாரத்தைச் சேர்ந்
தவர். மேல்விஷாரத்தில் மில்லத் என்ற மளிகைக் கடையிலே
பணியாற்றிக் கொண்டிருந்தவர். பேருந்தின் முன் இடது
சக்கரம் சைக்கிளின் மீது ஏறி சைக்கிள் சேதம் அடைந்தது.
விபத்து நடந்ததும் சிலர் திரளாகக் கூடி அப்பேருந்தினைச்
சேதப்படுத்தினார்கள். அப்பேருந்தின் ஓட்டுநரான திரு.
சாந்தமூர்த்தியை அடித்தும், பிறகு நடத்துனரான ஜெயராமனி
டமிருந்த பணப் பையைப் பறித்தும் பிறகு திருப்பியும்
கொடுத்தார்கள். அந்தச் சமயம் பாதை தடைபட்டதால்
எதிர்த்திசையிலிருந்து ஆற்காட்டை நோக்கிச் சென்றுகொண்டி
ருந்த பேருந்துகளில் யாவும் விபத்து நடந்த இடத்திற்கு
அருகிலேயிருந்த பக்கப் பாதை வழியாகப் பிரிந்து செல்ல
எத்தனித்தபொழுது பலர் திரளாகச் சென்று அவ்வழியாகச்
செல்ல எத்தனித்த எட்டுப் பேருந்துகளை வழி மறித்து,
நிறுத்தி, பயணிகளை அங்கேயே இறங்கச் சொல்லிவிட்டு
தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த
டி.எம்.என். 7607 என்ற நகரப் பேருந்தை டீசல் ஊற்றித்
தீ வைத்து எரித்தார்கள். அந்தப் பேருந்து முற்றும்
எரிந்து நாசமாயிற்று. மேலும் தந்தை பெரியார் போக்கு
வரத்துக்கழகத்தைச் சார்ந்த டி.எம்.என் 7830, டி.எம்.என்.
7528, டி.எம்.என். 7665 மற்றும் டி.எம்.என். 7677 ஆகிய
நான்கு பேருந்துகளில் உள்ள இருக்கைகள் கண்ணாடி விளக்கு
கள், கண்ணாடி போன்ற பலவித பொருள்கள் சேதப்படுத்தப்



பட்டன. அத்துடன் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச்
சேர்ந்த இரண்டு பேருந்துகளையும் டி.எம்.என். 1694, டி.எம்.
என். 3012, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த
ஒரு பேருந்தையும் டி.எம்.என். 9048 மேற்கண்டவாறே சேதப்
படுத்தினார்கள். விவரம் தெரிந்தவுடன் காவல்துறையினர் அந்த
இடத்திற்கு விரைந்து சென்று கூட்டத்தைக் கலைத்து நிலவரத்
தைக் கட்டுக்குக் கொண்டு வந்தார்கள். தற்பொழுது நிலவரம்
அமைதியாக இருக்கிறது. போக்குவரத்து மீண்டும் தடை ஏது
மின்றி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தந்தை பெரியார்
போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்துகளின் சேத மதிப்
பீடு சுமார் ஒன்றரை இலட்சம் ரூபாய் ; பல்லவன் மற்றும்
திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்து
களின் சேத மதிப்பீடு சுமார் நாற்பதாயிரம் ரூபாய். இது விஷய
மாக ஆற்காடு போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு
போலீசார் வழக்கு பதிவு செய்து தீவிரமாக விசாரித்து வருகிறார்
கள். எனவே, இது சம்பந்தமாக விவாதிப்பதற்காக இந்தப்
பேரவையினுடைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய
அவசியமில்லை என்ற என் கருத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின்
விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி
வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை
யென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்புகள்.

### (அ) அம்பாசமுத்திரப் வட்டம் கோடாரங்குள விவசாயிகளுக்கு வழங்கப்பெற்ற நிலப்பட்டா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என்.
எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி ஆகியோர் ஒரே பொருள்
குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்
களுள் ஒருவர் இதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின்
கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, ''அம்பா
சமுத்திரம் வட்டம் கோடாரங்குளம் கிராமத்தில் 400 விவசாயி
கள் வழங்கப்பட்ட பட்டாவின் பயனை அடைய முடியாமல்
இருப்பது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த
நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத்
தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை
ஒன்றைவைக்கிறேன்.

அறிக்கை.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் இருக்கும் கோடாரங்குளம் கிராமம், திருவாவடுதுறை ஆதீனத் தைச் சேர்ந்த இனாம் கிராமம் ஆகும். தமிழ் நாடு இரு வார இனாம் ஒழிப்பு சட்டம் 26/63-ன் கீழ் இந்த கிராமம் எடுத்து கொள்வதற்காக 18—8—1966-ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதை ஆட்சேபித்து ஆதீனத்தின் சார்பாக ரிட் மனு உயர் நீதி மன்றத்தில் (W.P. 2319/66) தாக்கல் செய்யப்பட்டது. உயர் நீதி மன்றம், மேற்படி கிராமத்தை சட்டம் 26/63-ன் படி எடுத்துக் கொள்வது செல்லாது என்று தீர்ப்பு அளித்துள்ளது (1970 I.M. L. J. 523).

இதை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்கள் (விவசாயிகள்) சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் அப்பீல் (W.A. N0. 529/69) தாக்கல் செய்தனர். இதில் மேற்படி உயர்நீதி மன்றத்தின் உத் திரவு சரி இல்லை என்றும், இது ' பார்ட் இனாம் ' கிராமம் (Part Inam village ) ஆகும் என்றும் தீர்ப்பு அளிக்கப் பட்டது. இதை எதிர்த்து ஆதீனம் டில்லி உச்ச நீதி மன்றத்தில் சிவில் அப்பீல் (C.A. 986/72) தாக்கல் செய்து, அது இன்னும் முடிவடையாத நிலையில் இருக்கிறது. இதற்கிடையில் டில்லி உச்ச நீதி மன்றத்தில் மேற்படி முறையீட்டில் தாக்கல் செய்யப் பட்ட இடைக்கால மனுவில் பிறப்பித்த உத்தரவுப்படி சம்பந்தப் பட்ட நபர்களை வெளியேற்றம் செய்வது மட்டும் தடை செய்யப் பட்டது. மற்றபடி ஏற்கெனவே உள்ள ஆணைப்படி கோடாரங் குளம் கிராமம் சட்டம் 26/63-ன் படி 7—3—1972-ல் எடுத்துக் கொள்ளப்பட்டு பசலி 1383-ல் நிலவரித்திட்டம் அமுல் படுத்தப் பட்டது.

2. நிலவரித் திட்ட வட்டாட்சியர் அவர்களால் சட்டம் 26/63-ன் கீழ் இந்த கிராமத்திலுள்ள நிலங்களுக்கு பட்டா சம்பந்தமாக விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்டு எஸ். ஆர். 12/3/ஏஎம்பி / 73, நாள்4—6—1974-ல் உழுது பயிரிடுவோருக்கு ஷெட்யூல் ' ஏ '-ன்படி மேற்படி சட்டத்தின் பிரிவு 11-ன்படி பட்டா அனுமதிக்கப்பட்டும் ' பி ' மற்றும் ' சி' ஷெட்யூலில் சேர்ந்துள்ள இனங்களுக்கு பட்டா மறுக்கப்பட்டும் உத்திரவிட் டுள்ளார். நிலவரித்திட்ட வட்டாட்சியரின் இந்த உத்திரவை எதிர்த்து திருநெல்வேலி இனாம் ஒழிப்பு நடுவர் மன்றத்தில் திருவாவடுதுறை ஆதீனம் மேல் முறையீடு செய்ததின் பேரில் சாலைகள், குளங்கள், வாய்க்கால், பாறை மற்றும் பொது உப யோகத்தில் உள்ள புறம்போக்காக வைத்துக் கொள்ளக் கூடிய நிலங்கள் தவிர ஏ. பி. சி. ஷெட்யூல்களில் கண்டுள்ள நிலங்களை அனைத்திற்கும், இந்த நிலங்கள் இருவார பண்ணை நிலங்கள் என்றும், சொந்தத்தில் சாகுபடி செய்யும் விதியிலிருந்து தர்ம





நிறுவனங்கள் விதி விலக்களிக்கப்பட்டிருக்கின்றன என்றும் காரணங்காட்டி திருவாவடுதுறை ஆதினம் பேருக்கு பட்டா வழங்க நடுவர் மன்றம் 10—7—1979 அன்று உத்திரவிட்டுள்ளது. இதன் மூலம் கோடாரங்குளம் கிராமத்தில் புறம்போக்கு நிலங்கள் நீங்கலாக மற்ற எல்லா நிலங்களுக்கும் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு பட்டா அனுமதிக்கப்பட்டுள்ளது.

3. மேற்படி இனாம் ஒழிப்பு நடுவர் மன்றத்தில், உழுது பயிரிடுவோர்களை விசாரிக்காமலேயே ஒரு தரப்பாக (ex-parte) உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதென உழுது பயிரிடுவோர்கள் மேற்படி இனாம் நடுவர் நீதி மன்ற உத்திரவை ரத்து செய்து புனர் விசாரணை செய்யக் கோரி மனு தாக்கல் செய்தார்கள். இதன் பொருட்டு அரசு ஒரு பிரத்யேக வழக்கறிஞரை நியமித்து உழுது பயிரிடுவோர்கள் சார்பிலும், அரசு தரப்பிலும் வழக்காட அறிவுரை வழங்கியது. இருப்பினும் இந்த மனுவை, ஏற்கெனவே எல்லா ஆதாரங்களையும் பரிசீலனை செய்த பிறகு தான் 10—9—1979 தீர்ப்பு வழங்கப்பட்டது என்று இனாம் நடுவர் மன்றம் தனது 10—9—1980 தேதியிட்ட ஆணையில் தள்ளுபடி செய்தது.

4. இதற்கிடையில் இனாம் ஒழிப்பு நடுவர் மன்றத்தின் 10—7—1979 தேதியிட்ட உத்திரவை உதிர்த்து திரு. கே. வி. சுப்பிரமணியம் மற்றும் 504 நபர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் 10—11—1979 அன்று மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி 10—7—1979 தீர்ப்பு, அரசுக்கும், உழுது பயிரிடுவோர்களுக்கும் சாதகமாக இல்லாததால் மேற்படி அப்பீலில் உழுது பயிரிடுவோரின் கோரிக்கைக்கு ஆதரவாக வாதாடுவதுடன், அரசின் சார்பாகவும் வாதாட அரசு வழக்கறிஞருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனினும் மேற்படி மேல் முறையீடு விசாரணைக்கு வரும்பொழுது உழுது பயிரிடுபவர்களது (Cultivating Tenants) நலனைப் பாதுகாத்தும் அதே சமயத்தில் அரசுக்குப் பாதகமாக இல்லாத வகையிலும் கூடுதல் அரசு வழக்கறிஞர் (Additional Government Pleader) துணையுடன் வாதாடுமாறு அரசு தலைமை வழக்கறிஞருக்கு (Advocate General) அறிவுரைகள் வழங்கப்படும். சட்டம் 26/63-ல் கண்டுள்ளவாறு உழுது பயிரிடுவோர்களின் நலனைப் பாதுகாப்பதற்குத் தக்க நடவடிக்கையினை அரசு எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 -வது விதியின் கீழ் மாண்புமிகு அமைச்சர வர்களின் கவனத்தை ஈர்க்கும் நேரத்தில் இந்தப் பேரவைக்கு அறிக்கை வைப்பது வழக்கமாக இருக்கிறது. அந்த அறிக்கையின் மேல் எந்தெந்த உறுப்பினர்கள் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானங் கள் கொடுத்திருக்கிறார்கள், என்ன பிரச்சினைகளைக் குறித்து

ஈர்த்திருக்கிறார்கள் என்று இருக்கும். ஆனால் இந்தக் குறிப்
பிட்ட நிகழ்விலே மாண்புமிகு உறுப்பினர்களின் பெயர்கள் இல்
லையே, அவர்கள் பெயர் போனவர்களா என்பதை மாண்புமிகு
துணைத் தலைவரவர்களின் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லா உறுப்
பினர்களின் பெயர்களும் இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : அதுதான் இல்லை, அவர்க
ளெல்லாம் பெயர் போனவர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெயர்
போனவர்கள், பெயர் இருக்கின்றவர்கள் என்று இரண்டு அர்த்தங்
கள் இருக்கின்றன. இங்கே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்
களின் பெயர்களும் இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: இது உண்மைக்குப் புறம்பான
தகவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் சொன்னது
இந்த அறிக்கையைப் பற்றியது அல்ல. நீங்கள் சொன்ன
அர்த்தத்திலேதான் பொதுவாக சொல்கிறேனே தவிர வேறல்ல;
விவர அறிக்கையிலே உறுப்பினர்களின் பெயர்கள் இருக்கத்
தேவையில்லை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் துணைத்
தலைவரவர்களே, அஜெண்டாவிலே கவன ஈர்ப்புத் தீர்மானங்
களைக் கொடுத்தவர்களின் பெயர்கள் இருக்கும். அதற்கான
அறிக்கையை வைக்கும்போழுது யார் யார் கொடுத்திருக்கிறார்கள்
என்று இருக்காது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவ
ரவர்களே, உங்கள் மூலமாக நான் மாண்புமிகு அமைச்சரவர்
களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புவது, இன்றைக்கு எடுத்துக் கொள்
ளப்பட இருக்கின்ற இரண்டாவது கவன ஈர்ப்புத் தீர்மானம்
சம்பந்தமான அறிக்கையில் பெயர் இருக்கின்ற முறை பின்பற்றப்
பட்டிருக்கிறது.

(முற்பகல் 10·30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இருந்துதான்
தீர வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. (குறுக்கீடு). இந்த
விதியின்கீழ் எந்தெந்த உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள்



என்று பெயர் வந்திருக்கின்றது. அமைச்சர் அவர்கள் எழுந்து அறிக்கை வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லி இருக்கின்றார். நீங்கள் அதிலே ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவது அறிக்கையிலே இருக்கின்றது. It is not must. விதியிலே அப்படி இல்லை. இருந்தாலும் இருக்கலாம். விதியின் பிரகாரம் அறிக்கையிலே இருக்க வேண்டும் என்று விதியில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்களுடைய பெயர் போகாமல் இனிமேல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உரிமை பறிபோய் விடக்கூடாது. அதனால் தான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

இந்த கோடாரங்குளம் கிராமத்தைப் பொறுத்தவரையிலும் அந்த ஏழை விவசாயிகளுக்குப் பட்டா கொடுப்பது என்பது இன்றைக்குத் தமிழகத்திலே மிகவும் பரப்பரப்பாகப் பேசப்படுகின்ற திருவாவடுதுறைஆதீனம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். நமக்கு இருக்கின்ற கவலை எல்லாம் இந்த வழக்கு உச்சநீதி மன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டு இன்னமும் முடிவடையாத நிலையில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே இருந்து நம்மாலே புரிந்து கொள்ள முடிகின்றது. இந்த வழக்குகளை விரைவிலே முடிவு செய்ய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரைக்கும் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்து, சம்பந்தப்பட்ட நபர்களை வெளியேற்றம் செய்வது மட்டும் தடை செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய தினம் ஏழை விவசாயிகள் அந்த நிலங்களில் இருந்து விவசாயம் செய்து கொண்டு இருக்கிறார்களா என்கிற விவரத்தையும் ஷெட்யூல் ' ஏ 'வின்படி பட்டா அனுமதிக்கப்பட்டும், ஷெட்யூல் ' பி '-ன்படி பட்டா மறுக்கப்பட்டும் உள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படியானால் கொடுக்கப்பட்டதில் எத்தனை பேருக்கு மறுக்கப்பட்டது, கொடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் என்பதை உங்கள் மூலமாக அமைச்சரிடம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த நிலங்கள் இருவார பிண்ணை நிலங்கள் என்றும், சொந்தத்தில் சாகுபடி செய்யும் விதியில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டு இன்றைக்கு அவர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கின்றது. அப்படி என்றால் இருவாரம் நிலம் என்றால் அந்த நிலத்தில் யார் வெள்ளாமை இடுகிறார்களோ அவர்களே நேரடியாக வெள்ளாமை செய்ய வேண்டும். அதில்

பண்ணிய சாகுபடி விற்கப்படும். அதுதான் இருவார சட்டத்தின்
விதி. ஆனால் இரு வாரம் என்று சொல்லி மற்றவர்கள் எல்லாம்
வெள்ளாமை நடத்திக் கொண்டிருக்கும்போது, அது தர்ம
சொத்து என்பதற்காக விதி விலக்கு இன்றைக்கு இருக்கின்ற
சட்டத்திலே இருக்கின்றது. அதுபற்றி அரசு யோசித்துக்
கொண்டு இருக்கின்றது என்பதை முதலிலே தெரிவித்தேன்.
அந்த நிலங்களில் இருந்து இன்றுவரை யாரும் வெளியேற்றப்பட
வில்லை. அரசு உத்தரவு போட்டு அவர்களை வெள்ளாமைக்கு
விட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படி தடை உத்தரவின் பேரால்
வெளியேற்றப்படாமல் இருப்பவர்கள் இன்றைக்கு 54 பேர்கள்.
அவர்களே வழக்கை நடத்த வேண்டும் என்றாலும், அரசு அவர்
களுக்காக, அவர்களுடைய ஏழைமைத் தன்மையைக் கவனத்தில்
கொண்டு, அரசு கவர்ன்மென்ட் பிளீடரை நியமித்து வாதாடு
வதற்காக நியமித்து இருக்கின்றது. அரசு நேரடியாக இன்றைக்கு
தலையிட்டு அவர்களுக்குச் சாதகமாக செய்வதற்கு எல்லா
விதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதுவு
மில்லாமல் சட்டத்துறை இதுபற்றித் தனியாக யோசித்து, இதற்கு
என்ன செய்வது என்பதை நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்
கிறது. (Cultiva ing Tenant,s Ac ) பிரகாரம் அவர்களுக்கு
எப்படி உரிமை ஆக்குவது என்பதைப் பற்றியும் அரசு தனியாக
யோசித்துக் கொண்டிருக்கின்றது.

* திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு தலைவர் அவர்
களே, திருவாவடுதுறை ஆதீனத்தில் உழுது பயிரிடுபவர்கள்
உள்ளது உண்மை என்றால் அந்த தாலுகா ஆபீசில் அவர்கள்
பதிவு செய்யப்பட்டு இருந்தால் அவர்களை நிலங்களிலே இருந்து
வெளியேற்றுவது ஏன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத்
தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்தேன். இரு
வார சட்டம் என்றால் என்ன என்பது விவசாயக் குடும்பத்திலே
இருந்து வந்துள்ள தங்கமணி அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.
இருவாரம் என்றாலே யார் வெள்ளாமை விடுகிறார்களோ அவர்
களுக்குத்தான் சொந்தம். ஆனால் இருவாரம் என்றால் நேரடி
யாக அவர்கள் அதிலே பயிர் செய்யவில்லை. ஆனால் பயிர்
செய்வது இருவாரம் என்றாலும், வேறு ஒருவர் பயிர் செய்கிறார்
என்றால் தர்ம சொத்துக்களுக்கு இருக்கின்ற சட்டவிதிப்படி
பட்டா கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அதைப்பற்றி சட்ட
ஆலோசனை மூலமாக பார்த்து அதிலே இருக்கின்ற சிரமங்
களை நீக்கி உழைப்பவர்களுக்கே அதைப் பட்டா செய்து கொடுப்
பதற்கும் அல்லது மற்றவைகளைச் செய்வதற்கு அரசு ஏற்பாடு
செய்து கொண்டிருக்கின்றது.



(ஆ) வடாற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு
கரும்புக்குப் பணம் கொடுக்காதது.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, " வட ஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவு
சர்க்கரை ஆலைகளில் கரும்பு கொடுத்த விவசாயிகளுக்குப் பணம்
தராமல் இருப்பதால் அவர்களிடையே நிலவும் கவலை குறித்து "
அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு
தொழிலாளர் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு
வருகிறேன்.

* மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவை முன்
கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

வட ஆற்காடு மாவட்டத்தில் தற்போது கீழ்க்கண்ட மூன்று
சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன :—

(அ) திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ;

(ஆ) வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை ; மற்றும்

(இ) ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

2. இவ்வாலைகள் 1981–82ஆம் ஆண்டுக்கான அரைவைப்
பருவத்தில் தீவிரமாக கரும்பு கொள்முதல் செய்து சர்க்கரை
உற்பத்தி செய்து வருகின்றன. இக்கூட்டுறவு சர்க்கரை
ஆலைகள் வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு வங்கிகளிலிருந்து
கடன் வசதி பெறுகின்றன.

3. சமீபத்தில் ரிசர்வ் வங்கி கடனுதவி நிறுவனங்கள் கடன்
வழங்குவதில் கட்டுப்பாடுகளை ( Credit Squeeze Policy )
தீவிரமாக செயல்படுத்தியதன் விளைவாக, தமிழ்நாடு மாநில
கூட்டுறவு வங்கி மறுநிதியில் கட்டுப்பாடுகள் விதித்தமையால்,
கூட்டுறவு வங்கிகள் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு வழங்க
ஒப்புதல் அளித்துள்ள உச்ச நிலை நிதி உதவியின் அளவுக்கு நிதி
வழங்காமல் குறைந்த அளவு கடன் வழங்கிய நிலையிலேயே
மேலும் கடன் வழங்குவதை நிறுத்தி விட்டன. வெளிச்சந்தை
யில், சர்க்கரையின் விலை குறைந்துள்ளது. எனவே, கூட்டுறவு
சர்க்கரை ஆலைகள் கரும்பு விநியோகிக்கும் விவசாயிகளுக்கு
உரிய நேரத்தில் பணம் கொடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. சர்க்கரை
ஆலைகளின் பணத்தேவை மிக அதிகம் உள்ளது.

ஆலைகள் கரும்பு விநியோகிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு விட வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கு உரிய காலத்தில் பணம் பட்டுவாடா செய்வதற்காக இச் சர்க்கரைப் பருவத்திற்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகை முன்பணம் வழங்குமாறு சர்க்கரைத் துறை இயக்குநர் சிபாரிசு செய்துள்ளார்.

4. கரும்புக்கு உரிய காலத்தில் பணம் பட்டுவாடா செய்வதற்கும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் சிரமத்தை ஓரளவு குறைப்பதற்கும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் நிதிநிலை, அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள், முதலியவைகளைக் கருத்திற் கொண்டு மார்ச்சு மாதத்தில் கரும்பு விளைவிப்பாளர்களுக்கு கரும்புக்கு விலை கொடுப்பதற்கு கீழ்க்கண்டவாறு வழிவகை முன்பணம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

| | | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை | .. | 50·00 |
| வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை | .. | 55·00 |
| ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை | .. | 30·00 |
| மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை | .. | 90·00 |
| கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை | .. | 25·00 |
| மொத்தம் | .. | 250·00 |

இதனால் கரும்புக்கு உரிய காலத்தில் பணம் பட்டுவாடா செய்வதற்கு ஏற்பாடாகியுள்ளது.

திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையை நான் பார்த்தேன். அதிலே இருக்கிற விவரம் ஒரு வருஷம் பாடுபட்டு பயிரிட்ட ஒரு விவசாயி குறைந்த விலையிலே சர்க்கரை ஆலைக்கு கரும்பு ஓட்டுகிறான். அப்படி ஓட்டிவிட்ட கரும்புக்குப் பணம் கொடுங்கள் என்று கேட்கிறபோது, சர்க்கார் சொல்கிறது, உனக்குப் பணம் கொடுக்க முடியாது. ஏன் என்று சொன்னா ல் ரிசர்வ் பேங்க் ஒரு கண்டிஷன் போட்டிருக்கிறது, அதனால் தமிழக கூட்டுறவு வங்கியும் ஒரு கண்டிஷன் போட்டு கட்டுப்படுத்திவிட்ட காரணத்தினால், உனக்கு காலணா



கொடுக்க முடியாது. குறைந்த விலைக்கு கரும்பை ஓட்டிய விவசாயி கையைப் பிசைந்து நிற்கிறான். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், கரும்பு ஓட்டிய விவசாயிகளுக்கு பணம் கொடுக்கவில்லை என்றால், அப்படி அவன் பணம் வேண்டுமென்று கேட்டால், அவனிடத்திலே ஜப்திக்குப் போகிறார்கள். ஏன் என்று கேட்டால், கரும்பு ஆலைகள் கொடுக்கவில்லை. அதனால் மாநில வங்கிக்குக் கொடுக்கவில்லை, அதனால், ரிசர்வ் பேங்க் கொடுக்கவில்லை என்றால் என்ன அர்த்தம். ஆனால் இன்றைக்கு விவசாயிகளிடத்திலே மட்டும் ஜப்திக்கு வருகிறார்கள். (குறுக்கீடு). நான் கரும்பு ஓட்டி இருக்கிறேன். சர்க்கார் ஆலைக்குப், பணம் இதுவரையில் வரவில்லை, பணம் வந்தவுடன் கொடுத்து விடுகிறேன் என்று சொன்னாலும், அவர்களிடத்திலே ஜப்தி செய்கிறார்கள். இது நியாயமா ? எனவே, கரும்பு (குறுக்கீடு) ஓட்டிய ஆலைகளிலே இருந்து பணம் 2 நாட்களிலே இருந்து வந்த உடனே கொடுத்து விடுகிறேன் என்று சொன்னாலும் அந்த ஜப்தியை நிறுத்தி.... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் அறிக்கையை முழுவதுமாகப் படித்திருந்தால், இவ்வளவு கஷ்டப்பட்டு பேச வேண்டிய அவசியம் இல்லை. ஏன் என்றால் ஏற்கனவே முடிந்து போன பிரச்சினைகளுக்கு இவ்வளவு கஷ்டப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கனவே அரசாங்கம் 2½ கோடி ரூபாய் வேஸ் அண்ட் மீன்ஸ் அட்வான்சாக ஒதுக்கி, கரும்பு கொடுத்த விவசாயிகளுக்கு கொடுக்கச் சொல்லி உத்தரவு இட்டதற்குப் பின்னாலே, ஏன் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டு பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே அதற்கான நடவடிக்கையை அரசு எடுத்து இருக்கிறது.

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு தவறான தகவலைத் தருகிறார் ; நான் படித்தேன். படித்ததற்குப் பிறகுதான் சொல்கிறேன். ராத்திரிதான் ஊரிலேயிருந்து வந்தேன். நேற்றைய வரையிலே ஆலைகளுக்கு கரும்பு ஓட்டிய விவசாயிகளுக்கு காலணா கூட தரவில்லை. வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே, ஆனால் கொடுத்தோம் என்று சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றக் கூட்டம் முடிந்தவுடன் மாண்புமிகு உறுப்பினர் ஊருக்குச் சென்று கேட்கும்போது பணம் கிடைத்து இருக்கும்.

## 5: அறிக்கைஅ ளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

திரு. ஏ. சி. சண்முகம் : மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் சார்பில், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் இழப்பீட்டுத் தொகைகள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் பதினொன்றாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அளிக்கிறேன்.

(முற்பகல் 10–40)

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப பாதுகாப்புச் சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

" தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பசுக்கள் வெட்டப்படுவதைத் தடுத்தல்—கால்நடைப் பாதுகாப்புச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதிகோருகிறேன் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : துணைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.



## 7. வரவு—செலவுத் திட்டம் வாக்கெடுப்பு 1892—83.

### (அ) கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 2,10,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

திரு. சு. பாலன் : துணைத் தலைவரவர்களே, மோட்டார் வாகனங்களின் வேகத்தை கட்டுப்படுத்த கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,10,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு ந. சிவஞானம் : துணைத் தலைவரவர்களே, நகரப் பேருந்து தற்போது 30 கிலோ மீட்டர் தூரம் வரைதான் செல்லும் என்று இருப்பதை 35 கிலோ மீட்டர் தூரம் வரை செல்லக்கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,10 46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ."

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவரவர்களே, தமிழகத்தில் 500 மக்கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும் பேருந்து வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,10,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவரவர்களே, குறிப்பிட்ட ரூட்டில் குறித்த நேரத்தில் போவதற்குப் பதிலாக தன்னிச்சையாக ரூட்டையும் நேரத்தையும் மாற்றி பேருந்துகள் ஓடுவது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

[திரு. செ. சிவசாமி] [1982 மார்ச் 24

" மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள்
குறித்த சட்டங்கள் — நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்
கப்பெறுகின்ற ரூ. 2,10,46,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப்
பணிகளும் கப்பல் போக்குவரத்தும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்
களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்
துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் என்ற தலைப்பின்கீழ்
ரூ. 67,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற
வேண்டும். "

திரு. த. வேணுகோபால் : துணைத் தலைவரவர்களே,
அரசு போக்குவரத்து கழகங்களில் பணிபுரியும் தற்காலிக தொழி
லாளர்களை நிரந்தரமாக்கக் கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட
வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்
துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் என்ற தலைப்பின்கீழ்
ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,40,000-ல் ரூ. 100 குறைக்க வேண்
டும். "

திரு. இல. பலராமன் : துணைத் தலைவரவர்களே, வட
ஆற்காடு மாவட்டத்தில் இயங்க இருக்கும் போக்குவரத்துக் கழ
கத்திற்கு இடும் பெயர், பெருந்தலைவர் காமராஜர் என பெயரிட
வேண்டும் என்ற கோரிக்கையைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்
கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்
துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் என்ற தலைப்பின்கீழ்
ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,40,000-ல் ரூ. 100 குறைக்க வேண்
டும். "

திரு. தி. கர. நல்லப்பன் : துணைத் தலைவரவர்களே,
பெருந்துறையில் சேரன் போக்குவரத்துக் கிளை அலுவலகம்
திறக்க வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்
கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்
துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் என்ற தலைப்பின்கீழ்
ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,40,000-ல் ரூ. 100 குறைக்க
வேண்டும். "



1982 மார்ச் 24]

திரு. இ. முத்துராமலிங்கம் : துணைத் தலைவரவர்களே,
இராதாபுரம் தொகுதி திசையன்விளையை மையமாக வைத்து
நகரப் பேருந்து விடக் கோரியும் சென்னையிலிருந்து திசையன்
விளை வரை திருவள்ளுவர் பேருந்து விடக் கோரியும் விவாதிக்க
நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்கு
வரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் என்ற தலைப்பின்
கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 67,40,000-ல் ரூ. 100 குறைக்க
வேண்டும். "

(இ) கோரிக்கை எண்—53 சாலைப் போக்குவரத்துப் பணிகள்,
கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் துணைத் தலை
வர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 53—சாலைப் போக்குவரத்
துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,87,64,000-க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப்பெறவேண்டும். "

திரு. சு. பாலன் : துணைத் தலைவர் அவர்களே, கொள்கை
பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி
கிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 53—சாலைப் போக்குவரத்
துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு
என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,87,64,000-ல்
ரூ. 100 குறைக்கவேண்டும். "

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்
கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு
வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்
னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்
களே, மானியக் கோரிக்கை எண்கள் 3, 40 மற்றும் 53 ஆகியவை
பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகளும்* அறிக்கைகளும் அவை
முன் வைக்கப்பட்டு இருக்கின்றன. அதை நான் படித்ததாகக்
கருதி, அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்
கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கருத்துக்களைக்
கேட்டபிறகு, இறுதியில் நான் பதில் அளிக்கிறேன்.

* .. 772—820 ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்
பெற்றுள்ளன.

[1982 மார்ச் 2

* திரு. ப. சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவா
களே, சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து ஆகிய
மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்
கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய நிலைமை
யில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பல லட்சக்கணக்கான
ரூபாய் நஷ்டத்தில் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அதற்குக்
காரணம் இந்த அரசு தனியார் பஸ்களுக்குச் சலுகைகள் அளிக்
கிறதே தவிர, அரசு போக்குவரத்து பஸ்களை சீரான முறையில்
கவனிக்காத காரணத்தால் இது போன்ற நஷ்டம் ஏற்படுகிறது.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், 1967-லே பேர
ஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சரான பிறகு பஸ்களை
யெலாம் தேசிய மயமாக்கவேண்டும் என்று சொன்னார்கள்.
அதற்குப்பின்னாலே கலைஞர் அவர்கள் முதலமைச்சர் ஆனபிறகு
அதற்கான சட்டத்தைக் கொண்டுவந்தார்கள் அந்தச் சட்டத்தை
எதிர்த்து, தனியார் பஸ் நிர்வாகிகள் ஹைக்கோர்ட்டுக்குப்
போனார்கள். ஹைக்கோர்ட்டில் பஸ் உரிமையாளர்களுக்கு
சாதகமாகத் தீர்ப்பு வந்தது. அதற்குப் பிறகு, 1973-ல் அத்
தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்
பட்டது. உச்ச நீதிமன்றத்திற்குச் சென்ற அந்த வழக்கு என்ன
ஆனது ? அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எந்தவிதத்
தில் எடுத்தது என்ற விவரங்கள் இந்த அறிக்கையில்
கொடுக்கவில்லை. இப்படி ஒரு சரியான நிலையை இந்த அரசு
எடுக்காத காரணத்தால்தான் இந்த பஸ் போக்குவரத்துக் கழ
கங்கள் நஷ்டத்தில் ஓடிக்கொண்டு இருக்கின்றன என்பதை ஒரு
குற்றச்சாட்டாக நான் சாட்ட விரும்புகிறேன்.

1975-லே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு
துணை டெப்போ திருப்பத்தூரில் ஆரம்பிக்கப்பட்டது. அங்கே
ஏறக்குறைய இன்றையநிலையில் 33 பஸ்கள் ஓடிக்கொண்டு இருக்
கின்றன. அந்த 33 பஸ்களும் எங்கே நிறுத்தப்படுகின்றன என்று
சொன்னால், நடு வீதியிலே தான் தந்தை பெரியாரை நிறுத்தி
வைத்து இருக்கிறார்கள். இதை நான் ஒரு குற்றமாகச் சொல்ல
வில்லை. அதற்கான ஒரு கட்டிடத்தை கட்டவேண்டும் என்கிற
அடிப்படையில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்
தான் இதை எடுத்துக் கூற கடமைப்பட்டு இருக்கிறேன்.

இப்படி தந்தை பெரியாரை ரோட்டில் நிறுத்த வைத்து
இருப்பதால், பல நேரங்களில் போலீஸ் அதிகாரிகள் தந்தை பெரி
யாரை சார்ஜ் செய்கிற சூழ்நிலைகள் கூட இருக்கின்றன. இதை
எல்லாம் ஏன் கூறுகிறேன் என்று சொன்னால், கடந்த ஏழு ஆண்டு
காலமாக அங்கே துணை அலுவலகம் தொடங்கப்பட்டு, 300
தொழிலாளர்கள் அங்கே வேலை செய்து கொண்டு வந்த
போதிலும், அந்த டெப்போ ஆபீசை ஒரு லாட்ஜில் வைத்துக்
கொண்டு இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அந்த லாட்ஜ்



1982 மார்ச் 24] [திரு. ப. சுந்தரம்]

உரிமையாளரும் அந்த இடத்தை காலி செய்ய வேண்டும் என்று
சொல்லியிருக்கிறார்கள். அதற்காக பல தடவை நோட்டீஸ்
கொடுத்து இருக்கிறார். ஆகவே, இன்றைய நிலையில் அந்தப்
போக்குவரத்துக் கழகத்தினர் மீண்டும் ஒரு இடத்தை வாடகைக்
குத் தேர்ந்தெடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்படி
வாடகைக் கட்டிடம் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக, அங்கே ஒரு
இடத்தைத் தேர்ந்தெடுத்து ஒரு நிரந்தரக் கட்டிடம் கட்டித் தர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் தந்தை
பெரியார் அவர்களை ரோட்டிலே நிறுத்தாமல், ஒரு வளைவுக்
குள் நிறுத்தவும் செய்வதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்
கிறேன்.

அங்கே வாடகைக்காக ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து இருக்கி
றார்கள் என்று அறிவதால், அந்த நடவடிக்கையைக் கைவிட்டு
கட்டிடம் கட்ட முன்வர வேண்டும். அரசுக்குச் சொந்தமான
புறம்போக்கு நிலங்கள் திருப்பத்தூரில் நிறைய இருக்கின்றன.
அது குறித்து நான் கூட பிராஞ்ச் மானேஜரிடத்தில் சொல்லி
இருக்கிறேன். அதை அவர் கருத்தில் கொள்ளாமல், வாடகைக்
கட்டிடத்தை தேர்ந்தெடுத்து இருக்கிறார். ஏறக்குறைய 7
ஆண்டுகள் ஆகியும் நிரந்தரக் கட்டிடம் கட்டாமல் இருப்பது
சரியல்ல. அங்கே பணிபுரியும் 300 தொழிலாளர்களுக்குத்
தேவையான வசதிகள் இல்லை. கழிப்பிடம் கூட இல்லாமல்,
அந்தத் தொழிலாளர்கள் இரவு நேரங்களில் தங்குவதற்குக் கூட
வசதி இல்லாமல், ஓய்வு பெறுவதற்கு வசதி இல்லாமல், இருந்து
கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இத்தகைய வசதிகளைச்
செய்து கொடுக்கும் வகையிலும் நிரந்தரக் கட்டிடம் வசதி
உடையதாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அங்கே தண்ணீர் வசதி இல்லை. குடிப்பதற்குக்
கூட தண்ணீர் இல்லை. அண்ணா போக்குவரத்துக் கழக
டெப்போ அலுவலகம் உள்ள இடத்திலும் தண்ணீர் இல்லை.
இப்படிப்பட்ட இடத்தைத்தான் அவர்கள் வாடகைக்கு எடுத்து
இருக்கிறார்கள். தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும்
என்று அங்குள்ள நகராட்சி ஆணையாளரிடத்தில் கேட்டால்
தண்ணீர் கொடுப்பதாகச் சொல்கிறாரே தவிர, அதற்கான
நடவடிக்கையை எடுக்கவில்லை என்பதையும் நான் அரசின்
கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆகவே, அங்குள்ள தொழிலாளர்களுக்கு குடிப்பதற்குத்
தண்ணீரும், பஸ்களைக் கழுவுவதற்குத் தண்ணீரும் அளிக்க நட
வடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த்
வசதிகளையும் உள்ளடக்கி அந்தப் புதிய கட்டிடம் அமைய
வேண்டும் என்று சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திலே பயிற்சிக்காக
600 தொழிலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்
களுக்குப் பயிற்சி கொடுத்தார்களா, ட்ரெயினிங் கொடுத்தார்களா
என்றால் இல்லை. அவர்களை ட்ரெயினிங் என்ற முறையில்
ரெகுலராக பஸ்ஸில் பணிபுரியும் நிலைமை இருக்கிறது
என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆனால் பயிற்சி
முடிந்த பிறகு, அவர்களுக்கு கொடுக்க வேண்டிய
தொகை ஒரு நாளைக்கு 11 ரூபாயாகும். ஆனால்
பயிற்சி முடிந்த பிறகும், டிரையினீஸ் என்ற வகையிலேயே அவர்
களை பஸ்களில் அனுப்பி வைத்து 6·50 பைசா மட்டும் தான்
கொடுக்கிற சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது
என்றால் நீங்கள் தொழிலாளர்களை கவனிக்கிறீர்கள் என்று
சொல்வதில் என்ன பொருள் இருக்கிறது ? ஆகவே இதை உடனடி
யாக கவனித்து, வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, அவர்
களுக்கு பயிற்சி அளித்த பிறகு, அவர்களுக்குச் சேரவேண்டிய
11-00 ரூபாய் சம்பளத்தை அளிப்பதற்கும் அரசு நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

அதே போல இன்றைக்கு திடீர் திடீர் என்று திருவள்ளுவர்
பஸ்கள் போகின்றன. அவற்றை திடீர் திடீர் என்று நிறுத்தியும்
விடுகிறார்கள். உதாரணமாக ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல
விரும்புகிறேன். திருத்தணியிலே இருந்து கோயம்புத்தூர் செல்
லும் பஸ், திருச்சியிலேயிருந்து திருத்தணி வழியாக வேலூர்
செல்லும் பஸ், மதுரை, திருவண்ணாமலை வழியாக திருத்தணி
செல்லும் பஸ் ஆகிய இந்த 3 வழித் தடங்களும் வெகு நல்ல
முறையில் ஓடிக்கொண்டிருந்தன. ஆனால் இவைகள் இன்று
திடீரென்று நிறுத்திவைக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அந்தப்
பகுதி மக்கள் கவலை கொள்கிறார்கள்? பதட்ட நிலைக்கு
உள்ளாகி இருக்கிறார்கள். ஏன் இப்படி அவர்களாகவே திடீர்
என்று பஸ்ஸை ஓட்டுகிறார்கள். பிறகு அவர்களாகவே திடீர்
என்று நிறுத்திவிடுகிறார்கள் என்று அந்தப் பகுதியிலே உள்ள
மக்கள் பீதியடைந்திருக்கிறார்கள் என்பதையும் சொல்லிக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போலத்தான் என்னுடைய தொகுதியான திருப்பத்தூ
ரிலே பல பஸ்களை விட வேண்டும் என்று அமைச்சரிடம் கூட
கோரிக்கையாக வைத்தேன். ஆனால் எதுவும் நடைபெறவில்லை.
என்னுடைய நண்பர் நாட்ராம்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் திரு.
அன்பழகன் அவர்களின் திருமணத்தைப் பார்க்கப் போகும்போது.
சில அதிகாரிகள் வந்து, முதலமைச்சர் அவர்கள் இந்தப் பகுதி
கள் வழியாக வரப் போகிறார்கள், உங்களுடைய தொகுதியிலே



வழித்தடங்களில் பஸ்கள் விடவேண்டிய தேவையிருக்
ஏதாவது வழித்தடங்களில் பஸ்கள் விடவேண்டிய தேவையிருக்
கிறதா என்று கேட்டபோது நானும் இரண்டு வழித்
தடங்களை எழுதிக் கொடுத்தேன். ஆனால் இன்று வரையில்
அந்த வழித்தடங்களில் பஸ்கள் விடப்படவில்லை. ஏன் இப்
படிச் செய்கிறீர்கள்? ஒருக்கால் இந்தப் பகுதிகளில் வழித்
தடங்களை பூர்த்தி செய்துவிட்டால், தேர்தல் என்று வரும்
போது, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தொடர்ந்து வெற்றி
பெற்று விடுவார்களோ என்ற எண்ணத்தில் நீங்கள் அப்படிச்
செய்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன். அதேபோல
ஏறக்குறைய 10 ஆண்டுக் காலமாக கோரிக்கை வைத்தும்....
(குறுக்கீடு).

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, எனது நண்பர் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர்
சொல்லியதைப் போல, அந்தப் பகுதியிலே பெரியார் போக்கு
வரத்துக் கழக பேருந்துகள் ஓடாமல் இல்லை. எனது தொகுதி
யிலே ஓடுகிற பேருந்துகள் கூட திருப்பத்தூரிலே இருந்துதான்
என்னுடைய பகுதிக்கு வருகிறதே தவிர, திருப்பத்தூர் பகுதியில்
பஸ்களே ஓடவில்லை என்று சொல்வது உண்மைக்குப் புறம்பான
செய்தி என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ப. சுந்தரம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, திருப்பத்தூரில் பஸ்கள் ஓடுகின்றன. நான் இல்லை என்று
சொல்லவில்லை. ஆனால் சுற்றி உள்ள பகுதிகள் எல்லாவற்றி
லும் பஸ்கள் ஓடுகின்றனவா என்றால் இல்லை. ஓடுகின்ற சில
வழித் தடங்களிலும், எப்படிப்பட்ட ரோடுகளில் ஓட்டுகிறார்கள்
என்றால், மாட்டுவண்டி கூட செல்ல முடியாத சாலையிலே
பெரியார் போக்குவரத்து வண்டிகளில் சிலவற்றை ஓட்டுகிறார்கள்.
ஜமணபுதூரிலிருந்து மண்டலவாடி வழியாக வரும் ரோடுகளில்
பஸ் தடங்கள் வேண்டும் என்று 7 ஆண்டுகளாக அந்தப் பகுதி
மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜமணபுதூரிலிருந்து
திருப்பத்தூர் வரவேண்டுமென்றால் 8 கிலோ மீட்டர் தூரம்
வந்துதான் வரவேண்டும். அதேபோல மண்டலவாடியிலிருந்து
ஜோலார் பேட்டைக்கு வரவேண்டுமானால் 7, 8 கிலோமீட்டர்
தூரம் வரவேண்டியிருக்கிறது. அந்தப் பகுதிகளில் கிட்டத்தட்ட
10,000 க்கு மேலாக பொதுமக்கள் வசிக்கிறார்கள். ஆனால்
அந்தப்பகுதி மக்கள் இதுவரை பஸ்ஸே பார்த்தது இல்லை
என்பதைச் சொல்லும் போது, அதை ஒரு குற்றச்சாட்டாக
இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

திருப்பத்தூரில் பெரியார் போக்குவரத்துக் கழக பஸ்ஓடுகிறது.
எப்படி ஓடுகிறது என்றால், நல்ல நிலைமையில் நல்ல ரோடுகளில்
ஓடிய பஸ்களை, மாற்றி மோசமான ரோடுகளில் பழுதடைந்த
பஸ்களைக் கொண்டு ஓட்டுகிறார்கள். அது மட்டும் அல்ல,
சரியான நேரத்தில் நல்ல டைம்களில் ஓடிய பஸ்களை
மாற்றி டைம்களையும் சிக்கலான
வழிகளையும்,

நேரத்தில் அந்தப் பஸ்களை விடுகிறார்கள். இதற்கு காரணம்
அங்குள்ள அதிகாரிகள் சரியான கண்காணிப்புச் செய்யாதது தான்
என்று சொல்லிக் கொள்கிறார்கள். இதன் காரணமாகவே அந்த
இடத்தில் பஸ்கள் நட்டத்தில் ஓடுகின்றன என்பதையும் ஒரு
குற்றச்சாட்டாக இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதே போலத்தான் திருப்பத்தூரிலிருந்து பழனிக்குச் செல்ல
பஸ் வேண்டும் என்று நீண்ட நாட்களாக அந்தப் பகுதி மக்கள்
கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். திருப்பத்தூரிலிருந்து பழனிக்
குச் சென்று ஆண்டவனை தரிசிக்க விரும்பும் பக்தர்கள் அதற்கு
வழியில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே திருப்பத்தூரிலிருந்து
பழனிக்கு உடனடியாக ஒரு பஸ் விடவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதே போல் திருப்பத்தூரிலே இருந்து திருப்பதிக்கு ஒரு பஸ்
விட வேண்டும். அடுத்து வட ஆற்காடு மாவட்டத்திலே
திருப்பத்தூர் பகுதியிலே நிறைய நகரப் பேருந்துகள் விட
வேண்டும். ஜல்காம்பாறைக்கு பஸ் விடுவது குறித்து அதற்கான
டைம் கூட நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் என்ன காரணத்
தாலோ அது ரத்து செய்யப்பட்டு விட்டது. இந்த ஜல்காம்
பாறை என்பது ஒரு விசேஷமான இடமாகும். ஆகவே அந்த
இடத்திற்கு நகர பேருந்து விடுவதற்கான எல்லா ஏற்பாடுகளும்
செய்யப்பட்டு விட்டதற்குப் பிறகு அந்த பஸ் விடாததன்
காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். மேலும்
திருப்பத்தூர் பகுதியிலே இப்படி நிறைய கோரிக்கைகள் வந்து
இருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளை ஏற்று நகரப் பேருந்து
களையும், மற்றப் பேருந்துகளையும் நிறைய விட வேண்டும்
என்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடை
பெறுகிறேன்.

திரு ந. வீராசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்
சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கை
யின் மீது பேசுகின்ற வாய்ப்பு நல்கிய தங்களுக்கு முதற்கண் என்
மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாட்டினுடைய முன்னேற்றம், சமூக, பொருளாதார
வளர்ச்சி, பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம் ஆகியவைகள் அந்
நாட்டில் இருக்கக்கூடிய மின்சக்தி, போக்குவரத்து,
தகவல் தொடர்பு ஆகியவற்றைப் பொறுத்துத்தான்
அமைந்திருக்கின்றன என்பதைப் பொருளாதார வல்லு
நர்கள் கூறி இருக்கிறார்கள். அதற்கேற்ப இன்று
தமிழகத்தில் நாட்டுடைமையாக்கப்பட்டிருகின்ற பேருந்துக்
கழகங்கள் ஆல்போல் வளர்ந்து அருகுபோல்



தொட்டிகளையெல்லாம்
வேர்விட்டு தமிழகத்தின் பட்டி
இணைத்து பாமர மக்கள் பயன்படுகின்ற வகையிலே பணியாற்றி
வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்
பணியாற்றுகின்ற சூழ்நிலையில் சமூகத்தில் இருக்கக்கூடிய அறி
யாமை, கொடுமை, ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமை இப்படிப்பட்ட
சர்வ வியாதிகளுக்கும் நிவாரணம் அளிக்கக்கூடிய சஞ்சீவி
மூலிகைதான் இந்தப் போக்குவரத்துக் கழகம். அந்த அளவுக்குப்
போக்குவரத்துக் கழகம் தமிழகத்தில் பணியாற்றி வருகின்றன
என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
1959-ல் 200 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல்உள்ள சாலைகளுக்கு
மட்டும் பேருந்துகள் விட வேண்டும் என்பது அரசின் முடிவு.
1967—ல் 120 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் இருக்கக்கூடிய
வழித்தடங்களை தேசிய உடைமையாக்கி அதில் மட்டும் பேருந்து
களை விட வேண்டும் என்பது அரசின் முடிவு. கன்னியாகுமரி
மாவட்டத்திலுள்ள அனைத்து வழித்தடங்களையும் அரசு எடுத்
துக்கொண்டு அதிலே பேருந்துகள் விடப்படும் என்று முடிவு
எடுக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டுவரை அரசு போக்குவரத்துத்
துறையின் கட்டுப்பாட்டில் இருந்த நாட்டுடைமையாக்கப்பட்ட
போக்குவரத்துப் பணி, நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு
செய்யப்பட்டு இன்று பல்வேறு போக்குவரத்துக் கழகங்களாக
மலர்ந்து தமிழக மக்களுக்குப் பணியாற்றி வருகின்றது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையில் தமிழகத்தில்
8 போக்குவரத்துக் கழகங்கள் நிறுவப்பட்டு அவை சுறுசுறுப்
போடும் சீராகவும் தமிழக மக்களுக்குப் பயன்பட்டு வருகின்றன.

அதற்குப் பிறகு, பட்டாபிராமன் அவர்கள் தலைமையில்
நிறுவப்பட்ட அந்தக் குழுவின் பரிந்துரையின்படி 600 பேருந்து
களுக்கு அதிகமாக உள்ள பேருந்துக் கழகங்களை ஏற்படுத்தி
அவை ஏறத்தாழ ஒரு மாவட்டத்தில் செயல்படும் வகையில்
பிரிக்கப்பட்டு அந்த முடிவிற்கிணங்க இன்று 5 பேருந்துக் கழகங்கள்
அதிகப்படுத்தப்பட்டன. அந்தப் பேருந்துக் கழகங்களுக்கு,
இந்த நாட்டிற்கு இந்தச் சமுதாயத்தினுடைய முன்னேற்றத்திற்கு
மறுமலர்ச்சிக்கு அரும்பாடுபட்ட தலைவர்களின் பெயர்களைச்
சூட்டி இருப்பதற்கு நான் மனதார இந்த ஆட்சிக்கு நன்றி செலுத்
தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குப்பிறகு சோழன் போக்கு
வரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு திருச்சியிலே அமைந்
திருக்கின்ற அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு இன்னும் பெயர்
சூட்டப்படவில்லை. தமிழ் மொழியின் இருண்ட காலம் என்பதை
அடுத்து தமிழ் இலக்கியத்திலும், தமிழ் உரைநடையிலும் ஒரு
மறுமலர்ச்சியை, ஒரு எழுச்சியை, ஒரு எளிய முறையினை தமிழ்
உரைநடையிலே தோற்றுவித்த மறைமலை அடிகளை அடுத்து
அவர்கள் வழிநின்ற திரு.வி. கலியாண சுந்தரனார் அவர்களுடைய
பெயரினை அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சூட்ட
வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும்
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும்,
நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. த. வீராசாமி] [1982 மார்ச்

(முற்பகல் 11.00)

தமிழகத்தில் உள்ள மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை
12,871. அவற்றில் நாட்டுடமையாக்கப்பட்ட பேருந்துகளின்
எண்ணிக்கை 7,807 ஆகும். மீதி தனிப்பட்டவர்களிடம்
இருந்து வருகிறது. இன்று நாட்டுடமையாக்கப்பட்டிருக்கும்
பேருந்துக் கழகங்கள் தமிழ் நாட்டில் பேருந்து பணிகளை
61 சதவீத அளவிற்கு செய்து நாட்டுமக்களுக்கு நல்லமுறையில்
சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

இன்று தமிழகத்தில் இருக்ககூடிய அனைத்துப் பேருந்துக்
கழகங்களிலும் உள்ள பேருந்துகள் ஓடிய தூரம் 1981—82ல்
6,704 இலட்சம் கிலோ மீட்டராகும். பயணம் செய்த பயணி
களின் எண்ணிக்கை 200.65 கோடியாகும். பேருந்துகள் பயன்
படுத்தப்பட்ட அளவு 90.6 சதவீதமாகும். கிலோமீட்டர்
ஓட்டத் திறன் 96 சதவீதம். உயர்வேக டீசல் லிட்டர் ஒன்றுக்கு
ஓடிய கிலோமீட்டர் 3.83 ஆகும்.

தமிழ்நாட்டில் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றக்
கூடிய பணியாளர்களின் எண்ணிக்கை 61,993 ஆகும்.

1977-ல் தமிழ்நாட்டுப் போக்குவரத்துக் கழகங்களில்
இருந்த நிலைமையையும், பொன்மனச்செம்மல்புரட்சித் தலைவர்
அவர்கள், திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் பொறுப்பேற்ற பின்னர்
1981—82-ல் இருக்கும் நிலைமையையும் ஒப்பிட்டுப்பார்த்தால்
எந்த அளவிற்குப் போக்குவரத்துக் கழகங்கள் வளர்ந்து நாட்டு
மக்களுக்குப்பயன் அளித்து வருகிறது என்பதை இந்த மன்றத்திற்கு
தெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறையின் அமைச்சர்
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்
களின் அயராத உழைப்பின் காரணமாக 1976—77-ல் 4,953
ஆக இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை இன்று 1981—82ல்
7,803 ஆக உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கி
றேன். வழித்தடங்கள் 2,045 ஆக இருந்து இன்று 3,935 ஆக
உயர்ந்துள்ளது. புதிய வழித்தடங்கள் 132 ஆக இருந்தது
இன்று 493 ஆக உயர்ந்துள்ளது.

பயன்பெற்ற மக்கள் தொகை 1.85 இலட்சத்திலிருந்து
15.62 இலட்சமாக உயர்ந்துள்ளது. புதிய பேருந்துகளின் எண்
ணிக்கை 349 லிருந்து 1,252 ஆக உயர்ந்துள்ளது. இந்த அளவிற்கு
போக்குவரத்துத் துறை இயங்கி கிராமமக்களுக்குவசதிசெய்துவரு
கிறது. கிராம மக்களின்மேம்பாட்டிற்காக இந்தப்போக்குவரத்துக்
கழகங்கள் இன்றைக்கு இயங்கி வருகின்றது. இங்கேபேசியதிராவிட
முன்னேற்றக்கழக உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் பேசுகிற
போது, தனியார்களுக்கு கொடுக்கும் சலுகைகள் காரணமாக
வும் தனியாரிடம் உள்ள வழித்தடங்களை தேசியவுடைமையாக
காததினால்தான் இப்போது இந்த நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக



1982 மார்ச் 24] [திரு. த. வீராசாமி]

சொன்னார்கள். (மணியடிக்கப்பட்டது.) அவர்களுக்கு நான்
ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்று மத்திய
அரசு டீசலுக்கு, மோட்டார் வண்டிகளின் உதிரிப்பாகங்களுக்கு
அதிக வரி போட்டிருப்பதின் காரணமாக, அதன் காரணமாக விலை
வாசி உயர்ந்திருப்பதன் காரணமாக—மதிப்பிற்குரிய இந்திரா
காந்தி அம்மையார் வந்ததற்குப் பிறகு மூன்றுமுறை இவை
உயர்த்தப்பட்டிருப்பினும் தமிழக அரசு இரண்டு முறைதான்
பயணிகள் கட்டணங்களை உயர்த்தி மூன்றாவது முறை உயர்த்
தினால் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காக உயர்த்தாமல்,
அதோடு தொழிலாளர்கள் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும்
வகையில் பல சலுகைகள் அளித்திருப்பதாலும் 1980—81-ல் 13
கோடி ரூபாய் நஷ்டம் இருந்தது 1981—82-ல் 14 கோடியாக
உயர்ந்திருக்கிறது. இது அமைச்சர் அவர்கள் இழைக்கிற தவறினால்
ஏற்பட்ட நஷ்டம் அல்ல. (மணியடிக்கப்பட்டது.) இறுதியாக
ஒன்றை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே
நாட்டுடமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல்
போக்குவரத்து குறித்த இந்த விவாதத்தின்மீது என்னுடைய
கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் 1959 ஆம் ஆண்டில், 200 கிலோ மீட்டருக்கு
மேலுள்ள வழித்தடங்களில் விரைவுப் பேருந்துகளை அப்போ
திருந்த காங்கிரஸ் ஆட்சி சீரும் சிறப்புமாக விட்டது. ஆனால்,
அந்தப் பேருந்துகள், அந்த நேரங்களில் எவ்வாறு இயங்கின,
இப்போது எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பார்த்தால் அதன்
நிலை நன்கு விளங்கும். அரசு விரைவுப் பேருந்துகள்
அப்போது விடப்பட்டது. இப்போது 8 அரசுப் பேருந்து போக்கு
வரத்துக் கழகங்கள் உள்ளன. 1982—83 ஆம் ஆண்டில் 13 போக்கு
வரத்து கழகங்களாக உண்டாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதிலே
13 போக்குவரத்துக் கழகங்களிலே, வேலூர் மாவட்டத்திலுள்ள
இப்போது பிரிக்க இருக்கின்ற போக்குவரத்துக்கழகத்திற்கு பெருந்
தலைவர் காமராஜ் போக்குவரத்துக் கழகம் என்று பெயரிட
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், அதற்கு
பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்று குறிப்
பிடப்பட்டுள்ளது. பெருந்தலைவர் காமராஜ் அவர்கள்
குடியாத்தம் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதலமைச்சர்
ஆனார்கள். அங்கே அனைத்து அரசியல் கட்சிகளும்
பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பெயரை அந்தப்
போக்குவரத்துக் கழகத்திற்கு வைக்க வேண்டுமென்ற
கோரிக்கை, உண்ணாவிரதம், போராட்டங்களை நடத்தினார்கள்.
ஆகவே, அதை மறு பரிசீலனை செய்து, வேலூர் போக்கு
வரத்துக் கழகத்திற்கு பெருந்தலைவர் காமராஜ் அவர்கள்
பெயரை வைப்பது நியாயமானது, நேர்மையானது, உங்களுடைய
அண்ணா வழியில் வரக்கூடிய கொள்கைக்கு நியாயமானதாக

அமையும். மேலும் நீங்கள் இப்போது திருச்சியிலே
போக்குவரத்துக் கழகத்தை நிறுவப்போகிறீர்கள். அதற்குப்
பெயரிடவில்லை. அந்த இடத்தில் வேண்டுமானால், அழகிரி
போக்குவரத்துக் கழகம் என்று பெயரிடுவது சாலச் சிறந்தது.
ஆகவே, இந்தப் பிரச்சனையில் அப்படியே விட்டுவிடாமல்,
பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பெயரை அந்தப்
போக்குவரத்துக் கழகத்திற்கு வைக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், 1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய மொத்த
பேருந்துகளின் எண்ணிக்கை 12,871 என்று குறிப்பிடப்
பட்டுள்ளது. அரசு போக்குவரத்துக் கழகங்கள் இதிலே
61 சதவீதம் என்றும், தனியார் போக்குவரத்துகள் 39 சதவீதம்
என்றும் கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. நியாயமான முறையில்
ஏழை எளிய மக்கள் வசிக்கும் பகுதிகளிலே இந்தப் பேருந்துகளை
விடவேண்டும். பின்தங்கிய பகுதிகளுக்கு, நகரப் பேருந்துகளை
விட்டால்தான் மக்கள் அதை நல்ல முறையில் பயன்படுத்திக
கொள்ள முடியும். ஆகவே, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்
1981–82 ஜனவரி இறுதிவரை 1,345 வழித் தடங்களில் பேருந்
துகள் விடப்பட்டன. செலவு 36 கோடி என்று கூறியுள்ளார்கள்.
ஆகவே, நான் கேட்டுக் கொள்கிறேன். சோழன் போக்குவரத்து
கழகத்தில் டி.என்.எம். 407, டி.என்.எம். 618 ஆகிய இரண்டு
பேருந்துகள் அரியலூர் சேலம் இரண்டு வண்டிகள்
ஓடுகின்றன. அந்த வண்டிகளில் யாரும் பிரயாணம் செய்ய
முடியாது. மேலே இருக்கிற கூறைகள் மிகவும் பாழைடந்து
உள்ளன. அந்த வண்டியிலே ஒருவர் கூட ஏறாமல், காலியாக
போகிறது. இது குறித்து, சோழன் போக்குவரத்துக் கழக
இயக்குநருக்கு மனு அனுப்பினேன். அதனால் எந்த விதமான
பலனும் இல்லை. அந்தப் பேருந்துகளை விடாமல் இருப்பதே
சாலச் சிறந்தது. அந்தப் பேருந்துகளில் அதிகமாக தக்காளிதான்
ஏற்றப் படுகிறது. இடையிலே 15 நிமிடங்கள் நிற்கிறது.
வாழைப்பாடி, நரசிங்கபுரம், ராசிபுரம் செல்லும் பாதைப் பிரிவு
ரோடு போன்ற இடங்களில் நிறுத்தப்பட்டு, அந்தப் பேருந்தில்
ஒருவரும் பிரயாணம் செய்யாத அவல நிலை இருக்கிறது.
இந்த நிலையைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அங்காடிப் பேருந்துகள் விடப்படுகின்றன என்று குறிப்பிடப்
பட்டிருக்கிறது. சேலம் மாவட்டத்தில் இது போன்ற பேருந்துகள்
விடப்படுவதாகத் தெரியவில்லை. ஆனால் பிரயாணிகள்
பேருந்துகளே அங்காடிப் பேருந்துகளாக செயல்படுவதாக
தெரிகிறது. ஆகவே, அந்த இடங்களிலே நீங்கள் நல்லமுறையிலே
பேருந்துகள் விடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். 1978–79,
1979–80 ஆண்டுகளில் போக்குவரத்துக் கழகங்களில் போதிய
அளவு லாபம் கிடைக்கவில்லை, நட்டத்தில் ஓடுவதாக
கூறியுள்ளீர்கள்.





[முற்பகல் 11–10]

ஆகவே, டீசல் மற்றும் உபரிப் பொருட்கள் விலை ஏறியதால்
13 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகிறது என்று கூறியிருக்கிறீர்
கள். தனியார் பேருந்துகளை எவ்வளவு சீரிய முறையிலே,
சிறப்பான முறையிலே நடத்துகிறார்கள் என்பதைப் பார்க்க
வேண்டும். அவர்கள் பேருந்துகளைப் சுத்தமாகவும், மினுமினுப்
பாகவும் வைத்து குறிப்பிட்ட இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்திலே
போய்ச்சேருகின்ற முறையிலேநடத்துகிறார்கள். உதாரணத்துக்கு
சொல்ல வேண்டுமென்றால் திருவள்ளுவர் போக்குவரத்து
கழகப்பேருந்துகள் மார்ச் 6 ம் தேதியும் 20 ஆம் தேதியும்
சேலத்திற்குச் செல்ல வேண்டியது செல்லவில்லை. கடந்த சட்ட
மன்றக் கூட்டத் தொடரின் கடைசி நாள் 11 மணிக்குச் செல்ல
வேண்டிய சூப்பர் டீலக்ஸ் பேருந்து செல்லவில்லை. திருவள்ளு
வர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் முறையாக, செம்மை
யாகச் செயல்படவில்லை. தனியார்களைப் போன்று நல்ல முறை
யிலே பேருந்துகளை ஓட்டினால் லாபம் கிடைக்கும். உதாரணத்
திற்குச் சொல்ல வேண்டுமென்றால் பல வழித் தடங்களிலே
தனியார் உரிமையாளர்களுக்கு உரிமங்கள் கொடுக்கப்பட்டிருக்
கின்றன. பீக் ஹவர்சில் மாலை 6 மணி முதல் 8 மணிவரை,
மதியம் ஒரு மணி முதல் 3 மணிவரை குறிப்பிட்ட நேரங்களில்
உங்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்கிறீர்கள். சென்னையி
லிருந்து தாக்கீது வந்தது என்று அங்கே இருக்கிறவர்கள் கூறு
கிறார்கள்—சேலம்-ஆத்தூர் செல்லக்கூடிய பஸ்ஸும், சேலம்—
கள்ளக்குறிச்சி செல்லக்கூடிய அண்ணா போக்குவரத்துக் கழக
பஸ்ஸும் தனியார்களுக்கு அந்த நேரத்திலே உரிமை வழங்கி
இருக்கிறீர்கள். இப்படி மாற்றியமைக்கப்பட்டிருக்கின்ற நேரத்
திலே இதனால் அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு
டிரிப்புக்கு 100 முதல் 150 நட்டம் ஏற்படுகிறது. சேலம்—
அரூருக்குச் செல்கின்ற பஸ் $5\frac{1}{2}$ மணிக்குச் செல்ல வேண்டி
யிருந்தது. ஆனால் அதற்கு முன்பாக தனியார் பேருந்து ஒன்று
செல்கிற முறையிலே கிருஷ்ணவேணி பஸ் உரிமையாளருக்கு
5-20 க்குப் பேருந்து அவர்கள் ஓட்டக்கூடிய முறையிலே அனுமதி
கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இப்போது நட்டம்
ஏற்பட்டிருக்கிறது. அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்கு 50
ரூபாய் தான் வசூலாகிறது, ஆனால் அந்த தனியார் பேருந்துக்கு
300 ரூபாய் வசூலாகின்ற நிலைமை இருக்கிறது.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே 12.6 கோடி ரூபா
யிலே 555 அடிச்சட்டங்கள் வாங்குவதாகக் கூறியிருக்கிறீர்கள்.
அது போன்ற முறையிலே நல்ல முறையிலே செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

புற்று நோயாளிகளுக்கு சலுகைகள் கொடுப்பதாகச் சொல்லி
இருக்கிறீர்கள். அதை எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

விரைவுப் பேருந்துகளிலே கம்பியில்லாத் தந்தி முறை கொண்டு வரப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். எந்தெந்த வழித் தடங்களிலே ஏற்படுத்தப்படும் என்று சொல்லவில்லை. அதையும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலை விபத்துக்களிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதைச் செம்மையாகக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

தற்செயல் விடுப்பு என்று ஆண்டுக்கு 10 நாட்கள்தான் அனுமதிக்கப்படுகிறது. அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவதைப் போன்று ஆண்டுக்கு 20 நாட்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

5,635 பேருந்துகளில் டைசிகான் பொருத்தப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதனால் பேருந்துகள் வேகமாக ஓடவில்லை. மெதுவாகச் செல்லுகின்ற காரணத்தினால் தனியார் வண்டிகளிலே பொதுமக்கள் செல்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தனியார் வண்டிகளிலேயும் அதைப் பொருத்த ஏற்பாடு செய்தால்தான் நம்முடைய வண்டிகள் நல்ல முறையிலே ஓடமுடியும். இல்லாவிட்டால் நம்முடைய போக்குவரத்துக் கழகங்களுக்கு மிகுந்த நட்டம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாண்டியன், சோழன், சேரன், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றுகின்றவர்களுக்கு 20 சதவீதம் கொடை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பல்லவன், திருவள்ளுவர், பெரியார் போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றுகின்றவர்களுக்கு 8.33 சதவீதம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த பாரபட்சம் ஏன்? எந்த அடிப்படையில் இந்த பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

அரசுப் பேருந்துகள் நல்ல முறையிலே பராமரிக்கப்படவில்லை. தனியார் துறையிலே நல்ல முறையிலே பராமரிக்கப்படுகின்றன. ஆகவே, இவற்றையும் நல்ல முறையிலே பராமரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே 200 நாட்கள் பணியாற்றியிருந்தால் 260 ரூபாய் என்றும் 150 முதல் 199 நாட்கள் பணியாற்றியிருந்தால் 75 ரூபாய் என்றும் 99 முதல் 150 வரை பணியாற்றியிருந்தால் 25 ரூபாய் என்றும் சாதனை ஊக்கத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. அசம்பாவித நிகழ்ச்சிகள் ஏற்பட்டாலும் அந்தக் காலங்களிலே ஓட்டுநர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் அதிலே பொறுப்பு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எடுத்துக்காட்டாக 23–3–1981, 26–3–1981 15–7–1981, 24–8–81, 21–8–81, 6–11–81 போன்ற 8 தினங்





களில் பணியாளர்கள் வேலை நிறுத்தத்திலே கலந்துகொண்டதாக கூறுவது சரியல்ல. அந்த நாட்களைச் சாதாரண நாட்களாக கருத வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல்லவன் பொறியியல் கழகத்திலே பலரைப் பங்குத் தொகை பெற்றுக் கொண்டு சேர்த்திருந்தும் கூட அவர்களுக்கு லாபத்திலே பங்கு வழங்கப்படவில்லை. ஒரு போக்குவரத்துக் கழகத்திலிருந்து மற்றொரு போக்குவரத்துக் கழகத்திற்கு மாற்றுகிறபோது டிரைவர்கள், கண்டக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள் எல்லோருக்கும் ஒரே சீனியாரிட்டி முறையிலேயே கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டுவந்தால் அந்த நிர்வாகம் நல்ல முறையிலே செயல்படும். வேறு போக்குவரத்துக் கழகங்களுக்குச் சென்றால் ஜூனியராக எடுத்துக்கொள்வது என்பது நியாயமற்ற முறை என்று கருதுகிறேன். அரசு பொதுத் துறை நிறுவனத்திலே ஒரு நிர்வாக இயக்குநர் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு மேலே பணிபுரியக் கூடாது என்று சட்டத்தின் 316 பிரிவிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் பல்லவன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குனர் 6 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார். இவ்வாறு அனுமதிக்கப்பட்டிருக்கிறது முறைதானா என்று கேட்டு அவரை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். 1975–76, 77 ஆம் ஆண்டுகளில் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு வேலை கிடைக்காதவர்களுக்கு 30–6–81 வரையில் பதிவு செய்தவர்களுக்கு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் நேர்முகத் தேர்விற்கு அழைத்து உள்ளார்கள். அது முறையா என்று கேட்கின்றேன். ஆத்தூரிலே மோட்டார் வாசன ஆய்வாளர் நிலையம் ஏற்படுத்த வேண்டுகிறேன்.

திரு. ஏ. கி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியத்தை வரவேற்றுப் பேச வாய்ப்பளித்தமைக்கு துணைத்தலைவர் அவர்களுக்கு நன்றியைக் காணிக்கை ஆக்குகிறேன்.

முதன் முதலாக இந்த மானியத்திலே அமைச்சர் அவர்களை பாராட்ட வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. ஏனென்றால் மக்கள் வாயார பாராட்டுகிற இந்த போக்குவரத்துக் கழகத்திற்கு இந்த மன்றத்தின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை பாராட்டுவது இது தகுந்த நேரமாக இருக்குமென்று கருதுகிறேன். பொதுவாக போக்குவரத்துக் கழகம் என்று சொன்னாலே ஓராண்டு காலத்தில் இரண்டு மூன்று முறை போராட்டம் என்று அறிவிக்கப்பட்டு மக்கள் பாதிக்கக் கூடிய நிலையிலே இருந்து தமிழக அரசைப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு முத்துசாமி அவர்கள் மூலம் அது அறவே ஒழிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னாலே இது வரையில்

(திரு. ஏ. சி. சண்முகம்) [1982 மார்ச் 24

எந்தவிதமான போராட்டமும் இந்த 1½ ஆண்டுக்காலத்தில் நடக்க வில்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இதற்குக் காரணம் அமைச்சர் அவர்களின் திறமையும் நிர்வாகத்தை நடத்திச் செல்கிறசாமர்த்தியமும்தான் என்பதை இந்தநேரத்திலே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். போக்குவரத்துத் துறையிலே அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னாலே அவர் ஒரு கட்சிக்கு சொந்தக்காரராக இருந்தாலும், போக்குவரத்துக் கழகங்களில் கட்சிப் பாகுபாடு இல்லாமல், தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஊழியர்களாக இருந்தாலும், அதேபோல காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவரையும் சமமான முறை யிலே அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றி நிர்வாகத்தை நடத்துகிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

போக்குவரத்துத் துறை மானியம் என்றாலே தொழிலாளர் கள் பிரச்சினைகளை உள்ளடக்கி வெட்டுத் தீர்மானங்கள் பல இருக்கும். ஆனால் இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களில் தொழிலாளர்கள் பிரச்சினைகள் பற்றி ஒன்றிரண்டு வெட்டுத் தீர்மானங்களைத் தவிர வேறு கொடுக்கப் படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத் தில் இன்றைய தினம் போக்குவரத்துத் துறையில் ஒரு புரட்சியே ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், பல மாநிலங்களுக்கு சட்டமன்ற உறுப் பினர்கள் சென்று அங்கு போக்குவரத்துக் கழகங்கள் செயல் படுவதை ஆங்காங்கு கண்டுகொண்டிருக்கிறோம். இந்தியாவி லேயே தமிழகத்தில் ஓடுகிற பேருந்துகள் தான் மிகவும் சுத்த மாகவும், வசதியுடனும் அடிக்கடி செல்கிற ஒரு நிலைமை இருந்து வருகிறது. இந்த வாய்ப்பினை தமிழ் மாநிலம்தான் பெற்றிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மற்ற மாநிலங்களுக்கு இந்த போக்குவரத்து கழகங்கள் ஒரு வழிகாட்டியாக விளங்குகின்றன. நம்முடைய போக்குவரத்துக் கழகம் கோவாவில் உள்ள போக்குவரத்துத் துறைக்கு ஆலோ சனைகளையும், அதற்கான வழிமுறைகளையும் கொடுத்து வருகிறது. அதேபோல அந்தமானிலே சேரன் போக்குவரத்து கழகம் வழிகாட்டக் கூடிய அளவிலே அங்கு ஆலோசனைகளை வழங்கி வருகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே தமிழகத்திலே அறிமுகப்படுத்தப்பட் டிருக்கிற சூப்பர் டீலக்ஸ், சொகுசு பேருந்துகள் மிகவும் நல்ல முறையிலே பயன்பட்டுக்கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 120 சூப்பர் டீலக்ஸ், சொகுசு பேருந்துகள் தமிழகத்தில் திரு வள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் சென்றுகொண்டிருக் கின்றன. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் ஓடிக்



1982 மார்ச் 24] [திரு. ஏ. சி. சண்முகம்]

கொண்டிருக்கிற மற்ற பேருந்துகளை சூப்பர் டீலக்ஸ், சொகுசு பஸ்களாக மாற்றினால், மக்களுக்கு மேலும் வசதி செய்கிற கடமையை நிறைவேற்றியதாக பொருள் என்பதை சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, 5 புதிய போக்குவரத்துக் கழகங்கள் துவங்குகிற தமிழக அரசுக்கும் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். வட ஆற்காடு மாவட்டத்திற்குத் தனியாக, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் துவங்குகின்ற அரசுக்கு என்னுடைய நன்றியை காணிக்கையாக்குகின்றேன். அந்தப் போக்குவரத்துக் கழகம் புதிதாக துவங்கினால், இன்னும் பேருந்துகள் செல்லாத பல கிராமங்களுக்குப் பேருந்துகளை விடுகின்ற வழிவகைகளை, வசதிகளை அதிகமாகச் செய்வதற்கு இன்றைக்கு அது காரணமாக இருக்கும் என்பதை இந்த நேரத் திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11.20)

மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் சுட்டிக் காட்டினார்கள். காமராஜர் காலத்திலேயிருந்த பேருந்து களையும், இன்றைய தினம் இருக்கிற பேருந்துகளையும் ஒப்பிட்டு, இன்றைய தினம் ஏதோ துடைக்கவில்லை. சுத்தம் இல்லையென்று அதை ஒரு பெரிய குறையாகச் சொன்னார்கள். காமராஜர் கண்ட கனவை நனவாக்குவதுதான் இந்த புரட்சித் தலைவர் அரசு செய்த சாதனையெனத் தெரிவித்துக்கொள் கிறேன். பெருந்தலைவர் காமராஜர் கண்ட கனவு, பேரறிஞர் அண்ணா கண்ட கனவு ஒவ்வொரு கிராமத்திற்கும் பேருந்துகள் செல்லக்கூடிய நிலையிருக்க வேண்டுமென்பது அதனை நனவாக்குகின்ற அளவு, தமிழக அரசும், அமைச்சர் அவர் களும் அதிகமான பேருந்துகளைக் கிராமங்களுக்கு விடுவதிலே கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் இங்கே ஒரு சில குற்றச்சாட்டுகளை எடுத்துச் சொன்னார்கள். ஏதோ மாட்டு வண்டிகள் போகாத இடங்களுக்கு எல்லாம் இரண்டு மூன்று பஸ்களை என்னுடைய தொகுதியிலே விட்ட தாகச் சுட்டிக்காட்டினார்கள். அதிலே இருந்து நன்றாகப் புரிகிறது. மாட்டு வண்டிகள் கூட போகாத திருப்பத்தூரிலே இருக்கக்கூடிய ஒருசில தடங்களில், தமிழக அரசு பஸ்கள் செல்கின்றன என்றால், இதையே கூட ஒரு சாதனையாக எடுத் துச் சொல்லலாம். மாட்டு வண்டிகள் செல்லாத, பேருந்துகள் செல்ல முடியாத, சாலைகள் சரியாக இல்லாத இடங்களில் எல் லாம் பேருந்துகள் செல்கின்றன என்பதை நினைக்கும்போது பெருமையாக நினைக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

[திரு. ஏ. சி. சண்முகம்] [1982 மார்ச் 24

இப்பொழுது போக்குவரத்துக் கழகங்களிலே கடுமையான நட்டம் வருகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். அதற்கு மூல காரணமாக இருப்பது டீசல் விலை உயர்வும் ஸ்பேர் பார்ட்ஸ் விலை உயர்வும்தான் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மைய அரசுதான் டீசல் விலையை உயர்த்துகிறது. மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்களுக்கு, மத்திய அரசைக் கண்டிக்கவோ அல்லது டீசல் விலையைக் குறைக்க வேண்டுமென்று குரல் கொடுக்கவோ மனம் வரவில்லை. இருந்தாலும் நான் சொல்ல விரும்புவது, மத்திய அரசு மாதா மாதம் டீசல் விலையை ஏற்றுவதால், அடிக்கடி ஏற்றுவதால்தான் பேருந்துக் கட்டணங்கள் ஏறுகின்றன என்பதைத் தெரிவித்து, மத்திய அரசு அதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாராளுமன்றத்திலே பல பிரச்னைகளை எடுத்துச்சொல்லி டீசல் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 1980-லே ரூ. 2.23 காசுக்கு விற்ற டீசல் விலையை அதே ஆண்டிலே, 1–7–80-லே, ரூ. 2.27 காசாக உயர்த்தியிருக்கிறார்கள். அதே போல், டையர், டியூப் ஒரு செட் விலை ரூ. 2,368 இருந்தது. ஒரு மாதத்திற்குள்ளாக, ரூ. 2,487 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். இதுபோன்று உதிரி பாகங்களின் விலையையும் ஏற்றுவதால்தான் இதுபோன்ற கட்டண உயர்வுகள் ஏற்படுகின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தேசியமயக் கொள்கைக்கு நாங்கள் எல்லாம் எதிராக இருக்கிறோம் என்று சுந்தரம் அவர்கள் சொன்னார்கள். காங்கிரஸ் காலத்திலே கொண்டு வரப்பட்ட விரைவுப் பேருந்து போக்குவரத்துக் கழகம் முதற்கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தேசியமயமாக்க வேண்டுமென்ற திட்டத்திலே, தனியார்கள் கோர்ட்டுக்குச் சென்று தடையை வாங்கியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே, ஒரு தனியாருக்குச் சொந்தமான 4 பேருந்துகள் சென்னைக்கு வந்து கொண்டிருந்தன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் அது தேசியமயமாக்கப்பட்டது. ஆனால், ஹைகோர்ட்டுக்குச் சென்று தடை வாங்கியிருக்கிறார்கள். சென்ற ஒரு மாதத்திற்கு முன்னாலே, அதை சுப்ரீம் கோர்ட்டுக்குக் கொண்டு சென்றிருக்கிற காரணத்தால், கோர்ட்டினுடைய காலதாமதத்தால்தான் இதுபோன்ற பேருந்துகளைத் தேசியமயமாக்குவது தள்ளி போடப்படுகிறது.

தேசியமயமாக்கும் கொள்கையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று கருதுகிறேன். இன்னும் பல கிராமங்களுக்கு, இன்னும் பல வழித்தடங்களுக்கு நாம் பேருந்துகளை விட வேண்டிய கடமையிருக்கிறது. தனியார் பேருந்துகளுக்கிடையே பேருந்துக்



1982 மார்ச் 24] [திரு. ஏ. சி. சண்முகம்]

கழகங்களுடைய பேருந்தை விடுவதால், அதைவிட ஒரு முக்கியமான பங்கு பல கிராமங்களுக்கு, பேருந்தே செல்லாத வழித்தடங்களுக்கு நம்முடைய பேருந்துகளை அனுப்பி விட்டு பின்னாலே, இந்தத் தனிப்பட்டவர்களுடைய பேருந்துகளை தேசீயமயமாக்கக்கூடிய பிரச்னையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், பாதாள ரெயில் திட்டம், சென்னை நகரத்தினுடைய மக்களுக்கு, போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடிய, மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப ஈடு கொடுக்க முடியாமலிருக்கிற அந்தப் பிரச்னையைச் சமாளிக்க வேண்டுமென்றால், பாதாள ரெயில் திட்டத்தை மத்திய அரசு உடனடியாக சென்னை மாநகரத்திலே கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பல மாநிலங்களிலே இருக்கிற போக்குவரத்துக் கட்டணத்தோடு, இந்த மாநிலப் போக்குவரத்துக் கட்டணங்களை ஒப்பிட்டுப் பார்த்தால், வித்தியாசம் பார்த்தால், அந்த மாநிலங்களைவிட தமிழ் நாட்டிலேதான் குறைவாக இருப்பது தெரியும். ஒன்றிரண்டு உதாரணங்களை மட்டும் நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

நகரக் கட்டணம் தமிழ்நாட்டிலே 30 காசுகள்தான் ; ஆனால் கேரளாவிலே 40 காசுகள் ; கர்நாடகத்திலே 30 காசுகள் ; ஆந்திராவிலே 30 காசுகள்.

நகரத் தடங்களில் அதிகபட்ச நீளம் நம்முடைய மாநிலத்திலேதான் 30 கிலோ மீட்டர் டவுன் பேருந்துகள் சென்று கொண்டிருக்கின்றன. 18 கிலோ மீட்டர் கேரளாவிலே ; கர்நாடகத்திலே 32 கிலோ மீட்டர்கள் ; ஆந்திராவிலே 32 கிலோ மீட்டர்கள்.

புற நகரக் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்குத் தமிழ்நாட்டிலே ஏழரை காசுகள் ; கர்நாடகத்திலே 7.7 காசுகள் ; ஆந்திராவிலே 8 காசுகள்.

விரைவுப் பேருந்துக் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்குத் தமிழ்நாட்டிலே ஏழரை பைசா ; கேரளாவிலே 9 பைசா ; கர்நாடகத்திலே 9.6 பைசா ; ஆந்திராவிலே 10 பைசா.

சூப்பர் டீலக்ஸைப் பொறுத்தவரையில் ஒரு கிலோமீட்டருக்கு தமிழ்நாட்டிலே ஒன்பதரை காசுகள். மிகவும் மோசமாக இருக்கக்கூடிய பல மாநிலத்துப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் கேரளாவிலே 13½ பைசா ; கர்நாடகத்திலே 17½ பைசா ; ஆந்திராவிலே 12 பைசா.

ஏ. சி. பேருந்துகள் தமிழ்நாட்டிலே தான் செல்கிறது. மற்ற மாநிலங்களிலே எங்கேயும் செல்லவில்லை.

நவீன வசதிகள் கொண்ட, தூங்கும் வசதிகள் கொண்ட பேருந்துகளை நாம் அறிமுகம் செய்ய இருக்கிறோம். அவ்வாறு அறிமுகம் செய்யும் அரசை இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற முறை இந்தச் சட்டமன்றக் கூட்டத்திலே சொன்னதைப்போன்று, கார்கோ கம் பாசஞ்சர் பல மாநிலங்களிலே வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசும் அதை ஒருசில இடங்களிலே நிறைவேற்றி இருக்கிறது. அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலேயும் பல நேரங்களில் கார்கோ கம் பாசஞ்சர் பேருந்துகளை அறிமுகப்படுத்த வேண்டும். அதை விரைவு படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

* திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொதுவாகப் போக்குவரத்துக் கழகங்கள் அபிவிருத்திகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளும் நேரத்தில், தொழிலாளர்களின் பிரச்னைகள் பல தீர்க்கப்படாமல் இருக்கின்றன என்றாலும், பொதுவாக இந்த நேரத்திலே ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். நேஷனலைசேஷன் என்ற கொள்கையை எந்த அளவிற்குத் தீவிரப்படுத்த முடியுமோ அந்த அளவிற்குத் தீவிரப்படுத்துவதற்கு அரசு போதுமான கவனம் காட்டுகிறதா என்ற சந்தேகம் இருக்கிறது. 12,871 பேருந்துகளில் ஏறக்குறைய 40 சதவீதம் பேருந்துகள் தனியார் பேருந்துகளாக இருக்கின்றன. ஆகவே, நேஷனலைசேஷனை எந்த அளவிற்குத் துரிதப்படுத்த முடியுமோ அந்த அளவிற்குத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களை நடத்திச் செல்வதிலே ஒருசில பொருளாதார நெருக்கடிகள் இருக்கின்றன என்பதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். ஆனால் அதே நேரத்தில் அதுபற்றி ஒருசில கருத்துக்களை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஏகபோக முதலாளிகளின் கைகளில் சிக்கி மூழ்கும் ஒரு நிலை இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் இருக்கிறது. சேசிஸ்களுக்கு டாட்டா அல்லது அசோக் லேலண்டிற்குத்தான்போக வேண்டும். இரயில்வேயிலே ஏற்படுத்தியிருப்பதைப் போல சேசிஸ் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். இதை மாநில அரசால் செய்ய முடியவில்லையென்றாலும்கூட மத்திய அரசை வற்புறுத்தி ஏற்பாடு செய்யவேண்டும்.





டயர், டியூப்களை அதிகமாகப் பயன்படுத்துவதை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்தான். அவைகளைத் தனியார் ஏகபோக முதலாளிகளிடம் அவர்கள் நிர்ணயிக்கின்ற விலைக்குத்தான் வாங்க வேண்டிய துரதிருஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டும். தமிழகத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே அரசு இரப்பர் தோட்டத்தில் இரப்பர் கிடைக்கிறது. அந்த இரப்பரைப் பயன்படுத்தி டயர், டியூப் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் இலாபம் ஏற்படுத்த முடியும்.

ஸ்பேர் பார்ட்ஸ் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, அதிலேயிருந்தும் தேவையான இலாபத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

ரூட்டுகளைப் பொறுத்தவரையில், ரூட்டுகளை நேஷனலைஸ் செய்வதைப் போல, டைமிங்குகளையும் நேஷனலைஸ் செய்ய வேண்டும். காம்படிஷன் என்பது அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு இடையிலேயும் ஏற்படும் நிலை இருக்கிறது. ஆகவே, எந்தெந்த நேரத்திலே எந்தெந்த ரூட்டுகளிலே எநதெந்த பஸ் போக வேண்டுமோ அந்த முறையிலே செய்ய வேண்டும்.

திரு. எஸ். சிவராமன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்ட மன்றத்திலே காங்கிரஸ் கட்சி இரண்டாவது பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிறது: எங்கள் கட்சியில் 31 சட்ட மன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம். ஆனால் காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியில் 3 பேர்கள் இருந்தாலும், குடியரசுக் கட்சியில் ஒருவர் இருந்தாலும், அவர்கள் தினமும் இந்தச் சட்டமன்றத்திலே பேசுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நாங்கள் இரண்டாவது பிரதான எதிர்க் கட்சியாக இருந்தாலும் பேசுவதற்குத் தினம் 10 நிமிஷங்கள்தான் கொடுக்கப்படுகிறது. ஏன் கூடுதலாகக் கொடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் கட்சித் தலைவரை இது பற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் சொல்லச் சொல்லுங்கள்.

(முற்பகல் 11-30)

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரேஷனலைசேஷன் ஆப் டைமிங்ஸ் அன்டு ரூட்ஸ் என்பது மிக முக்கியமான தேவை. எந்தெந்த பேருந்து வழித் தடங்களில் அரசு பேருந்துகளை விட முடியாமல் இருக்கின்றதோ, அந்த வழித் தடங்களில் சிறு பஸ் ஆபரேட்டருக்கு உரிமம் கொடுத்து பஸ் விடுவதற்கு வசதி செய்து கொடுத்து அந்தப் பகுதி மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1982 மார்ச் 24

அடுத்து, கட்டணம் ஃபேர் ஸ்டரக்சரைப் பொறுத்த வரையில் ரேஷனலைஸ் பண்ண வேண்டும். தற்போது கூட்டப் போவதில்லை, ஆனால் கூட்டப்படும் நிலை இருக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு மக்களுடைய பர்ச்சேஸ் பலருக்கு அதிகமாக இருக்கிறது என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அந்தக் கட்டணத்தைக் கூட்டக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை, மதுரை, கோவை போன்ற பெரு நகரங்களிலே இரவுப் பேருந்துகளை ஓட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நகரங்களில் பாப்புலேஷன் அதிகரித்துக் கொண்டு வருகிறது. அதன் காரணமாக சிட்டி சபர்ன் பகுதியிலே உள்ள மக்கள் இரவு நேரங்களில் ஆஸ்பத்திரிக்கு வருவதற்கு, டாக்சிகள் டிப்பண்டு பண்ணுவது அவ்வளவு சுலபமான விஷயம் அல்ல. எனவே பம்பாயைப் போல இரவு நேரங்களில் பேருந்துகளை விட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அட்வர்டைஸ்மெண்டு வழியாக அரசுக்கு வருவாய் வரக் கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு தனியார் ஒர்க் ஷாப்புகளுக்கு ஏஜன்சி விட்டு பாடி கட்டும் நிலை இருந்து கொண்டிருக்கிறது. நமக்கும் பாடி பில்டிங் ஒர்க் ஷாப் இருக்கின்றது. அதைப் பயன்படுத்தி நாமே பாடி பில்டிங் வேலையை எந்த அளவுக்கு செய்ய முடியுமோ அந்த அளவுக்கு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆம்னி பஸ்களை அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மேலே குட்ஸ் டிரான்ஸ்போர்ட் கழகத்தில் சரக்குகளை பேருந்துகள் அதிகமாக விட்டு ஏற்றிச் செல்லும் நிலை இருக்குமானால் அதிகமான வருவாய் கிடைக்க வாய்ப்பு இருக்கும்.

அடுத்து, நஷ்டம் ஏற்படுகிற நேரத்தில் அதைச் சரிக் கட்ட வேண்டும். இது குறித்து ஒன்றிரண்டு சொல்ல விரும்புகிறேன். 19-ந் தேதி ஒரு நாள் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. லட்சக் கணக்கான ரூபாய்களை செலவு செய்து அந்த வேலை நிறுத்தத்தை உடைக்க செலவிடப்பட்டது. அப்படிப்பட்ட செலவுகளை எல்லாம் தவிர்க்க வேண்டும். பாதுகாப்புப் படை என்று ஒன்றை ஏற்படுத்தி அவர்களுக்கு ஃபிரியாக எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்று அனுமதிக்கப்பட்டது. இப்படிப்பட்ட நிலைமைகளை நாம் அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். பல பேருந்துகளில் வேலையே செய்யாமல் அட்டென்டன்ஸ் போடப்படுகின்றது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. இந்த நிலை போக்கப்பட் வேண்டும். பின் அதிகமான



1982 மார்ச் 24] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

புரமோஷன் கொடுத்து அதிகமான அளவில் செக்கிங் இன்ஸ்பெக்டர்களைப் போட்டு நஷ்டம் ஏற்படாதவாறு இலவசப் பயணத்தைத் தடுக்க பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பழி வாங்கல், இட மாற்றங்கள் தவிர்க்க வேண்டும்.

இன்றைக்கு விபத்துக்கள் அதிகமாக நடக்கின்றன. லாரிகளின் வேகத்தைக் கட்டுப் படுத்த. வேண்டும். அது மட்டுமல்ல; அந்த லாரிகளில் ஓட்டுகின்ற டிரைவர்கள் பல மணிநேரம் சேர்ந்தாற்போல் ஓட்டுவதால் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்படுகின்றன. அரசு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகங்களில் இருப்பதைப் போல 6 மணி நேரத்திற்கு மேல் ஒரு டிரைவர் ஓட்டக் கூடாது என்று சொல்ல வேண்டும். அதற்காக சட்டம் வேண்டுமானாலும் கொண்டு வர வேண்டும். இன்றைக்கு விபத்துக்களிலே இறந்தவர்களுக்கு ஆயிரம் ரூபாய்கள் கொடுக்கப்படுகின்றன. அந்த உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்க முடியுமா என்பதைப் பரிசீலிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மெயின்டனன்ஸ் மிகவும் மோசமாக இருக்கின்றது. ஏற்கனவே இருக்கின்ற தொழிலாளர்களுடைய எண்ணிக்கையே மிகவும் கம்மி. அதற்கும் மேலே அவர்களுக்கு அதிகமான வேலை கொடுக்கப்படுகின்றது. அதன் காரணமாக மெயின்டனன்ஸ் மோசமாக ஆகிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அதற்காக கேசுவல் லேபர் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகம். அவர்களை ஸ்திரப்படுத்தும் நிலை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கு ஆக்குபேஷனல் பேசிசிலே வேஜசும் மற்ற எல்லா சலுகைகளும் அளிக்கப்பட வேண்டும். சர்வீஸ் கண்டிஷன் ஒரே மாதிரியாக வைக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லப் படுகின்றது. 'லாங்குவிட்டி பேசிசி'லே உள்ள ஸ்கீம்களிலே கூட ஒரே மாதிரியாக உள்ள ஊதியம் கொடுக்கப்படுகிறது கிடையாது. அந்த வேஜஸ் இன்று பல டிரைவர்களுக்கும் கேசுவல் லேபரருக்கும் கொடுக்கப்படாத நிலை. அது மாற்றப்பட வேண்டும். இன்றைக்கு 21 ரூபாய் வாங்குகின்ற டிரைவர்களும் இருக்கிறார்கள். 10 ரூபாய்க்குக் குறைவாக வாங்கும் டிரைவர்களும் இருக்கிறார்கள். அதே போல 90 நாளைக்கு மேலே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகங்களிலே தொழிலாளர்களை வேலைக்கு வைக்காமல் இருக்கும் நிலை இருக்கின்றது. இப்போது தொழிலாளர்கள் நிறைய தேவைப்படுகிறார்கள். ஆனால் அங்கே ஏற்கனவே வேலை செய்து கொண்டிருந்தவர்களை நீக்கி விட்டு புதிய ஆட்களை வேலைக்கு வைக்கிறார்கள். அங்கே ஏற்கனவே இருந்தவர்களை தொடர்ந்து வேலை செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று அவர்களைப் பொறுத்த வரையில் சட்ட ரீதியாக பல சலுகைகள் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதைப் பொறுத்த அளவிலே , ஏற்கனவே போடப்பட்டிருந்த

ஜி.ஓ. 378-ஐ அமுல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மெடிகல் வசதிகளைப் பொறுத்த வரையில், அதிகமாக இந்த வசதிகளை செய்து கொடுக்கக்கூடிய முறையிலே ஒவ்வொரு கழகத்திற்கும், ஒவ்வொரு பெரிய ஆஸ்பத்திரியையும், எல்லா டெப்போக்களிலேயும், ஒவ்வொரு டிஸ்பென்சரி ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் மெடிகல் சர்ட்டிபிகேட்டுக்கள், அதாவது மெடிகல் ட்ரீட்மென்டுக்கான சர்டிபிக்கேட்டுகள் கொடுப்பதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதே போல் கேண்டின் வசதிகள் சென்ற வருடத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொள்கைக் குறிப்பிலே சொன்னார்கள். இன்னும் பல இடங்களிலே கேண்டின் ஏற்படுத்தவே இல்லை. தந்தை பெரியார், கட்டபொம்மன் போன்ற பல பெரிய கழகங்களிலே 100, 200 தொழிலாளர்கள் வேலை செய்யக் கூடிய, பல பணிமனைகளிலே இந்த கேண்டின் வசதி இன்னும் செய்து தரப்படவில்லை. எனவே இந்த கேண்டின் வசதிகளை அமுல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கன்ஸ்யூமர் பிரைஸ் ஷாப் ஏற்படுத்த வேண்டும். விலைவாசியால் பாதிக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு இந்த மாதிரியான கன்ஸ்யூமர் பிரைஸ் ஷாப் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதிலே சிரமம் இருக்கிறது என்று சொல்கின்ற நேரத்திலே, அதிகமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே மத்திய அரசை இந்த விஷயத்தில் இருக்கக் கூடிய தொழிலாளர் அவுசிங் ஸ்கீமை இம்பிளிமென்ட் செய்வதன் மூலமாகவோ அல்லது அவுசிங் டெவலப்மென்ட் போர்டு வழியாகவோ, தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இன்னும் சில கழகங்களிலே கொடுக்கப்படுகிற எஜுகேஷன் கன்சஷன் எல்லாக் கழகங்களிலே இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கும் கொடுக்க வழி செய்ய வேண்டும்.

அதே போல், இன்றைக்கு மாணவர்களுக்கு கன்சஷன் குறித்த இடங்களிலே கொடுக்கப்படுகிறது. எல்லா மாவட்டங்களிலேயும் உள்ள மாணவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை இருக்கிறது. ஆகவே உடனடியாக எல்லா இடத்திலேயும் இதை அமுலாக்க முடியாவிட்டாலும் கூட, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை போன்ற இடங்களிலே ஒரு முதல் கட்ட நடவடிக்கையாக அமுலாக்க வேண்டுகிறேன். (மணி அடிக்கப்பட்டது) பல இடங்களிலே, 8 மணிக்கு மேல் 16 மணிகள் வரையில் தொழிலாளர்களை வேலை வாங்கக் கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்க்க வேண்டும். இப்போது பைபர்கேஷன் ஆப் கார்ப்பரேஷன் என்று ஒன்று ஏற்பட்டு





இருக்கிறது. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் நான் ஒன்றைச் சொல்கிறேன். 382 பேருந்துகள் இருந்தன, ஆனால், இப்போது இந்தக் குமரி மாவட்டத்திலே, ஏற்படுத்தக் கூடிய கழகத்திற்கு 324 என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அது சரியல்ல. எனவே, 400 பஸ்கள் ஒதுக்கப்பட்டால்தான் அவர்கள் ஒரு வயபிள் கார்ப்பரேஷனாக மாறுவதற்கு வசதியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், பொது மக்களைப் பொறுத்தவரையில், பஸ் நிலையத்திலே, ரிடையரிங் ரூம்ஸ் ஏற்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு எந்தவிதமான வசதிகளும் இல்லாமல் இருக்கிறது. திருச்சி, மதுரை போன்ற நகரங்களிலே அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அதே போல், காசு கொடுத்தால்தான் லெட்ரினை உபயோகப்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அது சரியல்ல. பொது மக்களுக்கு இலவசமாக உபயோகப்படுத்தக் கூடிய லெட்ரின்களை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மேலே, காசு கொடுத்து லெட்ரின் போக தனியாக ஒன்று வைத்துக் கொள்ளலாம்.

அதே போல் பேருந்துகள் நிற்கக் கூடிய இடங்களிலே நல்ல உணவு வசதிகள் இல்லை. எனவே அந்த மாதிரி இடங்களிலே உணவு வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த மானியத்தின் மீது பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் இந்திய நாட்டிலே தமிழகத்திலேதான் போக்குவரத்து நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை மற்ற மாநிலங்களிலேயிருந்து வருகின்ற வாகனங்களைப் பார்த்தாலே தெரியும். அந்த வகையில் நாம் பெருமைப்படலாம்.

அடுத்தபடியாக, கடந்த காலங்களிலே, நமது அரசு நிறுவனங்களைச் சேர்ந்த வாகனங்கள் இங்கிருந்து திருநெல்வேலிக்குப் போகும் வழியில் குறைந்தது, 10 வாகனங்களாவது பழுதடைந்த நிலைமையை நாம் பார்க்கலாம். ஆனால், இப்போது அப்படிப்பட்ட வாகனங்களைப் பார்க்க முடியாது. இப்படிக் காரணமின்றி நல்ல முறையிலே பழுதுபார்க்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகின்றது. சென்னையிலே இருந்து திருச்செந்தூருக்குச் சென்றாலும் இதே நிலைமைதான். இப்போது போக்குவரத்து வாகனங்கள் சரியான நேரங்களில் புறப்பட்டு, சரியான நேரங்களுக்குச் செல்கின்றன. அரசு வாகனங்களில், டயர் பழுது

பட்டால், தனியார் வாகனங்களைப் போல் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு வாகனங்களுக்குப் போட்டியாக டூரிஸ்ட் வண்டி கள் என்ற பெயரால் ஓட்டுகின்ற வண்டிகளைத் தடை செய்ய வேண்டும்.

(முற்பகல் 11–40)

எழும்பூர் இரயில் நிலையத்தில் மாலை நேரத்தில் சென் றால் அங்கே உள்ள ஏஜென்டுகள், நாம் வேறு எங்காவது சென் றாலும்கூட, மதுரைக்குப் போகிறீர்களா, திருச்சிக்குப் போகி றீர்களா, பழனிக்குப் போகிறீர்களா என்று நம்மை வழிமறித்து அழைக்கிறார்கள். அதேநேரத்தில் அங்கே போகிறவர்களுக்கும் இடையூறு ஏற்படுத்தி, இதர சாலைப் போக்குவரத்திற்கும் இடை யூறு ஏற்படுத்தி, எழும்பூர் இரயில்வே நிலையம் முன்னால் டூரிஸ்ட் வண்டிகளை நிறுத்தி வைத்து அதில் பாட்டுக்களை, 'கேசெட் ரிக்கார்டு' களைப் போட்டு சத்தம் எழுப்பிக் கொண்டிருக்கி றார்கள். ஒரே சத்தமாக இருக்கிறது.

அதைப்போல திருநெல்வேலி நகராட்சி பஸ் ஸ்டாண்டிலும், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக பஸ் ஸ்டாண்டிலும், அங் கிருந்து குறுகிய தூரம் செல்லுகின்ற பஸ்களிலும், குறிப்பாக நாராயணன் கம்பெனி பஸ்களில் டேப் ரிக்கார்டுகளைப் போட்டு பயணிகளைக் கவருகிறார்கள். அதனால் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக வாகனங்களுக்கு வசூல் குறைந்து, பாதிக் கப்படுகிறது.

அடுத்தபடியாக சென்னையில் இருந்து செல்லுகின்ற திரு வள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் நாம் சென்றால் பார்க்கலாம். அந்த டிரைவர்கள் அவர்கள் இஷ்டப்படி வண்டி களை காப்பி, டீ சாப்பிட நிறுத்தி விடுகிறார்கள். அதனால் பிரயாணிகளுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. அவர் கள் இஷ்டப்பட்ட இடங்களில் எல்லாம், விழுப்புரத்தில், அருப் புக்கோட்டையில், தொழுதூரில் — இதுபோன்ற பல்வேறு இடங்களில் பேருந்துகளை நிறுத்துகிறார்கள். அப்படிப் பட்ட இடங்களில் அவர்கள் நிறுத்தும்போது அங்கே சௌகரியமான ஓட்டல்கள் இல்லை. ஆகவே, அந்த இடங் களில் இரயில்வே நிலையங்களில் கேன்டீன் வசதி செய்து கொடுத் திருப்பதைப் போல நல்லமுறையில் கேன்டீன் வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்து கொடுத்து, அந்த இடத்திலே சற்று ஓய்வு எடுத்து செல்லக்கூடிய முறையில் ஏற்பாடு செய்து கொடுத் தால நன்றாக இருக்கும்.



முன்பெல்லாம் திருவள்ளுவர் பேருந்தில் இரவு 12 மணி வரையில் ஒரு டிரைவரும், 12 மணிக்குமேல் காலை 5 மணி வரையில் வேறு ஒரு டிரைவரும் என்று டிரைவர்களை மாற்று வார்கள். இப்போது இரவு 12 மணிக்கு மேலேயும் ஒரே டிரை வர்தான் போகிறார். அதனால் சில விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இரவு நேரத்தில் இரண்டு டிரைவர்களைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியாகிய திருச்செந்தூரில் திரு வள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு டிப்போ அமைக்க வேண்டும். அதற்கு வேண்டிய இட வசதியை செய்துகொடுக்க நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்தபடியாக, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத் தில் டவுன் பஸ் போக்குவரத்தை நல்லமுறையில் செய்திருந்தா லும், இந்த டவுன் பஸ்களில் குறைந்த கட்டணம் இருப்பதால் அங்கே இருக்கிற மக்கள் எல்லா கிராமங்களுக்கும் டவுன் பஸ் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆகையால் திருச்செந்தூரை மைய இடமாகக் கொண்டு, அங்கிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற கிராமங்களுக்கு எல்லாம் டவுன் பஸ்விட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு முன்னால் போக்குவரத்துத் துறை அமைச்சராக மாண்புமிகு திரு. பொன்னையன் அவர்கள் இருக்கும்போது உடன் குடியை மையமாக வைத்து டவுன் பஸ் விடப்படும் என்று வாக் குறுதி அளித்தார்கள். ஆனால் இன்றுவரையில் டவுன் பஸ் விடவில்லை. அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக் கொள்கி றேன். நாகர்கோவிலுள்ள ஜெனரல் மானேஜர், கண்டக்டர் களிடமிருந்தும் டிரைவர்களிடமிருந்தும் அப்பாயின்ட்மெண்டுக்குப் பணம் வாங்குகிறார் என்று ஏராளமான புகார்கள் வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கவனிக்க வேண்டு மென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் முன்பெல்லாம் போக்குவரத்துக் கழகத்தை சோம்பேறித்தனத்திற்கு ஒப்பிட்டுப் பேசிய காலமாக இருந்தது

ஒருவரைப் பார்த்து எங்கே போய் வருகிறாய் என்று கேட்பார்கள். பதில் சொல்வதற்கு முன்னாலே அவன் தாமதமாக வருவதைக் குறிக்கின்ற வகையில் ஸ்டேட் பஸ் மாதிரி வராதே என்று சொல்வது வழக்கம். ஆனால் இன்றைக்கு அந்த நிலைமை மாறி, ஒருவனுடைய வேகத்தைக் குறிக்கும் வகையில், அவன் பல்லவன் போல் போகிறான், சேரன் போல் போகிறான் என்று சொல்கின்ற அளவுக்கு இருக்கிறது. அந்த அளவுக்கு இந்த அரசு போக்குவரத்தில் நல்ல வளர்ச்சியைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். போக்குவரத்துக் கழகத்திற்கு இதுவரை இல்லாத அளவுக்கு அவசியமான சாதனங்களை எல்லாம் வாங்கிக் கொடுத்து, ஆங்காங்கே டிப்போக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தது இந்த அரசுதான் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. 1980 முதல் சம்பள விகிதத்தைத் தொழிலாளர்களுக்குக் கூட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய சலவை அலவன்சை 6 ரூபாயிலிருந்து 8 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல திருமணக் கடனைப் பொறுத்தவரையில் அந்தத் தொழிலாளர்களுடைய மகனாக இருந்தால் 1000 ரூபாயும், மகளாக இருந்தால் 1500 ரூபாயும் வழங்க ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறார்கள்.

அதைப்போல உடல் ஊனமுற்றவர்களுக்கு 50 சதவீதம் கடனாகவும் 50 சதவீதம் மானியமாகவும் கொடுத்து, அவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகளை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் கூட அந்த வசதியைப் பெறவேயில்லை. தங்களுடைய துணைவியாரைத்தான் கூட்டிச் செல்ல முடியும். ஆனால் தொழிலாளர்கள் 5 பேர் கொண்ட தங்கள் குடும்பத்துடன் தமிழ் நாடு முழுவதும்—திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர— மற்ற பேருந்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய முடியும். இப்படிப் பல வகைகளில் தொழிலாளர்களுக்குச் சலுகை கொடுத்து இருக்கும் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தை மேற்கொண்டு இருக்கும் மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்களிடத்தில் பணிவான வேண்டுகோள் ஒன்றை வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கேசவ ஆதித்தன் அவர்கள் கூட பேருந்துகளில் டேப் ரிக்கார்டர்கள் சரிவர பணிசெய்யவில்லை என்று சொன்னார்கள். நான் வருகின்றபோது, விழுப்புரத்திற்குப் பக்கத்திலே ஒரு பாசஞ்சர் கடுமையாக இதற்காகச்



சண்டை போட்டார். அதிலே இருந்த டேப் ரிக்கார்ட்டர் பழுது அடைந்து இருந்தது. எவ்வளவோ சொல்லியும் அவர் ஒப்புக் கொள்ளவில்லை. பிறகு நானே எழுந்து; விழுப்புரத்தில் இருந்து ஏறத்தாழ தாம்பரம் வரையில் 10–15 பாடல்களை பாடிக்கொண்டு வந்து நிலைமையைச் சமாளிக்கும் நிலைமை எனக்கு ஏற்பட்டது.

அதுமட்டுமல்ல, பாடல்களில் பெரும்பாலும்— ' வாடி என் கப்பக்கிழங்கே ' என்பது போன்று இருப்பதால், ஓட்டுனர்களின் கவனம் திருப்பப்பட்டு, அதன் காரணமாக சில சம்பவங்கள் ஏற்பட்டு விடுகின்றன. எனது பணிவான வேண்டுகோள் ஒன்றை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அரசு என்னதான் விரைவாகத் திட்டங்களைத் தீட்டி நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று விரும்பினாலும், பாப்புலேஷன் கன்ட்ரோல் அவசியம் தேவைப்படுகிறது. குடும்பக் கட்டுப் பாடு அவசியம் தேவைப்படுகிறது. இந்தக் குடும்பக் கட்டுப் பாடு பிரச்சாரங்களை பஸ்ஸிலே எழுதி வைத்து விட்டால் மட்டும் போதாது. அதைப் பாடல்கள் மூலமாக விளம்பரப்படுத்த வேண்டும்.

உதாரணமாக, ஒரு பாடல் டேப் ரிக்கார்டரில் ஒலித்துக் கொண்டு இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். நான் வரும் போதுகூட ஒரு பாடல்— பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் அவர்கள் எழுதியது— பேருந்தில் இருந்த டேப்ரிக்கார்ட்ரில் பாடிக் காண்டு இருந்தது. அந்தப் பாட்டில் இரண்டு அடிகள் கேட்ப தற்கு இனிமையாக இருந்தது. அதைப் பாடிக்காட்டுகிறேன்.

'' ஆளும் வளரணும், அறிவும் வளரணும்— அதுதாண்டா வளர்ச்சி, உன்னை ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே நீ தரும் மகிழ்ச்சி, நாளும் ஒவ்வொரு கானம் தரும் பாடல் தரும் பயிற்சி உன் நரம்போடு தான் பின்னி வளரணும் தன்மான உணர்ச்சி ''

அந்த வாக்கியம் முடிந்தவுடன் சொல்ல வேண்டும்— ஆமாம், ஆளும் வளரணும், அறிவும வளரணும் அந்த வகையில் அளவான குடும்பத்தை நாம் காப்பாற்றித் தர வேண்டும், என்று போட வேண்டும். இப்படிப்பட்ட முறையில் அந்த டேப் ரிக்கார் டரில் குடும்பக்கட்டுப்பாடு பற்றிய பாடல்களைப் போடலாம், விளம்பரங்களைச் செய்யலாம். அந்தப் பாடல் முடிந்தவுடன் கோபால் பல்பொடி போன்ற விளம்பரங்கள் ரேடியோவில் கொடுப்பது போல், இங்கே பேருந்துகளிலும்— இப்படிப்பட்ட விளம்பரம் கொடுக்கலாம். '' ஆளும் வளரணும் அறிவும் வளரணும்'' என்றால் நீங்கள் குடும்பத்தைப் பாதுகாப்பாக, கட்டுப்பாடாக வைத்துக் கொள்ள வேண்டும் குடும்பக் கட்டுப் பாட்டை மறந்து விடாதீர்கள்'' என்று சொல்லி, உடனே அந்தப் பாடலையும்— ஆளும் வளரணும அறிவும் வளரணும் '' என்று தொடர்ந்து போட வேண்டும். இப்படிப் பயன் உள்ள

வகையில் அந்தக் குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரம் செய்யலாம். இன்னும் சொல்லப் போனால், தனியார் நிறுவனங்களின் விளம்பரங்களையும் அந்த டேப்ரிகார்டர் நாடாவில் பதிவு செய்து போடலாம். அதனால் விளம்பரம் கிடைக்கிறது. விபரம் மக்களுக்குச் சொல்லப்படுகிறது. அரசுக்கும் வருமானம் வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு) தலைவலி வராது. மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு வேண்டுமானால் தலைவலி வரலாம். தலைவலி வராத அளவிற்கு கவர்ச்சிகரமான அந்த விளம்பரங்கள் அமைய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை 'ஏன் பிறந்தாய் மகனே, ஏன் பிறந்தாயோ' என்று போட்டால் தலைவலி வரக்கூடும். குழந்தைகளுக்கு அறிவுரை சொல்லுகின்ற வகையிலும், அளவான குடும்பம் தேவை என்கிற வகையிலும் அந்த விளம்பரங்கள் அமைக்கப்பட்டு, அந்த டேப்ரிக்கார்டரில் போடவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதைப்போலவே, மதுவிலக்குச் சம்பந்தப்பட்ட பிரச்சாரங்களையும் இப்படிப்பட்ட விளம்பரங்கள் மூலம் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருந்து வருகிற பள்ளி மாணவர்களுக்குப் பெரும்பாலும் பஸ்களில் இடம் அளிப்பது இல்லை. அதனால் அவர்கள் நேரத்திற்கு பள்ளிகளுக்கு வந்து சேர முடிவது இல்லை. உதாரணமாக, பவானிசாகரில் இருந்து கோபிச் செட்டிபாளையம் வந்து படிக்க வேண்டும் என்று சொன்னால், அந்த கிராமப்புற மாணவர்களுக்கு பஸ்ஸில் இடவசதி கிடைப்பது இல்லை. ஆகவே, எவ்வளவு கூட்டமாக இருந்தாலும், மாணவர்களுக்கு இடம் இல்லை என்று சொல்லும் நிலைமை இருக்கக் கூடாது என்கிற வகையில் அரசு உத்தரவிடவேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

இப்படிப் பல்வேறு வகைகளில் வளர்ந்து வரும் பேருந்துக் கழகங்களில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் நிலை குறித்தும் என்னுடைய வேண்டுகோளை இங்கே வைக்கிறேன். எந்த மனிதனும் தவறு செய்யாமல் இல்லை. தவறு செய்வது சகஜம். ஓட்டுனர்கள், நடத்துனர்கள் சில சமயங்களில் தவறு செய்து விட்டால், அவர்களை சஸ்பென்ட் செய்து விடுகிறார்கள். அதன் காரணமாக 2 வருஷம், 3 வருஷம் என்று ஆனாலும் அவர்களைப் பணிக்கு மறுபடியும் சேர்ப்பது இல்லை. ஆகவே, 6 மாதம் ஆகிவிட்டால் அவர்களை மறுபடியும் பணியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற முறையில் விதிகள் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு பயணி டிக்கெட் வாங்காமல் இருந்து விட்டால், அதைக் கண்டு பிடிக்கின்ற நேரத்தில், அந்தப் பயணியிடமிருந்து கூடுதலாக இரண்டு ரூபாய் பெற்றுக் கொண்டு அந்தப் 



பயணியை விட்டு விடுகிறார்கள். அவனுடைய பைல் அதோடு க்ளோஸ். ஆனால், கூட்ட நெருக்கடியில் அவன் உள்ளே நுழைந்து, திரும்பி வருவதற்குள் ஸ்டேஜ் வந்து விடுகிறது. அந்த நேரத்தில் செக்கிங் வந்து விட்டால், நடத்துனரின் கவனக் குறைவு என்று சொல்லி அவனை வீட்டிற்கு அனுப்பும் நிலைமை இருக்கிறது. அவன் இதனால் 1 வருஷம் இரண்டு வருஷம் என்று சஸ்பென்ட் செய்யப்பட்ட நிலைமையிலேயே இருக்க வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக அவன் குடும்பம் மிகவும் பாதிக்கப்படுகிறது.

(முற்பகல் 11-50)

அவர்களுக்கு ஒரு விடுதலை அளிக்கும் பொருட்டு, 6 மாத காலத்திற்குள் விசாரணைகளை முடித்து மீண்டும் அவர்களைப் பணியில் அமர்த்த வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). ஒரு நிமிஷம் கொடுங்கள், ஐயா. கடைசியாக என்னுடைய தொகுதிக்கு வருவதற்கு முன்பு, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நான் ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். சென்ட்ரல் ஸ்டேஷனை விட்டு இறங்கியவுடனே, டாக்சி பிடிக்கும்போது, இன்னும் அந்த டிரைவர்கள் பழையபடியே அதையேதான் செய்துகொண்டிருக்கிறார்கள். நாங்கள் சட்டமன்ற விடுதிக்குப் போகவேண்டும் என்று கேட்டால், நான் வேறொரு இடத்திற்குப் போகிறேன், அந்த வழியாக வருவதானால் வாருங்கள் என்று சொல்கிறார்களே தவிர நாம் கூப்பிட்ட இடத்திற்கு வருவது கிடையாது. எவ்வளவுதான் அவர்களுக்குக் கட்டணவிகிதத்தை உயர்த்திக் கொடுத்தாலும், மீட்டருக்கு மேல் 1.20 பைசா என்று வைத்து வாங்காமல் அவர்கள் இருப்பதும் இல்லை. அதேபோல திரும்பிப் போகும்போது 10 மணிக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ரெயிலைப் பிடிக்க வேண்டும் என்றால், அல்லது ஹாஸ்டலுக்குப்போக வேண்டும் என்றால் அந்த நேரத்திலேதான் தகராறு செய்கிறார்கள். ஆயிரம் விளக்கு போகலாம் என்று சொல்கிறார்கள். நாம் ரெயிலைப் பிடிக்கப் போகவேண்டும் என்று சொன்னால், ரெயில்வே ஸ்டேசன் இருக்குமிடத்திற்குதான் போக வேண்டும். ரெயில்வே ஸ்டேஷனை வேறு இடத்திற்கு மாற்றிக்கொள்ள முடியாது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட தொழிற் சங்கத் தலைவர்களோடு கலந்து பேசி, இது குறித்து ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் எதற்கெடுத்தாலும் ஸ்டிரைக் செய்கிறார்கள். 4, 5 நாட்களுக்கு பஸ், டாக்சி போன்றவை ஓடாமல் இருக்கிறது. ஆகவே இதற்கென்று ஒரு கமிட்டி போட்டு ஆய்வு செய்து, இந்தச் சூழ்நிலையை மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே வண்டிப்பாளையம், மடிப்பானூர் பகுதியிலேயிருந்து வண்டிகளை விடுவதற்கான சில கோரிக்கைகளை வைத்திருந்தேன். சிலநேரங்களில் பேருந்துகளை விடுவதற்காக, தலைமைப் பொறியாளர் வந்து, அந்த இடத்தைப் பார்க்கிறபோது, அந்த இடத்திலே சாலை சரியாக இல்லை என்றால், அதைச் சரிப்படுத்தித் தாருங்கள் நாங்கள் வண்டிகளை விடுகிறோம் என்று சொல்கிறார்கள். அந்தப் பணிகள் குறித்து அவர்கள் சம்பந்தப்பட்ட பேரூராட்சி ஆணையாளருக்குக்கடிதம் மூலம் தெரிவித்தால், அந்த சாலை சீரமைப்புப் பணி இன்னும் துரிதமாகச் செயல்படவசதி செய்கதாக அமையும். அப்படிப் பார்க்கிறபோது இன்றைக்கு பட்டி தொட்டிகளிலெல்லாம், ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்குள் 7 ஆயிரம் பஸ்களை விட்டு மக்களுக்கு நன்மைகள் பல செய்திருக்கிற மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒரு நிமிஷம் ஐயா,......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பாட்டுப் பாட ஆரம்பித்தால், பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது பாட்டுப்பாடித்தான் சொல்லவேண்டி வரும்.

**திரு. ஜி. கே. சுபபிரமணியன் :** நிச்சயமாக அமைச்ச பாடுவார் என்று கருதுகிறேன். காரணம் என்னுடைய தொகுதியிலே ஒரு முறை வருகிறபோது,..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் பாடிய பாட்டையே பேருந்துகளில் போடுகிற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, அமைச்சரைப் பாடச் சொல்லி, முடித்துக் கொள்ளுங்களேன். (சிரிப்பு).

**திரு. ஜி. கே. சுப்பிரமணியன் :** துணைத் தலைவர் அவர்களே, பாடுவதை விட கதாகாலட்சேபம் செய்யலாம். ஒரு முறை என்னுடைய தொகுதிக்கு அவர் வருகிறபோது, மக்களுடைய கஷ்டத்தை நேரிடையாகப் பார்க்க வேண்டும் என்பதற்காக, அமைச்சர் அவர்கள் என் தொகுதியில் அவரே பஸ் டிரைவராக உட்கார்ந்து ஓட்டிக்கொண்டு வந்தார். நான் டிக்கெட் கொடுத்தேன், கலெக்டர் பயணியாக அமர்ந்து, அந்தச் சீட்டை வாங்கிய நிகழ்ச்சியை என்னால் இன்னும் மறக்கமுடியவில்லை. காரணம் அவர் அந்தத் தொழிலாளர்களோடு இருந்து பழக்கப் பெற்றவர். ஆக எப்படித் தெருவிலே பாடிக் கொண்டிருந்த ஒருவன் சட்டமன்றத்திற்கு வரும்போது அந்தக் கீழ் மட்டத்தில் இருப்பவர்களுடைய பொருளாதார கஷ்டத்தை உணர்ந்து பேசுகிறாரோ, அந்த அளவுக்குத் தொழிலிலே ஈடுபட்டிருந்த காரணத்தினாலேதான், அந்தத் தொழிலாளர்களுடைய கஷ்டங்களை உணர்ந்து, இன்றைக்கு அவர்களுடைய மத்தியிலே மிகச்



சிறப்பான வளர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கடைசியாக ஆங்காங்கே அவர்களுக்கு அசையாச் சொத்துக்களை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதைப் போலவே, குடியிருப்பு காலனிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பினை தந்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் போக்குவரத்து மானியத்தின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களைக் கூற முன் வருகிறேன். 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி வரை தமிழகத்தில் ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள் 12,871 என்றும், அரசுப் பேருந்துகள் அதிலே 7,807 என்றும், 61 சதவீதம் பேருந்துகள் அரசின் மூலமாக இயக்கப்படுகிறது என்றும், இந்தக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால் இப்படி நாம் இயக்கியும் கூட, நம்முடைய தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தின் அனைத்துக் கார்ப்பரேஷன்களும் சேர்ந்து லாபம் ஈட்டமுடியாத நிலையில் நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 4, 5 நாட்களுக்கு முன்பு ஒரு கேள்வி ஒன்றுக்கு விடையளிக்கும் போது கூட அமைச்சர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாணவர்களுக்கு பஸ் கொடுப்பதன் விளைவாக 4 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக நஷ்டம் என்று சொல்கிறபோது, அதில் சில முக்கியமான பிரச்னைகள் அடங்கியிருக்கின்றன. 1972 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒரு டயருடைய விலை 1,128 ரூபாய் 23 காசு. ஆனால் 1981 ஆம் ஆண்டு டயருடைய விலை ரூ. 6,500 ரூபாய். இதிலே மொத்தம் 9 மனோபொலீஸ்.

மானோபலி கம்பெனிகள் டையர் தயாரிக்கின்றன. அவர்கள் டையர் விலையினை உயர்த்துவதைத் தவிர்ப்பதற்காக தமிழக அரசு ஒரு டையர் தொழிற்சாலையை உருவாக்க வேண்டும். 4 கோடி மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டில், தமிழகத்திலே ரப்பர் கிடைக்கக்கூடிய கன்னியாகுமரி போன்ற மாவட்டப் பகுதிகளில் டையர், ட்யூப் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமே தவிர ஏகபோக மல்டிநேஷனல் கார்ப்பரேஷன் நிறுவனங்கள் தான் டையர் தயாரிக்கின்ற கம்பெனிகளாக இருக்கின்றனர். அந்தக் கம்பெனிகள் அவர்கள் வைத்ததுதான் விலை என்று சொல்கின்ற முறையிலே விலை நிர்ணயித்திருக்கிறார்கள். அவர்களிடம்தான் நீங்களும் வாங்குகிறீர்கள். அதைத் தவிர்க்கக்கூடிய முறையிலே நமது அரசே அப்படிப்பட்ட ஒரு டையர் தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பென்ஸ் சேஸிஸ் தயாரிப்பது ஜெர்மன் கம்பெனி. லேலன்ட் சேஸிஸ் தயாரிப்பது பிரிட்டன் கம்பெனி. இந்தக் கம்பெனிகள் 1975-லே சேஸிஸ் விலை 90 ஆயிரம் ரூபாய் என்று வைத்திருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த சேசிஸ் விலை 2,03,000 ரூபாய். 1980 ஜூன் மாதத்திலே 1,40,000 ரூபாய். 1981 நவம்பரில் 1,90,000 ரூபாய். 1982 மார்ச்சிலே 2,03,000 ரூபாய். ஆகவே அவர்கள் நினைத்தபடி இந்த விலைகளை உயர்த்திக் கொண்டு போகிறார்கள். மேலும் நமக்குத் தமிழகத்திற்கு 12 ஆயிரம் பேருந்துகள் இன்னும் தேவைப்படும். மொத்தமாக அரசுத்துறை, தனியார் துறை ஆகியவற்றுக்கெல்லாம் சேர்த்து 15 ஆயிரத்திற்கும் மேலே தேவைப்படும். மேலும் மக்களின் தேவைக்கேற்ப 20,000 ஆகவும் மாறலாம். எனவே அரசாங்கமே சேஸிஸ் தயாரிக்கக் கூடிய ஒரு தொழிற்சாலையை தமிழக அரசின் சார்பிலே உடனடியாக உருவாக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏகபோக முதலாளித்துவத்தை உடைக்கின்ற முறையிலே இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசையும் நாம் வலியுறுத்தி அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்று தமிழகத்தில் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னது போல் பேருந்துகள் செல்வது என்பதைப் பொறுத்த வரையிலே அவற்றைச் சீர்திருத்த வேண்டும். சில இடங்களில் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் பேருந்துகள் தட்டுப்பாடாக இருக்கின்றன. சில இடங்களில் தேவை இல்லாமல் பேருந்துகள் ஓடுகின்றன. உதாரணமாக மதுரையிலே ஓடிய பி. ஆர். சி. நகரப் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மதுரையிலே நெருக்கடி என்பது ஜாஸ்தி. சென்னை போன்ற நகரங்களில் நகரப் பேருந்துகளில் மக்கள் தொங்கிக் கொண்டு தான் போக வேண்டிய நிலைமை இருக்கின்றது. இதன் காரணமாக விபத்துக்களும் ஏற்படுகின்றன. எனவே தமிழகம் முழுவதிலும் உள்ள வழித்தடங்களில் எங்கெங்கு பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும், எங்கெங்கு குறைக்க வேண்டும் என்பதைப் பற்றி ஆராய்ந்து அரசாங்கம் அவற்றை முறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது மீண்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் பட்ஜெட் வந்து இருக்கின்ற நேரத்திலே ட்ரான்ஸ்போர்ட் பற்றிய கமிட்டி இது வரை அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. போக்குவரத்துத் துறைக்கு ஆலோசனைகளை வழங்குகின்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் இதுவரை அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதனை விரைவிலே அமைப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து குறிப்பாக இன்றைக்கு தமிழகத்திலே எண்ணெய் விலை, சேஸிஸ் விலை, டையர், ட்யூப் விலை போன்றவற்றின் விலைகள் ஏறினால் அது மக்களின் தலையிலே தான் வைக்கப் படுகின்றது. அப்படி மக்களிடத்திலே தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் வசூலித்து சேஸிஸ் கம்பெனி, ட்யூப் கம்பெனி, டையர் கம்பெனி, டீசல் கம்பெனி போன்றவற்றிற்குக் கொடுக்கிறார்கள். டீசல் விலை இன்றைக்கு மத்திய அரசுக்குக் கிடைப்பதைப் பொறுத்த வரையில் ஒரு லிட்டர் 60 காசுதான் அடக்கம் என்பது எனக்குத் தெரிந்த வரையில். பெட்ரோல் 90 காசுதான் அடக்கம். ஆனால் மத்திய அரசு அதன் மீது கணிசமான வரியினை விதித்து மக்களை ஒரு புக்கத்திலே அவர்கள் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சுரண்டலுக்கு நீங்கள் பணிந்து போகிறீர்கள் எதிர்ப்பு கொடுக்காமல். நம்முடைய தமிழக அரசின் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையிலே பல்வேறு வழித்தடங்களுக்கு பேருந்துகள் தேவைப்படுகின்றன. அவினாசித் தொகுதியில் பல இடங்களுக்கு பேருந்துகள் தேவை என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகிறார்கள். அது போல் திருத்துறைப்பூண்டி பகுதிக்குத் தேவை, இளையாங்குடியிலிருந்து சென்னைக்குத் துரித வண்டி வேண்டும் என்று கூறுகிறார்கள். பல்வேறிடங்களில் நகரப் பேருந்துகள் வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆனால் தமிழக அரசு அவற்றை மறுபடியும் பரிசீலித்து, ரோட்டைப் பார்த்து, ஆர். டீ. ஓ.வைப் பார்த்து, கலெக்டரைப் பார்த்து இப்படி எல்லாம் பார்த்து பரிசீலித்து முடிப்பதற்குள் 2 வருடங்கள் 2½ வருடங்கள் பரிசீலிக்கும் போதே போய்விடுகின்றன.

(நண்பகல் 12-00.)

ஆகையால் தனியார் அங்கே பேருந்துகள் விடுவதற்கான 3, 4 வழித் தடங்கள் இருக்குமானால், அவைகளுக்கு உடனடியாக டெம்பரரி பர்மிட் கொடுத்து, பேருந்துகள் விடுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டு, நீங்கள் எப்போது விடுகிறீர்களோ, அப்போது அதை ரத்து செய்கின்ற முறையிலே நடவடிக்கை எடுக்கலாம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, பல கார்ப்பரேஷன்களை பிரித்து, மேலும் பல கார்ப்பரேஷன்களை அதிகரிக்கின்ற தகவல் இதிலே இருக்கிறது. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்று பெயரிடப்பட்டு, குடியாத்தத்திலே பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் நின்றதால், அதற்கு அவர் பெயரை வைக்க வேண்டும் என்றும், திருச்சியிலே அழகிரி பெயரை வைக்கலாம் என்ற கோரிக்கை எல்லாம் இங்கே வந்தது. ஆனால், எங்களைப் பொறுத்த வரையில், கார்ப்பரேஷன்களைப் பிரிக்கக் கூடாது என்பதுதான் நிலை. ஆந்திராவிலே ரோட் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன், ஏ. பி. ஆர். டி. சி. என்ற ஒரே கார்ப்பரேஷன் இருக்கிறது : அதை ரீஜன் வாரியாகப் பிரித்து, பிராஞ்சு மாதிரி

வைத்து அவர்கள் அதை நடத்துகிறார்கள். இப்படிச் செய்வதால், பல கழகங்களாகப் பிரிப்பதால், நிர்வாகச் செலவு அதிகமாகிறது. அதிலே எம். டி., ஜி.எம்., பி.எம்., ஏ.எம்., என்று பதவிகள் வரிசையாக வருகிறது. ஆகவே, இந்தக் கார்ப்பரேஷன்களை பொறுத்தபட்டில் ஒரே நிர்வாகத்தின் கீழே, ரயில்வேயில் இருக்கிற மாதிரி, சதர்ன் ரயில்வே, நார்த் ஈஸ்டர்ன் ரயில்வே என்று இருப்பது போல், ஒரே நிர்வாகத்தின் கீழ் இருப்பதற்கு தமிழகத்திலே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் அதிலும், குறிப்பாக, கூட்ஸ் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனுக்கு சொந்தமான கட்டிடம் இல்லை : அதிலே இருக்கின்ற எம். டீ., நிரந்தரமாக இல்லை. இதுவரை 7, 8 எம். டீ.க்கள் வந்து சென்றிருக்கிறார்கள். அதிலே ஒரு நிரந்தரமான எம். டீ.-ஐ வையுங்கள். அப்போது தான் அதிலே லாபத்தை ஈட்ட முடியும். அந்த முறையிலே. இந்த கூட்ஸ் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனை சீரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே எனக்கு ஒரு விளக்கம் தேவைப்படுகிறது. ஆங்கிலக் குறிப்பேட்டில், 15 ஆம் பக்கத்திலே,

In Corporations like Cholan Roadways Corporation, Chran Transport Corporation and Anna Transport Corporation they can travl any number of times upto a total distance of 2,750 Kms.,in a year போட்டிருக்கிறீர்கள். இதிலே மொழி பெயர்ப்பு சரியாக இல்லாதது மாதிரி படுகிறது. ''பணியாளர்கள், ஆண்டொன்றுக்கு மொத்தம் 2,750 கிலோ மீட்டர் தொலைவிற்கு எத்தனை முறை வேண்டுமானாலும், பயணம் செய்யலாம்'' என்று இருக்கிறது. ஆனால், ஆங்கிலத்தில்

Upto a total distance of 2,750 Kms. they can travel any number of times.

என்றிருக்கிறது. எத்தனை தடவை வேண்டுமானாலும் 2,750 கிலோ மீட்டர் தூரம் வரைப் போகலாம் என்று ஆங்கிலத்தில் இருக்கிறது. இந்த மொழிபெயர்ப்பைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். அதைக் கவனிக்க வேண்டும்.

அடுத்து, ஜனவரி 19 ஆம் தேதியன்று வேலை நிறுத்தத்தில் கார்ப்பரேஷன் தொழிலாளர்களுக்கு, ''நோ ஒர்க், நோ வேஜ்'' என்று செட்டில்மென்ட் ஆகிவிட்டது. இந்த டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனிலே 1½ மாத காலமாக இந்த வித்தியாசம் வந்ததால், அவர்களுக்கு ஊதியம் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டு இருக்கிறது. இதிலே எந்தவிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தாலும், அவைகளை ரத்து செய்து, அவர்களுக்கு கிடைக்கக் கூடிய ஊதியத்தை உடனடியாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



திருத்துறைப்பூண்டியிலே இருந்து, மன்னார்குடி— தட்டாங்கோயில், திருவண்டுதுறை, விக்கிரபாண்டியம், ஆலத்தூர், ஆலக்கம்பாடி, ஆலங்குடி பாலம், தலைஞாயிறு வரையில் பேருந்துகள் விடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, இந்த ஸ்டேட் பஸ் ஸ்டாண்டிலே கட்டணம் கொண்டு சிறுநீர் கழிக்க வேண்டியிருக்கிற நிலை இருக்கிறது. அதை வெளிநாடுகளிலே இருந்து வருகின்றவர்கள், அதைப் பார்த்து அசிங்கப்படுகிறார்கள். பஸ் கட்டணத்திலே சேர்த்து மேலும் 10 பைசா வாங்குவதிலே பிரச்னை இல்லை. ஆனால், இதற்காக 10 பைசா கட்டணம் கட்ட வேண்டுமென்று சொன்னால், அந்த வெளிநாட்டிலே இருந்து வரக்கூடியவர்கள் தயாராக இந்தச் சில்லரையை வைத்திருக்க வேண்டும். அது அவர்களிடம் இருக்காது. சுதந்திரம் பெற்று 35 ஆண்டுகளுக்குப் பின்னாலும், சிறுநீர் கழிக்க கட்டணமா ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதிலளிக்கும் போது, வேறு எந்தச் சலுகையை அறிவிக்கா விட்டாலும், இந்த ஒரு சலுகையையாவது அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, இந்த போக்குவரத்துக் கழகங்களை முறைப்படுத்தி, சீரமைப்பதற்கு ஒரு குழு அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். கே. ராஜ்மாணிக்கம்: துணைத் தலைவரவர்களே, இன்றைய போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறுகிய காலமே பேசுவதற்குக் கிடைத்திருக்கின்றபடியால் என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கைகளை மட்டும் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

முசிறியிலிருந்து ஆமூருக்கு வேளகாநத்தம், நச்சம்பட்டி, தின்னர்கோணம். வீரமணிப்பட்டி, சின்னக் கொடுந்துரை, பெரிய கொடுபாஞ்சாம்பட்டி, ஏவுர் வழியாக ஒரு பேருந்தும் குணசீலம் வழியாக வாத்தலைக்கு ஒரு பேருந்தும் முசிறியிலிருந்து அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, ஆணைப்பட்டி தரணியாம்பட்டி, வெள்ளூர், அய்யம்பாளையம், ஆமூர், வழியாக ஒரு பேருந்தும் மண்ணச்ச நல்லூர் ஒன்றியத்திலே திருச்சியிலிருந்து ஏமலைக்கு ஒரு பேருந்தும், திருச்சியிலிருந்து டோலகேட், நொச்சியம், மண்ணச்சநல்லூர், அய்யம்பாளையம், வலையூர் வழியாக எதுமலைக்கு ஒரு பேருந்தும் திருச்சியிலிருந்து புலிவலத்திற்கு டோல்கேட், சமயபுரம், மண்ணச்சநல்லூர் திருவெள்ளாரை வழியாக ஒரு பேருந்தும், திருச்சியிலிருந்து திருப்பஞ்ஞலிக்கு டோல்கேட் மண்ணச்ச நல்லூர் திருப்பஞ்சிலி, வால்மணப்

பாளையம் வழியாக ஒரு பேருந்தும், திருச்சியிலிருந்து தெற்கு சிறுப்பத்தூருக்கு திருவானைக்காவல் டோல்கேட் நொச்சியம் மண்ணச்ச நல்லூர். சி. அய்யம்பாளையம் வழியாக தெற்கு சிறுப்பத்தூர் வரை ஒரு பேருந்தும், திருச்சியிலிருந்து ஈச்சபட்டி வழியாக சமயபுரத்திற்கு திருவானைக்காவல் டோல்கேட், நொச்சியம், மண்ணச்சநல்லூர் கல்பாளையம் வழியாக ஒரு பேருந்தும் திருச்சியிலிருந்து சின்னமரெட்டி பாளையத்திற்கு திருவானைக்காவல், டோல்கேட், சமயபுரம், சிறுகனூர், திருப்பட்டுர் வழியாக ஒரு பேருந்தும் விடவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியிலிருந்து திருவெள்ளாரைக்கு ஒரு பேருந்து விடப்படவேண்டும், எற்கனவே இந்த இடத்தில் ஓடிக் கொண்டிருந்த சி.ஆர்.சி, நிறுத்தப்பட்டு உள்ளது. இதை மீண்டும் ஓடச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சியிலிருந்து வலையூருக்கு மெயின்காட் கேட், திருவானைக்காவல், டோல் கேட் பளுவர், சமயபுரம், தேவிமங்கலம் கன்னியாக்குடி, 94 கரியமாணிக்கம் வழியாக ஒரு பேருந்தும் திருச்சியிலிருந்து எதுமலைக்கு டோல்கேட் நொச்சியம் மண்ணச்சநல்லூர் சி. அய்யம்பாளையம், வலையூர், பாலையூர் வழியாக ஒரு பேருந்தும் திருச்சியிலிருந்து புலிவலத்திற்கு டோல்கேட் சமயபுரம் மண்ணச்சநல்லூர் திருவெள்ளாரை வழியாக ஒரு பேருந்தும் முசிறியிலிருந்து துறையூருக்கு புலிவலம் தின்னனூர், புத்தனாம்பட்டி கோட்டரத்தூர் வழியாக ஒரு பேருந்தும் திருச்சியிலிருந்து துறையூருக்கு திருவாணைக்காவல், டோல்கேட், சிறுகாம்புர் முவானார். மண்பரை, கரட்டாம்பட்டி வழியாக ஒரு பேருந்தும் விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அரசுடமையாக்கப்பட்டதற்குப் பிறகு இதிலே ஒரு பேருந்து விடப்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது, அதை மீண்டும் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துறையூரிலிருந்து திருச்சிக்கு ரெட்டாம்பட்டி, சீரங்கனூர் இலுப்பையூர், சாத்தனூர், அபினிமங்கலம், புத்தனாம்பட்டி, ஓமாந்தூர், மண்ணச்சநல்லூர், நொச்சியம், டோல்கேட் திருவானைக்காவல் வழியாக ஒரு பேருந்தும், முசிறியிலிருந்து திருச்சிக்கு வேளகாநத்தம், டி. புத்தூர், பொன்னாங்கண்ணிப் பட்டி, நெய்வேலி, பூசாரிப்பட்டி, சோமங்கலம், சித்தாம்பூர் குருவம்பட்டி, சோளகநல்லூர், மண்ணச்சநல்லூர், டோல்கேட்





வழியாக ஒரு பேருந்தும், முசிறியிலிருந்து துறையூருக்கு வேளகாநத்தம், டி. புத்தூர், தண்டலை, மூவானூர், தண்ணீர்ப்பந்தல், மண்பரை, கரட்டாம்பட்டி, மீனாட்சிபுரம், விழியனூர் கல்லடிப்பட்டி, உள்ளூர், ஆதனூர், பசலவாடி வழியாக ஒரு பேருந்தும் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மண்ணச்சநல்லூரிலிருந்து துறையூருக்குத் திருவெள்ளாரைத் புலிவலம், பசலவாடி வழியாக ஒரு பேருந்தும், திருச்சியிலிருந்து காட்டுக்குளத்திற்கு திருவானைக்காவல், டோல்கேட், நொச்சியம், மண்ணச்சநல்லூர், தீராம்பாளையம், செங்குலிப்பட்டி, தில்லாம்பட்டி, திருவெள்ளாரை, களவாய்ப்பட்டி, உடையாம்பட்டி வழியாக ஒரு பேருந்தும் திருச்சியிலிருந்து மணியாங்குறிச்சிக்குத் திருவானைக்காவல், டோல்கேட், சமயபுரம், கொணலை, சிறுகனூர் வழியாக ஒரு பேருந்தும், திருச்சியிலிருந்து சீதேவிமங்கலத்திற்கு திருவானைக்காவல் டோல் கேட், சமயபுரம், கொணலை, சிறுகனூர், பாடலூர், வழியாக ஒரு பேருந்தும், திருச்சியிலிருந்து நக்கசேலத்திற்கு திருவானைக் காவல், டோல்கேட், சமயபுரம், சிறுகனூர், எம். ஆர். பாளையம், சனமங்கலம், திருப்பட்டூர், பெரகம்பி, செட்டி குளம் வழியாக ஒரு பேருந்தும், மெயின்காட் கேட்டிலிருந்து புரத்தாகுடிக்கு திருவானைக்காவல், டோல்கேட், பளுவூர், சமயபுரம், ஒத்தக்கடை, இருங்களூர் வழியாக ஒரு பேருந்தும், இந்த வழியாக ஒரு பேருந்தும் ஏற்கெனவே ஓடிவந்தது, நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது, அது மீண்டும் ஓடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தடத்திலே 3 பேருந்துகள் விட்டால்தான் நன்மை பயக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்—முசிறியிலிருந்து திருச்சிக்கு வேளகாநத்தம், டி.புத்தூர், தண்டலை, சுக்காம்பட்டி, பாலப்பட்டி, திருத்திய மலை, டி.மேட்டுப்பட்டி, குரிக்காரன் குளம், பெரமங்கலம், செல்லாயிபாளையம், மண்ணச்சநல்லூர், நொச்சியம், டோல்கேட் வழியாக ஒரு பேருந்தும் முசிறியிலிருந்து துறையூருக்கு வேளகாநந்தம், டி. புத்தூர், தண்டலை, சுக்காம்பட்டி, பாலப்பட்டி, திருத்திய மலை, டி. மேட்டுப்பட்டி, குரிக்காரன் குளம், பெரமங்கலம் புலிவலம், வழியாக ஒரு பேருந்தும் முசிறியிலிருந்து துறையூருக்கு. சீந்தம்பட்டி, ராக்கம்பட்டி, முத்தியநல்லூர், பள்ளி நத்தம் வழியாக ஒரு பேருந்தும், முசிறியிலிருந்து டோல்கேட்டிற்கு, வேளகாநத்தம், டி. புத்தூர், சுக்காம்பட்டி, திருத்தியமலை, நெய்வேலி, பூசாரிப்பட்டி, சித்தாம்பூர், குருவம்பட்டி, சோளகநல்லூர், சிறுகாம்பூர் வழியாக ஒரு பேருந்தும் விட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கத்திலே மேலும் சிறிது சாலத்திற்கு அரசுத் துறையும், தனியார் துறை யும் பேருந்துகளை விடுவதற்கான பகுதிகள் எவை எவையென்று வரையறுப்பது அவசியமாகிறது என்று சொல்லியிருக்கிறார்கள் கிராமப் பகுதிகளிலே வழித் தடங்களை துவங்குவதற்கு கோரிக்கைகள் எத்தனைமுறை கொடுத்திருந்தாலும், சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் கூட அவர்கள் பதில் அளிப்பது கிடையாது. கிராம வழித்தடங்களைக் தனியார்களுக்கு கொடுத்து அதன் மூலமாக மக்களுடைய தேவையை முழுமையாக பூர்த்தி செய்கிற அளவிலே வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கை மீது காந்தி காமராஜ் தேசீய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்திலே பல்வேறு போக்குவரத்துக் கழகங்கள் புதியதாக ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. அதிலே ஏதாவது ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயரைச்சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தை இரண் டாகப் பிரிக்கவேண்டுமென்ற சட்டமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்றுக் நெல்லை மாவட்டத்தில் அந்த கழகத்தை இரண்டு கழகங்களாகப் பிரித்திருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தபோதிலும் இதற்காக உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டும் கூட நிர்வாகம் இன்னும் தனியாக இயங்கவில்லை. அதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்து தனியாக இயங்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லையிலே உள்ள பேருந்து நிலையம் ஒரு குறுகலான இடத்திலே இருக்கிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகள் வந்து போக கஷ்டமாக இருக்கிறது. ஆகவே திருவள்ளுவர் பேருந்துகள் வந்து செல்வதற்குத்தனியாக ஒரு பேருந்து நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற கேட்டுக் கொள்கிறேன்.



என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் திசையன் விளையை மையமாக வைத்து ஒரு நகரப் பேருந்து விடவேண்டு மென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது. மாண்பு மிகு பொன்னையன் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்ச ராக இருந்தபோது பேருந்து விடுவதற்கான நாள் குறிக்கப் பட்டும், ஆட்சி மாறியதால் அது விடப்படவில்லை. ஆகவே இந்தக்கோரிக்கையை ஏற்று திசையன்விளையை மையமாக வைத்து நகரப் பேருந்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதேபோல திசையன் விளையிலிருந்து கே.பி.என். டூரிஸ்ட் என்ற தனியார் கம்பெனி தினசரி இரண்டு பேருந்துகளை சென்னைக்கு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனை மாற்றி திருவள்ளுவர் போக்குவரத்து கழகம் அங்கேயிருந்து சென்னைக்கு பேருந்து விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையிலிருந்து நாசரேத்திற்கு ஒரு திருவள்ளுவர் பேருந்து வந்து கொண்டிருக்கிறது. அதனை சாத்தான்குளம் வழியாக திசையன் விளையிலிருந்து புறப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேரன்மாதேவியிலிருந்து திசையன் விளைக்கு ஒரு பேருந்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாத்தான் குளம் பகுதியை பொறுத்த வரையில் அங்கே கன்னியாகுமரியிலிருந்து வள்ளியூர், சாத்தான்குளம், திசையன் விளை, நாசரேத், குறும்பூர் வழியாக ஒரு பேருந்து விடவேண்டுமென்று கேட்டுக் கொளகிறேன்.

மேலும் ஏரலிருந்து நாசரேத்திற்கு ஒரு பேருந்து விட வேண்டும். ஆலங்குளம் பகுதியைப் பொறுத்தவரையில், பாபநாசத்திலிருந்து சென்னைக்கு அம்பாசமுத்திரம், கீழப்பாவூர் சுரண்டை. சங்கரன்கோவில், ராஜபாளையம், மதுரை வழியாக ஒரு பேருந்து விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப் பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையிலே பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ஏற் பட்ட சில மாற்றங்களைக் கூறி அமரலாம் என்று கருதுகிறேன். செங்கல்பட்டு மாவட்டம் தனியாகப் பிரிந்து, பல்லவன் போக்குவரத்துக் கழக பேருந்துகள் ஏறக்குறைய 527 பேருந்து கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதை விரிவுபடுத்தும் சோழிகோடு 13 பிரிவுகளாக பிரிக்கும்பொழுது, செங்கல் பட்டு மாவட்டத்தை அதிலேயிருந்து எடுத்துவிட்டு, பட்டுக் கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தோடு இணைத்து வட ஆற்காடு மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டத்தனுடைய வடக்கு பகுதியை அதனோடு இணைத்து இருக்கிறார்கள்.

அதே போல், தந்தைப் பெரியார் போக்குவரத்துக் கழகத்தை, விழுப்புரத்தை மையமாகக் கொண்டு செங்கற் பட்டு மாவட்டத்தினுடைய தெற்குப் பகுதியை அதனுடன் இணைத்து செங்கற்பட்டு மாவட்டத்தில் பி.டி.சி. என்றிருக் கிற, சென்னையில் தலைமை நிலையத்தைக் கொண்டு இயங்கிக் கொண்டிருப்பதை எடுத்து விட்டிருப்பதைத் தயவு கூர்ந்து மறுமுறையும் பரிசீலனை செய்து, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு, அண்ணா போக்குவரத்துக் கழகம் என்று பெயரிட்டு, அந்தக் கழகத்தினை மீண்டும் துவங்கவேண்டு மென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் மொத்தம் 477 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருப்பதை விரிவுபடுத்தும் நோக் கத்தோடு இரண்டாகப் பிரித்து, வட ஆற்காடு மாட்டத்திற்கு ஒன்றும் தென்னாற்காடு மாவட்டத்திற்கு ஒன்றும் என்று இரண்டு போக்குவரத்துக் கழகங்கள் ஏற்படுத்தி, செங்கற்பட்டு மாவட்டத்திற்குத் தனியாக இருந்த போக்குவரத்துக் கழ கத்தை நாம் எடுத்து விட்டதை நீங்கள் தயவுசெய்து மறு முறையும் பரிசீலித்து, செங்கற்பட்டு மாவட்டத்திற்குத் தனியாகப் பேருந்து கழகம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இச்சமயத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பேருந்துத் துறைக்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, எல்லோரர்லும் பாராட்டப்படுகிற அளவிற்கு வெகு திறமையாகப் பல நகரப் பகுதிகளில் கூட கூடுதலாகப் பேருந்துகள் விடப்பட்டு நன் றாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. வேறு எந்தப் மாநிலத் திலும் இயங்காத அளவிற்குத் தமிழ்நாட்டில் பேருந்துகள் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதில் இருக்கிற சில குறைபாடுகளை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக் கிறேன்.

பல இலட்சக்கணக்கிலே செலவு செய்து பேருந்துகள் விடும் போது அந்தப் பேருந்துகளை இரவு நேரங்களில் கழுவுவ தற்கு இரண்டு பேருந்துகளுக்கு ஒரு கிளீனரை அங்கங்கே நிச்சயமாக ஏற்படுத்தவேண்டும். அந்தக் கிளீனர் பதவி களை ஏற்படுத்தி, ஒரு பேருந்தைக் கழுவுவதற்கு குறைந்தது ரூ. 5-வது கொடுத்து, சுத்தமாகக் கழவி விட்டபிறகு அதை ஓட்டுனரும், நடத்துனரும், பார்வையிட்டபிறகு அவர்களுக்கு அந்தத் தொகையைக் கொடுப்பதற்கான வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய பகுதிக்கு நீண்ட நாட்கோரிக்கை ஒன்றிருக்கிறது. பேரம்பாக்கம் டு சென்னை, மற்றும் திருவள்ளூரிலிருந்து பேரம்பாக்கம் வழியாக, சுங்குவார்ச் சத்தி ரத்திற்கு நகரப் பேருந்து ஆகியவை விடவேண்டும். அப்படி



விட்டால், அங்கே உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் குறிப்பிட்ட காலத்தில், பள்ளி செல்ல வாய்ப்பிருக்கும். திருவாலங் காட்டிலிருந்து திருவள்ளூர் செல்ல ஒரு நகரப் பேருந்தை விட வேண்டுமென்று இத்தருணத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பல்லவன் போக்குவரத்துக் கழக டெப்போ ஒன்று மதுராந்தகத்திலே ஏற்படுத்த வேண்டுமென்று அமைச்சரைக் கேட்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண்கள் 3, 40, மற்றும் 53 ஆகியவற்றின் மீது என்னுடைய கருத்துக்களை நான் தெரி வித்துக்கொள்கிறேன். நம்முடைய டிரான்ஸ்போர்ட் கிஸ் டத்தை எடுத்துக்கொண்டால், அது நாட்டுடைமையாக்கப் பட்ட பேருந்தானாலும் சரி, தனியார் துறை பேருந்தானா லும் சரி, மற்ற மாநிலங்களைக் காட்டிலும், நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு சிறப்பாக அமைந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். அப்படி இருந்தும் இது தொடர்ந்து நட்டத்திலே ஓடிக்கொண்டிருக் கிறது என்று அறிக்கையிலே சொல்லியிருப்பதுதான் வருத்தமாக இருக்கிறது. இந்த நட்டத்தைத் தவிர்ப்பதற்குக் கொள்கை அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருப்பதைப் போல அரசுத் துறைக்கும் தனியார் துறைக்கும் இடையிலே இருக்கிற விரும்பத்தகாத போட்டியைத் தவிர்க்க அரசு முனைப்பான நடவடிக்கையை எடுக்கவேண்டும். அப்படி எடுப்பதன் மூலமாக, எண்ணெய் போன்ற பொருள்களை மிச்சப்படுத்தி அதன்மூலமாக நட்டத்தை ஈடு செய்ய வசதி இருக்கும்.

அதோடு, தனியார் துறையில் 5 பேருந்துகள் வைத்துக் கொள்ளலாம் என்று நாம் அனுமதி கொடுத்துவிட்டு, அதை வைத்திருக்கின்றவர்கள் உரிமங்களைப் புதுப்பிக்கிறபொழுது அதைத் தடை செய்வதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட தடையிருந்தால் அதை விலக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

8 பேருந்துக் கழகங்களில், பி. ஆர். சி. — பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம், 1170 பேருந்துகளைக் கொண்ட ஒரு பெரிய கழகமாக இருக்கிறது. அது சென்ற ஆண்டு மட்டும், 1981—82-லே, ஏறக்குறைய 180 கிராமங்கள் பயனடையக்கூடிய, 10.27 இலட்சம் மக்கள் பயனடையக் கூடிய பஸ்களை ஓட்டியிருக்கிறது, விரிவுபடுத்தியிருக்கிறது. அந்தப் போக்குவரத்துக்கழகம், சென்ற நிதிநிலை அறிக்கை யிலே, திருத்திய மதிப்பீட்டிலே, 1981—82-லே ரூ. 22 இலட்சம் இலாபம் ஈட்டியிருக்கிறது.

[திரு க. பாரமலை] [1982 மார்ச்

இந்த எட்டுப் போக்குவரத்துக் கழகங்களிலேயும் இலாபத்
ஈட்டியிருக்கின்ற ஒரே போக்குவரத்துக்கழகம் பாண்டிய
போக்குவரத்துக் கழகம்தான் என்பதை நினைக்கின்றபொழு
நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகின்றேன்.

அந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய ஒரு பணிமனை
மானாமதுரையிலே துவக்குவது சம்பந்தமாகச் சென்ற ஆண்
டிலே ஒப்புக்கொள்ளப்பட்டு அறிவிக்கப்பட்டிருந்தது.
ஆனால் இன்னும் இது துவக்கப்படவில்லை. உடனடியாக
அதைத் துவக்கவேண்டுமென்று நாம் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.20).

இந்தக் கொள்கை அறிக்கையில் பத்திரிகை நிருபர்களுக்குச்
சென்னையிலே சென்று வருவதற்கு இலவச அனுமதி
வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அந்தச் சலு
கையை மாநிலம் முழுவதற்கும் சென்று வர வழங்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். கேரளா, மேற்கு வங்காளம்
போன்ற அரசுகள் கொடுத்திருக்கின்றன.

நாம் பல்வேறு சலுகைகளை சமூக நல வேலைகள்
என்ற முறையிலே வழங்கியிருக்கிறோம். இந்த நாடு
விடுதலை பெறுவதற்காகப் போராடிய தியாகிகளுக்கு, சுதந்
திரம் பெற்ற ஆகஸ்ட் மாதத்திலேயாவது 15 தினங்களுக்குத்
தமிழகத்திலுள்ள பல்வேறு புண்ணிய ஸ்தலங்களுக்குச்
சென்று வருவதற்கு பஸ்களில் இலவச அனுமதி வழங்கி
அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினரும் சென்று வருவதற்
கான இலவச அனுமதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

புற்று நோய் உடையவர்கள், பார்வையிழந்தோர், உடல்
ஊனமுற்றோர் ஆகியோர் இலவசமாகச் சென்று வருவதற்குப்
பயண வசதி வழங்கப்படுகிறது. ஏற்கனவே, ஆர்மோனியம்
நாதஸ்வரம் ஆகிய கருவிகளைக் கொண்டு செல்வதற்கு இலவச
மாக அனுமதிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் இப்பொழுது
கட்டணம் வாங்குவதாகச் சொல்கிறார்கள். ஆர்மோனியம்,
நாதஸ்வரம், கொட்டுமேளம், போன்ற கிராமிய இசைச்
கருவிகளைக் கொண்டு செல்வதற்கு இலவச அனுமதி கொடுக்
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தில் வழங்கப்படுவதைப் போல, மற்ற
நகரங்களிலும், கிராமங்களிலும் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்
களுக்குப் பாஸ் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.



1982 மார்ச் 24] [திரு. க. பாரமலை]

வயது முதல் 12 வயது வரை உள்ளவர்களுக்கு நகரப் பேருந்துகளில் முழுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இப்பொழுது 30 கிலோ மீட்டர்கள் வரையில் நகரப் பேருந்துகளை விஸ்தரித்திருக்கிறோம். பெரும்பாலும் கிராமத்திலுள்ள மக்கள் பயனடையும் வகையில் அவர்களுக்கு அரைக் கட்டணச் சலுகையைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கர்நாடகத்திலே ஆறு வயது வரையில் உள்ள குழந்தைகள் இலவசமாக அனுமதிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அப்படியிருந்தால் அந்தச் சலுகையையும் நாம் இங்கே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களில் ஊழியர்கள் அரசு மருத்துவமனைகளில் உள் நோயாளிகளாக இருந்து இலவசமாக மருத்துவம் செய்து கொள்வதற்கு வழிவகை செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்காலிகமாக—அப்ரென்டிசாக இருப்பவர்களுக்கு அந்தச் சலுகை இல்லை. அவர்களுக்கும் இந்த வசதிகளை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பயணச்சீட்டுப் பரிசோதகர் வேலைக்கு வெளியாட்களை நேரடியாக நியமிக்கின்ற முறை புகுத்தப்பட்டிருப்பதால் ஏற்கெனவே நடத்துனர்களாகப் பணிபுரிகின்றவர்களுக்கு உத்தியோக உயர்வு பாதிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, நடத்துனர்களிலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவீதம் இந்தப் பரிசோதகர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

*திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களால் இந்த அவையிலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற போக்குவரத்து சம்பந்தமான மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி அறிவிப்பதற்கு எதுவும் இல்லை என்ற அளவிற்கு, ஏற்கெனவே தொழிலாளர்களுக்குப் பல சலுகைகளையும், வசதிகளையும் செய்தும், பயணம் செய்கின்ற பயணிகளுக்குப் பல வசதிகளையும் கொடுத்திருக்கின்ற அமைச்சரவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரையில் போக்குவரத்து வசதியே இல்லாத சுமார்
16 இலட்சம் மக்கள் வாழுகின்ற ஏறத்தாழ 753 சிறிய கிராமங்
களுக்கு இந்த ஆண்டு பேருந்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்
டிருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

கிராம மக்கள் காய்கறி, பால், உணவு தானியங்கள் ஆகிய வற்றைச் சந்தைகளுக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்லத் தக்க அளவிலே சந்தைப் பேருந்துகளை அரசாங்கம் விட்டிருப்பது உண்மையிலேயே கிராம மக்கள் மீது இந்த அரசு கொண்டிருக் கின்ற அக்கறைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகரப் பேருந்து வழித்தடத் தொலைவினை 25 கிலோ மீட்டரி லிருந்து 30 கிலோ மீட்டர் என்று உயர்த்தப்பட்டிருப்பதால் பல புதிய கிராமங்கள் பேருந்து வசதிகளைப் பெற்றிருக்கிறது.

இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்குப் பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுத் திருக்கிறது. பயணம் செய்பவர்களுக்கு உதவியாக 1,300 நிழற் கொடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாநகராட்சிகள், சுற் றுலா இடங்களில் எல்லா வசதிகளையும் கொண்ட பேருந்து நிலையங்களை அமைத்துக் கொடுத்திருக்கிறது.

அதே போல ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற போதும், தமிழகத்திலே பெரிய பெரிய திருவிழாக்கள் நடை பெறுகிறபோதும், சிறப்புப் பேருந்துகளை விட்டு, பயணிகளுக்கு நல்ல வசதி ஏற்படுத்தித் தந்திருக்கின்ற இந்த அரசை பாராட்டக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

அதேபோல இந்த போக்குவரத்துத் துறை பல சமூக நல நடவடிக்கைகளைச் சிறப்பாக செய்து தந்திருக்கின்றது. பார்வை அற்றவர்களுக்கு, புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பத் திரிகை நிருபர்களுக்கு இந்தக் கழகப்போக்குவரத்துகளிலே இலவச பயணம் செய்வதற்கும், சலுகைக் கட்டணத்திலே பயணம் செய்ய வும் வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. அதற்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஊனமுற்றோர்க்கு இருக்கை வசதி, பள்ளி, மருத்துவமனை களுக்குப் போவதற்கு இலவச அனுமதி வழங்கப்பெற்றிருப்பதும், ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்போது, வேலை வாய்ப்பு அலுவலகத்தில் கேட்காமலேயே அவர்களை வேலையில் அமர்த்தும் முறையை இந்த அரசு ஏற்படுத்தயிருக்கிறது. அதற் காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களது மனைவி அல்லது கணவரோடு இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டுள்ளது. அதை மாற்றி சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் உதவியாளர்களில் ஒருவரோடு இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல, இன்றைக்குப் பேருந்துகளிலே பல பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு வேகக் கட்டுப்பாடு சாதனங்கள் கழகப் பேருந்துகளிலே பொருத்தப் பட்டிருக்கின்றது. அதைத் தனியார் பேருந்துகளுக்கும் பொருந் தும் அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கோள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு நல்ல பல திட்டங்களை இந்த அரசு செய்து அவர்களுக்கு வசதி ஏற்படுத்தித் கொடுத்திருக்கின்றது. 1980-லே இருந்து அவர்களுடைய ஊதியத்தை ரூ. 65 லிருந்து ரூ. 130 வரை உயர்த்திக் கொடுத்திருக்கின்றது. அனைத்துத் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, கிராமப்படி, மருத்துவப்படி, விடுப்பு மருத்துவப் பயன்கள் முதலியவை அனைத்துப் போக்கு வரத்துக் கழகங்களிலேயும் ஒரே மாதிரி அமைத்துக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதேபோல உடல் நலக் குறைவுக்கான விடுப்பு, ஆண்டொன்றுக்கு 6 நாட்களிலே இருந்து 8 நாட்களாக அதிகரிக் கப்பட்டிருக்கின்றது. அதேபோல பெண்களுக்கு அளிக்கப்படும் மகப்பேறு விடுப்பு 60 நாட்களிலிருந்து 90 நாட்களாக உயர்த்தப் பட்டிருக்கின்றது.

எல்லா போக்குவரத்துக் கழகங்களிலும் பணிமனைகளில் உணவகம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த உணவகங்களில் குறைந்த விலையில் சிற்றுண்டி வழங்கப்படுகின்றது. இரவு நேரங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு இலவச மாக சிற்றுண்டியும் தேனீரும் வழங்கப்படுகின்றன. அதே போல பணியாளர் ஒருவர் இறந்து விட்டால், அவருடைய குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு வழங்கப் படுகின்றது. இது போன்ற நல்ல பல திட்டங்களைத் தொழிலாளர்களுக்கு இந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்திருப் பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், போக்கு வரத்து அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப் பட் டிருக்கின்றேன்.

அடுத்து, போக்குவரத்து நிருவாகத்திலே ஏனைய நாடுகளுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு வெளிநாட்டு ஆலோசனைப் பிரிவு ஒன்று அமைத்திருப்பதை பாராட்டுகிறேன். அதே போல அந்தமான் போக்குவரத்துக் கழகத்திற்கு ஆலோசனைப் பணிகளை நல்குவதற்கான பொறுப்பு சேரன் போக்கு வரத்துக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்குத் தேவையான பேருந்துகளுக்குக் சேசிஸ் வாங்கி கூண்டுகள் கட்டுவதற்கான பொறுப்பு சேரன் போக்குவரத்துக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், மற்ற மாநிலங் களினுடைய போக்குவரத்துக் கழகங்களுடைய கட்டணத்தோடு

நமது கட்டணத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய கட்டணம் மிகவும் குறைவாக இருக்கின்றது. மேலும் மற்ற மாநிலங்களில் உள்ள பேருந்துகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நமது மாநில பேருந்துகள் மிகவும் தரமாகவும் சிறப்பாகவும் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஈரோடு நகரில், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்துக்குப் பேருந்து நிலையம் மற்றும் பணிமனை இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஈரோட்டுக்கு ஒரு பேருந்து நிலையமும், பணிமனையையும் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தைத் தனியாகப் பிரித்து போக்குவரத்துக் கழகம் அமைத்திருப்பதை நான் வரவேற்று பாராட்டுகிற அதே நேரத்தில், பெரியார் மாவட்டத்திலே கழகப் புறநகர் போக்குவரத்துக்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. எனவே புதிதாக அமைக்கப்படவிருக்கும் போக்குவரத்துக் கழகம் லாபத்திலே இயங்கவேண்டுமானால் அந்தப் புறநகர் போக்குவரத்தை நடத்துகின்ற தனியார் போக்குவரத்தை நாட்டுடமை ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–30)

* திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் போக்குவரத்துத் துறை மானியக் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மானியக்கோரிக்கையின்மீது எனக்குப் பேசவாய்ப்புஅளித்தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக்கொண்டு, குறுகிய நேரம் கொடுத்து இருக்கின்ற காரணத்தால், என்னுடைய தொகுதியிலே இருக்கின்றவற்றை மட்டும் சொல்லிவிட்டு அமரலாம் என்று நினைக்கிறேன். இங்கே சென்னையிலிருந்து என்னுடைய தொகுதிக்கு, கமுதி நகருக்கு ஓடிக்கொண்டிருந்த பஸ் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் நாம் செலுத்துவதற்கு அனுமதி வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பாண்டியன் போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஒரு கழகத்திற்கு தேசியத் தலைவர் திரு. முத்துராமலிங்கத் தேவர் பெயரைக் சூட்ட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன், அதே நேரத்தில் தனியார் நிறுவனம் ஒன்று அங்கே 200 பஸ்களுக்கு மேல் ஓட்டிக் கொண்டிருக்கிற ஜெய விலாஸ் என்ற நிறுவனம் நம்முடைய அரசு பஸ்களுக்கு இடையூறாக இருந்துகொண்டு, அங்கே அரசு பேருந்துகளை குறித்த நேரத்திற்கு எடுக்கமுடியாமல் ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி இடைஞ்சல்களைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தனியார் பஸ்களை ஓரளவுக்குக் கட்டுப்படுத்துவதற்கு உடனடியாக நட



அதேபோல், எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில்
3 நகரங்கள், பெரிய நகரங்களாக இருக்கின்றன. அவைகள்,
கமுதி, முதுகுளத்தூர், அபிராமம் என்ற 3 நகரங்கள் இருக்
கின்றன. அந்த நகரங்களைச் சுற்றி டவுன் பஸ் விடாத காரணத்
தால், பொதுமக்கள் குறிப்பாக விவசாய மக்கள் மிகவும் அவதிப்
பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன், எனவே, அங்கே டவுன் பஸ் விடுவதற்கு வேண்டிய
ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அங்கே நம்முடைய அரசு வாகனங்களுக்கு எதிராக தனியார்
வாகனங்கள் அட்டகாசம் செய்துகொண்டு தடுக்க முடியாமல்
நம்முடைய அரசு பஸ்களுக்குத் தொந்திரவு கொடுத்துக் கொண்
டிருக்கிறார்கள். அதேபோல், முதுகுளத்தூரில், பாண்டியன்
பஸ் போக்குவரத்து டெப்போ ஒன்றை அமைக்க வேண்டுமென்று
3 ஆண்டு காலமாக ஏற்பாடு செய்து, இன்றைக்கு அந்த டெப்போ
அமைப்பதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்திருப்பதாக நான்
கேள்விப்படுகிறேன். உடனடியாக முதுகுளத்தூர் நகரிலே
அந்த டெப்போவை அமைச்சர் அவர்கள் அமைக்க ஏற்பாடு
செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் தனியார்
பஸ்கள் செல்கின்ற எந்த இடத்தை எடுத்துக் கொண்டாலும்,
நம்முடைய அரசு பஸ்கள் ஓட்டுகின்ற இடங்களிலே எல்லாம்
அவர்கள் வழித்தடங்களை எடுத்துக் கொண்டு, நம்முடைய பஸ்
ஓடுகின்ற இடங்களிலே எல்லாம் டிக்கட் கலெக்ஷனை குறைத்து
அவர்கள் வாரிக் கொண்டு போகிறார்கள். அதே நேரத்தில்
ஓட்டுகின்ற பஸ்கள் கூட நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.
மீண்டும் அந்த வழித்தடங்களில் பஸ்கள் ஓட்டுவதற்கு ஏற்பாடு
செய்ய வேண்டும். அதே நேரத்தில் நம்முடைய பாண்டியன்
பஸ் போக்குவரத்துக் கழகம் என்னுடைய தொகுதியில்,
100 கிலோ மீட்டர் உள்ள வழித்தடங்களுக்கு இதுவரையில் பஸ்
விடாத காரணத்தால் பஸ் விடமுடியாத சூழ்நிலை அங்கே
இருக்கின்றது. சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்கின்றபோது
எங்களிடத்தில் பஸ்கள் இல்லை, பஸ்கள் வந்தவுடன் அந்த வழித்
தடங்களில் ஓட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். அந்த மாதிரி
தகராறு இருக்கின்ற இடத்தில், அரசு பஸ்களை விடுவதற்கு,
தனியார் பஸ்களுக்கும், கொஞ்சம் புதிய வழித்தடங்களை அந்தப்
பகுதியில் கொடுத்து, மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கு,
முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் தேசி
யத் திருமகன் தேவர் அவர்களுடைய பெயரால் நல்ல காரியம்
செய்த இந்த அரசு, அவர்கள் பெயரால் பாண்டியன் போக்கு
வரத்துக் கழகம் இரண்டாக பிரிக்கின்ற காரணத்தால் அந்தப்
பகுதியில் தேசிய திருமகன் பெயரால் அமைக்க வேண்டுமென்று
கேட்டுக் கொண்டு, விடைபெறுகிறேன், வணக்கம், நன்றி, ஜெய்
ஹிந்த்.

* திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு எனக்கு நேரம் கொடுத்தமைக்கு நன்றி கூறி என்னுடைய உரையை ஆரம்

பிக்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்தத் தொழிலிலே, அனுபவமும், திறமையும், இளமையும், இனிமையும், கொண்டவர். அவருடைய தலைமையில் இந்தப் போக்குவரத்துத் துறை மென்மேலும் பெருகும் என்பதிலே எனக்குச் சந்தேகம் இல்லை. இந்தியாவிலே இருக்கின்ற மாநிலங்களிலே நம்முடைய மாநிலத்தில்தான் மிகக் குறைந்த கட்டணத்தில், போக்குவரத்திலே, மிகச் சிறப்பான வேலையை செய்துக்கொண்டிருக்கிறது நம்முடைய தமிழக போக்குவரத்துத் துறை. எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள், குறிப்பாக நம்முடைய பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தேசியமயக் கொள்கையை இந்த அரசு சரியாக செயல்படுத்தவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்கு நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன். 1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், தி.மு.க. அரசு அகற்றப்பட்டபோது, பொதுத்துறை 50 சதவீதமாகவும், தனியார் துறை 50 சதவீதமாகவும் இருந்ததை இந்த அரசு மாற்றி அமைத்து, இப்போது 50 சதவீதம் இருந்த தனியார் துறையை 39 சதவீதமாகவும், 50 சதவீதமாக இருந்த பொதுத்துறையை 61 சதவீதமாகவும் மாற்றி அமைத்து இருப்பது, நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் செய்ததாகும் என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது.

இங்கு சென்ற ஆண்டிலே மட்டும் 13 கோடி ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறது என்று பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். அவர்கள் உணர்ந்துதான் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். நஷ்டம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று பார்த்தால், இன்றைக்கு டீசல் விலை ஏறியிருக்கிறது; டயர் விலை ஏறியிருக்கிறது; ஸ்பேர் பார்ட்ஸ் விலை ஏறியிருக்கிறது; சேசிஸ் விலை இரண்டு இலட்சம் ரூபாயைத் தாண்டிவிட்டது; பஸ் பாடி கட்டுவதிலே ஆண்டுக்காண்டு 10,000 ரூபாய் முதல் 20,000 ரூபாய்வரை உயர்த்துகொண்டே இருக்கிறது. இவை அத்தனைக்கும் காரணம் மத்திய அரசின் தவறான கொள்கைதான். அதன் காரணமாகத்தான் 13 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதனுடைய முழு பொறுப்பையும் மத்திய அரசுதான் ஏற்கவேண்டும். ஆனால் அவர்கள் செய்த முடிவு தமிழ்நாட்டைப் பாதித்திருக்கிறது.

நம்முடைய போக்குவரத்துக் கழகங்கள் நல்லமுறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்குச் சிறந்த நிர்வாகிகள் கிடைத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து பாராட்டுகிறேன். இதிலே ஒரே ஒரு சிக்கல் மட்டும் வந்திருக்கிறது. அழகான புதிய பஸ்களைக் கொடுக்கிறோம், ஆனால் ஏனோ, பராமரிப்பு சரியாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு முதல் காரணம் பழுதடைந்த ரோடுகள். அதைச் சரி செய்ய வேண்டுமென்றால் இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள





விரும்புவது, எந்த அமைச்சரிடத்திலே போக்குவரத்துத் துறை இருக்கிறதோ அதே அமைச்சரிடத்திலே நெடுஞ்சாலைத் துறையும் இருக்க வேண்டும். அதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பராமரிப்பிலே இருக்கிற குறை ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசியவர்களும் அதைக் குறிப்பிட்டார்கள். பஸ் போய்க்கொண்டிருக்கும் போது பஞ்சர் ஆனால் நடுவழியிலே பிரயாணிகளை இறக்கி விட்டுவிடுகிறார்கள். இந்தக் குறையைப் போக்க அதற்கு ஒரு மாற்றுச் சக்கரம் கொடுக்க போக்குவரத்துக் கழகங்களிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இங்கே வேகக்கட்டுப்பாடு கருவி (ஸ்பீட் கன்ட்ரோலர்) பொருத்துவது பற்றி சொன்னார்கள். இந்தத் தொழிலிலே நான் ஓரளவுக்கு அனுபவம் உள்ளவன் என்ற முறையில் சொல்கிறேன். அது தேவையில்லை. 5,000 ரூபாய் கொடுத்து, அந்தக் கருவியை பஸ்ஸலே பொருத்துவதினால் பயனில்லை; அதனால் இலாபம் இல்லை; ஆகவே அது தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு பெரிய பிரச்சனை போக்குவரத்துத் துறையில் இருக்கிறது. அது டவுன் பஸ்ஸை பற்றியது. இந்த டவுன் பஸ் என்பது இப்போது மிஸ்நாமர் ஆகிவிட்டது. டவுன் பஸ் என்றால் முன்னாலே டவுனுக்குள் மட்டும் சென்று வருவதாக இருந்தது. பின்னாலே கிராமத்திலேயிருந்து டவுனுக்கு வந்து சேருகின்ற பஸ்களும் டவுன் பஸ்கள் என்று ஆனது. இப்போது ஓடுகின்ற டவுன் பஸ்ஸைப்பார்த்தால் இரண்டு நகரங்களையே இணைப்பதாக இருக்கிறது. 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு டவுன் பஸ் என்றால் இடையிலே இரண்டு நகரங்கள் வந்துவிடுகின்றன. அவ்வளவு நீண்ட தூரமாக இருக்கிறது. இதனால் புறநகர் பேருந்துகள் பாதிக்கப்படுகின்றன. ஏனென்றால் டவுன் பஸ்ஸில் கட்டணம் குறைவாக இருக்கிறது. அதன் காரணமாகப் புறநகர் பேருந்துகளில் பயணிகள் ஏறாமல் டவுன் பஸ்ஸையே எதிர்பார்க்கிறார்கள். அதன் விளைவாகப் பல இடங்களில் தனியார் துறையைச் சேர்ந்த பேருந்துகளாக இருந்தாலும் சரி, அரசுத் துறையைச் சேர்ந்த அல்லது பொதுத்துறையைச் சேர்ந்த பேருந்துகளாக இருந்தாலும் சரி, சில நேரங்களில் ஆளே இல்லாமல், பயணிகள் இல்லாமல் காலியாக ஓடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

எங்களிடத்திலே வந்து எங்கள் ஊருக்கு பஸ்ஸே இல்லை என்று சொல்கிறார்கள். அங்கே 3 பேருந்துகள் ஓடுகின்றன என்று சொன்னால் அந்த பஸ் எங்களுக்கு வேண்டாம்; அது மஃபசல் பஸ், கட்டணம் அதிகமாக இருக்கிறது; டவுன் பஸ் வேண்டும் என்று கேட்கிறார்கள். மஃபசல் ரூட்டில் ஒரு ரூபாய் கட்டணம் என்றால் டவுன் பஸ் ரூட்டில் 50 காசுதான் கட்டணம் என்ற

அளவில் நாம் வைத்திருக்கிறோம். அதனால் புறநகர் பேருந்து களில் பயணிகள் இல்லாமல், சரியாக ஓட்டமுடியாமல் கட்ட ணத்தைக் குறைத்து, ஓட்டுகிறார்கள். எனவே, இதிலே அரசு ஒரு சரியான முடிவு எடுக்க வேண்டும். இன்றைக்கு இருக்கிற கட்டண வித்தியாசம் அதிகமாக இருப்பதால் இப்படிப்பட்ட ஒரு "அன்ஹெல்த்தி காம்படிஷன்" இருக்கிறது. இந்த வேறு பாட்டைக் குறைக்க அரசு வழிவகைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆர்.டி.ஓ. அலுவலகம் 10 ஆண்டுகளுக்கு முன் னால் எப்படி இருந்ததோ அதே நிலையில்தான் இருந்துகொண் டிருக்கிறது. நாம் ஆண்டுதோறும் புதிய வண்டிகளை நிறைய விட்டுகொண்டிருக்கிறோம். ஆனால் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் ஸ்டாஃப் அதிகம் இல்லை. கிளார்க் இல்லை ; டைபிஸ்ட் இல்லை டைப்ரயிட்டர் இல்லை ; காகிதம் கூட அவர்களுக்குப் போது மான அளவுக்கு இல்லை. அதனால் மாதக்கணக்கில் தாமதம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட குறைகளைப் போக்க, அந்த அலு வலகங்களுக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, மோட்டார் வாகனச் சட்டங்களையும் விதி களையும் தனியார் துறையும் பொதுத் துறையும் மதித்து நடக்க வேண்டும். பல இடங்களில் இந்த ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்குத் தெரியாமலே பஸ்ஸை விடுகிறார்கள் ; பஸ்ஸை நிறுத்திவிடு கிறார்கள் ; நேரத்தை மாற்றி ஓட்டுகிறார்கள். இப்படிப்பட்ட செய்கைகள் நிறுத்தப்பட வேண்டும். ஆர்.டி.ஓ.-வுக்குத் தெரியாமல் எதுவும் செய்யக்கூடாது; சட்டங்களையும் விதிகளையும் மீறி எதையும் செய்யக்கூடாது. மீறினால் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

(பிற்பகல் 12-40)

போட்டி இருக்கின்ற இடத்தில் தான் திறமை அதிகம் இருக்க முடியும். அதற்கு உதாரணம் சொல்லவேண்டுமானால், இந்தியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா நிறுவனங்களைச் சொல்லலாம். போட்டி இல்லாத காரணத்தால், இந்தியன் ஏர்லைன்ஸல் பயணிகளைக் கவனிக்க மாட்டார்கள். ஏர் இந்தியா உலக நாடு களில் உள்ள நிறுவனங்களோடு போட்டி போடவேண்டியிருப்ப தால் அங்கே மிகத்திறமையான அளவிற்குப் பணியாற்றுகிறார்கள் ஆகவே, அந்த வகையில் போக்குவரத்துத் துறையில் கூட, தனியார்த் துறைக்கும், பொதுத் துறைக்கும் இடையேயும், அதைப்போலவே, ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கும், மற் றொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் இடையே போட்டி மனப் பான்மையோடு பணிகளைச் செய்வதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். அப்போதுதான் திறமை வளரும். அப்படிப்பட்ட ஒரு நல்ல போட்டிக்கு நடுவராக இருந்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பணியாற்றவேண்டும் என்று வேண்டி, விரும்பிக் கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இங்கே போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் வைத்து இருக்கும் சாலைப் போக்குவரத்து மானியக் கோரிக்கை மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பஸ்களை தேசியமாக்கவேண்டும் என்பதுதான் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை. அந்தக் கொள்கையின் அடிப் படையில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருந்தபோது, டி.வி.எஸ், கம்பெனி, ஏ.பி.டி., சக்தி விலாஸ் ராமன் அன்ட் ராமன், ராம விலாஸ் போன்ற தனிநபர் பஸ் நிறுவனங்களை எல்லாம் அன்றைய தினம் அரசுடைமையாக்கியது. அது மட்டுமல்லாமல், 7 போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கியது. ஆனால், இன்றைக்கு ஆளும் பொறுப்பிலே இருக்கக்கூடிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக சர்க்காருக்கு பஸ் தேசியமயக் கொள்கையில் என்ன கருத்து இருக்கிறது என்று கேட்டால், இந்தப் பாலிசி நோட்டில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். "நாட்டுடைமை யாக்குவது தொடர்பாக நமது அணுகு முறை மிகத் தெளிவான தாகும்" என்ன தெளிவானது என்று கேட்டால், அடுத்த வரிகளில் அதைக் குறிப்பிடுகிறார். பஸ்கள் தனியார் துறையிலும் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு விட்டு, அதுதான் பயணிகளுக்கு மேலும் வசதியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆக, நான் சொல்ல விரும்புவது, பயணிகளின் வசதிக்காகத் தனியாருடத்தில் பஸ்கள் இருக்கவேண்டும் பல ரூட்டுகளில் பஸ்கள் அனுமதிக்கவேண்டும் என்று சொல்வது, உங்களுடைய வசதிக் காகத்தான், மோட்டார் மன்னர்களிடமிருந்து கொள்ளை அடிப் பதற்காகத்தான். **எனவேதான், பஸ் தேசியமாக்குவது என்ற அண்ணாவின் கொள்கைக்கு மாறாக, நீங்கள் இன்றைய தினம் பஸ் பர்மிட்டுகளை வழங்கிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று குற்றம்சாட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப் பினர் பேசுகின்ற நேரத்தில் சொன்ன **அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடுவது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்று உத்தர விடுகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. அ. ரகுமான்கான் : ஆக, அண்ணாவின் பஸ் தேசிய மயக்கொள்கை இங்கே மறுக்கப்பட்டு இருக்கிறது. அண்ணாவின் பஸ் தேசிய மயக்கொள்கையை நீங்கள் குழிதோண்டிப் புதைத்து இருக்கிறீர்கள். அண்ணா வழி என்று சொல்லிவிட்டு, அண்ணாவிற்கு நாமம் போடும் காரியத்தைச் செய்வதற்கு நீங்கள் இறங்கி இருக்கிறீர்கள் என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இன்றையதினம் ஆம்னி பஸ்கள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அந்த முதலாளிகள் இதன்மூலம் கொள்ளை அடித்துக்கொண்டு இருக்கிறார்கள். சில காலத்திற்கு முன்பு பல போலீஸ் அதிகாரிகள் ஆம்னி பஸ் முதலாளிகளிடத்தில் லஞ்சம் வாங்கினார்கள் என்று வழக்குப் போட்டீர்கள். பலரை சஸ்பெண்டு செய்தீர்கள். அந்த அதிகாரிகள் மறுபடியும் பணியில் அமர்த்தப்பட்டுவிட்டார்களா ? அந்த வழக்குகள் என்ன ஆயிற்று ? இந்த விவரங்களை நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். அந்த அதிகாரிகள் பதவியில் மீண்டும் அமர்த்தப் பட்டு இருக்கிறார்கள் என்று சொன்னால், அதில் என்ன நியாயம், என்ன முறை இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். இன்றைக்கு அந்த ஆம்னி பஸ்களைத் தேசியமயமாக்கு வதற்கு இந்தச் சர்க்கார் ஏன் தயங்குகிறது? அங்கேயிருந்து கப்பங்கள் வாங்குவதற்கு ஏதேனும் முயற்சிகள் நடைபெறு கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

நான் ஒரு கடுமையான குற்றச்சாட்டு சொல்ல விரும்புகிறேன். லாரிகளுக்கு நேஷனல் பர்மிட் வழங்கப்பட்டு இருக்கிறது. அதிலே மிகப் பெரிய ஊழல் நடைபெற்று இருக்கிறது என்பதை நான் ஆதாரத்தோடு சொல்ல விரும்புகிறேன். மொத்தம் 2,609 பேர்கள் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். லாரி நேஷனல் பெர்மிட்டுக்காக, அதிலே 75 ரூபாய் கட்டணம் கட்டவேண்டும். அப்படி கட்டிய 400 பேர்களுக்கு அந்த நேஷனல் பெர்மிட் லைசன்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. தகுதியின் அடிப்படையில் தான் அந்த பெர்மிட்டுகள் தரப்படவேண்டும். ஆனால் எந்தத் தகுதியின் பேரில் விதிகளுக்குப் புறம்பாக நீங்கள் யார் யாருக்கெல்லாம் கொடுத்திருக்கிறீர்கள் தெரியுமா? அந்த புறத் திலே அமர்ந்திருக்க கூடிய சட்டமன்ற உறுப்பினர் ஒருவருடைய மனைவியின் பெயருக்கு நீங்கள் இந்த பெர்மிட்டை கொடுத் திருக்கிறீர்கள். தகுதிகளுக்கு மாறாக, விதிகளுக்குப் புறம்பாக கொடுத்திருக்கிறீர்கள். அவர் டிரைவர் அல்ல, டிரைவிங் எக்ஸ் பீரியன்ஸ் உள்ளவர் அல்ல. மெக்கானிக்கும் அல்ல, ஆனாலும் லாரி பெர்மிட்டை கொடுத்திருக்கிறீர்கள். அந்தப் பெயரைக் கூட என்னால் சொல்ல முடியும். ஆனால் அப்ளிகேஷன் நெம்பரைச் சொல்கிறேன், அது 1863, பெயர் கேட்டாலும் சொல்லத் தயார், கெஸட்டிலே வெளிவந்திருக்கிறது.



அது மட்டும் அல்ல, இன்னொரு லாரி பெர்மிட்டையும் கொடுத்திருக்கிறீர்கள். யாருக்கு என்றால் எங்களுடைய கட்சி யிலே இருந்த ஒருவருக்குத் தான். அவர் ஒரு வக்கீல். கோர்ட் டுக்கு போகக்கூட முடியாத நிலையில் கம்பை ஊன்றிக் கொண்டு போகிறார். அவரும் டிரைவர் அல்ல, மெக்கானிக்கும் அல்ல, உங்களுடைய கட்சிக்கு வந்துவிட்டார் என்ற ஒரே காரணத்திற் காக இந்த பெர்மிட்டை கொடுத்திருக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன் ? அவருடைய அப்ளிகேஷன் நெம்பர் 1870. நான் வெளியிலே இன்னொன்றையும் கேள்விப்படுகிறேன். இந்த லாரி பெர்மிட்டுகளுக்குத் தலைக்கு 10,000 ரூபாய் வசூலிக்கப் பட்டிருக்கிறது என்று. ஆகவே இதிலே மிகப் பெரிய ஊழல் நடை பெற்று இருக்கிறது என்ற கடுமையான குற்றச்சாட்டை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் இந்த லாரி பெர்மிட்டுகள் திருச்செந்தூருக்கு 32 கொடுக்கப்பட்டிருக்கின்றன. கரூருக்கு 25 கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாமக்கல்லுக்கு 81 கொடுக்கப் பட்டிருக்கின்றன. இது குறித்து நீதிவிசாரணை தேவை. தலைக்கு 10,000 ரூபாய்க்கும் மேலாக வழங்கப்பட்டிருக்கிறது. இது குறித்து இவ்வளவு தெளிவோடு சொல்வதற்குக் காரணம் இது சம்பந்தமான வழக்குகளில் நானே ஆஜராகியுள்ளேன். ஆகவே நீதி விசாரணை வைத்தால் இந்த ஊழலைப் படம் பிடித்து காட்ட நான் தயராக இருக்கிறேன், பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன் என்று தெரிவிக்கக், கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து(Speed controlling device 'Dinica') என்பதைப் பொறுத்து சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். வேகக் கட்டுப்பாடு கருவி என்ற அந்தக் கருவி நம்முடைய வண்டிகளிலேயெல்லாம் பொருத்தப்பட்டிருக்கிறது. வேகத்தை கட்டுப்படுத்துவதற்காக, ஆனால் அது வேகத்தை கட்டுப்படுத்துகிற கருவியாக இருக் கிறதா என்றால் இல்லை. ஆனால் இதைப்பற்றி வெளிநாட்டிலே பேசுகிறபோது சொல்கிறீர்கள். இந்தக் கருவி எங்களுக்குச் சரி யாகப் பயன்படவில்லை. எடுக்கப்போகிறோம் என்று. அதற்குப் பதிலாக புதியதாக வேறு ஒரு கருவியைக் கொண்டு வரப் போகி றோம் என்றும் சொல்லியிருக்கிறீர்கள். நான் கேட்கவிரும்பு கிறேன், இன்றைக்கு அந்தக் கருவி வேக கட்டுப்பாடு. செய்யும் வேலையைச் செய்யவில்லை பயன் இல்லாமல் போய்விட்டது என்று சொல்கிறீர்களே, ('Dyscon') என்னும் இந்தக் கருவியை (Dynocrayh Cab company, Bombay) என்ற நிறுவனத் திடமிருந்து பம்பாயிலிருந்து தானே வாங்கியிருக்கிறீர்கள், இதற்கு டென்டர் போட்டீர்களா ? கால் ஃபார் செய்தீர்களா ? இல்லையே. இந்த ஸ்பீட் லிமிட் கருவி 1,000 ரூபாயிலிருந்து 1200 ரூபாய் வரைதான் வெளியிலே விலை விற்கும்போது, 5,000 ரூபாய் வரையில் கொடுத்து வாங்கியிருக்கிறீர்கள். ஆகவே நான் பகிரங்கமாகவே குற்றம் சுமத்துகிறேன், பகிரங்கமாகவே கேட்கிறேன், அந்தக் கம்பெனியிடமிருந்து எவ்வளவு வாங்கி

னீர்கள்? இவ்வளவு ரூபாய் கொடுத்து வாங்கியும் அது பயன் படவில்லை என்றால் அதற்கு என்ன காரணம்? இன்றைக்கு 13 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டத்தில் ஓடுவதாகச் சொல்கிறீர்களே, அதற்கு யார் காரணம்? இப்படிப்பட்ட ஊழல்கள் அல்லவா காரணம்?

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

நான் இன்னொரு பிரச்னையைக் குறித்தும் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். மிக முக்கியமான ஒரு செய்தியை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தமிழ்நாடு இன்டஸ்ரியில் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பொரேஷன் தொழில் துவங்குவதற்குப் பணம் தருகிற நிதி வழங்குகிற நிறுவனம், அதைப் பயன்படுத்தி இந்தச் சர்க்காரிலே சில புள்ளிகள் கொள்ளை அடிக்க சதித் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அசோக் லேலேன்ட்டிடம் இருந்து சேசஸ்களை விற்றுக் கொடுக்கும் ஏஜென்ட்டாக செயல்படுவதற்காக ஆதாரங்கள் வேண்டுமானால் போதுமான ஆதாரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. நேற்றுதான் கடைசி நாள் எதற்கு.என்று கேட்டால் அந்தக் கார்ப்பொரேஷனிலே, இந்த லாரி சேசஸ்களை டீலர்ஸ் வாங்குவதற்கான கடைசி நாள்.இதற்காக 9 கோடி ரூபாய் கடனைப்பெறுவதற்காக, இந்த அரசு அந்தக் கார்ப்பொரேஷனுக்கு கொடுத்திருக்கிறது. நேற்றுதான் கடைசி நாள் அந்த 450 சேசஸ்களை வாங்குவதற்கு. ஆகவே சர்க்கார் 9 கோடி ரூபாயை இந்த சேசஸ்கள் வாங்குவதற்காக அந்தக் கார்ப்பொரேஷனுக்குக் கொடுத்து, அந்த சேசஸ்களை டிஸ்போஸ் பண்ணுவதற்கான ஒரு முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நான் பகிரங்கமாகவே குற்றம் சுமத்த விரும்புகிறேன், ஒவ்வொரு சேசஸுக்கும் 5,000 ரூபாய் வீதம் வசூல் பண்ணப்பட்டிருப்பதாக, தகவல் எனக்கு தரப்பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புகிறேன், இது ஊழல் இல்லையா?

(பிற்பகல் 12-50.)

அது மட்டுமல்ல, நான் இன்னொன்றையும் இங்கே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பார்லிமெண்டிலே மத்திய சர்க்காருடைய அமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் தமிழக அரசினுடைய பூம்புகார் கார்ப்பரேஷன்—கப்பல் சம்பந்தமாக சிலகருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். உங்களுடைய பிரதிநிதியான திரு. மோகனரங்கம் அவர்களும் அங்கே இருக்கிறார்கல். ஆகவே நீங்கள் சொல்லவேண்டிய கருத்தினை அவர் பேசிக் கொண்டிருக்கிறார். இங்கே ஒரு சபை நடந்து கொண்டிருக்கின்றது. ஆனால் மேற்கு ஜெர்மனி நிறுவனத்திலே இருந்து 3 கப்பல்கள் வாங்குவதற்கு ஒப்பந்தம் நடைபெற்று இருக்கின்றது. ஆனால் அதே நேரத்தில் இந்த ஒப்பந்தத்தின்படி கப்பல் வாங்கப்படுமா? வாங்குகின்ற எண்ணத்தில் தமிழக சர்க்கார் இருக்கின்றதா! இல்லையா! இங்கே ஒரு அமைச்சர், அவருக்கு ஒரு சம்பளம்.



அவருக்கு ஒரு நிர்வாகம். இங்கே ஒரு சபை நாம் எல்லாம் அதன் உறுப்பினர்கள். ஆனால் அது பற்றி அமைச்சர் இங்கே கருத்து தெரிவிக்கவில்லை. இங்கே ஒரு நோட் கொடுத்திருக்கிறார்கள் அதிலே நாட்டுடமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து பற்றிய சாதனைகளைப் பற்றி எல்லாம் ஆரவாரத்தோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இதைப் பற்றி மட்டும் ஏன் சொல்லவில்லை மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களும் கூட கேட்டார்கள்,, பட்ஜெட்டிலும் குறிப்பிடவில்லை. ஆளுநர் உரையிலும் குறிப்பிடவில்லை என்று, ஆகவே இது ஏன் மர்மமாக இருந்துகொண்டிருக்கின்றது என்பதை விளக்க வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு முத்துசாமி அவர்கள் தூத்துக்குடி துறைமுகத்தினுடைய ஆழத்தையும், கப்பலின் எடையையும், சரக்கினுடைய எடையையும், கிரேன்களின் எடையையும் அவற்றின் எண்ணிக்கையையும் சொல்லி இங்கே இருக்கக்கூடிய எக்ஸ்பர்ட் கமிட்டியின் படி இந்த மூன்று கப்பல்கள் முறையான விலைக்கு அதுவும் 100 கோடி ரூபாய்க்கு, ஒவ்வொன்றும், 33·3 கோடி ரூபாய்க்கு நாங்கள் வாங்கி இருக்கிறோம். இதிலே தவறு எதுவும் இல்லை என்றெல்லாம் இங்கே விளக்கம் கொடுத்தார்கள். ஆனால் உங்களுடைய விளக்கத்தை எல்லாம் வீரேந்திர பட்டீல் கிண்டல் செய்கிறார். எங்கே இருக்கின்றது அந்த எக்ஸ்பர்ட் கமிட்டி யார்யார் அதனுடைய உறுப்பினர்கள்? என்ன அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் அவர்கள்? அந்த அறிக்கையை அனுப்பினார்களா? அதற்கு என்ன பதில் சொல்லி இருக்கிறார்கள்? இன்னும் சொல்லப்போனால் வீரேந்திர பட்டீல் தெளிவாகச் சொல்லி இருக்கிறார் பார்லிமெண்டிலே. நீங்கள் என்ன தரம் என்று சொல்கிறீர்களோ அதே தரமுள்ள ஜெர்மனி நிறுவனக் கப்பல் பற்றி வீரேந்திர பட்டீல் அவர்கள் இதற்கான அமைச்சர் என்பதால் நாடாளுமன்றத் விவாதத்திலே கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர் சொல்கிறபோது குறிப்பிடுகிறார்—நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது, இங்கே விவாதமே அதனுடைய தரம் வேறு, இதனுடைய தரம் வேறு என்பதுதான், அதிலேதான் ஒளிந்து கொண்டிருக்கிறீர்கள், ஆகவே அவர்கள் சொல்கிறார்கள் நீங்கள் சொல்கின்ற தரமான கப்பலைப் பற்றித்தான் எங்களுடைய ஷிப்பிங் வளர்ச்சிக் கழகம் கோடிட்டுக் காட்டி இருக்கின்றது. அதுபற்றி எங்களுடைய எக்ஸ்பர்ட்கள் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

பிரிட்டிஷ் நிறுவனத்தின் கப்பலின் விலை 24 கோடி ரூபாய். யுகோஸ்லாவியா கப்பலின் விலை 23·40 கோடி ரூபாய். பல் கேரியா கப்பலின் விலை 22 கோடி ரூபாய். இது நான் சொல்கின்ற பட்டியல் அல்ல. வீரேந்திர பட்டீல் அவர்கள் சொல்லக்

[திரு. அ. ரகுமான்கான்] [1982 மார்ச் 24

இருக்கின்ற மோகனரங்கம் அங்கே பேசுகிற போது சொல்லி இருக்கிறார், ஜெர்மனி கப்பல் தரம் உயர்ந்தது என்று சொல்லி இருக்கிறார்· ஆனால் அதை வீரேந்திர பட்டீல் ஒப்புக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே நான் கேட்க விரும்புகிறேன், உங்களுடைய எக்ஸ்பர்ட் கமிட்டி மெம்பர்கள் யார்யார்? இந்த ஒப்பந்தத்தைப் பற்றி நீங்கள் ஏன் குறிப்பிடவில்லை? இங்கே ஏன் அதற்கான வதாதத்திற்கு ஏற்பாடு செய்யவில்லை? நீங்கள் அமைச்சருக்கு எழுதிய கடிதம் என்ன? கப்பல் வளர்ச்சிக் கழகத்திற்கு எழுதிய கடிதம் என்ன? அதற்கு அவர்கள் கொடுத்த பதில் என்ன? இது குறித்து மக்கள் பிரதிநிதிகளாகிய எங்கள் முன்னாலே, இந்த சபை முடிவதற்கு முன்னாலே ஒரு விவாதத்திற்கு ஏற்பாடு செய்யய வேண்டும். சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும். இதைச் சொல்வதற்குக் காரணம் பாலடிகா கப்பல் பேரத்திலே ஊழலுக்குப் பலவகையான வாய்ப்புகள் இருந்ததும் அதை நாங்கள் சுட்டிக் காட்டிய போது அப்போதைய பிரதம மந்திரியாக இருந்த சரண்சிங் அவர்கள் நிதிபதி அளிக்க ஒத்துக்கொள்ளவில்லை, ஆகவே முடியவில்லை என்று சொன்னீர்கள். அதுபற்றிய விளக்கங்கள் என்ன? எதுவுமே இதிலே குறிப்பிடப்படவில்லை. நான் இன்னொன்றும் கூட இங்கே கேட்க விரும்புகிறேன்.

பஸ் கட்டணங்கள் உயர்ந்திருக்கின்றன. பெண் கண்டக்டர்கள் 8 பேர் போடப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ட்ரெயினிகளாகத்தான் இருக்கிறார்கள். தாய்க்குலம், தாய்க்குலம் என்று பேசுகிறீர்களே, தாய்மார்களுக்கு இடம் கொடுக்கக் கூடாதா? அடிமைப் பெண்கள் எல்லாம் புதுமைப் பெண்களைப் பற்றிப் பேசுகின்ற காலம் இது. எனவே அவர்களுக்கு ஏன் அதற்கான வாய்ப்பு ஏற்படுத்தவில்லை!

அடுத்து கள்ள டிக்கட் பஸ்களிலே வழங்கப்படுகின்றது. அது சென்னை மாநகரில் இருக்கின்றதா? சந்தேகமாக இருக்கின்றது. எங்கெல்லாம் இருக்கின்றதோ என்று சந்தேகமாக இருக்கின்றது. ஆனால் ஒரே ஒரு வழக்கு போட்டிருக்கிறார்கள். இதற்குப் பின்னாலே ஒரு பயங்கரமான சக்தி இருந்து, அதற்கு ஆளுகின்ற பகுதியிலிருந்து கூட ஆதரவு இருக்கிறதோ என்ற ஒரு அச்சம் கூட ஏற்படுகின்றது.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல, உங்கள் ஆட்சியில் ஒரு வேடிக்கை. விமானங்கள்தான் கடத்தப்படும். ஆனால் பஸ்கள் கடத்தப்பட்டிருக்கின்றன, ஹைஜாக் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம்தான் சாதனை என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.



1982 மார்ச் 24] (திரு. அ. ரகுமான்கான்]

இன்னொன்றை நான் சோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்· பஸ்பாடி தனியாரிடத்தில்தான் இன்றைக்குக் கட்டுவதற்கு அனுமதிக்கிறீர்கள். ஏன், உங்களிடம் வாய்ப்பில்லையா? நீங்கள் கட்ட அனுமதிக்கக்கூடாதா? நீங்கள் அதைச் செய்யக்கூடாதா? எல்லாம் தனியார்கள்தான். நமது முதல் அமைச்சர் அவர்கள் மேலவையில் சொன்னார்கள், மின்சார இலாகா நஷ்டத்தில் ஓடுகிறது, எனவே தனியாரிடத்தில் கொடுக்கப் போகிறோம் என்று. போலீஸ் இலாகா கூட நஷ்டத்தில் இருக்கிறது என்று சொல்லி தனியாரிடத்தில் கொடுப்பார்களா? சிறைச்சாலை நிர்வாகம்கூட நஷ்டத்தில் ஓடுகிறது, எனவே சிறைச்சாலைகள் நிர்வாகம் தனியாரிடத்தில் இருக்கும் என்று கொடுப்பார்களா? ஆகவே அந்த கொள்கை அடிப்படையற்றக் கொள்கையாக இருக்கிறது.

கலைஞர் அவர்கள் சிறைச்சாலையில் இருந்தபோது பயணிகள் பாதுகாப்புக்கு என்று அட்டை வழங்கியிருக்கிறார்கள். யார் வழங்கியது? அவர்சள் வழங்கிய அந்த அட்டைகளை குண்டர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் அப்புடிப் பயன்படுத்த அனுமதித்தது யார் என்று கேட்க விரும்புகிறேன். அதற்கான ஆதாரங்கள் இங்கே இருக்கின்றன.

அதுமட்டுமல்ல, பத்திரிகை நிருபர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரு முக்கியமான கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு பி.டி.சி·யில் மட்டும்தான் பயணம் செய்ய இலவசப் பாஸ் வழங்கப்படுகிறது. ஆனால் எக்ஸ்ப்பிரஸ் பஸ்களில் பயணம் செய்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இன்று பஞ்சாப், கர்நாடகா, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் ஸ்டேட்வைட் இலவசப் பாஸ் பத்திரிகை நிருபர்களுக்கு தரப்படுகிறது. அதேபோல் தமிழ்நாட்டிலும் பத்திரிகை நிருபர்களுக்கு ஸ்டேட் வைட் பாஸ் தரவேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பத்திரிகையாளர்கள் மிக முக்கியமானவர்கள். எல்லோரும் முக்கியமானவர்கள்தான் அவர்கள் கோரிக்கை மிகவும் நியாயமானது என்பதால் அதை இந்த அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்லவன் போக்குவரத்துக் கார்ப்பரேஷனில் வேலை செய்யக்கூடிய ஊழியர்கள் இன்றைய தினம் எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் பயணம் செய்யமுடியாது· அவர்கள் சென்னையிலிருந்து நர்கர்கோவில் போகவேண்டுமென்று சொன்னால் விழுப்புரம் வரைதான் பி.டி.சி. பஸ்ஸில் போகலாம். அதற்குப் பிறகு விழுப்புரத்திலுள்ள அந்தந்த மாவட்ட வண்டிகளில் ஏறித்தான் அவர்கள் ஊர் போய்ச்சேர வேண்டும் என்று சொன்னால் தெனாலிராமன் குதிரையில் புறப்பட்ட கதையாகத்தான் அவர்கள் பயணம் செய்ய முடியும். ஆகவே தொழிலாளர்கள் பிரச்னையில் எவ்வளவோ நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதாகச் சொல்கிற இந்த அரசு எக்ஸ்ப்பிரஸ் பஸ்களில் போக்குவரத்துத் தொழி

லாரிகள் பயணம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற கலக்ஷன் பாட்டா குறைக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கத் துறையாக இருந்து கார்ப்பரேஷன்களாக உருவாக்கப்பட்டபோது கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கிராச்சுவிட்டி, பென்ஷன் இவைகள் எல்லாம் தரப்படவேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டது. டான்சியில் அப்படி ஆக்குகின்றபோது தந்திருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் மீது அக்கறை உள்ளதாகச் சொல்கிற நீங்கள் அதைச் செய்யாமல் இருக்கிறீர்கள். அவர்களுக்கு கிராச்சுவிட்டி மட்டும்தான் தருகிறீர்கள். அது சரியாகயிருக்காது என்று குற்றஞ்சாட்டி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மன்றத்திலே மாண்புமிகு 16 உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இந்தத் துறை முன்னேற வேண்டும் என்ற அடிப்படையிலும், சிறப்பாக நடக்கவேண்டுமென்ற அடிப்படையிலும் சிறப்பான கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். வேகமாகச் சொல்லியவர்கள்கூட அரசாங்கத்தின் மீது அக்கறை கொண்டுதான் சொல்லியிருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கறது. நான் முழுமையாக என் கருத்துக்களைச் சொல்லிய பிறகு அவர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களானால் அவர்களுக்கு முக்கியமான விளக்கங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

போக்குவரத்து வசதி பொறுத்து, கிராமங்களையும் நகரங்களையும் இணைப்பதில் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தான் ஒரு மகத்தான வெற்றியைக் கண்டுள்ளது என்பதை நிச்சயமாக யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு ஏறத்தாழ 6,000 புதியபேருந்துகளைத் தமிழகத்தில் துவக்கியிருக்கிறார்கள். அதன் மூலமாகத் 1,410 கிராமங்களுக்கு முதன் முறையாக போக்குவரத்து வசதி செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதன் மூலமாக ஏறத்தாழ 80 இலட்சம் கிராம மக்கள் அந்தப் பேருந்துகளை இன்றையதினம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக இந்த அரசை அவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

பேருந்து வசதி இன்று எப்படி இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டுமென்றால் சென்னை நகரில் நீங்கள் எங்கே போனாலும் புதுப் புதுப் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருப்பதைப் பார்ப்பீர்கள். அதே போல் மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் பழனியிலிருந்து திண்டுக்கல் அல்லது திண்டுக்கல்லிருந்து பழனிக்கு ஒட்டன்சத்திரம் வழி போகக் கூடிய பேருந்துகளைக் கணக்குப் போட்டுப்பார்த்தால் ஒரு நாளைக்கு ஏறத்தாழ 171 முறைகள் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.



ஏறத்தாழ 5 நிமிடங்களுக்கு ஒரு பேருந்து செல்லுகின்றது என்ற அளவுக்கு புறநகர் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதுபோக, பழனி டு திண்டுக்கல், இடையில் ஒட்டன்சத்திரம் இந்த இரண்டு இடங்களுக்கும் நகரப் பேருந்துகள் தனித்தனியாக இயங்குவதைப் பார்க்கிறபோது, எவ்வளவு வசதிகளை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்பதை நிச்சயமாகப் புரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன். 76 சதவீதம் மக்கள் கிராமங்களிலே வசிக்கிறார்கள் என்பதை உணர்ந்து பார்த்து, சாலைப் போக்குவரத்தின் மூலமாக வீடு வீடாக வசதிகளை ஏற்படுத்தித் தர முடியும் என்ற நம்பிக்கையிலே இந்த அரசாங்கம் மிகத் தீவிரமாக சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைச் சொல்லித் தான் ஆகவேண்டும்.

ஏறத்தாழ 12,871 பேருந்துகள் இன்றையதினம் தமிழகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதிலே, 7,803 பேருந்துகள் அரசுக்குச் சொந்தம், அதாவது 61 சதவீதம். இங்கே பேசுகின்ற போது, சிலர் உங்களுடைய கொள்கை என்ன? நேஷனலைஸ் செய்யப் போகிறீர்களா இல்லையா? என்றெல்லாம் கேட்டார்கள். இந்த அரசு 61 சதவீதம் ஆக இதை உயர்த்தியிருக்கிறது. அது மட்டுமல்லாமல்; இந்தப் பேருந்துகள் அனைத்தும் ஏறத்தாழ ஒரு நாளைக்கு 23 லட்சம் கிலோமீட்டர் தூரம் இயக்கப்படுகிறது. அதன் மூலம் 66 இலட்சம் மக்கள் இவைகளிலே தினம் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

கிராமச் சாலைகளின் அவசியத்தைப் புரிந்து, தமிழகத்திலே இன்றையதினம் புரட்சித் தலைவர், அதற்குத் தனிப் பெரும் திட்டமாக தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பாதைகள் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி பாதைகள் வசதியைச் செய்து பேருந்து வசதிகளை, போக்குவரத்து வசதிகளைச் செய்து கொண்டிருப்பதை நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். அதே போன்று, காய்கறிகள், பால் போன்ற விவசாயப் பொருள்களை ஏற்றிக்கொண்டு செல்வதால், விவசாயிகள் பயனடைய வேண்டுமென்ற வகையில் இன்றைய தினம் நாங்கள் அங்காடிப் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். ஊட்டிக்கு வந்திருந்த பல்வேறு மாநிலத்தைச் சார்ந்த போக்குவரத்துத் துறையிலே பணியாற்றும் அதிகாரிகளும், பிரதிநிதிகளும் இதைப் பார்த்துவிட்டு, இது மிக அருமையான திட்டம், இதை மற்ற மாநிலங்களிலே கொண்டு வரவேண்டும் என்ற கருத்தை அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இன்றையதினம் அந்த அங்காடிப் பேருந்துகள் மக்களுடைய சிறப்பான செல்வாக்கைப் பெற்றிருக்கிறது. குறுகிய பாதையாக இருக்கிறது, எனவே, பேருந்து விட முடியாது என்று சொல்லப்பட்டால், அந்தக் குறுகிய பாதைக்கு ஏற்ப நாங்கள்

பேருந்து தயாரித்து, இன்றைய தினம் மினி பஸ் என்று சொல்லக்
கூடிய அத்தகைய பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம்.
அதன் காரணமாக, தமிழக மக்களுக்கு புரட்சித் தலைவரிடம்
நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. மக்கள் சொன்னால், அதைப்
புரட்சித் தலைவர் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை
இன்றையதினம் அவர்களிடையே வளர்ந்து கொண்டு வருகிறது.

அதே போன்று, 25 கிலோ மீட்டர் வரை நகரப் பேருந்துகள்
செல்லும் திட்டத்தை, 30 கிலோ மீட்டர் என்று உயர்த்தி
இருப்பதன் காரணமாக, கிராமப் பகுதிகளிலே உள்ள மக்கள்,
நகரப் பகுதியிலே எளிதாக வந்து செல்வதற்கும், அதனால்
பொருளாதார வளர்ச்சி ஏற்படச் செய்யவேண்டும். அதற்கான
வசதியாக இவைகள் இருக்கும் என்ற அடிப்படையில்தான்
இன்றைய தினம் புரட்சித் தலைவர் அவர்கள் அந்த அடிப்படை
யிலேதான் இதைச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே
எடுத்துச் சொல்லவேண்டும்.

மாவட்டந்தோறும் போக்குவரத்துக் கழகம் என்ற கருத்தை
இந்த அரசு ஆணித்தரமாக அமுல்படுத்திக்கொண்டிருக்கிறது.
நான் கடந்த கூட்டத் தொடரில் சொல்லியதுபோல், பெரிய
நான்கு போக்குவரத்துக் கழகங்களை இன்றையதினம் பிரித்து,
அவைகளைத் துவக்க நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம்.
அதைக்கூட அண்டை மாநிலங்களிலே இருக்கின்ற சட்டமன்ற
உறுப்பினர்களும், பத்திரிகைகளும் சொல்லுகிறபோது, தமிழ
கத்திலே மிகச் சிறிய சிறிய பேருந்துக் கழகங்கள் இருப்பதன்
காரணமாகத்தான், அது மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்
டிருக்கின்றது என்று எடுத்துக் காட்டப்படுகிறது. எனவேதான்
இங்கே அதைப் பிரித்து, சிறிய சிறிய போக்குவரத்துக் கழகங்
களாக அமைக்கின்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதைப்
பரிசீலிக்க வேண்டுமென்ற கருத்தை அங்கே சொன்னார்கள்.
இன்னும்கூட ஆந்திராவிலே சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தில்
இயங்கக் கூடிய பேருந்துகளாக இருந்தாலும் போக்குவரத்தாக இருந்
தாலும், மக்களுளிடத்திலே மட்டும் நல்ல பெயர் எடுக்கவில்லை.
உலக வங்கியிடமும் நல்ல பெயர் எடுத்திருக்கிறது என்று இன்
றைய தினம் சிறப்பாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த
அரசும் அதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று அங்கே
இருக்கிற மாநில அரசுக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஆந்திரா
விலே இப்படி இந்த அரசாங்கம் எடுத்திருக்கிற பல நடவடிக்கை
களையும், அவர்களின் சிறப்பான கருத்துக்களாகத் தெரிவித்துக்
கொண்டிருக்கிறார்கள்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப்பற்றிச் சொல்
கிறபோது அந்தப் போக்குவரத்துக் கழகம் மிகச் சிறப்பாகச்
செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. இது ஒரு முன்மாதிரியாக
மற்ற மாநிலங்களுக்கு இருக்கவேண்டும். அவர்கள் சொல்லிக்
கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற



வர்கள் பாராட்டுவதற்குக் கொஞ்சம் தயக்கம் காட்டினாலும்
மற்ற மாநிலங்களிலே இருக்கின்றவர்கள் எல்லாம் பாராட்டு
கிறார்கள் என்றால் ஆங்காங்கே உள்ள சங்கடங்களை அவர்கள்
அனுபவிக்கின்ற காரணத்தினால் அவர்கள் இங்கே உள்ள
நிலையை மனம் திறந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்,
எல்லாக் கட்சிகளை சேர்ந்தவர்களும்.

தமிழகத்திலே போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகம் ஆரம்
பித்து இருக்கிறோம். அதையும் மற்ற மாநிலத்திலே உள்ளவர்
கள் நல்ல முறையிலே பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.
பேருந்துகள் வாங்குவதற்குக் கடன் கொடுப்பதற்காக அந்த
நிறுவனம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதைப் போன்றே
பொருள் போக்குவரத்துக் கழகம் என்றும், மோட்டார் வாகன
பராமரிப்பு நிறுவனம் என்றும் தொடங்கி அவைகளின் மூலமாக
பல புதிய முறைகளைக் கொண்டுவந்து நல்ல முறையிலே செயல்
படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு செயல்பட்டுக்
கொண்டிருக்கிறது என்பதை, இன்னும் சிறப்பாகச் செயல்படும்
என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பல்வேறு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக்
கொடுத்திருக்கிறார்கள். அவைகளிலே 16 உறுப்பினர்கள்
கொள்கை சம்பந்தமாக விவாதிக்க வேண்டுமென்று வெட்டுத்
தீர்மானங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். இங்கே வைக்கப்
பட்டிருக்கின்ற துறையின் விளக்கக் குறிப்புகளிலிருந்தும், நான்
பதில் சொல்லப்போகிறவைகளிலிருந்தும் அதற்கான விளக்கங்
கள் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். அதைப் போலவே
29 மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேருந்துகள் விட
வேண்டுமென்று வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்
கிறார்கள். பேருந்துகள் என்ன என்ன சட்டத்திற்குட்பட்டு
விடப்பட வேண்டுமோ அந்தச் சட்டத்திற்குட்பட்டு விடுவதற்கு
அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கி
றேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு இராசாராமன் அவர்கள்
கப்பல் போக்குவரத்துக் கழகத்தை எடுத்துவிட வேண்டு
மென்று கேட்டு ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்திருக்
கிறார்கள். அதைப்பற்றி இங்கே பல பேர்கள் குற்றச்சாட்டுக்
களைச் சொன்னாலும் கூட அவர்கள் அந்தக் கருத்தைச் சொல்ல
வில்லை.

இவர்தான் அந்தவிதமான கருத்தைச் சொல்லியிருக்கிறார்.
மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியைக்
கொண்டு வருவதற்கான சூழ்நிலைக்கு நாம் ஆளாக்கப்பட்
டிருக்கிறோம். அந்த வகையிலே கப்பல் போக்குவரத்துக்கழகம்
தேவையாக இருக்கிறது. அப்படி நாம் கப்பலை வாங்கி
இயக்குகிறபோது லாபகரமாக இயங்கும் என்ற நம்பிக்கையை
நமக்கு சொல்லிவருகிறார்கள்.

[திரு. சு. முத்துசாமி] [1982 மார்ச்

பஸ் தேசியமயமாக்கப்படவேண்டுமென்பது பற்றி வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதை மிக கவன மாக அரசு பரிசீலிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்த வரையில் சிலவற்றிற்கு நான் பதில் சொல்லி இருந்தாலும் சில வற்றிற்கு நான் பதில் சொல்லாவிட்டாலும் அவை குறிப்பிலே இருக்கின்றன, அதையெல்லாம் அரசு கவனமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளுக்கு எல்லாம் நான் காலத்தைக் கருதி முழுமையாகப் பதில் சொல்லவில்லை யென்றாலும் மேலோட்டமாக பதில் சொல்லக் கடமைப்பட் டிருக்கிறேன். திரு சுந்தரம் அவர்கள் பெரியார் போக்குவரத்து கழக பேருந்துகள் ரோட்டிலே நிற்கின்றன. பெரியாரை ரோட் டிலே நிறுத்திவிட்டீர்களே என்று கேட்டார்கள். பேருந்துகள் இல்லாத காலத்திலே ரோட்டிலே நிற்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. ஆகவே பேருந்துகள் விடப்படுகின்ற நேரத்திலே எங்காவது நிறுத்தித்தான் ஆகவேண்டும். அவசரம் என்ற காரணத்தால் பேருந்து எப்படியாவது வேண்டுமென்ற காரணத்தினால் பேருந்து நிறுத்துவதற்கு இடம் இருக்கிறதா இல்லையா என்று கவனிக்கா மல்கூட இந்த அரசாங்கம் எந்த உடனே பேருந்துகளைக் கொடுத்திருக்கிறது. அதன் காரணமாக நிறுத்துவதற்கான இடம் இல்லாமல் போயிருக்கலாம் என்பதை உறுப்பினர்கள் உணர்வார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்ட இந்த 4 ஆண்டுக்காலத்திலே எவ்வளவு காரியங்களைச் செய்து இருக்கிறோம் என்பதை எண் ணிப் பார்க்கவேண்டும். இதற்கு முன்னாலே கேள்வியைக் கேட்கிறவர்கள் செய்திருப்பார்களேயானால் எங்களிடத்திலே அவர்கள் கேள்வி கேட்கவேண்டிய சூழ்நிலை வந்திருக்காது. நான் அதற்கு ஒரு பதிலைச் சொல்கிறேன். ஏறத்தாழ 2— ஏக்கர் நிலம் அதற்காக கையகப்படுத்தப்பட்டு பேருந்து பரா மரிக்கப்படுவதற்கான எற்பாடுகளைச் செய்துவருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேருந்துகள் லாபகரமாக இயக்கப்படவில்லை என்றும் போக்குவரத்துக் கழகங்கள் நட்டத்தில் இயங்குகின்றன என்றும் சொன்னார்கள். ஏதோ இதற்கு முன்னாலே ரொம்ப லாபத் திலே ஓடிக்கொண்டிருந்ததைப் போலவும் இந்த அரசாங்கம் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகுதான் அந்த லாபம் போய்விட்டதைப் போலவும் அந்த தொனியிலே கருத்தைச் சொல்லி விட்டார்கள் என்பது எனக்கு வருத்தமாக இருக்கிறது. இப்போது போக்குவரத்துக் கழகத்திலே திறமை வளர்ந்திருக் கிறது என்பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்வீர்கள் என்று



1982 மார்ச் 24] [திரு. சு. முத்துசாமி]

நம்புகிறேன். நட்டம் ஏற்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்ள எந்த வகையிலும் நாங்கள் தயக்கம் காட்டவில்லை. அதற்கு என்ன என்ன காரணங்கள் என்பதை நான் முழுமையாக விளக்க தொடர்ந்து பின்னாலே விளக்கம் அளிக்க இருக்கிறேன் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு பழனிமுத்து அவர்கள் பேசுகின்றபோது ஆக்கப்பூர்வமாக சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். 2 பேருந்துகளிலே கூரையில் குறை இருக்கின்றன என்று சொன்னார்கள். இரண் டொரு பேருந்துகளிலே அந்த நிலைமை இருக்கும் வாய்ப்பு இல்லாமல் இருக்கும் என்று நம்பிவிடுவதற்கு நாங்கள் தயாராக இல்லை. அரசாங்கம் அந்த நிலைமையை மாற்றுவதற்கு வேக மாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

அவருக்குச் சாதகமான ஒரு கருத்தை அவர் சொல்லி இருக் கிறார். ஏதோ மத்திய அரசாங்கம் விலை உயர்த்திய கார ணத்தினால் போக்குவரத்துக் கழகங்களுக்கு நட்டம் வருகிறது என்று சொல்வது சரியா ? தனியார்களுக்கு எப்படி லாபம் வரு கிறது, அதையெல்லாம் பார்த்துத்தான் மத்திய அரசாங்கம் விலையை உயர்த்தியிருக்கிறது. உங்களுக்கு மட்டும் எப்படி லாபம் வரவில்லை என்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பொதுக் கேள்வியிலே நியாயம் இருக்கிறது. இப்போது சிந்தித்துப் பார்க்க வேண்டும். போக்குவரத்துத் துறையிலே எவ்வளவு சம்பளம் கொடுக்கிறோம். எவ்வளவு வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம் அந்தப் பேருந்துகள் எவ்வளவு வசதி யோடு இருக்கின்றன. என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதை பராமரிப்பதற்கு எவ்வளவு ஆட்கள் வேண்டுமென்றால் 7— நபர்கள் சட்டப்படி வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் திரு ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது அது போதாது, உயர்த்துங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், தனியார் துறையிலே ஒரு பேருந்திற்கு மூன்று பேர், நான்கு பேர், என்று வைத்து இயக்குகிறார்கள். அவர்களால் செய்ய முடிகிறது. நாம் செய்ய முடியாது, இதற்காக சட்டங் கள் இருக்கின்றன. அதற்கேற்ப சம்பளத்தைக் கொடுக்க வேண் டும். எனவே, நஷ்டம் ஏற்படுகிறது என்ற காரணத்தினால் யாரும் இலாபம் இல்லையென்று கருதிவிடக் கூடாது. 62 ஆயி ரம் தொழிலாளர்கள் இதிலே பணிபுரிகிறார்கள். நல்ல சம் பளத்தை வாங்கிக்கொண்டு நிம்மதியாக இருக்கிறார்கள். நம் முடைய ஏ. சி. சண்முகம் அவர்கள் கூட சொன்னார்கள், போக்குவரத்து கழகத்திலே வேலை நிறுத்தமே இல்லையென்று சொன்னார்கள். அதற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள், அதையும் பின்னாலே சொல்ல இருக் கிறேன்

[திரு. சு. முத்துசாமி] [1982 மார்ச் 24

[பிற்பகல் 1—10]

இன்னொன்று பெயர் விவகாரத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறபோது நான் சிந்தித்துப் பார்த்தேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மீது எங்களுக்கு அக்கறை இல்லாமல் இல்லை. ஒரு உறுப்பினர் பேசுகிறபோது, அவர்களுடைய கொள்கையை நிறைவேற்றுவதற்காக இந்த அரசு பாடுபடுகிறது என்று சொல்லுகிறபோது, இங்கே வேடிக்கையாகக்கூட சொன்னார்கள். தயவுசெய்து சிந்தித்து பார்க்க வேண்டும். எந்தத் தலைவராக இருந்தாலும், எந்தக் கட்சியிலே இருப்பவர்களாக இருந்தாலும் சரி, நல்ல கருத்துக்களைச் சொல்லியிருந்தால் அதை அமல்படுத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை. அதிலே, எந்த மாறுபாடும் யாருக்கும் இருக்காது என்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலே பெருந்தலைவர் அவர்களுடைய சேவையைக் கருதி நாங்கள் பல்வேறு இடங்களிலே அவர்களுடைய பெயரை வைத்திருக்கிறோம். ஒரு வேளை இன்றையதினம் காங்கிரஸ் ஆட்சி இருந்திருந்தால் கூட இந்த அளவிற்கு மரியாதை கிடைத்திருக்குமா என்று நினைக்கக்கூடிய அளவிற்கு நாங்கள் செய்திருக்கிறோம் என்று சொன்னால் நீங்கள் பாராட்டுவீர்கள் என்று கருதுகிறேன்.

(குறுக்கீடுகள்)

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சி இருந்திருந்தால் இந்த அளவிற்கு மரியாதை கிடைக்குமா என்று சொல்கிறார்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கடைசியில் கேளுங்கள். இடையிலே எந்தச் சந்தேகத்தையும் கேட்பதற்கு அனுமதிப்பதற்கில்லை. இதுதான் பின்பற்றி வருகிற முறை. தயவு செய்து ஒத்துழைப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உள்ளத்தை புண்படுத்த வேண்டுமென்பதற்காக நான் சொல்லவில்லை. காமராஜர் அவர்கள் பெயரை சொல்வதில் நம் இரண்டு பேருக்கும் போட்டி இருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறேன். மரியாதை குறைவாக எதையும் சொல்லவில்லை, நீங்கள் சொல்வதை விட நாங்கள் அதிகமாக செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் சுட்டிக்காட்டினேன். நாங்கள் செய்கிறோம், நீங்கள் செய்யவில்லை என்பதாகக் குறிப்பிடவில்லை. நாங்கள் செய்கிறோம், அதை சொல்லக்கூடாதா? (கூச்சல், குழப்பம்) உங்களுக்கு கோபம் வரக்கூடாது, ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒவ்வொன்றை ஒப்பிட்டுத்தான் இன்றைய தினம் காரியங்களை சொல்லிக்கொண்டிருக்கிறது. அதிலே, என்ன தவறு, உங்களை குறை கூறவில்லை, உங்களைவிட அதிகம் நாங்கள் செய்கிறோம்



1982 மார்ச் 24] [திரு. சு. முத்துசாமி]

என்று சொல்வதிலே என்ன தவறு? அதற்காக இவ்வளவு கோபப்படுவது சரியாக இருக்காது. அதனால், எதையும் விட்டு விடப்போவதில்லை, ஒழுங்காகச் செய்யத்தான் போகிறோம் என்று சொல்லிக்கொள்கிறேன். அடுத்து மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் ஒரு கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள். பாராட்டுதல்களையும் சொல்லியிருக்கிறார்கள்; அவர்கள் சொல்கிறார்கள், கட்டணத்தை உயர்த்தக் கூடாது. அதைச் சொல்லிவிட்டு தொடர்ந்து சொல்கிறார்கள், இரவு பேருந்துகள் இயக்க வேண்டும், பணிமாற்றங்கள் செய்யக்கூடாது, நார்ம்ஸ் உயர்த்த வேண்டும், நல்ல பேருந்துகளை கொடுக்க வேண்டும், பல பகுதிகளிலே பேருந்துகளை விடவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்படி பல்வேறு காரியங்களை சொல்லிவிட்டு கடைசியாக சொல்கிறார்கள் நஷ்டமும் ஏற்படக்கூடாது என்று. எனவே, பேருந்து விட வேண்டும், வசதியாக இருக்க வேண்டும், சம்பளமும் உயர வேண்டும், அங்கே இருக்கிற நார்ம்ஸ் குறையக் கூடாது, கட்டணமும் உயர்த்தக் கூடாது, இலாபமும் வரவேண்டுமென்று சொன்னால் மந்திரம் தெரிந்திருந்தாலும்கூட கொஞ்சம் கஷ்டமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். இன்னொன்றையும் சேர்த்து சொல்லியிருக்கிறார்கள், மாணவர்களுக்கு சலுகை நீட்டி கொடுக்க வேண்டும். இப்போது சென்னையிலே 4 கோடிக்கு கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். நீட்டிக் கொடுக்க வேண்டும், நஷ்டமும் வரக்கூடாது. நல்ல கட்டுப்பாடு, இருந்தாலும் கூட அதையும் அரசாங்கம் மிக அக்கறையோடு கவனிக்கத் தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கேசவ ஆதித்தன் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பொறுத்தவரையில் எனக்குக் கொடுக்கப்பட்ட தகவல் அப்படியில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற காரணத்தால் மிக்க கண்காணிப்பாக அது விசாரிக்கப்படும் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. ஜி.கே.எஸ். அவர்கள் புதுவிதமாக கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்கள் கூட உத்தரவை போட்டு, நான்பேசுகிறபோது பாடிதான் பேசவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். முடியாது, இருந்தாலும் பாடி சொல்ல வேண்டும், எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று ஆசை இருக்கிறது. ஆனால், நான் பாடுவதைக் கடைசியாகப் பாடினால்கூடப் பரவாயில்லை. அதற்கு முன்னாலே, பாடினால் எல்லோரும் போய்விடுவார்கள் என்ற அந்தக் காரணத்தாலே நான் இப்பொழுது பாடத் தயாராக இல்லை.

ஆனால், அவர்கள் ஒரு கருத்தைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். டாக்சியைப் பொறுத்தவரை, கட்டணங்கள் மிக அதிகமாகக் கேட்கிறார்கள். கூப்பிட்ட இடத்திற்கு வருவதில்லையென்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள், அதைப் பற்றி அரசாங்கம்

ஒரு புதுவிதமான முறையை அணுகிக் கொண்டு இருக்கிறது.
அதிலே வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்து
கொண்டிருக்கிறது. அந்த வகையிலே, ஜி.கே.எஸ்.ஸும் மற்ற
உறுப்பினர்களும் நிச்சயமாக மகிழ்ச்சி அடைவார்கள் என்று
நான் நம்புகிறேன்.

ஓட்டுநர்களோ, நடத்துநர்களோ தவறு செய்துவிட்டால், ஒரு
குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் பணியில் அமர்த்தப்பட
வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இப்
பொழுது, ஏதாவது ஒரு தவறு செய்தால் அவர்கள் தற்காலிக
வேலை நீக்கம் செய்யப்பட்டு, 1 மாத காலத்திற்குள்ளேயே
மீண்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். அதற்குப் பின்னாலே
அவர்கள் பணிசெய்து கொண்டிருக்கும்போதே விசாரணை
தொடர்ந்து நடக்கும். விசாரணை தொடர்ந்து நடந்த பின்பு
குற்றவாளி என்று நிரூபிக்கப்படுமேயானால், அவர் வேலை நீக்கம்
செய்யப்படுகிறார். அதற்குப் பின்னாலே எடுத்துக்கொள்ளக்
கூடியச் சட்டத்தை நாம் கொண்டு வர முடியாது. அப்படி
கொண்டு வருவோமேயானால், அதிலே தவறுகள் ஏற்பட வாய்ப்
பிருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன்.

அதே போன்று, மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள்
பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.
அவர்கள் சொல்லும்போதுகூட, அமைச்சர் ஒரு சலுகைகூட
அறிவிக்க மாட்டார், எனக்குத் தெரியும் என்ற ஒரு கருத்தைச்
சொல்லிவிட்டு, எந்தச் சலுகையாவது அறிவிப்பாரா என்று கேட்
டிருக்கிறார்கள். அவர் இருப்பது எந்தக் கட்சி என்பது அவை
யினருக்குத் தெரியும். தொழிற்சங்கத்தை நடத்துவதிலே மிகத்
திறமை வாய்ந்தவர்கள். அவர்கள் கூட ஒரு கோரிக்கை கூட
இங்கே வைக்காமல், அமைச்சர் எதை அறிவிப்பார் என்று தெரி
யாமல் திண்டாடிவிட்டு, இதையாவது அறிவிப்பாரா என்று ஒரே
ஒருகோரிக்கையைத்தான் வைக்கிற அளவுக்கு, இன்றைய தினம்,
புரட்சித் தலைவர் அரசு தொழிலாளர்களுக்குச் செய்திருக்கிறது
(மேசையைத் தட்டும் ஒலி) என்பதைக் கேட்கிற பொழுது, நிச்
சயமாக இந்த அரசைப் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.
அந்த வகையில் அவர் உண்மையை ஒப்புக் கொண்டதற்காக நான்
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழிப்பிட வசதியை செய்து கொடுத்திருக்கிறோம். அதற்குக்
கட்டணம் வசூலிக்கலாமா என்று இந்த ஒரே ஒரு கோரிக்கையைத்
தான் அவர் வைத்திருக்கிறார். அதைப் பற்றி நான் சொல்கிற
பொழுது அவர்கள் நிச்சயம் பரிசீலிப்பார்கள் என்று கருதுகிறேன்.
பயணம் செய்பவர்களுக்காக அந்தக் கழிப்பறையை நாம் கட்டி
வைத்திருக்கிறோம். ஆனால், அங்கு என்ன நிலைமை என்று
சொன்னால், அது மிகச் சிறப்பாக, சுத்தம் செய்யப்பட்டு, நல்ல
முறையிலே வைக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அந்த ஊரிலே



யிருக்கிற அத்தனை பேருக்கும் அங்கே வந்து அதைப் பயன்படுத்த
வேண்டுமென்ற உணர்வு இருக்கிறது. அதைத் தடுக்கக்கூடிய
வாய்ப்பில்லை. வருகின்றவர்கள் டிக்கெட் வைத்திருந்தால் அனு
மதிக்கலாம் என்ற எண்ணத்தைக் கூட முதலிலே சொன்னார்கள்.
ஆனால், பேருந்திலே ஏறுகின்றவர்களிடத்திலே முதலிலே டிக்
கட் இருக்காது. எனவே, அவர்கள் போக வேண்டுமென்றால்
அந்த வாய்ப்பு இருக்காது. எனவே, அதை மாற்றுவதிலே
கொஞ்சம் சங்கடம் இருக்கிறது என்ற காரணத்தால்தான் உடனடி
யாக அதை அமுலாக்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை
நான் இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்
டிருக்கிறேன்.

அதே போன்று, இங்கே, டையர் தயாரிப்பதற்கு நீங்கள் தயவு
செய்து ஒரு தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று சொன்னார்கள். முதலிலே மத்திய அரசாங்கத்திலே
அனுமதி வாங்க வேண்டும். அதற்குப் பின்புதான் நாம் அதுபற்றி
முடிவு எடுக்க வேண்டுமென்று சொல்வதை அவர்கள் ஏற்றுக்
கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. முசிறி இராசமாணிக்கம் அவர்கள் இங்கே அவருடைய
தொகுதியிலே இருக்கிற அத்தனை ஊர்களின் பெயர்களையும்
குறிப்பிட்டு—தொகுதியிலே இருக்கிற என்று கூடச் சொல்ல முடி
யாது; திருச்சி மாவட்டத்திலே இருக்கிற அத்தனை ஊர்களின்
பெயர்களையெல்லாம் சொல்லி—அந்த ஊர்களுக்கெல்லாம்
பேருந்துகள் வேண்டுமென்று கேட்டார்கள். எனக்கு ஏற்பட்
டிருக்கிற பயமே, அவர்களுக்காக ஒரு போக்குவரத்துக் கழகம்
துவங்க வேண்டி வருமோ என்ற அச்சம்தான் வருகிறது. இருந்
தாலும், அது பரிசீலிக்கப்படும், முறையாக அதற்கான நடவடிக்கை
எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். நான் கடிதம்
எழுதினால், எனக்குத் திரும்ப அவர்கள் பதில் எழுதுவதில்லை
யென்று. ஏன் என்று ஆராய்ச்சி செய்த பொழுது, எனக்கு இப்
பொழுதுதான் புரிந்தது. இத்தனைப் பிரச்சனைகளைப் பற்றி
யும் எழுதினால், ஒவ்வொன்றிற்கும் பதில் கடிதம் எழுதினால்,
அதிகச் செலவாகும் என்ற காரணத்தால், அவர்கள் விட்டுவிட்
டார்களோ என்ற அச்சம்தான் எனக்கு இருக்கிறது. எனவே,
பொறுக்கி எடுத்து, முக்கியமானவைகளை, நீங்கள் எழுதுவீர்களா
னால், அதற்குத் திரும்ப பதிலை கொடுக்க வேண்டுமென்று
உத்தரவு இருக்கிறது. அதை மீண்டும் வலியுறுத்துவோம் என்
பதை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. முத்துராமலிங்கம் அவர்கள் சில கருத்துக்களை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். பரிவோடு அவை கவனிக்கப்படும்.

திரு. சண்முகம் அவர்கள் இரண்டு போக்குவரத்துக் கழகங்களை மாற்றி அமைப்பதிலே ஒரு குறைபாடு இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே அந்த முடிவு எடுக்கப்பட்டாகிவிட்டது. இருந்தாலும்கூட, அதை மீண்டும் ஆராய்ச்சி செய்து, உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சி அடைகிற அளவுக்கு ஏதாவது செய்ய முடியுமா, முயற்சி எடுக்க முடியுமா என்று பார்க்கலாம். அதிலே, முழுமையான மாற்றம் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

அதே போன்று, பாரமலை அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். பயணிகளைப் பரிசோதிப்பதற்காக நீங்கள் நேரிடையாக ஆட்களை எடுக்கிறீர்கள், அது தவறு என்று சொன்னார்கள். நேரிடையாக எடுப்பதற்குக் காரணம், மாறுபட்டவர்கள் வரும் போது கொஞ்சம் வேறு விதமான முறையிலே நாம் அதை அமுலாக்க முடியும் என்ற நம்பிக்கையிலேதான் அது போன்று நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

ஆர்மோனியத்தைக் கொண்டுபோவதற்காக அவர்கள் ஒரு வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். அதை நான் பரிசீலனை செய்துதான் சொல்ல வேண்டும். எந்த, எந்தப் பொருட்களை, இலவசமாகக் கொண்டுபோகலாம் என்ற பட்டியல் தற்போது என்னிடத்திலே இல்லை. அதைப் பார்வையிட்டு, அதிலே அக்கறையோடு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–20)

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் என்னுடைய தொகுதிக்காகப் பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி சொல்லவில்லை என்றால் நான் தவறு செய்தவன் ஆவேன். அவருக்கு என்னுடைய நன்றியை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. தனுக்கோடித் தேவர் அவர்கள், தனியார் துறை பேருந்துகளைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதன் மீதும் அரசு அக்கறை காட்டும் என்பதை இங்கே எடுத்துச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. விஸ்வநாதன் அவர்கள் வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைப் பொருத்தக் கூடாது என்ற ஒருகருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நமக்கு இன்றைய தினம் இருக்கின்ற சூழ்நிலையே, இங்கே சட்டமன்ற உறுபினர்கள் கூடப்பலபேர் சொல்லியிருக்கிறார்கள். அதிகம் வேகப்மாகப்



போகின்ற காரணத்தால் பெரும்பாலான ஆக்சிடெண்டுகள் ஆகின்றன என்று இங்கே கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன அந்தக் கருத்து மட்டுமல்ல, நம்முடைய அனுபவமும் கூட் அப்படித்தான் இருக்கிறது. அதிலே ஒரு கட்டுப்பாடு வர வேண்டுமென்பதற்காகத் தான் இதைச் செய்கிறோமே ஒழிய அதிலே ஏதோ நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொல்வதைப் போல தவறு செய்வதற்காகவோ அல்லது அங்கேயிருக்கின்ற தனியார் உரிமையாளர்களையோ அல்லது அரசாங்கப் பேருந்துகளையோ தொந்திரவு செய்ய வேண்டுமென்பதற்காகவோ நாம் செய்யவில்லை; மக்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்பதற்காக அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது.

இன்னொரு கருத்தைக் கூடச் சொன்னார்கள். எந்த பர்மிஷனும் இல்லாமல், அவர்கள் டைமிங் வைத்து நடத்தாமலே பேருந்துகளை விடுகிறார்கள்; ஆர்.டி.ஓ.வைக் கேட்காமல் பேருந்துகளை விடுகிறார்கள் என்ற கருத்தை யெல்லாம் சொன்னார்கள். சில நேரங்களிலே அவசரத்தைக் கருதி—நாம் பேருந்துகளை விட்டு விடுவதில்லை. ஆர்.டி.ஓ. விடத்திலே நாம் சொல்லி அவசரமாக ஒரு இடத்திலே அனுமதி வாங்கி, விடுகிறோம். அனுமதியில்லாமல் விடுவதில்லை. காலதாமதம் இல்லாமல் உடனடியாகச் செய்து கொண்டிருக்கிறோம். எனவே, அந்த வகையிலே ஏதாவது குறைகள் இருப்பதாக அவர்களுக்குத் தோன்றியிருக்கலாமே தவிர, நிச்சயமாகக் குறை இருக்காது, என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அடுத்து மிக முக்கியமான பிரச்சினை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பல குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் பல யோசனைகளைச் சொல்லியிருந்த பொழுதும் அவர் சில யோசனைகளோடு சிறிது குற்றச்சாட்டுக்களையும் சொன்னால் தான் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பிருக்கும் என்ற காரணத்தாலோ அல்லது இந்த அரசாங்கத்தினுடைய நிலைமையைத் தெளிவாக்குவதற்காக ஒரு வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தினாலோ அல்லது நடந்து கொண்டிருக்கிற பிரச்சினையைத் தெளிவாக்கி இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்ற காரணத்தாலோ அந்தக் கருத்தை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதிலே முதல் சிலவற்றிற்கு நான் பதிலைச் சொல்கிறேன். கப்பலைப் பொறுத்தவரையில் நான் கடைசியாகப் பதிலைச் சொல்ல இருக்கிறேன். கொஞ்சம் விளக்கமாகச் சொல்லியாக வேண்டும். ஏற்கெனவே ஒரு முறை சொல்லியிருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் மீண்டும் அதைச் சொல்வதற்காகப் பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். தேசிய மயக் கொள்கையில் உங்கள் நிலை என்ன? ஏதோ இப்படிச் சொல்லியிருக்கிறீர்கள்; மீண்டும் மாறி வருகிறதே என்றெல்லாம் அவர்கள் இங்கே கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இந்த அரசாங்கம் பொறுப்பையேற்ற பின்பு 61 சதவீதமாக இன்றையதினம் தேசிய மயமாக்கப்படக்கூடிய அந்த எண்ணிக்கை, அந்த சதவீதம் உயர்ந்திருக்கிறது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. எங்களுக்கு இருக்கின்ற எண்ணம், ஏதோ இருக்கின்ற இந்த பன்னிரண்டாயிரத்து எண்ணூற்றுச் சில்லரைப் பேருந்துகளை மட்டும் வைத்துக் கொண்டு, அதையும் தேசிய மயமாக்கிக் கையிலே வைத்துக் கொண்டு பேசாமல் இருக்க வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. எங்களுக்கு இருக்கின்ற அடிப்படை நோக்கம், தேசிய மயம் ஆக்கப்படக் கூடிய கொள்கையிலே நாங்கள் மிக ஆணித்தரமாக இருந்தாலும் கூட அதைவிட அடிப்படை நோக்கம், அதைவிட அடிப்படையான பிரச்சினைகள், இன்றைய தினம் நாட்டிலே இருக்கின்ற பிரச்சினை, எங்கே போனாலும் பேருந்து வேண்டுமென்று சொல்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்கள் பேசும்பொழுது நூற்றுக் கணக்கான வழித் தடங்களைச் சொல்லிக் கேட்டார்கள். வெட்டுத் தீர்மானங்களும் நூற்றுக் கணக்கான பேருந்துகளைக் கொடுக்க வேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள். எனவே, எங்களுக்கிருக்கின்ற எண்ணம், அரசுக்கு இருக்கின்ற நிதி ஆதாரத்தை வைத்துக் கொண்டு, நாம் புதிய பேருந்துகளைப் புதிய இடங்களுக்குக் கொடுத்து முடித்த பின்பு, அதற்குப் பின்னாலே அந்தப் பேருந்துகள் தேசிய மயமாக்கப்படக் கூடிய சூழ்நிலையை உருவாக்கியாக வேண்டும். இன்றைய தினம், இருக்கின்ற பணத்தைத் தேசிய மயமாக்கப்படுவதற்காகச் செலவழித்து விட்டு, மக்கள் அப்படியேதான் சிரமப் பட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்ற எண்ணம் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு இருக்காது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே, அந்தக் கொள்கையிலே நாங்கள் பின் வாங்கிவிடவில்லை. இப்பொழுது அதைவிட அடிப்படைப் பிரச்சினை ஒன்று இருக்கிறது. அந்தப் பிரச்சினையைத் தீர்த்து விட்டு, அதற்குப் பின்னாலே நாங்கள் படிப்படியாக இதைச் செய்யவிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே சொல்லியாக வேண்டும். ஏறத்தாழ இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் தனியாருக்குப் பேருந்து உரிமை கொடுக்கவில்லை என்பதை நீங்கள் நிச்சயமாகப் புரிந்திருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. (குறுக்கீடு) ரென்யூவல் உங்களுடைய காலத்திலேயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தீவிரமாகச் செய்தோம் என்று நீங்கள் சொன்னீர்கள்; உங்கள் காலத்திலேயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே ரென்யூவல் கொடுக்காமல் விட்டுவிட்டால் அந்தயிடத்திலே



அரசாங்கத்தினுடைய பேருந்து இயங்கியாக வேண்டும். எனவே, அதை எடுக்காமல் விட்டால், அந்த இடத்திற்கு விடக்கூடிய அந்தப் பேருந்தை பேருந்தேயில்லாத இடத்திற்கு ஒன்றைக் கொடுக்க முடியும் என்ற காரணத்தால்தான் இதிலே கொஞ்சம் நிறுத்தி வைத்திருக்கிறோமேயொழிய அது வேண்டாமென்று விட்டுவிடவில்லை என்பதைத் தயவுசெய்து நீங்கள் உணர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இங்கே சொன்னார்கள். நேஷனல் பர்மிட் கொடுத்ததிலே ஏதோ தவறு நடந்திருப்பதாக அவர்கள் சொன்னார்கள். என்ன முறையோ அந்த முறைப்படி கொடுத்திருப்பதாக எனக்குத் தகவலைக் கொடுத்திருக்கிறார்கள்.

அதிலே ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய மனைவிக்குக் கொடுத்ததாகவும், இன்னொருவர் யாரோ ஒருவர், அவருடைய நண்பர், அந்தக் கட்சியிலே இருந்து வந்தவர், அவர் நடக்க முடியாதவர், அவருக்குக் கொடுத்திருப்பதாகவும் இங்கே கருத்தைச் சொன்னார்கள். அதைப் பொறுத்தவரையில், எனக்குத் தெரிந்த வரையில், முழுமையான, என்னென்ன சட்டத்தினுடைய அடிப்படையிலே கொடுக்கிறார்கள் என்பதை நான் முழுமையாகச் சொல்ல முடியவில்லையென்றாலும், பெண்களுக்காக ஒரு சதவீதம் கொடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு எண்ணத்தை அரசு கொண்டிருக்கிறது. அரிசனங்களுக்காகக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, ஊனமுற்றவர்களுக்காகக் கொடுக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறது. இதை நடைமுறைப் படுத்துகின்ற பொழுது எப்படி வேண்டுமானாலும் நம்மால் குற்றச்சாட்டைச் சொல்ல முடியும்.

எனவே பெண்களுக்குக் கொடுக்காமல் விட்டிருந்தால் ஏன் பெண்களுக்குக் கொடுக்கவில்லை என்ற கேள்வியைக்கூட இந்த மாமன்றத்திலே கேட்க வாய்ப்பிருக்கும். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியிருக்கும். இன்றையதினம் அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் எந்தப் பக்கம் போனாலும் தவறு. அதற்கான ஒரு விளக்கத்தை நான் பின்னாலே கப்பலைத் தொட்டுச் சொல்லும்போது சொல்லுகிறேன். எந்தப் பக்கம் போனாலும் எந்தக் காரியத்தைச் செய்தாலும் தவறு என்று சொல்லக்கூடிய அளவுக்கு அரசாங்கம் எந்தக் காரியத்தையும் செய்யாமல், கையைக் கட்டி அமர்ந்துக் கொண்டு இருக்கின்ற நிலைமையை உருவாக்குகின்ற அளவுக்குத்தான் இன்றைய தினம் கேள்விக் கணைகளை தொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள், என்பதை இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோன்று இங்கே சொன்னார்கள். சில எண்களைச் சொல்லி அங்கே அவ்வளவு கொடுக்கலாமா என்று கேட்டார்கள். எங்கெங்கே அதிகமாக லாரிகள் இருக்கிறதோ அங்கே கொஞ்சம் அதிகமாகக் கிடைக்கிறது. லாரியே இல்லாத இடத்தில் நாம் எப்படிக் கொடுக்க முடியும். எனவே, எங்கெங்கே லாரிகள் அதிகமாக இருக்கிறதோ அங்கே கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பது நியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன். இதற்கான விளக்கத்தை இனிமேல் அதிகமாகச் சொல்ல அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

அதேபோன்று வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைச் சொல்லிக் அதிலே எவ்வளவு ஊழல் நீங்கள் எங்கெங்கே எந்தெந்த கம்பெனியிடத்தில் உங்களுக்குத் தொடர்பு என்று கேள்வியை வைத்து இருக்கிறார்கள். இந்த வேகக் கட்டுப்பாட்டு கருவியைப் பொறுத்தவரையில் ஏதோ அரசாங்கம் திடீரென்று ஆணை யிட்டு விடவில்லை. பல்வேறு விபத்துக்களைப் பார்த்து பல்வேறு நேரங்களில் அதைப் பற்றி சிந்தித்து ஊட்டியில் நடந்த கூட்டத் திலே கூட கருநாடக மாநிலம் இதைச் செய்து இருக்கிறது. அதைப்போல எல்லோரும் செய்ய வேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொல்லி அதற்குப் பின்னாலே இந்த அரசாங்கம் ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முடிவு எடுத்தது. அப்படி முடிவை நாம் எடுக்கிறபோது இந்த வேகக் கட்டுப்பாட்டுக் கருவியைத் தயாரிப்பவர்கள் நிறைய பேர் இல்லை. அப்படியும் நாம் பக்கத்து மாநிலத்திலே கேட்டோம். யாராவது உங்களுக்குத் தெரியுமா, அப்படி நீங்கள் வாங்கியது உண்டா என்று நாம் கேட்டபோது, கர்நாடக மாநிலத்திலே இந்தக் கருவியை வாங்கிய தாக தகவல் கொடுத்தார்கள். அந்த அடிப்படையிலே நமது போக்குவரத்துக் கழகங்கள் அதற்கு முன்னோடியாக இருக்க வேண்டும். தனியார்கள் உடனடியாகப் போட வேண்டும் என்று சொன்னால் அவர்கள் தயக்கம் காட்டுவார்கள். அதற்கு எதிர்ப்பு இருக்கும். எனவே போக்குவரத்துக் கழகங்களே முன்னோடியாக இதைச் செய்து காட்ட வேண்டும், அதற்குப் பின்னாலே அவர்களைச் செய்யச் சொல்லி கேட்போம் என்ற அடிப்படை யிலே தான் இந்த அரசாங்கம் செய்திருக்கின்றது. அதிலே எந்தத் தவறும் நடப்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவுக்குத் தவறு செய்ய வேண்டும் என்ற சூழ்நிலையில் இங்கே இருப்பவர்கள் யாரும் இல்லை என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே அசோக் லேலாண்டு தொழிற்சாலையில் சேசிஸ் பற்றி எல்லாம் சொல்லி, ஏதோ டி.ஐ.ஐ.சி. நிறுவனத்தைச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். அதிலே அரசாங்கப் போக்குவரத்துக் கழகங்கள் லாரி சேசிஸ் வாங்குவதற்காக பணத்தைக் கொடுத்ததாக சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமை இல்லை. எனவே இதுபோன்ற நிலைமைகள் இல்லை என்பதை நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும்.



பெண் கண்டக்டர்கள் எடுத்தீர்களே அதிலே குறை என்று சொன்னார்கள். இந்த அரசாங்கம் இப்படிப்பட்டவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்து, அப்படிக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதை நீங்கள் பாராட்டுவீர்கள் என்று எதிர் பார்த்தேன். குறைகளைச் சுட்டிக் காட்ட வேண்டும். ஆனால், சில நேரங்களிலே பாராட்டினால்தான் அதற்கும் ஒரு மரியாதை இருக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அதை நாங்கள் துவக்கி இருக்கிறோம். பெண்கள் கூட இந்தத் தொழிலைச் செய்வதற்கு தகுதியானவர்கள் என்று நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக நாங்கள் துவக்கி இருக்கிறோம். நீங்கள் இப்போது மகிழ்ச்சி அடைவீர்கள் என்று நான் கருதுகிறேன்.

கள்ள டிக்கட் அடித்து பல்வேறு போக்குவரத்துக் கழகங்களிலே இது இன்றையதினம் பயன்படுத்தப்படுகிறது போன்ற ஒரு தொனி வருவதாக ஒரு கருத்தைத் தெரிவித் தார்கள். இந்த அரசாங்கம் மிகவும் கண்காணிப்போடு இருந்த காரணத்தால் ான் இந்த கள்ள டிக்கட்டு கண்டுபிடிக்கப் பட்டு இருக்கின்றது. அதைக் கண்டுபிடித்தபின்புதான் நீங்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கின்றீர்களே தவிர, நீங்களாக கவே கண்டுபிடித்து இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை என்பதைச் சொல்லுகிறபோது, நிச்சய மாக இந்த அரசாங்கம் எவ்வளவு உன்னிப்பாக, கவனமாக செயல்படுகின்றது என்ப த நீங்கள் நம்புவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது.

அதேபோன்று நட்டத்தைப் பற்றி சொன்னார்கள். பல்வேறு வசதிகளைச் செய்யவேண்டும் என்று சொல்லியது மட்டுமல்லாமல், ஏன் நஷ்டம் அந்த நஷ்டத்திற்கு காரணம் என்ன என்று ஏதோ நாங்கள் தவறு செய்ததைப்போல ஒரு தொனியிலே சில பேர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதற்கான காரணத்தைக் கொஞ்சம் விளக்கமாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது போக்குவரத்துக் கழகம் நட்டத்தில்தான் இயங்குகிறது. 1980–81லே 13.70 கோடி ரூபாய் நட்டம். 1981–82லே ஏறத்தாழ 12–57 கோடி ரூபாய் நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்றது. இதற்கெல்லாம் என்னகாரணம் என்பதை நீங்கள் அடிப்படையிலே உணர்ந்து பார்க்கவேண்டும்.

போக்குவரத்துக் கழகத்திலே இருக்கின்ற தொழிலாளர்கள், அதிகாரிகளுடைய திறமைகள் குறைந்துவிடவில்லை. அதிலே எங்கும் தவறு நடந்துவிடவில்லை எவ்வளவோ சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. முன்னைவிட சிறப்பாக இருக்கிறது. அதிலே எந்தக் குறையும் ஏற்பட்டுவிடவில்லை. என்பதை நிச்சயமாக மாமன்ற உறுப்பினர்கள் ஒப்புக் கொள்வார்கள். அதை அவர்கள் அனுபவித்துக்கொண்டு இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

மத்திய அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. என்ன நடவடிக்கை? ஏதோ அவர்களு டைய நிலைமைக்கேற்ப, சில நடவடிக்கைகளை எடுத்தார் கள், அதை குற்றம் சொல்ல நாங்கள் தயாராக இல்லை. ஆனால் அது எப்படி நம்மை பாதிக்கின்றது, நம்முடைய போக்குவரத்துக் கழகங்களைப் பாதிக்கின்றது என்பதை நான் சொல்லியாகவேண்டும். 8—6—1980, 13-1—1981, 11—7—1981 ஆகிய தேதிகளில் டீசல் விலை உயர்த்தப் பட்டது. இப்படி உயர்த்தப்பட்ட காரணத்தால் நான் நட்டம் என்று சொன்னேனே, இந்த 2 ஆண்டுகளில் நாம் கூடுதலாக உயர்த்தியதற்குக் கூட, டீசலுக்கு மட்டும் ஏறத்தாழ 41 கோடி விலை கொடுத்து இருக்கிறோம்.

(பிற்பகல் 1.30)

இந்த டீசல் விலையின் காரணமாக நாம் கூட்டிக் கொடுக்கக்கூடிய தொகை இந்த 2 ஆண்டுகளுக்கு மட்டும் 41 கோடி ரூபாய். பேருந்தின் அடிச்சட்டம், டயர், டியூப் போன்றவைகளுக்கு சர்சார்ஜ் போட்டிருக்கிறார்கள். இதற் காக 3 கோடி ரூபாய், 2 ஆண்டுகளிலே கொடுக்கிறோம் மற்றும் உதிரி பாகங்கள், டீசல் எண்ணை இரும்பு, எஃகு போன்ற பொருள்களைக் கொண்டுவந்து சேர்ப்பதற்காக் மட்டும் வாடகையாக அதிகப் பணம் கொடுக்கப்படுகிறது. இதிலே ஒரு கோடி ரூபாய், லுப்பிரிகேஷன் எண்ணெயின் விலை ஏற்றத்தின் காரணமாக 1 கோடிரூபாய். எஃகு 20 சதவீதம் விலை உயர்ந்து இருக்கிறது. இதிலே கோடி ரூபாய். ரயில் மூலமாக நாம் சில சரக்குகளை கொண்டு வரவேண்டியிருக்கிறது. இதற்காக ஆகின்ற கூடுதல் கட்டணம், 2 ஆண்டுகளுக்கு 1 கோடி ரூபாய், டயர், பேருந்தின் அடிச்சட்டம், மாற்றுக்கூண்டு இவை போன்றவை களின் விலை உயர்வின் காரணமாக செலவு 4கோடி ரூபாய் பஞ்சப்படி உயர்வின் காரணமாக 3 கோடி ரூபாய், ஏறத்தாழ மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கையால் 64 கோடி ரூபாய், இந்த 2 ஆண்டுகளிலே நஷ்டம் கூடுதல் செலவு ஏற்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டும் அல்லாமல் மாநில அரசும் சில நடவடிக்கை களை எடுத்திருக்கிறது. தொழிலாளர்களின் நன்மைகளைக் கருதியும், நாம் சில நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம். அப்படி எடுத்த அந்தச் சூழ்நிலையில் சம்பள விகிதம், மற்ற வசதிகள் உயர்வின் காரணமாக, 2 ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட 19 கோடி ரூபாய், தொழிலாளர்களுக்கு இந்த அரசாங்கம், கூடுதலாக் கொடுக்கப்பட்டதை நிச்சயமாக இந்த மாமன்ற உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று கருது கிறேன். இப்பொது நஷ்டம் ஏற்படுவதைப் பற்றிக்கூட பல உறுப்பினர்கள் கவலைப் பட மாட்டார்கள் காரணம்





தொழிலாளர்களுக்காக 19 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்திக் கொடுத்திருக்கிறார்களே என்ற அந்த அடிப்படையில். வசூல் படி உயர்த்தியதன் காரணமாக 1 கோடி ரூபாய். இதைப் போன்று சிறப்பு ஊக்க போனஸ், விடுப்பு நாட்களை உயர்த்திக் கொடுத்தது, சிற்றுண்டி சாலைகளை அமைத்தல், தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு உதவி செய்தல் என்ற அந்த அடிப்படையிலே ஏறத்தாழ 5.5 கோடி ரூபாய் நாம் கூடுதலாக செலவழிக்கவேண்டி இருக்கிறோம். சட்டப்படி நாம் போனஸ் கொடுத்தோம். அதற்குப்பிறகு நாம் கருணைத்தொகை கொடுத்தோம். இந்த கருணைத் தொகை காரணமாக மட்டும் கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய். தொழிலாளர்கள் நிம்மதியாக இருப்பதற்கு விடுமுறை இல்லங்கள் அமைத்திருக்கிறோம். அங்கே டெலிவிஷன் வைக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு டெப்போக்களில் டெலிவிஷன் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மட்டும் செலவு 5 கோடி ரூபாய்.

இதேபோன்று, வயர்லெஸ் செட் வைக்கவேண்டுமென்று நாம் நடவடிக்கை எடுத்தோம். அதற்காக 1 கோடி ரூபாய், செலவழித்து இருக்கிறோம். இப்படி அரசாங்கம் எடுத்த நல்ல நடவக்கைகளின் காரணமாக, இதற்காக மட்டும், ஏறத்தாழ 59 கோடி ரூபாய். எனவே நமக்கு உண்டான செலவு, கூடுதல் செலவு, 100 கோடி ரூபாய்க்கு மேல் தாண்டிவந்திருக்கிறது, இந்த 2 ஆண்டிலே என்று சொல் கிறபோது, நிச்சயமாக ஏன் நஷ்டம் இன்னும் என்று உறுப்பினர்கள் கேட்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்னொரு காரணம், கட்டணத்தை உயர்த்தாதது, தேவையான அளவிற்கு உயர்த்தாதது இந்த நஷ்டத்திற்கு மற்றொரு காரணம் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏன் கட்டணத்தை உயர்த்து கிறீர்கள். இங்கே மக்கள் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள் என்ற கருத்தையெல்லாம் சுட்டிக்காட்டினார்கள். நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகம் கேரளம், கர்நாடகம், ஆந்திரம், ஆகிய இந்த 4 மாநிலத்தையும் ஒப்பிட்டு நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் நிச்சயமாக அமைதி பெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

நகரத்திலே இருக்கிற குறைந்தபட்ச கட்டணம், தமிழகத் திலே 30 பைசா, கேரளத்திலே 40 பைசா, கர்நாடகத்திலே 30 பைசா, ஆந்திரத்திலே, 30 பைசா. ஆனால் நகரத்தி னுடைய அதிகபட்ச தூரம் 30 கிலோ மீட்டர்கள். இதற்கு உண்டான கட்டணம் தமிழகத்திலே 1.20, கேரளத்திலே 2.60, ஆனால் எனக்கு வந்திருக்கின்ற தகவல்படி நான் புரிந்துகொண்டபடி அவர்கள் 18 கிலோ மீட்டர்கள் மட்டும்தான் நகர பேருந்துகளை இயக்குகிறார்கள். இதற்கு

வாங்குகிற தொகை 1.30 பைசா. நாம் நகரப் பேருந்து களை 18 கிலோ மீட்டர் இயக்கினால், 90 பைசா வாங்கு கிறோம். அதைப்போன்று கர்நாகடத்திலே, சட்டப்படி ஜீ. ஒப்படி 2.40 காசு வாங்கலாம். எனவே அங்கே இருக்கின்ற தனியார் துறை 2.40 காசு வாங்குவதற்கு வழிவகை இருக் கிறது. இதைத் தடுக்கமுடியாது. கேள்வி கேட்கமுடியாது. ஆனால் இன்னொரு சட்டத்தை, போக்குவரத்துக் கழகத்திற்கு மாத்திரம் அவர்கள் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். 1.30 காசு வாங்கினால் மட்டும் போதாது என்று சொல் கிறார்கள். எனவே, போக்குவரதத்துக் கழத்திலே 1.30 வாங்குவதாக தகவல் கொடுத்திருக்கிறார்கள். அப்படியும்கூட 10 பைசா அதிகம். ஆனால் தனியார் துறையில் 2.40 காசு வாங்க முடியும்.

அதைப்போன்று ஆந்திரத்திலே 1.70 காசு என்று ஒன்றும், சப்பர்பன் பேருந்து என்று வைத்துக்கொண்டு 2.40 காசு என்றும் வாங்குகிறார்கள். எனவே, இந்த வித்தியாசங்களை எண்ணிப் பார்த்தால், நாம் எந்த அளவுக்கு பொதுமக்களுக் காக, நல்ல எண்ணத்தோடு இருக்கிறோம் என்பதை உங்களால் புரிந்து கொள்ளமுடியும் என்று கருதுகிறேன். மாவட்டப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் 1 கிலோ மீட்டருக்கு 7½ பைசா நாம் வாங்குகிறோம். கேரளத்திலே 8 பைசா, கர்நாடகத்திலே, 7.7 பைசா, ஆந்திரத்திலே 8 பைசா. அதேபோன்று விரைவுப் பேருந்திற்கு 1 கிலோ மீட்டருக்கு நாம் 7— பைசா வாங்குகிறோம், கேரளத்திலே, 9. பைசா, கர்நாடகத்திலே, 9.6 பைசா, ஆந்திரத்திலே 10 பைசா என்று வாங்குகிறார்கள்.

இப்படிச் சொல்வதை விட இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்கிறேன். 500 கிலோமீட்டர் செல்ல நம்முடைய சென்னை மாநகரில் அல்லது தமிழகத்தில் பேருந்தில் ஒட்டுமொத்தமாக செலுத்த வேண்டிய தொகை 37 ரூபாய் 50 காசு. ஆனால் கேரளத்தில் 45 ரூபாய். ஏறத்தாழ 7 ரூபாய் 50 காசு கூடுதல் கட்டணம் கொடுக்க வேண்டும். அதைப்போன்று கர்நாடத்தில் 48 ரூபாய். ஏறத் தாழ 10 ரூபாய் கூடுதலாகக் கொடுக்க வேண்டும். ஆந்திரா விலே ஏறத்தாழ் 50 ரூபாய். 12 ரூபாய் 50 காசு கூடுதலாக கொடுக்க வேண்டும். நிச்சயமாக இப்போது அதில் எந்தவிதமான குறைபாடும் இருக்காது; இருந்திருந்தால் நிவர்த்தி அடைந்திருக்கும் என்று நம்புகிறேன்.

இன்னும்கூட நாம் எப்படி செயலாற்றிக் கொண்டிருக்கி றோம், நாம் எப்படி பேருந்துகளை கொடுத்துக்கொண்டிருக் கிறோம் என்பதற்கு ஒரு ஒப்புதலை தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் சதுர கிலோ மீட்டருக்கு நாம் ஓட்டுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை



9,328. ஆனால் ஆந்திராவிலே ஒரு இலட்சம் சதுர கிலோமீட்டருக்கு ஓட்டுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை 3,838. 9,(40)00, 3,000 இந்த வித்தியாசம் இருக்கிறது. அதைப்போன்று கர்நாடத்தில் 6,000. அதைப்போன்று மகா ராஷ்டிரத்தில் 4,704. இப்படி அந்தவகையிலே நாம் சிறப்புற்றிருக்கிறோம் என்பதை நீங்கள் நிச்சயமாகப் பாராட்டு வீர்கள் என்று நம்புகிறேன்.

இங்கே பேசும்போது தொழிலாளிக்கு நீங்கள் என்ன செய்துவிட்டீர்கள் என்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தொழிலாளிக்கு என்ன செய்திருக்கிறோம் என்ற ஒரு பட்டியலைச் சொல்கிறேன். கொஞ்சம் பொறுமையாக இருக் கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்தக் கருத்திலே நிச்சயமாக வேறுபாடு இருக்காது என்று நம்புகிறேன். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 3 மாதத்திற்கு ஒருமுறை பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்ற ஒரு கொள்கையை கடைபிடித்து இன்றையதினம் பல்வேறு பிரச்சனைகளைத் தீர்த்திருக்கிறோம் என்பதை பல்வேறு தொழிற் சங்கத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொண்டாலும் இன்னும் இருக்கிற சில சின்ன, சின்ன பிரச்சனைகளைத் தீர்க்கவேண்டுமென்று சொல்லியிருந் கிறார்கள். அதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இப்படி எல்லாம் நாங்கள் செய்கின்ற காரணத்தால்தான் போக்கு வரத்துத் துறையிலே போராட்டம் நடத்த வேண்டுமென்ற கற்பனை கூட இல்லாமல் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சாரியங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

சரித்திரத்திலே இதற்கு முன்னால் இப்படி இருந்ததில்லை. நான் தெரியமாகச் சொல்கிறேன். அந்தவகையிலே இன்றைக்கு தொழிலாளர்களுக்குச் செய்துகொண்டிருக்கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் என்னென்ன செய்திருக்கிறார்கள் என்ற அந்த சில பட்டியலை இங்கே படித்துக் காட்ட வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

9—வது மாதம் 1980 ஆம் ஆண்டு நாங்கள் அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தோம். ஒரு தொழிலாளிக்கு ஏறத்தாழ 100 ரூபாய் கூடுதல் கொடுத்திருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதற்கு முன்னால் எந்த அரசும்

இப்படிக் கொடுக்கவில்லை. இந்த அரசு கொடுத்திருக்கிறது. தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஒரு ஒப்பந்தம் முடிவு முதல் முறையா இன்னொரு ஒப்பந்தம் போடப்பட்டது இதுவரை மிக அமைதியா என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவி லை;தற்கு முன்னா அங்கோன் முதல்தடவை கடமைப்பட்டிருக்கிறேன். வழ்ந்துக் கொள் கட

அதைப்போல சலவைப் படியை உயர்த்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருந்தார்கள். அந்தப் படியை 6 ரூபாயிலிருந்து 8 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்.

அதைப்போல வசூல் போனஸ் இருக்கிறது. இதில் உச்ச வரம்பு 20 சதவீதம் என்று வைத்திருந்தார்கள். அதை எடுக்க வேண்டுமென்று போராட்டமே நடத்திப் பார்த்தார்கள். இந்த அரசு வந்த பிறகு அவர்கள் போராட்டம் நடத்தவில்லை. நாங்கள் அறிந்து அதை எடுத்திருக்கிறோம். அதெல்லாம்தான் இன்றையதினம் தொழிலாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட காரணமாக இருந்துகொண்டிருக்கிறது.

அதைப்போல சீருடையை தைக்காமல் கொடுக்க வேண்டும் மென்பது ஒரு கோரிக்கை. 1970—லிருந்து இந்தக் கோரிக்கை இருப்பதாக எனக்குத் தகவல் இருக்கிறது. இந்த அரசு வந்த பிறகு சீருடையை தைக்காமல் கொடுக்கலாம்; தொழிலாளர்கள் தேவைபோல் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்ற அடிப்படையில் இன்றையதினம் நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்பதை நீங்கள் நிச்சயமாகப் பாராட்டுவீர்கள் என்று நம்புகிறேன்.

அந்தச் சீருடையைத் தைப்பதற்கு 27 ரூபாய் என்று அறிவித்தோம். 6 மாதம் கழித்து அது போதாது என்று கேட்டார்கள். அதை உயர்த்தி, 30 ரூபாய் ஆக்கியிருக்கிறோம். இதையெல்லாம் நாங்கள் தொழிலாளர்களை அக்கறையோடு பார்க்கிறோம் என்பதற்காக இங்கே குறிப்பிடுகிறேனே அல்லாமல் வேறல்ல.

அதைப்போன்று இரவு நேரத்தில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு டீ கொடுக்க வேண்டும், பன் கொடுக்க வேண்டுமென்று இதை ஒரு பெரிய கோரிக்கையாக தொழிலாளர்கள் வைக்க வேண்டிய அளவுக்கு இருந்தார்கள் தமிழ்நாட்டில். இந்த அரசு அதைக் கொடுத்திருக்கிறது.



அதைப் போல விழாக் காலங்களில் அவர்களுக்குக் கொடுக்கிற முன்பணம் 400 ரூபாயாக இருந்ததை 500 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்.

அதைப்போன்று திருமணக்கடனைப் பொறுத்தவரையில் ஒரு தொழிலாளியின் குடும்பத்தில் ஆண் மகனுக்கு திருமணம் நடந்தால் 500 ரூபாய் கொடுத்துவந்ததை 1,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம்; பெண்ணுக்குத் திருமணம் என்றால் 1,000 ரூபா இருந்ததை 1,500 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம். இந்த அளவுக்கு திருமணக்கடனை உயர்த்தி, இந்த அரசு கொடுத்துக்கொண்டிருக்கிறது.

அடுத்து, எல்லா பணிமனைகளிலும் தொழிலாளர்களுக்கு சிற்றுண்டி சாலை அமைக்க வேண்டுமென்ற முடிவை இந்த அரசு எடுத்து, இன்றையதினம் இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாயை அதற்காக செலவழித்துக் கொண்டிருக்கிறது.

உடல் ஊனமுற்றவர்கள் ஏதோ கொஞ்சம் பேர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களுக்குக்கூட இந்த அரசு வந்தபிறகுதான் மூன்று சக்கர வண்டிகளை வாங்கிக்கொள்வதற்கு 50 சதவீதம் தொகையை இனாமாக மானியமாகக் கொடுக்கிறோம். 50 சதவீதம் தொகையை கடனாக கொடுக்கிறோம். இதெல்லாம் தொழிலாளர்களிடம் நாங்கள் காட்டுகிற அக்கறை இல்லையா?

(பிற்பகல் 1-40)

தொழிலாளர்களிடத்தில் இருந்து பங்குத் தொகை வசூலிக்கப்பட்டு வைக்கப்பட்டு இருந்தது. அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று நீண்டநாட்களாக கோரிக்கை தொடர்ந்து இருந்து வந்தது. அதை இன்றைய தினம் புரட்சித் தலைவர் அரசு திருப்பிக் கொடுத்து இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நீண்டகால ஊதியம் — இதற்கு, பின்னாலே ஒரு புதிய அறிவிப்பு வர இருக்கிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் இது பற்றி ஒரு அறிவிப்பு செய்யப்பட்டது. ஏற்கனவே இருந்த திட்டப்படி, தொழிலாளர்கள் பணியில் சேர்ந்த காலத்தில் இருந்து 6 ஆண்டுகள் கழித்து ஒரு ரிவியூ, அதற்குப் பின்னால் 8 ஆண்டு கழித்து இன்னொரு ரிவியூ. அதாவது 14 ஆண்டுகள் கழித்து மொத்தமாக அந்தத் தொழிலாளிக்கு ஒரு ரிவியூ கொடுத்து

விடுவார்கள். அதற்குப் பிறகு 10 ஆண்டுகாலம், 12 ஆண்டு காலம், அல்லது 9 ஆண்டுகாலம் பணியாற்றினாலும் ஒரு ரிவியூவும் கிடையாது. அதற்குப் பின்னாலே ஒரு ரிவியூ வேண்டும் என்று அந்தத் தொழிலாளர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள். இந்த அரசுக்கு அது நியாயமாகப் பட்டது. இந்தச் சர்க்கார் மூன்றாவது ரிவியூ போட்டது. அது ஏறத்தாழ 1985 ஆம் ஆண்டில் தான் நடைமுறைக்கு வரும். அதாவது இரண்டாவது ரிவியூ முடிந்து 10 ஆண்டுகள் கழித்த பின்னர் தான் 3-வது ரிவியூ வரும். அதிலே தொழிலாளர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள். இப்போதே தொழிலாளர்கள் 25 ஆண்டுகள், 30 ஆண்டுகள் பணிமுடித்து இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். இந்த அரசாங்கமும் அதற்கு ஏற்ப ஒரு முடிவு எடுத்திருக்கிறது. இந்தச் சலுகையை ஏற்கனவே அவர்களுக்குச் சொல்லி இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, பேறு கால விடுப்பு 60 நாள் என்று இருந்ததை 90 நாள் என்று உயர்த்திக் கொடுத்து இருக்கிறோம். அதேபோன்று சென்னையில் உள்ள ஒவ்வொரு டெப்போவிலும் தொலைக்காட்சி பெட்டி வைக்கப்பட்டு இருக்கிறது. இதுதான் இந்த அரசின் கொள்கை. தொழிலாளர்கள் தொழிலாளர்களைப் போல் எப்போதும் இருந்து விடக்கூடாது. முதலாளிகளாக வளரவேண்டும். ஆகவே தான் பணக்காரர்கள் மட்டும் வைத்துக்கொள்கிற தொலைக்காட்சி பெட்டி வாங்கி வைத்து இருக்கிறோம், அவர்களின் உபயோகத்திற்காக அந்தத் தொழிலாளர்களின் உபயோகத்திற்காக என்று மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோன்று, நகர ஈட்டுப்படி அவர்களுக்கு முன்பு கொடுக்கப்பட்டது. இடையில் அது காணாமல் போய்விட்டது. இந்த அரசாங்கம் வந்தபிறகு அந்த நகர ஈட்டுப்படியை அவர்களுக்குக் கொடுத்து இருக்கிறது. அதோடு நின்றுவிடவில்லை. கிராமங்களில் இருப்பவர்கள் மட்டும் என்ன இளைத்தவர்களா என்று அவர்களுக்கு எல்லாம் கிராம ஈட்டுப்படி என்று 5 சதவீதம் கொடுத்து இருக்கிறோம். இப்படியெல்லாம் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது.

இதற்கு முன்னால் போக்குவரத்துத்துறையில் ஒரு முறை இருந்தது யாராவது பணியாற்றிக்கொண்டு இருப்பவர்கள் 30 ஆண்டுகள் — 40 ஆண்டுக் காலம் பணி புரிந்தவர்களாக இருந்தாலும் சரி — உடல் ஊனம் உற்றாலோ அல்லது மருத்துவ சான்றிதழ்படி பணிக்கு லாயக்கு அற்றவர்கள் என்று சொல்லப்பட்டாலோ அவர்கள் வீட்டுக்குத்தான் போகவேண்டும். அப்படி ஒரு பரிதுகாப்பற்ற நிலைமை இருந்தது. ஆனால் இந்த அரசாங்கம் வந்த பிறகு, மனிதாபிமான அடிப்படையில் அப்



படிப்பட்ட தொழிலாளர்களை அதே போக்குவரத்துக் கழகங்களில் வேறு பணியில், அவர்களுக்கு தகுந்த பணியில் அமர்த்த வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம்.

சிலபேர் பேசுகிறார்கள், இந்த அரசாங்கம் தொழிலாளர்களுக்கு விரோதமான கொள்கையைக் கொண்டிருக்கிறது என்று. தொழிலாளர்களுக்கு நீங்கள் என்ன செய்து விட்டீர்கள் என்று கேட்டார்கள். அவர்களுக்கு எல்லாம் இது பதிலாக அமையும் என்று நான் கருதுகிறேன். ஒரு வேளை நாங்கள் இப்படியெல்லாம் செய்வதால் தொழிலாளர்கள் எல்லாம் முதலாளிகளாக மாறிவிடுவார்களோ, பின்னால் தொழிலாளர்களே இருக்க மாட்டார்களோ என்கிற அந்த ஐயப்பாட்டின் காரணமாக, அந்த எண்ணத்தின் காரணமாக, தொழிலாளர் விரோதக் கொள்கை என்று பேசியிருப்பார்களோ என்கிற எண்ணம் எனக்கு ஏற்படுகிறது.

அதேபோன்று, விபத்தின் காரணமாக பணியில் இருக்கின்றபோது ஒரு தொழிலாளி இறந்து விட்டால், அந்தத் தொழிலாளியின் குடும்பத்தில் இருக்கும் தகுதியான ஒருவருக்கு இந்த அரசாங்கம் வேலை கொடுக்க நடவடிக்கை எடுத்து உத்தரவிட்டு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே கள்ளச்சீட்டு பற்றிச் சொன்னார்கள். அதைத் தவிர்ப்பதற்காக அரசு தீவிரமான முறையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அக்கறை செலுத்தி வருகிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அந்தத் தவறு நடக்காமல் இருப்பதற்கு இன்றைய தினம் நடத்துனர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அதிகமான டிக்கெட் புத்தகங்களைக் கையில் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. சென்னையில் 22 ஸ்டேஜ்கள் இருக்கின்றன. ஆகவே, 22 டிக்கெட் புத்தகங்கள் கையில் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதைப்போலவே சென்னை தவிர மற்ற இடங்களில் 15 ஸ்டேஜ் இருக்கின்றன. அங்கே 15 டிக்கெட் புத்தகங்களை வைத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. அது மிகவும் சிரமமாக இருக்கிறது. தவறு நடப்பதற்கு இது கூட ஒரு காரணமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதைக் குறித்து இந்த அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. அதிலே ஒரு புது மாற்றத்தைக்கொண்டு வர முடியுமா என்பதையும் யோசித்துக்கொண்டு இருக்கிறோம்.

இன்னும் கூட ஒன்றைச் செய்ய யோசித்து வருகிறோம். பயணிகள் டிக்கெட்டைக் கேட்டு வாங்கி பத்திரமாக வைத்து இருந்து, வீட்டிலே கொண்டுபோய் பத்திரமாக வைத்து இருக்கும் அளவிற்கு நூதனமான முறை கொண்டுவரலாமா என்று யோசித்துக்கொண்டு இருக்கிறோம். அதைத் தீவிரமாக பரிசீலித்து வருகிறோம்.

இங்கே பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள்
எடுத்துச் சொல்லியிருந்தாலும், ஒரு கருத்துக்கு மட்டும் இப்
போது பதில் சொல்ல விரும்புகிறேன். இங்கே பேசிய மாண்பு
மிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பூம்புகார் கப்பல்
போக்குவரத்துக் கழகத்திற்கு கப்பல் வாங்குவது பற்றி பெரிய
குற்றச்சாட்டாக அள்ளி வீசிப் பேசியிருக்கிறார்கள். அதற்காக
நான் முறையாக பதில் சொல்லியாக வேண்டும். உறுப்பினர்கள்
அதை நிச்சயமாக சிந்தித்துப் பார்த்து ஒரு முடிவு எடுப்பார்கள்
என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. பூம்புகார் கப்பல்
போக்குவரத்துக் கழகத்திற்கு நாங்கள் கப்பல் வாங்குவதற்கு
முதல் முறையாக முயற்சிகளை எடுத்தபோது சில குற்றச்
சாட்டுகளைச் சொன்னார்கள். அதற்குப் பின்பு இந்த அரசு
கலைக்கப்பட்டது. அந்தக் கப்பல் வாங்காமல் விடப்பட்டது
என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அதற்குப் பின்னால் இந்த
அரசு வந்த பிறகு மீண்டும் கப்பலை வாங்குவதற்கு ஒரு சூழ்நிலை
ஏற்பட்டது. நாம் கப்பலை வாங்குவதற்காக முயற்சிகளை
எடுத்தோம். அப்போது தமிழக முதல்வர் அவர்கள் சொன்
னார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் யாரும் குறை
சொல்லாத அளவுக்கு அதிலே இடைத்தரகர்கள் இல்லாத அள
வுக்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற கருத்தை எடுத்
துச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே இந்த அரசு மிகத்
தீவிரமாக மிக கவனமாக பரிசீலித்து எப்படி வாங்குவது என்ப
திலே முடிவு எடுத்தது. அதுதான் குளோபல் டெண்டர் முறை.
பிறகு விலை ஒப்பந்தப் பட்டியலை வாங்கி அதிலே பங்கு
கொண்டவர்களின் கப்பல்களுடைய விலை, தரம், அதனுடைய
பயன் ஆகியவற்றை ஆய்வு செய்ததற்குப் பின்னாலே வாங்க
வேண்டும் என்று முடிவு எடுத்தோம்.

அப்படி எடுத்த உடனேயே விலைப் பட்டியலைக் கேட்டோம்.
குளோபல் டெண்டர் கால்-ப்பார் செய்தோம். அப்படிக் கேட்ட
போது, பத்திரிகையிலே விளம்பரம் செய்தால்மட்டும் போதாது,
பலபேருக்கு அதைப் பார்க்காத வாய்ப்புக்கூட ஏற்படலாம்
என்ற அடிப்படையிலே ஏறத்தாழ 26 நாடுகளிலே உள்ள 113
கப்பல் தளங்களுக்கு நாம் நேரிடையாக எழுதியிருக்கிறோம்.
நேரிடையாக அப்படி எழுதியதில் நமக்கு திருப்பி பதில்கொடுத்தது
40 கப்பல் தளங்களிலேயிருந்து மட்டும் தான். ஜப்பா
னுக்குக்கூட — சரியான ஞாபகம் இருக்குமானால் — 38
கப்பல் தளங்களுக்கு எழுதியதாக நினைக்கிறேன். அதிலே
8 பேர்கள் தான் திருப்பி பதில் எழுதியிருக்கிறார்கள். விலை
ஒப்பந்தப் பட்டியலைக் கேட்டோம். குளோபல் டெண்டரிலே
யார் யார் கலந்துக் கொண்டார்களோ, அந்தந்த விலைப்
பட்டியலைவைத்து, நம் நிபுணர் குழு ஆராய்ச்சி செய்தது. அப்படி
ஆராய்ச்சி செய்து எடுத்த அந்த அறிக்கையை டி.டி.எப்.சி.-
யிடம் கொடுத்தோம். இங்கே கொடுக்கவில்லை என்று சொன்
னார்கள். அப்படியில்லை. நம்முடைய அறிக்கை எப்படி



பயனுடையது எந்தெந்த வகைகளிலே பயனுடையது என்பதைப்
பற்றி டி.டி.எப்.சி.-யிடம்— மன்னிக்க வேண்டும் எஸ்.டி.எப்.சி.
யிடம் என்று சொல்லக்கூடிய கப்பல் வளர்ச்சிக் கழக—நிதி
வளர்ச்சிக் கழக நிறுவனத்திடம் கொடுத்திருக்கிறோம். அப்
படிக் கொடுத்தபோது, அவர்கள் சொல்லிய கருத்து — அந்த
குளோபல் டெண்டரிலே கலந்து கொண்டவர்களை ஆய்வு
நடத்தியதிலே தவறு இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்ட
வில்லை. அவர்கள் சொல்லியதெல்லாம், நீங்கள் வாங்குவதாகச்
சொல்லிய கப்பலை விட, குறைவான விலையில் கப்பல் கிடைப்ப
தற்கான வாய்ப்பு இருக்கிற சூழ்நிலை வெளியிலே இருக்கிறது.
அதை வாங்க வேண்டும் என்று சொன்னார்கள். நாங்கள்
திருப்பிச் சொன்னோம். நாம் கேட்டது குளோபல் டெண்டர்.
அதிலே கலந்து கொண்டவர்களை விட்டு விட்டு, வெளியிலே
கேட்டால், அந்த முறைகளிலே ஏதாவது குற்றச்சாட்டு வராதா
என்று நாம் பதில் எழுதினோம். அதற்கு அவர்கள் பரவாயில்லை.
கேட்கலாம் என்று சொன்ன பிறகு, கேட்டிருக்கிறோம்.
அந்த விலைப் பட்டியலும் வந்துக் கொண்டிருக்கிறது.

இதை தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்தித்துப்
பார்க்க வேண்டும். ஒரு வேளை நாங்கள் குளோபல் டெண்டர்
கேட்ட உடனேயே, அதிலேயிருப்பதை ஆய்வு செய்து விட்டு,
எதற்கும் வெளியிலே கேட்டு பார்ப்போம் என்று, மத்திய அரசாங்
கத்திற்கோ அல்லது அந்த குழுவிற்கோ, அந்த ஆய்வு அறிக்கை
யைக் கொடுக்காமல், நாங்களாகவே 'வெளியிலே கேட்டு பார்ப்
போம் என்று நாங்களாகவே நடவடிக்கையை எடுத்திருந்தோ
மானால், இன்றைய தினம் நீங்கள் கேட்கக் கூடிய கேள்வி
என்னவாக இருக்கும் என்று சொன்னால், குளோபல்
டெண்டர்கள் கால்-பர் செய்திகள் அதிலே கொஞ்சம் பேர்
கலந்து கொண்டிருக்கிறார்கள். அவைகளை ஆய்வு நடத்திடுவீர்கள்
ஆனால் அதை விட்டுவிட்டு, வெளியிலே இருக்கிற நபர்களிடம்
ஏன் போய் விசாரிக்கிறீர்கள்? ஏன் கேட்கிறீர்கள்? அதற்கும்
உங்களுக்கும் என்ன சம்பந்தம்? எவ்வளவு கை மாறியது,
குளோபல் டெண்டரை விட்டு விட்டு ஏன் வெளியிலே போக
வேண்டும் என்று ஒரு கேள்வி வரும் என்பதை...............
(குறுக்கீடு).

மன்னிக்க வேண்டும். நான் தொடர்ச்சியாக முடித்துவிடு
கிறேன். பின்னால் கேளுங்கள். அந்த வகையிலே குளோபல்
டெண்டரை விட்டு ஏன் வெளியிலே போனீர்கள் என்ற குற்றச்
சாட்டு வரும் என்ற காரணத்தாலேதான், அதை நேரிடையாக
எஸ்.டி.எஃப்.சி.-யிடம் கொண்டு போய் கொடுத்தோம். நான்
ஏற்கெனவே கூட சொன்னேன். அந்த ஆய்வு செய்ததிலே
எந்தவித தவறும் இல்லை என்று. அன்றும் 22 கோடி ரூபாய்
என்று தான் பல்கேரியா கப்பலுக்கு விலை கொடுத்திருந்தார்கள்.
இன்றும் 22 கோடி ரூபாய் என்றுதான் கொடுத்திருக்கிறார்கள்.

ஜப்பானிய கப்பல் 33 கோடி ரூபாய் என்று நினைக்கிறேன். ஆனால் அதை நிலக்கரி கொண்டு பயன்படுத்திக் கொண்டு வருவதானால் 123 ரூபாய் ஆகும். இதற்கு 145 ரூபாய் ஆகும். எனவேதான், இந்த குளோபல் டென்டர்களைக் கொடுத்தவர்களை ஆய்வு செய்து, அந்த எஸ்.டி.எஃப்.சி.-யின் முன்னாலே வைத்து விட்டோம். ஆனால் அவர்கள் இன்றைய தினம் வெளியிலே கேளுங்கள் என்று சொல்கிறார்கள். எங்களுக்கு கருத்து வேறுபாடு இல்லை. நாங்கள் கேட்கத் தயாராக இருக்கிறோம். குறைந்தவிலையில் வருமேயானால் அதை வாங்குவதற்கு எந்த விதமான தயக்கமும் இல்லை. இந்த அரசாங்கத்தை எந்தக் குறையே, குற்றச்சாட்டையோ சொல்லக் கூடிய அளவுக்கு இதிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதிலே மிகத் தெளிவாகவே நாங்கள் இருக்கிறோம். இதிலே எப்படி விசாரணை கமிஷன் நடத்தினாலும் அல்லது எதை வைத்து விசாரித்தாலும் நாங்கள் சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நான் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே 85 அறிவிப்புகளை அறிவித்திருக்கிறேன். அதிலே முழுமையான நடவடிக்கைகளாக என்னென்ன அரசாங்கம் எடுத்தது என்பதைச் சொல்ல வேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. இருந்தாலும் உறுப்பினர்களுக்கு பொறுமையில்லை என்ற காரணத்தால், நேரம் அதிகமாகிவிட்டது என்ற காரணத்தால் சுருக்கமாகவே சொல்கிறேன். 85 அறிவிப்புகளில் பெரும்பாலான அறிவிப்புகள் சம்பந்தமாக காரியங்கள் முடிக்கப்பட்டு விட்டன.

(பிற்பகல் 1-50)

மேலும் பெரிய பெரிய வேலைகளை, 7 ஆண்டுக் காலத்திலே முடிக்கப்பட முடியாத வேலைகளையெல்லாம் தொடர்ந்து நாம் செய்துகொண்டிருக்கிறோம். அத்தனையும் செய்து முடிக்கப் படும். நாட்டு மக்களுக்கு அது பயன்படும் வகையிலே ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கையிலே இந்த அரசு பொது மக்களின் நன்மைக்காகவும், இங்கே இருக்கின்ற தொழிலாளர்களின் நன்மைக்காகவும் இந்த ஆண்டு ஏறத்தாழ 77 புதிய அறிவிப்புகளை புரட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதலோடு நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். அவற்றைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் பெருநகர்ப் பிரிவைப் பொறுத்த வரையில் ரூபாய் 30 இலட்சம் செலவில் 50 பேருந்துகளை நிறுத்துவதற்கான ஒரு பணிமனை பூந்தமல்லியில் கட்டப் படும்.



சைதாப்பேட்டையிலுள்ள பணிமனையில் 50 பேருந்துகளை நிறுத்துவதற்கு இடம் இருக்கிறது. அங்கே 100 பேருந்துகளை நிறுத்துகின்ற வகையிலே அமைப்பதற்காக 15 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படும்.

வில்லிவாக்கத்திலுள்ள பேருந்து நிலையத்திலே பகலில் பேருந்துகளைப் பராமரிப்பதற்காக 10 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படும்.

பேருந்து ஓட்டுவதில் தனித் திறமை அளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு குரோம் பேட்டையிலுள்ள பயிற்சிப் பள்ளியில் ஓட்டுநர் வளாகம் ஒன்று 6.5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

200 பயணிகளைக் கொண்ட ஒற்றை அடுக்கு இழுவைப் பேருந்து ஒன்றினை சோதனை ஓட்ட முறையில் இயக்கிப் பார்க்கப்படும். இவ்வகையான பேருந்து இன்றையதினம் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் தான் இருக்கின்றன. அடுத்தபடியாக அது தமிழகத்திற்குத்தான் வர இருக்கின்றது.

ஓட்டுநருக்கு இருக்கின்ற சங்கடங்களைக் குறைக்கின்ற வகையிலே ஒருங்கிணைக்கப்பட்ட பேருந்து என்ற வகையிலே சில மாற்றங்களைச் செய்வது பற்றி கண்டுபிடித்திருக்கிறார்கள். அது தமிழகத்திலே முதல் முறையாக இயக்கிவைக்கப்பட இருக்கிறது.

அடுத்து பேராசிரியர் அவர்கள் சொன்னதைப் போன்று 10, 12 ஆண்டுகளாக இயக்கப்பட்ட அந்த 165 பேருந்துகளை மாற்றுவதற்கு போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்கும். ஏறத்தாழ 200 புதிய பேருந்துகள்விட 12.6 கோடி ரூபாய் செலவழிக்கப்படும். அப்போது பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை 2115 ஆக உயரும்.

அம்பத்தூர் பணிமனையில் ரூ. 2 இலட்சம் செலவில் தொழிலாளர்களுக்காக உணவறையும் ஓய்வறையும் கட்டப்படும். இதுதான் ஒரு பெரிய கோரிக்கையாக இருந்தது.

இதேபோன்று ஒரு அறை அடையாறு பணிமனையில் ரூபாய் 2 இலட்சம் செலவில் கட்டப்படும்.

தாம்பரம் பணிமனையில் தொழிலாளர்களுக்காக ரூபாய் ஒரு இலட்சம் செலவில் உணவு மற்றும் ஓய்வறை கட்டப்படும்.

சென்னையில் பெரம்பூர் பணிமனை மற்றும் பட்டுல்லாசாலை பணிமனையில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்தப்படும்.

ரூபாய் 5 இலட்சம் செலவில் பெரம்பலூரில் 3 ஏக்கர் நிலத்தில் பராமரிப்பு நிலையம் ஒன்று கட்டப்படும்.

தஞ்சை மாவட்டம் மேலவேலி கிராமத்தில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் பராமரிப்பு நிலையம் ஒன்று கட்டப்படும்.

அண்ணா போக்குவரத்துக் கழகம்.— தர்மபுரி மாவட்டம் அரூரில் ரூ. 10 இலட்சம் செலவில் புதிய பணிமனை ஒன்று கட்டப்படும்.

எருமப்பாளையம், திருச்செங்கோடு, ஆத்தூர், நாமக்கல், ராசிபுரம், கிருஷ்ணகிரி ஆகிய ஊர்களில் தொழிலாளர்களுக்கு ஓய்வு அறைகள் ரூ. 6 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

சேலத்திலிருந்து பெங்களூருக்கு குளுகுளு பேருந்து விடப்படும்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்.— திருநெல்வேலி பிரிவு.—இரண்டுபணிமனையில் ரூ. 7 இலட்சம் செலவில் தொழிலாளர் ஓய்வு அறையும், அலுவலகக் கட்டமும் கட்டப்படும்.

திருச்செந்தூர் பணிமனையில் ரூ. 6 இலட்சம் செலவில் தொழிலாளர் ஓய்வு அறையும் அலுவலகக் கட்டிடமும் கட்டப்படும்.

பாபநாசத்தில் ரூ. 3 இலட்சம் செலவில் தொழிலாளர் ஓய்வு அறையும் அலுவலகக் கட்டிடமும் கட்டப்படும்.

குழித்துறையில் 2.25 இலட்சம் ரூபாய் செலவில் தொழிலாளர் ஓய்வு அறை கட்டப்படும்.

ரூ. 30 இலட்சம் செலவில் திருநெல்வேலி மாவட்டத்தில் வட்டார தொழில் பட்டறை ஒன்று கட்டுவதற்காக திருநெல்வேலியில் 13 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்படும்.

ரூ. 6 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் மூன்றாவது பணிமனைக்காக திருநெல்வேலியில் 2.75 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்படும்.

ரூ. 2.25 இலட்சம் செலவில் டயர் புதுப்பிக்கப்படும் தொழிற்சாலை ஒன்று திருநெல்வேலி பணிமனை 1-ல் அமைக்கப்படும்.

தூத்துக்குடியில் ரூ. 8 இலட்சம் செலவில் அமைக்கப்படவிருக்கும் இரண்டாவது பணிமனைக்காக 6 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்படும்.



நாகர்கோவிலிலிருந்து மதுரைக்கு ஒரு குளுகுளு பேருந்து விடப்படும்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்.— ரூ. 15 இலட்சம் செலவில் விழுப்புரத்தில் கட்டப்பட்ட இக்கழகத்தின் தலைமை அலுவலகக் கட்டிடம் திறந்து வைக்கப்படும்.

விழுப்புரத்தில் ரூ. 3 இலட்சம் செலவில் ஓட்டுநர், நடத்துனர் தொழில் நுட்பப்பணியாளர் ஆகியோருக்கான பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படும்.

வடாற்காடு மாவட்டம் ஆற்காட்டில் ரூ. 7.5 இலட்சம் செலவில் புதிய பேருந்து பணிமனை ஒன்று கட்டப்படும்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மற்றும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் இரண்டும் சேர்ந்து மாமண்டூர் மற்றும் தொழுதூர் ஆகிய இடங்களில் பேருந்து நிற்பதற்காகவும் சிற்றுண்டிச் சாலைக்காக நவீன வசதியுடன் கூடிய ஓய்வு அறையும் ரூ. 40 இலட்சம் செலவில் ஒரு கூடம் கட்டப்படும்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்—நவீன வசதிகளுடன் கூடிய 16 படுக்கைகள் கொண்ட தூங்கும் வசதிப் பேருந்துகள் இரண்டு விடப்படும்.

சுமார் 2½ அல்லது 3 வருடம் ஆகிய பேருந்துகள் நல்ல முறையில் செம்மைப்படுத்தப்பட்டு கல்விப் பணிக்காக பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் ரூ. 1,20,000 மதிப்பில் கிடைக்கும்.

சென்னை வரும் நெடுந்தூரப் பயணிகளின் வசதியை முன்னிட்டு தங்கள் உடைமைகளை பாதுகாப்புடன் வைக்க பொருள் வைப்பு அறை, குளியல் அறை, கழிவறை, ஆகிய நவீன வசதிகள் கொண்ட '' பயணிகள் தங்குமிடம் '' குறைந்த கட்டணத்தில் சென்னையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து நிலையத்தில் அமைக்கப்படும். இது பயணிகளுக்கு பெரும் மகிழ்ச்சியைத் தரும்.

ஈரோடு நகராட்சிக்கு சொந்தமான ஈரோடு பேருந்து நிலையத்தில் உட்புறமாக உள்ள சுமார் 1½ ஏக்கர் நிலப்பரப்பை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 99 வருட நில உரிமை பெற்று அங்கு நெடுந்தூரப் பயணிகளுக்கு என நவீன வசதிகளுடன் ஒரு தனி பேருந்து நிலையம் ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டிற்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் அமைக்கப்படும்.

தொழிலாளர் தினமாகிய மே தினத்தை சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது காரணம் பலர் சொல்கிறார்கள். இது தொழிலாளர் விரோதக்

அது சிறப்பாகக் கொண்டாடப்படும். ஆண்டுதோறும் அவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும். அதில் நல்ல பரிசுகள் கொடுக்கப்படும். அத்தனை போக்குவரத்துத் தொழிலாளர்களும் கூடி அந்த விழாவைக் கொண்டாட வேண்டுமென்று ஏற்பாடுகள் செய்ய இருக்கிறோம். இந்த ஆண்டு முதல் அதைத் துவக்க இருக்கிறோம்.

[பிற்பகல் 2–00]

சீருடை பற்றி ஒரு சிறிய மாற்றம் வேண்டுமென்று தொழிலாளர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதிலே ஒரு சிறிய மாற்றம் செய்திருக்கிறோம். ஏற்கனவே இருக்கின்ற முறையில் தொழிலாளர்கள் வாங்க விரும்பினால் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் தற்போது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 4 செட் காட்டன் வழங்குவதற்கு பதில் 3 செட் காட்டன், ஒரு செட் டெரிகாட்டன் என்ற முறையில் கொடுக்க முடிவெடுத்திருக்கிறோம். சுருக்கமாகச் சொல்லப் போனால் 1983 ஆம் ஆண்டில் ஒரு செட் டெரிக்காட்டன் ஒரு செட் காட்டன் கொடுக்கப்படும். 1984 ஆம் ஆண்டில் இரண்டு செட் காட்டன் கொடுக்கப்படும். இப்படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு செட் டெரிகாட்டன் கொடுக்கின்ற அளவிலே இப்போது முடிவெடுத்திருக்கிறோம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் தங்களுக்குச் சொந்தமான வீடுகள் கட்டிக் கொள்வதற்கு ஒரு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான முன்பணத்தை போக்குவரத்துக் கழகம் மூலமாக அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பின் போக்குவர்த்துக் கழகம் அரசாங்கத்தை அணுகி, எங்களுடைய நம்பிக்கையின் பேரில் தொழிலாளர்களுக்கு கடன் கொடுங்கள் என்று அவர்கள் செ-ல்லி, அரசாங்கம் போக்குவரத்துக் கழகத்தின் நம்பிக்கையின் பேரில் தொழிலாளர்களுக்கு கடன் கொடுப்பதென்று முடிவு செய்திருக்கிறோம்.

அதேபோன்று, மூன்றாவது ரெவின்யூவைப் பொருத்தவரை இன்றைய தினம் ஒட்டுமொத்தமாக 85 ஆம் ஆண்டு வரை 27 ஆண்டு காலம் யார் யார் பணி செய்திருக்கிறார்களே, அவர்களை இந்த மூன்றாம் ரெவின்யூ கணக்கிலே எடுத்துக்கொள்ளலாம் என்றும், 1985 க்குப் பிறகு இரண்டாவது ரெவின்யூ பிரிவின் கீழ் 10 ஆண்டுகள் ஒட்டுமொத்தமாக பணிக்காலம் முடித்தவர்கள் 3 வது ரெவின்யூவிற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒட்டுநர்கள் விபத்தின் காரணமாக, அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு அல்லது அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்லுகின்ற சூழ்நிலை ஏற்பட்டால், அவர்களுக்கு இப்போது நாம் உதவித் தொகை கொடுப்பதில்லை. அந்தச் செலவுத் தொகை தற்போது கொடுப்பதில்லை. ஆனால் இப்போது நாம் முடிவெடுத்திருக்



கிறோம். அதன்படி, அந்த ஓட்டுநர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று நீதிமன்றத்தில் அவர்கள் நிரபராதி என்று தீர்ப்பு வருமானால், ஒரு பகுதி தொகையை, அவர்களுக்கு செலவுத் தொகையாக கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று, பயணச் சீட்டு ஆய்வாளர், மற்றும் நேரப் பதிவாளர் பதவிகளை தனியாகப் பிரித்து அமைத்திருக்கிறோம். அதேபோன்று, ஓட்டுநர் பயிற்சி அளிப்பவரது பதவியினையும் தற்பொழுதுள்ள குருப்பிலிருந்து தனியாகப் பிரித்து அமைக்கப்படும்.

தொழிலாளிக்கு சிக் லீவ் என்று ஒன்றிருந்தது. இதிலே ஒட்டு மொத்தமாக, கடைசியிலே பணம்பெற வேண்டுமென்று விரும்பினால் தற்பொழுது இருக்கும் முறையை மாற்றி ஓய்வு பெறும் தினத்திலோ அல்லது தானாக வேலையை விட்டு விலகும் நாளிலோ இருக்கும் சம்பள விகிதத்திற்கேற்ப பணமாகப் பெற அனுமதிக்கப் படுவர் என்று இந்த அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பதவி உயர்வின்போதோ அல்லது ஊதிய ஆய்வின் காரணமாகவோ, யாராவது ஜூனியர், சீனியருக்கு அதிகமாக சம்பளம் பெறக்கூடிய சூழ்நிலை இருக்குமானால், இந்த அரசு அதிலே தனிக் கவனம் செலுத்தி, யாருக்கும் சிரமம், சங்கடம் இல்லாமல், மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்துறையைப் பற்றி ஒன்றிரண்டு பிரச்சனைகள் இருக்கின்றன. அவைகளையும் சொல்லி விடுகிறேன். சேலம் மாவட்டத்தில் மேட்டூரிலும் ஆத்தூரிலும் தனி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் அமைக்கப்படும். ஒரே மாவட்டத்தில் இரண்டு போக்குவரத்து அதிகாரிகள் அலுவலகங்கள் இருந்தால் அவைகள் பிராந்திய அடிப்படையில் தனித் தனியாகப் பிரித்து பணிமாற்றம் செய்யப்படும்.

கீழ்கண்ட இடங்களில் புதிய சோதனைச் சாவடிகள் செக்போ...டுகள் அமைக்கப்படும். அதனால் அரசாங்கத்திற்கு வருமானம் உயரும். வடஆற்காடு மாவட்டத்தில் ராணிப் பேட்டையிலும் கன்யாகுமரி மாவட்டத்தில் களியக்காவிளையிலும், நிலகிரி மாவட்டத்தில் கூடலூரிலும், பெரியார் மாவட்டத்தில் பன்னாரியிலும், கோவை மாவட்டத்தில் ஆரம்பாளையத்திலும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படும்.

மாநில போக்குவரத்து முறையீடு அலுவலகத்தில், இப்போது அதிகமான வழக்குகள் தேங்கிவிட்ட காரணத்தால், கூடுதலாக ஒன்றினைத் துவங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

[திரு. சு. முத்துசாமி] [1982 மார்ச் 24

சந்தைப் பேருந்துகளுக்கு ஒரு இருக்கைக்கு ரூ.50 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்பின் காரணமாக புதிதாக நிதி ஆதாரம் பெறுவதற்கான நம்பிக்கை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனியார் துறையிலே இருக்கின்ற கனரக பேருந்துகளில் வேகக் கட்டுப்பாடு கருவிகளைப் பொருத்துமாறு கேட்டுக் கொண்டிருக்கிறோம். டீசல் எண்ணெயின் மீதிருந்த கட்டுப்பாட்டை தற்காலிகமாக நாங்கள் நீக்கி வைக்கிறோம்.

ஓட்டுநருக்கான குறைந்தபட்சத் தகுதி 8 ஆம் வகுப்பு என்றிருந்தது. பலபேர் அதிலே ஏற்கனவே கிளீனராக பணி செய்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் 8 ஆம் வகுப்பு படிக்காததோடு மட்டுமல்லாமல், வேறு தொழிலை செய்யக்கூடிய வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, தற்காலிக முறையில் கொஞ்ச காலத்திற்கு இது தளர்த்தப்பட்டு, பிறகு அது உயர்த்தப்படும்.

ஓட்டுநர் உள்பட 7 இருக்கைகளைக் கொண்ட மட்டடார் வேன்கள் மற்றும் ஸ்டாண்டர்டு 20 ஆகிய வேன்களுக்கு நாம் டூரிஸ்ட் உரிமை கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்காக ரூபாய் 150 மட்டும் வரியாக வசூலிக்கப்படும்.

செங்கற்பட்டு, தர்மபுரி, பெரியார் மாவட்டங்களில் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் இல்லை இதுவரையில். எனவே, அந்த இடங்களில் புதிதாக போக்குவரத்து அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

திருச்சி, தஞ்சாவூர், தென் ஆற்காடு, பெரியார், இராமநாதபுரம், மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் கூடுதலாக வட்டாரப்போக்குவரத்து அலுவலர்கள் பதவிகள் நியமிக்கப்படும்.

616 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடுவதற்கு அரசு முழு முயற்சியிலே ஈடுபடும். அதிலே முதற் கட்டமாக 1,500 பேருந்துகளை விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அறிவிப்புகள் எல்லாம் மக்களுக்கு பயன் உடையதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். நான் கடைசியாக கேட்டுக்கொள்கிற ஒரே ஒரு வேண்டுகோள் இதுதான். இன்றைய தினம் காலையிலேகூட ஒத்திவைப்பு தீர்மானம் வந்தது, பல பேருந்துகளை இன்றைய தினம் எரிக்கக்கூடிய சூழ்நிலை எப்படியோ இந்த நாட்டிலே பரவியிருக்கின்றது. இங்கே நீங்கள் பேருந்துகள் வேண்டுமென்று கேட்கிறீர்கள், குறைந்த கட்டணத்தில் வேண்டுமென்று கேட்கிறீர்கள், சிறப்பான பேருந்துகள் வேண்டுமென்றும், படுக்கை வசதி வேண்டுமென்றும், கழிப்பறை வசதி வேண்டுமென்றும் கேட்கிறீர்கள் ஆனால் பேருந்துகள் எரிக்கப்படுகிறபோது ஏன் எரிக்கப்பட்டது என்று ஒரு விபரத்தைச் சொல்வதற்குக் கூட நாம் தயாராக இல்லை எனவே, பொது நோக்கோடு நான் கேட்கிறேன். அப்போதுதான் அரசாங்கம் முழுமையாக எதையும் செய்யமுடியும் என்று சொல்லி இங்கே பேசிய அத்தனை பேர்களுடைய கருத்துக்களுக்கும் நான் பதில் சொல்லியிருக்கிறேன் என்று கருதுகிறேன் என்பதைத் தெரிவித்து சொல்லாததற்கு—அவைக் குறிப்பில் இருக்கிறது அவை மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.



1982 மார்ச் 24] [திரு. சு. முத்துசாமி]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ; துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்கிற சமயத்தில் தமிழ்நாடு பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேசன் 100 கோடி ரூபாய்க்கு 3 கப்பல்களை ஜெர்மெனியிலிருந்து வாங்குவது சம்மந்தமாக ஷிப்பிங் டெவலெப்மென்ட் கமிட்டியிலே சில ஆலோசனைகள் சொன்னதாக சொன்னார்கள். அவர்கள் சொன்னது எல்லாம் நீங்கள் 22 கோடி ரூபாய் பெறக்கூடிய கப்பலை 33 கோடி ரூபாய் கொடுத்து ஏன் வாங்க வேண்டும்? குறைவான விலைக்குக் கப்பல்கள் கிடைக்கிறது என்பதுதான். ஆனால் இங்கேயிருந்து பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் உடனடியாக கொரியாவுக்கும் ஜப்பானுக்கும் ஆபர் வாங்கிவாருங்கள் என்று சொல்வது எப்படி சரியாகும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுபற்றி ஏற்கனவே இங்கே விவாதிக்கப்பட்டு அமைச்சர் முழுமையாக பதிலளித்திருக்கிறார்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : 22 கோடி ரூபாய் பெறக்கூடிய கப்பலுக்கு 33 கோடி ரூபாய் ஏன் கொடுக்கிறீர்கள், சில இடங்களில் அதைவிடக் குறைவாக கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். நீங்கள் மீண்டும் கப்பல் வாங்க வேண்டுமென்றால் மீண்டும் ஒரு குளோபல் டெண்டர் உடனடியாக கேட்க ஏற்பாடு செய்யவேண்டுமே தவிர உங்களுடைய சிப்பந்திகளை அனுப்பி நெகோஷியேட் பண்ணி ஆபர் பண்ணுவது எப்படி செல்லும்? அந்த முறையிலே செய்வது ஊழல் அல்லவா?

மாண்புமிகு. திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்லவேண்டுமென்று நான் எதிர்பார்த்தேனோ அதைச்சொல்லியிருக்கிறார். இப்போது எஸ்.டி.எப்.சியில் நீங்கள் கொரியாவிலேயும் ஜப்பானிலேயும் நேரடியாகக் கேட்டு வாருங்கள் என்று சொல்லி நாம் கேட்பதற்குக்கடிதம் எழுதியிருக்கிறோம் இப்போதே அது குற்றம் என்று சொல்கிறார்கள். இந்த நிலை இருக்கிறபோது குளோபல் டெண்டர் நாங்கள் கால்பார் பண்ணிவிட்டு அதிலே விட்டுவிட்டு நாங்கள் வெளியே

யாரிடமாவது பேசியிருந்தால் என்ன சொல்லியிருப்பார்கள் என்பதற்கு இதுவே பதில். அதன் காரணத்தினால்தான் நாங்கள் வெளியே போகவில்லை குளோபல் டெண்டர் மூலமாக நாங்கள் ஆராய்ந்ததை எஸ்.டிஎப்.சி-க்கு. கொண்டுபோய் வைத்தோம். அவர்கள் அன்றைய தினம் சொல்லிய கருத்தை நாங்கள் கேட்டிருக்கிறோம். எனவே எந்தத் தவறும் செய்யவேண்டுமென்ற நோக்கமில்லை. எனவே சில நேரங்களில் எஸ்.டி.எப்.சி.சொல்லியது அவர்களுக்குச் சாதகமாக இருந்தால் சாதகமாக எடுத்துக் கொள்கிறார்கள், சில நேரங்களில் நமக்கு சாதகமாக வேண்டுமென்று கூறுவதற்கு ஏன் அவர்கள் சொல்லியதைச் செய்தீர்கள் என்றும் கேட்கிறார்கள். ஏன் கேட்கவில்லை என்றும் கேட்கிறார்கள், ஏன் அவர்களுடைய பேச்சைக் கேட்கவில்லை என்றும் கேட்கிறார்கள். எதைக் கடைப்பிடிப்பது என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் நியாயமான முறையை நாங்கள் கடைப்பிடிப்போம்.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஷிப்பிங் கார்ப்பரேஷன் நிர்வாக அமைப்பு அக்கறை கொண்டு அதிகமான விலைக்கு ஏற்பாடு செய்தபோது குறைந்த விலை இருக்கிறது என்று சொல்லி ரொம்ப ஸ்ட்ராங்காக தெளிவாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அதற்கு பிறகு நீங்கள் செய்ய வேண்டியது குளோபல் டென்டருக்கு ஏற்பாடு செய்வது தான். ஆனால் அதற்குப் பதிலாக ஏற்கனவே வைத்துக் கொண்டிருக்கின்ற முறைகளைத் தான் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அங்கேதான் சந்தேகம் வருகிறது.

(பிற்பகல் 2.10)

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : சின்ன விளக்கமாக கேட்கலாமே தவிர மீண்டும் இரண்டாவது முறை பேசுவது போல பேசக் கூடாது. இப்போதே மணி 2.10 ஆகிவிட்டது. சந்தேகம்தான் கேட்கலாம்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, குற்றச்சாட்டை எழுப்பியிருக்கிறோம். அது முக்கியமான பிரச்னை, அதில் ஒரு சந்தேகம்தான் கேட்கிறேன். நான் சொல்ல விரும்புவது இந்த பிரச்னையிலே நீங்கள் ஏற்கனவே குளோபல் டெண்டர் கால்பார் பண்ணி முடித்தாகிவிட்டது. மத்திய சர்க்கார் குறை கூறியாகி விட்டது. மீண்டும் குளோபல் டெண்டர் விடவில்லையென்றால் அதற்கென்ன அர்த்தம்? அதனுடைய மர்மம் என்ன என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்த அர்த்தத்தைத் தான் நான் முதலிலேயே சொன்னேன். நீங்கள் வேறு காரணம் இல்லாத காரணத்தால் அதையே மீண்டும், மீண்டும் கேட்கிறீர்கள். அதற்கு ஏற்கனவே விளக்கமாக



பதில் சொல்லியிருக்கிறேன். நாங்கள் ஏற்கனவே குளோபல் டெண்டர் கால்பார் செய்தோம். அதிலே பங்கு கொள்ள வேண்டுமென்று 26 நாடுகளிலே உள்ள 113 கப்பல் தளங்களுக்கு கடிதத்தை நேர்முகமாக எழுதியிருக்கிறோம். தவறு செய்ய வேண்டுமென்றால் கடிதம் எழுதவேண்டிய அவசியமில்லை. அப்படி எழுதியும் கூட 40 பேர்கள்தான் பதிலை சொல்லியிருக்கிறார்கள். 4 பேர்கள்தான் அதிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். அதை மட்டும் ஆய்வு நடத்தி நாங்கள் அவர்களிடத்தில் வைத்தோம். தவறு சொல்வார்கள் என்ற காரணத்தால் வெளியிலே கேட்கவில்லை. இன்றைய தினம் அவர்கள் நீங்கள் கொரியாவிலே கேட்கலாம். ஜப்பானிலே கேட்கலாம் என்ற கருத்தை சொல்லியிருக்கிறார்கள். குளோபல் டெண்டர் என்று யாரிடத்திலேயும் கேட்க முடியாது. நாம் விளம்பரத்தை கொடுக்கலாம். குறிப்பாக அல்லது எல்லோருக்கும் ஒட்டு மொத்தமாக கடிதத்தை எழுதலாம். இன்றையதினம் அவர்கள் எஸ்.டி.எப்.சி-யில் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு நாட்டிலே இருக்கிற கப்பல் தளங்களில் கேட்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக சொல்லியிருக்கிறார்கள் கொரியா நாட்டிலே இருக்கிற ஒரு கப்பல் தளத்திலேயும், ஜப்பான் நாட்டிலே இருக்கிற இரண்டு பெரிய கப்பல் தளங்களிலும் கேட்கவேண்டுமென்று ; அதன் காரணமாக தான் கேட்டிருக்கிறோம். அதிலே தவறு இல்லை. (கூச்சல், குழப்பம்)

திரு. அ. ரகுமான்கான் : துணைத்தலைவர் அவர்களே, நான் கேட்பதெல்லாம்......(கூச்சல், குழப்பம், குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேண்டாம் உட்காருங்கள். ஒரு வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது. இனி எதையும் அனுமதிக்க மாட்டேன். நீங்கள் இந்த மாதிரி நடந்தால் எதுவும் அவைக்குறிப்பிலே இருக்காது. விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம்

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

திருவாளர்கள் ந. சிவஞானம், என். பழனிவேல், செ. சிவசாமி ஆகியவர்களுடைய தீர்மானங்கள் பேரவையின் அனுமதி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 2,10,46,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

(ஆ). கோரிக்கை எண். 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும். கப்பல் போக்குவரத்தும்.

திருவாளர்கள் த. வேணுகோபால், தி. கா. நல்லப்பன், இ. முத்துராமலிங்கம் ஆகியவர்களுடைய தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

திரு. இல. பலராமன்: அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 67,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 53—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.

திரு. சு. பாலன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''மானியக் கோரிக்கை எண் 53—சாலைப் போக்குவரத்துப் பணிகள். கப்பல் போக்குவரதுத் குறித்த மூலனதச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 6,87,64,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.



மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.15 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4.30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

உள்ளாட்சி நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட சட்ட முன்வடிவுகள்.

(ஆ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகல் நியமனம்) திருத்தச்சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

துணைத் தலைவர் அவர்களே, அடுத்துள்ள இரண்டு சட்ட முன் வடிவுகளையும் சேர்த்து விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். வாக்கெடுப்பை தனித்தனியாக வைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படியே செய்யலாம்.

(இ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1982-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

(ஈ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1982-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

*திரு. சு. பாலன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1982-ஆம் ஆண்டு உள்ளாட்சி, நகராட்சி மன்றங்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி, சென்னை மாநகராட்சி ஆகிய தனி அதிகாரிகளுடைய பதவிக்காலத்தை மேலும் ஓராண்டுக்காலம் நீட்டிக்க வேண்டுமென்று கொண்டுவந்திருக்கிற சட்ட முன்வடிவுபற்றி ஒருசில வார்த்தைகளை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகராட்சி, மற்றும் நகராட்சிகள் பொறுத்த வரையிலே, கடந்த 5 வருடங்கள் 9 மாதங்களுக்கு மேலாக இப்படி நாம் அவர்கள் பதவிக்காலத்தை நீட்டிக்கொண்டே





தேர்தல் வருவதாக நாம் நினைத்துக் கொண்டிருக்கிற நேரத்தில், நீங்கள் பெண்களுக்கு 15 சதவீதமும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதமும் என்ற அடிப்படையிலே இடங்களை ஒதுக்குவதாகச் சொல்லி, அது கோர்ட்டுக்கு சென்று இன்றைய தினம் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அதனாலே, இன்றைய தினம் நடைபெற வேண்டிய தேர்தல்கள் நடைபெறாமல் இருக்கின்ற நிலையில், தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இதனைக் கொண்டு வந்துள்ளார்கள்.

இன்றையதினம் சென்னையைப் பொறுத்த வரையில் தனி அதிகாரிகளின் வேலை எப்படியிருக்கிறது என்றால், அவர்களுக்குப் பொறுப்பு இருந்தாலும், சென்னை மாநகராட்சியிலுள்ள நிலைமைகளைப் பார்க்கின்ற நேரத்தில் அங்கே வருகின்ற வருவாயில் முக்கால் பாகம் அலுவலர்களுக்குத்தான் செலவாகிறது : மீதி கால் பாகத்தில்தான் சென்னைநகரத்திற்குப் செய்ய வேண்டிய பாதை வசதிகள், விளக்கு வசதிகள், இன்னும் பல குடிசைகளில் செய்யப்பட வேண்டிய சுகாதாரப் பிரச்சினைகளைச் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட பிரச்சினைகளைச் சரிவர செய்ய முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு அமைச்சரவர்கள் கூட ஒரு முறை எங்கள் தொகுதியிலே நடைபெற்ற ஒரு விழாவிலே கலந்து கொண்டு விட்டுத் திரும்பி வரும் நேரத்தில் அவர்களே பார்வையிட்டுவிட்டுச் சொன்னார்கள். தெரு விளக்குகளெல்லாம் எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? என்று கேட்டால், ஆம் எல்லாம் எரியாமல் தான் இருக்கின்றன என்று சொல்கிறார்கள்.

மாநகராட்சிக்குத் தனி அதிகாரிகளைத் தவிர இன்னும் பல அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள். ஃபைனான்ஸ் செக்ரட்டரி என்றும், 25 பேரை ஏ.ஆர்.ஓ. என்றும் நியமித்திருக்கிறார்கள். இப்படி அந்த அதிகாரிகளை நியமித்து அவர்களுக்குப் பணத்தை செலவழிப்பதன் மூலம் மக்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்ய முடியாமல் இருக்கிறது. சென்னை மாநகராட்சியில் நல்ல முறையில் பணியாற்றும் திறமை மிக்க அதிகாரிகள் இருந்தாலும் கூட, அவர்கள் சொல்கிறார்கள், நாங்கள் செய்ய வேண்டிய கடமைகள் இருந்தாலும் கூட மாநகராட்சியில் பணம் இல்லை என்று சொல்கிறார்கள்.

குப்பைகளை வார வேண்டுமென்றால் மாட்டு வண்டிகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். லாரிகளை அனுப்புங்கள் என்றால் அவைகள் பழுதடைந்திருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் மாநகராட்சியில் இருப்பதால் இன்னும் ஓராண்டுக் காலம் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று சொல்வதால் எதிர் காலத்திலே சென்னை, இன்னும் மற்ற நகராட்சிகளில் நிலைமைகள் என்னவாகும் என்பதைச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் எப்படியும் ஓராண்டு நீட்டிக்கதான் போகிறீர்கள். எனவே, நான் ஒரு ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன்.

சென்னையிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களையும், எம்.பி.க்களையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து மாநகராட்சிப் பணிகளைச் செய்வதற்கான வழிவகைகளைச் செய்தால் நிச்சயமாகப் பயன் அடையக் கூடிய வகையில் அமையும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஓராண்டுக் காலம் நீட்டிக்கப்பட்டாலும் மாண்புமிகு அமைச்சரவர்கள் மாநகராட்சிக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்க வேண்டும். சென்னை நகரத்தில் சீர் கெட்ட பகுதிகள் இருக்கின்றன; தெரு விளக்குகள் பல காலமாக எரியாமல் இருக்கின்றன; குப்பைகளை வாரத்திற்கு ஒரு முறை தான் வாருகின்ற நிலைமை இருக்கிறது. வண்டிகள் இல்லாமல் இருப்பது தான் அதற்குக் காரணம் என்று சொல்லுகிறார்கள். குடிசைப் பகுதிகளில் சுகாதார வசதிகள் சரிவர செய்யப்படாமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் செய்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தி, அதற்கான பணத்தைக் கொடுத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, இந்த நீட்டிப்பு வேண்டாமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு மன்றத்தினுடைய பேரவைத் துணைத் தலைவரவர்களே, நமது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மசோத்தாக்களை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு தந்தமைக்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் ஊராட்சி மன்றங்களிலும், ஒன்றியங்களிலும் பெண்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும், மலைவாசி மக்களுக்கும் உரிய இடத்தைக்கொடுத்து, அதன் பயனாக அந்த எளிய மக்களிடத்திலே, நலிந்து போன மக்களிடத்திலே எழுச்சியை ஏற்படுத்துவதற்கான புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்ற புரட்சித் தலைவரவர்களின் அரசு, அடுத்த கட்டத்தில் நலிந்து போன நகராட்சிகளுக்கும் தன்னிறைவுத் திட்டத்தைத் தந்து, கிராமங்களைப் போல நகரங்களும் வளர வேண்டுமென்ற அடிப்படைக் கருத்தை இந்த நாட்டிலே சொல்லுமளவிற்குத் திட்டத்தை வைத்திருக்கிறது. நகரங்களைப் போல் கிராமப் புறங்கள் வளர வேண்டுமென்று சொல்லப்படும் நிலைமையை மாற்றி கிராமங்களைப் போல நகர்ங்கள் தன்னிறைவு அடைய வேண்டுமென்று சொல்லுகின்ற அளவிற்கு இந்த ஆட்சி மாற்றியமைத்திருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அந்த வகையில் கிராமப் புற மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் அடிப்படையில் அவர்களுடைய சமூக, பொருளாதார உயர்வுக்காகப் பாடுபட்டு வரும் இந்த அரசுக்கு நான் நன்றி சொல்லி, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்த மசோதாவில் தனி அதிகாரிகளின் கால நீட்டிப்பு கேட்கப்பட்டிருந்தாலும் அப்படிப்பட்ட தனி அதிகாரிகள் இருக்கின்ற நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் தனிக் கவனம் செலுத்துவதன்



காரணமாக, அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற வேகமான நல்ல முடிவுகளின் காரணமாக, திறமையின் காரணமாக நல்ல முறையில் நிர்வாகம் சீர்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்து வருகிறோம்.

[மாலை 4-40.]

இன்று கோவை மாவட்டத்தில் அதன் தலைநகர் கோவை நகராட்சி, மாநகராட்சியாக ஆக்கப்பட்ட பின்னால், அதன் வளர்ச்சிக்கு என்று பல திட்டங்கள் நமது அரசால் நிறைவேற்றப்பட்டு இருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். இன்று கோவை மாநகரத்தைப் பொறுத்த அளவிலே தென்னிந்தியாவிலேயே பெங்களூரைப் போல சிறப்புறுகிற ஒரு வாய்ப்பு பெற்றிருக்கின்ற மாநகரம். ஒரு பக்கத்தில் நீலகிரி மலை: இன்னொரு பக்கத்திலே ஆனை மலை, மறு பக்கத்திலே சிறுவானி மலைத் தொடரும் இடையில் இருக்கின்ற அந்த அழகான நகரம் சீதோஷ்ண நிலையிலும், மற்றத் தொழில் வளர்ச்சியிலும், மக்களுடைய அந்த நிறைவான முன்னேற்றத்திலும் பெங்களூர் நகரத்தைவிட சிறப்புறுகிற ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கின்ற நகரம்.

அந்த நகரத்திற்குப் புகழ் சேர்க்கின்ற வகையில் அந்த நகரத்தோடு ஒட்டிய மருதமலைப் பகுதியில், பாரதியார் பல்கலைக் கழகம் வர இருக்கின்ற அதே நேரத்தில் அந்த நகரைச் சிறப்பிப்பதற்காக அந்த நகரின் நீண்ட காலக் கோரிக்கையைப் பூர்த்தி செய்கிற வகையில் அரசு அதற்கான சிறப்புத் திட்டத்தை வகுக்க பரிசீலித்து வருவதை விரிவு படுத்தி அந்த நகரத்தில் இன்று அதனுடைய மக்கள் தொகைக்கும் பரப்பளவிற்கும் ஏற்ற வருமானம் இல்லை. நல்ல சீர்திருத்தத் திட்டங்களை மேற் கொள்வதற்கான வருமானம் அந்த நகராட்சியில் போதுமானதாக இல்லை என்பது ஒரு புறம் இருக்க அரசு அதை விரிவு படுத்துகின்ற காரணத்தால் 'ஆட் ஏரியா' அதோடு சேர்க்கப்பட்ட அந்தப் பஞ்சாயத்து பகுதிகளில் இருக்கின்ற அடிப்படை தேவைகளை நிறை வேற்றுகின்ற கடமையை அரசு இன்று ஏற்று இருக்கிறது. ஆகவே, அதன் காரணமாக மேற் கொண்டும் அதிக அளவிற்கு நிதி தேவைப்படுகிற காரணத்தால் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெகு விரைவில் அந்த பாரதி பல்கலைக் கழகம் துவங்குவதற்கு முன்பாகவே மேம்பாட்டுத் திட்டங்களைச் செய்வதற்கு முன்வந்து இருக்கிறார்கள். அதை நான் வரவேற்று அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்தில் கோவை மாநகரத்தில் சாலைகள் சீர்திருத்தப்படவேண்டும். இன்று சென்னையைவிட விபத்துக்கள் அங்கே அதிகம் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த அளவிற்கு அந்த நகரத்தில் நெரிசல் அதிகமாக இருக்கிறது.

ஆகவே, அந்தச் சாலைகள் விரிவு படுத்தப்பட வேண்டும், அந்த நகராட்சிப் பகுதியில் எனது தொகுதியைச் சேர்ந்த சங்கனூர், கணபதி ஆகிய பகுதிகள் இணைக்கப்பட்ட பகுதிகள் ஆகும். அந்தப் பகுதியில் குறைபாடுகள் மிக மிக அதிகமாக இருக்கின்றன. இணைப்புப் பகுதியில் இருக்கும் அந்த மின்சார நிர்வாகம் எலெக்டிரிசிடி போர்டால் பராமரிக்கப்பட்டு வருகிறது, அதற்கான பொருள்களை விளக்குகளை மற்ற உபகரணங்களை வாங்கிக் கொடுக்கும் பொறுப்பு கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் இருக்கிறது. இதனால் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. மக்களுக்கு இதனால் ஏற்படுகிற பிரச்சினை மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தால் மற்ற கார்ப்பரேஷன் பகுதியில் எப்படி கார்ப்பரேஷன் நிர்வாகமே அந்த மின் சப்ளையை நிர்வகித்து வருகிறதோ அதே போல் இந்த இணைப்புப் பகுதியிலும் உள்ள மின்துறை நிர்வாகத்தையும் மாநகராட்சியே எடுத்துக் கொள்ள முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், இதற்கு மின் துறை அமைச்சரிடம் உள்ளாட்சித் துறை அமைச்சர் கலந்து பேசி விரைவில் அதை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் அந்த அடிப்படை குறையை, மின் விளக்குகள் எறியவில்லை என்ற குறையை நாம் போக்க முடியும்.

அதோடு இணைப்புப் பகுதியிலே சிறுவாணி குடிநீர் திட்டம் தீட்டப்பட்டு குழாய்கள் எல்லாம் பதிக்கப்பட்டு இருக்கின்றன. இருப்பினும் அந்த சிறுவாணி நீர் வெய்யில் காலத்தில் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வாட்டர் போர்ட் பொறுத்த வரையில் பூர்த்தி செய்து இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை குறிப்பிட்ட காலத்தில் கொடுத்து குழாய்களைப் பதித்து இருக்கிறார்கள், வினியோகமுறையில் சிலஇடர்ப்பாடுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது, அதற்குக் காரணமாக சொல்லப்படுவது ஏற்கனவே திட்டமிடப்பட்டபோது 16 கோடி ஆகியது. இன்று கேரளாவில் கட்டப்படுகின்ற அந்த அணையின் எஸ்கலேஷன் மதிப்பீடு உயர்ந்ததன் காரணமாக கூடுதலாக 6 கோடி என்று சொல்லப்படுகிறது. அந்த 16 கோடியை 22 கோடியாக உயர்த்தி அரசு விரைவில் ஆணையிட்டு, இந்தத் திட்டத்தை அங்கீகரித்து தந்து உதவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிறுவாணி குடிநீர் திட்டம் அனைத்து கார்ப்ரேஷன் பகுதிகளுக்கும் முழுக்க முழுக்க அந்தப் பகுதிக்கு உட்பட்ட அத்தனைப் பகுதிகளுக்கும் கொடுக்கின்ற முயற்சியில் அமைச்சர் அவர்கள் ஈடுபட்டு அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அப்படி கொடுக்கின்றபோது நீர் இந்த வெய்யில் காலத்தில் கொடுக்கப்பட்டால் மக்கள் மத்தியிலே வரவேற்பு கிடைக்கும். ஆகவே அதன் காரணமாக குடிநீர் பஞ்சம் கோவையிலே ஏற்படுவதற்கு முன்னாலே இந்தக் குடிநீர் விநியோகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்று பணிவோடு **கேட்டுக்** கொள்கிறேன். அதோடு இந்த இணைப்புப் பகுதியில்



பெருங்குறை என்னவென்றால், அங்கே உயர்நிலைப் பள்ளிகள் இல்லை. சிங்காநல்லூர், கணபதி போன்ற பகுதிகளில் இன்று அரசாங்கம் நடத்துகின்ற அல்லது கார்ப்பரேஷன் நடத்துகின்ற பள்ளிகளே இல்லை. தனியார் பள்ளிகளும் மிகவும் தொலைவில் உள்ளது. 1947, 1950 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகள் தான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. 1947-50-லே ஏற்படுத்தப்பட்ட நகராட்சிப் பள்ளிகள் தான், இன்று வரையில் இருந்து வருகின்றன. ஆக ஒரு 20, 25 ஆண்டுகள் ஆகியும் புதிய பள்ளிகள் துவங்கப்படவில்லை. ஆனால் அந்த நகரம், 4 இலட்சத்தில் இருந்து 7 இலட்சம் மக்கள் தொகைக்கு இன்றைக்கு பெருகி இருக்கிறது. ஆகவே, சாதாரண நடுத்தர மக்கள், ஏழைஎளிய மக்கள் படிக்கக்கூடிய கல்வி வசதியைத் தரக்கூடிய உயர்நிலைப் பள்ளிகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல், ஆரம்பப்பள்ளிகள் மிகமிகக் குறைவாக உள்ளன. புதிய பள்ளிகள் துவங்கப்பட
வில்லை. ஆகவே, கணபதியில், ரத்தினபுரியில் சாய்பாபா
காலனி வட பகுதியிலும், புதிய உயர்நிலைப் பள்ளிகளை
கோவை மாநகராட்சி துவங்குவதற்கு முன்வரவேண்டு
மென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, நகராட்சியில் இருக்கின்ற, அத்தனைப் பகுதிகளை
யும் விரிவு படுத்துகின்ற முறையில், வளர்ந்துவருகிற அந்த நக
ரத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு, சென்னையில் இருப்பது
போல், ஒரு மெட்ரோபாலிடன் டெவலப்மென்ட் அதாரிட்
டியை, கோவை மாநகரத்திற்கு ஏற்படுத்தினால் கூட, திட்ட
மிட்டு, அங்கு வளர்ச்சியைச் சீர்படுவதற்கு வசதியாக இருக்கும்
என்ற கோரிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதோடு என்னுடைய
தொகுதியில் உள்ள, பெரியநாயக்கன்பாளையம், என்ற ஒரு
பெரிய பகுதி, வளர்ந்து வருகின்ற பகுதி, அந்த பெரியநாயக்கன்
பாளையம் பேரூராட்சியாக இருக்கிறது. எல்லாத் தகுதிகளையும்
பெற்று இருக்கின்ற அந்தப் பகுதி நகராட்சியாக உயர்த்து
வதற்கான அனைத்துத் தகுதியும் பெற்று உள்ள அந்த
ஊரை, நகராட்சியாக இந்த நிதி ஆண்டில் மாற்றி அமைப்ப
தற்கான ஆலோசனை அரசுக்கு வந்திருக்கிறது. ஆகவே,
பெரியநாயக்கன்பாளையத்தை, நகராட்சியாக உயர்த்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

ஆகவே, இந்தப் பேரூராட்சிப் பகுதியையும் நகராட்சியாக மாற்றித்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொண்டு முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கக்கூடிய இந்த 3 சட்டமுன் வடிவுகளும், வேறு வழியில்லாமல் அனுமதிக்கப்படவேண்டிய சட்டமுன்வடிவுகளாக இருக்கிறதே தவிர, வரவேற்கப்பட வேண்டிய முன்வடிவுகளாக அவைகள் இல்லை என்பதை அனைவரும் அறிவார்கள். காரணம் என்னவென்றால், இன்றைக்கு இந்த மூன்று சட்டமுன்வடிவுகளும், சென்னையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு தேர்தலை நடத்துவதற்கு 1982 ஆம் ஆண்டு முதல் மேலும் ஒரு வருட காலம் அவகாசம் கொடுக்கிறது; கோவையிலே இருக்கக்கூடிய அதிகாரிக்கு 1982 ஜூன் 11 ஆம் தேதி முதல் மேலும் ஒரு வருடம் காலம் அவகாசம் கொடுக்கிறது. மற்ற நகராட்சியினுடைய விசேஷ அதிகாரிகளைப் பொறுத்தவரையில் 1982 மார்ச்சு 31-லிருந்து மேலும் 1 ஆண்டு காலத்திற்கு, அவர்களுடைய அதிகாரத்தை நீடிப்பதற்கான வழி செய்யக்கூடிய, வகை செய்யக்கூடிய சட்டமுன் வடிவுகளாக இருக்கிறது. இதற்குக்காரணம், இன்றைக்கு உயர்நீதிமன்றத்திலே பஞ்சாயத்து யூனியன்களுக்கான, அரிஜன மக்களுக்கும், பெண்களுக்கும், இட ஒதுக்கீடு செய்த முடிவை ஒட்டி போடப்பட்டிருக்கக்கூடிய வழக்குகளின் காரணம் என்று இதிலே கூறப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஏற்கனவே நாம் விவாதித்து இருக்கிறோம். எப்படிச் செய்தாலும், இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன்களிலே, அதாவது சில இடங்களில் அரிஜன இட ஒதுக்கீடு செய்ய வேண்டி வரும், பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டி வரும். அந்த எண்ணிக்கையை குறைக்க முடியாது. இதை ஏற்றுக்கொள்வதற்கு இங்கே உள்ள இது சம்பந்தப்பட்டவர்களுக்கு மனசு இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். எல்லா அரசியல் கட்சிகளுமே சேர்ந்து அம்மாதிரியான ரிட் மனுக்களை தாக்கல் செய்திருக்கக்கூடியவர்களையெல்லாம் அதை வாபஸ் வாங்கக்கூடிய ஒரு பெரு முயற்சியை செய்வது நல்லது என்று நான் கருதுகிறேன். எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் எங்களுடைய உறுப்பினர்களோ, அல்லது ஆதரவாளர்களோ ஒரு ரிட் மனுவைக் கூட தாக்கல் செய்யவில்லை. ஏன்னென்றால், அவ்வாறு தாக்கல் செய்யாதற்கு என்ன அர்த்தம் என்றால், அரிஜனங்களுக்கும், பெண்களுக்கும், இட ஒதுக்கீடு செய்து இருப்பதிலே, ஏதோ சிலபல இடங்கள் வந்திருக்கலாம், எப்படியும், அந்த மாநகராட்சிகளிலே, சில இடங்கள் கொடுக்கப்படவேண்டும், அது எந்த இடமாக இருந்தால் என்ன அதை அதை எதற்காக நிறுத்தி வைக்க வேண்டும் என்ற உயரிய கொள்கையால் நாங்கள் கட்டளை இட்டோம். அதை ஆட்சேபிக்கக்கூடாது என்று தெரிவித்தோம். ஆகவே, எந்த விதமான ரிட் மனுக்களும் எங்களால் தாக்கல் செய்யப்படவில்லை. இதைப்போன்று இந்த மன்றத்திலே உள்ள மற்ற கட்சிகளைப் பொறுத்தவரைக்கும், அவரவர்கள்,



மனதிலே கைவைத்து, அவர்களுடைய செல்வாக்கிற்கு உட்பட்டவர்கள், அந்த ரிட் மனுக்களை தாக்கல் செய்திருப்பார்களேயானால், அவர்களிடத்திலே, இந்தக் கொள்கையைப் பற்றி பேசி அதை வாபஸ் வாங்குவதற்கு அரசியல் கட்சிகள் அனைத்தும் முயற்சி செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 4--50)

அதேநேரத்தில் மாநில அரசாங்கம் அந்த ரிட் மனுக்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அல்லது கொடுத்திருக்கிற ஸ்டே உத்தரவை ரத்து செய்வதற்கு தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது இது சம்பந்தமாக தமிழக அரசு என்ன செய்திருக்கிறது என்பதை விளக்குவார்கள் என்று கருதுகிறேன்.

திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களில் யாராவது வழக்குத் தொடர்ந்திருந்தால் அவர்கள் வாபஸ் வாங்குவார்களா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

திரு. என். சங்கரய்யா : கனம் உறுப்பினர் அவர்கள் என்னுடைய கருத்தை வலுப்படுத்துகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் யாராவது வழக்குப் போட்டிருந்தால் அது இன்னும் வருத்தப்பட வேண்டிய விஷயம். நான் கேட்டுக்கொள்வது, எல்லா அரசியல் கட்சிகளும் சேர்ந்து இதற்கு ஒரு முயற்சி எடுத்தால் நல்லது. இந்த வழக்குகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவர அல்லது தடை உத்தரவை நீக்க இந்த அரசாங்கம் தன்னால் இயன்ற எல்லாவற்றையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குக் காரணம், நகராட்சி மன்ற தேர்தல்கள் நடைபெற்று பல ஆண்டுகள் ஆகிவிட்டன. தேர்தல் நடந்ததா என்பதையே மக்கள் மறந்து விடுவார்கள் போலிருக்கிறது. நல்ல வேளையாக மதுரை கார்ப்பரேஷனுக்கு தேர்தல் நடந்து முடிந்து விட்டது. மற்ற நகராட்சிகளுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் கோவை மாநகராட்சிக்கும் இருக்கக்கூடிய பிரச்சினைகளைப்பற்றி முன்னாலே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.

கோவை மாநகராட்சி இன்றைக்கு பெரிய தொழில் நகராக விளங்குகிறது. அங்கே தற்போது நிறைய குப்பை சேர்ந்து விட்டது என்றும் அவற்றை கவனிப்பதற்கு ஆள் இல்லை என்றும், பள்ளிக்கூடங்கள் சரியாக நடக்கவில்லை என்றும் சொன்னார்கள், இன்னொரு பயமும் அங்கே இருக்கிறது. அந்த மாநகராட்சியை 60 வார்டுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அதற்கு வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டுமென்ற ஒரு காரணமும்

சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், எந்தக் காரணத்தைக் கொண்டும் மற்ற நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்தும்போதுகோவைமாநகராட்சிக்கும் தேர்தல் நடத்தியே ஆக வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் இப்போதே செய்தாக வேண்டும். மற்ற அமைப்புகளுக் கல்லாம் தேர்தல் முடிந்த பிறகு வாக்காளர் பட்டியலை காரணம் காட்டி கோவை மாநகராட்சித் தேர்தலை மேலும் ஓராண்டுக்கு தள்ளி வைத்துவிடக் கூடாது.

முன்னாலே அரசாங்கம் அறிவித்தது என்னவென்றால் பஞ்சாயத்துத் தேர்தல் முடிந்து, நகராட்சித் தேர்தல் முடிந்து, மாநகராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று. இப்போது அந்த நிலைமை மாறி இருக்கிறது, அதனுடைய கால அட்டவணை கவிழ்ந்திருக்கிறது. எனவே, பஞ்சாயத்து தேர்தல் முடிந்தவுடனே நகராட்சிகளுக்கும். சென்னை, கோவை மாநகராட்சிகளுக்கும் சேர்த்து ஒரே நேரத்தில் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கோவை மாநகராட்சியில் விஸ்தரிப்பு ஏரியா என்று சில பகுதிகளைச் சேர்த்திருக்கிறார்கள். அங்கே மின்சார வசதியும் இல்லை ; குடிதண்ணீர் வசதியும் இல்லை. அதைக் கவனிக்க ஆள் இல்லை.

அதைப்போல இன்றைக்கு பழனியில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நகரசபை இல்லாத காரணத்தால் அங்கே பாதாளச் சாக்கடைத் திட்டம் போடப்பட்டு இரண்டு ஆண்டுகாலமாகியும் வேலை முடியவில்லை. அங்கு மட்டுமல்ல ; எல்லா இடங்களிலும் இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. விஸ்தரிப்புப் பகுதிகளிலே குடிதண்ணிர் வசதி இல்லை ; மின்சார விளக்கு வசதி இல்லை.

அது மட்டுமல்ல, பழனி நகராட்சியில் மேல்நிலைப் பள்ளி இருக்கும் இடத்தில் கடைகளைக் கட்டி, வாடகைக்கு விட்டால் நகராட்சிக்கு அதிகமான வருமானம் வரும் என்று ஒரு திட்டத்தைப்போட்டு இர்ண்டு ஆண்டுகாலத்திற்கு மேலாகியும் அந்தத் திட்டம் அமுலுக்கு வரவில்லை. அங்கு மட்டுமல்லாமல், கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் உள்ள 100 நகராட்சிகளிலும் இப்படித்தான் இருக்கிறது.

சென்னை மாநகரில் இன்றைக்கு கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. மலேரியாவை மற்ற இடங்களில் ஓரளவுக்கு கட்டுப்படுத்தியிருந்தாலும் சென்னை மாநகரில் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது நமக்கு நன்றாகத் தெரியும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கே அதிகாரிகள்தான் இருக்கிறார்கள், ஆலோசனைக் குழு வேலை செய்யவில்லை என்பது பொது



இந்த நேரத்தில் நான் அரசாங்கத்திற்கு ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். ஒவ்வொரு நகராட்சிக்கும் சர்வகட்சி பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழுவிலே யார், யார் இடம்பெற வேண்டும் என்பதை அந்தந்தக் கட்சிகள் முடிவு செய்துகொள்ள வேண்டும். அரசாங்கம் அந்தந்த கட்சிகளின் மாநிலத் தலைமையை அல்லது மாவட்ட தலைமையைக் கேட்டு, அவர்கள் சார்பிலே அவர்கள் யாரைச் சொல்கிறார்களோ அவர்களை அந்தக் குழுவிலே நியமிக்க வேண்டும். அப்படியானால் ஓரளவுக்கு மக்கள் பிரதிநிதிகள் இல்லாத குறையை நிவர்த்தி செய்யலாம். இப்போதும் குழு இருப்பதாகச் சொல்கிறார்கள் ; ஆனால் அந்தக் குழு கூடவில்லை, அல்லது கூட்டப்படவில்லை.

இன்னொன்று. அரசாங்கத்திற்கு இதிலே பெரும் பொறுப்பு இருக்கிற காரணத்தால் இந்த நகராட்சித் தேர்தல் நடக்கும் வரையில் இந்த மன்றத்திலும் மேல்சபையிலும் இடம் பெற்றிருக்கக்கூடிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு கண்காணிப்பு கமிட்டி உள்ளாட்சித் துறை அமைச்சரின் தலைமையின்கீழ் இருந்து செயல்பட்டால் சிறப்பாக இருக்கும். நூற்றுக்கணக்கான நகராட்சிகளுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து அவர்கள் ஆலோசனை கூறுவதற்கும், குறைகளை அரசாங்கம் நேரடியாகத் தீர்ப்பதற்கும் ஒரு பரிகாரம் காண்பதற்கு அதுவசதியாக இருக்கும். ஆகவே, இந்தமாமன்றத்திலும் மேலவையிலும் இடம் பெற்றிருக்கிற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக்கொண்ட கண்காணிப்பு கமிட்டி ஏற்படுத்தப்படுவது மிகவும் அவசியம் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எல்லா இடங்களிலும் பிரச்சினை என்னவென்றால்—நான் கேள்விப்பட்டதை ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன்—பல்லவபுரம் நகராட்சியில் ரோட் ரோலர் இல்லாததால், ரோடு போடுவதற்கான கற்கள், மணல் போன்றவைகள் சேகரித்து வைத்து ஒரு மாதம் ஆகியும் இன்னும் ரோடு போட முடியவில்லை. பி. டபிள்யூ.டியைக் கேட்டால், அவர்களிடத்தில் கொடுப்பதற்கு இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன என்று அறிகின்றேன். ஆகவே, இப்படிப்பட்ட ரோட்ரோலர் போன்ற அத்தியாவசியமான தேவையுள்ள சாதனங்களை முனிசிபாலிட்டிகளுக்குக் கொடுப்பதற்கு என்ன நடைமுறையை வைத்து இருக்கிறீர்கள் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, மின் விளக்குகள் எறியவில்லை யன்றால் யாரிடத்தில் சொல்வது என்கின்ற நிலைமை இருக்கிறது. இதை நகராட்சி செய்யவேண்டுமா அல்லது மின்துறை செய்ய வேண்டுமா என்பது தெரியவில்லை. இந்த இரண்டு பேருக்கும் இடையிலே பந்துபோல் மக்கள் சென்று

வரவேண்டியிருக்கிறது. இதனால் மக்கள் பாதிக்கப்படுவதால் இதைச் சரிபடுத்தவேண்டியது யார் பொறுப்பு என்பதை அரசு நிர்ணயித்து அறிவிக்க வேண்டும். இப்படி பொறுப்பற்ற முறையில் இருக்கக்கூடாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் பிரச்சினையும் ஆங்காங்கு இருக்கிறது. இது கோடைக்காலம். திண்டுக்கல் போன்ற இடங்களில் இதற்காக கிளர்ச்சி கூட நடந்து இருக்கிறது. மின் வசதி இல்லாத்தால் தண்ணீர் இல்லை என்று சொல்லப்படுகிறது. எனக்குத் தோன்று கிற யோசனை என்னவென்றால், அரசாங்கம் ஜெனரேட்டர் ஏற்பாடு செய்து தண்ணீரைப் பம்ப் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இது குறித்து அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது மிகவும் அத்தியாவசிய மான பிரச்சினையாக இருப்பதால், பல இலட்சக்கணக்கான மக்களை பாதிக்கக்கூடிய பிரச்சினையாக இருப்பதால், இந்த யோசனையைப் பரிசீலித்து முடிவு எடுத்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த இடைக் காலத் தில் நிர்வாகத்தை முறையாக நடத்துவதற்கு ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்து, தேர்தலை உடனடியாக நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்தச் சட்டத்திலே, ஒரு வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. 6 மாத காலத்திற்குள் இந்த தனி அலுவலர்கள் பதவிக்காலம் முடித்துக் கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டு இருப்பதால், மக்கள் நலன் கருதி அரசாங்கம் தேர்தலை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்யவேண்டும் என்று கேட்டு, தனிப்பட்ட வர்கள் இந்தச் சட்டத்தை எதிர்த்து ரிட் மனு தாக்கல் செய்து இருந்தாலும், கட்சிகள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, அதை வாபஸ் பெறச் செய்யவேண்டும் அவர்களைக் கேட்கவேண்டும் என்ற ஆலோசனை தெரிவித்து அரசாங்கமும் இந்த வழக்கை விரைவாக நடத்தி முடிக்க சீரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டு, வேறு வழி இல்லாமல் இருப்பதால், இந்தச் சட்டமுன்வடிவுகளுக்கு தற்காலிகமாக அனுமதி வழங்கவேண்டியிருக்கின்றது என்பதைச் சொல்லி உரையை முடிக்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள சட்டமுன்வடிவுகளை வர வேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் தேர்தலை நடத்த வேண்டும், அதற்கான வகையில் இந்தச் சட்ட ஷரத்தை எதிர்த்து யாராவது கட்சி சார்பில் மனு தாக்கல் செய்து இருப் பார்களானால், குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டியவர்கள் யாராவது ரிட் மனு தாக்கல் செய்திருப்பார் களானால் அவற்றையெல்லாம் உடனடியாக வாபஸ் வாங்கவேண் டும் என்று சொன்னார்கள். அதையே என்னுடைய கருத்தாக வும் சொல்லிக் கொள்கிறேன்.



கோவை நகராட்சியை மாநகராட்சியாக மாற்றியது மட்டும் அல்ல, அதை ஒரு பூங்கா நகரமாக—எப்படி பெங்களூர் பூங்கா நகரம் என்று பெயர் பெற்று விளங்குகிறதோ அதைப்போல— கோவை நகரத்தை மாற்றுவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கும், இந்த அரசு எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளுக்கும் என்னுடைய பாராட்டு களையும்—நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரம்—வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அள விற்கு ஒளிமிகுந்த நகரமாக இருப்பதற்கு—சோடியம் விளக்கு களைப் போட்டு, அதை ஒரு அழகு நகரமாக காட்சியளிக்கச் செய்வதற்கு, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத் துக் கொண்ட நல்ல முயற்சிக்கு என்னுடைய பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதைப் போல பல நகராட்சிகளுக் கும், பல மாவட்ட தலைநகரங்களுக்கும் சோடியம் விளக்குகள் போடவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் உள்ள காமராஜர் சாலை தூய்மைப் பகுதி என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அந்தச் சாலையைத் தூய் மையாக வைத்து இருப்பதற்காக பல்வேறு நல்ல காரியங்களை அமைச்சர் அவர்கள் செய்து இருக்கிறார்கள். அதனால் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. அந்தச் சாலை இப் போது மிக அழகான—எப்படி சிங்கப்பூர் நகரம் தூய்மையான நகரம் என்று பெயர் பெற்று இருக்கிறதோ—அந்த முறையில் அந்தப் பகுதி அழகாக இருக்கிறது. அப்படி அந்தப் பகுதியைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கு எந்தவிதமான சட்டங் களோ கடுமையான திட்டங்களோ தண்டனையோ இல்லை. ஒரு நல்ல நடவடிக்கை மூலமே இதை அவர்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள். ஆகவே, அதைப் போல சென்னை நகரில் உள்ள பல முக்கிய சாலைகளை—குறிப்பாக அண்ணா சாலை போன்ற பிரதான சாலைகளை தூய்மைப் பகுதி என்று அறிவித்து சென்னை நகரை அழகுபடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகர மக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லையே என்கிற குறையை நீக்குகின்ற வகையில், மாண்புமிகு அமைச்சர் அவர்களே அந்தப் பணியை இன்றையதினம் மேற் கொண்டு நிறைவேற்றி வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு வட்டமாகச் சென்று, மக்களின் குறைகளை அறிந்து, நேரடியாக அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில், சகல அதிகாரிகளையும் உடன் அழைத்துச் சென்று, ஆங்காங்கு உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருவதற்காக அவர்களுக்கு என்னுடைய பாராட்டு களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 5.00)

இங்கே அகில இந்திய சுற்றுலா பொருட்காட்சியில் கூட முதலாவது இடத்தைப் பெற்றது மாநகராட்சி ஸ்டால்தான். மாநகராடசியின் தொழிலாளர்கள் சிறப்பான வகையில் பணி களைச்செய்தார்கள் என்பதற்காக அங்கே அவர்களுக்குப் பரிசுகள் கூட வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். அதைப் போல் உலக வங்கியின் உதவியுடன் பல திட்டங் கள் வர இருப்பதாகத் தெரிகிறது. அதையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் கிராமப் புறங்களில் எல்லாம் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய அமைச்சர் அவர்களைப் பாராட்டுவதோடு, என்னுடைய தொகுதியான ஆரணியிலே ஒரு பேருந்து நிலையம் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சென்னை மாநகராட்சி, கோவை மாநகராட்சி, தமிழ்நாடு நகராட்சி மன்றங் களுடைய தனி அதிகாரிகளின் பதவி காலத்தை நீட்டிப்பது போன்ற சட்டமுன்வடிவ்வுகளின் மீது, ஆட்சிக் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நாடு சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகள் ஆகியும் இன்றைக்கு நம்முடைய சமுதாய அமைப்பு மாறாமல் இருக்கிறது. அதை மாற்றி அமைக்கின்ற முறையிலே, எல்லா அரசியல் கட்சிகளும் போட்டியிடக் கூடிய விதத்திலே, நகராட்சி, ஊராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த் உத்தேசித்த நேரத்திலே அது தள்ளி வைக்கப்பட்டு, இன்றைக்கு மக்களின் பிரதிநிதிகள் பொதுத் துறையிலே போட்டியிட்டு நகராட்சி மன்றங்களுடைய சேர் மேனாகவும், ஊராட்சி மன்றங்களுடைய தலைவர்களாகவும் வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அரசியல் சட்டப்படி வேலை வாய்ப்புகளிலும், மற்ற வகைகளிலும் தாழ்த்தப்பட்டவர் களுக்கு கொடுக்கப்பட்ட அந்த 18 சதவீத ஒதுக்கீடு இடங்களை நகராட்சி, ஊராட்சி மன்றத் தேர்தல்களிலும் அளிக்க வேண்டும் என்றும், அதேநேரத்தில் சமுதாயத்தின் இரு கண்களாக இருக்கக் கூடிய பெண்களுக்கு 15 சதவீதம் ஒதுக்கீட்டை செய்ய வேண்டும் என்றும் ஒரு முடிவை எடுத்து புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட அந்தத் திட்டமானது இன்றைக்கு நிறை வேற்ற முடியாத நிலையில் சிலர் முட்டுக்கட்டை போடுகின்ற விதத்தில், நீதிமன்றங்களுக்குச் சென்று தடை உத்தரவை பெற் றிருக்கிறார்கள்.



இந்தத் தேர்தலை நடத்தினால் வெற்றியை சந்திக்க முடி யாதோ என்ற எண்ணத்தின் காரணத்தினால் இன்றைக்கு மாற்றுக் கட்சிக்காரர்கள் அந்தத் தடையைப் பெற்று இதற்கு முட்டுக் கட்டைப் போட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மாதிரியான அடிப்படையில்தான் இன்றைக்குத் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இரண்டாவதாக, நாங்கள் தேர்தலைக் கண்டு அஞ்சக் கூடியவர் களும் அல்ல. தேர்தலைத் தள்ளி வைத்து தனி அதிகாரிகளுடைய ஆட்சிதான் நீடிக்கவேண்டும் என்ற எண்ணம் உடைய வர்களும் அல்ல. எங்களுடைய வேலையும் அதுவல்ல. எங்களுடைய கொள்கையும் அதுவல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் தேர்தலைக் கண்டு அஞ்சுபவர்கள்தான் நீதிமன்றங்களுக்குச் சென்று, தடை உத்தரவை வாங்கியிருக்கிறார் களே தவிர, தேர்தலைக் கண்டு அஞ்சுபவர்கள் நாங்கள் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை.)

இரண்டாவதாக 1973 ஆம் ஆண்டுதான் நகராட்சிகள் மாநகராட்சிகளின் 'டிவிஷன்' வார்டுகள் பிரிக்கப்பட்டிருக் கின்றன. அது 1971 ஆம் ஆண்டு எடுத்த நாட்டிலுள்ள மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில்தான், 1973 ஆம் ஆண்டு இந்த வார்டுகள் பிரிக்கப்பட்டன. அதே 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகையின் அடிப்படையில்தான் 18 சதவீதம் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும், 15 சதவீதம் மகளிருக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பெற்றிருக்கிறது. அந்த முறை சரியானது அல்ல. இடை யில் தடை வந்துவிட்டதன் காரணமாக தேர்தல்கள் நிறுத்தப் பட்டு விட்டது. அதே நேரத்தில் 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பும் முடிவடைந்து வெளியாகிக் கொண் டிருக்கிறது. ஆகவே 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மக்கள் தொகை அடிப்படையில் வார்டுகளைப் பிரித்திருப்பதை மாற்றி 1981 ஆம் ஆண்டு, நடந்து முடிந்த மக்கள் தொகை கணக் கெடுப்பில் வார்டுகள் பிரிக்க வேண்டிய அவசியம் இருக் கிறது. ஆகவே இந்தப் பணிகளையெல்லாம் செய்து முடிக்கக் குறைந்தது ஒரு ஆண்டுக்காலமாவது தேவைப்படும் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று.

ஆகவே தேர்தலைத் தள்ளி வைத்து, தனி அதிகாரிகளுடைய ஆட்சியை வேண்டும் என்றே நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்பது இந்த அரசினுடைய எண்ணம் அல்ல. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் வார்டு களைப் பிரித்து, அதன் அடிப்படையில் வாக்காளர்களைப் பிரித்து, தொகுதிகளைப் பிரித்து, வாக்குச் சீட்டுகளை

அச்சிட்டு, பிறகு தேர்தலை நடத்துவதற்கு ஒரு ஆண்டுக்காலமாவது குறைந்தது தேவைப்படும் என்ற வகையில்தான் தேர்தலைத் தள்ளி வைக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுவும் நீதிமன்றத்திற்குச் சென்று தடை பெற்றதனால்தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்குத் தன்னிறைவுத் திட்டம்என்பது இந்தியாவிலேயே யாரும், கண்டும் கேட்டிராத வகையிலே இந்தத் திட்டம் இன்றைக்குப் புகுத்தப்பட்டிருக்கின்றது. இந்த நாடு சுதந்திரம் அடைந்து 35 ஆண்டு காலத்திலே எத்தனையோ ஆட்சிகள் வந்தன. எத்தனையோ அரசியல் கட்சிகள் இந்த நாட்டை ஆண்டிருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக அரசு........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): தன்னிறைவுத் திட்டத்திற்கும் இந்தச்சட்ட முன்வடிவிற்கும் என்ன பொருத்தம்? ஆகவே சட்டமுன்வடிவினை பற்றி மட்டும் பேசவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, தனி அதிகாரிகளைப் பொறுத்தவரையிலே அவர்கள் நேரடியாக இந்தத் திட்டத்தினை நிறைவேற்ற சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது. (குறுக்கீடு) ஆகவேதான் தனி அதிகாரிகளை வைத்து இன்றையதினம் தன்னிறைவுத் திட்டம் என்பதைப் பொறுத்தவரையில் ஏழை கிராம மக்களுக்கும், நகரிலுள்ள அத்தனை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டம் நாட்டிலே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தத் தனி அதிகாரிகள் மூலம் அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்காக அவர்களுடைய பதவி காலத்தை நீட்டிக்க வேண்டிய கட்டாயமான சூழ்நிலை இருப்பதால் தற்போது இது அனைத்துத்தரப்பு மக்களாலும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தனி அதிகாரிகளின் தலைமையிலே இயங்கக்கூடிய நகராட்சிகள் சில இடங்களில் மக்களுக்கு குடிதண்ணீர் வசதி, சாலை வசதி, விளக்கு வசதி, சாக்கடை வசதி ஆகியவற்றைச் செய்யத் தவறுகின்றன என்ற அந்தமாதிரியான நிலைமை பற்றி என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அதைச் சொல்லத் தவறினால் மடமையை உடமையாக்கி கடமையை மறந்தவனாக ஆகி விடுவேன் என்பதால் அவற்றைச் சொல்வது என்னுடைய கடமை என்று சொல்லிக்கொண்டு இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவி



நீட்டிப்பு சட்டமுன்வடிவினை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்
பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்
கும் மாற்றுத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து
அமர்கிறேன்.

*திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவை
மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய மாண்புமிகு
அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற—அதாவது ஓராண்டுக்
காலத்திற்கு தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்க
வேண்டும் என்று கொண்டு வந்திருக்கின்ற மசோதாவினை ஒரு
பக்கம் நான் வரவேற்றாலும் மறுபக்கம் எதிர்க்கிறேன். வர
வேற்பதற்குக் காரணம் இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்,
மலைவாழ் மக்களுக்கும், பெண்களுக்கும் பிரதிநிதித்துவம்
கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருப்பதால் தான்.
ஆனால் அப்படிக் கொண்டு வருகின்றபோது அந்தந்தப் பகுதி
களிலே உள்ள மக்கள் தொகை எவ்வளவு, அவர்களில் தாழ்த்தப்
பட்ட மக்களின் ஜனத்தொகை எவ்வளவு என்பது பற்றி எல்லாம்
தெளிவாகச் சொல்லப்படாத காரணத்தினால்தான் இன்று அவல
நிலைமை ஏற்பட்டு அதுபற்றிப் பேசப்பட வேண்டிய நிலைமை
களுக்கு இடம் கொடுத்துவிட்டதோ என்று நான் சந்தேகப்படு
கிறேன். ஆகவே இனி வருங்காலத்திலே இதுபோன்ற குறைகளுக்கு
இடம் கொடுக்காமல் ஆங்காங்குள்ள ஜனத்தொகை எவ்வளவு,
அவர்களிலே ஆதி திராவிட மக்கள் எவ்வளவு பேர், பெண்கள்
எவ்வளவு பேர், மலைவாழ் மக்கள் எவ்வளவு பேர் என்பதை
எல்லாம் கவனத்தில் கொண்டு அதற்கான சட்டங்களையும் மற்ற
வைகளையும் ஏற்படுத்த வேண்டும். மேலும் அந்தப்
பிரச்சினை சம்பந்தமாகத்தான் இன்றைய தினம், மாநகராட்சி,
நகராட்சி, ஊராட்சி போன்றவற்றிற்குத் தேர்தல் நடத்த
முடியாத வகையிலே நீதி மன்றம் தடை வழங்கி இருப்பதன்
காரணத்தால் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்துக்
கொடுப்பதைத் தவிர குறை சொல்ல வழியில்லை. ஆனால் அதே
சமயத்தில். இந்தக் காலம் நீட்டித்துக்கொண்டே போய் இனி
மேல் தேர்தலே வராதா என்று மக்கள் எண்ணக்கூடிய அளவுக்கு
ஒரு அவல நிலையை ஏற்படுத்துகின்ற அளவுக்கு இடம் கொடுக்க
மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து சென்னை சுகாதாரத்தைப் பொறுத்தவரையிலே
மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் கடந்த 2 வருஷ
காலமாக வற்புறுத்துகிறேன். இங்கே அலுவலர்கள் தங்களுடைய
கடமையைச் செய்தாலும் கூட அந்த அரசாங்க உத்தியோகஸ்
தர்களுக்கு தனிப்பட்டவர்கள் ஆலோசனை கூறுகின்ற வகை
யிலே ஆலோசனைக் குழுக்களை அமைக்க வேண்டும் என்று
சொல்லி இருக்கிறேன். அமைச்சரவர்களும் அதுபற்றிக்
கவனிப்பதாகச் சொன்னர்கள். ஆகவே எம்.எல்.ஏ. ஆக இருந்
தாலும் சரி. எம்.பி. யாக இருந்தாலும் சரி அல்லது அரசியல்

கட்சித் தலைவர்களாக இருந்தாலும் சரி, தகுதி வாய்ந்த உறுப்பினர்களை அட்வைசரி மெம்பர்களாக வைத்து ஆலோசனைக் குழு அமைத்தால் தனி அதிகாரிகள் பல வேலைகளிலே தவறுகின்றபோது அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை எடுத்துச் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையாக தங்களுக்கு உள்ள சங்கடங்களைச் சொல்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். எனவே, அந்த அட்வைசரி கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-10.)

மேலும் சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் 150 டிவிஷன்கள் இருக்கின்றன. ஆனால் ஒவ்வொரு டிவிஷனும் அமைந்திருக்கும் நிலையைப் பார்த்தால் அது தொடர்ச்சியாக வரவில்லை. என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் அதிலே 83, 84, 69, 65 என்று இப்படி வட்டங்கள் வருகின்றன. ஆகவே, இந்த நகரத்தில் உள்ள 14 தொகுதிகளை எடுத்துக் கொண்டால், ஒரு தொகுதிக்கு 1 முதல் 10 வட்டங்களையும், அதற்கு அடுத்த தொகுதிக்கு 11 முதல் 20 வட்டங்களையும் அதற்கு அடுத்து 21 முதல் 30 வரை உள்ள வட்டங்களையும் கொண்டு அமையும் ஒரு வரைமுறையை வைத்துக்கொண்டால், அது அதிகாரிகளுக்கும் சௌகரியமாக இருக்கும். அரசியல்வாதிகளுக்குத் தங்கள் தொகுதியில் உள்ள நிலைமைகளை எடுத்துச் சொல்ல சௌகரியமாக இருக்கும். இல்லை என்றால், 80வது வட்டம், 70வது வட்டம், 150வது வட்டம் என்று தொடர்ச்சியில்லாமல் இருந்தால் அது அதிகாரிகளுக்கும் கஷ்டமாக இருக்கும், பொதுமக்களுக்கும் தங்கள் பகுதியில் உள்ள குறைகளைச் சொல்வதற்குக் கஷ்டமாக இருக்கும். இதை மாற்றுவதற்கு அதிகாரிகளுடன் ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சென்னை நகரத்திலே 5 லட்சம் மக்களுக்கு குடி தண்ணீர் கொடுப்பதற்கு 1920 ஆம் ஆண்டிலே அதற்கான திட்டத்தை தொடங்கினோம். இப்போது சென்னை நகரத்தில் 35 லட்சம் மக்கள் தொகை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் நம்முடைய அமைச்சர் அவர்கள் இதிலே 100 கோடி ரூபாய் செலவு செய்தாலும், அது நல்ல காரியம் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இதைக் கவனித்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போல நகராட்சி, மாநகராட்சி மன்றங்களில் இப்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பு இல்லாததனால், அவர்களுக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து, அந்த தனி அதிகாரிகள் அந்தக் காரியங்களைச் செய்து முடிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட கால கெடுவைக் கொடுத்து அவற்றை நிறைவேற்றுவதற்கு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு இல்லை என்றால் அந்தத் தனி அதிகாரிகள் மீது குறை சொல்லி பிரயோஜனம் இல்லை. அதனால் பலனை



அளிக்காது. இந்த மன்றத்திலே ஆளுங் கட்சி, எதிர்க் கட்சி
என்று கருத்துக்கள் சொல்வதற்கு சுவையாக இருக்குமே தவிர,
அதனால் ஒன்றும் பயனில்லை. ஆகவே, அவர்கள் ஒன்றும்
செய்ய முடியாத நிலையிலே இருக்கிறார்கள்.

சில நேரங்களில் சென்னை மாநகராட்சிக்கு கடிதம் எழுதி
னால், மாதக் கணக்கில் ஏன் ஆறு மாதங்கள் அல்லது ஒரு
வருஷம்கூட அங்கே போய்ச் சேருவதற்கு ஆகிறது. இங்கே
கோட்டையிலிருந்து, அங்கிருக்கக்கூடிய ரிப்பன் கட்டிடத்திற்குச்
செல்வதற்கே ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருடம்கூட
ஆகின்ற ஒரு அவல நிலை இருக்கின்றது. இந்த அவலநிலை
இருக்குமேயானால் அதிகாரிகளை நாம் குறை சொல்லி என்ன
பயன் ? இதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.
நான் ஒன்றை அமைச்சரிடம் சொன்னேன். உதாரணத்திற்கு
ஒன்றைச் சொல்கிறேன். இங்கே இருக்கக்கூடிய சென்னை
மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளிலே ஒரு வாட்ச்மேன், பியூன்
போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அமைச்சர்
அவர்களும், நல்ல எண்ணத்தோடு செய்வதாக உறுதி அளித்
தார்கள். ஒருசில இடங்களிலே போட்டிருந்தாலும், இன்னும்
பல இடங்களில் அது அமலாக்கப்படவில்லை. என்ன காரணம்
என்று தெரியவில்லை.

நான் கேட்டுக் கொள்வதெல்லாம் தோழர் சங்கரய்யா
அவர்கள் சொன்னதைப் போல, இங்கே மன்றத்திலே இருக்
கின்ற அரசியல் கட்சித் தலைவர்களையும், உறுப்பினர்கள்
எல்லோரையும் நான் கேட்டுக் கொள்கிறேன், அந்த சமுதாய
மக்களுக்கு கொடுக்கவேண்டியதைக்கொடுக்க முடியாத காரணத்
தினால், ஒன்றியத் தேர்தல்கள், ஊராட்சித் தேர்தல்கள் இல்லாத
காரணத்தினால், அங்குள்ளபொது மக்கள் குறிப்பாக ஆதி
திராவிட மக்கள் மத்தியில் ஒரு தவறான எண்ணம் இருப்பதால்
அதைப் போக்குவதற்கு மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்
களும், அரசியல் கட்சித் தலைவர்களும் இதிலே உடனடியாக
தலையிட்டு, ஹைகோர்ட்டிலே இருக்கக் கூடிய ரிட் பெடிஷன்
களை வாபஸ் பெறுவதற்கு சகோதரர் சங்கரைய்யா அவர்கள்
சொன்னது போல், நானும் வேண்டுகோள் விடுக்கிறேன்.
சங்கரய்யா அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்
டிருக்கிறேன். அவர் கட்சியைச் சார்ந்தவர்கள் ஒருவர் கூட
ரிட் பெட்டிஷன் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதற்
காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால், அதே
சமயத்தில் நான் சொல்ல விரும்புவது, இந்த நகராட்சிகளிலே
பதவிகள் கொடுத்தது மட்டும் போதாது, இப்போது கோயம்
புத்தூர் மாநகராட்சியை உருவாக்கியிருக்கிறீர்கள். வெள்ளையன்
ஆண்ட காலத்தில் சென்னை மாநகராட்சியைப் பொறுத்த
வரையில், சமுதாய ரீதியாக ஒருவர் வரலாம் என்றதனால்
தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது.
ஆனால், சுதந்திரம் பெற்ற பிறகு இரண்டு கார்ப்பரேஷன்களை
நாம் உருவாக்கியிருக்கிறோம். ஒன்று மதுரை, மற்றொன்று

கோயம்புத்தூர். அவைகளிலும், இந்த இடத்தைக் கொடுப்பதற்கு முதல்வர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். இதிலே அவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து, ஒரு நல்ல காரியத்தை செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நீங்கள் மேற்கொண்ட காரியத்தைப் பூரணமாகச் செய்ய வேண்டும். தைரியமாகச் செய்ய வேண்டும். செய்த காரியத்தை விட்டுக் கொடுக்கக் கூடிய அவல நிலையை உண்டாக்கக்கூடாது.

கடைசியாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவெனில், ஊராட்சி ஒன்றியங்களில் கமிஷனர்கள் இருக்கிறார்கள் கமிஷனர் மூலம் மனு கொடுக்க வேண்டும். ஒன்றியங்களின் வளர்ச்சிக்கு மத்திய மாநில அரசுகள் கொடுக்கும் பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியும், மனுக்கள் செய்தும் அரசிடம் சிபார்சு செய்யப்படாத அவல நிலை இருக்கிறது. இவற்றையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு ஆண்டு நீட்டிப்பு கேட்கிறார்கள், வேறு வழி இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் மீண்டும் தேர்தல்களை ஒத்திப்போட நினைத்தால் மக்கள் தேர்தலையே மறந்து விடுவார்கள் என்ற அவல பெயர் வாங்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்ததற்காக நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. நன்னிலம் அ. கலையரசன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை வரவேற்று இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது போல் தனி அதிகாரிகள் பல்வேறு நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருந்தபோதிலும் சில குறிப்பிட்ட மக்களுக்கு அத்தியாவசியமான பிரச்சினைகள் பொறுத்து அவர்கள் கீழ் இருக்கக் கூடிய அதிகாரிகளை வைத்து செய்கிற போது, அவர்கள் தவறு செய்ய நேரிடும் போது அவை நேரடியாக அரசாங்கத்தின் குறைகள் என்று சொல்லக் கூடிய அளவிற்கு சில சந்தர்ப்பங்கள் உருவாகி விடுகின்றன.

குறிப்பாக கும்பகோணம் நகராட்சியைப் பொறுத்த வரையில் அங்கே வாழக் கூடிய நகரசுத்தித் தொழிலாளர்கள் பழைய மீன் மார்க்கெட் அருகில் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். ஏறத்தாழ 150 ஆண்டுக் காலமாக அந்த இடத்தில் வாழக் கூடியவர்களுக்கு எப்போதோ ஒரு முறை அந்த வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு அவை இடிந்துவிடும் நிலையில் இருக்கின்றது. நகராட்சியில் இருக்கக் கூடிய என்ஜினியர்கள் கூட அந்தக் குடியிருப்புகளில் வாழக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அங்குள்ள அந்த நகரசுத்தித் தொழிலாளர்களிடமிருந்து மாதந்தோறும் பணம் பிடிக்கப்பட்டு வருகிறது. அப்படி பணம் பிடிக்கிற அந்த நிலையில் அங்கே இருக்கக்கூடிய நகரசுத்தித்



தொழிலாளர்களுக்கு அவர்கள் அந்த குடியிருப்புகளில் வசிக்க கூடாது என்று என்ஜினியர்கள் சர்டிபிகேட் கொடுத்த பிற்பாடும் அவர்களுக்கு வேறு வீடுகள் கட்டித் தர வேண்டும் என்று விண்ணப்பித்தும் அந்தப் பணத்தைப் பிடிப்பது என்பது எப்படி முறையாகும்? முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ராதா அவர்கள் கூட மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களிடம் இந்த நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். கேள்வி நேரத்தில் அது பற்றிக் கேட்ட போது நிதி நிலை சரியாக இல்லாத காரணத்தினால் மிகப் பெரிய நகராட்சிகளில் தான் அத்திட்டம் முதன் முதலாக அமல் படுத்தப்படுகிறது என்றும் படிப்படியாக மற்ற இடங்களுக்கு அது வரும் என்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவெனில், குடிசை மாற்று வாரியம் மூலமாக அல்ல வீட்டு வசதி வாரியம் மூலமாக அந்தக் குடியிருப்புகளைக் கட்ட நிதி ஆதாரங்களை மையமாக வைத்து பெரிய நகராட்சிகள் அல்லது அடுத்தபடியாக இருக்கக் கூடிய நகராட்சிகளில் தான் கட்டி வருகிறார்கள். அந்த நகரசுத்தித் தொழிலாளர்கள் மக்களுக்குத் தேவையான காரியங்களில் ஈடுபட்டு, மக்களின் சுகாதாரத்திற்காக அவர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்பதை மனதில் வைத்து நகராட்சிகள் அல்லது ஊராட்சிகள் மூலம் அரசுக் கடன் கொடுத்து அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக மீன் மார்க்கெட்டில் வாழக் கூடிய அந்த மக்களுக்கு குடியிருப்புகள் கட்ட அந்த நகராட்சிக்கு சர்க்கார் கடன் உதவி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கும்பகோணத்திலுள்ள பஸ் ஸ்டான்டின் நான்கு பக்கங்களிலும் கோவில்கள் இருக்கின்றன. பஸ் வருவதற்கும் போவதற்கும் அதிக இடையூறாக இருக்கிறது என்பதால் ஒரு புது பஸ் ஸ்டான்ட் அமைக்க ஒரு இடத்தை தேர்வுசெய்தார்கள். ஆனால் இது வரை அந்த இடத்தில் பஸ் ஸ்டான்ட் அமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில், அவர்கள் பிறந்து வாழ்ந்த ஊரான கும்பகோணத்தில் அந்த புது பஸ் ஸ்டான்டை அமைப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் கோவலன் கண்ணகி நடந்து வந்த காவிரி வடகரையில் நகராட்சி சார்பாக ஒரு உயர்நிலைப் பள்ளியும் கிடையாது. தனியார் பள்ளிதான் இருக்கிறது. அங்கே இருக்கக் கூடிய காமராஜ் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நடப்பு ஆண்டில் மாற்றிக் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் இன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கு ஹைவேஸ் டி.பி., பி.டபிள்யூ.டி. டி.பி. ஆகியவற்றில் சலுகை வழங்கப்படுகிறது.

(மாலை 5-20)

ஆனால், நகராட்சி, மாநகராட்சி பயணிகள் விடுதிகளாக இருந்தால், அங்கே சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்களிடம் முழுக் கட்டணம் வசூல் செய்யக் கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் பி.டபிள்யூ.டி., ஹைவேஸ் பங்களாவில் தங்கினால், எந்த அளவுக்குச் சலுகைக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதோ, அந்த விதிப்படி எங்களுக்கும் வசூலிக்க வேண்டும் என்ற ஒரு உத்தரவைப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், கும்பகோணம் நகரத்தில், கொசு, கும்பகோணம் கொசு என்று சொன்னால், மிகவும் பிரசித்தி பெற்ற கொசுவாகும். இதைத் தடுக்க, அந்த ஊரில் பாதாள சாக்கடைத் திட்டம் ஒரு பகுதியிலே அமுல் படுத்தப்பட்டு, மீதியிருக்கக் கூடிய பகுதியிலே அமுல் படுத்தப்படாமல் இருக்கிறது. அதை வருகிற ஆண்டிலே, அமுல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவர் அவர்கள் அந்த நகரத்திலே வசித்ததால், அதற்கு முன்னுரிமை கொடுத்து, இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி முதலியவைகளின் தனி அதிகாரிகள் பதவி காலத்தை ஓராண்டு நீட்டிக்கப்பட வேண்டுமென்ற சட்டமுன்வடிவை தவிர்க்க முடியாமல் ஆதரித்தாலும் கூட, தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை ஓராண்டு காலம் நீடிக்கப்படுவதால், தேர்தல் நடைபெறாமல், அங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால், அந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பல்வேறு பிரச்னைகளை எடுத்துச் சொல்ல முடியாமல் , அந்தப் பிரச்னைகளுக்கு ஒரு பரிகாரம் காண முடியாமல் இருந்து கொண்டிருக்கிறது. அரசாங்கத்தாலே அமைக்கப்பட்டிருக்கக்கூடிய அல்லது மாநகராட்சி, நகராட்சியாலே ஏற்படுத்தப்பட்டிருக்கக் கூடிய மக்கள் குழுக் கூட்டங்கள் நடப்பதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி பல்வேறு பிரச்னைகளைப் பற்றி மக்கள் குழுவிலே விவாதித்து, முடிவெடுக்க வேண்டுமென்று



சொன்னாலும் கூட, அந்த மக்கள் குழு கூடுவதே இல்லை. அப்படியே அத்தகைய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அப்படியே மக்கள் குழு கூடினாலும்கூட, அந்தக் குழுவிற்கு அதிகாரம் இல்லாத காரணத்தினால், எடுக்கக்கூடிய முடிவுகளை அமுல் படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், மக்கள் குழு மாதத்திலே ஒரு முறை கூடி, அதிலே எடுக்கக்கூடிய முடிவுகளை அதிகாரிகள் உடனுக்குடன் அமுல்படுத்த வேண்டும். செயல்படுத்த வேண்டுமென்று உத்தரவிட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இதிலே நிறைவேற்றப்படும் முடிவுகள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

இப்போது பல யூனியன்களிலே தன்னிறைவுத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அந்தப் பகுதிகளிலே நடைபெறக்கூடிய பல்வேறு வேலைகளைப் பற்றி, இப்படிப்பட்ட மக்கள் குழுக்கள் கூடி, சட்டமன்ற உறுப்பினர்கள் அவைகளிலே அங்கம் வகித்து, எந்த எந்த வேலைகளை எடுத்துக்கொள்ளலாம் என்பது பற்றி அவர்களிடமிருந்து ஆலோசனை பெறப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டால், நிச்சயமாக அந்த வேலைகள் முறையாக, ஒழுங்காக நடைபெறுவதற்கு உதவிகரமாக இருக்கும். எனவே, மக்கள் குழுவைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய தோழர் சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதற்கு முன்னாலே கொண்டுவந்த சட்டமுன்வடிவில் அரிசனங்களுக்கும் அதேபோல் பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், வரவேற்பதாக இருந்தாலும்கூட, அது சம்மந்தமாக எங்களைப் பொறுத்தவரையில் எந்தத் தோழரும் வழக்கு மன்றத்திற்கு போகவில்லை. எனவே, மதிப்பிற்குரிய தோழர் சங்கரய்யா சொல்லக்கூடிய கருத்தின் அடிப்படையில், சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களைச் சார்ந்திருக்கக் கூடியவர்கள்கூட இப்படிப்பட்ட வழக்குகள் சம்மந்தமாக வழக்கு மன்றத்திற்கு சென்றிருந்தால், அப்பேர்ப்பட்ட வழக்குகளை உடனடியாக வாபஸ் பெறச்செய்து, தேர்தல் நடைபெறுவதற்கு உறுதுணையாக இருப்பதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில், திரு. சங்கரய்யா, அவர்கள் சொன்னதைப்போலவே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் ஒரு ஆண்டுக் காலத்திற்குப் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. கோவை மாநகராட்சியானதற்குப் பின்னர் அமைச்சர் அவர்கள் பல்வேறு

இருந்தாலும் அங்கே பணியாற்றக் கூடிய அதிகாரிகள் அலுவலர்கள் ஆட்சிக்குக் கெட்டப்பெயர் ஏற்படுத்தக் கூடிய முறையிலே தவறான காரியங்களிலே ஈடுபடுகின்றார்கள். ஆளுகின்ற ஆட்சியும், அமைச்சர் அவர்களும் அதுகுறித்து நடவடிக்கை காலா காலத்திலே எடுத்தால்தான் தவறுகளைக் கண்டிக்க முடியும். கோவை மாநகராட்சியின் தனி அதிகாரி—நவம்பர் 28-ம் தேதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து—மாநகரத்திலே உள்ள பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி—குடிநீர்வசதி, சாலைவசதி, விளக்கு வசதி போன்றவை செய்து தரப்படவில்லை—எடுத்துச் சொல்லியும் கூட உடனடியாக கவனிக்கவேண்டுமென்று ஆயிரக் கணக்கான மக்களைத் திரட்டி மகஜர்கள் கொடுக்கப்பட்டும்கூட அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. நாங்கள் நடத்தியது மட்டுமல்ல, பல்வேறு இடங்களிலே மாநகராட்சிக்குட்பட்ட பிரச்சினைகள் பற்றி குழுக்கள் குழுக்களாக போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சாலைகளைப் பழுதுபார்க்க வேண்டுமென்று சொல்லியும்கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வேலாண்டிபாளையம், பாப்பநாயக்கன்பாளையம், சௌரி பாளையம், ஆவரம்பாளையம், பீளமேடு, கணபதி, பார்த்தி ரோடு ஆகிய பகுதிகளில் சாலைகள் மோசமாக இருக்கின்றன. அவற்றைப் பழுது பார்க்கவேண்டுமென்று தனி அதிகாரியிடம் சொல்லியும்கூட இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுபற்றி மாவட்ட் அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்திலே சட்ட மன்ற மேலவை உறுப்பினர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். நானும் திரு. சின்னராஜ் அவர்களும் எடுத்துச் சொல்லியும்கூட தனி அதிகாரி மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்திற்கு வருவதில்லை, கலந்துகொள்வதில்லை என்ற நிலைமை இருக்கிறது. பிரச்சினைகளை எடுத்துச் சொல்கிறபோது அதிகாரிகள் இல்லாத நிலையில் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? அந்தக் கூட்டத்திற்கு கண்டிப்பாக அவர் வரவேண்டும், கோரிக்கைகளை கேட்டு நிறைவேற்றவேண்டும் என்று சொல்லித் தீர்மானம் அந்தக் கூட்டத்திலே போட்டும் இன்னும் வேலைகள் நடைபெறவில்லை.

அங்கே வெயில் காலமாக இருப்பதால் குடிநீர் பற்றாக் குறை கடுமையாக இருக்கிறது பீளமேடு, சிங்காநல்லூர் பகுதியிலே, கணபதி போன்ற பகுதிகளிலே, சிறுவாணி தண்ணீர் இல்லாத நிலையில் வண்டிகளிலே கொண்டுபோய் தண்ணீர் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஒரு வண்டிக்கு 15 ரூபாய் கொடுக்கக்கூடிய அவல நிலை இருக்கிறது. சிறுவாணி தண்ணீர் விரிவாக்கப்படாத பல பகுதிகளுக்கும்—அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள்—சிறுவாணித் தண்ணீரை விரிவாக்கவேண்டும், அங்கே தண்ணீர் கொண்டு சென்று விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.



கொசுத் தொல்லைகள் கடுமையாக அந்தப் பகுதிகளிலே இருக்கின்றன. சாக்கடைகள் தேங்கியிருக்கின்றன. அம்மன் குளம் பகுதியில் ஆயிரக்கணக்கானவர்கள் வாழுகிறார்கள், அங்கே சாக்கடை வசதியில்லாததால் சாக்கடை தேங்கி கொசுத் தொல்லைகள் ஆளையே தூக்கிச் செல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறது. மாநகராட்சியிலிருந்து மருந்துகள் அடித்தாலும் கொசுக்கள் சாவதில்லை, அதற்கு மாறாக அதிகரிக்கக்கூடிய முறையிலே இருந்துவருகிறது. கொசுக்களின் தொல்லைகளை ஒழிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் அதைக் கண்காணிக்கவேண்டும்.

மின்சார விளக்குகளைப் பொறுத்தவரையில் பல்வேறு
பகுதிகளிலே தெரு விளக்குகள் எரியவில்லை, குழல் விளக்கு
களை மாற்றவேண்டுமென்று எடுத்துச் சொல்லியும் கூட
அது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மாநகராட்சியில் பணியாற்றக்கூடிய அலுவலர்கள் தங்களுடைய கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதில்லை. இதனால் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் ஏற்படுகிற நோக்கத்துடன் நடந்துகொள்கிறார்கள். அப்படிப்பட்ட செயல்களைக் களைவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரைக்கும் தொழில்
வளர்ச்சி அதிகமாக உள்ளபகுதி, பஞ்சாலைத் தொழிலும்,
என்ஜினியரிங் தொழிலும் அதிகமாக உள்ள பகுதியாக இருக்
கிறது. அங்கே வரியை வசூலிப்பது இல்லை என்ற கருத்து
இருக்கிறது. அதிகாரிகளின் மெத்தனப் போக்கும் அலுவ
லர்களின் மெத்தனப்போக்கும் வரி வசூல் நடவடிக்கையைத்
தடைப்படுத்துவதாக இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் மீது
அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். 15, 16 ஆண்டுகளுக்கு முன்பு....

(மாலை 5-30)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) :** உறுப்பினர் சுருக்கமாக பேசவேண்டும், மானியக் கோரிக்கையிலே பேசுவதைப் போல விரிவாக பேசக் கூடாது.

திரு. எம். ஆறுமுகம் : மாற்றுத் தலைவர் அவர்களே, 15, 20 ஆண்டுகளுக்கு முன் இருந்த அளவிலேயே துப்புறவுப் பணியாளர்கள் இருந்து வருகிறார்கள். இதனால் குப்பை கூளங்கள் அதிகமாக அகற்றப்படாமல் இருக்கின்றன. ஆகவே அதிக அளவில் துப்புறவு பணியாளர்களை கொடுக்கவேண்டுமென்று சொல்லி தவிர்க்கமுடியாத காரணத்தால் இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்று முடிக்கிறேன்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** மாண்புமிகு பேரவை மாற்று
தலைவர் அவர்களே, இன்றையதினம் நகராட்சி மன்றங்கள்
தலைவர்கள் பதவி நீடிப்பு, சென்னை மாநகராட்சி தலைவர்
பதவி நீடிப்பு, கோவை மாநகராட்சி தலைவர் பதவி நீடிப்பு
என்று ஓராண்டிற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் நடை
பெறாத நிலையில் இந்த நீடிப்பை கொடுக்க வேண்டிய நிலைமை
அரசுக்கு ஏற்பட்டிருக்கிற காரணத்தால் இந்தச் சட்டமுன்வடிவை
கொண்டு வந்திருக்கி ?ார்சள்.

ஆட்சியாளர்கள் தொட்டது துலங்கவில்லை, தொடாதது
எதுவும் இல்லை என்று அண்ணா அவர்கள் சொன்னதைப்
போல நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி
கள் முதலியவற்றை கலைத்து விட்டு எல்லாவற்றையும் தனி
அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருவதை சட்டமன்ற உறுப்
பினர்கள் உணர்ந்து தான் இருக்கிறோம். இந்தத் தலைவர்கள்
பதவி நீட்டிப்பு, நம்முடைய மாற்றுத் தலைவர் அவர்கள்
எத்தனையாவது தடவை என்று சொல்வார்கள். பலமுறை நீட்டித்
திருக்கிறார்கள். தேர்தல் நடைபெறுமா, நடைபெறாதா என்ற
எண்ணம் நாட்டு மக்கள் அனைவருக்கும் வந்திருக்கிறது. சட்ட
மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய மனசாட்சியை
தொட்டுப்பார்த்தால் தேர்தல் நடைபெறாது என்பதை
அறிவார்கள். ஊராட்சித் தேர்தல் நடந்த பிறகு தான் நகராட்சி
தேர்தல்கள் நடை பெறும் என்று சொல்லியிருக்கிறார்கள்.
ஊராட்சிகள் தலைவர் தேர்தல், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள்
தேர்தல் அனைத்தும் இன்றைக்கு உயர் நீதி மன்றத்தில் இருக்
கிறது. அதனுடைய சட்டத் திட்டங்களினுடைய பிரிவுகளிலே
நலிந்த பிரிவினர்களுக்கு ஒரு இடமும், ஆதிதிராவிடர்களுக்கு
ஒரு இடமும், மகளிர்களுக்கு ஒரு இடமும் என்று ஒரு குறிப்பிட்ட
பகுதியை அவர்களுக்கு நிர்ணயித்து விட்டிருக்கிற காரணத்தால்
மக்களுடைய பண்டமென்டல் ரைட்ஸ் பாதிக்கப்படுகிற அடிப்
படையிலே அந்த பகுதியில் தனக்கு நிற்கிறவாய்ப்பு இல்லை என்று
உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்திருக்கிறார்கள். இப்படி
வழக்கு தொடுத்திருக்கிற காரணத்தாலே அந்த வழக்கு
எப்போது முடியும், உயர் நீதிமன்றத்திலே வழக்கு முடிந்தாலும்,
உச்ச நீதிமன்றத்திற்கு அவர்கள் செல்கிற நிலைமையிலே இருக்
கிற காரணத்தால் ஊராட்சிகளுக்கு தேர்தல் நடைபெறுமா ?
ஊராட்சி ஒன்றியங்களுக்கு தேர்தல் நடைபெறுமா ? இந்த
தேர்தல்கள் நடந்த பிறகு நகராட்சி, மாநகராட்சிகளுக்கு தேர்
தல் நடைபெறுமா என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த
நிலையிலே ஒரு யோசனையை ஆட்சியாளர்களுக்கு தெரிவிப்பது
என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். நாட்டிலே இருக்கிற
அத்தனை பேர்களும், கிராமத்தில் கேள்வி கேட்பாரற்ற நிலை
யிலே ஊராட்சித் தலைவர் இல்லாததால், ஊராட்சி மன்ற
உறுப்பினர்கள் இல்லாத காரணத்தாலும் அங்கே இந்த நிலைமை
ளைச்சரிசெய்து அதற்கு பிறகு நகராட்சித் தேர்தல் நடைபெறும





என்று குறிப்பிட்டிருக்கிறதாலே குறிப்பிட விரும்புகிறேன்.
இந்த தேர்தல் நடை பெறாது என்ற நிலைமை இருக்கிறது.
நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை மாநக
ராட்சியில் பல பகுதிகளுக்குச் சென்று காரியங்கள் செய்கிறோம்
என்று சொல்கிறாரே தவிர அங்கே பல டிவிஷன்களில் குறைகளைப்
பார்க்கிறபோது இவைகளை நிவர்த்தி செய்ய முடியுமா என்ற
எண்ணம் தான் வருகிறது. 'ஏக் தின் கா சுல்தான்' என்பது
போல அவர்கள் ஒருவரே ஆட்சி செய்து மக்களிடத்திலே மனு
பெற்று அவைகளை நிவர்த்தி செய்வது என்பது நடக்கமுடியாத
காரியம். மக்கள் குறைகளைத் தீர்க்க வேண்டுமென்ற நல்ல
எண்ணத்திலே கூட அமைச்சர் அவர்கள் சென்றிருக்கலாம்.
நகராட்சியில் குடி தண்ணீரிலே டிரேயினேஜ் சழிவுநீர் கலந்து
பல விபத்துகள் ஏற்பட்டு, அவைகள் ஒத்தி வைப்புத் தீர்மாணங்
களில் கூட வந்திருக்கிற நிலைமைகள் எல்லாம் நகராட்சியினுடைய
நிர்வாகத்தில் இருக்கிறது. ஆனால், மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் நகராட்சித் தேர்தலையாவது நடத்தி விடுவதற்கு
யோசனை செய்ய வேண்டும். இன்றையதினம் நலிந்த பிரிவின
ருக்கு, ஆதி திராவிட மக்களுக்கு, மகளிருக்கு என்று பிரிக்கப்
பட்ட அந்தப் பகுதிகளிலே ஒதுக்காமல், அவர்களை நிறுத்து
வதற்கான வாய்ப்பு இருந்தால், அவர்கள் தேர்தலில் நிற்க ஏற்
பாடு செய்து, அப்படி நிற்பதற்கு வாய்ப்பில்லாமல் இருந்தால்,
கோ ஆப்ட் செய்கிற முறையிலே ஏற்பாடு செய்யலாம். நகராட்சி
களிலே, நலிந்த பிரிவினரை, ஆதி திராவிடரை, மகளிரை கோ
ஆப்ட் செய்து, ஜனநாயகத்தை காப்பாற்ற மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் முன் வர வேண்டும். ஊராட்சி ஒன்றியத் தேர்தல்
கள் நடந்து முடிந்த பிறகுதான், இதற்கான தேர்தல்கள் நடை
பெறும் என்ற நிலைமையை ஏற்படுத்தாமல், உடனடியாக
மாநகராட்சி மக்களுடைய நன்மையைக் கருதி, வசதியைக் கருதி,
சுகாதார வசதியைக் கருதி, பாதை வசதிகளைக் கருதி, தேர்தலை
நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அமைச்சர் மனதிலே இன்னொன்றும் நினைத்துக் கொண்
டிருக்கலாம். சென்னை மாநகராட்சி மக்களைச் சந்தித்து,
ஓராண்டுகாலம் அவர்கள் குறைகளை எல்லாம் கேட்டுக் கொண்
டிருந்தால், மக்கள் அனைத்திந்திய அண்ணா தி. மு. க. உறுப்
பினர்களை மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுப்பார்கள் என்ற நப்
பாசை கூட அவருக்கு இருக்கலாம். நான் சொல்கிறேன். ஒரு
மாவட்டத்தில் செயலாளராக இருக்கிறேன் என்ற முறையில்
சொல்கிறேன், இன்னும் சொல்லப் போனால் சவாலாகச் சொல்
கிறேன், அவர் என்னதான் கட்டெறும்பாகப் பாடுபட்டாலும்,
நிச்சயமாக சென்னை மாநகராட்சியை அ. இ. அ. தி. மு. க.
கைப்பற்றாது. அந்த எண்ணம் இருந்தால், தயவு செய்து அந்த
எண்ணம் வேண்டாம். அதற்காகத்தான் நகராட்சித் தேர்தலை
இப்பொழுது நடத்தாமலிருந்தால், உடனடியாக நகராட்சித்
தேர்தலை நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கூறி
முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகராட்சி மன்றங்கள், சென்னை, கோவை மாநகராட்சி மன்றங்களுடைய திருத்தச் சட்ட முன் வடிவுகளை வரவேற்று நான் என்னுடைய கருத்துக்களைக் கூற லாம் என்று கருதுகிறேன். ஜனநாயக முறை, மக்களாட்சி முறை மலர வேண்டுமென்றால், உள்ளாட்சி மன்றங்கள் நல்ல முறையில் பணியாற்ற வேண்டும். இந்தத் துறையின் அமைச்சர் அவர்கள் பொது மக்களுக்கு எப்பொழுதும் பாடுபடக்கூடிய வகை யில் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். அந்த அமைச் சருடைய தலைமையின் கீழ் உள்ள இந்த உள்ளாட்சித் துறையில் ஜனநாயகம் என்கின்ற தோட்டத்திலே ஆயிரம் மலர்கள் மலரட்டும் அடிப்படை மக்களாட்சி மலரட்டும் என்ற நல்ல கருத்துக்களின் அடிப்படையில் அவர்கள் அன்றாடம் ஒவ்வொரு வட்டத்திற்குச் சென்று குறைகளைக் கேட்டு, அதன் மூலம் அந்தப் பகுதி மக்களுடைய குறைகளைத் தீர்க்க பாடுபட்டு வருகிறார்கள். அந்த முறையில் என்னதான் அமைச்சர் அவர்கள் முனைப்பாகச் செயல்பட்டாலும், மாநகராட்சிகளிலும் அல்லது நகராட்சிகளிலும் உள்ள தனி அதிகாரிகளுடைய எதேச்சாதிகார போக்கினால் பல நேரங்களில் தவறுகள் நேர வாய்ப்புகள் இருக் கின்றன. அந்தத் தவறுகளைத் தவிர்க்க நகராட்சி மன்ற அல்லது மாநகராட்சி மன்ற தனி அதிகாரிகளுக்கு முறையான ஆலோசனை குழு அமைக்கப்பட்டு, அந்த ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் தனி அதிகாரிகள் கலந்துக் கொண்டு, மாநகராட்சி உறுப்பினர் களைப் போல், இந்த ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கு தீர்மானங்கள் நிறைவேற்ற அதிகாரங்கள் அளித்து, அந்த ஆலோ சனைக் குழுக் கூட்டங்களை நடத்த ஆவன செய்ய வேண்டு மென்றும் நம்முடைய அமைச்சர் அவர்களை விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன். அதன்மூலம், தனி அதிகாரிகள் தவறு கள் இழைக்க வழியில்லாமல், செக்ஸ் அன்ட் கவுன்ட்டர் செக்ஸ் (Checks and Counter Checks) என்ற வகையில், அவர் களுடைய அதிகாரங்களைக் கட்டுப்படுத்த, மட்டுப்படுத்த வாய்ப் பிருக்கும். அதனை அமைச்சர் அவர்கள் பரிவோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகராட்சி மன்றங்களுக்குத் தன்னிறைவுத் திட்டத்தை விரிவு படுத்தியதற்கு இந்த நேரத்திலே நம்முடைய அமைச்சர் அவர் களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இத் திட்டத்தின் கீழ் காஞ்சீபுரம் நகராட்சியை அபிவிருத்தி செய்ய ரூ. 249 இலட்சங்களுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களை செயல் படுத்த முனைய வேண்டுமென்று இந்த நேரத்திலே விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, நகராட்சி மன்ற ஆலோசனைக் குழுக் கூட்டங் களை மாதத்திற்கு ஒரு முறையாவது கூட்டுவதற்கு அந்தத் தனி அதிகாரிகள் பணிக்கப்பட வேண்டும். அந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்திலே எடுக்கப்படுகின்ற முடிவுகள் நல்ல முறையிலே



செயல்படுகிறதா என்பதையும் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படு கிறதா என்பதையும் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உள் ளாட்சித் துறை தேர்தல்களை நடத்த முனைந்தார். பெண்களுக் கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்து இந்தி யாவில் வேறு எந்த மாநிலத்திலும் நினைத்துப் பார்க்காத நல்ல திட்டத்தை தமிழகத்தில் செயல் படுத்த ஆணை பிறப்பித்தார். இந்தச்சிறப்பான திட்டத்தைச் செயல் படுத்த முனைந்த மாண்பு மிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுதல் களையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்ற மற்ற துறைகளில் உள்ளதைப்போல இந்த மாநகராட்சித் துறையிலும், நகராட்சித் துறையிலும் தனி அதிகாரிகள் நட வடிக்கை முறையாகப் பரிசீலிக்கப்படாத காரணத்தால் அரசினுடைய பல திட்டங்கள் தோல்வியடையக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. இக் குறை பாடுகளைத் தவிர்க்க நம்முடைய அமைச்சரவர்கள் பரிவுடன் கவனித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5—40)

நகராட்சிகளில் தன்னிறைவுத் திட்டத்தைச் செயல்படுத்து கின்றபொழுது அதற்கென்று தனியாக அலுவலர்களையும், பொறி யாளர்களையும், ஆணையாளரையும் நியமித்து அந்தத் துறையை மேற்பார்வையிடச் செய்வதற்காக ஒரு ஆலோசனைக் குழுவையும் நியமித்து அந்தத் திட்டம் முறையாகச் செயல்படுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக் கொண்டு இந்தச் சட்ட முன்வடிவுகளை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

திரு. கு. பாலன். : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். மாற்றுத் தலைவரவர்களே, தற்போது மானியக் கோரிக்கைகள் நடை பெறுகின்ற நேரத்தில் மாலை நேரங்களில் உறுப்பினர்கள் கலந்து கொள்கிறார்கள். அவர்களுக்கு மாலை நேரத்தில் கலந்து கொள் வதற்காக எந்தவிதமான அலவன்சும் கிடையாது. மாலை நேரத் தில் ஸ்வீட், காரம், காப்பி கொடுத்தார்கள். ஆனால் இன்றைக்கு வெறும் காப்பி மட்டும்தான் கொடுத்தார்கள். நாளைக்கு வெறும் ஐஸ் வாட்டரோடு விட்டு விடுவார்கள்போல் தெரிகிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்.) ந்தப் பசியான வேண்டுகோளையேற்று உங்களுக்கு இன் னும் அரை மணி நேரத்தில் பொங்கல் வடை கொடுக்குமாறு நான் ஆணையிடுகிறேன்.

திரு. பெ. திருமாறன் : நான் தற்பொழுதுதான் பொங்கல் வடை சாப்பிட்டு விட்டு வந்தேன். பொங்கல் வடை கொடுக்கப் படுகிறது. ஆகவே, உறுப்பினரவர்கள் சென்று சாப்பிடலாம்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு மாற்றுத்தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்ட முன்வடிவுகளைப் பற்றிச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது நம்முடைய அமைச்சரவர்கள் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பது பற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது தேவையில்லை. ஆறு மாத காலத்திற்கு அந்த நீடிப்பு இருந்தாலே போதும். அதற்குள் நகராட்சி, மாநகராட்சி தேர்தல்களை நடத்தி விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசினுடைய கொள்கைப்படி ஊராட்சிகள், ஊராட்சி மன்றங்களின் தேர்தல்கள் முடிந்து நகராட்சி, மாநகராட்சித் தேர்தல்களை நடத்துவதுபற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. நான் கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சி, நகராட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்திவிடுங்கள். இந்தச் சட்டமன்றச் கூட்டத் தொடர் முடிந்த பிறகு பெண்களுக்கு முக்கியத்துவம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முக்கியத்துவம் ஆகியவைகளைக் கொடுத்து. சர்வ கட்சியினரையும் கலந்தாலோசித்து நகராட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிப் பகுதிகளிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கின்றவர்களுக்கு வாகன வசதிகளை நகராட்சிகள் மூலம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் அந்த வசதி கொடுக்கப்படுகிறது. அதே போன்று நகராட்சிப் பகுதிகளை மக்கள் பிரதிநிதிகளாகிய சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று பார்த்து மக்கள் குறைகளை அறிவதற்காக வாகன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். எனவே, நகராட்சியினுடைய வாகனங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் இரண்டு துறைகளை ஒன்றாக வைத்திருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறை, அடுத்து நகராட்சிகள்—உள்ளாட்சித் துறையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கே பல்வேறு குறைகள் இருக்கின்ற காரணத்தினாலேதான் நகராட்சி, உள்ளாட்சித் துறை, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தலைமைப் பொறியாளராக எல்லாவிதப் பொறுப்புகளையும் நெடுஞ்சாலைத் துறையிலேயே இருக்க வேண்டும். ஏனென்றால் பல்வேறு குறைகள் இருக்கின்ற காரணத்தாலே அரசே அதை எடுத்துக்கொண்டு அந்த வேலைகளைத் தலைமைப் பொறியாளருக்குக் கீழே இருக்கின்ற கோட்டப் பொறியாளர் வரை தனியாக அதை அனுப்பி வைத்துக் கொண்டு, நகராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் உள்ள வேலைக்ளைத் தனியாகப் பிரித்து அதைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



தஞ்சை நகரத்தைப்பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். எல்.ஐ.சி.யில் கடன் வாங்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இன்னும் தண்ணீர் வந்த பாடில்லை. அதை விரைவாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை).

தஞ்சையில் புதிதாகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அந்தப் பல்கலைக் கழகத்திற்கும் நகரத்திற்கும் இடையிலே ஒரு மேம்பாலம் இருக்கிறது. அந்தப் பாலம் நகராட்சியின் பொறுப்பிலே இருப்பதால் அதைப் புதிய மேம்பாலமாக அமைத்துத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முக்கியயத்துவம் உணர்ந்து அதைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி மற்றும் தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீட்டிப்பதற்கான மசோதா மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இப்படி ஓராண்டு, இரண்டாண்டு என்று பல ஆண்டுகளாக மேலும் ஓராண்டு என்று 31–3–1983 வரையிலும் இந்தத் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக இந்த மசோதா வந்திருக்கின்றது. அது மிகவும் சீர்கேடான முறை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே தனி அதிகாரிகளுடைய ஆட்சிதான் தொடர்ந்து நடைபெறுகிறது என்ற பெருங்குறை இருக்கின்றது. எதற்கெடுத்தாலும் கெடுபிடி. தன்னிச்சையாக அதிகாரத்தைப் பயன்படுத்தி ராஜாக்களைப்போல அந்த தனி அதிகாரிகள் நடந்து வருவதை அரசு உணரவேண்டும். குறிப்பாக சொல்லவேண்டும் என்று சொன்னால், மிகவும் மோசமான முறையிலே இந்த கெடுபிடி இருக்கின்றது. வரிவசூல் செய்கின்ற ஒவ்வொரு ஊரிலும் நடைபெற்று வருகிறது. வரிவசூல் செய்வதை முறையாகச் செய்வதைக் குற்றம் என்று சொல்லவில்லை. ஆனால் அந்த வரி வசூல் டிமாண்டு நோட்டீஸ் கொடுத்த இரண்டாவது நாளே அந்த வீட்டுச் சொந்தக்காரர்களிடம் திடீரென்று புகுந்து, அவர் அப்போதே வரி கட்டவில்லை என்று சொன்னால் கதவு மற்றப் பொருள்களை எடுத்துச் செல்லுகின்ற கோரமான நிலைமை விழுப்புரம் பகுதியிலே துவங்கி இருக்கின்றது. அதேபோல பல ஊர்களிலே நடக்கின்றது. அவருக்குச் சொந்தமான வீட்டில் வேறு இடங்களிலே கடைகள் போன்றவைகள் இருந்தாலும் கூட, அந்த இடத்திலே போய்க் கேட்காமல் இந்த இடத்தை விட்டு, வீட்டுச் சொந்தக்காரர்கள் வீட்டிலே புகுந்து இன்றைக்கு வாடகையை வசூலிக்கும் நிலைமை இருக்கின்றது. வரி வசூல் செய்கின்ற 40, 50 பேர்கள் திடீ

ரென்று புகுந்து மிரட்டுகின்ற நிலைமை இருக்கின்றது. இது
போன்ற நிலைமைகள் பரவலாக எல்லா நகரங்களிலும் இருப்ப
தாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக விழுப்புரம் பகுதியிலே
இருக்கின்றது என்பதை கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பல்வேறு நகரங்களிலே முன்னேற்றத் திட்டங்கள் வேண்டும்
என்று எடுத்துச் சொல்வதற்கும் அதை நிறைவேற்று
வதற்கும் ஜனநாயக ரீதியான அமைப்பு இல்லாத காரணத்தால்,
தொடர்ந்து இவர்களின் பதவிக் காலத்தை நீட்டிப்பது முறை
யற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தென்னாற்
காடு மாவட்டத்தில் மக்கள்தொகை அதிகமாக இருக்கின்ற
நகரம் விழுப்புரம். மாவட்ட தலைநகரமாக ஆக்குவதற்குத் தகுதி
யான அளவில் உள்ள அந்த நகரத்தில் அதிகமான அலுவலகங்
களும், ஏராளமான ஜனத்தொகையும் இருக்கின்றது. அங்கே
அடிப்படை வசதிகளே இல்லாத சூழ்நிலை தொடர்ந்து இருந்து
கொண்டு இருக்கின்றது. அங்கே பெண்ணைய ற்றில் இருந்து
குடிநீர் கொடுக்கப்பட்டாலும், போதுமான அளவுக்குக் கொடுக்
கப்படவில்லை. காலத்தில் கொடுக்கப்படவில்லை, காரணம்
மின்சாரப் பற்றாக்குறைதான். குறிப்பிட்ட நேரங்களில்தான்
வருகின்றது. மின் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தால், ஜென
ரேட்டர் ஏற்படுத்தி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
அங்கே அதிகமான தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்து தர
வேண்டும். குழாய் அடியில் பல்லாயிரக் கணக்கானவர்கள், 100
பேர்கள், 200 பேர்கள் இருந்து கொண்டு சண்டைசச்சரவு போடும்
நிலைமை இருக்கின்றது. அதை மாற்றுவதற்காக அரசு நிச்சய
மாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அங்கே இரண்டு ரயில்வே காலனிகள் இருக்கின்றன.
அந்த இரண்டு காலனிக்கும், 2 குழாய்கள்தான் இருக்கின்றன.
அங்கே 4,000 குடும்பங்கள் இருக்கின்றன. அந்த 2 பைப் லைன்
கள் போதாது. எனவே ஒவ்வொரு ரயில்வே காலனிக்கும் மேலும்
இரண்டிரண்டு பைப் போட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து நகரசுத்தித் தொழிலாளர்கள் வசிப்பதற்காக சாலவேடு
என்ற பகுதியில் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்
கின்றன. அந்தக் குடியிருப்புகள் பாழடைந்து.போய், கதவுகள்
எல்லாம் பெயர்ந்து மின் விளக்குகள் எல்லாம் இல்லாத நிலையில்
மிகவும் மோசமான நிலையில் அவர்கள் செல்லும் பாதைகள்
எல்லாம் சீர்கேடடைந்து இருக்கின்றன. பல்லாண்டுகாலமாக
இப்படிச் சீர்கேடு அடைந்துபாழாகி இருப்பதால் அவைகளைச்
சீர்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது மிகவும்
அவசியம். அதேபோன்று கீழ்பெரும்பாக்கம், பூந்தோட்டம்
மருதூர், மேல்துறை, கன்னியர்குளம் ரோடு, சுடுகாடு ரோடு



போன்ற பகுதிகளில் பாதை வசதிகள் சரியானதாக இல்லை.
அந்தப் பகுதிகளில் உடனடியாகப் பாதையை சீர்திருத்தி நல்ல
பாதையாகப் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நகராட்சியால் நடத்தப்படுகின்ற மருத்துவமனை
ஒன்று கீழ்பாண்டி ரோட்டிலே இயங்கி வருகிறது. மேலும்
பிரசவ விடுதி ஒன்று தனியாக இருக்கின்றது. இந்த இரண்டு
மருத்துவமனையையும் ஒன்றாக இணைத்து ஒரே இடத்தில்
கீழ்பாண்டி ரோட்டிலே அமைத்து 4, 5 படுக்கைகள் இருக்கின்ற
வகையிலே மாற்றி அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்துசோடியம் வேப்பர் விளக்குகள் போட்டிருக்கிறார்கள்.
அமைச்சர் அவர்கள் கூட வரவிருப்பதாக அறிகிறேன். கட்டா
யம் வருவார் என்றும் கருதுகிறேன். அப்படிப்பட்ட சோடியம்
வேப்பர் விளக்குகள் 10, 12 இடங்களில் போட்டு மின்விளக்கு
களை அமைத்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்,
மேலும் அந்த மின்சாரக் கம்பங்கள் சாலையின் மத்தியிலே
அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதனால் விபத்துக்கள் ஏற்
படுகின்றன. போக்குவரத்துக்கும் தடங்கல்கள் ஏற்படுகின்றன.
மேலும் அந்த பிளாட்பாரத்தில் 20, 25 அடி இடம் இருக்கின்றது.
குறிப்பாக ஜி.எஸ்.டி. ரோடு, பாண்டி ரோடுகளில் இப்படிப்
பட்ட சூழ்நிலை இருக்கின்றது. இதை மாற்றி அமைக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 5-50)

சாக்கடை ,வசதிகள் இல்லாத காரணத்தால் கொசுத்
தொல்லை அதிகமாக இருக்கிறது. இதே குறையை பல்வேறு
உறுப்பினர்கள் பல்வேறு இடங்களிலே சொல்லியிருக்கிறார்கள்.
விழுப்புரம் நகரத்திலே இதை முக்கியமாக கருத்தில் கொள்ள
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கே இருக்
கின்ற மன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானவர்கள், விழுப்புரம்
வழியாகத்தான் தங்களுடைய ஊர்களுக்குச் சென்று கொண்டு
இருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட அந்த
வழியாகத்தான் செல்வதாகச் சொல்கிறார்கள். விழுப்புரம் பஸ்
ஸ்டேண்டிலே ஒரு நாளாவது இறங்கி அதுவும் இரவு நேரத்தில்
இறங்கி நின்று பார்த்தால் அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலைகள்
அவர்களுக்கு நன்றாகப் புரியும். எப்படித்தான் அந்த நகராட்சி
நடைபெறுகிறதோ, எப்படித்தான் அவர்கள் வாழ்க்கையை
அனுபவிக்கிறார்களோ என்று சொல்லாத உறுப்பினர்களே கிடை
யாது. பொது மக்களும் அப்படித்தான் இருக்கிறார்கள். எனவே,

கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த நகராட்சியினுடைய பஸ் ஸ்டேண்டிலே, ஒரு நல்லவிதமான கழிப்பறை அவசியம், அதுவும் குறிப்பாக இரவு நேரத்திலே, அங்கே பொது மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். (மணி அடிக்கப்பட்டது).

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாநகராட்சி, நகராட்சி, ஆகியவைகளுக்கு தேர்தல் நடைபெறப் போகிறது என்று சொன்னாலும், அவற்றுக்கு உரிய தனி அதிகாரி வேண்டுமென்று சொல்லி, சட்ட முன்வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக நான் என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். இன்றைய தினம், ஊராட்சி, நகராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தல்கள் நடைபெறவில்லை. அவ்வாறு இருந்தாலும் சில ஆண்டுகளுக்குப் பிறகு தேர்தல் நடக்கிற அந்த நேரத்திலே வழக்குகள் போடப்பட்டு விட்டன. அப்படி இருக்கின்றபோது, மீண்டும் அவர்களுக்கு தனி அதிகாரம் வேண்டுமென்று சொல்லி, இந்தச் சட்டமுன் வடிவுகளை கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நேரத்திலே நான் வேண்டிக் கொள்வது, இந்த ஆண்டு முடிந்த பிறகாவது தேர்தல் நடக்குமா என்பது தான். ஆகவே, மாநகராட்சித் தேர்தல் நடைபெறாத காரணத்தினால், நாட்டிலே உள்ள ஏழை எளிய மக்களும், நகரங்களில் வாழக்கூடிய மக்களும் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். அங்கே மாநகராட்சியிலே ஒரு குழுவை நியமித்து அந்த மக்கள் குழுவின் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு மக்கள் குழுக்கள் நியமிக்கிற போது, அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் அந்த மக்கள் குழுவிலே அங்கத்தினர்களாகச் சேர்க்க வேண்டும். அவ்வாறு சேர்க்கின்ற நேரத்திலே அவர்கள் சொல்லுகின்ற செயல்களுக்கு, கருத்துக்களுக்கு ஏற்ப அந்த நகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இல்லாமல், அதிகாரிகள் தன்னிச்சையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் குழுக் கூட்டம் என்பது ஆலோசனைக் குழு தானே தவிர, அதைச் செயல்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்கிறார்கள். அவ்வாறு இல்லாமல் இருக்க அந்த மக்கள் குழுக்களுக்கு நல்ல அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்களை, பிரதிபலிக்கின்ற வகையிலே, அவர்களுக்கு நல்ல அதிகாரங்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கள்ளக்குறிச்சி பேரூராட்சி, திருக்காவலூர் பேரூராட்சி ஆகியவைகளை மாநகராட்சியாக மாற்ற வேண்டுமென்று சொல்லி, முதல் அமைச்சர் அவர்களிடத்திலே, நானும், திருக்காவலூர் சட்டமன்ற உறுப்பினர் சுந்தரம் அவர்களும், ஒரு கோரிக்கையினை கொடுத்தோம். இது வரையில் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த ஓர் ஆண்டுக் காலத்திலே, அவைகளை நகராட்சியாக மாற்று



வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு நகராட்சியாக மாற்றுவதினால், அந்தப் பகுதி மக்களுடைய வளர்ச்சி மேம்பாடு அடைய வசதியாக இருக்கும். அவ்வாறு நகராட்சியாக அறிவிக்கப்படுவதற்கு வேண்டிய பொருளாதார வசதியும், வருமானமும் மக்கள் தொகையும் உயர்ந்து கொண்டே போகிறது. அந்த அளவிற்கு மாநகராட்சியாக ஆவதற்கு உரிய வாய்ப்புகள் இருந்தும், அதைச் செய்யாமல் இருப்பது வேதனைக் குறியதாக இருந்துக் கொண்டு இருக்கிறது. ஆகவே அந்த நகராட்சியிலே இருக்கக்கூடிய தனி அதிகாரிகள், தன்னிச்சையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் கள். பொதுவாக கோட்டாட்சி அலுவலர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள மக்கள் குழு கூட்டத்திற்குச் சரியாக வருவதில்லை. குழுவின் கூட்டத்தைக் கூட்டுங்கள் என்று சொன் னால், இரண்டு வாரத்திற்கு ஒரு முறை கூட்டுகிறார்கள். அவ் வாறு கூட்டுகின்ற நேரத்திலே 3 மணிக்குக் கூட்டம் என்று சொன்னால், அவர்கள் 6 மணிக்குத்தான் வருகிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு அனுப்பப்படுவது இல்லை. இருக்கக்கூடிய மக்கள் குழு உறுப்பினர்களுக்கும் முறையாகக் கொடுப்பதில்லை. அவ்வாறு வந்திருந்தாலும், அவர்கள் தன் னிச்சையாக செயல்பட்டுக் கொண்டு, அவர்கள் வரவில்லை என்று மினிட் புத்தகத்தில் எழுதிவிட்டுச் சென்று விடுகிறார்கள். ஒரு கூட்டத்திலே கலந்துக்கொண்டு, அந்தக் கூட்டத்திலே சொல்லுகின்ற கருத்துக்களுக்கு, அடுத்த கூட்டம் நடக்கும் போது, அதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று கேட்டால், அவைகள் எல்லாம் ஆலோசனைகள் தானே தவிர, அதிகார முறையில் நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்லு கிறார்கள்.

ஆகையால் அமைச்சரவர்கள் தயவு செய்து மக்கள் பிரதி நிதிகளுடைய, சட்டமன்ற உறுப்பினர்களுடைய கருத்தை, சர்வ கட்சி உறுப்பினர்களுடைய கருத்தை கேட்டறிந்து, தகுந்த நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சியில் மக்கள் இன்றைக்கு மிகவும் கஷ்டப்படுகி றார்கள். ஏனென்றால் அங்கே குடிதண்ணீர்வசதி கவலைக்கிடமாக இருக்கிறது. சென்ற ஆண்டு கூட இந்த சட்டமன்றத்தில் குடிநீர் பிரச்சனை பற்றி சொல்லும்போது அங்கே தண்ணீர் டாங்க் வைத்து கொடுக்கப்பட்டது. ஆனால் கள்ளக்குறிச்சிக்கு மட்டும் தனியாக ஏரிக்குள் கிணறு வெட்டினார்கள். சென்ற ஆண்டு அந்த கிணற்றுக்கு பைப் கனக்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். பைப் கனக்ஷன் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த கிணற்றில் மோட்டார் வைத்து மின் இணைப்பு கொடுக்கப் படவில்லை. அதனால் மீண்டும் தண்ணீருக்குக் கவலைப்படக்

கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, உடனடியாக மோட்டார் வைத்து, மின் இணைப்புக் கொடுத்து, அதன் மூலம் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நகர மன்றங்களுக்கு தனி அதிகாரிகள் பதவிக் காலம் நீட்டிப்புத் தேவை என்ற முறையில் இந்தச் சட்ட முன்வடிவுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது இந்த அவைக்கு பழக்கமான ஒரு நடவடிக்கையாக ஆகிவிட்டது. அமைச்சருக்கும் இது ஒரு நிலையாக ஆகிவிட்டது. இந்த அவை உறுப்பினர்கள் கேட்டும் பழக்கமாகி விட்டது. எவ்வளவு நாளைக்கு இந்த தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டுமென்று ஒட்டு மொத்தமான சட்ட முன்வடிவுகளைக் கொண்டுவந்து நீட்டித்திருந்தால் அது இந்த அவையின் தரத்தை உயர்த்துவதாக கூட இருக்கும் என்று என்னைப் போன்றவர்கள் கருதுகிறார்கள்.

இப்படி 6 மாதம், 6 மாதம் என்று நீட்டித்துக் கொண்டே செல்லக் கூடிய நிலை ஜனநாயகத்திற்கு சாவு மணி அடிப்பதாக நான் கருதுகிறேன். ஆங்கிலேயர் காலத்தில் இந்த நகர மன்றங்கள் அமைக்கப்பட்டன. அதன் பிறகு ஒன்றிரண்டு நகரமன்றங்கள் புதிதாக அமைக்கப்பட்டன. சுதந்திரம் வந்த பிறகு, காங்கிரஸ் ஆட்சியில் எல்லாப் பகுதிகளுக்கும் நகரமன்றம் போன்ற அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கருதி, சிறிய கிராமங்களுக்குப் பஞ்சாயத்து அமைப்பை ஏற்படுத்தினார்கள்.

ஆங்கிலேயர் காலத்தில் நகரமன்றங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வந்தன. அதன் பிறகும் நல்ல முறையில்தான் செயல்பட்டு வந்தன. ஆனால் இன்றைக்கு தனி அதிகாரிகள் பொறுப்பில் நகர மன்றங்கள் வந்த பிறகு அவற்றின் நிர்வாகம் சீர்கேடு அடைந்திருக்கிறது. அதிகாரிகள் பொறுப்பில் நகர மன்றங்கள் இருப்பது நியாயமல்ல அவைகள் மக்கள் பிரதிநிதிகள் இடம் இருக்க வேண்டுமென்று கேட்கப்படுகிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் நீண்ட காலமாக பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு நல்ல வழிமுறை அல்ல.

இன்றைக்கு இதுபற்றி மக்கள் தீவிரமாக சிந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஏனென்றால் தமிழ்நாட்டில் சிறுக, சிறுக ஜனநாயகம் செத்துக் கொண்டிருக்கிறது. சாதாரண மக்கள் மனதிலே கூட ஒரு கசப்பான சூழ்நிலையை அண்ணா தி.மு.க. ஆட்சி ஏற்படுத்தியிருக்கிறது என்று எண்ணுகிறார்கள். காரணம் அவர்களுடைய குறைகளைத் தீர்க்க அவர்களுடைய பிரதிநிதிகள் நகரமன்றங்களிலே இல்லை. நகரமன்றங்களிலே இன்றைக்கு தனி அதிகாரிகள் இருப்பதன் காரணமாக நிர்வாகம் மிகவும் சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதை ஆளும் பொறுப்பில் இருக்கிறவர்களும் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.



அதற்குக் காரணம் இன்றைக்கு நகரமன்றங்களிலே சுகாதாரம் சீர்கேடு அடைந்திருக்கிறது. குடிதண்ணீர் வசதி இல்லை; மின்சார விளக்கு இல்லை என்று கூறி ஓய்ந்துவிட்டோம். தண்ணீர் வசதி இல்லாமல், விளக்கு வசதி இல்லாமல், சுகாதார கேட்டில், இருட்டில் மக்கள் வாழக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் —தலைமை.)

வட ஆற்காடு மாவட்டம் 12 நகராட்சிகளைக் கொண்ட ஒரு பெரிய மாவட்டம். அந்த மாவட்டத்திலே நகர மக்கள் அதிகம். மாவட்டத்திலே மக்கள் தொகையும் அதிகம். மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தங்களுடைய தலைமையில் இவைகளை எல்லாம் நான்கூறிக் கொண்டிருக்கிறேன். நீங்களும் இதை பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): நான் இந்த அவையில் நீங்கள் பேசுவதையும் கேட்கிறேன்; இந்த அவையிலே என்ன நடக்கிறது என்பதையும் கவனித்துக் கொண்டு இருக்கிறேன். யார், யார் பேசுவது என்று பெயர் சொல்வது மட்டும் என் வேலையல்ல. எப்படி அவையை நடத்த வேண்டும், எப்படி கன்ட்ரோல் பண்ணி கொண்டுபோவது என்பதும் என்னுடைய பணி.

[மாலை 6-00]

திரு இல. பலராமன்: மாண்புமிகு மாற்றுதலைவர் அவர்களே, தங்கள் விளக்கத்திற்கு நன்றி. வேலூர் நகரத்தில் இன்றைக்கு பல முறைகேடுகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே வருகை தந்தபோது மக்களால் பல புகார்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. குடிநீர் வசதி இல்லை. குடிநீர் பற்றாக்குறை உள்ள நகரமாக அது இருந்து கொண்டு இருக்கிறது. இதே நிலைமை வடாற்காடு மாவட்டத்தில் உள்ள பல்வேறு நகர மன்றங்களிலும் இருக்கின்றன.

அதைப்போலவே, சுகாதார சீர்கேடு என்று சொன்னால் அது கொஞ்ச நஞ்சமல்ல. 7 மணிக்கு 8 மணிக்கு மேல் கொசுத் தொல்லை இருக்கிறது என்று மற்ற இடங்களில் சொன்னால், வேலூர் நகரத்தைப் பொறுத்தவரையில் 5 மணிக்கே கொசுத் தொல்லை ஏற்பட்டு விடுகிறது. அது ஏதோ ஒரு படையெடுப்பு போல் நடக்கிறது. இதையெல்லாம் யார் போக்குவது என்பது தெரியாத நிலை இருக்கிறது. ஆகவே. இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த தனி அதிகாரிகள் ஆட்சியில் வேலூர் சாரதி மாளிகையில் இருக்கும் கடைகளுக்கு வரிவிதிப்பு பல மடங்கு உயர்த்தப்பட்டு இருக்கிறது. இந்த முறைகேடு பற்றி கூட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பல புகார்கள் வந்து இருக்கின்றன. வரி உயர்வு என்பது ஒரளவிற்கு இருக்கவேண்டியது தான் என்று அவர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் ஒரு முறை இல்லாமல், ஒரு நியாயம் இல்லாமல் 100 மடங்கு, 200 மடங்கு என்று உயர்த்தப்பட்டு இருக்கிறது. இப்படி அதிகமான முறையில் அதை ஏற்றுவதற்கு அந்த தனி அதிகாரிகளுக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. இது குறித்தும் அரசு பரிசீலிக்க வேண்டும்.

வேலூர் நகரத்திற்கு பஸ் ஸ்டான்ட் வேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை இருந்து வருகிறது. அது இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதை விரைவாகக் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் நகரத்தில் சோடியம் விளக்குகளைப் பொருத்துவதற்குப் மட்டும் 1,100ரூ. அளவிற்கு பிட்டிங் சார்ஜஸ் என்ற நிலையில் கொடுக்கப்பட்டிருக்கிறது தனி அதிகாரியால் என்ற பிரச்னை சொல்லப்பட்டு இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது தனி அதிகாரிகளால் இப்படி ஒரு விளக்குகள் பொருத்துவதற்கே ஒரு முறை இல்லாமல் 1,000 ரூ. செலவழிக்கப்பட்டு இருக்கிறது என்றுசொன்னால் வேறு நிலைமையில் எந்தஅளவிற்கு பண விரயம் செய்யப்பட்டு இருக்கும் என்பதைச்சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு நல்ல முறையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் உள்ள போளூர்-என்னுடைய தொகுதி—பேரூராட்சியாக இருக்கிறது. அதை நகராட்சியாக மாற்ற வேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை இருக்கிறது. அதை நகரமன்றமாக மாற்றுவதற்கு உரிய அத்தனை தகுதிகளும் அதற்கு இருக்கிறது. ஆகவே, அதை நகராட்சி மன்றமாக மாற்றுவதற்கு உரிய அறிவிப்பு இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களால் செய்யப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்தலை விரைவாக நடத்துவதற்கான சூழ்நிலையை அமைச்சர் அவர்கள் உருவாக்கவேண்டும். பஞ்சாயத்து தேர்தலுக்கு இன்று தடை இருந்தாலும் நகர மன்றத்திற்கு தேர்தல் நடத்த தடை இல்லை. ஆகவே இந்த 6 மாத காலத்திற்குள்ளேயே தேர்தலை நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள்



கேட்டு கொள்கிறேன். மாண்புமிகு
நடவடிக்கைகளெடுக்கவேண்டும்என்று
இளைஞர், துடிதுடிப்பானவர், வீரம் மிக்கவர், அந்த அளவிற்கு
வீரத்தோடு இருப்பவர் தேர்தலை விரைவில் நடத்துவேன் என்று
ஒரு சவாலை அத்தகைய வீரத்தோடு இங்கே விட்டு, அதை
நிறைவேற்றவேண்டும் என்றும் கேட்டு, போளூர் பேரூராட்சியை
நகராட்சியாக மாற்றவேண்டும் என்று வலியுறுத்தி, பேச வாய்ப்
பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவையின் மாற்றுத்
தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித்
துறை அமைச்சர் அவர்களால் சென்னை மாநகராட்சி, கோவை
மாநகராட்சி மற்றும்தமிழ் நாட்டில் உள்ள நகராட்சி
ஆகியவற்றிற்கெல்லாம் உள்ள தனி அதிகாரிகளின் பதவிக்
காலத்தை நீட்டிக்கின்ற இந்த மசோதாக்களின் மீது திராவிட
முன்னேற்றக்கழகத்தின் சார்பில் நான் ஒரு சில கருத்துக்களைத்
தெரிவிக்க விரும்புகிறேன்.

கோவை, சென்னை மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்
ஆகியவற்றிற்கு தேர்தலை எப்போது நடத்தப் போகிறோம்
என்பதைப் பற்றிய அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
தெரிவித்து இருக்கிறார்கள். ஊராட்சித் தேர்தல்கள் எல்லாம்
நடந்த பிறகு இவைகளுக்கு எல்லாம் தேர்தல் நடத்தப்போகி
றோம் என்று சொல்கிறார்கள். ஊராட்சித் தேர்தல் எப்போது
நடைபெறும் என்பது யாருக்கும் தெரியாது. அப்படிப் பட்ட ஒரு
சூழ்நிலையில்தான் இன்றைக்குத் தமிழகம் இருந்து கொண்டு
இருக்கிறது. இந்தப் பேரவையில் கூட ஸ்டே யார் வாங்கினார்கள்
என்று நடந்த விவாதத்தின் போது மாண்புமிகு கம்யூனிஸ்ட்
கட்சியின் தலைவர் சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள்.
திராவிட 'முன்னேற்றக்கழகத்தைப் பொறுத்தவரையில் பெண்
களுக்கோ அல்லது ஆதித் திராவிடர்களுக்கோ ஒதுக்கீடு செய்
வதை வேண்டாம் என்று சொல்லும் நிலையில் இல்லை. அதை
இந்த மாமன்றத்திலேயே வலியுறுத்தி பேசியிருக்
கிறோம், வரவேற்று இருக்கிறோம். அதைச் செய்வதை
நாங்கள் வரவேற்று இருக்கிறோமே தவிர அதிலே வேறுபாடு
கொள்ளவில்லை. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால்
கூட என்னுடைய தொகுதியிலே எல்லாம் கூட அப்படிப்பட்ட
ஒதுக்கீடு வந்தபோது யாருமே கோர்ட்டுக்குச் செல்லாமல்
பார்த்துக்கொண்டோம். அப்படிப்பட்ட ஒரு நிலைமையைத்
தான் நாங்கள் கூட திருவண்ணாமலை பகுதியிலே கூட ஏற்
படுத்தினோம். ஆனால் நீதிமன்றங்களுக்குச் சென்ற வழக்குகள்
எப்போது தீரும் என்று அவர் சொன்னது போல எங்களுக்குத்
தெரியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுமானால்
அரசாங்கத்தின் சார்பிலே என்ன நிலைமை என்பதையெல்லாம்
இங்கே எடுத்துச் சொல்லலாமே தவிர, எங்களுக்குத் தெரிய
வாய்ப்பில்லை.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1982 மார்ச் 24

அதேபோல நகராட்சிகள் தேர்தலை இப்படித் தள்ளி
வைக்கப்படுகிற நிலைமை ஏற்படுகிறபோது திருவண்ணா
மலையிலே கூட சென்ற மாதம் எல்லா அரசியல் கட்சிகளும்
சேர்ந்து, வியாபாரிகள் பொது. மக்கள் அனைவரும் சேர்ந்து
கடையடைப்பு செய்தார்கள், ஊர்வலம் நடத்தினார்கள்.
எதற்காக என்றால், திருவண்ணாமலை நகராட்சி மக்களுக்கு
வழங்க வேண்டிய அத்தியாவசியத் தேவைகளான குடிதண்
ணீர், விளக்கு வசதிகள் சுகாதார வசதிகள், சாலை வசதிகள்,
வீதிகளை சுத்தம் செய்கிற டணிகள் ஆகியவைகள் எல்லாம்
சரியாக செய்யவில்லை. நடைபெற வில்லை என்ற காரணத்திற்
காக இப்படிப்பட்ட கடையடைப்பும் ஊர்வலமும் அந்தப்பகுதி
மக்கள் நடத்தியதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்
களுக்கும் மகஜர் கூட அனுப்பியிருக்கிறார்கள் என்று அறிந்தேன்.
இப்படிப்பட்ட நிலைமை திருவண்ணாமலையில் மட்டும் அல்ல.
வேலூரில் மட்டும் அல்ல, ராணிப்பேட்டையில் மட்டும் அல்ல,
எல்லா நகராட்சிகளிலும் இப்படிப்பட்ட நிலைமைதான் இருந்து
வருகிறது.

காரணம் நகராட்சிகளிலே இருக்கிற தனி அதிகாரிகள் அல்லது
அவர்களுக்கு கீழே பணி புரிகிற அதிகாரிகள் ஆய்வாளர்கள்
அல்லது அவர்களுக்கு கீழே பணிபுரிகிற ஊழியர்கள், மத்தி
யிலே ஒற்றுமை கிடையாது. காரணம் அங்கே கவுன்சிலர்கள்
இல்லை. தலைவர்கள் இல்லை. என்ற சூழ்நிலை இருக்கிற
காரணத்தால் அந்த ஊழியர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து
அவர்களை வேலை வாங்குகிற நிலைமை அறவே அற்றுவிட்ட
நிலைதான், நகராட்சிகளும், மாநகராட்சிகளும் நிர்வாகத்தில்
சீர் குலைந்திருப்பதற்கு காரணம் என்பதைச் சொல்லவிரும்பு
கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் சென்ற ஆண்டு
கடுமையான வறட்சி ஏற்பட்டது. அப்போது கடுமையான குடி
தண்ணீர் பஞ்சமும் அந்தப் பகுதிகளில் ஏற்பட்டது. பிறகு திடீர்
என்று மேற்குப் பகுதியில் மழை பெய்த காரணத்தால் பெண்
ணையாற்றுக்கு வெள்ளம் வந்தது, அந்த ஆற்றின் வழியாகதான்
திருவண்ணாமலைக்கு தண்ணீர் கிடைக்கிறது. திரு
வண்ணாமலைக்கு மட்டும் அல்ல ஏறத்தாழ 20 ஊர்களுக்குத்
தண்ணீர் கிடைக்கிறது. அப்படி மழை பெய்து வெள்ளம் வரு
கிறபோது பெண்ணையாற்றிலிருந்து வருகிற தண்ணீர் கலராக
இருக்கும். புதிய தண்ணீர் என்று சொல்வார்களே அதைப்போல
சற்று கலர் மாறுபட்டிருக்கும். அப்படி 20 நாட்களுக்கு குழாய்
களில் தண்ணீர் கலராக வந்தது. அப்போது நான் கூட தொலை
பேசியிலே அதிகாரிகளை அழைத்துக் கேட்டபோது, நகராட்சி
மன்றத் தண்ணீர் தொட்டிகளிலே கலக்கப்படுகிற ஒரு விதமான
பவுடர் குளோரின் என்று நினைக்கிறேன் அதை வாங்குவதிலே
பொறியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இடையில் தகராறு
ஏற்பட்டதினால்தான் இந்த நிலை என்று சொல்கிறார்கள்.



1982 மார்ச் 24] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

இதனால் கிட்டத்தட்ட 20 நாட்களுக்கு மேலாக அந்த
அசுத்தமான தண்ணீரைக் குடிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட
காரணத்தினால், அந்தப் பவுடரை தண்ணீர் தொட்டிகளில்
கலக்காத காரணத்தினால், பொதுமக்களில் ஆயிரக்கணக்கானவர்
கள் ஜுரத்தினால் பாதிக்கப்பட்ட நிலைமை ஏற்பட்டது. அடுத்
ததாக சொல்லவேண்டும் என்றால், விளக்குகளைப் பற்றிச்
சொல்லவேண்டும். இன்று சென்னையிலே சோடியம் விளக்குகள்
பல இடங்களிலே எறிவதைப்பற்றி இங்கே கூட பல உறுப்பினர்
கள் எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளை
சென்னையிலேயாவது பேரறிஞர் அண்ணா சாலையிலும்,
பெரியார் சாலையிலும் ஏற்படுத்தியதற்காக, மாண்புமிகு
அமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்தவேண்டும், ஆனால்
பொதுவாக முன்பெல்லாம் சொல்வார்கள், கிராமப்புறங்
களிலேயிருந்து வருகிற மக்கள் நகரங்களிலேதான் விளக்குகள்
எங்கு பார்த்தாலும் எறிவதை வேடிக்கை பார்க்கிற நிலைமை
இருக்கிறது என்று. ஆனால் இன்றையதினம் அப்படி நகரங்க
களிலேகூட அதிக அளவில் விளக்குகள் எறிவதில்லை. இந்தஇரண்டு
முக்கியத் தெருக்களைத் தவிர, அனேகமான மற்றக் தெருக்
களில் அவ்வளவாக விளக்குகள் ஒழுங்காக எரிவதில்லை என்ற
நிலைதான் இருக்கிறது. இதற்கு யார் காரணம்? இந்த நிலை
யைப் போக்க தேர்தலை நடத்தியே ஆகவேண்டும். இதற்கு ஒரு
முடிவு ஏற்படுத்த வேண்டும். நல்ல சூழ்நிலையை உருவாக்கியாக
வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

அடுத்ததாக நேற்றுக் கூட சொன்னேன். சென்னை மா
நகராட்சிக்கு நாங்கள் எல்லாம் வராமலே இருந்தாலும் கூட,
சென்னை நகரத்திலே பல இடங்களுக்குச் செல்கிறபோது
பிளாட்பாரங்களில் நடக்க முடியவில்லை என்று சொன்னேன்.
காரணம் அஙகே எல்லாம் கடைகள், பிளாட்பாரத்தை விட்டு
நாம் கீழே இறங்கினால் பஸ் ஆட்டோ, டாக்சி போன்றவைகள்
சரசரவென்று வருகிற சூழ்நிலை. அப்படி பிளாட்பாரங்களில்
யாராவது கீழே கவனிக்காமல் நடந்து வருகிற சூழ்நிலையில்
இருப்பார்களேயானால், அவர்கள் அங்கே திறந்து இருக்கிற
சாக்கடைப் பள்ளங்களில் தான் விழ வேண்டிய சூழ்நிலை
இருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட பல பகுதிகளுக்கு
எல்லாம் சென்று பார்த்து வருகிறார்கள் என்பதை எல்லாம்
அறிந்தேன். ஆகவே அவைகளை யெல்லாம் அவர்களே பார்த்
திருப்பார்கள். ஆனால் இப்படிச் சொல்லிக் கொண்டேயிருப்போ
மேயானால் என்ன தான் செய்யப்போகிறோம், என்னதான்
இதற்கு முடிவு காணப்போகிறோம் என்று கேட்கவிரும்புகிறேன்.
தனி அதிகாரிகள் என்னதான் பண்ணுகிறார்கள்? இப்படியே

இருந்தால் வெளி நாடுகளிலேயிருந்து வருகிறவர்கள் மட்டும் அல்ல, வெளிமாநிலங்களிலே யிருந்து வருபவர்களும் நம்முடைய அரசாங்கத்தைப் பற்றியும், மாநகராட்சியைப் பற்றியும் தவறாக நினைக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதற்கு ஒரே வழி நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் தேர்தல் வருவதுதான், அதிகாரிகள் என்னதான் செய்கிறார்கள். அந்த சாக்கடைக்கு மூடி கூட போடமுடியவில்லை என்றால் அவர்கள் எதற்குத்தான் இருக்க வேண்டும்? பல ஊர்களிலே பார்க்கிறபோது, சாக்கடை தண்ணீர் வெளியிலே வந்து பொங்கிக் கொண்டு வருகிற காட்சி யைத்தான் பார்க்கிறோம்.

(இரவு 6-10)

நான் சென்னையைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினராக இல்லை என்றாலும் கூட பல நண்பர்கள் நீங்கள் இவற்றைப் பற்றிச் சட்டமன்றத்திலே பேசக்கூடாதா மாண்புமிகு அமைச்சரிடத்திலே சொல்லக்கூடாதா என்று கேட்கின்றன நிலைமைகள் இன்றைக்குகிருக்கின்றன. நீதிமன்றத்திலே ஒதுக்கீடு பற்றிய பிரச்சினை முடிகின்ற வரையிலே தேர்தல் நடக்காது. எனவே இந்த இடைக்காலத்திலே நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் அதற்கு ஒரு முடிவு காண வேண்டாமா! இங்கே கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சேலம் ஆறுமுகம் அவர்கள் தனி அதிகாரி காலாகாலத்திலே இந்தப்பணிகளை எல்லாம் செய்ய முடியும் என்று சொன்னார்கள். ஆனால் அதன்படி நல்லமுறையிலே செய்தால் பரவாயில்லை. ஆனால் அப்படிச் செய்யாத நிலைமை இருக்கின்றபோதுதான் யோசிக்க வேண்டி இருக்கின்றது. ஆனால் தேர்தல்கள் நடந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ, திராவிட முன்னேற்ற கழகமோ, காங்கிரஸ் கட்சியோ, கம்யூனிஸ்ட் கட்சியோ எந்தக் கட்சி வந்தாலும் கூட அவர்கள் ஒவ்வொரு தொகுதியிலே இருந்து தேர்ந்தெடுக்கப் படுவதன் காரணத்தால் முதலிலே பதவிக்கு வரவேண்டும் என்ற வகையிலே வந்து விட்டாலும் வந்ததற்குப் பிறகு தன்னுடைய தொகுதிக்கு வேண்டிய காரியங்களைச் செய்ய முயலுவார்கள். ஆனால் இன்றையதினம் தனி அதிகாரிகள் பற்றி அப்படிச் சொல்ல முடியாது. யார் அவர்களுக்குப் பயப்படுகிறார்கள். ஆணையா ளரைப் கண்டு தனி அதிகாரி பயப்படுவதில்லை. தனி அதிகாரிகள் சொன்னால் யாரும் கேட்பதில்லை. என்னுடைய தொகுதியிலே ஒருவர் என்னிடத்திலே வந்து ஒன்றைச் சொன்னார்கள். அதாவது அவருடைய மனைவியை திருவண்ணாமலை நகராட்சியின் சார்பிலே நடைபெறுகின்ற மகப்பேறு இல்லத்திலே சேர்த்தார். அப்படிச் சேர்த்து பிரசவமும் ஆகிவிட்டது. ஆனால் வீட்டிற்குப் போகின்ற நேரத்திலே அவர்களிடத்திலே ஒரு பில்லைக் கொடுத்து 40 ரூபாய் பணத்தைக் கட்டிவிட்டு வீட்டுக்குப் போகலாம் என்று சொல்லிவிட்டார்கள். இதைப் பற்றி அந்த வாலிபர் என்னிடத்திலே வந்து சொன்னதற்குப் பிறகு நான் திருவண்ணாமலை நகராட்சியின் ஆணையாளரிடத்திலே அதுபற்றி தொடர்பு கொண்டேன். அவர்கள் தானாகக்



கொடுத்தால் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்துவது எப்படி சரியானதாக இருக்கும் என்று கேட்டேன். இப்படிப்பட்ட நிலைமை திரு வண்ணாமலை, வேலூர் போன்ற பல்வேறு நகராட்சிகளிலே இருக்கின்றது. இவற்றை எல்லாம் நல்ல நிலைமைக்குக் கொண்டு வரவேண்டும் என்றால் முதலிலே இதற்கான முயற்சி எடுக்க வேண்டாமா ? மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது..........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தனி அதிகாரிகள் சட்ட முன்வடிவு பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது அறநிலயத் துறைக்குச் செல்ல வேண்டாம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள், அதாவது அறங்காவலர்கள் நியமிப்பதை தனி அதிகாரிகள் விரும்பவில்லை என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமை நீடித்தால் எதிர்காலத்திலே நகராட்சி மன்றத் தலைவர் வருவதைக் கூட தனி அதிகாரிகள் விரும்பாத சூழ்நிலை ஏற்பட்டு விடும். ஆகவே இந்த மாதிரி நிலைமைகளை எல்லாம் போக்க வேண்டும் என்றும் உடனடியாகத் தேர்தலை நடத்துவதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, இன்று மூன்று மசோதாக்கள் மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் 15 பேர் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மூன்று மசோதாக்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்கின்றது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். குறிப்பாக இந்த மசோதா கொண்டுவருவதன் நோக்கம் மாண்புமிகு உறுப்பினர் அனைவருக்கும் தெரியும். அவர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றுக்குத் தேர்தலை நடத்த வேண்டும் என்று முடிவு செய்து தேர்தலுக்கான தேதிகள் கூட அறிவிக்கப்பட்டு ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் பெண்களுக்கான ஒதுக்கீடுகள் எல்லாம் செய்யப்பட்டது. அப்படி முதல் முறையாகத் தமிழகத்தில்தான் இந்தியத் துணைக் கண்டத்திலேயே ஆதி திராவிட மக்களுக்கும், பெண்களுக்கும், ஒதுக்கீடுகள் தரப்பட்டன. ஆதி திராவிட மக்களுக்கு 18 சதவீதமும், பெண்களுக்கு 15 சதவீதமும் ஒதுக்கப்பட்டது. அதனை இந்த மாமன்றமும் வரவேற்றது. தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை பேரும் வரவேற்றார்கள். ஆனால் ஒரு சில அரசியல் கட்சிகள் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும் நாளைக்குத் தேர்தல் நடந்தால் தங்களுக்கு வெற்றி கிடைக்காதோ என்ற சந்தேகத்

தின் காரணமாகவும் அவர்கள் எல்லாம் வழக்கு மன்றத்திற்கு இந்த ஒதுக்கீட்டினை எதிர்த்து சென்றதன் காரணத்தால், ரிட் மனுக்களைப் போட்டதன் காரணத்தால் தேர்தல் நடத்துவது தடை செய்யப்பட்டது. இப்போது நீதிமன்றத்திலே அந்த வழக்குகள் இருந்துகொண்டிருக்கின்றன.

ஏறத்தாழ 340 ரிட் மனுக்கள் அங்கே இருக்கின்றன. இதிலே யார் யார் போட்டார்கள் என்ற கேள்விகளை எழுப்பினால் கண்டிப்பாக நான் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். பதில் சொல்வதற்கும் தயாராக இருக்கிறேன். உண்மையிலேயே நான் வரிசையாக 340 ரிட் மனுக்களையும் படித்து யார் யார் போட்டிருக்கிறார்கள்? எந்தெந்த வக்கீல்கள் போட்டிருக்கிறார்கள். யார் யாருக்காகக் போட்டிருக்கிறார்கள் என்று படிக்க என்னிடத்திலே குறிப்புகளை வைத்திருக்கிறேன். ஏற்கெனவே கடந்து விட்ட காரியம், செய்து விட்ட செயல் மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தாலும், துளைத்துப் பார்த்தாலும் உண்மையிலேயே காலம் தான் செல்லுமே தவிர காரியம் ஆகப்போவது இல்லை.

30-3-1982ம் தேதி இந்த ரிட் மனுக்கள் உயர்நீதிமன்றத்திலே 'டிவிஷன் பென்ச்' என்று சொல்லப்படும் ஆயர் மன்றத்தின் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. வருகின்ற 30-3-1982 ஆம் தேதி எல்லா ரிட்மனுக்களையும் உயர்நீதிமன்றம் எடுத்துக் கொள்ள இருக்கிறது. 30-3-1982 ஆம் தேதி எடுத்துக் கொள்ளப்பட்டால் எவ்வளவு சீக்கிரம் இந்த ரிட் மனுக்களின்மீது தீர்ப்புக்களைக் கூற முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகத் தீர்ப்புகளைக் கூற இருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவிக்கக் கடமைப் பட்டவனாக யிருக்கிறேன்.

ரிட் மனுக்களின் மீது தீர்ப்புக்கள் கூறப்பட்டால் அதற்குப் பின்னால் தேர்தலைச் சீக்கிரமாக நடத்துவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும், ஏற்கெனவே அறிவித்தபடி ஊராட்சிமன்றத் தேர்தல்களையும், ஒன்றியத் தேர்தல்களையும் முதல் கட்டமாகவும், நகராட்சி மன்றத் தேர்தல்களை இரண்டாம் கட்டமாகவும் மாநகராட்சி மன்றத் தேர்தல்களை மூன்றாம் கட்டமாகவும் நடத்த இருக்கிறோம்.

இதிலே முதல் கட்டப் பணி இப்பொழுது தடைப் பட்டிருக்கிறது. தடை செய்யப்பட்டிருக்கிறது. 30-4-1982 ஆம் தேதி டிவிஷன் பென்ச் உயர்நீதிமன்ற ஆயர் மன்றம் இந்த ரிட் மனுக்களை ஆய்விற்கு எடுத்து கொண்டபிறகு எப்போது, எவ்வளவு சீக்கிரமாகத் தீர்ப்புக் கூறுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவுசீக்கிரமாக, உடனடியாகத் தேர்தல்களை நடத்துவதற்கு இந்த அரசு தயாராக யிருக்கிறது. முதல் கட்டத் தேர்தல்கள் ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நடத்தப்பட்ட பிறகு, நகராட்சி மன்றங்களுக்கும், மாநகராட்சி மன்றங்களுக்கும் தேர்தலை நடத்துவதற்கு நாம் தயாராக யிருக்கிறோம்.



ஒரு சில சந்தேகங்களைக் கூட இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியிருக்கிறார்கள். நாம் செய்த ஒதுக்கீடுகள், ஆதி திராவிடர்களுக்கு 18 சதவீத ஒதுக்கீடும் பெண்களுக்கு 15 சதவீத ஒதுக்கீடும் செய்தது தவறு என்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறினால் இந்த அரசு என்ன செய்யப் போகிறது கொள்கை அடிப்படையில் என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் ஆதி திராவிடர்களுக்கு 18 சதவீதமும் ஒதுக்கியாக வேண்டும், பெண்களுக்கு 15 சதவீதமும் ஒதுக்கியாக வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை. இந்தக் கொள்கைக்கு எதிராக ஏதாவது தீர்ப்பு வந்தாலும் கூட 18 சதவீதம் ஆதி திராவிடர்களுக்கும், 15 சதவீதம் பெண்களுக்கும் ஒதுக்க வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற அளவிற்கு என்னென்ன நிலைமைகளை நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நிலைமையில் கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற கருத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனி அதிகாரிகளாக இருக்கின்றவர்கள் கடந்த 1976 ஆம் ஆண்டு ஜூலைமாதத்தில் இருந்து நகராட்சிகளில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் இந்த சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். கொண்டு வந்து அங்கே ஏற்கெனவே இருந்த நகராட்சிகளுடைய சேர்மன்களை, தலைவர்களை பதவி நீக்கம் செய்து அதற்குப் பின்னாலே அந்த நகராட்சிகளுக்கு தனி அதிகாரிகளைப் போட்டார்கள். இந்த தனி அதிகாரிகள் பதவிக் காலம் 31-3-1982 ஆம் தேதியுடன் முடிவடைவதால் அதை நீடிக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். தற்போது தேர்தல்கள் நடத்த முடியாத சூழ்நிலை. ஆகவேதான் 1 ஆண்டு காலத்திற்கு என்று நீட்டிப்புக் கொடுத்திருந்தாலும் கூட, தேர்தலை முன் கூட்டியே நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டாலும் நடத்தக் கூடிய அளவிற்கு இந்தக் காலக் கெடுவை ஆறு மாதமாகக் குறைக்க இந்த சட்டத்திலே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நடத்த இந்த அரசு தயாராக இருக்கிறது.

அடுத்து கோவை மாநகராட்சி பற்றிய விஷயம். கோவை மாநகராட்சியாக கடந்த ஆண்டு மே மாதம் 1ம் தேதி அறிவிக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே இப்பொழுது ஏறத்தாழ ஒரு ஆண்டுக்காலம் முடிவடைகின்ற சூழ்நிலையில் அந்தக் கோவை மாநகராட்சியில் இன்று இருக்கக் கூடிய வார்டுகள் எண்ணிக்கை 60. நிலைமைகளை ஆராய்ந்து இந்த வார்டுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக 'டீ லிமிடேஷன் கமிட்டி' என்று ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வார்டுகளைப் பிரிக்கின்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே உடனடியாக அங்கே தேர்தலை நடத்த முடியாது. அதன் கார...

மாக கோவை மாநகராட்சியின் தனி அதிகாரியின் பதவிக்
காலத்தை நீட்டிக்க வேண்டிய காலக்கட்டாயத்திலே இந்த அரசு
இருக்கிறது என்பதை மாமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள்
ஏற்றுக் கொள்வார்கள் ஏன்பதிலே எள்ளளவும் எனக்குத் சந்தேகம்
இல்லை,

(மாலை 6—20)

ஆனால் அதே நேரத்தில் கோவை மாநகராட்சியைப்
பொறுத்தவரையில் சிறுவாணி குடிநீர் திட்டம்பற்றி மாண்பு மிகு
உறுப்பினர் திரு. சின்னராசு அவர்களும் மற்றுமுள்ள மாண்பு மிகு
உறுப்பினர்களும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்தச் சிறு
வாணித் திட்டம் ரூ. 16,16,00,000 செலவில் அந்தத் திட்டத்தை
நாம் எடுத்து செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். இப்போது
கூட இந்த நிதி ஆண்டில் வருகிற 30—6—1982 முடிய அரை
ஆண்டிற்கு கேரள அரசு ஒரு கோடி ரூபாய் தேவை என்று
கேட்டார்கள். இன்று அதற்குண்டான ஆணைகள் பிறப்பிக்கப்
பட்டு ஒரு கோடி ரூபாய் கேரள அரசுக்குக் கொடுக்கப்பட்
டிருக்கிறது. இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக அந்த சிறுவாணித்
திட்டம் முடிவடைந்துவிடும். ஆகவே சிறுவாணித் திட்டம்
மூலம் அந்த மாநகராட்சிப் பகுதிகளுக்கு, இப்போது சேர்க்கப்
பட்ட பகுதிகளுக்கும் அவர்களுக்கு குடிநீர் வழங்குவதற்கும்
அதை நடைமுறைப்படுத்துவதற்கும் இந்த அரசு தயாராக
இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் கோவை மாநகராட்சியைப் பொறுத்த வரையில்
மாநகராட்சி என்கிற அந்தஸ்துக்கு உயர்ந்திருந்தாலும் கூட
இன்னும் பல்வேறு வசதிகள் கோவை மாநகராட்சிக்கு கிடைக்க
வில்லையென்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் செல்கிற
நேரத்தில் எல்லாம் அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று சாலைகளை
அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று சொன்னாலும், பராமரிப்பு
கள் செய்யவேண்டுமென்று சொன்னாலும், அங்கிருக்கக்கூடிய
சாக்கடைகளை சரிவர போகிற அளவிற்கு செய்ய வேண்டும்
என்று சொன்னாலும், தெருக்களை சுத்தமாக வைக்கவேண்டு
மென்று சொன்னாலும், விளக்குகள் எரியாமல் இருந்தால் எரிய
வைக்கிற வகையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று சாலைகள்
பராமரிக்க மட்டும் கோவை மாநகராட்சிக்கு ஒரு கோடி ரூபாய்
கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒரு கோடி ரூபாய் இன்று
செலவழிக்கப்பட்டு வருகிறது.

கோவை மாநகராட்சியானதற்குப் பின் பாரதியார் பல்கலைக்
கழகத்தை இந்த ஆண்டு துவக்க இருக்கிறார்கள். அதற்கு
முன்பாகவே அங்கிருக்கக்கூடிய சாலைகளை பராமரித்து,
நல்ல முறையில் செப்பனிடுவதற்காகவும், சாலைகளின் இரு
மருங்கிலும் செடிகள், மரங்களை வளர்ப்பதற்கும் ஏற்பாடுகள்



செய்யப்பட்டு ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய் திட்டம் நடை
பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

அதேபோல் கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில்
அருமை நண்பர் திரு. சின்னராசு அவர்கள் சொன்னதுபோல்
இன்று பல்வேறு பகுதகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சேர்க்கப்
பட்ட பகுதிகளுக்கு மின்சார இணைப்புகள் கொடுக்கவேண்டு
மென்று சொன்னார்கள். அதை மின்சாரத் துறைதான் கொடுக்க
வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மாநகராட்சிப் பகுதிகளுக்கு
மின்சாரம் வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. எல்லாப்
பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்க மின்சாரதுறையினரை அணுகி
நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் ஆணை பிறப்பிக்க
இருக்கிறார்கள் என்பதை கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கி
றேன்.

சென்னையைப் பொறுத்தவரையில் மாநகராட்சி தனி அதி
காரிக்கு பதவிக் காலம் 30—5—1982 யோடு முடிவடைகிற
காரணத்தால் அப்போது மாமன்றத் கூட்டம் இருக்காது
என்பதால் முன்கூட்டியே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்
திருக்கிறோம். ஆகவே 30—5—1982-ல் இருந்து ஒரு ஆண்டுக்
காலம் தள்ளி வைத்து, அதே நேரத்தில் சென்னையில் தேர்தல்
கள் சீக்கிரம் நடைபெறவேண்டுமென்று சொன்னால் அதை ஆறு
மாதமாகக் குறுக்குகிற அளவிற்கு வழிவகை செய்ய வேண்டு
மென்று இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் 1973-ஆம்
ஆண்டு ஏற்கனவே இருந்த மேயர், மன்ற உறுப்பினர்கள் பதவிக்
காலம் போய், கலைத்துவிட்டு அதற்குப் பின்னால் தனி அதிகாரி
ராஜ்யத்தை ஏற்படுத்தியது உறுப்பினர்களுக்குத் தெரியும்.
ஆனால் திரு. பாலன் அவர்களும் மற்றுமுள்ள உறுப்பினர்களும்
சொன்னார்கள். குறிப்பாக திரு. இளையபெருமாள் அவர்களைப்
போன்றவர்கள் மாநகராட்சி பற்றிய பல்வேறு கருத்துக்களை
எடுத்துச் சொன்னார்கள். மாநகராட்சிப் பகுதிகளில் துப்புறவுப்
பணிகள், விளக்குகள் எரியாமல் இருந்தால் எரிய வைப்பதற்குரிய
நடவடிக்கைகள் எடுத்தல் இவை எல்லாம் எடுக்கப்பட்டு
வருகின்றன. ஒவ்வொரு கோட்டமாக நானே நேரடியாகச்
சென்று, அதிகாரிகளை வைத்துக்கொண்டு மக்கள் குறைகளைக்
கேட்டு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
ஆகவே சீக்கிரமாக தேர்தல்கள் நடத்தி மாமன்ற உறுப்பினர்கள்
அந்தப் பதவிக்கு வருகிற சூழ்நிலையை ஏற்படுத்த முடியுமோ
அதை ஏற்படுத்துவோம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

ஆக, இந்த மூன்று மசோதாக்கள் மீதும் பல்வேறு உறுப்பினர்கள்
அவர்களது மேலான கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள்.
அவர்கள் தொகுதிகளில் என்னென்ன தேவை என்பதையும்

மானியக் கோரிக்கையில் பேசுவது போல் கூறியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நான் கவனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறேன்.

ஆலோசனைக் குழுக்கள் பற்றிச் சொன்னார்கள். ஆலோசனைக் குழுக்கள் இனி புதிதாக நாம் ஏற்படுத்தத் தேவையில்லை. காரணம், நீதிமன்றம் 30—3—1982-க்குள் தீர்ப்பு வழங்கி விட்டால் தேர்தல்களை தொடங்கி நடத்த இருக்கிறோம். அந்நிலையில் ஆலோசனைக் குழுக்கள் போடுவது என்றால் நாமாகவே மீண்டும் தேர்தல்களை தள்ளிவைக்கிறார்களோ என்ற சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டு விடும்; ஆகவே ஆலோசனைக் குழுக்கள் தேவையில்லை.

இருக்கின்ற ஆலோசனைக் குழுக்கள் முறையாக திறம்பட நடைபெறுவதற்கு, அருமை நண்பர் ஆறுமுகம் அவர்கள் சொன்ன அந்த ஆலோசனையின் அடிப்படையில், மாதம் ஒரு முறை அந்த ஆலோசனைக் குழுவின் கூட்டம் நடைபெற வேண்டும், அவர்கள் ஆலோசனை பெறப்பட வேண்டும் என்கிற தாக்கீது அவர்களுக்கு அனுப்பப்படும் என்ற உத்திரவாதத்தை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய மேலான ஆலோசனைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

இங்கே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் சங்கரய்யா அவர்கள் பல்வேறு யோசனைகளைத் தெரிவித்தார்கள். அவருடைய கட்சியைப் பொறுத்த வரையில், எந்த ரிட் மனுவையும் உயர்நீதி மன்றத்திலே போடவில்லை என்று தெரிவித்தார்கள். நான் அதற்காக அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். யார் யார் போட்டிருக்கிறார்கள் என்பதை விளம்பரப் படுத்துவதற்காக வரவில்லை. ஆனால், அப்படிப் போட்டவர்களும் ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே போட்டிருக்கலாம். ஆனால், அங்கே இருக்கின்ற மனுக்கள் மீது சீக்கிரம் ஒரு நல்ல தீர்ப்பு வரும் என்று காத்துக்கொண்டிருக்கிறோம். உயர்நீதி மன்றத்திலே விரைவிலே ஒரு நல்ல தீர்ப்பை கொடுக்க இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையிலே இந்த மசோதாக்களை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

## நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1982.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி: '' தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 18/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ''.



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:** துணைத் தலைவர் அவர்களே, '' தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1982) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு, 1982.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** "பேரவை முன்னுள்ள கேள்வி: '' 1982-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு:** துணைத் தலைவர் அவர்களே, '' 1982-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1982) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன் வடிவு 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : " 1982-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 20/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, " 1982-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1982) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 25-3-1982-ஆம் தேதி காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6-29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## (8) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப் படிக்கான விதிகளும், ஆணைகளும்

148. நெருக்கடி நிலைக்கு முன்னர் 1-1-1972 முதல் 31-1-1976 வரையிலான காலத்தில் நடந்த அத்துமீறல்கள் குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட தனி நபர் கமிஷன் சென்னை உயர்நீதி மன்ற ஓய்வுபெற்ற நீதிபதி திரு என். எஸ். இராமசாமி அவர்களின் இடைக்கால அறிக்கை—எட்டாம் பகுதி (தமிழ்) (1952-ஆம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).



### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

147. கோரிக்கை எண். 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1982-83. (தமிழ், ஆங்கிலம்).

148. கோரிக்கை எண். 40—சாலைப் போக்குவரத்துப் பணி கப்பல் போக்குவரத்து மற்றும் கோரிக்கை எண். 53—சாலைப் போக்குவரத்து குறித்த மூலதனச்செலவு குறித்து கொள்கை விளக்கக் குறிப்பு, 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

149. கோரிக்கை எண். 40—சாலைப் போக்குவரத்துப் பணி, கப்பல் போக்கு வரத்து மற்றும் கோரிக்கை எண். 53—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு—சாதனை பற்றிய ஆய்வுரை, 1982-83 (தமிழ், ஆங்கிலம்.)

150. தமிழ்நாடு துறைமுகத் துறை— சாதனை விளக்க அறிக்கை, 1982-83 (தமிழ், ஆங்கிலம்).

151. உள்ளாட்சி மன்றங்கள் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும் இழப்பீட்டுத் தொகைகள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றிய மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்துமதிப்பீட்டுக் குழு அளிக்கும் பதினொன்றாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) 1980-82 (தமிழ்).

(625ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண். 3.

மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம்—
கொள்கை விளக்க குறிப்பு.

போக்குவரத்துத்துறையின் அமைப்பு.

1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டம், 1974-ஆம்,
ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம்
ஆகிய இச்சட்டங்களில் இயற்றப்பட்ட விதிகளை நிருவகிப்பது
போக்குவரத்துத் துறையின் பொறுப்பாகும். மோட்டார் வண்டி
கள் சட்டம் போக்குவரவை ஒழுங்குபடுத்துவதோடு, மோட்டார்
வண்டிகளைப் பதிவு செய்தல், போக்குவரத்து வண்டிகள் மீது
பொறுப்பு வகித்து ஓட்டுநர்களுக்கு உரிமம் வழங்குதல், போக்கு
வரத்தை ஒழுங்குபடுத்தல், பிறருக்கு நேரும் இடர்ப்பாடுகளுக்
காக மோட்டார் வண்டி விபத்து ஈட்டுறுதி செய்தல் முதலியவை
களுக்கு வகை செய்கிறது. பயணிகள், சரக்குகள் போக்குவரத்
திற்குப் போதுமான வசதிகளைச் செய்து அப்போக்குவரத்தில்
மக்கள் பாதுகாப்பிற்கு உறுதி செய்வது இதன் குறிக்கோளாகும்.

2. போக்குவரத்து ஆணையாளரின் நிருவாகப் பொறுப்பின்
கீழ் போக்குவரத்துத்துறை செயற்படுகிறது. இதன் ஆணை
யாளர் மாநிலப் போக்குவரத்து அதிகார மன்றத்தினரும் ஆவார்.
மாநில அளவில், போக்குவரத்து இணை ஆணையாளர்கள்இருவர்,
போக்குவரத்துத் துணை ஆணையாளர்கள் மூவர், உதவிச் செய
லாளர்கள் மூவர், துறைச் சார்பாளர் ஒருவர், கணக்கு அதிகாரி
ஒருவர், மோட்டார் வண்டிகள் உதவிப் பொறியாளர் ஒருவர்,
புள்ளியல் துறை உதவி இயக்குநர் ஒருவர் ஆகியோர். போக்கு
வரத்து ஆணையாளருக்கு உதவி புரிகின்றனர். அரசுப் போக்கு
வரத்து அதிகார மன்றம், அதன் செயலாளர், வட்டாரப் போக்கு
வரத்து அதிகார மன்றங்கள், வட்டாரப் போக்குவரத்து அதிகார
மன்றங்களின் செயலாளர்கள் ஆகியோர் பிறப்பிக்கும் உத்தரவு
களுக்கு எதிரான மேல் முறையீடுகளையும் மறு விசாரணை மனுக்
களையும் மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலுள்ள மாநிலப்
போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்றம் விசாரணை



செய்கிறது. மாநிலப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர்
மன்றச் செயலாளர் என்று பதவிப் பெயர் கொண்ட வட்டாரப்
போக்குவரத்து அதிகாரியின் பதவித் தரத்திலுள்ள அதிகாரி
ஒருவர், மாநிலப் போக்குவரத்து மேல் முறையீட்டு நடுவர் மன்
றத்துக்கு உதவியாகப் பணியாற்றுகின்றார்.

3. வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளின் தலைமையிடங்
களில் உள்ள 15 பிரிவு அலுவலகங்கள் உட்பட பிரிவு அலுவலகங்
கள் 45 உள்ளன. வண்டிகளின் எண்ணிக்கைக்கேற்ப ஒவ்வொரு
பிரிவும் மோட்டார் வண்டிகளின் ஆய்வாளர் நிலை I இன் தலைமை
யின் கீழ் அல்லது மோட்டார் வண்டிகள் ஆய்வாளர் நிலை II
அல்லது இவ்விருவர் தலைமையின் கீழ் உள்ளது. வட்டாரம்
முழுவதும் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின் பொறுப்பில்
இருக்கிறது. இவர் சம்பந்தப்பட்ட வட்டாரப் போக்குவரத்து
அதிகார மன்றத்தின் செயலளாராகவும் பணியாற்றுகிறார். மேற்
பார்வை வசதிக்காக மாநிலம் முழுவதும் ஆறு மண்டலங்களாகப்
பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலமும் போக்குவரத்துத்
துணை ஆணையாளர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது. போக்கு
வரத்துத் துணை ஆணையாளர்கள் அவருடைய மண்டலங்
களுக்கு வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாகவும் செயல்
படுகின்றனர். மண்டலத்தில் உள்ள போக்குவரத்துத் துணை
ஆணையாளருக்கு உதவியாக, தலைமையிடங்களில் நிருவாகப்
பணியாளர்கள், மோட்டார் வண்டி ஆய்வாளர்கள் (பறக்கும்
படைகள்), கணக்கு உதவி அதிகாரி ஒருவர் ஆகியோரும், மாவட்
டங்களில் வட்டாரப் போக்குவ்ரத்து அதிகாரிகளும் செயல்படு
கின்றனர்.

4. சென்னை மாநகரைப் பொறுத்த வரை போக்குவரத்துத்
துணை ஆணையாளர் ஒருவர், வட்டாரப் போக்குவரத்து அதிகார
மன்றத்தாராகச் செயல்படுகிறார். சென்னை பெருநகரில் மட்
டும் இயங்கும் பேருந்துகளைப் பொறுத்தவரை நாட்டுடமை
யாக்கப்பட்ட பேருந்துப் போக்குவரத்துத் தொடர்பான பணி
யையும் அவர் கவனிக்கிறார். சென்னை மாநகரில் மூன்று வட்
டாரப்போக்குவரத்து அலுவலர்கள். உள்ளனர்.

மோட்டார் வண்டிகள் போக்குவரத்து வளர்ச்சியும், வசதிகளும்.

5. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான ஒப்பீட்டுப்புள்ளி விவர
ரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| நாள். | பயணப்பேருந்துகள். | | சரக்கு வண்டிகள். | |
|---|---|---|---|---|
| | தனியார் துறை. | அரசுத் துறை. | பொது வாடகை வண்டிகள். | தனியார் வாடகை வண்டிகள். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 31—12—1980 | 5,104 | 6,718 | 28,796 | 3,309 |
| 31—12—1981 | .5,064 | 7,370 | 31,191 | 3,386 |

| ஒப்பந்த வண்டிகள். | ஏனையபோக்கு வரத்து வண்டிகள். | போக்குவரத்து வண்டிகளின் மொத்த எண்ணிக்கை. |
|---|---|---|
| (6) | (7) | (8) |
| 19,988 | 17,584 | 81,499 |
| 20,589 | 19,374 | 86,954 |

6. பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு, எந்தெந்த
வழித்தடங்களில் பயணிப்பேருந்துகளை இயக்குவது அவசியம்
என்று கருதப்படுகிறதோ அந்த வழித்தடங்களுக்குரிய அனுமதி
கள் போக்குவரத்து அதிகாரிகளால் வழங்கப்படுகின்றன. இம்
மாநிலம் முழுவதிலும் இயக்குவதற்காக, சரக்கு ஊர்திகள்,
வாடகைக் கார்கள், சுற்றுலா வாடகைக் கார்கள், ஆகியவற்றிற்
கும் சென்னை மாநகர் நீங்கலாக ஆட்டோ ரிக்ஷாக்களுக்கும்
நிபந்தனை ஏதுமின்றி அனுமதிகள் வழங்கப்படுகின்றன. போக்கு
வரத்து ஊர்திகளைக் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை ஆய்வு
செய்தல் அந்தந்த ஊர்திகளில் ஏற்றிச் செல்வதற்குரிய பயணி
களின் எண்ணிக்கையை வரையறுத்தல், வசதியாக இருக்கைகளை
வைத்தல், பயணிப் பேருந்துகளைப் பொறுத்த மட்டில் இருக்கை
வரிசைகளின் இடையே காணப்படும் இடைவெளி, சரக்கு ஊர்தி
களைப் பொறுத்த மட்டில் சரக்கு ஏற்றிய பிறகு அவ்வூர்திகளின்
எடை எவ்வளவாக இருக்கவேண்டும் என்பது, வேகக் கட்டுப்
பாடு, ஓட்டுநர்களுக்கு உரிமம் வழங்குதல், ஆகியவற்றின் வாயி
லாகப் பொதுமக்களின் பாதுகாப்புக்கும், வசதிக்கும் உறுதி செய்
யப்பட்டுள்ளது.

7. பயணிப் போக்குவரத்தினை நாட்டுடைமையாக்கும் அர
சின் கொள்கைக் கேற்ப அரசுத் துறையில் இயங்கி வரும்
பயணிப் பேருந்துகளின் எண்ணிக்கை சீராகப் பெருகி வருகிறது.
1981-ஆம் ஆண்டில் சரக்கு ஊர்திகளின் எண்ணிக்கை 2,472 ஆக
அதிகரித்துள்ளது. சரக்குகளை இந்நாடு முழுவதிலும் ஒரு
மாநிலத்திலிருந்து பிறிதொரு மாநிலத்திற்குக் கொண்டுசெல்வதை
ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக, பொது வாடகை வண்டிகளுக்கு
குரிய தேசிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன. அத்தகைய 400
அனுமதிகள் ஏற்கெனவே தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்து
அதிகாரியால் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 400 அனுமதிகள்
ஒதுக்கப்பட்டு அவற்றை வழங்குவது குறித்து மாநிலப் போக்கு
வரத்து அதிகார மன்றம் பரிசீலித்து வருகிறது.

8. சுற்றுலாவை வளர்க்க நாடு முழுவதும் ஒப்பந்த வண்டிகளை
இயக்க தேசிய அனுமதிகள், 168 அனைத்திந்திய சுற்றுலா மோட்
டார் கார்கள், 51 அனைத்திந்திய சுற்றுலாப் பயணிகள் பேருந்து
கள் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளன.



மாநிலங்களுக்கிடையே போக்குவரத்து.

39. ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்குப் பயணி
கள், சரக்குகள் போக்குவரத்து தாராளமாக நடைபெறும்
பொருட்டு, அண்டை மாநிலங்களுடன் பரிமாற்ற உடன்பாடுகள்
செய்து கொள்ளப்படுகின்றன. மாநிலங்களுக்கிடையே வழித்
தடங்களில் செல்லும் பயணி பேருந்துகளுக்கு மாநிலப்போக்கு
வரத்து அதிகார மன்றம் அனுமதிகள் வழங்குகிறது. தமிழ்
நாட்டிற்கும் அண்டை மாநிலங்களுக்கிடையேயும் உடன்பாடுகள்
செய்து கொள்ளப்பட்டன. தமிழ்நாட்டிற்கும் அண்டை மாநிலங்
களாகிய ஆந்திரப்பிரதேசம், கேரளம், கருநாடகம் ஆகிய மாநிலங்
கள் ஒவ்வொன்றுக்கும் இடையே ஒப்பந்தங்கள் ஏற்கெனவே,
செய்து கொள்ளப்பட்டுள்ளன. அந்தந்த மாநிலங்களில் பயணிப்
பேருந்துகள் சென்று வரும் கிலோ மீட்டர் சம தொலைவு அடிப்
படையில் இந்த ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படுகின்றன.
1939ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 63(3பி)
பிரிவின் கீழ் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான புதுச்
சேரியுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது பற்றி ஆராயப்பட்டு
வருகிறது. தமிழ்நாட்டிற்கும் புதுச்சேரிக்கும் இடையே செய்து
கொள்ளப்படும் ஒப்பந்தத்தை முடிவு செய்வதற்கு அமைச்சர்கள்
அளவில் பேச்சுவார்த்தை 6-2-1982ஆம் நாளன்று நடை
பெற்றுள்ளது.

10. சரக்கு வண்டிகள், ஒப்பந்தப் பேருந்துகள் ஆகியவற்றின்
அனுமதிமீது மேலொப்பமிடுவதற்காக, அண்டை மாநிலங்களுடன்
ஏற்கெனவே செய்து கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் இன்னும்
தொடர்ந்து செயலில் இருக்கின்றன. கூட்டு அனுமதித் திட்டத்
தின் கீழ் தமிழ்நாடு, கருநாடகம், கேரளம், ஆந்திரப்பிரதேசம்,
குஜராத், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் மத்திய அரசின்
நேரடி ஆட்சிப் பகுதிகளான, புதுச்சேரி, கோவா, டாமன், டையு,
தாத்ரா, நகா ஹவளி ஆகியவை அடங்கிய தென் மண்டலத்தில்
900 சரக்கு வண்டிகள் ஓடுவதற்கு தனி உடன்பாடு செய்து
கொள்ளப்பட்டுள்ளது. 900 அனுமதிகளில் 496 அனுமதிகள்,
ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. இந்தியா முழுவதிலும் அல்லது
5 மாநிலங்களுக்குக் குறையாத அண்டை மாநிலங்களிலும் சரக்குப்
போக்குவரத்துத் தடையின்றி அனுமதிக்கும் நோக்கோடு சரக்கு
ஊர்திகளுக்கு தேசிய அனுமதிகளை வழங்கும் திட்டம்
ஒன்றை இந்திய அரசு வகுத்துள்ளது. ம்மாநிலத்திற்காக
இந்திய அரசு வரையறுத்துள்ள அனுமதிகளின்
எண்ணிக்கை 800 ஆகும். மீன் எடுத்துச் செல்லும்
வண்டிகள் உட்பட 25 சரக்கு வண்டிகளுக்காகக் கேரளம், தமிழ்
நாடு, ஆந்திரப் பிரதேசம், ஆகிய மாநிலங்களுக்கிடையே தனி
முக்கூட்டு ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது. மேற்
சொன்ன அனுமதிகளில், 13 அனுமதிகள் இதுவரை வழங்கப்பட்டு
உள்ளன. தென் மண்டலத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே 20

சுற்றுலா வாட்கை மோட்டார் வண்டிகளுக்கு அனுமதிகள்
வழங்கப்பட்டுள்ளன. இது தற்போது 100 ஆக அதிகரிக்கப்
பட்டுள்ளது. 93 அனுமதிகள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன.
எஞ்சிய 7 அனுமதிகள், நீதிமன்றத் தடை ஆணைகளினால்
நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

### பயணிப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்குதல்,

11. பயணிப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கும்
கொள்கைக்கு இணங்க, பின்வரும் வகையில், தனியார் பேருந்து
உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமங்களின் செயல்
திறன் கால அளவு முடிவடையும்பொழுது அந்தப் பேருந்து
வழித் தடங்கள் அரசால் மேற்கொள்ளப்படுகின்றன :—

(i) 75 மைல்களும் (125 கி.மீ.) அதற்கு அதிகமான
தொலைவுகளும் கொண்ட விரைவு, சாதாரணப் போக்குவரத்துப்
பேருந்துகள் அனைத்தும் ;

(ii) எவ்வளவு தொலைவாக இருந்த போதிலும் சென்னை
மாநகரிலிருந்தும் தொடங்கும் அல்லது முடிவடையும் வழித்
தடங்கள் அனைத்தும் ;

(iii) கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தொடங்கும்,
அல்லது அங்கு முடிவடையும் வழித் தடங்கள் உட்பட கன்னியா
குமரி மாவட்டத்திலுள்ள வழித் தடங்கள் அனைத்தும்.

12. இக்கொள்கை, 1967 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
பேருந்து உரிமையாளர்கள் நீதிமன்றத்துக்குச் சென்றதால்
மேற்சொன்ன எல்லா வகை வழித் தடங்களையும் நாட்டுடைமை –
ஆக்கும் பணி மெதுவாகவே நடைபெற்றது. 1967 இல் வகுத்த
நாட்டுடைமையாக்கும் கொள்கையின் வரம்பிற்குள் வரும் வழித்
தடங்களில் தனியார் பேருந்துகள் இன்னும் இயங்கிக் கொண்டு
இருக்கின்றன. நாட்டுடைமையாக்கும் திட்டத்தை விரைவு
படுத்தும் பொருட்டு 50 பேருந்துகளுக்கு மேல் சொந்தத்தில்
வைத்துள்ள தனியார் பேருந்து உரிமையாளர்களின் பயணிப்
பேருந்துகள், தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு பேருந்து உரிமை
யாளர்களின் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்தல்) சட்டத்
தின் கீழ் அரசு கையகப்படுத்தியது. ஐந்தாண்டுக் காலத்திற்குள்
பயணிப் போக்குவரத்துப் பணிகள் அனைத்தையும் நாட்டுடை
மையாக்கும் தனது கொள்கையை 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு
திங்களில் அரசு அறிவித்தது. இக்கொள்கைக்குச் செயல் வடிவம்
கொடுப்பதற்காக நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973 ஆம்
ஆண்டுப் பயணிப் பேருந்துகள்—ஒப்பந்த பேருந்துகள் (கையகப்
படுத்தல்) சட்டம் செல்லுபடியற்றதென உயர்நீதி மன்றத்தால்
தள்ளுபடி செய்யப்பட்டது. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்



திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளப் பட்டது. அதன் மீது
இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. உச்ச நீதிமன்றம் முடி
வெடுக்கும் வரையில், 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள்
சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ள இயல்பான சட்ட விதித்
துறையின் கீழ் இக்கொள்கை குறித்து தொடர்ந்து நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறது. தனியார் பேருந்து உரிமையாளர்களை
நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக அரசுப் பேருந்துகளை விடுவதற்
கான நடைமுறை இவ்வாறாக இருப்பதால் புதிய வழித் தடங்
களைத் தொடங்குவதற்கும், ஏற்கெனவே உள்ள போக்குவரத்
துப் பணிகளைப் பெருக்குவதற்கும் பொறுப்பைப் பூண்டுள்ள
அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் அதற்கெனத் திட்டங்களை
வெளியிடும்.

### ஆலோசனைக் குழுக்கள்

13. பல்வேறு போக்குவரத்து முறைகளுக்கு இடையே ஒருங்
கிணைப்பு ஏற்படுத்துவதற்காக இம்மாநிலத்தில் தமிழ்நாடு
போக்குவரத்து வளர்ச்சி மன்றம் உள்ளது. இதன் தலைவர்
போக்குவரத்துத்துறை அமைச்சராவார். மேற்சொன்ன மன்றத்
தின் கீழ் உள்ள நிலைக் குழுக்கள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| நிலைக் குழுக்கள்.<br>(1) | அமைப்பாளர்.<br>(2) |
|---|---|
| (1) சாலை, இரயில், விமானம் உள்நாட்டு நீர் வழிப் போக்குவரத்து, கரையோர கப்பல் போக்குவரத்து ஆகியவற்றை மேம்படுத்துதலும் பேணுதலும். | போக்குவரத்துத் துறைச் செயலாளர். |
| (2) போக்குவரத்துப் பொறியியல் போக்குவரத்து விதிகளைச் செயற்படுத்தல், போக்குவரத்து விதிகளைப் பின்பற்றும்படி பொதுமக்களிடம் உரிய நெறி முறைகளைப் பரப்புதல். | உள்துறைச் செயலாளர். |
| (3) போக்குவரத்து வண்டிகள், துணை கருவிகள், எரிபொருள்கள் ஆகிய வற்றைத் தயாரித்து வழங்குதல். | தொழில்துறைச் செயலாளர். |

14. போக்குவரத்தைக் கவனித்து வரும் பல்வேறு துறை
களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தப் போக்குவரத்துத்
துறை அமைச்சர் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழு உள்ளது.

15. காவல்துறை கமிஷனரைத் தலைவராகவும், காவல்துறை துணைக் கமிஷனரை (போக்குவரத்துப் பிரிவு) செயலாளராகவும் அரசுச் சார்புள்ள ஏழு உறுப்பினர்களும் கொண்ட மாநகர் சாலை மேம்பாடு போக்குவரத்துத் திட்டக் குழு உள்ளது.

16. மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர் தலைவராகவும், காவல்துறை சூப்பிரண்டெண்ட் செயலாளராகவும், ஒவ்வொரு மாவட்டத்தின் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி உட்பட ஆறு அல்லது ஏழு மாவட்ட அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட மாவட்ட சாலை மேம்பாடு போக்குவரத்துத் திட்டக் குழுக்கள் உள்ளன.

17. மாநகரங்களில் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காகப் போக்குவரத்துத் துறை அமைச்சரைத் தலைவராகவும், அரசுச் சார்புள்ள 21 பேரை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர் அதிகார போக்குவரத்து ஆலோசனைக் குழுவை அரசு அமைத்துள்ளது. தூய்மை நலம் அதாவது சாலைகளைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுதல், போக்குவரத்து, அலைந்து திரியும் கால்நடைகள், தெரு விளக்கு, முதலிய நிலைகளைக் கவனிக்கும் பல்வேறு துறைகளின் செயல்களை ஒருங்கிணைப்பதில் இக்குழு கவனம் செலுத்தும்.

### பயணக் கட்டணங்கள்

18. பயணிப் பேருந்துப் பயணக் கட்டண அட்டவணைக்கு போக்குவரத்து அதிகார மன்றம் ஏற்பளிக்க வேண்டும். இந்த வகையில், ஒரே சீரான கட்டண வீதங்கள் அமைவதற்காகப் பேருந்து உரிமையாளர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் வரும் முறையீடுகளைப் பரிசீலித்த பின்னர், அரசு உயர் அளவுக் கட்டண வீதங்களை நிர்ணயிக்கிறது.

19. ஒப்பந்த ஊர்திகளுக்கும், பயணிப் பேருந்துகளுக்கும் உரிய உயரளவுப் பயணக் கட்டண வீதங்கள், கடைசியாக, 1981 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டன. தற்போது செயலில் உள்ள திருத்தியமைக்கப்பட்ட பயணக் கட்டண வீதங்கள் வருமாறு :—

### பயணிப் பேருந்துகள்

| விவரங்கள். (1) | பயணக் கட்டண வீதம். (2) |
|---|---|
| 1 விரைவு பயணிப் பேருந்துகள். | சமவெளிகளில் கி.மீ. 1-க்கு 7½ காசுகள். மலைச் சாலைகளில் கி.மீ. 1-க்கு 9½ காசுகள். |





| விவரங்கள் (1) | பயணக் கட்டண வீதம் (2) |
|---|---|
| | உயர்வகை வசதிக்காக கி.மீ. 1-க்கு கூடுதல் கட்டணம் 2 காசுகள். ஓர்வளிச் சாதனம் பொருத்தப்பட்ட வண்டிகளில் கி.மீ. 1-க்கு 14½ காசுகள். |
| 2 சாதாரணப் பயணிப் பேருந்துகள். | சமவெளிகளில் கி.மீ. 1-க்கு 7½ காசுகள். மலைச் சாலைகளில் கி.மீ. 1-க்கு 9½ காசுகள். |
| 3 மாநகர, நகரப் பயணிப் பேருந்துகள்.— | |
| (i) சமவெளிகளில் .. | முதல் பயண நிலைக்கு குறைந்த அளவு 30 காசுகள், 10 கி.மீ. வரை அடுத்த ஒவ்வொரு பயண நிலைக்கும் 10 காசுகளும், 10 கி.மீ.க்கு மேற்பட்ட அடுத்த ஒவ்வொரு பயண நிலைக்கும் 5 காசுகளும் (ஒரு பயண நிலை என்பது சுமார் 2 கி.மீ. ஆகும். |
| (ii) மலைச் சாலைகளில். | குறைந்த அளவுக் கட்டணம் 40 காசுகள் ; அடுத்த ஒவ்வொரு பயண நிலைக்கும் 10 காசுகள். |
| 4 பொருட்காட்சிகள், விழாக் காலங்களில் விடப்படும் பயணிப் பேருந்துகள். | கி.மீ. 1-க்கு 8½ காசுகள். |

## ஒப்பந்த ஊர்திகள் (10–12–1981 முதல்).

I. ஆட்டோ-ரிக்ஷாக்கள்—

| (1) | சமவெளி. (2) | மலைச் சாலை. (3) |
|---|---|---|
| | ரூ. பை. | ரூ. பை. |
| 1 ஒவ்வொரு கி. மீ. க்கும் .. .. | 0,90 | 1.2( |
| 2 குறைந்தளவுக் கட்டணம் .. | 1.70 | 2.30 |
| 3 காத்திருப்புக் கட்டணம் ஒவ்வொரு10 நிமிடங்களுக்கும் 10 காசுகள். | | |

II பாதல் சிறு வாடகை உந்துகள் (Badal baby Taxi]
(சமவெளிகளில் மட்டும்).

| (1) | (2) |
|---|---|
| 1 ஒவ்வொரு கி. மீ. க்கும்.. .. .. .. | ரூ. பை. |
| 2 குறைந்த அளவு கட்டணம் .. .. .. | 1.00 |
| 3 காத்திருப்புக் கட்டணம் ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கும் 10 காசுகள். .. | 1.80 |

III வாடகைக் கார்கள் (சாதாரணம்)—

| (1) | சமவெளி (2) | மலைச் சாலை. (3 |
|---|---|---|
| | ரூ. பை | ரூ. பை. |
| 1 ஒவ்வொரு கி. மீ. க்கும் .. .. | 1.70 | 2.30 |
| 2 குறைந்த அளவுக் கட்டணம் .. | 3.00 | 4.00 |
| 3 காத்திருப்புக் கட்டணம் ஒவ்வொரு ஐந்து நிமிடங்களுக்கும் 10 காசுகள். | | |



### இரவுப் பணிகள்

இரவு பத்து மணியிலிருந்து காலை 5 மணி வரையில் ஆட்டோக்களும், வாடகைக்காரர்களும் ஓட்டுவதற்காக, மேற்குறித்த கட்டணங்களில் 20 சதவீதத் தொகை (அடுத்த 5 காசுகளுக்கு முழுமையாக்கப்பட்டு கூடுதலாக வசூலிக்கலாம்.

### சுற்றுலா வாடகைக் கார்கள்.

இயக்கச் செலவு உட்பட வாடகைக் கட்டணங்கள்.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| (a) 22 பரித் திறனுக்கும் குறைவான நடுத்தரச் சுற்றுலா வாடகைக் கார்கள். | சமவெளி | மலைச் சாலை. |
| | கி. மீ. | 1—க்கு |
| (i) எத்தனை பேர் பயணம் செய்யலாம் என்பது (மொத்தத்தில் 6 பேர்). | 1.70 | 2.30 |
| (ii) எத்தனை பேர் பயணம் செய்யலாம் என்பது (மொத்தத்தில் 7 பேர்). | 1.75 | 2.40 |
| (b) 22 பரித் திறனும் அதற்கு அதிகமான திறனும் கொண்ட பெரிய அளவிலான சுற்றுலா வாடகைக் கார்கள். | 3.50 | 4.15 |

காத்திருப்புக் கட்டணம் ... ... நாள் ஒன்றுக்கு உயர் அளவு ரூ. 18 என்ற நிபந்தனைக் குட்பட்டு மணி ஒன்றுக்கு ரூ. 2.

இரவுத் தங்கல் .. .. .. இரவு ஒன்றுக்கு ரூ. 15.

சீர்வளிச் சாதனம் பொருத்தப்பட்டுள்ள வண்டிகளில், சாதனம் பயன்படுத்தப்பட்டால், மேற்சொன்ன கட்டண வீதங்களில் 15 சதவீதத் தொகையைக் கூடுதல் கட்டணமாக வசூலிக்கலாம்.

B. இயக்கச் செலவு நீங்கலாக வாடகைக் கட்டணங்கள்.—

(a) 22 பரித் திறனுக்கும் குறைவான நடுத்தர்ச் சுற்றுலா வாடகைக் கார்கள்.—

| (1) | (2) |
|---|---|
| | ரூ. |
| (i) 12 மணி நேரத்திற்கு மேற்பட்டு 24 மணி நேரம் வரையில். | 90 |
| (ii) 12 மணி நேரமும் அதற்குக் குறைவாகவும் .. | 45 |
| (b) 22 பரித்திறனும் அதற்கு அதிகமான திறனும் உடைய பெரிய அளவிலான சுற்றுலா வாடகைக் கார்கள்— | |
| (i) 12 மணி நேரத்திற்கு மேற்பட்டு 24 மணி நேரம் வரையில். | 120 |
| (ii) 12 மணி நேரமும் அதற்குக் குறைவாகவும் .. | 60 |

வரி விதிப்பு

20. தமிழ்நாட்டில் மோட்டார் வண்டிகள் மீதான வரிகள் சீரமைக்கப்பட்டதையொட்டி, தமிழ்நாடு 1931 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டமும் தமிழ்நாடு 1952-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (பயனிகள்-சரக்கு களுக்கு வரிவிதிப்பு) சட்டமும் நீக்கம் பெற்று, அவற்றுக்குப் பதிலாக, 1—4—1974 அன்றிலிருந்து புதியதொரு 1974 ஆம் ஆண்டு தொகுப்பு வரி விதிப்புச் சட்டம் (சட்டம் எண் 13/1974) இயற்றப்பட்டது. இந்தச் சட்டம் 1—10—1974 அன்றிலிருந்து செயலுக்கு வந்த தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்டது. பயணிப் பேருந்துகளுக்கு பே[illegible] வரி விதிப்பதற்காக1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்தச்) சட்டத்தின் மூலம் (குடியரசுத் தலைவர் சட்டம் எண் 3/1976) இது, மேலும் திருத்தப்பட்டது. இந்தச் சட்டம், 1—4—1976 அன்றிலிருந்து செயலுக்கு வந்தது. மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 63 (6) பிரிவின் கீழ் ஓடுவதற்கு அனுமதிக்கப் பட்ட வண்டிகளுக்கு மோட்டார் வண்டிகள் வரி விதிப்ப



திலிருந்தும் விலக்கு அளித்து அரசு அறிவிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இந்தப் புதிய வரி விதிப்பின் முக்கிய கூறுகள் வருமாறு—

(i) தமிழ்நாட்டில் வைத்து வரப்படுகிற அல்லது பயன் படுத்தப்படுகிற மோட்டார் வண்டிகளைப் பொறுத்த வரையில் வரிசெலுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

(ii) வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவு செய்வதன் பேரில் பயன்படுத்தாமல் இருந்துவந்த வண்டிகளுக்கு வரித்தொகையைத் திரும்பப் பெற உரிமை உண்டு.

(iii) வண்டிகள் ஓடவில்லை என்பதை நிரூபிப்பது உரிமையாளரின் பொறுப்பாகும்.

(iv) பயணிப் பேருந்துகள், சரக்கு வண்டிகள் மீது பயணிகள், சரக்குகளுக்கு தனி வரிவிதிப்பு இருக்காது.

(v) பயணிப் பேருந்துகளைப் பொறுத்த வரையில் பேருந்து நாள்தோறும் ஓடுகின்ற தொலைவைக் கருத்திற் கொள்ளாது ஏற்றிச் செல்லத்தக்க பயணிகளின் எண்ணிக்கை அடிப்படையில், வரையறுத்த வீதத்தில் வரி விதிக்கப்படுகிறது பயணிகள் தங்கள் இருக்கையில் அமர்ந்து பயணம் செய்தாலும் நின்று பயணம் செய்தாலும் ஒரே சீராகவே வரிவிதிக்கப் படுகிறது.

(vi) சரக்கு வண்டிகளுக்கு சுமையுடன் கூடிய அவற்றின் எடையின் அடிப்படையில் வரிவிதிக்கப்படுகின்றது. வரிவிதிப்புக்கு படிநிலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

பயணிப் பேருந்துகளுக்கும், ஒப்பந்தப் பேருந்துகளுக்கும் கீழ்க்கண்டவாறு வரி வீதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.—

| | காலாண்டிற்குப் பயணி ஒருவருக்கு. |
|---|---|
| | ரூ. |
| பயணிப்பேருந்துகள்—சாதாரண பேருந்துகள். | 195 |
| பயணிப் பேருந்துகள்—விரைவுப் பேருந்து .. | 200 |
| சென்னைப் பெருநகர்ப் பகுதியில் ஓடும் பயணிப் பேருந்துகள். | 50 |

| | |
|---|---|
| மதுரை மாநகரிலும், ஏனைய நகரங்களிலும் ஓடும் பயணிப் பேருந்துகள். | 115 |
| ஒப்பந்தப் பேருந்துகள் (தனிப் பேருந்துகள்) | 280 |
| சுற்றுலாப் பேருந்துகள் .. .. .. | 140 |

21. பயணிப் பேருந்துகளைப் பொறுத்த நிலையில் விரைவுப் பயணப் பேருந்துகளுக்கு மோட்டார் வண்டிகள் வரியுடன் காலாண்டிற்கு பயணி ஒருவருக்கு ரூ. 40 மேல் வரியும், பெருநகர். நகரப்பகுதிப் போக்குவரத்துக்களைத் தவிர ஏனைய சாதாரணப் பயணிப் பேருந்துகளுக்கு காலாண்டிற்கு பயணி ஒருவருக்கு ரூ. 35 மேல் வரியும் விதிக்கப்படுகிறது.

22. கூட்டிசைவுத் திட்டத்தின்படி ஆந்திரப்பிரதேசம், கேரளம், மராட்டியம், கருநாடகம், குஜராத், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைப் பொறுத்த மட்டில் ஒவ்வொரு மாநிலமும் பேருந்துக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1,000-மும் (சொந்த மாநிலம் நீங்கலாக) பாண்டிச்சேரி, கோவா, டாமன், டையு, தாத்ரா, நாகர் ஹவேலி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில், ஆண்டொன்றுக்குப் பேருந்து ஒன்றுக்கு ரூ. 150 கூட்டு வரி செலுத்த வேண்டும். வரித் தொகையைச் செலுத்துவதில் காலதாமதம் ஏற்படுவதைப் பொறுத்தமட்டில், வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் பேருந்து உரிமையாளர் ஒருவர் கூட்டு வரிப் பாக்கியைச் செலுத்தத் தவறினால், ஒப்பந்தத்தின் கீழ் வருகின்ற ஒவ்வொரு மாநிலத்திற்கும் திங்களொன்றுக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு ரூ. 100 கூடுதலாக வரி விதிக்கப்படும்.

23. மத்திய அரசு வகுத்துள்ள தேசிய அனுமதித் திட்டத்தின் கீழ் சரக்குப் பேருந்து உரிமையாளர் ஒருவர், சொந்த மாநிலத்திற்குச் செலுத்தும் வரியுடன், வண்டி செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள ஏனைய மாநிலம் ஒவ்வொன்றிற்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 1000, கூட்டுவரி செலுத்த வேண்டும். மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியைப் பொறுத்தவரையில் (புதுடில்லியைத் தவிர) ஆண்டொன்றுக்கு ரூ. 150 வரி செலுத்த வேண்டும்.

24. போக்குவரத்து வண்டிகள் மீது வரியை, போக்குவரத்துத் துறையே நேரடியாக வசூல் செய்கிறது. போக்குவரத்து வண்டிகள் அல்லாத பிற வண்டிகளைப் பொறுத்தவரையில் சென்னை மாநகரிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கிளைகள் மூலமாக மோட்டார் வண்டி வரியை வசூலிக்க 1978ஆம் ஆண்டில் அரசு அதிகாரம் வழங்கியுள்ளது. 1979 ஆம் ஆண்டில், மாநிலத்தில் மாவட்டத் தலைமையிடங்களுக்கும் ஏனைய முக்கிய நகரங்களுக்கும் இவ்வரி வசூலிக்கும் முறை விரிவு படுத்தப்பட்டது. தற்போது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்திய வங்கி ஆகியவற்றின் 273 கிளைகள் போக்குவரத்து வண்டிகள் அல்லாத பிற வண்டிகளுக்கு மோட்டார் வண்டிகள் வரியை வசூலிக்கின்றன.



வருவாய்.

25. மோட்டார் வண்டி வரிகள், கட்டணங்கள் வாயிலாக போக்குவரத்துத் துறைக்கு வருவாய் கிட்டுகிறது. பெரும்பகுதி வருவாய் மோட்டார் வண்டிகள் மீதான வரிகளிலிருந்தே கிட்டுகிறது.

பல்வேறு வருவாய்த் தலைப்புகளில் கிடைத்த வருவாய்கள் பற்றிய விவரங்கள் வருமாறு :—

| இனம். | 1980–81 ஆம் ஆண்டு கணக்குகள். | 1981–82 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு. | 1981–82 ஆம் ஆண்டு கணக்குகள் (9 திங்கள்கள்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | |
| 1. 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின்கீழ் கட்டணங்கள். | 3,65.39 | 3,99.51 | 2,83.53 |
| 2. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம். | 77,64,43 | 73,10,84 | 51,99,03 |
| 3. ஏனைய வரவுகள் .. | 3,33 | 5,45 | 2,34 |
| மொத்தம் .. | 81,33,15 | 77,15,80 | 54,84,90 |

## முதலமைச்சர் விபத்துத் துயர் தணிப்பு நிதி.

26. இம்மாநிலத்தில் ஓடுகின்ற போக்குவரத்து வண்டிகள், போக்குவரத்து வண்டிகள் அல்லாத பிற வண்டிகள் பற்றிய விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொக்க உதவித் தொகை வழங்குவதற்காக 1978–79 ஆம் ஆண்டில் , இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தை மாவட்ட ஆட்சியர்கள் செயல்படுத்துகிறார்கள்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்லது அவர்தம் குடும்பத்தினர்க்கு (மரண விபத்தாக இருந்தால்) பின்வரும் அடிப்படையில் ரொக்க உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

| தொடர் எண்ணும், விவரமும். | அளிக்க வேண்டிய ரொக்கத் தொகை. | யாருக்க அளிக்கப்பட வேண்டுமென்பது. |
| --- | --- | --- |
| (1) | (2)<br>ரூ. | (3) |
| 1. விபத்தினால் ஏற்பட்ட மரணம். | 1,000 | (1) கணவர், (2) மனைவி, (3), மரணமடைந்தவர் கடைசியாக எந்த மகன் அல்லது மகளுடன் தங்கியிருந்தாரோ அந்த மகன் அல்லது மகள், ஒருவருக்கு மேற்பட்ட மகன் அல்லது மகள்களுடன் அவர் தங்யிருந்தால் அவர்களுள் மூத்தவர் (4) தாய், (5) தந்தை, (6) சகோதரி, (7) மரணமடைந்தவர் ஆடவர் எவருடன் தங்கியிருந்தாரோ அவர். |
| 2. நிலைப்பட்ட ஏலாமை அல்லது இரண்டு கண்களையும் இழத்தல் அல்லது இரு உறுப்புகளை இழத்தல் அல்லது ஒரு கண்ணையும் ஒரு உறுப்பையும் இழத்தல். | 800 | காயமடைந்தவர் அல்லது அவரின் நியமனதாரர். |





| தொடர் எண்ணும் விவரமும் | அளிக்க வேண்டிய மொத்தத் தொகை | யாருக்கு அளிக்கப்பட வேண்டுமென்பது. |
| --- | --- | --- |
| (1) | (௨) | (3) |
| 3. ஒரு கண் அல்லது ஒரு உறுப்பை இழத்தல். | 400 | காயமடைந்தவர் அல்லது அவரின் நியமனதாரர். |
| 4. பிற காயங்கள். | 50 | காயமடைந்தவர் அல்லது அவரின் நியமனதாரர். |

27. மோட்டார் வண்டிகள் வரி வாயிலாகக் கிடைக்கும் மொத்த ஆண்டு வருவாயில் ஒரு சதவீதத் தொகையை முதலமைச்சர் விபத்துத் துயர் தணிப்பு நிதிக்கு மாற்றவேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரையிலான கால அளவில் இந்நிதியிலிருந்து விபத்துத் துயர் தணிப்பு வகையில் ரூ. 19,53,473 செலவிடப்பட்டுள்ளது.

## பேருந்து வசதிகள்.

28. போக்குவரத்து வசதிகளை அமைத்துத் தருவதில் போக்குவரத்துத் துறை, போக்குவரத்துத் தேவைகளில் கவனம் செலுத்தி வருகிறது. ஒரு புதிய வழித் தடத்தைத் தொடங்குவது சிக்கலான நடைமுறையாக இருந்து வந்தது. நிறைவேற்றப்பட்ட 1971 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டத்தினால் புதிய வழித் தடங்களைத் தொடங்குவதில் நிலைமை சீரடைந்துள்ளது. இச்சட்டத்தின்படி, புதிய வழித்தடம் ஒன்றைத் தொடங்குவது என்பது நிர்வாகப் பணி எல்லைக்குள் அமைந்து அதிகாரியின் தீர்ப்பே முடிவானது என அமைகிறது.

29. சென்னையைத் தவிர ஏனைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது, மாவட்ட நிர்வாகத்தின் பல்வேறு பணிகளைக் கவனிப்பதோடு, வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றத்தின் ஓரளவு நீதித்தன்மை வாய்ந்த பணிகளையும் கவனித்து வந்தனர், அந்தந்த மாவட்டத்தின் போக்குவரத்துத் தேவைகளுக்கு நேரடியாக அதிகக் கவனம் செலுத்தும் பொருட்டு, குறிப்பாக போக்குவரத்து வசதிகள் இல்லாத போக்குவரத்து வசதிகள் குறைவாக உள்ள கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதன் தேவை குறித்து அதிக விளவுக்கு நேரடியாகக் கவனம் செலுத்தும் பொருட்டு வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின் அதிகாரங்களை அந்தந்த வட்டாரத்தின் போக்குவரத்துத் துணை ஆணையாளர்களுக்கு அரசு மாற்றிக் கொடுத்துள்ளது.

30. நடத்தப்பட்ட விரிவான ஆய்வின்படி முதல் நிலையில் 476 புதிய பேருந்து வழித்தடங்களைத் தொடங்குவதன் மூலம் 968 சிற்றூர்களிலுள்ள 18 இலட்சம் மக்களும், இரண்டாம் நிலையில் 426 புதிய வழித்தடங்களைத் தொடங்குவதன் மூலம் மேலும் 22 இலட்சம் மக்களும் பயனடைவர் என்று மதிப்பிடப் படுகிறது. இரண்டாம் நிலையில், தற்போதுள்ள சாலைகளில் சில மேம்பாடுகளையும் செய்ய வேண்டியிருக்கும்.

31. புதிய வழித்தடங்களின் எண்ணிக்கை, பேருந்து வசதிகள் பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை குறித்த புள்ளி விவரம் வருமாறு :—

| பேருந்துகளின் எண்ணிக்கை. | ஆண்டு. | |
|---|---|---|
| | 1980. | 1981. |
| (1) | (2) | (3) |
| 1. பேருந்துகளின் எண்ணிக்கை .. | 11,984* | 12.871* |
| 2. பேருந்துகளின் எண்ணிக்கை—வழக்கமாக ஓடும் பேருந்துகள். | 10,832* | 11,680* |
| தனிப் பேருந்துகள் .. .. | 1,152* | 1,191* |
| 3. வழித்தடங்களின் மொத்த எண்ணிக்கை .. .. .. | 7,188 | 7,693 |
| 4. புதிய வழித்தடங்கள் .. .. | 450 | 460 |
| 5. பயனடைந்த கிராமங்களின் எண்ணிக்கை .. .. .. | 328 | 735 |
| 6. பயனடைந்த மக்களின் மொத்த எண்ணிக்கை (இலட்சத்தில்) .. | 9.66 | 15.18 |

(*தனியார் துறை-அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு சொந்தமான வண்டிகளும் அடங்கும்.)

32. இம்மாநிலத்தில் முறையாகப் பேருந்து வசதி அளிக்க இயலாத மிகத் தொலைவில் உள்ள கிராமப் பகுதிகளுக்குப் பயன்படும் வகையில் சிறிய பேருந்துகளை விடும் திட்டம் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் தற்போது 69 சிறிய பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதில் 49 பேருந்துகள் பொதுத் துறையாலும் 20 பேருந்துகள் தனியார் துறையாலும் விடப்படுகின்றன.



33. புதிய வழித்தடங்களைத் தொடங்குதல், ஏற்கெனவே உள்ள வழித்தடங்களில் மாற்றங்களைச் செய்தல், அவற்றை விரிவாக்குதல் ஆகியவை தொடர்பாக, போக்குவரத்து ஆய்வின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டவற்றைச் செயல்படுத்துவதில் முன்னுரிமை தருமாறு வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். பேருந்துகள் செல்லாத ஊர்களுக்கும் பேருந்துவசதிகள் கிடைக்கப் பெறாத மக்களுக்கும் அதிக அளவில் போக்குவரத்து வசதிகளை வரும் ஆண்டில் செய்து கொடுக்க அரசு கவனம் செலுத்தும். சிறிய பேருந்துகளுக்கு வரிச் சலுகைகள் அளிப்பதற்காக அரசு தற்போது வழிமுறைகளை வரையறுத்துள்ளது. வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளின்படி, வரிச்சலுகை பெற சிறிய பேருந்துகள் தேசீய நெடுஞ்சாலைகள், மாநில அரசு நெடுஞ்சாலைகள், மாவட்ட பெருஞ்சாலைகள், ஏனைய மாவட்டச் சாலைகள், பேருந்து வசதி உள்ள பகுதிகள் ஆகியவற்றில் 16 கி.மீ. அல்லது வழித்தட நீளத்தில் 25 சதவீதம் இவற்றில் எது குறைவோ அத்தொலைவிற்கு மேல் விடப்படக்கூடாது. தற்போது, மேற்சொன்ன வழி முறைகள் நிறைவு செய்யும் சிறிய பேருந்துகள் மட்டுமே காலாண்டுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூ. 50 என்ற சலுகை வரி வீதத்தை பெறத்தகுதியுடையவையாகும். மேற்சொன்ன வழிமுறைகளை நிறைவு செய்யும் சிறிய பேருந்துகளோடு, ஆய்வின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட வழித்தடங்களில் ஓடும் சிறிய பேருந்துகளும், இருக்கை ஒன்றிற்குக் காலாண்டிற்கு ரூ. 50 என்ற சலுகை வரியைத் தற்சமயம் பெறத் தகுதி பெறுகின்றன.

34. போக்குவரத்துத் தொழிலில் ஏகபோக உரிமைகளையும் அனுமதிச் சீட்டுகள் சிலரிடம் குவிவதையும் தடுப்பதைக் கருத்திற்கொண்டு, ஒரு தனிப்பட்ட உரிமையாளருக்கு பத்துப் பேருந்து அனுமதிச் சீட்டுகளுக்கு மேல் வழங்கக்கூடாது என உச்சவரம்பு விதித்து 1971 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் செல்லாதென்று உயர்நீதி மன்றம் 7—7—1978ஆம் நாளன்று தீர்ப்பளித்தது. உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளவும் புதிய சட்டம் இயற்றவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

35. மோட்டர் வண்டிக்ள் விபத்துக்களைக் குறைக்கும் பொருட்டு கனரகப் போக்குவரத்து வண்டிகள் அனைத்திலும் மின் அணுவேகக் கட்டுப்பாட்டுச் சாதனம் ஒன்றைக் கட்டாயமாகப் பொருத்தும்படி வகை செய்யும் ஒரு நிபந்தனையை உரிமத்திற்கான நிபந்தனைகளில் சேர்க்க 160 W என்ற புதிய விதியை அரசு சேர்த்துள்ளது.

பயணிகள்— சரக்கு வண்டிகள்.

36. சந்தைகள் கிராம மக்களின் வாழ்க்கையில் முக்கிய பங்கு பெறுகின்றன. இங்குதான் கிராம மக்கள் அனைவரும் ஒன்று கூடித் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்குகின்றனர். வெளியூர்ப் பேருந்துகளும், நகரப் பேருந்துகளும், இச் சந்தைகள் கூடும் வழித்தடங்களில் சென்றாலும் கிராம மக்கள் தங்கள் சுமைகளுடன் இப் பேருந்துகளில் பயணம் செய்ய இயலாமல் துன்புறுகின்றனர். கிராம மக்கள் தங்களுக்குத் தேவைப் படும் பொருள்களை வாங்க உதவும் பொருட்டும், தங்கள் பொருள் களை விற்பனை செய்ய இயலும் வகையிலும், பெரிய கோணி மூட்டைகள், கூடைகள் போன்ற சுமைகளை ஏற்றி வருவதற்கு வசதியான சிறப்பு வகைப் பேருந்துகள் விடுவது அவசியமாகத் தேவைப்படுகிறது. மணப்பாறை, ஈரோடு போன்ற முக்கியப் பகுதிகளில், சோதனைத் திட்டமாக அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் பயணி-சரக்கு வண்டிகள் விடுவதற்கான திட்டத் துக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

செயற்படுத்துதல்.

37. பொது இடத்தில், மோட்டார் வண்டியை ஓட்டிச் செல்ல உரிமம் ஒன்று பெற்றிருக்க வேண்டும். தொழில் முறை ஓட்டுநர்களும், போக்குவரத்து வண்டிகளின் ஓட்டுநர்களும் மருத்துவச் சான்று பெற்றிருத்தல் வேண்டும். உரிமம் வழங்கு வதற்கும் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை ஒழுங்குப்படுத்தவும் விதிகள் இயற்றப்பட்டன. ஓட்டுநர்களை நன்கு கண்காணிப் பதற்குரிய சிறந்த நடவடிக்கையாக 1979ஆம் ஆண்டில் ஓட்டுநர் ஒருவர் விதிகளை மீறும் ஒவ்வொரு நேர்வுக்கும், இத்தனை புள்ளி எனக் குறிப்பிட்டு அவர்களைத் தண்டிக்கும் ஓர் ஏற்பாட்டை அரசு அங்கீகரித்துள்ளது. அந்த முறையின்கீழ், தெரிந் தெடுத்த போக்குவரத்துக் குற்றங்களுக்கு மதிப்பெண்கள் கொடுக்கப்படும். ஓராண்டில் எக்காலத்திலேனும் பல முறை விதிகளை மீறியிருந்தால், அவரது உரிமம், உரிமம் வழங்கும் அதிகார மன்றத்தால் ஆறு திங்களுக்கு மேற்படாத கால அளவுக்குத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும்,

38. ஓட்டுநர்களின் தரத்தை உயர்த்தும் பொருட்டு தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் இந்திய சாலைப் போக்கு வரத்துச் சங்கங்கள் ஏனைய தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் பெரும் சரக்குப் பேருந்துகளை ஓட்டுதல், ஓட்டு தல் தொடர்பான எந்திரவியல், ஏனைய துணைத் தொழில் களில் பயிற்சி பெற்றவர்களுக்கு ஊக்கமும் அளிக்கப்படுகிறது.

39. ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் இனங்களில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் அந்தந்த மாவட்டங் களில் உன்னிப்பாகக் கவனிக்க இயலும் பொருட்டு ஒவ்வொரு யாலும் [illegible]



அலுவலகத்திலும் ''செயல்படுத்தும் பிரிவு'' எனப்படும் பிரிவு ஒன்றை அமைக்குமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதனால் விதிகளைத் திறம்படச் செயல்படுத்த இயலும்.

40. மண்டல அலுவலகங்களுடன் இணைக்கப்பட்ட பறக்கும் படைகளும் செயல்படுத்தும் பணிக்காக துறையில் நியமிக்கப் பட்ட ஏனைய பணியாளர்களும் வரி ஏய்ப்பையும், அனுமதிச் சீட்டு, தகுதிச்சான்றிதழ் ஆகியவை இல்லாமல் ஓடும் மோட்டார் வண்டிகளையும் மிகைச் சுமை ஏற்றிச் செல்லுதல், மிகை வேகம், ஒப்பந்தப் பேருந்துகளைப் பயணிப் பேருந்துகளாகத் தவறான முறையில் பயன்படுத்துதல், கள்ளத்தனமாக வாடகை வண்டிகளை ஓட்டுதல் போன்ற குற்றங்களையும் கண்டு பிடிக் கின்றனர்.

41. வாடகைக் கார்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள் மீட்டர் களில் ஒழுங்கின்மை நடைபெறுவதைத் தடுக்கும் பொருட்டு, வாடகைக் கார் மீட்டர்களைப் பழுது பார்த்தல், சரி செய்தல் பணிகளை மேற்கொள்வதற்கு ''மீட்டர் இயந்திரக் கம்மியர்'' பதிவுசெய்து கொள்ளும் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

42. மோட்டார் வண்டிகளில் வழங்கப்படும் அனுமதிச் சீட்டுகளில் ஆதி திராவிடர், பழங்குடியினருக்காக 18 சதவீதம் ஒதுக்கி வைக்கப்படுகிறது.

மண்ணெண்ணெய் நீங்கலாகப் பெட்ரோலியப் பொருட்களை பங்கீடு செய்தல்.

43. டீசல் எண்ணெயின் விலையை நிலைப்படுத்தவும் ; இருப்பினை பங்கீட்டுக் கட்டுப்பாட்டு முறையிலன்றி எண்ணெயை உரிய அளவில் பங்கீடு செய்யவும் தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய், உயர்வேக டீசல் எண்ணெய் (பராமரிப்பு-வழங்கலை முறைப்படுத்தல்) ஆணை எனப்படும் கட்டுப்பாட்டு ஆணையை அரசு 1980 மார்ச்சில் பிறப்பித்தது. கிடைக்கும் எண்ணெயை கீழ்ழ குறிப்பிட்டவாறு முன்னுரிமை அடிப்படையில் உரிய அளவில் பங்கீடு செய்யும் முறை பின்பற்றப்பட்டுவருகிறது :

வகை.—I (1) வேளாண்மைத் துறை (பம்பு செட்டுகள், டிராக் டர்கள்).

(2) மீன்பிடி படகுகள் முதலியன.

(3) விசைத் தறிகள்.

வகை II—போக்குவரத்து.

வகை III—மின் சக்தி தேவையை ஈடு செய்ய தொழிற் சாலைகளுக்கு.

## புதிய செயற்குறிப்புகள்

44. (1) தமிழ்நாட்டில் தென் மண்டல அனுமதித் திட்டத்தின் கீழும், அனைத்திந்திய சுற்றுலா அனுமதித் திட்டத்தின் கீழும், சுற்றுலா வாடகை வண்டிகளாக விடப்படுவதற்கு மோட்டார் ஸ்டாண்டர்டு 20 வண்டிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

(2) பணியாளர்களிடையே திறமையை உயர்த்துவதற்காக கண்காணிப்பாளர்கள் மற்றும் அவர்களுக்கு மேல்உயர் நிலையில் உள்ளவர்களுக்குப் பயிற்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(3) அனுமதி பெறாத நபர்களின் தலையீட்டைத் தவிர்ப்பதற்கும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் கூட்டம் சேருவதைக் கட்டுப்படுத்துவதற்கும் "கவுண்டர்" (Counter) வசதிகளுடன் அலுவலகக் கட்டிடத்தைக் கட்டுவதற்குக் கருதப்பட்டுள்ளது. நவீன வசதிகளுடன் கூடிய வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு காஞ்சிபுரம், தருமபுரி வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை அமைப்பதற்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படும். திருநெல்வேலி வட்டார போக்குவரத்து அலுவலகம் கட்டும் பணி 1981—82—ல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(4) நிர்வாகக் கட்டுப்பாட்டை சீர்படுத்தும் நோக்குடன் சென்னை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (மையம்) இரண்டாகப் பிரிக்கப்படும். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் கூடுதல் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் பதவிகள் ஏற்படுத்தப்படும்.

(5) போக்குவரத்து வண்டிகளை அனுமதி இன்றி செலுத்துவதனால் வருவாய் விரயம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக பன்னாரி, ஆரம்பாளையம், கூடலூர், களியக்காவிளை, இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைப்பதற்கான செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(6) ஆத்தூர், மேட்டூர், விருதுநகர் ஆகிய இடங்களில் பிரிவு அலுவலகம் (Unit Office) அமைப்பதற்கான செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(7) சிறிய பேருந்துகளும் விடப்படாத நெடுந்தொலைவில் உள்ள கிராமங்களுக்குப் பேருந்துகளை விடுவதற்காக, "டில்லர்-டிரெயிலர்" இணைப்பு மூலம் பேருந்துப் பணி இயக்கப்படவிருக்கிறது.



## காவல் துறையின் பங்கு.

45. போக்குவரத்துத் துறையுடன் காவல் துறையும் மோட்டார் வண்டிகள் சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்துவதற்குப் பொறுப்பு வகிக்கின்றது. உரிமம் வழங்கும் பணியைப் போக்குவரத்துத் துறைப் பணியாளர்கள் கவனிக்கையில் சாலை விதிகளைச் செயல்படுத்தும் பொறுப்பு காவல் துறையினரைச் சார்ந்ததாகும். தமிழ்நாடு போக்குவரத்துக் கட்டுப்பாட்டு சட்டம், தமிழ்நாடு வாடகை வண்டிகள் சட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதையும் காவல் துறை கவனிக்கிறது

46. தமிழ்நாட்டில் 1981-ல் 17,549 மோட்டார் வண்டி விபத்துக்கள் ஏற்பட்டன. ஆனால் 1980-ல் 11,763 விபத்துக்கள் ஏற்பட்டன. இவற்றுள் 3,596 பேர் இறந்தனர். 12,737 பேருக்கு காயம் ஏற்பட்டது. ஆனால் 1980—ல் இவ்விபத்துக்களால் 2,085 பேர் இறந்தனர். 15,429 பேருக்கு காயம் ஏற்பட்டது. தமிழ்நாடு காவல் துறையினர் இப்பிரச்சினை எவ்வளவு பெரியது என்பதையும், இதனால் பொதுமக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகின்றனர் என்பதையும் உணர்ந்து இத்தகைய விபத்துக்களைக் குறைப்பதற்காக, போக்குவரத்து விதிகள், விதி முறைகள் பலவற்றையும் தீவிரமாகச் செயற்படுத்தத் தயங்கவில்லை. இவ்வகையில் போக்குவரத்துப் பொறியியல், போக்குவரத்து விதிகளைச் செயல்படுத்துதல், போக்குவரத்துக் கல்வி என்னும் மூன்று பெரும் பகுதிகளாகக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1974 ஆம் ஆண்டு முதற்கொண்டு போக்குவரத்துக் கட்டுப்பாட்டுத் தகவல் அறை ஒன்று சென்னை மாநகரில் செயற்பட்டு வருகிறது. இது இரவு பகல் எந்நேரமும் செயற்பட்டு வருகிறது. போக்குவரத்து விதிகளைச் செயல்படுத்தும் அதிகாரிகளுடன் இதன் மூலம் தொடர்புகொள்ளப்பட்டு வருகிறது. மோட்டார் ஓட்டிகள் அதிவேகமாக மோட்டார் ஓட்டிச் செல்வதைக் கட்டுப்படுத்த சாலைகளில் வேகக் கட்டுப்பாட்டுப் பொறிகள் தவறாது வைத்து வரப்படுகின்றன.

47. சென்னை மாநகரில் சாலை விபத்துக்களை குறைக்க மேற்கொண்ட வேறு நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

( ) வண்டிகள் போக்குவரத்தையும் பாதசாரிகள் நடமாட்டத்தையும் முறைப்படுத்த, சாலை சந்திப்புகளிலும் பாதசாரிகள் சாலையைக் கடந்து செல்லுமிடங்களிலும் போக்குவரத்து காவலர்கள் நிறுத்தப்படுகின்றனர். அத்துடன் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க மேம்பாலங்கள் சுரங்கப் பாதைகள் முதலியவை கட்டப்படுகின்றன.

(ii) சாலை நடுவிலும்சாலை ஓரத்திலும் போக்குவரத்து வண்டிகள் முடங்கி விடும்போது போக்குவரத்தை ஒழுங்கு படுத்தவும் விதிகளை மீறுபவர்கள் மீது சென்னை மாநகர் காவல்துறை சட்டத்தின் கீழும் தமிழ்நாடு போக்குவரத்து விதிகளின் கீழும் வழக்குகள் தொடங்கவும் போக்கு வரத்து காவல்துறையினர் ரோந்துப்பணியில் ஈடுபடுத்தப்படுகின் றனர்.

(iii) போக்குவரத்து விதியை மீறும் வண்டி எதனையும் காவலர்கள் தாங்களாகவே நிறுத்துவதில்லை. ஆனால் அவர்கள் அவ்வாறு விதியை மீறினால் வண்டியின் பதிவு எண்ணை மட்டும் குறித்துக் கொண்டு தனி அறிக்கை ஒன்றை அனுப்புகின்றனர். அந்த அறிக்கையின் பேரில் வழக்குத் தொடரப்படுகிறது.

(iv) போக்குவரத்து நெரிசல் உள்ள சமயங்களில் பாதசாரிகள் சாலையைக்கடக்கும் இடங்களில் போக்குவரத்தைக் காவலர்கள் முறைப்படுத்துகின்றனர்.

(v) போக்குவரத்து விதிகள் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூற பிரச்சார மோட்டார் வேன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(vi) போக்குவரத்து சைகைகள், சாலையைப் பயன்படுத்துவது முதலியவை குறித்து சிறுவர் போக்குவரத்துப் பயிற்சிப் பூங்காவில் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சாலைப்போக்குவரத்தை முறைப்படுத்த ஊர்க்காவல் படையினர், கல்லூரி மாணவத் தொண்டர்கள் ஆகியோருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு மேற்படி பணியில் அமர்த்தக்கொள்ளப்படுகின்றனர்.

(vii) அவசியமான இயன்ற இடங்களிலெல்லாம பொறி யியல் துறையைப் பின்பற்றி போக்குவரத்து சீரமைக்கப்படுகிறது.

(viii) சாலை விபத்துக்களைக் குறைக்க, நடைமுறை ஆய்வை அடிப்படையாகக் கொண்டு 'இது ஒரு வழிப்பாதை', ''இவ்வழியே வண்டிகள் செல்லக்கூடாது'', ''இங்கு வண்டிகளை நிறுத்தக்கூடாது'', மெதுவாகச் செல்லவும் என்றெல்லாம் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

(ix) இம்மாநகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள நெரிசலான சாலைச் சந்திப்புகளில் தானியங்கிப் போக்குவரத்து சைகை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

(x) சாலை விபத்தைத் தடுக்கும் திட்டவட்டமான தோர் ஏற்பாடாக, மோட்டார் ஓட்டிகள் குடிபோதையில் மோட்டார் ஓட்டுகிறார்களா என்பதைக் குறிப்பிட்ட காலந் தோறும் சோதனை செய்வதில் தனிநாட்டம் செலுத்தப்படுகிறது.



(xi) சாலைகளின் மேற்பரப்பு நல்ல நிலைமையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளப்படுகிறது.

(xii) சண்கூசாத ஒளிவசதிகள், முக்கியமான சாலை களில் போக்குவரத்து ஒழுங்குமுறை வளைவுகள் சாலைகளின் முக்கிய இடங்களில் புது வகையான போக்குவரத்துக் குறியீடுகள் சைகைகள் வேகத் தடைகள்முதலியவசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(xiii) வண்டிகள் மெதுவாகச் செல்லவேண்டுமென கட்டுப்பாடும் கனாக வண்டிகள் செல்லக்கூடாதென தடையும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் விதிக்கப்படுகின்றன. முக்கிய மான சாலைகளில் அவசியமான இடங்களில் எல்லாம் கோடிட்டுப் பிரிக்கும் முறை (lane system) )செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(xiv) நடைபாதைகளில் நெரிசல் நீக்கப்படுகிறது. பராரியாய்த் திரியும் கால்நடைகள் வளைத்துப் பிடிக்கப் படுகின்றன.

(xv) சாலைகளில், பாதசாரிகள் கடக்கும் பாதைகள் எவை, பேருந்து நிற்பிடங்கள் எவை என்றெல்லாம் காவல் துறை யினர் அடையாளமிடுகின்றனர்.

(xvi) சாலைப் பாதுகாப்புக் குறித்து கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. காவல் துறையைச் சேர்ந்த போக்குவரத்து விதிகள் செயற்பிரிவுப் பணியாளர்களுக்கு, பம்பாயிலுள்ள போக்குவரத்துப் பயிற்சி நிறுவனம் போன்ற போக்குவரத்துப் பயிற்சி நிறுவனத்தில் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**சென்னை மாநகரில் போக்குவரத்து செய்கை முறையை நவீனமயமாக்குதல்.**

48. பல இடங்களிலும் சைகை விளக்குகள் ஒரே நேரத்தில் எரியுமாறு செய்ய சென்னை மாநகரில் அண்ணா சாலையிலும் பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலையிலும் பளிச்சென எரியக்கூடிய பீகன் விளக்குகளை 25 இடங்களில் பொருத்தவும் 19 இலட்சம் ரூபாய் செலவிட அரசு அனுமதித்துள்ளது.

**வாடகை வண்டி.**

49. 120 C.C. மோட்டார்கள் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களை வாடகை வண்டிகளாக்க கருதி அவற்றை வாடகைக்கு ஓட்டுவதை அனுமதிக்கலாமா என்று அரசு கருதிப் பார்த்தது. மோட்டார் விசை யினால் இயங்கும் சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார்

வண்டிகள் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்குவதற்கும் அவற்றுக்கு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் கீழ் வரி விதிப்பதற்கும் பதிவு செய்வது, அனுமதிச் சீட்டு வழங்குவது தகுதிச் சான்றிதழை வழங்குவது முதலிய டணிச் சுமை மிகுந்த சிக்கலான நடைமுறையைப் பின்பற்ற வேண்டியிருக்கும் என அரசு கருதியது. ஆகவே, தமிழ்நாடு வாடகை வண்டிகள் சட்டத்தின் கீழ் வருபவையும் 120 C.C. எஞ்சின்கள் பொருத்தப்பட்டவையுமான சைக்கிள் ரிக்ஷாக்கள் தொடர்பாக தேவையான சட்டம் இயற்றும்வரை மோட்டார் வண்டிகள் சட்டம் அதன் கீழ் இயற்றிய விதிகள் ஆகியவற்றைச் சேர்ந்த விதித் துறைகளைச் செயற்படுத்த வேண்டியதில்லை என்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. சென்னை மாநகரில், 120 C.C. எஞ்சின்கள் பொருத்தப்பட்ட 50 சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு உரிமம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

### போக்குவரத்துப் பொறியியல் பிரிவு.

50. சென்னையிலுள்ள போக்குவரத்துப் பொறியியல் நிர்வாகப் பிரிவில் மேற்பார்வைப் பொறியாளர் ஒருவர் உள்ளார். இப்பிரிவு, சென்னைப் பெருநகரிலுள்ள போக்குவரத்துப் பிரச்னையைச் சமாளிக்க சென்னையில் ஒன்றும் பிற மாவட்டங்களின் போக்குவரத்துப் பிரச்சனைகளைச் சமாளிக்க திருச்சிராப்பள்ளியில் ஒன்றுமாக இரண்டு கோட்டங்களைக் கொண்டதாகும். வண்டிகள் போக்குவரத்தும் பொது மக்கள் போக்குவரத்தும் செவ்விய முறையில், எளிதாக இருப்பதற்கும் போக்குவரத்து வசதிகள் உரிய அளவு பயன்படும் வகையில் போக்குவரத்தினைக் கட்டுப்படுத்தவும் போக்குவரத்து நிர்வாக ஏற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வது தான் இப்பிரிவின் நோக்கமாகும்

சென்னைக் கோட்டம்:—மேற்சொன்ன நோக்கத்தைக் கருத்திற்கொண்டு, சீரமைப்புகள் செய்ய வேண்டிய அவசியமுள்ள பல்வேறு போக்குவரத்துப் பிரச்சினைகளை ஆராயும் பணியும் சாலைகளின் முக்கியப் பிரிவுகளில் தற்போதுள்ள தானியங்கி சைகை விளக்குகளில் மாற்றம் செய்யும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உலக வங்கித் திட்டம் தொடர்பான செயற்குறிப்புகளில் தனி நாட்டம் செலுத்தப்பட்டது. இந்த வகையில் சாலைகளின் முக்கியப் பிரிவுகளில் சைகை விளக்குகள் நிறுவுவது குறித்த செயற் குறிப்பு முடிக்கப்பட்டுள்ளது. உலக வங்கித் திட்டக் குழுவின் போக்குவரத்து ஆலோசகர் கேட்டிருந்தபடி நேர்ச் சாலைகள், வட்டச் சாலைகள் ஆகியவை குறித்து ஆய்வு நடத்தப்பட்டு, விவரக் குறிப்புகள் தயாரிக்கப்பட்டன. விரிவான போக்குவரத்து சாலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேசிய நெடுஞ்சாலைகள், பிற நெடுஞ்சாலைகள், விபத்து அதிகமாக நிகழும் பகுதிகள் ஆகியவற்றில் சாலைப் பிரிவுகளை சீரமைக்கும் செயற்குறிப்புகள் கருத்திலுள்ளன.





திருச்சிராப்பள்ளி கோட்டம்: இக்கோட்டம், சாலை அமைப்புகள், சாலைப் பிரிவுகள், போக்குவரத்துக் கட்டுப்பாட்டு சாதனங்கள், சாலைப் போக்குவரத்து விதிமுறைகள், போன்ற போக்குவரத்துப் பொறியியல் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு வெளியேயுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் சாலைப் போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகள் தொடர்பான பிற விஷயங்களைக் கவனித்து வருகிறது. போக்குவரத்து—சாலை ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. தேசிய நெடுஞ்சாலை அல்லாத பிற நெடுஞ்சாலைகளின் கிளைச் சாலைகள், அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகள் முதலியவற்றைச் சீரமைக்கும் செயற்குறிப்புகள் உள்ளன. சாலை அமைப்புகளைச் சீர் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றுடன், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருப்பூர் ஆகிய நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டம் குறித்த அறிக்கைகளும் இறுதி செய்யப்பட்டுவிட்டன.

51. 1981–82 ஆம் ஆண்டில் போக்குவரத்துப் பொறியியல் நிருவாகப் பிரிவு இதுவரை எய்தியுள்ள சாதனை வருமாறு :—

A. ஆராய்ச்சிகளும். ஆய்வுகளும் :—

| | சென்னைக் கோட்டம். | திருச்சிராப் பள்ளி கோட்டம். |
|---|---|---|
| I. போக்குவரத்து ஆய்வு :— | | |
| 1. சாலை ஆய்வு (இடங்கள்) | 41 | 148 |
| 2. மொத்த ஆய்வு (இடங்கள்) | 43 | 148 |
| 3. சாலைத் தொடக்க முடிவு குறித்த ஆய்வு (இடங்கள்) | .. | 4 |
| 4. வண்டி நிறுத்துமிடம் குறித்த ஆய்வு (இடங்கள்) | 2 | 1 |
| II. போக்குவரத்து வேகம், தாமதம் குறித்த ஆய்வுகள் : | | |
| 1. போக்குவரத்துச் சிக்கலை நீக்குதல் .. | 2 | 8 |
| 2. மையத் தொகுதிகள் | | |

III. போக்குவரத்துப் புள்ளி விவரம் :—

| | சென்னைக் கோட்டம். | திருச்சி ராப்பள்ளி கோட்டம். |
|---|---|---|
| 1. தேசிய நெடுஞ்சாலைகள் (இடங்கள்). | 11 | 115 |
| 2. பிற நெடுஞ்சாலைகள் (இடங்கள்). | .. | 410 |

B. சீரமைப்புத திட்டங்கள் :—

| | சென்னைக் கோட்டம். | திருச்சி ராப்பள்ளி கோட்டம். |
|---|---|---|
| 1. அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகள். | 8 | 18 |
| 2. சாலை அமைப்பு மேம் பாடுகள். | 5 | 67 |
| 3. போக்குவரத்து நிருவாகச் செயற்குறிப்புகள். | 7 | 11 |
| 4. சாலை தரம் பிரிக்கும் இயந்திர ஏற்பாடுகள். | 9 | 8 |
| 5. சிலைகள் அமைக்கும் இடங்களில் போக்கு வரத்தைத் திட்டமிடல். | 24 | 23 |
| 6. சுழல் ஏற்பாட்டுச் செயற் குறிப்புகள். | 2 | 9 |
| 7. சைகை விளக்குகள் அமைத்தல். | 2 | 1 |
| 8. போக்குவரத்தை ஒழுங்கு படுத்துதல். | 17 | 72 |
| 9. இணையான சாலை அமைப்பு வசதிகள். | 1 | 2 |
| 10. சாலைகளை அகலப் படுத்துதல். | 2 | 5 |
| 11. போக்குவரத்துச் சிக்கலை நீக்குதல். | 1 | 6 |



B. சீரமைப்புத் திட்டங்கள் :—

| | சென்னைக் கோட்டம். | திருச்சி ராப்பள்ளி கோட்டம். |
|---|---|---|
| 12. சுரங்கப் பாதைகளை இயன்ற வரை நன்முறை யில் பயன்படுத்திக் கொள் ளுதல். | 1 | — |
| 13. பேருந்துப் பாதைகள் .. | 1 | 2 |
| 14. சைக்கிள் பாதைகளுக்கு ஏற்பாடு செய்தல். | 8 | 4 |
| 15. பாதசாரி நடைபாதைகள் | 1 | 1 |
| 16. சாலைக்கு அப்பால் வண்டி களை நிறுத்தல். | 2 | 1 |
| 17. சாலைகளில் குறியீடு செய்தல் (இடங்கள்). | .. | .. |
| C. அறிக்கைகள் .. | 9 | .. |
| D. கருத்தரங்குகளிலும் ஏனைய சாலைப் பாதுகாப்புத் திட்டங் களிலும் பங்கு பெறுதல். | 4 | 1 |
| E. போக்குவரத்துப் பொறியியல் நிருவாகப் பிரிவு அளித்துள்ள தொழில் நுட்ப அறிக்கைகள். | 8 | ... |

மானியக் கோரிக்கை எண். 40, 53.

சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்—

கொள்கை விளக்கக் குறிப்பு.

1. நாட்டுடைமையாக்கப்பட்ட அரசு போக்குவரத்துக் கழகங்களின் வளர்ச்சி.

1.1. தமிழ்நாட்டில், சென்னை மாநகரில் பேருந்துப் போக்குவரத்தினை நாட்டுடைமையாக்கும் திட்டம் முதன் முதலில் 1947 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. 1959 ஆம் ஆண்டில், மாநில அரசு, 200 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட தொலைவுள்ள வழித் தடங்களில் விரைவுப் பேருந்துகளை விடத் தொடங்கியது. பின்னர், 1967 ஆம் ஆண்டில், 120 கிலோ மீட்டரும் அதற்கு மேற்பட்ட தொலைவும் உள்ள வழித் தடங்களையும், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வழித்தடங்கள் அனைத்தையும் தன் வசம் எடுத்துக் கொள்ள அரசு முடிவு செய்தது. 1971 ஆம் ஆண்டு வரை அரசுப் போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்த நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துப் போக்குவரத்துப் பணி, அந்த ஆண்டிலிருந்து தொடங்கி, நிறுவனங்கள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட பல்வேறு போக்குவரத்துக் கழகங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இன்று இம்மாநிலத்தில் எட்டு போக்குவரத்துக் கழகங்கள் உள்ளன.



அவை எந்த நாளில் அமைக்கப்பட்டன, அவை செயல்படும் பகுதிகள் முதலியன பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண்ணும் கழகத்தின் பெயரும். | செயல்படத் தொடங்கிய நாள். | செயல்படும் முதன்மைப் பகுதி. | 31–1–1982 அன்று உள்ளவாறு பேருந்துகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னை— | | | |
| (அ) பெருநகர்ப் பிரிவு .. .. | 1—1—1972 | சென்னைப் பெரு நகர்ப் பகுதி. | 1,920 |
| (ஆ) மாவட்டப் பிரிவு .. .. | 15—9—1975 | செங்கற்பட்டு மாவட்டம் | 527 |
| 2. பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம், மதுரை. | 17—1—1972 | மதுரை, இராமநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டங்கள். | 1,170 |
| 3. சேரன் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர். | 1—3—1972 | கோயம்புத்தூர், பெரியார், நீலகிரி மாவட்டங்கள். | 1,069 |
| 4. சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம். | 1—3—1972 | தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள். | 785 |

| தொடர் எண்ணும் கழகத்தின் பெயரும். | செயல்படத் தொடங்கிய நாள். | செயல்படும் முதன்மைப் பகுதி. | 31–1–1982 அன்று உள்ளவாறு பேருந்துகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| அண்ணா போக்குவரத்துக் கழகம், சேலம். | 15—2—1973 | சேலம், தருமபுரி மாவட்டங்கள். | 624 |
| கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகம், நாகர்கோவில். | 1—1—1974 | கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்கள். | 736 |
| தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் | 16—1—1975 | தென் ஆற்காடு வட ஆற்காடு மாவட்டங்கள். | 477 |
| திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், சென்னை. | 1—4—1980 | தமிழகம் முழுவதும் .. | 495 |
| | | மொத்தம் .. | 7,803 |



1.2. பட்டாபிராமன் குழு பரிந்துரைத்தபடி 600 பேருந்துகளுக்கு அதிகமாக உள்ள பேருந்துக் கழகங்களை ஏறத்தாழ ஒரு மாவட்டத்தில் செயல்படும் வகையில் பிரிப்பதென முடிவு செய்யப் பட்டுள்ளது. திருத்தப்பட்ட இந்த முறையின்படி அவை 1982–83 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவற்றின் விவரம் வருமாறு :—

| தொடர் எண்ணும் கழகத்தின் பெயரும். | தலைமையிடம். | செயல்படும் பகுதிகள். |
|---|---|---|
| 1. பல்லவன் போக்குவரத்துக் கழகம். | சென்னைமாநகர் | சென்னைப் பெருநகர்ப் பகுதி. |
| 2. பட்டுக்கோட்டை அழகிரி போக்கு வரத்துக் கழகம். | வேலூர் .. | வட ஆற்காடு மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டத்தின் வடக்குப் பகுதி. |
| 3. பாண்டியன் சாலைப் போக்கு வரத்துக் கழகம். | மதுரை .. | மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தின் மேற்குப் பகுதி. |
| 4. மருது பாண்டியர் போக்கு வரத்துக் கழகம். | காரைக்குடி .. | புதுக்கோட்டை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தின் கிழக்குப் பகுதி. |
| 5. சேரன் போக்குவரத்துக் கழகம் | கோயம்புத்தூர் .. | கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள். |
| 6. ஜீவா போக்குவரத்துக் கழகம் | ஈரோடு .. | பெரியார் மாவட்டம். |
| 7. சோழன் சாலை போக்குவரத்துக் கழகம். | கும்பகோணம் .. | தஞ்சாவூர் மாவட்டம். |

| தொடர் எண்ணும் கழகத்தின் பெயரும். | தலைமையிடம். | செயல்படும் பகுதிகள். |
|---|---|---|
| 8. புதிய போக்குவரத்துக் கழகம் (இன்னும் பெயர் சூட்டப்பட வில்லை). | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 9. அண்ணா போக்குவரத்துக் கழகம் | சேலம் .. .. | சேலம், தருமபுரி மாவட்டங்கள். |
| 10. கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் | திருநெல்வேலி .. | திருநெல்வேலி மாவட்டம். |
| 11 நேசமணி போக்குவரத்துக் கழகம் | நாகர்கோவில் | கன்னியாகுமரி மாவட்டம். |
| 12 தந்தை பெரியார் போக்கு வரத்துக் கழகம் | விழுப்புரம் .. | தென்னார்க்காடு மாவட்டம், செங் கற்பட்டு மாவட்டத்தின் தெற்குப் பகுதி. |
| 13 திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம். | சென்னை .. | தமிழகம் முழுவதும். |



**2. பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் கொள்கை :**

2.1. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளன்றுள்ளவாறு, இம்மாநிலத்தில் மொத்தம் உள்ள 12,871 பேருந்துகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 7,807 பேருந்துகளை இயக்கின. பொதுத் துறையால் 61 சதவீதம் பேருந்துகள் இயக்கப்பட்டன. பொது மக்கள் போக்குவரத்து ஏற்பாட்டினை உடைமையில் எடுத்துக் கொண்டு அதனை நிர்வகிப்பது என்பதை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால், பேருந்துப் பணிகள் நாட்டுடைமையாக்கப்படுவதும், நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துப் பணிகளை விரிவு படுத்துவதும் கிராமப் புறத்தில் அதிக அளவில் மேற் கொள்ளப்படுகின்றன. நாட்டுடைமையாக்குவது தொடர்பாக நமது அணுகுமுறை மிகத் தெளிவானதாகும். கிராமப் பகுதிகளில் உள்ள இலட்சக்கணக்கான மக்களுக்குப் போக்குவரத்து வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்பதே அரசின் தலையாய நோக்கமாகும். நெடுஞ்சாலைகளில் முக்கியமான வழித்தடங்களிலிருந்து தற்போதுள்ள பேருந்து உரிமையாளர்களை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக, போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளை விடுவதால் மட்டும் பயணிகளுக்கு மேலும் வசதிகளை அளிப்பதாகக் கூற முடியாது. அனைத்துப் பேருந்து வழித் தடங்களும் நாட்டுடைமையாக்கப் படும் வரை, தனியார் துறையினருக்கும் அரசுத் துறையினருக்கும் இடையே விரும்பத்தகாத போட்டியை தவிர்க்க இயலும் வகையில், குறிப்பாக, பெட்ரோலிய பொருள்களின் விலை மேன் மேலும் அதிகரித்து வருகிற காரணத்தால், மேலும் சிறிது காலத்திற்கு அரசுத்துறையும் தனியார் துறையும் பேருந்துகளை விடுவதற்கான பகுதிகள் எவை எவை யென்று வரையறுப்பது அவசியமாகிறது. அண்மையில், 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில், உயர்வேக டீசல் எண்ணெயின் விலையும் ஏனைய பொருள்களின் விலையும் உயர்ந்தன.

**3. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் செயல்முறை.**

**3. 1. திட்ட சாதனை.**

3.1.1. பயணிகளுக்குச் சேவை செய்வதை நோக்கமாகக் கொண்டு, திறமையான, ஒருங்கிணைந்த, சிக்கன முறையிலான போக்குவரத்துப் பணியை நல்குவது மாநிலத்தில் உள்ள எட்டு போக்குவரத்துக் கழகங்களின் பொறுப்பாகும். இப்போக்குவரத்துக் கழகங்கள் இந்த நிதியாண்டில் (1981–82) 1982, சனவரி இறுதிவரை, மொத்தம் சுமார் 36 கோடி ரூபாய் செலவில் 1,345 புதிய பேருந்துகளை வழித்தடங்களில் விட்டுள்ளன. இவற்றில் 717 பேருந்துகள் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக விடப்பட்டுள்ளன ; ஏற்கனவே உள்ள வழித்தடப் பேருந்துகளுடன், கூடுதலாக 628 பேருந்துகள் புதிய வழித்தடங்களில் விடப்பட்டுள்ளன. சுமார் 16 இலட்சம் மக்கள் வாழும் 753 கிராமங்களில்

இதுவரை பேருந்து வசதி இல்லாமலிருந்தது. இப்பேருந்துகள் புதிதாக மேற்படி கிராமங்களுக்கு விடப்பட்டன. கிராமப்பகுதி களில் தொலை தூர இடங்களுக்கு 90 சிறிய பேருந்துகளையும் குறுஞ்சக்கர அடிப்பகுதி கொண்ட பேருந்துகளையும் (Short wheel Base Buses) இக்கழகங்கள் இயக்குகின்றன. இப் புதிய வழித்தடங்களில பேருந்துகள் விடுவதால் போக்கு வரத்துக் கழகங்களுக்கு விரயம் ஏற்பட்ட போதிலும் கிரா மப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற பொது நோக்கத்துடன் அவை இவற்றை நடத்தி வருகின் றன. கிராம மக்கள் காய் கறி உணவு தானியங்கள், பால் போன்ற விற்பனை செய்யத்தக்க பொருட்களை எடுத்துச் செல்ல உதவும் பொருட்டு கூடுதலாக ''அங்காடிப் பேருந்துகளை'' விட்டுள்ளன. நகர்ப்பகுதிகளில் இருந்து நெடுந் தொலைவிலுள்ள கிராமப் பகுதிகள் பலவற்றிற்கு பேருந்து வசதி அளிக்கும் பொருட்டு, நகரப் பேருந்துப் பணிக்கான வழித்தடத் தொலைவு 25 கி. மீட்டரிலிருந்து 30 கி. மீட்டராக உயர்த்தப்பட்டுள்ளது. உரிய காலத்துக்கும்மேல் அதிகக் காலம் ஓடிய பேருந்துகளை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் இயன்ற இனங்களில் அவை குறுஞ்சக்கர அடிப்பகுதி கொண்ட பேருந்து களாக மாற்றப்பட்டு, குறைந்த மக்கள் தொகை உள்ள தொலை வாய் உள்ள பகுதிகளில் இயக்கப்படுகின்றன.

**3. 2. நிதி நிலை.**

3.2.1. 1978–79, 1979–80 ஆம் ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குப் போதிய அளவு ஆதாயம் கிட்டியது. ஆனால் 1980–81 ஆம் ஆண்டில் 8—6—1980-லி ருந்து டீசல் விலை திடீரென உயர்ந்ததனாலும், அனைத்துப் பொருட்களின் விலை ஏற்றத்தினாலும், பணியாளர்களின் ஊதிய உயர்வினாலும், ரூ. 13 கோடி நட்டம் ஏற்பட்டது. பேருந்துக் கட்டணத்தை உயர்த்துவதால் பயணிகளுக்கு அதிகச் செல வாவதைக் கருத்திற்கொண்டு கவனமாக ஆய்ந்த பிறகு 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. மீண்டும் 13—1—1981 இல் டீசல் எண் ணெய், மசகு எண்ணெய் ஆகியவற்றின் விலையை மத்திய அரசு உயர்த்தியதின் விளைவாக அனைத்து அரசுப் போக்கு வரத்துக் கழகங்களுக்கும் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டது. இத னால், மீண்டும் 12—6—1981-லிருந்து பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. உடனே மத்திய அரசு மூன்றாம் முறையாக டீசலின் விலையை 11–7–1981 லிருந்து உயர்த்தியது. 1981–82 ஆம் ஆண்டில், 1982 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இறுதி வரை, கிட்டத்தட்ட ரூ. 13 கோடி நட்டம் ஏற்பட்டிருந்த போதிலும் தற்போதைக்கு பேருந்துக் கட்டணத்தை மேலும் உயர்த்துவதில்லையென அரசு முடிவு செய்துள்ளது.



**சென்னைமாநகர்ப் பணிகளுக்கு உலக வங்கி கடன் உதவி**

3.2.2. சென்னை பெருநகர் பேருந்துப் போக்குவரத்தினை சீரமைப்பதற்கான இரண்டாம் கட்டப் பணிக்கு கடனுதவி யாக ரூ. 12.6 கோடியை உலக வங்கி வழங்கியுள்ளது. இத் தொகை 555 பேருந்துகள் வாங்குவதற்கும், அனைத்துச் சாத னங்களுடன் கூடிய ஒரு பணிமனையை நிறுவுவதற்கும் செலவிடப் படும். இப்பணி நடந்தேறி வருகிறது. பல்லவன் போக்கு வரத்துக் கழகப் (பெருநகர்) பணிமனைக்கு பேருந்து அடிச்சட் டங்கள் வரத் தொடங்கியுள்ளன. இந்த 555 பேருந்துகளும் 1983 ஆம் ஆண்டு சூலைத் திங்களுக்கு முன்னதாக சென்னை மாநகர்ச் சாலைகளில் ஓடத் துவங்கிவிடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**போக்குவரத்துத் துறைக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் கடனுதவி**

3.2.3. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிறுவனம் போக்குவரத்துக் கழகங்களுக்கு, பேருந்துகள் வாங்குவதற் காக ரூ. 3.78 கோடி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திட மிருந்து கடனாக வாங்க ஏற்பாடு செய்திருக்கிறது.

**4. பயணிகளுக்கு வசதிகள்:**

4.1. கடந்த நான்கு ஆண்டுகளில் 1,000-க்கும் மேற்பட்ட பேருந்து நிழற்குடைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் பல நிழற்குடைகள் கட்டப்பட்டு வருகின்றன. கொடைக்கானலில் பாண்டியன் சாலை போக்குவரத்துக் கழகமும், புதுச்சேரி, திருச்சி ஆகிய இடங்களில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகமும் பேருந்து நிலையங்களைப் புதிதாகக் கட்டி வருகின்றன.

4.2. சென்னையிலிருந்து திருவனந்தபுரம், பெங்களூர் கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்கு சீர்வளிப் பேருந்துகள் விடப் படுகின்றன. அப்பேருந்துகளில் தொலைக் காட்சி பெட்டிகளும் (Close Circuite T. V.) வீடியோ கேசட் படங்களும் வைக்கப்பட்டுள்ளன. இவை தவிர திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகம் 120 சொகுசு பேருந்துகளை (சீர்வளி வசதி அமைக்கப்படாதவை) விட்டுள்ளது.

**5. சமூக நல ஏற்பாடுகள்:**

5.1. அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் பேருந்து களில், புற்று நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்காகச்செல்கையில் அவர்கள் சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்ய அனு மதிக்கப்படுகின்றனர். பார்வை இழந்தோர் சென்னை மாந கரத்தில் கட்டணமில்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கப்படு

கின்றனர். பிற இடங்களில் அவர்கள் மருத்துவமனை, பணிக்களரி, பள்ளிகள் ஆகியவற்றிற்குப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். சென்னை மாநகரில், உடல் ஊனமுற்ற குழந்தைகள் தங்களது இருப்பிடத்திலிருந்து பள்ளி, மருத்துவமனை ஆகியவற்றிற்குப் பேருந்துகளில் இலவசமாக சென்று திரும்ப பேருந்து அனுமதிச் சீட்டுகள் அளிக்கப்படுகின்றன. 1981 ஆம் ஆண்டு, அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் ஆண்டானதால் அரசுப் போக்குவரத்து நிறுவனங்களில் நிரந்தர அடிப்படையில் ஊனமுற்றோர் பலர் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். மேலும், ஒவ்வொரு பேருந்திலும் உடல் ஊனமுற்றோருக்காகச் சில இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. பள்ளி, கல்லூரி மாணவர்கள் கழகப் பேருந்துகளில் சலுகைக் கட்டண வீதங்களில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர் இதனை அரசு சமூக நோக்கமாக ஏற்றுக்கொண்டு, இதற்காகும் செலவுகளில் ஒரு பகுதியை சமூகச் செலவு ஆக ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. நெரிசல் நேரங்களில் பள்ளி செல்லும் குழந்தைகள், பணிக்கு செல்லும் மகளிர் ஆகியோரின் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்துடன் மாநகரங்களில் '' மகளிர் குழந்தைகள் மட்டும்'' பேருந்துகள் கணிசமான அளவிற்கு விடப்பட்டுள்ளன. இந்த பேருந்துகளை நடத்துவதற்கு பெண் நடத்துனர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். பயண நேரத்தைக் குறைக்கும் நோக்கத்துடன் நெரிசல் நேரங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட சில பேருந்துகளில் இரண்டு நடத்துனர்கள் சோதனை அடிப்படையில் நியமிக்கப் பட்டுள்ளனர். கழகப் பேருந்துகளில் பத்திரிகை நிருபர்கள் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர், தற்போது அவர்களது கணவர்/மனைவிக்கும் இச்சலுகை (அவர்களிருவரும் சேர்ந்து பயணம் செய்யும்போது) நீட்டிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இம்மாநிலத்திற்குள்ளேயும் மாநிலத்திற்கு வெளியேயும் எந்தக் கழகப் பேருந்திலும், எங்கு வேண்டுமானாலும் எத்தனை முறை வேண்டுமானாலும் பயணம் செய்யலாம்.

6. ஆற்றிய சிறப்புப் பொதுச் சேவைகள்:

6.1. தமிழ்நாட்டில் நடைபெறும் பல்வேறு திருவிழாக்கள், பண்டிகைகள் ஆகியவற்றிற்கு மாநில போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்கின்றன. போக்குவரத்து நெரிசலை சுமுக நிலைமைக்குக் கொண்டு வர, போதுமான எண்ணிக்கையில் தனி பேருந்துகள் விடப்படுகின்றன. போக்குவரத்தை முறைப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பயணிகளின் வசதிக்காக, தேவையான இடங்களில் பந்தல்கள் போடப்படுகின்றன. குடிநீர், கழிப்பிட வசதிகள் ஆகியவை



6.2. பயணம் செய்யும் பொதுமக்களின் வசதிக்காக பத்து நாட்களுக்கு முன்னதாகவே தங்களது இருக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்து கொள்ளும் வசதி உள்ளது. இத்தகைய வசதிகள், பெரிய பேருந்து நிலையங்கள் அனைத்திலும் பயணஇறுதி முனைகளிலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இது தவிர, முக்கியமான இடைப் பயண நிலைகளில் (intermediate points) ஒதுக்கீட்டு முறைஅடிப்படையில் இருக்கைகள் ஒதுக்கீடுசெய்யப்படுகின்றன. இரயில்வேக்களில் உள்ளதைப்போல, பயண இருக்கை ஒதுக்கீட்டிற்கான படிவங்களைப் பூர்த்தி செய்து பெற்றுக்கொண்டு பயண இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

6.3. சென்னை, திண்டிவனம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோவில், சேலம், கோயம்புத்தூர், கிருட்டிணகிரி, வேலூர் போன்ற முக்கிய பேருந்து நிலையங்கள் அனைத்திலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், கழிப்பிட வசதிகளுடன் பயணி ஓய்வு அறைகளைக் கட்டியுள்ளது. சென்னை, கோயம்புத்தூர், சேலம், திண்டிவனம், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய இடங்களில் சிற்றுண்டிச் சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோவில், கோயம்புத்தூர், சேலம், தஞ்சாவூர், சென்னை ஆகிய இடங்களில் ஓய்வறைகளும் பயண பொருள் பாதுகாப்பு அறை வசதிகளும் உள்ளன. தொகுதி தொகுதியாக வரும் பயணிகளுக்காக சென்னையில் துயிலிட வசதியுடன் கூடிய இடவசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

6.4. சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கத்துடன், மாவட்டங்கள் அனைத்திலுமுள்ள மாவட்ட சுற்றுலா நிலையங்களில் வண்டி நிறுத்துவதற்கான வசதிகள், குடிநீர், கழிப்பிட வசதிகளுடன் ஓய்வறைகள் ஆகியவற்றுடன் மேம்பாடு செய்யும்படி மாநில போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வசதிகள் அனைத்தையும் அக்கழகங்கள் தங்களது வாலாயமான தேவைகளை செய்தபின்னர் உபரி நிதி ஏதுமிருப்பின் அவற்றைக் கொண்டு படிப்படியாக நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

6.5. விபத்துக்கள், பேருந்துகள் பழுதடைதல் ஆகிய சமயங்களில் பயன்படுத்திக்கொள்ள இயலும் வகையில், விரைவு பேருந்துகளில் கம்பியில்லா தந்தி ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரைப் போலவே மதுரை மாநகரிலும் பாண்டியன் சாலை போக்குவரத்துக்கழக வண்டிகளில் இத்தகைய போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

6.6. அந்தமான் தீவுகளில் பேருந்துப் போக்குவரத்து மேம்பாட்டிற்கான ஆலோசனைப் பணிகளை நல்குவதற்கான

ஒப்படைத்துள்ளது. அந்தமான் நிக்கோபார் மத்திய நிர்வாகம், பேருந்துக் கூடுகள் கட்டுதல், அந்தமானில் பேருந்து நிலையவசதிகளை ஏற்படுத்துதல், தங்களது அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்தல் ஆகிய பொறுப்புகளை இக்கழகத்திற்குக் கொடுத்துள்ளது. இதுவரை ஒன்பது பேருந்துகள் அந்தமானுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

6.7. தமிழ்நாட்டில் கிராமப்புற மேம்பாட்டிற்காக தமிழ்நாடு ஊரகச் சீரமைப்புச் சங்கத்திற்கு (தாரா) சேரன் போக்குவரத்துக் கழகம் ரூபாய் 20 இலட்சமும், தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் ரூபாய் 10 இலட்சமும் 1981 மார்ச் திங்களில் உதவித் தொகையாக அளித்திருக்கின்றன.

6.8. முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் ரூபாய் 1 இலட்சம், 1981 ஏப்ரல் திங்களில் நன்கொடையாக அளித்திருக்கிறது.

**7 சாலை விபத்துக்களைத் தடுத்தல்**

7.1. விபத்துக்களை தவிர்ப்பதற்கும் பேருந்துகளைப் பாதுகாப்பாகவும் கவனமாகவும் இயக்குவதற்கும் மாநிலப் போக்குவரத்து நிறுவனங்கள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. சென்ற ஆண்டில் ஏற்பட்ட விபத்துக்களுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு விபத்துக்கள் கணிசமான அளவிற்குக் குறைந்துள்ளது. இலட்சம் கிலோ மீட்டருக்கு விபத்துக்களின் எண்ணிக்கை சென்ற ஆண்டு 1.10 ஆக இருந்தது இந்த ஆண்டில் 1.07 ஆகக் குறைந்துள்ளது.

7.2. பேருந்து ஓட்டுனர்கள் பேருந்துகளை மிக விரைந்து ஓட்டுவதையும், அதிகாரமளிக்கப்படாத இடங்களில் வண்டிகள் நிறுத்துவதையும் ஓரளவிற்குக் கண்டறிய இயலச் செய்யும் வகையில் பேருந்துகளில் சாதன அமைப்புகள் பொறுத்தப்பட்டிருந்தன. ஆனால், அவை சரி செய்யத்தக்க ஒரு ஏற்பாடேயன்றி, தடுத்து நிறுத்தத்தக்க ஏற்பாடு அல்ல. எனவே, அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் பேருந்துகள் அனைத்திலும் மின்னணுவியல் வேகத் தடை கருவி ஒன்றைப் பொறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்கருவி, குறிப்பிட்ட வேகத்திற்கு அதிகமாக வண்டிகளை ஓட்டுனர் இயக்கினால் பொறிக்கு எரிபொருள் அனுப்புவதை இக்கருவி நிறுத்திவிடும். இதுவரை 5,635 பேருந்துகளில் இக்கருவி பொறுத்தப்பட்டுள்ளது.

7.3. ஓட்டுனர்கள் கவனமாகவும் எச்சரிக்கையுடனும் பேருந்துகளை இயக்குவதற்குப் போக்குவரத்துக் கழகங்களில் பாதுகாப்புப் பரிசுத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் கீழ் ஓட்டுனர்கள் விபத்து ஏதும் இல்லாமல் இயக்கும் முதலாண்டிற்கு ரூபாய் 100 ரொக்கப் பரிசு



கொடுக்கப்படும். அடுத்தடுத்தாண்டிற்கு இத்தொகை ஆண்டிற்கு ரூபாய் 25 கூடுதலாகக் கொடுக்கப்படும். இதனால் ஓட்டுநர்கள் எவ்வளவுக்கெவ்வளவு பேருந்துகளைப் பாதுகாப்பாக இயக்குகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு பரிசுத் தொகை கூடிக்கொண்டே வரும்.

| தொடர்ந்து விபத்தின்றி வண்டிகள் இயங்கிய ஆண்டுகளின் எண்ணிக்கை. | பரிசுத் தொகை. |
|---|---|
| (1) | (2) (ரூபாயில்) |
| ஓராண்டு .. .. .. .. .. | 100 |
| இரண்டாண்டு .. .. .. .. | 125 |
| மூன்றாண்டு .. .. .. .. | 150 |
| நான்காண்டு .. .. .. .. | 175 |
| முப்பதாண்டு .. .. .. .. | 3,000 |

7,4 கார் போன்ற அதிகத் திண்மையற்ற வண்டி ஓட்டுநர்க்கும், லாரி போன்ற சரக்கு வண்டி ஓட்டுநர்களுக்கும் இது போன்ற பரிசுத் தொகை வழங்கப்படுகிறதென்றாலும, அப் பரிசு தொகை குறைந்த அளவிலேயே வழங்கப்பட்டு வருகிறது.

7.5. வாகனங்களை ஓட்டுகையில் தவறான வழக்கங்களை ஓட்டுநர்கள் கடைபிடிப்பதால் பல விபத்துக்கள் நிகழ்கின்றன. பேருந்து ஓட்டுநர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கென்று, முறையான பள்ளி ஏதுமில்லாததால், லாரிகள் ஓட்டப் பழகியோர், திண்மை வாய்ந்த (கனரக) வண்டி ஓட்டும் அனுபவத்தின் அடிப்படையில் பேருந்துகளை ஓட்டவும் நியமிக்கப்படுகின்றனர். அந்த லாரி ஓட்டுநர்கள், கரடுமுரடான பாதையில் பெரிய லாரிகளை ஓட்டுகையில் ஏற்பட்ட பழக்கவழக்கம் பேருந்துகளை அவாகள ஓட்டுமுறையிலும் கடைபிடிக்கப்படுகிறது. வண்டி ஓட்டுகையில் பழக்கங்கள் ஏதுமின்றி, முறைப்படி ஓட்டுநர்கள் பலரை உருவாக்க ''சாலைப் போக்குவரத்து நிறுவனத்'' தலைமையின கீழ் ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்று கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, தேவையான உடற்கட்டுடைய எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தகுதி பெற்ற வண்டி ஓட்டத் தெரியாத இளைஞர்கள் தெரிந்தெடுகககப்பட்டு, திண்மையற்ற வண்டிகளையும், திண்மை வாய்ந்த வண்டிகளையும் ஓட்டுவதிலும், மோட்டார் எந்திரவியல், பொது மக்கள தொடர்பு, முதலுதவி முதலியவற்றிலும், 32 வாரஙகளுக்குத தீவிரப் பயிறசி அளிக்கப்படுவர். அப்பயிற்சிக்குப் பினனா, அவர்கள் வேலைவாய்ப்பகத்திடமிருந்து கோரிப் பெறாமலேயே

மாநிலப் போக்குவரத்துக் கழகத்தில் நேரடியாத் நியமிக்கப்படுவதற்குக் கருதிப்பார்க்கப்படுவர். போக்குவரத்துக் கழகங்களுக்கு நன்கு பயிற்சி பெற்ற ஓட்டுநர்களை உருவாக்கித் தரும்பொருட்டு அகதிகளுக்கும் ஓட்டுநர் பயிற்சி விரும்பிய உள்ளூர்க்காரர்களுக்கும் ஓட்டுநர் பயிற்சி அளிப்பதற்காக, சாலைப் போக்குவரத்து நிறுவனம் கும்மிடிபூண்டியிலுள்ள திண்நிலை (கனரக) வண்டி எந்திரக் கம்மியர்—ஓட்டுநர் நிலவரத்தை மேற்கொண்டுள்ளது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், இவ்வாண்டு மதுரையில் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி ஒன்றை அமைத்துள்ளது. விபத்துகள் நிகழாமல் தடுப்பது பற்றியும் ஓட்டுநர்களுக்குக் கல்வியூட்டுவதற்கும் பல்வேறு போக்குவரத்துக் கழகங்களிலும், போககுவரத்து தொடர்பான வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

7.6. தீ விபத்துக்களினால் ஏற்படும் சேதங்களைக் குறைக்க போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அனைத்திலும் தீயணைப்புக் கருவிகளுக்கு வகை செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

7.7. வாடகை வண்டிகள், தனியாருக்குச் சொந்தமான லாரி வண்டி ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்க, தொழிற் பயிற்சி நிறுவனத் தலைமையின்கீழ்; மாவட்டத் தலைமையிடங்கள் அனைத்திலும் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்தும் புதிய திட்டமொன்று ஆய்வில் உள்ளது.

7.8. விபத்துக்களில் பலியானோருக்கு உடனடியாக ரொக்க உதவி அளிக்க, இறந்துவிட்டால் 1,000 ரூபாயும், காயமடைந்தால் கால நிலைக்கு ஏற்ப ரொக்க உதவி அளிக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு இடருதவி தொடர்பான முதலமைச்சர் நிதியிலிருந்து, நிதியுதவி அளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டம் மாவட்ட ஆட்சியர்கள் வாயிலாக, போக்குவரத்து ஆணையரால் நிருவகிக்கப்படுகிறது.

8 தொழிலாளர் நல நடவடிக்கைகள்:

8.1. மேலும் பயணம் செய்யும் பொது மக்களுக்கான தங்கள் புரவலர்களுக்கும் பணிபுரிவதோடு, தங்கள் பணியாளர்களின் நலத்திலும் போக்குவரத்துக் கழகங்கள் நாட்டம் கொண்டுள்ளன.

8.2. பல்வேறு போக்குவரத்துக் கழகங்களில், சம்பள வீதங்கள், அகவிலைப் படி, விடுப்பு விதிகள், மருத்துவ வசதிகள் முதலியவை ஓரே சீராக அமைய வேண்டும் என்பதுதான் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும், தற்போது செயலிலுள்ள நீண்டநாள் சம்பளச் சீரமைப்புத் திட்டத்தின் நோக்கமாகும். மாநில அரசுப் போக்குவரத்து நிறுவனங்களில் பல்வேறு பதவித் தரங்களுக்கு நிலவி வந்த பல சம்பள வீதங்களை இத்திட்டம் குறைக்க வகை செய்வதோடு, பணியாளர்களின் கல்வித் தகுதி அனுபவத்தை யொட்டி, இச்சம்பள வீதங்களுக்குள் பல்வேறு நிலைகளை, ஒருங்கிணைப்பதற்கு வகை செய்கிறது.



8.3. பதவி உயர்விற்குத் தக்க வாய்ப்பில்லாததால் தொழிலாளர்களின் மனத்தில் எழக்கூடிய சோர்வைப் போக்கவும், நீண்டநாள் சம்பளச் சீரமைப்புத் திட்டம் வகை செய்கிறது முப்பது ஆண்டுகள் பணியாற்றிய ஒரு தொழிலாளரின் பணி நிறைவு அளிப்பதாக இருந்தால், குறிப்பிட்ட பதவியை அடைந்ததும் பதவிக்காலம் முழுவதும் அவர் ஊதிய உயர்வைப் பெற உரிமையுடையவராவார் என்றும் இத்திட்டம் வகை செய்கிறது. பதவி உயர்வு அளிப்பது குறித்து இதுவரையில் ஓராண்டிற்கு ஒருமுறை ஆய்வு செய்யப்பட்டது. இது, இப்போது ஓராண்டிற்கு நான்கு முறை மேற்கொள்ளப்படுகிறது.

8.4. அகவிலைப் படி, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப்படி, கிராமப்படி, மருத்துவப்படி, விடுப்பு, மருத்துவப் பயன்கள் முதலியவை, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் ஒரே சீராக்கப்பட்டுள்ளன.

8.5. அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் உள்ள அனைத்துப் பிரிவுப் பணியாளர்களையும் உள்ளிட்ட செயலுக்கத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இவை பின்வரும்— நோக்கங்களை எய்துவதற்காகச் செயல்படுத்தப்படுகின்றன :

(அ) தொழிலாளர் மிகுதியான சம்பளம் ஈட்ட இயலுவதன் மூலம் பயனடைதல் ;

(ஆ) அதிக அளவில் பணியாளர்கள் உயர்ந்த செயற்படுதல், பொதுச் சேவையை நன்முறையில் புரிதல் ஆகியவற்றின்மும், சிறந்த முறையில் பணிபுரிந்து பொதுமக்கள் பயன் பெறச் செய்தல் ; மற்றும்

(இ) செலவைக் குறைத்தும், உற்பத்தியைப் பெருக்கியும் கழகம் பயனடையச் செய்தல்.

சம்பளத்தில் 20 முதல் 25 சதவீதம் வரையில்தான் செயலூக்கத் தொகை அளிக்கப்படும் என்றிருந்த உச்ச வரம்பு நீக்கப்பட்டுள்ளது.

8.6. பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்ட போதிலும், வசூலாகும் கட்டணத்திற்குரிய படியை அதற்கேற்ற விகிதாச்சாரத்தில் குறைக்கவில்லை ; ஆனால், கட்டணங்களை அதிகரித்ததின் மூலம் கிடைக்கப்பெறும் வருவாயில் தொழிலாளர்களும் பங்கு பெறும் வண்ணம் படியும் வரையறுக்கப்பட்டுள்ளது.

8.7. புதிய ஊதியத் திட்டம் 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.

8.8 படிகள் :

8.8.1. காலாண்டிற்கு நுகர்வோர் விலைவாசி குறியீட்டெண் வீதத்தில் 360 புள்ளிகளுக்கு மேல் உயரும் புள்ளி ஒன்றுக்கு 1.30 ரூபாய் வீதம், தொழிற்சாலைப் பணியாளர்களுக்கு அகில இந்திய நுகர்வோர் விலைவாசிக் குறியீட்டெண் அடிப்படையில் அகவிலைப் படி வழங்கப்படுகிறது.

8.8.2. சென்னையில் ஏனைய மாவட்டத் தலைநகர்கள், கழகத் தலைமையிடங்கள் ஆகியவற்றில் வசிக்கும் எல்லாப் பணியாளர்களுக்கும் 15 சதவீதம் என்ற வீதத்திலும் ஏனைய இடங்களிலும் வசிக்கும் பணியாளர்களுக்கு 12 சதவீதம் என்ற வீதத்திலும் வீட்டு வாடகைப் படி அளிக்கப்படுகிறது.

8.8.3. சென்னை நகரத்தில் வசிக்கும் பணியாளர்களுக்கு நகர ஈட்டுப்படி 8 சதவீதம் என்று முறைப்படுத்தப்படுகிறது. மதுரை. கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய நகர்களில் வசிக்கும் பணியாளர்கள் அனைவருக்கும் 5 சதவீதம் என்றும், ஏனைய இடங்களில் வசிக்கும் பிற பணியாளர்களுக்கு இதே 5 சதவீதம் என்றும் முறைப்படுத்தப்பட்டு 'கிராமப் படியாக' அளிக்கப்படுகிறது.

8.8.4. அடிப்படைச் சம்பளம் அகவிலைப் படியில் 4 சதவீதம் என்ற வீதத்தில் உயரளவு 40 ரூபாய் என்பதற்கு உட்பட்டு மருத்துவப்படி அளிக்கப்படுகிறது.

8.8.5. சலவைப்படி, திங்கள் ஒன்றுக்கு 6 ரூபாயிலிருந்து 8 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

8.8.6. மலை வாழ்விடப் படி, திங்கள்ஒன்றுக்கு ஒரு பணியாளர் ஒருவருடைய அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதம் என்ற வீதத்தில், குறைந்த அளவு 25 ரூபாய் உயரளவு 50 ரூபாய் என்பதற்கு உட்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

8.9. விடுப்புப் பயன்கள் :

8.9.1. எல்லாப் பணியாளர்களுக்கும், 1980ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளிலிருந்து சம்பளத்துடன் கூடிய தற்செயல் விடுப்பு, ஆண்டொன்றுக்கு பத்து நாட்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

8.9.2. மகளிருக்குப் பணிக்காலத்தில் மூன்று முறை அளிக்கப்படும் மகப்பேறு விடுப்பு 60 நாட்களிலிருந்து 90 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

8.9.3. ஆண்டொன்றுக்கு மருத்துவ விடுப்பு (sick leave) நாட்களிலிருந்து 8 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.



8.10. போக்குவரத்துக் கழகங்கள் 25-க்கு அதிகமாகப்
பேருந்துகளையுடைய பணிமனைகளில் சிற்றுண்டிச் சாலை
களையும் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி போன்ற
பொழுது போக்கு வசதிகளுடன் கூடிய ஓய்வறைகளையும்
அமைத்துள்ளன. சிற்றுண்டிச் சாலைகளில் தொழில ளர்களுக்கு
குறைந்த விலையில் உணவு வழங்கப்படுகிறது. இரவு நேரத்தில்
பணியாற்றும் தொழிலாளர்களுக்கு சிற்றுண்டியும் தேநீரும்
இலவசமாக வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு கழகமும், விடுப்புக்
காலங்களிலும், விடுமுறை நாட்களிலும் தொழிலாளர்கள் தங்கு
வதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் விடுமுறைக் கால
ஓய்வு இல்லங்கள் கட்டக் கருதியுள்ளன. அனைத்து அரசுப்
போக்குவரத்துக் கழகங்களையும் சேர்ந்த பணியாளர், தமது
குடும்பத்தைச் சேர்ந்த ஐவருக்கு மேற்படாதவர்களுடன் ஆண்
டிற்கொருமுறை அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து
களில் மாநிலம் முழுவதும் இலவசமாகப் பயணம் செய்யலாம்.
சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்து
கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம் போன்ற கழகங்களி
லுள்ள பணியாளர்கள், ஆண்டொன்றுக்கு மொத்தம் 2,750
கிலோ மீட்டர் தொலைவிற்கு எத்தனை முறை வேண்டுமானாலும்
பயணம் செய்யலாம். அனைத்துப் போக்குவரத்துக் கழகங்
களின் நிருவாகங்களும், போக்குவரத்துக் கழகங்களைச் சார்ந்த
தொழிலாளர்களின் 2 பிள்ளைகளுக்கு பள்ளி அல்லது கல்லூரிக்குச்
சென்று வர இலவசப் பயண அனுமதிச் சீட்டுகளை வழங்கி
வருகின்றன.

8.11. பணியிலிருக்கும் தொழிலாளர் ஒருவர் இறந்து விட்டால் அவருடைய குடும்பத்திற்கு இடருதவி அளிக்கும் பொருட்டு இறந்தவருடைய ஆதரவில் இருக்கும் ஒருவருக்கு, வேலைவாய்ப்பு அலுவலகத்தைக் கேட்காமலேயே போக்குவரத்துக் கழகத்தில் அவரது தகுதியைப் பொறுத்து வேலை வாய்ப்பு அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. பணிக்காலத்தில் ஏலாமையுற்ற பணியாளர்கள், பொருத்தமான வேறொரு பணியில், புதிதாக நியமனம் செய்யப்படுவது போலவே தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்கப்படுகிறார்கள். முச்சக்கரவண்டி வாங்குவதற்காக, 50 சதவீதம் உதவித்தொகையும், 50 சதவீதம் குறைந்த வட்டிக்கு நீண்டகாலத் தவணையில் கடனும் உடல் ஊனமுற்ற பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

8.12. அரசு மருத்துவமனைகளில் அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்ற இலவச அகநோயாளி மருத்துவ வசதி, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் கிடைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத் திட்டம் 1978ஆம் ஆண்டு

8.13. போக்குவரத்துக் கழகங்கள் அனைத்திலும் குடும்ப நல நிதித் திட்டம் செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. தொழிலாளர் ஒருவர் இறந்த ஒரு வாரத்திற்குள் இழப்பீட்டுத் தொகையையும், பணிக்கால பயன்களையும் வழங்கும்படி கழகங்களுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று பணியிலிருந்து ஓய்வு பெறுபவருக்கு வருங்கால வைப்பு நிதியில் அவருக்குள்ள தொகை, அவருக்குரிய பணிக்கொடை முதலியவை அவர் ஓய்வு பெற்ற நாளிலேயே வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது.

8.14. கழகங்கள் ''தொழிலாளர் நல அறக்கட்டளைகளை'' ஏற்படுத்தி, தங்களுடைய அதிகப்படியான வருவாயிலிருந்து கணிசமான பகுதியை அதற்கு ஒதுக்குவதற்குக் கழகங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இந்நிதி, தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத் தேவையான புத்தகங்கள், குறிப்பேடுகள், எழுது பலகைகள், படிப்புதவித் தொகை முதலியன வழங்கப் பயன்படுத்தப்படுகிறது. தொழிலாளரின் பிள்ளைகள் பள்ளி இறுதித் தேர்வில் மாவட்டத்தில் முதலாவதாகத் தேறியவர்களாயிருப்பின் அவர்களுடைய உயர் கல்விக்காகும் செலவை ஏற்கவேண்டுமென்று அனைத்துக் கழகங்களுக்கும் கட்டளையிடப்பட்டுள்ளது.

**முன்பணங்கள்:**

8.15. போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தும் தங்கள் பணியாளர்களுக்கு 6 சதவீத வட்டி வீதத்தில் திருமண முன்பணம் அளிக்கின்றன. இந்த முன் பணம் எளிய தவணைகளில் வசூலிக்கப்படத்தக்கதாகும். பெண் தொழிலாளியின் திருமணத்திற்கு அல்லது தொழிலாளர்களின் மகள் திருமணத்திற்கு வழங்கப்படும் முன்பணம் ரூ. 1,000-லிருந்து ரூ. 1,500 ஆகவும், தொழிலாளரின் திருமணத்திற்கு அல்லது தொழிலாளரின் மகன் திருமணத்திற்கு வழங்கப்படும் முன்பணம் ரூ. 500,லிருந்து ரூ. 1,000-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. பண்டிகை முன்பணம் ரூ. 400-லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கைத்தறி முன்பணத்தை வசூலிப்பதற்கான தவணைகளின் எண்ணிக்கை 6-லிருந்து 8 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

8.16. சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் ஆகியவை தங்கள் பணியாளர்களுக்கு இன்றியமையாப் பண்டங்கள் வழங்குவதற்காக பணியாளர் கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்குக் குறைந்த வட்டி வீதத்தில் நிதி உதவி அளித்துள்ளன. தங்கள் பணியாளர்களுக்கு இன்றியமையாப். பொருட்களை வழங்குவதற்காக, கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும்படி ஏனைய போக்குவரத்துக் கழகங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பல்வேறு கிளைகளில் பணிபுரியும்



பொருட்களை கூட்டுறவுப் பண்டகசாலைகள் மூலம் வழங்குவதற்காக, சேரன் மற்றும் ,சோழன் போக்குவரத்துக் கழகங்கள் இயல் ஊர்திகளுக்கு (Mobile van) ஏற்பாடு செய்துள்ளன. பணியாளர்கள் நகர்புற வீட்டு வசதி வளர்ச்சி கழகத்திடமிருந்து கடனுதவி பெற்று ''சொந்த வீடு கட்டும்'' திட்டத்தின் கீழ் வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கு சேரன் போக்குவரத்துக் கழகம் .உதவியுள்ளது. இக்கழகம் தம் பணியாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக வட்டிக்கு உத்திரவாதம் அளித்து அல்லது நிலங்களை மேம்பாடு செய்து கொடுத்து கணிசமான அளவிற்கு நிதியுதவி வழங்கியுள்ளது. ஏனைய கழகங்களும் தங்கள் பணியாளர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றன. சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் இயக்குநர் இத்திட்டத்தை அமல்படுத்தும் எல்லா துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு பதவிவழி தனிச் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர் நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளருக்கு ஒப்பானவர்.

8.17. எல்லா போக்குவரத்துக் கழகங்களும் தங்கள் தொழிலாளர்களுக்கு காலணிகளையும் ஓட்டுநருக்கு குளுமை கண்ணாடியையும் வழங்கி வருகின்றன. தைத்த சீருடைகளை தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு பதிலாக, அவர்களே கேட்டுக் கொண்டதற்கிணங்க தொழிலாளி ஒருவருக்கு ரூ.30 என்ற வீதத்தில் தையற்கூலியுடன் துணிகளை இக்கழகங்கள் வழங்கி வருகின்றன. ஐந்து ஆண்டுகள் பணிமுடித்த தொழிலாளருக்கு மூக்கு கண்ணாடி தேவைப்படின் அவற்றை இலவசமாக பாண்டியன் போக்குவரத்துக் கழகம் வழங்கி வருகிறது. பத்தாண்டுகள் பணி முடித்த தொழிலாளர்கள் பணியைப் பராட்டும் வகையில் இக்கழகம் அவர்களுக்கு கைக்கடிகாரங்களைப் பரிசளிக்கிறது. மலைப்பகுதிகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கம்பளிக்குட்டையும் (muffler) கம்பளிச் சட்டையும் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

8.18. பணியாளர்களின் நலனுக்காக போக்குவரத்துக் கழகங்கள் அவசரமருத்துவ ஊர்திகளை (Ambulance van) பராமரித்து வருகின்றன.

**பணியில் புதிதாக நியமிக்கப்பட்டவர்கள்.**

8.19. தொழில் பழகுவோருக்கான உதவித் தொகை 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் (மத்திய சட்டம்) சட்டத்தில் வரையறுத்துள்ள தொகையை விட உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஊதியக்கொளை:

8.20. பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் சாலைப். போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் அவற்றைச் சார்ந்த பொறியியல் கழகங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த அனைத்து பணியாளர்களுக்கும் உயர்அளவு 20 சதவீத ஊதியக் கொடை கருணைப்படி அளிக்கப்பட்டது. பல்லவன் போக்குவரத்துக் கழகம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், தந்தைப் பெரியார் போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றின் பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் 8.33 சதவீத குறைந்த அளவு ஊதியக் கொடையும், ரூ. 200 கருணைப்படியும் வழங்கப்பட்டது. அத்துடன் 1981ஆம் ஆண்டிற்கா அனைத்து போக்குவரத்துக் கழகங்கள், பொறியியல் கழகங்களைச் சேர்ந்த பணியாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.260 சாதனை ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டது,

9. பொது :

9.1. புதிய, நல்ல ஆதாயம் தரக்கூடிய பேருந்து வழித்தடங்களை உருவாக்குவதற்காக, ஒவ்வொருமாவட்டத்திலும்.

1. மாவட்ட ஆட்சியர் (தலைவர்)
2. வட்டாரப் போக்குவரத்து அதிகாரி.
3. போக்குவரத்துக் கழகத்தின் நிருவாக இயக்குநர்
4. கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் புறப் பணிகள்).
5. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊர் வளர்ச்சி)

ஆகிய அலுவலர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

9.2. போக்குவரத்துப் பணி நடத்துவது, மறு சீரமைப்பு செய்வது தொடர்பாக, பிறநாடுகளுக்கும், மாநிலங்களுக்கும் ஆலோசனை நல்குவதற்காக, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் (பெருநகர்ப் பிரிவு) மேலை நாட்டு ஆலோசனை பிரிவு.ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு ஏமன் குடியாட்சியில் போக்குவரத்துத் துறையில் பழுது பார்த்தல், பராமரிப்புப் பகுதிகளில் சீரமைப்புக்கு ஆலோசனை குறிப்பளித்து அது நடைமுறையில் செயல் பட்டுக் காண்டிருக்கிறது அதுபோல கோவாவில் கடம்பா போக்குவரத்துக் கழகத்திற்கும் இப்பிரிவு ஆலோசகர்களாக அமைக்க ஒரு திட்டம் முடிவாகி வருகிறது.

9.3. போக்குவரத்து நிருவாகத்தைச் செம்மைப் படுத்துவதற்காக காரைக்குடி, பொள்ளாச்சி ஆகிய இடங்களில் ஆராய்ச்சி வளர்ச்சி நிலையங்கள் ஏற்படுக்கப்பட்டுள்ளன.



10. மோட்டா வாகன பராமரிப்பு நிறுவனம்

10.1. தமிழக அரசுத் துறைகளைச் சார்ந்த சுமார் 6,500 மோட்டார் வண்டிகளைப் பராமரிக்கும் பொறுப்பு மோட்டார் வாகன பராமரிப்பு நிறுவனத்தினுடையதாகும். இந்நிறுவனப் பிரிவுகளாக ஒன்பது பணிமனைகளும் , இரண்டு பணிநிலையங்களும், ஒரு பண்டக நிர்வாகப் பிரிவும் உள்ளன. இதுவரை இருந்த மத்திய கொள்முதல் பண்டக சாலைப்பிரிவு க்டந்த செப்டம்பர் திங்களிலிருந்து கூடுதல் பணிகளோடு பண்டக நிர்வாகப் பிரிவுகளாகச் செயல்படத் தொடங்கியுள்ளது. வாகனங்களுக்கு வேண்டிய அசல் உதிரிப் பாகங்கள், கருவிகள், டயர்கள், டியூப்புகள், போன்ற வற்றை உற்பத்தி செய்வோரிடமிருந்து நேரடியாக குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்படுகின்றன. காவல்துறை வாகனங்கள் உட்பட ஏனைய அரசுத் துறை வாகனங்களுக்கும் அவை விநியோகிக்கப்படுகின்றன. தர்மபுரியில் கட்டப்பட்டுள்ள பணிமனை விரைவில் செயல்படத் தொடங்கும்.

10.2. தற்போதிருக்கும் அரசு பணிமனைகள் போதுமானதாக இல்லாததால், 1982–83 ஆம் ஆண்டில் 65 தனியார் பணிமனைகளுக்கு வரையறுக்கப்பட்ட நியதிகளாக அங்கீகாரம் அளிக்கப் பட்டுள்ளது.

10.3. அரசுத்துறை வாகனங்களை பழுதுபார்க்க தனியார் பணிமனைகளையே சார்ந்திருக்கும் நிலையைத் தவிர்க்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசின் பணிமனை அமைப்பதே அரசின் கொள்கையாகும். வேலூரில் ஒரு பணிமனை அமைக்கவும் மற்றும் ஈரோடு, இராமநாதபுரம், புதுக்கோட்டை, உதகமண்டலம், சென்னையில் பட்டினப்பாக்கம் ஆகிய இடங்களில் ஒவ்வொரு பணிநிலையம் அமைக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கான ஆயத்த வேலைகளும் நில கையகப்படுத்தும் வேலைகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டில் திருநெல்வேலியிலுள்ள பணிநிலையத்தை ரூ.6.00 இலட்ச செலவில் முழுப் பணிமனையாக மேம்படுத்தவும் தலைமைச் செயலக வளாகத்தினுள் ரூ.32,000 செலவில் ஒரு பெட்ரோல் குழாய் (Consumer pump) அமைக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

10.4 சென்ற ஆண்டு மோட்டார் வாகன பராமரிப்பு நிறுவன பணி மனைகள் ஏறக்குறைய 18,000 பழுது பார்க்கும் வேலைகள் செய்துள்ளன. 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் முதல் 1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதிவரையிலான காலத்தில் 351 கழித்தொதுக்கப்பட்ட வாகனங்களை ஏலம் விட்டு விற்றதன் மூலம் கிடைத்த தொகை ரூ. 61 இலட்சமாகும். இந்த ஆண்டும் இவ்வழியில் மேலும் சுமார் 40 இலட்சம் ரூபாய் வரை வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

[1982 மார்ச் 25

10.5. இந்நிறுவனத்தை, பணிபுரியும் துறையாக கருதுமாறு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1. முடிவுரை:

11. 1. இவ்வாறாக பொது மக்களுக்கு திறமையான, சிக்கனமான, பாதுகாப்பான, ஒருங்கிணைந்த போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பயணி — சாலைப் போக்குவரத்துத் துறையின் எல்லாக் கூறுகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதை இவ்அறிலிருந்து காணலாம். பொது மக்களுக்குக் குறைந்த கட்டணத்தில் போக்குவரத்து வசதி செய்து கொடுப்பது, நல்ல ஆதாயம் தரக்கூடிய வணிக நிறுவனங்களாக இயங்குவது ஆகிய இவ்விரு நோக்கங்களையும் கருத்திற் கொண்டு அரசுப் போக்குவரத்து நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன.

11.2. நடப்பாண்டில், மோட்டார் வண்டிகள், பராமரிப்பு அமைப்பு உட்பட அனைத்து நிறுவனங்களிலும் தொழில் அமைதி பொதுவாக நிலவியது. மாநில அரசு நிறுவனங்களும், அரசும், பணியாளர்களின் நியாயமான குறைகளைப் பரிவுடன் கவனித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

வியாழக்கிழமை, 1982 மார்ச் 25.

பங்குனி 12 துன்மதி—திருவள்ளுவர் ஆண்டு 2013.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நயனொடு நன்றுபுரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.''

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்கும் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை, உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

### (1) வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கும்பகோணம் கிராம மின்சார கூட்டுறவுச் சங்கத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கிய தொகை.

*வினா எண். 645—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கும்பகோணம் கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மத்திய அரசு வழங்கிய தொகை எவ்வளவு ? மாநில அரசு வழங்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) இத் திட்டம் மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

(இ) இச்சங்கம் தனி அமைப்பாக (Autonomous) இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) கும்பகோணம் கிராம மின்சார கூட்டுறவு சங்கத்திற்கு மத்திய அரசு நிறுவனமான கிராமிய மின் வழங்கு கழகம் கடனாக ரூ. 147.12 லட்சமும், மாநில அரசு பங்கு மூலதன முதலீடான மானியமுமாக ரூ. 35 லட்சமும் அளித்துள்ளது.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் ஒரு கிராமிய மின்சார கூட்டுறவுச் சங்கம் அமைப்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இச்சங்கம் தனி அமைப்பாக இயங்கச் செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராம மின்சார கூட்டுறவுச் சங்கம் இருப்பதால் நன்மைகள் என்ன? இந்தச் சங்கம் இயங்குவதால் அந்தப் பகுதியிலே லைன்மேன்கள் போன்றவர்கள் பற்றாக்குறை ஏற்படுவதன் காரணமாக மின் விளக்குகள் எரிவதிலே ஏதாவது குறை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மின் விநியோகத்தை இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆங்காங்கே சிறு சிறு அமைப்புகளாக வைத்து விநியோகிப்பது சிறந்தது என்று இந்திய அரசு கருத்துத் தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் மத்திய அரசின் மூலமாக நாம் இத்தகைய முறையில் சங்கத்தை ஆரம்பித்தால் பண உதவியும் செய்கிறார்கள். ஆகவே, இதை இரண்டாவது சோதனையாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. அதனால் என்ன நன்மைகள் கிடைக்கும் என்பது போகப் போகத் தான் தெரியும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, இதனுடைய நன்மைகள் தீமைகள்—இந்தத் திட்டத்தை மத்திய அரசாங்கம் சொல்லிய கொள்கையின் காரணமாக அமல்படுத்தி வருகிறோம்—என்ன என்பது போகபோகத்தான் தெரியும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதுவரையில் கண்ட அனுபவம் என்ன? இதனால் நல்ல முறையில் விநியோகம் செய்யமுடியும் என்று தெரிகிறதா? இந்தத் திட்டத்தைப் பல்வேறு கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் விஸ்தரிக்க குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தச் சங்கம் துவக்கப்பட்டது 5–7–79 ஆம் தேதி. மின் விநியோகம் செய்வதற்கு மின் விநியோகத்தை மேற்கொண்டது 1–7–80 இல் தான். கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக் காலம் தான் ஆகிறது. ஆகவே இதன் நடைமுறை அனுபவத்தை இப்போதே தீர்மானிப்பது சரியல்ல.



திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சங்கம் மூலமாக மின் விநியோகம் செய்கிற போது மின் வாரியத்திற்கும் மக்களுக்கும் இடையிலே இப்படிச் செய்வதற்கு ஏதாவது லாபம் கிடைக்கிற வகையிலே கட்டணத்திலே தரப்படுகிறதா என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சங்கம் ஓரளவிற்கு இயங்குவதற்குரிய சக்தி கிடைக்கப்பெற வேண்டும். அந்த அடிப்படையில் சங்கத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 18 பைசா வீதம் மின்சார வாரியம் தருகிறது. ஆனால் மின் வாரியம் என்ன கட்டணங்களைப் போடுகிறதோ அந்தக் கட்டணங்களின் அடிப்படையில்தான் அவர்கள் வசூலிக்கிறார்கள். ஆகவே ஓரளவுக்கு இழப்பு இல்லாமல் இயங்கி வருவதாகத்தான் தெரியவருகிறது.

திரு. மா. சின்னராசு : அரசு விநியோக முறையை இது போன்ற கூட்டுறவு அமைப்புகளுக்குக் கொடுப்பதைப்போல் லாபகரமாகத் திறன் இருக்கிறது என்று முடிவு செய்யப்பட்டால் உற்பத்தி செய்கின்ற நிர்வாகத்தையும் இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்களிடம் கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது கொள்கை பற்றிய பிரச்சினை.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இரண்டு இடங்களில் குறிப்பாக அமைக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த இடங்கள் என்ன என்ன ? இந்த இரண்டு இடங்களில் லாபம் இல்லாவிட்டாலும் நட்டம் இல்லாமல் நடத்தப்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே ஒன்று கும்பகோணம் ; இரண்டாவது புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமயம். 1–7–1980 முதல் 31–3–1981 வரையில் முதலாவது ஆண்டில் நஷ்டம் இல்லாமல் நடப்பதாகத் தெரிகிறது. முழு விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்த கிராம மின்சார சங்கமானது ஏற்படுவதற்கு கையாளக்கூடிய விதிமுறைகள் யாவை ? அந்த சங்கத்தின் நிர்வாகத்தில்,

இருப்பவர்கள் நியமன உறுப்பினர்களா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா ? பொது மக்களிடமிருந்து பங்குத்தொகை என்று ஏதாவது வாங்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மற்ற கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி உருவாக்கப்படுகிறதோ அதே அடிப்படையில் உருவாக்கப்படும். ஆனால் இதிலே அதிகார பற்றற்றவர்கள் யாரும் கிடையாது. மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராகக் கொண்டு அதிகாரிகளே இதில் இருக்கிறார்கள். ஒரு கோட்ட மின் பொறியாளரை அதை இயக்குவதற்கு நாம் தருகிறோம். இதிலே உறுப்பினர்கள் பங்கு தொகை உண்டு. சுமார் 10 லட்சம் ரூபாய் உறுப்பினர் பங்குத்தொகை இருக்கிறது. இதுதான் இதனுடைய நிர்வாக அமைப்பு முறை.

## மின் கட்டணத்தைத் திருத்தியமைக்கும் திட்டம்.

***வினா எண். 646—திரு. கு. ரமணி :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெட்ரோல், டீசல் விலை மத்திய அரசு உயர்த்தியுள்ளதால் மின் கட்டணத்தை மாநில அரசு உயர்த்தப் போகிறதா ?

(ஆ) ஆம் எனில் கட்டண உயர்வின் அளவு என்ன ?

(இ) அதனால் மின்வாரியத்துக்கு அதிக வருமானம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :**

(அ) (ஆ) மற்றும் (இ) : எரி எண்ணெய் உட்பட இடு பொருள்கள் விலையுயர்வு, தமிழ்நாடு மின் வாரியம் வாங்கும் மின் சக்தியின் விலையுயர்வு மற்றும் மின் அனுப்புதலில் ஏற்படும் கூடுதல் செலவினங்கள் முதலியவற்றின் அடிப்படையில் மின் கட்டணங்களைப் பொதுவாக திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மின் உற்பத்திக்கு தேவையான அத்யாவசியமான பொருள்களின் விலையை உயர்த்தும் போது மத்திய அரசு மாநில அரசுகளை



கலந்து ஆலோசிக்க வற்புறுத்தப்படுமா ? ஏற்படுகிற இழப்புகளுக்கு மத்திய அரசு மாநில அரசுகளுக்கு மானியம் தர வற்புறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே இடு பொருள்களின் விலையை உயர்த்துகிற போது மத்திய, அரசு, மாநில அரசை கலந்து கொள்ள வேண்டுமென்று மின் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே வற்புறுத்தப்பட்டது. அண்மையிலே நடந்த தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்திலும் நம்முடைய அரசு சார்பிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக மத்திய அரசானாலும், மாநில அரசானாலும் ஆறாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு கூடுதல் நிதி திரட்டி வருகிறார்கள். மத்திய அரசு அதை சுலபமாக மாநிலங்களிலிருந்து திரட்டி விடுகிறது. மாநிலங்கள் திரட்டுவதற்கு மக்களிடம் போக வேண்டியிருக்கிறது.

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, டீசல், பெட்ரோல் போன்ற பொருள்களின் விலை உயர்வால் மின்சார கட்டணத்தை உயர்த்துவதற்கு ஆலோசிக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் எவ்வளவு உயர்த்தப் போகிறீர்கள் ? உயர்த்துகிற காலங்களில் விவசாயத்திற்கு ஏற்கனவே அதிகமான அளவிற்கு கட்டணம் இருப்பதால் அதை உயர்த்தாமல் பெரிய தொழில்களுக்கு இன்றைக்கு 3 காசு, 4 காசு என்று சப்ளை செய்யக் கூடிய அவற்றிற்கு மின் கட்டணம் உயர்த்தக் கூடிய முறையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, எவ்வளவு என்பது அரசு உயர்த்துகிறபோது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சுலபமாக தெரியும் என்று கருதுகிறேன். விவசாயத்தைப் பொறுத்த வரையில் அதிகமான கட்டணம் என்று யாராவது அவரிடத்தில் சொல்வார்களானால் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் 72 ஆம் ஆண்டு 12 காசு நம்முடைய விவசாயிகள் செலுத்தினார்கள். இன்றைய ரூபாயின் மதிப்பில் அது 5.4 காசு தான். ஆகவே அவர்களுக்கு ஏற்கனவே இருந்ததைவிட குறைத்துத் தருகிறோம். 12 காசு 72-லே செலுத்தியவர்கள் இப்போது 5.4 காசு தான் செலுத்துகிறார்கள். தொழிற் துறையிலே உயர்த்துவதற்கு சாத்தியக் கூறுகளை இந்த அரசு ஆராய்ந்து வருகிறது. அதிக அளவிற்கு உயர்த்தி விடுவதால் தொழில்கள் நம்முடைய மாநிலத்தை விட்டு ஓடி விடக்கூடாது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் பதிலிலே ஏதோ கணக்கு போட்டு இந்த தடவை 12 காசுக்கு குறைவாக கட்டுகிறார்கள் என்று சொன்

னார்கள். ஆனால் பெரிய விவசாயிகளுக்கு 14 காசு என்று இருந்ததே அது 15 காசாக வசூலிக்கப்படுகிறதே, அது எப்போது உயர்த்தப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே நான் ஏதோ கணக்கு போட்டு சொன்னேன் என்று உறுப்பினர் சொல்கிறார். நான் போட்ட கணக்கு அல்ல, அது உண்மையான கணக்கு. 1960-லே 1 ரூபாய் அது 72-லே 49.5 காசுக்கு சமம் 82-லே 21.7 காசுக்கு சமம். இது நாட்டிலே இருக்கக் கூடிய நடை முறைக் கணக்கு. நான் போட்ட கணக்கல்ல. அந்த கணக்கின் அடிப்படையிலே 72-லே 12 காசு, விவசாயிகள் அந்த மதிப்பின் அடிப்படையிலே 5.4 காசு என்றுதான் கட்டுகிறார்கள். என்று பொருள். ஆனால் அது 16 காசு என உயர்த்தப்பட்டு, அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்ற பிறகு அதைக் குறைத்து அவர்கள் கேட்டதோ 1 காசு குறையுங்கள் என்று தான் சொன்னார்கள், ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் எப்போதும் தாராளமாக இருப்பதை போல அந்த 16 காசை 14 ஆக குறைத்து, சிறு விவசாயிகளுக்கு மேலும் 2 காசை குறைத்து 12 காசாக ஆக்கினார்கள்.

வினா எண். 647—மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றது.

[முற்பகல் 9.10]

**பொட்டனேரியிலுள்ள மேச்சேரி செம்மறி ஆட்டு ஆராய்ச்சிப் பண்ணை.**

*வினா எண். 648—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொட்டனேரியிலுள்ள உள்ள மேச்சேரி செம்மறி ஆட்டு ஆராய்ச்சிப் பண்ணையை விரிவு படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைச்சேரி வெள்ளாடு களைப்பற்றிய சிறு அளவிலான மாதிரிக் கூடம் ஒன்று நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாசன வசதிகளைப் பெருக்கு வதற்காக தற்போதுள்ள கிணற்றை தவிர மேலும் ஒரு குழாய்க் கிணறு தோண்ட, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வு செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஒரு சிறிய பழப்பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது. தீவனப் பொருட்கள் மற்றும் பசுந் தழைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய, ஒரு சத்துணவு சோதனைக் கூடம் அமைக்கப்பட்டு வருகிறது.





திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிப் பண்ணைக்கு மேய்ச்சல் நிலம் கையகப்படுத்தப்பட்டும் அது பயன்படுத்தப்படாமல் இருந்து வருகிறது. எனவே, கிராமப் புறங்களில் ஊரக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் விவசாயிகளுக்கு ஆடு வாங்கக் கடன் வழங்குகிறபொழுது போதுமான ஆடுகளை அங்கேயிருக்கிற கூட்டுறவுச் சங்கங்களால் வழங்க முடியவில்லை. எனவே, இது போன்ற மேய்ச்சல் நிலங்களைப் பயன்படுத்தும் வகையில் இந்த ஆராய்ச்சிப் பண்ணைகளிலே ஆடு அபிவிருத்தித் திட்டத்தைச் செயல் படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது ஏற்கனவே செயல் பட்டு வருகிறது.

**தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயத்திற்கு தொல்லை தரும் எலிகளை ஒழிக்கும் திட்டம்.**

*வினா எண். 649—திரு. இரா. தாமரைக்கனி : திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்திற்கு தொல்லை தரும் எலிகளை ஒழிக்கும் திட்டத்தை தீவிரப்படுத்தும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஒவ்வோர் ஆண்டும், தனித் திட்டத்தின் மூலம் ரூ. 69,000 செலவில் 60,000 ஏக்கரில் எலிகளை ஒழிக்க துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. இத்திட்டத்தில் 60,000 ஏக்கருக்கு ஜிங்க் பாஸ்பைட், அலுமினியம் பாஸ்பைட், போரேட் 10 சதவீதம் குருணை முதலியவை 50 சதவீதம் மானிய விலை யிலும், ஒரு எலியைப் பிடித்துக் கொல்ல ஊக்கப் பணமாக 10 பைசா வீதம் (2,00,000 எலிகளை பிடித்துக் கொல்ல) ரொக்கமாகவும் அளிக்கப்படும். மேற்கூறிய எலி கொல்லி மருந்து கள் விவசாய கிடங்குகளின் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, எலியைப் பிடிப்பதற்குள்ள காசு உயர்த்தப்படுமா ? மனிதர்கள் எலியைப் பிடிப்பதையே பாவமாகவும் கருதுகிறார்

கள், இப்போது. எலியைப் பிடிப்பதற்கு ஆட்கள் சரியாக வராத காரணத்தால், அங்கங்கே அரசுச் செலவிலேயே எலியைப் பிடிக்க பாம்புப் பண்ணை வைக்கப்படுமா, என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உயர்த்த வேண்டிய நிலைமை நிச்சயமாக இல்லை. பாம்பு பண்ணை என்பது ஆபத்தான யோசனை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்கள் உற்பத்தி செய்யும் தானியங்களில் 8-ல் 1 பங்கை எலிகள் தின்று விட்டதாக ஒருகணக்கு முன்பு சொல்லப்பட்டது. எகிப்து நாட்டில் எலிகளின் தொல்லை ஒரு பெரிய தேசியப் பிரச்சினையாகி, எலிகளைப் பிடிக்க அமெரிக்காவின் உதவியை நாடும் நிலைமை ஏற்பட்டது. அதைப் போல், எலிகளைப் பிடிக்க உலக வங்கியினுடைய உதவியை அரசு நாடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு, கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதற்காக உலக வங்கியின் உதவியை நாடுவது மலையைக் கிள்ளி எலியைப் பிடிப்பது போலாகும்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எலித் தொல்லை தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகம் பூராவும் இந்த எலித் தொல்லைகளினால் மகசூல் பாதிக்கப்படுகிறது. ஆகவே, எலிகளை ஒழிக்கும் வகையில் எலி ஒழிப்பு வாரம் கொண்டாடப்படுமா ? அமைச்சர் அவர்கள் எலி வேட்டையாட வருவார்களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே. இதற்கென்று தனி வாரம் நாம் கொண்டாட வேண்டியதில்லை. எல்லா காலத்திலேயும் இந்த வேலை நடைபெற்று வருகிறது. அமைச்சர் இதில் நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையில்லை, துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூராவிலும் இருக்கிற நெல் வயல்கள், இந்த எலித் தொல்லைகளினால் நெற்கதிர்கள் பாழடிக்கப்படுகின்றன. அதைப் பூரணமாக ஒழிக்க, நல்லமுறையிலே ஆராய்ச்சி செய்து, எந்தெந்த வகையில் அதை ஒழிக்க அமைச்சர் முயற்சி எடுப்பார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கனவே மூலக் கேள்விக்குச் சொல்லப்பட்ட பதிலிலேயே கூறப் பட்டதைப் போல், இப்பொழுதுள்ள முறைகளே எலிகளை ஒழிக்கப் போதுமானது. புதிதாக, ஏதுவும் தேவை இல்லை.



திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, புலி வேட்டையிலே ஈடுபட்ட தமிழ்ப் பரம்பரை இன் றைக்கு எலி வேட்டையிலே ஈடுபட்டிருக்கிறது. இருக்கட்டும். அந்த எலிகள் ஏதாவது ஒரு பொருளைச் சாப்பிட்டால் மலடு ஆகும் வகையில் அந்த இலாக்கா ஆராய்ச்சி செய்யுமா ? அதா வது குடும்பக் கட்டுப்பாடு என்ற முறையில், ஆட்டோமேட்டிக் கலி அது சாப்பிடும் உணவின் மூலம் மலடாகும் முறையில் ஏதா வது ஆராய்ச்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அம்பி காபதியும் ஏதாவது ஒத்துழைத்தால் அதிலே நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது ஒரு எலியைப் பிடித்துக் கொல்ல ஊக்கப்பணமாக 10 பைசா வீதம் அளிக்கப் படுவதாகவும், 50 சதவீதம் மானிய விலை என்றெல்லாம் குறிப் பிட்டார்கள். அது எந்த இலாக்காவின் மூலம் அளிக்கப்படுகி றது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்த இலாக்கா மூலம்.

திரு. இ. முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, கிராமப்புறங்களில் வயல்களில் உள்ள எலிகளைப் பிடித்து அங் குள்ள மக்கள் உணவாகப் பயன்படுத்தி வருகிறார்கள். இப்படி எலிகளைக் கொல்லாமல் உயிரோடு பிடித்து நகர்ப்புறங்களில் விநியோகிக்கின்ற உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, இல்லை.

**லே அவுட் அனுமதி பெறாமல் விட்டுமனைகள் விற்பதை தடை செய்யும் திட்டம்.**

*வினா எண். 650—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) லே-அவுட் அனுமதி பெறாமல் வீட்டுமனைகள் விற் பதை அரசு தடை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமுலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) பல்வேறு சட்டங்களில் திருத்தம் செய்தபின் அமுலுக்கு வரும்.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, நிலச் சொந்தக்காரர்கள் லே-அவுட் அங்கீகாரம் பெறாமல் சில நகரங்களில் வீட்டு மனைகள் விற்று விடுகிறார்கள். விலையேறி விடும் அச்சத்தின் காரணமாக மக்கள் அதை வாங்கி விடுகிறார்கள். ஆனால் அங்கே பள்ளிக்கூடம், பூங்கா போன்றவைகள் இல்லாமல் வீடுகளைக் கட்டி விடுகிறார்கள். ரோடு வசதிகளைச் சரியாகச் செய்யாமல் விட்டு விடுகிறார்கள். சில நேரங்களில் அந்தப் பகுதிகளில் தீப்பிடித்து விட்டால் தீயணைக்கும் என்ஜின்கள் கூட உள்ளே போக முடியாத அளவிற்கு நிலைமை இருக்கிறது. ஆகவே, அங்கீகாரம் பெறாமல் வீட்டு மனை விற்கப்படும்பொழுது பத்திரப் பதிவு செய்யக் கூடாது என்று கட்டாயமாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஏற்கனவே இருக்கின்ற 1908 வது ஆண்டு இந்தியப் பதிவு செய்தல் சட்டத்தில் இதற்கு இடம் இருக்கிறது. அதுவும் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து நோ அப்ஜெக்ஷன் சர்ட்டிபிகேட் வாங்கி வந்தால்தான் பதிவு செய்ய வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அதற்குமாறாக உள்ளாட்சி மன்றங்கள் சட்டத்திலேயே திருத்தம் செய்து விடலாம் என்பது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. எம். சின்னசாமி : பேரவைத் தலைவரவர்களே, சட்ட வரம்பை மீறிக்கூட சிலர் விற்று விடுகிறார்கள். இதனால் வாங்கியவர்கள் வீடு கட்டும்பொழுது தொல்லைப்படுகிறார்கள். ஆகவே, இப்படி லே-அவுட் அங்கீகாரம் பெறாமல் வீடு கட்டினால் அவர்களுக்குக் கட்டாயமாக மின்னிணைப்புக் கொடுக்க மாட்டோம் என்று கடுமையான விதியை அரசு கொண்டு வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இது போன்று மனைகள் விற்கப்படுவதைத் தடுக்கும் பொருட்டுத்தான் சட்டத்தில் திருத்தம் செய்வது பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்தேன். ஆனால் பிரைவேட் லே-அவுட் என்று சொல்லும் அளவில் தனியார் ஆங்காங்கு இப்படி வீட்டுமனைகளை விற்று அதன்காரணமாகப் பல்வேறு இடங்களில் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டு வருகின்றன. அதைத் தவிர்க்கும் பொருட்டு உள்ளாட்சி மன்றங்கள் சட்டத்திலேயே விதியைக் கொண்டு வந்து தடுக்கலாம் என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போல இந்த கனெக்ஷன்கள் குழாய் இணைப்பு, மின்சார இணைப்பு போன்றவைகளைக் கொடுக்காமல் நிறுத்தி வைத்தால் இதுபோன்ற மனைகள் வராமல் தடுக்கலாம்.



திரு. தி.கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வீட்டுமனைகளுக்கு வரைபடங்கள் போட்டு விற்கின்ற நேரத்தில் ஊராட்சிகள், அல்லது நகராட்சிகளிடம் இந்த இடம் என்று ஒதுக்கிவிட்டு, விற்பனை செய்யும் நேரத்தில் முழுமையாக அந்த இடத்தையும் சேர்த்து விற்று வருகிறார்கள். எனவே வரைப்படங்களைக் கொடுக்கின்ற நேரத்தில் எந்த இடங்கள் என்று நகராட்சி அல்லது பேரூராட்சி எழுதி வாங்கிய பின்பு விற்பதற்கு அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அதைப்போன்ற நிலைமைகள் உருவாகத்தான் சட்டத் திருத்தம் கொண்டு வருகிறோம்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, இப்படி லே-அவுட் அனுமதி பெறாமல், சேங்ஷன் வாங்காமல் பல்வேறு தனியார்கள் நிலங்களை விற்று விடுவதால், சைதாப்பேட்டை போன்ற பல்வேறு இடங்களில் அவைகளைத் தனியார் பகுதியாகத் தீர்மானித்து அடிப்படை வசதிகளைக் கூட மாநகராட்சி செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட தனியார் நிலங்களை லே-அவுட் செய்வதற்கு முன் அனுமதி பெற வேண்டுமென்று கட்டாயமாக அறிவிக்க அரசு முயலுமா ? மேலும், தனியார் லே-அவுட் போடும்பொழுது மாநகராட்சி அதிகாரிகளுக்கு அதுபற்றித் தெரிந்திருந்தும் வேண்டுமென்றே விட்டு விடுவது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியைப் பொறுத்த அளவில் ஏறக்குறைய பல்வேறு இடங்களில் இதுபோன்ற பிரைவேட் லே-அவுட் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு அடிப்படை வசதிகளை மாநகராட்சி செய்ய முடியாத நிலைமை இருப்பதற்குக் காரணம், அபிவிருத்திக் கட்டணத்தைக் கட்டுவதில்லை.

(முற்பகல் 9—20.)

ஆகவே வீட்டுமனைகளாக விற்றபின்னர், அதிலே வீடு கட்டிய பின்னால், வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அதற்கு இம்ப்ருவ்மென்ட் டாக்ஸ், பெட்டர்மென்ட் டாக்ஸ் அவர்கள் கட்டினால்தான் அதற்கு ஆகும் செலவில் 25 சதவிகிதம் மாநகராட்சிக்கு கட்டினால்தான் அடிப்படை வசதி

களைச் செய்து கொடுக்க முடியும். சென்னையிலே இப்படி ஏறத்தாழ 400 பிரைவேட் ஸ்டிரீட்ஸ் தனியார் தெருக்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் நாம் பராமரிக்க முடியாமல், சீரமைக்க முடியாமல் இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. இதனைக் கருத்திலே கொண்டுதான் இதுபோன்ற சட்ட திருத்தத்தை நாம் கொண்டு வருகிறோம்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது 1908 ஆம் ஆண்டு சட்டம் இருக்கின்றது என்று சொன்னார்கள். இப்படி 400 தெருக்கள் இருப்பதும் தெரியும் என்று சொல்லுகிறார்கள். இந்த சட்டத்தை உபயோகப்படுத்தி இதுவரையில் எத்தனை கேஸ்கள் போடப்பட்டுள்ளன. அப்படி நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்தால், வருங்காலத்தில் ஒரு குழு அமைத்து அவைகளை நேரடியாக வசூல் செய்து முறையான நடவடிக்கையை எடுப்பார்களா ? ஒரு தெருவிலே 10 வீட்டுக்காரர்கள் இந்த பெட்டர்மென்ட் டாக்ஸ் கொடுப்பார்கள். பாக்கி உள்ளவர்கள் கொடுக்கமாட்டார்கள். பாக்கி பேர்கள் கொடுக்காததால் அந்த வசதிகளை செய்வதற்கு கஷ்டமான நிலை மாநகராட்சிக்கு ஏற்படுகிறது என்பதும் அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இப்படிப்பட்ட நிலைமையில், இப்படி கொடுக்காதவர்கள் மீது நேரடி நடவடிக்கை எடுப்பதற்கு நம்முடைய மாநகராட்சிச் சட்டத்தில் இடம் இல்லை. ஆகவே அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்பதோடு, இதுவரையில் எத்தனை கேஸ்கள் போடப்பட்டன என்பதையும் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, எத்தனை வழக்குகள் போடப்பட்டன என்கின்ற குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. மூலக்கேள்வியில் அப்படிப்பட்ட கேள்வி இல்லை. இருக்கக் கூடிய தனியார் லே அவுட்டுகளை விற்பதைத் தவிர்க்கும் பொருட்டுதான் பல்வேறு நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். தனியார் விற்கின்ற லே அவுட்டுகளைத் தவிர்ப்பதற்காகத்தான் இந்த சட்டமன்றத்தின் மூலமாக பொதுமக்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட மனைகளை வாங்குகின்ற நேரத்தில் அந்த மனைகள் எந்த இடத்தில் இருக்கின்றதோ அங்கே உள்ள மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி போன்றவைகளில், இந்த மனைகள் எல்லாம் ' அப்ரூவ்டு லே அவுட்டுகள்தானா, இல்லையா ' என்று தெரிந்து அதற்குப் பின்னர் தான் வாங்க வேண்டும்.

ஆனால் வீடு கட்டுவதற்கு மனைகள் கிடைத்தால் போதும் என்ற நிலை நம்மிடத்திலே பலரிடம் இருக்கின்றது. வீட்டு மனை கிடைத்ததும் கற்பனையிலே மிதந்து விடுகிறார்கள், எங்கே பெட்ரூம் கட்டலாம், எங்கே கிச்சன் கட்டலாம், மேல் மாடி எங்கே கட்டலாம் நிலவை எங்கிருந்து பார்க்கலாம் என்று பல்வேறு எண்ணம் எல்லாம் ஏற்படுகின்றது. ஆகவே கவனத்தோடு இந்த வீட்டுமனைகளை வாங்கினால் தான் இந்த நிலைமைகளைத் தவிர்க்க முடியும்.





## ஈரோடு நகரை அழகு படுத்தும் திட்டம்.

*வினா எண். 651—திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பெரியார் மாவட்டம், ஈரோடு நகரிலுள்ள சாலைகளை அகலப்படுத்தி ஈரோடு நகரை அழகுபடுத்தும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கையாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஈரோடு நகராட்சி தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரத்திலே மணிக்கூண்டு பகுதியிலே தண்ணீர் தேங்கி அடிக்கடி அங்கே சாலைகள் பழுதடைந்து விடுகின்றது. அங்கே போக்கு வரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே அந்த மணிக்கூண்டு பகுதியில் போக்குவரத்து இடைஞ்சலாக இருந்து தொல்லையாக இருக்கின்றது. எனவே குறிப்பிட்ட அந்தப் பகுதியில் உள்ள சாலையை கான்கிரீட் சாலையாக மாற்ற ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலை ஈரோட்டில் இருப்பது எனக்குத் தெரியும். அவைகளைக் களைய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது. அங்கே இருக்கக் கூடிய பாலம் தரைமட்டம் பாலம் தான். அதை மேல்மட்டப்பாலமாக ஆக்கினால்தான் அங்கே தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்க முடியும். ஈரோட்டைப் பொருத்த வரையில் இந்த ஆண்டிலே மட்டும் 9 சாலைகளை சீர்திருத்தி செம்மைப்படுத்த ஏறத்தாழ 1 கோடி ரூபாயில் நகராட்சியினால் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. பல்வேறு இடங்களில்

திட்டுக்கள் , பூங்காக்கள், நீர் ஊற்றுகள் போன்றவைகளை அமைக்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஈரோடு பெரியார் மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்ற காரணத்தினால் பல்வேறு பணிகளைத் துரிதமாகச் செய்ய வேண்டும் என்பதற்காக இந்த நகராட்சி அதற்காக திட்டங் களை வகுத்து செயல்பட்டுக் கொண்டு வருகின்றது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஈரோடு பெரியார் மாவட்டத்தின் தலைநகராக இருப்பதால் அங்கே பல் வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் அடிக்கடி வந்துபோவதால், அங்கே போக்குவரத்து நெரிசல் இருந்து கொண்டிருக்கிறது. மேலும் அங்கு தற்போது பிரதான சாலைகளில் மட்டும்தான் சோடியம் வேப்பர் விளக்குகள் போடப்பட்டுள்ளன. நகரத்திலே உள்ள எல்லா தெருக்களிலும் இந்த சோடியம் வேப்பர் விளக்கு களை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சோடியம் வேப்பர் ஆவி விளக்குகளை நாம் போடு வதினுடைய நோக்கமே., சாலைப் போக்குவரத்து எங்கு அதிக மாக இருக்கிறதோ அந்தப் பகுதியிலே மட்டும் விளக்குகளை போடவேண்டுமென்று ஒரு குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் எந்தவிதமான விபத்துக்களும் ஏற்படாமல் தடுப்பதற்காகவும், மழைக் காலங்களில் தெருக்கள் சுத்தமாக மழை பெய்தாலும் கூட வாகனங்கள் போக்குவரத்திற்கு இடைஞ்சல்கள் இல்லாமல் வருகின்ற காரணத்தினால்தான், சோடியம் ஆவி விளக்குகளை அதிகமாக உபயோகிக்க வேண்டு மென்ற ஒரு குறிப்பு சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, எல்லா சாலைகளுக்கும், சோடியம் ஆவி விளக்குகளைப் போடு வது என்பது இயலாத காரியம். ஒரு சோடியம் ஆவி விளக்கின் விலை ஏறக்குறைய 4,500-லிருந்து 5,000 ரூபாய் வரையில் விலையாகிறது. ஆகவே எல்லாஇடத்திலும் அந்த விளக்குகளைப் போடுவது என்று சொன்னால் நிதிநிலைமை சரியாக இருக்காது.

பாலக்கரையிலிருந்து நல்லாம்பட்டி செல்ல புதிய சாலை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 652—திரு.தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) பெருந்துறை ஒன்றியம் பாலக்கரையிலிருந்து நல்லாம் பட்டி செல்ல புதிய ரோடு போட ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டும் வேலை நடைபெறாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் என்ன ?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : சாலை அமைக்கப்படவுள்ள இடத்தில் ஒரு லட்சம் மதிப்பீட்டில் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாய்க்காலில் தற்போது தண்ணீர் ஓடிக்கொண் டுள்ளதால் சாலை அமைக்கப்படவுள்ள பகுதிகளில் கசிவு நீர் குட்டைபோல் தேங்கியுள்ளது. எல். பி. பி. வாய்க்காலில் ஏப்ரல் 1982-ல் தண்ணீர் நிறுத்தப்பட்டவுடன் மேற்படி வேலை துவங்கி முடிக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாதை அமைப்பதற்காக, முன்னாள் பெரி யார் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், பொதுப்பணித் துறை பொறியாளர் அவர்களும், நெடுஞ்சாலைப் பொறியாளர் அவர்களும், அன்றையதினம் இருந்த ஊராட்சி ஆணையாளர் அவர்களும், அந்த இடத்திற்கு நேரிலே சென்று அங்கே உள்ள மக்களைப் பார்த்த பின்புதான் நிதி ஒதுக்கப்பட்டது. இன்றையதினம் வாய்க்காலிலே தண்ணீர் இல்லை. இது ஏதோ காரணத்தால் காலம் கடத்திவிட்டு, சபைக்கு வேண்டுமென்ற அளவிற்கு இந்த பதிலை அதிகாரிகள் தயாரித்துக் கொடுத்திருக் கிறார்கள். ஆகவே உடனடியாக பாதை அமைப்பதற்காக ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும், அதே நேரத்தில் ஆட்சித் தலைவர் அவர்கள் இடத்திலே எடுத்துச் சொன்னதற்குப் பின்னாலே, கடந்த 25—5—1981-லே 1 இலட்சம் ரூபாய் இதற் காக ஒதுக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே, எல்.பி.பி. கால் வாயிலே தண்ணீர் விடப்பட்ட காரணத்தால், அந்த வேலையை துவங்க முடியவில்லை. ஆனால் இன்னும் ஒருசில நாட்களில் தண்ணீர் விடுவது நிறுத்தப்படும் என்று நான் நினைக்கிறேன். அப்படி நிறுத்தப்பட்டால் உடனடியாக வேலை துவங்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்லாம்பட்டியிலிருந்து பாலக்கரைக்கும், பாலக் கரையிலிருந்து நல்லாம்பட்டிக்கும், இந்த ரோடு அமைக்கப் படாமல் ஏறக்குறைய 2 கிலோ மீட்டர் தூரத்தை, 10, 15 கிலோ மீட்டர் சுற்றிவந்துதான் அந்த ஊருக்குச் செல்லவேண்டிய ஒரு அவல நிலை இருக்கின்ற காரணத்தால் உடனடியாக அங்கிருக்கும் அதிகாரிகளை துரிதப்படுத்தி, அந்த வேலையை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,

## தனியார்களால் நடத்தப்பெறும் வாரம் மற்றும் தினசரி சந்தைகள்.

* வினா எண். 653.—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தற்சமயம் தமிழகத்தில் தனியார்கள் நடத்திவரும் வாரச்சந்தை, தினசரி சந்தைகள் எவ்வளவு ?

(ஆ) இதை உள்ளாட்சித்துறையே ஏலத்தில் விடுவதற் கான செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நகராட்சிப் பகுதிகளில் தனியார்களால் நடத்தப்பட்டு வரும் வாரச் சந்தை கள் 12, தினசரி சந்தைகள் 43. பேரூராட்சிப் பகுதிகளில் தனியார்களால் நடத்தப்பட்டுவரும் வாரச் சந்தைகள் 28, தினசரி சந்தைகள் 14. ஊராட்சி பகுதிகளில் தனியார்களால் நடத்தப்பட்டு வரும் வாரச் சந்தைகள் 107. மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் தனியார் நடத்திவரும் வார மற்றும் தினசரி சந்தைகள் எதுவுமில்லை.

(ஆ) தனியார்களால் நடத்தப்பெறும் தினசரி மற்றும் வாரச் சந்தைகளுக்கு உள்ளாட்சி நிறுவனங்களால் உரிமைக் கட்டணம் பெற்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே அவை கள் உள்ளாட்சிகளுக்கு சொந்தமானதாகாது. இருப்பினும் இவற்றை உள்ளாட்சி நிறுவனங்களே ஏற்று நடத்த வகை செய்யும் வகையில் தகுந்த சட்டத் திருத்தங்கள் செய்ய நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. சேலம். மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, பேரூராட்சியில் நடைபெறக்கூடிய தனியார் நடத்தும் வார மற்றும் தினசரி சந்தைகளுக்கு, வசூலிக்கப்படும் லைசென்ஸ் கட்டணம் எவ்வளவு ? எந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. அந்த தொகையை தற்போதைய நிலவரத் திற்கேற்ப திருத்தி அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ? அதே நேரத்தில் நகராட்சி நடத்தக்கூடிய தினசரி மற்றும் வாரச் சந்தைகளை பாதிக்கக்கூடிய அளவிற்கு வருவாயை, அந்தத் தனி யார்கள் போட்டியாக வருவதை அரசு உடனடியாகத் தடுக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மன்றங்களே ஏற்று நடத்துவது என்கின்ற முடிவினை மேற் கொண்டு இதிருக்கிறோம். அதற்குரிய சட்டத்திருத்தம், இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கொண்டுவர இருக்கிறோம். ஆகவே, அந்தச் சந்தைகளை எடுப்பதன் மூலமாக உள்ளாட்சி மன்றங்களுக்கான வருமானத்தை அதிகரிக்க வேண்டுமென்பதற் காக ஏறத்தாழ சுமார் 10 கோடி ரூபாய் அதன் மூலமாக வருமானம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9-30)

திரு. ஏ. தங்கராசு : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ளாட்சி துறையின் எல்லையில் வாரச்சந்தைகள் 107 என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உள் ளாட்சி நிறுவனங்களுக்கு வருவாயை அதிகரிக்கின்ற வகையில் தனியார் நடத்தும் வார சந்தையை உடனடியாக 'லாண்ட் அக்குசிஷன்' செய்து சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக் களே வாரச் சந்தை நடத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, சட்டத் திருத்தம் இந்தத் தொடர் கூட்டத்திலேயே கொண்டு வரப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவ ரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும் போது தனியார் நடத்தும் வாரச்சந்தை, தினசரி சந்தைகள் ஒழிக்கப்படும் என்று சொன்னார்கள். இந்த மாநிலத்தில் பல் வேறு இடங்களில் . ஆண்டுக்கு ஒருமுறை தனிப்பட்டவர்கள் மாட்டுச் சந்தை நடத்தி ஏராளமாக இலாபம் பெறுகிறார்கள். அந்த மாட்டுச் சந்தைகளையும் ஏற்று நடத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற சந்தைகள் நாம் பிறப்பிக்கின்ற சட்டத்தின் கட்டுக்குள் அடங்காவிட்டால் அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## சென்னை நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் சாலையில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு.

*வினா எண். 654—திரு. எஸ். டி. உகம் சந்த் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சென்னை நகரம், நேதாஜீ சுபாஸ் சந்திரபோஸ் ரோட்டில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களால் 1959-ஆம் ஆண்டு திறக்கப்பட்ட குடிநீர்த் தொட்டியை மறைக்கின்ற அள வில் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அதை அப்புறப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : குடிநீர்த் தொட்டி அருகே உள்ள இடம் ஆக்கிரமிப்பு செய்யப் பட்டுள்ளது. ஆக்ரமிப்பாளர் அதை நீக்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக நிரந்தர தடையை நீதிமன்றத்தில் பெற்றுள்ளார். தற்சமயம் நீதி விசாரணையிலுள்ளது.

திரு. எஸ். டி. உகம் சந்த் : தலைவரவர்களே, போக்கு வரத்து நெரிசலான இருக்கிற அந்தப் பகுதியில் இதைப் போன்ற ஆக்ரமிப்பு அதிகரித்து வருகின்றது. ஆரம்பக் காலத்தில் ஏன் மாநகராட்சி அதிகாரிகள் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வில்லை ? அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து இருக்கின்றார்கள் என்று பரவலாகப் பேசப்படுகின்றது. அப்படி உடந்தையாக இருக்கின்றவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, ஆக்ரமிப்பு அகற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஆக்கிரமிப்புக்கு அதிகாரிகள் உடந்தையாக இருந்தால் அவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, சுபாஷ் சந்திரபோஸ் ரோட்டில் நடைபாதையில் ஏராளமான தனிப்பட்டவர்கள் கடை களை வைத்து ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். 1977-78-ல் இதே மன்றத்தில் அந்தக் கடைகளை அகற்ற வேண்டுமென்று சொல்லி அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு, அகற்றப்பட்டன. மீண்டும் அங்கே கடைகளை வைத்து ஆக்கிரமிப்பு செய்திருக் கிறார்கள். அது போக்குவரத்திற்கு பெருத்த இடையூராக இருக்கிறது. மறுபடியும் ஆக்கிரமிப்புக்கு யார் அனுமதி கொடுத் தார்கள் ? ஆனால் அந்தக் கடைகளுக்கு இப்போது பணம் வசூல் செய்யப்படுகின்றது. மாநகராட்சிக்கு அந்தப் பணம் வரவேண்டு மென்றால், மாநகராட்சியே அந்தக் கடைகளை அனுமதித்து, பணம் வசூல் செய்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது என். எஸ். சி. போஸ் ரோட்டில் இருக்கக்கூடிய நடைபாதை கடைகள் பற்றியது அதைப் போல சைனா பஜார், ஈவனிங் பஜார்—இப்படி பல்வேறு இடங்களில் நடைபாதை கடைகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே பல்வேறு சங்கங்கள் அத்தகைய இடங்களில் கடை கள் வைக்க அனுமதி கேட்டார்கள். அதிலே திராவிட முன் னேற்றக் கழக சங்கமும் ஒன்று. இந்திய கம்யூனிஸ்ட்கட்சி சங்கம், அண்ணா தி. மு. க. சங்கம், மற்றும் பல்வேறு சங்கங்கள் சேர்ந்து கோரிக்கை வைத்ததால் அங்கே கடைகள் நடத்த அனு மதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, பொதுவாக அரசினுடைய இடத்திலே கடை வைத்திருக்கிறவர்கள் அல்லது ஆக்கிரமிப்பு செய்திருக்கிறவர்கள், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்கிவிடுகிறார் கள். இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் உயர்நீதிமன்றத்திற்கு அல்லது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றால் பேசிஸ் இல்லாமல் கூட ஸ்டே கொடுத்து விடுகிறார்கள். இது சரியா ? அரசாங்கம் இதற்கு ஒரு முடிவு செய்து, அரசுக்குச் சொந்தமான அல்லது புறம்போக்கு நிலத்தில் தகாத முறையில் ஆக்கிரமிப்புச் செய்வ தைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஆக்கிரமிப்பு செய்வது சரியா, முறையா என்ற கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். ஏனென்றால், அவர்கள் ஆட்சிக் காலத்தில் கூட இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அவர்கள் நீதிமன்றத்தில் தடை பெற்றிருக்கிறார்கள். அதன்பிறகு நீக்கப்பட்டார்கள் அல்லது தொடர்ந்து இருக்கிறார்கள் என்ற வரலாறு இருக்கிறது. ஆக்கிரமிப்பு என்பது எந்த ஆட்சிக் காலத்திலும் இருந்து வரு கிறது. ஆனால் ஆக்கிரமிப்புகளை தவிர்க்க நாம் நடவடிக்கை எடுக்கிறோம். நீதிமன்றத்தில் தடை கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே, இதுபற்றி நீதிமன்றம்தான் தீர்ப்பு கொடுக்க வேண்டும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நடை பாதைக் கடைகள் அனுமதிக்கப்பட்டு இருந்தும், ஒவ்வொரு நாளும் போலீஸ் தொந்தரவு இருப்பது உடனடியாக நிறுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நாம் அனுமதித்த கடைகள் தவிர மற்றக் கடைகள் வருமானால், போலீஸ் தொந்தரவு கண்டிப்பாக இருக்கும்.

## சென்னை கீழ்ப்பாக்கம் மனநிலை மருத்துவமனைக் கட்டிடங்கள்,

*வினா எண் 655—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) சென்னை கீழ்ப்பாக்கம் மனநிலை மருத்துவமனை கட்டிடங்கள சுகாதாரக் கேடாகவும் பழுதடைந்துள்ள நிலைமையிலும் இருந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) கட்டிடத்தை புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) இந்த கட்டிடங்கள் மிகவும் பழைய கட்டிடங்கள்.

(ஆ) நிதி நிலைமைக்கு ஏற்பச் சில கட்டிடங்கள் மட்டும் பழுதுபார்க்கப்பட்டன.

**திரு. செ. சிவசாமி :** தலைவர் அவர்களே, கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்துவ மனைக் கட்டிடம் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டிடமாகும். அதை நான் நேரடியாகப் பார்த்து இருக்கிறேன். கைகள் (ரீப்பர் கட்டைகள்) தொங்கிகொண்டு இருக்கின்றன. ஆங்காங்கு மண் உதிர்கிறது. லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள அப்பாரடஸ் அங்கே வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மீது மண் விழுந்து பழுதடைந்து விடுமோ என்கிற ஒரு அச்சம் இருக்கிறது. ஆகவே, அதற்குப் புதிய கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, புதிய கட்டிடம் கட்டுவதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும், அண்மையிலே பெண்களுக்காக ஒரு தனி வார்டு (விமன்ஸ் வார்டு) 6 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் மிக விரைவாக வேலைகள் ஆரம்பிப்பதற்கான வகையில நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டுதோறும் அந்தக் கட்டிடம் பழுதுபார்க்கப்பட்டு வருகிறது. 1978–79ல் 1 லட்சம் இதற்காகச் செலவழிக்கப்பட்டுள்ளது. 1979–80-ல் ரூ. 2 லட்சத்து 47 ஆயிரம் செலவழிக்கப்பட்டுள்ளது. 1980–81-ல் ரூ. 2 லட்சத்து 68 ஆயிரம் செலவழிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு (1981–82) மார்ச்சு மாதம் 31-ஆம் தேதி முடிய நிதியாண்டு இருந்தாலும், ஒரு 10 மாத காலத்தில் ரூ. 1 லட்சத்து 59 ஆயிரம் பழுதுபார்ப்பதற்காக செலவழிக்கப்பட்டுள்ளது. ஆகவே தொடர்ந்து பழுது பார்க்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி :** தலைவர் அவர்களே, இன்றைக்கு அங்கே இருக்கும் கட்டிட அமைப்பு விலையுயர்ந்த அந்த மெஷின்கள் கெட்டுப்போகும் அளவிற்கு இருப்பதால், லட்சக் கணக்கான மெஷின்களைக் காப்பாற்றுவதற்காகவாவது அந்தக் கட்டிடத்தை சீர்படுத்த உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** நிச்சயமாகச் செய்யப்படும்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லட்சக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்பட்டதாக சொன்னார்கள். அப்படி ஒதுக்



கப்பட்ட பணம் அந்த வேலைகளுக்காக முழுமையாக செலவழிக்கப்பட்டு இருக்கிறதா? அந்த வேலைகளைக் கான்ட்ராக்ட் முறையில் கொடுத்து இருப்பதால் தாமதப் படுகிறதா ? அதை விரைவில் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, அங்கே பழுதுபார்ப்பதற்காக 1 லட்ச ரூபாய், 2 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்ட தொகை என்று நான் சொல்லவில்லை. அதற்காக செலவழிக்கப்பட்டது என்று தான் சொன்னேன். அது ஒரு பெரிய மருத்துவ மனை. அதற்கு ஒரு லட்ச ரூபாய். இரண்டு லட்ச ரூபாய் என்று ஒதுக்கினால் கூட அது போதாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, நமக்கு இருக்கும் நிதிநிலைமைகளுக்கு ஏற்ப அந்த வேலைகளைச் செய்யவேண்டி இருக்கிறது. இந்த ஆண்டு 6 லட்ச ரூபாய் செலவில் ஒரு கட்டிடம் பெண்களுக்கான வார்ட் அமைப்பதற்காக கட்ட முயற்சி எடுத்து இருக்கிறோம். அதற்காக நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். அது முழுமையாகச் செலவிடப்படும். ஜாஸ்தியாகத் தேவைப்பட்டாலும் அதைப் பற்றி யோசிக்கலாம்.

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் உள்ள ஊழியர்களுக்கு குடியிருப்பு கட்டிக்கொடுக்க திட்டம் துவங்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

**வாணியம்பாடியில் கழிவுநீரை அப்புறப்படுத்தும் திட்டம்.**

*வினா எண் 656—**திரு. கே. ஆர். சுந்தரம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தோல்மண்டி உரிமையாளர்கள் பாரத் லெதர் கார்ப்பரேஷன் நிதி உதவியுடன் கழிவு நீரை அப்புறப்படுத்தும் திட்டத்திற்கு அரசிடம் நிதி உதவி கோரினார்களா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நட

[1982 மார்ச் 25

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இதுபற்றி புது டெல்லியுள்ள 'பாரத் லெதர் கார்ப்பரேஷனுடன்'' தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்திலே உள்ள இந்த தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் பெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது. என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஏழு நகர மன்றங்களுக்கு பாலாற்றில் இருந்து தண்ணீர் வழங்கப்படுகின்றன. இந்தக் கழிவுத் தண்ணீர் இன்னும் சில ஆண்டுகளில் இந்த பாலாற்றில் கலந்து வந்தால், 5 ஆண்டு காலத்திற்குள் அந்த நீர் குடிப்பதற்கே வாயக்கற்றதாக ஆகும் என்று சொல்லப்படுவது அமைச்சருக்குத் தெரியுமா? அந்த ஆற்றின் மூலம் பயிராகும் நிலங்களும் இதனால் பாதிக்கப்படும் என்பது அமைச்சருக்குத் தெரியுமா? மேலும், கிட்டத்தட்ட 100 கிராமங்கள் இதனால் குடிநீர் வசதி பெறுவதால் அவையும் பாதிக்கப்படும் என்பதை அரசு அறியுமா? இதைத் தடுக்க வழிமுறைகள் என்ன? இந்தப் பாலாற்று நீரின் மூலம்—பொல்யூஷன் காற்றாலும், குடிநீராலும் ஏற்படுவதால், அதிக அளவில் நோய் பரவுவதால், அதைத் தடுக்க விரைவாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

(முற்பகல் 9-40).

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரிவென்ஷன் அன்ட் கன்ட்ரோல் ஆப் பொல்யூஷன் ஆக்ட் 1974 (சென்டிரல் ஆக்ட் 6 ஆப் 1974) என்ற அந்த சட்டத்தின் கீழ் இப்போது புதிதாக ஒரு ஸ்டேட்சுரி போர்டு அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஸ்டேச்சுரி போர்டு அமைத்து தமிழ்நாடு பிரவன்ஷன் அன்ட் கன்ட்ரோல் ஆப் வாட்டர் பொல்யூஷன் போர்டு என்று ஜி.ஓ.,எம். எஸ்., நெம்பர் 340. ஹெல்த், 19—2—1982 ஆம் தேதி உத்தரவு போட்டி ருக்கிறோம். அந்த உத்தரவின்படி இப்போது புதிதாக அமைக்கப்பட்ட இந்த போர்டுதான் மிகத் தீவிரமாக இப்படிப் பட்ட வாட்டர் டிரிட் செய்யாமல் சுத்தப்படுத்தாமல் ஆற்றிற் குள் விடக்கூடாது என்று நடவடிக்கையை எடுத்துக் கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படி பல நகரங்களிலேயிருந்தும் தோல் வொர்க்ஷாப் வைத் திருப்பவர்கள் ஆற்றிலே அந்த அசுத்த நீரை விடுவதை தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அமைச்சர் அவர்கள்



1982 மார்ச் 25]

சொன்னார்கள். அது குறித்து மத்திய அரசுக்கும் சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாக சொன்னார்கள். மத்திய சர்க்காரிலி ருந்து எவ்வளவு பணம் இதற்கென கொடுக்கிறார்கள்? மானிய மாக கொடுக்கிறார்களா? கடனாக கொடுக்கிறார்களா என் பதை அறிவிப்பதோடு மாநில சர்க்காரும் இதிலே ஏதாவது சேர்த்து செலுத்தும் வகையில் முடிவு எடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : வாணியம்பாடி டேனர்ஸ்அசோசியேஷன்—தோல் வியாபாரத்தில் ஈடுபடக் கூடியவர்கள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து அசோசியே ஷன் வைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்திலிருந்து நமக்கு தாக்கீது அனுப்பி, அந்த ரிப்போர்ட்டின்படி, அந்த பிராஜக்டுக்கு ரிக்கரிங் & நான் ரெக்கரிங் எக்ஸ் பென்டிசர் அதாவது மூலக் கேள்வியிலே எழுப்பப்பட்டிருக்கிற பாரத் லெதர் கார்ப்பரேஷன் பிராஜக்ட்—அந்தப் ப்ராஜக் கட்டுக்காக ரெக்கரிங் எக்ஸ் பெண்டிச்சருக்காக 3.60 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்றும், நான்-ரெக்கரிங் எக்பென்டிசர் 81·2 லட்சம் செலவு ஆகும் என்றும் இருக்கிறது. இவ்வளவு பெரிய தொகை செலவு ஆகும் என்று சொல்லி யிருக்கிறார்கள். அந்தக் பாரத் லெதர் கார்ப்பரேஷன் தமிழக சர்க்கார், அதிலே பங்கு கொள்வதாக இருந்தால், கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் அந்தக் சங்கத்தின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசிக் கொண்டிருக் கிறோம். சுமூகமான முடிவு ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### காசநோய் பரவாமல் தடுக்கும் திட்டம்.

*வினா எண் 657—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் காசநோய் அதிக அளவில் பரவாமல் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : சென்னையிலும் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் காசநோய் தடுப்பு இயக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளிலும் காசநோயைக் கண்டு அறியவும் சிகிச்சை மூலம் குணப்படுத்தவும் இலவச வசதிகள் செய்யப் பட்டுள்ளன. அவர்களுக்கு அருகாமையிலுள்ள மருத்துவ மனையிலேயே இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் காச நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள். அதில் எத்தனை பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. பி.சி.ஜி. வேக்சினேஷன்—தடுப்பு ஊசியை அவர்களுக்குப் போடுகிறார்களா? எத்தனை பேர்களுக்குப் போடுகிறார்கள்? தமிழக அரசு மருத்துவமனைகளில் காசநோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற படுக்கைகளின் எண்ணிக்கை போதுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 கேள்விகளை ஒன்றாகச் இணைத்துக் கேட்டிருக்கிறார்கள்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 3 அல்ல, 4 கேள்விகளைச் சேர்த்துக் கேட்டிருக்கிறார். சுருக்கமாகவே பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே' தமிழகத்தில் காசநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென்று அரசு மருத்துவ மனைகளில் 3,651 படுக்கைகள் இருக்கின்றன. ஆனால் இந்தப் படுக்கைகளின் எண்ணிக்கை அகில இந்திய ரீதியாக போதாது என்ற கருத்து இருக்கிறது. இன்றைய தினம்கூட பத்திரிக்கையிலே மத்திய அமைச்சகத்தில் இருக்கக்கூடிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளலாம். அடுத்தபடியாக எத்தனை நோயாளிகள் என்று கேட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் கிட்டத்தட்ட 10 லட்சம் பேர்கள், சரியாக சொல்லவேண்டுமானால் 9.9 லட்சம் பேர்கள் காசநோயாளிகளாக இருக்கிறார்கள். பி.சி.ஜி தடுப்பு ஊசி எத்தனை பேருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். தமிழகத்தில் 1,68 லட்சம் பேருக்கு பி.சி.ஜி. வேக்சினேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களுக்கு இன்னொரு முறை கேள்வி கேட்க அனுமதி கிடையாது. மூலக்கேள்வி கேட்ட உறுப்பினர்களுக்கு 2 துணைக் கேள்விகள் கேட்க அனுமதி. நீங்கள் 4 கேள்விகளை ஒன்றாகக் கேட்டிருக்கிறீர்கள்.

**திரு. எம். சின்னசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே. காசநோயானது ஆரம்பத்திலே குழந்தைகளுக்குத்தான் அதிகமாக வருகிறது. ஆகவேதான் அதைத் தடுக்கிற வகையில் ஏதாவது கிராஷ் புரோக்கிராம் எடுக்க அரசு முடிவு எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கு பிரைமரி காம்பௌக்ஸ் என்று காசநோய் வருவதற்கு ஒரு ஸ்டேஜ் முன்னதாக வரக்கூடிய நோயானது அதிக அளவில், பரவலாக வருகிறது.

ஆகவேதான் நாம் மாண்டோ டெஸ்ட் செய்து விட்டு பலருக்கு பி. சி. ஜி. வேக்சினேஷன் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அப்படிக் கொடுப்பதன் மூலமாக அவர்களுக்கு வியாதி வராமல் தடுக்க நல்ல வாய்ப்பாக இருக்கின்றது.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரில ராஜாஜி சேனடோரியம் அழியும் தருவாயில் இருக்கின்றது. அதைப் புதுப்பிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே அந்த மருத்துவமனையினை நான் கூட சென்று பார்த்திருக்கிறேன். அது இன்னும் கூட விஸ்தரிக்கப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை கருத்தில் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காச நோய்க் கிருமியினைக் கட்டுப்படுத்திய டாக்டர் ராபர்ட் கோச் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு இந்த ஆண்டு முழுவதும் காச நோய் ஆண்டாகக் கருதப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, டாக்டர் ராபர்ட் கோச் அவர்கள் பிறந்து 100 ஆண்டுகள ஆகின்றன. எனவே அவருடைய நூற்றாண்டு விழாவினை அகில இந்திய ரீதியிலே கூட கொண்டாட இருக்கிறோம். ஆகவே இந்த வாய்ப்பினை நாம் அடிப்படையாக வைத்துக் கொண்டு தமிழகத்தில் காச நோய்க்கு இன்னும் தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள நிச்சயமாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். காச நோய்க் கழகம் அதிலே மிகத் தீவிரமாக கவனம் செலுத்தி வருகின்றது.

**திரு. சு. பாலன்:** தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு முன்னால் நகர சபை ஒவ்வொரு குடிசைப் பகுதிகளுக்கும் மற்ற பகுதிகளுக்கும் சென்று நடமாடும் காச நோய்ப் பிரிவின் மூலம் அந்த நோய் இருக்கின்றதா என்று கண்டுபிடித்து அதன்படி எக்ஸ்ரே படம் எல்லாம் எடுத்தார்கள். அந்த மெஷின் கூட

நகரசபையிலே இன்னும் இருக்கின்றது. எனவே இந்த நூற்றாண்டு விழாவினை ஒட்டி மீண்டும் அந்தத் திட்டத்தை அமல்படுத்தி யார் யாருக்கு சாச நோய் இருக்கின்றது என்று எக்ஸ்ரே படம் மூலம் கண்டுபிடிப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, திரு. பாலன் அவர்களுடைய யோசனை மிக நல்ல யோசனைதான். தீவிரமாக அதற்காக ஸ்கிரீனிங் அந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் வந்திருந்தார்கள்— இன்டென்சிவ் ஸ்கிரீனிங், மாஸ் ஸ்கிரீனிங் என்ற வகையிலே மக்கள் நல்வாழ்வுத் துறை இலாக்காவும், மாநகராட்சியும் இணைந்து பணிகளை மேற் கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குடவாசல் அரசு மருத்துவமனை.

* வினா எண். 658 திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சை மாவட்டம் குடவாசல் அரசு மருத்துவமனையை வட்ட தலைமை மருத்துவ மனையாக மாற்றும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பிலுள்ளதா ?

(ஆ) ஆம், எனில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) மற்றும் (ஆ) வட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் இருக்க வேண்டிய வசதிகள் குறித்து வரையறைகள் ஏதும் இல்லை. தேவைக்கேற்றவாறு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தில் ஒரு துணை வட்டமாக இருந்த குடவாசல், 1981-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் முதல் வட்டமாக உயர்த்தப்பட்டதால் அங்கு செயல்படும் அரசினர் மருத்துவமனை ஒரு வட்ட தலைமையிட மருத்துவமனையாக அழைக்கப்படுகிறது.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** தலைவர் அவர்களே, குடவாசல் 1981 ஆம் ஆண்டு முதல் தனி வட்டமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. அங்கே இருக்கின்ற மருத்துவமனை கட்டிட வசதி இல்லாமல் இருக்கின்றது. அங்கே உள்நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறக்கூட வசதிகள் இல்லை. மேலும் குடவாசலிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில் எந்த விதமான வசதியான மருத்துவமனையும் கிடையாது. ஆகவே அதனை





ஒரு வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி உள்நோயாளிகள் தங்கி சிகிச்சைப் பெற ஏற்பாடுகள் செய்து கட்டிட வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர், எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு நான் பதில் அளிக்கின்றபோதே அழைக்கப்படுகின்றது என்று சொல்லி இருக்கிறேன். எனவே இனிமேல் தான் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம், ஏற்கனவே 16 படுக்கைகள் ... க்கக்கூடிய மருத்துவமனையாக இருக்கின்றது. 1980-81 ஆம் ஆண்டு 2,006 பேர் உள்நோயாளிகளாக அதாவது இன்பேஷன்ட்டாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று இருக்கிறார்கள். ஆனால் புற நோயாளி என்ற வகையிலே அவுட் பேஷன்ட் என்ற வகையிலே 40,333 பேர் அதாவது சராசரியாக ஒரு நாளை நாளைக்கு 110 பேர் வந்திருக்கிறார்கள். அந்த வகையிலே மருத்துவமனை இயங்குகின்றது. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று அந்த மருத்துவமனையினை தாலுக்கா மருத்துவமனை என்று அழைக்கக்கூடிய தகுதியினை அது பெறுவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கருத்து நிச்சயமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்தாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** அமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்கள் சொல்லுவதிலிருந்து சுற்று வட்டாரத்தில் எந்த விதமான மருத்துவமனையும் இல்லை என்று தெரிகிறது. ஏராளமான மக்கள் வந்து சிகிச்சை பெறக்கூடிய வகையில் அந்த மருத்துவமனை அமைந்திருப்பதால்—இப்போது அங்கே இரண்டு மருத்துவர்கள் தான் இருக்கிறார்கள் அதிகமாக டாக்டர்களை நியமித்து கட்டட வசதி செய்து கொடுத்து, அங்கே தனியாக எக்ஸ்ரே பிரிவும் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்ய முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே;** இப்போது அஸிஸ்டென்ட் சர்ஜன்ஸ் இரண்டு பேர்களும், இளநிலை மருத்துவர் ஒருவரும், மருந்தாளர் ஒருவர்; மகப்பேறு உதவியாளர் என்று ஸ்டாப் பாட்டேர்ன் கொடுத்திருக்கிறார்கள், உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தைப் பொறுத்து அதை 50 படுக்கைகள் கொண்ட ஒரு தாலுக்கா மருத்துவமனை இலக்கணத்திற்குரிய மருத்துவமனையாக மாற்றிய பிறகு அந்த விஷயங்களை ஆராய வாய்ப்பிருக்கிறது.

[1982 மார்ச் 25

## திண்டுக்கல்—கம்பம் இரயில்பாதை அமைக்கும் திட்டம்.

* வினா எண். 659. திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல்—கம்பம் (வழி) பெரியகுளம் இரயில் பாதை அமைக்கும் திட்டம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல்லில் இருந்தோ அல்லது கோடைக்கானல் சாலையில் இருந்தோ கம்பத்திற்கு ஒரு புதிய இரயில் பாதை அமைக்கக் கோரி இவ்வரசு 1979 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசை வலியுறுத்தி வந்தது. ஆனால் நிதி நிலை பற்றாக்குறை காரணமாக 6-வது திட்ட காலத்தில் மேற்படி பணியை ஏற்க இயலாதென மத்திய அரசு 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் தெரிவித்துள்ளது.

**திரு. க. கோபாலகிருஷ்ணன் :** இந்தப் பாதையில் ஒரு நாளைக்கு ஏறக்குறைய 200 லாரி லோடுகள் வெளி மாநிலங்களுக்கு செல்கின்றன. அதேபோல் இந்த பகுதியில் உள்ள கோடைக்கானல், தேக்கடி போன்றவை முக்கிய சுற்றுலா ஸ்தலங்களாக இருக்கின்றன. எனவே அதன் முக்கியதுவத்தைத் கருதி இதை விரைவில் செயல்படுத்த இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** ஏற்கெனவே இந்தத் திட்டம் பற்றி 1979-ஆம் ஆண்டு இதன் முக்கியத்துவம் கருதித் தான் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நடவடிக்கைகள் எடுக்கமுடியாது என்று இப்போது சொல்லியிருக்கிறார்கள். எனவே அதற்கு மேல் சொல்வதற்கு வாய்ப்பில்லை:

**திரு. கா. கோபலகிருஷ்ணன் :** நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ரெயில்வே துறை மாற்றாந்தாய் மனப்பான்மையோடுதான் செயல்பட்டு வருகிறது. எனவே தமிழ் நாட்டிற்கு வேண்டிய முக்கிய திட்டங்களை மத்திய அரசுக்கு வற்புறுத்தி ஏதாவது எழுச்சிநாள் கொண்டாடப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** இந்த அரசைப் பொறுத்த வரையில் என்னென்ன திட்டங்கள் நமக்கு பயனுடையதாக இருக்குமோ அவற்றை மத்திய அரசிடம் சொல்லி வற்புறுத்தி வாங்கத்



1982 மார்ச் 15]

தயாராயிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் 1979-ல் இதை வலியுறுத்தி எழுதியிருக்கிறோம். மீண்டும் வேண்டுமானால் தொடர்ச்சியாக எழுதிக்கொண்டேயிருக்கலாம்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** திண்டுக்கல்—பெரியகுளம் ரெயில்வே பாதை முக்கியமானதொரு திட்டம் என்று சொன்னாலும் கூட தமிழ் நாட்டில் எல்லோரையும் பாதிக்கும்படியான ஒரு முக்கியமான பிரச்சினை பற்றி பாராளுமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஊட்டி ரெயில்வே பாதையை நிரந்தரமாக மத்திய அரசு நிறுத்தியிருப்பதாக பாராளுமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் எடுத்து நடத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

## பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு 1979—1981 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட புதிய பேருந்துகள்

* வினா எண். 660 : திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினருக்கு 1979—80, 1980—81 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட புதிய பஸ்கள் எத்தனை?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** 1979—80, 1980—81-ஆம் ஆண்டுகளில் பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கப்பட்ட புதிய பேருந்துகளின் விவரம் பின்வருமாறு :—

| | | | | |
|---|---|---|---|---|
| 1—4—1979 | முதல் | 31—3—1980 | வரை | 115 |
| 1—4—1980 | முதல் | 31—3—1981 | வரை | 196 |

**திரு. எஸ். என். இராமசாமி :** பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திற்கு எவ்வளவு புதிய வழித்தடங்கள் போடப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** புதிய பேருந்துகள் பற்றித் தான் கேட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் எவ்வளவு புதிய வழித்தடங்கள் என்பதற்கு இப்போது என்னிடம் கணக்கு இல்லை. 1980-ல் வாங்கப்பட்ட பேருந்துகளில் ஏறத்தாழ 102 பேருந்துகள் புதிய வழித்தடங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது 1981-ல் வழங்கப்பட்டதில் 109 புதிய வழித்தடங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறன்ன.

திரு. சு. முத்துசாமி: [1972 மார்ச் 15

**நட்டத்தில் ஓடும் வழித்தடங்களுக்கான நிபந்தனைகள்.**

* வினா எண் 661—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்பு
மிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா: அரசு போக்குவரத்து கழகங்கள் கட்டுப்
படியாகாத வழித்தடங்களை இயக்குவதற்கு நிதி இழப்பையும்,
சமூகத்தின் நன்மை கருதி பொருட்படுத்தாமல் நடத்தும்
பொருட்டு அரசு விதித்துள்ள நிபந்தனைகள், அளவுகள் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: போக்குவரத்துக் கழக
நிறுவனம் நல்லபடியாக நடக்க 30 சதவிகித லாபகரமான வழித்
தடங்களும், 40 சதவிகித லாப நட்டமில்லாத வழித்தடங்
களும், பொதுமக்களின் நன்மையைக் கருதி 30 சதவிகித நட்டத்
தில் ஓடும் வழித் தடங்களுடன் இருக்கலாமென அரசு போக்கு
வரத்துக் கழகங்களுக்கு நிபந்தனை விதித்துள்ளது.

திரு. பெ சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்
களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுமக்களுக்கு வசதி
களை ஏற்படச் செய்யவேண்டும், தொழிலாளர்களுக்கு வசதி
களை ஏற்படச் செய்ய வேண்டுமென்பதற்காக சில வழித் தடங்
கள், நட்டத்தில் ஓடும் வழித் தடங்களாக இருக்கலாம் என்று
சொன்னார்கள். ஆனால், நேற்றைய தினம் நிறைய பேர்கள்
போக்குவரத்து மானியத்தின்மீது பேசும்போது 62 சத விகிதம்
விரைவுப் பேருந்து வழித் தடங்கள் நிறுத்தப்பட்டிருப்பதாகச்
சொன்னார்கள். எனவே, இதைப்பற்றி அரசாங்கம் மறு பரி
சீலனை செய்து, சில தடங்கள் இப்போது நட்டத்திலே நடை
பெற்றாலும், எதிர்காலத்தில் லாபம் கிடைக்கும் சூழ்நிலை ஏற்
படலாம், அப்பேர்பட்ட வழித் தடங்களில் பேருந்துகள் விடு
வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்பு
கிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்றையதினம் இன்னும்
பலர் பேசியதை விட்டிருக்கிறார்கள். நஷ்டத்தில் ஓடுகின்ற
பேருந்துகளைப் பற்றிச் சொன்னார்கள். அதை விட்டுவிட்
டார்கள். அரசு எந்தெந்த இடங்களில் மக்கள் நலனைக் கருதி,
அங்கே பேருந்துகள் விடவேண்டுமோ அதற்கான நடவடிக்கை
களை எடுத்துக் கொண்டிருக்கிறது. விரைவுப் பேருந்துகள்
ஓரளவுக்கு லாபத்தில் ஓடவேண்டியது மிக அவசியமாகும். நகரப்
பேருந்து, அதற்கடுத்து மொபசில் பேருந்து என்றும், எனவே
விரைவுப் பேருந்துகள் கொஞ்சம் லாபத்தில் ஓட வேண்டுமென்
பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகிறது. நஷ்டத்தில் இருக்கு
மானால் கொஞ்சம் மாற்று வழி செய்யப்பட்டு, அதற்கான நட
வடிக்கைகள், எடுக்கப்படுகின்றன.



1982 மார்ச் 25]

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர்
அவர்களே, உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்கிறேன்.
எண் 617, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் வண்டி
திருவண்ணாமலையிலிருந்து கோவைக்குச் செல்லுகிறது. திரு
வண்ணாமலையிலிருந்து கோவைக்குச் செல்லும்போது லாபத்தில்
செல்லுகிறது. பகலில் திரும்பும்போது கொஞ்சம் நஷ்டம்
ஏற்படுகின்றது என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட வழித்
தடங்களைத்தொடர்ந்து நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்
குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே,
போகும்போது லாபம்; வரும்போது நஷ்டம் என்று சொன்னா
லும், ஒட்டுமொத்தமாக நஷ்டமாக இருக்கும். எனவே, அதற்கு
வேறு வழி செய்ய முடியாது, அந்த வகையில் மாண்புமிகு உறுப்
பினர் இந்தத் தனியான பாதையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அதிலே என்ன விவரம் என்பதைப் பார்த்து, உரிய நடவடிக்கை
எடுக்கப்படும்.

**சென்னை—தூத்துக்குடி தோணிப் போக்குவரத்துத் திட்டம்.**

வினா எண் 662—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

போக்குவரத்து நெரிச்சலைக் குறைப்பதற்கு சென்னைக்கும்
தூத்துக்குடிக்கும் இடையே கடலோரத் தோணிப் போக்குவரத்து
வசதி செய்யுமாறு மத்திய அரசை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: 6வது ஐந்தாண்டு திட்டத்தில்
சென்னைக்கும் தூத்துக்குடிக்குமிடையே கடலோரப் போக்கு
வரத்தை மத்திய அரசு திட்டமாக மேற்கொள்ளுமாறு இவ்வரசு
கேட்டுக்கொண்டுள்ளது. இந்தியக் கப்பல் போக்குவரத்துக்
கழகத்தின் மூலமாக கடலோரப் போக்குவரத்தைப் பற்றி ஒரு
ஆராய்ச்சியை இந்திய அரசு நடத்தி வருகிறது. அது முடிந்த பிறகு
மேற்கொண்டு பதிலளிப்பதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே,
சென்னையிலே இருந்து தென் மாவட்டங்களுக்கு தூத்துக்குடி
வரையில் இரவிலே காரிலே செல்லுகின்றபோது, எதிரிலே லாரி
களும், பேருந்துகளும் ஹெட் லைட்டைத் தொடர்ந்து போடு
கிறார்கள். அதனாலே விபத்துகள் ஏற்பட்டு, உயிர் நஷ்டம்
ஏற்படுகிறது. அதனால், மாநில சர்க்கார் மத்திய சர்க்
காரிடம் வற்புறுத்திச் சொல்லி, கடலோரப் பகுதியில் போக்கு
வரத்தை அமைக்கின்ற வகையில், அதிலே நாமே பூம்புகார்
கழகத்தின் மூலம், ஜெர்மன் கப்பல் போன்ற உயர்ந்த விலையில்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, தோணியைப் பற்றியது. அதைப் பற்றி மட்டும் கேளுங்கள்.

திரு. து. புருஷோத்தமன் : ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவாக அமுல்படுத்துவதற்கு மாநில சர்க்கார், மத்திய சர்க் காரை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பேருந்துகள் எல்லாம் ஹெட் லைட்டைப் போட்டு ஓட்டுவதாகச் சொன்னார்கள். இரவிலே லைட் இல்லாமல் ஓட்ட முடியாது என்பது தெரியும். ஜாக்கிரதையாகப்போகவேண்டும். அது மட்டு மல்ல. கப்பலைப் பற்றிச் சொன்னார்கள். காகிதக்கப்பலை நாம் விட முடியாது. நீங்கள் பயணம் செய்கின்ற முறையில் கப்பலை விட வேண்டும். அந்த வகையில் அதற்குத் தேவை யானவற்றை மாநில சர்க்கார், மத்திய சர்க்காரை, இந்த போக்கு வரத்தைப் பற்றி தீவிரமாக நடவடிக்கை எடுக்கும். நாங்கள் தயக்கம் காட்ட மாட்டோம்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, காகிதக் கப்பலுக்கு விலை இல்லை என்பது அமைச்சருக்குத் தெரியும் என்று கருதுகிறேன். இப்போது சென்னையிலே இருக் கின்ற சால்ட் குவாட்டர்ஸ், இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள பல்வேறு இடங்களிலிருந்து சரக்குகள் வருகின்ற இடம். அங்கே போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, அதை அம் பத்தூருக்கு மாற்றுவதற்கு மத்திய சர்க்காரிடம் திட்டமிருப் தாகச் சொல்லுகிறார்கள். அதைத் துரிதப்படுத்தவேண்டும். இல்லையெனில், இன்னும் இரண்டாண்டுகளுக்குப் பிறகு அங்கே செல்ல முடியாத அளவுக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்தை விரை வாக அமுல்படுத்த, இதை அம்பத்தூருக்கு மாற்றுவதற்கு மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியோடு இது தொடர்புடையது அல்ல. போக்கு வரத்து என்றவுடனே எல்லாக்கேள்விகளையும் கேட்டுக்கொண் டிருக்கிறார்கள். இது என்ன என்பதைப் பார்த்து நாம் எழுதி யிருக்கிறோமா என்பதைப் பார்த்து தான் பதில் சொல்லமுடியும்.

THIRU K.S.G. HAJA SHAREEF : Mr. Speaker Sri, Will the Government Con.ider the feasibility of o ganising or coastal passanger service emanting from Madras touching Pondicheery, Vucaline Nagapatnam and Tutiqurin if it would work in a profi-





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இதையெல்லாம் தான் மத்திய அரசாங்கத்திற்கு நாம் எழுதியிருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் காட்டுகிற ஆர்வத்தை பார்த்தால் அவர்கள் நமக்குக்கொஞ்சம் ஆதரவாகச் சொன்னால் அது உதவியாக இருக் கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பழனி வட்டத்திலுள்ள ஆடுவளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள்.

* வினா எண். 663—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) பழனி வட்டத்தில் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கம் எத்தனை இயங்குகிறது ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் ?

(இ) அரசு செய்யும் உதவி என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) பழனி வட் டத்தில் 16 ஆடு வளர்ப்புக்கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன.

(ஆ) அவை கீழ்க்கண்ட இடங்களில் இயங்குகின்றன :

(1) பெரிய களம்புத்தூர், (2) அய்யம்புலி கரும்பப்பட்டி, (3) கீரனூர், (4) புளியம்பட்டி, (5) ஆயக்குடி, (6) காட்டுப்பட்டி, (7) கணக்கன்பட்டி (8) கேதையிரும்பு, (9) அப்பியப்பாளையம், (10) புங்கமுத்தூர், (11) அம்பிளிக்கை, (12) கரியாம்பட்டி, (13) எஸ். அத்திக்கோம்பை (14) பெத்தேல்புரம், (15) ஓடைப் பட்டி, (16) கே. அத்திக்கோம்பை.

(இ) அரசு செய்யும் உதவி பின்வருமாறு—கூட்டுறவு சங் கங்களின் அங்கத்தினர்களுக்குக் கால்நடை மருத்துவர்கள் கால் நடை பராமரிப்பு, சுகாதாரம் சம்பந்தமான அறிவுரைகள் அவ்வப் போது வழங்கியும் ஆடுகளுக்கு நோய் சம்பந்தமான சிகிச்சை முறைகள் செய்தும் குடல் புழுக்களுக்கு பூச்சி மருந்துகள், தடுப்பு முறைகள் கையாண்டும் ஆடுகளுக்குத் தொற்று நோய்கள் வராது தடுப்பு ஊசிகள் போட்டுப் பாதுகாப்பு முறைகள் செய்தும் அவ் வப்போது இலாகா அலுவலர்கள் பராமரிப்பு சம்பந்தமாக அறிவுரைகள் கூறியும் உதவி செய்தும் வருகிறார்கள். சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 20 பெண் செம்மறி ஆடுகளும் 1 ஆண் செம்மறி ஆடும் கொண்ட மந்தை ஒன்று வாங்கு வதற்கு 3,500 ரூபாய் முதல் 4,000 ரூபாய் வரை தேசியமய

மாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடன் வழங்கப்படுகிறது. இது வரை பழனி வட்டத்தில் 400 செம்மறி ஆட்டு மந்தைகளுக்குக் கடன் வாங்கி வழங்கப்பட்டிருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட கடன் தொகையில், ஒருங்கிணைக்கப்பட்ட கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிறுவிவசாயிகளுக்குக் கால் பங்கும் மிகச்சிறிய விவசாயிகளுக்கு மூன்றில் ஒரு பங்கும் மானியமாக வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : விடை நீண்டதாக இருந்தால் அதை அச்சிட்டு அறிக்கையாக வைத்துவிடலாம்.

**திரு. என். பழனிவேல்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வட்டத்தில் 16 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பதாகவும் அவர்களுக்கு 3,500 ரூபாயிலிருந்து 4,000 ரூபாய் வரையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து கடன் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் தெரிந்த அளவிலே 16 ஆடுவளர்ப்புச் சங்கத்திலே எங்கேயும் கடன் கொடுத்ததாகத் தெரியவில்லை. 400 ஆடுகள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது ஏதோ ஒரு சங்கத்திற்குத்தான் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இது இந்த அரசாங்கத்தினுடைய நோக்கத்தையே முறியடிக்கக் கூடிய வகையிலே இருக்கிறது. சங்கங்களை 1, 2 ஆண்டுக் காலமாக ஆரம்பித்தும் ஆயிரம் இரண்டாயிரம் என்று பணம் கட்டியும் ஒன்றும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. இதைப் பற்றி நான் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே சொல்லி இருக்கிறேன், இங்கேயும் சொல்லியிருக்கிறேன். சொல்லியும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. அமைச்சர் அவர்கள் இதிலே தனி கவனம் செலுத்தி ஆவன செய்ய முன் வருவார்களா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்** : மதுரை மாவட்டத்திலே பழனி வட்டத்தில் 16 கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு அதிலே 5 சங்கங்களிலே கடன் உதவி வழங்கியிருக்கிறார்கள். மீதியுள்ள 11 சங்கங்களுக்கு தேவையான வசதிகள் குறிப்பிட்ட வங்கிகள் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. என். பழனிவேல்** : அமைச்சர் அவர்கள் ஆலோசனைகள் வழங்கி வருவதாகச் சொன்னார்கள். ஆலோசனை வழங்குவதாலே எந்தக் காரியமும் நடக்கவில்லை. ஏழை எளிய விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டால் அந்தத் தொழிலும் அபிவிருத்தி அடையும், கால்நடை அபிவிருத்தியும் ஏற்படும். ஆகவே இந்த 11 சங்கங்களிலே உள்ளவர்களுக்கு



ஆடுகள் வாங்கிக் கொடுக்கின்ற முறையிலே பணம் வங்கிகள் போடுகின்ற நிபந்தனைகளை ரத்து செய்யக்கூடிய முறையிலேயும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்** : இந்த 11 சங்கங்கள் ஐ.ஓ.பி., இந்தியன் பாங்க், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன் கேட்டு மனுக் கொடுத்திருக்கிறார்கள். மிக விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

**பர்மா அகதிகளுக்கு வியாசர்பாடியில் வீடு கட்டித்தரும் திட்டம்.**

*வினா எண். 664—**திரு. வேடந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு வியாசர்பாடியில் அரசு நிலத்தில் வீடு கட்டித்தரும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டம் இப்பொழுது எந்த அளவில் உள்ளது ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்** : (அ) ஆம்.

(ஆ) 2,140 குடும்பங்களுக்கு வீடுகள் கட்ட தலா ரூ. 6,000 வீதம் வீட்டுக் கடன் அங்கீகரிக்கப்பட்டு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினரிடம் மொத்த தொகை ஒப்படைக்கப்பட்டுள்ளது. 600 வீடுகள் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவும், 1,540 வீடுகள் ஆதி திராவிடர் வீட்டுவசதி கழகத்தின் மூலமாகவும் கட்டுவதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக, 1,021 குடும்பங்களுக்கு வீடுகள் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதில் 729 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 143 வீடுகள் கூரை அளவு வரை கட்டப்பட்டு இருக்கின்றன. மீதமுள்ள 149 வீடுகள் பல்வேறு கட்டுமான நிலையில் இருக்கின்றன.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** : மாண்புமிகு தலைவர் அவர்களே, பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் மொத்தம் எத்தனை பேர் ? அதிலே ஒரு சிலருக்கு வீட்டுமனை பட்டா கொடுக்கவில்லை என்று சொல்லப்படுகிறதே, அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, வியாசர்பாடியிலே அகதிகள் மொத்தம் 3,218 குடும்பங்களாகும். இதில் வீடு கேட்டு பெற தகுதியுள்ள குடும்பங்கள் 2,140 ஆகும். 1,078 குடும்பங்கள் மற்ற காரணங்களினாலும், வேறு இடங்களிலே வீட்டு கடன் வாங்கியவர்கள், அதனால் பெற தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இப்படி தாயகம் திரும்பியவர்களுக்கு வீடு கட்டுவதற்காக தமிழக அரசு 6,000 ரூபாய் கடன் கொடுப்பதாக அறிகிறேன். விலைவாசி ஏறி இருக்கிற காரணத்தால் வீடு கட்ட வழங்கப்படுகிற கடனை உயர்த்திக் கொடுக்க பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, கட்டிட பொருள்களின் விலை ஏற்றத்தை முன்னிட்டு நகரப் பகுதிகளிலே 11,500 ரூபாயாகவும், கிராமப்புறங்களில் 8,000 ரூபாயாகவும் உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசிற்கு பரிந்துரை செய்துள்ளோம். மத்திய அரசிடமிருந்து நல்ல பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாட்டில் பல புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடும் திட்டம்

*குறுகியகால வினா எண். 3—திரு. மு. அம்பிகாபதி, திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது, திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பல வழித்தடங்களில் பேருந்து விடப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) அப்படிப்பட்ட வழித்தடங்களில் பேருந்துவிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) மற்றும் (ஆ) கிராம மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் சாலைப் போக்குவரத்துத் தேவைகளை மதிப்பிடுவதில் உதவி செய்வதற்கும் பல்வேறு அரசுத் துறைகள் இணைந்து சாலைப் போக்குவரத்து ஆய்வு ஒன்றினை நடத்தியது. அந்த ஆய்வின் அடிப்படையில் முதல் நிலையில் 476 வழித்தடங்களைத் தொடங்குவதன் மூலம் 968 சிற்றூர்களிலுள்ள 18 இலட்சம் மக்கள் பயனடைவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில், 286 வழித்தடங்களில்



பேருந்துகளும், மினி பஸ்களும் விடப்பட்டுள்ளன. மீதமுள்ள 190 வழித்தடங்களிலும், இதைத் தவிர, நடத்தப்பட்ட விரிவான ஆய்வின்படி இரண்டாம் நிலையில் 426 புதிய வழித்தடங்களிலும் பேருந்துகள் விடுவதற்கான நடவடிக்கை அரசு எடுத்து வருகிறது.

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் முதல் நிலையாக 476 வழித்தடங்களில் விட ஆலோசனை செய்யப்பட்டதில் 190 வழித்தடங்களில் விடப்படுமென்று சொல்லி இருக்கிறார்கள். 286 விடப்பட்டிருக்கிறது. அடுத்த கட்டமாக 426, 190 மீதம். கிட்டத்தட்ட ஒரு 600-க்கு மேற்பட்ட வழித்தடங்களிலே அரசாங்கம் பேருந்துகளை விடுவதிலே காலதாமதம் செய்து கொண்டிருக்கிறது. அரசாங்கமே இந்த வழித்தடங்களில் நிறைய பேருந்துகளை விடவேண்டுமென்று நாங்கள் கேட்டுக் கொள்கிற நேரத்தில், மக்களுடைய வசதியைக்கருதி உடனடியாக பேருந்துகளை விட தனியார்கள் முன் வந்தால் அவர்களுக்கு அனுமதி அளித்து, அரசாங்கம் பேருந்துகள் விடுகிற காலத்திலே

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியத்திலே பேசுவது போல பேசக் கூடாது. கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. மு. அம்பிகாபதி :** துணைத் தலைவர் அவர்களே, எனவே அரசாங்கம் இப்படிப்பட்ட முறையிலே நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, ஆய்வு நடத்தியபடி ஏறத்தாழ 616 வழித்தடங்களிலே இன்னும் பேருந்துகள் விடவேண்டுமென்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இருந்தாலும் கூட இந்த அரசு பொறுப்பேற்ற பின்னாலே ஆயிரக்கணக்கான வழித்தடங்களில் நாங்கள் பேருந்துகளை விட்டிருக்கிறோம் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும் மக்களுக்காக உடனடியாகப்பேருந்து கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு மிகுந்த அக்கறை காட்டுகிறது. அந்த வகையிலே பேருந்துகள் அரசாங்கம் எவ்வளவு கொடுக்க முடியும் என்பதை ஆய்ந்து அதற்கு மேலே வேறு வகையான நடவடிக்கை எடுக்க வேண்டுமா என்பதைச் சிந்திக்கும்.

(முற்பகல் 10-10).

தேவைகளை நிறைவு செய்வது போல், போக்குவரத்து வசதி இல்லாத கிராமமே இல்லை என்று சொல்கிற அளவில் தமிழகம் தன்னிறைவு பெற தனித் திட்டத்தை வகுக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் போல்தான் செய்ய வேண்டுமென்ற வேகத்திலே ஆண்டு தோறும் 1,500 பேருந்துகள், 2,000 பேருந்துகள் என்று இந்த அரசாங்கம் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாகத் துவக்கிக் கொண்டிருக்கிறது. இன்றைய தினம் அதை இன்னும் கூட அதிகப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தான் நான் ஏற்கனவே சொன்ன பதிலிலேயே தெரிவித்தேன்.

**திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல வழித் தடங்களில் இன்னும் விடவில்லை என்று ஒப்புக் கொண்டார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு யூனியனுக்கு 2 பஸ்கள் விடுவதாகச் சொல்லப்பட்டதே அது என்னவாயிற்று ? மேலும், கும்பகோணம் பெண்கள் கல்லூரிக்குத் தனியாக பஸ் விடாமல் இருப்பதால், அங்கே கல்லூரிக்குப் போகக் கூடிய பெண்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்களே அதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, நான் ஒப்புக் கொண்டதற்காக நன்றியைச் சொன்னார்கள். அதிலே ஒன்றும் ஆச்சரியம் இல்லை. இதற்கு முன்னாலே தேக்கி வைக்கப்பட்டதிலே நாம் ஒரு பகுதியை விட்டிருக்கிறோம். எனவே, முன்னாலே இருந்து தொடர்ந்து வந்திருக்கிறது என்பதை நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அதற்காக நான் நன்றி சொல்லியாக வேண்டும். எனவே, நாங்கள் விரைவாகச் செய்கிறோம் என்பதை மட்டும் நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். மினி பஸ் விடப்படுவது பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். பெண்கள் கல்லூரிக்குப் பேருந்து வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக, தனியாக எழுதிக் கொடுப்பார்களானால், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 476 வழித்தடங்களுக்கான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன என்று சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், சேரன் போக்குவரத்துக் கழகம் கோவை மாவட்டத்தில் ஈரோட்டிலிருந்தும், திருப்பூரிலிருந்தும் வருகின்ற நேரத்தில், இடைப்பட்ட



வதில்லை. அங்கு வருகின்ற காலத்திலேயே முழுமையாக நிரப்பப்பட்டு வருகின்றன. எனவே, அவினாசியில் இருக்கக்கூடிய கிராம மக்கள் பயன்பெற முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அவினாசியை மையமாக வைத்து கிராமப் புறத்திற்கும் கோவைக்கும் செல்லக் கூடிய முறையிலே சேரன் போக்குவரத்துக் கழகத்தில் இருக்கக்கூடிய பஸ்களை அதிகப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, அனுதாபத்தோடு அந்தக் கோரிக்கை கவனிக்கப்படும்.

**திரு. மு. அம்பிகாபதி :** இரண்டாவது கேள்வி கேட்க அனுமதி கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு கேள்விக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்றுதான் இருக்கிறது. இரண்டாவது கேள்விக்கு கொடுக்க வேண்டுமென்று இல்லை. நீங்கள் தயவு செய்து அதை விடுங்கள்.

**திரு. மு. அம்பிகாபதி :** எப்பொழுதும் இரண்டு துணைக் கேள்வி அனுமதிக்கப்படும். இப்பொழுது ஏன் கொடுக்கவில்லை ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரமில்லை. கொடுக்கவில்லை. அவ்வளவுதான்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### அரசு நிகழ்ச்சிகளுக்கு அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களும் அழைக்கப் பெறுதல்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன்னாலே இங்கே அவையிலே நான் ஒரு பிரச்சினையை எழுப்பினேன். நம்முடைய அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்கின்ற விழாக்களிலே, நிகழ்ச்சிகளிலே, அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்கும்போது, நம்முடைய அவை யினுடைய முன்னவர், மரியாதைக்குரிய நாவலர் அவர்கள், தனக்கே உரிய பரந்த விரிந்த அனுபவத்தின் காரணமாகவும், அவர் வகிக்கின்ற பொறுப்பின் காரணமாகவும் அப்படி அந்தந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை அழைப்பதுதான் முறை. அழைக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நிலை........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களைக் கூப்பிடவில்லையா ? அதுபற்றி நீங்கள் கம்ப்ளெயின்ட் செய்கிறீர்களா?

திரு. து. புருஷோத்தமன் : நான் சொல்லி முடித்து விடுகி றேன். நான் சொல்வது வேறு..........................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்கள் பெயரைப் போடவில்லையா? உங்களைக் கூப்பிடவில்லையா? ......(குறுக்கீடுகள்).

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முன்னவர் அவர்கள் இந்த அவையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்தந்தத் தொகுதியைச் சேர்ந்த வர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட வேண்டும். அழைப்பு என்றால், முன்னாலே கடிதம் அனுப்பப்பட வேண்டும். அப்படி அனுப்பப்பட்ட கடிதத்தின்படி அவரவர்கள் வருவதும் வராததும் அவரவர்கள் விருப்பம். சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற வேண்டும், அரசாங்க நிகழ்ச்சிகளில் என்று தெரிவித்தார்கள். அதற்கு மாறாக இப்பொழுது வந்திருக்கிற இரண்டு மூன்று அழைப்பிதழ்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் பெயரும் இல்லை. சில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த விழா நிகழ்ச்சிகளுக்கான கடிதமும் எழுதப்பெறவில்லை. கடிதம் எழுதி அவர்கள் வர வில்லை என்று சொன்ன காரணத்தால் விட்டு விட்டோம் என்று சொல்ல முடியாது. மாறாக, சட்டமன்றத்திலோ, அரசாங்கத் திலோ அல்லது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கின்ற



பொறுப்பான அமைப்புகளிலோ இடம் பெறாத ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் இடம் பெறுகின்ற வகையில் அரசாங்க நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இது, 24—3—1982 புதன்கிழமை மாலை 6—30 மணி அளவில் சென்னை சத்யா ஸ்டுடியோ அருகில் உள்ள கபாலி வன போஜன தோட்டத்தில் திரு. பத்மநாபன் அவர்கள் முன்னிலையில்— சத்யா ஸ்டுடியோவில் உள்ளவர்—தொழிலாளர் நலம் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையேற்று குடிசை வாழ் மக்களுக்கு வீட்டு அபிவிருத்திக் கடன் தொகை வழங்க இசைந் துள்ளார்கள். இந்த விழாவில் மேலவை உறுப்பினர் ஜேப்பியார் கலந்து கொள்கிறார். இன்னொன்று, மயிலைப் பகுதி செய லாளர், அ.இ.அ.தி.மு.க. செயலாளர் தமிழ்மணி அவர்கள் சிறப்புரை ஆற்றுவார்கள்.

இப்படிப் பல நிகழ்ச்சிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் புறக் கணிக்கப்படுவது, புறக்கணிக்கப்படுவதோடு அந்தந்த வட்டத்திலே உள்ள ஆளுங்கட்சி அமைப்பாளர்களே முக்கியமாக பங்கு பெறும் வகையில் இடம் பெறுகின்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இது சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமைப் பிரச்னை என்ற அளவிற்குத் தகுதி உள்ள ஒரு பிரச்னை. ஏற்கனவே முன்னவ ரவர்கள் இந்த அவையிலே அறிவித்த கருத்து பின்பற்றப்பட வில்லை என்ற காரணத்தால் இந்தப் பிரச்னை எழுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் இந்தப் பேரவையில் ஏற்கனவே தெரிவித்த கருத்துக்கிணங்க, அரசாங்கத்தின் சார்பாக நடை பெறும் நிகழ்ச்சிகளில் அந்தந்தத் தொகுதிக்குரிய சட்டமன்றப் பேரவை அல்லது மேலவை உறுப்பினர்கள், அந்தந்த இடத்திற் குரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களை அழைப்பது முறை என்றும், அந்த அழைப்பை ஏற்று அவர்கள் வருவதும், வராததும் அவர்களுடைய விருப்பம் என்றும், அப்படி வராமல் இருப்பார்களேயானால் அவர்களுடைய பெயர்கள் போடப்பட்ட வேண்டிய அவசியமில்லை என்றும், அவர்கள் வருவதற்கு இசைவு தெரிவிப்பார்களேயானால் அவர்களுடைய பெயர்கள் கட்டாயம் போடப்பட வேண்டுமென்றும் ஒரு கருத்தை நான் சொன்னேன். அந்தக் கருத்திலேதான் இன்றைக்கும் அரசு இருக்கிறது. ஆனால் சிலபல நிகழ்ச்சிகளில் பெயர்கள் போடப்படாமல் விடுபட்டிருக் கின்றன என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவரவ ரவர்கள் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறார்கள். அதுபற்றி விசாரித்து அதற்கேற்ப எதிர் காலத்திலே இப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்படாமல் இருப்பதற்கு எந்த வகையிலே அவர்களுக்கு அறிவுறுத்த முடியுமோ அந்த அறிவுரையை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் மாண்புமிகு அமைச்சர்கள் அத்தனை பேர்களும் அவர்கள் கலந்து கொள்கின்ற

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 25

எந்தவொரு பொது நிகழ்ச்சியாக இருந்தாலும் அதிலே கலந்து கொள்வதற்கு முன்னாலே இந்த முறை கடைப் பிடிக்கப்பட வேண்டுமென்று உரிய அதிகாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்து விடுவார்களேயானால் இப்படிப்பட்ட பிரச்னை எழாது என்பதை மட்டும் இப்பொழுது குறிப்பிட்டுக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவரவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கின்ற இந்தப் பிரச்னையைப் பற்றி ஆராய்ந் தறிந்து எதிர் காலத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாத அளவிற்குப் பார்த்துக் கொள்ள எதிர் காலத்தில் என்ன நடவடிக்கை எடுக்க இயலுமோ அதை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவரவர்களே, அரசாங் கத்தினுடைய கொள்கை என்று முன்னரவர்கள் சொல்கின்ற கொள்கைதான் பொதுவாக எந்த அரசாங்கமும் கடைப் பிடிக்க வேண்டிய முறை, அந்த முறைக்கு மாறாகப் பல நிகழ்ச்சிகள் இப்படித் தொடர்ந்து நடைபெறுகின்ற நிலைமைகள் இருப்பதால் அரசாங்கத்தின் கொள்கையை வரையறுத்து, சட்டமன்றத்தை மதிக்கும் வகையில் ஒரு சுற்றறிக்கையை அனைத்து அமைச்சர் களுக்கும் மட்டுமல்லாமல், அனைத்துக் துறைத் தலைவர் களுக்கும் அனுப்புவதற்கு முன்னவரவர்கள் முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவ ரவர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க இந்த அவையிலே நான் குறிப்பிட்ட ஒன்றே, அதற்குக் காரணமாக அமையவேண்டும். அப்படிப்பட்ட சுற்றறிக்கையை அனுப்புவதன் மூலமாக இப்படிப் பட்ட நிலைமைகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற சூழ்நிலையிலே சுற்றறிக்கை அனுப்பி வைப்பதிலே எந்த ஆட்சேபணையும் இருக்க இயலாது. ஆனாலும்கூட இப்படிப் பட்ட நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யக் கூடியவர்கள் ஆங்காங்கு அறிந்தோ அறியாமலோ, தெரிந்தோ தெரியாமலோ கூடச் சில யிடங்களில் செய்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்கு அந்தச் சுற்றறிக்கை பயன்படும் என்ப தையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. து. புருஷோத்தமன் :** * * *

**திரு. அ. ரகுமான்கான் :** * * *

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1982 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. புருஷோத் தமன் அவர்கள் சொன்னதும் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னதும் அவைக் குறிப்பிலே இருக்கத் தேவையில்லை. அவைகளை அவை குறிப்பிலேயிருந்து நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** * *

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அது முறையல்ல திரு. ரகுமான்கான் அவர்களை நான் அவையை விட்டு வெளி யேற்றுகிறேன். (குழப்பம்). * *

**டாக்டர் மு. கருணாநிதி. :** அப்படியென்றால் நாங்களும் வெளியேறுகிறோம்.

(தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேறினார்கள்).

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ** **

அறிஞர் அண்ணா அவர்கள் எனக்கு ஒன்றைப் பற்றிச் சொல்லிக் கொடுத்தார்கள். எதை வேண்டுமானாலும் கொட்ட லாம் மீண்டும் அள்ளிக் கொள்ளலாம். வார்த்தை"ளை மட்டும் கொட்டிவிட்டால், மீண்டும் அள்ள முடியாது என்று அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். அப்படி வார்த்தைகளைக் கொட்டுவதும் கூடாது என்று தயவு செய்து கேட்டு கொள்கிறேன். அது நல்லதல்ல. இந்த மன்றத்தைச் சுமுகமாக நடத்திச் செல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருந்து என்னுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. ரகுமான்கான் எழுப்பிய பிரச்சினை மீது இதுவரை நடந்த விவாதங்கள் அனைத்தையும் அவைக்குறிப்பிலிருந்து நீக்க ஆணை யிடுகிறேன்.

ஆகவே, வெளிநடப்பு செய்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரையும் அவைக்குள் வந்தமர்ந்து அவை"ய அமைதியாக நடத்த ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தாங்கள் இந்த அவை உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்லிய அறிவுரைகளின் அடிப்படையில். இந்த மன்றத்தி னுடைய மரபு காப்பாற்றப்பட வேண்டுமென்பது மட்டும் அல்லா மல் இந்த மன்றத்தில் பணியாற்றுகின்ற அத்தனை பேரும் பண் பாடுகளையும் இந்த தமிழகத்தின் பண்பாடுகளையும் எதி ரொலிக்கும் முறையிலே பணியாற்றவேண்டும். இந்த மன்றத் திலே உள்ள 234 பேர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு பொறுப்பான கடமையை ஆற்றுவதற்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த நிலையில் கருத்துக்களைப் பறி

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க

மாறுவதற்கு நாம் அனைவரும் இங்கே உட்கார்ந்திருக்கிறோம். நாங்கள் எடுத்து சொல்லிய அறிவுரைப்படி வார்த்தைகளில் ஒளி இருக்கலாமே தவிர சூடு இருக்கக்கூடாது அந்தச் சூடு ஆத்திரமாக மாறி அதன்மூலமாக நம்முடைய மரபு கெடுகிறது மட்டுமல்லாமல் பண்பாட்டுக்கும் இழுக்கு ஏற்படுகிறது என்பதை நாம் அனைவரும் உணரவேண்டும். நாம் அனைவரும் உருவாக்கித் தந்துள்ள சட்டதிட்டங்கள் விதிமுறைகளினுடைய அடிப்படையிலேதான் இந்த மன்றத்தை நடத்திச் செல்ல வேண்டும். அந்தப் பொறுப்பைத் தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் இங்கே சொல்லியிருக்கின்றார். யாராக இருந்தாலும் மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுத்து நடக்கவேண்டும் என்ற உணர்வை எல்லா உறுப்பினர்களும் பெறவேண்டும். நாம் உருவாக்கித் தந்திருக்கின்ற சட்ட திட்டங்களின் விதிகளின் அடிப்படையில் அவையைத் தலைமை தாங்குகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு அடங்கி நடக்கவேண்டும் என்பது மட்டுமல்லாமல் தாங்கள் எண்ணுகிற கருத்துக்களை முன்வைப்பதற்கு பல்வேறு விதிமுறைகள் இருக்கின்றன. ஏதேனும் ஒரு விதி முறை வகுக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் நாம் இதை எல்லாம் நிறைவேற்றி கொண்டு வருகிறோம். ஆளும் கட்சித் தரப்பில் இருந்தும் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்தும், இந்த ஒருமைப்பாட்டோடு கூடிய கருத்துக்களின் அடிப்படையில் இந்த மன்றத்தினுடைய விவாதம் நடைபெற்றால்தான் இங்கே சுமுகமாக இருக்கும். ஆனால் எதிர்பாராத நிகழ்ச்சிகள் நமக்கு எல்லாம் வேதனைத் தரத்தக்க அளவுக்கு ஏற்பட்டுவிட்டாலும் கூட அதை மறந்து எதிர்காலத்திலே இந்த பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே வெளியே சென்ற மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் மீண்டும் இந்த அவையிலே வந்து உட்கார்ந்ததற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் எந்த ஒரு நிலைமை ஏற்பட்டாலும் கூட வருத்தத்தை நாம் தெரிவித்துக்கொள்ள வேண்டுமே தவிர, சட்டத் திட்டங்களுக்கு நாம் உட்பட்டு நடக்க வேண்டும் என்ற உணர்வை ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் வேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் வேண்டும். இருசாரரும் சேர்ந்து ஒத்துழைத்தால் தான் மன்றத்தினுடைய மாண்பு காப்பாற்றப்படமுடியும்.

(முற்பகல் 10-30)

அதற்கு எல்லோரும் ஒத்துழைப்புத் தர வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் எடுத்துக் சொன்ன கருத்துக்களை ஒட்டி அவை முன்னவர் என்ற முறையில் நானும் அனைவருக்கும் வேண்டுகோள் விடுகிறேன். வாதிடலாம் கருத்துக்கள் பரிமாறலாம். ஆனால் உணர்ச்சிவசப்படக் கூடாது. வன்முறைக்கு இடம் தரக்கூடாது. அந்த வகையிலே





நாம் அனைவரும் இந்த மாமன்றத்தினுடைய மரபை காப்பாற்ற வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். அவை முன்னவர் என்ற முறையில் மீண்டும், இந்த மாமன்றத்தினுடைய நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தாங்கள் இங்கு தெரிவித்த கருத்துக்களையும் அவை முன்னவர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நானும் மனமார ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இன்று நடந்துள்ள பல அசம்பாவித நிகழ்ச்சிகள் நம்முடைய சட்டமன்ற வரலாற்றிலே நடைபெற்றதாகச் சொல்ல இயலாத அளவுக்கு மனக்கிலேசத்தையும் சஞ்சலத்தையும் வேதனையையும் தரக்கூடிய அளவுக்கு அமைந்துவிட்டது என்பதை நான் பேச முடியாத நிலையில் இந்த அவையிலே எடுத்துக் கூறிக்கொண்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்கள் ஆனாலும் அல்லது ஆளும் கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்கள் ஆனாலும் சில நேரங்களில் உணர்ச்சி வசப்படுவது தவிர்க்க
** ** **
முடியாததாகிவிடுகிறது.

எனினும் அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டது போல சட்டத்திட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டும். ஆக சட்டத் திட்டங்கள் என்பது ஒரு கண்ணாடிப் பாத்திரம் போன்றது. அதை ஒழுங்காகப் பிடிக்காமல் விட்டுவிட்டாலும் கீழே விழுந்து நொறுங்கிவிடும். இறுக்கிப் பிடித்தாலும் சில நேரங்களில் நொறுங்கிவிடும். எனவே இந்த இரண்டுக்கும் இடையிலே கண்ணாடிப் பாத்திரத்தை கையாளுவதைப் போல விதிமுறைகளை கையாள வேண்டும்.

* * *

எதிர்காலத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகாமல் நாம் அனைவரும் இந்த அவையின் மரபை பேணிக் காக்க இந்த சூழ்நிலைக்குப் பிறகாவது உறுதி எடுத்துக் கொள்வோம்.

காரசாரமான விவாதங்கள், கடுமையான விவாதங்கள் எல்லாம் இருக்கலாம். ஆனால் இந்த நிலைமை இங்கு இந்த ஒரு நாள் நடந்ததோடு இருக்கட்டும், இனி நடக்காத அளவுக்கு இருக்கட்டும் என்பதை மாத்திரம் நானும் கழகத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Thiru [illegible] G. HAJA SHAREEF : Mr. Speaker, Sir, it is a very unfortunate incident that has happened just a little while ago. We appreciate both your goodself's statement and that of the Hon. Leader of the House. The Presiding Officer

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[Thiru K. S. G. Haja Shareef] [1982 மார்ச் 25

should be a person of extreme tact, perseverence and should exercise utmost patience. Perhaps even members may go a bit beyond, out of the way but the Presiding Officer should have, as his first concern, to see that the concerned member is brought back to the point and should see that the member is piloted in a proper maner. ** ** ** **

This House has been presided over by various dignitaries and both the Opposition and Government had been co-operating very well and I do not want that a small incident should be magnified and made a big issue and thereby a bad name is created.... I trust that all parties will co-operate to maintain the dignity of this House and also that we maintain the Parliamentary method of speaking. Thank you.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடந்து இருக்கும் சம்பவம் வருந்தத்தக்கது. இடையிலே நான் குறிப்பிட்டதைப்போல நிலைமைகள் ஏற்பட்டு இருக்குமானால் அதைத் தடுத்து இருக்க முடியும். விதி முறைகள் எல்லாம் மனித இயக்கத்திற்குத் தகுந்த மாதிரி நெளிவு சுளிவுடன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். முக்கியமான மக்கள் பிரச்சினை குறித்த விவாதத்திலே கருத்து வேறுபாடு வந்தாலும் பரவா யில்லை. ஆனால் மிகவும் சாதாரணமான ஒரு பிரச்சினையில் மிகுந்த கொதிப்படையும் நிலை ஏற்படுவது வருந்தத்தக்கது. மாண்புமிகு ஹாஜா ஷெரிப் குறிப்பிட்டதைப் போல், இன்றைக்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் சொல்லக்கூடும். எல்லா உறுப்பினர்களுக்கும் பொதுவான உரிமை கடமை இருக்கிறது என்று. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

* * * *

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு இனிமேல் இந்த மாதிரி சம்பவங்கள் நடைபெறாது என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தச் சபையிலே நடந்து இருக்கிற நிகழ்ச்சி கள் இதற்கு முன்னாலே இந்த மன்றத்திலே நடந்ததாக எனக்கு நினைவு இல்லை. * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்ட அந்த வார்த்தைகளை மீண் டும் இங்கே பயன்படுத்தி இருப்பதால், அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ப. நெடுமாறன் : இதுபோன்ற நிலைமைகள் இன் றைக்கு ஏற்பட்டு இருப்பதற்கு வருத்தம் அடைந்தாலும் கூட இன்றைக்கு அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1982 மார்ச் 25] [திரு. ப. நெடுமாறன்]

தலைவர் அவர்களும் பேசியது எல்லோருக்கும் ஆறுதல் கொடுத்து இருக்கிறது. எதிர் காலத்தில் இது போன்ற நிகழ்ச்சிகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதை இரண்டு பேரும் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டு பேர்களுடைய கருத்தையும், உங்களுடைய கருத்தையும் இந்த அவையில் உள்ள எல்லா உறுப்பினர்களும் ஏற்று, இந்த அவையின் மரியாதையையும், மரபையும், மதிப்பையும், கண்ணி யத்தையும் எதிர்காலத்தில் தொடர்ந்து காப்பாற்றுவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் எடுத்துக் காட்டி, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அவையிலே ஏற்பட்ட நிகழ்ச்சிகளை ஒட்டி எதிர்காலத்தில் எப்படிப்பட்ட பாங்கு கடைப்பிடிக்க வேண்டும் என்று தாங்கள் அறிவுறுத்தி இருக்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவரும், எதிர் தரப்பிலே மற்ற கட்சித் தலைவர்களும் அந்த உணர்விலே ஒன்றி நின்று இந்த அவையின் பெருமையையும் புகழையும் காப்பாற்றத் தக்க வகையிலும், மரபையும் போற்றத்தக்க வகையிலும் இந்த அவை நடை பெற வேண்டும் என்ற நல்ல உணர்விலே கருத்துக்களை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். நாம் எல்லோரும் விரும்பத் தகாத முறையிலும், வேண்டத்தகாத வகையிலும் இந்த நிகழ்ச்சி நடந்து விட்டாலும் கூட, அதனுடைய தன்மைகள் வெளிப்படுத்த வேண்டாம் என்ற முறையிலே தாங்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறீர்கள். இந்த நல்ல உறவு, நல்ல நிலை ஏற்பட்டு இருப்பதன் அடிப்படையிலும், எதிர்காலத்தில் இந்த மன்றம் சிறப்பான முறையில், சீரான முறையில் நடந்து செல்ல முடியும் என்று நம்பிக்கையினுடைய அடிப்படையிலும் தெரிவிக்கப்பட்டு இருக்கின்ற கருத்துக்களுக்கு இணங்க, மாண்புமிகு பேரவைத் துணைத் தலவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களை வெளியேற்றி இன்று முழுவதும் அவையில் கலந்து கொள்ள வேண்டாம் என்று எடுத்து தெரிவித்துள்ள அந்த ஆணையை அந்த விகாரங்கள் எல்லாம் முடிந்து, ஒரு நல்ல உணர்வு வெளிப்படுத்தி இருப்பதன் காரணத்தால்—ரத்து செய்து, மறுபடியும் திரு. ரகுமான்கான் இந்த அவையிலே வந்து உட்கார்ந்து இன்றைய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் செய்யலாம் என்பதைத் தெரிவித்து, அதற்குப் பின்னாலே இந்த அவை தன்னுடைய நல்ல நிலைமைகளின் அடிப்படையில் பணியாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் கருத்துக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர், ரகுமான் கான் அவர்கள் இருக்கையில் வந்து அமர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மைக் இல்லாமல் உட்கார்ந்து கொண்டே சிலர் சொல்கிற வார்த்தைகள் அவையில் உள்ள பலர் காதுகளில் விழுவது இல்லை. ஆனால் பேரவைத் தலைவரின் இருக்கையில் இருப்பவர்கள் காதில்—அருகில் இருப்பதால்—விழுந்துவிடுகிறது. எனவே, உறுப்பினர்கள் மைக் இல்லாமல் உட்கார்ந்து கொண்டு பேசுவது, பிறர் பேசும்பொழுது குறுக்கிடுவது கூடாது. பேரவையில் பயன்படுத்துகிற வார்த்தைகளை மிகவும் ஜாக்கிரதையாகப் பயன்படுத்த வேண்டும்.

(முற்பகல் 10—40)

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

(3) சென்னை பட்டாபிராம் தண்டரை பகுதியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''சென்னை அருகே உள்ள பட்டாபிராம், தண்டரை ஆகிய இடங்களில் ஏற்பட்ட மோதலில் 50 பேர்களுக்கு காயம்பட்டும், வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டும் உள்ளதால் அப்பகுதி பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கேட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு மு. அம்பிகாபதி அவர்களிடம் இருந்து ஒரு முன்னறிவிப்பு வந்துள்ளது. இதே பொருள் குறித்துக் கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்தும் முன்னறிவிப்புகள் வந்துள்ளன:

திரு. பொ. உத்திராபதி
திரு. தி. கா. நல்லப்பன்
திரு. எம். ஆறுமுகம்
திரு. செ. சிவசாமி
திரு. ஏ.டி. கருப்பையா
திரு. து. இராசரத்தினம்.
திரு. இ. முத்துராமலிங்கம்
திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்.
திரு. எல். இளையபெருமாள்.
திரு. என். சங்கரய்யா
திரு. என். பழனிவேல்
திரு. ஜே. ஹேமச்சந்திரன்
திரு. சு. பாலன்
திரு. பெ.சு. திருவேங்கடம்
திரு. என்.எஸ்.வி. சித்தன்
திரு. கே.எம். தங்கமணி
திரு. சி. பழனிமுத்து



திரு. கே. சொக்கலிங்கம். திரு. பி. எம். தங்கவேல்ராஜ்
திரு. வி. கிருஷ்ணமூர்த்தி திரு. ஜி. மூர்த்தி

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. மு. அம்பிகாபதி.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலே பட்டாபிராம் பகுதியில் 3 இளைஞர்கள் அந்தப் பகுதியிலே கட்டிவைத்து அடிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து அங்கே தகராறு ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தகராறை தொடர்ந்து கிராமங்களுக்குள்ளே மோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த மோதல்களின் விளைவாக, அந்தக் கிராமத்தைச் சேர்ந்த கிட்டத்தட்ட 50 பேருக்கும் மேலாக படுகாயம் அடைந்திருக்கிறார்கள். திருநின்றவூர் திருவிழாவிற்குச் சென்ற இடத்திலும், சினிமா தியேட்டர் அருகிலேயும் அந்தத் தகராறு ஏற்பட்டிருக்கிறது. அங்கே நின்று கொண்டிருந்தவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். கேசவராஜ் என்ற வாலிபருக்கு பலத்த அடி பட்டிருப்பதாகத் தெரிகிறது. மற்றொரு பெண்ணுக்கும் அந்தக் காயம் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு கடுமையான நிலைமை இரண்டு கிராமங்களுக்கு இடையே மோதலை ஏற்படுத்தியது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

அந்த மோதலில் உடனடியாக காவல் துறை தலையிட்டு அந்த மக்களுக்கு மத்தியில் தொடர்ந்து தலையெடுத்த தகராறுகளை—அந்த நிலைமைகளை மாற்றுவதற்கு பதிலாக, காவல் துறையினர் இதில் மெத்தனமான போக்கை காட்டியிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். இரண்டு கிராமங்களுக்கு மத்தியில் ஏற்படக் கூடிய அந்தச் சூழ்நிலை பெரிய மோதலாக பெரியதாக வளர பல விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையும் உருவாக்கப்பட்டு விடுகிறது. அத்தகைய தாக்குதலின் விளைவாக 17 பேர்கள் காவல் துறையினால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வீடுகள் சேதம் அடைந்திருக்கின்றன அப்படி வீடுகள் சேதம் அடைந்திருப்பவர்களுக்கு எல்லாம் நஷ்டஈடு கொடுக்கிற முறையிலே அரசாங்கம் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட சம்பவங்கள் பல்வேறு இடங்களிலேயும் நடக்கிறது. சாதாரண சம்பவங்கள் பெரிய மோதலாக உருவாகி, அது பல பேர்கள் காயம் அடையக்கூடிய நிலையையும், பல குடிசைகள் தீவைக்கப்படுவதுமான சம்பவங்களை உருவாக்குகின்றன. இப்படிப்பட்ட முறைகளுக்கு என்ன அடிப்படையான காரணம் ? வேறு ஏதாவது சக்திகள் ஊடுருவி இத்தகைய செயல்களை செய்வதற்

கான முறையிலே கையாளுகிறார்களா என்பதைப் பற்றியெல்லாம் விரிவாக விவாதிப்பதற்காக, இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, பட்டாபிராம், தண்டரை பகுதிகளில் கடந்த 22 ஆம் நாள் இரவு ஏற்பட்ட ஜாதிக் கலவரத்தையொட்டி காவல் துறையின் மூலமாக நேரிடையாக நான் தொடர்பு கொண்டு, வேகமாக காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்குப் பின்னால், ஓரளவிற்கு 22 ஆம் தேதி அமைதியாக இருந்தாலும், மீண்டும் 23-ஆம் தேதி அந்தப் பகுதியிலே கலவரங்கள் அதிகமாக ஆக்கப்பட்டன. ஏற்கெனவே 40, 50 பேர்கள் தாக்கப்பட்டு மருத்துவமனையிலே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனால் அதே நேரத்திலே குடிசைகளும் வைக்கோற் போர்களும் தீ வைக்கப்பட்டு கொளுத்தப்பட்டன என்ற சம்பவமும் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது.

கடந்த ஆண்டும் இதேபோல் ஒரு பிரச்சினை இருந்திருக்கிறது. ஆகவே ஜாதி என்ற தீ பரவாமல் அது அடியோடு தடுக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், அதே நேரத்தில் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுத வேண்டிய மாணவர்கள் நேற்றைய முன் தினம் 23 ஆம் தேதி, அந்தப் பகுதியில் நிலவிய பதட்டநிலை காரணமாக தேர்வுக்குச் சென்று அங்கேயிருக்கக்கூடிய பட்டாபிராம் உயர் நிலைப் பள்ளியில் நடக்கும் எஸ். எஸ். எல். சி. இறுதித் தேர்வில் கலந்துக் கொள்ள முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே 10 ஆண்டுக் காலம் படித்த மாணவர்கள் இன்றையதினம் கடைசியாண்டு தேர்வு எழுத முடியாத ஒரு சூழ்நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அங்கேயிருக்கக்கூடிய காவல் நிலையத்தில் அதிகமான அளவில் காவலர்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்தவேண்டும் என்றும் சொல்லிக் கொள்கிறேன். அப்படி ஏற்படுத்துவதன் மூலமாகவும், அந்தப் பகுதிகளில் அமைதியை ஏற்படுத்துவதன் மூலமாகவும் தான், அந்தப் பகுதிகளிலே பரவி வரும் ஜாதிக் கலவரங்களை தடுத்து நிறுத்த ஏதுவாகயிருக்கும்.

ஆக அந்த அடிப்படையிலே கடந்த ஆண்டு திருமுல்லைவாயில் கிராமத்திலே இரு சமுதாயத்தினருக்கிடையே தகராறு ஏற்பட்டு அதன்மூலமாக இரண்டு பேர் இரண்டு பக்கத்திலேயும் இறக்க நேரிட்டது. அப்போதே காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி இது வரையிலேயும் அங்கே ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே அங்கே அடிக்கடி ஜாதிக் கலவரங்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியாமல் போய்விடுகின்றது. ஆகவே அதைத் தடுக்கின்ற வகையிலே நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதுபற்றிய ஏனைய பிரச்சினைகளை எடுத்துச்சொல்லவேண்டி இருப்பதன் காரணத்தால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்துவிட்டு இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகே உள்ள பட்டாபிராம் பக்கத்திலே உள்ள அன்னமேடு கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தண்டரை கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே ஒரு மோதல் உருவாகி இதன் காரணமாக பல குடிசைகள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. பலர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். இரவிலே சினிமா பார்த்துவிட்டு திரும்பிய ஒரு இளம் பெண் படுகாயப் படுத்தப்பட்டு மானபங்கப் படுத்தப்பட்டுள்ளார். இதனால் அந்தப் பகுதியிலே ஒரு பதட்டமான சூழ்நிலை உருவாகி வருகின்றது. குளிக்கச் சென்ற மூன்று வாலிபர்கள் அங்கே உள்ள ஒரு தோட்டத்திலே இளநீர் பறித்ததன் காரணத்தால் அந்த மூன்று வாலிபர்களும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் மரத்திலே கட்டி வைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு, மிகவும் கேவலமான முறையிலே நடத்தப்பட்டுள்ளார்கள். ஆனால் அவர்கள் இளநீர் பறித்ததன் காரணத்தால் அந்தத்தோட்டத்தின் சொந்தக்காரர்கள் காவல் துறையினரிடம் ஒப்படைத்து உரிய முறையிலே நடவடிக்கை எடுத்திருக்கலாம். அப்படி எடுத்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமை அங்கே ஏற்படுவதைத் தடுத்து இருக்கலாம். ஆகவே இன்று சாதாரணமான ஒரு பிரச்சினை இப்படி ஒரு ஜாதிக் கலவரமாக உருவாகி உள்ள இந்த நிலைமையை விரிவாக இந்த அவையிலே விவாதிக்க வேண்டி இருப்பதால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. எல். இளையபெருமாள் : மாற்றுத் தலைவர் அவர்களே, 22—3—1982 அன்று தண்டரை என்ற கிராமத்தைச் சேர்ந்த ஆதி திராவிட சமுதாய இளைஞர்கள் குளிக்கச் சென்று இருக்கிறார்கள். வருகின்ற வழியிலே அமுதூர் மேடு என்ற இடத்திலே உள்ளவர்கள் அவர்களைச் சிறு தவறுக்காக கட்டி வைத்து அடித்திருக்கிறார்கள். அவர்கள் செய்த தவறுக்காக காவல் நிலையத்திலே புகார் செய்து அவர்களுக்கு தண்டனை கிடைக்கக்கூடிய வகையிலே செய்திருக்கலாம். ஆனால், அப்படிச் செய்யாமல் ஜாதி என்ற பிரச்சினைக்கு இடம் தந்து விட்டதால் தான் இப்படிப்பட்ட பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. சென்ற ஆண்டு நடந்தது கூட மாங்காட்டுக் கோவில் திருவிழாவிற்கு ஆதி திராவிடர்கள் செல்லும்போது கூட இந்த மாதிரிதான் திருமுல்லைவாயில் என்ற கிராமத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்து, கொலை கூட நடந்தது. ஆகவே இதுபோன்ற சிறு காரணங்களை எல்லாம் தவிர்க்க வேண்டும். தீண்டாமைச் சட்டங்கள் எல்லாம் இருந்தும் கூட குறிப்பிட்டவர்கள் அந்த

சட்டத்திற்கு மரியாதை கொடுக்காமல் சட்டத்தைத் தங்கள் கையிலே எடுத்துக் கொள்கின்ற பாவமான காரியத்தைச் செய்கிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ அரசியல்வாதிகளும் அவர்களுக்கு ஊக்கம் காட்டுவதால் தான் இந்த அவல நிலைமையும் தமிழகத்திலே இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமை கடந்த இரண்டு ஆண்டு காலமாக தமிழகத்தின் பல்வேறு இடங்களில் நடப்பது அரசாங்கத்திற்கும் தெரியும், அதிகாரிகளுக்கும் தெரியும் அவர்கள் கவலை அற்ற நிலைமையிலே இருப்பதன் காரணத்தால் இந்தமாதிரி தாழ்த்தப்பட்டவர்களுக்கும், நலிந்தவர்களுக்கும், ஏழைகளுக்கும் போலீஸ் அதிகாரிகள் கருணை காட்ட மாட்டார்களோ என்ற அச்சம் ஏற்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் ராசரத்தினம் அவர்கள் சொன்னதுபோல் அந்த இரண்டு சம்பவங்கள் நடந்தபோதும் நானும் அவர்களும் சேர்ந்து பல இடங்களிலே சமாதானம் செய்திருக்கிறோம். ஆனால் காவல் துறையினர் உடனடியாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால், அலட்சியம் காட்டிய காரணத்தால்தான் இன்று சிறு விஷயங்கள் எல்லாம் ஜாதிக் கலவரமாக மாறி உயிர்களுக்கும் பொருள்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டு வெறி உணர்வு தூண்டப்படுகின்றது. இது பற்றி எல்லாம் தெளிவாக விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை எல்லாம் ஒத்தி வைக்க வேண்டும். ஆனால் மாண்புமிகு முன்னவர் அவர்களுக்கு அதிகாரிகள் தருகின்ற தகவல்களை இங்கே கொடுப்பதும் அதை அவர்கள் இங்கே சொல்லி இந்த அவையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டாம் என்று சொல்வதுமான நிலைமை இருக்கின்றது ஆனால் இப்படிப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இங்கே கொண்டு வந்தாலும், கொண்டு வரப்படாவிட்டாலும் தமிழகத்திலே பல இடங்களிலே இப்படிப்பட்ட அவல நிலைமை இருக்கின்றது.

(முற்பகல் 10–50)

இதைப்பற்றி நம் அமைச்சரவை தீர்க்கமாக்ச் சிந்தித்து இப்படிப்பட்ட ஒரு கேவலமான நிலை இருந்தால் அது அரசுக்கும் கேடு, மனித குலத்திற்கும் கேடு என்பதால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். பலர் பல வகைகளில் வெறி உணர்வைத் தூண்டுவது என்பது கடந்த ஓராண்டுக் காலமாக நடைபெற்று வருகிறது. இப்படி வெறி உணர்வைத் தூண்டுகிறவர்கள் யாராக இருந்தாலும், எந்த வகுப்பைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், எந்த இனத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மீது தேசீய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்க இந்த அரசு தவறுமானால் வட நாட்டில் இருப்பது போன்ற நிலைமையை விட மோசமானதொரு நிலைமை தமிழ் நாட்டின் ஏற்பட இடம் கொடுப்பதாக அமையும்,. எனவே அதற்கு இடம்





கொடுக்காமல் இருக்க இப்பிரச்சினை பற்றி தீர்க்கமாக விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கய்யா :** மாற்றுத் தலைவர் அவர்களே, 22—3—1982 அன்றும் 23—3—1982 தேதி அன்றும் காலை ஆவடி அருகில் உள்ள தண்டரையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் மிகவும் வருத்தத்திற்குரியது. கண்டனத்திற்குரியது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கே முதல் நாள் ஆதி திராவிட மக்கள் வாழக்கூடிய வீடுகள் மீது ஒரு கூட்டம் சென்று தாக்குதல் நடத்தி அதில் 20 பேர்கள் காயமடைந்துள்ளனர். ஐந்து பேர்கள் கடுமையாக காயப்படுத்தப்பட்டு, ஒரு 14 வயதுச் சிறுவன் மிகவும் ஆபத்தான நிலைமையில் மருத்துவ மனையில் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இந்த நேரத்தில் காவல் துறை என்ன செய்து கொண்டிருந்தது என்ற கேள்வி எழுகிறது. இதற்கு பதில் கொடுக்கக் கூடியவகையில் 23-ம் தேதி காலையில் மற்ற ஜாதியினர் வசிக்கக்கூடிய இடங்களில் தாக்குதல் நடைபெற்றிருப்பதாகவும் அது சம்பந்தமாக பல வீடுகள் தாக்கப்பட்டிருப்பதாகவும் போன்ற இப்படிப்பட்ட ஒரு கொடிய நிலை தமிழ்நாட்டில் ஏற்பட்டிருப்பது அபாயகரமானது.

ஹரிஜனங்களுக்குள்ள உரிமைகளைப் பூர்ணமாக அமல் நடத்தக் கூடிய வகையில் சிவில் ரைட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்டை எல்லா ரெவின்யூ அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும், அரசு அதிகாரிகளும் மனப்பூர்வமாக அமல்படுத்தும் வகையில் அரசு ஏற்பாடு செய்யவேண்டும். தேவைப்பட்டால் அதற்கான மறு பயிற்சி அளிக்கவேண்டும். அதிகாரிகள், நடு நிலையில் இருந்து பல்வேறு சமுதாயப் பிரிவினை மதித்து நியாயம் வழங்கவேண்டிய அதிகாரிகள், ஜாதிய உணர்வுகளுக்கு ஆட்பட்டால் நாட்டை யாராலும் காப்பாற்ற முடியாது. ஆகவே, அதிகாரிகளிடையே சமுதாய நீதி பற்றிய உணர்வை ஏற்படுத்தவேண்டும். அரசியல், பொருளாதார திட்டங்களின் அடிப்படையில், அரசியல் கட்சிகள் அமைந்து, அதில் யார் வேண்டுமானாலும் சேரலாம் என்ற அந்த இயக்கங்களைவிட்டு விட்டு ஜாதிய அடிப்படையில் இன்று மக்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டு குரோதங்கள் சண்டைகள் ஏற்பட்டால் அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் ஆபத்தாகும்; அனைத்துக் கட்சிகளும் ஜாதிய கூடங்களாக மாறும் நிலை ஏற்படும். அது அபாயகரமானதாகும். ஆகவே அரசாங்கம் வானொலி, டி.வி., இவைகளின் மூலம் மத்திய அரசை வற்புறுத்தி தமிழ்நாடு ஹரிஜன மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பிரசாரம் செய்யப்படவேண்டும். ஹரிஜன மக்களின் உரிமைகளை இதர மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் மாநில அரசின் பிரசாரக் கருவிகள் மூலம் மாவட்

டங்களில் பல கருத்தரங்குகள், கூட்டங்கள் நடத்துவதின் மூலம் ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள், வெளியேயுள்ள அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகளையும் அழைத்து மதச் சார்பற்ற, ஜாதிச் சார்பற்ற முறையில் தமிழக மக்களிடையே ஒரு ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இப்படிப்பட்ட கலவரங்களை, தீயை அணைப்பது போல் உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் தீர்க்க முடியாது. இது ஒரு நோய். இந்த நோயை சமுதாயத்திலிருந்து அறவே நீக்குவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்கு மார்க்சிஸ்ட்டு கம்யூனிஸ்ட் கட்சி ஒத்துழைக்கும்.

சிலகாலங்களுக்கு முன்பு பட்டாபிராம் பக்கத்தில் இதே போல் நிகழ்ச்சிகள் நடந்திருப்பதாக ஞாபகம். அந்தப் பிரதேசத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. எனவே இந்த மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும், ஜாதிக் கலவரங்கள் ஏற்படாதிருக்கும் வகையிலும் அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதற்கு எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்ற முறையில் இப்பிரச்சினை பற்றி விவாதிக்க பேரவையில் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சென்னை அருகே உள்ள பட்டாபிராம் என்னுமிடத்தில் ஆதிதிராவிட மக்களுக்கும், தாழ்த்தப்பட்டவரல்லாத சமூகத்தினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலிலே, ஆதித்திராவிடர்களில் பல பேர் காயமடைந்து, மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாங்காய் திருடியதன் விளைவாக, தகராறு ஏற்பட்டு, ஒரு வாரத்திற்கு முன்பு ஏற்பட்ட அந்த நிகழ்ச்சி, பின்பு ஊருக்குள்ளே அந்தக் கலகம் புகுந்து, ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் தாழ்த்தப்பட்டவரல்லாதவர்கள் ஏறத்தாழ 500-க்கு மேற்பட்டவர்கள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு, அந்த ஆதிதிராவிட மக்களை தாக்கியிருக்கிறார்கள். அவர்கள் அந்த மக்களைத் தாக்கியதை எண்ணிப் பார்க்கும்போது, இது திட்டமிட்ட செயலாக இருக்கும் என்று நம்மாலே ஊர்ஜிதப்படுத்த முடிகிறது. காரணம், வந்தவர்கள் அத்தனைபேரும் கறுப்பு நிற பாண்டும் கறுப்பு நிற சட்டையும் அணிந்து, முகத்திலே அடையாளம் தெரியாமல் சாயத்தைப் பூசிக்கொண்டு, கையிலே கம்பும் அரிவாளும் கொண்டு தாக்கியிருக்கிறார்கள். இது மதப் பிரசாரத்தின் தூண்டுதலாலே இருக்குமென்ற அச்சம் எழுகிறது. இந்த நிலைமையைப் போக்கியாக வேண்டும்.





அந்தக் கலவரத்தைப் போக்குவதற்காக போலீசார் சென்றபோது, அந்தப் போலீசாரிலே ஒரு குறிப்பிட்ட கான்ஸ்டேபிள், கொலை குற்ற முயற்சிக்காக அவர்மீது, அந்த கான்ஸ்டபிள்மீது போலீசாரே வழக்கு போட்டிருக்கிறார்கள். இது என்ன நியாயம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்தக் கான்ஸ்டேபிள் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவர். ஆகவே, அவர் மீது போடப் பட்டிருக்கும் இந்த வழக்கை வாபஸ் பெறவேண்டும், இத்தகைய கலவரம் மீண்டும் நடவாமல் இருப்பதற்குள், இரண்டு பிரிவினரையும் ஒன்று சேர்த்து, பேசி முடிவெடுக்க வேண்டும். இந்தக் கலவரத்தை யார் தூண்டி விட்டார்கள் என்பதைக் கண்டறிய வேண்டும் யார் யார் எல்லாம், எந்தெந்த இடத்திலிருந்து வரவழைக்கப்பட்டார்கள். அவர்கள் எந்தப் பின்னணியைச் சார்ந்தவர்கள் என்பதைக் கண்டறிவதற்கு ஒரு விரிவான விவாதத்தை ஏற்படுத்த இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்— தலைமை.)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம், தண்டரையில் நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தங்கள் உணர்வுகளையும், கருத்துக்களையும் எடுத்துச் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றிய நிலைமையை விளக்கிக் கூற விரும்புகிறேன்.

செங்கற்பட்டு மாவட்டம், தண்டரை கிராமத்தைச் சேர்ந்த ரவி, மற்றொரு ரவி சுந்தரராசன் ஆகிய ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த சிறுவர்கள் 21— 3— 1982 அன்று மாலையில் அமுதூர் மேடு கிராமத்தில் உள்ள சாதி இந்து ஒருவருக்குச் சொந்தமான கிணற்றில் குளித்துள்ளனர். சாதி இந்துக்களில் சிலர் இவர்களை திட்டியுள்ளனர். இருதரப்பினரிடையேயும், வாய் தகராறும் கைகலப்பும் நடந்துள்ளது. சுந்தரராசனுக்குக் காயம் ஏற்பட்டுள்ளது. ஆதி திராவிடர்கள் சாதி இந்துக்களின் தோட்டங்களில் காய்கறிகளைத் திருடுவதாகவும், அதைப் பற்றிக் கேட்டபொழுது ஆதி திராவிடர்கள் திட்டியதாகவும், அன்று இரவு சுமார் 7-30 மணியளவில் கருணாகரச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு கோவிந்தசாமி நாயக்கர் என்பவர் புகார் செய்துள்ளார். ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த திரு ராசேந்திரன் என்பவர் ஆதி திராவிடச் சிறுவர்கள் மூவரையும் 21— 3— 1982 அன்று இரவு சுமார் 8 மணியளவில் பட்டாபிராம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து புகார் ஒன்றினை கொடுத்துள்ளார். அதன் பேரில், இ.த.ச. 147, 341, 323 மற்றும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 7 (1)ன் கீழும் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. 5 பேர்கள் கைது செய்யப்பட்டனர். தண்டரை, அமுதூர்மேடு,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 25

கருணாகரச்சேரி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சாதி இந்துக்கள் சுமார் 200 பேர் 22—3—1982 அன்று இரவு சுமார் 9 மணியளவில் கூட்டமாகச் சேர்ந்துகொண்டு, தண்டரை ஆதி திராவிட காலனிக்குச் சென்று, ஆதி திராவிடர்களைத் தாக்கியும், வீடுகளுக்குச் சேதம் ஏற்படுத்தியும், தீ வைத்தும் உள்ளனர். தகவலறிந்து, காவல் துறையினர் விரைந்து சென்று நடவடிக்கைகள் மேற்கொண்டனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிக அளவில் காவல் துறையினர் வரவழைக்கப்பட்டு, பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. திரு. முருகேச நாயக்கர் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். காவல் துறை துணைத் தலைவர், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அதிகாரிகள் முகாமிட்டு நிலைமைகளைக் கண்காணித்து வருகின்றனர். நிலைமை அமைதியாக உள்ளது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச் தெரிவித்ததற்கிணங்க இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படுவது உள்ளபடியே வருந்துவதற்குரிய ஒன்றுதான். ஆகவே, சமுதாயத்திலே இப்படிப்பட்ட மிக சாதாரணமான காரியங்கள் எல்லாம், மிகப் பெரியதாக வடிவெடுத்து, அதன் காரணமாக ஊரிலுள்ள மக்களுக்கு பெரும் சேதத்தையும், மற்றவற்றையும் ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு உள்ள அந்த மனப்பாங்கு மாறவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் தெரிவித்தார்கள் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகின்றபோது, பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்றார்கள். அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்களும் எடுத்துத் தெரிவித்தார்கள்.

(முற்பகல் 11-00)

ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்பது அரசினுடைய நோக்கம், குற்றம் செய்தவர்கள் தாங்கள் செய்த குற்றத்தை மறைப்பதும் எதிரிகள் செய்யாத குற்றத்தைச் செய்ததாக மிகைப்படுத்திச் சொல்வதும் வழக்கமாக இருந்து வருகிறது. ஆகவே இதிலே எது நியாயம் என்பதைக் கண்டுபிடிப்பதிலே சிரமம் ஏற்படுகிறது. கூடுமான வரையில் சாதி மாச்சரியங்கள் காரணமாக இப்படிப்பட்ட சம்பவங்கள் அடிக்கடி வருமானால் — நாம் அவைகள் கூடாது என்பதற்காக அடிக்கடி விழாக்கள் என்றும் வார நாட்கள் என்றும் கொண்டாடிவந்தாலும் கூட— இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்ற முறையிலே சமுதாயத்திலே உள்ள தலைவர்களும், பொதுத் தொண்டாற்றுகின்றவர்களும், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையிலே பணியாற்றினால் இப்படிப்பட்ட மத மாச்சரியங்கள் ஏற்படாமல் இருக்கமுடியும். ஏற்பட்டாலும்



1982 மார்ச் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு வராமல் தடுக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படும். ஆதி திராவிடர்களும் மற்றவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பொருள் நட்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். 5, 6 பேர்கள் கைதுசெய்யப்பட்டு இருக்கிறார்கள், வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது, மேலும் புலன் விசாரணை நடபெற்று வருகிறது. அரசாங்கம் அதன் பேரில் மேலும் நடவடிக்கை எடுத்துவருகிறது. இப்போது அங்கே அமைதி நிலவி வருகிறது என்பதை எடுத்துச் சொல்லி இது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டியதில்லை என்பதைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து அத் தீர்மானம் குறித்து விவாதிக்க தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## (4) அறிவிப்புகள்.

### (அ) அமைச்சர்கள் உட்பட உறுப்பினர்கள் தங்களது சொத்துக்கள் பற்றி அறிவிப்பது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு 27—8—1969 அன்று பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், அமைச்சர்கள் தங்களது சொத்து பற்றிய விவர அறிக்கையை அதற்குரிய படிவத்தில் 31—3—1981 இல் உள்ளவாறு சட்டமன்றப் பேரவைத் துறைக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## (5) கவன ஈர்ப்புகள்.

### (அ) உதகமண்டலம் "இண்ட்கோ கேரேஜ்" நிறுவனம் மூடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் கே. கல்லன் மு. அரங்கநாதன், கே. உச்சி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு ஊரக தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கே. கல்லன் : தலைவர் அவர்களே, '' உதகமண்டலத்திலுள்ள ' இன்ட்கோ கேரேஜ் ' நிறுவனம் மூடப்பட்டுள்ளது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

உதகமண்டலத்தில் தனியார் நிறுவனமான ஜார்ஸ் ஒக்ஸ் லிமிடெட் (George Oakes Limited) தொழிலாளர் பிரச்சனை காரணமாக 1971ல் மூடப்பட்டது. அதன் காரணமாக வேலை இழந்த தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பளிக்க கூட்டுறவு முறையில் இண்ட்கோ காரேஜ் தொழிற் கூட்டுறவுச் சங்கம் 1972ம் ஆண்டு மார்ச்சு மாதம் உதகமண்டலத்தில் நிறுவப்பட்டது. முப்பது தொழிலாளர்களுக்கு இத் தொழில் கூட்டுறவு சங்கத்தில் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வந்தது. 1975–76 வரை இலாபத்தில் இயங்கி வந்த இத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் 1976–77 முதல் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. 31–12–1981 முடிய இத் தொழிற் கூட்டுறவு சங்கம் ரூ. 4·06 இலட்சம் நட்டம் அடைந்தது. இத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் நட்டத்தில் இயங்கி வந்ததற்குக் காரணம், போதிய வாகனங்கள் பழுது பார்ப்பதற்கு இச்சங்கத்திற்கு வராமையாலும், பணியமைப்பு மற்றும் சில்லரைச் செலவினங்களாலும், தொழிலாளர்களுக்கு இ.பி.எப். மற்றும் இ.எஸ்.ஐ. முதலியவை வழங்க நேரிட்டதாலும் இத்தொழிற் கூட்டுறவு சங்கம் தேக்க நிலையடைந்து நட்டத்தில் இயங்கி வரத் தலைப்பட்டது. மேலும் இத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், இயக்குநர், மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனத்தாரால் அங்கீகரிக்கப்படாமையாலும் இத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்திற்கு பிற அரசுத் துறைகளிலிருந்து வாகனங்களைப் பழுது பார்த்த வகையில் வர வேண்டிய இனங்களில் பெரும் பகுதியான பில்கள் மோட்டார் வாகனப் பராமரிப்பு நிறுவனத்தாரினால் மறுக்கப்பட்டமையாலும், தொழிலாளர்கள் சரிவர பழுது பார்ப்புப் பணியினைச் செய்யாமையாலும், அவர்களுடைய ஒத்துழையாமையினாலும் இத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தில் பண முடக்கம் ஏற்பட்டு, சங்கம் சரிவர இயங்காமல் போனது. ஆகவே தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டத்தின் பிரிவு 65ன்கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணை அதிகாரி தன் விசாரணை அறிக்கையில் மேற்கூறிய காரணங்களால் இத்தொழிற் கூட்டுறவு சங்கத்தை மூடிவிடுவதற்கு பரிந்துரை செய்தார். பொது மேலாளர், மாவட்ட





தொழில் மையம், கோயம்புத்தூர் அவர்களும் இத் தொழிற் கூட்டுறவு சங்கத்தை மேலும் ஊக்குவிக்க இயலாமையைத் தெரிவித்து, விசாரணை அதிகாரி பரிந்துரைத்தபடி இத் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தை மூடி விடலாம் என்று அறிக்கை அனுப்பியுள்ளார். எனவே, இத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் 17–12–1981 அன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம் பிரிவு எண். 85ன்கீழ் கலைக்கப்பட்டது.

திரு. கே. கல்லன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தை பொறுத்தவரையில் அரசாங்கத்தைச் சேர்ந்த பல இலாக்காக்களின் நூற்றுக் கணக்கான வண்டிகள் அங்கே வந்தன. நல்ல பயனுள்ள முறையிலே அது நடந்து கொண்டிருந்தது. அது இப்பொது மூடப்பட்டிருப்பதால் அதை ரிவைவ் பண்ணுவதற்கு அரசு முன் வருமா ? அவர்களுக்கு செட்டில்மெண்ட் செய்யவில்லை என்று தெரிகிறது. அதற்கான ஏற்பாடுகளை அரசு கருணை கூர்ந்து செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவ்ர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் தொடங்குவது பற்றிக் கேட்டார்கள். அதைத் தொடங்குவதாக இல்லை. ஆனால் தொழிலாளர்களுக்கு நியாயமாக என்ன என்ன செய்ய வேண்டுமோ சட்டப்படி அவைகளையெல்லாம் செய்வதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. மு அரங்கநாதன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள விளக்க அறிக்கையிலே 1972 முதல் 1976 வரையிலே லாபம் இருந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். 1976ஆம் ஆண்டிற்குப் பிறகு நட்டம் எற்பட்டது. என்று கொடுத்திருக்கிறார்கள். நட்டத்திற்குக் காரணம் போக்குவரத்து வண்டிகள் அங்கே அதிகமாக வராதது என்றும் மோட்டார் பராமரிப்பு நிறுவனம் அதற்கு அங்கீகாரம் அளிக்காதது என்றும் சொல்லப்படுகிறது. நீலகிரியிலே கூட்டுறவுத் துறையாக இருந்தாலும், பொதுத் துறையாக இருந்தாலும், அரசுத் துறையாக இருந்தாலும் ஏராளமான வண்டிகள் வருகின்றன. இண்ட்கோ மூலமாக செய்து கொடுத்தால் பலனுள்ளதாக இருக்கும், அதோடு அரசாங்கத்திற்கு பணம் மிச்சமாகும். ஆகவே அதைத் திறப்பதற்கும் அங்கே பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கும் நன்மைகளைச் செய்வதற்கும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அந்தச் சங்கம் செயலற்று இருப்பதற்குக் காரணம் போக்குவரத்து வாகனத் துறை அங்கீகரிக்காதது மட்டுமல்ல, வேறு பல காரணங்களும் இருக்கின்றன, அவைகளைப் பற்றியெல்லாம் நான் இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறேன். தொழிலாளர்கள் பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. கல்லன் அவர்கள் கேட்டபோதே நான் விவரங்களை அளித்திருக்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசுத் துறைகளின் சார்பிலே 2 லட்சம் ரூபாய் வர வேண்டி உள்ளது. மேலும் 1978ஆம் ஆண்டில் அங்கே ஏற்பட்ட புயல் காரணமக பல லட்சம் ரூபாய் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆகவே இந்தத் தொழிலாளர்களுக்காக செட்டில்மென்ட் செய்யும் போது அரசாங்கம் அனுதாபத்தோடு கவனித்து உதவி தொகை அளிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, அனுதாபத்தோடு கவனிக்கப்படும்.

## (ஆ) புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் மின் உற்பத்தி இயந்திரம் இயங்காதது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், பெ. திருமாறன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. பெ. திருமாறன்: தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் மின் உற்பத்தி இயந்திரம் (ஜெனரேட்டர்) இயங்காததன் காரணமாக அறுவை சிகிச்சை செய்து கொள்ள முடியாமல், நோயாளிகள் படும் இன்னல் குறித்த' அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

மாவட்ட தலைமை மருத்துவமனை புதுக்கோட்டையில் ரூ. 3.30 இலட்சம் செலவில் 63 கே.வி.ஏ. சக்தி வாய்ந்த ஒரு ஜெனரேட்டர் அமைக்க ஏற்கனவே அரசு ஆணை வெளியிட்டு உள்ளது. இம் மருத்துவமனையில் ஜெனரேட்டர் பொருத்துவதற்குத் தேவையான ஒரு அறை கட்டவும், மற்றும் சில மாற்று மராமத்துப்பணிகளுக்காகவும் பொதுப்பணித் துறையினரால் உரிய ஒப்பந்தப்புள்ளி (டெண்டர்) விவரங்கள் கோரப்பட்டு உள்ளன. மேலும் ஜெனரேட்டர் கேட்கப்பட்டுள்ள உரிய கம்பெனியிடமிருந்து வரப்பெற்றவுடன், அம்மருத்துவமனையில் பொருத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன. எனவே, புதுக்கோட்டை மாவட்ட மருத்துவமனையில் ஜெனரேட்டர் அமைப்பதன் மூலம் மின்சாரத் தடையால் அறுவை சிகிச்சை அரங்குகளில் ஏற்படும் கஷ்டத்தை நீக்கலாம்.



திரு. பெ. திருமாறன்: தலைவர் அவர்களே, அரசு இந்த ஜெனரேட்டர் வைக்க வேண்டுமென்று ஆணையிட்டும் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. சாதாரண காரியமாக கருதாமல் இதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அரசு விரைவாக ஜெனரேட்டர் வாங்குவதற்கும், அதற்கான கட்டிடம் கட்டி முடிக்கவும் துரித நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள உத்தரவிடுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையை பொறுத்தவரையில் நானே நேரிடையாகச் சென்று பார்வையிட்டேன். உடனடியாக இந்த ஜெனரேட்டரை பொருத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று செயலாளர் அவர்களிடம் சொல்லி இருக்கிறேன். விரைவிலே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு, அந்த ஜெனரேட்டர் இயங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 6. அறிக்கை அளித்தல் சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் பேரவைக்கு அளிப்பார்.

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை சட்ட விதிகள் ஆய்வுககுழு இரண்டாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) ஆளுநரிடமிருந்து வரப்பெற்ற செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1981–82 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Ar icle 203, Clause (3) of the Consiitution of India, I, Sadiq Ali, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legisla ive Assembly of the Demands for fur her Grants for the year 1981-82"

## இறுதி துணை நிதி அறிக்கை 1981-82
## பொது விவாதமும் வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1981—82 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதி அறிக்கை, பொது விவாதம். சரியாக ஒரு மணிக்கு இந்த விவாதத்தின் மீது வாக்கெடுப்பு எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இந்த விவாதத்தில் கலந்துகொள்கிற உறுப்பினர்கள் சுருக்கமாகவும் அதே நேரத்தில் விளக்கமாகவும் பேசும்படி வேண்டி கேட்டுக் கொள்கிறேன். முதலில் உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே இறுதி துணை நிதி கோரிக்கையாக 502 கோடி ரூபாய்க்கு உண்டான கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு பட்ஜெட் தாக்கல் செய்தபோது மொத்தமாக அரசு அனுமதியை கோரியது 1,128 கோடி ரூபாய். சாதாரணமாக பட்ஜெட்டிலே ஐந்து சதவீதம் அல்லது பத்து சதவீதம் என்று இறுதி மானியக் கோரிக்கை வருவது வழக்கம். அது தான் சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் கடைபிடிக்கக்கூடிய கொள்கையாகும். 1962-லே நாங்கள் இருந்த சமயத்திலும், அதற்கு முன்னதாகவும் மொத்த பட்ஜெட் 50 கோடி அல்லது 60 கோடி தான். மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதி அமைச்சராக இருந்த போது நான் செஞ்சுரி அடிக்கப் போகிறேன் என்று பெருமையாக சொல்வார்கள். பட்ஜெட்டை 100 கோடிக்கு உயர்த்துகிறேன் என்ற விதத்திலே மொத்த தொகை 100 கோடி தான் அப்போது இருந்தது.

(முற்பகல் 11-10).

சென்ற ஆண்டிலே இந்த மன்றத்திலே தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டிலே ரூ. 1,128 கோடி என்று கூறப்பட்டது. இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக, இந்த மன்றத்தினுடைய அனுமதியை நாவலர் அவர்கள்—நிதியமைச்சர் அவர்கள் கோருவது, இந்த ரூ. 1,128 கோடி போதாது, மேலும் ரூ. 502 கோடிக்கு அனுமதி தாருங்கள் என்று கேட்கிறார்கள் என்றால், பட்ஜெட் தயார் செய்த, தாக்கல் செய்த முறைகள் சரியல்ல. சரியான முறையிலே இந்த பட்ஜெட்டை அவர்கள் கைக்கொள்ளவில்லை என்றுதான் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இங்கே குற்றம் சாட்ட விரும்புகிறேன். திடீர், திடீர் என்று நீங்கள் வேண்டியவர்களுக்குச் சில நன்மைகளைச் செய்ய வேண்டுமென்ற காரணத்தினால் பலவிதமான செலவினங்களைச் செய்துவிட்ட காரணத்தினால், இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோமா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே சமர்ப்பித்திருக்கிற பட்ஜெட்டிலே, ரூ. 502 கோடியிலே ஏறக்குறைய 35, 36 கோடி



ரூபாய் தன்னிறைவுத் திட்டத்திற்கு மட்டும் அதிகமாக ஆகிவிட்டதாகச் சொல்கிறார்கள். தமிழ்நாடு பூராவும் தன்னிறைவுத் திட்டத்தை இன்றைய தினம் பெரும்பான்மையான பஞ்சாயத்து யூனியன்களிலே நிறைவேற்றுவதாகச் சொல்கிறார்கள். ஆனால் இப்பொழுது என்ன நிலை என்றால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறவர்கள் அதிகமான வேலைகளை எடுப்பதற்கும் இன்னும் சொல்லப்போனால் பலவிதமான தவறுகளைச் செய்து, அந்தப் பஞ்சாயத்து யூனியனிலே இருக்கக்கூடிய தன்னிறைவுத் திட்டத்திலே பல கோடிக்கணக்கான ரூபாய்களுக்குத் தவறு நடப்பதற்கான வழி முறைகள் சட்டபூர்வமாக ஆக்கப்பட்டு விட்டது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் இருக்கக்கூடிய கான்ட்ராக்டர்கள் யார் ? அந்தத் தன்னிறைவுத் திட்டங்களை நிறைவேற்றக்கூடியவர்கள் யார ? அந்தத் தன்னிறைவுத் திட்டங்களை நிறைவேற்றுவது யார்? யார். சொல்லலாம் ஒரு சில இடங்களிலே ஊறுகாய் போடுவதைப் போல திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களும் அங்கே இருக்கிறார்கள், காங்கிரஸ் காரர்களும் இருக்கிறார்கள் என்று சொன்னால் மட்டும் போதாது இன்னும் சொல்லப் போனால் எனக்குத் தெரியும்* * *

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு உறுப்பினரைப்பற்றி இன்னொரு உறுப்பினர் குற்றச்சாட்டு சொல்ல முடியாது. சொல்வதாக இருந்தால், அந்த உறுப்பினருக்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும். பொதுவாகச் சொல்வதாக இருந்தால், அவைத் தலைவருக்கு நோட்டீஸ் கொடுத்து, அவைத் தலைவருடைய ஒப்புதலைப் பெற்று எழுப்ப வேண்டும். திடீரென்று எழுப்ப முடியாது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** பெயரை வேண்டுமானால் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வேண்டுமானால் சொல்கிறேன் என்பது அல்ல. அந்த வாசகங்கள் நம்முடைய அவைக் குறிப்பிலே இருப்பது நம்முடைய உறுப்பினர்களின் தன்மைக்கு நல்லது அல்ல. அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

இன்னொன்றையும் சொல்கிறேன், ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைப்பற்றிக் குற்றஞ்சாட்டும்போது அதை முன்கூட்டியே பேரவைத் தலைவரிடம் சொல்லி அனுமதி பெற வேண்டும்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க

[1982 மார்ச் 25

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும். இதிலே அவர்களுக்குத் தெரியாமல் இல்லை. குறைகள் இருக்கின்றன என்று அவர்களுக்குப் பல அதிகாரிகள் மூலமாக வந்திருப்பதாக எனக்குத் தெரிகிறது. அப்படியிருந்தால் அவைகளை அப்போதைக்கப்போது முதலமைச்சரவர்கள் தலையிட்டு அவைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றுதான் நான் இந்த மன்றத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நிலவரி வசூல் சம்பந்தமாகச் சொல்ல வேண்டும். நம்முடைய நிதியமைச்சரவர்கள் துணை மானியக் கோரிக்கையில் இவ்வளவு ரூபாய் கோருகிறார்களே இன்னும் சிலவற்றைக் கோரினால் அவற்றை அனுமதிக்கலாம் என்ற நோக்கத்திலேதான் நாங்கள் இருந்தோம். இன்றைய தினம் கிராமங்களிலிருந்த மணியக்காரர்கள், கணக்குப்பிள்ளைகள் நீக்கப்பட்டு, அவர்கள் உட்கார்ந்து கொண்டே சம்பளம் வாங்குகிறார்கள். அது உயர்நீதிமன்றத்திலே இருக்கிறது. அதற்குள்ளே செல்ல நான் விரும்பவில்லை.

ஆனால் ஒரு ஆண்டிலே 7 கோடி ரூபாய் நில வரியாக வசூல் செய்யப்படுகிறது. இந்த ஏழு கோடி ரூபாயை பல இலட்சக் கணக்கான விவசாயிகள் 5 ரூபாய், 10 ரூபாய், 100 ரூபாய், 200 ரூபாய் என்று செலுத்துகிறார்கள். பணக்கார விவசாயிகளுக்குப் பணத்தின் மதிப்பு தெரியாது. ஆனால் மிகவும் ஏழை எளிய விவசாயிகள் இருக்கிறார்களே அவர்கள் 10 ரூபாய் கட்டுவதற்கு இரண்டு தவணை, மூன்று தவணை கேட்டுக் கொண்டிருக்கும் நிலை இருப்பதால், முதலமைச்சரவர்கள் இங்கே இருப்பதால் நான் சொல்ல வருகிறேன். நீங்கள் விவசாயிகள் கடனைத் தள்ளினீர்கள் ; அதை பாராட்டுகிறோம். ஆனால் இவ்வளவும் செய்து ரூ. ஏழு கோடியையும் நீங்கள் தள்ளினீர்களென்றால், இந்த நில வரியை ரத்து செய்வீர்கள் என்றால் தமிழ் நாட்டிலே பல இலட்சக் கணக்கான விவசாயிகள் உங்களைப் பாராட்டுவார்கள். இந்த நிலவரி இரண்டு மூன்று ஆண்டுகளாக வசூல் செய்யப்படாமல் இன்றைய தினம் பல இடங்களில் நிலவரிக்காக ஜப்தி செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைப் போலக் கூட்டுறவுக் கடன்களுக்காகவும் ஜப்தி நடக்கிறது. ஆனால் கூட்டுறவுக் கடன் முழுவதையும் ரத்து செய்ய வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்ல இல்லை ; இப்பொழுதும் சொல்லவில்லை. ஆனால் சிலரைப் பிரித்து வைத்துத் தள்ளினீர்கள். அதைச் சரியாகச் செய்யாத காரணத்தால் இன்றைய தினம் 120 கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது. இந்த ஜப்திகள் தமிழ் நாட்டில் எல்லா மாவட்டங்களிலும், எல்லா தாலூக்காக்களிலும் பரவலாக நடக்கின்றன. ஒரு பக்கத்திலே கூட்டுறவுக் கடனுக்காக ஜப்தி நடக்கிறது, இன்னொரு



1982 மார்ச் 25] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

பக்கத்திலே லேண்ட் ரெவின்யூவிற்காக ஜப்தி நடக்கிறது. இந்த முறைகள் நீக்கப்பட வேண்டும். ஆகவேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்லிக் கொள்கிறேன், இன்றைய தினம் முதலமைச்சராக இருக்கக் கூடியவருக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், தயவு செய்து நிலவரியை—ஏழு கோடி ரூபாய்தான் ஆண்டு ஒன்றுக்கு இருக்கும். இது வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்து இருக்கும் வரி, ஆகையால் இந்த ஏழு கோடி ரூபாயை நீங்கள் ரத்து செய்தீர்கள்? என்றால் தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகள் உங்களைப் பாராட்டுவார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இந்த நிலையை எடுத்து வைக்கிறேன். பட்ஜெட்டிலே இவை இல்லாததைக் குறித்து என் மன அதிருப்தியைச் சொல்லிக் கொள்கிறேன்.

விவசாயிகள் பயன்படுத்தக் கூடிய இம்ப்ளிமென்ட்ஸ் இருக்கிறதே, தயவு செய்து அவைகளை ஜப்தி செய்யாதீர்கள், பம்ப் செட்டை ஜப்தி செய்கிறோம் என்றால் என்ன நிலைமை ஏற்படும் ? மூன்று ஏக்கர் வைத்திருப்பவர் பம்பு செட்டுக்காக கடன் வாங்கிவிட்டு, அதைக் கட்ட முடியவில்லை என்பதால் அதை ஜப்தி செய்து விட்டால் அவருடைய க்ராப் இருக்கிறதே, ஸ்டேன்டிங் கிராப் என்று இருக்கக் கூடிய பயிர் காய்ந்து போய் விடும். அவருடைய குடும்பமே தற்கொலை செய்து கொள்ளக் கூடிய நிலைமை வந்து விடும். ஆகவேதான் அக்ரிகல்சுரல் இம்ப்ளிமெண்ட்ஸ் என்று விவசாயத்திற்குத் தேவைப்படும் டிராக்டர்களாக இருந்தாலும் சரி, பம்ப் செட்டுகளாக இருந்தாலும் சரி, இன்னும் மற்ற உபகரணங்களாக இருந்தாலும் சரி, அவைகளை ஜப்தி செய்யக் கூடாது. அதைப் போலவே வீட்டிலே உள்ள கதவுகளைக் கழற்றுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த நிலைமைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல் விலையைப் பற்றி இங்கே நாவலர் அவர்கள் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னால் சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்றால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறார்கள், நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும், 144 ரூபாய் செலவாகிறது, 147 ரூபாய்க்கு அக்ரிகல்சுரல் பிரைசஸ் கமிஷன் ஒத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால் அவர்கள் 115 ரூபாய்தான் கொடுக்க முடியும் என்று சொன்ன காரணத்தினால்தான் நாங்கள் ரிசர்வ் பேங்கிலே இருக்கும் கிரடிட் ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் காரணமாக அதற்கு மேலே கொடுத்து வாங்க முடியவில்லை என்று நம்முடைய நாவலரவர்கள்—நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் சொல்வது சரி. 144 ரூபாய் ஆகிறது. அதற்குமேல் இன்னும் 3 ரூபாயாவது குவிண்டாலுக்கு இருக்க வேண்டுமென்று

மத்திய அரசாங்கத்திற்கு முதலமைச்சரவர்கள் எழுதியிருக்கிறார்கள் என்றால் அது மிகவும் நியாயமானது. ஆனால் அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்பதற்காக இங்கேயுள்ள விவசாயிகள் கஷ்டப்பட வேண்டுமா, விவசாயிகள் நல்ல விலை கிடைத்தால்தானே அவர்கள் மீண்டும் பயிரிடுவார்கள். தமிழ் நாட்டிலே இன்றைய தினம் மார்ஜினல் சர்ப்ளஸ் என்று சொல்லக் கூடிய தமிழ்நாடு இன்னும் உணவு உற்பத்தியை அதிகமான அளவிற்கு ஆக்க முடியும். அதன் காரணமாக சுபிட்சம் இருக்க முடியும். ஆகவே, 144 ரூபாய் அல்லது 150 ரூபாய் ஒரு குவிண்டாலுக்குக் கிடைப்பதற்கு என்ன முறைகளை நீங்கள் கையாள்கிறீர்கள் ? நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த திரு. அழகர்சாமி அவர்கள்........(மணியடிக்கப் பட்டது) நான் ஒருவர் தான் எங்கள் கட்சியில் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எல்லாக் கட்சிகளுக்கும் ஒவ்வொருவர்தான் பேசுகிறார்கள். காங்கிரஸ் கட்சியிலும் ஒருவர்தான் பேசுகிறார். எனவே, உறுப்பினரவர்கள் பேச்சை சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும்.

(முற்பகல் 11.20)

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. அழகர்சாமி அவர்களும் அதேபோல உமாநாத் அவர்களும் இரண்டு தினங்களுக்கு முன்னாலே சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்றால், நெல்லுக்கு குறைந்த பட்சம் 150 ரூபாய் குவின்டாலுக்கு கொடுக்க வேண்டும். அதே சமயத்தில் அரிசி விலை ரூ. 2.50க்கு எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யலாம் என்று, எந்தத் தரப்பிலே இருந்து வருகின்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சிகள் சார்பிலே இருந்து வருகிறது என்றால் இந்த அரசாங்கம் ஏற்க வேண்டும் அல்லவா, அதற்காக நீங்கள் என்ன வழி வகைகளை செய்தீர்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். இன்றைய தினம் நெல்லைப் பயிரிடக் கூடிய தஞ்சாவூர் விவசாயிகள், காவிரி டெல்டா விவசாயிகள் எல்லாம் வாடி வதங்குகிறார்கள். மற்ற மாவட்டங்களிலே இருக்கக் கூடியவர்கள் கமர்சியல் கிராப் பயிரிடுகிறார்கள். இன்றைய தினம் நெல் கட்டுபடியாகவில்லை என்று கரும்பு பயிரிடுகிறோம். கரும்பு தேவையில்லை என்றால் மிளகாய் பயிரிடுகிறோம். வாழை பயிரிடுகிறோம். ஆனால் தஞ்சை பகுதியில் இருக்கக் கூடியவர்கள் காவிரி டெல்டா பகுதியிலே பாசனம் செய்யக் கூடியவர்கள் நெல்லைத்தான் பயிரிட முடியும். அங்கே வேலை செய்யக் கூடிய கூலிக்காரனாக இருந்தாலும் சரி, இந்த நெல்லை விற்றுத்தான் அவன் வீட்டுக்குத் தேவைப்படக்கூடிய பொருள்களை வாங்க முடியும். ஆனால் அந்த நெல்லுக்கு இன்றைய தினம் என்ன விலை கிடைக்கின்றது?

நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். தயவு செய்து பொன் முட்டை இடும் வாத்தை அழிக்காதீர்கள். இன்றைய தினம் விவசாயிகளை அழித்து விட்டால் அவனுக்கு நியாயமான விலை



கொடுக்காத நிலை ஏற்படுமானால் அந்த விவசாயிகளுடைய நிலை ஓங்காது. ஆகவே அதற்கு ஒரு வழியை நீங்கள் கைபற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எப்படி என்றால் இன்றைய தினம் 50 சதவீதம் லெவி இருக்கின்ற காரணத்தாலே குறைந்த விலையில் வாங்குகின்றார்கள். இதனால் விவசாயிகளுக்குப் பாதகம் விளைகின்றது. அதே சமயத்தில் அந்த லெவியை எடுத்து விடுவீர்களேயானால் Allowing the marketting force to interfere in the paddy marke ஆகையினால் இந்த 144 ரூபாய் விலை ஏறுவதற்கு, நல்லவிலை கிடைப்பதற்கு நீங்கள் வழி வகை செய்யவேண்டும் என்று இங்கே சொல்லிக் கொள்ளுகிறேன்.

தஞ்சாவூரில் ஜனவரி மாதத்திலே 57 கிலோ நெல் 80 ரூபாய் 85 ரூபாய் விற்றது. மார்ச்சு மாதத்திலே இன்றைய தினம் என்ன விலைக்கு விற்கப்படுகிறது? இன்றைய தினம் 57 கிலோ நெல் 68 ரூபாயில் இருந்து 70 ரூபாய் வரை, நல்ல நெல் 75 ரூபாய்க்கு மேலே ஏறவில்லை. ஜனவரி மாதத்திலே கிடைக்கின்ற அந்த விலை மார்ச்சு மாதத்திலே கிடைக்கவில்லை என்றால் அவர்கள் எல்லாம் எப்படி வாழ்க்கை நடத்த முடியும். அதேபோல காஞ்சிபுரத்திலே 76 கிலோ நெல்லை 85 ரூபாய்க்கு வாங்குவதற்கு யாரும் முன்வரவில்லை. ஆகையினால் அவன் வாடுகிறான். ஆகையினால் தான் நீங்கள் "allowing the markeing forc" நீங்கள் லெவியை எடுத்து விடுவீர்களேயானால் இந்த வியாபாரிகள் அந்த விவசாயிகளுக்குக் கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களானால் (மணி அடிக்கப்பட்டது) அதாவது 150 ரூபாய்க்குக் குறையாமல் கொடுக்க வேண்டும் என்று நான். இங்கே என்னுடைய கருத்தினை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல நகைகளை வைத்துக் கடன் வாங்குவதற்குக் கூட இன்றைய தினம் 'கிரெடிட் ரெஸ்டிரிக்ஷன்ஸ்' இருக்கின்றது. கூட்டுறவுக் கடன் கிடைக்கவில்லை, ஆகையினால் நகையை வைத்து, தாலியை அடமானம் வைத்து வாங்கலாம் என்று போனால் பாங்கிலே கடன் கொடுக்க மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். மாநில அரசாங்கம் இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி இப்படி நகைகளின் பேரில் கடன் கொடுக்கிற அளவுக்காகிலும் நீங்கள் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நெல் பயிரிடக் கூடிய இடங்களிலே இருக்கக் கூடிய விவசாயிகள் மிகவும் பாதகம் அடைந்திருக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். Please appoin an expert commission to s udy the condi ions of he farmers in Thanjavar.

கடைசியாக கரும்பு விலையைப் பற்றி சில வார்த்தைகளைச் சொல்லி முடித்து விடுகிறேன். நம்முடைய மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எழுதி இருக்கின்றது. 200 ரூ. வைக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள், 8.5

சதவீதம் ரெக்கவரிக்கு. அதேபோல முனு ஆதி கமிட்டியும் 210 215 ரூ. ஒரு டன் கரும்புக்கு விலை கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அது எங்கே போயிற்று என்று தெரியவில்லை. இன்றைய தினம் 165 ரூ. என்று முதலிலே சொல்லிவிட்டு, மாநில அரசாங்கம் இன்னும் ஒரு 10 ரூ. தள்ளிக் கொடுப்பதன் காரமணாக 175 ரூ. தான் விவசாயிகளுக்குக் கிடைக்கின்றது. கட்டுபடியான விலை கரும்பு விவசாயிகளுக்குக் கொடுத்தால் தான் மீண்டும் அவன் கரும்பு பயிரிடுவான். இன்றைய தினம் சர்க்கரை உற்பத்தியில் நான்காவது மாநிலமாக 21 சர்க்கரை ஆலைகளை வைத்து இருக்கும் தமிழ்நாடு பின்னோக்கிப் போகும். நிலையில் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆகையால் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து கருநாடகத்தில் கொடுப்பதைப் போல, பக்கத்திலே இருக்கின்ற ஆந்திர மாநிலத்திலே கூட 8.5 ரிக்கவரிக்கு 200 ரூ. கொடுப்பதைப்போல இந்த அரசும் உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் அரசாங்கத்திற்கு வரக் கூடிய வ்ரியிலே ஒரு 10 ரூ. தள்ளிக் கொடுப்பதன்மூலமாகஆலைக்காரர்களை இன்னும் கொஞ்சம் நிர்ப்பந்தப்படுத்துவத்ன் மூலமாக 175 ரூ. என்று இருக்கும் நிலையை மாற்றி, குறைந்த பட்சம் 200 ரூ. கொடுத்தால்தான் மீண்டும் கரும்பு பயிரிடுவான். அப்போதுதான் அங்கேயிருக்கின்ற ஆலைகளுக்கு கரும்பு கிடைக்கும் என்று கூறி இந்தத் திட்டங்கள் எலலாம் இந்த இறுதி மானியக் கோரிக்கையில் இல்லாத காரணத்தினால் நம்முடைய நாவலர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த இறுதி மானியக் கோரிக்கையை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கவில்லை என்று கூறி இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு சமர்ப்பித்துள்ள இறுதி துணை அறிக்கைமீது பேசுகிற வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே நம்முடைய இந்த மன்றத்தில் நடைபெறுகின்ற விவாதங்களின்போதும்,பட்ஜெட்டின்போதும் உறுப்பினர்கள் பேசினார்கள் நிதிநிலை அறிக்கையின் போதும், எதிர்க்கட்சியில் உள்ளவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் இல்லை, இறுதி நிதி நிலை அறிக்கையிலும் ஒன்றும் இல்லை என்று சொல்லி, அங்கலாய்த்துக் கொண்டார்கள். ஆனால் எங்களைக் பொறுத்தவரை கிராமத்தில் சொல்வார்கள், காய்க்கிற மரம் கல்லடிபடும் என்று, அந்த வகையில் இன்றைக்குப் புரட்சித் தலைவர் அரசு ஒரு காய்க்கிற மரமாக இருந்துவருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் காய்க்கிற மரத்தின் மீது நம்முடைய பிரதான எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சில ஆலோசனைகளைச் சொல்வார்கள். அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். எப்படி இருந்தாலும், இந்த பிரதான எதிர்க்





கட்சியில் உள்ள சில நண்பர்கள், கல்லை எறிந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் ஒன்றைச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய புரட்சித் தலைவர் காய்க்கிறமரம் என்ற வகையில், ஆதி திராவிட சமூகத்திற்கும், ஏழை விவசாயிகளுக்கும், பாமர மக்களுக்கும், போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும், பின் தங்கிய சமூகத்திற்கும், இன்னும் பல்வேறு பின்தங்கிய நிலையில் உள்ள சமூகத்யைச் சேர்ந்த மக்களுக்கும், பல்வேறு வாக்குகளைக் கொடுத்து, அவைகளை படிப்படியாக நிறைவேற்றிக்கொண்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் அவ்வாறு கல்லை எறிந்தாலும், காய்க்கிற மரம் காய்த்துக்கொண்டேதான் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஆதி திராவிட சமூகத்திற்கும் ஏழை எளிய சமூகத்திற்கும் இந்த அரசு பல நல்ல திட்டங்களை தீட்டி இருக்கின்றது. அந்தவகையில்தான் இந்த ஆதி திராவிட சமூகத்திற்கு, வீட்டு வசதி மேம்பாட்டு திட்டத்திற்கு 1 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதைப் பாராட்ட வேண்டாமா ? ஆகவே, இப்படிப்பட்ட காரியங்களை இந்த அரசு தொடர்ந்து செய்து வருகிறது. அது மட்டுமல்ல பின் தங்கிய சமூகத்திற்கு, அவர்கள் படிப்பதற்காக, பள்ளி வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக வேண்டி அந்த அடிப்படையில் 12 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஆதி திராவிட மாணவர்கள், பட்டப்படிப்பு, மேல்பட்டப்படிப்பு படிப்பதற்கு, 22.70 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இப்படிப்பட்ட் திட்டங்களை இந்த ஆதி திராவிட மக்களுக்காக இந்த அரசு படிப்படியாக செய்துவருவதை நீங்கள் மனதார ஏற்றுக்கொள்ளவில்லை என்று நான் நம்புகிறேன்.

அதற்கடுத்து, இந்தியாவிலே நம்முடைய மாநிலம் தான் தன்னிறைவு திட்டம் ஒன்றை ஏற்படுத்தி அதை அமுல்படுத்தி எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருக்கிறது. காந்தி அடிகள் கண்ட ராம ராஜ்யத்தை நிறைவேற்றி, அன்னாருக்கு அஞ்சலி செலுத்திவிட்டார் நம்முடைய புரட்சித்தலைவர். அண்ணல் காந்தி அஞ்சலியும், தென்னகத்தில் காந்தி அண்ணாவின் அஞ்சலியும் தன்னிறைவு திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் பெற்றுவிட்டார்கள். அப்படிப்பட்ட தன்னிறைவு திட்டங்களுக்கு 150 ஊராட்சி ஒன்றியங்களுக்கு 33.57 கோடி ரூபாயை இந்த அரசு இந்த நிதி ஆண்டில் ஒதுக்கியிருக்கிறது. அதோடு இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு எவ்வளவு ஆர்வத்தோடு செயல்படுகிறது என்பதைப் பார்க்கிற போதுதான் மனமார இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

அது மட்டுமல்ல, கூட்டுறவுத்துறையில், இந்த ஏழை எளிய பாமர மக்களுக்கு கூட்டுறவுக் கடன் மூலமாகக் கடன் வசதி, பயிர் கடன், உர கடன் என்றும் இப்படி பல வகையாக பிரித்துத்

தருகிறது இந்த அரசு, அப்படிப்பட்ட கூட்டுறவு அமைப்புகளுக்கு 80.36 இலட்சம் ரூபாயை இந்த அரசு ஒதுக்கி இருக்கிறபோது நான் இந்த அரசை பாராட்டுகிறேன். இதுமட்டுமல்ல, இலங்கைத் தமிழர்கள் நம்முடைய அரசாங்கத்தின் மூலமாக தமிழ்நாட்டில் வந்து குடியேறி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவதற்காகவும், அப்படிப்பட்ட இலங்கைத் தமிழர்கள் வாழ்க்கை வளம் பெறுவதற்காகவும், அவர்களை வளப்படுத்துவதற்காகவும் இந்த அரசு கூட்டுறவு மூலமாகவும், மற்றவகை மூலமாகவும் 153.75 இலட்சம் ரூ. ஒதுக்கி இருப்பதை நான் பாராட்டுகிறேன்.

[முற்பகல் 11-30]

அது மட்டுமல்ல, கூட்டுறவு அமைப்பில் பல நல்ல ஏற்பாடுகளைச் செய்து இன்றைக்கு இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய நெசவாளர்களை, வறுமையில் வாடும் நெசவாளர்களை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவந்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும், அவர்களுடைய வறுமையைப் போக்க வேண்டும் என்ற அடிப்படையிலே புரட்சித் தலைவர் அவர்கள் 100 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்; நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் : அதை நான் மனமார வரவேற்கிறேன்.

அதைப்போல கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளிய விவசாயிகள், பாமர மக்கள் நகரத்திற்குச்செல்ல சாலை வசதி வேண்டும். அந்த அடிப்படையில் இன்றைக்கு இந்த அரசு சாலை வசதிகளை ஏற்படுத்தி, அந்த சாலைகளுக்கு தார் போட்டு கிராமத்திலிருந்து நகரத்திற்குச் செல்லவும் நகரத்திலிந்து கிராமத்திற்குச் செல்லவும் பேருந்துகள் விடுவதற்கும் சாலை சீர்செய்ய இந்த அரசு 5.27 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் ஒரு கிராமத்திலிருந்துவந்தவன் என்பதால் பாராட்டி போற்றி வரவேற்கிறேன்.

அடுத்து இங்கே சத்துணவுத் திட்டம் இருக்கிறது. துணைவுத் திட்டத்தின் மூலம் இந்த அரசு இன்றைக்கு ஏழை எளிய குழந்தைகளுக்கு இலவச உணவு அளித்து வருகிறது இப்படிப்பட்ட சத்துணவுத் திட்டத்திற்கு அது நல்லமுறையிலே அமைவதற்கு 1.60 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை பாராட்டுகிறேன்.

அடுத்து போக்குவரத்துத் துறை. இந்த அரசு போக்குவரத்துத்துறையை திறமையான முறையில், நல்ல முறையில், திறம்பட நடத்தி வருகிறது. இந்த அரசு போக்குவரத்துக் கழகங்களை நல்லமுறையில் நடத்திவருகிறபோது அந்தத் தொழிலாளர்களுக்கு மாண்புமிகு போக்வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் பல நல்ல திட்டங்களை அறிவித்தார்கள். 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதையும் தாண்டி. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அந்தத் தொழிலாளர்கள் கேட்காமலேயே அவர்களுக்கு பல இலட்சம் ரூபாயை வாரி வழங்கியிருக்கிறார்கள் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். இப்படி எல்லாம் செய்யும்போது நம்முடைய பிரதான எதிர்க்கட்சி நண்பர்கள் பாராட்டுவார்கள் என்று நான் கருதுகிறேன்.



அதற்கு அடுத்து, இங்கே முதியோர்களுக்கு உதவித் தொகை, ஊனமுற்றோர், விதவைகளுக்கு நிதி உதவி வழங்க மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 17,934 பேர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதைப்போல விவசாயத் தொழிலாளர்கள் 30,000 பேர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்கு இந்த மன்றத்தின் அனுமதியைக் கோரியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் கிராமப்புறங்களில் இருக்கிற ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள், முதியோர்கள், ஊனமுற்றவர்கள், விதவைகள் ஆகியோரின் எண்ணிக்கையை இன்னும் கொஞ்சம் கூட்டி அவர்கள் அத்தனை பேர்களுக்கும் நிதி உதவி அளிக்க நம்முடைய அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நெய்வேலி பகுதியில் நெய்வேலியைச் சுற்றி உயர்நிலைப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளுமாக 15 பள்ளிகள் இருக்கின்றன. அங்கே தொழிலாளர்கள் நிறைந்திருக்கிறார்கள். அதிகாரிகள் நிறையபேர் இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கிற கிராமங்கள் முன்னேறிக்கொண்டுவருகின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அங்கே அதிகமான உயர்நிலைப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளும் இருக்கின்ற காரணத்தால் நெய்வேலியில் ஒரு கலைக்கல்லூரியை வரும் நிதி ஆண்டில் அமைத்துத் தரவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவரர்களுக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. இல. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1981—82 ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மானியக் கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். அதிலே மொத்தம் 52.67கோடி ரூபாய்க்கு அவையில் ஒப்புதலைக் கோரியிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய அங்கத்தினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல நிதிநிலை அறிக்கைக்குப் பின்னால் துணை நிதி நிலை அறிக்கையிலே இவ்வளவு தொகை வருவது நியாயம்தானா என்ற ஒரு கேள்வி எழுந்துகொண்டு வந்திருக்கிறது. இந்த நிலையில் மக்களுக்குப் பயன்படக்கூடிய திட்டங்கள் இதில் இருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை. நிர்வாகச் செலவுக்குத்தான் அதிகமாக பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். ஒரு அரசு மக்களுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக நிர்வாகச் செலவுக்கு என்று

அதிகமான பணத்தை ஒதுக்கீடு செய்வது நியாயமாக இருக்காது. ஜனநாயகமாக இருக்க முடியாது. இது ஏதோ இராணுவ ஆட்சியில் அல்லது அவசர காலத்தில் பிரகடனம் செய்வதைப்போன்ற ஒரு அறிக்கையாக இருக்கிறது என்று நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்..

அந்த அளவிற்கு இல்லாமல், இதிலே மக்கள் நல்வாழ்வுக்கான திட்டங்கள் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்கள், வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான திட்டங்கள், உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்கள், வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கான திட்டங்கள், தொழிற்சாலைகளைப் பெருக்கும் திட்டங்கள் இடம் பெறவேண்டும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கோரிக்கைகள் தான் இன்றைக்குச் சமுதாய வளர்ச்சிக்குத் தேவையான கோரிக்கைகளாக இருக்கின்றன. ஆனால் அவற்றிற்குக் குறைந்த அளவில் தான் திட்டமிடும் நிலையில் இந்த அரசு இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஆகவே, சமுதாய மேம்பாட்டிற்காக சமுதாய வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை அரசு தீட்டவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கடந்த ஆண்டு வறட்சியின் காரணமாக, மாநிலம் பூராவிலும் இருந்த வறட்சியின் காரணமாக, ஏறத்தாழ 70 கோடி ரூபாய் அளவிற்கு மத்திய அரசாங்கம் எங்கள் கட்சியின் தலைவர் அன்னை இந்திரா அவர்கள் தலைமையில் உள்ள அரசாங்கம்—நிதி ஒதுக்கீடு செய்து இருந்தது. அது நல்ல முறையில் செலவழிக்கப்பட்டதா என்றால் இல்லை என்று என்னால் கூற முடியும். இந்த நிலையில் தான் மேலவையில் நிதி அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது பரவலாக வறட்சி ஏற்படும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

எங்கள் மாவட்டத்தில்—வடாற்காடு மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகள் ஏறக்குறைய எல்லா இடங்களிலும் இருக்கின்றன. குறிப்பாக போளூர், கணியம்பாடி, கலசப்பாக்கம், செய்யாறு, வந்தவாசி, திருவண்ணாமலை போன்ற பகுதிகள் எல்லாம்வறட்சிப் பகுதியாகும் நிலைமை இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த அரசு எடுக்கும் நிலைமை என்ன? மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே, வறட்சியை எதிர்பார்க்கிறோம் என்று கூறியிருக்கிறார். அப்படியிருக்கிறபோது அதைச் சமாளிக்க என்ன நிலைமை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

ஆனால், இந்த நேரத்தில் நான் இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு ஒன்றைக்கொண்டுவர விரும்புகிறேன். இப்படி வறட்சி என்று சொல்கிற நேரத்தில், வடாற்காடு மாவட்டத்தில் பெரும் பகுதி வறட்சியாக இருக்கிறது என்று அறிந்த நேரத்தில், விவசாயிகளுக்கு எந்த அளவிற்கு தொல்லைகள் தரப்படுகின்றன என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. வாணியம்பாடி பகுதி மிகவும் வறட்சியாக உள்ளது 23—3—82 அன்று வாணியம்பாடி பகுதியில் வள்ளிப்பட்டு என்ற இடத்தில் ஜெயராமன் என்ற ஆசிரியர், சாமிக்கண்ணு என்கிற ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆகிய இருவரையும் காவல் துறையின் உதவியோடு, கூட்டுறவு அதிகாரிகள், அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் வாங்கிய கடன் வசூல் என்கிற முறையில் ஜப்தி செய்து இருக்கிறார்கள். தாக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த ஜெயராமன் என்ற ஆசிரியருக்கு நல்ல காயங்கள் ஏற்பட்ட நேரத்திலும், வாணியம்பாடி மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க்காமல் விட்டு விட்டதால், அவர் அதிகமான பாதிப்புக்குள்ளாகி, மயங்கிய நிலையில் பின்னர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையிலும் அவருடைய காலிலும், கையிலும் விலங்கு மாட்டும் நிலைமை வாணியம்பாடி நகரத்தில் நடந்து இருக்கிறது. இந்த நிலை எதற்காக ஏற்பட்டது என்றால் அவர் கூட்டுறவுச் சங்கத்தில் வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்கவில்லை. கூட்டுறவுத்துறை இத்தகைய நடவடிக்கைகளை அந்தப் பகுதியில் எடுத்து வருவதால் பல மக்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் தொடர்ந்து ஜப்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.



இந்தச் சூழ்நிலை ஏற்படுவதற்கான காரணத்தை அரசாங்கம் யோசிக்கவேண்டும். அசல் ஒரு பகுதி என்று இருந்தால், அதற்கு ஒரு வட்டி, பின்னர் தவணை கடந்த வட்டி ஒரு பகுதி. அபராத வட்டி ஒரு பகுதி, வட்டிக்கு அபராத வட்டி ஒரு பகுதி என்று இப்படி கூட்டுறவுத் துறையிலே கணக்கிடும் நிலைமை இருக்கிறது. ஏதோ 2,500 ரூபாய் 1974—75-ல்கடன் வாங்கினார் என்று வைத்துக்கொண்டால், 5,000 ரூபாய்க்குமேல் அந்தக் கடன் பளுவாக மாறும் நிலை எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது.

இந்த நிலை ஏற்பட்டு விட்டது என்ற காரணத்திற்காக காவல் துறையினரை வைத்து இதற்கு நடவடிக்கை எடுப்பது சரியல்ல. ஒரு பக்கம் வறட்சி என்று சொல்லிக் கொண்டு இன்னொரு பக்கத்திலே இப்படிப்பட்ட தொல்லை கொடுப்பது சரியல்ல என்பதை நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லிக்கொள்கிறேன். இதற்கு நல்லதொரு நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு உதவ வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு தாளாத நிலை என்பதையும், இந்தத் தொல்லைகளால் வன்முறை உண்டாகும் நிலையை அரசாங்கம் உருவாக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன். வாங்கிய கடனை மேலும், மேலும் வட்டியைப் போட்டு இரண்டு மடங்கு ஆக்கி அதை வசூலிக்க வட்டிக் கடைக்காரன் போல் மாறுகின்ற நிலையை அரசு உருவாக்கிக் கொள்ளவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இல. பலராமன்] [1982 மார்ச் 25

விவசாயிகள் நிதானமானவர்கள், பொறுப்பானவர்கள் என்பதை இந்த அரசு உணரவேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தில் விவசாயிகள் மீது கடந்த காலத்திலே அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக இன்று வரையில் அவர்கள் மீது வழக்குகள் இருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு போளூரிலே 1979 ஆம் ஆண்டு முதல் சில பேர்கள் மீது வழக்குப் போட்டிருக்கிறீர்கள். விவசாய போராட்டம் என்ற வகையில், மின்சார கட்டணத்தை உயர்த்தியதன் காரணமாகவும், விவசாயக் கடன் பளு தாங்க முடியவில்லை என்ற காரணத்திற்காகவும் அமைதியாக போராட்டத்தை நடத்தினார்கள் அவர்கள். 140 பேர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. இன்று வரையில் அந்த வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது விசாரணை முடிக்கப்பட்டதா என்றால் இல்லை. 30 பேர்களுக்கு மேல் வெளியூருக்குச் சென்றுவிட்டதாகவும், 6 பேர்கள் இறந்து விட்டதாகவும் தெரிகிறது. வெளியூர் சென்று விட்டார்கள் என்றால், அங்கே வேலைக்கு வந்த வெளியூர்க் காரர்கள் தாம் அவர்கள் என்று தெரிகிறது. இப்படி வெளியூர்க்காரர்கள் மீது எல்லாம் இந்த ஊர் விவசாயிகள் என்று கேஸைப் போடுகிறீர்கள். இப்படி வழக்குகளைப் போட்டிருப்பதனால்தான், இன்றுவரையில் அந்த வழக்குகளை விசாரிக்க முடியாத ஒரு நிலை அந்தப் பகுதியிலே இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

ஒருமுறை உங்களுடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி ஆட்சியை விட்டு இறங்கியபோது நடந்த கலவரத்தில் எல்.ஐ.சி. கட்டிடத்தின் மீது கல்லையெறிந்தவர்கள், கண்ணாடியை உடைத்தவர்கள் எல்லோர் மீதும் போடப்பட்டிருந்த வழக்குகளை வாபஸ் வாங்கியிருக்கிறீர்கள். விடுதலை செய்திருக்கிறீர்கள். ஆனால், ஏழை விவசாயிகள் அவர்கள் நல்லபடியாக வாழ முடியாது இருக்கிற சூழ்நிலையை எதிர்த்துப் போராட்டம் நடத்தியதை, அப்படியே வைத்துக் கொண்டு, அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து, அந்த வழக்குகளை இன்னும் முடிக்காமல், அல்லது வாபஸ் வாங்காமல் வைத்திருக்கிறீர்களே, இது என்ன நியாயம் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

உங்களுடைய ஆட்சி இறக்கப்பட்ட பின்னால், ஆளுநர் அவர்களின் ஆட்சிக் காலத்தில், விவசாயிகளின் மீது போடப்பட்ட வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறவேண்டும் என்ற உத்தரவு இடப்பட்டது. ஆனால் மீண்டும் நீங்கள் வந்த பிறகு உங்களுடைய கட்சிக்காரர்கள்—கல்லெறிந்தவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்கிய நீங்கள், இந்த விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகளை, வாபஸ் பெற வேண்டும் என்று உத்தரவிடப்பட்ட வழக்குகளை, மீண்டும் தொடர்ந்து



[1982 மார்ச் 25] [திரு. இல. பலராமன்]

நடத்த வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறீர்கள் என்றால், இது என்ன மனிதாபிமான செயல், இதில் எங்கே நியாயம் இருக்கிறது? என்பதை இந்த நேரத்திலே கேட்க நான் ஆசைப்படுகிறேன்.

கிட்டத்தட்ட 140 பேர்களுக்கு மேல் இருக்கக்கூடிய அந்த வழக்குகளை வாபஸ் வாங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியிலே மேலும் பல பேர்கள் மீது சார்ஜ் ஷீட்டே இல்லாமல் தொடுக்கப்பட்ட வழக்குகள் இன்றைய தினம் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கின்றன. இவ்வழக்குகளை எல்லாம் மீண்டும் ஒரு முறை சிந்தித்து, மனிதாபிமானத்தோடு பரிசீலிக்க வேண்டும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோல இன்றைக்கு, கடந்த 23 ஆம் தேதியன்று நடந்த ஒரு பிரச்னையில் ஆசிரியர்கள் மீது வன்முறைகளிலே ஈடுபட்டார்கள் என்று சொல்லி காவல் துறையிலே போட்டிருக்கக்கூடிய வழக்குகள், செக்ஷன் 332 அரசு ஊழியர்களைத் தாக்கியது, 341 அரசு ஊழியர்களை பணி செய்ய விடாமல் தடுத்தது, 307 கொலை, செய்ய முயற்சி ஆகியவற்றின் கீழ் போடப்பட்டிருக்கின்றன.

ஒரு ஆசிரியர், ஆசிரியப் பதவியில் இருக்கக்கூடியவர்—அவர் அந்த நேரத்தில் என்ன வார்த்தைகளைச் சொன்னார் என்பது எல்லாம் எனக்கு சரியாக தெரியாது என்றாலும்—அவர் ஒரு அமைதியான மனிதர், எனக்குத் தனியாகத் தெரிந்தவர் என்ற முறையில் நம்பிக்கை உள்ளவர் என்ற வகையில், அவர் கொலை செய்ய முயற்சி செய்தார் என்று வழக்குப் போட்டிருப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நூறு பேர்கள் மத்தியில் அமைதியான ஒரு ஆசிரியர், காவல் துறையில் இருப்பவர்களைத் தாக்கினார் என்றும், கொலை முயற்சி செய்தார் என்றும் வழக்குப் போட்டு, கைது செய்யப்பட்டு, மருத்துவ மனையிலே அவர் உடல் நலத்திற்கு சிகிச்சை அளிக்கக் கூட முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலையை ஏற்படுத்தியிருப்பது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன். இதுபோன்ற நிலைமைகள் தான் வட ஆற்காடு மாவட்டத்திலே நிலவக்கூடிய நிலைமையாக இருக்கின்றன என்பதையும் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த துணை மானியக் கோரிக்கையிலே 1 கோடி ரூபாய்க்கு மேற்கொண்டு நீங்கள் அங்கீகாரம் வாங்கியிருக்கிறீர்கள்—ஆதி திராவிட வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கென, ஆனால் இன்று வரையில் அந்த சமுதாய மக்களுக்கு அதனால் பெருத்த நன்மை எதுவும் ஏற்படவில்லை. அந்த சமுதாய மக்கள் வாழ வேண்டும், வளர வேண்டும் என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை. மகாத்மா காந்தி அவர்களின் காலத்திலிருந்து, நமது இன்றையப் பிரதமர் திருமதி இந்திரா

காந்தி அவர்கள் வரை, 'இந்த ஆதிதிராவிட மக்களுக்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டிக் கொடுத்து அதற்காக பாடுபட்டும் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கென்று சிறப்பான நிதி உதவிகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவைகள் எல்லாம் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்பதுதான் எனக்கும், என் போன்ற மற்ற காங்கிரஸ்காரர் களுக்கும் இருக்கும் கவலை.

ரெவின்யூ ஆக்டின் கீழ் பல இடங்களில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் பல இடங்களில் அப்படி நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே தவிர அந்த நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. அம்பாசமுத்திரம் என்ற இடத்தில் கூட நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். ஒப்படை செய்யப்பட்டதா என்றால் இல்லை. பட்டாக்கள் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. இவைகளையெல்லாம் கண்காணிக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு கேட்டிருக்கிறார்கள். அரிசனப் பள்ளிகள் எல்லாம் மிகவும் க்ஷீணமடைந்த நிலையில் குடிசைகள் போன்ற பகுதி களில் இருக்கக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. அவைகளுக் கெல்லாம் நல்ல தரமான கட்டிடங்களைக் கட்டித் தரக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக தன்னிறைவுத் திட்டம், இந்த தன்னிறைவுத் திட்டம் 150 வட்டாரங்களுக்கு 33·57 கோடி ரூபாய் அளவுக்கு செலவிட இருப்பதாக கூறியிருக்கிறார்கள். இது மிக நல்ல நன்மையளிக்கக்கூடிய திட்டமாக இருந்தாலும் கூட அப்படிக் காணப்பட்டாலும், இது நல்லமுறையில் செயல்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய அக்கறை.

கடந்த காலங்களிலே அந்தத் திட்டம் நல்ல முறையிலே இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. என்னுடைய தொகுதியிலே போரூர் ஒன்றியத்திலே பல சீர்கேடுகளும், நடைமுறையிலே பல தவறுகளும் ஏற்பட்டன என்பதை நான் சுட்டிக் காட்டவேண்டி இருக்கின்றது. அதுபோன்ற நிலைமை ஏற்படாமல் அரசு அக்கறையோடு காரியமாற்றவேண்டும். அவ்வாறு அக்கறை காட்டுவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கின்றது. அதிகாரப் பற்றற்றவர்களின் தலைமை இல்லாததன் காரணத்தால், தலைவர்கள் இல்லாததன் காரணத்தால் தான். இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. ஆணையர்கள்தான் அதற்கான எந்த வேலைகளையும் எடுத்துச் செய்ய வேண்டிய நிலைமை இருக்கின்றது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள்





அவர்களுக்கு ஆலோசனை சொல்வதற்கு வழி இல்லை. அப்படி மீறி அவர்களுக்கு ஆலோசனை சொன்னால் அவர்கள் உடனே இந்த இந்த காரணங்களுக்காக இதை இதைச் செய்யவில்லை என்று சொல்லிவிடுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அதைப் போக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே அங்கே இருக்கின்ற அதிகாரிகளே அதற்கான எஸ்டிமேட் வேலை களையும் செய்யக்கூடிய நிலைமை இருப்பதை நாம் உணர வேண்டும். அந்த வேலைகளை மேற்பார்வையிடுவதற்காக நல்ல பொறியாளர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமப் பகுதியில் கடன் வழங்குதல் நல்ல முறையில் இருக்கவேண்டும். ஸ்ரீலங்கா அகதிகளுக்கு நூற்பாலைகளில் பணி கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். அது சரியான முறையிலே கொடுக்கப்பட வேண்டும். அடுத்து, பல கூட்டுறவு முறையிலே நடைபெறவில்லை. தனியார் நூற்பாலைகள் நல்ல முறையிலே நடைபெறவில்லை. தனியார் நூற்பாலைகள் எல்லாம் லாபகரமாக ஓடிக்கொண்டிருக்கும் போது கூட்டுறவு நூற்பாலைகள் மட்டும் நஷ்டத்தில் இயங்கு வதற்கான காரணம் என்ன? அங்கே பல ஊழல்கள் நடக்கின்றன. வேலூர் கூட்டுறவு நூற்பாலையில் 46 ஆயிரம் ரூபாய் அளவுக்கும், இப்படி பல இடங்களில் பல ஊழல்கள் நடக்கின்றன. அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை எல்லாம் வேறு ஒரு துறைக்கு மாற்றுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே நடவடிக்கை கள் எடுக்கப்படாமல் இருக்கின்றது. மேலும், வேலூர் கூட்டுறவு நூற்பாலையிலே அதிகமான சிலோன் அகதிகளுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அது முறையாக நடக்கவில்லை.

அடுத்து, மைய அரசிடம் கல்விக்காக அதிகமான ரூபாய் கோரி இருக்கிறீர்கள். அது வழங்கப்படும். ஆனால் நீங்கள் அதை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும். காங்கிரஸ் கட்சியின் தலைமையும், இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் உங்களுக்கு 'அறிவுரை கூறி இருக்கிறார்கள். தமிழ்நாட்டின் கல்வித் தரம் குறைந்திருக்கின்றது என்று அவர்கள் கூறி இருக் கிறார்கள். யு.ஜி.சி. ஸ்கேல் என்பதைப் பொறுத்தவரையிலே நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்தவில்லை என்றுதான் நான் குற்றச்சாட்டு கூறவேண்டி இருக்கின்றது.

அடுத்து, ஆராய்ச்சிக்காக நீங்கள் பணம் செலவழிக்க க்கூடிய நிலைமையினைப் பொறுத்த வரையிலே.. .......... (மணியடிக்கப்பட்டது).......... திறமையாக விஞ்ஞான ஆராய்ச்சி செய்கின்றவர்களுக்கு நீங்கள் ஒதுக்கீடு செய்யவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து, சாலைகளைப் பொறுத்தவரையிலே கிராமப்புறங்களில் மேலும் சாலைகள் தேவை என்ற வேண்டுகோள் இன்றைக்கும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. அந்த முறையிலே மக்கள் அவதிப்படுவதைத் தவிர்க்க என்னுடைய தொகுதியில் மலைப்பகுதியில் அமுதி, நாடானூர், ஜன்மாமஸ்தூர் சாலையை மேம்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்...... (மணியடிக்கப்பட்டது)............. .. நல்ல முறையிலே சர்லைகளை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். பல்லவன் போக்குவரத்துக் கழகத்திற்கும் பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கும் முறையே 2,59 கோடி, 1.50 கோடி என்று கோரி இருக்கிறீர்கள். அது வரவேற்க வேண்டியதாக இருக்கின்றது. அது தேவையான பணியாக இருந்தாலும் நடைபெறுகின்ற பணிகள் பெருவாரியாக நல்ல முறையில் நடத்தப்படவில்லை. இந்த இரண்டு போக்குவரத்துக் கழகங்களிலும் 80 இலட்சம் அளவுக்கு டிக்கெட்டுகள் தவறான முறையிலே அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டிருக்கின்றது என்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள் காவல் துறையினர் இது குறித்து தீவிரமாக விசாரணை செய்து சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அப்படிக் கண்டுபிடிக்கப்படாமல் காலம் தாழ்த்தினால் பிறகு நீதிமன்றத்திற்குச் சென்று தடை விதிக்கக்கூடிய நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றன. எனவே அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் விரைவாக செயலாற்றி இந்த 80 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள டிக்கட் அடித்தவர்கள் யார் யார் என்று கண்டுபிடிப்பதோடு, அதிலே யார் யாருக்குப் பங்கு உண்டு என்பதையும் தீவிரமாகக் கண்டுபிடிக்கவேண்டும்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே செண்பகத் தோப்பு அணை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து அறிவித்தார்கள். அந்த அணை பற்றிய பிரச்சினை நீண்டநாளைய பிரச்சினையாக இருக்கின்றது. விவசாயிகளுக்கு மிகவும் வேண்டியதாக இருக்கின்றது. ஆனால் அதுபற்றி அறிவித்தபிறகும் அது தள்ளி வைக்கப்படக்கூடிய நிலைமை இருக்கின்றது. எனவே அதை நல்ல முறையிலே செயல்படுத்துவதற்கு ஆர்வம் காட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த சந்தர்ப்பத்தை வழங்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

[முற்பகல் 11-50]

திரு. ப. குருசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த இறுதி துணை மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு ஒரு சில வார்த்தைகள் மட்டும் கூற நினைக்கிறேன்.





நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் விவசாயிகள் நல்லதொரு முன்னேற்றத்தை அடைந்திருக்கிறார்கள். அதேபோல் அரிஜன மக்களுக்கு அவர்கள் குறைகளைத் தீர்க்கிற வகையில் நல்ல பலசலுகைகளை அரசு அளித்திருக்கிறது. அதேபோல் கல்வித் துறையிலும் நம் அரசு இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நல்லதொரு முன்னேற்றத்தை உருவாக்கியிருக்கிறது என்பதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அதே போல் காவல் துறையிலும் நல்லதொரு முன்னேற்றத்தை ஏற்படுத்தி, காவல் துறையினருக்கு நல்ல பல சலுகைகள் அளித்து, அவர்கள் எண்ணத்திற்கேற்றார் போல் அவர்கள் செயல்முறைகளை விரிவுபடுத்திஅவர்கள் நல்ல முறையில் சேவை செய்ய மற்ற மாநிலங்களுக்கு நம் மாநிலம் ஒரு வழி காட்டியாக அமைந்திருக்கிறது. பிற்பட்டோர் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டு இந்த அரசு மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. இப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம் மாற்றுக் கட்சிகளைச் சார்ந்தவர்கள் அத்தனை பேர்களும் ஏதோ கடமைக்காக, அவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டிற்காக இந்த ஆட்சியை குறை கூறியாக வேண்டும் என்ற காரணத்திற்காக குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள்.அப்படிப்பட்டவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது எப்படிப்பட்ட காரியங்களை செய்தார்கள். எந்தத் தவறுகளைச் செய்தார்கள் என்பதை மக்கள் உணர்ந்துதான் புரட்சித் தலைவர் அவர்களை மீண்டும் முதல் அமைச்சராக ஆக்கியிருக்கிறார்கள். அதை அவர்கள் மனதில் கொண்டு அப்படிப்பட்ட எண்ணங்களையெல்லாம் மீண்டும் சொல்லி அவற்றைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியைப் பொறுத்தவரையில் மருவூர் மலைப் பகுதியில் ஒரு காவல் நிலையத்தை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கோள்கிறேன். அங்கிருக்கிற அரிஜன, மலைவாழ் மக்களுக்கும், கீழேயிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், மேல்இனத்தைச் சேர்ந்த அந்த மக்களுக்கும் இடையே—இவர்கள் வேட்டையாட செல்கிறபோது அந்த மக்களை மிரட்டுகிறார்கள். அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமலிருக்கத்தான் அங்கே ஒரு காவல் நிலயம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

அந்தியூர் பேரூராட்சியை வருகிற ஆண்டிலாவது தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் எதிர்க் கட்சியைச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மன்றத்தில் ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். குற்றச்சாட்டு ஒன்றை அவர்கள் தெரிவித்திருக்கிறார்

கள். அரிஜன மக்களையும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களையும் சாதாரண நிலைக்கு கொண்டு வந்துவிட்டார்கள், இந்த ஆட்சி எப்படி கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய முன்னாள் முதல் அமைச்சர், அவர்கள் இன்னாள் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் பாக்வர்ட் கிளாஸ் என்ற முறையில் பார்வேர்டாக இருந்த அந்த சமுதாயத்தைக் கொண்டு வந்து பிற்படுத்தப்பட்ட மக்களை சாதாரண நிலைக்குக் கொண்டு வந்தார்கள். அதை இந்த நாடே அறியும். இந்திய நாடே அறியும் வகையில் அவர்கள் செய்தார்கள். அப்படி ஒரு காரியத்தைச் செய்தவர்கள் இன்று ஏதோ எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் பிற்படுத்தப்பட்டவர்களை, சாதாரண நிலைக்கு கொண்டுவந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். அது ஒரு தவறான நோக்கமாகும் என்று கூறிக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, என்னுடைய தொகுதியாகிய அந்தியூரிலே, வறட்டுப்பள்ளத்தில் ஒரு அணையைக் கட்ட வேண்டுமென்று, அவர்கள் அதற்கான திட்டங்களை யெல்லாம் போட்டு, அந்த அணையைக் கட்டுவதற்கான அத்தனை எஸ்டிமேட்டுகளையும் அவர்கள் அப்போது போட்டார்கள், ஆனால் அந்தத் திட்டத்திற்கு நேர்மாறாக, 100க்கு 10% கூட அந்த அணைக்குச் செல்ல முடியாத அளவுக்கு, அதற்கு செலவழித்தது வீணாகின்ற அளவுக்கு, அந்த அணையைக் கட்டி பாழ்படுத்தி விட்டார்கள். எனவே, நம்முடைய அரசு அதை மீண்டும் பரிசீலனை செய்து, அதிகமான அளவுக்கு ஒரு திட்டத்தை உருவாக்கி, விரைவுபடுத்தி, அதைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன் வணக்கம்

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1981—82-ஆம் ஆண்டுக்கான இறுதி துணை மானியக் கோரிக்கையின்மீது இன்றைக்கு ரூபாய் 502.67 கோடி கேட்டிருக்கிறார்கள். இதை இந்த மன்றம் அனுமதிக்க இருக்கிறது. ஆனால், இந்த ஒரு சூழ்நிலையிலேகூட, இன்றைக்கு தமிழகத்திலே இருக்கக்கூடிய என்.ஜி.ஓ.க்களுக்கு டீ.ஏ., அதுவும் நான்கு தவணைகள் கொடுப்பது பற்றி இந்த அரசு இதுவரை எந்த விதமான முடிவையும் அறிவிக்காமல் இருக்கிறது. ஆனால், மத்திய அரசு இதற்கு ஈட்டுத் தவணை கொடுத்திருந்தும், தமிழக அரசு அதைக் கொடுக்காமல், அதைப்பற்றி தகவல் ஒன்றும் சொல்லாமல் இருப்பதால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் இதைப்பற்றி அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ., பி.எஸ் ஸி., பரீட்சை முடிந்து நீண்ட நாட்கள் ஆகியும் 5-ஆவது செமஸ்டர் முடிவு இன்னும் வெளியிடவில்லை. இதனால் மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லுகிறார்கள். அதிலே ஏன் காலதாமதம் செய்கிறார்கள்? அதை உடனடியாக வெளியிடுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.





ஆதி திராவிடர் வீட்டுவசதி வாரியத்திற்கு இன்றைக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது வரவேற்கக்கூடியதாக இருந்தாலும், ஆதி திராவிடர் பழைய வீடுகள் கட்டுவது சம்பந்தமாக, அது என்ன நிலைமையிலே இருக்கிறது என்பதை நாம் கவனித்தாக வேண்டும். இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான வீடுகள் கிராமங்களிலே கட்டி, அரையும் குறையுமாக குட்டிச் சுவர்கள் போல் அவைகள் நின்றுகொண்டிருக்கின்றன. அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்? ஆகவே, அவைகளை உடனடியாகக் கட்டி முடிப்பதற்குரிய நடவடிக்கைகளை துரிதமாக எடுப்பதற்கு இந்த அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும்.

அதேபோல், இன்றைக்கு 30,000 விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒய்வூதியம் தருவதாகச் சொல்லுகிறார்கள். அதை வரவேற்கிறோம். ஆனால், 30,000 தொழிலாளர்கள் என்று சொன்னால், அது கடலில் கரைத்த பெருங்காயம் போல் ஆகுமென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்கள் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிறார்கள். அவர்களிலே இன்றைக்கு 30,000 பேர்கள் என்பது, ஒரு தாலுகாவுக்கு 1 அல்லது 2 பேர் என்றுதான் வரமுடியுமே ஒழிய, இந்த விவசாய தொழிலாளர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அது ஒத்து வராது. ஆகவே, இதை அதிகப்படுத்த வேண்டும், ஆண்டுக்கு ஒரு இலட்சம் பேர்கள், 2 இலட்சம் பேர்கள் என்ற அளவிலே செய்யவேண்டும் என்று கேட்பதோடு, இந்தத் தொகையை ரூபாய் 50 என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு, மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு டியூஷன் வைப்பதற்கு, அரசு தனி ஆசிரியர்களை நியமித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், எந்த ஒரு பள்ளியிலும் அம்மாதிரி டியூஷன் அவர்கள் சொல்லிக் கொடுப்பதாகத் தெரியவில்லை. அந்தப் பள்ளி ஆசிரியர்கள் அந்தப் பணத்தை வாங்கி வைத்துக்கொண்டு, அந்த டியூஷன் எடுக்காமல் இருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அதைக் கறாராக அமுல் படுத்தி, அவர்களுக்கு ஒழுங்காக டியூஷன் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களில் குறிப்பிட்ட அளவுக்கு, மாணவர்கள் தேர்ச்சி பெறுகின்ற அளவுக்கு சொல்லித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், இன்றைக்கு விவசாயிகளின் கடன் பிரச்னை சம்பந்தமாக நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் பொன்னையன் அவர்கள் எந்தவிதமான பயமும் இல்லாமல், ஜப்தி, ஜப்தி தான் என்று சொல்லியிருக்கிறார்கள். இது உண்மையில் தமிழக விவசாய மக்களிடையே ஒரு பெரிய கலக்கத்தை உண்டாக்கும். சென்ற ஆண்டு வரலாறு காணாத வறட்சி இருந்தது. இந்த ஆண்டு விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் விலை கிடைக்காமலிருக்கிறது என்று

[திரு. என். பழனிவேல்] [1982 மார்ச் 25

[நண்பகல் 12—00]

இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் ஜப்தி நடவடிக்கை என்று சொன்னால் இந்த நாட்டிலே உள்ள விவசாய மக்கள் அனைவரையும் சிறையில் தள்ள வேண்டியிருக்கிறது அல்லது அரசாங்கத்திற்கும் அவர்களுக்கும் கைகலப்பு ஏற்பட வேண்டிய சூழ்நிலை வரும். முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உயர்மட்டக் குழுவிலே பேசியிருக்கிறார்கள், மத்திய அரசுடன் பேசி உயர்மட்டக் குழு என்ன என்ன கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள் என்று சொல்லி மத்திய அரசு என்ன சொல்கிறது என்று கேட்டு அதற்குப் பிறகு முடிவு செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, உச்ச மட்டக் குழுவின் முடிவு என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முன்னாலே ஜப்தி நடவடிக்கை எடுப்பது என்பது நியாயமாக இருக்குமா, பொருத்தமாக இருக்குமா ? சென்ற ஆண்டிலே முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், விவசாயிகளுடைய கடனை படிப்படியாக நான் ஐந்து ஆண்டுகளிலே ரத்து செய்வேன் என்று சொன்னார்கள். மத்திய அரசு அதற்கு இடையூறு செய்வதாகச் சொல்லுகிறார்கள், எனக்கும் கூட அதைப் பற்றித் தெரியும். வட்டியைத் தள்ளி விட்டு, தொகையை 10 ஆண்டுக்காலத்திலே கொஞ்சம் கொஞ்சமாக வசூலிக்கக்கூடிய முறையிலே ஆணை பிறப்பிக்க வேண்டும், ஜப்தி நடவடிக்கைக்கு இடம் இருக்கக்கூடாது, அப்போதுதான் மக்கள் எந்த நல்ல நோக்கத்தோடு உங்களைத் தேர்ந்தெடுத்தார்களோ அந்த நோக்கமும் நிறைவேறும், உங்களுடைய கொள்கையும் நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்துத் தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையில் 150 யூனியன்களுக்கு 33 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது நல்ல திட்டம், நான் திட்டத்தைக் குறை சொல்லவில்லை. தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால் பல ஒன்றியங்களில் வேலைகள் செய்யப்படாமலே பணம் செலவழிக்கப்படுகிறது என்ற நிலை இருக்கிறது. உதாரணமாகச் சொல்கிறேன், பழனி தாலுக்காவிலே தொப்பம் பட்டி ஒன்றியத்திலே 45 ஊர்களுக்கு அரிசனங்களுடைய சுடுகாட்டிற்குப் பாதைகள் அமைப்பதற்காக ஒவ்வொரு வேலைக்கும் 2 ஆயிரம் வீதம் கணக்குக் காட்டியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், 2 ஆயிரம் ரூபாயில் சுடுகாட்டிற்குப் பாதை போட்டுவிட முடியுமா ? அதோடு 45 ஊர்களுக்கு சுடுகாட்டிற்குப் பாதை போடுவதற்கு அங்கே அவசியம் இல்லை என்ற காரணத்தினால் ஏதோ நடந்திருக்கிறது—இது சம்பந்தமாக நான் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்—தவறு நடந்திருந்தால் அமைச்சர் அவர்கள் கண்காணிக்க வேண்டும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு விலை நிர்ணயம் என்ற முறையிலே நெல்லுக்கு குவிண்டாலுக்கு 150 ரூபாய் என்றும் கரும்புக்கு 250 ரூபாய் என்றும் பல பொருட்களுக்கு அது போன்று கொடுக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால்,



1982 மார்ச் 25] [திரு என் பழனிவேல்]

மத்திய அரசு கொடுக்க மறுக்கிறது. 115 என்கிறது. இடையிலே 147 ரூபாய் என்று தமிழக அரசு வாயால் சொல்லிக்கொண்டிருக்கிறதே தவிர, கொள்முதல் செய்யவில்லை, வாயால் சொல்லிக்கொண்டிருப்பதிலே பிரயோசனம் இல்லை, செயலில் ஓரளவுக்காவது காட்டவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே விவசாயத் தொழிலாளர்களுக்கு ஆடு வளர்ப்பு சங்கங்களை அவர்கள் பல இடங்களிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கடன்கள் கிடைப்பதில்லை. காலையிலே கூட சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியிலே 16 சங்கங்கள் இருக்கின்றன. அதிலே 5 சங்கங்களுக்கு 400 ஆடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் சொன்னார்கள். ஆனால், அந்த 16 சங்கங்களையும் அவர்கள் பதிவு செய்வதற்கு என்ன பாடுபட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். 3, 4 ஆயிரம் செலவு செய்து பதிவு செய்து 100, 200 பேர்களை சேர்த்துக் கொண்டு கடன் கேட்டால் பி.டி.ஓ., சிபாரிசு செய்தாலும் கூட தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் ஒரு பைசா கூட கொடுக்க மறுக்கிறது. அவர்கள் சொத்து இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். பத்திரங்களைக் கேட்கிறார்கள், வில்லங்க சர்ட்டிபிகேட்டுகளை கேட்கிறார்கள் ஏழை எளிய விவசாயிகள், அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்த சொத்து இருக்கிறது, பத்திரம் இருக்கிறது, அவர்கள் எப்படிக் கொடுக்க முடியும். ஆகவே அறிவிப்புகளை அழகாகச் சொல்லுவதிலே பிரயோசனம் இல்லை, எந்த நோக்கத்திற்காக நல்ல திட்டங்களை அறிவிக்கிறோமோ அந்த நோக்கத்திலே 50 சதவீதமாவது நிறைவேறி இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே அதைக் கண்காணித்து அவர்களுக்கு கடன்கள் உடனடியாகக் கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிலவரி 6 அணா விளைவுக்குக் கீழே இருந்தால் தள்ளுபடி என்று சென்ற விவாதத்திலே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டு வரலாறு காணாத வறட்சி, உங்களுக்குத் தெரியும், விவசாயம் விளையவில்லை, அது அடங்கலிலே சொல்லப்பட்டிருக்கிறது, விளைச்சல் இல்லை என்று பதவிசெய்த பிறகும்கூட அங்கே உள்ள நில வருவாய் அதிகாரிகள் அவர்களிடமிருந்து வசூல் செய்துவிட்டார்கள்.

நான் சொல்லிக்கொள்வது, வரியை வசூல் செய்துவிட்டார்கள் என்பதற்காக மட்டுமல்ல. அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாய குத்தகை வார விவசாயிகள் விளைந்ததாக அவர்கள் மீது வழக்குகள் தொடுக்கிறார்கள். விளையாதது ஒன்று, ஏற்கெனவே விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டம், அடுத்து மீண்டும் அவர்கள் குத்தகை கொடுக்கவேண்டுமென்ற ஒரு நிலை இருக்கிறது. அரசாங்கம் இதை கவனிக்க வேண்டும். இது ஒரு சாதாரணமான பிரச்னை அல்ல. விவசாயத் தொழிலாளர்களுடைய முக்கியமான

[திரு. ஏ. எம். சேதுராமன்] [1982 மார்ச் 25

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீட்டு கோரிக்கையை நான் வரவேற்றுப் பேச விழைகிறேன். இந்தக் கோரிக்கையிலே இந்த ஆண்டு ஆதி திராவிடர் நலனுக்காகவும், அவர்களுடைய ஏழ்மையை போக்குவதற்காகவும், அவர்கள் தங்களுடைய வாழ்க்கையிலே மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காகவும் ஒரு கோடி ரூபாய் அளவிற்கு இன்றைக்கு அதிகமாக இந்தத் திட்டத்திலே கொண்டு வரப்பட்டுள்ளது உண்மையிலேயே பாராட்ட வேண்டிய ஒன்றாகும்.

மாண்புமிகு திரு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆதி திராவிடர்கள் மீது கொண்டுள்ள அக்கறையை இது காட்டுகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே போல பழங்குடியினருக்கு அவர்களுடைய கல்வித் தரம் உயர வேண்டும் என்பதற்காக, மற்ற இனத்தவர்களை போல கல்வி அறிவு பெற வேண்டும் என்பதற்காக மேலும் 12 இலட்சம் ரூபாய் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது பாராட்டுதற்குரியதாகும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *** ***

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : வேடசந்தூர் (திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்) : மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி சம்பந்தமாக சொல்லப்பட்டவை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. *** ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு பக்கங்களிலும் பேசிய வார்த்தைகள் அத்தனையையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

[பிற்பகல் 12–10 முதல் 12–20வரை]

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பொறுமையாக இருக்க வேண்டும். இன்றைய தினம் 1 மணிக்கு ஓட்டெடுப்பு நடத்தியாக வேண்டும். நான் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி இதுபற்றி எல்லாம் பேசி ஒரு சுமூகமான முடிவை எடுக்கிறேன். முன்பும் நான் சொன்னேன். வார்த்தைகளைக் கொட்டினால், அள்ள முடியாது என்று அறிஞர் அண்ணா அவர்கள் நமக்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். இதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் சுமூகமான முறையிலே வாக்கு வாதங்களை, விவாதங்களை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது திரு. சேதுராமன் அவர்கள் சீக்கிரம் பேசி முடிக்க வேண்டும்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பெற்றது.



1982 மார்ச் 25]

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 150 ஒன்றியங்களுக்காக, 1981–82 ஆம் ஆண்டுகளில் தன்னிறைவுத் திட்டத்தின் சாதனையை செயல்படுத்தவும், அவர்கள் குறைவாக இல்லாமல், மேலும் நிறைவாக இருப்பதற்கு கிராம மக்களிடையே ஒரு புது மலர்ச்சியை உண்டாக்குவதற்கும், நிறைவேற்றுவதற்கும், 37.57 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது அந்த தன்னிறைவு திட்டங்களுக்கு மிகவும் ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது. கிராமக் கடன் வழங்கு, கூட்டுறவு நிறுவனங்களுக்கும், பேங்குகள் மூலமாக மூலதனமாக ரூபாய் 80.36 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே பேங்குகள் மூலமாக கிராம மக்களுக்கு சிறந்த முறையிலே கடன் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டை, பொதுமக்களிடையே பரவியுள்ளதை நீக்குகின்ற வகையிலே, வங்கிகள் மூலமாக, சீக்கிரமாக நடவடிக்கை எடுத்து அந்தக் கடன்களை வழங்கி, கிராம மக்கள், ஏழை எளிய மக்கள் வளம் பெற வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புகின்ற மக்களுக்காக 153.75 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று இது போன்ற தமிழர்கள் வெளிநாட்டிலேயிருந்து தாயகம் திரும்பும்போது, மறுமலர்ச்சி வாழ்க்கைப் பெறுவதற்காக, மாண்புமிகு புரட்சித் தலைவர் எந்த அளவுக்கு கருணை காட்டி, அக்கறை செலுத்தி இந்த 153.75 இலட்சம் ரூபாயை வழங்கி இருப்பதை நான் பாராட்டுகிறேன். அதேபோன்று நெசவாளர்கள் கூட்டுறவு தொடக்கச் சங்கத்தின் மூலமாக 1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நெசவாளர்களின் துயர் துடைப்பதற்காகவும், அவர்களுடைய ஏழ்மையை போக்க வேண்டுமென்பதற்காகவும், அவர்கள் மேலும் இந்த நெசவுத் தொழிலை தொடங்கி கடன் வாங்கி நடத்திச் செல்வதற்கும், அவர்களுடைய குடும்பம், நல்வாழ்வு வாழ்வதற்கும், ஏற்படுத்திக் கொடுத்திருக்கிற இந்தத் தொகையை இந்த மானியத்தில் சேர்க்கப்பட்டிருப்பதை நான் மனமார பாராட்டுகிறேன்.

அதேபோன்று தமிழ் பல்கலைக் கழகத்திற்கும், பாரதிதாசன் பல்கலைக் கழகத்திற்கும், மேற்கொண்டு 56 இலட்சம் வழங்கப்பட்டிருப்பது மேலும், பல்கலைக் கழகங்களை வளப்படுத்துவதற்காகவும் மட்டும் அல்லாமல் தமிழ் இலக்கியங்கள், தமிழிலே வல்லுநர்கள், தமிழ் அறிவாளிகள், தமிழிலே படித்தவர்கள் மேலும் பல்கலைக் கழகத்தின் மூலமாக தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டுமென்பதிலே அக்கறை காட்டுகிறது. அதே போன்று இங்கே காவல் துறைக்காக, 150 காவல் நிலையங்கள் ஏற்படுத்துவதற்காக 3.50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காவல் நிலையங்கள், மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகவும், அதே நேரத்திலே ஒழுங்கு, கட்டுப்பாடு, ஆகியவைகளை நீடிக்கவும், நிலைக்கச் செய்யவும், இந்த 3½ கோடி

ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதை நான் வரவேற்கிறேன். இந்த நேரத்தில், ஆற்காடு நகரத்திலே ஒரே ஒரு காவல் நிலையம்தான் இருக்கிறது. நீண்ட நெடுநாட்களாக அது இருந்து வருகிறது. அந்த வகையில், இப்போது அங்கு 40, 50 ஆயிரம் பேர்கள் அந்த நகரத்திலே வாழ்கின்றார்கள். அவர்களுக்கு மேலும் ஒரு காவல் நிலையத்தைக் கொண்டு வரவேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று ஆற்காட்டிலேயிருந்து, 35 கிலோ மீட்டர் தொலைவில் வாழைப்பந்தல் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்திற்கு ஒரு புறக்காவல் நிலையம் வேண்டுமென்று கேட்டு இருக்கிறேன். அதையும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ராணிப்பேட்டையில் ஆற்காடு, கலவை, திமிரி, போன்ற காவல் நிலையங்களை இணைத்து இருக்கிறார்கள். தயவு செய்து ஏற்கெனவே இருக்கின்ற அந்த புரப்போசலை அமுல்படுத்தி, ஆற்காட்டிற்கு என்று ஒரு தனிச் சரகம் அமைத்து, கண்காணிப்பாளர் அவர்களையும், ஆய்வாளர் அவர்களையும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும், நான், 24 படுக்கை வசதிகள் கொண்ட ஆப்பரேஷன் தியேட்டர், எக்ஸ்ரே கருவி உள்பட ஒரு அரசு மருத்துவ மனையை அமைக்க கட்டிடம் கட்டி தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தமைக்காக, நான் அவர்கள் இருவரையும், மனமாற பாராட்டி நன்றி தெரிவித்து, இந்த இறுதி துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே' இந்தச் சட்டப் பேரவையினுடைய பொன்னான நேரம் வீணடிக்கப்பட்டு, எங்களுடைய நேரம் குறைக்கப்பட்டதற்காக நான் வருத்தத்தோடு என்னுடைய உரையை துவக்குகிறேன். 1981–82 ஆம் ஆண்டில், இந்த இறுதி துணை மானியக் கோரிக்கை 235.73 கோடி வருவாய்க் கணக்கிலும், 266.94 கோடி மூலதனக் கணக்கிலும், ஆக மொத்தம் 502.67 கோடி கோருகிறது. தன்னிறைவுத் திட்டத்தின் பெயரால், 150 வட்டாரங்களில் 333.57 இலட்ச ரூபாய் கோரப்படுகிறது. இங்கே ரோடுகள், பாலங்கள், தொடர்ச்சியாக இன்றைக்கு வரையிலும் சரியாக வில்லை. ஆனால் தன்னிறைவுத் திட்டம் ஒரு நல்ல திட்டம் தான். நல்ல திட்டத்தின் பயன்களை கிராம மக்களுக்கும், சரி அந்தப் பகுதியிலுள்ள எல்லா மக்களுக்கும் போய் அடைவதற்கான ஏற்பாடுகளை முழு முயற்சியோடு செய்ய வேண்டும். இடையிலே இருக்கக்கூடிய இடைத் தரகர்கள் அந்தத் திட்டத்தைப் பாழாக்கி





வீணடித்து, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே, கொள்ளை அடிக்கிறார்கள். அதையெல்லாம் நிறுத்தி எந்த அளவுக்கு ஒதுக்கப்படுகிறதோ அந்தத் தொகை முழுவதுமே அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்ற ஒரு நிலையினை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் இந்தத் திட்டத்திற்கு எந்த அளவுக்குத் தொகை ஒதுக்கப்படுகிறதோ அந்த தொகை முழுவதும் அத்தத் திட்டத்திற்குப் போய் சேர வேண்டும் அந்த மக்களுக்குப் போய்ச்சேர வேண்டும் அதன் முலம் குடி தண்ணிர் பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–30)

அது மட்டுமல்ல. தன்னிறைவுத் திட்டத்திலே போடக்கூடிய குடி தண்ணீர் திட்டம் எல்லாம் இன்றைக்கும் நிறைவேற்றப்படாத நிலையில் இருக்கிறது. குடி தண்ணீரைப் பொறுத்த வரையில் குறிப்பாக என்னுடைய தொகுதியில் இன்றைக்கும் பஞ்ச நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. இப்போது மார்ச் மாதம். இப்போதே வறட்சி ஏற்பட்டு, குடிதண்ணீர் பற்றாக் குறை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் 6 மாதத்திற்கு கோடைக் காலம் இருக்கிறது. இந்த கோடைக் காலத்தில் எப்படி தண்ணீர் பற்றாக் குறையைப் போக்க முடியும் என்று மக்கள் கவலையடைந்திருக்கிறார்கள். அதை எல்லாம் போக்குகின்ற வகையில் குடிதண்ணீர் திட்டத்தை வேகமாகக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். சுதந்திரம் அடைந்து 35 ஆண்டுகள் ஆகியும் கூட இன்னும் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க முடியாத ஒரு கேவலபான நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. எப்படியாவது குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்க வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் தன்னிறைவுத் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு கிராமக் கடன் சங்கங்களுக்கு 80.36 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களில் பல மோசடிகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் கூட்டுறவுச் சங்கத்தின் பேரால் கடன் வசூல் என்று இப்போது கெடுபிடியாக இருக்கிறது. தஞ்சை மாவட்டமானாலும் சரி, முகவை மாவட்டமானாலும் சரி, இன்னும் பிற்பட்ட மாவட்டங்கள் எதுவாக இருந்தாலும் சரி—புயலாலும் வெள்ளத்தாலும் இயற்கைச் சீற்றத்தாலும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இன்றைக்கு கடுமையான வசூல் கொடுமையான வசூல் நடந்துக் கொண்டிருக்கிறது. ஜப்தி நடவடிக்கை எடுத்து வசூல் செய்கிறார்கள். இதை எல்லாம் சீர் செய்ய வேண்டுமென்றால் இங்கே சொல்கிறார்கள் எங்களுக்கு 'பிளாக் மார்க்' வருகிறது நாங்கள் என்ன செய்ய என்று. கட்டாயமாக வசூல் செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்கார் எங்கள் தலையிலே எழுதிவிட்டது: அதனால்தான் நாங்கள் உங்களை ஜப்தி செய்கிறோம் என்று சொல்கிறார்கள். இது ஒரு சரியான வாதம்

ஆகாது. எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. இந்த அமைச்சர் செய்கிற காரியங்களினாலே அமைச்சர் அவர்களே அரசாங்கம் கவிழ்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். ஏனென்றால் இன்றைக்கு எடுக்கின்ற ஜப்தி நடவடிக்கைகளின் காரணமாக மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். பதட்டமான நிலையில் இருக்கிறார்கள். மக்கள் கொந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நடவடிக்கைக்கு பலத்த எதிர்ப்பு உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, ஜப்தி நடவடிக்கைகளை உடனே தடுத்து நிறுத்த வேண்டும்.

அதே நேரத்தில் அரசாங்கம் நியமித்திருக்கிற முனுஆதி கமிட்டியும், இன்னும் பல்வேறு சங்கங்களும் எடுத்துச் சொல்லிய நியாயங்களை அனுசரித்து, அந்த கடன்களுக்கு இருக்கக் கூடிய அபராத வட்டியை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். மேலும் 5 ஏக்கர் முதல் 10 ஏக்கர் வரை உள்ள விவசாயிகளுக்கு எல்லாக் கடன்களையும் நீக்கிவிட வேண்டும். அதற்கு மேற்பட்டவர்களுக்கு இருக்கக் கூடிய கடன்களை 20 ஆண்டு அல்லது 25 ஆண்டு தவணைகளில் வசூல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் தொடர்ச்சியாக 1972 லிருந்து 1978 வரை இயற்கையின் சீற்றங்களால், தமிழ்நாடு முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு கூட 14 மாவட்டங்களில் தொடர்ச்சியாக வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அபராத வட்டி என்று போட்டு கொடுமைப்படுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு போலீசை வைத்து வீடுகளில் நுழைந்து ஜப்தி செய்யப்படுகிறது. ஒவ்வொரு வீட்டின் கதவிலும் ஜப்தி நோட்டீசை ஒட்டி, கதவைத் தட்டி ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதை எல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும். கிராமப்புறங்களில் கல்வியின் தரம் மிகவும் குறைந்து விட்டது. இன்றைய நிலையில் நம்முடைய சட்டப் பேரவையின் தரம் குறைந்திருப்பதைப் போல கிராமப் புறங்களில் கல்வியின் தரம் குறைந்திருக்கிறது. அந்த நிலையைப் போக்கி, இன்றைக்கு நகரப் புறங்களில் எந்த அளவுக்கு கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதோ அந்த அளவுக்கு கிராமங்களிலும் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஆர்.எஸ். மக்களத்தில் ஒரே ஒரு உயர்நிலைப் பள்ளிதான் இருக்கிறது. 15 மைல் ரேடியசில் வேறு பள்ளிக் கூடங்களே இல்லை. அந்தப் பள்ளியில் என்.சி.சி. வகுப்புத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே என்.சி.சி. வகுப்பு தொடங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). தலைவரவர்களே, இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள். சட்டப் பேரவையில் ஏற்படுகிற குழப்பங்



களால் எங்கள் நேரத்தை பெரிதும் சாப்பிட்டு விடுகிறார்கள். அதனால் எங்களுக்கு நேரம் கொடுங்கள் என்று நாங்கள் உங்களிடத்திலே கதற வேண்டியிருக்கிறது.

சாலைப் போக்குவரத்தைப் பொறுத்தவரையில் எங்கு பார்த்தாலும் குண்டும் குழியுமாக இருக்கிறது. அதையெல்லாம் சீர் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, உடல் ஊனமுற்றவர்களின் உதவித் தொகையை உயர்த்த வேண்டும். கிட்டத்தட்ட 30,000 விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது 'கடலிலே கரைத்த பெருங்காயம் மாதிரி' என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் உதவித் தொகை பெறக்கூடிய தகுதி படைத்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆகவே, 55 வயதுக்கு மேற்பட்ட தகுதி படைத்த அத்தனை விவசாயத் தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை கொடுக்க நடவடிக்கை எடுத்து, உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் உள்ள டாக்டர் ஜாகிர் உசேன் கலைக் கல்லூரி $1\frac{1}{2}$ மாதமாக மூடிக் கிடக்கிறது. அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி. கல்வி அறிவு அற்ற பகுதி. அந்தப் பகுதியில் உள்ள கல்லூரி மாணவர்கள் கிட்டத்தட்ட 1,100 மாணவர்கள் பரீட்சை எப்படி எழுதுவது என்கிற ஒரு பரிதாபகரமான நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கல்லூரியை உடனடியாகத் திறந்து, அந்த மாணவர்களுக்கு படிப்பு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டு, விடை பெறுகிறேன்.

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் சில முக்கியமான விஷயங்களை மட்டும் எடுத்து வைக்க விரும்புகிறேன். மேற்கு திசையில் ஓடக் கூடிய நதி நீரை தமிழகத்திற்குத் திருப்புவதற்கு ஆய்வு செய்வதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட்ட குழு தன்னுடைய பரிந்துரையை மத்திய அரசுக்கு வழங்கியிருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரை என்ன என்பது இன்னும் வெளியாகவில்லை. அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கேரள ஆறுகளில் ஏறத்தாழ 2,500 டி.எம்.சி. தண்ணீர் ஆண்டுதோறும் ஓடுகிறது. கேரளாவிற்கு 800 டி.எம்.சி. தண்ணீர் போதும். மீதம் கிட்டத்தட்ட 1,500 டி.எம்.சி. தண்ணீர் கடலில் போய் விழுகிறது. என்று மத்தியக் குழு சொல்லியிருக்

[திரு. ப. நெடுமாறன்] [1982 மார்ச் 25

கிறது. ஆனால் நம்முடைய தமிழகத்திற்கு, கோவை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள வறண்ட பகுதிகளுக்கு வீணாகக் கடலில் போய் விழக்கூடிய 1,500 டி.எம்.சி தண்ணீரில் வெறும் 82 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே நாம் கேட்கிறோம். இதன் மூலம் அந்த 4 மாவட்டங்களில் 8 இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் புதிய நிலங்கள் பாசன வசதி பெறும் நிலைமை இருக்கிறது. மத்தியக் குழு 1976 ஆம் ஆண்டிலே அமைக்கப்பட்டது. 6 ஆண்டுகளுக்குப் பின்னாலே இப்போது பரிந்துரையை அளித்து இருக்கிறது. அந்தக் குழுவின் பரிந்துரையில் சில நியாயங்கள் சுட்டிக் காட்டப்பட்டு இருக்கின்றன. அதை நம்முடைய அரசு மத்திய அரசிடம் வற்புறுத்தி அந்தக் கேரள நதி நீரை தமிழகத்திற்குத் திருப்பும் திட்டத்தை அமல் நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இலங்கையில் இருந்து வந்து இருக்கும் அகதிகள், கேரள மாநிலத்தில் உள்ள பல்வேறு ரப்பர் தோட்டங்களுக்கு வேலைக்கு அனுப்பப்பட்டவர்கள், அங்கே வேலை வாய்ப்பை இழந்து அங்கே இருக்க முடியாத சூழ்நிலைக்கு ஆளாகி, மதுரைக்குத் திரும்பி வந்து இருக்கிறார்கள். ஏறத்தாழ 40 நாட்களாக 15 குடும்பங்கள் மதுரை வந்து, இராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்திற்கு முன்பாக அனாதையாக உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்கள். 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 8 ஆம் நாளன்று கேரள மாநில வண்டிப்பெரியாரில் இருந்து ஏறத்தாழ 350 குடும்பங்கள் அங்கேயிருந்து வெளியேற்றப்பட்ட நிலையில், இனிமேல் இங்கே வேலையில்லை உங்களுக்கு என்று துரத்தப்பட்ட நிலையில், அவர்களும் மதுரையில் உள்ள இராமநாதபுரம் கலெக்டர் அலுவலகம் முன்பாக, அனாதைகளாக உட்கார்ந்துக் கொண்டு இருக்கிறார்கள். எங்கள் கட்சியின் பொதுச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு. பாரமலை அவர்கள் இது சம்பந்தமாக கலெக்டரிடம் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இதுவரையில் எந்தவிதமான பரிகாரமும் செய்யப்படவில்லை. ஆகவே, அரசு உடனடியாக இதிலே தலையிட்டு ஆவன செய்ய வேண்டும் என்று, கேட்டுக் கொள்கிறேன்.

லெவி சிமென்ட் விநியோகத்திலே அரசாங்கம் எடுத்து இருக்கிற கொள்கையை நான் வரவேற்கிறேன். அந்த லெவி சிமென்டை, கன்ட்ரோல் விலைக்குக் கிடைக்கும் அந்தச் சிமென்டை, இர்ரிகேஷன், பவர் பிராஜெக்ட்ஸ், அரசாங்கம் மற்றும் ஸ்தல ஸ்தாபனங்களின் வேலைகள், இன்டஸ்டிரியல் எஸ்டாபிளிஷ்மென்ட்ஸ், சோசியல் ஹவுசிங் ஸ்கீம்ஸ் போன்றவற்றிற்கு ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1982 மார்ச் 25] [திரு. ப. நெடுமாறன்]

அத்தோடு 80 ஸ்குயர் மீட்டருக்கு உட்பட்ட மத்திய தர வர்க்கத்தினர் கூட்டியிருக்கக் கூடிய சிறு வீடுகளுக்கு ரிப்பேருக்காக அந்த லெவி சிமெண்டிலேயிருந்து கொடுக்க வேண்டும். சினிமா, ஓட்டல், பல மாடிக் கட்டிடங்கள் போன்றவைகளுக்கு (மணியடிக்கப் பெற்றது) இதிலேயிருந்து கொடுக்காமல், அவர்கள் அதிக விலையிலே நேரிடையாக ஆலையிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய வழிகளை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி எனது உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 1980-86 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீடுகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைப் பொதுப்படையாகவும் குறிப்பாகவும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதிலே ஒதுக்கப்பட்டிருக்கிற மதிப்பீடுகள் பற்றிய கருத்துக்கள் மட்டும் அல்லாமல், பல்வேறு துறைகளிலே எடுக்கப்படவேண்டிய பல நடவடிக்கைகளையும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவை அத்தனைக்கும் விடையளிப்பது என்றால் நேரம் போதாது என்பது மட்டும் அல்லாமல், அவை அவ்வளவுக்கும் தேவையான விவரங்கள் எனக்கு கிடைப்பதற்கு வழியும் இல்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு இது ஒரு வாய்ப்பு என்று முறையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தந்த துறையைச் சேர்ந்தவர்கள் அதுபற்றிய, குறிப்பு எடுத்து அவற்றின் மீது எடுக்கக்கூடிய நியாயமான, தேவையான நடவடிக்கைகளை அந்தந்த அமைச்சரகம் எடுக்கும் என்பதை மட்டும் இப்போது நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக இந்த துணை மதிப்பீடுகளின் கோரிக்கையில் 502 கோடி ரூபாய் அளவுக்கு நாம் கேட்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில், நிதியமைச்சர் என்ற வகையில், துணை மதிப்பீடே வராமல் இருந்தால் நல்லதுதான். ஆனாலும்கூட மன்ற உறுப்பினர்கள் பலபேரும், பல்வேறு வகைகளில், இதற்கு ஏன் செலவழிக்கவில்லை. அதற்கு ஏன் செலவழிக்கவில்லை, அதற்கு கூடுதலாக செலவழிக்க வேண்டும். இதை உடனடியாக கவனிக்க வேண்டும் என்று பல்வேறு பிரச்சினைகளை வைத்து வற்புறுத்துவதன் காரணமாக, அவ்வப்போது, அடுத்த நிதியாண்டிலே வருகிற நிதிநிலை அறிக்கை வரும் வரை காத்திருக்க முடியாத நிலைமையிலேதான் இடையிலே செலவழித்து, துணை மதிப்பீடுகளாகக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

இவ்வளவு ஆயிற்றே என்பதற்காவது இங்கே இருக்கிற உறுப்பினர்கள் இரக்கம் காட்டினார்களா என்றால், அதுவும் இல்லாமல் 502 கோடிக்குக் துணை மதிப்பீடு கொண்டுவர வேண்டிய அவசியம் என்ன என்று ஒரு பக்கம் சொல்லிவிட்டு இதற்கு ஒதுக்கியது போதாது, அதற்கு இன்னும் அதிகமாகச் செய்திருக்கலாம் என்று இன்னொரு பக்கம் சொல்லுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசும்போதுகூட, இந்த விவசாயத் தொழிலாளர்கள் 30 ஆயிரம் பேருக்கு மட்டுமே ஓய்வு ஊதியம் தருகிற நிலை இருக்கிறதே அவர்கள் ஒரு கோடி பேர்கள் இருக்கிறார்களே, அவர்கள் அத்தனை பேருக்கும் தராவிட்டாலும் கூட, 1 லட்சம், 2 லட்சம் பேருக்காவது தர முயற்சி பண்ணியிருக்கலாமே என்பதோடு, அவர்களுக்கு 35 ரூபாய் தருவதை கூட்டி, 50 ரூபாயாக உயர்த்தலாம் என்றும் சொல்வதெல்லாம், இது இன்னும் எத்தனை கோடி ரூபாய்க்கு என்னை கொண்டு போய் துணை மதிப்பீட்டிலே விடும் என்பதையும் இதிலிருந்து நீங்கள் கண்டு கொள்ளலாம்.

இருந்தாலும் கூட தேவைகளை நாம் உணர்ந்திருக்கிறோம் இருக்கிற வசதிகளை நாம் பார்க்கிறோம், வேறு பல நாடுகளிலே அவை வரவு-செலவு போன்ற திட்டங்களைப் போடுகிறது என்றால், மக்களுடைய தேவைக்கு ஏற்ற அளவுக்கு வரவு-செலவு திட்டங்களைப் போட்டு முடித்து விட்டு, மிகுதி உள்ள பணத்தை, வேறு நாடுகளுக்கு உதவி செய்யலாமே, எந்தெந்த வகையிலே உதவி செய்யலாம் என்ற அளவுக்கு திட்டங்கள் போடுகிறார்கள். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், இந்தியாவினுடைய வரவு-செலவு திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, மாநிலங்களுடைய வரவு-செலவு திட்டங்களை எடுத்துக் கொண்டாலும் சரி, நம்முடைய நாட்டினுடைய தேவைகள் மிகமிக அதிகமாக இருக்கின்றன. அந்தத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இருக்கிற நிதி ஆதாரங்கள் மிக மிகக் குறைவாக இருக்கின்றன. ஆகவேதான் இருக்கிற வசதிகளை வைத்து நாம் செய்யவேண்டிய அளவுக்கு, இருப்பதை பங்கீடு செய்து தருவது எப்படி என்பதிலே முதலிலே கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோமே தவிர, மக்களுடைய தேவைகளை முழுமையாக நிறைவேற்றுகிற அளவுக்கு நமக்கு வசதியில்லை. அவைகளை நிறைவேற்றிவிடுவோம் என்று எடுத்துச் சொல்வதற்கும் இயலவில்லை.

அந்த வகையிலேதான் எல்லாத் துறைகளுக்கும் எல்லோருடைய நலன்களையும் நிறைவேற்றுகிற அளவுக்கும் நாம் திட்டங்களைத் தீட்டிக் கொண்டு வருகிறோம். இதிலே கூட 502 கோடி ரூபாயை நாம் துணை மதிப்பீடுகளாக தொகைக் கேட்டிருக்கிறோம் என்றாலும், இதிலே வருவாய்க் கணக்கிலே 235 கோடியே 73 லட்சம் ரூபாயும்,





மூலதனக் கடன் கணக்கிலே 266 கோடியே 94 லட்சம் ரூபாயும் கேட்டிருக்கிறோம். இதற்கு முக்கியமாக நாம் கடன் வழங்கவேண்டிய அவசியம், மூலதனப் பங்கு ஏற்படுத்த வேண்டிய அவசியம் என்ன என்பதை விளக்கக் குறிப்பேட்டிலே மிக விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

குறிப்பாக அப்படி நான் எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய வகைகளிலே ஒன்று மின்சாரத்துறை, இரண்டு போக்குவரத்துத் துறை, மூன்றாவது நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக மக்களுக்கு உணவுப் பங்கீடு முறைக்காக, இது மூன்றும் தனித் தனி வாரியங்களாக, கழகங்களாக நடக்கின்றன என்றாலும், இவை மூன்றும் அரசுக்குத்தான் நூற்றுக்கு நூறு சொந்தமானவைகள், ஆனால் இதற்கு மூலதனம் கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லிவிட முடியும், ஒரு வரியிலேயே எழுதிவிடவும் முடியும். 'இதற்கு உதவி செய்ய இயலாது, என்று கூட நான் ஒரு வரி எழுதிவிட முடியும். கடன் கொடுப்பதற்கு இயலாது என்றுல் சொல்லிவிட்டால் மின்சாரத் துறை என்ன ஆகும் என்பதை நாம் பார்ப்போமேயானால் தெரியும். மின்சாரத்துறையின் உற்பத்தியை வைத்துத்தான் தொழிலும் வளரவேண்டும்; விவசாயமும் வளரவேண்டும், வாணிபமும் பெருகவேண்டும்; வெளிநாட்டினுடைய ஏற்றுமதி இறக்குமதியான பண்டம் மாற்று முறைகள். மற்றவைகள் எல்லாம் கூட உருவாக வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் இன்று அன்றாடம் வாழ்க்கைக்கு மின்சாரம் தேவை என்ற நிலமை ஏற்பட்டுவிட்டது. ஆகவேதான் அது வாரியமாக வைக்கப்பட்டு இருந்தாலும் அதிலே எந்தவிதத்திலும் தொய்வு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் பற்றாக்குறைகள் ஏற்படுகின்றபோது நாம் கடன் வழங்கவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. தாராளமாகக் கொடுக்கவேண்டி இருக்கின்றது. மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கூட மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையை இங்கே வைக்கும்போது விரிவாக எடுத்துக் குறிப்பிட்டார்கள். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தை முடித்துக் காட்டுகின்ற நிலையிலே கூட ஆயிரம் மெகாவாட் திறனுள்ள திட்டங்களை நிறைவேற்றினாலும் கூட, மத்திய அரசு அதற்கெல்லாம் ஒத்துழைப்பு கொடுத்தாலும் கூட நம்முடைய தேவை அதிகமானதாகத்தான் இருக்கும் என்று குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவேதான் நாம் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் கடன் வழங்கவேண்டியதிருக்கின்றது. மூலதனம் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

அடுத்து 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேருந்துகள் ஓடுகின்ற போக்குவரத்துத்துறை பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள்.

ஆனால் 5 பேருந்துகள், 10 பேருந்துகள் வைத்து நடத்துகின்ற தனியாராக இருப்பார்களேயானால் தங்களுக்கு லாபம் வருகின்ற வழித்தடம் எது என்பதை மட்டும் கண்டறிந்து, லாபம் வருகின்ற நேரம் எது என்பதையும் கண்டறிந்து அந்த வழித்தடத்திலேயும் 30 மைல் 24 மைல்கள் வரை ஓட்டினால் தான் லாபம் வரும் என்றிருக்குமானால் அதையும் கண்டறிந்து அந்த தூரத்திற்கு மட்டும் பேருந்துகளை விட்டு லாபம் சம்பாதிக்க முடியும். ஆனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேருந்துகளை வைத்து நடத்துகின்ற நாம் லாபம் வராத வழித்தடங்களிலும் பேருந்துகளை விடவேண்டி இருக்கின்றது. ஆனால் லாபகரமாக இருக்கவேண்டும் என்று முயற்சித்தால் அந்த நான்காயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகளில் குறைந்தது இரண்டாயிரம் வழித்தடங்களையாவது நிறுத்திவிடவேண்டிய நிலைமைதான் ஏற்படும். ஆகவே அவை நூற்றுக்கு நூறு அரசின் நிறுவனமாக இருப்பதன் காரணத்தால் அதன்பணியிலே தொய்வு ஏற்படாமல் தடுக்கவும் அதனுடைய நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்ற அளவுக்கும் நாம் மூலதனம் போடவேண்டி இருக்கின்றது. கடன் கொடுக்கவேண்டி இருக்கின்றது. மேலும் கடனாகவே அதிகமாகக் கொடுத்துவிட்டால் அதற்கான வட்டியினைக் கூட அவர்களால் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமைக்கு ஆளாகிவிடுகிறார்கள் என்பதால்தான் ஓரளவுக்கு மூலதனப் பங்கை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே அந்தத் துறைகள் காப்பாற்றப் படவேண்டும் என்பதற்காகத்தான் இவ்வாறு செய்துகொண்டிருக்கிறோம்.

அந்தமாதிரி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் நிதியுதவி செய்கிறோம். அங்கே பொருட்களை வினியோகம் செய்கின்றபோது கொள்முதல் விலையை விட 50 காசு, 55 காசு குறைத்துத்தான் அரிசி போன்றவை கொடுக்க வேண்டி இருக்கின்றது, அல்லது அடக்கவிலைக்குத்தான் கொடுக்க வேண்டி இருக்கின்றது. ஆகவேதான் அக்கழகத்திற்கு 36 கோடி ரூபாய் சப்சிடி தர வேண்டி இருக்கின்றது. பண்டங்களை வினியோகிக்கின்றபோது ஒரு பண்டத்தின் விலையைக் குறைத்துக் கொடுத்தாலும் இன்னொரு பண்டத்தின் விலையை சற்று உயர்த்திக் கொடுத்தால் இதன் மூலம் வருகின்ற லாபம் இன்னொன்றிலே வருகின்ற நஷ்டத்தைக் குறைக்க வழி ஏற்படும். அதன்படி செய்தால் நோ பிராப்பிட் நோ லாஸ் என்ற அளவுக்காவது ஏற்படக்கூடும். ஆனால் நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் மூலம் வினியோகிக்கப்படுகின்ற பொருட்கள் அனைத்தும் அடக்கவிலைக்கோ அல்லது குறைந்த விலைக்கோ தான் கொடுக்கப்படுகின்றது. ஆனால் அந்தக் கடைகளை வைத்து நடத்துகின்ற நிர்வாகச் செலவின் அளவுக்காவது வருவாய் வரக்கூடிய அளவுக்கு நடத்தினால் அரசாங்கம்





ச்ப்சிடி கொடுக்கவேண்டிய அவசியமேகூட ஏற்பட்டாது. ஆகவே இந்தக்கடன் கொடுப்பதெல்லாம் மக்களுடைய நலன் கருதித்தான் கொடுக்கவேண்டி இருக்கின்றது.

அடுத்து தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் குறிப்பிட்டுப் பேசினார்கள். 5, 10 ஆண்டுகளுக்கு முன்பு கிராமப் புறங்களிலே இருந்த வசதி வாய்ப்புகள் என்னென்ன என்றும், இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை மேற்கொண்டதற்குப் பிறகு ஆங்காங்குள்ள மக்களின் அடிப்படைத் தேவைகள் எந்தெந்த அள்வுக்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் உணருவார்கள். பலரும் அத்னைப் பலபட பாராட்டியும் இருக்கிறார்கள். இங்கே பேசிய உறுப்பினர்கள் கூட அதை வரவேற்றுப் பேசி இருக்கிறார்கள். ஆனால் அதிலே சிலபல குறைபாடுகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். நாம் அனைத்து மக்களையும் நம்பித்தான் பல்வேறு திட்டங்களைப் போடவேண்டி இருக்கின்றது. நாட்டு மக்களிலே எல்லேரும் நாணயம் உடையவர்களாவும், நேர்மை உடையவர்களாவும், உண்மை உடையவர்களாவும் இருப்பார்கள் என்று நாம் எதிர்ப்பார்க்க முடியாது. இயேசு கிருஸ்துவிற்கு 12 சீடர்கள் இருந்தார்கள் என்றும் அந்த 12 பேர்களிலே ஒருவன்தான் அவரைக் காட்டிக் கொடுத்தான் என்றும் சொல்கின்றபோது அந்த ஏசு பெருமானுக்கே அந்த கதி ஏற்படுமேயானால் மற்றவர்களின் நிலைமை என்ன என்பதைப் பார்க்கவேண்டும். துறைகளில் பணியாற்றுகின்ற அதிகாரிகளில் எவ்வளவு பேர் ஒழுங்காக நடக்கிறார்கள், எவ்வளவு பேர் நேர்மையாக நடக்கிறார்கள், எவ்வளவு பேர் நன்கு திறம்பட நடக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும்.

(பிற்பகல் 12—50.)

சிலபல இடங்களில் சிலபல குறைபாடுகள் வருகிறபோது ஏசுநாதர் சீடர்களிலேயே 12 பேர்களில் ஒருவர் அப்படியிருக்கும்போது எம்பெருமான் ஏசுவிற்கே அந்தக் கதி என்றால் நம்மைப் பொன்ற ஏமாளிகளுக்கு எந்த கதி ஏற்படும் என்பதைக் காணலாம். அதையும் சமாளித்து நடக்கவேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். ஆனாலும்கூட ஏற்பட்டிருக்கிற விளைவுகளில் குறைப்பாடுகள் இருக்கக்கூடும். ஆனாலும் ஏற்கனவே இருந்த நிலைமை என்னவென்றால், ஊராட்சி மன்றங்கள். ஊராட்சி ஒன்றியங்கள் இவற்றிற்கு வருகிற வருமானத்தைவைத்துக் கொண்டு ஊராட்சிமன்றம் அல்லது ஒன்றியம் இவற்றில் வாழக்கூடிய மக்களுக்கு நன்மைகள், வசதி வாய்ப்புகள் செய்யப்பட வேண்டிய நிலைமைகள் இருந்தன. அவர்களுக்குக் கிடைத்த ஒரு வசதி, வீட்டு வரியை அவர்கள் உயர்த்தலாம். செஸ்ஸை கொஞ்சம் உயர்த்தலாம். வீட்டு வரி மூலம் வருகிற வருமானம், செஸ்மூலம் வருகிற வருமானம், ஆண்டுக்காண்டு நாம் நிதி

ஒதுக்கீடு செய்து ஒரு ஈவு பிரித்து ஏ. பி. சி. டி. என்று பல்வேறு பகுதிகளாகப் பிரித்து ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு குறிப்பிட்ட மானியமாக ஒதுக்கித் தருகிறோம். இந்த அடிப்படை வசதிகளை வைத்து கொண்டு மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற நிலையை மாற்றி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அமைச்சரவையில் கலந்து கொண்டு இதை மட்டும் வைத்துக் கொண்டு கிராமப்புறங்களில் வசதி வாய்ப்புகள் பெருகாது என்று சொல்லி இவற்றிற்கு அப்பாற்பட்டு தந்து சிலபல நன்மைகள் செய்யவேண்டும் என்ற முறையில்தான் இந்த தன்னிறைவுத் திட்டம் வந்தது. எப்போதும் கிடைக்கின்ற வருமானம் ஊராட்சி மன்றங்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கிடைத்துக் கொண்டுதானிருக்கின்றது. அதை வைத்துக் கொண்டு சாலைகள் போடலாம், பள்ளிகள் கட்டலாம், பாலங்கள் கட்டலாம், தாய் சேய் நல விடுதிகளை உருவாக்கலாம். ஆகவே 1980–81-ல் 69 ஒன்றியங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றிக்கு இயல்பாக கிடைக்கிற வருமானத்திற்கு மேல் கிடைக்கத் தக்கவகையில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு கிட்டத்தட்ட ரூ. 30 கோடி ஒதுக்கித்தர வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1981–82ல் 150 ஒன்றியங்களை நாம் எடுத்துக் கொண்டு, தன்னிறைவு பெறுகிற ஒன்றியங்களாக எடுத்துக்கொண்டு கிட்டத்தட்ட 87 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்குவதன் மூலம் சாலைவசதிகள் போன்ற வசதிகள் கிடைக்க வாய்ப்புகள் ஏற்பட்டன. 1982–83 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மீதியுள்ள 159 ஒன்றியங்களையும் எடுத்துக்கொள்ளலாம் என்று கருதி அதற்காக 97 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கியிருக்கிறோம். இதன் மூலம் பல சிற்றூர்கள், ஒன்றியங்கள், பல்வேறு வசதி வாய்ப்புகளை் பெற்று இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபல குறைபாடுகள் ஆங்காங்கே இருக்குமானால் அந்த, குறைபாடுகளை உரிய அதிகாரிகள் மூலம் களையலாம்.

இந்தத் தன்னிறைவுத் திட்டங்களை நிறைவேற்றும் முழுப் பொறுப்பையும், அதற்கான அதிகாரங்கள், மேற்பார்வையிட்டு கண்காணிக்கின்ற அதிகாரங்கள் வருவாய்த் துறையிடம் குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். அதில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அதைப் போக்குவதற்கும் அப்படிப்பட்ட குறைபாடுகள் நடைபெறாமல் இருப்பதற்கும் மாண்புமிகு உறுப்பினர்களும், ஆங்காங்குள்ள பொது மக்களும் விழிப்போடு இருந்து உதவி செய்தால் அது அவர்களுக்கும் நல்லது. நாம் எடுத்துக் கொண்ட நோக்கமும் நிறைவேறும்.



குறிப்பிட்ட கட்சிக்காரர்கள்தான் ஒப்பந்தக்காரர்களாக இருந்து நிறைவேற்றுவார்கள் என்ற குற்றச்சாட்டை காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் சிலர் எடுத்துச் சொன்னால் சொல்லலாமே தவிர ஒப்பந்தக்காரர்கள் என்பதில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அந்த ஒப்பந்தக்காரர்களில் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள். கட்சியைச் சேராதவர்களும் இருப்பார்கள். அனுபவம் பெற்றவர்களும் இருப்பார்கள். அனுபவம் பெற்றவர்கள் வழியில் செல்லலாம் என்று வந்திருப்பவர்களும் இருப்பார்கள். நல்லவர்களும் இருப்பார்கள், கோடானவர்களும் இருப்பார்கள். இதில் கட்சியைச் சேர்க்க வேண்டாம். குமாரசாமியும் இருப்பார், குப்புசாமியும் இருப்பார், குருசாமியும் இருப்பார், நான் இங்கே இருப்பவர்கள் யாரையும் பற்றிக் கூறவில்லை, ஆறுமுகமும் இருப்பார்கள், ஆண்டியப்பனும் இருப்பார். அவர்களிடையே குறைபாடுகள் காணலாமே தவிர குறைபாடு இன்ன கட்சிக்குத்தான் சொந்தம் என்றிருக்க முடியாது. கூடுமானவரையில் நடைபெற்றிருப்பதில் பெரும் பகுதி அந்தத் துறைகளே ஏற்று நடத்துகின்றன. சிலபல ஒப்பந்தக்காரர்கள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. முதல் அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு பட்டியல் தந்தபோது அந்த ஒப்பந்தக்காரர்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதில் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆகவே அந்தக் குற்றச்சாட்டு வாதத்திற்கு பொருத்தமாக வராது. ஆனால் குற்றம் செய்கிறவர்கள் இருக்கக் கூடும். எல்லோரும் என்று சொல்வதற்கில்லை. ஒரு சிலர் இருக்கக்கூடும். அந்த ஒருசிலர் செய்கிற குற்றங்கள் சுட்டிக் காட்டப்பட்டால் அதன் பேரில் நடவடிக்கை எடுப்பதன்முலம் மேற்கொண்டு அவை நிகழாமல் தடுத்துநிறுத்த வழிவகை ஏற்படக்கூடும்.

வறட்சி நிலை பற்றிக் கூறினார்கள். இந்த ஆண்டு சுமுகமாகப் போகக்கூடும் என்று எதிர் பர்த்தாலும் சிலபலயிடங்களில் போதுமான அளவிற்கு மழை பெய்யவேண்டிய நேரத்தில் பெய்யாததால் நீர்நிலைகள் எல்லாம் வற்றி தண்ணீர் தட்டுப்பாடு இருந்து, விளைச்சல் செய்யமுடியாத சூழ்நிலை இருக்கிற இடங்களை கண்டறிந்து—மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எந்தெந்த மாவட்டங்களில் இப்படிப்பட்ட அறிகுறிகள் இருக்கிறதோ அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களை இப்போதே அறிவுறுத்தி அப்படிப்பட்ட நிலைமைகளை பார்த்து, கடுமையானதற்குப் பிறகு நாம் நடவடிக்கைகள் எடுக்கிற நிலைமைக்குப் போகாமல் சென்ற ஆண்டு அனுபவத்தை வைத்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்லி யிருக்கிறோம். அவர்கள் எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள்; அறிவுரை பகர்ந்திருக்கிறார்கள்.

எந்தச் சூழ்நிலையில் நில வரியை வஜா செய்யலாம், எந்த அளவில், எந்த நிலையில் வஜா செய்யலாம் என்பதற்கு, ஒரு சட்ட திட்ட அடிப்படை இருக்கிறது. அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர், எங்கே கட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது, யார் கட்ட முடியாத நிலைமையிலே இருக்கிறார்கள் என்பன போன்ற விவரங்களை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சருக்கும் மற்றவர்களுக்கும் அனுப்புகிறார்கள். அந்த அடிப்படையில் நாம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். அந்த வரியைக் கட்ட முடியாதவர்கள், பஞ்சத்தால் வறட்சியால், பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரைக் கொடுமை படுத்த வேண்டுமென்பது அரசின் நோக்கமல்ல. ஆனால், அதற்கான வரைமுறைகளை வைத்திருக்கிறோம். அதன் அடிப்படையிலே எந்த அளவுக்கு வஜா செய்வது, அது முக்கால் பங்கா, அரை பங்கா, கால் பங்கா, அரைக்கால் பங்கா அல்லது முழுவதுமாகவா என்பதைத் தீர்மானிப்பதற்கு வரைமுறைகள் இருக்கின்றன. அநத அடிப்படையிலே இநத அரசு நடவடிக்கை எடுத்து, ஏழை எளியவர்களுடைய அநதத் தன்மையை நீக்கி வருகிறது. அரசாங்கம் கொடுக்கின்ற கடனை தள்ளுபடி செய்யுங்கள் என்று சொன்னால், ஏழை எளிய மக்களுக்கு, அதைக் கட்ட முடியாதவர்களுக்கு தள்ளுபடி செய்யலாம். கூட்டுறவு சங்கங்கள் கொடுத்த கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசாங்கத்தின் கண்டிப்பு மட்டுமல்லாமல், ரிசர்வ் வங்கியின் கண்டிப்பும் இருக்கிறது. ரிசர்வ் வங்கியிலே இருந்து சென்ட்ரல் பாங்குக்குக் கடன் கொடுத்து, பிறகு சென்ட்ரல் பாங்கியிலே இருந்து, டிஸ்ட்ரிக்ட் பாங்குக்குப் போய், பிறகு கிரெடிட் சொசைட்டிக்கு வருகிறது. அதனால், அவர்கள் கொடுத்த கடனையும், அதற்குண்டான வட்டியையும் வசூலிக்காமல் ஏன் இருக்கிறீர்கள் என்று கேட்பதோடு மட்டுமல்லாமல், கடனைத் திருப்பித் தராவிட்டால், மீண்டும் பணம் தரமாட்டோம் என்று சொல்லுகிறார்கள். அதோடு உலக வங்கி மூலம் இநதப் பணம் கொடுக்கப்படுவதால், பிளாக் லிஸ்டில் தமிழ்நாட்டைச் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்றும் சொல்லப்படுகிறது. இவ்வாறு பலவாறாகக் கூறப்படுவதால், நாம் கொடுத்த பணத்தை, அந்த விவசாயிகள் கடனைத் திருப்பி வாங்க வேண்டியிருக்கிறது. யார் யார் கடனையும், அதற்குண்டான வட்டியையும் திருப்பிச் செலுத்தி விடுகிறார்களோ, அவர்களுக்கு மட்டும் கடன் தரலாம் என்று, அரசாங்கமே கூடுதலான மூலதனத்தை பங்கீட்டுக் கடனாகக் கொடுத்து, உதவி செய்து வருகிறது. இது ஏழை எளிய விவசாயிகளுக்கு மட்டும் செய்யப்படுகிறது. வசதி படைத்தவர்களுக்கு செய்யக்கூடியதல்ல. வசதி படைத்தவர்கள் ஏழை எளியவர்கள் என்ற பெயரிலே உள்ளே நுழைந்து விடுகிறார்கள். ஆனால், ஏழை எளியவர்கள், சாதாரண மக்கள், கஷ்டப்படுகிறவர்கள் பாதிக்கக்கூடாது என்ற நோக்கத்தோடு தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்





வேறு கட்டங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட குறிப்பு அரசுக்கு வருமேயானால், அவைகள் கவனிக்கப்படும். ஆனால், வாங்கிய கடனை திருப்பித் தரமாட்டோம், அதனை வசூலிக்கக்கூடாது என்ற நிலை இருக்குமானால், யாருமே கடனைத் திருப்பிச் செலுத்தமாட்டார்கள். அதன் விளைவாகத்தான் ஒரு காலத்திலே இந்தியாவிலே மகாராஷ்டிர மாநிலமும், தமிழகமும் கூட்டுறவுத் துறையிலே மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது மாறி, வாங்கிய கடனைத் திருப்பி செலுத்த வேண்டிய வாய்ப்பு இல்லாமல், ஒரு மாறுபட்ட நிலைமைக்கு வந்திருப்பதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது. நாம் சிறந்த ஒரு இடத்தில் இருந்தோம். ஆனால், தமிழகம் இன்றைக்கு அல்லல்படுகின்ற நிலைமையில் இருக்கிறது. ஆகவே தான், ஏழை எளிய மக்களுக்கு எந்தெந்த வகைகளில், சலுகைகள் அளிக்கலாம் என்று இந்த அரசு உன்னிப்பாக கவனித்துக் கொண்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பல்வேறு கருத்துக்களை மனதிலே வைத்து, அவற்றையெல்லாம் நடைமுறையிலே கொண்டு வருவதற்கு முயற்சி செய்யப்படும் என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக் கொள்ள விரும்புகிறேன். ரிசர்வ் வங்கி இந்தக் கடன் வசூல் சம்பந்தமாக எல்லா வங்கிகளுக்கும் கூட்டுறவு வங்கிகள் உட்பட ஒரு உத்தரவை இட்டிருக்கிறார்கள். அதிலே ஏற்படுகின்ற பல சங்கடங்களை பல்வேறு மாநிலங்களும், எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நாமும் எடுத்து தெரிவித்திருக்கிறோம். மக்கள் படுகின்ற கஷ்டத்தை மனதிலே கொண்டு, அதைச் செய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கும் ரிசர்வ் வங்கிக்கும் இருக்கிறது. அந்த அரசும் அவர்களின் கவனத்திற்கு இதையெல்லாம் கொண்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசு கொடுத்துள்ள அகவிலை உயர்வைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் அவர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு இந்த 4 அகவிலைப் படியைத் தருவது பற்றி, விதிமுறைகளை ஆராய்வதற்காகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றிய பேச்சுவார்த்தைகள் கூட அங்கிருக்கக்கூடிய ஊழியர்களுக்கும், மத்திய அரசுக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கான அறிவிப்பு வந்த பிறகு, இந்த அரசு அதைப்பற்றி ஆராயும். தமிழக அரசு, நிதித் துறையோடு தொடர்புகொண்டு, இதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். விரைவில் அது பற்றிய முடிவை இந்த அரசு அறிவிக்கும் என்பதை இந்த வாய்ப்பிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிந்துகொண்டு, நமது நிதி நிலைமையையும், மற்ற நிலைமைகளையும் மனதிலே வைத்து, மத்திய அரசின் அறிவிப்பிற்கு ஏற்ப, நாம் ஆராயும் கட்டத்தில் இருக்கிறோம். 4 அகவிலைப்படி கொடுக்க வேண்டும் என்பதை கொள்கையளவிலே ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்கு சில வழிமுறைகள் வைத்திருக்கிறோம். அதைப்பற்றி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1982 மார்ச் 25

முதலமைச்சர் அவர்களோடு கலந்து, விரைவிலே அறிவிப்பேன் என்பதை மட்டும் இந்த வாய்ப்பில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வேறு பல்வேறு கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நதி நீர் பங்கீட்டைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அண்மையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கூட, முதலமைச்சர்கள் பலரும் இதை வற்புறுத்தினார்கள். ஆகவே, இவைகளைப் பற்றியெல்லாம் இந்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என்று கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது பிற்பகல் மணி ஒன்று, பேரவையின் 204-வது விதி உள்விதி (3)-இன்படி, விவாதம் இப்போது முடிவுறுகிறது. இப்போது வாக்கெடுப்பு.

பேரவை முன்னுள்ள கேள்வி: "1981-82 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 1982 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 22 ஆம் நாளிட்ட அறிவிப்பில் இரண்டாவது வரிசையில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் அந்த அந்த இனங்களுக்கு 1981-82 ஆம் நிதியாண்டிற்கான கூடுதல் செலவு கணக்கில் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற்றன.**

**நிறைவேற்றப்பெற்ற—1981-82 ஆம் ஆண்டில் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.**

**A. வருவாய்க்கணக்கில் செலவு.**

| | (1) | (2) (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|
| கோரிக்கை | 1—நில வரித்துறை .. .. .. | 39,14 |
| ஷை | 2—மாநில ஆயத் தீர்வைத் துறை .. | 68,50 |
| ஷை | 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம் .. | 46,10 |
| ஷை | 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் .. .. | 1,55,53 |
| கோரிக்கை. | 5—முத்திரைத் தாள்கள் நிர்வாகம் .. | 11,15 |
| ஷை | 6—பத்திரப் பதிவு .. .. | 20,12 |
| ஷை | 7—மாநிலச் சட்ட மன்றம் .. .. | 30,90 |
| ஷை | 8—தேர்தல்கள் .. .. .. | 33,86 |
| ஷை | 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. .. | 1,83,51 |
| ஷை | 11—மாவட்ட நிர்வாகம் .. .. | 6 |
| ஷை | 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் .. | 15,84 |
| ஷை | 13—நீதி நிர்வாகம் .. .. .. | 1,14,71 |
| ஷை | 14—சிறைச்சாலைகள் .. .. | 13,47 |
| ஷை | 15—காவல் துறை .. .. .. | 6,71,76 |
| ஷை | 16—தீயணைப்புப் பணிகள் .. .. | 83,05 |
| ஷை | 17—கல்வி .. .. .. .. | 20,63,78 |
| ஷை | 18—மருத்துவம் .. .. .. | 6,51,28 |
| ஷை | 19—பொதுச் சுகாதாரம் .. .. | 5,50,17 |
| ஷை | 20—வேளாண்மை .. .. | 29,93,56 |
| ஷை | 21—மீனளம் .. .. .. | 33,39 |
| ஷை | 22—கால்நடை வளர்ப்பு .. .. | 2,06,76 |
| ஷை | 23—கூட்டுறவு .. .. .. | 79,60,59 |
| ஷை | 24—தொழில்கள் .. .. .. | 2,89,74 |
| ஷை | 25—சின்கோனா .. .. .. | 11,83 |
| ஷை | 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும். | 6,84,80 |



1982 மார்ச் 25]

[1982 மார்ச் 25

| | | |
|---|---|---|
| கோரிக்கை | 27—கதர் .. .. .. .. | 29,02 |
| ஷை | 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். | 23,73,11 |
| ஷை | 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் .. .. | 2 |
| ஷை | 30—சமூக நலன் .. .. .. | 3 |
| ஷை | 31—பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன் .. .. | 10,89,26 |
| ஷை | 32—பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் .. .. .. | 1,35 |
| ஷை | 33—வீட்டு வசதி .. .. | 2 |
| ஷை | 34—நகர்ப்பகுதி வளர்ச்சி .. .. | 11,39,49 |
| ஷை | 35—நுகர்பொருள் வழங்கல் .. | 1,33,38 |
| ஷை | 36—பாசனம் .. .. .. | 3,66,30 |
| ஷை | 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் .. | 65,39 |
| ஷை | 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் .. .. .. | 1,69,94 |
| ஷை | 39—சாலைகளும், பாலங்களும் .. | 1,63,98 |
| ஷை | 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் .. .. .. .. | 47,05 |



1982 மார்ச் 25]

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | |
|---|---|---|
| கோரிக்கை | 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. .. | 2,46,42 |
| ஷை | 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் .. .. | 11,72 |
| ஷை | 43—பல்வகை .. .. .. | 3 |
| ஷை | 44—எழுதுபொருள்—அச்சுத்துறை .. | 4,82,06 |
| ஷை | 45—காட்டுவளத் துறை .. .. | 1,78,22 |
| ஷை | 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. | 40,03 |

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

| | | |
|---|---|---|
| கோரிக்கை | 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. .. .. | 1,49,65 |
| ஷை | 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.. .. .. | 4,15,38 |
| ஷை | 50—பாசனம் குறித்த மூலதனச்செலவு. | 13 |
| ஷை | 51—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு .. | 13 |
| ஷை | 52—சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. .. | 6,86,91 |
| ஷை | 53—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் | |

[1982 மார்ச் 25

(ரூபாய் ஆயிரத்தில்.)

| | |
|---|---|
| கோரிக்கை 54—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு .. .. .. | 71,70 |
| ஷை 55—பல்வகை மூலதனச் செலவு .. | 11,86,42 |

C. கடன்களும், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

| | |
|---|---|
| கோரிக்கை 56—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். | 1,87,57,50 |

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) ஆளுநரிடமிருந் வரப்பெற்ற செய்தி—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ் நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(8) அரசினர் சட்ட முன் வடிவு.

நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.



1982 மார்ச் 25]

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) ஒலிப் பெருக்கிகளைப் பாதுகாப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவை முடிவதற்குள்ளாக ஒரு சிறு அறிவிப்பை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவையில் அமைச்சர்களுக்கு வைத்திருப்பது போன்று ஒலிபெருக்கிகள் எல்லா உறுப்பினர்களுக்கும் வேண்டும் என்று கேட்டு ஒரு ஒலி பெருக்கி கிட்டத்தட்ட 800, 900 ரூபாய் விலையிலே வாங்கப் பெற்று எல்லா உறுப்பினர்களுக்கும் வைக்கப்பட்டு இருக்கிறது. அந்த ஒலி பெருக்கியை மேலும் கீழும் வளைத்து ஒரு ஒலிபெருக்கி உடைந்து போயிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். எப்படிப்பட்ட உணர்ச்சி வந்தாலும் ஒலிபெருக்கிகளை ஒன்றும் செய்யாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று,—நாளை விடுமுறை, பேரவைக் கூட்டம் இல்லை—நாளை மறு நாள் 1982 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 27 ஆம் தேதி காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

149. சென்னை மாநகர், நந்தனம் நகர்ப் பகுதிக்குரிய விரிவான மேம்பாட்டுத் திட்டத்தையும் அதன் அனைத்து இணைப்புகளையும் பொதுமக்கள் பார்வையிடுதல் குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 17—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1362 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

150. சென்னை மாநகர், மயிலாப்பூர் சாந்தோம் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தையும் அதன் அனைத்து இணைப்புகளையும் பொதுமக்கள் பார்வையிடுதல் குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 27—10—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1423 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது.]

151. சென்னை மாநகர் காரணீஸ்வரபுரம் பகுதிக்கான விரிவான மேம்பாட்டுத் திட்டத்தையும் அதன் அனைத்து இணைப்புகளையும் பொதுமக்கள் பார்வையிடுதல் குறித்து வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 30—10—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1437 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

152. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் 1971–72 முதல் 1975–76 வரை உள்ள ஆண்டுக் கணக்குகள் [தமிழ், ஆங்கிலம்) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

152. சட்டவிதிகள் குழு அளித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய சட்ட விதிகள் குழுவின் இரண்டாவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) (ஆங்கிலம்).

D
Y211,31 N82
NF3-35:1